


கலைமகள்

பிரஜோத்பத்தி௵ தை௴ முதல்

ஆங்கிரஸ௵ ஆனி௴ வரை

—o—

பகுதி ௧—௬

மதராஸ் லா ஜர்னல் பிரெஸ்
மயிலாப்பூர்
1932


1-ஆம் பகுதி முதல் 6-ஆம் பகுதி வரையிலுள்ள

பொருளடக்கம்

மாதர் பகுதி:

கட்டுரை எழுதியவர்கள்

படங்கள்



கலைமகள்

வாழ்த்து

ரா. இராகவையங்கார்

தமிழ்மணம் பரப்பி யறிவொளி விரித்துச்
சாந்தநல் லருணெறி தழுவி
அமிழ்தமென் னடைச்சொற் றேர்மிசை மதிதோ
றணிபெற மயிலையி னெழுந்தீண்
டிமிழிசை முழங்கப் பெருங்கலை மகணீ
டினிதுலா வருவளா லிவளைக்
கமழ்தரு பரிவி னெதிர்கொடு போற்றிக்
களித்துளங் தளிர்க்குநல் லுலகே.

நிலைமகளாய 'கலைமகள்' என்று தெய்வத் திருப்பெயர் பூண்ட இவ் வினிய பத்திரிகை என்னுஞ் செந்தமிழரசி தனக்கியல்பாக வுள்ள மணத்தைப் பரவச் செய்து இருள் நீங்கி அறிவொளியை விரியச்செய்து யாவர்க்குஞ் சித்தம் உபசாந்தம் அடைவதற்குரிய அருள்வழியைத் தழுவி மெல்லிய நடையுடன் இயல்கின்ற அமிழ்தம் போன்ற மொழியாகிய தேர்மிசைத் திருவிழாக் கொள்பவளாகி மதிதோறும் புதிய அணிபூண்பவளாய்த் திருமயிலை நகரத்தெழுந்து வாயாற் பரவுகின்ற புகழ் எல்லாருடைய செவியிலும் முழங்க இந் நாட்டில் நெடிதாக இனிதாக உலாக்கொண்டு வருவளென்றும் இவளை நல்லுலகம் கமழ்கின்ற அன்புடன் போற்றி மகிழ்ந்து மனந் தளிர்க்குமென்றுங் கூறி வாழ்த்தியவா றிஃதாகும்.

இதன்கண் இப்பத்திரிகை தானெடுத்துக்கொண்ட நன் மொழியின் மணங்கமழச் செய்வதும், யாவர்க்கும் அறிவொளி பெருகச் செய்வதும், உபசாந்தத்தைப் பயனாகக் கொண்ட அருள் வழியை வளரச்செய்வதும், தலைமையாகக் கொள்வதென்றும், இவற்

றைப்பற்றிய வியாசங்கள் மெல்லிய நடையில் அமிழ்த மொழியில் ஒரு பெருந்தேர்போல் அலங்கரிக்கப்பெற்று வனப்புடையனவாய் வெளிவருமென்றும், இவ்வாறு மாதந்தோறும் புதிய புதிய அழகு பெற்று எங்குங் கீர்த்தி முழங்க உலகம் மகிழ்ந்துபோற்ற உலாவு மென்றும், இந் நல்வரவின் பயனாக யாவர்க்கும் நல்லொழுக்கங்க ளாலும், நற்குணங்களாலும் மனந்தழைக்குமென்றுங் குறித்துள் ளது காணலாம். தெய்வ அரசி உலாவரற்கேற்ப மணமும் ஒளியும் நெறியும் மெல் நடைத்தேரும் இசைமுழக்கமும் போற்றி மகிழ்ந்து மனந்தளிர்த்தலும் கூறப் பெற்றன.

கற்றோர்க்குப் பேரின்பம் பயக்க வல்ல இவ்வரிய பெரிய பத்திரிகைத் திருப்பணி உலகம் மகிழ இனிது நிறைவேறும்வண் ணம் எல்லாம்வல்ல இறைவன் அருள அவன் திருவடிகளை மன மொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

கலைமகள் வாழ்த்து

கி. வா. ஜகந்நாதன்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. பார்வளரும் அறுபத்து நான்குகலை யாங்கதிரைப்
பரப்பி யோவாச்
சீர்வளரும் நூறிதழ்சேர் வெண்கமலத் தவிசினிலே
சிறக்க மேவி
ஏர்வளரும் அறிவுயர்வு பெறவருள்செய் கலைமகளாம்
எம்பி ராட்டி
வார்வளரும் இயலினைநா டகத்தினைநந் திசைவாழ்த்தி
வணங்கு வோமே.

2. வெள்ளைத்தண் டாமரையில் மேவிடுவாள் புவிபடைக்கும்
வேதன் நாவில்
கொள்ளைத்தண் ணமுதூற வீற்றிருப்பாள் ஞானமனக்
கோயிற் குள்ளே
மெள்ளத்தன் றிருவருளின் ஒளிவீசி யிருந்திடுவாள்
விழைவார் பாலே
பள்ளத்திற் பாய்புனல்போல் அறிவுநிறைந் துறச்செய்வாள்
பாதம் போற்றி.

3. உரையினிலே உள்ளத்தே தூய்மைநலம் மேவிடினங்
கோங்கு மின்பத்
திரையினிலே ஞானமெனும் வெண்மலரிற் கலைமகள்பூந்
திருத்தாள் வைப்பாள்
புரையினிலே நின்றவர்தம் போக்கினிலே வீண்பெருமை
புகட்டும் ஏட்டுச்
சுரையினிலே யவளிருத்தல் இல்லையில்லை மற்றிதுவே
துணிவு கண்டீர்.

4. எச்சமயத் தவர்களுநங் கலைமகளை வணங்குறுவா
ரென்னின் ஞான
நிச்சயமே யருள்தெய்வம் அவளல்லாற் பிறருண்டோ
நிலையா வாழ்வில்

அச்சமிலா வறிவும்பின் மறுமையிலின் படையுமுயர்
அறிவும் ஆர்ந்த
விச்சைகளுந் தருமவளை யனுதினமும் புகழ்பாடி
வேண்டு வாமே.

5. புத்தகத்தைப் புரட்டிடலாற் புதுமலரால் வணங்குதலாற்
பொற்பொன் றில்லை
ஒத்தகத்தைச் சுத்தமுற வைத்துப்பின் கலைமகளை
உருகும் அன்பிற்
சித்தமிசை யெழுந்தருளச் செயவல்ல பேரறிஞர்
சீரார் பூவில்
எத்தகைய கலைகளைத்தா மறியார்மற் றெதுவுமவர்க்
கெளிது மாதோ.

6. அறிவில்லை யெனினொருவ னழுங்கியருந் துயர்படுதல்
அறியார் யாரே
செறிவுள்ள செல்வந்தா னறிவுடையோன் பாலிருந்தாற்
சிறக்கு மன்றே
மறிவில்லாப் பேரறிவை வழங்குகலை மகளருளே
வாய்ப்பின் எல்லாம்
நெறியுள்ள வின்பமும்நற் புகழும்விளைப் பனவன்றோ
நீணி லத்தே.

முன்னுரை

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."—குறள்.

கற்றறிந்தவர்களின் கடமை தாங்கள் கற்ற கல்வியினால் உலகம் இன்பமடையச் செய்வதேயாகும். கல்விச்செல்வம் ஒன்றே மற்றைச் செல்வங்களைப்போல எல்லாருக்கும் கொடுப்பதனால் குறையாமல் வளருமென்பது யாவருமறிந்ததே. இதைக் கருதியே நம் நாட்டிலிருந்த பெரியோர்கள் தாங்கள் கற்பதும் கற்றவற்றைப் பிறருக்குச் சொல்வதுமாகியவற்றையே தங்கள் தொழிலாகக் கைக்கொண்டிருந்தார்களேயன்றி வேறுவிதமான தொழில்களைச்செய்து பொருளீட்டல் முதலியவற்றில் முயலவில்லை. அறிவைப் பரவச் செய்வதற்கு வேண்டிய சாதனமொன்றும் இல்லாமல் இருந்தும் அவர்கள் இத்தேசத்தில் கன்னியாகுமரி முதற் காசி வரையிற் கால்நடையாகச் சென்று உபதேசித்து வந்தார்கள்.

இக்காலத்தில் அறிவை விருத்திசெய்வதற்கான சாதனங்கள் பலவுள்ளன; அவற்றுள் பத்திரிகைகள் மூலமாய் அரிய விஷயங்களை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி செய்வது சுலபமெனக் காண்கிறோம். பிறதேசங்களிலும், நம் தேசத்தில் வங்காளம் மகாராஷ்டிரம் ஆந்திரம் முதலிய இடங்களிலும் அறிவை வளர்ப்பதற்கென்றே ஏற்பட்ட உயர்தரப்பத்திரிகைகள் பல இருப்பதுபோல் நம் தமிழ்நாட்டிலும் இருக்கவேண்டுமென்று கலைகள்வல்ல கனவான்கள் தீர்மானித்ததற்கிணங்க, 'கலைமகள்' என்ற பெயருடன் இப் பத்திரிகையை வெளியிடத் துணிந்தோம். பிரபலமான தமிழ் வித்துவான்களும் ஆங்கிலபாஷையிலும் தமிழிலும் தேர்ச்சியடைந்த பல கலைஞர்களும் இதற்கு விஷயதானம் செய்துவருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம் தாய்மொழியாகிய தமிழில் உள்ள பலநூல்களின் அருமைபெருமைகளை எடுத்துக்காட்டி யாவரும் இன்புறச் செய்வதோடு வேறுபாஷைகளிலும் வேறுதேசங்களிலும் உள்ள அரிய சாஸ்திர விஷயங்களையும் நம் தேசத்துக்கு அவசியமான சரித்திர ஆராய்ச்சி விஷயங்களையும் கல்விமான்களுடைய உதவியினால் இப் பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தலாமென்று நினைக்கிறோம்,

அன்றியும் நீதிதருமங்களை உணர்த்தும்படியான கதைகளும், சிறுவர்களும் பெண்களும் களிப்படையக்கூடிய விநோத விஷயங்களும் அமைக்கவேண்டுமென்பது எமது கருத்து. இவ்விஷயங்களெல்லாம் கூடியவரையில் எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ளும்படியான நடையிலேயே அமைந்து இருக்கும். இதில் நம் தேசத்திலுள்ள சிற்பம், ஓவியம், சங்கீதம் முதலிய கலைகளின் மேம்பாட்டைப் படங்களுடன் எடுத்துக்காட்டவும் முயல்வோம். தமிழர்கள் அனைவரும் இப்பத்திரிகையை ஆதரித்து விருத்தியாகும்படி செய்வார்களென்று நம்புகிறோம்.

கலைகள்

உ. வே. சாமிநாத ஐயர்

வெண்பா

"இமையவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சிமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்."

'கலைமகள்' என்னும் இப்பத்திரிகைக்குப் பொருத்தமான ஒரு விஷயம் எழுதும்படி பத்திராதிபர் விரும்பினமையால், கலைகளைப் பற்றிய சில விஷயங்கள் இங்கே எழுதலாயின.

கலைகளுக் கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமக ளென்று வழங்குகின்றோம்.

"ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்"

என்ற செய்யுளால் கலைகள் அறுபத்துநான்கென்பதனையும் அவற்றைக் கலைமகள் அருளிச்செய்பவ ளென்பதனையும் அறியலாம்;

"எண்ணெண் கலையு மிசைந்துடன் போக"
"எண்ணான் கிரட்டி யிருங்கலை" (சிலப்பதிகாரம்)

"யாழ்முத லாக வறுபத் தொருநான்
கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த" (பெருங்கதை)

"செம்மறையா ரணமுதனு லீரெட்டுக் கலைமுழுதுந்
தெரிந்தா ளந்த
மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா மருங்கசைத்த
விமலை யம்மா" (திருவிளையாடல்)

என வருவனவற்றாலும் அறுபத்து நான்கு கலைகளுண்மை பெறப் படும்; அவை அக்கர இலக்கண முதல் அவித்தைப் பிரயோகம் வரை உள்ளனவாகும்; வேறுவகையாகக் கூறுவதும் உண்டு. அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின்பற்றிய கலைகளும் உள்ளன என்பர். அந்தணர்க் குரிய கலைகள் இவை, மன்னருக்குரிய கலைகள் இவை, வணிகருக்குரிய கலைகள் இவை, வேளாளர்க்குரிய கலைகள்

இவை, மகளிருக்குரியன இவை, பொது இவையென அவற்றுள் வேறுபாடுண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ்நாட்டிலும் பிறநாட்டிலும் இருந்த கலைகளைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தனவென்று தெரிகிறது; இக்காலத்தும் சில உள்ளன.

தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச்சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பல வகை இசைக் கருவிகளைப்பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறியமுடியாமல் இருக்கின்றன. தோற்கருவி வகைகளில் அளவிறந்தனவும், யாழ்வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தனவென்று தெரிகின்றது. இசையானது மூன்று தமிழ்களுள் ஒன்ருகக் கூறப்படுவதிலிருந்தே அக்கலை மிக விரிவுடையதென்று தோற்றுகின்றதன்றே? இசைச்சங்கமொன்று பண்டைக்காலத்திலிருந்ததென்றும், அதிற் பலபுலவர்கள் இருந்து இசைப்பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்றும், இசையைப்பற்றிய பல நூல்கள் அவர்களால் இயற்றப்பெற்றிருந்தனவென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீதவித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.

நாடகக்கலையையும் தமிழர்கள் நன்கு போற்றி வந்தார்களென்பதை அது முத்தமிழிலொன்ருக வைக்கப்பட்டிருப்பதால் அறியலாகும். நாடகம் பலவகைப் படுதலையும், அதற்குரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக்கூறும் நூல்கள் பல முன்பு இருந்தன; இப்பொழுது அழிந்து விட்டன. சிலப்பதிகாரத்தால் மட்டும் சிலசெய்திகள் தெரியவருகின்றன.

ஓவியக்கலை அல்லது சித்திரசாஸ்திரம் மிகஉயர்ந்த நிலையில் இருந்தது.

"ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்"

என்ற மணிமேகலையடியினல் ஓவிய சம்பந்தமான நூல் இருந்தமை அறியப்படுகின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் ஓவிய நூலென ஒன்று கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்ருர். ஓவியம் வல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்;

"எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும்"

என்ற மதுரைக் காஞ்சிப்பகுதியால் இது விளங்கும். மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன :

"மாடக்குச் சித்திரமும்"

என்பதனால் மாடங்களுக்கு அழகு செய்வது சித்திரமென்ற தமிழ் நாட்டார் கொள்கை அறியப்படுகின்றது.

"சுடுமண் ணோங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்" (மணிமேகலை)

என்பதில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுதல் காண்க. ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் பழமையானது; படமென்னும் பெயர் இக்காரணத்தாலேயே வந்தது (படம்-வஸ்திரம்.). ஒத்த அன்பினளாகிய தலைவி யொருத்தியைப் பெற முடியாமையால் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணிப் பனைமடலாற் செய்யப்பட்ட குதிரை யொன்றில் ஏறிவருவானென்றும் அப்பொழுது தலைவியைப்போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்துக் கொண்டு வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப்படத்தைக் கண்ட ஊரார் இன்ன மங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச்செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்து கொள்ளலாம். ஓவியம் எழுதுபவர்கள் முதலில் தாம் கருதியிருக்கும் உருவத்தைக் குறித்துக்கொண்டு பின்பு வர்ணங்களைக்கொண்டு அதனை அழகு படுத்துவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவதனைப் புனையா ஓவியம் என்று வழங்குவர். நெடுநல்வாடையிலும் மணிமேகலையிலும் புனையா ஓவியம் உவமையாக எடுத்தாளப் பட்டிருக்கிறது. திரைச் சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப்பெற்றிருந்தன ; பாயற்கட்டிலைச் சுற்றிக்கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின்மேல் விரிக்கும் துணிகளிலும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் இருந்தன ; ஆடைகளிற் சித்திரங்கள் எழுதப்பட்டன ; நெய்யும் பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்துவந்தார்கள்.

"குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்

குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய வுவவனம்'' (மணிமேகலை)

என்று கூறப்பட்ட அடிகளினால் இயற்கை யெழிலை அவ்வாறே எடுத்துக்காட்டும் சித்திரப் படாங்களை அமைக்குந் திறனைத் தமிழ் நாட்டார் அறிந்திருந்தமை புலப்படுகின்றதன்றோ?

சிற்பக்கலையில் வல்லுநர்கள் மண்ணினாலும், செம்பு பொன் முதலிய உலோகங்களாலும், கல்லாலும், சுண்ணாம்பினாலும், மரத்தினாலும், தந்தத்தினாலும் பலவகைப் பாவைகள் முதலியவற்றை அமைத்தார்கள். மண்ணாற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாளரெனப்பட்டனர். தந்தத்தினால் தேர் முதலியன அமைக்கப்பட்டன. கல்லிலமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகச்சிறந்ததென்பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்திற் பல்லவர்கள் சோழர்கள் முதலியவர்களுடைய அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற்பத்திறனமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் முற்றாட்டுப்பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கைவன்மையை இன்றும் வெளிப்படுத்திக்கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின்றார்கள். சோழநாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வௌவானத்தி மண்டபம், ஆவுடையார் கோயிற் கொடுங்கை என்னும் மூன்றைப் போலச் செய்ய இயலா; மற்றவற்றைப் போலச் செய்வோம்' எனவும், கொங்கு நாட்டில், 'தாரமங்கலம், தாடிக்கொம்பென்னும் இரண்டிலுள்ள சிற்பங்களைப்போல இயற்ற எங்களால் இயலா' எனவும் உடன்படிக்கை யெழுதிக் கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ணபரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.

மரத்தினாலும் உலோகங்களினாலும் பலவகை வண்டிகள் செய்யப்பெற்றன. அவை, வையம், பாண்டில், தேர் முதலிய பலவகையானவை. தாமரைமலரைப்போன்ற வண்டி யொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது;

''யவனக் கைவினை யாரியர் புனைந்தது
தமனியத் தியன்ற தாமரை போலப்
பவழமு மணியும் பல்வினைப் பளிங்கும்
தவழ்கதிர் முத்துந் தானத் தணிந்தது

விலைவரம் பறியா வெறுக்கையுண் மிக்க
தலையள வியன்றது தனக்கிணை யில்லது
தாயொடு வந்த தலைப்பெரு வையம்''

என அதன் இயல்பு உரைக்கப்படுதல் காண்க.

பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப் பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டு வந்தன. அவற்றை இயற்றும் பொற்கொல்லர்கள் தங்களுக்குரிய நூலில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக விருந்தார்கள்; நவமணிகளைப்பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தார்கள். அவற்றிற்குரிய நூல்கள் பலவிருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப்பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங் களிலும், பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங் களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.

நெய்யுந்தொழிலிலும் தமிழ்நாட்டார் சிறப்பெய்தி யிருந்த னர். பருத்தியினாலும், எலிமயிர் ஆட்டுமயிர் முதலியவற்றாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.

'' ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல்'' (நற்றிணை)

'' பருத்திப் பெண்டின் பனுவ லன்ன '' (புறநானூறு)

என வருவனவும்,

''நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉத் தனது
கைமாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது''

என்ற இறையனாரகப்பொருளுரையும் மகளிர் நூற்றுவந்த வழக் கத்தை விளக்குகின்றன. ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பலநிறக் கச்சுக்களும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும் மணிகளையும் விளிம் பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன:

''சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்'' (மதுரைக்காஞ்சி)

''நீலக் கச்சைப் பூவா ராடை'' (புறநானூறு)

''கொட்டைக் கரைய பட்டுடை'' (பொருநராற்றுப்படை)

பாம்பின் உரியையும் மூங்கிலில் உரித்த தோலையும் பாலா வியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புல வர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ்நாட் டார் அணிந்து வந்தனரென்பது வெளியாகின்றது;

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தாவுரி யன்ன வறுவை" (பொருநராற்றுப்படை)

"இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்" (மலைபடுகடாம்)

"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்" (புறநானூறு)

என்பன ஆடைகளின் நுண்மையை வெளிப்படுத்துகின்றமை காண்க.

"பொருந்துபூம் பொய்கைப் போர்வையைப் போர்த்து" (சீவகசிந்தாமணி)

என்பதில் பொய்கைவடிவு எழுதின படாமொன்று சொல்லப்படுகின்றது.

மாலைகளைத் தொடுப்பதிற் பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ்நூல்கள் தெரிவிக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று சீத்தலைச்சாத்தனாரும், "கடிமலர்ச் சிப்பம்" என்று கோங்குவேளிரும் அத்தொழிலைக் குறிக்கின்றனர். இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகைகள் மாலைகளில் உண்டு.

உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் 'மடைநூல்' எனப்படும். அதைப்பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிற் கூறப்படுகின்றன. பலவகை உணவுவகைகள் தமிழ் நூல்களிற் காணப்படுகின்றன. காலத்திற்கேற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிற்கேற்ற உணவுகளையும் அந்நூல்களால் அறிந்துகொள்ளலாம். சீவகசிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுநுகர்வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவுவகைகள் கூறப்பட்டுள்ளன.

சோதிடம், நிமித்தம்பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக்கலைத்திறனுடையார் காலக்கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவார்கள். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தேயிருந்த நல்லிசைச் சான்றோர்களுள்ளும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும்பொழுது, நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத்திணையுள்ளும் பலவகை நிமித்தங்கள் சொல்லப்படுகின்றன. விரிச்சி (நற்சொல்), தோள் கண் முதலியன துடித்தல், காக்கை கரைதல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டுவிச்சி யென்னும் வெறியாடுபவளாற் கட்டுப் பார்த்தலும் வெறியாடுபவனாகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

வான சாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்து இருந்தது. சந்திரன் பரிவேடங் கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம்

செய்வார்கள். நெடுநல்வாடையில், கட்டிலுக்குமேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு ராசிகளும் எழுதப்பட்டிருந்தன வென்னும் செய்தி காணப்படுகின்றது. நட்சத்திரங்களின் பெயர்களிற் சில சங்கநூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இறக்குங்காலத்தைக் கூடலூர்கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண்மீன் விழுந்தமையால் அறிந்தனர். அவன் துஞ்சிய காலத்து, ''இதனை முன்னரே அறிந்தேன்'' என்று கூறி வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளார். அதில் மீன் விழுந்த நாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகிறது (புறநானூறு, 229.). இவற்றால் நட்சத்திரங்களைப்பற்றிய அறிவு இருந்தமை உணரப்படுகின்றது.

மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப்பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ் வைத்தியம் சித்த வைத்தியமென்னும் பெயரால் இப்பொழுது வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிற் பயின்றுவந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை மிகச் சிறப்புடையன. ஆயுள்வேதரைப்பற்றிய செய்தி சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளது.

நகரமைப்பு, வீடுகட்டுதல் முதலியவற்றைப்பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டார்க்கு இருந்துவந்தது. நகரங்களில் உள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல கடைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்தநீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்துபடை அல்லது கரந்துறை யென்னும் சலதாரைகள் வீதியின் நடுவிற் கீழே (*underground drainage*) இருந்தன. கற்களால் அவை மூடப்பட்டிருக்கும். நீர் வேண்டின் நிரப்பியும் வேண்டாவிடிற் போக்கியும் விடுதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திரவாவி யெனப்படும்:

> ''எந்திர வாவியி லிளைஞரு மகளிரும்
> தந்தமி லாடிய சாந்துகழி நீரும்'' (மணிமேகலை)

மாலைக்காலங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய பல சோலைகள் இருந்தன. செய்குன்றங்கள் இருந்தன:

> ''சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்
> வேணவா மிகுக்கும் விரைமாக் காவும்'' (மணிமேகலை)

இவற்றை யன்றி,

"எந்திரக் கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பாப்புநீர்ப் பொய்கையுங் காப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்"

(மணிமேகலை)

ஆகிய பல இடவகைகளும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித்தனியே வீதிகள் இருந்தன. பலவகைத் தொழில் செய்வாருக்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புக்களைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளவற்றால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகள், அவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப்பற்றிய பல செய்திகளை அறியலாம். அப்பகுதிகள் படிக்கப்படிக்க இன்பத்தை அளிப்பனவாகும். மதுரை நகரத்திலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நாளங்காடி அல்லங்காடி யென்ற இருவகைக் கடைத்தெருக்கள் இருந்தன. நாளங்காடி காலைக்கடை; அல்லங்காடி மாலைக்கடை. அவ்விரு நகரங்களிலும் பலவகைக் கோயில்கள் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்திற் பண்டசாலைகளும் சுங்கம் வாங்கும் நிலையங்களும் கலங்கரை விளக்கமும் (*Light house*) இருந்தன:

"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"

(சிலப்பதிகாரம்)

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின்மேற் பகைவர்களைத் தடுத்தற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப்பெற்றிருந்தன. கோட்டைவாயில்கள் இருந்தன. ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய நுழைவழிகளும் இருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சிநகர் தாமரை மலர்போல அமைந்துள்ள தென்று காணப்படுகிறது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்" (பரிபாடல்)

என்பதில் மதுரையை அவ்வாறு கூறுதல் காண்க. பெருங்கதையில் இராசகிரிய மென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பலவகைத் தெருக்களைப் புறவிதழ் புல்லிதழ் அகவிதழ் முதலியவைகளாகவும் அரசன் அரண்மனையை நடுவிலே யமைந்த கர்ணிகையாக

வும் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார். இவற்றால் நகரங்கள், அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளாலமைந்திருந்தனவென்பது உணரப்படுகின்றதன்றோ ?

வீடுகளை அமைப்பதில் சிலமுறைகள் அக்காலத்தில் உண்டு.

"பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

(நெடுநல்வாடை)

என்பதனால் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கமிருந்ததென்பதைத் தெரிந்துகொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம்போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும், வாயின்மாடங்களும், நிலாமுற்றங்களும், தெற்றிகளும், அறைகளும் அமைக்கப்பட்டன. வீடுகளின் நிலைகளிற் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்தன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்குமேலே மத்தியில் முற்காலத்தும் அமைக்கப்பட்டமை நெடுநல்வாடை முதலியவற்றால் அறியப்படும். மாடங்களாகவே சிலவீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைச் சாளரங்கள் வைக்கப்பட்டன. 'காலதர்' என்று அவை கூறப்படும்; காற்றுப்போகும் வழியென்பது அதன்பொருள். இதனால் சுகாதாரமும் கவனிக்கப்பெற்று வந்தமை தெரிகின்றது.

கிணறுகளை வெட்டும் முறைகளை யறிவிக்கும் கூபநூல் ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினால் நல்ல ஜலமிருக்குமென்பதை எளிதில் அறியும் வழி அதிற் கூறப்படும்.

காவல் காத்தற்குரிய காவல்நூல், கரவடநூல் முதலிய பலநூல்களின் பெயர்கள் தெரியவருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்துகொண்டு கள்வர்கள் பதுங்கிவருவார்களென்றும், அவர்களை ஒற்றி யறிந்து காவலர்கள் பிடிப்பார்களென்றும், அக்காவலர்கள் காவல்நூல், கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக்காஞ்சியும் அதன் உரையும் அறிவிக்கின்றன. தக்கயாகப் பரணி உரையாசிரியர்,

'உடன்கள்ளரும் ஒற்றிக் கொடுப்போரும் பெருநிலை நிற்போரும் கரவட சாத்திரமும் வேண்டும்'

என்று ஓர் இடத்திற் களவுக்குரிய உபகரணங்கள் சிலவற்றைத் தெரிவிக்கின்றார்.

போருக்குரியகலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும்

கூறப்பட்ட புறத்திணைத் துறைகளிற் பெரும்பாலன போரையும் அதனைச்சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர்களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் முதலியோருக்குப் போரினால் ஏதம் வருமென்று அஞ்சி, "நாம் போர் செய்யப்போகிறோம்; மகளிர்முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று போர் புரியச் செல்வோர் பறையறைவிப்பார்கள். தாமே செல்ல ஆற்றலில்லாத பசுக்களை அப்பகைவர் நாட்டிலிருந்து தம் நாட்டிற்குக் கொண்டுவந்து விடுவார்கள். அதுமுதல் போர்தொடங்கப்படும். நிரைகவர்தல், போர்செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர் செய்தல், வெற்றியுறுதல் என்ற பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங்குகின்றன. அவ்வத்திணைக்குரிய மலர்களைச் சூடிக்கொண்டு போர் புரிதல் வழக்கம். ஒவ்வோரரசருக்கும் தனித்தனி அடையாளப் பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை அணிந்து கொண்டமையால் வீரர்களை இன்னருடைய படையைச் சேர்ந்தவர்களென்று தெரிந்துகொள்வார்கள். அத்தகைய பூக்களைப் பொன்னாற் செய்வித்து அணிந்துகொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பலதுறைகள் உண்டு. அகழில் தோணிகளில் ஏறிப் போர் புரிதலும், மதில்மீதேறிப் போர்புரிதலும் ஆகிய பல வகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முதலிய பல வேறுபாடுகள் உண்டு. சேனாதிபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி யென்பது ஒன்று. அப்பட்டத்திற்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப் பெறும்.

"போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ—போர்க்கெல்லாம்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
ஏனாதிப் பட்டத் திவன்"

என்பது இங்கே அறிதற்குரியது. வீரர்களுக்குரிய பல ஆயுதங்களின் பெயர்கள் நூல்களில் வழங்கப்படுகின்றன. வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பல வகைகள் உண்டு.

கப்பற்றொழில் : தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற்றைப் பலவகையிற் பயன்படுத்திக்கொண்டமையை நூல்கள் அறிவிக்கின்றன. பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையிற் பல பண்டசாலைகள் இருந்தனவென்றும், அவற்றிற் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தனவென்றும் காணப்படு

கிறது. பிறநாட்டிலிருந்து கப்பல்களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.

"வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை"

என்ற பெரும்பாணாற்றுப்படையடிகளால் குதிரைகள் முதலிய வட நாட்டுப் பொருள்கள் தமிழ் நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை பெறப்படுகிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" (பட்டினப்பாலை)

"பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்" (மதுரைக்காஞ்சி)

என்பவை இங்கே அறிதற்குரியன.

'கட்டுரை வகை' என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. தொடுத்துக்கூறும் சொல்வன்மையே அது. பெருங்கதை யாசிரியர் 'வாக்கின் விகற்பம்' என அதனைக் குறிப்பர். இன்னாரிடம் இன்னபடி பேசவேண்டுமென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டு மென்பதுமாகிய பல வரையறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு துயரச் செய்தியையோ, அறிவுரையையோ கூறப்புகுங்காலத்து அவர்களை வாழ்த்தி அவர்களுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்கள் வழக்கம். வாழ்த்தின் வகைகளிற்குரிய இலக்கணங்கள் சில உண்டு.

அளவை நூல், எண்ணூல், கனா நூல், கோழி நூல், குதிரை நூல், யானை நூல், புதையல் நூல், யோக நூல் முதலிய நூல் வகைகளும், கரந்துறைகணக்கு, கோலங் கோடல் முதலிய வேறு பலகலைகளும் இருந்தன.

தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பலவழிகள் தெரியவருகின்றன. மாதவி, கோவலனுக்குத் தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பிற்றோய்த்த பித்திகையரும்பினால் ஒரு திருமுகம் எழுதி அனுப்பினாளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாஸவதத்தையின் வண்ணமகளாகவிருந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக்கருத்தை வாஸவதத்தையின் முகத்தில் யவன பாஷையில் ஒருவருக்கொருவர் எழுதி விடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்துகொண்டார்களென்ற ஒரு செய்தி பெருங்கதையில் காணப்படுகிறது. அந்நூலில், இவ்வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக்காதை யென்றே பெயர் பெறும்.

1—3

அரண்மனையில் இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளை மந்தணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந்தாள். அவள் ஒரு குவளை மலருக்குள் ஒரு திருமுகம் அனுப்பினுளென்றும், அக்குவளையின் காம்பே அத்திருமுகவோலையின் சலாகையாக அமைந்திருந்ததென்றும், அவ்வோலை அகவிதழ்க்குட் பொருத்தப் பெற்றிருந்ததென்றும், அதனுள் எழுதப்பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப்பட்டவையென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காம்பிற் சுற்றி வாசித்தறிந்தானென்றும் சீவகசிந்தாமணியால் அறியலாம்.

இவ்வாறு பலவகைக் கலைகளும் அவற்றிற்குரிய நூல்களும் தமிழ் நாட்டில் மலிந்திருந்தன. அவற்றில் வல்லாரும் பலர் இருந்தனர். பிற நாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

> "மகத வினைஞரு மராட்டக் கம்மரும்
> அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
> தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி" (மணிமேகலை)

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ்நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு. வடமொழியிலுள்ள கலை நூல்களையும் தமிழிற் பெயர்த்துக் கொண்டார்கள்.

இன்னும் கலைகளைப்பற்றியும் அவற்றிற்குரிய நூல்களைப்பற்றியும் எழுதுவதெனில் மிக விரியும். சமயம் நேரின் ஒவ்வொரு கலையைப்பற்றியும் தனித்தனியே எழுதலாம்.

இக்காலத்தில் மேனுட்டாருடைய உதவியினுற் பல புதுக்கலைகள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியிலுள்ள கலை நூல்களை மொழிபெயர்த்துக்கொண்டது போல இக்காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழிகளிலிருந்து அறிஞர்கள் பெயர்த்தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டிற் சிறந்தோங்கியிருந்த சிற்பம் முதலிய கலைகளின் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்கவேண்டும். ஏட்டுச் சுவடிகளில் உள்ள கலைநூல்களையாராய்ந்து அறிந்து வெளிப்படுத்தவேண்டும். நான் ஏடுதேடச்செல்லும் பொழுது முதன்முறைகண்ட பலவகைக் கலைநூல்களிற் பெரும்பாலன மறுமுறை சென்றபொழுது அருமை யறிந்து பாதுகாப்பார் இன்மையாற் சிதைந்துபோயின; பல காணப்பட

வில்லை. அதை நினைக்கையில் இப்பொழுது கிடைப்பவற்றையே னும் அறிஞர்கள் பாதுகாத்து ஆராய்ந்து வெளியிட்டால் நலமா யிருக்குமேயென்று தோற்றுகிறது. கலைவல்லார்களுடைய குடும் பங்களிலுள்ளோரிடம் பலசெய்திகளை வாய்மொழியாகக் கேட்டறி யலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். எனக்கு இருந்த ஐயங்களிற் சில, வேறு ஊர்களுக்குச் சென்றிருந்த பொழுது அங்கங்கேயிருந்த முதியவர்களால் நீங்கின. என்னு டைய இளமையில் திருவீழிமிழலையில் சிறந்த சிற்பியொருவர் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவர் பல விஷயங்களைத் தெளி வாகச் சொன்னார். சீவகசிந்தாமணியில் வந்துள்ள யானைப்பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவாவென்று திருவிடைமருதூரி லிருந்த ஒரு யானைப்பாகனைக் கேட்டேன். அவன், அவை அப் படியே வழங்குகின்றனவென்றும், யானையின் இலக்கணங்கள் முத லியனவற்றைப்பற்றித் தமிழில் எழுதப்பெற்றுள்ள சுவடியொன்று இருக்கின்றதென்றும் கூறினன். இப்பொழுது கிடைத்துள்ள பழைய நூல்களிலும் சாஸனங்களிலும் கலைகளைப்பற்றிய விஷயங் கள் பல உள்ளன. அவற்றை ஆராய்ச்சிசெய்து வெளியிட்டால் உலகத்திற்குப் பயன்படும்.



பகீரதன் தவம்

மகாபலிபுரம்


க. அ. நீலகண்ட சாஸ்திரி

“கலங்க ளியங்கும் மல்லைக் கடல்மல்லையில்'' பல்லவ அரசர்கள் காலத்திற் செதுக்கப் பெற்ற குகைக்கோயில்களும் இரதங்களும் அவைகளில் ஒவ்வொன்றிலும் அமைக்கப் பெற்ற வெகு நேர்த்தியான சிற்ப வேலைகளும் கல்வெட்டுக்களும் இதுகாறும் தப்பிப் பிழைத்து நல்ல ஸ்திதியில் இருப்பது நமது பெரும் பாக்கியங்களில் ஒன்று. மகாபலிபுரமென்ற பேருடன் இப்பொழுது ஒரு சிற்றூரா யிருக்குமிடம் முன்னாட்களில் மல்லை யென்ற இயற்பெயரும், மஹாமல்லனென்று பிரஸித்தி அடைந்த பல்லவ அரசனாகிய முதலாம் நரஸிம்ம வர்மனுடைய காலத்தில் அவனால் அழகுபடுத்தப் பெற்றதனால் மாமல்லபுரமென்ற காரணப்பெயரும் பெற்று ஓர் பெருந் துறைமுகப்பட்டினமாக விளங்கிக்கொண்டிருந்ததென்பது யாவருமறிந்த விஷயம். இம் மகாமல்லன் காலத்திலோ அல்லது சற்று முன்பின்னாகவோ, சுமார் ஏழாம் நூற்றாண்டினிறுதியிலோ அல்லது அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திலோ, ஒரு பெரும் பாறையில் செதுக்கப்பெற்ற வெகு நேர்த்தியான சிற்ப வேலை ஒன்று இருக்கிறது. இந்தச் சிற்பமானது சுமார் 29 கஜ நீளமும் 10 கஜ உயரமுமுள்ள இடத்தை அடைத்துக்கொண்டு மனிதர்களும் ரிஷிகளும் தேவர்களும் மிருகங்களுமாகச் சுமார் 150-க்கு மேற்பட்ட உருவங்களமையப் பெற்றது. சமுத்திரத்திலிருந்து அடிக்கும் உப்புக்காற்றினாலும் மழை முதலியவற்றாலும் சிற்சில உருவங்கள் சிறிது மழுங்கிச் சீர் குலைந்து போயிருப்பினும், வெகுவாக நல்ல ஸ்திதியில் காணப்படுவன இப்போதும் பல உள.

இந்தச் சிலையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை என்னவென்றால், இரண்டு பக்கங்களிலும் பெரும் பாறைகளால் அடைக்கப்



மகாபலிபுரம்—பகீரதன் தவம்.



மகாபலிபுரச் சிற்பம்.

பட்டு அவைகளுக்கு நடுவே ஏற்பட்டிருக்கும் ஒரு பெரும் பிளவும், அந்தப்பிளவிற் காணப்படும் நாகர்களும் நாக கன்னிகைகளுமே யாம். இந்த அருவி போன்ற பிளவுதான் இந்தச் சிற்பத்திற்கு நடு நாயகமென்பது அடுத்துள்ள ஓர் அத்தாட்சியாற் புலப்படும். இதே மாதிரி இன்னொரு சிற்ப வேலை இதற்கு ஒரு பர்லாங்கு தூரத்திலே செய்ய ஆரம்பிக்கப்பெற்று ஏதோ ஒரு காரணத்தால் முடிவு பெறா மல் நின்று போய்விட்டதென்பது மகாபலிபுரம் போனால் யாவருக்கும் தெற்றெனத் தெளியக்கூடிய விஷயம். முடிவுபெறாத இக்குறைவேலை யடங்கிய பெரும்பாறையிலுங்கூட நட்ட நடுவில் முற்கூறிய பாறை யில் காணப்படுவதைக்காட்டிலும் இன்னும் கொஞ்சம் அகன்றதாக வே ஒரு பிளவு இருக்கிறது. மேலும், வேலை முடிந்த பாறையிலும், அஃது அரைகுறையாயுள்ள பாறையிலும், ஒரே மாதிரியாக எல்லா உருவங்களும் இந்தப் பிளவை நோக்கியே செல்வது போலக் காணப் படுகின்றன. இந்த அருவி போன்ற பிளவுக்குத் தென்புறம் (அதா வது பாறையை நோக்கி நிற்பான் ஒருவனுக்கு இடது கைப்புறம்), நீண்ட சடையோடும் தாடியோடும் ஒரு காலால் நின்று கொண்டு ஊர்த்வ பாகுவாய்த் தவம் புரியும் ஒரு முனிவனும் அவனுக் கெதிரில் நிற்கும் ஒரு கடவுளும் காணப்படுகிறார்கள். உற்று நோக் கின் இக்கடவுள் மழுவேந்திய சிவபெருமானென்பது புலப்படும். இவர்களுக்குக் கீழே ஓர் அழகிய சிறு பல்லவக்கோயிலும், அக் கோயிலுக்குள் ஒரு மூர்த்தியுருவமும், அதன் வெளியே அக்கோயிலை நோக்கி உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு நியமத்திலிருக்கும் ஒரு முனிவனுருவமும் காணப்படுகின்றன. வடபுறம் ஒரு பெரிய யானை தன் துதிக்கையை அருவியினிடத்து நீட்டிக்கொண்டு நிற்பதைக் காண்கிறோம்; மற்றோர் யானை அதன் பின் வருவதும் தெரிகிறது. இதர மிருகங்களையும் பறவைகளையும் மற்றும் காட்டப்பட்டுள்ள நானாவித ஜீவராசிகளையும் பற்றி விரிவாக உரைக்கவேண்டியது அனாவசியம்.

இந்தச் சிற்பம் எதைக் குறிக்க வந்ததென்பது நன்றாக விளங்க வில்லை. இதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் பலவாயுள்ளன. சிலர் இந்தச் சிற்பமானது பண்டைக்காலத்து நாக ஆராதனம் செய்யும் வழக்கத்தை விளக்குவதென்றனர்; இன்னும் சிலர் இஃது ஒரு பௌத்த ஸம்பந்தமான ஆராதனத்தைக் குறிப்ப தென்று அபிப்பிராயப்பட்டார்கள்; மற்றும் சிலர் இஃது ஏதோ ஒரு பெரியதேவதையை எல்லா ஜீவராசிகளும் வணங்கு வதைக் குறிக்க ஏற்பட்ட சிற்பமென்றும், இந்தப் பெருந்தெய்வத் தின் உருவொன்று இப்போது நமக்கு ஒரு பிளவு போலக் காணப்

படுகிற நடு இடத்தில் இருந்திருக்கவேண்டுமென்றும், அவ்வுருவம் ஏதோ ஒரு காரணத்தாற் காணுமற்போயிற்று என்றும் ஓர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனல் இவ்வபிப்பிராயங்களி லொன்றும் பொதுவாக அங்கீகரிக்கப்படவில்லை. நெடுநாட்களாக இந்தச் சிற்பமானது அருச்சுனன் பாசுபதம்பெறப் பூண்ட தவநிலையைக் குறிக்க வந்ததென்றே பலராலும் கருதப்பட்டுவந்தது. ஆனல், சில வருஷங்களுக்கு முன் சில பிரஞ்சு (*French*) அறிஞர்கள் நம் நாட்டுச் சிலையுருவங்களைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று தங்களுக்கிருந்த ஊக்கத்தினல் மகாபலிபுரம் சென்று இந்தப்பாறையை உற்று நோக்கும்போது அவர்களுக்கு இதை அருச்சுனன் தவநிலையாகக் கொள்வதில் அநேக ஐயப்பாடுகள் நிகழ்ந்தன. அவையாவன: உயர்த்திய கையோடு ஒற்றைக் காலால் நின்று தவம் புரிபவனை அருச்சுனனுகவும் அவனெதிர் நிற்கும் சிவபெருமானை அவனுக்குப் பாசுபதம் கொடுக்க வந்தவராகவும் கொண்டால், இந்தச்சிற்பத்திலுள்ள மற்றப் பாகங்களுக்கு என்ன பொருத்த மிருக்கக்கூடும்? அருவி பாய்வதற்காக ஏற்பட்டதுபோல் இருக்கும் பிளவு ஏன் குறிக்கப்பட்டிருக்கிறது? அதில் ஏன் நாககன்னிகைகள் இருக்கவேண்டும்? மற்ற உருவங்களெல்லாம் இருபுறமிருந்தும் ஏன் இந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருக்கவேண்டும்? இவற்றைத் தவிர நாம் யோசித்தால் நமக்கு இன்னும் சில சந்தேகங்களும் ஏற்படலாம். சிவபெருமான் கிராத வேடத்துடன் இருப்பதாக ஒரு குறியும் காணேம். அவருடன் சில கணங்கள் காணப்படுவதைத் தவிரப் பார்வதி தேவியையும் காணேம். மேலும் அருச்சுனன் தவநிலைக்கதையில் ஒரு பன்றியும் ஒரு சண்டையு முண்டு; எந்தச்சிற்பியும் அந்நிலையைக் குறிக்க ஒரு சிற்பமியற்றுமிடத்துப் பன்றியுருவுடைய மூகதானவனையும் சிவபெருமானுடன் அருச்சுனன் புரிந்த போரையும் குறிக்காமலிரான் என்பதை ஒருவாறு துணிந்து கூறலாம். இந்தச் சிற்பம் அருச்சுனனையே குறிக்கிறதென்று கருதுவோர் சிலர் ஒரு பன்றியும் இதிற் காணப்படுகிறதாகக் கூறினும், அதைக் காண்பது அவ்வளவு சுலபமாக இல்லை. இவைகளை எல்லாம் உத்தேசித்தால் வேறு ஏதாவது ஒருவழியில் இச்சிற்பத்திற்குப்பொருளமைப்பது நலமென்று தோன்றலாம். நாம் மேற்கூறிய பிரஞ்சு ஆராய்ச்சியாளர் இதைப் பகீரதன் தவம் என்றும், நடுவில் அருவிபோல் இருக்கும் பிளவு யதார்த்தமாகவே அருவி தான் என்றும், அது கங்கையின் வீழ்ச்சியைக் குறிக்க ஏற்பட்டதென்றும், மழை காலத்தில் அதன் வழியே பாயும் தண்ணீரும் இப்பாறையின் மேல் தங்கும் மேகமும் மின்ன

லும் மஹாபாரதத்திலும் இராமாயணத்திலும் கங்காவதார சமயத்தில் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட மின்னலொடு கலந்த மழையைக் குறிக்குமென்றும், அதே மாதிரியாக சகல ஜீவராசிகளும் முனிகளும் அமரரும் பகீரதன்தவப்பயனைக் சிவபெருமானின் அருளினால் கங்காதேவி பூமிக்கு எழுந்தருளும் சமயத்தில் படும் சந்தோஷத்தைக் குறிக்க அவர்களெல்லாம் இந்நதியைப் பார்க்கப்போகிறது போல் சிற்பி இவ்வுருவங்களை அமைத்திருக்கிறனென்றும் மிக நயம்படக் கூறியிருக்கிறார்கள். மற்றுமொரு பொருத்தமும் அவர்கள் காண்பிக்கிறார்கள்; அதாவது: இந்தப்பாறைக்குத் தென்பக்கத்தில் ஒரு குகைக்கோயிலில் கிருஷ்ணபகவான் கோவர்த்தனத்தைத் தூக்கி நந்தகோபனுக்கும் ஆயர்களுக்கும் அவர் நிரைகளுக்கும் அடைக்கலம் கொடுத்த கதை சிற்பத்திலமைக்கப்பெற்றிருக்கிறது. இருபெருந்தேவர்களான விஷ்ணுவும் சிவனும் உலகத்திற்குச் செய்த பேருபகாரத்தைப் பக்கத்திலமைக்க வேண்டுமென்று கருதியே கிருஷ்ணன் கல்மழை தாங்கியதும் சிவபெருமான் கங்கையைத் தாங்கியதும் ஆகிய சிற்பங்களை இம்மாதிரி அடுத்தடுத்து நிருமிக்கும் ஏற்பாடு பல்லவ அரசராலோ அவர்களது சிற்பிகளாலோ செய்யப்பட்டிருக்கவேண்டும். இவ்வழகிதான கொள்கையே இப்போது பெரும்பாலும் சிற்ப அறிஞரால் அங்கீகரிக்கப் பெற்று வருகிறது.



செடிகளும் மிருகங்களின் தொண்டும்

எம். எஸ். சபேச ஐயர்

செடிகளுக்கு மிருகங்கள் தொண்டு செய்வதென்பது கட்டுக் கதையாகத் தோன்றலாம். ஆனால் மிருகங்களைக்கொண்டு தம் காரியத்தைச் செடிகள் முடித்துக்கொள்கின்றன. மிருகங்கள் செய்துவரும் உதவி மிகப் பெரியது. மிருகங்களைப்போல் செடிகள் இடம் விட்டு இடம் செல்லக்கூடியவை யல்ல. வேரூன்றி ஓரிடத்திலே நிற்கும் நிலையிலிருப்பதால் செடிகளுக்குப் பல அசௌகரியங்கள் நேரிடுகின்றன. முதலாவது, பருவ வேறுபாடுகளாலும் திடீரென்றேற்படும் சீதோஷ்ண ஸ்திதி வேறுபாடுகளாலும் பீடிக்கப்படாது தம்மைக் காத்துக்கொள்வதெப்படி? இரண்டாவது, தளிரைத் தின்னும் ஆடுமாடுகளினாலுண்டாகும் கேட்டை விலக்குவதெவ்வாறு? மூன்றாவது, விதைகள் உண்டாவதற்கு மகரந்தப் பொடியை (*Pollen*) அண்டாசயம் அல்லது கருப்பப்பை (*Ovary*) யினிடம் சேர்ப்பதெப்படி? கடைசியாக, கர்ப்பாதானத்தால் பூக்களில் தோன்றும் கனிகளையோ விதைகளையோ உரிய இடத்தில் சேரச்செய்வதெப்படி? மேற்கூறிய இடையூறுகளை நீக்கிக்கொள்ள வழியில்லாவிடில் செடிகளின் வாழ்வு கடினமாகும். கால வேறுபாடுகளால் அதிகமாய்ப் பாதிக்கப்படாமல் செவ்வையாய் வளர்வதற்குச் செடிகளிலேயே சில சாதனங்களிருக்கின்றன. விதைகளை யுண்டு பண்ணவும், கனிகளை எடுத்துப் போகவும் வெளியுதவி வேண்டியதாகிறது. இக் குறைகளை ஒழிக்க உபாயங்களில்லையானால் செடிகளின் வாழ்வு பயனற்றதாகும்; சந்ததி யேற்பட வழியில்லாமல் உயர்தரச் செடிகளெனப்படும் பூவினச் செடிகள் நசித்துப்போம். விதைகள் தோன்றுவதற்கும் பரவுதற்கும் மிருகங்கள் சாதகமாயிருக்கின்றன.

மகரந்தப்பொடியை யெடுத்துச் செல்லல் (*Pollination*).

மகரந்தப் பொடியிலுண்டாகும் நாதம் (*Sperm*) அண்டாசயத்தில் வளரும் அண்டத்திலுள்ள கரு (*Egg*) வுடன் கலத்தலால்

விதையுண்டாகிறது. அண்டமோ கருப்பையை விட்டு வெளி வருவதில்லை; பையினுள்ளேயே வளர்ந்து வருகிறது. மகரந்தப் பொடி மகரந்தப் பையில் ஏராளமான தூளாகத் தோன்றிப் பருவத்தில் பை வெடிப்பதால் வெளியே வருகின்றது. கர்ப்பாதானம் (*Fertilisation*) ஏற்படுமுன்பு மகரந்தப்பொடி அண்டாசயத்தின் முனையை (*Stigma*) அடையவேண்டும். முனையை எவ்விதத்தாலாவது அடையக்கூடுமானல், மகரந்தப்பொடியில் கருவுடன் சேர்வதற்கான மாறுபாடுகள் தோன்றக்கூடும். அண்டாசயத்தின் முனை (கீலாக்ரம்) சற்றுப் பரந்தும் பசையுடையதாயும் இருப்பதால் மகரந்தத்தூள்கள் இலகுவாய் ஒட்டிக்கொள்ளலாம். மகரந்தத்தூள் தானகவே நகரக்கூடியதன்று. கீலாக்ரத்தை மகரந்தப்பொடி எவ்வாறடைவதென்பதை நாம் அறியவேண்டும். மகரந்தப்பொடியை எடுத்துச் செல்ல வெளியுதவி வேண்டியதே. பூக்களைக் கவனித்தால் வெளியுதவியின் அவசியம் தெரியவரும். கொட்டைமுத்து, பூசணி முதலிய செடிகளின் பூக்களில் மகரந்தப்பையைத் தாங்கும் மகரந்தத்தாள்களும் அண்டாசயமுமாகிய இருவகை உறுப்புக்களும் ஒரே பூவில் சேர்ந்திருப்பதில்லை. வெளியுதவியின்றி மகரந்தப்பொடி கீலாக்ரத்தைச் சேரமுடியாது. பெரும்பாலும் இவ்விரண்டுறுப்புக்களும் ஒரு பூவினுள்ளேயே நெருங்கியிருப்பனவாயினும் வெளியுதவி அவசியம். ஒரு பூவிலுண்டாகும் தூளின் நாதம் அதே பூவில் தோன்றும் கருவுடன் கலக்கும் தன்மையதாயில்லை. அதே செடியிலுள்ள மற்றொரு பூவின் கருவுடன் கலந்து பலனைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் மகரந்தப்பொடியை எடுத்துச்செல்ல வெளியுதவி வேண்டும். பூச்சிகளே விசேஷமாய் மகரந்தப்பொடியைப் பூவினின்றும் பூவிற்குச் சேர்க்கின்றன. சில சிறிய பக்ஷிகளும் உதவிபுரியலாகும்.

பூக்கும் காலத்தில் ஆயிரக்கணக்காய் வண்டுகளும், குளவிகளும், வண்ணத்திப்பூச்சிகளும், தேனீக்களும் ரீங்காரஞ்செய்து கொண்டு செடிகளினிடம் பறப்பதை நாம் பார்க்கிறோம். பூவினின்றும் பூவிற்கு வேகமாய்ப் பறந்து செல்வதையும் காண்கிறோம். இச்சமயங்களில் மகரந்தப்பொடி ஒரு பூவிலிருந்து வேறு பூக்களுக்குச் சேர்க்கப்படலாமென்று நாம் நினைக்கலாமல்லவோ? உயிர்நூலறிஞர்கள் (*Biologists*) இவ்விஷயமாய் ஆராய்ச்சிசெய்து தீர்மானித்திருக்கிறார்கள். பல பூக்கொத்துகளுள்ள செடியில் ஒரு கொத்திலிருக்கும் பூக்களின் மகரந்தத்தாள்களை (*Stamen*) நீக்கிவிட்டு மெல்லிய துணியால் கொத்தைப் பூச்சிகள் அணுகாவண்ணம் மூடிவைக்கவே அக்கொத்தில் கனிகள் உண்டாவதில்லை. அவ்விதமே செய்யப்பட்ட

கொத்தொன்றை மூடாமல் விட்டிருந்தால் கனிகள் தோன்றுகின்றன. இதனால், பூச்சிகள் பூக்களை அடையும்போது மகரந்தப்பொடி சேர்க்கப்படுவதென்பது நன்கு விளங்கும்.

பூச்சிகளைக்கொண்டு தம்காரியத்தைச் செடிகள் எவ்வாறு நிறைவேற்றிக்கொள்கின்றன? பூக்களில் காணக்கூடிய பல வேறுபாடுகளும் பூச்சிகளின் வரவினின்றும் பெரிய லாபத்தை அடைவதற்கனுகூலமா யிருப்பதைக் காணலாம். பூக்களிருக்குமிடத்தைப் பூச்சிகள் முதலில் கண்டறிய வேண்டும். ஆகவே செடிகள் பூக்களை எடுத்துக் காட்டுவது அவசியம். பலநிறங்களோடுகூடிய இதழ்கள் பூக்களில் இருக்கின்றன அல்லவா? பூக்களை நாம் வர்ணங்களால் கண்டுபிடிப்பதுபோல் பூச்சிகளும் பூக்களிருக்குமிடத்தை அறிந்துகொள்கின்றன. பசுமையான இலைகளின் நடுவே நிறங்களோடு கூடிய பூக்கள் பகட்டாய்த் தோன்றுகின்றன. மேலும் பூக்கள் கொத்துக்கொத்தாயிருப்பதால் பூச்சிகள் எளிதில் அவற்றைக் கண்டுகொள்கின்றன. சில பூச்சிகள் சில செடிகளின் பூக்களையே நாடிவரும். சில செடிகளின் பூக்கள் மலரும் சமயம் சிலவகைப் பூச்சிகள் வெளிவரும் காலத்தை ஒத்திருக்கிறது. மல்லிகை, முல்லை, பாரிஜாதம் போன்ற பூக்கள் வெண்மையாயும், வாசனை யுடையனவாயு மிருக்கின்றன. இருட்டில் மலர்கிறபடியால் வர்ணங்கள் பயன்படா. வாசனையைக் கொண்டே இரவில் பறக்கும் பூச்சிகள் மல்லிகை முதலிய பூக்களைத் தெரிந்தடைகின்றன.

தம்மையடைந்த பூச்சிகளை நல்வரவேற்பதுபோல் பூக்கள் காணப்படுகின்றன. பூச்சிகள் சிறிதுநேரம் பூக்களில் தங்குவதற்கான பல உபாயங்கள் பூக்களில் பார்க்கிறோம். வெயிலில் அலைந்த பூச்சிகள் இதழ்களில் தங்கி இளைப்பாறலாம். மழையிலகப்படின் இதழின் குழாயில் நுழைந்துகொள்ளலாம். விரிந்த இதழ்கள் பூச்சிகள் தங்குதற்குரிய இடமாகவுமிருக்கின்றன. 'பூக்களைக் கண்டபோதெல்லாம் பூச்சிகள் அவைகளிடம் செல்வானேன்?' என்று கேட்கலாம். பூக்களில் தேன் சுரப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். தேன், பூச்சிகளின் முக்கிய உணவாகும். பூக்களைப் பார்க்கும்போது உணவைத் தேடும் எண்ணம் உண்டாகிறது. பூக்களையடையப் பூச்சிகளைத் தேன் தூண்டுவதுபோலும்.

தேனையடையப் பூச்சிகள் பூக்களினுள்ளே செல்லவேண்டும். போகும் வழியிலேயே மகரந்தத் தாள்களும் அண்டாசயமும் இருக்கின்றன. பூவினுள்ளே சென்று வெளியேவரும்போது பூச்சியினுடலில் பளபளப்பான மகரந்தப்பொடி ஒட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். கருமையான வண்டுகளும் பொன்னிறத்தனவாய்த் தோன்றுவனவாகும். இந்தப்பூச்சி உடனே மற்றொரு பூவையடைகிறது. அப்

போது முன்னே நிற்கும் அண்டாசயத்தின் முனையான கிலாக்ரம் பூச்சியினுடலோடு உரைகிறது. மகரந்தத்தூள்கள் கிலாக்ரத்தில் ஒட்டிக்கொள்கின்றன. ஒரு பூச்சி பல பூக்களைச் சற்று நேரத்தில் அடைகிறது. ஒரு பூவிலுள்ள பொடியையே அநேகம் பூக்களில் சேர்க்கலாம். பூக்களின் உருவமும், வாசனையும், அடுக்கு முறையும், வர்ணமும் நாம் சந்தோஷிப்பதற்காக ஏற்பட்டவையல்ல. மகரந்த ஸ்பரிச மேற்படுவதற்குரிய முக்கிய சாதனங்களென்று நாம் அறியவேண்டும். பூச்சிகளைக் கவர்ந்தும், வரவேற்றும், சந்தோஷப்படுத்தியும், இனிய உணவளித்தும் செடிகள் தம்முடைய முக்கிய காரியத்தை முடித்துக் கொள்வது விநோதமல்லவா? பூச்சிகளின் உதவியையே அநேகம் பூவினச் செடிகள் நம்பியிருக்கின்றன. சந்ததியுண்டாவதற்குப் பூச்சிகளின் உதவி அவசியம். சில பூக்களில் பூச்சிகளினுடைய குறிப்பிட்ட ஒரு பாகத்தில் மகரந்தப்பொடி படியும்படி செய்யத்தக்க அருமையான அமைப்பையும் காணலாம்.

கனிகள் பரவுதல் (*Dispersal of fruits*).


விதைகள் தோன்றினபின் அவைகளைச் செவ்வையாய் முளைக்கக்கூடிய இடத்திற் சேர்க்கவேண்டும். ஒரு மரத்திலுள்ள பழங்கள் பக்கத்திலேயே விழுந்து தங்கிவிடின், அவைகளிலுள்ள விதைகள் சரியாக முளைப்பதில்லை. நெருக்கமான இடத்தில் விதைகள் முளைப்பதும் செடிகள் வளர்வதும் அருமையானவை. அரும்பாடுபட்டுத் தோன்றிய விதைகளைச் செடிகள் இழக்கலாமா? காலியிடங்களுக்குப் பரவக்கூடுமானால் விதையுண்டானதின் பலனைச் செடிகள் அனுபவிக்கலாம். பழங்களைப் பரவச்செய்யவும் மிருகங்கள் உதவியாயிருக்கின்றன. பக்ஷிகள் செய்யும் உதவி பேருதவியாகும். பக்ஷிகளா லெடுக்கும்படியான கனிகள், சதையோடுகூடிய தசைக்கனிகள். இக்கனிகள் முதிர்ந்திருக்கும்போது வர்ணங்களுடன் காணப்படும். பிஞ்சா யிருக்கும்போது நிறமேற்படுவதில்லை. முதிர்ந்த பழங்களைப் பக்ஷிகள் இலைகள் மத்தியில் எளிதில் கண்டுகொள்கின்றன; இரசத்தோடு கூடிய சதையை உணவாகக்கொள்கின்றன. பழங்களைத் தின்றதும் பறவைகள் வெகுதூரம் பறந்து சென்று பின்பு மரத்தின் பொந்துகளிலோ கோபுரங்களிலோ இளைப்பாறும்பொழுது மலத்துடன் விதைகளைக் கழிக்கின்றன.

இவ்வாறு விதைகள் மரப்பொந்துகளிலும் கோபுரங்களிலும் தங்குவதாலே பிற்பாடு இவ்விடங்களில் செடிகள் வளர்வதைக்காண்கிறோம். சாலையில், மா, புளி முதலிய மரங்களின்பேரில், வேம்பு, ஆலம், நுணா முதலிய செடிகள் வளர்வதை யாவரும் கண்டிருக்கலாம், பக்ஷியினுள்ளே தங்கியிருந்த விதைகள் கெட்டுப்போவ

தில்லையென்று தெரியவருகிறது. பலவிதைகள் வேறிடங்களிலும் மலத்துடன் வெளிவரக்கூடுமாதலால், தசைக்கனிகள் பக்ஷியின் உதவியால் எங்கும் பரவக் கூடும். மேலும், பறவைகள் வேறுவகைக் கனிகளையும் எடுத்துச் செல்லலாம். குட்டைகளில் குளிப்பதற்குப் பறவை அடிக்கடி செல்வது வழக்கம். ஜலத்திலும், மண்ணிலும் சிறிய கனிகள் இருக்கின்றன. இறக்கையைத் தண்ணீரிலடிக்கும்போது சிறிய கனிகளும் விதைகளும் ஒட்டிக்கொள்ளலாம். கால்களில் மண்ணொட்டிக் கொள்ளலாம். வேறு குட்டையை அடையும்போது இக்கனிகள் வெளியே வரக்கூடும். ஒரு பக்ஷியின் காலிலிருந்து எடுத்த மண்ணில் சுமார் எண்பத்திரண்டு செடிகள் இருந்ததாகக் கனம் சார்லஸ் டார்வின் (*Charles Darwin*) அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆடு மாடு முதலிய மிருகங்களும் கனிகளை இடம்விட்டு இடம் சேர்க்கக்கூடும். இக்கனிகள் பெரும்பாலும் உலர்ந்த கனிகள். இவைகளில் கொக்கிபோன்ற பல 'சிலும்புகள்' (*Bristles*) பார்க்கலாம். இவை மிருகங்களின் தோல்மயிரில் தொத்திக்கொள்கின்றன. நெடுந்தூரஞ் சென்றபின் ஆடுமாடுகளுக்குக் குத்துகின்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அப்பொழுது தேகத்தை உராய்ந்து கொண்டு கனிகளை உதிர்த்துவிடுகின்றன. ஒட்டடைச்செடி யெனப்படும் ஒரு சிறிய செடி சம்பா அறுவடையானதும் வயல்களில் ஏராளமாய் வளர்கிறது. இதனுடைய கனியில் பல கொக்கிகள் உண்டு. முதிர்ந்த கனி செடியினின்றும் இலகுவாய்ப் பிரிந்து விடுகிறது. மாடுகள் மேயும்போது வாலைச் செடியில் அடிக்கக் கனிகள் செடியைவிட்டு நீங்கி வாலில் தொத்திக்கொள்கின்றன. காலியிடங்களில் நெருஞ்சில் செடியைக் காணலாம். காலில் முள் தைக்கும்போது கோபத்துடன் முள்ளோடு கூடிய கனியைப் பிடுங்கி வெகுதூரத்திற்கப்பால் போகும்படி எறிகிறோம். செடி வேண்டுவதும் அதுவே.

செடிகளுக்குச் செய்துவரும் உதவியின் அளவை மிருகங்களே அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை. விதைகளை உண்டுபண்ணும் வகையிலும் விதைகளைப் பரவச்செய்யும் வகையிலும் மிருகங்கள் தொண்டு செய்து வருகின்றன. வேறு வகையிலும் தொண்டு செய்தல் கூடும். வேலமரவினத்தைச் சேர்ந்த ஒரு செடியில் பெரிய முட்களுள. அவை போலாயிருப்பன. அவைகளினுள்ளே ஒரு வகை எறும்பு கூட்டமாய்க் குடியிருக்கிறது. இந்த எறும்புக்கூட்டம் செடியில் அமைக்கப்பட்டிருக்கும் அற்ப உணவை நம்பியிருக்கிறது. இலையைக் கத்தரிக்கும் வேறு எறும்போ பூச்சியோ செடியினருகில் வருமாயின் குடியிருக்கும் எறும்புகள் சண்டை செய்யத் தயாராகி, வந்தவைகளைத் துரத்திவிடுகின்றன. ஆகவே இந்த எறும்புகள் காவற்காரர்களாகத் தொண்டு செய்வது விளங்கும்.



"பூச்சிகளே விசேஷமாய் மகரந்தப்பொடியைப் பூவினின்றும் பூவிற்குச் சேர்க்கின்றன." (ப. 25).

. . . ஒரு வண்ணாத்திப் பூச்சி தன் நீண்ட நாவினால் பூவினுள்ளிருக்கும் மதுவைப் பருகுவதை இந்தப் படம் காட்டுகின்றது. நீண்ட நாக்கில்லாத பூச்சிகள் இப்பூவினின்று தேனை உண்ண முடியாது. தமக்கு உபயோகமில்லாத பிராணிகள் தமது தேனை அபகரிக்காமலிருப்பதற்கும் தமக்கு உதவி செய்யக்கூடிய ஜந்துக்களை வரவேற்பதற்கும் வேண்டிய சாதனங்களைச் செடிகள் அமைத்துக்கொண்டிருக்கின்றன.

செந்நிறப் பூ

பி. என். அப்புஸ்வாமி

பல நிறங்கள் கொண்டது இவ் வுலகம். நம்மைச் சூழ்ந்துள்ள எல்லையற்ற ஆகாயத்தின் நிறம் நீலம். அதில் ஜொலிக்கும் சூரியனது நிறம் சிறிது செம்மை கலந்த வெள்ளை. இரவில் மினு மினுக்கும் அழகிய நக்ஷத்திரங்கள் பொதுவாக வெண்மையாத் தோன்றியபோதிலும் அவற்றுட் சில பச்சை, சில நீலம், சில சிவப்பு. நம்மைச் சுற்றியுள்ள கடலின் நிறம் நீலமே யாயினும், வெள்ளைக் கடலும், சிவப்புக் கடலும், கறுப்புக் கடலும், மஞ்சட் கடலும் இருக்கின்றனவல்லவா? நமது பூமியிலுள்ள மண்ணின் நிறம் எத்தனை வகையானது! மனிதர்களின் நிறம் எத்தனை! பூமியில் தோன்றிய ஜந்துக்களின் நிறம் எத்தனை! செடிகளின் நிறங்கள் எத்தனை! புஷ்பங்களின் நிறம் எத்தனை!

பல நிறங்கள் கொண்டது அழகு. வானவில்லின் நிறங்களைக் கண்டு மகிழாதார் யார்? வைரத்தின் ஜொலிப்பைக் கொண்டாடாதார் யார்? மயிலின் தோகையையும், பஞ்சவர்ணக்கிளியின் உடலையும் பார்த்துக் களியாதார் யார்? புஷ்பங்களே அற்ற குரோடன் செடிகளை, அவற்றின் நிறநிறமான அழகிய இலைகளின்பொருட்டு, நாம் வாங்கிப் பாதுகாத்து வளர்க்கவில்லையா? பெண்ணின் அழகை வர்ணிக்கும்போது அவளது அழகிய மலர்ந்த முகத்தையும் கைகளையும் பாதங்களையும் சிவந்த தாமரைப் புஷ்பத்துக்கும், கூந்தலைக் கரிய மேகத்துக்கும், நெற்றியை வெண்மையான சந்திரப் பிறைக்கும், செவ்வரி படர்ந்த கண்களை நீல நிறமான குவளைப்புஷ்பங்களுக்கும் கரிய வண்டுகளுக்கும், சிவந்த இதழைப் பவளத்துக்கும், வெள்ளையான பற்களை முத்துக்களுக்கும் முல்லைப் புஷ்பங்களுக்கும் ஒப்பிட்டுக் கூறும் கவிகள், பன்னிறங் கொண்டதே அழகு என்று எண்ணுகிறார்கள் அல்லவா?

பல நிறங்கள் கொண்டது ஒளி. நமக்கு இவ்வுலகத்தையும் இவ்வுலகத்திலுள்ள அழகிய பொருள்கள் அனைத்தையும் அளிக்கின்ற சூரிய வெளிச்சமானது எழு நிறங்கள் கொண்டது. அவற்றுள் சிவப்பு, மஞ்சள், நீலம் மூன்றும் முக்கியமான பிரதம வர்ணங்கள். ஆரஞ்சு, பச்சை; கருநீலம், ஊதா ஆகிய பிற நான்கு நிறங்கள்

முற்கூறிய நிறங்களின் சேர்க்கையால் உண்டாவன. இவ்வகையான ஏழு நிறங்களின் கலப்பால் வெண்மை நிறமாக மாறிய ஒளியின் குணத்தாலேயே இவ்வுலகில் நாம் காணும் வஸ்துக்கள் பற்பல நிறங்களோடு நமக்குத் தோன்றுகின்றன.

ஏன் இந் நிறங்கள் அமைக்கப்பட்டன? நாம் பார்த்துப் பார்த்து மகிழ்வதற்காகவா? அல்லது ஊன்றி நினைத்து நினைத்து ஆச்சரியவலையில் மயங்குவதற்காகவா? அல்லது வேறு ஏதாவது பயனை எண்ணி இந் நிறங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

முன்னொரு காலத்தில் அறிவிற் குறைந்து இறுமாப்பில் மிகுந்திருந்த மனித வருக்கமானது இவ்வுலகிற் காணப்படும் சராசரங்கள் அனைத்தும்—வானிற் பறக்கும் பட்சிகளும், மண்ணில் வாழும் பிராணிகளும், புல் பூண்டு செடி கொடி மரங்கள் யாவும், நீருள் வாழ்வன எல்லாமும்—தனக்காகவே தன் அருமைத் தெய்வத்தால் படைக்கப்பட்டன வென்று எண்ணியிருந்தது. இப்பொழுது அறிவு முதிர முதிர, ஆராய்ச்சி மிக மிக, அப்பழைய கொள்கைகளை முற்றிலும் மறந்து, வேறு வகையான கண்களைக் கொண்டு இயற்கைத் தாயின் விசித்திர விநோதங்களைக் கவனிக்கிறது.

இவ்வுலகத்தில் காணப்படும் பிராணிகள் ஏன் நிறமாறுபாடுகளை உடையனவாய்த்தோன்றுகின்றன? ஏன் சில ஜொலிக்கும் நிறங்களை உடையனவாயும் சில மங்கலான போர்வைகளைப் போர்த்தனவாயும் காணப்படுகின்றன. புலியின்மேல் வரி ஏன்? சிங்கம் ஏன் மணல் நிறமாய்க் காணப்படுகின்றது? மிருகங்களுக்கு மேற்புறமாகிய முதுகுப் புறம் நிறமுடையதாயும் அடிப்புறமான வயிறு வெண்மையாயும் தோன்றுவதேன்? ஓந்தி ஏன் பல நிறமாய் மாறுகிறது? இவ்வாறான கேள்விகளைத் தாமே தம்மைக் கேட்டுக்கொண்டு பற்பல வகையாய் விஷயங்களை ஆராய்ந்து உண்மையை அறிய முயலுகின்றனர் அறிவாளர். ஆராய்ச்சி முறைகளையே மேற்கொண்ட அறிவாளர்க்கு இவ்வுலகமானது ஒரு பரிசோதனைச் சாலையாகவே ஆகிவிடுகிறது. அவர்கள் எந்தக் காட்சியைக் கண்டு களித்தாலும், எந்த ஒலியைக் கேட்டு இன்புற்றாலும், எந்த மணத்தை மோந்து மகிழ்ந்தாலும், எப்பொழுதும் அவர்கள் மனத்திலே அவர்கள் தூண்டுதலின்றியே "ஏன்? ஏன்?" என்ற வினாவானது எழுந்துகொண்டேயிருக்கிறது. ஜூலியன் ஹக்ஸ்லி என்னும் ஜீவதத்துவ சாஸ்திர நிபுணரை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம்.

நாம் எல்லாரும் ஊரூராய்ப் போய்ப் பற்பல விஷயங்களைக் கண்டும் கேட்டும் மகிழ்வதுபோலவே அவரும் ஆப்பிரிக்காக் கண்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது பலவற்றைக் கண்டும் கேட்டும்

மகிழ்ந்து வந்தார். ஆப்பிரிக்காக் கண்டமானது பார்ப்பதற்குரிய காட்சிகள் பல உடையது. நினைவுக்கு எட்டாத காலத்துக்கு முன்னே நாகரிக முதிர்ச்சி அடைந்த எகிப்து தேசம் அதில் ஒரு சிறு பகுதி. அதில் ஓடும் நீல நதியின் அழகும் பெருமையும் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும். அங்கே உள்ள பிரமிட் (*Pyramid*) என்று சொல்லப்படும் கோபுரக் கட்டிடங்கள் இப்பொழுது தோன்றுவதுபோலவே மூவாயிரம் வருஷங்களுக்கு மேலாக நிலையாக நிலைத்துத்தோன்றி வந்திருக்கின்றன. அங்கேயுள்ள ஸ்பிங்ஸ் (*Sphinx*) என்னும் சிற்பப்பொருளின் தத்துவத்தை இன்னும் தெளிவாக அறிவாளர் அறிந்து கொள்ளவில்லை. அங்கே அரசாண்ட அரசர்களின் பெருமையையும் இறுமாப்பையும் பற்றிப் பைபிள் (*Bible*) கூறுகின்றது. இப்பொழுதும் அவர்களுடைய ஐசுவரியத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள் பற்பல பிரமிட்டுகளிலிருந்து தெரியவருகின்றன. அந்நாட்டின் பக்கத்திலுள்ள ஸஹாரா என்னும் பாலைவனம் மிகவும் விஸ்தாரமான மணற்கடல். அஃது இந்தியாவைவிட ஒன்றரை மடங்கு பெரியது. அக் கண்டத்திலே கார்தேஜ் நகரத்திலிருந்த வீரர் ரோமராஜ்யத்தையே கலக்கினர். அக் கண்டத்திலே பெரும் பெரும் ஏரிகள் பல காணப்படுகின்றன. பனி மூடிய பெரிய மலைகள் பல காணப்படுகின்றன. நீல நதி, காங்கோ நதி முதலிய பெரு நதிகள் காணப்படுகின்றன. ஆகாயத்தினின்று கங்கை சிவன் தலையிற் குதிப்பதுபோல் கர்ஜித்து வீழும் பெரிய நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. மரம்போலுயர்ந்த ஒட்டகைச் சிவிங்கியும், மலைபோலுயர்ந்த யானையும், யானையை நிகர்க்கும் காண்டாமிருகமும், நீர்யானையும், எருமையும், காட்டுப்பன்றியும், ஜமக்காளம் போர்த்ததுபோல் தோற்றும் வரிக்குதிரையும், விதவிதமான மான்களும், தேர்வடம்போல் நீண்ட மலைப்பாம்புகளும், மனிதனைப்போலவே தோன்றும் குரங்குகளும், இன்னும் விந்தை விந்தையான பிராணிகள் பலவும், இவை அனைத்துக்கும் அரசனாகக் கொண்டாடப்படும் சிங்கங்களும் அந் நாட்டில் பற்பல இடங்களிற் சுலபமாகக் கண்ணுக்குத் தென்படுகின்றன. அதிலுள்ள மரம் செடி கொடி வகைகளும் எண்ணிறந்தவை. பொன்னும் வைரமும் விளையும் நாடு அது. அத்தேசத்தில் பிரயாணம் செய்யும் ஒருவன் அதன் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தும், திகைத்தும், பயந்தும், வியந்தும் நடப்பது சகஜம். அவன் மெய்ம்மறந்து அவனுடைய அனுபவங்களையே பெரியனவாக நினைப்பதுதான் இயல்பு. ஆப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்த ஹக்ஸ்லியும் இவ்வாறு அனுபவித்து வந்தாரெனினும் கேள்வி கேட்பதை வழக்கமாகக் கொண்டுவிட்ட அவர் மன

மானது அவரை அடிக்கடி பற்பல கேள்விகள் கேட்டுக்கொண்டே வந்தது.

ஆப்பிரிக்காவிற் சுற்றியபோது இப்படித் தம் மனம் கேட்ட ஒரு விஷயத்தைப்பற்றி அவர் சொல்லுவதின் சாராம்சமாவது :—

ஆப்பிரிக்காவின் கிழக்குப் பாகத்தில் பிரயாணம் செய்யும் ஒருவன் அங்கே சிவப்பு நிறமுள்ள புஷ்பங்கள் எங்கும் செறிந்து கிடப்பதைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. அப் புஷ்பங்கள் இங்கிலாந்திலும் சமசீதோஷ்ண நாடுகளிலும் உள்ள புஷ்பங்களைப்போல் சிவப்போடு வெளுப்புக் கலந்த ரோஜாநிறமுடையவைகள் அல்ல. சிவப்போடு நீலம் கலந்து தோன்றும் ஊதா நிறப் புஷ்பங்களும் அல்ல. அவற்றின் நிறம் நெருப்புப் போன்ற சுத்தமான சிவப்பு. அந்நாட்டிலே மலைச்சாரல்களில் நெருங்கி வளர்ந்த பெரிய மரங்களிற் பூத்த செந்நிறப் புஷ்பங்களைக் காணும்போது மலையே நெருப்புப் பிடித்து எரிவதுபோல் தோற்றும். புஷ்பங்கள் பூக்கும்போது அம் மரங்கள் பொதுவாக இலைகளை உதிர்த்து விடுகின்றன; ஆதலால் பூவின் சிவப்பு நிறம் நன்றாக எடுத்துக்காட்டப்படுகிறது. அந்நாட்டிலே எங்கும் பெரிய மரங்களும் சிறிய மரங்களும் குறுஞ்செடிகளும் புதர்களும் பலவகை அல்லிப் புஷ்பங்களும் ஒரே சிவப்பு மயமாய் விளங்குகின்றன. அவற்றின் அழகை வருணிக்க இயலாது. எங்கும் நிறைந்த இச் செந்நிறக் காட்சியானது கண்ணைப் பறிக்கின்றது. 'ஏன் இச் செந்நிறச் செறிவு?' என்று நான் கூர்ந்து ஆராயப் புகவில்லை; ஆயினும் என்னை யறியாமலே என் மனமானது அக்கேள்வியைக் கேட்டுக்கொண்டே யிருந்தது என்றே தோன்றுகிறது. அஃது எப்படியாயினும் சரி; திடீரென்று ஒரு நாள் அக் கேள்விக்கு விடை என் மனத்தில் உதித்தது; அதாவது இந் நிறத்திற்குக் காரணம் சூரிய பக்ஷிகள் எனப்படும் ஒருவகைச் சிறு பக்ஷியினம் என்பதே. இப் பக்ஷியினமும் இதுபோன்ற வேறு சிறு பக்ஷிகளும் இந்நாட்டிலே ஏராளமாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் புஷ்பங்களிலுள்ள தேனை உண்டும், தேனைப் பருகுவதற்காகப் புஷ்பங்களின் இதழ்களில் வந்து உட்காரும் தேனீக்கள் வண்டுகள் முதலிய சிறு பூச்சிகளைத் தின்றும் உயிர் வாழ்கின்றன.

தேனீக்களின் கண்களுக்கு ஒரு விசேஷ குணமுண்டு. நமது கண்களுக்கு ஊதா நிறம் முதல் சிவப்பு நிறம் ஈறாக உள்ள ஏழு நிறங்களே புலனாகின்றன. ஊதாவுக்குமேற்பட்ட நிறங்களின் கிரணங்கள் நமது கண்களுக்குப் புலனாவதில்லை. ஊதாவுக்குமேல் எவ்வகை நிறமும் இருப்பதாக நாம் உணருவதில்லை. நமது கண்

களுக்குப் புலனாகாத இந் நிறமானது தேனீக்களின் கண்களுக்கு எளிதில் புலனாகின்றது. ஆனால், இதற்கு எதிரிடையாக, நாம் சிவப்பு என்று கூறும் நிறமானது அவற்றின் கண்களுக்குப் புலனாவதில்லை. தேனீக்களுக்குச் சிவப்பு என்பது ஒரு நிறமாகவே தோன்றுவதில்லை; அது நிறமற்ற வெறுங் கறுப்பாகவே தோன்றுகிறது. பக்ஷிகளோவெனில் சிவப்பு நிறத்தை நன்கு உணர்கின்றன. அவற்றிற்கு எல்லா நிறங்களைக்காட்டிலும் சிவப்பு நிறத்தின்மேல் அதிகப் பிரீதி உண்டா இல்லையா என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. புஷ்பங்களின் நிறமும் மணமும் நாம் பார்த்துக் களிக்கும்பொருட்டும், மோந்து மகிழும்பொருட்டும் ஏற்பட்டன அல்ல. அவற்றைப் படைத்தவர் நம்மை மட்டிலும் பொருளாக எண்ணிப் பிற பொருள்கள் யாவற்றையும் நமது பிரயோசனத்துக்காக அமைக்கவில்லை. புஷ்பங்களுக்குப் பரோபகார சிந்தனை சிறிதும் கிடையாது. தமது இனம் பெருகும் பெரிய முயற்சியில் ஈடுபட்ட புஷ்பங்கள் அப் பெரு முயற்சிக்கு உரிய துணையாகவே நிறத்தையும் மணத்தையும் பெற்றிருக்கின்றன. பகட்டான நிறநிறமான ஆடைகள் உடுத்து, அணிகள் அணிந்து, வாசனைகள் பூசிப் பிறர் மனத்தைக் கவர முயலும் விலைமாதர் பிறர் பொருட்டா தம்மைச் சிங்காரித்துக் கொள்ளுகிறார்கள்? தம் பொருட்டே யல்லவா? அதுபோலவே புஷ்பங்களும்.

ஒவ்வொருவகைச் செடியும் அதன் அதன் இனம் பெருகும் பொருட்டுப் புஷ்பங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு புஷ்பத்திலுள்ள மகரந்தத் தூளானது மற்றொரு புஷ்பத்தில் போய்ப் படியவேண்டும். அப்பொழுது அதிலேயுள்ள கருவோடு கலக்கும். அதனால் சந்ததி விருத்தி ஏற்படுகிறது. இவ்வாறு புஷ்பத்தினின்று புஷ்பத்துக்கும் செடியினின்று செடிக்கும் மகரந்தத் தூளை எடுத்துச் செல்லுவதற்குத் தகுந்த தூதர்கள் வண்டுகள், தேனீக்கள், வண்ணாத்திப்பூச்சிகள், விட்டில் பூச்சிகள் முதலிய பூச்சியினத்தைச் சார்ந்த சிறு பிராணிகளும் சிற்சில பக்ஷிகளும் ஆகும். ஒவ்வொரு வகைப் புஷ்பமும் ஒவ்வொரு குறிப்பிட்ட பூச்சி வகையையோ, சிற்சில குறிப்பிடக்கூடிய பூச்சி வகைகளையோ, குறிப்பிட்ட பக்ஷி வகைகளையோ தனக்கு ஏற்ற துணையாகக் கொண்டு அவ்வச் சிறு பிராணியின் சுபாவத்துக்கும், உடலமைப்புக்கும், ஆகார முறைக்கும் தகுந்தபடி தனது உடலையும் குணத்தையும் மணத்தையும் மாற்றியமைத்துக்கொண்டிருக்கின்றது. இரவிற் சஞ்சரிக்கும் வண்ணாத்திப்பூச்சிகளின் உதவியை நாடும் செடிகள் இரவில் எளிதிற் புலனாகக்கூடிய வெண்மை நிறமுள்ள நறுமணம் பொருந்திய புஷ்பங்களைத்

தாங்கி நிற்கின்றன. ஆதலால் முல்லை மல்லிகை போன்ற வெள்ளைப் புஷ்பங்கள் பொதுவாகச் சாயங்கால நேரத்தில் மலர்கின்றன. இரவில் ஒளிர்கின்றன; மணம் வீசுகின்றன. தாமரை, செவ்வரி, ரோஜா முதலிய நிறமுள்ள புஷ்பங்கள் காலையில் மலர்ந்து கமழ்ந்து பகலிற் சஞ்சரிக்கும் தேனீக்கள், வண்டுகள் முதலியவற்றின் மனங்களைத் தமது நிறங்களாலும் மணங்களாலும் கவர்கின்றன. அவற்றைப் போலவே, பகலில் உலவி விளையாடும் பக்ஷிகளின் துணையை நாடும் செடிகளும் மரங்களும் அவற்றிற்கு விருப்பமான, தேனீக்களுக்குப் புலனாகாத செந்நிறப்பூக்களைத் தாங்குகின்றன. இதுதான் செந்நிறப்புஷ்பங்கள் பூப்பதின் காரணம்.

ஏன் இவ்வகைப் பூக்கள் குளிர் நாடுகளில் மிகுந்து காணுவதில்லை என்பதற்குக் காரணமும் இதுவேதான். ஒரு பக்ஷியினமானது இப்பூவையே ஆதாரமாகக்கொண்டு உயிர் வாழவேண்டுமானால் இப் புஷ்பமானது வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் புஷ்பிப்பது அவசியமல்லவா? குளிர் நாடுகளில் பனி பெய்யும் காலத்தில் மரம் செடி கொடி எல்லாம் குளிரின் மிகுதியால் கருகிப் போகும்போது இப் புஷ்பங்களுக்கு எங்கே போவது? ஆகையால் வருஷம் முழுவதும் புஷ்பிப்பதற்கு வேண்டிய சௌகரியங்களுள்ள மழைப் பாங்கான உஷ்ணப் பிரதேசங்களிலேதாம் இவ்வகையாய்ப் பக்ஷிகள் வாழ முடியும். ஆதலால் அத்தகைய பிரதேசமாகிய கீழ் ஆப்பிரிக்காவிலே செந்நிறப் பூக்களின் சோதி நாலா பக்கமும் சிறந்து விளங்குகின்றது.

பூச்சி மகாநாடு

D. K. விசுவநாத ஐயர்

தெள்ளுப்பூச்சிகள், ஈக்கள், மணல் ஈக்கள் (*sand flies*), பேன்கள், மூட்டைகள், 'டிக்' பூச்சிகள், 'ட்ஸெட்ஸி' ஈக்கள், கொசுக்கள்—முதலியன.

வரிசையாக ஒவ்வொரு பூச்சி யினத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் மகாநாட்டுக்கு வந்து ஆசனத்தில் அமருகிறார்கள்.



ஈ.—பூச்சிப்படைவீரர்காள்! நமது பொது இயக்கத்திற்காகச் சென்ற வருஷம் நாம் செய்துள்ள தீரச் செயல்களைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கும் நிகழும் வருஷத்திற்கு இப்பெரும் படைக்கு ஏற்ற தலைவனைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டும் நாம் இப்பொழுது இச்சபை கூடி யிருக்கிறோம். நாச் சேதமே நமது பிரதானக் கொள்கையாகும். அக்கொள்கையை மேற்கொண்டு நமது படையில் ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர்கள் செய்துவரும் தீரச்செயல்களை இச்சுதினத்திற் சிறிதும் கூச்சமின்றி விஸ்தரித்தாலன்றி நமது ஜீவகாருண்யப் படைக்கு ஏற்ற மகா தீரனை தலைவனைத் தேர்ந்தெடுக்க எலாமற் போய்விடும். நேயர்களே! நமது படை ஜீவகாருண்யப்படை யென்றேன். அதற்குமொரு ஐயமுண்டோ? ஜீவகாருண்யத்தை மேற்கொண்டே நாசம்ஹார இயக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறோம். எவ்வாறெனில் கேவலம் மிருகங்கள் பூச்சிகள் முதலியனகூட வெட்கமுறுமாறு தற்காலம் மானிட வகுப்பினர் குழந்தை பெற்றுத் தம் குடும்பங்களை விருத்தி செய்து வருவதை நோக்குமிடத்து நீர்வளம் நிலவளம் பொருந்திய நமது பாரத நாட்டுத் தானியக் களஞ்சியங்கள்கூடக் காலியாகிவிடும்போல் தோன்றுகிறது. அவ்வாறாகக்கூடாது. அவரது தொகையை மட்டுக்குள் நிறுத்திவைக்கும்பொருட்டு, சமயம் பார்த்து நமது பாணங்களை எய்கிறோமேயல்லாது கேவலம் போராட்டக் கொழுப்பு மேலிட்டல்ல. உண்மையையே உரைப்பதென்ற நிபந்தனைகளுக் குட்பட்ட இச்சபையோர்களுக்கு மானிட வகுப்பின் தீவிர விருத்தியைக் குறித்து ரூபிக்கவேண்டியது அவசியமில்லை; ஆயினும் நமது எதிரிகளான டாக்டர்கள் கூடிய ஒரு சபையில் நமது முக்கிய

எதிரியாகும் 'ரஸ்ஸெல்' என்பவன் இரண்டு வருஷங்களுக்குமுன் செய்த உபந்நியாஸத்தையே சாக்ஷியாகக் கூறலாம்.


சகோதரர்களே ! நமது முக்கிய நோக்கத்தை விட்டுவிட்டு வேறு விஷயங்களைப்பற்றி ஆராய்வானேன் ? தவிரவும் ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் தீர பராக்கிரமச் செயல்களை எடுத்துரைக்க ஆவலுடன் இருப்பீர்கள். ஆகையால் எனது பேச்சைச் சுருக்கி நமது தலைவனைத் தேர்ந்தெடுக்கும் வரை இச்சபைத் தலைவனாக இருக்கும்படி தெள்ளுப்பூச்சியை வேண்டுகிறேன். மற்றுமொரே விஷயம்: நாம் தேர்ந்தெடுக்கும் படைத்தலைவன் எல்லா வகுப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் நமது இயக்கம் முன்னேறும். ஆகையால் ஒருவருக்கொருவர் ஏற்படும் அபிப்பிராய பேதங்களைப் பாராட்டாது பொது இயக்கத்தின்மீதே கண்ணோக்கங் கொண்டு தகுந்த தலைவனை எல்லாரும் சேர்ந்து ஒப்புக்கொண்டு தேர்ந்தெடுப்பது நமது முக்கிய கடமையாகும்.



பேன்.—நமது படையின் மிகவும் சுறுசுறுப்பான வகுப்பைச் சேர்ந்த ஈ, கர்ணாமிருதமான மொழிகளால் உங்களை வேண்டிக்கொண்டவாறு தெள்ளுப் பூச்சியை இச்சபைத் தலைவனாக நியமிக்குமாறு நானும் விரும்புகின்றேன்.

பெருத்த காகோஷத்துடன் எல்லாப் பூச்சிகளும் தெள்ளுப்பூச்சியைச் சபைத் தலைவனாக ஒப்புக்கொண்டு 'மானிட வகுப்பினர் மாள்க! ஆண், பெண், சிசு, பிறந்த சிசு, பிறக்கப்போகும் சிசு எல்லாம் நசிக்க !' என்று கோஷித்தன. தெள்ளுப்பூச்சி சபைத்தலைவனாசனத்தில் பூச்சிகளின் இடைவிடாக் காகோஷ மத்தியில் அமர்ந்தது.


தெள்ளுப்பூச்சி.—பேர்பெற்ற நாஹரர்களே ! என்னைச் சபைக்குத் தலைவனாக நீங்கள் நியமித்ததின்பொருட்டு நான் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டியவனாயினும் ஒரு விஷயத்தைக் குறித்துச் சிறிது தயங்குகிறேன். என்னெனில், சபைத்தலைவனாக நியமிக்கப்பட்டபின் நிகழும் வருஷத்திற்கும் என்னையே நமது வீரபராக்கிரமத்தால் மனிதனின் கொட்டத்தை அறவே அடக்கப்போகும் படைத்தலைவனாக நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்று அவ்வளவு கண்டிதமாக வற்புறுத்தமாட்டாதவனாகிறேன். ஆயினும் சற்று யோசிக்குமிடத்து அவ்வாறு ஐயம்கொள்ள வேண்டியதில்லை என்று புலப்படுகிறது. ஏனெனில் ஈ புகட்டிய சற்புத்தியின்படி, நம்மில் ஒவ்வொரு வகுப்பினரும் கூச்சத்தை அறவே யொழித்துத் தமது தீரச்செயல்களை முற்றிலும் இச்சபையோருக்குத் தெரிவிக்கத் தவறினால் கண்ணியமான படைத்தலைவன் யாரென்று ஊகிக்க இடமில்லாமல் போய்விடும். அவ்வாறு தெரிவிப்பது



தற்புகழ்ச்சி யென்று சில அறிவிலிகள் கருதவும் கூடும். அதைச் சிறிதும் கவனியாது பொது இயக்கத்தின் முன்னேற்றத்தைக் கருதி எங்கள் இனத்தார் செய்துவரும் காரியங்களை இப்பொழுது தெரிவிக்கிறேன்.

நேயர்களே! நாங்கள் கள்ளம் கபடமற்றவர்கள். எலிப்பூச்சி என்னும் எங்கள் ஆங்கிலப் பெயரே நாங்கள் வசிக்கும் இடங்களை ஐயம் திரிபறத் தெரிவிக்கின்றது. ஆயினும் எலியின் தோலே எங்கள் வாசஸ்தலம் என்று நமது எதிரிக்குத் தெரிந்திருப்பினும் எலியினத்தை அறவே யொழிக்க மானிடப் பேதையால் ஒருகாலும் சாத்தியமாகாது. எலியில்லா வீடுமுண்டோ? அறியாமை, அசிரத்தை, அழுக்கு முதலிய நமது கண்கண்ட குல தெய்வங்கள் மானிடப் பதரை ஆட்டி வைக்கின்றன. மேலும் கல்வி, பிரசாரம் முதலிய நமது சனியன்கள், அதிருஷ்ட வசத்தால், மனிதனுல் இளையாள் சேய்களாகவே இன்னும் மதிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் நீடித்த காலம் வரை எங்கள் படைக்குக் கொழுத்த இரை அகப்படுமென்றே நாம் மதிக்க இடமாகிறது. எலிகளின் அபிவிருத்திக்கோ கங்கு கரையில்லை. திறந்து வைத்திருக்கும் தின்பண்டங்களே அவைகளது ஆகாரமாகும். எலி வளைகளை எங்கும் காணலாம். சந்தைகள், சாமானறைகள், வீட்டுக்கூரைகள், மண் தரைகள் முதலிய இடங்களில் எலி வளை செய்துகொண்டு வெகு காலம் வசித்துவரக் கூடும். ஒரு விஷயத்தைக் குறித்து மட்டும் நாங்கள் சிறிது கிலேசப்படுகிறோம். முக்கியமாக மனிதனுக்கென்றே தயாரித்து வரும் எங்கள் பாணங்கள் (பிளேக் கிருமிகள்) எலிகளை முதலில் தாக்கி மடியச் செய்கின்றன. ஆயினும் அண்ணன் தம்பி என்று பாண்டவர்கள் கௌரவர்களை யுத்தத்திற் கொல்லாது விடுத்தார்களோ? பகவான் தர்மக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குப் புத்தி புகட்டியவாறு கிலேசத்தை முற்றிலும் விடுத்துப் பொது இயக்கத்தின் முன்னேற்றத்தையே முழு நோக்கமாகக் கொண்டு மேன்மேலும் நரபலி வாங்கி வருகிறோம். நாகரிகம் முன்னேற ஏற, வியாபாரத்தொழில் விருத்தியாகிவர வர, தானியம், பஞ்சு முதலிய சரக்கு மூட்டைகளில் புது ஊர்களுக்கு எலிகளின்மீது நாங்கள் பவனி போய் அவ்வூர்களிலும் எங்கள் பராக்கிரமத்தைக் காட்டி வருகிறோம்.

இன்னுமொரு விஷயம். எங்கள் குண்டுகள் வெற்றுக் குண்டுகளல்ல. அவை பட்டால் அநேகமாக எதிரி அதிசீக்கிரத்திலேயே மரித்து விடுகிறான். மேன்மேலும் எங்கள் இனம் இக் கைங்கரியத்தைச் செய்து வருமாறு கருணா மூர்த்தியாகிய நம் குல தெய்வம் கடாக்ஷிப்பாராக!



மூட்டைப்பூச்சி.—அக்கிராசனாதிபதியவர்களை மிகுந்த தாழ்மையோடு ஒரே கேள்வி கேட்க விரும்புகிறேன். அதாவது 'ஹாப்கின்' என்பவரை அறிவீரா?

தெள்ளுப்பூச்சி.—நண்டன் மூட்டைப்பூச்சி............

ஈ.—மூட்டைப்பூச்சியாவது நண்பனாவது!

தெள்ளுப்பூச்சி.—வாஸ்தவமே. மூட்டைப்பூச்சியை இக்கேள்வி கேட்ட முறைக்கு நண்பனென்று சொல்வதற்கில்லைதான். நிற்க, ஹாப்கின் (மெல்லிய குரலில்) என்ற பேரைக் கேட்ட மாத்திரத்தில் என் ஹிருதயம் கொஞ்சம் துடித்தது. அவர் செய்திருக்கும் ஆராய்ச்சியின் பயனால் சில மனிதர்கள் பிளேக் வாராமல் தடுக்கும் மருந்தொன்றை 'இனகுலேஷன்' (*Inoculation*) செய்துகொள்ளுகிறார்கள். அம்முறை எங்கள் பாணங்களை எதிர்க்கக்கூடிய சக்தி வாய்ந்ததென்றே ஒப்புக்கொள்ள வேண்டியதாயினும் இச்சிறு தடையின் பொருட்டுத் தெள்ளுப்பூச்சிச் சகோதரர்களே, நமது மனத்தைத் தளர விட்டுவிடுவோமோ? [தெள்ளுப்பூச்சிகள் : (ஒரே மொத்தமாய்) ஒருகாலுமில்லை.] ஏனெனில் மானிடரில் பெரும்பாலாரின் கொள்கையென்ன? மண்ணிலே உதித்தபின் மண்ணோடு சேராது தடுக்கும் முறையை அநுசரிப்பதுமுண்டோ வென்பதே. பிறந்தபின் மரிப்பது அவரவரது பிறப்பு உரிமையாகுமென்று வாதிக்கும் இந்நாளில் கேவலம் இந்தத் தடுக்கும் முறையை மானிடர்கள் உபயோகிப்பார்களென்று நம்புவதற்கில்லை.

மற்றுமொரு வார்த்தை சொல்லிவிட்டு எனது நீடித்த பிரசங்கத்தை முடித்து விடுகிறேன். மானிடன் சாதாரணமாகக் கொடிய ஒரு சாபமிட வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் 'கொள்ளை நோய் கொள்க' (*Plague upon it*) என்கிறான். அதிலிருந்து எங்கள் பாணங்களைக் குறித்து எவ்வளவு பயப்படுகிறானென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆதலின் என்னை இந்த வருஷத்துக்குப் படைத்தலைவனாக நியமிக்குமாறு உங்களை வேண்டிக்கொள்வதுடன் தெள்ளுப்பூச்சிகளை, கூடுமானால் பூச்சிப்படையாளர்கள் அனைவரையும், மானிட வகுப்பின்மீது அதே சாபத்தை இடுமாறு கோருகிறேன்.

('கொள்ளை நோய் கொழுக்க', 'மானிடன் மரிக்க' என்ற பூச்சிகளின் கோஷம்.)

ஈ.—ஒரு காரணத்தைக் குறித்து உங்கள் மன்னிப்பையும் மற்றொரு காரணத்தைக் குறித்து உங்கள் தயவையும் நான் பிரார்த்திக்கவேண்டியிருக்கிறது. ஆரம்பத்திலேயே உங்கள் காலத்தைச் சிறிது போக்கியபின் மறுபடியும் உங்கள் முன்னிலையில் பேச வந்ததைப்பற்றி மன்னிப்பையும், ஈயினத்தைச் சேர்ந்த என்னை இவ்வருஷத்திய படைததலைவனாக நியமிக்க உங்கள் தயவையும் எதிர்பார்க்கிறேன். தெள்ளுப்பூச்சியார் கடல் மடை திறந்ததுபோற் பொழிந்த சொற்கள் உங்கள் மனத்தை அடியோடு கரைத்துவிட்டிருக்கும்பொழுது என் சொற்களுக்கு ஒருகால் நீங்கள் செவிசாய்க்க முடியாமல் இருக்கக்கூடும். முதலாவது ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். பொது இயக்கத்தில் தெள்ளுப்பூச்சியே அதிகச் சுறுசுறுப்புள்ளதென்று நினைத்து ஒருகால் இச்சபையார் எங்கள் இனத்தை மறந்து தெள்ளுப்பூச்சியைப் படைத்தலைவனாக நியமிக்கக்கூடும். ஆகையால் சபைத்தலைவனாக நியமித்து விட்டால் தெள்ளுப்பூச்சியின் வாயைக் கட்டிவிடலாமென்ற மாய நோக்கம் நான் ஒருகாலும் கொள்ளவில்லை. அந்நோக்கம் கொள்வது தப்பென்று நான் சொல்ல வரவில்லை. "நான்தான்

படைக்கு உரிய தலைவன். என்னால்தான் பொது இயக்கம் முன்னேறும்'' என்ற எண்ணத்தை நான் உறுதியாய் நம்பினால் எத்தகைய சூழ்ச்சியையும் செய்து எனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வது ஒருகாலும் குற்ற மாகாது. வீண்பேச்சு வளர்ப்பானேன்? எனது நோக்கம் எதுவாயிருப்பி னும் தெள்ளுப்பூச்சியார் சிறிதும் வாய் குளறினதாகக் காணப்படவில்லை. தற்புகழ்ச்சிக்கோ அளவில்லை. கருமத்தே கண்ணுயிருக்கும் இச்சபையார் சொல்வலையில் அகப்பட்டுக் கொள்வார்களென்று நான் நம்பவில்லை. இந்த ராஜதானியில் வருஷத்துக்குச் சில ஆயிரம் பேர்கள் கொள்ளை நோய் கண்டு இறக்கிறார்களென்பது வாஸ்தவமே. ஆனால் வருஷாந்தர ஜன சாவுக் கணக் கில் இது மிகவும் சிறிய பாகமே. தவிரவும், கொள்ளை நோயென்றால் கொடிய பயங்கொண்டு இச்சனியனுகிய சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் செய் யும் முறைகள் எத்தனையோ உண்டு. ஜனங்களும் அவைகளை யேற்றுக் கொள்ளுகிறார்கள். கொள்ளை நோய் கண்ட காலத்தில் கலெக்டருக்கு அமித மான அதிகாரம் தந்திருக்கிறார்கள். கொள்ளை நோய் ஓர் ஊரில் கண்டவுடன் அனைவரும் இனகுலேஷன் செய்து கொள்ளவேண்டு மென்பது ஒரு சட்டம். தவறினால் அவரது இருப்பிடங்களை விட்டுவிட்டு வேறு பிரத்தியேகமாக நியமிக்கப்படும் குடிசைகளிற் போய் வசிக்கவேண்டுமென்பது மற்றுமொரு சட்டம். இனகுலேஷனும் அமிதமாகச் செய்துவரப்படுகிறது. அதன் பொருட்டுப் புதிய டாக்டர்களும் நியமிக்கப்படுகிறார்கள். பாவம்! எலிகளைப் பிடித்துக் கொன்று விடுகிறார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, மற்றும் வியா பாரச் சரக்குகளை அங்கங்கே நிறுத்திவிடுகிறார்கள்; அல்லது மூட்டைகளை அவிழ்த்துச் சரக்குகளை வெயிலிற் காயவைக்கிறார்கள். தவிரவும், இப்பாரத நாட்டில் கொள்ளை நோய் சில வருஷங்களுக்கு முன்னிருந்தே உலாவி வருவ தால் அது ஏதோ ஒரு புதிய கொடிய நோயென்று ஜனங்கள் பயந்து அதைத் தடுக்க எல்லா வகையாலும் முயலுகிறார்கள். தெள்ளுப்பூச்சி இயன்றவரை பொது இயக்கத்திற்காகப் பாடுபட்டே வருகிறது. ஆயினும் படைத்தலைவனாக நியமிக்கப்படப் போதுமான அளவு சக்தி வாய்ந்ததென்று சொல்வதற்கிட மில்லை. இனி நாங்கள் செய்துவரும் நடவடிக்கைகளைச் சிறிது ஆராய்வோம்.

முதலாவது, பொது இயக்கத்துக்காக நாங்கள் செய்திருக்கும் ஒரு பெருந் தியாகத்தை அறிவிக்கக் கடமையுள்ளவனாகிறேன். அருவருப்பை முற்றிலும் விடுத்து நாங்கள் மலத்திலே பிறந்து மலத்திலேயே வசித்து மலத் திலேயே குடும்ப விருத்தி செய்து வருகிறோம். என்றாலும், சமயம் பார்த்துச் சமையலறையிலோ, அல்லது சாப்பிடும் அறைகளிலோ திறந்து வைத்தி ருக்கும் தின்பண்டங்களின்மீது மொய்த்து எதிரிக்கென்று விசேஷமாகத் தயாரித்து வரும் காலரா பாணங்களென்ன, விஷஜுர பாணங்களென்ன, சீதபேதி பாணங்களென்ன, இத்தகைய விஷங்களை மானிடனது ஆகாரத் தோடு கலந்துவிடுகிறோம். தெள்ளுப்பூச்சியார் சிறிது தற்புகழ்ச்சியோடு கொள்ளை நோய் கண்டவன் அதிசீக்கிரத்தில் மரிக்கிறானென்றார். காலரா நோய் கண்டவனின் கதியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? மற்றுமொரு முக்கிய விஷயம் குறிக்கத்தக்கது. அதாவது, எங்களால் ஏற்படும் நோய்க

ளின்வாந்தி பேதி முதலிய சின்னங்களே எங்கள் இனத்தின் விருத்திக்கு ஆஸ்பதமாகி, மறுபடியும் மறுபடியும் இதர எதிரிகளின்மீது தாக்க ஏதுவா கின்றன.

காலம் தப்பாமல் வருஷந்தோறும் எங்கள் வேலையைச் செய்துவருகி றோம். சுமார் ஆறு அல்லது ஏழு வருஷங்களுக்கு ஒருமுறை அமிதமாக ஜனங்களைக் காலரா நோயால் வாட்டுகிறோம். எத்துணைக் கல்வி புகட்டியும் எத்துணைப் பிரசாரம் செய்தும் ஈயினத்தை யொழிப்பது இக்கலியுகத்தில் முடியாத காரியம். எப்பொழுதும் காரணமின்றி உபத்திரவிக்கும் மூட்டைப் பூச்சியார், கொள்ளை நோய்க்குள்ள இனகுலேஷன்போலக் காலரா வியாதிக் கும் உண்டென்று ஒருகால் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் கொள்ளைநோய்க் குள்ளவாறு காலராவுக்கு அம்முறை இன்னும் நமது குல தெய்வத்தின் கருணை யால் சட்டமுறை யாக்கப்படவில்லை. வைசூரி நோயைத் தடுப்பதற்கென்று ஏற்பட்டுள்ள அம்மை குத்துச் சட்டமுறையைக்கூட மூடமானிடன் தடுத்து வாதிக்கும் இந்நாளில் காலரா இனகுலேஷனுக்கு ஒருகாலும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

பட்டணங்களிலும் மற்றும் பெரிய ஊர்களிலும் மலம், குப்பை முதலி யவை சுத்தம் செய்ய ஏற்பாடுகள் தற்காலம் செய்து வருவதால் எங்கள் விருத் திக்குச் சிறிது தடை ஆகவில்லையா என்று மற்றொரு கேள்வியை மூட்டைப் பூச்சியார் கேட்கலாம். ஆனால் எங்கள் விருத்திக்கு ஒருகாலும் குறை வில்லை. ஜனங்களெல்லாரும் பட்டணங்களில்தாம் வசிக்கிறார்களோ ? எத்துணையோ கிராமங்களிருக்கின்றன. பட்டணங்களில்கூடக் குப்பை, மலம் முதலியவை சுத்திசெய்யச் செவ்வையாக ஏற்பாடுகள் இன்னும் செய்யப்பட வில்லை. எங்கள் இனத்தை அறவே யொழிக்க வேண்டுமென்றால் சுகா தாரம் இன்னும் எவ்வளவோ அதிகரிக்கவேண்டும். ஆகையால் நீடித்த காலம் நாங்கள் உழைத்து மானிடரை நாசமாக்கக்கூடிய சக்தி வாய்ந்திருக்கிறோ மென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. எதிரியைத் தாக்குவதில் எங்கள் இனமே முக்கிய இனமென்பதற்கும் கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை. ஆகையால் நீதியுண்டெனில் இச்சபையார் என்னையே படைத்தலைவனாக நியமிக்க வேண்டியது அவசியமாகிறது.

பேன்.—இடி மழை பெய்து ஓய்ந்த பின்னும் தூவானம் விடாமலிருப் பதுபோல் நானும் எங்கள் இனத்தின் பராக்கிரமச் செயலைச் சிறிது ஆராய முன் வந்தேன். தெள்ளுப்பூச்சியாரின் இனத்தின் சங்கியைக்கு எங்கள் இன சங்கியை குறைந்தபாடில்லை. நாங்கள் தாக்கி வீழ்த்தும் எதிரிகளின் சங்கியைகூடக் குறைவானதில்லை. சில வருஷங்களுக்கு முன்பு எத்தனையோ பேர்களைத் தஞ்சாவூர் ஜில்லாவில் நாங்கள் தாக்கியதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென்று நான் நம்புகிறேன். தற்கால நாகரிகப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள 'கிராப்', 'பாப்' முதலிய கெட்ட வழக்கங்களை ஆண் பெண் இரு பாலாரும் அவலம்பித்து வருவது எங்களுக்குச்சிறிது இடையூறாகவே இருந்து வருகிறது. ஏனெனில் சிவாத சடைமயிரே எங்களுடைய சுவர்க்கவாசம். நாங்கள் இலகுவாகக் கொல்லமுடியாத வரப்பிரசாதம் பெற்றிருக்கிறோம்.

பலஹீனமுற்ற எளிய எதிரிகளைத் தாக்கச் சமயோசித யுக்தி வாய்ந்திருக்கிறோம். சிறிது காலம் நாங்களே 'காலா ஆஸார்' என்னும் கொடிய விஷ ஜுரத்திற்குக் காரணபூதரென்று மானிடனை ஏமாற்றி வந்தோம். ஆனால் அந்நோய்க்குக் காரணமான மணல் ஈக்களுக்குத் துரோகம் செய்வதாகுமென்று கருதி அதிசீக்கிரத்தில் அந்தத் துராசாரத்தைத் தவிர்த்து விட்டோம். மூட்டைப்பூச்சியார் மட்டும் எங்களுக்குப் பின்னால் தாங்களே அந்நோய்க்குக் காரணமென்று சமீபகாலம்வரை ஏமாற்றிவந்தார். இதைப்பற்றி மணல்பூச்சியாரே எனக்குப் பின்னால் பேச விரும்புவாரென்று நான் நம்புகிறேன். எங்கள் நடவடிக்கை முக்கியமாக 'ரிலாப்ஸிங் ஜுரம்' என்ற முறையாக வந்து பிராணனைக் கொள்ளை கொள்ளும் ஒருவகை விஷஜுரத்தை உண்டாக்குவிப்பதே.

மூட்டைப்பூச்சி.—மிகவும் வாஸ்தவம். ஆனால் 'ஸால்வர்ஸான்' ஞாபகமிருக்கட்டும். தவிரவும் தலையை மொட்டையடித்தல், அல்லது தலைமயிரில் மண்ணெண்ணெயைத் தேய்த்தல், துணிகளை நன்றாகக் கொதிக்கும் தண்ணீரில் ஊறவைத்தல் முதலியவை செய்தால் பேன்களின் கதி என்னவாகும் ?

அக்கிராசனாதிபதி.—பேன் பேசி முடிக்கும்வரை மூட்டைப்பூச்சியார் பொறுமையுடனிருப்பது அவரது கடமையாகும்.

பேன்.—தொந்தரவின் அவதாரமாகிய மூட்டைப்பூச்சியார்.........

அக்கிராசனாதிபதி.—பேன் அவரது பிரசங்கத்தைக் குறித்துப் பேசலாமே யொழிய ஒருவருக்கொருவர் அஸம்பாவிதமான வீண் வார்த்தையாடலாகாது.


பேன்.—அக்கிராசனாதிபதி உள்பட இச்சபையோர் எல்லாரும் நினைக்கும் எண்ணத்தை நான் வெளியிட்டேனே யொழிய வேறில்லை. பொது இயக்கத்தில் முன்னேற்றத்தின்மீது கண்ணுள்ளவர் நமது மர்மங்களை ஒருகாலும் எதிரிக்குத் தெரியுமாறு வெளியிடலாகாது. ஆனால் ஒரு விஷயம் மூட்டைப்பூச்சியார் மறந்துவிட்டார். அதாவது 'ஸால்வர்ஸான்' என்னும் மருந்தை இஞ்செக்ஷன் செய்துகொள்ளச் சக்தியற்ற எளியார்களையே நாங்கள் தாக்கி,......மூட்டைப்பூச்சிகளை நசுக்குவது போல் நாசஞ்செய்து வருகிறோமென்பதே.

அக்கிராசனாதிபதி.—மூட்டைப்பூச்சியார் இப்பெரும் சபையில் ஒரு பிரதிநிதி யென்பதை சடைமாமுனியார் முற்றிலும் மறந்துவிட்டார் போலும். பேனின் கடைசி வாக்கியத்தை நான் ரத்துசெய்யக் கடமைப் பட்டவனாகிறேன்.

மணல் ஈ.—முரட்டு மூட்டைப்பூச்சியின் தொந்தரவால் இச்சபை முழுதும் குழம்பியிருக்கும் மத்தியில் நான் பேச வந்தது என் துர்ப்பாக்கிய வசமே. புலித்தோல் போர்த்த கழுதைக் கொப்பான மூட்டைப்பூச்சி கிளைத்தால் கேடு வருமென்ற மர்மம் அறிந்தாரில்லை. கேவலம் சொற்பொழிவின் அழகுக்காக மூட்டைப்பூச்சியைப் புலித்தோல் போர்த்த கழுதை யென்று

நான் கூறவில்லை. அவ்வாறு கூறத் தகுந்த காரணமுண்டு. ஏனெனில் வெகு காலம்வரை 'காலா ஆஸார்' ஜுரத்துக்குத் தானே காரணமென்று மூட்டைப்பூச்சி ஏமாற்றி வந்தது. சிறிது காலத்துக்கு முன்புதான் நாங்களும் இப்படையைச் சார்ந்த சுத்த வீரர்களென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. கேவலம் பொதுஜனப்புகழ்ச்சியைச் சிறிதும் கருதாது இயக்கத்தின்மீதே கண் வைத்து, எங்கிருந்து குண்டுகள் படுகின்றன? எவ்விதக் குண்டுகள் அவை? என்றுகூடத் தெரியவிடாதபடி வங்காளத்திலிருந்து கன்னியாகுமரிவரை சமுத்திர ஓரத்திலுள்ள பிரதேசங்களிலெல்லாம் நாங்கள் எதிரியைத் தாக்கி வந்தோம். சமீப காலத்துக்கு முன்புதான் நாங்கள் எய்யும் பாணங்கள் காலா ஆஸார் கிருமிகளென்பது எதிரிக்குத் தெரிய வந்தது. தெரிந்துமென்ன பயன்? எங்கள் பாணங்கள் குறி தப்பாது தாக்கி வருகின்றன. அங்கங்கே சில வேளைகளில் பாணங்கள் எடுத்துக் களையப்படுகின்றனவென்றாலும் இன்னும் வருஷந்தோறும் அநேகம் மனிதர்களை நாங்கள் மாயச் செய்கிறோம். எதிரியோடு செய்யும் பெரிய யுத்தத்தை நான் இதுவரை உங்களுக்கு விஸ்தரிக்கலானேன். அப்பொழுது நாங்கள் எதிரிபடையைத் தாக்கி உடல் நொடிக்க வலியும் ஜுரமும் (மணல் ஈ ஜுரம்) இரண்டு மூன்று நாட்களுக்கு வரச்செய்து பலவீனப்படுத்துவதைப்பற்றி நான் விசேஷமாகச் சொல்வதற்கில்லை. ஆகையால், நேயர்களே! என்னைப் படைத்தலைவனாக நீங்கள் நியமித்தால் நான் கூடியவரை சேவை செய்யக் காத்திருக்கிறேன்.

அக்கிராசனாதிபதி.—தென் ஆபிரிக்கா தேசத்திலிருந்து விஜயம் செய்துள்ள ட்ஸெட்ஸி ஈ துயிலெழுந்து அவரினம் செய்துவரும் நன் முயற்சிகளைக் கொஞ்சம் வெளியிடுமாறு வேண்டுகிறேன்.



ட்ஸெட்ஸி ஈ.—(கண்ணைத் துடைத்துச் சோம்பல் முறித்து) அக்கிராஸனாதிபதி அவர்களே! அதிதி ஆயிற்றே என்று சிறிதும் கவனியாது தாங்கள் என்னைப்பற்றிச் சிறிது வித்தியாசமான சொற்களைச் செப்பியதாக என் நண்பரிடமிருந்து நான் அறிகிறேன். கொஞ்ச நேரம் களைப்பு மேலிட்டு

நான் இச்சபையில் தூங்கினேனென்று ஏளனம் செய்ய வேண்டாம். கொஞ்ச நேரம் நான் தூங்கினாலும் எத்தனை நேரம் நான் எதிரிகளை ஒரே மொத்தமாகத் தூங்கச் செய்கிறேனென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். என் குண்டு பட்ட எதிரி கொஞ்ச காலம் இம்மண்ணுலகில் தூங்கிப் பிறகு விண்ணுலகத் துக்குத் தூங்கப்போகிறான். ஆயினும் என்னைப்பற்றி உங்களுக்கு விஸ்தரிக்க நான் வரவில்லை. நான் ஓர் அதிதியே. அதேமாதிரி என் நண்பர் 'டிக்' பூச்சி யாரும். அவரது செயல்களைப்பற்றி உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசிய மில்லை. எங்கள் தேசத்தில் அவர் செய்து வரும் நடவடிக்கைகளை இங்கே பேன் செய்து வருகிறது. பேன் அதைப்பற்றி வீண் தற்புகழ்ச்சியோடு...
....

'போதும், நிறுத்தும் உமது பிரசங்கத்தை. படைத்தலைவனை நியமிப் போம். இனி, பிரசங்கம் வேண்டாம்' என்று பூச்சிகளின் கரகோஷம்.

அக்கிராசனாதிபதி.—அதிதியை அவமதிக்கலாகாதென்று சபையோர் ஞாபகத்தில் வைப்பாராக.

ட்ஸெட்ஸி ஈ.—'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்பது ஞாபகமிருக்கட் டும். பூச்சிப்படை அறவே நசித்துப்போவது சமீப காலத்துக்குள் ஏற்படக் கூடும் என்பதும் ஞாபகமிருக்கட்டும். அதற்குள் ஒரே மொத்தமாகத் தாக்கி எதிரியின் வலியைக் குறைக்கவேண்டுமேயல்லாது வீண்பேச்சில் காலம் கழிக்கிறீர்கள். ஆனால் இப்பூச்சிப்படையில் அவ்வாறு செய்ய வல்லவர் ஓர் இனத்தாரே. நாடெல்லாம் பாழாக்கி நீர்வளம் பொருந்திய இடங்களைச் செழிக்கவொட்டாமற்செய்யும் வன்மை வாய்ந்தவர் அவரொருவரே. அவர் ஏனோ இங்குக் காணப்படவில்லை ?



கொசு.—அக்கிராசனாதிபதி அவர்களே ! வெகு நேரமாக நான் பேச அவாக்கொண்டு உங்கள் அனுமதியைப்பெற முயன்றேன். ஆனால் அகஸ்மாத்தாக—வேணுமென்று நீங்கள் செய்வீர்களென்று சொல்வதற்கில்லை—நீங்கள் என் புறம் கண் நோக்கவில்லை.

ட்ஸெட்ஸி ஈ.—இவரே நான் குறித்த மகாவீரர் ! அவரிருக்கும் பொழுது ஏனோ நீங்கள் வீண்காலம் போக்குகிறீர்கள் ?

கொசு.—ட்ஸெட்ஸி ஈக்கு என் மனப்பூர்வ வந்தனம். ஆயினும் எங்கள் படை பிறர் தயவை எதிர் பார்க்கவேண்டிய அவசியமில்லாத வலி படைத்தே யிருக்கிறது. இதுகாறும் சுற்றுத் தேவதைகளையே பூஜித்து வந்த இச்சபையோர் மூலதெய்வத்தை அசட்டை செய்வார் என்று நான் நம்ப வில்லை. ஏதோ கொள்ளைநோய், காலரா, விஷஜுரம், முறை விஷஜுரம் முதலிய நோய்களால் ஏற்படும் வருஷாந்தரச் சாவுத்தொகையைக் குறித்து வேறுவேறு பூச்சியினங்கள் வெகுவாகப் புகழ்ந்து பேசலாயின. அவை யெல்லாம் கூட்டிக் கணக்கிட்டுப்பார்ப்பின் ஒரு லக்ஷம்கூட மொத்தமாகாது. இந்நோய்களின் கொடூரம் ஒரு பெருத்த பாணவேடிக்கையைப் போலிருக்

கிறது. தவிரவும் இந்நோய்கள் ஜனங்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவை வாரா வண்ணம் ஏதேதோ தடுக்குமுறைகள் செய்ய அவகாசம் தருகின்றன. எங்கள் இனத்தைச் சார்ந்தார் மெதுவாகக் குழி பறித்து ஜனங்களை வீழ்த்தி மண்ணைப்போட்டு மூடிவிடுகிறார்கள். முதலாவது நமது எதிரியின் சாதுரிய வழக்கத்தையே நாங்களும் அவலம்பித்து வருகிறோம். அதாவது, நோய் வந்தபின் சிகிச்சை செய்வதைவிட நோய் வாராமல் தடுப்பதே மேன்மை என்ற எதிரியின் நோக்கத்தைப்போலவே நாங்களும் ஜனங்களைப் பிறந்த பின் வாட்டுவதைவிடப் பிறக்கு முன்னமே தாய் வயிற்றில் தாக்கு கிறோம். அவ்வாறு எங்கள் பாணங்களால் மடியும் சிசுத்தொகையையே எங்கள் பெருத்தபடையின் அரிய செயலுக்குச் சாட்சியாகக் கூறலாம். தவிரவும், காலரா, பிளேக், விஷஜுரம் முதலிய நோய் கண்ட மனிதன் சாதாரணமாக மறுபடியும் அந்நோய்கள் கொள்வதில்லை. மலேரியா ஜுரம் கண்ட மனிதனோ வென்றால் திரும்பத் திரும்ப அந்நோயால் வாடி மெலிந்து வேறு நோய் கண்டு காலமாகிறான். உண்மையான தொண்டருக்கொப்ப, மனிதன் வாழ்விற் கடைசிப் பாணத்தையும் நாங்களே எய்யவேண்டுமென்ற ஓர் அல்பக் கியாதியை நாங்கள் நாடவில்லை. குற்றுயிராக்கிவிட்டு இதர நோய்களால் மடியட்டுமென்று விட்டுவிடுகிறோம். ஆனால் ஒரே பாணத்தில் எதிரியைக் கொல்லும் சக்தியற்றவர்களில்லை என்று ரூபிக்கும்பொருட்டு 'மலிக்னன்ட் டெர்டியன் ஜுரம்' என்ற ஒருவகைச் சர்ப்ப பாணத்தைச் சிலவேளைகளில் மனிதனுடைய மூளையில் எய்து ஸ்மரணை தப்பச் செய்து அதிசீக்கிரம் உயிர் நீங்குமாறு செய்து வருகிறோம். இந்தப் பாரத நாட்டில் வருஷத்துக்குப் பத்து லக்ஷம் ஜனங்கள் எங்கள் பாணம் தாக்கி மடிகிறார்கள். இந்த ராஜதானியில் கூட ஒரு லக்ஷம் ஜனங்களுக்குக் குறைவில்லை. மேலும் நான் முன் சொன்ன படி குற்றுயிராய்த் துடிக்கும் ஜனங்கள் இன்னும் எத்தனையோ பேர்கள். ட்ஸெட்ஸி ஈ சொல்லியபடி நீர்வளம் நிலவளம் செழித்துள்ள மலைப்பிர தேசங்களில் நாங்கள் கூடிக் குலாவிக் காலம்கழித்து வருகிறோம். எங்கள் பாண வெப்பம் தாங்காமல் மானிடன் அப்பிரதேசங்களில் குடியேறமாட் டாது நாடெல்லாம் பாழாகி யிருந்து வருகிறது. இதுவரை எங்கள் இனத்தில் 'அனபிலிஸ்' என்னும் வகுப்பினரால் ஏற்படும் மலேரியா ஜுரத்தைப்பற்றி மட்டும் சொல்லிவந்தேன். எங்கள் இனத்தில் 'ஸ்டெகோமயா' என்ற மற்றொரு வகுப்பினர் மஞ்சள்ஜுரம் என்னும் ஒரு கொடிய ஜுரத்திற்குக் காரணபூதராவர். ஆனால் அந்நோய் இன்னும் இத்தேசத்தில் காணப்பட வில்லை. அதிசீக்கிரத்திலேயே அவர்கள் நடவடிக்கைகளை இத்தேசத்திலும் காட்டி வருவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

மூட்டைப்பூச்சி.—கேவலம் பூச்சியினத்தைச் சேர்ந்தவரென்பதை மறந்து வீண் தற்புகழ்ச்சியோடு தம் பொல்லாச் சிறகுகளை அடிக்கடி ஆட் டிக்கொண்டு துதிக்கை போன்ற விஷ மூக்கை நாற்புறங்களிலும் நீட்டிக் கொண்டு வாதாடும் கொசு 'ஸர் ரோனல்ட் ராஸ்' என்றவரையும் 'சிங்கன்' என்றவரையும் அறிவாரா என்ற ஒரு கேள்வியை நான் கேட்க விரும்பு கிறேன்.

(இப்பேர்களைக் கேட்டமாத்திரத்தில் கொசு உடல் நடுங்கித் தள்ளாடிக் கீழே விழுகிறதுபோல் காணப்படுகிறது.)

மூட்டைப்பூச்சி.—அற்பக் கொசுவே! அறிந்தாயா உன் பேதைமையை?

கொசு.—(தெளிந்தெழுந்து) அக்கிராசனாதிபதி அவர்களே! சற்று மதிமயங்கி அக்கொடிய பேர்களைக் கேட்ட மாத்திரத்தில் கொஞ்சம் உடல் நடுங்கி மயிர் சிலிர்த்ததைப் பற்றி உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். சிறிதுகாலம் நான் மயிர் சிலிர்த்தேனாயினும் என் நோயால் எத்தனை கோடி எதிரிகளைக் குளிர் கண்டு உடல் நடுங்கச் செய்ய வல்லவனென்பது மூட்டைப்பூச்சியாருக்கு ஞாபகமிருக்கட்டும். ராஸ், வாட்ஸன், சிங்கன் முதலியவர்கள் எனது முக்கிய எதிரிகளேயாயினும் அவர்கள்கூட என் பாணம்பட்டு நோய் கண்டு துடிக்கவில்லையா? குலதெய்வத்தின் கருணை இருக்குமளவும் எங்களுக்கு யாதொரு பயமுமில்லை. அக்கருணை வசத்தால் ராஸ் என்பவர் புத்திகெட்டிருக்கிறாரென்று அநேக ஜனங்கள் மதிக்கிறார்கள். வாட்ஸன் துரை மலேயா மாகாணங்களில் செய்துள்ள நடவடிக்கைகளை நாடெங்கும் செய்ய வேண்டுமென்றால் ஒருபெருந் தங்கச் சுரங்கம் காணப்படவேண்டும். இந்நாட்டார் கதியோவென்றால் நாளுக்கு ஒரு வேளைகூட முழுவயிற்றுக்கு ஆகாரம் கிடைத்தபாடில்லை. ஆதலால் அந் நடவடிக்கைகள் இந்நாட்டில் சிறிதும் சாத்தியமில்லை. 'சிங்கன்' சீமானால் முதலாவது பிரபலப்படுத்தப்பட்ட கொயினா மருந்து அதிருஷ்ட வசத்தால் மிகவும் கசப்பு வாய்ந்த மருந்து. ஜனங்கள் அதைத் திருப்தியோடு ஒரு நாளும் சாப்பிடமாட்டார்கள். தவிரவும் பேதை ஜனங்கள் மனத்தில் கொயினா மிகவும் உஷ்ணமான மருந்தென்று ஒருவகை மூட எண்ணம் நன்றாகக் குடிகொண்டிருக்கிறது.

மூட்டைப்பூச்சி.—ஆமாம், கொசுவே! உன் வலையில் சிக்காதிருக்க ஒரு கொசுவலையை உபயோகித்தால் போதுமானதே.

கொசு.—வாஸ்தவமே. ஆனால் எத்தனை பேர்கள் அவ்வாறு கொசுவலையை உபயோகிக்கிறார்கள்? சூரிய வெப்பம் மிகுந்த இந்நாட்டில் இராக்காலத்தில் கொசுவலையை உபயோகித்தால் உடல் வேர்த்து நித்திரை வருவதில்லையென்று கற்றறிந்தவர்கள்கூட அதனை உபயோகிப்பதில்லை. மூட்டைப் பூச்சியார் வெகுவாக எனது பேச்சை நிறுத்தித் தொந்தரவு செய்து வந்ததையே என் படையின் மேன்மைக்கு ஒரு பெருத்த அத்தாட்சியாக நான் கூறுவேன். அவரது ஆக்ஷேபங்களையெல்லாம் அறவே மறுத்துவிட்டேனென்பதற்கு யாதோர் ஐயமுமில்லை. ஆகையால் நீதியையே கைக்கொண்ட இந்தச் சபையோர் எங்கள் இனத்தையே இவ்வருஷம் கௌரவப்படுத்தக் கடமைப்பட்டவராவர்.

(மகாநாடு முடிகிறது.)

பாம்புகள்

எம். ஏகாம்பரநாத ஐயர்

இராமன்.—அக்கா! பிடாரனைப் பாம்புகள் கொண்டுவரச் சொன்னோமே; இதோ, அவன் அவற்றைக் கொண்டுவந்திருக்கிறான்; நாம் பார்ப்போம்.

கமலம்.—இதோ வந்துவிட்டேன். அப்பா, பாம்பாட்டி! கையிலுள்ளது என்ன பாம்பு?

பாம்பாட்டி.—அம்மணி! இது சாரைப்பாம்பு; இது விஷமற்றது. நீங்கள் பயப்படவேண்டாம்; அருகில் வரலாம்.

கமலம்.—அதற்கு விஷமில்லையென்று நீ சொன்னாலும், எனக்கு அதைப் பார்க்கும்போதே மயிர்க்கூச்சலிடுகிறது.

இராமன்.—அக்கா! சாரைப்பாம்புக்கு விஷமில்லை; நல்ல பாம்பு, கண்ணாடிவிரியன், கட்டுவிரியன் முதலானவைகள்தாம் விஷப்பாம்புகள். விஷப்பாம்புக்கு வாயில் விஷக்கருவிகள் உண்டு; விஷமில்லாத பாம்புகளுக்கு அவையில்லை.


கமலம்.—இப்பாம்பின் மேல்பாகத்தைப் பார்த்தாயா? தேகமெல்லாம் அரணை, ஓணான், முதலானவைகளுக்குள்ளன போலச் செதில்கள் இருக்கின்றன.

இராமன்.—அக்கா! இதன் செதில்களைப் பாருங்கள்; முதுகுப் பக்கத்தில் ஒரு விதமான செதில்களும், அடிப்பாகத்தில் வேறு விதமான செதில்களும் இருக்கின்றன. பாம்பாட்டி! இப்பாம்பின் அடிப்பாகத்தைச் சற்றுக் காட்டு.


பாம்பாட்டி.—இதோ பாருங்கள்.

இராமன்.—அக்கா! பாருங்கள் அடிப்பக்கத்தை; அகலமான செதில்கள் ஒன்றன்பின்னொன்றாக இருக்கின்றன.

கமலம்.—ஆமாம், தம்பி! இதற்குக் கால்களைக் காணோமே; இது எப்படி அதிவேகமாக ஓடுகிறது?



பாம்பின் செதில்கள்.



பாம்பின் எலும்புக் கூடு.

இராமன்.—நமக்கு மார்புப்பாகத்தில் மாத்திரம் விலாவெலும்புகள் இருக்கின்றனவென்றும், அவைகள் மார்பெலும்புடன் இணைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் உங்களுக்குத் தெரியுமே. ஆனால், பாம்புக்குக் கழுத்துமுதல் வால்வரையிலும் விலாவெலும்புகள் இருக்கின்றன. மேலும், அடிப்பக்கத்தில் ஏதனுடனாவது சேர்க்கப்பட்டிருக்கின்றனவா? பாம்பாட்டி காட்டுகிறான், பாருங்கள். அடிப்பக்கத்தில் மார்பெலும்பு இல்லை. பெரிய செதில்கள் ஒவ்வொன்றும் இருபக்கங்களிலும் அவற்றிற்குச் சரியான விலாவெலும்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இச்செதில்களின் உதவியால்தான் பாம்பு ஓடுகிறது. பாம்புகள் விலாவெலும்புகளின் நுனிகளால் நடக்கின்றன எனலாம்.

கமலம்.—இஃது எப்படி?

இராமன்.—விலாவெலும்புகள் முதுகுப் பக்கமாக முதுகெலும்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனவல்லவா? இவ்வெலும்புகளெல்லாம் வெகு சுலபமாக முன்னும் பின்னுமாக அசையும்படி அமைந்திருக்கின்றன. விலாவெலும்புகள் இப்படி அசையும்போது, அவற்றுடன் இணைந்துள்ள செதில்களும் அசைகின்றன. செதில்கள் இப்படி அசையும்போது பாம்பு இடம் விட்டு இடம் நகருகிறது.

கமலம்.—இச்செதில்களுக்குக் கீழே பற்றிக்கொள்ள ஓர் ஆதாரம் இருந்தால்தானல்லவா இரு பக்கங்களும் விலாவெலும்புகளின் உதவியால் அசையும்? இல்லாவிட்டால் முடியாதே.

இராமன்.—அக்கா! வாஸ்தவந்தான்; கீழே கரடுமுரடாக இருந்தால்தான் பாம்பு சுலபமாக ஊரும்; வெகு மழமழப்பான கண்ணாடியின்மேல் ஊராது. கண்ணாடியின்மேல் பாம்பு நெளியும்.

கமலம்.—இவ்விதமாகத்தானா பாம்புகள் அதிவேகமாக நிலத்திலும், மரத்திலும், புதரிலும் ஓடுகின்றன?

இராமன்.—ஆமாம்.

கமலம்.—இப்பாம்பு அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுவதேன்?

இராமன்.—பூனைக்கு மீசை உரோமங்கள் ஸ்பர்சக்கருவிகளாவதுபோல், பாம்புக்கு நாக்கு ஸ்பர்சக்கருவியாகும். நாக்கு எவ்வளவு நீளமாக இருக்கிறது பாருங்கள். அதை வெளியே நீட்டவும் உள்ளே இழுத்துக்கொள்ளவும் முடியும். இழுத்துக்கொள்ளும் போது வாயினுள்ளே இருக்கும் ஒரு சிறு உறைக்குள்ளே அது அடங்கியிருக்கும். பாம்பின் வாய் மூடியிருக்கும்போதுகூடச் சிறு இடுக்கு இருப்பதால் அதன் வழியாக நாக்கை வெளியே நீட்ட முடியும்.

கமலம்.—பாம்பிற்கு நாக்கில் விஷமுண்டு என்கிறார்களே; அது வாஸ்தவமா?

இராமன்.—நாக்கில் விஷம் இருக்குமென்பது தப்பு.

கமலம்.—பாம்பிற்குக் காதுகள் இல்லை யென்றும், கண்களே சப்தங்களை உணர்கின்றனவென்றும், இது காரணமாகப் பாம்பைக் கட்செவி என்றும் கூறுகிறார்களே; அது வாஸ்தவமா?

இராமன்.—பாம்பு சப்தத்தைக் காதுகளாலேயே உணர்கின்றது. அதற்குச் சூக்ஷ்மமான உட்செவிகள் இருக்கின்றன. நமக்குள்ளவற்றைப் போலப் புறச்செவியும், மத்தியச் செவியும் இல்லை. சப்தங்களை உணர்வதற்கு இவ்வுட்செவிகளே முக்கியமாகும்.

கமலம்.—பாம்புக்கு ஆகாரம் என்ன?

இராமன்.—இது, தவளை எலி முதலியவற்றை இரையாக உட்கொள்ளுகிறது. பாம்பு இவற்றைக் கடித்துக் கிழிக்காமல் அப்படியே விழுங்கிவிடும்.

கமலம்.—இதன் வாய் சிறிதாக இருக்கிறதே; தவளை முதலானவற்றை எப்படி விழுங்கமுடியும்?

இராமன்.—நாம் வாயில் ஏதாவது பெரியவஸ்துவைப் போட்டுக்கொண்டால், வாய்கொள்ளாமல் கஷ்டப்படுவோம்; ஆனால் பாம்பின் வாயிலுள்ள எலும்புகள் தளர்ச்சியாகச் சேர்க்கப்பட்டிருக்கின்

றன ; இதனால் பெரிய இரையை வாயில் உட்கொண்டாலும் வாய் பெரிதாகி விரிந்து கொடுத்துக் கொள்ளுகிறது. இப்படி வாயில் உட்கொண்ட ஆகாரத்தை விழுங்கின பிறகும், தேகத்தின் அடிப் பாகத்தில் எலும்பு இல்லாமையால், தேகம் விரிந்து கொடுக்கிறது. சிலவேளைகளில் இரை தின்ற பாம்பின் தேகத்தில், ஒருபாகமானது உள்ளிருக்கும் இரை காரணமாகப் பருத்திருப்பத்தைப் பார்க்கலாம்.

கமலம்.—பாம்பின் வாயில் பற்கள் இல்லையா? ஆகாரத்தைக் கடிக்காமல் விழுங்கிவிடும் என்கிறாயே.

இராமன்.—பாம்பாட்டி! பாம்பின் வாயைத் திறந்து காட்டு.

கமலம்.—அதோ! பற்கள் நிறைய இருக்கின்றனவே.


பாம்பின் பற்கள்.

இராமன்.—இவற்றைக் கவனித்துப் பாருங்கள். இவைகளெல்லாம் ஒரே மாதிரியாகவும், கொக்கிபோல் எல்லாம் பின் பக்கமாக வளைந்தும் இருக்கின்றன. இம்மாதிரியான பற்கள் மேல்வாயிலும் கீழ்வாயிலும் இருக்கின்றன. இவற்றால் எலி, தவளை முதலானவற்றைக் கடித்துத் தின்னமுடியுமா?

கமலம்.—சரிதான். ஆனால், வாயினுட் சென்ற ஆகாரத்தை வெளியே வராமல் இப்பற்கள் தடுக்கின்றனவா?

இராமன்.—ஆமாம் இதுவே, இப் பற்களின் உபயோகமாகும்.

கமலம்.—சாரைப்பாம்பு ஸர்ப்பத்தின் ஸ்திரீ ஜாதி என்பது வாஸ்தவமா?

இராமன்.—சாரைப்பாம்புகளிலும் ஆண், பெண் என்று இரண்டு ஜாதிகள் இருக்கின்றன. அதே மாதிரியாக ஸர்ப்பத்திலும் ஆண் பெண் என்ற இருஜாதிகள் உண்டு. ஆகையால் சாரைப்பாம்புகளெல்லாம் ஸ்திரீ ஜாதி என்பதும், ஸர்ப்பங்களெல்லாம் ஆண்களென்பதும் தவறு.

கமலம்.—சாரைப்பாம்புகள் முட்டைகள் இடுமா, அல்லது குஞ்சுகள் பொரிக்குமா?


இராமன்.—சாரைப்பாம்பு முட்டைகள் இடும்; அவற்றினின்றும் குஞ்சுகள் வெளியே வரும். இப்போது, இப்பாம்பாட்டியினிடம் ஸர்ப்பத்தை எடுக்கச்சொல்லி அதன் வாயிலுள்ள விஷக் கருவிகளைக் காட்டச் சொல்லுவோம்.



கமலம்.—ஆகா! பாம்பாட்டி அதை எடுக்கும்போதே, அது சீறி அவனைக் கடிக்கத் தலையைக் கீழே அடிக்கிறதே.

ஸர்ப்பம் (நல்ல பாம்பு).

பாம்பாட்டி.—பயப்படாதேயுங்கள். நான் வெகு ஜாக்கிரதையாக இதைப் பிடித்துக் கொள்வேன். இதோ பாருங்கள்; வாயில் முன்னால் இருபக்கங்களிலும் இரண்டு விஷப்பற்கள் இருக்கின்றன; இவை தாம் விஷப்பற்கள். சாரைப்பாம்புக்கு இவ்விதமான பற்கள் இல்லை. ஆனால் சாரைக்கு இருப்பதுபோல் ஸர்ப்பத்திற்கும் கொக்கி போன்ற அநேக பற்கள் இருக்கின்றன.



பாம்பின் விஷக்கருவிகள்.

இராமன்.—இவ்விஷப் பல்லின் உள்ளே சிறு கால்வாய் ஒன்று உண்டு. இதன் நுனியில் ஒரு சிறு துவாரமுண்டு.

கமலம்.—விஷம் எங்கே உண்டாகிறது?

இராமன்.—பாம்பின் மேல்வாயில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு விஷப்பைகள் இருக்கின்றன. இவற்றில் விஷம் உண்டாகிறது. இவ் விஷம் ஒரு திராவகமாக இருக்கிறது. ஒவ்வொரு விஷப்பையிலிருந்தும் ஒரு சிறு குழல் அந்தப் பக்கத்து விஷப்பல்லின் அடியோடு சேர்ந்திருக்கிறது. விஷப்பையில் உண்டாகும் விஷமானது, இக்குழல் வழியாக விஷப்பல்லின் அடியிற் சேர்கிறது; பிறகு பல்லினுள்ளேயிருக்கும் கால்வாய் வழியாகச் சென்று நுனித்துவாரத்தின் மூலமாகப் பாம்பு கடிக்கும்போது இரைக்குள் செல்லும். பாம்பின் விஷப்பல்லானது டாக்டர்கள் இஞ்செக்ஷனுக்கு உபயோகிக்கும் சிரிஞ்சுக் குழல் (*syringe*) ஊசிபோல் இருக்கிறது. டாக்டர்கள்


மருந்தை இரத்தத்தினுள்ளே செலுத்துவதுபோலப் பாம்பானது விஷத்தை இரத்தத்திற் செலுத்துகிறது.

கமலம்.—இவ்விஷக்கருவிகள் விஷப்பாம்புகளுக்குமட்டுமே இருக்குமா?

இராமன்.—ஆமாம்; பச்சைப்பாம்பு, தண்ணீர்ப்பாம்பு, கொம்பேறிமூர்க்கன் முதலான பாம்புகள் விஷமற்றனவாதலால் அவைகளுக்கு இல்லை.

கமலம்.—தம்பீ! இதன் விஷம் இப்பாம்புகளைப் பாதிப்பதில்லையா?

இராமன்.—இல்லை.



கண்ணாடிவிரியன்.

கமலம்.—கண்ணாடி விரியன், கட்டுவிரியன் முதலான விஷப் பாம்புகளுக்கும் இம்மாதிரியான விஷக்கருவிகள்தாமா?

இராமன்.—ஆமாம்.

கமலம்.—ஆகா; இந்தப் பாம்பாட்டியின் உதவியால் நாம் அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டோம். பாம்பாட்டி! இதை இனாமாக வைத்துக்கொள்.

பாம்பாட்டி.—கும்பிடு, அம்மா! போய்வருகிறேன்.

மிருகங்களின் தோல்

எம். கிருஷ்ணன்

பற்பல மிருகங்களின் சர்மம் பற்பல விதங்களில் விசித்திரமாய் அமைந்திருக்கிறதென்பது அறிந்துகொள்வதற்குரிய சாரமான விஷயம். பொதுவில் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களின் தோல் மயிர் செறிந்திருக்கும். இவைகளில் திமிங்கிலம் போன்ற கடலில் வாழும் மிருகங்களின் தோலில் சில மயிர்களே காணப்படும். சீதோஷ்ண நிலைமைகளின் கடுமைகளிலிருந்து மிருகங்களின் தோலே அவைகளைக் காப்பாற்றுகின்றன.

தோலின் தடிப்பு மிருகத்தைப் பொறுத்தது. ஆப்பிரிக்கா தேசத்து நீர்க்குதிரை (ஹிப்போ) யின் தோல் சில இடங்களில் ஒரு அங்குலத்துக்கு மேற்பட்ட கனமுள்ளது. இத்தோலைச் சிறு பாளங்களாகக் கிழித்து உலர்த்தியபின் கைப்பிரம்புகளாக உபயோகிக்கலாமாம். இந்தியக் காண்டாமிருகத்தின் தோல் கனத்த கேடயங்களாக அதன் உடலை மூடியிருக்கிறது. மற்றெல்லா மிருகங்களைவிட மனிதன் மெல்லிய தோலையுடையவன். ஆடுமாடுகளின் தோல் பதனிட்டபின் சுலபமாய் மடிபடுவதனாலும், வெகு நாள் தேய்வு தாங்கும் வலிவுள்ளதனாலும் ஒரு முக்கிய வியாபாரப் பொருளாயிருக்கிறது.


சீதப் பிரதேசங்களில் வாழும் மிருகங்களின் தோலில் மயிர் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். இம்மயிர்க் கம்பளமே அவைகளுக்குக் குளிர்காலப் போர்வை. கரடி, ஆர்க்டிக் நரி, விலைமதிக்கப்பெற்ற அடர்ந்த சர்மங்களையுடைய ஆட்டர் முதலிய சிறு மிருகங்கள் இவையெல்லாம் இதற்கு உதாரணங்கள்.

குளிர்தேச ஜந்துக்களின் சடைமயிர்ப்பாங்குக்கு நேர் எதிராக, உஷ்ண தேசங்களிலுள்ள மிருகங்களுக்குப் பளபளப்பான குட்டை மயிர் அடர்ந்திருக்கும். பலவகை மான்கள், குதிரை, வரிக்குதிரை முதலியன இதற்குத் திருஷ்டாந்தங்கள்.

உரோமத்தின் தடிப்பிலும் பல வித்தியாசங்களுண்டு. கீரிப்பிள்ளை, பெருச்சாளி முதலியவைக்கு மயிர் இடைவிட்டுக் கரடுமுரடாக விருக்கும். வேறு சில மிருகங்களுக்கு மயிர் மிக நெருங்கிப்


பட்டுப்போன்ற மென்மை யுடையதாய் முளைத்திருக்கும். இப்பேர்ப் பட்ட மிருகங்களின் தோல்களை மேல்நாட்டு மாதர்கள் ஆபரணங் களாய் அணிவதால் அவைகள் விலையுயர்ந்த பொருள்களாய் வழங்குகின்றன. இம்மிருகங்கள் முக்கியமாய் வட அமெரிக்காவி லுள்ளவைகள்.

சின்சிலர் என்ற வட அமெரிக்கா அணில், கானடா தேசத்து லிங்க்ஸ் என்ற பெருங்காட்டுப் பூனை, கானடா தேசத்து பீவர், ஆட்டர் முதலியன, சில காடிகள், சில முயல்கள், ஸீல்கள், இவையெல்லாம் விலைபெற்ற சர்மங்களைத்தருகின்றன. கடல் ஆட்டரின் தோல் இவைகளெல்லாவற்றிலும் விலையுயர்ந்தது. ஒரு தோல் 100 பவுன்வரை விலைபெறும். இம்மிருகத்தின் அழகிய விலை பெற்ற தோலை நாடி இவற்றை அதிகமாய் வேட்டையாடுவதனால், இவை அபூர்வமான ஜந்துக்களாய் விட்டன.




ஆட்டர்.

நீரில் வாழும் மிருகங்களின் சர்மம் அவற்றின் வசிப்பிடத் திற்கு ஏற்றதாயிருக்கிறது. ஆட்டர், மீன்க், பீவர் முதலிய நீர்ப் பிராணிகளின் உரோமம் அடர்ந்து வளர்ந்து தோலைத் தண்ணீரில் நனைய வொட்டாமல் தடுக்கிறது.



ஸீல்.


சில மிருகங்களின் மயிர் ஒன்று சேர்ந்து திரிந்து கேடயங்களாகவும் முட்கவசங்களாகவும் மாறுகிறது. முள்ளம்பன்றி, முள்ளெலி முதலிய ஜந்துக்களின் அதி கூர்மையான முட்கள், மயிர்க் கற்றைகளால் வாய்ந்தனவே. பங்கோலின், ஆர்மடில்லோ முதலியனவகளில், பயிர் சிறு



முள்ளம்பன்றி.

கேடயங்களாய் மாறி, தட்டுக் கவசம்போல் உடலை மூடியுள்ளது. காண்டாமிருகத்தின் வலி மிகுந்த கொம்பு உண்மையில் பல மயிர்கள் சேர்ந்து வாய்ந்ததே.

மிருகங்களின் நிறங்களும் பலவகைப்பட்டன. சில மிருகங்களின் தோலின் நிறம் அவைகளின் வசிப்பிடத்தின் பொது நிறத்துடன் இசைந்திருக்கும். வரிக்குதிரையும் ஒட்டகைச்சிவிங்கியும் காட்சிச் சாலையில்தான் கண்ணைப் பறிக்கும் தோற்றமுடையன. அவைகளின் இயற்கை வசிப்பிடமான ஆபிரிக்கா



வரிக்குதிரை.

தேசத்துக் காட்டு வெளியிடங்களில் வரிக்குதிரையின் கீற்றுக்களும் ஒட்டகைச்சிவிங்கியின் தடங்களும் புதர் நிழலொடு கலப்பதால் அம்மிருகங்கள் கண்ணுக்குப் புலப்படுவது அரிது. அதுபோல, இலேசான தவிட்டு நிறமுள்ள வெள்ளைக் கரடி, தான் வாழுமிடத்தி லுள்ள பனிக்கட்டிகளை ஒத்திருப்பதால், ஆர்க்டிக் பிரதேசத்து அந்தி வெளிச்சத்தால் கண்ணுக்ககப்படுவது அசாத்தியமென்னலாம். பனிக்கட்டிகளுடனே ஒட்டியொட்டிப் பதுங்கி வேட்டையாடி, தன் இரையான ஸீல்களுக்கு வெகு சமீபத்தில் வந்தபின்பே அவைகள்மேல் வெள்ளைக் கரடி பாய்வது வழக்கம்.

சில மிருகங்கள் பருவத்துக் கேற்றபடி நிறம் மாறுகின்றன. ஸ்டோட் என்ற கீரிப்பிள்ளை போன்ற மிருகம் கோடைகாலத்தில் தவிட்டு நிறமாயிருக்கும்; மாரிக்காலத்தில் நிறம் மாறி வெள்ளையாய் விடும். பனிக்காலத்தில் வெள்ளையாவதால், அது தன்னைச் சூழ்ந்திருக்கும் பனியை யொத்து எதிரிகளுக்கு இலேசாய்ப் புலப்படாது. இம் மிருகத்தின் மாரிக்காலச் சர்மத்திற்கு 'எர்மின்' என்று பெயர். இஃது அதிக விலைபெற்ற சர்மம். இத்தோலை மேல் நாட்டு அரசர்களணிவது வழக்கம்.

சரித்திரம்

தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு

மு. இராகவையங்கார்

பரதகண்டத்தின் தென்பகுதியானது பழங்காலமுதலே சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தரின் ஆட்சிக்கமைந்த நிலமாய்த் தமிழகம் என்ற பெயர் பெற்றிருந்ததாகும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல்காப்பியம்), 'இமிழ் கடல் வேலித் தமிழகம்' (சிலப்.) எனவரும் முன்னோர் கூற்றுக்களால் இதனை அறியலாம். மூவேந்தரும் ஆட்சி புரிந்துவந்த இத்தமிழ் நாடு அவர்களின் கூட்டுவலிமையால் சுதந்திரம்பெற்ற தனித்தேசமாய் முற்காலமுதலே பெருமைபெற்று விளங்கியது. பரதகண்ட முழுமையும் தன் ஒருகுடைக்கீழ் வைத்து ஆட்சிபுரிந்த மௌரிய சக்கரவர்த்தியாகிய அசோகனும் தமிழகத்தைத் தன்னாட்சிக்கடங்காத தனிநாடாகவே மதித்துக் கௌரவித்துவந்த செய்தியை அவன் சாஸன வாயிலாக அறியலாம். இம்மதிப்புக் கேற்றபடி, வட வேந்தர்களும் அஞ்சத்தக்க அரிய செயல்களைத் தமிழரசர் அவ்வக் காலங்களிற் காட்டி வந்தவர் என்பது பழைய நூல்களால் அறியக் கிடக்கின்றது. நெடுஞ்சேரலாதன் என்ற சேர வேந்தன், 'இமயவரம்பன்', 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்று முன்னூல்களிலே புகழப்படுகின்றான். இமயவரம்பன் என்பதற்கு, இமயகிரியைத் தன் ஆணைசெல்லும் எல்லையாகக் கொண்டவன் என்பதும், 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்பதற்கு, இமயத்தில் தன் இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தவன் என்பதும் பொருள்களாம். பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தால் அச் சேரவேந்தனைப் பாடிய குமட்டூர்க்கண்ணனார் என்ற புலவர்,

> "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
> தென்னங் குமரியொ டாயிடை
> மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே" (11)

என்று கூறுதல் காண்க. பரணர் என்ற புலவர் பெருமானும்,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம். 396)

என்று புகழ்வர். இவற்றால், இமயமுதல் குமரிவரை தன் ஆற்றலைப் பரப்பியவன் இவ் வேந்தன் என்பது தெரியலாம். இவன் 'நயனில் வன்சொல் யவனரைப் பிணித்தவன்' என்றும் புகழப் படுவன்.

இவ்வாறே திருமாவளவன் என்ற சோழனொருவன் வடதிசை முழுதும் வெல்லவெண்ணிப் படையெடுத்துச் சென்று ஆங்குத் தன்னருந் திறலைக் காட்டி, இமயத்தில் தன் புலிப்பொறியை நாட்டி மீண்டனன் என்று முன்னூல்களும் பின்னூல்களும் ஒருங்கே புகழ்கின்றன. இவனைக் கரிகாலன் என்று கருதுவர்.

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி லிமயச்
சிகர மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி பொறித்தது மறித்த பொழுதே"

எனக் கலிங்கத்துப் பரணியில் இவன் செயல் புனைந்து கூறப்படுதல் காண்க.

இனி, பாண்டியமுன்னோருள் ஒருவனும் தன் குலசின்னமாகிய மகரலாஞ்சனையை இமயகிரியிற் பொறித்தவன் என்று நூல்களும் சாஸனங்களும் புகழும். இவனை மலயத்துவசன் என்றும், உக்கிரகுமாரன் என்றும் புராணங்கள் கூறுகின்றன. 'பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்' என்றார் பெரியாழ்வாரும். இவ்வாறாகத் தமிழரசர் மூவரும் இமயம்வரை சென்று தம் ஆற்றலைத் தோற்றுவித்த பெருமையுடையவர் என்பது முன்னோர் மொழிகளால் நன்கறியப்படுகின்றது.

தமிழ்வேந்தர்களைப்பற்றிக் கூறப்பட்ட இச்செய்திகளிலே, நவீன சரித்திரவறிஞர் பலரும் ஐயுறுவர். கிறிஸ்தவாப்தத்துக்கு முன்னும் பின்னும் பல நூற்றாண்டுகள்வரை இருந்த வடவேந்தர்கள் பேராற்றல் பெற்று விளங்கியவராதலாலும், தமிழரசரின் வடவெற்றியைக் குறிப்பிடத்தக்க பிரமாணமொன்றும் வடக்கே அகப்படாமையாலும், அவரது இமயப்படையெடுப்பைப்பற்றிய செய்தி முழுதும் வெறுங்கற்பனையேயன்றிப் பிறிதில்லை என்பது அன்னோர் முடிபு. அவர்கள் கூற்றைக்கொண்டு, சங்ககாலத்துச் சான்றோர் பலரும் ஒருமுகமாகக் கூறும் சரித்திர வுண்மையை நாம் புறக்கணித்தல் பெருங் குற்றமாகும். அசோகவர்த்தனன் காலத்தில் அவனால்

மதிக்கப்பெற்ற சுதந்திரநாடுகளிலே ஒன்றாகத் தமிழகம் விளங்கிய தென்பதில், அச்சரித்திரவறிஞர் எவரும் சந்தேகங் கொண்டவர் அல்லர். பரதகண்டத்தின் பெரும்பகுதியையும் ஆண்ட அவ் வசோகனுக்கு, அதன் கடைக்கோடியிலுள்ள தமிழகத்தையுங் கைப் பற்றிக்கொண்டு, பொதுவற இக்கண்டமுழுமையும் ஆட்சிபுரியும் விருப்பம் இருப்பது இயல்பன்றோ? தனக்குப் பணியாத கலிங்க தேசத்தை அவன் போரிற் படுத்தியபாடு சரித்திரப் பிரசித்த மானது. அவ்வாறே தனியே பிரிந்து நின்ற தமிழ் நாட்டினும் அவன் சிந்தை சென்றிருக்கக்கூடியதுதானே? அவ்வாறு அதனைக் கைப்படுத்த அச்சக்கரவர்த்தி ஒரு முயற்சியும் செய்யாது போனதென்னோ? அன்றியும், தமிழ்நாட்டைப் பாரசீகம் கிரேக்கம் முதலிய அன்னிய தேசம் போலவே மதித்துத் தன் சமயதூதவர்களைத் தமிழ் வேந்தரிடம் அவன் விடுத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. இவற்றால் அச் சக்கரவர்த்திகாலத்துக்கும் முன்பே, தமிழரசரின் பேராற்றல் ஆரிய வேந்தரும் மதிக்கத்தக்க நிலையில் அமைந்திருந்ததென்பது நன்கு விளங்கும். அத்தகைய மதிப்பு வடவேந்தர் உள்ளத்தே ஊன்றியிருக்கவேண்டுமாயின், அதற்கு, அவர்களும் அஞ்சும்படியான பெருஞ்செயல்கள் சிலவற்றைத் தமிழக வேந்தர் அவர்களறியக் காட்டி வந்ததே காரணமாதல் வேண்டும் என்றும், அச்செயல்களுள் ஒன்றாகவே அவர்களது இமயப்படையெடுப்பும் அமைந்திருத்தல் வேண்டும் என்றும் நாம் கருதல் தகும்.

பெருவீரனான சேரன் செங்குட்டுவன் ஆரியவரசரை வெற்றி கொள்ளவும், பத்தினிக்குக் கல்லெடுத்து வரவும் நடத்திய வடயாத்திரை வரலாறுகளைச் சிலப்பதிகார முதலியவற்றால் பலரும் அறிவர். அவன் யாத்திரைக்குக் காரணமாயிருந்த செய்தியொன்றை அச் சேரனுக்கு இளவலாகிய அடிகள் அடியில்வருமாறு கூறுகின்றார்:—

"வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி
உடனுறைந்த இருக்கைதன்னில் ஒன்றுமொழி நகையினராய்த்
தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள்
எம்போலு முடிமன்னரீங் கில்லைப்போலும் என்றவார்த்தை
அங்குவாழு மாதவர்வந் தறிவுறுத்த" (சிலப். 29, உரை . . . டை)

எனக் காண்க.

வடநாட்டில் நடந்த இராசகன்னி யொருத்தியின் திருமணத்தில் விருந்தினராக ஆரிய மன்னர் பலர் ஒருங்கு கூடியிருந்த போது, "தமிழ்நாட்டரசர் போர்க்கோலம் பூண்டுவந்து இமயகிரியில்

தம் இலாஞ்சனைகளான வில் புலி கயல்களைப் பொறித்துச் சென்ற காலத்திலே, எங்களைப் போலும் வீரசூரர்களான வேந்தர் இருந்தனர் இல்லைப்போலும்'' என்று கூறி நகையாட, அவ்விகழ்ச்சியுரையை வடபக்கத்தினின்று வந்த மாதவர் சிலரால் அறிந்தனன் செங்குட்டுவன் என்பது மேற்கூறிய அடிகளினின்று தெரியலாம். இச்செய்தியைக் கொண்டு நோக்குமிடத்து, தமிழரசர் இமயத்தில் தம் சின்னங்களைப் பொறித்தவர் என்ற வரலாற்றில், நவீனர் சிலர்க்கு உள்ளதுபோல், செங்குட்டுவன் காலத்து வடவேந்தர்க்குச் சிறிதும் ஐயமிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், 'தம்போலும் வீரசூரர்கள் தமிழரை எதிர்த்துப் போராட அக்காலத்து இல்லைப்போலும்' என்பதே அவர்கள் தற்பெருமையாகக் கூறிக்கொண்டது. எனவே, பண்டைக்காலத்து ஆரிய வேந்தர் கருத்தாலும் தமிழ்மன்னரின் இமயப்படையெடுப்பு உண்மை வரலாறாகவே கொள்ளப்பட்டிருந்தமை தெளிவாகும். செங்குட்டுவன் சரிதத்தைப் பாடிய அவன்தம்பி இளங்கோவடிகள் கூறும் இச்செய்தியையும் கற்பனையாகப் பிறர் கருதுவதற்கில்லை. அச் சேரர்பெருமான் வடநாட்டிற் படையெடுத்துச் சென்றதற்குக் காரணம், மேற்கூறியபடி, வடவரசர் இகழ்ந்து கூறிய தமிழ்க்குலப்பெருமை தம்மவர்க்குண்டு என்பதை மெய்ப்பித்தற்காகவேயன்றோ? அங்ஙனம் தமிழராற்றலை வடவர்க்கு வலியுறுத்திக் காட்டிய செங்குட்டுவனது அருஞ்செயலை, பிரமாணங்கள்சில தற்காலங் கிடையாமைபற்றிச் சிலர் எளியதாகக் கருதி யிகழ்வாராயின், அஃது அவ்வடவேந்தர் செயலினும் அதிசயிக்கத்தக்கது என்றே நாம் சொல்லத் தடையில்லை. ஆகவே, முன்னோர் கூற்றுக்களை எளியனவாகப் புறக்கணித்தற்குத் தமிழறிஞர் ஒருநாளும் ஒருப்படார் என்க. சேரநாட்டையடுத்து ஆட்சிபுரிந்த கங்கவமிசத்தரசர்கள் இமயச்சாரலில் உள்ள நேபாளத்தை அடிப்படுத்திப் பலதலைமுறை ஆண்டதுபோலவும்,[1] கலிங்கவேந்தான காரவேலன்[2] மகதம் அங்கமுதலிய வடநாடுகளை வென்று பெருமை பெற்றது போலவும், பிற்காலத்துத் தமிழ்வேந்தருள் முதலாம் இராசேந்திரன் கங்கைக் கரைவரையுமிருந்த வடநாடுகளையும் கடார முதலிய தீவாந்தரங்களையும் வென்று கங்கைகொண்டசோழன் என்ற பெரும்பெயர் பெற்றதுபோலவும்

---

1. Lewis Rice's *Mysore and Coorg from the Inscriptions*, p. 48.

2. இக்காரவேலன் வரலாறுகள், கரிகாலன்வரலாற்றுடன் சில அமிசங்களில் ஒற்றுமைப்பட்டிருத்தல் குறிக்கொண்டு ஆராயத்தக்கது.

ஒரு காலத்தில் மூவேந்தரது ஆற்றல் இமயம்வரை ஓங்கி யிருந்தது என்றே முன்னோர் கூற்றுக்களிலிருந்து நாம் கொள்ளத்தகும்.

மேற்கூறியவாறு சேரசோழபாண்டியர் மூவரும் இமயத்தில் இலச்சினை பொறித்த பெருமை தத்தமக்குரியதாகத் தனித்தனியே பாராட்டிக் கொண்டனராயினும், அம்மூவரும் ஒன்றுகூடி வடவருடன் போராடி அப்பெருமை படைத்தவர் என்றே நாம் கருதலாம்.

"தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழும் இமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள்"

என்ற இளங்கோவடிகள் வாக்கிலும், அம்மூவரும் ஒன்றுகூடிய வலியுடன் சென்று, பனிமலையில் தங்கள் சின்னங்களைப் பதித்த செய்தி குறிப்பிக்கப்படுதல் காணலாம். சேரமரபினரான அவ்வடிகள் தம் முன்னோர் செயலைமட்டுஞ் சிறப்பியாமல், மூவேந்தருமே தம் இலச்சினைகளைப் பொறித்தவர் என்று கூறுவராயின், அஃது அவர்கள் ஒருங்குகூடிச் செய்த செயல் என்பதை உணர்த்தக்கூடியதன்றோ? கூடிச்செய்த அருஞ்செயலை அவ்வவர் தம் குலப்பெருமையாகப் பாராட்டிக்கொள்ளுதல் இயல்பேயாம். ஆகவே, தமிழரசரில் இமயஞ்சென்று பெருமை படைத்தவர் யாவர் என்பதுபற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை. அரசர்பலர் ஒன்றுசேர்ந்து பகைவர் மலையைக் கைப்பற்றுவராயின் அப்பலர் இலாஞ்சனைகளையும் சேர அம்மலையிற் பொறிப்பது பண்டை வழக்கேயாகும்.

"கொடுவரிக், கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (புறம். 58)

என, நட்பினராயிருந்த சோழபாண்டியரிருவர் சின்னங்களும், பகைவர் குன்றுகளில் ஒருங்கு பொறிக்கப்பட வேண்டும் என வாழ்த்திப் புலவரொருவர் பாடியிருத்தலும் இங்கறியத்தக்கது.

இங்ஙனம், மூவரசரும் கூடி நிகழ்த்திய இமயப்படையெடுப்பில், சோழனான திருமாவளவனே தலைமை வகித்தவனாதல் வேண்டும் என்று நாம் கருதல்தகும். அறிவு ஆற்றல் பெருமைகளில் அவன் தன்காலத்தில் இணையற்று விளங்கியவன். அவன் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட சோழருள் ஒருவன் என்றே தோற்றுகின்றான். அவனது வடயாத்திரையைப்பற்றி இளங்கோவடிகள் கூறுவன வருமாறு:—

"செருவெங் காதலிற் றிருமா வளவன்
* * *
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்

பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையெனக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்.'' (சிலப். 5, 90-104)

இவ்வடிகளில், இமயப்பக்கத்தும் அதற்கு அப்பாலுமுள்ள நாடுகளை வென்றுகொள்ள விரும்பித் திருமாவளவன் படையெடுத்துச் சென்ற காலத்தில், அவன் நோக்கம் கைகூடாதபடி இமயமலை தடைப்படுத்தியதென்றும், அப்போது அப்பெருமலையில் தன் புலிப்பொறியைப் பொறித்துத் தன் ஆணையை ஆங்கு நிறுவிவிட்டு அவன் திரும்புகாலையில், எதிர்த்துத் தன்னுடன் பொருத வச்சிர மகத வேந்தர்களை வென்று அவர்களிடம் விரும்பிய திறைகளைப் பெற்று மீண்டனன் என்றும் குறிக்கப்படுதல் தெரியலாம். இமயத்தினின்று திரும்பியதும் எதிர்த்துப் போராடிய வடவரசர், வச்சிரவேந்தனும் மகதமன்னனும் எனவே, அச்சோழன் சென்று வந்த இமயப்பகுதிக்கு அடுத்த நாடுகளாயிருந்தவை வச்சிர நாடும் மகத தேசமும் ஆகும் என்பது பெறப்படத் தடையில்லை. வச்சிர நாடு என்பது சோணை (*Son*) நதி சூழ்ந்த தேசமாகும். அதனை யடுத்துள்ளதே மகதநாடு; இது கங்கையடுத்த பிரதேசமென்பது தெரிந்ததே. அவ்விருநாட் டரசரையும் வென்ற பின்பே, அவந்தி வேந்தனிடம் நட்பு முறையில் அவ்வளவன் சென்றவன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இவற்றால், வச்சிரமகதநாடுகளை யடுத்து அவற்றின் வடபக்கத்துள்ள இமயப்பகுதியே சோழன் தன் அடையாளத்தை நாட்டிய இடம் என்பது நன்கு விளங்கும். இமயத்துக் கப்பாலும் தன்னாணையை நிறுவ எண்ணியிருந்ததை அப்பனிமலை பழுதாக்கினமையால், அம்மலையின் தென்புறத்திற்றானே தன் இலாஞ்சனையைச் சோழன் பொறிக்கலாயினன் என்பது,

''இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே''

எனவரும் சிலப்பதிகார மங்கலவாழ்த்தால் அறியப்படும். இதனால், வச்சிரமகத நாட்டுக்கு அப்பாலுள்ள இமயப்பகுதியில் திபெத்துக்குச் செல்லும் வழியுள்ள பிரதேசமே அச்சோழன் நாடிச் சென்ற

இடம் என்பதும், அவ்விடம் அவன் சென்றபோது தீபெத்துக்குச் செல்ல ஏற்றதாகாமையால், திரும்பி வச்சிரமகத நாடுகளை அவன் அடையலாயினன் என்பதும் நாம் ஊகிக்கக்கூடியன.

இவ்வாறு, இமயப்படையெடுப்பு, சோழன் தலைமையின் கீழ்த் தமிழரசரால் ஒருகாலத்து நிகழ்ந்தது என்ற வரலாற்றை, யான் புதியதாகத் தெரிந்துகொண்ட அரிய செய்தியொன்றும் ஆதரித்து நிற்பதை இனிக் கூறுவேன். மேலே நான் கூறியவற்றையெல்லாம் ஒருசேரக் கொண்டு நோக்குமிடத்து, திருமாவளவன் சென்று வந்த இமயமலை, இப்போது ஸிக்கிம், புட்டான் என்ற ராஜ்யங்களுக்கு இடையிலுள்ள மலைப்பகுதியேயாதல் வேண்டும். என்னெனில், இப்பகுதியிற்றான் வங்காளத்துள்ள டார்ஜீலிங்கிலிருந்து தீபெத்துக்குச் செல்லும் கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களிற் சில முற்காலத்தும் இக்காலத்தும் வியாபாரப் போக்கு வரத்துக்கு உரியனவாய் அமைந்துள்ளன. இவைகளும் பல மாதங்கள்வரை பனிமூடப்பட்டு அடைபட்டுக் கிடத்தலால், சில காலங்களே அப் போக்குவரத்துக்கு ஏற்றவாகின்றன. உலகத்துள்ள மலைகளிலே உன்னத சிகரமுடைய கிஞ்சின் ஜிங்கா என்ற இமயப்பகுதி இக்கணவாயை அடுத்துள்ளதே. 'கௌரீசங்கர்' என்று வழங்கப் பெறுவதும், கிஞ்சின்ஜிங்காவினும் அத்தியுன்னதசிகரம் வாய்ந்ததுமான மௌண்ட்-எவரெஸ்டு (*Mount Everest*) இங்கு நின்று வடமேற்காக 70, 80 மைலில் உள்ளதே. வங்காள மாகாணத்தில் அடங்கியுள்ள வச்சிரமகத நாடுகளுக்கு வெகு தூரமில்லாததாய், இமயத்தைக் கடந்து செல்வதற்கு ஏற்ற வழியுடைய பிரதேசங்களுள் ஸிக்கிம்புட்டான்களுக்கு இடையில் உள்ள கணவாய்களே சிறந்தவை. ஸிக்கிம்ராஜ்யத்துக்குக் கிழக்கே, அதற்கும் தீபெத்துக்குமுள்ள எல்லையை வரையறுத்துநிற்கும் மலைத்தொடரானது, செங்குத்தாய் ஆகாசத்தை யளாவிக்கொண்டு, பெருங் கோட்டை மதில்போல நீண்டு செல்கின்றது. இம்மலைத்தொடரை அடுத்துச் செல்லுங் கணவாய், சமுத்திர மட்டத்துக்குமேல் 14,500 அடி உயரமுடையதாய், தீபெத் பிரதேசமாகிய சும்பிப் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய் விடக்கூடியது. இம்மலைக்கும் இதனையடுத்த கணவாய்க்கும் வழங்கும் பெயர்களைக் கவனியுங்கள். சோழமலைத் தொடர் (*Chola range*), சோழ கணவாய் (*Chola pass*) என்பன அவற்றிற்கு இன்றும் வழங்கிவரும் நாமங்களாகும்.[1] மேற்கூறிய

1. Imperial Gazetteer of India—*Sikkim*, Vol. X p. 327, Vol. XXII p. 365; Hand Gazetteer of India, vide *Chola Pass*; Enyclopædia Britanica—*Sikkim*, Vol. V p. 667, Vol. XX p. 640.

வற்றைக்கொண்டு நோக்குமிடத்து, இமயப்பகுதி யொன்றற்கு வழங்கும் இப்பெயர் சோழன்தொடர்புபற்றி வந்ததாகக் கூடாதா என்பதே என் ஆராய்ச்சி. இம்மலையடியாகவே, இதனையடுத்துள்ள கணவாயும் அப்பெயர் பெற்றதாகவேண்டும். 'சோல' (*Chola*) என்பதற்கு ஸிக்கிம் தீபெத் பாஷைகளில் வேறு பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. லா என்பதற்குத் தீபெத் பாஷையில் கணவாய் என்ற பொருள் உண்டு. நதுலா (*Natu-la*) ஜெலப்-லா (*Jelap-la*) எனக் காண்க. ஆனல், சோல (*Chola*) என்பது அவ்வாறு இருசொல்லுடையதன்றி ஒரு சொல்லாகவே மலைக்கு வழங்கி யிருப்பதும், அச்சொற்கு வேறு நேர்பொருள் காணுமையும் நோக்கத்தக்கன. அதனல், திருமாவளவன் அப்பிரதேசத்தைக் கைப்பற்றி அங்குள்ள மலைச்சிகரத்தில் தன் புலிப்பொறியை நாட்டி அங்கே தன்னுணையை நிறுவிய காலமுதலே, அம்மலை அவ்வாறு பெயர்பெற்றது போலும் என்று கருத இடந்தருகின்றது. இமயத்துக்கு அப்பாலும் அவ்வளவன் செல்லக் கருதியிருந்ததை அம்மலை தடுத்துவிட்டதாக இளங்கோவடிகள் கூறியிருப்பதற்கு, மேற்குறித்தபடி, அச்சோழன் சென்ற காலத்தே பனியால் முழுதும் மூடப்பட்டு அக்கணவாய் அடைபட்டிருந்தது என்பதே கருத்தாகவேண்டும். யான் முதன் முதலாகத் தெரிந்து வெளியிட்டுள்ள இச்செய்தியை அறிஞர்கள் மேலும் ஆராய்ந்துகொள்வார்கள் என்றே நம்புகின்றேன்.

இலக்கியம்



மஹாமஹோபாத்தியாய
உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

இராமச்சந்திர ஐயர்

தமிழெனும் அளப்பருங்கடல் கடைந்து பன்னூல்களாம் அமுதினை அருளினர் அருங்கவிப்புலவோர். அவ்வமுதினை யருந்தித் தாம் இன்புற்றவண்ணம் உலகமும் இன்புறுமாறு வெளியிட்டருளிப் பேருதவிபுரிந்த பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி சாமிநாத ஐயர் அவர்களை அறியாதார் இத்தமிழுலகில் இல்லை. ஐயரவர்கள் இளம்பிராயத்திலேயே அதிக ஊக்கத்துடன் பல பண்டிதர்களிடத்துத் தமிழ் பயின்றார்கள். பின்னர் மஹாவித்வானாகவும் விஸ்தாரகவியாகவும் விளங்கிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் படித்தார்கள். அவர் காலத்திற்குப்பின் திருவாவடுதுறை மடத்தில் பலருக்குக் கல்வி பயிற்றிவந்தார்கள். பிறகு, கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையிலும் சென்னை இராஜதானிக் கலாசாலையிலும் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக இருந்தார்கள். பின்பு சிதம்பரம் மீனாக்ஷி தமிழ்க்காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்தார்கள். இப்பொழுது வயசு முதிர்ச்சியினால் அவ்வேலைகளினின்று நீங்கித் தம் காலமுழுமையும் நூலாராய்ச்சியிற் செலுத்திவருகிறார்கள்.

ஐயரவர்கள் சுமார் 50 வருஷகாலமாகத் தம்முடைய ஆசிரிய வேலைகளோடுகூட அருமை வாய்ந்த பல சங்க நூல்களையும் பழைய காப்பியங்களையும் பிரபந்தங்களையும் நன்கு ஆராய்ந்து பிழையறப் பதிப்பித்துத் தமிழருக்குச் செய்துவரும் உபகாரம் மறக்கற்பாலதன்று. அவர்களுடைய கல்விப்பெருமையையும் ஆராய்ச்சித் திறத்தையும் பாராட்டாதார் தமிழ்நாட்டில் ஒருவரும் இல்லை. கவர்ன்மெண்டாரும் இதுகாறும் தமிழ் வித்வான்களால் பெறப்படாத மஹாமஹோபாத்தியாயரென்ற பட்டத்தை அளித்திருக்கின்றனர். ஐயரவர்கள் இப்பெருஞ் சிறப்பும் புகழும் அடைவதற்கு



மஹாமஹோபாத்யாய—தாக்ஷிணாத்யகலாநிதி

பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.

ஆதாரமான அவர்களுடைய நற்குணங்கள் இன்னவையென்று தெரிந்து அவைகளை யாவரும் பின்பற்றுதல் தக்கதேயாம். சுமார் 25 வருஷகாலமாக ஐயரவர்களிடத்தில் யான் பழகியதனால் எனக்குத் தெரிந்த அவாகளுடைய மேலான குணங்களைச் சிறிது எடுத்துரைக்கலாமென்று நினைக்கிறேன்.

ஐயரவர்களிடத்திற் பாடங் கேட்கும் பாக்கியம் பெற்றிலனாயினும் அவர்கள் கற்போர் மனத்தைக் கவரும்படி சொல்லும் சக்தி வாய்ந்தவர்களென்பதை அவர்களுடைய மாணுக்கர்கள் பலராலும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் இலக்கணபாடஞ்சொல்லும் பொழுதுகூட மாணுக்கர்கள் அதிகவிருப்பத்தோடு கவனித்துக் கேட்பார்களென்று பலர் கூறுவர். இவ்வாறானால் அவர்கள் இராமாயணம் முதலிய நூல்களைப் பாடஞ்சொல்லுகையில் எவ்வாறிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். ஐயரவர்கள், பாடல்களைத் தக்க இசையுடன் படிக்கும்பொழுதே அவற்றின் சுவை பிள்ளைகளின் மனத்தில் நன்றாய்ப் பதியுமென்றால் அவர்கள் பொருள் விரித்துக் கூறின் எவ்வாறிருக்கு மென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆழ்ந்து ஆராயும் தன்மையினால் பாடஞ்சொல்லும் நூல்களில் ஐயமறப் பொருளுணர்த்திக் கற்போர் மனத்திற் கலக்கமின்றிச்செய்வார்களென்றும், தமிழின் சுவையைக் கேட்போர்கள் என்றும் மறவாதிருக்கும்படி செய்வார்களென்றும் பலர் கூறியுள்ளார்.

தவிர, நான் நேரில் அவர்களிடத்திற் பழகியதனால் அறிந்ததென்னவெனில்: நூல்களை ஆராயுங்காலத்தில் ஆசிரியரின் கருத்து இன்னதென்று நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டுமென்றே பாடுபடுகிறார்களென்பதும் இக்காலத்தில் உள்ள வேறு சில வித்துவான்களைப்போல் தமக்குத் தோற்றியபொருள்களை நூலின்கண் ஏற்றியுரைப்பதில்லையென்பதும் ஐயரவர்களுடைய சிறப்புக்குப் பெரிய காரணமாகுமென்பதே. அன்றியும், காலத்தைச் சிறிதுகூட வீண்போக்காமல் எப்பொழுதும் நூலாராய்ச்சியிலேயே உற்சாகத்தோடு வேலை செய்து அநேக நூதன விஷயங்களைத் தேர்ந்தெடுத்து உலகிற்குப் பயன்படுமாறு வெளியிடுகிறார்கள். பேசுங்காலத்தில் அவர்கள் சொல்லும் வார்த்தைகளாலும் விஷயங்களாலும் அவர்களது கல்வித்திறம் நன்கு விளங்கும். ஒப்புயர்வற்ற இக்கல்விச் சிறப்பு வாய்ந்திருந்தும் பிறரிடத்து அதைக் காட்டாமல் அதிவினயத்தோடு பேசுவார்கள். ஆயினும், யாரேனும் தமிழ்நூல் விஷயமாகப் பிழையான அபிப்பிராயங்களைக் கூறின் அவற்றைப் பொறுக்கமாட்டாமல் வினயத்துடன் மறுப்பார்கள். அவர்களுக்குப் பெருங்காப்பியங்களிலுள்ள பழக்கத்தால் அவர்களுடைய சம்பாஷணை

ளெல்லாம் மிகவும் ஆழ்ந்த பொருளைக்குறித்தே யிருக்கும். அவர்க ளிடத்திற் சிறிது நேரம் பேசினபோதிலும் அறியாதனவெல்லாம் அறிந்தோமென்னும் இன்பம் யாவருக்கும் உண்டாகும். வயசு முதிர்ச்சியினல் தேகம் தளர்ச்சியடைந்தபோதிலும் அறிவு கொஞ்ச மேனும் தளராது அவர்கள் தமிழிற்கு உழைத்து வருகிறார்களென்பது எல்லாரும் வியக்கத்தக்கதே. அவர்கள் இப்பத்திரிகை வெளியிடு வதை அவசியமெனக் கருதி இதற்குக் கலைகளைக் குறித்து எழுதி யிருத்தல் தமிழின் அபிவிருத்தியில் அவர்களுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. அவர்கள் தமிழிற்குச் செய்திருக்கும் உபகாரத்திற் குத் தமிழபிமானிகள் செய்யவேண்டிய கைம்மாறென்னவெனின் அவர்களுடைய நற்குணங்களையும் விடாமுயற்சியினையும் பின்பற்றித் தமிழை விருத்தி செய்வதேயாம்.

இதுகாறும் ஐயரவர்கள் வெளியிட்ட நூல்களேயன்றி இன்னும் வெளியிடவேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர் களுக்கு நீடித்த ஆயுளையும் தேக ஆரோக்கியத்தையும் கடவுள் அளிக்கவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

சைவசமயம்

எஸ். அனவரத விநாயகம் பிள்ளை

சைவசமயத்திற்குச் சிறப்பியல்பாகிய சிவவழிபாடு எக்காலத்து ஏற்பட்டதென்பது சொல்லவியலாது. வடமொழி ஆதி வேதமாகிய இருக்கில் சிவ என்னும் சொல் ஈசனென்னும் பொருளிற்காணப்படவில்லை யாதலால் அவ் வேதம் ஏற்பட்ட காலத்தில் சிவ வழிபாடு இல்லை, அதனால் அவ்வழிபாடு அநாரியர்மத மென்பர் ஒரு சாரார். அநாரியர் மிலேச்ச ரென்ற பொருளைக்கொண்டு அவர் அங்ஙனஞ் சொல்வாராயின் அது நேராகாது. ஆரியரின் வேறாகிய மக்கள் சிவவழிபாடு செய்துவந்தன ரென்பாராயின் அதிற் றவறொன்று மில்லை. ஆயினும் இக்கொள்கையை மறுக்கும் நோக்கத்தோடு இருக்கு வேதத்தை ஆராய்ந்தோரும் அதனுட் சிவசப்தங் கண்டோரு முளர். சிறிதுநாண்முன் மொகெஞ்சோதாரோ முதலிய இடங்களில் நிலத்தின்கீழ் அகழ்ந்து கண்ட அரும்பொருள்களுட் சிவலிங்கம் போன்ற பெருந்தூண்கள் கிடைத்தனவென்றும், அவை இன்னும் ஆராயற்பாலனதென்றும் அறிந்தோர் எழுதியுள்ளார்.

ஆரியவாராய்ச்சியாளருள்ளும் தமிழறிந்தாருள்ளும் பலர் சிவன் தமிழரின் தெய்வமென்னும் கொள்கை யுடையார். 'சிவ' என்னும் சொல் வடமொழியில் மங்கலப் பொருளை யுடையது. சிவப்பென்னும் பண்பினடியான தமிழ்ச்சொல்லே சிவனென்னும் தெய்வத்துக்கும் அமைந்திருக்கவேண்டும், சிவன் செந்நிறத்தினன் மால் கருநிறத்தினன் என்றின்ன நியாயங்கள் பகர்வர். ஆயினும் சிவ வழிபாடு தமிழர்க்கே ஒருகாலத்தில் உரியதாயிருந்ததென்றற்குப் போதிய ஆதாரம் தமிழ்நூலகத்துக் காணுமாறில்லை. வடமொழி வேதத்து ருத்திரன் தமிழர் தெய்வத்தோடு சம்பந்தமுற்றுப் பின் சிவனாயினன் என்றலும் பொருந்தாதாகும்.

இனி, சிவன் ஆரியர்தெய்வ மாகுக, தமிழர்தெய்வ மாகுக; இரண்டாயிரமாண்டுகளாகச் சிவவழிபாடு தமிழகத்து நடைபெற்று வந்துளது. ஆயினும் நெடுங்காலம் சிவவழிபாடு அந்தணர்குழுவுள் மறைபொருளாக வைத்துப் போற்றப்பட்டிருக்கவேண்டும். ஆங்காங்குச் சிவனை வழிபடுஞ் சிறுகோயில்கள் அமைக்கப்பட்டு

அவற்றுள் அந்தணர் பூசை புரிய அவரிடத்துக் கௌரவமுடைய நல்லோர் அதைக்காண இவ்வாறு பன்னூற்றாண்டுகள் நிகழ்ந்திருக்க வேண்டும். பின் தேவாரகாலங்களில் சிவவழிபாடு காண்போர் பெருகினர். திருஞான சம்பந்தரைத் தொடர்ந்து தலயாத்திரை சென்றார் ஆயிரக்கணக்கினரென்று புராணம் உரைக்கின்றது. திருநாவுக்கரையர் சிவவழிபாடு மேற்கொண்டதாற் பட்ட துன்பங்களும் அவர் அவற்றை வென்றுயர்ந்ததும் பலரை அவ் வழிபாட்டிற் செலுத்தியிருக்கவேண்டும். சுந்தரமூர்த்திகள் தங்காலத்தும் தமக்கு முற்பட்ட காலத்தும் இருந்த சிவனடியார் பெயர்களனைத்தையும் திருத்தொண்டத்தொகையில் எடுத்துரைத்தனர். மாணிக்கவாசகர், சிவவாக்கியர், பட்டினத்தடிகள் முதலிய பெரியாரும் வரகுண பாண்டியன் முதலிய அரசரும் சிவவழிபாட்டை நாடெங்கும் பரவச் செய்தனர். திருத்தொண்டத்தொகையிற் பெயரால் மாத்திரம் குறிக்கப்பட்ட அடியார்களின் சரித்திரத்தை நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியிற் சிறிது விளக்கினர். சேக்கிழார் அதனை இன்னும் விரித்துப் பெரிய புராணஞ் செய்தனர். முன்பு அடக்கமாயிருந்த கோயில்கள் அருகில் வசித்த ஊர்மக்களெல்லாம் சென்று வழிபடும் இடமாயின. வேதமுழக்கமும் தேவாரமுழக்கமும் பலர்க்கும் அன்பை யூட்டின. வெளியூர்களிலிருந்தும் தலயாத்திரையாக மக்கள் வரத் தலைப்பட்டனர். அரசரும் செல்வரும் இக் கோயில்களை மிகப்பெரியனவாக்கி இக்காலத்துக் காணப்படுவன போலச் செய்தனர். இங்ஙனம் சிவவழிபாடு பரவியது.

தேவாரம்போலவே வேதங்களும் துதிவாக்கியங்களையே பெரும் பான்மையுங் கொண்டன. சிவவழிபாட்டை அந்தணர் தமக்குத் தமக்கு ஆற்றிவந்த வரையில் அதற்கு ஒரு நெறியும் வேண்டாதிருந்தது. பிறர்க்காக ஆற்றத் தலைப்பட்ட காலத்து நெறி ஏற்பட்டு, அப்பிறர் பலராகவே, நெறியும் விரிந்தது. அவ் வழிபாட்டுமுறையையே ஆகமமென்றும் தந்திரமென்றும் உரைப்பர். மூர்த்திகளைப் பிரதிஷ்டிக்கும் முறையும், ஆலயங்களும் அவற்றுட்பிரிவுகளும் அமைக்கும் முறையும், உற்சவமுறையும் ஆகமங்களுள் விரிவாகக் கூறப்பட்டன. பிற்காலத்து, அவற்றைக் கற்றுணரும் ஆற்றலில்லார்க்குபகாரமாகப் பத்ததிகள் எழுதப்பட்டன. வேதங்களின் அந்தங்களாகிய உபநிடதங்களில் ஞானம் உரைக்கப்பட்டதுபோல ஆகமங்களிலும் ஒரு பகுதியில் ஞானம் உரைக்கப்பட்டது. வேதாந்தங்களைவிட ஆகமாந்தங்கள் உயர்ந்தனவென்பதும் இவை மயக்கந்தருதலின்றித் தெளிவாக உண்மையை உரைப்பனவென்பதும் சைவர் கொள்கை,

இவ்வாகமாந்தம்வல்லார் ஞானநிட்டை யுடையராய்ச் சீவன் முத்தராய் உலகின் மாந்தரோடு உறவில்லாராய்த் தனித்திருப்பர். தக்கார் வரின் அவர்க்கு உண்மையை உபதேசித்து அவரையுந் தம் போலாகச் செய்வர். இவ்வாறிருந்தார்க்குத் திருவியலூர் உய்யவந்த தேவரையும் திருக்கடவூர் உய்யவந்த தேவரையும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். பின், மெய்கண்டார் தலைப்பட்டுச் சிவஞான போத மெழுதி அதற்குப் பொழிப்பு முதலியவும் இயற்றினர். இச்சிவஞான போதம் வடநூன்மொழிபெயர்ப்பு என்பாரும் தமிழ் நூலே யென்பாருமாக இருதிறத்தினர் இக்காலத் தேற்பட்டனர். தமிழ்ச் சிவஞான போதத்தையே முதனூலாகக் கொண்டு சிவஞான சித்தியார் முதலிய வழிநூல்களும் சிவப்பிரகாசமுதலிய சார்பு நூல் களும் அருணந்தியார் முதலியோராலும் உமாபதியார் முதலியோ ராலும் இயற்றப்பட்டன. மெய்கண்டாரையும் அவர் தலைமாணாக் கர் அருணந்தியாரையும் அவர் மாணாக்கர் மறைஞானசம்பந்தரை யும் அவர் மாணாக்கர் உமாபதியாரையும் திருக்கைலாயசந்தானந் திகழவந்த சந்தானகுரவ ரென்றுரைப்பர். உமாபதியார் காலத் துக்குப் பின் திருவாவடுதுறை தருமபுரம் முதலிய மடங்கள் ஏற் பட்டுச் சைவநெறியினைப் போற்றி வந்தன. திருவாவடுதுறையில் விளங்கிய பெரியாருட் சிலர் மேற்குறித்த சாத்திரங்களை ஒட்டி அனுபவ நூல்களாகச் சில நூல்கள் இயற்றினர். முன்னவை மெய் கண்ட சாத்திரங்களெனவும் இவை பண்டார சாத்திரங்களெனவும் வழங்குகின்றன. இவ்விரண்டுமன்றிச் சிற்றம்பலநாடிகள் முதலி யோராலும் தருமபுரத்து முனிவர்களாலும் இயற்றப்பட்ட அனுபவ நூல்கள் பல உள. அவை யனைத்தும் சைவசித்தாந்தசாத்திரங்க ளெனப்படும். சைவமென்பது ஆகமமென்றும், சித்தாந்தம் அதன் முடிவென்றும், ஆகவே சைவசித்தாந்தம் ஆகமாந்தத்தி லுரைக்கும் பதிபசுபாச விலக்கணத்தைத் தெளிவு படுத்துவ தென்றுஞ்சொல்வர்.

சாத்திரங்கள் தோன்றிய காலத்தை யடுத்து அவற்றிற்கு உரை கள் ஏற்பட்டன. வடமொழி தமிழ் மொழிகளில் வல்லாராகிய சிவ ஞான முனிவர் சிவஞான போதத்திற்குச் சிற்றுரை யொன்றும் பேருரை யொன்றும் கண்டனர். அப்பேருரையைத் திராவிட மாபாடிய மென்பர். அதில் உரைகாரர் எடுத்து விளக்கிய இலக்கண நுட்பங்களும் சாத்திர நுட்பங்களும் பல உள. சிவஞான சித்தியாரு க்கு அவரே ஒரு பொழிப்புரையுஞ் செய்து வைத்தனர். முன்னரே மறை ஞான தேசிகர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாச முனிவர் முதலிய ஆகமம்வல்லார் செய்த உரைகள் அதற்குண்டு. மற்றைச் சாத்திரங்களுக்கும் பல பெரியார் உரை செய்துள்ளார். உரைகள்

ஏற்பட்டபின் அநுபூதிநூல்களாய் ஆசான் தன்னையடுத்த பக்குவர்க்கு உபதேசிப்பனவாயிருந்த சாத்திரங்கள் பலராலும் ஓதப்படுதற்கும் வாதங்கள் நிகழ்த்தற்கும் இடந் தந்தன. சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசித்தாந்திகட்கும் மாயாவாதிகட்கும் இடையில் நிகழ்ந்த வாதங்கட்கு அளவில்லை.

உரைகள் தோன்றிய காலத்திலேயே பல பெரியார் சைவசித்தாந்த உண்மைகள் இலக்கணவிலக்கியவறிவில்லாச்சாமானிய மக்கட்கு விளங்குமாறு கட்டளைப் பிரபந்தங்கள் பல எழுதி வைத்தனர். முன்னர் மாணாக்கர்க்காக எழுதப்பட்டுப் பின் பலர்க்கும் பயன்படும் அவற்றுட் சில அங்கையினெல்லியெனச் சாத்திரவுண்மைகளை விளக்குவன.

சிவனை வழிபடுஞ் சமயம் சைவசித்தாந்த மாத்திரமே அன்று. மாயாவாதமெனக் கூறப்படும் கேவலாத்வைதத்தைத் தங்கொள்கையாகக்கொண்ட வைதிகர் பலர் சிவனை வழிபடுவர். அன்னார் பிரமம் சிவமென்பர். அறுவகைப்பட்ட மதங்களையும் நிலை நிறுத்திய சங்கராசாரியர் வழிவந்தோரது வேடம் சைவவேடமே யன்றோ? சிவபரத்துவத்தைப் பல நூல்களாலும் நாட்டிய அப்பைய தீக்ஷிதர் அந்தரங்கக்கொள்கை கேவலாத்வைதமென்று பலருஞ் சொல்வர். பிரமசூத்திரத்திற்குச் சைவபாடிய மியற்றிய சீகண்டர் சிவாத்வைதி யென்கின்றனர். இலிங்கத்தை யுடலிற் றரித்த வீரமாகேசுவரர்களின் கொள்கை சிவாத்வைதமே யன்றோ? சாந்தலிங்கர், சிவப்பிரகாசர், குமாரதேவர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் முதலியோரெல்லாம் வேடத்தாற் சைவரும் கொள்கையால் அத்வைதிகளுமாவர். காஷ்மீரத்தில் வழங்கும் சைவமும் அத்வைதத்தின்பாற் படுவதே. ஒழிவிலொடுக்கமென்னும் உத்தம ஞான நூலியற்றிய கண்ணுடைய வள்ளலாரை ஐக்கியவாத சைவரென்பர். கொள்கையிற் பேதமுடைய இவரனைவரும் சிவனை வழிபடுதலாற் சைவரென்றே சொல்லத்தக்கார்.

ஆயினும் இவரனைவர்க்கும் சைவசித்தாந்திகளுக்கும் ஒருபேதம் உண்டு. இவரனைவரும் சைவாசாரம் மேற்கொண்டவரேயாயினும் முத்தி நிலையில் சிவத்திற்கும் ஆன்மாவாகிய தமக்கும் பேத மின்றென்பாரும், எக்காலத்துமே தாம் சிவப்பொருளாயிருக்கின்றேமென்பாரும், ஆன்மாக்கள் சிவத்தினது பரிணாமங்களே யென்பாருமாகப் பலதிறப்படுவர். சைவசித்தாந்திகள் தாம் எப்பொழுதும் ஆன்மாக்களே, சிவத்தினதருளால் முத்தியடையுங் காலத்தும் தாம் சிவமாதலில்லை, சிவத்தினதின்பத்தை மாத்திரம் நுகர்ந்திருப்பேம்

என்பர். வைணவரைப்போலத் தாம் விசிட்டாத்வைதிகள் என்றேனும் மாத்துவரைப்போலத் தாம் துவைதிகள் என்றேனும் சொல்லிக் கொள்ளாது தாம் சுத்தாத்வைதிகள் என்பர்.

இவ்வாறு பேதம்பாராட்டுவது சைவசித்தாந்த சாத்திரங் கற்ற சிலர்க்குள் நிகழ்வதேயன்றிச் சிவவழிபாடாற்றும் பொது மக்களுள் நிகழ்வதில்லை. சிவன் பரதெய்வம், அவனை வழிபட்டு நாமுய்ய வேண்டும் என்றொரு சாதாரணக்கொள்கையே சாமானிய மக்களுட் பெரும்பாலுங் காணப்படுகின்றது. இதுவே சைவசமயத்தின் அடிப்படையான கொள்கை யென்பது நாம் பகரவேண்டா. இக் கொள்கையே முத்தியை யெளிதினடையச்செய்யும். பத்திநெறியிற் செல்வோர்க்குச் சிறந்த சாதனமாகும். இக்கொள்கையே தேவார திருவாசகங்களிற் பாசுரங்கள் தோறும் வற்புறுத்தப்படுவது. எல்லா மதங்கட்கும் பொதுவாகிய இக்கொள்கையின் நயத்தைக் கண்டுணர்ந்து சிவவழிபாடாற்றுவோர் சாத்திர நுட்பங்களுள் நுழையாராயினும் பெரும்பயனடைவரென்பது ஒருதலை.

தமிழ்வசனம்

ஸ்ரீ

என் அறையில், மேஜையினருகில், பேனாவும் மையுமாய் உட்கார்ந்திருந்தேன். என் சிநேகிதி பாக்கியம் உள்ளே வந்தாள். (அவள் வரவை என் மனத்துள் நான் மழைமணம் வீசும் காற்றுக்கு ஒப்பிடுவதுண்டு).

''என்ன எழுதுகிறாய்?'' என்று அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை. ஒரு வியாசம் எழுதப்பார்க்கிறேன். சரியாக வரவில்லை.''.

''படித்துக்காட்டு, பார்க்கலாம்.''

''பிள்ளையார்சுழிதான் ஆயிருக்கிறது. *'பாலுந் தெளிதேனும் * * * * நான் தருவேன். நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றுந் தா' என்று எழுதியிருக்கிறேன்.''

''எல்லாருக்கும் தெரிந்த பாடல்களை எடுத்தெழுதி இடத்தை நிரப்புவது கெட்ட வழக்கம். தொடக்கத்திலேயே, அப்படி ஆனால் எப்படி?''

''நீ தமிழில் எழுதுவதில்லை. குற்றம் சொல்லுவதில் கெட்டிக்காரி. தவிரவும், நான் எழுதப்போவது உனக்கு விளங்கவில்லை. 'தமிழ் மூன்றும் தா' என்று சொல்லி, பிறகு 'முத்தமிழ் என்றால், இயல், இசை, நாடகம் என்பவற்றைக்குறிக்கும்; அன்றி, இங்கிலீஷில் போல, வசனம் நமக்குள் ஒரு தனிப் பெரும்பிரிவாக ஏற்படவில்லை; வசன நூல்கள் தற்காலத்திலே தான் பெருகி வழங்குகின்றன; வசனத்துக்கேற்ற தமிழ்நடையின் இலக்கணங்கள் இன்னவை' என்று இப்படியெல்லாம் எழுதப்போகிறேன்.''

''இதை யாராவது படித்தவர்கள் எழுதவேண்டும். நீ எழுதினால் நன்றாயிராது. நீ ஒரு கதை எழுது.''

''பாதகமில்லை. எனக்குக் கதை எழுதவரவில்லை''.

''இதுவருமா? இதைப்பற்றி ஏதாவது புஸ்தகம் படித்திருக்கிறாயா?''

''அப்படி ஒரு புஸ்தகமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

"ஒன்றுமே தெரியாத விஷயத்தைப்பற்றி நீ எப்படி எழுதப் போகிறாய்? ஆனால் ஒன்று. தெரியாத விஷயத்தைப்பற்றி எழுதுவதுதான் எப்பொழுதும் எளிது. சுருக்கமாய், சந்தேகமில்லாமல், ஏதாவது சொல்லிவிடலாம்."

"உண்மைதான். உன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். தமிழ்வசனவரலாற்றை நான் சொல்லுகிறேன் கேள். ஆதிகாலத்தில் தமிழ்ப்பாஷை ஏற்பட்டதுமுதல் தமிழர்கள், தமிழ் வசனத்தில் வார்த்தையாடினார்கள். ஆனால், அவர்களுடைய முதல்நூல்கள் செய்யுள்களாகவே யிருந்தன. இசையுடன் சேர்ந்தது, சேராதது—பண்ணும் பனுவலுந் தாம் அவர்களுடைய முதற் கற்பனைகள்."

"எல்லாப் பாஷையின் சரித்திரமுதலிலும் இப்படித்தான் உண்டு."

"ஆமாம்; இதனால், கற்பனாசக்தியும் கவிபாடும் திறமையும் ஒன்றேயென்று ஜனங்கள் நினைத்தார்கள். கவிகளுக்கு மந்திர சக்தி உண்டென்று எண்ணினார்கள். இந்த எண்ணம் தமிழர் மனத்தில் வேரூன்றி மாறுபாடின்றி நீடித்து நின்றது. 'நுங்குக்கண்முற்றி அடிக்கண் சிவந்து நுனி கறுத்துப் பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே' என்று கவிபாடி, ஜாலவித்தை செய்ததாகச் சொல்லும் கதைகள் நமக்குள் எத்தனையோ உண்டு. பூர்வீக ஜனங்கள் வசனத்தை இலக்கியங்கள் ஆக்குவதற்கேற்ற கருவியாக நினைக்கவேயில்லை. பாடுவதோ எளிது. கொஞ்சம் யாப்பிலக்கணம் கற்றுக்கொண்டு, சீர் தளை தப்பாமல், வார்த்தைகளை இசைத்துவிட்டால், கருமானும் குசவனும்கூட ஒட்டக்கூத்தரை எதிர்த்துப் பாடித் தப்பிவிடலாம். ஆகவே, முன்காலத்து வசனத்தை உரைகளில்தான் பெரும்பாலும் காணலாம். சிலர் இப்பொழுதுகூட வசனத்தை உரைநடை என்று சொல்லுகிறார்கள்."

"உரைகளைத் தவிர, வேறு வசனம் முன்காலத்தில் இல்லையா?"

"சாஸனங்கள் உண்டு. மணிப்பிரவாள நூல்கள் சில உண்டாம். எனக்கு விவரமாய்த் தெரியாது. ஆனால் முன்காலத் தமிழ்ப் பேச்சின் போக்கை, சாதாரண ஜனங்களறியும்படி ஆழ்வார்கள் பாடிய பாடல்களிற் காணலாம். இவைதாம் உரையாசிரியரின் நடையைவிடத் தமிழ்ப்பேச்சின் சுயப்போக்கை ஒட்டியுள்ளவை."

"இதை நிச்சயமாகச் சொல்லலாமா? வசனநடையின் இலக்கணத்தை வாசகத்தில் தேடுவதை விட்டுப் பாட்டில் கண்டுபிடிப்பது எப்படி?"

"நமக்குள் தற்கால வசனநூல்கள் இங்கிலீஷை ஒட்டி ஏற்பட்டிருக்கின்றன ; அப்படியல்லாமல் சாதாரண ஜனங்களின் பேச்சையும், அவர்களுக்குள் வழங்கும் பாட்டுக்களையும் ஒட்டி ஏற்பட்ட ஒரு வசனம் உண்டு; அதைப் படித்தவர்கள் பாராட்டுவதில்லை. முன்காலத்தில் புலவர் எழுதிய உரைநடைக்கும் தற்கால வசன நடைக்கும் அநேகமாய் ஒரு தொடர்புமேயில்லை என்று நான் நினைக்கிறேன்."

"இதெல்லாம் நீ நினைப்பதுதானே ?"

" 'என்மனார் புலவர்' என்று மேற்கோள் காட்டமுடியாதென்கிறாயா ? பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியவர்களுடைய உரைநடையில் ஓர் அழகு சிறந்து விளங்குகிறது. அது சுருங்கச் சொல்லல். வீண்வார்த்தைகளை ஒழித்துக் கருத்தைச் சிறப்பித்துக் காட்டுவது அந்த நடை. எந்தக்காலத்திலாகட்டும் ; பேச்சு நடைக்கும், புலவர் சிரமத்துடன் சுருக்கி எழுதிய அந்த நடைக்கும் வெகுதூரமென்று தெரியவில்லையா ? அந்த நடையை நமது வித்துவான்கள் சிலர் வேண்டுமென்று பின்பற்றினாலொழிய, அதற்கும் தற்கால வசனநடைக்கும் தொடர்பொன்றுமில்லை."

"ஆனால் தமிழ் வசனநடை எதை ஆதாரமாகக் கொண்டது ?"

"எல்லாரும் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் பேசவில்லையா ? தமிழ்ப் பழமொழிகள் இல்லையா? பழைய நாடகங்களிலும், கூத்துக்களிலும் பாடல்களுடன் தமிழ் வசனம் கலந்து வரவில்லையா ? தமிழ் வசனங்கள் செய்யுள்களில் பொதிந்து கிடக்கவில்லையா ? இவைதாம் தமிழ் வசனத்தின் சுயப்போக்கைக் காட்டுவன. இங்கிலீஷ் நாகரிகக் கலப்பால், புதிய விஷயங்களை வசனநடையில் வெளியிடவேண்டுமென்று ஏற்பட்டபின், நமக்குள் வசன புஸ்தகங்கள் வருஷந்தோறும் ஆயிரக்கணக்காய்ப் பெருகி வழங்குகின்றன. ஆனால் தமிழ்வசன நூல்கள் இன்னும் சிறப்படையவில்லை. இலக்கியம் கண்டதற்கல்லவோ இலக்கணம் கூறமுடியும் ?"

"இங்கிலீஷ் தொடர்பில்லாத தமிழ் நடையில் என்ன புஸ்தகங்கள் இருக்கின்றன?".

"விக்கிரமாதித்தன்கதை, பாரதக்கதை, ஸ்தலபுராணங்கள் முதலியவை. இவை இனிமேல் நிலைப்பது கஷ்டம். இந்தக் கதைகளைக் கொஞ்சம் இராகத்துடன், ஒருவன் உரக்கப்படிக்க, பிறர்பக்கத்திலிருந்துகேட்கவேண்டும். 'கேளீர், ஜனகமகாமுனிவரே! இதோ, இந்தநிற்கும் இராமன் மகாபராக்கிரமசாலியாயிருப்பதுவும்கூட வெகுவான இராக்ஷதர்களைக்கொன்று போட்டு விட்டு

எனது யாகசாலையை இராமுழுவதும் காத்துத் தசரதமகாராசனின் கண்மணிபோன்ற இவன்.' இதற்கேற்ற இராகம் எனக்கு வரவில்லை. இந்த வசனத்தில் இலக்கணப்பிழைகள் இருந்தால் பாதகமில்லை. வினைமுற்றுக்கள் அநாவசியம்; புள்ளிகள்வேண்டாம். எதனையும் கோவையாகச்சொல்லலாம். ஆனால் ஒருமூச்சுக்குள் எத்தனை வார்த்தைகள் அடங்கும் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.''

"இது ஒரு நடையா ? நீ கேலிபண்ணுகிறாயா ?''

"இல்லவே யில்லை. நடையழகென்றால் என்ன? கருத்தும் சொல்லும் இசைந்திருப்பதுதானே? எனக்கு இந்தமாதிரி எழுதின புஸ்தகங்கள் மிகவும் பிடிக்கும். சாதாரண ஜனங்கள் எவ்வளவு சாரமாய் இந்தக்கதைகளைக் கேட்பார்கள், தெரியுமா? தற்கால வசன புஸ்தகங்களின் நடை, படிக்கத்தெரியாதவர்களுக்குத் தமிழ்நடையாகவே தோன்றுவதில்லை. நான் சொன்னமாதிரியான கதைகளோ அவர்களுக்குக் கேட்கக் கேட்க இனிமையாயிருக்கும். ஆனால், அவைகளைச் சட்டென்று கண்ணால்மட்டும் படித்தால், குற்றங்கள்மட்டுமே தெரியும். அவைகளின் காலம் போய்விட்டது.''

"ஏன், நமக்குள் எழுத்தறியாத ஜனங்கள் எத்தனையாயிரம் இருக்கிறார்கள் ? அவர்களுக்கென்று இராகத்துடன் வாசிக்கக்கூடிய நடையில், புதியபுஸ்தகங்கள் எழுதினால்என்ன ?''

"அவர்களுக் கேற்றபடி பாடல்கள் வெளிவருகின்றன. தமிழில் வசனநூல்கள் எல்லாம் சாதாரண ஜனங்களை நினைத்து எழுதப்படவேயில்லை. ஏழைகளுக்குப் புஸ்தகம் வாங்கக் காசுகிடையாது. பணக்காரரில், கொஞ்சம் படித்தவர்கள்கூட இங்கிலீஷ் பத்திரிகைகளையும் நாவல்களையும் படிப்பார்கள். ஆகவே புதிய வசனபுஸ்தகங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று மாணக்கர்களுக்காக எழுதப் படுவன. இரண்டு பெண்கள் படிப்பதற்கென்று எழுதப்படுவன. மூன்று புலவர், தம் திறமையை ஒருவருக்கொருவர் காட்டிக்கொள்வதற்காக எழுதி, சிலவேளை மாணக்கர் தலையிலும் சுமத்திவைப்பன.

"இவை ஒன்றிலுமே, பொதுவாக, நடையும் நன்றாயில்லை; கருத்தும் சாரமாயில்லை.''

"ஏன் ? செந்தமிழ்க்கட்டுரைகளை நான் அதிகம் படித்ததில்லை. சில கதைகள் நன்றாயிருக்கின்றன. பாரதசாரம் என்ற புஸ்தகம், மாமிகொலுவிருக்கை, கமலாம்பாள் சரித்திரம், இவையெல்லாம் நடையழகில்லாமல் இல்லை.''

"நான் படித்ததில் பாரதிவசனம் ஒன்றுதான் நன்றாயிருக்கிறது.''

"பாரதி வசனநடையைப் பின்பற்றுவது கஷ்டம்.''

"கஷ்டமில்லை ; அனர்த்தம்."

"நீ கல்கியின் வியாசங்களை அன்று கொடுத்தாயே? அவை சார மாயிருக்கின்றன. ஆனால், சிலகட்டுரைகள் பாரதியின் நடையைப் பின்பற்றித் தொத்தப்பார்த்துச் சுயலக்ஷணமில்லாமலிருக்கின்றன."

"பின் எப்படி? பாரதியின் போக்கு, தனி. அவர் ரஸிகர். விருந்துச் சாப்பாடுமுதல் பக்தி ஆவேசம்வரை, எதையும் மனமார அநுபவிப்பவர். குறும்பு, சந்துஷ்டி, தாபம் எதையும் அவர் வெளியிடுகிற அர்த்தபுஷ்டியுடன் மற்றவரால் எழுதமுடியாது. அவர் மனப்போக்கை அவர் நடையிற் காணலாம். மற்றவர்கள் அவருடைய நடையைப் பின்பற்றலாம்; அவர்களுடைய மனப்போக்கு வேறாய்த் தானே இருக்கும்."

"தமிழ்வசன புஸ்தகங்களில், பொதுவாய், எழுதுபவரின் மனப்போக்கு ஒன்றும் வெளியாவதில்லை."

"அப்படியானால் அந்தப் புஸ்தகங்களுக்கு நடையழகு ஏது? அவைகளில், இலக்கணப்பிழைகளையே மதிப்பிடலாம்."

"சுயலக்ஷணமுள்ள புஸ்தகங்களையே இலக்கியங்களுடன் சேர்க்கலாம். சாதாரண வசனநூல்கள் இல்லையா? யாராவது பொழுதுபோக்காய்ப் படிக்கவேண்டி வேறு பொழுதுபோக்கில்லாத ஒருவர் எழுதுவது, சிறு கதைகள், நாவல்கள், சரித்திரங்கள், பலவிதக் கட்டுரைகள் முதலியவைகளில் வசனநடை நிலைப்பட வேண்டும். சொற்பொருத்தம், வசனப்போக்கு, விஷயத்தை வெளியிடும்பாங்கு இவைகள் இன்ன இன்ன விதமாக இருக்கவேண்டும் என்ற திட்டங்கள் முதலில் ஏற்படவேண்டும். இதுதான் வசன நடை இலக்கணம். இலக்கியம் எழுதும் மனோபாவம் உள்ளவர்கள் இந்த இலக்கணத்தை ஒட்டியும் வெட்டியும் எழுதுவார்கள். அவர்கள் நடைக்குச் சிறப்பிலக்கணம் வேறு."

"நீ சொல்லும் இலக்கணத்தின் விதிவிலக்குகள் இன்னவென்று உனக்குத் தெரியுமா?"

"விதிகள் தெரியாது. விலக்குகள் சில தெரியும். தமிழ் படிக்கும் பொழுது, உனக்கு எப்பொழுதெல்லாம் வெறுப்புவந்ததென்று நீயும் கூடச்சொன்னால், நானும் சொல்லுகிறேன்."

"நம் இருவருக்கும் பிடிக்காதவற்றையெல்லாம் பிழைகள் என்று சொல்லலாமா? இங்கிலீஷிலிருந்து தமிழில் பெயர்த்தெடுத்த வாக்கியங்களைப் படித்தால் எனக்கு எரிச்சல்வரும்."

"அது நியாயம்தான். எழுவாய் ஆரம்பத்திலும் பயனிலை அரைப்பக்கம் நீண்ட வாக்கியத்தின் கடைசியிலும் வருவது; செய்

வினை எளிதில் வரக்கூடிய இடத்தில் செயப்பாட்டு வினை வருவது இவையெல்லாம் தமிழ்நடையில் அவலக்ஷணங்கள்தாம். அநேக மாய் மொழிபெயர்ப்பால் வருவன இவை."

"தமிழ்ப் பதங்களை அகராதியிலிருந்து பொறுக்கி யெடுத்திருப் பது ஒரு குற்றமாகாதா ?"

"வழங்கும் சொல்லிருக்க, வழங்காத சொல்லை அனுவசியமாய் உபயோகிப்பது நடைக்கழகில்லை. ஆனால் என்ன செய்வது? சூரி யன் என்று சொல்லவேண்டும் பொழுதெல்லாம், சூரியன் என்றே சொல்லிவிட்டால், பரிதி என்று ஒருபதமிருப்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"தெரிய வேண்டாமே? செய்யுளில் அது வந்தால் அப் பொழுது பார்த்துக்கொள்ளலாம். ஆனால் ஒன்று. நமக்குள் தமிழ் அர்த்த புஷ்டியில்லாமலிருப்பதற்கும், இங்கிலீஷ படித்துத் தோன் றும் சில எண்ணங்களைச் சுயபாஷையில் எழுதமுடியாமலிருப்பதற் கும் இதுதான் காரணம். பெயர்ச்சொல்லுக்குப் பிரதிபதங்கள் இருக்கின்றன; செய்கைகளையும், மனத்தில் உள்ள எண்ணங்களை யும் விவரிக்கவேண்டுமான வார்த்தைகள் இல்லை."

"நமக்குத் தெரியவில்லை. அதனால் சொற்பொருத்தமில்லாத நடை ஏற்படுகிறது. பலர் எழுதும் தமிழில், சிலசொற்கள் கல்வி யாராய்ச்சி மணம் வீசிக்கொண்டும், மற்றவை கொச்சையாகவும் இருக்கின்றன."

"நாம் சாதாரணமாய்ப் பேசும் தமிழ்வாக்கியங்களின் ஓசை யளவை ஆதாரமாய்க்கொண்டு, சொல்லழகுடனும் புதிய கருத்துக் களுடனும் தமிழில் கதைகளும் கட்டுரைகளும் இருந்தால் நன்று யிருக்கும்."

"புதிய கருத்தென்றால் என்ன? சுயமாக எண்ணுவது எவ் வளவு கஷ்டம் என்று உனக்குத் தெரியவில்லை."

"நான், ஒவ்வொருவரும் புதிய புதிய கருத்துக்களை உண் டாக்கவேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லிக்கொடுத்துச் செய் கிற காரியம் இல்லை அது. ஆனால் இப்பொழுது இங்கிலீஷிலிருந்து, மொழிபெயர்த்தும் அமைத்தும் எழுதுகிறார்களே, அதைப் புது விதமாகச் செய்யலாமே என்று சொல்கிறேன்."

"எனக்குச் சரியாக விளங்கவில்லை."

"இதைப் பார். எத்தனையோ தமிழ் நாவல்கள் இருக்கின்றன. இந்தக் கதைகளில் ஒரு முக்கிய சந்தர்ப்பம் உண்டு. அதாவது, ஒரு துஷ்டன் தன்னை நெருங்க ஒரு பெண் தன் மானத்தைக் காப்பாற்றிக்

கொள்வது. இது சுயமாக ஆசிரியர் உண்டாக்கின சந்தர்ப்பம் அன்று. ஒவ்வொரு கதைக்கும், ஓர் இங்கிலீஷ் கதை முதல்நூல். இந்தச் சந்தர்ப்பம் நமது தற்கால வாழ்க்கைக்குப் பொருத்தமுள்ள தன்று. இது நடப்பதானாலும் இனிமேல் ஒரு கதையிலும் இது வேண்டாம். இதற்குப் புதுமையில்லை.''

"அநேக கதைகள், சிலவிடங்களில் நிஜவாழ்க்கையையும், பேச்சையும், பெரும்பாலும் அதிசய சம்பவங்களையும் வர்ணித்து, விஷயப் பொருத்தமில்லாமலிருக்கின்றன. 'பழமொழிக் களஞ்சியம், மாமியார் மருமகள் சண்டை விநோதம், கதாநாயகியின் அதிசய தீரம்' என்று விளம்பரப்படுத்திவிடுவார்கள். ஆனால் இது விஷயத்தைக் குறித்தது. நடையைப்பற்றியதன்று.''

"விஷயம் வேறு, நடை வேருகுமா? மற்ருென்று. பழமொழி, குறள், பாடல் ஒன்றும் வசனத்தில் விரவிவரவேண்டாம். தெளிவாக, சொல்லப்போகும் விஷயத்தை அவரவருக்கு முடிந்தபடி, தனி வசன நடையில் எழுதினல் போதும். அப்படிச் செய்தால் தான் குற்றங்கள் விளங்கும். நடையைத் திருத்த வழி யுண்டு. கட்டுரை எழுதுபவர்கள் இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்''.

"இது அவ்வளவு முக்கியமில்லை. என் கட்டுரை எழுதியாகா தென்று தோன்றுகிறது. விஷயத்தை என் மனத்திலேயே சீர்ப் படுத்த முடியவில்லை. நாம் பேசிக்கொண்டதையே ஒரு சம்பாஷணையாக எழுதப்போகிறேன்.''

"அப்படி ஒரு சாரமுமில்லையே, நம் பேச்சில். இங்கிலீஷ் பதங்களுடன் சுபாவப் பேச்சிற்போலவே வார்த்தைகளை எழுதிப் பார். அது ஒரு புதுமையாயிருக்கும்''.

"இலக்கணப்பிழைகள் அதிகமென்று திருப்பியனுப்பிவிடுவார்கள். இங்கிலீஷ் வார்த்தைகள் தமிழில் கலப்பது எனக்கே பிடிக்கவில்லை. இங்கிலீஷில் பேசினதை மொழிபெயர்த்துச் சுருக்கி எழுதுவேன்.''

"நன்று யிராது.''

"ஏதாவது எழுதவேண்டுமல்லவா?''

"வேண்டாமே'' என்று சிரித்து என் சிநேகிதி போய்விட்டாள். நான் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

நாமும் வள்ளுவரும்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்து ஒரு வியாழவட்டம் ஆகிறது. யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது என்றும் காணுத உண்மைகள் சிலவற்றைக் கண்டோம் என்பது நம்மில் பலருக்கும் ஞாபகம் இருக்கும். அப்போது நெல் முதலிய தானியவகைகள் அபரிமிதமாக விலையேறிவிட்டன. பருத்தியும் பீரங்கிகளில் வைத்துச் சுடுவதற்கே முக்கியமாக உபயோகப்பட்டதனுல் விலையேறிக் கரிசல் எல்லாம் பொன் விளையும் பூமியாய் மாறிவிட்டது. பீரங்கிகளை வார்ப்பதற்குச் செம்பும் வெள்ளீயமும் இன்றியமையாத உலோகங்களாய் இருந்த காரணத்தால் அந்த உலோகங்களுக்கும் அவை கலந்துள்ளபித்தளை வெண்கலம் முதலிய கலப்பு உலோகங்களுக்கும் என்றைக்கும் இல்லாத அவசியமும் கிராக்கியும் ஏற்பட்டுவிட்டன. உலகம் எல்லாம் ஒன்றுசேர்ந்து முற்றுகை போட்டதுபோல் சிக்கப்பட்டிருந்த ஜெர்மனி தேசத்தில் வீட்டுக் கதவுகளிலுள்ள கீல், தாள், ஆணி முதலியவைகள் பித்தளையால் செய்யப்பட்டிருந்தால் அவைகள் துரைத்தனத்தார் ஆணையால் உருவப்பட்டுப்போய்க் கதவெல்லாம் "அடையா நெடுங்கதவாய்த்" திறந்து கிடக்கவேண்டியதாய் நேர்ந்தது. மேலும் ஜெர்மனியர் பீரங்கிகளையே ஆராதனை செய்து வந்தார்கள் என்று எதிரிகள் எல்லோரும் சொல்லிக்கொண்டு இருந்தார்கள்; அவர்கள் செப்பு விக்ரகங்களையும் ஆராதித்து வந்திருந்தார்களானுல் அவைகள் பீரங்கிகளோடு சாயுஜ்யபதவி அடைந்துதான் வழிபாட்டுக்கு உரியவைகளாய் இருந்திருக்கும்.

இவைபோலவே இதர சரக்குகளும் விலையேறிவந்த காரணத்தால் வியாபாரம் நாளுக்குநாள் விருத்தி அடைந்து வந்தது. எப்படியோ, யுத்தகளங்களில் மக்கள் உயிர் மடிய மடிய வியாபாரிகளுக்கு லாபம் அதிகரித்தது. ஏகம்பவாணரது பராக்கிரமத்தை வியந்து கூறியதுபோல, "சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி" வர்த்தகப்பயிர் செழித்தோங்கி வளர்ந்தது என்று நன்ருய்க் கூறலாம்.

பணமுடையால் வர்த்தகம் எல்லாம் ஓட்டம் இல்லாது தியங்கிக் கிடக்கிற தற்போதைய தரித்திர நிலைமையில், அப்போது பணம்

பெருக்கெடுத்து முக்குமுடைகளையெல்லாம் நிரப்பிக்கொண்டிருந்த செல்வநிலையை யூகித்தறிவது ஒருவகையில் கஷ்டந்தான். ஆனாலும் சாமானிய மனிதர்கள்கூடச்சிறுசிறு வியாபாரங்கள் செய்து நாலைந்து வருஷங்களில் செல்வவான்களாக ஆனார்கள் என்பது நாம் கண்கூடாகக் கண்டது. ஹாக்கர் சாய்பு தன் முதுகிலிருந்து சவாரி செய்து வந்த மூட்டையை ஒற்றைக் காளை வண்டியில் இறக்கிவைத்து வியாபாரம் நடத்த ஏற்பட்டார். அடுத்த வருஷம் அவர் ஜவுளிக் கடைசாய்பு ஆனார். அதற்கு அடுத்த வருஷமோ மளிகை முதலாளி ஆய்விட்டார். இவ்வாறு முதல் வருஷம் நூறு ரூபாய் லாபம், அடுத்த வருஷம் ஆயிரம் ரூபாய் லாபம், அதற்கு அடுத்த வருஷம் லக்ஷம் லாபம் என்றும் கடைசியாகக் கோடீசுவரப் பிரபு என்றும் பலபேர் சம்பந்தமாகக் கணக்குச் சொல்ல ஏற்பட்டது. இவ்வளவு செல்வப் பெருக்கைப்பார்ப்பதில் நமக்கு எவ்வளவோ திருப்தி. திருமகள் செந்தாமரை மலரைவிட்டு ஒரே குதியாய்க் குதித்துவந்து தன் அபூர்வநடனத்தை நாடெங்கும் ஆடிக்காட்டினதுபோல் இருந்தது.

இதுபோலவே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் செல்வம் முதலில் சிறிது சிறிதாய்த் திரண்டு சில வருஷங்களில் பெருஞ் செல்வமாகப் பெருகி நிற்கும் நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டு திருவள்ளுவரும் களித்துக்கொண்டும் வியந்துகொண்டும் இருந்தார்.

இதுமாத்திரமா? அல்ல. நாடகம் ஆடுகிறதைப் பார்ப்பதிலும் பார்ப்பவரைப் பார்ப்பதிலும் நமக்கெல்லாம் இருக்கிறபடி அவருக்கும் இருந்தது உத்ஸாகம். நம்மைவிட உத்ஸாகம் அவருக்கு எவ்வளவோ அதிகம் என்று சொல்லவேண்டும். அக்காலத்திய நாடகங்களுக்குக் கொட்டகையெல்லாம் கிடையாது. ஊரை ஒட்டியுள்ள மைதானம் அல்லது மந்தைவெளிதான் ஆடும் இடம். மேலும் அந்த நாடகங்களுக்கு நடனம் இன்றியமையாத அம்சம். ராஜாவோ, ராணியோ, பிள்ளையாரோ யார் வந்தாலும் தூசி கிளம்பும்படி ஒரு ஆவர்த்தி நடனம் ஆடிவிட்டுத்தான் ஆஸனத்தில் அமருகிறது. நாட்டியப்பெண்களாவது குறவன் குறத்தியாவது வந்துவிட்டாலோ சொல்லவேண்டியதில்லை. இதுபற்றியே நாடகத்துக்குக் கூத்தாட்டம் என்று பெயர் வழங்கிவந்தது. இரவு ஒன்பதரைமணிக்கு ஆட்டம் ஆரம்பிக்கும். எட்டுமணிக்கே ஒருநாள் நாடகமைதானத்துக்குத் திருவள்ளுவர் வந்துவிட்டார். அத்தருணம் நாலைந்து பேர் அங்கு வந்து தள்ளித்தள்ளி உட்கார்ந்தார்கள். எட்டரை மணிக்கு நூறுபேர் வந்து சேர்ந்தார்கள். ஒன்பது மணிக்கு ஆயிரத்துக்கு மேற்பட்டுவிட்டது. திரையை அகற்றுகிற ஒன்பதரை மணி

நேரம் வந்ததோ இல்லையோ, கூட்டம் பதினாயிரத்துக்கு மேலாகவே வந்து மொய்த்துவிட்டது. உள்ளூரில் மாத்திரம் இருந்தல்ல, சுற்றுப் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஆண் பெண் பிள்ளைகளெல்லாம் வந்துவிட்டார்கள். எள்ளுப்போட இடம் இல்லை என்று சொல்லும்படி நெருக்கி உட்கார்ந்துகொண்டார்கள். திருவள்ளுவர் முன்னும் பின்னும் இருபக்கமும் கண் எட்டுமட்டும் பார்த்தார். நிலவின் ஒளிபட்டு ஒரே பரப்பாகத் தலைக் கடல் தோன்றியது. அவ்வளவுபேரும், நாடகம் ஆரம்பித்தவுடன் அதிலேயே கண்ணுங் கருத்துமாய் அசைவற்று இருந்தபடியே இருந்தார்கள். மணி ஒன்று, இரண்டு, மூன்றும் ஆய்விட்டது. ஆனால் என்ன? ஆணி தறையிட்டமாதிரி ஒரே இருப்பாய்த்தான் இருந்தார்கள்.

இதையெல்லாம் கண்ட திருவள்ளுவர் தமக்குள்ளே சொல்ல நேர்ந்தார்: "என்ன! எட்டு மணிக்கு ஏதோ நாலைந்து பேர் வந்தார்கள்; பிறகு நூறு, ஆயிரம், கடைசியாகப் பதினாயிரம் என்று கூடிவிட்டார்கள். ஐந்து மணி நேரத்துக்குமேலாகியும் வந்தவர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஆகா! இந்த அவைக்குழாத்தைப் போலத்தான் இருக்கிறது பெருஞ் செல்வம் சிலரிடத்தில் வந்து தங்குவதும். உண்மை, உண்மை" என்று இவ்வாறாக இரண்டு வேறுபட்ட பொருள்கள்—செல்வமும் கூத்தாட்டத்துக்குவந்த அவைக்குழாமும்—ஒன்றோடொன்று இணைந்து நிற்கும் உவமான நிலையை உளக்கண்ணால் கண்டு கண்டு களித்தவண்ணம் இருந்தார். கூத்தாட்டத்தில் மனம் செல்லவில்லை.

சிறிது நேரத்தில் கிழக்கே வெள்ளி எழுந்தது. கூத்து முடிவாகிவிட்டது. கூட்டம் கலைந்து எல்லோரும் தம் வீடுகள் நோக்கியும் ஊர்கள் நோக்கியும் போய்விட்டார்கள். ஒரு நொடியில் மாயமாய்ப் பறந்துபோய்விட்டார்கள். ஒரு குஞ்சு குறுமான் இல்லை.

ஆட்டம் ஓய்ந்து ஐந்து நிமிஷந்தான். உவமான உவமேயங்களின் உண்மையில் உள்ளாக ஆழ்ந்து முழுகிப்போய் இருந்த வள்ளுவர் மெள்ள வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்தார். வந்தவர்களில் மாதிரிக்குக்கூட ஆளில்லை. வீட்டுக்குத் தன்னந்தனியாய்த் தான் போகவேண்டும் என்றும் தெரியவந்தது. "ஆகா! மெள்ள மெள்ளவந்ததென்ன! இருந்ததென்ன! மாயமாய்ப் போனதென்ன! சிலரிடத்தில் வளர்ந்தேறிவந்த பெருஞ்செல்வம் எல்லாம் ஒரேநாளில் இல்லாது ஒழிந்துபோவதையும் பார்த்திருக்கிறோம்" (ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்தபின் பொருளாதார நிலைமை மாறவும் பெரிய கடைகள் வர்த்தக நிலையங்கள் எத்தனையோ திடீர் திடீர் என்று முறிந்து விழுந்தது நமக்கும் ஞாபகந்தான்.) "சரி சரி

பெருஞ்செல்வம் ஒழிந்துபோவதும் இங்கு இதுவரை கூடியிருந்தவர்கள் தரையைத் துடைத்தவண்ணமாக ஒரே போக்காய்ப்போன செயல்தான். விடிகிற சமயமாய் இருந்தாலும் இந்த இடமும் நேரமும் ஏதோ ஒருவிதமான பயங்கரத்தையோ அல்லது துக்கத்தையோ உண்டாக்குகிறது.'' இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டு பையப்பைய வீடுபோய்ச் சேர்ந்தார். நேரமும் விடிந்துவிட்டது. மனத்தில் இதுகாறும் நிகழ்ந்த நிகழ்ச்சியெல்லாம் மெள்ள நெருங்கி நெருங்கி ஒன்றோடொன்று இணைந்து ஒலிவடிவாய்ப் பிறப்பு உற்றது. அதுதான் :

''கூத்தாட்(டு) அவைக்குழாத்(து) அற்றே பெருஞ்செல்வம்;
போக்கும், அதுவிளிந் தற்று.''

இந்தக் குறள் 'நிலையாமை' அதிகாரத்தில் இரண்டாவது செய்யுள். இதில் ஆசிரியர் பெருஞ்செல்வத்தின் வரத்து எப்படி என்று முதலில் சொல்லிவிட்டுப் போக்கைப்பற்றிப் பிறகு சொல்லுகிறார். மெள்ளமெள்ள வரத்து என்பதின் கருத்தை நான்கு சீர்களாலும், வல்லொற்று ஓசைகளிலே தியங்கி நிற்கச்செய்வதாலும், சாவகாசமாக இயங்கச்செய்து, பின்பு, போக்கு,நாளாவட்டத்தில் அல்ல, க்ஷணத்திலேயே, இல்லாமல் ஒழிந்துபோய்விடும் என்ற கருத்தை இரண்டு சீரில் சொல்லித் தீர்த்துவிடுகிறார். மேலும் போனது மீளாது என்னும் பொருளைச் சோகம் கலந்த விளிதல் (=சாதல்) என்னும் சொல் தொனிக்கச் செய்கிறது. இந்தச் செய்யுளை ஆர அமர உள்ளக்கிடையான உண்மையோடு ஒட்டித் திரும்பத் திரும்ப ஓதுவோமாயின், உண்மையும் நயமும் புதிது புதிதாக நம்முள்ளத்தில் பிறந்து, ''நவில்தொறும் நூல்நயம்போலும்'' என்று சொல்லுவதற்கு இலக்கியமாய் இது நிற்கும்.

அச்சுவித்தையின் வரலாறு

எஸ். வையாபுரிப் பிள்ளை

கல்வியைப் பரப்புவதற்குரிய சாதனங்களில் அச்சுப்புத்தகங்கள் மிகச்சிறந்தன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவருகின்றன. அவை விரித்துணர்த்தும் பொருள்களும் பலவேறு வகைப்பட்டன. அவை விரைந்து பரந்து சென்று தம் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதும் நாடு, நகரம், கிராமம், குக்கிராமம் முதலிய எல்லாப்பிரதேசங்களிலுமாம். சிறந்த நூல்கள், தாம் தோன்றியவுடன் மொழிபெயர்க்கப்பெற்று, பல அந்நிய தேசங்களிலுஞ் சென்றுலவுகின்றன. இக்காலத்தில் ஒரே நூலின் பிரதிகள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வெளிவருதலினாலே காலமென்னும் காலன் வாயினையும் தப்பி நின்று மக்களுக்கு நிலைத்த பயனுதவத்தக்க வலிமையினை அடைகின்றன.

இங்ஙனம் காலதேசாதி நியதியைக்கூடியவரை வெற்றிகொண்டு பொதுக்கல்வியை நாடெங்கும் ஆட்சி புரியச்செய்வது மாத்திரமேயன்றி, அறிவென்னும் தெய்வச் சுடரொளியை மேன்மேலும் பிரகாசங்கொள்ளும்படிசெய்து உலகெங்கும் அதன் தேஜோமயமாக்குதற்கும் அச்சுப்புத்தகங்களே சிறந்த கருவியாய் உள்ளன. நமது மூதாதையர் கனவிலும் நினைத்திராத பிரகிருதி சாஸ்திரப் பேருண்மைகளையெல்லாம் மிக எளிதிற் சாதாரண மக்களும் அப்போதைக்கப்போது அறிந்துகொள்ளுதற்குப் புத்தகங்கள் பயன்படுகின்றன. நூதன நூதனமாய் நிருமிக்கப்படும் அற்புத யந்திர விசேடங்களையெல்லாம் அனைவரும் உடனுடன் அறிந்து பயன்படுத்திக்கொள்ளும் சௌகரியங்கள் புத்தகங்களால் வாய்த்திருக்கின்றன. ஏக தேசத்தில் ஒருவரிருவருக்கு உரிமையாயிருக்கும் அறிவுச் செல்வத்தை அனைவரும் பகிர்ந்தனுபவிக்கும்படி புத்தகங்கள் செய்கின்றன.

இதன் மேலும், கல்வி யறிவால் உண்டாம் நிலைத்தவின்பத்தை நாம் நுகரும்படி செய்வதும் புத்தகங்களேயாம். எவ்வகை நிலையிலுள்ளார்க்கும் அறிவினால் விளையும் இன்பம் போற்றத்தகுவதாகவே யுள்ளது. இந்திரிய நுகர்ச்சி எத்துணை யின்றியமையாததோ அத்துணையாக அறிவு நுகர்ச்சியும் மக்கட்கு இன்றியமையாததே. கல்வி

யறிவில்லாது கேவலம் மிருகப்பிராயமாயிருப்போரும் இனிய கதைகளை வாசித்துக் கேட்டவளவில் அதன் சுவையிலே லயித்து நின்று பரவச மெய்தி யின்புற்றிருப்பர். அவர்களுக்குச் சிறிதளவேனும் கல்வியறிவிருப்பின், அறிவு நுகர்ச்சியை எத்துணையளவாகப் போற்றுவரென்பது கூறவும் வேண்டுமோ ?

ஆகவே அச்சுப்புத்தகங்கள் நமது வாழ்க்கையின்பத்திற்குக் காரணமாய், உயிரோடு உயிராயும், அறிவோடு அறிவாயும், உணர்வோடு உணர்வாயும் ஒன்றிக்கலந்துவிட்டன. அவைகளின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது என்று நினைக்கவும் இயலவில்லை.

இவ்வண்ணம் மக்கள் வாழுமுலகை விண்ணுலகு என்றெண்ணும்படியாக்கி அவர்களை அறிவின்பப்பெருவாரியிலே திளைக்கும்படி செய்கின்ற புத்தகங்கள் அச்சிலியன்று வெளிவருமுறையைக் கண்டுபிடித்த பேருபகாரி இன்னாரென நாம் தெரிந்து கொள்ளுதல் அவசியம். வேதகாலத்தேயே உருவங்கள் பொறித்துள்ள நாணயங்கள் இருந்தனவென்று அறிகின்றோம் (*D. R. Bhandarkar's Lectures on Ancient Indian Numismatics 68-69*). எனவே இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில் நாகரிகம் என்ற மணங்கூட வீசியறியாத பண்டைக்காலத்திலேயே, கிறிஸ்துவப்தத்திற்கு மிகமிக முன்புதொட்டே, நமது பாரத தேசத்தில் நாணய முதலியவற்றில் உருவங்கள் முதலியன பொறிப்பதற்கு ஏற்ற அச்சுக் கருவிகள் இருந்தன. அக்கருவிகளை மேன்மேலும் நயம்பெற அமைத்துப் புத்தகம் அச்சிடும் முறையை நம் முன்னோர்கள் தெரிந்து கொண்டார்களெனக் கூறமுடியவில்லை. கிறிஸ்துவப்தம் ஆறுவது நூற்றாண்டில் சீன தேசத்தில் ஒரு வகையான அச்சுவேலை நடைபெற்று வந்தது. அத்தேசத்தில் மரப்பலகையிலே ஒவ்வொரு பக்கத்திற்கும் உரிய எழுத்துக்கள் முழுவதும் செதுக்கப் பெற்றிருந்தன. இதனால் ஒவ்வோர் அச்சுப்பலகையும் புத்தகத்தின் ஒருபக்கத்திற்கு மட்டுமேயுதவும்; பிறிதொன்றற்கு உதவமாட்டாது. ஆகவே புத்தகங்களைத் தற்காலத்திற் செய்வதுபோல் அச்சியற்ற முடியவில்லை. இப்போது ஒவ்வோரெழுத்தும் மிகப் பலவாய்த் தனித் தனியே வார்க்கப்படுகிறது. ஒரு பக்கம் அல்லது 'பாரம்' முழுமையும் அச்சுக் கோத்து அதனை அச்சியற்றிய பின்னர், பழையபடியும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துங் கோத்துப் பயன்படுத்தலாம். இவ்வாறே மேன்மேலும் செய்து கொள்ளலாம். தனித் தனியாக எழுத்துக்கள் வார்க்கப்படுதலின் பயன் இதுவேயாகும். இதற்குத் தக்கபடி யமைந்த எழுத்துக்கள் 'சலனவச்சு' (*Movable type*) என்று கூறப்படும்.

இவ்வகையான 'சலனவச்சு' ஜான் கூடன்பேர்க் என்னும் ஜெர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கி. பி. 1400-ல் ஜெர்மனி தேசத்திலே, ரயின் நதிக்கரையிலுள்ள மேயென்ஸ் நகரத்தில் பிறந்தவர். அந்நகரத்தில் ஏற்பட்டிருந்த உட்குழப்பத்தினுல், இவரும் இவர் கட்சியாரும் நகருக்கு வெளியே பல முறை துரத்தப்பட்டனர். முடிவில் இவர் குடும்பச் சொத்தை அரசாங்கத்தினர் அபகரித்துக் கொண்டனர். இதன் பின் இவர் தமது நகருக்குத் திரும்பும் கருத்தை அறவேயொழித்துவிட்டு 'ஸ்ட்ராஸ்பெர்க்' என்ற நகரில் வசித்து வந்தார். அந்நகரத்து மக்களின் அன்பும் நன்மதிப்பும் பெற்று அங்கே வாழ்ந்துவரும் நாளில் அவர்கள் உதவியால் இவருடைய ஆஸ்தி இவருக்குத் திரும்பக்கிடைத்தது. இப்பொருளைப் பல விடங்களுக்குஞ்சென்று அழிவில்லாத கல்விப் பொருளை யீட்டுதற்குப் பயன்படுத்தி வந்தனர்.

ஹாலெண்டு தேசத்தில் ஹார்லெம் நகரில் இவர் இருக்கும் பொழுது, ஒருநாள் இவர் நண்பராகிய லாரென்ஸ் கோஸ்டெர் என்பவர் ஒரு மரப்பலகையிற் செதுக்கப்பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தை இவருக்குக் காண்பித்தார். அன்று முதல் அச்சுவித்தையைக் கண்டுபிடிக்கும் பெருங்காதலொன்று இவர் மனத்தில் வேரூன்றிவிட்டது. ஆண்மக்களுக்கு இயற்கையாயுள்ள பிறிதொரு பெருங்காதலும் இவரது உள்ளத்தை இப்போது கொள்ளை கொண்டது. நகர்ப்புறத்தேயுள்ள ஒரு சிங்காரவனத்திற்குச் சென்று அங்கே தம் காதலியை நினைத்துப் பாடுவதும் அவர் பெயரையும் தம் பெயரையும் மரப்பட்டைகளிற் பல முறை யெழுதிப் பார்த்து மகிழ்வதும் இவரது வழக்கமாயிருந்தன. ஒரு முறை அப்பெயர்களை ஈரமான இளம்பட்டையிற் செதுக்கி, அப்பட்டையைத் தம்மிடத்திருந்த தோற்கடுதாசியிற் சுற்றிவைத்திருந்தார். மறுநாள் தம் காதலியிடத்தில் அதனைச் சமர்ப்பிக்க வெண்ணிப் பிரித்துப் பார்த்தபோது, பசும்பட்டையிலுள்ள எழுத்துக்கள் தோற்கடுதாசியில் தெளிவாய்ப் படிந்திருத்தலைக் கண்டனர். இவருக்குண்டான மகிழ்ச்சி அளவிடக் கூடாததாயிருந்தது. தமது இயற்கைக்காதல் செயற்கைக் காதற்குரிய அரும்பொருளை யடைதற்கு உதவியதென்று நினைக்கும்போதெல்லாம் தமது ஒருயிரிற் பன்னூறுயிர்கள் புகுந்து இயக்குவதுபோல் ஊக்கங்கொண்டனர். பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மரப்பட்டைரசத்திற்குப் பதிலாகக் கறுப்புமையை அப்பலகையின்மீது தடவி அச்சியற்ற முயன்றனர். இரவும் பகலும் இத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து எத்தனையோ முறைகளைப் பரியாலோசனை

செய்வதில் பல வருடங்கள் சென்றன. முடிவில் ஒவ்வோரெழுத்தை யும் தனித்தனியே சிறு மரத்துண்டிற் செதுக்கி, வேண்டியபடி கோத்து அச்சியற்றுங் கருத்து இவர் மனத்தே திடீரென்று உதித் தது. இக் கருத்துத் தோன்றிய காலமுதற்கொண்டு, தனித்தனியே யெழுத்துக்களைத் திருந்திய வடிவிற் செதுக்குதற்கு வெகுகாலம் முயன்று அதிலே தக்கபயிற்சி பெற்றனர்.

பின்னர் ஹார்லெம் நகரத்தை விட்டு ஸ்விட்ஸெர்லாந்து சென்று மரத்துண்டில் அச்சுக்கள் செய்து வாக்கியமுறைப்படி அவற்றை நூல்களிற் கோத்து வரிவரியா யமைத்து அச்சுக்கள் விழுந்து விடாதபடி ஓரங்களில் முடிப்பிட்டுக் கட்டி ஒருபக்க முழுவ தும் அச்சடித்துப் பார்த்தனர். தாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இது திருப்திகரமாயிருந்தது. இங்ஙனமே பலகாலும் முயன்று அப் பியசித்து வந்தனர். தாம் மேற்கொண்டுள்ள கருத்து முற்றவேண்டு மாயின், தொழிற்சாலையொன்று அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணினர். தொழிற்சாலை இவரது அறிவாற்றலாலும் இடை விடாத வுழைப்பினாலும் மட்டும் ஸ்தாபிக்கக் கூடியதா? அதற்குப் பொருள் வேண்டு மன்றோ? பொருள் பெறும்பொருட்டுப் பல தன வந்தர்களிடஞ் சென்றனர். அவர்களிடத்தே இவர் பெற்றவை நகைப்பும் இகழ்ச்சியும் இரக்கமுமேயன்றி வேறில்லை. இவருடைய 'ஆகாயக்கோட்டை' யெல்லாம் பொருளின்மையால் தொலைந்து விடும்போலிருந்தது. ஆனால் அச்சியற்றும் நுண்மதியும் பேரு ழைப்புமுடையவர் அத்தனை யெளிதில் தோல்வியுறுவரா? சில தொழிலாளிகளோடு கூடி வைர முதலியன செதுக்கி ஆபரணஞ் செய்யுஞ் சாலையொன்று நிறுவிப் பகல் முழுவதும் அவ்வேலையையே செய்து, இரவில் தமது ஆத்மார்த்தமான வேலையைச் செய்துவந்தனர். அச்சியற்றுந்தொழில் முழுமையுந் தாமாகவே செய்து முடிப்பது அசாத்தியமென்று தோன்றியபடியால், தமது தொழிலின் மர்மத் தைச் சிறிது சிறிதாகத் தம் கூட்டாளிகளுக்குக் கூற நேர்ந்தது. இவர் மேற்கொண்டுள்ள தொழிலின் அருமை பெருமைகளை அவர்கள் உடனே நன்குணர்ந்தனர். எனினும் அதனால் ஏற்படும் புகழும் பொருளும் இவரடையாதபடி தமதாகவே செய்துகொள்ள வேண்டு மென்ற கருத்து அவர்கள் மனத்திலெழுந்தது. அச்சுத்தொழிற்குரிய இரகசியங்கள் அனைத்தையும் தாங்கள் கிரகித்துப் பொருளிலாபத்தை தாமே அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவருடைய கூட்டுத் தொழிலாளர்கள் இவர்க்குப் பொருள்முதலிய வுதவிசெய்ய முடியா தெனக் கூறினர். தமது பெருநோக்கம் நிறைவேறுந் தறுவாயில், உதவியை இழந்துவிட மனமின்றி அவர்களுடைய உட்கிடைக்கெல்

லாம் ஒருவாறு இணங்கித் தம் வேலையில் முயன்றுவந்தனர். அச்சு வேலையிற் பொருள் வருவாய் மிகுதியாயுண்டாயிற்று. அவ்வூதிய முழுமையும் கூட்டாளர்கள் தாமே யெடுத்துக்கொண்டது மாத்திர மன்றி, இவரைக் கேவலம் கூலியாளாகக் கருதி இழிவாய் நடத்தத் தொடங்கினர். பின்னர் அச்சுவித்தை இவருக்குரியதன்றென்றும் அவ்வித்தையைக் கைக்கொண்டு அச்சுத் தொழிலியற்றும் உரிமை இவருக்குக்கிடையாதென்றும் வழக்குத் தொடுத்தனர். இறைவ னருளால் இவ்விடையூறுகளெல்லாம் ஒருவாறு நீங்கின. தாம் முழு மனத்தோடும் காதலித்து வந்த அச்சுவித்தை இவரது உரிமைப் பொருளாகவே முடிந்தது. தமது தாய் நகரான மேயென்ஸுக்குத் திரும்பி வந்தனர். பிறிதொரு காதல் வெற்றியையும் கூடென் பெர்க் இப்பொழுது அடைந்தனர். துன்பமயமாகிய இவரது வாழ்க்கையிலே சிறிது இன்பவொளியும் தோன்றலாயிற்று. நெடுங் காலமாகத் தாம் காதலித்து வந்த மாதரசியை இப்பொழுது மணந்து மகிழ்வுற்றனர். எனினும் தம்பதிகள் தமக்குரிய செல்வ மாக அனுபவித்து வந்தது வறுமையேயன்றி வேறல்ல. பொருட் செல்வம்போன்றே மக்கட் செல்வமும் இவர்கட்கு இல்லாதாயிற்று.

மேயென்ஸில் மீண்டும் குழப்பம் உண்டாயிற்று. மீண்டும் கூடென்பெர்க் வெளியேற நேர்ந்தது. ஸ்விட்ஸொர்லாந்துக்கு மறு முறையுஞ்சென்று அச்சியந்திரசாலை தாபித்து விவிலிய நூல் முதலிய வற்றைப் பிரசுரஞ் செய்தனர். மீண்டும் இவருடைய வேலையாட்கள் இவரை மோசஞ்செய்து அலட்சியமாக நடத்த, மீண்டும் தமது தாய் நகருக்குத் திரும்பி வந்தனர். இத்துன்பங்களிலெல்லாம் இவருக்குத் துணையாய் நின்று மனம் சலிப்பின்றி உழைத்துவரும்படி தூண்டிக் கொண்டிருந்தவர் இவரது உத்தம பத்தினியாகிய ஆன்னெட் (*Annette*) அம்மாள் தான். தம் தாய் நகர் வந்ததும் வூஸ்டு (*Fust*), ஷோபெர் (*Schoffer*) என்பவர்களுடன் சேர்ந்து கிறிஸ்தமத நூல் கள் பலவற்றை அச்சியற்றி வெளியிட்டனர். துரதிருஷ்டம் இவர் காலடி வைக்கு மிடமெல்லாந் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அளவற்ற கஷ்ட நஷ்டங்கள் இவர்க்கு ஏற்பட்டன. பிரான்சு மன்னவராகிய லூயி (*Louis XI*) என்பவர் இவரைச் சிறிது காலம் ஆதரித்து வந்தனர். அப்போது புதிய கூட்டாளிகள் சிலரைத் துணையாகக்கொண்டு இவர் தம் தொழிலில் முயன்று வந்தனர். இக் கூட்டாளிகளும் இவரை வஞ்சிக்க நினைந்து முடிவில் அந்நோக்கம் கைகூடாதொழிந்தார்கள். மீண்டும் தம் நகரக்குழப்பத்தினால் இவரும் இவருடைய மனைவியாரும் வெளியே துரத்தப்பட்டு அகதிளாய் யாதொருபுகலிடமு மின்றி அந்நியநாடுகளில் அலைந்து

திரிந்துகொண்டிருந்தனர். இக்காலத்தில் நாஸ்ஸோ (*Nasso*) என்ற நாட்டின் அதிபதியால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்து வந்து தமது அறுபத்தொன்பதாம் வயதில் மண்ணுலகிற் புகழ் நிறுவி விண்ணுலகடைந்தனர்.

இவர் இறந்த சிலவருடங்கட்குள்ளே ஐரோப்பாக் கண்டத்திற் பல நகரங்களிலும் அச்சுக்கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று அச்சுவித்தை பரவலாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 1475-ல் காக்ஸ்டன் (*Caxton*) என்பவர் வெஸ்டுமினிஸ்டரில் முதன்முதலாக அச்சுக்கூடம் ஸ்தாபித்தனர்.

நாகரிகத்தில் மிக முற்பட்டதாகக் கருதப்படும் ஐரோப்பாக் கண்டத்தில் அச்சுவித்தையின் சரிதத்தை இதுகாறுங் கூறினேன். தமிழ் நாட்டில் இவ் வச்சுவித்தை பரவிய வாலாற்றினைப் பின்னொரு முறை விவரமாய்க் கூறுவேன்.

சென்னை அரசியல்முறை

டி. சிவராமசேதுப் பிள்ளை

தற்காலம், அரசியல் முறையைப்பற்றி எழுதுவதாயின் அதிற் பற்பல சங்கடங்கள் உள்ளன. அவைகளில் தலைமைபூண்டு நிற்பன :—எதைச் சொல்லலாம்? எதை மறைக்கவேண்டும்? எதைச் சுருங்கச் சொல்லி நண்பர்கள் ஊகத்திற்கு விடவேண்டும்? என்பனபோன்ற சில. ஆகையால் நான் இங்கே எடுத்துக்கூற முயல்வது, தற்கால அரசியற்குரிய பலவேறு அங்கங்களின் அமைப்பைமட்டுமே யாகும். அதன் சீர்திருத்த விவரங்களை விரித்துரைப்பது எனது நோக்கமன்று.

நம்மவர் அரசாட்சியின் அமைப்பினை நன்குணர, நமது தேச சரித்திர அறிவு அவசியம். தமிழ்நாட்டின் பண்டைக்காலச் சரித்திர நூல்வல்லார் கூட்டத்தில் சேர்ந்து உழைக்கும் பாக்கியம் எனக்கு இல்லை. எனினும், என் அறிவிற்கு எட்டின அளவு, நம் ஆட்சி பழையகால மன்னர்கள் நாட்டிவைத்த அரசியல் அமைப்புகளுக்கு ஒட்டியுள்ளதாய்ப் புலப்படவில்லை. ஒட்டினதாய் இருப்பினும், அதன் சூட்சுமங்களை நன்குணர்தற்கு, ஆங்கில அரசு நிலைபெற்ற நாள் முதல் நம் ஆட்சித் திட்டம் எவ்வாறெல்லாம் உருமாறி வந்துள்ளது என்பதை நோக்குவது மாத்திரமே போதும் என்பது என் துணிபு.

நமது இந்திய தேசம் சுமார் 35 கோடி மாந்தர்கள் உயிர் வாழும் ஒரு பெரிய நாடு. அதன் ஒருபாகம் சென்னை மாகாணம். இந்தியதேச முழுமையும் ஒரே ஆதிபத்தியத்திலுள்ளது. இங்ஙனமிருக்க, இப்பெரும்பாகத்தில் ஒரு பகுதியாய் விளங்கும் சென்னை ஆட்சியைப்பற்றி, இந்திய ஆட்சியைவிட்டுத்தனியே பிரித்து விளக்குவது ஏலாது. நம் அரசியலின் அமைப்பு முழுவதையும் பொது நோக்காக முதலாவது அறிந்துகொள்ளுதல் வேண்டும். எனவே, இந்த இதழில் இந்திய ஆட்சியைப்பற்றி ஒருவாறு சுருங்கச் சொல்லி, பின்னர் சென்னையின் ஆட்சிமுறையை விளக்குகிறேன்.

நமது தேசத்தில் ஆங்கிலர் புரிந்துவந்துள்ள அரசாங்கத்தின் சரித்திரம், தெளிவாய் வரையறுக்கக்கூடும் மூன்று பெரும் பகுதியாய் அமைந்துள்ளது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் பெருந்

தொழிலை மேற்கொண்டு, உலகமெல்லாம் ஓடித்தேடி, கொடிநாட்டிச் சேவகம் புரிந்து, கங்கை வள நாட்டினை அதிரச்செய்த ராணுவக்கலக நிகழ்ச்சிவரை, இராச்சியம் என்ற கனவுகூடக் காணு திருந்த காலம் ஒரு பகுதி. மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார், "வியாபாரம் பண்ணுவோர் பூமியை ஆள அமைந்தோரல்லர்" என்று ஆணையிடுவித்து, மேல்நாட்டுச் சீமான்களோடு நாமும் உடன்மதிக்கத் தக்கவர்கள் என்றும், சட்டம், நியாயம், கல்வி முதலியன அவர்கட்கும் நம்மவர்கட்கும் ஒரே முறையாகவே இருத்தல்வேண்டும் என்றும் கூறின காலப்பகுதி மற்றொன்று. உலகப் பெரும்போரின் பின், 1917-ம் வருஷத்தில், உலகத்தில் வாழும் மக்களெல்லாம் சகோதரர்களேயாவர் என்று முரசறைவித்து இந்திய ஆட்சி சுய ஆட்சியாகவே அமைக்கப் படவேண்டும் என்று மாண்டேகு பிரபு வற்புறுத்திக்கூறி, சர்ச்சில் முதலியோர் யாவரும் முன்பின் பார்த்து மலைத்து நிற்கும்படி செய்த காலப்பகுதி மூன்றாவது. இம்மூன்று பகுதிகளின் முக்கிய அமைப்புகளை ஒருவாறு கூறி முடித்தால் எனது சிற்றுரை முடிவுபெறும்.

வாணிகம் புரிய வந்த ஆங்கில வர்த்தகர்கள், பல சுதேச மன்னர்களுடைய அறிவாற்றற் குறைவினால் நாடு கலங்கினதைக் கண்ணுற்றார்கள். வியாபாரம் வலிபெற அமைதி அவசியம். ஆகவே கிளைவ் *(Clive)* யுத்தம் புரிந்து நாட்டை ஆங்கில வணிகர் வசம் ஆக்கினார். வணிக சங்கத்தின் அரசாட்சி தடுமாற்றத்தில் மயங்க, பிட் பிரதமர் *(Pitt)* 1784-ம் வருஷத்தில் பார்லிமெண்டு சபையின் மூலமாய் ஒரு 'நிர்வாக சங்கம்' நியமித்தார். வர்த்தகர் சங்கத்தின் நடத்தைகள் மேன்மேலும் கெடுதியுற, 1857-ம் வருஷத்தில் ராணுவக் கலகம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் ஆளும் அமைச்சர்கட்கு, இந்தியாவையும் தாம் நேர்முகமாய் ஆளவேண்டும் என்ற அறிவு மேலிட்டது. இதன் பயனாய் 1858-ம் வருஷம் வெளிவந்த சட்டந்தான் இந்தியாவிற்கு முதல்முதற் சட்ட முறையில் ஆட்சியொன்றை ஏற்படுத்தியது. அந்த ஆட்சியின் அமைப்பு, சற்று உற்று நோக்கத்தக்கது. பார்லிமெண்டிற்கு உத்தரவாதம் செய்பவன் 'ஒரு காரிய அமைச்சன்.' அவ்வமைச்சன் இந்தியாவை ஆளுதற்கு, அவனுக்குத் துணைபுரியும் உதவியாளர் பதின்மர். இச் சிறிய சங்கம் இந்திய நாட்டை ஆறாயிரமைலுக்கப்பால் இருந்து அரசுபுரிந்துவர ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவிலோ, 1773 முதல் 1858-க்குள் ஒருமுறையான அரசியல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னை, பம்பாய், வங்காளம் இவைகளுக்கு ஏனைய மாகாணங்களைப் போலல்லாமல்,

தனித்தனி அரசாங்கம் அமைக்கப்பட்டன. தலைமையாகக் கவர்னரும் அவருக்கு உதவிபுரியும் நிர்வாக சபையும் சேர்ந்து, நாட்டை அமைதிக்குக் கொண்டுவர முயன்றனர். இம்மூன்று பெரிய மாகாணங்கள் தவிர, மற்றவைகளும் நாளடைவிலே ஏற்படுத்தப்பட்டன. அவைகளின் போக்கை இந்தியா அரசினர் அக்காலம் கல்கத்தாவிலிருந்து ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவந்தார்கள்.

இவை யிவ்வாருக, 1858 முதல் 1909-ம் வருஷம் வரை, இங்கிலாந்திலுள்ள சீமான்கள், இந்தியாவை அமைதிக்குக் கொண்டுவரவும் ஒரு வரையறைக்குள் அடங்கக்கூடிய ஆட்சிக்குக் கொண்டுவரவும் பலபல முயற்சி செய்தார்கள். அவற்றை விரித்தால் வளரும். ஆயினும், ஏற்படுத்தப்பட்ட கவர்ன்மெண்டின் இயல்பை ஒருவாறு சுருக்கிக் கூறலாம். எல்லாவற்றிற்கும் முடிவாக உத்தரவாதஞ்செய்பவர் லண்டனில் வெள்ளை அரங்கில் *(White Hall)* அரசாளும் இந்தியா மந்திரி. இந்தியாவில் உள்ள அரசப்பிரதிநிதி முதற்கொண்டு, கடையான கணக்கன்வரை அவர் உத்திரவிற்கு உட்பட்டவர்களே. இந்நாட்டில் அரசப் பிரதிநிதிக்கும் அவர் ஆட்சிக்கும் உட்பட்டவர் ஏனையவர். ஆனல் சட்டப்படி ஏற்பாடு இவ்வண்ணமிருப்பினும், எல்லா விஷயங்களிலும் லண்டனிலிருக்கும் அமைச்சர் தலையிடுவதில்லை. இந்தியாவில் ஆண்டு வரும் அரசாங்கத்தினருக்கு வேண்டிய சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. ராணுவ இலாகா, பொருள் இலாகா இவ்விரண்டின் கடைசி முடிவு மாத்திரம் ஆங்கில அமைச்சர் கையில் அமைந்திருந்தது.

1909-ம் வருஷம் மார்லி பிரபு—ஆங்கில பாஷையில் என்றும் அழிவில்லா அழகிய வசன நடையில் பல விஷயங்களை அமைத்திட்ட பெரியார்—இந்தியர்களையும், ஆங்கில உத்தியோகஸ்தர்களுடன் சேர்த்து அவர்கள் சொல்லுவதைக் காதிலைாவது கேட்டருளல் நியாயம் என்று எண்ணி, சட்ட சபை நியமித்தார். அவருக்குமுன் டல்ஹௌசி பிரபுவும், இன்னும் சில பிரபுக்களும் சிற்சில வழிகளில் இந்தியர்களைச் சேர்த்துக்கொண்டது உண்டு. ஆனல் இந்தியா என்று சொல்லப்படும் ஒரு பெரிய தேசத்தில் ஆங்கிலர்கள் மாத்திரம் செல்வம் சேர்ப்பது முக்கிய கடமையல்லவென்றும், இந்தியர்களென்ற ஒரு பெருங் கூட்டத்தார் 'எங்கள் நாடு எங்களுக்கே' என்று கூக்குரல் இடுகிருர்கள் என்றும் கவனித்து, பார்லிமெண்டு முதல் முதல் இந்தியா ஆட்சியைக் கவனிக்கத் தொடங்கினது மார்லியின் முயற்சியாலே தான். மார்லியின் சட்டமே, நம் நாட்டிற் சட்ட சபைகளுக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்தல் அவசியம் என்றும், இந்தியர்களும் சர்க்கார் ஊழி

யத்தில் அதிகமாகப் பங்கு கொள்ளவேண்டும் என்றும் ஒருவாறு ஒத்துக்கொண்டது. ஆனால் ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலருடையதே. வேலை செய்ய இந்தியர்களை அரசாங்க உத்தியோகங்களில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி மற்றப்படி அவர்களுக்குப் பொறுப்பளித்தல் இந்திய தேசத்திற்கு ஒருகாலும் பொருந்தாது என்று மார்லி வற்புறுத்தினர்.

இதன்பிறகுதான் 1914-ம் வருஷத்தில் அதுவரை உலகம் கண்டிராத பெரும்போர் நிகழ்ந்தது. அதில் இந்தியர்கள் செய்த உதவியாலும், மேல்நாட்டின் உயிரையும் மானத்தையும் காப்பாற்றின வீரத்தாலும் மனமுவந்து, இவ்வகை உதவியையும் வீரத்தையும் கண்டு இந்தியதேச முழுவதிலும் பொங்கியெழுந்த களிப்பையும் உற்றுக்கவனித்து, இந்தியர்களிடத்தில் மிக்க அன்பு பூண்டவராய் மாண்டேகு பிரபு 1917-ம் வருஷத்தில் சீர்திருத்தம் ஒன்று செய்தார். இது நம் ஆட்சியின் அமைப்பிற்கு மிக முக்கியமான பத்திரமாகையால், அடுத்த இதழில் வகுத்துரைக்க நேயர்கள் விடை கொடுக்கவேண்டும்.

(தொடரும்)

சங்கராந்திதேவன் பிறந்த நாள்

கார்க்கியர்

வானூரில் சூரியனார் மாளிகையில் சங்கராந்திதேவன் பிறந்த நாள் உற்சவம் தைமாதம் முதல் தேதியில் கொண்டாடப் போவதாயும் அன்று அவன் உடன்பிறந்தார்கள் பன்னிருவர்களும் தங்கள் மனைவி மக்களுடன் அங்கு வந்திருப்பார்களென்றும் அக்காட்சி அதிக விநோதமாயிருக்குமென்றும் கேள்விப்பட்டு அங்குச் சென்றேன். மாளிகையில் நுழைந்து கொஞ்ச தூரம் சென்றபின் ஒரு பெரிய மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். அதன் நடுவில் கரும்புக்கால்களமைத்துச் செவ்வந்திப் பூவினால் பந்தல் போடப்பட்டிருந்தது. அதில் மஞ்சள் இஞ்சிக்கொத்துகள் முதலியவை தோரணமாகக் கட்டப்பட்டிருந்தன. அப்பந்தலின் கீழ் வெண்பட்டுடுத்து மலர்மாலை யணிந்து சங்கராந்திதேவன் வீற்றிருந்தான். அவன் செவிகளில் மகரகுண்டலங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அருகில் அவன் மனைவி மகராந்தி என்பவள் மாந்தளிர் போன்ற நிறமுடையவளாய் நின்றுகொண்டிருந்தாள்.

அவ்விருவர்களைச் சுற்றி உடன்பிறந்தார்கள் தங்கள் பரிவாரங்களோடு தனித்தனியா யிருந்தார்கள். அவர்களைக் காணவேண்டி வலமாகச் செல்லுகையில் முதலில் ஒருவரைக் கண்டேன். 'நரை திரையுடன் மூப் பொரு வடிவு' கொண்டாற்போல அவர் உட்கார்ந்திருந்தார். அவர் வெண்ணிறச் சால்வை போர்த்துக் குளிரினால் உடல் நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் மனைவியாகிய ஆதிரையாள் தட்டிற் களியும் எழுகறியும் ஏந்தி நின்றாள். அவர்களைச் சூழ்ந்து நின்ற மக்களிற் சிலர் கையில் பொங்கல் வைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்; பின்னுஞ் சிலர் உபவாஸத்தால் மெலிந்திருந்தார்கள்.

அவர்களைக் கடந்து செல்ல, அங்கு முருகனென அழகு வாய்ந்த ஒருவர் கையில் வேல் பிடித்திருந்தார். அவர் மனைவி கிருத்திகாம்பாள் ஒரு தட்டிற் பொரி உருண்டையையும் மற்றொரு தட்டில் விளக்குகளையும் வைத்து நின்றாள். அவர்களுடைய மக்களனைவரும் மிக்க களிப்புடன் வாணங்களைக் கொளுத்திக்கொண்டும் உலர்ந்த சருகு முதலியவைகளை எரியவிட்டுக்கொண்டும் இருந்தார்கள்.

அவர்களைத் தாண்டிச் சென்றவுடன் ஒருவர் மங்களஸ்நானம் செய்து புது வஸ்திரமணிந்து நெற்றியிற் சந்தனமிட்டு அதன்மேற்

குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அவரருகில் அவர் இல்லாள் ரேவதியம்மாள் புதுப்பட்டுடுத்துப் பலகாரங்களை வைத்த தட்டொன்றை ஏந்தி நின்றாள். அவர்களைச் சுற்றிலும் பலர் அநேக வெடிகளைக் கொளுத்தி எறிந்து கொண்டிருந்தார்கள். சிலர் மழையினால் நனைந்தவர்களைப்போல் ஈர வஸ்திரத்தோடிருந்தார்கள்.

அவர்களை விட்டுச் சென்றேன்; அப்புறம் ஒருவர் பன்னிரு திருநாமமணிந்து பட்டுக்கரை வேஷ்டி கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் மனைவி கன்னியம்மாள் கையில் மாவிளக்கேற்றி வைத்திருந்தாள். அவர்களைச் சூழ்ந்திருந்தவர்களிற் சிலர் வேத பாராயணம் பண்ணிக்கொண்டும், சிலர் ராமாயண பாராயணம் பண்ணிக்கொண்டும் இருந்தார்கள். பின்னும் சிலர் அம்பிகையை வைத்துப் பூஜை செய்துகொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் விளக்கேற்றி வைத்து அதைப் பூஜித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர்ச் சிறிது தூரம் சென்றேன்; அங்கே ஒரு வேதியர் ஹோமம் செய்து கொண்டிருந்தார். அவர் மனைவி சிங்கம்மாள் அருகில் தருப்பையை அவர்மீது படும்படி பிடித்து நின்றாள். அவர்களைச் சுற்றியுள்ள யாவரும் வேதமோதினர். சிலர் மோதகங்களையும் சிலர் சீடை முறுக்கு அவல் முதலிய தின்பண்டங்களையும் தின்றுகொண்டிருந்தார்கள்.

அதற்கப்பால் ஒருவர் கறுத்த மேனியும் வியர்த்த முகமுமாய்க் கையில் விசிறி வைத்து விசிறிக்கொண்டே உட்கார்ந்திருந்தார். அவர் பார்வையிலிருந்து ஆஷாட பூதியோவெனத் தோற்றிற்று; கோடைகாலத்து மேகம் கர்ச்சிப்பதேயன்றி மழை பெய்யாதிருக்குமாபோல் அவர் பார்வைக்குத் தயாளுவாகத் தோன்றினும் கடுமையானவரென்று தெரியவந்தது. அவர் மனைவி பூர்ணம்மாள் ஆகாய வர்ணமான புடைவை யுடுத்துக் கறுத்த விழிகளில் மையிட்டுக் கையில் உண்டிவகைகளை வைத்திருந்தாள். அவர்களுடைய மக்களெல்லாம் வெயிலால் மெலிந்த மேனியராய்ச் சோர்ந்திருந்தார்கள்.

அதற்கப்பால் மணக்கோலங்கொண்ட தம்பதிகள் சேர்ந்துட்கார்ந்திருந்தார்கள். அவர்களைச் சூழ்ந்திருந்தவர்களெல்லோரும் நல்விருந்துண்டுகொண்டிருந்தார்கள். மற்றவிடங்களைக் காட்டிலும் இவ்விடத்தில் மக்கள் அதிகமாக இருந்தார்கள். சிலர் சந்தனம் பூசிக்கொண்டும் சிலர் தாம்பூலம் போட்டுக்கொண்டும் இருந்தார்கள்.

அப்பால் விசாகப்பெருமாளென விளங்கும் ஒருவர் மணம் பொருந்திய மாலையணிந்து வீற்றிருந்தார். அவருக்கு அருகில்

வஸந்தை கையில் தயிரன்னம் வைத்துக்கொண்டும் விசிறியினுல் வீசிக்கொண்டும் நின்றனள். பக்கத்திலிருந்தவர்களிற் சிலர் சித்திரான்னம் சாப்பிட்டுக்கொண்டும் சிலர் நீர்மோர் குடித்துக்கொண்டும் சிலர் பானகம் அருந்திக்கொண்டும் விடாயாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கடந்து செல்லவும் அஜமகாராஜனைப்போல அலங்கார வேடத்துடன் ஒருவர் உல்லாஸமாய் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் அவர் மனைவி, 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தது போல்' சித்திரா வென்னும் தன் பெயருக்கிசைந்தபடி சித்திரவேலையமைந்த பட்டுடுத்திக் கையிற் பலவகைப் பழங்களை யேந்தி நின்ருள். சுற்றி யிருந்தவர்களிற் சிலர் மாம்பழமும் சிலர் பலாச்சுளையும் சிலர் வாழைப்பழம் முதலிய பழவர்க்கங்களையும் புசித்துக்கொண்டிருந்தனர்.

அதற்கு அப்புறம் பங்குனியுத்திர நாளிற் கூடி யிருக்கும் பார்வதியும் பரமேசுவரனும் போன்ற இருவர் ஏகாதனத்தில் வீற்றிருந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து 'பங்குனி மலர்ந்தொளிர் பலாச' வனத்தைப்போல் செந்நிற மயிரையுடைய மக்கள் வீற்றிருந்தார்கள். அவர்களிற் சிலர் கையிற் காரடை வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு பனி மூடிய மலைபோல் நீறு பூசிய மேனியராய்த் தவவேடங்கொண்ட முனிவரொருவர் வீற்றிருந்தார். அவர் மனைவி ஈசுவரனுக்கு அபிஷேகத்திற்கு வேண்டிய பொருள்களையும் நிவேதனங்களையும் ஏந்தி நின்ருள். உடனிருந்த மக்களிற் சிலர், 'சிவராத்திரிப் போது கண்டுயிலோம்' என்ற விரதியர்போல் ஆடியசைந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

அப்பால் சங்கராந்திதேவனது இடப்பக்கத்தில் மகரவேலையரசனென நீனிறமேனியரொருவர் வெண்ணுரை போன்ற ஆடை போர்த்து வீற்றிருந்தார். அவர் மனைவி தைலம்மாள் சங்கராந்திதேவனுக்கு உபசாரம் செய்யவேண்டிய பண்டங்களோடு சர்க்கரான்னம் முதலிய நிவேதனங்களை ஏந்தி நின்ருள். பக்கத்திலிருந்தவர்களிற் சிலர் கரும்பு தின்றுகொண்டும் சிலர் பழங்கள் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

இவ்வுற்சவத்தைக் கண்டவுடன், இப்பன்னிருவரும் வருஷத்திலுள்ள பன்னிரண்டு மாதங்களுக்கும் அதிதேவதைகளோ வென நினைத்தேன்; அவர் மக்கள் அம்மாதங்களின் தினங்களெனவும் தெரிந்துகொண்டேன்.



வி. விசாலாக்ஷியம்மாள்

முன்னுரை

மாதர் பகுதி என்றால் என்ன ?

நகையையும், புடைவையையும், பாத்திரங்களையும், பக்ஷண வகைகளையும் பற்றிய குறிப்புகள் முக்கியமாய்ப் பெண்கள் படித்தற்குரியன என்பது சிலர் கொள்கை ; இவைகளைப்பற்றிய நவநாகரிகக் குறிப்புகளே, அநேக பத்திரிகைகளில் வெளியாகின்றன. "வித்தையைப் படிப்பியுங்கள்—தயவு செய்து வித்தையைப்படிப்பியுங்கள். பாட மாட்டோமோ—வீணை மீட்டோமோ?" என்று பெண்கள் கூறுவதாக வேதநாயகம் பிள்ளை பாடிப் பல வருஷங்களாயின. பெண்கல்வி, சங்கீதம், ஸ்திரீ சுதந்திரம் முதலிய விஷயங்களைப் பற்றி, மாதர்பகுதியில் எழுதுவதே சரி என்பார் சிலர். அழகுப் பரிசு பெற்ற மங்கையரின் படங்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகள் பல உண்டு; அரசாங்கத்தில் தலையிட்டு மேன்மைபெற்ற கிழவிகளின் படங்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகளும் உண்டு. மாதர்பகுதிக்குரிய விஷயம் இதுதானென்று இங்கிலீஷ் பத்திரிகைகளிலுங்கூட ஸ்திரப்படவில்லை. நம் நாட்டிலோ, வம்புப்பேச்சொன்று தவிர வேறொரு பொதுவிஷயமும், பெண்களுக்குச் சாரமாகத் தோன்றாது என்று நினைப்பார் பலர்; கலைமகள் பெண்ணல்லவோ என்று பெண்பாலைச் சிறப்பித்துக் கூறுவாரும் உண்டு. பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் எவை? பெண்கள் விரும்புவது எது? என்பன பெருங்கேள்விகள். இவற்றிற்குப் புருஷர் கூறும் பதில்களைவிட்டுப் பெண்கள் கூறும் பதில்களையே எடுத்துச் சொல்லுகிறேன்.


பெண்களுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கவேண்டும். குழந்தைகளைப் பேணுதல், குடித்தனப் பாங்கு, அலங்காரம்

முதலியன முக்கியமாய் அவர்களுக்குரியன ; சாஸ்திர ஞானத்திலும் உலகவியவகாரத்திலும் அவர்களுக்கு வேண்டாத விஷயம் ஒன்று மில்லை. பரத்தைமைத் தொழிலில், கேவலம் பொருள் சம்பாதிப் பதற்கு, மாதர் தெரிந்த கொள்ளத்தக்கவை, " . . . சுந்தரச்சுண்ண மும் தூநீராடலும் . . . வட்டிகைச் செய்தியும் மலராய்ந்து தொடுத்தலும் . . காலக்கணிதமும் கலைகளின்றுணிவும்" . . . இன் னும் பலவுமென்று, மாதவியின் தோழி அவளிடம் சொன்னதாகக் கதை சொல்லுகிறது. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற சிறப்பிற்குரிய கற்புடை மாதர் அறியவேண்டாத விஷயம் ஒன்று மில்லை. எழுத்தறியாத ஒரு கிழவி, வெகு சாமர்த்தியமாய்ச் சுமார் முப்பதுபேருள்ள குடும்பத்தின் தலைமையை வகித்தவள், தன் பேத் திக்கு அடிக்கடி புத்திமதி சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். "களவும் கற்று மற" என்பதே அவளுடைய உபதேசம். அந்தப் பழ மொழிக்கு வெகு சாரமாய் அவள் வியாக்கியானம் செய்வதுண்டு.

பெண்கள் விரும்புவது எது ?

அழகென்பார் சிலர் ; சம்பத்தென்பார் சிலர். இதைப்பற்றி ஒரு கதை நினைவுக்கு வருகிறது. முன் காலத்தில், ஒரு வீரன், ஏதோ அரசாணையை மீறி மரணதண்டனைக்கு உட்பட்டானும் ; அப்பொழுது, அரசன் மனைவி, அவன் விதிக்கிரங்கி, அவனுக்கு ஒரு வருஷத் தவணை கொடுக்கும்படிக்கும், அதற்குள் எல்லா மாதர்களின் முதல் விருப்பம் எது என்ற கேள்விக்கு அவன் சரியான உத்தரம் சொன்னால் அவனை மன்னித்து விடும்படிக்கும் அரசனைக் கேட்டுக் கொண்டாளாம். அரசன் இதற்குச் சம்மதித்துவிட்டான். வீரன் தான் கண்ட பெண்களையெல்லாம், இந்தக் கேள்வியைக் கேட்டான். ஒவ்வொருத்தி சொன்ன பதிலின் உண்மையையும் மற்றொருத்தி மறுத்து விட்டாள். அவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான். அப்பொழுது ஒரு குரூபி, தன்னை அவ் வீரன் மணந்து கொண்டால், தான் சரியான விடை கூறுவதாகச் சொன்னாள். அப் படியே ஒப்பந்தமான பின், அவள் விடை கூறினாள். அதைக்கேட்ட பெண்பாலருள் யாரும் அதன் உண்மையை மறுக்க முடியவில்லை. அவளால் வீரன் உயிர்ப்பிச்சை பெற்றான். வாக்கு மாறாமல், அவளை விவாகம் செய்து கொண்டான். பிறகு மந்திர பலத்தால் அவள் அழகு பெறவே, இருவரும் சுகமாய் வாழ்ந்தார்கள் என்பது கதை. அவள் கூறிய விடையாவது: எல்லாப் பெண்களுக்கும் முதல் விருப் பம், தமக்குப் பிறர் மேல், முக்கியமாய்ப் புருஷர் மேல் அதிகாரம் (செல்வாக்கு) வேண்டு மென்பதே ! அழகாலும், அலங்காரத்தா

லும், சாதுரியத்தாலும், கல்வியாலும், குணத்தாலும், அன்பாலும் பெண்கள் மேம்பாடடைந்து, தம் சக்தியை உலகத்தில் நிலவச்செய்கிறார்கள்; புது வித ஊறுகாய், கூந்தலை வளர்க்கும் விதம் இவை முதல், ஸோவியத் ருஷியாவில் பெண்களின் தீரத்தால் தேசத்துக்கேற்பட்ட நன்மைகள் வரை எனக்குச் சாரமாகத்தோன்றும் விஷயங்களையெல்லாம், இந்த மாதர் பகுதியில் எழுதிப்பார்க்கலாம் என்று உத்தேசிக்கிறேன்.



மீன்கள்

சி. கே. லக்ஷ்மி அம்மாள்


முன்னுரை

மூன்று தினங்களாக நல்ல மழை பெய்தது; இப்பொழுது பளிச்சென்று சூரிய வெளிச்சம் பிரகாசிக்கிறது. இருந்தாலும், நல்ல மழை பெய்ததின் அடையாளம் நாலாபக்கமும் காணப்படுகிறது; வயல்களிலும், தாழ்ந்த நிலங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இப்படித் தேங்கியிருக்கும் ஒரு குட்டையின் அருகே போய், அந்த நீரைக் கவனிப்போம். அதில் சிறு ஜந்துக்கள் நீந்தி விளையாடுவதை நாம் பார்க்கலாம். இவைகள் சிறிய மீன்கள். இந்த மீன்களை விளையாட்டுக்குப் பிடித்துக் குழந்தைகள் சில வேளைகளில் கொன்றுவிடுவார்கள். சிறிய மீன்கள் தண்ணீரில் நீந்தி விளையாடுவது, பார்வைக்கு வேடிக்கையாக இருக்கும்.

மழைத் தண்ணீர் தேங்கி உண்டான குட்டைகளில் மிகவும் சிறிய மீன்களே இருக்கும். எப்பொழுதும் தண்ணீர் உள்ள குளங்களிலும் ஆறுகளிலும் பெரிய மீன்கள் வசிக்கும். மீன்களில் பல வகைகள் உண்டு. சில தட்டையாக இருக்கும்; சில உருண்டையாக இருக்கும்; சில மீன்களுக்கு எலும்புகள் கிடையா; மீன்கள் பல வர்ணங்களில் இருக்கும். சிறு பிள்ளைகள் எப்பொழுதும் ஓடிக் குதித்துக்கொண்டே இருக்கிறார்கள் அல்லவா ? மீன்களும் தண்ணீரில் நீந்தியும், விளையாடியும், துள்ளிக்கொண்டும் இருக்கும். சில வேளைகளில் எல்லாவற்றையும்விடப் பெரிய மீன் ஒன்றைப் பார்க்கலாம். இது தாய்மீன். தன்னைச்சுற்றிப் பல குஞ்சுகள் வர, இது ஜலத்தில் மெதுவாக நீந்தும். மனிதர், மிருகங்கள், பறவைகள், மரம், செடிகள் இவைகளுக்கெல்லாம் பூமிதான் இருப்பிடம்; அதுபோல் தண்ணீர்தான் மீன்களுக்கு வசிக்குமிடம்.

நாம் சமுத்திரக்கரை ஓரமாக நடந்து போகலாம், வாருங்கள். சமுத்திரத்தையும், அதில் எழும்பும் அலைகளையும் பார்க்கும்

போது நமக்குச் சந்தோஷமாக இருக்கிறது. சில நண்டுகளைத தவிர, வேறு ஒரு பிராணியும் நம் கண்களுக்குத் தென்படவில்லை. ஆனால், லக்ஷக்கணக்கான மீன்கள் சமுத்திரத்தில் வசிக்கின்றன. இவைகள் அநேக வர்ணங்களாயும், அநேக வகைகளாயும் இருக்கின்றன. இவைகளில் சில மிகவும் பெரியனவாக இருக்



கின்றன. இவ்வளவு பெரிய ஜந்துக்களை நிலத்திற் காணமுடியாது. மீன் காட்சிச்சாலைகளிற் பல வகையான மீன்களைப் பிடித்து வைக்கிறார்கள். அவைகளைப் பார்ப்பதற்கு ஜனங்கள் போகிறார்கள். மீன் காட்சிச்சாலையில் உள்ள பலவர்ணமான மீன்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

முக்கிய குணங்கள்

மீன்கள் முதுகு எலும்பு உள்ள பிராணிகளிலே கீழ்வகுப்பைச் சேர்ந்தவைகள். மற்றைப் பிராணிகளுக்கும் மீன்களுக்கும் ஒரு முக்கிய பேதம் உண்டு. மீன்களால் பூமியில் ஜீவித்திருக்க முடியாது. சிறிது நேரத்துக்குமேல் தண்ணீரில் மூழ்கி இருக்க நேரிட்டால், மூச்சுத் திணறி நாம் இறந்துவிடுவோம் அல்லவா? அப்படியே மீன்கள் சிறிது நேரத்துக்குமேல் பூமியில் இருந்தால் இறந்துவிடும். சமுத்திரத்தில் வலையை வீசி, அநேக மீன்களைப் பிடித்து, அவைகளைக் கரையில் செம்படவர்கள் கொட்டுவார்கள். அப்பொழுது அந்த மீன்கள் மூச்சுவிட முடியாததனால் வாயைப் பிளந்து, பிறகு இறந்துவிடுவதை நாம் பார்க்கலாம்.

மீனின் ஒவ்வோர் உறுப்பும் தண்ணீரில் வசிப்பதற்குச் சௌகரியமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஜந்துக்களுக்கு இல்லாத ஓர் உறுப்பு மீன்களுக்கு உண்டு. இவைகளுக்கு மீன்சிறகு என்று பெயர். இவைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதுகின் மத்தியிலும், வயிற்றிலும், வால் ஓரத்திலுமாக இருக்கும் சிறகுகள் ஒருவகை. நிலத்தில் வசிக்கும் ஜந்துக்களுக்கு உள்ள முன்னங்கால்கள் பின்னங்கால்களுக்கு ஒப்பாக, ஜதை ஜதையாக இருக்கும் சிறகுகள் மற்றொருவகை.

நிலத்தில் வசிக்கும் ஜந்துக்களுக்கு உடம்பெல்லாம் மயிர் மூடிக்கொண்டிருக்கிறது. மீன்களுக்குச் செதிள் மூடி இருக்கும். காணங்கொளுத்தி (மாகரீல்), கவலை (ஸார்டின்) முதலியன செதிள் மூடின இனத்தைச் சேர்ந்த மீன்கள். திருக்கைமீன், சுறு மீன் இவைகளின் உடம்பு வெற்றுடம்பாக இருக்கும். நண்டு, பெரிய இறால் மீன் முதலிய வேறு சில மீன்களுக்கு, சிப்பி அல்லது ஓடு உடம்பெங்கும் மூடி இருக்கும்.

நிலத்தில் வாழும் ஜந்துக்களுக்கும் மீன்களுக்கும், இன்னும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. சுவாசிப்பதற்கு, நுரைஈரலுக்குப் பதிலாக, தண்ணீரில் உள்ள வாயுவை இழுக்கக்கூடிய கில்ஸ் என்ற சுவாச உறுப்பு மீன்களுக்கு இருக்கிறது.

மீன்களுக்கு ஒரு விநோதமான சக்தி உண்டு. சுற்று நிலைக்குத் தக்கபடி தங்கள் நிறத்தை இவைகள் மாற்றிக்கொள்ளும். பாறைகளின் அருகில் இருந்தால், கல்லின் நிறத்தை ஒத்தாற்போல் ஒருவிதத் தவிட்டு நிறமாக மீன்கள் மாறிவிடும். நடுச்சமுத்திரத்தில் கருநீல நிறம் எடுத்துக்கொள்ளும். பின்னும், இருக்கும் இடத்துக்கு ஏற்க நிறத்தை மாற்றிக்கொள்ளும். இப்படிச் சுற்று நிலைக்குத் தக்கபடி

நிறத்தை மாற்றி, எதிரிகள் கண்ணுக்குப் புலப்படாமல் மீன்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும். இவ்விதம் நிறம் மாறுதவற்குத் தற்காப்புநிறம்மாறல் என்று பெயர். நிலத்தில் வாழும் சில ஜந்துக்களும் இவ்விதம் நிறம் மாறுவதுண்டு. ஆனால் மீன்களிடந்தான் இந்தச் சக்தி விசேஷமாகக் காணப்படுகிறது. நிறம் மாறி இப்படிக் காத்துக்கொள்ளாவிட்டால் சிறிய மீன்களை எல்லாம் பெரிய மீன்கள் இரையாக விழுங்கி விடும். இந்த வர்ணங்கள் மீன்களின் தோலின் கீழே சிறிய பைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சதையின் உதவியால் இவைகளைக் குறுக்கியும் விரித்தும், இஷ்டப்படி மீன்கள் நிறம் மாறும். ஸெபியா என்ற ஒருவித மீனுக்கு மைபோன்ற திராவகம் நிறைந்த பை ஒன்று இருக்கிறது. பகைவன் அருகில் வந்ததும் அந்த மையை அது தண்ணீரில் கொட்டிவிடும்; ஜலம் தெளிவதற்குள் ஓடி ஒளித்துக்கொள்ளும். இந்திரதனுசில் உள்ள எல்லா வர்ணங்களையும் சில மீன்களின்மேல் பார்க்கலாம்.

சிறகு

ஆகாயத்தில் பறக்கவும் கீழே விழாமல் இருக்கவும் பறவைகளுக்கு இறகுகள் உதவுகின்றன. தண்ணீரில் நீந்தவும், திரும்பவும், சமமாக மிதக்கவும் சிறகுகள் மீன்களுக்கு உதவுகின்றன. ஒரு மீனின் ஒரு பக்கத்துச் சிறகுகளை நறுக்கி, அதை மறுபடியும் தண்ணீரில் போட்டு விடுவோம்; இப்பொழுது அதனால் சமமாக மிதக்க முடியவில்லை; அது சிறகு உள்ள பக்கமாகத் திரும்புவதை நாம் பார்க்கலாம்.

மீன்கள் சிறகுகளின் உதவியால் சுமார் ஆறடி தூரம் வரையில் தண்ணீரைவிட்டுக் காற்றிற் செல்லமுடியும். பறக்கும்மீன் என்ற ஒருஜாதி மீன் இருக்கிறது. இதன் சிறகுகள் இரண்டு பக்கத்திலும் இறகுகள்போல் பெரிதாக வளர்ந்திருக்கும். இந்த மீன் ஒரே தடவையில் 500 அடி தூரம்வரையிற் பறந்துபோகும். மணிக்குப் பத்துமைல் செல்லும் கப்பலைவிட வேகமாக இது சில வேளைகளிற் பறக்கும். ஆனால் பறவைகளின் இறகுகளுக்கும், மீன்களின் சிறகுகளுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. பறவைகளால் இறகுகளை அடித்து, அந்த வேகத்தினால் பறக்க முடியும். மீன்சிறகுகள் காற்றில் அசைந்து கொடுப்பதில்லை. குடைபோல் மீனைக் காற்றில் தாங்கமட்டுமே செய்யும்.

ஜதை ஜதையாக இருக்கும் சிறகுகள் சில வேளைகளில் விரல்போல் நீண்டிருக்கும். இவைகளின் உதவியால் மீன்கள் தொட்டு

உணர்ந்துகொள்ளும். மேலும் நீரின்கீழே தரைமட்டத்தில் ஊர்ந்து செல்லுவதற்கு இவைகள் உபயோகமாகின்றன. சமுத்திரத்தின் தரைமட்டத்தில் வசிக்கும் மீன்களுடைய சிறகுகள் இப்படி நீண்டு இருக்கும். சில மீன்களுடைய மோவாய்க்கட்டை, தாடைச் சிறகு களும் இப்படி இருப்பதுண்டு.

சில மீன்களின் சிறகுகள் நன்ருக வளர்ந்திருக்கும்; சில சிறி யனவாகவே இருக்கும். அநேகமாகச் சிறகுகள் மெல்லிய கெட்டி யான எலும்புகளால் அமைக்கப்பட்டிருக்கும். வாத்து, தவளை இவைகளின் கால்களில் இருப்பதுபோல் சிறகுகளின் இடையே மெல்லிய தோல் ஒட்டிக்கொண்டிருக்கும். சாதாரணமாகச் சிறகு கள் பார்வைக்கு விரித்த விசிறிபோல் இருக்கும். கானங்கொளுத்தி (மாகரீல்), கவலை (ஸார்டின்), கெளுத்தி (காட்மீன்) இவைகளின் சிறகுகள், உடம்பின் இருபக்கமும் மூடின விசிறிபோல் அமைக்கப் பட்டிருக்கின்றன. சுருமீன், நாய்மீன் இவைகளுடைய சிறகுகள் தடித்துச் சதைப்பற்று உள்ளனவாக இருக்கும். பொட்டுமீனின் சிறகுகளில் அழகிய பொட்டுக்கள் அமைந்திருக்கும். வண்ணாரப் பூச்சிமீனின் சிறகுகள் பார்வைக்கு வண்ணாரப்பூச்சியின் இறகுகள் போல் இருக்கும். சிலவிதத் தட்டைமீன்களுடைய சிறகுகள் ஒழுங் காக ஜதையாக இருப்பதில்லை; அவை உடம்பு எங்கும் அமைக்கப் பட்டிருக்கும்.

சில மீன்களுடைய வாலின் சிறகு பிளவுபட்டு இரண்டாக இருக்கும். சில ஒன்ருகவே இருக்கும். சில மீன்களின் வாலின் சிறகு பகைவர்களுடன் சண்டைபோட ஆயுதமாக உபயோகப்படு கிறது. மனிதர் நிறைந்த பெரிய படகுகளைக்கூட, திமிங்கிலம் போன்ற மிகவும் பெரிய மீன்கள் தங்கள் வாலினுல் தூக்கிக் கவிழ்த்துவிடும். சுருமீன், நாய்மீன் இவைகளுடைய வாலின் சிறகு, சதை திரண்டு தட்டையாகவும் சிறிது நீண்டும் இருக்கும். திருக்கை மீன் வாலின் சிறகு உருண்டையாகவும் கடினமாகவும், 3 அல்லது 4 அடி நீளமுள்ளதாகவும் இருக்கும். திருக்கைமீன் வாலின் சிற கில் ஒரு விசேஷம் உண்டு. ஒரு விஷமுள் எலும்பு அதில் அமைக் கப்பட்டிருக்கிறது. அந்த மீன் அந்த முள்ளினுல் பகைவர் களைக் குத்திவிடும். கை கால்களினுல் நாம் நம்மைக் காத்துக் கொள்ளுகிறோம். மீன்களுக்கு இந்த முள் எலும்புகளைத் தற்காப் புக்குச் சுவாமி கொடுத்திருக்கிருர். சில மீன்களின் வாயின் அரு கில் இருக்கும் மீசை போன்ற மெல்லிய முள் எலும்புகளும் இதைச் சேர்ந்தனவே.

செவுள் அல்லது சுவாசக் கருவி

செவுள்கள் மூலமாகவே மீன்கள் மூச்சு விடும். செவுள் பார்வைக்கு சுருக்குப்பிடித்தாற்போல் இருக்கும். ஒரு பக்கத்துக்கு நாலு செவுள் இருக்கும். பின் பக்கம் துவாரம் உள்ள செவுள் மூடி இவைகளை மூடிக்கொண்டிருக்கும். வாயினுல் ஜலத்தை இழுத்து, அதைச் செவுள் அறைகளுக்கு மீன் அனுப்பும். அங்கு, ஜலத்தில் உள்ள நல்ல காற்றுனது இரத்தக் குழாய்களால் கிரகிக்கப்படும். கெட்டகாற்று வெளியே விடப்படும். இப்படியாக மீன்கள் செவுள்களால் மூச்சு விடுவதைக் குமிழ் அடிப்பது என்று சொல்லுவார்கள்.

(தொடரும்)



மனித உடலிலுள்ள ரஸாயனப் பொருள்கள் :—சமீபகாலத்துக்கு முன்பு காக்ஸ்டன் ஹாலில் பிரசங்கம் செய்த டாக்டர் தாமஸ்லாஸன் என்பவர் மனித உடலிலுள்ள இரசாயனப் பொருள்களைப்பற்றிப் பின்வருமாறு கூறினார். 'மனிதனுடைய உடலானது சராசரி 140 பவுண்டு கனமுள்ளது. அதில் காணப்படும் இரசாயனப் பொருள்களைக் கடையில் வாங்கினோமானால் ஐந்து ஷில்லிங்குக்கு வாங்கலாம். மனிதனுடைய உடலில் சுமார் 10 காலன் ஜலம் இருக்கிறது ; 7 ஸோப்புக்கட்டிக்குப் போதுமான கொழுப்பு இருக்கிறது ; 9000 காகிதப்பென்சிலுக்குப் போதுமான கரிப்பொருள் இருக்கிறது ; 2200 தீக்குச்சிகளுக்குப் போதுமான பாஸ்பரஸ் இருக்கிறது ; ஒரு வேளை மருந்துக்குப் போதுமான மக்னீசியம் இருக்கிறது ; ஓர் ஆணி செய்வதற்கு வேண்டிய இரும்பு இருக்கிறது; ஒரு கோழிக் கூட்டுக்கு அடிக்கப்போதுமான சுண்ணாம்பு இருக்கிறது; ஒரு நாயின் மீதுள்ள உண்ணிகளைத் தொலைப்பதற்குப் போதுமான கந்தகம் இருக்கிறது. ஆக மொத்தம் விலை சுமார் ஐந்து ஷில்லிங்.' நமது நாட்டினர் ஆங்கிலேயரைக் காட்டிலும் உடலளவிலும் கனத்திலும் குறைந்தவர்கள். ஆதலால் நம் தேசத்தாருடைய உடலிலுள்ள இரசாயனப் பொருளின் விலை இன்னும் குறைவு.

அ.

மிருகங்களின் கர்ப்பகால அளவு :—பூனை—50 நாள் ; நாய்—50 நாள் ; பன்றி—115 நாள்; ஆடும் வெள்ளாடும்—150 நாள்; பசு—285 நாள்; எருமை—310 நாள்; குதிரை—345 நாள் ; கழுதை—380 நாள் ; யானை—615 நாள் என்று பி. எஸ். பார்த்தஸாரதி ஐயங்கார், சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் எழுதுகிறார்.

டில்லி எருமை :—'உலகிலுள்ள எல்லா எருமைகளிலும் டில்லி எருமையே மிகவும் பெரியது. அதிகப் பால் கொடுப்பது. ஒவ்வோர் எருமையும் சுமார் 1000 பவுண்டு எடை இருக்கும். டில்லி எருமை நம் எருமைமைகளைப் போல் இருப்பதில்லை. இதன் கொம்புகள் ஆட்டுக்கிடாயின் கொம்புகளைப் போல் சற்றுச் சுருண்டு வளைந்திருக்கும். சிற்றானைகளைப் போல் பருத்துக் கறுத்து உருண்டிருக்கும். சில டில்லி எருமைகளுக்கு மடியில் ஐந்து முலைக்காம்புகள் உண்டு. எல்லாவற்றிலிருந்தும் பால் வரும். டில்லி எருமைகள் நாள் ஒன்றுக்கு 12 மதராஸ் பக்காப்படி கூடப் பால் கொடுக்கும். இப்போது அநேக சர்க்கார்ப் பண்ணைகளிலும் பட்டாளங்களிலும் இந்தியா முழுவதிலும் டில்லி எருமைகளை வளர்க்கின்றனர். சென்னைப்பட்டணத்தில்கூட, கோட்டை மைதானத்தில் இவைகள் மேய்வதை அநேகர்

பார்த்திருக்கலாம். சாதாரணமாய் ஒரு டில்லி எருமை, கான்பூர் முதலிய இடங்களில் 70 முதல் 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

சுதேசமித்திரன்—வாரப்பதிப்பு.

சதுரகராதி :—வீரமாமுனிவர் (Father Constantius Joseph Beschi S. J. 1680—1747) தஞ்சாவூர் ஜில்லா காவலூரில் சதுரகராதி என்னுஞ் சிறந்த நூலை, கி. பி. 1732-ல் எழுதிமுடித்தார். இவர் இந்நூலை எழுதுவதற்குமுன் செந்தமிழ் அகராதிகள் சில நூற்பாவில் இருந்திருப்பினும், இது தமிழ்கற்க விரும்பும் பிறநாட்டவர்க்கு மிக்க பலன்தருவதாய் இருக்கிறது. இவ்வகராதியைப் பின்பற்றியே பெப்ருசியஸ், ரட்லர், வின்ஸ்லோ முதலிய மேல் நாட்டவரும் பல கீழ் நாட்டவரும் ஏனைய பேரகராதிகளை எழுதியிருக்கிறார்கள். இத்தாலிய தேசத்தவரான இந்தத் தைரிய சந்நியாசி கோவை, கோளம், மதுரை, ஐயம்பேட்டை, குருக்கள்பட்டி, கல்லிடைக்குறிச்சி முதலிய பலவிடங்களில் வசித்து, பல தமிழ் வித்துவான்களிடம் கல்வி பயின்று, கொடுந்தமிழ் செந்தமிழ் ஆராய்ந்து, புலமைவாய்ந்து, இருபத்தேழு தமிழ்நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றுள் சதுரகராதி இருநூறாண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது. இது நெடுங்காலம் அச்சேறாமல் இருந்தபடியால், தமிழறிஞர் பலர் இதனைப் பனையோலையிலும் கறடாக்காகிதத்திலும் எழுதிப் பேணிவந்தனர். அத்தகைய ஏடுகளை ஸ்டாக் ஹோம், பாரீசு, புதுச்சேரி, சென்னை, சீகாழி (சிதம்பரநாதமுதலியார் புத்தகசாலை) முதலியவிடங்களில் இன்றும் காணலாம்.

நமது நாட்டில் முதல்முதல் அச்சுக்கூடம் 1712-ம் ஆு தரங்கம் பாடியில் ஸ்தாபிக்கப்பெற்றது. அவ்வச்சுக்கூடத்துக்கு ஓர் அச்சியந்திரமும் நூறு ரீம் காகிதங்களும் இங்கிலாந்திலிருந்து வந்தன. தமிழ் எழுத்துக்கள் ஹல்லே பட்டணத்தில் முதல்முதல் வார்ப்பிக்கப்பட்டுவந்தன. 1746-ம்ஆுத்தில் முதல் முதல் பொறையாற்றில் காகிதங்கள் செய்யப்பட்டன. அது செய்யப்பட்ட இடத்துக்கு இன்றும் கடுதாசிப்பட்டறை என்று பெயர் வழங்கும். அதுமுதலாகப் பந்தணைநல்லூர் முதலிய சுற்றுப்பக்கங்களிலும் அத்தொழில் பரவிற்று. சதுரகராதி முதல் முதல் சென்னைத்துரைத்தன கலாசாலையாரால் எல்லிஸ், ரிச்சர்டு கிளார்க்கு இவர்களால் 1819-ம் ஆுத்திலும், பிறகு கிரீர்சன் துரையவர்கள் சொல்லுகிறபடி (Linguistic Survey of India, Vol. IV) 1827-ம் ஆுத்திலும், ஸ்மித் அவர்களால் 1835-ம் ஆுத்திலும், பிறகு 1845, 1848, 1860, 1872, 1875, 1880 முதலிய பல ஆண்டுகளிலும் அச்சில் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு இருநூறு ஆண்டுகளாக இவ்வகராதி வழங்கி வருகிறது.

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

எம். வி. சி:— இங்கிலாந்திலே நெசவுத்தொழிலுக்குப் பெயர் போன மான்செஸ்டர் நகரத்திலே மெட்ராபாலிடன்விக்கெர்ஸ் என்ற தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. இதன் கியாதியைத் தெரிந்து கொள்ளாதவர் இக்காலத்தில் குறைவு என்றுதான் கூறவேண்டும். உயிரளிக்கும் மழைத்துளிகளை

வருஷிக்கும் மேகத்தைப்போல் உயிரை மாய்க்கும் வெடிகுண்டுகளைப் பொழிகின்ற மெஷீன்கள் (Machine guns) செய்வதில் இதுமிகவும் பெரிய பெயர்பெற்று இருக்கிறது. இக் கம்பெனியின் தொழிற்சாலையில் இவ்வகையான வேலைகளுக்கு உபகாரமாகவிருக்கும்பொருட்டு எப்பொழுதும் பலவிதமான ஆராய்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கும். இங்கே நடந்த ஆராய்ச்சிகளின் பயனாக புதியஉலோகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று டெய்லி ஹெரால்டு பத்திரிகை கூறுகிறது. இந்த உலோகத்துக்கு இன்னும் ஒழுங்காக நாமகரணம் செய்யவில்லையாம். தற்போது அதற்கு எம். வி. சி. என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது மெட்ராபாலிடன் விக்கேர்ஸ் கம்பெனி என்னும் கம்பனியின்பெயரின் முதலெழுத்துக்களால் அமைந்த பெயரே யன்றி வேறல்ல. இந்த உலோகமானது மிகவும் விந்தையானது; ஆச்சரியகரமான குணங்களுள்ளது; அலுமினியம் கலந்தது; ஆயினும் அதைக் காட்டிலும் கனம் குறைந்தது வார்த்த இரும்புபோன்ற வலிவுள்ளது, ஆனால் அதைப்போல் எளிதில் உடைந்து போகாது. குளிர்ந்திருக்கின்ற நிலைமையிலேயே இதை வட்டமாக வளைக்கமுடியும்; இதைத்தறையவோ, காய்ச்சி அடிக்கவோ, உருட்டவோ, நீட்டவோ, கம்பியாக இழுக்கவோ, கயிறுபோல் பின்னி முறுக்கவோ முத்திரையிடவோ கூடும். கடலின் உப்பு நீரும் இதற்கு ஒரு கெடுதலும் செய்கிறதில்லை. இதுவெயில்காலத்திலும் மழைகாலத்திலும் துருப்பிடிக்காமல் பளபளவென்று இருக்கிறது. பித்தளையைக் காட்டிலும் விலையில் மலிவு. இதனை இயற்றுவதற்கு வெகுகாலமாகப் பாடுபட்டு வந்திருக்கின்றனர். இப்பொழுதுதான் அவர்கள் நீண்டகாலமாகச்செய்த முயற்சியானது கைகூடிற்று. இதைச் சுமார் 1000 மணி நேரம் இடைவிடாமல் உலோகசாஸ்திர நிபுணர்கள் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தினர். அவற்றால் இதன் குணங்களை நன்கு அறிந்து கொண்டனர்.

அதன்மேல், இப்பொழுது பிரிட்டிஷ் கப்பற்படை அதிகாரிகளும் ஆகாயவிமானப்படை அதிகாரிகளும் இந்த உலோகத்தை உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ வழிகளிலும் இப்புதிய உலோகமானது பயன்படு மென்பதற்கு ஐயமில்லை.

அ.



மகாபலிபுரம் [Mahabalipuram or Seven Pagodas by D. R. Fyson: Publishers, Higginbothams, Madras 1931. Pages 31.] இச் சிறுபுத்தகமானது மகாபலிபுரம் போக உத்தேசிப்பவர்க்கு உதவிபுரியும்படியாகவும் அவ்வழகிய இடத்திற்குப் போய்வந்ததன் அறிகுறியாகவும் இயற்றப்பெற்ற ஒரு சிறிய ஆங்கில நூல். இதில் அவ்வூரின் சரித்திரமும் அங்கே பார்க்கத் தகுந்த சிற்பங்களும் அவைகளை யொட்டிய கதைகளும் எளிய நடையில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. கோயில்கள், மண்டபங்கள், துவாரபாலகர்கள், விக்கிரகங்கள், இன்னும் மற்றுமுள்ள சிற்பங்கள் ஆகிய இவைகளிற் பலவற்றின் சித்திரங்களும் நேர்த்தியான மாதிரியில் கையால் எழுதப்பட்டு அக் கையெழுத்துப் பிரதிகளினின்றும் அச்சிடப்பட்டிருக்கின்றன. நல்லகாகிதத்தில் நேர்த்தியாய் வெளியிடப்பட்டிருக்கிற இச்சிறுநூலைப் படிப்பவர் யாவரும் சந்தோஷிப்பார்களென்பது நிச்சயம். இது சரித்திர நூலாக இயற்றப்பெருவிடினும், கி. பி. 1023 முதல் 1064 வரை இராஜராஜ தேவ வென்ற பெயருடன் ஒரு சோழ அரசன் அரசாண்டானென்றும் அவ்வரசனுடைய வெற்றிகள் கடற்கரை யோரத்திலிருக்கும் ஜலசயனமென்னும் கோயிலில் உள்ள ஓர் சாஸனத்தால் அறியக்கிடக்கின்றனவென்றும் இதில் கூறப்பட்டிருப்பது (பக்.29) ஒரு வியப்பேயாகும். சோழவரசராகிய முதலாம் இராஜராஜன் காலம் கி. பி. 985 முதல் 1044 வரை ஆகும்; ஜலசயனத்துச் சாஸனமும் அவனதுதான். 'திருமகள் போல' என்னும் தொடக்கத்தையுடைய மெய்க்கீர்த்தியை அது பெற்றுள்ளது.



க. அ. நீ.



கலைமகள்

கலைமகள் வணக்கம்

ஊ. சா. வேங்கடராம ஐயர்

நேரிசையாசிரியப்பா

உயிரொருங் காக்குஞ் செயிர்தீர் மலரோன்
மனையே கலைகட் கனையே நாற்கவி
பாடுந் திறலொடு கூடிய புலவோர்
உலகக் கடன்மாட் டிலகும் பொருணீர்
முகந்தணி பெறுவான் றகுந்தவா றமைத்துச்
சொல்லுஞ் சிறந்த நல்லியல் வாய்ந்தொளிர்
கவிமழை சிந்தக் கண்டுளங் களிக்கும்
கலாவ மயிலே நிலாவி னெழிலே
போன்றொளி பரப்பு மான்றசீ ரார்ந்த
வெண்டா மரையிடங் கொண்டருள் வித்தகி
செந்தா மரையிலு வந்தமர்ந் துறையும்
செல்விக்கு முற்றும் புல்லினின் றகலாச்
செல்வமீந் தருளுவ தொல்வதொன் றன்றென்
றுன்னிநின் றுலகோர்க் கந்நலம் புணர்ப்பான்
வேண்டியாய்ந் தழியா தீண்டிய புகழே
தருமுயர் கல்விப் பேறு மொருபெருஞ்
செல்வமீந் தருளுந் தொல்புகழ் வல்லீ
அன்பருக் குயர்பே ரின்புசெய் தாயே
இன்பினி தளித்தா ளன்பறி வெனைத்தும்
கொள்ளா தமைந்து வெள்ளையா யிலங்கும்
என்னுளக் கோயிலி லின்னருள் சுரந்து
மேவியாண் டருளுந் தேவிநா யடியேன்
மண்டலம் புகழுந் தண்டமிழ் மொழியாற்
போற்றின னஃதுவந் தேற்றாய்
நாற்றிசை போற்றற் கேற்றவா றருளே.



ஸரஸ்வதி

திருச்சேறை குடிக்கந்தாடை கோ. ஆராவமுதன்

நம் எதிர் விளங்கும் உருவம் 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' யுடையதாம். இவ்வுருவம் மைசூர் ராஜ்யத்தில் சாமராஜநகர மாகாணத்தில் உள்ள பாகளே என்னும் சிற்றூரில் எட்டு அல்லது ஒன்பது நூற்றுண்டுகட்கு முன்னர் இருந்த சிற்பியின் கைவேலை; அச்சிற்றூரைப் பேரூர் ஆக்கிய அணிகலம். சிலையில் வகுத்ததேனும் இது மருப்பில் அறுத்ததோ வெண்கலத்தில் வார்த்ததோ என்னும் ஐயத்தை நிகழ்விக்கும் அருமைவாய்ந்தது. உயர்ந்த சிற்பவேலைக்கு இதுவே இலக்கியம் என்று கூறுமாறு சிற்பி இதனை அமைத்துள்ளான்.

'பாவும் தொடையும் பதங்களும் சீரும் பல விதமா மேவும் கலைகள் விதிப்பாளை'க் கல்லில் உருவமைத்தல் எளிது அன்று.

தொன்மையான ஆகமங்களும் 'சமயந்தொறும் நின்ற தையலின்' உருவத்தைப் பல்வேறுவிதமாகக் கூறுகின்றன. அவள் 'வந்து என் மனத்தே இடம் கொண்டாள்' என்று எண்ணங்கொண்ட புலவர்களும் தத்தம் மனத்திற் கண்ட வடிவை வேறுவேருகக் கூறுகின்றனர்.

> "புத்தகம் அக்க மாலை வராபயம் பொருந்து கையாள்
> முத்தணி அணிவாள் வெள்ளை முளரிஆ சனத்தாள் மண்ணில்
> சத்தமோ டத்தம் கண்ட தவளமெய் வாணி வேதா
> உத்தம மனைவி வெண்தூ சுடையவள்"

என்றனர் புலவர் ஒருவர்.

> "புத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
> வைத்த கமண்டலமும் வன்னிகையும்-முத்து
> வடம்கொண்ட பூண்முலையாள்"



ஸரஸ்வதி.

என்றனர் மற்ரெருரு பெரியார்.

'என் உள்ளத்தின் உள்ளே இருப்பாள்' என்று நம்பிய நற் புலவரும் 'எண் எண் கலை மடந்தை'யின் பேரெழிலைப் பெருக ஓத இயலாதவராய், 'தூய உருப் பளிங்கு போல்வாள்' எனச் சுருங்கவே கூறிவிட்டனர்.

மனத்தில் எழும் எண்ணத்தை எல்லாம் அவ்வண்ணமே காட்டும் பளிங்கை ஒத்த செந் நாத்திறம் மிக்க புலவோரின் பா வன்மையே இவ்வாறு தயங்கிற்று எனின் சிற்றுளி கொண்டு கல்லைச் செதுக்கும் சிற்பியால் அவ்வழகை அமைக்கவும் இயலுமோ ?

"படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்"

கல்லில் காட்டல் ஆகுமோ ? அன்றி,

"வெள்ளைக் கலைஉடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப் பாளே"

வெள்ளைக் கல்லில் உருப்படுத்திய போதிலும் அப் பெண், தெய்வப் பெண் என்று சற்றேனும் மயங்க நேருமோ ?

கல்வியின் தூய்மையும் கலைகளின் பெருமையும் அவைகட்கு உயிர் நிலை ஆகிய சத்தியத்தின் வன்மையும் ஒருங்கே பொலிய இவ் வுருவத்தை அமைத்துள்ள சிற்பியின் திறமை நாம் பாராட்டற் பாலதே.

இவ்வம்மையை 'அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற் கல்லும் சொல்லாதோ கவி' என்று அறைந்த புலவர் பெருமான் போலவே இச் சிற்பியும் சலியாது துதித்தவனே என்பது திண்ணம். அவ்வாறு மெய் அடிமை பூண்டவர்க்கும் பொய்யாப் பயன் உண்டு என்பதற்குக் காளமேகப் புலவரே நற்சாட்சியாவர். 'அரி ஆசனத்தில் அரசரோடு என்னைச் சரி ஆசனம் வைத்த தாய்' என்று அவர் கூறியுள்ளதைத் தமிழ் நாட்டார் மறத்தல் இயலாது.

குழந்தைகளுக்கு ஸங்கீதம் கற்றுக் கொடுக்கும் முறை

பவானி ஸ்வாமிநாதன்

நமது வீடுகளில் பாட்டு விஷயமாகப் பெரியோர்கள் ஆயிரக் கணக்காகப் பணத்தைச் செலவழித்தும் நூற்றுக்கு எண்பது குழந்தைகளுக்குக்கூடச் சரியாகப் பாட வருவதேயில்லை. குரல் குயிலைப்போலிருந்தால் தாளம் இல்லை. தாளம் இருந்தால் தொண்டை புரளுவதில்லை. ஸ்வரஞானம் மிக்க அபூர்வமாக ஏதோ சிலருக்கு உண்டாகிறது. சுருதிஞானம், ஸ்வரஞானம், தாளஞானம், குரலின்மேன்மை ஆகிய எல்லாம் ஒன்றாய் ஒரு குழந்தைக்கு அமைவது 'அதிர்ஷ்டம்', 'தலைஎழுத்து', 'கொடுத்துவைத்தது' என்று பெரியோர்கள் தலையை ஆட்டிக்கொண்டு சொல்லிவிடுகிறார்கள். இது சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

ஸ்வர ஞானமில்லாத ஒருவனுக்கு, சிறுவயதிலேயே சரியான மனோதத்துவ (*Psychological*) முறைப்படி பாட்டுச்சொல்லிக் கொடுத்திருந்தால், அந்த ஞானம் வராமலா போய்விடும்? சுருதியில் சேர்ந்து பாடுவது, தாளத்துடன் தப்பாமல் பாடுவது, கஷ்டப் படாமல் சுகமாய்ச் சாரீரத்தை எச்சுஸ்தாயி மந்தரஸ்தாயி இவைகளில் எட்டவைத்து, கேட்போர் மனத்தை இளக்கி உருக்கத்தக்கதாகச் செய்துகொள்வது, ஒரு பையிலிருந்து உயர்ந்த முத்தை உதிர்ப்பதுபோலத் தொண்டையிலிருந்து 'ரவை' ஜாதி ஜில்லென்று உதிரவைப்பது ஆகிய இவையெல்லாம் செப்பிடுவித்தையல்ல. இவற்றையெல்லாம் முதலிலிருந்தே சிறிது சிறிதாய்க் கற்பித்தால் கொஞ்சம் புத்திசாலித்தனமும், தேகபலமுமுடைய குழந்தைகளுக்கு வருவதற்குச் சந்தேகமேயில்லை.

ஸங்கீதநாதமும் மூளையும்

ஸங்கீத நாதம் காது, கண் இவை இரண்டின் வழியாகவும் மூளைக்கு எட்டுகிறது. வாய்ப்பாட்டு, வாத்தியப்பாட்டு இவைகளைக் கேட்டு ஸங்கீத நாதத்தை அறியலாம். கண் இழந்த குருடன் ஒருவன் கேள்விமூலமாகவே ஸங்கீதத்தைப்பற்றிய அபிப்பிராயங்களை அறிந்துகொண்டு அதனுடைய பிரயோஜனங்களையும்

பெறலாம். இதற்கு உதாரணமாகப் புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள் அவர்களைச் சொல்லலாம்.

மேலும், ஸங்கீத ஞானத்தைப் புஸ்தகத்திலிருந்து கண்ணுற் பார்த்துப் படித்தும் அடையலாம். ஜெர்மனி தேசத்திற் பிறந்த பிரசித்தி பெற்ற பீதோவன் (*Beethoven*) என்ற ஸங்கீதவித்வான் முழுச்செவிடராயிருந்தபோதிலும், தம் கண்களினால் பாட்டுக்களைப் பார்த்துப் படித்தும், தாம் புதிது புதிதாய் மிக உயர்ந்த ரத்தினங் களைப்போன்ற பாடல்களை எழுதியும் தாம் ஆனந்தக்கடலில் மூழ்கிப் பிறரையும் மூழ்குவித்தார். இவரைப்போன்றவர்கள் கண்களா லேயே பார்த்துப் புதியபாட்டுக்களைப் படிப்பதற்கு முடிந்ததென்றால், அப்பாட்டுக்கள் எவ்வளவு சிரத்தையுடன் கோடு, புள்ளி முதலிய அடையாளங்களை உபயோகப்படுத்தி எழுதப்பட்டிருக்கவேண்டு மென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

நமது வழக்க மென்னவென்றால், கண்ணுக்கு அதிக வேலை கொடுக்காமல், காது வழியாகவே ஸங்கீதத்தை ஏற்றுவதாகும். இதனுடன் கண்ணுக்கும் கொஞ்சம் அதிக வேலைகொடுத்துச் சுய முயற்சிக்கும் இடங்கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும்.

பாலரின் இயற்கை

குழந்தைகளுக்குச் சுமார் 4½ அல்லது 5 வயது ஆகும் காலத் தில், ஸங்கீதம் கற்பிக்கத் தொடங்கலாம். இந்த வயதில் விளையாட்டு யுக்தி அதிகம். இது சுறுசுறுப்பாய் ஓடித்திரியும் காலம்; புதிதான உணர்ச்சிக்காக அலையும் காலம். தொடர்ச்சியாக அரை மணி நேரம் கூட குழந்தைகளுக்கு ஒரேவிதமான விஷயத்தைக் கவனிக்க முடியாது. ஆகையால் இப்பருவத்தில் ஐந்து நிமிஷத்துக்கொருமுறை நாம் அவர்களுக்குச் சொல்லுவதை மாற்றிப் புதிதுபோலத் தோன் றும்படி செய்துகொண்டிருக்கவேண்டும். விளையாட்டுக்கும் அவ காசம் கொடுக்கவேண்டும். ஆனால், விளையாட்டு மனப்போக்குகளை அனுசரித்து இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது ஓர் உதாரணத்தைக் கூறுவேன்: ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தியை எடுத்துக்கொள்வோம். அவள் பெயர் ஜயா என்று வைத்துக்கொள்வோம். ஜயா நாலு வயதிலிருந்தே பள்ளிக் கூடம் போக ஆரம்பித்து இப்பொழுது பாலர்வகுப்பைத் தாண்டி முதல் வகுப்பிலிருக்கிறாள். பாட்டு நன்றாய்ச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று அவள் பெற்றோர்க்கு ஆசை. அதன்பொருட்டு வேண்டிய பணம் செலவு செய்யவும் தயார். ஆதலால் அவர்கள் செய்த ஏற்பாட்டின்மேல் ஒரு வயதான உபாத்தியாயர் வந்து

வீணை கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். பத்து நாளில் குழந்தை மெலிந்து, கைவீங்கி, விரல்கள் அறுபட்டு, 'பாட்டு வாத்தியார் வருகிறார்' என்றால் ஓடி ஒளிய ஆரம்பித்துவிட்டாள்.

இதைப்பார்த்து, வேறோர் உபாத்தியாயரை நியமித்தார்கள். அவர் ஆர்மோனியம், வாய்ப்பாட்டு இரண்டையும் ஆரம்பித்து, குழந்தையின் இனியகுரலை கீச்சுமூச்சென்று ரெயில்வே எஞ்சின்போல விகாரம் பண்ணிவிட்டார்.

பெற்றோர், அவரையும் நிறுத்தி, பிறகு என்னசெய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் வந்து தாம் குழந்தைக்கு ஒரு புதியவழியில் பாட்டுச் சொல்லிக்கொடுப்பதாகச் சொன்னார். அவர் எல். டி. வகுப்பில் மாண்டிஸோரி, பிராக்பெல், பெஸ்துலோஸி (*Montessori, Frocbel, Pestolozzi*) இவர்களைப் பற்றிப் படித்திருந்தபடியால் ஸங்கீதப்பயிற்சிக்கும் இந்த மூவருடைய முறைகளை உபயோகிக்கலாம் என்று எண்ணங்கொண்டவர். ஆகையால், ஜயாவின் பெற்றோர்களிடம் தாம் தம் இஷ்டப்படி ஜயாவுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

புதுமுறை

அவர் ஜயாவைத் தோட்டத்திற்குக் காலை ஏழு மணிக்கு அழைத்துச் சென்று அங்கே சற்றுநேரம் ஒருபத்து நிமிஷம் பந்து, இழுக்கும் வண்டி இவைகளை வைத்துக்கொண்டு குழந்தையைப் போலத் தாமும் அவளுடன் விளையாடிவிட்டுப் பிறகு, நிழலில் அவளுடன் உட்கார்ந்து கொண்டார். அங்கு ஜயாவுக்கு அவள் பொம்மையைத் தூங்கப்பண்ணுவதற்காக வார்த்தைகள் சுலபமாய் அமைத்துள்ள ஒரு சின்னப் பாட்டுப்பாடினார். பொம்மை தூங்கி விட்டது. அந்தப்பாட்டை ஜயா மறுநாளே தான் பாட ஆரம்பித்து விட்டாள். பிறகு, பொம்மையைச் சாப்பிடவைக்கும் பாட்டு, குளிக்கவைக்கும் பாட்டு, அதன் உடுப்புகளையும் நகைகளையும் குறித்த பாட்டு இவைகள் ஒவ்வொன்றாய் ஜயாவுக்குச் சீக்கிரத்தில் கற்றுக்கொடுத்துவிட்டார். ஏனென்றால், பாடாவிட்டால் பொம்மை சாப்பிடாதே! தூங்காதே!!

இப்படிச் சிறிய பாட்டுக்கள் வந்த பின்பு, உபாத்தியாயர் ஸ, ரி, க, ம, ப, த, நி, என்ற ஸ்வரங்களை அழகிய அட்டைகளில் வித விதமான வர்ணங்களில் எழுதி வைத்துக்கொண்டு அந்த எழுத்துக்களை அவளுக்குக்காட்டி அவற்றின் நாதத்தையும் பாடிக் காட்டி அவள் ஸப்தஸ்வரங்களை ஒரு சுருதிக்குச் சரியாகப்பாடும்படி செய்தார். பின்பு, அழகிய ஒரு வீணையைத் தாம் வைத்து வாசித்துக்

கொண்டு ஜயாவைத் தம் கையைப் பார்த்துக்கொண்டே பாடச் சொன்னார். இடையில் சுருதியை அவளெதிரிலேயே கொஞ்ச நேரத்துக்கொருதரம் கலைத்து விளையாட்டுக்காக, அவளையும் கலைக்கச் சொல்லுவார். பிறகு சரியாகச் சேர்ப்பார். பிருடையை ஒரு விதமாகத் திருப்பினால் தந்தி தளரும், இன்னமொரு விதமாகத் திருப்பினால் தந்தி கெட்டிப்பட்டு நாதம் உயரும் என்பது இந்த விளையாட்டால் ஜயாவுக்கு வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிட்டது. எடுத்த ஒரு சுருதிக்குச்சரியாய் ஸா, பா, ஸா பாடுவது அவளுக்கு ஒரு விளையாட்டாகப் போய்விட்டது.

இவ்வாறு இலகுவாய் அலங்காரம் வரை வாயில் பாடவந்தவுடன் ஜயாவுக்கு ஓர் அழகிய, இலேசான வீணைதருவித்து, அதைக் கற்பிக்கத்தொடங்கினார். முதலில் வலக்கை மீட்டு வந்தபிறகு இடக் கையால் ஸப்தஸ்வரங்களையும் முறையே மெதுவாக அமுக்கிக் கொண்டு மீட்டுவதையும் கற்பித்தார். பத்து நிமிஷந்தான் ஒரு பாடம்; அதற்கப்புறம் விளையாட்டு. ஒரு மாதத்தில் விரல் நுனிகள் கெட்டிப்பட்டுப் பழகிய பின் பாடம் பத்திலிருந்து இருபது நிமிஷ மாயிற்று. மூன்று நான்கு மாதத்திற்குப்பின் அரை மணி ஆயிற்று. இப்படிக் கொஞ்சங்கொஞ்சமாகக் காலத்தை அதிகப்படுத்திக் கொண்டுவந்தார்.

ஜயாவுக்குத் தாளங்களின் பெயரைச் சொல்லி, அதனதன் அங்கங்களுக்குத் தகுந்தாற்போலத் தேக அப்பியாசங்கள் (*Drill exercises*) சொல்லிக் கொடுத்தார். இப்பொழுது, ரூபக தாளம் என்றால், ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று இவர் சொல்ல, குழந்தை இரண்டடி இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு நாலடி முன்னுக்கு நடக்கும். இது ரூபகதாளப் பயிற்சி. இப்படிக் கையை ஆட்டுவதும், காலை ஆட்டுவதும், நடப்பதும், குதிப் பதும், ஓடுவதுமாக எல்லாத்தாளத்திலும் அப்பியாசங்கள் வந்து விட்டன. லயத்திற்குரிய காலநிதானமும் கூடவே வந்துவிட்டது.

ஸரிகம, ரிகமப, கமபத—என்று வரிசையாய்ச் சுலபமாக வரச் செய்வதற்காக, ஏழு ஜலதரங்கக் கிண்ணங்களை வைத்துக் குச்சியால் நாலு நாலு ஸ்வரங்களாகத் தட்டி விளையாடச் சொன்னார். ஸ்வர ஞானம் வரும்பொருட்டு அலங்காரங்களை அகாரமாகப் பாடச் செய்தார். அப்போது தாம் ஓர் ஆவர்த்தம், ஜயா ஓர் ஆவர்த்த மாக மாற்றி மாற்றிப் பாடும்படி பழக்கினார். அலங்காரங்களை அகாரமாய் இரண்டாங் காலத்திற் பாடுவது தொண்டை நன்றாகப் புரளுவதற்கு ஏதுவாயிருந்தது.

இந்த அலங்காரங்களையே சங்கராபரணம், தோடி, கல்யாணி, காமவர்த்தனி, கரகரப்ரியா என்னும் ராகங்களில் மாற்றி மாற்றிப் பாடிவந்ததனால், எந்த எந்த ராகத்துக்கு எந்த எந்த ரி, க, ம, த, நி பிடிப்பதென்று ஆறுமாதத்திற்குள் ஜயாவுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது.

கீதங்கள், சிறிய கீர்த்தனைகள் இவைகள் சொல்லிக்கொடுப்பதற்காக, ஸாஹித்தியத்தின் அர்த்தத்தைக் கதைபோல முன்னால் சொல்லி, பிறகு பாட்டு ஆரம்பித்தார். ஸ்வர ஸாஹித்தியம் சரியாக மனத்தில் ஒன்றுபட்டுப் பதியும்படி சில விளையாட்டுக் கருவிகளை ஜயாவுக்குக் கொடுத்தார். இப்பொழுது மலஹரிராகப் பிள்ளையார் கீதத்திற்கு—"மபதஸஸரி", "ரிஸதபமய", "தபமகரிஸ"—என்று இப்படி நீள அட்டைத்துண்டுகளில் எழுதிக் கும்பலாக வைத்து, "ஸ்ரீ கணநாத," "ஸிந்தூரவர்ண", "கருணாஸாகர", "கரிவதன" என்று இன்னும் சில அட்டைகளில் எழுதிவைத்து, ஜயாவை ஸ்வர ஸாஹித்திய அட்டைகளை ஒன்றுக்கடியில் ஒன்றாய்ச் சரியாகச் சேர்த்துவைத்துப் பாடிக்காட்டும்படி சொல்லுவார்.

பிறகு, வீணையில் வாசிக்கக்கூடிய கஷ்டமான பிடிகளில் ஒரு நாளைக்கு ஒன்றாக விளையாட்டுப் போல இப்பொழுதே கொடுத்து வந்தார். உதாரணமாக: 'த' வில் 'நி' பிடிப்பது வந்தவுடன், 'த' வில் 'ஸ' பிடிக்க ஒரு வாரத்தில் சரியாக வந்துவிட்டது. கீதம் வாசித்தாலும் அதிலேயே அபூர்வமான வீணைப் பிடிகள் இரண்டு மூன்று பிடிக்காமல் ஜயா வாசிக்கமாட்டாள்.

குழந்தைக்குப் பாட்டு வருவதோடு, புத்தி அநேக வழிகளில் விசாலிப்பதைக் கண்டு பெற்றோர்கள் களித்தார்கள். தேகஸௌக்கியத்திலும் ஜயாவுக்குக் குறைவேயில்லை.

உபாத்தியாயர் வருமுன் தானாகவே ஆசையுடன் வாத்தியம் வாசிக்கவோ, வாய்ப்பாட்டுப் பாடவோ வேண்டிய உத்ஸாகம் ஜயாவிற்கு உண்டாய்விட்டது. அதனோடு வீட்டுக்கு வருகிற நண்பர்கள் கேட்டபோது கூச்சமில்லாமல் பலமுறை பாடவேண்டிய சந்தர்ப்பங்களும் நேரிட்டபடியால் ஜயாவுக்கு அப்பியாஸத்திற்குக் குறைவேயில்லை. மற்றைப்படிப்புடன் பாட்டும், வீணை வாசிப்பதில் திறமையும் சுலபமாகவே வந்தன.

ஸங்கீதம் கற்பிக்க இஃது ஒரு முறை. இம்மாதிரி வேறு முறைகளும் இருக்கக்கூடும். பாலபோதகர்கள் இது விஷயமாகத் தம் அனுபவமுறைகளை எழுதித் தெரிவித்தால் பலருக்கும் மிக்க உபயோகமாயிருக்கும்.

சாஸ்திரம்

வழக்கமும் சூழ்வும்

பி. என். அப்புஸ்வாமி

மானுடராகிய நாம் அனைவரும் நாள்தோறும் வேளைதோறும் பற்பல காரியங்களைச் செய்து வருகிறோம். அவ்வாறே கீழ்த்தர உயிர் என்று நாம் கருதுகின்ற பிற உயிரினங்கள் எல்லாம் பற்பல செயல்களைச் செய்து வருகின்றன. அச் செயல்களில் சில, நாமும் அவையும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதன. இச் செயல்களை நாம் செய்யாமல் இருந்தால் நம்முடைய உயிரானது நிலைக்காது; நாமும் மடிந்து போவோம். வேறு சில செயல்கள், நாம் மேன்மேலும் இன்புற்று வாழ்வதற்கு உரிய காரியங்களேயன்றி நாம் உயிர் தரித்தற்கு அவசியமானவை அல்ல. இவற்றுள் முன்னவை பிறவியால் வருவன ; பின்னவை வழக்கத்தால் வருவன.

ஆகவே, ஓர் இனத்தாரோ, அல்லது ஓர் இனத்திற் பெரும் பகுதியைச் சார்ந்தாரோ, தம் பிறவித் தன்மையால் மட்டும், ஒரே வகையாய், அதிக வேற்றுமைகளின்றிக் காரியங்களைச் செய்து வருவதை அவருக்கு இயற்கை யென்று கூறலாம். ஓர் இனத்தில் ஒரு சிறு பகுதியைச் சார்ந்தாரோ, சிற்சில நாட்டினர் மட்டிலுமோ, அல்லது அவருள்ளும் ஒரு சிறு வகுப்பினரோ, அல்லது தனித்தனியான ஆட்கள் மட்டிலுமோ, ஒவ்வொரு நாளும் ஒரே ஒழுங்காகக் காரியங்களைச் செய்து வருவதை அவருக்கு **வழக்கம்** என்று கூறலாம். வழக்கம் என்பது பிறவியால் இயற்கையாகச் செய்துவரும் தொழில்களைக் குறிக்காது; செயற்கையால் அவரவர், பிறர் செய்து வருவதைப் பார்த்துப் பின்பற்றியோ, தமது சுய விருப்பத்தை மட்டிலும் கருதியோ, அல்லது வேறெந்தக் காரணத்தை முற்கொண்டோ, விசேஷமாகத் தனிவழியாகச் செய்து வரும் செயல்களையே குறிக்கும். இயற்கை பிறவியால் ஏற்பட்டது; அது பிறவி வாசனை. வழக்கம் ஒழுக்கத்தால், செயல்களால் வருவது ; அது செயற்கை வாசனை.

இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசமானது ஓர் உதாரணத்தால் விளங்கும். பசி என்னும் உணர்ச்சியைப் பெறுவதும் உணவை உண்பதால் அவ்வுணர்ச்சி நீங்குவதும் எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவானவை. பசி தீர உண்பது யாவருக்கும் இயற்கை. தாகம் என்னும் உணர்ச்சியைப் பெற்று அது தீருவதற்காக நீரைப் பருகுவதும் அவ்வாறே. ஆனால் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒன்றிரண்டு வேளைகளில் விசேஷமான தாக உணர்ச்சி உண்டாவதும், அப்படி எழுகின்ற தாகத்தைத் தீர்க்கும்பொருட்டுக் காபீ, டீ, கோக்கோ முதலிய விசேஷ பானங்களைப் பருகுவதும், அவற்றையே நாடுவதும் சிலரிடம் மட்டிலும் உண்டு. இவை ஒழுக்கத்தால், நாள்தோறும் செய்துவந்த செயல்களின் பற்றால், உண்டாவன; இவை அவருக்கு வழக்கம்.

இனி இங்குச் சூழ்வு (*Environment*=பரிஸரம்) எனப்படுவது, இவ் வுலகில் வாழும் ஒருவனைச் சுற்றி நிகழ்ந்து வரும் நிகழ்ச்சிகளையும், அவனைச் சூழ்ந்துள்ள பொருள்கள், மனிதர்கள், பிராணிகள் முதலியவற்றின் குணம் நிலை நடை உடை பாவனைகளையும் ஒருங்கு சேர்த்து ஒன்றாகக் குறிக்கும் மொழியாகும்.

ஒருவனுடைய சூழ்வும் வழக்கங்களும் அவனது நடை உடை பாவனை முதலிய யாவற்றையும் மாறுபடுத்தவல்லன, அவ்வாறே செய்கின்றன என்பன யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் பிறவிக் குணத்தின் (*Heredity*=வமிசார்ஜித குணம்) வலிமை எவ்வளவு? வழக்கங்களின் வலிமை எவ்வளவு? இவ்விரண்டில் எது மிகுதியான வலிமை பொருந்தியது? ஒருவனுடைய சூழ்வானது ஒருவனை எந்த அளவு மாற்றுகின்றது? என்னும் விஷயங்களைப் பற்றி இன்னும் வரையறுத்து நிச்சயமாகக் கூறுதற்கியலவில்லை. ஆதலால், பிரத்தியேகமான வழக்கங்களும் சூழ்வுகளின் மாறுபாடுகளும் பேதங்களும் எவ்வாறு எவ்வகையாக எவ்வளவு ஒருவனைப் (*Individual*) பாதிக்கின்றன? அவை இனத்தின்மீது (*Race*) எத்தகைய சக்தியைச் செலுத்தி வருகின்றன? என்ற வினாக்களை அறிவாளர் தம்மைத் தாமே அடிக்கடி கேட்டுக்கொண்டு அவ் விஷயங்களை மேன்மேலும் நுட்பமாய் ஆராய்ந்து அவ் வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேடி வருகின்றனர்.

ஒருவனைப் பார்த்த அளவிலேயே அவனது உடலினின்றும் உடையினின்றும் பேச்சினின்றும் கையாளும் கருவிகளினின்றும், அவன் இன்ன இனத்தான், இன்ன நாட்டான்; இன்ன தொழிலான் என்பவற்றைப்போன்ற விஷயங்களைப் பொதுவாக அறிந்து

கொள்ளுவது இயலும். நீண்ட கறுப்புச்சட்டையும் தலைப்பாகையும் அணிந்து கையில் நீண்ட காகிதக் கட்டைத் தாங்கி வெகு பரபரப்பாகப் பற்பல வேலைகளை ஓய்வொழிவின்றிச் செய்து வருபவன் போல் நடிக்கும் ஒருவனை வக்கீல் என்றும், நாடியறி கருவி (*Stethoscope*), சீதோஷ்ணமானி (*Thermometer*) முதலியவற்றை வைத்துக்கொண்டிருக்கும் ஒருவனை வைத்தியன் என்றும், கத்தரிக்கோலும் அளவு நாடாவும் உடையவனைத் தையற்காரன் என்றும், இதுபோலவே பலரை அவரவர் தொழிற்கு உரிய விசேஷ உடையாலும் கருவிகளாலும் நிச்சயிக்க முடியுமல்லவா? அம்மாதிரியாகவே, கணைக்காற்புறத்திலும் முதுகிலும் அல்லது மார்பிலும் தழும்புடைய ஒருவனது தொழில் மரம் ஏறுதல் என்பதையும், கைகளில் சிவப்பு நீலம் முதலிய நிறங்கள் ஏறியிருக்கும் ஒருவனது தொழில் சாயம் போடுவது என்பதையும், உடையின்மீது தோய்ந்திருக்கும் எண்ணெய் மெழுக்கால் ஒருவனது தொழில் எண்ணெய் ஆட்டுவது அல்லது விற்பது என்பதையும் சாதாரணமாக யாவருமே எளிதில் அறிந்துகொள்ளலாம். அதிநுட்பமான கவனமும் மிகக் கூரிய புத்தியும் ஊகமும் உள்ள சிற்சிலர், கூர்ந்து கவனிப்போர்க்கன்றிச் சாதாரணமாய் யாவர்க்கும் எளிதிற் புலப்படாத நுண்ணிய அடையாளங்களைக் கொண்டு இவன் பாடுபவன், இவன் வீணை வாசிப்பவன், இவன் எழுத்துவேலை பார்ப்பவன், இவன் 'டைப்ரைடிங்' அடிப்பவன் என்றெல்லாம் ஊகித்தறிந்து கொள்கின்றனர். ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய பிரத்தியேகமான செயல்களால் ஒருவனது உடலிலும் உடையிலும் நடையிலும் பாவனையிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அவற்றுள் சில வெளிப்படையாய் யாவர்க்கும் புலப்படுவன; சில நுணுகிக் கவனிப்போர்க்கே தோன்றுவன. ஷெர்லக் ஹோம்ஸ் என்னும் துப்பறி நிபுணனைச் சிருஷ்டித்த ஸர் ஆர்தர் கானன் டாயில் என்றவருடைய குருவாகிய டாக்டர் ஜோசெப் பெல் என்பவர் இவ்வகையான அதிநுட்ப கவனமும் கூரிய புத்தியும் உள்ளவர். அவரிடம் வைத்தியத்துக்கு வரும் ஒருவனைப் பார்த்து இரண்டொரு வார்த்தை பேசிய உடனே அவன் இன்ன ஊரான், இன்ன தொழிலான் என்று அவர் எளிதில் சொல்லி விடுவாராம். ஒருவன் பேசும் பேச்சிலிருந்து நாம் கூட அவனைப்பற்றி இவன் மலையாளி, இவன் தெலுங்கன், இவன் தமிழன், இவன் படித்தவன், இவன் படிக்காதவன் என்றெல்லாம் சொல்லுகிறோமல்லவா?

ஒருவன் வசிக்கும் தேசமும் புரிந்து வரும் தொழிலும் அவனைச் சிறிதளவோ பெரிதளவோ பாதிக்கின்றன. ஆகையால்

இடம் தொழில் முதலியன ஒருவனது நடை உடை பாவனைகளில் நன்கு புலப்படக் கூடிய மாறுபாடுகளை உண்டாக்குகின்றன என்பது மறுக்கமுடியாத விஷயம்.

மனித இனத்தை மட்டுமன்றி, மற்ற உயிர்ப் பிராணிகளையும் செடி கொடி முதலியவற்றையும் இவ்வாறே அவ்வவற்றின் வழக்கங்களும் சூழ்வும் மாறுபாடுகள் அடையச் செய்கின்றன. ஓர் இடத்திலுள்ள மரங்களின் கிளைகள் வீசிப் பரவுவது அங்கு வீசும் காற்றின் போக்கையும் அங்குள்ள நீர்வளநிலவளங்களையும் பொறுத்திருக்கிறது. ஒரேவகைச் செடியானது அமைதியான குளத்து நீரில் முளைத்த காலத்து ஒருவகையான இலைப் பரப்பையும், அலைவுற்று ஓடும் வாய்க்காலின் நீரில் முளைத்தபோது மற்றொரு வகையான இலைப் பரப்பையும் உடையதாகிறது. சமமான பிரதேசத்தில் முளைத்து வளரும் ஒரு செடியை மலைச் சாரலில் கொண்டு போய் நட்டால் அதன் புறத்தோல் தடித்துப் போகிறது. அத்தோலின்மேல் காணப்படும் மெல்லிய மயிர்போன்ற உறுப்புக்கள் அதிகமாகச் செறிந்து வளர்கின்றன. பொன்னொளி வீசும் அழகிய சிறிய மீன்களை இருண்ட இடத்தில் இரண்டு மூன்று வருஷ காலம் வைத்து வளர்த்து வந்தால், இருட்டில் அவற்றிற்குப் பயனில்லாத அவற்றின் கண்கள் குருடாகப் போய்விடுகின்றன. ஓடி ஆடி விளையாடிப் பருக்கும் நீர்நத்தைகளை நீந்தி விளையாடுதற்கு இடமில்லாச் சிறு இடத்தில் அடைத்து வைத்தால் அவை தமக்கு உரிய முழு வளர்ச்சியை அடையாது குறுகிப்போகின்றன. கூட்டுக்குள் அமைத்திருக்கும் சுழல் சக்கரத்தை இடைவிடாது சுற்றும்படி தாண்டப்படும் வெள்ளெலிகள் சாதாரணமாய்ச் செய்யும் வேலையைவிட மிகவும் அதிகமான வேலை செய்வதால் அவற்றின் இரத்தாசயம் (*Heart*) கல்லீரல் (*Liver*) சிறுநீர் ஊற்றுப்பை (*Kidney*) முதலிய உறுப்புக்கள் அளவிலும் கனத்திலும் சாதாரணமாய் இருப்பதைவிடப் பெரியனவாகின்றன. ஆதலால், உறுப்புக்கள் செய்துவரும் தொழில்கள் மாறுவதற்கும் சூழ்வின் தன்மைக்கும் ஏற்பப் பிராணிகளின் உடலும் உடலுறுப்புக்களும் பலவகையாய் மாறுபடுகின்றன என்பதில் ஐயமில்லை.

மாற்றங்கள் (*Modifications*) என்று சொல்லத்தகும் இவை யாவும் ஒவ்வொரு பிராணியும் தானாகவே சம்பாதித்துக்கொண்ட குணவேறுபாடுகளாகும். இவை புறநிகழ்ச்சிகளால் உண்டாகின்றன; உள்ளிருந்து தம் இயற்கைக் குணத்தால் வெளியே தோன்றுவன அல்ல. அன்னிய பதார்த்தம் தாக்குதலால் ஒரு பாத்திரத்தில்

உண்டாகும் அதுக்கல்கள் அல்லது நசுக்கல்களுக்கு இவற்றை ஒப்பிடலாகும். ஆகையால் இவற்றைப் புறத்தால் பிறப்பன அல்லது புறப்பிறவிகள் (*Exogenous*=பஹிர்ஜந்நியம்) என்று கூறலாம். இவை தம் இயல்பால் உள்ளிருந்து பிறப்பன அதாவது அகப்பிறவிகள் (*Endogenous*=அந்தர்ஜந்நியம்) அல்ல.

ஒவ்வொரு பிராணிக்கும் உறுப்புக்கும் ஒருவகையான விசேஷத் திறமை ஓர் அளவில் உண்டு. அதாவது, புறநிகழ்ச்சிகளால் அது தாக்கப்பட்டபோது உரு மாறி நிலைமை மாறித் தன்மை மாறிய போதிலும், அத்தகைய புறநிகழ்ச்சிகள் நின்றுபோனவுடன் அது தனக்கு இயற்கையான உருவம் நிலை தன்மைகளை மீண்டும் எளிதில் பெற்றுவிடுகின்றது. உதாரணமாக, நாய் வாலை நேராக்கவேண்டி மட்டை வைத்துக் கட்டினால் மட்டை இருக்கும்வரை நாய் வால் நேராக நிற்கிறது; மட்டையை எடுத்ததும் நாய் வாலானது மீண்டும் பழைய வளைந்த வடிவத்தையே எளிதில் பெற்றுவிடுகிறது. ஆயினும் சிற்சில வேளைகளில் இவ்வாறு தாமாக நிகழும், அல்லது செயற்கையால் நிகழ்த்தப்படும் புறநிகழ்ச்சிகள் தம்முடைய வன்மையின் மிகுதியால் அவை தாக்கும் உறுப்பிலும் உடலிலும் அவற்றின் உருவத்திலோ நிலையிலோ தன்மையிலோ அல்லது இவை அனைத்திலுமோ நிலையான மாறுபாடுகளைச் செய்து விடுகின்றன. உதாரணமாக, ஒரு ரப்பர்த் துண்டை இழுக்கும்போது அது நீளுகிறது; விட்டால் அது மறுபடியும் தன் குறுகிய வடிவத்தைப் பெற்றுவிடுகிறது. இந்தக் குணத்துக்கு எலாஸ்டிசிடி (*Elasticity*) என்று பெயர். ஆனால் ஓர் அளவுக்குமேல் அந்த ரப்பர்த் துண்டை இழுத்தால் அது அறுபடுகிறது; அல்லது மறுபடியும் தன் குறுகிய அளவாகச் சுருங்கமுடியாமல் நீண்டுவிடுகிறது. அப்பொழுது அது தன்னிலை யடைவரையை (*Limit of Perfect Recovery*) மீறி விட்டதென்றாவது, தன்னிலைகெடுவரையை அடைந்து விட்டதென்றாவது சொல்லலாம். அந்த வரையை மீறுதவரை அஃது எவ்வளவு மாறுபட்டாலும் மீண்டும் தன் சுயநிலையை அடைந்துவிடும். அந்த வரையைத் தாண்டிவிட்டால் அது தன்னிலை மாறி மீண்டும் அதனை அடையமுடியாமல் வேறொரு நிலையைப் பெற்று நிற்கும். ஒவ்வோர் உயிருக்கும் உறுப்புக்கும் அத்தகைய வரை ஒன்று உண்டு. மேற்கூறிய வகையாய் உறுப்புக்களும் பிராணிகளும் புறநிகழ்ச்சிகளால் ஓர் அளவு தாக்கப்பட்டு மாறுபாடுகள் அடைந்தபோதிலும் அந்நிகழ்ச்சிகள் அற்றுப்போனதும் அவை தம் பழைய உருவம் நிலை தன்மைகளை மீண்டும் பெறுகின்றன. ஆயினும் உயிர்க்கு உயிர் வித்தியாசப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அவை தாக்கப்

படின், அவை தன்னிலைகெடுவரையைத் தாண்டி மீண்டும் தம் வடிவம் நிலை முதலியவற்றைப் பெற முடியாது மாறுபட்டே நின்று விடுகின்றன. இவைதாம் சூழ்வால் ஏற்படும் மாற்றங்கள். ஆகவே, ஒவ்வோர் உயிரின் வாழ்விலும் அதன் தொழில் உணவு சூழல் முதலியவைகளில் ஏற்படும் விகற்பங்களால் உண்டாகி, அவ் விகற்பங்களின் காரணமாகப் பிராணியானது தன்னிலைகெடு வரையைத் தாண்டியதால் அவ் விசேஷ நிலைமைகள் மாறிய பின் பும் பிராணியின் உடலுறுப்பமைப்புக்களின் மாறுபாடுகளாக நிலையாக நின்றுவிட்டவைதாம் **மாற்றங்கள்** என்பன. இவற்றுக் கும், உயிர் வித்தின் பேதாபேதங்களாலும் சேர்க்கை பிரிவுகளா லும் ஜந்துவில் தோன்றும் உருவம் குணம் நிலைகளுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. ஒன்றைத் தோற்றம் என்றும் மற்றொன்றை மாற்றம் என்றும் வேறுபடுத்திச் சொல்லலாம். ஒன்று பிறவிக் குணத்தின் தன்மையால் தோன்றுவது; அது வமிசார்ஜிதம். மற்றொன்று வழக்கங்களாலும் சூழ்வுகளாலும் மாறி அமைவது; அது சுயார்ஜி தம். இயற்கையால் வருவது ஒன்று; செயற்கையால் வருவது மற்றொன்று.

மாற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன என் பதில் சிறிதும் ஐயமில்லை. அவற்றால் ஜந்துவுக்கு உண்டாகும் பிர யோஜனத்துக்கு அளவேயில்லை. பெரும்பாலும் அவை ஜந்துவின் உயிரையே காக்கின்றன. உதாரணமாக, எலும்புந் தோலுமாயிருக் கிற ஒரு குழந்தைக்குச் சரியான மருந்தும் உணவும் கொடுத்து வந்தால் அது சிரித்து விளையாடி இன்பம் விளைக்கும் அழகிய குழந் தையாகி விடுகிறது. குழந்தையின் உடலில் உண்டாகும் இம் மாறு பாடு புற நிகழ்ச்சிகளால் ஏற்பட்டதல்லவா?

இதினின்றும் போஷணை முதலியவற்றால் எவ்வகையான மாறுபாட்டையும் வேண்டியபடியெல்லாம் உண்டாக்கிவிடக் கூடு மென்ற அபிப்பிராயத்தை ஒரு கக்ஷியார் கொண்டுவந்தனர். இப் பொழுது வேறொரு கக்ஷியார், பிறப்பால் தோன்றும் குணநிலைமை களைச் சிறிதுகூட மாற்றமுடியாது என்று, நேர் எதிரிடையான கொள்கையைக் கையாளுகின்றனர். இவர் கக்ஷிக்கு ஆதாரம் விதைத்தொடர்ச்சிக் கொள்கை (*Theory of Germinal Continuity*) என்று சொல்லலாம். அதாவது பெட்டைக்கோழியிட்ட முட்டை முக்கியமன்று. முட்டைக்கு முதலாகிய கருவே (*Cell*) பெட்டைக்கோழி அதன் முட்டைகள் ஆகிய அனைத்துக்கும் மூலம்; அதுதான் முக்கியம். மேலும் இதுவரை மாற்றங்களுக்கு ஆதார மாகச் சொல்லப்பட்டுவந்த உதாரணங்களை எல்லாம் சோதித்துப்

பார்த்ததில் அவை யாவும் வெறுங் கட்டுக்கதையாகவே முடிந்தன. பின்னும், தன்னந் தனியாகக் காணப்பட்ட சில அவயவ விசேஷங்கள் பல தலைமுறைகளாய் ஒரே வகையாயிருந்து வருவதும் பலவகைப் புறநிகழ்ச்சிகள் அவற்றை மாற்ற முயன்றும் அவை சிறிதும் மாறுபடாமல் மீண்டும் மீண்டும் முன்போலவே தோன்றி வருவதும் தெரியவந்தன. உதாரணமாகச் சிலருக்குள்ள விரல்களெல்லாம் இரண்டு கணுக்களேயுள்ள கட்டை விரல்களாகத் தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் விந்தையும், சாதாரணமாய்க் கண்ணின் விழியின் நிறமும் அதே மாதிரி தலைமுறை தலைமுறையாக மாறாமல் இருந்துவருவதும் விதைத்தொடர்ச்சிக் கொள்கையையே பலப்படுத்தின. ஆகவே பிறவிக் குணமானது தன்னியல்பு மாறாத் தன்மையை யுடையது என்னும் கொள்கையில் ஜனங்களுக்கு ஒரு விசேஷப்பற்று உண்டாயிற்று. வழக்கம் சூழ்வு முதலியவற்றில் ஏற்படும் விகற்பங்கள் அவ்வப்போது ஏதோ சிறிதளவு மாறுபாடுகளை ஒரு பிராணிக்கு விளைவிப்பினும் அம்மாறுபாடுகள் தலைமுறை தலைமுறையாகப் பிராணியினது வமிசாவளியில் இறங்கக்கூடாதன, அவை வமிசார்ஜிதங்களாக மாட்டா, என்ற எண்ணமானது வலியடைந்தது. இதனை இனி ஆராய்வோம்.

(தொடரும்)

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்.


Cell—கரு.
Endogenous—அகப்பிறவி.
Environment—சூழ்வு.
Exogenous—புறப்பிறவி.
Habit—வழக்கம்.
Heart—இரத்தாசயம்.
Heredity—பிறவிக்குணம், வமிசார்ஜிதகுணம்.
Individual—ஒருவன், தனிமனிதன்.
Kidney—சிறுநீர் ஊற்றுப்பை.
Limit of Perfect Recovery—தன்னிலையடைவரை.
Liver—கல்லீரல்.
Modification—மாற்றம்.
Race—இனம்.
Stethoscope—நாடியறிகருவி.
Thermometer—சீதோஷ்ணமானி.
Theory of Germinal Continuity—விதைத்தொடர்ச்சிக் கொள்கை.

சில ஷிகாரி அல்லது வேட்டுவப் பிராணிகள்

எம். ஏகாம்பரநாத ஐயர்

ஆகாயமார்க்கமாகப் பறந்து செல்லும் வௌவால்களையும் வேறு சில பக்ஷிகளையும், வேடர்கள் மரங்களில் வலைகள் கட்டிக் கைப்பற்றுவதை, இதைப் படிப்போர் பார்த்திருக்கலாம்; காடுகளில் பெரிய படுகுழிகள் தோண்டி அவற்றினுள்ளே யானைகள் விழுவதற்கு உபாயங்கள் செய்து அவற்றை ஜனங்கள் பிடிப்பதைப் பலர் கேட்டும், சிலர் பார்த்தும் இருக்கலாம்; தூண்டில்கள் போட்டு ஜலத்தில் வாழும் மீன்களைப் பிடிப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மனிதன் தாழ்ந்த பிராணிகளைக் கைப்பற்ற இங்குக்கூறிய உபாயங்களை அனுசரிப்பதுபோல், பிராணிவர்க்கத்துள்ளும் சில, அவற்றின் ஆகாரமாகும் வேறு பிராணிகளைக் கைப்பற்றுவதற்கு இம்மாதிரியான சில உபாயங்களை அனுசரிக்கின்றன.

ஆகாயத்திற் பறந்து செல்லும் சிறிய பூச்சிகளை வலைகட்டிப் பிடிக்கும் வஞ்சக வேடனாகிய சிலந்திப்பூச்சியைப் பார்த்திராதவர் இரார். அப் பிராணியானது வலையைக்கட்டி, அதில் ஒரு மூலையிற் பதுங்கியிருந்து, தனக்கு உணவாகும் பூச்சிகள் அவ்வலையில் அகப்பட்டுக்கொண்டவுடன் பற்றிக்கொள்ளுவதைக் கவனித்துப்பார்த்தால், அதன் வலைவீசும் திறமையை மெச்சாமல் இருக்கமுடியாது. வலைகட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் சிலந்தியின் தேகத்திலேயே இருக்கின்றன. வலை பின்னுவதற்குவேண்டிய நூல் சிலந்தியின் தேகத்தில் ஒரு திரவப்பொருளாக உண்டாகிறது. இது காற்றில் பட்டால் கெட்டியான நூலாகிறது. வயிற்றின் அடிப்பாகத்தில் பின்புறமாகச் சிறிய அரும்புகள்போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இவற்றை நூலரும்புகள் (*Spinnerets*) என்று கூறுவோம். இந்நூலரும்புகளின் முனைகளில் வெகு நுட்பமான பல மெல்லிய குழல்கள் இருக்கின்றன. இந்நூற்குழல்கள்வழியாக வயிற்றினின்று




சிலந்தியின் நூலரும்புகள்

வெளியே வரும் நூல்கள் பலவற்றைத் தனக்கு வேண்டியபடி ஒன்று சேர்த்து முறுக்கிச் சிலந்தி தன் வலையைக் கட்டுகிறது.

சிலந்திப்பூச்சி வலைகட்டுவதைக் கவனித்துப் பார்த்தால் முதலில் வீடுகளுக்கு நாம் அஸ்திவாரம் பலமாகப்போடுவது போல், நாலு பக்கங்களிலும் அஸ்திவார ரேகைகள் (*Foundation lines*) என்று கூறத்தக்க அழுத்தமான நூல்களை மரங்களிலோ, சுவர்களிலோ, வேலிகளிலோ, மற்றவிடங்களிலோ கட்டுகிறது. மரங்களிலோ, வேலிகளிலோ வலைகட்டும்போது, முதலில் ஓரிடத்தில் தன் நூலரும்பிலிருந்து உண்டாகும் பிசினை ஒட்டி, பக்கத்துக்கிளையின்மேலோ, முள்ளின்மேலோ நடந்துகொண்டே சென்று, அந்நூலை இழுத்து மற்றொரு முனையை எதிர்ப்பக்கமாகச் சேர்க்கும். சில வேளைகளில், சுலபமாக நடந்து செல்வதற்குக் கிளைகள்போன்ற வழி கிடைக்காமல், நடுவில் பெரிய பள்ளங்கள் இருக்கலாம்; இச்சமயங்களில், சிலந்தியானது ஒரு முனையை முதலில் ஓரிடத்தில் இணைத்துவிட்டு, அங்கிருந்து பலமான ஒரு நூலில் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு இருக்கும்; இப்படி தொங்கிக்கொண்டிருக்கும்போது, ஸௌகரியமான காற்றினால் எதிர்ப்பக்கம் அடித்துக்கொண்டு போகப்பட்டு, அங்கு நூலின் மற்றொரு முனையை இணைக்கும்.

இம்மாதிரியாக, அஸ்திவார இரேகைகளைக் கட்டின பிறகு, ஓர் இரேகையின் மத்தியிலிருந்து மற்றோர் இரேகையின் மத்தியபாகத்திற்குக் குறுக்குநூலொன்றை நூற்றுக் கட்டும். பிறகு இந்நூலின் மத்திய பாகத்தின்வழியாகப் பல குறுக்கு நூல்களை நூற்று, வண்டிச் சக்கரத்தின் இலைகள் போன்ற பல இலைரேகைகளை நூற்கின்றது.



சிலந்தியின் வலை.

இதற்குப் பிறகு, சக்கரத்தின் குடத்திற்குச்சரியாக, இலை ரேகைகள் சந்திக்கும் இடமாகிய மத்திய பாகத்தைச் சுற்றி, சில நூல்களை வட்டாகாரமாக நூற்கிறது. இச்சுழல்களைப் பிரதமசுழல்கள் என்று சொல்லலாம். இவைகள் இலைகளுக்குச் சாரங்கள் போல் கெட்டியாக இருப்பதற்கு ஆதாரமாகின்றன. இதற்குப் பிறகு, இப்பிரதமசுழல்களுக்கு வெளியிலே, பிசினுள்ள நூல்களால் வெகு நெருக்கமாகச் சில நூல்களைக் கட்டுகின்றது; இச்சுழல்களைத் துவிதீய சுழல்கள் என்று கூறலாம். நெருக்கமாக நூற்கப்பட்ட இந்த நூல்களே முக்கியமான வலையாகும். இந்நூல்கள் பிசினுள்ளனவாக இருப்பதால், ஈ, கொசு முதலான


பிராணிகள் சுலபமாக ஒட்டிக்கொண்டு வலையில் மாட்டிக்கொள்ளுகின்றன.

சிலந்தியின் காலானது மெல்லிய நூல்களின்மேல் துரிதமாக ஓடுவதற்கேற்றபடியும் நூல்களை வேண்டியபடி முறுக்கியோ, நறுக்கியோ செய்வதற்கேற்றபடியும் அமைந்திருக்கிறது. இவ்விதம் வலையைக் கட்டின பிறகு, வலையினருகே தான் தங்குவதற்கு ஓரிடத்தை நிருமித்துக்கொள்கிறது. மழையிலும் வெயிலிலும் திறந்துள்ள இவ்வலையில் வசிப்பது அசௌகரியந்தானல்லவா? இது காரணமாக வலையினருகிலேயே, ஒரு மறைவில் தன் வாசஸ்தானத்தைக் கட்டிக்கொண்டு தன் இருப்பிடத்துக்கும், வலைக்கும் ஒரு நூலிணைப்பைச் செய்துகொள்கிறது. வலையில் ஏதாவது ஒரு பூச்சி சிக்கிக்கொண்டால், இந் நூலிணைப்பினால் தனது கிருகத்திலிருந்துகொண்டே இந்தச் சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளும். சிலந்திப்பூச்சி தன்வலையையும், கிருகத்தையும் கட்டி முடித்தபிறகு, தன் ஆகாரத்தை எவ்விதம் கைப்பற்றுகிறதென்பதைக் கவனிப்போம்.



சிலந்தியின் கால்.


காலைவேளைகளில் புஷ்பங்களுள்ள தோட்டங்களில் சிலந்தி தனது வலையில், எட்டுக் கால்களையும் எட்டு இலைகளுக்குச் சரியாக நீட்டிக்கொண்டு இறந்துபோனதுபோல் பதுங்கி வலையுடன் வலையாக இருப்பதைப் பார்த்திருக்கலாம்; காலைவேளைகளில் மலர்ந்துள்ள புஷ்பங்களைத் தேடிக்கொண்டு தோட்டங்களுக்குச் சிறு பூச்சிகள் பறந்துகொண்டுவரும் காரணத்தால், இச்சமயங்களில், சிலந்தி தன் உணவை எதிர்பார்த்துக்கொண்டு இவ்விதம் வஞ்சகமாகத் தங்கியிருக்கும். சிலந்தியின் அதிர்ஷ்டவசத்தால் ஏதாவது ஒரு பூச்சி, வலையில் அகப்பட்டுக்கொண்டால் இது சரேலென்று பூச்சியிடம் சென்று நூல்களால் அதைச் சுற்றி விஷக்கருவியினால் அதைக்கொன்றுவிடும்; சிலந்திக்குப் பசியாக விருந்தால் உடனே அதன் சாரத்தை உறிஞ்சிச் சக்கையை எறிந்துவிடும். பசிக்குப் போதுமான அளவிற்குமேல்



சிலந்தியின் விஷக்கருவிகள்.

ஆகாரம் வந்து விழுந்தால், அவற்றை நூல்களாற் கட்டித் தனது கிருகத்திற்குக் கொண்டுபோய் ஜாக்ரதையாக வைக்கும். இவ்விதம் செய்த பிறகு, வலைக்கு நேரிட்ட கெடுதலை உடனே பழுதுபார்க்கும். சில சமயங்களில் வலையின் மத்தியில் இராமல், தனது கிருகத்தில் பதுங்கி யிருக்கும்; அப்போது வலையில் ஏதாவது விழுந்து அகப்பட்டுக்கொண்டால், நூலிணைப்பினால் சமாசாரம் தெரிந்து, அதனிடம் செல்லும்.

காடுகளில் குழிகள் வெட்டி மனிதர்கள் யானைகளைப் பிடிப்பது போல், ஆன்ட் லையன் (*Ant-lion*) என்று கூறும் ஒரு வகைப் பிராணி, தன் ஆகாரமாகும் எறும்புபோன்ற சிறிய ஊரும் பூச்சிகளைக் குழிதோண்டிக் கைப்பற்றுகின்றது. இப்பிராணியைச் சாதாரணமாக 'எறும்புகளுக்குச் சிங்கம்' என்று பொருள்படும்படி ஆங்கிலத்தில் ஆன்ட் லையன் என்று கூறுகின்றனர். தளர்ந்த மெல்லிய மண்ணுள்ள இடங்களில் பொனல் (*Funnel*) போன்ற சிறு குழிகளையும், அவற்றினுள்ளிருந்து குழிப்பன்னி என்று கூறும் சிறு பூச்சிகளைச் சிறுவர்கள் எடுத்து, "பன்னி, பன்னி, உச்சுக் கொட்டு" என்று சொல்லி விளையாடுவதையும் பலர் பார்த்திருக்கலாம். இந்தப் பூச்சி காலக்ரமத்தில் தும்பி அல்லது தட்டாரப் பூச்சியைப் (*Dragonfly*) போன்ற ஒரு பிராணியாக மாறும். கம்பளிப்பூச்சி வளர்ந்து வண்ணாத்திப் பூச்சியாக மாறுவதுபோல் இந்தக் குழிப்பன்னியும், இறகு முளைத்துப் பெரிதாகிறது. இக்குழிப்பன்னியின் தலைப்பாகம் மண்ணைப் பறிப்பதற் கேற்றபடி தட்டையான கரண்டிபோலிருக்கிறது. இதன் கால்கள் பலமற்றனவாக விருப்பதால், தன் உணவாகும் பிராணிகளைப் பின்தொடர்ந்து செல்லும்படியான ஸ்திதியில் இஃது இல்லை. ஆகையால் ஆகாரத்தைக் கைப்பற்ற வேறு உபாயத்தை அனுசரிக்கிறது. இக்குழிப்பன்னி பறக்கமுடியாமல் குழந்தைப் பருவத்திலிருக்கும்பொழுது பூமியில் பொனல்போன்ற குழிதோண்டி அதனுள்ளே வசிக்கிறது. முதலில் உடலின் பின்பாகத்தைப் பூமியில் அழுத்திக்கொண்டு தேகத்தைச் சுற்றிச் சுற்றிப் பொனல்போல் குழி செய்யும். பிறகு தட்டையான தலையினாலும் கால்களினாலும் மண்ணைத் தோண்டும். இவ்விதமாகக் குழிசெய்து அதனடியில் மண்ணினுள்ளே தலையை மேற்புறமாகவும் தேகத்தை மண்ணில் புதைத்துக்கொண்டும் மறைந்து கிடக்கும். எறும்புகள் சாதாரணமாக



குழிப்பன்னி.

எங்கும் நடமாடுவதால், அவ்வழியாகச் செல்லும் ஓர் எறும்பு அக்குழியைக்கண்டு தன்புற்றுக்குவேண்டிய ஆகாரம் ஏதாவது கிடைக்காதா வென்று எட்டிப் பார்க்கும்போது மண் தளர்ந்து குழியினுள்ளே விழ நேரிடுகிறது. இம்மாதிரி விழுந்த எறும்பு வெளியே தப்பித்துக்கொண்டு போகத் தத்தளிக்கையில், குழியின் உள்ளேயிருந்து குழிப்பன்னி மண்ணைக் கிறு கிறுவென்று பறித்து எறும்பை மேலேறவொட்டாமலும், மண்ணினுள்ளே புதையும்படியும் செய்கிறது. உடனே தன் கூர்மையான தாடைகளால் எறும்பைக் குத்திக் கொன்று அதன் சாரத்தை உறிஞ்சும்.



குழிப்பன்னியும் போனலும்.

தூண்டில்கள் போட்டு மனிதர்கள் மீன்கள் பிடிப்பதுபோல்.




தூண்டில் மீன்.

ஒரு விதமான மீன் மற்றச் சிறுமீன்களைத் தூண்டில் போட்டுப் பிடித்துத் தின்னுகிறது. இதற்குத் தூண்டிலானது தன் தேகத்திலேயேசேர்ந்து ஒரு சதையாகவளர்ந்து இருக்கிறது. இம் மீனின் தலை வெகு பருமனாகவும், வாய் வெகு அகலமாகவும் இருக்கும். இதன் தலையில் நீண்ட மெல்லிய நூல்கள்போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று மிகவும் நீண்டு நுனியில் சிறு குஞ்சத்துடன் கூடியிருக்கிறது. இந்தக் குஞ்சமும், நூலமைப்பும் தண்ணீரில் மிதக்கும்போது தூண்டிற் கயிற்றில் வைக்கப்பட்டிருக்கும் புழுவின் தோற்றத்தை ஒத்திருக்கும். இம்மீனானது சமுத்திரத்தில் தேகத்தை மணலில் புதைத்துக்கொண்டு தூண்டில்போன்ற குஞ்சத்தைத் வெளியே

நீட்டிக்கொண்டு பதுங்கியிருக்கையில் மற்றச் சிறு மீன்கள் இக் குஞ்சத்தைக் கடலில் வாழும் புழுவென்று நினைத்துத் தின்பதற்கு ஆவலுடன் அருகே வருகின்றன. அந்தச் சமயத்தில் இம்மீன், அச்சிறுமீன்களின் மேல் சரேலென்று பாய்ந்து அவற்றை விழுங்கி விடும்; அவற்றை விழுங்குவதற்கேற்றபடி அம்மீனுடைய வாய் மிகப் பெரிதாகவும், விழுங்கிய மீன்கள் வெளியே தப்பித்துக் கொண்டு வராமல் இருக்கும்பொருட்டுக் கூரிய பற்கள் அநேகம் வாயினுள்ளே பின்புறமாக வளைந்தும் இருக்கின்றன. தவிர, இந்த மீனுக்கு வாயைச் சுற்றிலும் சில சதைகள் வளர்ந்திருப்பதால், இது தேகத்தை மண்ணினுள்ளே மறைத்துக்கொண்டிருக்கும் போது, ஏதோ கடற்பாசி வளர்ந்திருப்பதுபோல் தோன்றுமேயொழிய மீன் என்று தோன்றுவதில்லை.


படத்தில் காட்டியுள்ள ஒரு விதமான மீன் நீரோடைகளில் வசிக்கிறது. இதன் வாயானது குழல்போல் சிறிது நீண்டிருக்கும். பீச்சாங்குழல் வழியாகத் தண்ணீர் பீச்சுவதுபோல், இம் மீனானது தன் வாயினின்றும் தண்ணீரை அடிக்கக்கூடும். இம் மீன் ஆகாரத்தின் பொருட்டு, தண்ணீருக்கு மேலாகச்செடிகள் வளர்ந்திருக்கும் கரையோரத்தில் வந்து, நாணல்போன்ற அச் செடிகளின் மேல் வாயினின்றும் ஜலத்தைப் பீச்சி, அவற்றைத் தண்ணீரில் வீழ்த்தித் தின்கிறது.



பீச்சாங்குழல் மீன்.

காடுகளில் வேட்டைக்குச் செல்லுகிறவர்கள், காட்டுமிருகங்களுக்குத் தங்கள் இருப்பைப் பகிரங்கப்படுத்தாமல் இருக்கும் பொருட்டுத் தகுந்த உடைகளைத் தரித்து, மறைவிடங்களில் அசைவற்றுப் பதுங்கியிருந்து, அவைகள் அருகே வந்தவுடன் பாய்ந்து அவற்றைக் கொல்வதுபோல், பல பிராணிகள் தங்கள் ஆகாரத்தைக் கைப்பற்ற வஞ்சக வர்ணங்களைத் (*aggressive colours*) தரித்து, அசைவற்றுப் பதுங்கியிருந்து ஆகாரமாகும் பிராணிகள் அருகே வந்தவுடன் அவற்றின்மேல் பாய்ந்து கொல்லுகின்றன. படத்தில் காட்டியுள்ள பூச்சியானது பார்வைக்குப் புல் போன்றதாகவும், முன் கால்கள் மிக நீண்டதாகவும் இருக்கும். இதன் முன்கால்கள் இரண்

டையும் சேர்ந்தாற்போல் வைத்துக்கொண்டு அசைவற்றிருக்கும் போது, இதை வைக்கோல் துரும்பாகக் கருதுவாரேயொழிய, பிராணியென்று அவருக்குப் புலப்படாது. தியானம் செய்யும் போது நாம் கைகளைச் சேர்த்துக் கொள்வதுபோல் இப்பூச்சி முன் கால்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதால் ஆங்கிலத்தில் தியானப்பூச்சி என்று அர்த்தமாகும்படி இதற்குப் பேரிட்டுளர். இம் மாதிரி இருக்கும் நிலையில் வேறு சிறிய தத்துக்கிளிபோன்ற பிராணிகள் இதன் இருப்பைக் கவனியாது அருகே வந்தால், தியான நிலையிலிருந்த கைகள் கொலைக்குத் தயாராகின்றன; உடனே அக் கைகளால் தத்துக்கிளி பிடிக்கப்பட்டு வாயினிடம் செல்லும்.



தியானப்பூச்சி.

இத்தியானப்பூச்சியின் வஞ்சக வுபாயமும், இவ்வியாசத்தில் கூறிய உபாயங்களும் மனிதர்கள், தாழ்ந்த பிராணிகளுக்குக் கற்பித்தனரோ? அல்லது மனிதர்கள் அவற்றினின்றும் கற்றுக்கொண்டனரோ? அல்லது இவ்விருவர்களும் 'அவசியமே யுக்திக்கு முக்கிய காரணம்' என்ற பழமொழிக்கிணங்கப் பிராணதாரப் போராட்டத்தின் (*Struggle for existence*) கொடுமையால் ஜீவாதாரத்திற்கு இவ் வுபாயங்களைத் தனித்தனியே கண்டு பிடித்தனரோ?

பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம்

பி. ஆர். சிதம்பர ஐயர்


இந்தப் பூமியில் வசிக்கும் நமக்குச் சூரியனும் சந்திரனும் மிகவும் பிரதானமானவை. ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஆயிரக் கணக்கான ஜோதிகளில் சூரியனும் சந்திரனும் மிகப்பெரியனவாக நமக்குக் காணப்படுகின்றன. சூரியன் இல்லாவிட்டால் நமக்கு வெளியே சென்று யாதொருவேலையும் செய்ய முடியாதென்பதும், சூரியனது ஒளியினால் தான் இவ்வுலகில் எல்லாப் பிராணிகளும் தாவரங்களும் உயிர் பிழைத்திருக்கின்றன என்பதும் எல்லோருக்கும் தெரிந்தனவே.

இரவில் சந்திரன் உதித்தால் நமக்கு மிகவும் ஆனந்தமாய் இருக்கிறது. சிறுவர் சிறுமிகளுக்கு மிகவும் கொண்டாட்டம். நிலவில் விளையாட ஆரம்பித்தால் அவர்களுக்கு உறங்கக் கூட மனம் வராது. ஸ்ரீராமரும் தம் இளம் பிராயத்தில் சந்திரனைப் பார்த்து அதைப் பிடித்துத் தரவேண்டுமென்று அழுதார் என்று நாம் இராமாயணத்தில் படித்திருக்கிறோமல்லவா ? இப்பேர்ப்பட்ட சந்திர சூரியர்கள் நமக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்களென்பதை நீங்கள் அறிவீர்களா ? சந்திரன் சமீபத்திலும் சூரியன் மிக்க தூரத்திலும் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆகையினால் சந்திரனையே முதலில் நாம் கவனிப்போம்.

சந்திரன் சூரியனைக் காட்டிலும் பூமிக்கு அருகில் இருக்கிறதென்று நாம் சொன்னோமல்லவா ? எவ்வளவு தூரத்தில் இருக்கிறது ? நாம் ஒரு மேஜையின் ஓர் ஓரத்திலிருந்து மற்றோர் ஓரம் எவ்வளவு தூரம் என்று பார்க்கவேண்டுமானால் ஓர் அடிக் குச்சியால் அளந்து கணக்கிடுகிறோம். நமது வயல்களின் எல்லைகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரத்தில் இருக்கின்றனவென்று பார்க்கவேண்டுமானால் 'ஸர்வேயர்கள்' உபயோகிக்கும் சங்கிலியைக் கொண்டு அளந்து கணக்கிடுகிறோம். ஆனால் பூமியிலிருந்து சந்திரனுக்கு யாராகிலும் ஒரு சங்கிலியை இழுத்துக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்களா ? அல்லது ஆகாயத்தில் பறக்கும் ஆகாய விமானத்தில் (*Aeroplane*) ஏறிச் சென்று பார்த்து வந்திருக்கிறார்களா ? இல்லையே. முன்காலத்தில் தசரதசக்கரவர்த்தி தன்

விமானத்தில் ஏறிச் சனிமண்டலத்திற்குச் சென்று சனி பகவா னுடன் யுத்தம் புரிந்ததாகப் புராணங்களில் படித்திருக்கிறோம். ஆனால் அத்தகைய வல்லமையுள்ள மானிடர்களோ, பூமியின் வாயு மண்டலத்தைத் தாண்டிச்செல்லும் திறமையுள்ள விமானங்களோ அதற்கப்பால் இதுகாறும் இருந்ததாகத் தெரியவில்லை. இனி வருங் காலத்தில் இருக்கும் என்று நம்புவதற்கும் இடமில்லை. ஆனால் அப்படிப் பிரயாணம் செய்தோ சங்கிலி முதலியவற்றினால் அளந்தோ தான் சந்திரனுடைய தூரத்தை அறிய முடியுமா, அல்லது வேறு உபாயம் ஏதேனும் உண்டா? எனின், உபாயம் ஒன்று உண்டு என் பதற்கு ஓர் உதாரணம் கூறுவோம்.

இங்கே காண்பித்திருக்கும் படத்தைப் பாருங்கள். *A B* என்பது ஒரு பெரிய நதி. *C* என்பது அந்த நதியின் அக்கரையில் நிற்கும் ஒரு மரம். *D* என்பது இக்கரை யில் நாம் இருக்கும் ஸ்தா னம் என்று வைத்துக்கொள் வோம். நதியில் வெள்ளம் வந்திருக்கிறது. *D* என்ற இடத்தில் நின்று ஒரு சர்வே சங்கிலியை இழுத்துக் கொண்டு ஆற்றைத் தாண்டி மரத்திற்குச் செல்லமுடியாது. ஆனால் *D* என்ற ஸ்தானத்திலிருந்து *C* என்ற மரத்தினுடைய தூரத்தைத் தெரிந்து கொள்ள, சர்வேயர் என்ன செய்வார்? *D* யிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் இக்கரையி லேயே E என்ற ஒரு ஸ்தானத்தை வைத்துக்கொண்டு *D E* என்ற ஒரு நேர் கோட்டைக் கிழிப்பார். *D* என்ற இடத்தில் தம் கருவி *(Theodolite)* யை வைத்து அதன் வழியாய் *C* என்ற மரத்தைப் பார்ப்பார். அப்போது *D C* என்ற திசையில் செல்லும் நேர் கோட்டிற்கும் *D E* என்ற நேர் கோட்டிற்கும் இடையிலிருக்கும் *C D E* என்ற கோணம் எவ்வளவு என்பதை அவருடைய கருவியி லிருந்து அறிந்து விடலாம். அதேமாதிரியாக அந்தக் கருவியை *E* என்ற இடத்தில் நகர்த்திவைத்துக்கொண்டு *E C* என்ற திசைக் கும் *E D* என்ற நேர் கோட்டிற்கும் இடையிலுள்ள கோணத்தின் அளவையும் கண்டு பிடித்து விடலாம். *D E* என்ற நேர் கோட்டின் நீளத்தை அக்குச்சியினாலோ சங்கிலியினாலோ அளந்து சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். இப்போது *CDE* என்ற திரிகோணத்தைக் கவனித்தால் அதன் ஒரு பக்கமாகிய *D E* என்ற நேர் கோட்டின்



நீளமும் அதனிருபக்கத்திலுமிருக்கும் CDE, CED என்ற கோணங்களின் பரிமாணமும் தெரிந்துகொள்வோம். இம் மூன்றும் ஒரு திரிகோணத்தில் நாம் அறிவோமாயின், அதனுடைய மற்றிரு பக்கங்களாகிய DC, EC என்பவற்றின் நீளங்களையும் திரிகோணமிதி (*Trigonometry*) என்ற கணித சாஸ்திரத்தின் உதவியால் எளிதில் அறியலாம். ஆகவே, இவ்வாறு ஆற்றைக்கடக்காமலே ஆற்றின் அக்கரையில் நிற்கும் ஒரு மரத்தைக் கண்டு பிடித்து விடலாமல்லவா ? இது போலவே சந்திர மண்டலத்துக்குப் போகாமலே நமக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தையும் கணக்கிட்டறியலாம். அஃது எப்படி என்பதை அடுத்தமுறை கூறுவோம்.

சரித்திரம்

மனிதவர்க்கத்தின் முதற் புத்தகங்கள்

ஓ. பி தேசிகன்

ஆறறிவு படைத்த மனிதன், தன் மனத்தில் அரும்பிய எண்ணங்களை அக்ஷர வடிவில் வெளிப்படுத்துவதற்கு நெடுங்காலம் முன்னிருந்தே மனித வர்க்கத்தின் இலக்கிய வளர்ச்சியின் வரலாறு ஆரம்பமாகிறது.

உலக நாகரிகத்தின் அருணோதய காலத்திற்கு முற்பட்ட ஆதி காலத்தில் மக்கள் காடுகளில் வசித்து, தமது மனக்குறிப்புகளைச் சாடைகளாலும் அங்க சேஷ்டைகளாலும் உணர்த்தியும், மரப் பட்டைகளையும் தழைகளையும் அணிந்தும், வேட்டையாடியும், மீன் பிடித்தும், தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடி அவ்ற்றைச் சமைத்துத் தின்பதற்கு வகையறியாது பச்சையூனாகவும் காய் கனி கிழங்குகளாகவும் அவற்றைத் தின்றும், சுனை நீரையருந்தியும், கல்லினாலும் செம்பினாலுமாய முரட்டுக் கருவிகளை உபயோகித்தும் வந்தனர். இந்நிலையில் தம்மைச் சூழ்ந்திருந்த வனவிலங்குகளின் இயற்கைக் குணம் மாறப்பெறாத ஆதி மனிதன் மூர்க்கத் தன்மையும் போர்க்குணமும் மேலிட்டவனாய், தன்னைச்சேர்ந்தாரோடு இடைவிடாது சண்டையிட்டு வந்ததுமன்றி, மிருகங்களையொத்த வாழ்க்கையினையே நடத்தி வந்தான்.

நாமறிந்த கலைகளிலே நாட்டிய சாஸ்திரம் ஒன்றே மிக மிகப் பழமை வாய்ந்ததாகும். ஆதிமனிதன், தனது பகைவர்கள் தன்னிடம் தோல்வியுற்று உயிர் துடித்து மடிவதைக் கண்டு மனங் கலங்காமல் பெருமகிழ்ச்சியுற்றுக் களிப்பெய்தினான். அந்தச் சந்தோஷ மிகுதியால் கூத்தாடி ஆனந்த பரவசமாயினான். துஷ்ட மிருகங்கள் களிப்பினால் உறுமி ஊளையிடுவதைப் போன்றதோர் பெருங் கூச்சலிட்டுத் தன் மகிழ்ச்சியின் பெருக்கை அவன் வெளியிட்டான். முதலில் பொருளும் பேதமும் அற்ற இவ் வெற்றுக் கூச்சலும் ஆரவாரமும் நாளடைவில் ஏதோ ஒருவிதமான மனக்

குறிப்பை யுணர்த்துவனபோல் காணப்பட்டன. அதன்பின் அவனுடைய கூத்துக்கும் அரை குறையான பொருட் குறிப்பை யுணர்த்தும் இப் பெருங் கூச்சலுக்கும் ஒன்றோடொன்று பொருந்துவது போன்ற சம்பந்த முண்டாயிற்று. உலகில் முதன் முதலாகத் தோன்றிய யுத்த கோஷமும் அதன் பின்னர் யுத்தப் பாட்டும் இவ்வாறுதான் உண்டாயின.

எத்தனையோ காலத்திற்கப்பால், மனிதகோடியின் விகாஸ முறையில் அவர்கள் பல் வேறு பகுதியினராகப் பிரிந்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல், ஆடுகளையும் மாடுகளையும் வளர்த்து, அவைகளினின்றும் தமக்கு வேண்டிய இருப்பிடம், உடை, ஆகாரம் முதலியவைகளைத் தேடிக் கொண்டு, நெடுங்காலம் வரையில் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரித்து, உல்லாஸமாகப் பொழுது போக்கி வந்தனர்.

முடிவில் அவர்கள் இவ்வலைச்சல் வாழ்க்கையிலும் வெறுப்படைந்தவராய்ச் சீதோஷ்ணமும் நிலவளமும் மிக்க நாடுகள் பல கண்டு பூமியைத்திருத்தி வளப்படுத்தி, தமக்கென உறைவிடங்கள் பல அமைத்துக்கொண்டனர்; தமது நானாவிதமான சக்திகளைப் பல துறைகளிலும் பயன் படுத்துவதற்கேற்ற நகரங்களையும் கிராமங் களையும் நிருமாணித்து அவற்றை இயற்கையாலும் செயற்கை முறைகளாலும் அரண் செய்து வந்தனர். நாளடைவில் அவர்கள் பயிர்த்தொழில், பண்டமாற்றுதல், முதலிய நாகரிகத்திற்கனுகுண மான நற்றொழில்களைக் கற்பனை செய்யத்தொடங்கினர்.

இதனிடையில் பல நாட்களாயின. மக்களிடையே கடவுளுணர்ச்சி மெல்ல மெல்ல அரும்பி மலர்ந்தது. “மனிதசக்திக்கும் மேம்பட்டதோர் சக்தி உள்ளது; சராசரங்களனைத்தையும் இயக்கும் ஈசன் ஒருவன் உளன்; அவன் வணங்குதற்குரியவன்” என்பன போன்ற சாமானிய எண்ணங்கள் மனிதவர்க்கத்தின் மனத்தை அலைக்கத் தலைப்பட்டன. கடவுளைக்குறித்து வேண்டுகோள்களும் வணக்கங்களும் செய்யப்பட்டன. அந்த வேண்டுகோள் களும் துதிகளும் கர்ணபரம்பரையாக வழங்கிவரலாயின. தலைமுறைக்குப்பின் தலைமுறையாக மனிதவர்க்கம் அவற்றை மனப் பாடம்செய்து ஒப்பித்து வந்தது. ஒவ்வொரு தலைமுறையும் தனக்குச் சிறந்தனவாகத் தோன்றியவற்றைப் புதியனவாக அதனுடன் சேர்த்துக்கொண்டது.

இவ்வாறாக மிருகப்பிராயம் நீங்கி நாகரிக உணர்ச்சியென்பதை முதன் முதலாகப்பெற்றவுடன் ஆதிமனிதன் தனது மனக்குறிப்புக் களையும் உள்ளக்கிளர்ச்சியையும் புற உலகிற்கு எளிதில் உணர்த்த

வல்லை சாதனங்கள் எதையேனும் கண்டுபிடிக்க ஆவலுள்ளவன் ஆயினன். மூன்றுவித முக்கியமான காரணங்களால் அவன் அவ்வாறு செய்யவேண்டியது இன்றியமையாததாயிற்று : மறக்க முடியாத—மறக்கவுங்கூடாத—எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்தன; அவைகளைப்பற்றிய நினைவை மறந்துவிடுவது மிகுந்த ஆபத்தைக்கிடந்தருவதாயிருந்தது; ஆதலின், அவற்றை நெடுங்காலம் வரையில் நினைவினின்றும் அகலாமலிருப்பதற்காகப் பதிந்துவைத்திருக்கவேண்டியது அத்யாவசியமாக ஆயிற்று. அன்றியும் தன்னிடமிருந்து பிரிந்து தூரத்தில் இருக்கும் மக்களுக்குச் செய்தி ஏதேனும் அறிவிக்கவேண்டும். தன்னுடைய சொத்துகளையும், உடைமைகளையும், ஆயுதங்களையும், கால் நடைகளையும் மற்றவர்களுடையவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்குத் தெளிவான அடையாளம் ஏதேனுமோர் முறையில் செய்யவேண்டும். இவ்வாருகத்தான் ஆதிமனிதன் தனக்குத்தானே அக்ஷரங்களையோ அல்லது தனது உள்ளக்கருத்தை வெளியிடும் அறிகுறிகளையோ உபயோகப்படுத்துவதற்குக் கற்பனை செய்துகொண்டான். தனது சொந்த நன்மையையும் ஆத்மலாபத்தையும் முற்றிலும் மனத்திற் கருதியே அவற்றின்பொருட்டு எழுதுவதற்குக் கற்றுக்கொண்ட பூர்விகமனிதன், முதலெடுப்பில் தான் வணங்கிய கடவுளரின் வந்தனை வழிபாட்டையும், அவரைக்குறித்த தோத்திரங்களையும், யுத்தப்பாடல்களையும் வெகுகாலம் வரையில் பாதுகாத்துவைப்பதற்குரிய அருஞ்சாதனமொன்றைத் தேடிக்கொண்டவன் ஆனுன். ஆனல் ஆதிமக்களிடையே இவ்வாறு தாமாக எழுதுவதற்குக் கற்றுக்கொண்டவர் மிகச் சிலரே. அவர்கள் எழுதியவற்றை அறிந்துகொள்ளக்கூடியவர் அதனினும் மிக மிகச் சிலரே யாவர்.

சால்டிய நாட்டுக் களிமண் புத்தகங்கள்
(*Clay Tablets of Chaldea*)

பூர்விக மனிதன் தனது மனத்தோற்றங்களை எழுத்தளவிலேனும் உருவங்களாகவேனும் வெளிப்படுத்தக் கருதியபோது, அவைகளை முதன் முதலாகக் கற்பாறைகளின் மீதே கோணல் மாணலாகச் செதுக்குவித்தான் என்று சொல்லிலக்கண நூலாசிரியர்களும் மொழியாராய்ச்சியாளர்களும் கூறுவர். இந்தக் கல்வெட்டுகளை எழுத்தாளியொருவன் முதலில் வரைந்துகொண்டே செல்லுகையில், இவற்றைக் கல்தச்சன் ஒருவன் தனது ஆயுதங்கொண்டு மிகவும் ஆழமாகச் செதுக்கிக்கொண்டே சென்றிருக்கவேண்டும். தான் செதுக்கும் வடிவங்களின் பொருள் யாதென்பதை இவற்றைச் செதுக்கும் மனிதன் அறிந்தானில்லை. அதன் பிறகு களிமண்ணைப் பிசைந்து சதுரவடிவமாகச் செய்து வெயிலிற் காய

வைத்து அதன் மீது எழுத்தாணி கொண்டு எழுதுவித்தான். புராதன மனிதன் எழுதிய இக் களிமண் புத்தகங்கள் பலவற்றை ஸர் ஹேன்றி லேயார்ட் என்பவர் சால்டியா (*Chaldea*) நாட்டினின்றும் கண்டெடுத்தார். தொன்மை வாய்ந்த இக் களிமண் புத்தகங்களில் ஒன்று தற்சமயம் பிரிட்டிஷ் மியூஸியம் என்னும் கண்காட்சி சாலையிலுள்ளது. நமக்குத் தெரிந்தவரையில் இதுவே உலகத்தில் மிகமிகப் பழமை வாய்ந்த எழுத்துக்குறிப்பாகும். களிமண் பலகைகளில் (*Clay Tablets*) பொறிக்கப்பட்டுள்ள வரலாறுகள் கிருஸ்து பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன், அதாவது இற்றைக்கு 6000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென இது போழ்து கருதப்படுகிறது. விவிலிய வேதத்தில் (*Bible*) காணப்படும் 'மஹாப்பிரளயத்தின்' (*The story of the flood in the Book of Genesis*) வரலாற்றையும், பைபிள் தோன்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் சால்டியர்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைத் தழுவியே யூதர்கள் எழுதியிருக்க வேண்டுமெனக் கருதுவதற்கும் இடமுண்டு.

இந்நிலவுலகமெங்கும் உயிர் வாழ்ந்து வருகின்ற பல்வேறு மக்கட் குழுவினருள், தொன்று தொட்டு நாகரிகம் உடையவராய்ச் சிறப்புடன் திகழும் வகுப்பினர் சிலரேயாவர். அவர்கள் எகிப்தியர், பாபிலோனியர், சால்டியர், அஸிரியர், யூதர், பாரஸீகர், ஆரியர், தமிழர், பெருவியர், மெக்ஸிகோ நாட்டினர் என்பவரேயாம். அவர்களிடையே சால்டியர் புராதன காலத்திலேயே ஏனைய எல்லார்தம் நாகரிக வாழ்க்கையினும் மிக்க பழமையும் சிறப்புமுள்ளதோர் நிலைமையினை யெய்தி இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாக அரசியல் துறையிலும் சமயஉணர்ச்சியிலும் செல்வப்பெருக்கிலும் வியக்கத்தக்க மேம்பாடு அடைந்திருந்தனர்.

சால்டியர்கள் தமது அக்ஷரங்களை ஒரு விசித்திரமான முறையில் அமைத்து வந்தனர். அந்த அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் ஓர் ஆப்புப் போன்ற (*wedge*) உருவமுடையது. இவ்வாறு ஓர் ஆப்பினாலோ, அல்லது பல ஆப்புத் துண்டுகளாலோ இடது புறத்திலிருந்து வலப்புறமாகச் சதுரமுனையுள்ளதோர் எழுத்தாணி கொண்டு வரையப்பட்ட எழுத்துக்கள் அல்லது வடிவங்களே சால்டியர்களின் மொழிக்குறிப்பாகும்.

எழுத்தாளிகளும் புரோகிதர்களும்

சால்டிய எழுத்தாளிகள் அத்தேயத்து அரசாங்கத்தில் சம்பளம் பெற்று வந்தனர். அரசர்கள் போர்க் கோலங்கொண்டு யுத்த

முனைக்குச் செல்லுங்கால் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற திரளான ஜனங்களில் எழுத்தாளியும் ஒருவனாவான். உண்மையில் மற்றத் தொழிலாளிகளையும் ஊழிய வர்க்கத்தினரையும் காட்டிலும் எழுத்தாளியே அரசர்களுக்கு அக்காலத்தில் பேருதவியாக இருந்து வந்தானென்பதில் ஐயமில்லை; ஏனெனில் யுத்தத்தில் எத்தனை பட்டணங்கள் பிடிக்கப்பட்டன, பகைவர்களில் இறந்துபட்டோரின் எண்ணிக்கை எவ்வளவு, யுத்தத்தில் தாம் கைப்பற்றிய பொருள்களின் அளவும் மதிப்பும் எவ்வளவு என்பவற்றைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுப்பது அவனுடைய கடமையே யாகும். இதனிடையில் தமது மன்னர்களின் பராக்கிரமத்தையும் ஆற்றலையும் குறித்துப் புகழ்மாலை பாடுவதும் அவனுடைய தொழிலேயாம்.

சால்டியச் சமய நூல்களை இயற்றிய ஆசிரியர்களும் புரோகிதர்களும் அரசாங்கப் பொக்கிஷத்தினின்றும் ஊதியம் பெற்று வந்தனர். யுத்த அறிக்கைகளையும் தெய்வ வணக்கப் பாடல்களையும் தவிர்த்துச் சால்டியக் களிமண் புத்தகங்களிடையே பயிர்த்தொழில், சோதிடம், அரசியல் முதலியவைகளைப் பற்றி உரைக்கும் நூல்களும் பலவுள. ஸ்ரீமான் லேயார்டும், பிற அஸிரியச் சிலாசாஸன ஆராய்ச்சியாளர்களும் கண்டு எடுத்திருக்கும் களிமண் பலகைகள், வெகு காலத்திற்குமுன் நினேவே (*Nineveh*) என்னுமிடத்திலிருந்த ஸேன்னசரிப் (*Sennacherib*) என்பவரது புத்தகசாலையை அலங்கரித்திருக்கவேண்டுமென்று பலர் கருதுகிறார்கள். ஸேன்னசரிப் என்பவர் கிருஸ்து பிறப்பதற்கு 681 ஆண்டுகளுக்கு முன் மரித்ததாகக் கூறப்படுகிறது.

எகிப்தியர் நாகரிகம்

நாகரிக வாழ்க்கையில் சால்டியர்களுக்கு அடுத்தபடியாகத் தலைசிறந்து நின்றவராகச் சொல்லப்படுவதற்கு ஏற்ற மெய்ச்சான்று வாய்ந்த பண்டை நாகரிகமக்கள் எகிப்தியரே என்பது வரலாற்று நூலாசிரியர்களின் முடிபாகும். எகிப்தியர் தமது நூல்களைப் பாபிரஸ் (*Papyrus*) என்னும் பொருளின்மீது எழுதி வந்தார்கள். பாபிரஸ் என்பது நைல்நதிப் பள்ளத்தாக்குகளில் ஏராளமாகச் செழித்து வளர்ந்த ஒரு வகை நாணற் புல்லினத்தைச் சேர்ந்ததாகும். அதனுடைய சோறு அல்லது உள்பட்டையைக் காகிதம் போலச் செய்து, அதன்மீது மூங்கில் பிரம்பு அல்லது புற்களால் செய்யப்பட்ட எழுதுகோலைக்கொண்டு எழுதுவித்தனர்.

மரித்தோர்களின் புத்தகம் (*The Book of the Dead*)

இதுகாறும் நமக்குத் தெரிந்த வரையில், எகிப்திய நூல்களினிடையே மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுவது 'மரித்

தோர்களின் புத்தகம்' (*The Book of the Dead*) எனப் பெயர் வழங்கும் தொகைநூலேயாகும். எகிப்தியர்கள் குவியல் கோபுரங்களையும் (*Pyramid*) நிலத்தின்கீழ் புதைந்த அரண்மனைகளையும் கட்டுவித்த பன்னெடுங்காலத்திலேயே மரித்தோர் புத்தகமும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். அப் புத்தகத்தின் பிரதியொன்று பிரிட்டிஷ் மியூஸியத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுளது. அந்நூலை விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கும் ஜார்ஜ் பட்ணம் (*Mr. George Putnam*) என்னும் அறிஞர் அப்புத்தகத்தில், எகிப்தியக் கடவுளர்களைக் குறித்து வணக்கமும், வாழ்த்துப் பாடல்களும், பிரார்த்தனைகளும் இம் மண்ணுலகில் உயிர் நீத்தவர்களின் ஆவி மறுவுலகை யடையுமுன் எவ்விதமான அனுபவங்களுக்குட்படுகின்றன வென்பதும், அவர்களுடைய பூர்வ ஜன்ம வரலாறுகளின் சுருக்கமும், பின்பு மறுபிறப்பு எய்துமுன் அவர்களுக்கு விதிக்கப்படும் தீர்ப்புக்களின் வருணனைகளும் அடங்கி யிருப்பதாகக் கூறுகிறார்.

எகிப்தியர்களின் சடங்குகளில் 'மரித்தோர் புத்தகம்' சிறப்பானதோர் இடம் பெற்றிருக்கிறது. பூர்விக எகிப்தியர்களின் சமாதிகளில் அவர்களுடைய சவங்களுடன் இப்புத்தகத்தின் பிரதியொன்றையும் அடக்கம் செய்வார்கள். மறுவுலகில் மனிதனது ஆத்மாவானது பிரயாணம் செய்வதற்கு இப்புத்தகம் ஒரு நல் வழிகாட்டியாக இருக்குமென்று எகிப்திய மக்கள் நம்பி வந்தனர். இப்புராதன வழக்கத்தைக் கவனிக்குமிடத்து எகிப்து நாட்டுச் சவ அடக்கம் செய்தவர்களையே சரித்திரத்திலே முதலாவது புத்தக வியாபாரியாகக் கொள்ளலாம்.

எகிப்தியக் கடவுளர்களிடையே தோத்-ஹேர்மீஸ் (*Thoth-Hermes*) என்பவர் எழுத்தறியும் பெருமாளாகவும், புத்தகாலய மண்டபத்தின் அதிபதி (*Lord of the Hall of Books*) யாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். அந்நாட்டு மக்களின் அறிவுணர்ச்சி கோயில்களிலும் பிரதிபலித்ததற்கு இஃதோர் அறிகுறியாம். எண்ணிக்கையிலும் விஷயக்குறிப்பிலும் பெரிதும் பரந்தனவாக இருந்த எகிப்திய நூல்களில் மிகச் சிலவே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றிலும் பெரியதோர் பகுதி மதச் சார்புடையதாக இருக்கின்றது. அரசியல் நூல்களும் ராஜாங்கத்திற்குப் பெரிதும் பயன்படுவதான லௌகிக நூல்களும் மட்டுமேயன்றிக் கற்பனைக் கதைகளும் ஜனசமுதாய நூல்களும்கூட எகிப்திய இலக்கியங்களிடையே மிளிர்ந்தன.

அதனைத்தொடர்ந்த நூற்றாண்டுகளில் மதம், ஒழுக்கம், சட்டம், தர்க்கம், கணித சாஸ்திரம், பீஜகணிதம், வைத்தியம் முதலிய

ஒவ்வொரு துறையிலும் விரிவான நூல்கள் எகிப்திய நாட்டினின்றும் வெளிப்போந்தன. தேசசஞ்சாரம் நாவல் என்பனபோன்ற விஷயங்கள்கூட அலக்ஷியம் செய்யப்படவில்லை. அப் பெருநூற்பெருக்கத்தில் இப்பொழுது எஞ்சியுள்ளன மிகச்சிலவே. வெகு காலத்திற்குப்பின்தோன்றிய—உலகத்தின் முதல் நூல் நிலயமாம்—அலெக்ஜாந்திரியா புத்தகசாலையிற்கூட எகிப்திய நூல்களிருந்தனவெனக் கூறுவதற்கியலவில்லை. ஏனெனில், அப்புத்தகாலயத்தில் கிரேக்க நூல்களே மிகவும் அருமையாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

மரித்தோர்களின் புத்தகங்களுக்குஅடுத்தபடியாக உலகில் பழமை வாய்ந்ததாகக் கருதக்கூடிய வேறொரு புத்தகமும் அந்நாட்டில் உளது. அதற்கு தா-ஹாதேப்பின் உபதேசங்கள் (*The Precepts of Ptah-Hotep*) என்று பெயர் வழங்குகிறது. இப்பூமண்டலத்திலேயே அஃதொன்றுதான் மிகத்தொன்மை வாய்ந்த கிரந்தமெனக் கூறப்படுகிறது. தா-ஹாதெப் என்பவர் மெம்பிஸ் (*Memphis*) என்னுமிடத்தில் ஏசுகிருஸ்து பிறப்பதற்கு 3550 ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்ந்திருந்தனராம்.

மோஸஸ் என்பவர் உலகில் ஜனிப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன், இந்திய வேதங்கள் புத்தகவடிவில் வெளித்தோன்றுவதற்கும் 2000 வருஷங்களுக்கு முன்னதாகவே, இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுவதிலிருந்து, அஃது எத்துணைப் பழங்காலச்சிறப்புடையது என்பதை நாம் ஒருவாறு அறியலாகும். பிரசித்திபெற்ற ஹோமர் என்னும் கிரேக்கக்கவியானவர் இலியட் என்னும் தமது அரிய காவியத்தை இயற்றுவதற்கு 2000 வருடங்களுக்கு முன்னும், ஸாலமன் என்னும் அறிஞருடைய பழம்பெருமொழிகள் பிரசித்தியடைவதற்கு அத்தனை நெடுங்காலத்திற்கு முன்னதாகவும் அப்புத்தகத்தை எகிப்தியர்கள் எழுதியுள்ளாரென்றால் அதனுடைய மாண்பினை என்னவென்று உரைப்பது? ஸாலமனுக்கும் நமக்கு மிடையேயிருக்கும் காலப்பகுதியைக் காட்டிலும் ஸாலமனுக்கும் தா-ஹாதெப்பிற்கு மிடையேயுள்ள காலப்பகுதியே மிகவும் அகன்றதாகும்.

அந்த உபதேசங்கள் யாவும் 23 அடி 7 அங்குலம் நீளமும், 5 அடி அகலமு முள்ள பாபிரஸ் பட்டைகளில் எழுதப்பட்டுள்ளன. பாரிஸ் நகரத்துத் தேசியக் கண்காட்சி சாலையில் (*Biliotheque Nationale*) அவைகளை இன்றும் காணலாம்.

கன்பூஷியஸின் மதக்கிரந்தங்கள்

ஐரோப்பிய இலக்கியங்கள் தலையெடுப்பதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன், சீன தேசத்தில் புத்தகங்கள் பெருவாரியாக

இயற்றப்பட்டன. கிருஸ்து பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்குமுன் சீனவில் தோன்றிய கன்பூஷியஸ் என்னும் பெரியார், பண்டையுலகில் மிகவும் உயர்ந்த தத்துவ சாஸ்திரியெனப் பெருமை பெற்றிருந்தார். சீன இலக்கியங்களுக்கும் ஒழுக்க நூல்களுக்கும் அடிகோலியவர் அவரே. சீனக்கிரந்தங்கள் மூங்கிற் சோற்றினால் செய்யப்பட்ட காகிதம் போன்ற வஸ்துக்களில் எழுதப்பட்டன. இப்புத்தகங்களை ஒவ்வொரு சமயம் எழுத்தாணி கொண்டும், அல்லது 'இந்தியன் இங்க்' என வழங்கும் கருப்பு மையால் தூலிகை கொண்டும் எழுதுவித்தனர். சீனமக்கள் பட்டாடைகளின் மீதும் புத்தகங்கள் பல வரைந்தனர். கிருஸ்து பிறப்பதற்கு 100 ஆண்டுகளுக்கு முன் சீன தேசத்தில் காகிதங்கள் முதன் முதலாகச் செய்யப்பட்டன. கிருஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் மா அச்சுக்களைத் (*Solid Blocks*) தயாரித்து அவற்றின் உதவியால் சீனமக்கள் அச்சடித்து வந்தார்கள். அன்றியும் ஐரோப்பாவில் அச்சு எழுத்துக்களின் உபயோகம் ஜனங்களிடையே பரவுவதற்கு 300 வருடங்களுக்கு முன்னதாகவே அச்சு எழுத்துக்களை அவர்கள் ஏராளமாகப் பயன்படுத்திவந்தனர். சீனமக்களின் பண்டை நூல்கள் யாவும் ஸன்மார்க்கத்தைப் புகட்டும் நல்லுபதேசங்களேயாம். மக்களிடையே வெகு காலமாகக் கர்ணபரம்பரையாக நீதி நெறியைப்பற்றியும் நல்லொழுக்கத்தைப்பற்றியும் வழங்கி வந்தவைகளெல்லாம் ஒருங்கே நூல்கள் வாயிலாகத் தொகுக்கப்பட்டன. நெடுங்காலம் வரையில் மனிதவர்க்கத்தினர் இப்பூவுலகில் நல்வாழ்வு எய்தி, மறுவுலகில் இதனினும் இன்பம் பயக்கக் கூடிய மேலானதோர் வாழ்க்கை நிலையினை அடைவதற்குத் தகுதியுள்ளவராக ஆகவேண்டுமென்னும் உயர் நோக்கங்கொண்டே சீனர்கள் தமது பழைய நூல்களை வரைந்தனர். சீன நூலாசிரியர்கள் நகர மாந்தர்களில் சிறந்தவர்களாகக் கருதிக் கௌரவிக்கப்பட்டனர். நூல்களைத் தேசியச்செல்வமாகவே அதுகாலை சீனர்கள் கருதிப் போற்றி வந்தனர். ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சி-ஹ்வாங்-டி (*Che-Hwang-ti*) என்னும் பெயர் வாய்ந்த சீனச்சக்ரவர்த்தி யொருவன் பயிர்த்தொழில், வைத்தியசாஸ்திரம் என்னும் இருகலைகளைப்பற்றி உரைக்கும் நூல்களைத்தவிர மற்றப் புத்தகங்களனைத்தையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டுமெனக் கொடுமையானதோர் உத்தரவைப் பிறப்பித்துவிட்டான். இதுவரை இவ்வுலகத்திலுள்ள வேறு எந்த நாட்டிலும் தமது இலக்கியங்களையும் பூர்விகக் கிரந்தங்களையும் இரக்கமின்றி வேண்டுமென்றே அழித்துப் பாழ்படுத்திய இச்சம்பவத்திற்கீடாக மற்றொன்று

நிகழ்ந்தது கிடையாது என்று பட்னம் (*Putnam*) என்பவர் கூறு கிறார். ஆனால் இச்செய்கையால் சீனர்களின் பூர்விக நூல்கள் முற்றி லும் அழிந்துவிடவில்லை. அதிருஷ்டவசமாக அப்பாடல்களில் பெரும்பான்மையானவை மனப்பாடம் செய்யப்பட்டிருந்தமையால் ஜனங்கள் அவற்றைத் திரும்பவும் அப்படியே ஒப்பிக்கும் திறனுடை யவர்களாய் இருந்தனர்.

அக்கொடுங்கோன் மன்னனது மரணத்திற்குப் பிறகு அவைகள் யாவும் மீண்டுமோர் முறை எழுதப்பெற்றுப் புத்தக உருக்கொண் டன. சீன நூலாசிரியர்கள் தமது புத்தகங்கள் வியாபக மடை வதன் பயனாகத் தமக்கு விசேஷ ஊதியம் கிடைக்குமென எதிர் பார்க்க வில்லையாயினும், அரசாங்க ஆதரவு ஓரளவிற்குத் தமக்களிக் கப்படுமென நம்பியிருந்தனர். உண்மையில் உலகிலுள்ள வேறு எந்த நாட்டு அரசாங்கமும் அறிஞர்களையும் புலவர் பெருமக்களை யும் சீன நாட்டினர் ஆதரித்துப் போற்றி வந்ததுபோல அவ்வளவு சிரத்தையுடன் ஆதரவு அளித்து உதவியிருப்பதாகக் கூற முடியாது. பூர்விக சீன ஆசிரியர்களில் சீன இலக்கிய மறு மலர்ச்சிக்குப் பேருதவி புரிந்த பான்-சௌ (*Pan-chao*) என்ற பெண்மணியின் பெயரைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். கிருஸ்து சகாப் தத்தின் ஆரம்ப நாட்களில் அவர் சரித்திர நூல்கள் பல இயற்றி வந்தார்.

பூர்விக சீனக்கிரந்தங்களின் தொகை ஏராளமானது; வாழ்க் கை நலன்களுக்கின்றியமையாத ஒவ்வொரு இலௌகிகத் துறையி லும் நூல்கள் இயற்றப்பட்டிருந்தன. தற்காலச் சீனப் புத்தகங்களை, புராதனந்தொட்டு வழங்கிவரும் கிரந்தங்களுக்கு உரை எழுதியன வாகக் கருதலாமே யன்றி வேறன்று. சீனமக்களின் தேசீய ஸமுதாய நாகரிக வாழ்க்கையில் உருப்படுத்துவதில் அந்நாட்டு இலக்கியங்கள் எந்த அளவிற்கு உதவிபுரிந்திருக்கின்றன என நாம் கூறிவிடுவது எளிதல்ல. ஏனெனில் சீன தேசத்து ஜனங்கள் தமக்குரிய தனித் தன்மையுடனும், மாறுதல் வேண்டாதவராகவும், மிகவும் வைராக் கியமும் பிடிவாதமுமுள்ளவராகவும் காணப்படுவதற்கு அவர்கள் தமது நாட்டுப் பூர்விக நூல்களிடத்தேயும், அவற்றிலடங்கியுள்ள உபதேசங்களிடத்தேயும் அளவு கடந்த பற்றுதல் கொண்டிருப்பதே காரணமாம். ஆனது பற்றியே தமது பூர்விக இலக்கியங்களின் பெருமைக்குப் பங்கமுண்டாக்கக் கூடிய நவீன நூல்களனைத் தையும் அவர்கள் பக்திஹீனமானவைகளென்றும், இறுமாப்புணர்ச் சியும் அதிகப்பிரஸங்கித்தனமும் வாய்ந்தவைகளென்றும் விரும்பத் தகாதவைகளென்றும் கருதி யொதுக்குகின்றனர். சீனர்கள் இத்

தகைய பிடிவாத நோக்கம் வாய்ந்தவர்களாயிருப்பதால், ஆதிகாலந் தொட்டு வழங்கிவரும் நூல்களிலேயும், தற்காலமியற்றப்படும் நூல் களிலேயும் இன்று வரையிலும் நடையிலும், அமைப்பிலும், சுவை யிலும், குறிப்பிடத்தக்க யாதொரு மாறுதலும் அபிவிருத்தியும் ஏற்படக் காணோம். 500 ஆண்டுகளுக்கு முன் சாஸர் (*Chaucer*) கவியால் எழுதப்பட்ட கவிகளைத் தற்காலத்தில் ஆங்கிலேய பாஷை யுடனும், அதனுடைய நடையுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ் விரண்டுக்கு முள்ள வேற்றுமை தெளிவாகப் புலப்படும். ஆனால் அதற்கும் எத்தனையோ காலத்திற்கு முற்பட்ட சீன பாஷையின் போக்கு, சிறிதளவேனும் மாறுதலடையாமல் அதன் ஆதித் தோற் றத்திலேயே இருந்து வருவது ஆச்சரியமாகவே யிருக்கிறது.

(தொடரும்)

இலக்கியம்



கண்ணப்பர்

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதமற்
றூரறியு மன்பன் றது. (திருக்களிற்றுப்படியார்)

'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபி, னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி' என்றவர் 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை'யாகிய மணிவாசகனார். 'மனங் கரைத்து மலங்கெடுக்கும் வாசக' மருளிய அவ்வாதவூரடிகளே வியக்கற்பாலதா யிருந்த தலையன்பை யுடையராயிருந்த கண்ணப்பர் வரலாற்றைப் பலபெரியார் கூறியுள்ளார். தேவாரங்களுள்ளும் ஏனையடியார் வாக்குக்களுள்ளும் அவர்வரலாறு ஆங்காங்கே சுட்டப்பட்டுளது. நக்கீரதேவரும் கல்லாடதேவரும் அருளிய கண்ணப்பதேவர்திருமறங்கள் பதினொராந் திருமுறையிற் காணப்படுவன. நம்பியாண்டார்நம்பி அருளிய திருத்தொண்டர்திருவந்தாதியினுள்ளே கண்ணப்பதேவர்வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டது; பெரியபுராணத்துள்ளே விரிவாகக் கூறப்பட்டது.

காளத்தித் தலமான்மியங் கூறும் நூல்கள் தமிழில் இரண்டு உள. ஒன்று திருக்காளத்திப்புராணம்; மற்றையது சீகாளத்திப்புராணம். இவ்விரண்டனுள் வீரை ஆனந்தக்கூத்தர் இயற்றிய திருக்காளத்திப்புராணம் முற்பட்டதாகுமெனத் தோன்றுகின்றது. இவர், ஸ்காந்தமஹாபுராணத்துத் தீர்த்தவைபவகண்டத்தில் பொன்முகரிக்கதையிற் சிலவும், சூதசங்கிதையிற் சிலவும், வாசிட்டலிங்கத்திற் சிலவும் சேர்த்துக் காளத்திமான்மியமெனத் தாம் இயற்றியதாகப் பாயிரத்துள் உரைத்தனர். நூலகத்து எங்கும் கண்ணப்பர் கதை வந்திலது. இந்நூலைப் பதிப்பித்த மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் அநுபந்தமாக 'ஐந்தாவது கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்தியாயம்'



கண்ணப்ப நாயனர்.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள ஒரு சிற்பம்.

By courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.

என 88 விருத்தங்களுள்ள ஓர் அத்தியாயத்தைப் பதிப்பித்து, அடிக்குறிப்பில் 'இந்த அத்தியாயம், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் ஒரே பிரதியில் மட்டும் இருந்தமையாலும் இந்த நூலின் முதனூலாகிய வடமொழிப் புராணத்தில் இந்தச் சரித்திரம் காணப் படாமையாலும் இந்த அத்தியாயச் செய்யுணடை இந்நூலாசிரியருடைய செய்யுணடையைச் சிறிதும் ஒவ்வாமையாலும் பத்திமானாகிய யாரோ ஒருவர் இடையே இயற்றிச் சேர்த்திருக்கலாமென்று எண்ணுதற்கிடமாக இருந்தமையாலும் இது தனியே பதிப்பிக்கும்படி நேர்ந்தது' என்று கூறினர்.

மற்றைய புராணமாகிய சீகாளத்திப்புராணம் கருணைப்பிரகாச சுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் வேலைய சுவாமிகள் ஆகிய மூவரும் செய்தருளியது. இவர்கள்காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டாகும். இவர்கள் செய்த புராணத்திற்கு முதனூல், விஜயநகரத்து வேந்தராகிய கிருஷ்ணதேவராயர்காலமாகிய கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் விளங்கிய ஸ்ரீமந் மஹாகவி தூர்ஜடியால் ஆந்திரமொழியிற் செய்யப்பட்ட ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்ம்யமு என்னும் நூலாதல் வேண்டும். இவ்வாந்திரநூல் நான்கு ஆசுவாஸங்களுடையது. மூன்றாம் ஆசுவாஸத்தில் கண்ணப்பர்கதை கூறப் பட்டுளது. இந்நான்கு ஆசுவாஸங்களிலும் வந்த வரலாறுகளே சீகாளத்திப்புராணம் ஒன்பது அத்தியாயங்களிலும் முறைபிறழாது கூறப்பட்டன. கற்பனைகளில் பேதங் காணப்படுதல் இயல்பே. ஆந்திரநூலில் கண்ணப்பர்கதை கூறும்பகுதியில், கண்ணப்பனென்னும் திண்ணனுடைய ஜன்மபூமிவர்ணனம், திண்ணன்ஜனனம், திண்ணன் வில்வித்தை பயிலல், திண்ணன் பரிஜனங்களோடுகூடி வேட்டைக்குப் போதல், ஸ்வப்நத்தாலும் வேட்டைவியாஜத்தாலும் ஈசுவரன் திண்ணனை வசஞ்செய்து கொள்ளல், திண்ணன் சிவலிங்கத்துக்குச் சேவைசெய்தல், திண்ணனைக் கண்டு வேடர்கள் துக்கித்தல், திண்ணன் சிவனுக்கு அநுதினமும் ஆகாரங்கொடுத்தல், சிவப்பிராமணன் ஆலயத்திலுள்ள ஆபாசத்தைக் கண்டு சிந்தித்தல், சிவன் திண்ணன்பக்தியைச் சிவப்பிராமணனுக்குக் காட்டல், திண்ணன் பரமேசுவரனுடைய நேத்ரரோகத்திற்குச் சிகிச்சைசெய்தல், சிவன் திண்ணனுக்குப் பிரத்தியக்ஷமாதல் என்றவிஷயங்கள் கூறப்பட்டன.

இனி, ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தலமாஹாத்ம்யம் என்னும் வடமொழி ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தலபுராணம் கி. பி. 1893-ல் தெலுங்கு லிபியில் வேங்கடகிரிநகரத்தில் அச்சாகி வெளிவந்தது. இது வேதவியாசராற் செய்யப்பட்ட அஷ்டாதசபுராணங்களி லொன்றாகிய சிவபுராணத்திலுள்ள சிவரகசியத்தினுள் ஸ்ரீ ரோமசபாரத்வாஜ

ஸம்வாதரூபமாகிய பிரமாமுதல் பத்மஸேநன்வரையுள்ள மஹா ஜனங்களின் அற்புதசரித்திரத்தை விசித்திரமாகக் கூறும் பாகமாம். இந்நூல் 90 அத்தியாயங்களுடையது; 9,430 சுலோகங்களாலாயது. இதனுள் 6-ம் அத்தியாயத்திலே பதினொருவர் ஸ்ரீகாளத்தியில் தவஞ் செய்து சிவப்பிரசாதத்தால் மனோரதங்களையடைந்தார்கள் என்றும், அன்னார் பெயர் அரி, பிரமன், இலக்குமி, கந்தன், இராமன், மார்க் கண்டன், வேடன், சிலந்தி, பாம்பு, யானை; சக்கிரம் என்றும் கூறப் பட்டிருக்கிறது. இவருள் வேடன் என்றது கண்ணப்பரையே. கண் ணப்பர் சரித்திரம் 53, 54 என்னும் இரண்டு அத்தியாயங்களிற் கூறப்பட்டிருக்கிறது. இவ்வரலாற்றுக்கும் தமிழ்நூல்களிற் காணும் வரலாற்றுக்கும் பேதம் பெரிதுண்மையின் தமிழ்மக்களுக்கு உகப் பாமென்னுங் கருத்தோடு இஃது இங்கு மொழிபெயர்த்துத் தரப் படுகின்றது.

வேடன் இலிங்கத்தைக் காத்தது

"தக்ஷிணகைலாசத்திலே சிவபூசையாலும் பரமபக்தியினாலும் ஒரு வேடன் சிவசாயுச்சியத்தை அடைந்தானென்று சொன்னீர். அவனுடைய சரிதம் எத்தகையது? அவன் பூசை எப்படிப்பட்டது? அவன் பக்திதான் எப்படிப்பட்டது? விவரமாய்ச் சொல்லியருளல் வேண்டும்" என்று பரத்துவாச முனிவர் கேட்ப உரோமச முனிவர் சொல்லுவார்:

பதினாயிரம் யானை வலியினையுடைய மணிமான் என்னும் இயக்கன் மதம்பிடித்தவனாய்க் குபேரன் நகரத்துக்குப் பக்கத்தி லுள்ள உத்தியானத்திலே நின்ற, குபேரனுக்குப் பிரியமானதும் பொன்மயமான மயிரோடுகூடியதும் விளையாட்டுக் கருவியானது மான புள்ளிமானைப் பிடித்து விளையாட்டாகக் கழுத்தை முரித்துக் கொன்றான். அந்த மானைப் பார்த்து அவனையுங் கண்டு, துக்கப்படு பவர்களிடத்தில் தயையுடையவராகிய நந்திபெருமான் சிறிது கோபங்கொண்டவராய், 'துர்ப்புத்தியே! நிரபராதியாயும் அழகிய பார்வையுள்ளதாயும் ரூபசம்பத்தோடு கூடியதாயுமிருந்த மானை நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே கொன்றதனாலே நீவேடனாய் விடுவாயாக. பூமியையடைந்து பலவீனனாயும் ஊன் தின்பவனாயும் காட்டில் சஞ்சாரஞ்செய், போ' என்றார். இதைக் கேட்டு அவன் பலவீனனாயும் நடுக்கமுள்ளவனாயும் அச்சமேலிட்டுக் கைகூப்பிச் சொல்வான் : 'இக் கிராதப் பிறவியிலிருந்து எப்பொழுது நிவிர்த்தி உண்டாகும்? பூமியில் எனக்கு எங்கு வாசம்? சொல்லவேண்டும். துர்ப்புத்தியினாலே காரணமின்றி உம்மெதிரிலேயே யான் இப் பாபத்தைச் செய்தேன். பொறுத்தருள் வேண்டும்.' இவ்வாறு

பிரார்த்திக்கப்பட்ட நந்திபெருமான் தயையோடு சொல்வார்: 'இயக்கனே! நீ பூலோகத்திலே மஹாபிரசித்தமான பாரதவர்ஷத்தில் சேர்வாய். கணிசையென்னும் பெயருடைய அதிமநோஹரையாகிய வேடப்பெண்ணை மணந்துகொண்டு ஸ்வர்ணமுகரிக்கரையில் குடும்பியாயிருப்பாய். இதற்குமேல் ஐந்தாவது யாண்டு சிவபக்தருள் தலைவனாகிய ஒரு பிள்ளை அப்பெண்ணிடத்தில் உனக்குப் பிறப்பான். உடனே நீ சாபம் தீர்ந்தவனாவாய். அதுமுதல் உனக்குத் தீர்ணனென்கிற பெயர் பிரசித்தமாகும். மஹாபுத்திமானாகிய உன்பிள்ளைக்குக் கணிசையா லிடப்பட்ட கண்ணனென்னும் பெயரானது உலகத்தில் வெகுவாகப் பரவும். பிள்ளைபிறக்கிற தினத்தில் நீ வேடவுரு நீத்து இங்கு மீள்வாய். பூலோகத்தில் பாரதவர்ஷத்தில் ஸ்வர்ணமுகரிக்கரையில் தக்ஷிணகைலாசத்தின் தக்ஷிண பாகத்தில் ஒரு யோசனையெல்லையில் வாசம் பண்ணிக்கொண்டிரு.' அவ்வார்த்தையைக் கேட்டு மணிமானும் உடனே பூலோகஞ் சேர்ந்து சுவர்ணமுகரிக்கரையிற் கணிசையோடு வசித்துப் புத்திரன் பிறந்த அந்நாளே தன்பழைய அழகான தேகத்தைப்பெற்று அளகாபுரியை மீண்டும் அடைந்தான்.

நீண்ட கண்களையுடைய அப்பிள்ளைக்குக் குலத்துக்கேற்றபடி பந்துக்களோடு கூடிக் கணிசை தன் புத்திக்கியன்றவரை யாலோசித்துக் கண்ணன் என்று பெயரிட்டாள். அவனும் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் போல வளர்ந்து பரமாத்மாவாகிய ஈசுவரனிடத்தில் பக்தியோடிருந்தான். பார்ப்பவர்களுக்குப் பயங்கரமாகிய நாணேற்றிய வில்லையும் அம்பருத்தூணியையும் தாங்கிக்கொண்டு எப்போதும் செருப்புக்காலுடையவனும் கொக்குமந்தாரைத்தழையைத் தலையிற் சூடியவனும் கைலாச சிகரத்துக்கு நாலுபக்கங்களிலும் சஞ்சரித்தான். அவன் பயமில்லாதவன்; பயங்கரமானவன்; பெருங்கண்களுடையவர்கள் என்று கர்வப்படுபவர்களுள்ளே என்கண்களே எல்லாவற்றிலும் பெரியன என்று கர்வப்படுந் தலைவன். அவன் நாடோறும் வில்வபத்திர முதலிய சாதனங்கள்கொண்டு சிரத்தையோடு அங்கிருக்கின்ற வாயுலிங்க சிவனைப் பூசை செய்துகொண்டிருந்தான். சிவனைப் பூசைசெய்யாமல் தீர்த்தபானங்கூடப் பண்ணுவதில்லை. மஹாபக்தியுடன் எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷதாரணம் பண்ணிக்கொண்டிருந்தான். காட்டிலேயே எப்போதும் வாசஞ்செய்தான். தினந்தோறும் தான் ருசிபார்த்து ருசிபார்த்துப் பக்தியுடன் நைவேத்தியமாகச் சுத்த மாம்ஸத்தைச் சிவனுக்குச் சமர்ப்பித்தான். புஷ்பங்களாலும் வில்வபத்ரங்களாலும் வாயிலிருக்கிற ஜலத்தாலும் மிக்க பிரயத்தினத்தோடு சிவபூசை செய்தான். இப்பேர்ப்பட்ட

வேடனை முனிவர்கள் பார்த்தனர். வாய்ஜலத்தினலே அபிஷேகஞ் செய்துகொண்டிருப்பதைக் கண்டு வருத்தமடைந்தனர். 'இம்மூடன் வாயாலே ஜலத்தைக் கொண்டுவந்து நித்தியம் அபிஷேகஞ் செய்கிருன். மாம்ஸத்தை நிவேதிக்கிருன். தினந்தோறும் மஹா நியமத்தோடு அழகான வில்வபத்ரங்களால் பூசைசெய்கிறவன் வாயில் ஜலத்தால் அபிஷேகம் செய்கிருனே; என்ன துர்ப்புத்தி! வேடனே! இது செய்யற்க என்ருலோ கையில் அம்பும் வில்லுமுடைய குரூரன் நம்மைக்கொன்றே விடுவான்' என்றெண்ணித் தினந்தோறும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாய் முனிவர்கள் சும்மாவிருந்தனர். அவன் பாட்டிற்கு நித்தியம் பூசை செய்துகொண்டிருந்தான். முனிவர்கள் தவம் பாழாகுமென்று சாபங் கொடுத்திலர். அவன் பக்தியைப் பார்த்தும் சும்மாவிருந்தனர். 'சதாசாரனே, துராசாரனே நியமமாய் விடாமல் சிவபூசைபண்ணுகிருன். ஆதலால் நம்மால் பூசிக்கத் தகுந்தவன்; கவுரவிக்கத்தகுந்தவன். இவன் விஷயத்தில் நிஷ்டுரஞ்சொல்லக் கூடாது' என்றிருந்தனர். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவன் வெயிலால் பீடிக்கப்பட்டுத் தபித்தவனுயும் தாகமுள்ளவனுயும் இருந்தான். அக்காட்டில் அவன்சமீபத்திலே ஒருவராலும் குடிக்கப்படாத குளிர்ந்த ஜலம்நிறைந்த சிறிய பள்ளமொன்றிருந்தது. அந்த ஜலத்தைப் பார்த்துத் தாகத்தால் வருந்தியவனுய் அவன் நினைத்தான் : 'பிரமாதியராற் பூசிக்கப்பட்ட வாயுலிங்கமாகிய சம்புவை இன்று வில்வபத்ராதிகளாற் பூசிக்கவில்லை; நான் ஜலத்தை எப்படிக் குடிப்பேன்! எல்லாப்பாபங்களையும் போக்குகிற சுத்தமான விபூதியையும் பதினைந்து இடங்களில் நான் தரிக்கவில்லை ; எப்படி ஜலத்தைக் குடிப்பேன் ! சிவசந்நிதியில் சிவபஞ்சாட்சரத்தைச் செபிக்கவில்லை; தாகத்தால் வருந்தினும் எப்படி ஜலத்தைக் குடிப்பேன் ! தாகத்தால் பிராணன் போவதானல் இப்பொழுதே போகட்டும். தேகம் போனலும் ஈசுவராஞ்ஞையாலே எனக்கு நரகவாசங் கிடையாது. பூசை முதலியவற்றை விட்டு ஜலத்தைக் குடிப்பேனுகில் நரகந்தான் எனக்குக் கதி. விபூதிதரிக்காமல் ஜலபானம் பண்ணினவர்கள் தப்தமூத்திரமென்னும் நரகத்தில் இன்றுவரை துக்கத்தோ டிருந்துகொண்டிருக்கிருர்கள். சிவார்ச்சனைசெய்யாமல் போசனம் பண்ணினவர்கள் சதா துக்கிதர்களாய்த் தப்தமலத்தைப் புசித்துக்கொண்டிருக்கிருர்கள். பஞ்சாட்சர செபத்தைவிட்டு ஜலத்தைக் குடித்தவர்கள் நரகசமுத்திரத்திலே பெருந்துக்கப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஆதலால் சிவார்ச்சனையை விட்டு விபூதி தாரணமுமின்றிப் பஞ்சாட்சர செபமுமில்லாமல் ஜலத்தைக் குடிக்கப்படாது. பிராணனுலும் தேகத்தாலும் எனக்கு என்ன

உபயோகம் ? இவற்றைக்கொண்டு என்ன செய்யவேண்டியிருக்கின்றது ? இப்பொழுது ஜலத்தைக் குடித்துத் தேகத்தைக் காப்பாற்றினேனானல் அநேக அபாயங்களோடு கூடியதும் சீ இரத்தம் மூத்திரங்களோடு கூடியதும் மலத்தோடு கூடியதுமான இத்தேகம் கற்பம்வரை யிருக்குமா ? இந்தச் சரீரம் துர்க்கந்தமுடையது. இதனால் எனக்கு என்ன சுகம் ? குடல் எலும்பு நாடி தோல் மயிர் புழு இவற்றால் நிறைந்ததும் நாசமடைவதும் அபாயங்கள் மலிந்ததுமான இச்சரீரம் எனக்கு ருசிக்கவில்லை. முன் என்னால் அளவற்ற சரீரங்கள் விடப்பட்டன. இப்பொழுதும் தாகமுள்ள என்னால் இச்சரீரம் விடத்தகுந்ததே. அரையிற் கட்டிய வஸ்திரங்கள் எத்தனை நாசமடைந்தன ; அது போலவே எத்தனை சரீரங்கள் போயின. இதனால் எனக்கு வருத்தமில்லை. முன் நான் சங்கரனை ஆராதிக்காமலிருந்தது உண்மை; ஆகையாற்றான் அநேக சரீரங்களெடுத்தேன். சிவபூசைதான் பிறவியொழிதற்கு உபாயமென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் நான் மனத்தாலே இப்பொழுதும் சங்கரனைப் பூசிப்பேன்' என்று எண்ணி மானசிக பூசை செய்யத் தொடங்கினான்:

ஸர்வவியாபியாயும் ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாயும் ஸாக்ஷியாயும் ஞானஸ்வரூபியாயும் நிர்க்குணனும் ஈசுவரனும் உமாஸமேதனும் நித்தியனும் நிர்விகாரனும் ஆத்மாவாயுமிருக்கிற நீலகண்டன் என்னை எப்போதும் மனோதுக்கத்திலிருந்து காக்க. (1)

மாயையைக் கடந்தவனும் எல்லாவுலகங்களையும் மோகிக்கச் செய்கிறவனும் ஸாமோபாயஸ்வரூபனும் ஸாமவேதஸ்வரூபனும் எல்லாராலும் விரும்பத்தக்கவனும் ஸர்வஸ்வரூபனும் மகேசுவரனுமுள்ள நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (2)

எந்தச் சம்புவை வேதாந்தங்கள் அறியாவோ, எவனிடத்திலிருந்து நித்தியங்களான வேதவாக்குக்கள் பிறந்தனவோ, எவனைப் பிரமன் முதலிய தேவர்களும் அறியவே மாட்டார்களோ, அப்பேர்ப்பட்ட இந்த நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (3)

எவனுடைய வலப்பக்கத்திலிருந்து சிருஷ்டிகர்த்தா உண்டானானோ, எவனுடைய இடப்பக்கத்திலிருந்து விஷ்ணு உண்டானானோ, எவன் ஸர்வேசுவரனோ, அப்பேர்ப்பட்ட இந்த ஆதியந்தமில்லாத நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (4)

எவனுடைய திருவடித்தாமரையிலிருந்து தேவர்கூட்டங்களெல்லாம் உண்டாயினவோ, எவனுடைய மூச்சுக்காற்றே எல்லா வேதங்களுமோ, எவன் யஞ்ஞேசுவரனோ, அப்பேர்ப்பட்ட அம்பா

சமேதனாகிய இந்த நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (5)

எந்த ஸர்வேசுவரனை உண்மையாய் யோகநிஷ்டர்கள் இறைவனாக அறிந்து ஆதரத்துடன் பூசிக்கின்றார்களோ, அப்பேர்ப்பட்ட இந்த ஸர்வவியாபியும் ஸர்வ வேதாந்தங்களாலு மறியத் தகுந்தவனுமான நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (6)

எவனுடைய கடைக்கண் அசைந்த மாத்திரத்திலேயே எப்பொழுதும் பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோர் நடுங்கிக்கொண்டு தூரத்திலிருக்கிறார்களோ, அப்பேர்ப்பட்ட ஈசுவரனாகிய நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (7)

எவனை நினைத்தால் பாபக்கூட்டங்களெல்லாம் நாசமாகுமோ, எவனைப் பூசித்தால் கடுமையான பிறவியறுமோ, எவனைத் துதித்தால் முத்தி கிடைத்தல் தப்பாதோ, அப்பேர்ப்பட்ட நீலகண்டன் என்னை மனோதுக்கத்திலிருந்து காக்க. (8)

இப்படி வேடன் ஆனந்தக் கண்ணீரால் விளங்குகிற முகத்தையுடையவனாய்த் துதித்து மஹாதேவனை அமிர்தமயதேகமுள்ளவனாக மனத்தில் தியானித்தான். மந்தாரபுஷ்பங்களுக்குச் சமானமான மழை அப்பொழுது உண்டாயிற்று. குளிர்ச்சியான அம்மழையாலே அவன் உடல் நனைந்தது. அழகான மழைபெய்த அச்சமயத்தில் அவன் வாயை மூடிக்கொண்டு என் வாயுள் ஜலம் போகக்கூடாதென்றிருந்தான். ஜலபானமில்லாமலே அவ்வேடனுக்குத் தாகசாந்தி கிரமமாக ஆயிற்று. ஈசுவரனுடைய ஆஞ்ஞையால் வாயில் வந்த ஜலத்தைக்கூட அவன் குடித்திலன். ஸ்வர்ணமுகரிநதியில் ஸ்நானஞ்செய்து மரவுரியால் செய்த நூதனமான வஸ்திரத்தையணிந்து, சாஸ்திரப்படி பஸ்மோத்தூளனம்பண்ணித் திரிபுண்டரமுந் தரித்து, சிறந்த புஷ்பங்களோடுகூடிய இளைய வில்வபத்திரங்களையும் ருசிபார்த்த மாம்ஸத்தையும் நாணேற்றிய வில்லையும் கையிற் பற்றி, ஸ்வர்ணமுகரி ஜலத்தை வாயில் பக்தியுடன் எடுத்துக்கொண்டு, பரமேசுவரனுடைய உன்னதமான வாயுலிங்கத்தைச் சிந்தித்து மலர்ந்த முகமும் கண்களுமுடையனாய் மெல்ல ஆலயத்தைப் போயடைந்தான்.

இலிங்கத்தைப் பார்த்து மனத்தால் வணங்கிச் செருப்புக்காலுடையனாய் வாயிலிருந்த ஜலத்தால் அபிடேகஞ்செய்து, வில்வபத்திர புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டே தன் எச்சிலாகிய மாம்ஸத்தை நிவேதித்து, வந்தனம் முதலிய எல்லாவற்றையும் முடித்து, சிவபஞ்சாட்சரத்தை இயன்றவளவு செபஞ்செய்து, பரமாத்மாவாகிய சிவனுக்குத் தன்

ஆத்மாவை அர்ப்பித்து எல்லாப்போகங்களிலும் விருப்பம் விட்டவனும் முன்போலவே பரமேசுவரனைத் தியானஞ் செய்துகொண்டு காட்டில் சஞ்சரித்துவந்தான்.

தக்ஷிண கைலாசத்திலே ஒருகாலத்தில் சிவபக்தர்களும் வேதவித்துக்களுமான முனிவர்கள் சாயங்காலத்தில் பிரதோஷ பூஜையின் பொருட்டுக் கோடிக்கணக்காக வந்தார்கள். வேடனுடைய பக்தியை இவர்களுக்குக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு சிவபெருமான் தம் ஆலயம் விழுவதாகக் காண்பித்தார். அச்சிவாலயத்தின் நிலைமையைப் பார்த்து முனிவர்கள் வெளியே ஓடிப்போனார்கள். ஈசுவர னிருக்கிற கர்ப்பக்கிருகத்துக்குச் சமீபத்திலிருந்த வேடன் இச்சமயத்தில் தன்னாற் செய்யத்தக்க தென்னவென்று மிக வேகமாக ஆலோசித்தான்: ‘பாறை நழுவிச் சிவலிங்கத்தின்மேல் விழப்போகிறது. அதனால் சிவலிங்கத்துக்கு அடிபடும். அந்த அடியை நான் பிழைத்திருக்கும்போது எப்படிப் பார்ப்பேன்! நழுவுகிற அப்பாறையையும் என்னால் சுமக்கமுடியாது. ஏனென்றால் எனக்கு அப்பேர்ப்பட்ட திடசக்தியில்லை. என்னுடைய தேகத்தைப் பரப்பி வைத்துச் சிவலிங்கத்தை மூடிக்கொள்வேனாகில் என் முதுகின்மேல் அப்பெரும்பாறை விழும். அந்தப் பாறையின் பளுவால் என் சரீரம் ஒழியுமானால் சிவலிங்கத்தின் நுனிமேல் எனக்கு மரணம் சித்தித்ததாகும். அதற்குப் பிறகு பல பாறைகள் விழும். ஆயினும் சிவலிங்கத்துக்கு ஒருவித அபாயமும் உண்டாகாதன்றோ! எந்த விதத்திலாவது சிவலிங்கத்துக்கு அடியில்லாமல் நான் பண்ணவேண்டியது. நான் வெளியே ஓடிப்போனேனானால் இச்சரீரத்தைக் காத்துக்கொள்ளக்கூடும். ஆயினும் இதனைக் காப்பதில் என்ன லாபமிருக்கிறது. தேகத்தைக் காத்தல் மாத்திரத்தாலேயே ஒருபயனு மில்லை. இதைக் காக்க எவன்தான் முயல்வான்! வெளியே போனேனானால் எனக்குச் சுகம் சிறிதும் கிடையாது. சிவலிங்கத்துக்கு அடிபடுவதற்குக் காரணத்தைப் பார்ப்பதனாலே எப்படிச் சுகம்வரும்? இதில் என்னுடைய பாக்கியத்தினாலே சரீரம் போய்விடுமேயானால் பிரமாதிகளுக்குக் கிடைக்காத மோக்ஷம் எனக்கு இப்பொழுதே கிடைத்துவிடும். சிவலிங்கத்தினுடைய சந்நிதானத்தில் மனிதர்க்கு மரணங் கிடைத்தல் அருமை. புண்யாத்மாக்களுக்கு அது கிடைக்குமானால் மறுபிறப்புக் கிடையாதன்றோ? அழியுந்தன்மையதாகிய இவ்வுடலைக் காப்பது மோக்ஷத்தில் இச்சைவைத்த என்னால் இச்சமயத்தில் எப்படிச் செய்யத்தகுந்தது? யமன் வருவனேயானால் இவ்வுடலைக் காப்பது கோடிக்கணக்காகச் செய்யும் பலவுபாயங்களாலும் சாத்தியமன்று. யமன் வரும்பொழுது எங்கே ஓடமுடியும்? ஓடினாலும் அவன்

என்னவோ விடமாட்டான். மிருத்யுஞ்சயனை விட்டு மரணபீதியை ஒழிப்பவன் எவன்தான். எவனுக்கு மிருத்யுபய மில்லையோ அவன் தான் மிருத்யுஞ்சயன். மகேசனொருவனுக்கே யமபயங் கிடையாது; நிச்சயம். பிரமன் முதலிய தேவர்களெல்லாம் யமபாசத்தில் அகப் பட்டவர்களே. ஆகையால் மிருத்யுஞ்சயனைப் பஜிப்பதால் மனிதர் களுக்கு மிருத்யுபயம் ஒழிகிறது. ஆகையால் மிருத்யுஞ்சயனுடைய பூஜையன்றோ பக்தியுடன் செய்யற்பாலது. தேகத்தைக் காத்தற்காக நான் வெளியே போவேனானால் அப்பொழுது எனக்கு மிருத்யுஞ்சய னிடத்தில் என்ன பக்தியிருக்கப்போகிறது! ஆகையால் நான் மனத் தெளிவுடையவனாய்ச் சிவசந்நிதானத்திலே இருக்கவேண்டியது.' இம்மாதிரி அவன் ஆலோசித்து உறுதிகொண்டு மறுபடியும் சிவபூசை செய்கிறவனாய்ச் சிவலிங்கத்தின்மேல் தன்தேகத்தை விஸ்தாரமாகப் பரப்பியிருந்தான். அப்பொழுது பாறைகள் நழுவுவதாலுண்டான ஒரு பேரோசை உண்டாயிற்று. ஆயினும் வேடன் மிக்க தைரியத் தோடு சுகமாயிருந்தான். அப்பொழுது அப்பேர்ப்பட்ட வேடனை முனிவர்களெல்லாம் பார்த்து ஆச்சரியமுற்றவர்களாய் ஆதரத்துடன் துதித்தார்கள்: 'நீயே பெருஞ்செல்வன், நீயே செய்யற்பாலனவற் றைச் செய்துமுடித்தவன், நீயே பயன்பெற்றவனானாய்; ஐயமில்லை. ஏனென்றால் உன்னிடத்தில் எப்பொழுதும் இப்பேர்ப்பட்ட சிவபக்தி காணப்படுகின்றதே! ஏ வேடனே! உன் பெரும்பாக்கியத்திற்கு முடிவே கிடையாதென்பது நிச்சயம். உன் தேகம் வெகுபாக்கியம் பெற்றது; உண்மை உண்மை! ஐயமில்லை. உன்னுடைய தாயே பாக்கியவதி; உண்மை உண்மை! ஐயமில்லை. உன்னுடைய குலமே உத்கிருஷ்டமானது; உண்மை உண்மை! சந்தேகமில்லை. இப்பேர்ப் பட்ட பக்தி மனிதர்களிடத்துக் காணப்படாதது. இப்பேர்ப்பட்ட தைரியமும் மனிதரிடத்தில் இல்லாதது. இவ்விதமான பக்தி லோகத் தில் எங்கும் கேட்கப்படவில்லை; நிச்சயம். தேவர்க்கெல்லாம் தலைவ னாகிய மஹாதேவனிடத்தில் எவனுக்கு இப்பேர்ப்பட்ட பக்தியிருக் கிறதோ அவனுக்கேயன்றோ முத்தியாகிற ஸ்திரீ கையில் அகப்பட்ட வள்! நீ உலகத்தார்போல எப்பொழுதும் மனுஷரூபத்தைத் தரித் திருக்கிறாய். நீ ஒரு புண்ணியாத்மாவாகிய தேவனென்பது நிச்சயம். தேவர்களுள்ளும் சங்கரனுக்கு இப்பேர்ப்பட்ட பக்தனாயிருக்கிறவர் ஜநார்த்தனர். உண்மையை யறிந்த ஹரி எக்காரணத்திற்காகச் சிவார்ச்சனபரரானாரோ அக்காரணத்திற்காகவே அவர் தேவதேவ னாகிய சதாசிவனை உண்மையாயறிந்து தவத்தோடுகூடி வெகுவாகப் பூசைசெய்தார். விஷ்ணு தம் நேத்திரகமலத்தைப் பிரயத்தின பூர்வ மாகப் பிடுங்கி நிரம்ப சந்தோஷத்தோடு பக்தியாகச் சிவபாதங்களை

முற்காலத்திலே அர்ச்சித்தார். பூர்வத்தில் நாராயணர் அநேக கற்பங்கள் வரை சங்கரனைக்குறித்துத் தவத்தைப் பிரயத்தினத்துடன் செய்தார். சைவேந்திரனை அவ்விஷ்ணுவே மனுஷ்ய தேகத்தை யெடுத்துக் கொண்டு சிவபாத பூசையில் ஆவலுள்ளவராய் இங்கு இருக்கிறார். சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட தைரியம் மனுஷ்யனுக்கு எப்படி உண்டாகும்? பாறைகள் நழுவிக்கொண்டிருக்கையிலும் மனம் உறுதி யாயிருந்ததே!' இவ்வாறு முனிவர்களெல்லாம் வேடனைத் துதித்திருந்தனர். பிறகு அவர்கள் சிவாலயம் முன்போலவே இருத்தலைக்கண்டனர். ஆகாயத்திலிருந்து அக்கணத்திலேயே பூமழை பொழிந்தது. பின்பு அவ்வேடன் மகிழ்ந்தவனாய்ச் சங்கரனை மறுபடியும் அர்ச்சித்து விஸ்மிதனாய்ச் சிவனை இருதயத்தில் சிந்தித்துக் கொண்டு மெல்லப் புறப்பட்டுப்போனான். சிவபக்தகணங்களுள் தலைவனாகிய வேடனை முனிவர்கள் பார்த்து விநயத்தால் தலைவணங்கிய அவனைப் புஷ்பாதிகளாற் பூசித்தனர். அங்குத்தேவேசனை வில்வபத்ர முதலியவற்றால் நன்கு பூசித்து முனிவர்கள் அவன் பராக்கிரமத்தைப் புகழ்ந்துகொண்டு தங்கள் தங்கள் ஆச்சிரமங்களுக்குப் போனார்கள். அத்தலத்தில் பக்தர்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள்; நிச்சயம். வேடனுடைய சரிதத்தில் சிறிது உனக்குச் சொன்னேன் முனியே.

ஸ்ரீ சிவபுராணத்திலுள்ள சிவரஹஸ்ய சங்கிரகத்தில் ஸ்ரீ காளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யத்தில் சபரசரித்திரத்தில் 'லிங்கரக்ஷணத்தைச் சொல்லுகை' யென்னும் பெயரிய ஐம்பத்துமூன்றும் அத்தியாயம் முடிந்தது.

வேடன் முத்திபெற்றது

"கிராதனுக்குச் சங்கரனிடத்தில் என்ன அசஞ்சலமான பக்தி! ஆச்சரியம்! மஹாத்மாவாகிய அவனுக்கு என்ன தைரியம்! என்ன காம்பீரியம்! அவனுடைய சரித்திரங்களை நீர் சொல்லக்கேட்டதால் எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷமுண்டாகிறது. அவ்வேடன் முற்பிறவியில் யாவன்? அவன் எங்கிருந்தான்? சிவனிடத்தில் இப்பேர்ப்பட்ட பக்தி அவனுக்கு எப்படி உண்டாயிற்று?" என்று பரத்துவாசர் வினவலும் உரோமசர் சொல்வார்:

அவன் முற்பிறவியில் ஓர் ஊனருந்துங் கோழி. அஃது இமய மலையில் ஒரு வேடனால் நன்றாக வளர்க்கப்பட்டது. அவ்வேடன் தினந்தோறும் வில்லாளியாகக் காட்டில் அநேக மிருகங்களைக் கொன்று நல்ல மாம்ஸத்தை எடுத்து அதைப் பாகஞ்செய்து பிரீதி பூர்வகமாக நெய்யோடு அதை நியமத்துடன் சங்கரனுக்கு நிவேதனஞ்செய்து நிர்மாலியமுழுதையும் தானே சாப்பிட்டுக்கொண்டு பரி

சுத்தனைச் சஞ்சாரஞ் செய்தான். ஈசுவரனுடைய நிர்மாலியத்தைக் கொஞ்சங்கூட வேறொருவருக்குக் கொடுத்தவனல்லன். அவனால் தின்னப்படுகிற மாம்ஸத்தின் ஒரு துண்டு ஒருகால் பூமியில் விழ அதைக் கோழி தின்றது. அவ்வேடனும் கோபாக்கிராந்தனாய் அக் கோழியைக் கொன்றான். அக்கோழி உடனே வேட ஜன்மத்தை யடைந்தது. பூர்வஜன்மநினைவுடன் சிவ பூஜாபரனாயிற்று. கோழிக்கு மாம்ஸபக்ஷணவாசனை முன்ஜன்மத்திருந்தது. அவ்வாசனையோடு பக்தியாகப் பிரயத்தினத்துடன் மாம்ஸத்தைச் சம்பாதித்துப் பிரதி தினமும் அதைச் சங்கரனுக்கு நிவேதனஞ் செய்து வேடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆதரத்தோடும் பக்தியோடும் அந்த லிங்கத்தில் மகேசுவரனைப் பூசைசெய்து அவ்வேடன் நல்லஞானி யாய் விட்டான். அவனுக்கு வருங்காலஞானம் இல்லாமற்போன தற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்: எவன் சிவனுக்குப் பிர யத்தினத்தோடு அன்னத்தை நிவேதித்து எப்பொழுதும் சாப்பிடு கிறானோ அவன் அடுத்த பிறவியில் ஸர்வஞ்ஞனாகவும் ராஜாவாகவும் பிறக்கிறான்; சிவநைவேத்தியத்தை உண்டலினாலே இறந்தகால எதிர் காலவுணர்ச்சியும் சாசுவதமான ராஜத்வமும் பூர்வஜன்மவாச னையும் சௌந்தர்யமும் உண்டாகின்றன. வேறொருவன் எச்சிலாகிய நிர்மால்யத்தை எவன் அதிகமாகவோ மிதமாகவோ உண்கிறானோ அவனுக்குப் பவிஷ்யத்ஞானந்தவிரக் கீழ்ச்சொல்லப்பட்ட எல்லாம் உண்டு. இதில் சம்சயப்பட வேண்டிய அம்சமொன்றுமில்லை. முற்பிறவியிலே கோழி தற்செயலாய் அந்நியன் எச்சிலாகிய சுப மாகிய சிவநிர்மாலியத்தைக் கொஞ்சம் சாப்பிட்டது. அதனாலே இறந்தகால உணர்ச்சியும் சிவனிடத்தில் சாசுவதமான பக்தியும் முற் பிறவி யுணர்ச்சியும் ராஜத்வமும் ஸர்வஞ்ஞத்வமும் ஆகிய எல்லாம் உண்டாயின. அவன் வேட அரசனாகிச் சம்பூர்ணமான ஞானயோ கத்தாலே லக்ஷம் ரத்நங்களாலும் எட்டுலக்ஷம் ஸ்வர்ணங்களாலும் ஆதரத்தோடு நித்தியம் சிவபூசை செய்தான். காராம்பசுவின் நெய் யால் நிறைக்கப்பட்ட லக்ஷதீபங்களையும் கர்ப்பூரதீபங்களையும் சிவனுக்குச் சமர்ப்பித்தான். இப்படி மிக்க பிரயத்தினத்துடன் சிவார்ச்சனபரனாய்க் காளனென்கிற பிள்ளையிடத்தில் ராஜ்யத்தை யொப்பித்துவிட்டுக் கண்ணனென்கிற பெயருள்ளவனாய்க் கையில் வில் அம்பு தூணி முதலியவற்றைக்கொண்டு ஆசையற்றவனாய் ஞானி யாய்ச் சிவபக்தகணங்கட்குத் தலைவனாயிருந்து அத்விதீயமான அந்த ஸ்தலத்தில் வாயுமயமான சிவலிங்கத்தில் சிவனைப் பூசை செய்தான். இப்படிச் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்த மஹாத்மாவான வேட னுக்கு இருபத்தைந்து வருஷங்கள் இவ்விதமாகக் கழிந்தன.

ஒரு காலத்திலே பங்குனிமாசத்தில் சந்திரகிரகணம் வந்த பொழுது கோடிக்கணக்காக முனிவர்களெல்லாம் வந்துசேர்ந்தார்கள். அந்தத்தினத்தில் அவர்களுக்குச் சதாசிவன் வேடனுடைய பக்தியை அறிவிப்பதற்கும் அவர்களுடைய அகங்காரத்தை யடக்குவதற்கும் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே தம் ஒரு கண்ணைக்கரு விழிதோன்றுமலும் நீர்கொட்டும்படியாகவும் மாற்றிக் காட்டினர். 'ஐயோ இலிங்கத்திலிருக்கிற ஈசுவரனுக்குக் கண் இப்படிக் கருவிழி தோன்றுமல் நீர்கொட்டுகின்றதே! நேற்று இல்லை, இன்று தான் நாம் இதனைப் பார்க்கிறோம். இது உலகத்திற்கு இன்றே கேடு நேருமென் பதைக் காட்டும் குறியாகும். சிவனுடைய கண்ணோய் நீங்குவதற்கு இங்கு நம்மாற் செய்யற்பாலதென்ன?' என்று இவ்விதமாக ஈசுவர னுடைய அபிப்பிராயத்தை யறியாமல் மனங்கலங்கி முனிவர்கள் சொல்லிக் கொண்டிருந்தபொழுது, தான் அபிமானித்ததும் போக மோக்ஷப்பிரதையென்னும் பெயருடையதுமான ஸ்வர்ணமுகரி ஜலத்தில் ஸ்நானஞ்செய்து வில்வக்கொழுந்துகளை எடுத்துக்கொண்டு ருசியான மாம்ஸங்களை ருசிபார்த்தெடுத்துக் கொண்டு வாயுள் ஜலத் தைக் கிரகித்துக் கொண்டு செருப்பு விளங்குகிற பாதங்களை யுடைய வனாய் வில்லை யேந்தியவனாய் கூர்மையான பாணங்களின் வரிசை யால் பிரகாசிக்கிற அம்பறாத்தூணி பக்கத்தில் விளங்கவும் தேகத்தில் பதினைந்து இடங்கள் திருநீற்றுத் திரிபுண்டரத்தால் பிரகாசிக்கவும் தான் பெருங் கண்களையுடையவன் என்கிற அபிமானம் நிறைந்த மனத்தை யுடையவனாகிய வேடன் சிவபாதங்களை ஸ்மரித்துக் கொண்டு முன்போலவே வந்தான். அதிவேகத்தோடு வருகிற அவ் வேடனை முனிவர்கள் பார்த்து, 'சிவசந்நிதானத்திலே வருகிற இந்த வேடன் யாவன்? பயங்கரவேஷத்தோடு கூடிய இவன் நம்மைக் கவனித்திலன்; பிராந்தன்போற் றோற்றுகிறான்; இவனுடைய செய் கையாலே சிவனுடைய கண் விகாரத்தை யடைந்ததோ? இல்லை யாயின் மகேசனுடைய கண் இப்படி யாவானேன்?' என்று ஆலோ சித்துக் கொண்டிருந்தபொழுது, கம்பீர நடையை யுடையவனாய் அவன் மனத்தாலே சிவனை வணங்கிச் சிவன் சமீபத்தில் வந்தான். வாயில் ஜலத்தாலே அவ்வயனாகிய சிவனை யபிடேகித்துப் பஞ்சாட் சரத்தை உச்சரித்துக்கொண்டே வில்வபத்திரத்தாலே பூசித்து ருசி பார்த்த மாம்ஸத்தை நிவேதித்துச் செருப்புக்காலோடு கூடியவனாய்த் தேகத்தாலே வணங்கி எழுந்து நின்று அவ்வேட அரசன் ஈசுவர னுடைய நீர்கொட்டுகிற உருமாறிய ஒற்றைக் கண்ணைப் பார்த்தான். 'ஐயோ என்ன! ஈசுவரனுடைய கண் இப்படியாய்விட்டதே! ஒரு பொழுதும் திரிகரணங்களாலும் நான் ஒரு தவறுஞ் செய்ய

வில்லையே! அஞ்ஞானியாகிய நான் இதன் காரணத்தை இப்போது அறிகிலனே! என் பிராணேசனுடைய நேத்திரம் எப்படி விகாரமாகக் காணப்படுகிறது! இன்று இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிற என்னுடைய இருதயம் பிளக்கவில்லையே! ஈசுவரனுடைய இம்மாதிரியிருக்கிற நேத்திரத்தைப் பார்த்துங்கொண்டிருக்கிற என் தேகத்தில் இன்னும் பிராணன் எதனாற் போகாமலிருக்கிறதோ! ஆதலால் சீ! என்பக்தியும் என்விரதமும் என்குலமும் இருந்தவாறு!' இம்மாதிரி மனத்தில் வருந்துபவனும் பிராணனை விடவேண்டுமென்று விரும்புபவனுமாகிய அவனுக்குச் சிவனருளால் எப்படியோ ஒரு புத்தி பிறந்தது. 'பக்தனாயிருந்தும் ஒருவன் அகங்காரப்பேயாற் பிடிக்கப் பட்டவனானால் அவனுக்கு நான்கு புருடார்த்தங்களும் துர்லபமென்றே சொல்லுகிறார்கள். ஆகையால் முமுக்ஷுக்களனைவரும் அகங்காரத்தை விடவேண்டும். இவ்வேடன் என் பக்தன், விடயங்களிற் பற்றில்லாதவன், என்னையே எப்போதும் சரணமாகக் கொண்டவன், மோக்ஷத்தை விரும்பி இவ்வாறு திரிந்துகொண்டிருக்கிறான், ஸம்ஸாரமென்னும் பயங்கரமான சமுத்திரத்திலிருந்து எப்பொழுதும் காக்கத் தக்கவன், நீண்ட கண்களையுடைய இவன் நேத்திராபிமானத்தாற் பிடிக்கப்பட்டவன்போல் திரிந்துகொண்டிருக்கிறான், இப்பேர்ப்பட்ட அபிமானம் தொலையவேண்டு மென்றே ஜகதீசுவரன் என்னுடைய கண்ணை வாங்கிக்கொள்ளும் பொருட்டுத் தம் கண்ணை இவ்வாறு மாறுபடச் செய்தார். என்னைக் காத்தலில் உறுதியுடைய சிவனை நேத்திரத்தை அர்ப்பித்தலால் நான் சந்தோஷப்படுத்துகிறேன். என் கண்ணை அர்ப்பித்தும் சிவன் திருப்தியடையாராயின் நான்கூச்சமில்லாத மனத்தோடு பிராணனால் அவரை ஆராதிக்கிறேன்' என்ற புத்தியால் அவ்வேடன் சந்தோஷத்தோடு, முனிவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், கூர்மையான பாணத்தாலே தன் கண்ணைப்பறித்துச் சம்புவின் முகத்தில் நேத்திரஸ்தானத்தில் ஆதரத்தோடு வைத்தான். அப்பொழுதே தேவனுடைய அக்கண்ணானது முன்போல ஆகிவிட்டது. அக்கண்ணைப் பார்த்து வேடனும் மிக்க சந்தோஷத்தை யடைந்தான். மறுபடியும் அவனுடைய பக்தியைச் சோதிக்க அக்கணத்திலே ஈசுவரன் தம் மற்றொரு கண்ணை நீர் கொட்டுவதாகவும் கருவிழி மறைந்திருப்பதாகவுஞ் செய்தார். அவ்வேடர்சிகாமணியும் அதைப் பார்த்து, கூச்சமில்லாத மனத்தோடு ஈசுவரனுக்குக் கண்ணை அர்ப்பிப்பது இஷ்ட மென்றே யறிந்து செருப்போடு கூடிய ஒரு காலை அறிகுறியாக ஈசுவரனுடைய தலையில் வைத்து மற்றொரு கண்ணைக் கூர்மையான பாணத்தாலே அத்தியந்தப்பிரீதியோடும் பறிக்க இச்சித்தான். பகவான் ஈசன் மிக

மகிழ்ந்தவராய் அவனை அகங்கார மில்லாதவனாக எண்ணி இலிங்க மத்தியத்திலிருந்து தோன்றி அவனுடைய கையைத் தம் கையாற் பற்றிக்கொண்டு அவனுக்கு முன்போலவே கண்ணைக் கொடுத்து இனிய வார்த்தை சொன்னார்: "வேடனே! உன் பக்தியாலும், நியமத்தாலும், பூசையாலும், நீ எப்பொழுதும் விபூதிருத்ராக்ஷங்களைத்தரிப்பதனாலும், உன் வாய்ஜலத்தாலும், நீ எச்சில் பண்ணிய மாம்ஸத்தாலும், நேத்திரத்தை அர்ப்பித்தலாலும், உன்மனோதிடத்தாலும், செபத்தாலும், நானாவித உபசாரங்களாலும், நிரந்தரதியானத்தாலும், எங்குமுள்ள சமஸ்த விஷயங்களிலும் நிராசையாலும் மகிழ்ந்தவனானேன். இங்கு அதிகமாகச் சொல்லுவதால் என்ன உபயோகம்? உனக்குச் சமானமானவன் பூதலத்தில் இல்லை" என்று சொல்லி அவனைக் கண்ணப்பா என்றுசொல்லித் தழுவிக்கொண்டு, அவனுடைய பக்திமிகுதியைப் பார்த்துக்கொண்டிருந்த முனிவர்கள் வெட்கத்தால் தலைவணங்க அவனுக்கு வரங்களைக் கொடுத்தார். "இந்தப் பங்குனி மாசத்தில் பூர்ணிமையாகிய சுபதிதியில் வெள்ளிக்கிழமை உத்திரநாளில் மஹா புண்ணியமானதும் நிர்மலமான ஜலத்தை யுடையதும் இராமதீர்த்தத்திற்கு வடக்கிலுள்ளதும் சதுர்விதபுருஷார்த்தங்களைக் கொடுப்பதும் புக்திமுக்திதமென்னும் பெயருடையதும் முனிவர் சித்தர் தேவர்களால் ஆசிரயிக்கப்பட்டதுமான உன் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து எவர்கள் என்னை அர்ச்சிக்கிறார்களோ அவர்கள் என் சாரூப்யத்தை அடைக. உன்னுடைய இந்தக் கதையை எவன் ஆதரத்துடன் படிக்கிறானோ கேட்கிறானோ எழுதிக்கொடுக்கிறானோ பூசிக்கிறானோ அவனுக்கு என் ஆஞ்ஞையாலே சகல பாபங்களும் தொலைக. தேகாந்தத்தில் எல்லாராலும் விரும்பப்படும் என் உலகவாசமும் உண்டாகுக. உன் தீர்த்தத்தை ஒரு தடவை தியானஞ் செய்வதோ தொடுவதோ துதிப்பதோ பானம் செய்வதோ அதில் ஸ்நானஞ் செய்வதோ கண்ணெடுத்துப் பார்ப்பதோ எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் நானே. இதில் சந்தேகம் வேண்டுவதில்லை. நீ பாக்கியவான்; செய்யவேண்டியதைச் செய்து முடித்தவன்; எல்லாத் தேவர்களாலும் பூசிக்கத்தகுந்தவன். உன்னுடைய இச்சரித்திரம் உலகத்தில் கற்பந்தோறும் யுகந்தோறும் எங்கும் புதுமையானதுபோலப் பிரசித்தமாகுக! பிரகாசமாகுக! இப்படியே இந்த லிங்கத்தில் என்னைப் பக்தியோடு பூசைசெய்துகொண்டும் என் உருவத்தை இருதயத்தில் தியானஞ்செய்துகொண்டும் ஐந்து வருஷங்கள் இருந்து மறுபடியும் முன் சொல்லப்பட்ட எல்லாச் சிரேஷ்ட குணங்களோடுங் கூடிய இத்தினம் வந்தபொழுது புற்றில் பாம்பு தோலை விடுதல்போலத் தேகத்தை விட்டு எல்லாத்தேவர்

களாலும் விரும்பப்படும் என்சாரூப்யத்தை யடைந்து கைலாய சிகரத்தில் என் அருகில் வாசஞ் செய்வாயாக!'' என்று சொல்லி முனிவர்கள் பார்த்துக்கொண்டிருக்க லிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். அவனும் சிவாஞ்ஞையால் அங்கு ஐந்து வருஷங்க ளிருந்து பிறகு சரீரத்தை விட்டு உத்தமமான சிவசாரூப்யத்தை யடைந்தான். அப்பொழுது அங்கிருந்த மஹாத்மாக்களாகிய முனிவர்களும் வேடனுடைய சுத்தமான சரித்திரத்தை ஒருவர்க்கொருவர் சொல்லி ஆச்சரியமுற்ற மனத்தினராய் அத்தலத்தையும் கொண்டாடிப் பிறகு சிவனுடைய வைபவத்தை ஸ்மரிப்பவர்களாய் வந்த வழியே சென்றார்கள். வேடன் முத்தியடைந்தான். அப்படியே அங்கு அர்ச்சனை செய்தவர்களும் முத்தியடைந்தார்கள். அதனை நம்பி எவன் பிரயத்தினத்தோடு நன்றாகப் பூசைசெய்கிறானோ அவன் அகிலராஜ்யத்தையு மநுபவித்து இறுதியில் முக்தியையும் அடைகிறான். அந்தத் தேவேசன் முக்தியைக் கொடுக்கிறவர் என்று நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். அவர் சரண்யர் (காப்பதிற் சமர்த்தர்). வேதங்களால் அறியப்படுபவர். போக மோக்ஷங்களைத் தருபவர். அவரின் வேறானவன் பிராணிகளுக்கு மோக்ஷத்தையும் போகத்தையும் தரவல்லவனல்லன். அவரையன்றி வேறொருவனை அர்ச்சிப்பதில் ஈடுபட்டவர்கள் ஜன்மந்தோறும் தரித்திரராய்ப் புண்ணியமற்றவர்களாய்ப் பலவகை நீச ஜாதிகளிற் பிறந்தவர்களாவார்கள். [பகவான்] எவனுக்கு அனுக்கிரகஞ் செய்யவிரும்புகிறாரோ அவனுக்கு ராஜ்யத்தையும் சுகத்தையும் கொடுத்து முடிவில் மேலான மோக்ஷத்தையும் கொடுக்கிறார். இதில் சந்தேகமில்லை. பாபமற்றவரும் ஸம்ஸார பந்தத்தை யொழிப்பவரும் போக மோக்ஷங்களைத் தருபவருமாகிய அவரையே பக்தியுடன் எப்பொழுதும் [மாந்தர்] வழிபடுகிறார்கள். அந்தத் தலத்தில் வசிக்கிறவர்களுக்கு [பகவான்] இறுதியில் மோக்ஷத்தைக் கொடுத்தேவிடுகிறார். பிரமாண்ட மண்டலத்தில் அத்தலத்திற்குச் சமானமானது கிடையாது. எல்லாத் தேவர்க்குந் தேவராகிய சூலிக் கொப்பானவன் எவன்? எவர்கள் எல்லா நன்மைகளையும் விரும்புகிறார்களோ அவர்கள் அங்கிருக்கிற சிவனை வழிபடுக. முனியே! இன்று நான் அவ் வேடனுடைய அத்தியற்புதமான சரித்திரத்தை உனக்குச் சொல்லினேன். காருண்யநிதியாகிய சிவனுடைய பிரபாவத்தையும் சொன்னேன். நீயும் பாக்கியவானானாய்; நிச்சயம்.

ஸ்ரீ சிவபுராணத்திலுள்ள சிவரஹஸ்ய சங்கிரகத்தில் ஸ்ரீ காளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யத்தில் 'சபரனுக்கு முத்தி கொடுத்ததைச் சொல்லுகை' என்னும் பெயரிய ஐம்பத்துநான்காவது அத்தியாயம் முடிந்தது.

மணிமேகலையும் புத்தஜாதகமும்

மு. இராகவையங்கார்

அரை நூற்றாண்டுக்கு முன்பு நம் தமிழ்க்கலைமகள் அடைந்திருந்த தோற்றத்தினும் இப்போதுள்ள நிலை அதிகப்பொலிவுள்ளதென்றே சொல்லலாம். அக்காலத்தே அவள் தன் சீரிய அணிகளிற் சிறந்தனவற்றை அணிந்து விளங்கியவள் என்று சொல்வதற்கில்லை. அவற்றுள் ஒரு சிலவற்றைத் தமிழணங்கு அப்போது தரித்துவந்தவளாயினும், தன் செவ்விநலத்துக்கேற்ற திருந்திழைகளை மிகுதியும் பூண்டு பொலிவது இக்காலமேயாம். அச்சிங்காரவணிகள் சங்க நூல்களே என்பது சொல்லவும் வேண்டுமோ? அப்பேரணிகளிலே, இழுமென்னும் இன்னோசை கொண்டு, தமிழ்ப்பாவையின் விழுமிய நடையழகைச் சிறப்பித்து நிற்பவை இரண்டாம். அவை சிலப்பதிகாரம் மணிமேகலை என்பன. இந்நூல்கள் வெளிவந்த காலந் தொட்டுத் தமிழ்மக்களின் உள்ளங்களை இவை கவர்ந்துவரும் அளவு பிற நூல்கள் கவர்ந்தனவல்ல. இப்பேரணிகளை மாசுநீக்கித் தூய்மைசெய்து செப்பனிட்டுத் தமிழ்த்தெய்வத்துக்கு அணிந்துதவிய பெரியாரை நாம் வந்திப்போமாக. இவர்களாராய்ச்சியால் இந்நூல்கள்பற்றித் தெரியவந்த அரிய செய்திகள் அளவிறந்தன. இச்சங்க விலக்கியங்களில் ஈடுபட்ட தமிழறிஞர்களும் அறிந்த செய்திகளை அவ்வப்போது வெளியிடலாயினர். சமீபத்தில் புத்த ஜாதகக்கதைகளை யான் படித்துவந்தபோது இந்நூல்கள் சம்பந்தமான பௌத்தச் செய்திகள் சில எனக்குத் தெரியவந்தன. அவற்றை இப்போது வெளியிட விரும்புகின்றேன்.

1. மணிமேகலையும் ஜாதகக்கதைகளும்

சிலப்பதிகார மணிமேகலைகள் இரண்டும் ஒருகாலத்தவரான இளங்கோவடிகள், சாத்தனார் என்ற புலவர்பெருமக்களால் முறையே இயற்றப்பெற்றவை என்பதும், முன்னது கோவலன்கண்ணகிகளின் வரலாற்றையும், பின்னது அக்கோவலன் காதற்கணிகையான மாதவியின் மகள் வரலாற்றையும் கூறுவன என்பதும், அவற்றுள் மணிமேகலை சிலப்பதிகாரத்துக்கு முன்பே செய்யப்பட்டதென்பதும் பலரும் அறிந்தவை. மாதவிமகள் பௌத்தபிக்ஷுணியாகி நிகழ்த்திய அருஞ்செயல்கள் மணிமேகலை நூலிற் கூறப்படுகின்றன. இவள்

வரலாறுகளை நோக்குமிடத்து, அவை பெரும்பாலவும் உண்மை நிகழ்ச்சிகள் என்று இக்காலத்தவர் ஒப்பக்கூடியனவல்ல. புத்தபகவானது முற்பிறவி வரலாறுகளைக்கூறும் ஜாதகக்கதைகளைப் படித்து வருவோர்க்கு, அவற்றின் போக்கைத்தழுவியே மணிமேகலைச்செய்திகள் மிகுதியும் அமைந்துள்ளன என்பது எளிதில் விளங்கும். மணிமேகலையின் அமானுஷ்ய கிருத்தியங்களாகக் கூறப்பட்டவை யாவும் உண்மையாக நிகழ்ந்தனவாயின், சாத்தனார்க்குப்பின் தம் நூலைப் பாடி முடித்த இளங்கோவடிகள் அவற்றிற் சிலவற்றையேனும் கூறிச் சிறப்பிக்கத் தவறார் அன்றோ? அவ்வாறு ஒன்றுங்கூறாமல், கோவலன் இறந்ததும், மாதவியும் அவள்மகளும் புகாரில் பௌத்தசங்கத் தலைவராயிருந்த அறவணவடிகளைப் புகலடைந்து பிக்ஷுணிகளாயினர் என்ற வரலாறொன்றையே அவர் கூறிப்போதல் காணலாம்[1]. பண்டைக் காலத்துப் பௌத்தர்கள் தம் முற்பிறவி நிகழ்ச்சிகளை அறியமுயல்வதில் அதிக உற்சாகங்காட்டி வந்தவர்கள். அந்நிகழ்ச்சிகளை மிகுதியும் புனைந்துரைத்து, அவற்றின்மூலம் தம் சமயக் கொள்கைகளை உலகிற் பரப்பிவரலாயினர். இம்முறை, சைனரும் கொண்டதேயாம். இவை ஜாதகக்கதை முதலியவற்றால் விளங்குதல் போலவே, மணிமேகலையாலும் அறியப்படுகின்றன. தாம் எடுத்துக் கொண்ட நூல்வரலாற்றை உலகியல்புகளுக்கு ஒப்பக்கூறும் பெருநோக்கமுள்ள இளங்கோவடிகளும் தம் காலநிலைக்கேற்றபடி சன்மார்க்க நிகழ்ச்சிகளைப் புனைந்து கூறுவதிற் பின்வாங்கவில்லை. இவற்றால் இத்தகைய புனைவுரைகள் சங்ககாவியங்களில் அதிகம் எனின், அது, பண்டைத் தமிழ்மக்களின் மனங்கட்கேற்ற 'காப்பியவமைதி' என்றே நாம் கருதல்தகும். இனி, முதலில் மணிமேகலை வரலாறுகள் சிலவற்றை நோக்குவோம்.

2. மணிமேகலா தெய்வம்

கோவலன் தன் ஒன்பதாந்தலைமுறை முன்னோனும் புண்ணிய சீலனுமான வணிகனொருவன், தேசாந்தரஞ்செல்லுதற்கு ஏறிச் சென்ற மரக்கலங் கவிழ்ந்தமையால் கடலிடையே ஆதரவற்று அவன் வருந்தி நின்றபோது, மணிமேகலை என்ற தேவதை ஆங்குத் தோன்றி அவனைக் காத்துதவினள் என்றும், அப்பேருதவியைப் பாராட்டியே, கோவலன் தனக்கு மகள்பிறந்ததும் அத்தேவதையின் பெயரை அவளுக்கு இட்டுவழங்கினன் என்றும் சாத்தனாரும் இளங்கோவடிகளும் கூறுவர்[2]. இம்மணிமேகலா தெய்வத்தைப்

---

1. சிலப்பதிகாரம், 30, 10—36.
2. மணிமேகலை, 29, 14—31; சிலப்பதிகாரம், 15, 28—37.

பற்றி, ஜாதகக்கதைகளினும் வரலாறுகள் வழங்குகின்றன. உலக பாலரான தேவர்களால் மணிமேகலை என்பாள் சமுத்திர தேவதையாக நியமிக்கப்பட்டு, தருமசீலர்கள் கடலிடையே கலங்கவிழ்தல் முதலியவற்றால் வருந்துமிடத்து, அவர்களை உற்ற சமயங்களிற் காத்துதவும்படி ஆணையிடப்பட்டிருந்தனள் என்பதும், அம்முறையே, அந்தணனான **சங்கன்** என்பவனும், அரசகுமாரனான **மஹாஜனகன்** என்பவனும் மரக்கலச்சிதைவால் கடலிடையே வருந்தி நின்றபோது, **ஏழாநாளில்** அம்மணிமேகலா தெய்வத்தாற் காக்கப்பட்டனர் என்பதும் அந்த ஜாதகக் கதைகளிற் கூறப்பட்டுள்ளன.[1] இச்செய்தியை நான்கு வருஷங்கட்குமுன்னர் நான் எழுதி வெளியிட்ட **சேரன் செங்குட்டுவன்** சரித்திர நூலிற் குறிப்பிட்டுளேன் (பக். 43-4). இவ்வொற்றுமையைச் சரித்திராசிரியரான **டாக்டர்-ஸில்வன் லேவி** (*Dr. Sylvain Levi*) என்பாரும் கண்டுகொண்டு, மற்றுஞ்சில விசேடச்செய்திகளுடன் சென்றவாண்டில் கட்டுரைகள் வரைந்திருக்கின்றனர்[2]. இந்து-சைனு, சீயம், பர்மா, இலங்கை முதலிய பிரதேசங்களில் மணிமேகலாதெய்வத்தின் வரலாறுகளாக வழங்குவன சில அவர் வியாசத்தால் அறியப்படுகின்றன. அவற்றினின்றும், கன்னியாகுமரிக்குக் கிழக்கேயுள்ள தீபாந்தரங்களெல்லாம் இந்தச் சமுத்திரதேவதையின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்தன என்பதும், போதிசத்துவராகக் கூடிய புண்ணியசீலர் கடலிடையே வருந்துகின்றபோது இந்திரனேவலால் இத்தேவதை **ஏழுநாள்**களுக்குள் காத்து உதவிவந்தவள் என்பதும், புத்தபகவானிடம் இத்தெய்வத்துக்குள்ள பத்திமேலீட்டால் அப்பகவானுக்குச் சைத்தியங்கள் செய்வித்தும் மனமுருகி வழிபட்டும் வந்தவள் என்பதும் விளங்குகின்றன.

"நின்னுயிர்த் தந்தை நெடுங்குலத் துதித்த
மன்னுயிர் முதல்வன் மகர வேலையுள்
முன்னிய வங்க முங்கிக் கேடுற
* * *
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத ஞவோன் நளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றுன்றன தெவ்வந் தீரென"
"தீவ திலகையுந் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித் தேத்துதற்கு

---

1. The *Jātaka* by Prof. E. B. Cowell, No. 442, 539.
2. Indian Historical Quarterly "More on Maṇimēkhala" Vol. iii, No. 2.

ஒத்த கோயி லுளத்தகப் புனைந்து
விழவுஞ் சிறப்பும் வேந்த னியற்ற'' (29,14—25)

என்பனபோலும் பகுதிகளால், மேற்கூறிய செய்திகள் மணிமேகலையினுங் கூறப்படுதல் காணலாம். புத்தபகவானிடம் வைத்த பத்தி மிகுதியால் மனந் தன்வசமிழந்து, இறுதியெல்லையாகிய ஏழாநாளில் இத்தெய்வம் போதிசத்துவருடைய துன்பநிலையை உணர்ந்து உதவ முன்வருவள் என்பர். இவற்றால், ஜாதகக்கதைகளிலும் பௌத்த தேசங்களிலும் வழங்கும் மணிமேகலாதெய்வம், சாத்தனர் இளங் கோவடிகள் காலத்தே பிரபலமான கடற்றேவதையாகக் கருதப்பட்டு வந்தவள் என்பது பெறப்படுகின்றது.

3. பாண்டுகம்பளந் துளங்குதல்

''ஈண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கியது'' (14, 28-29)

''தனது பாண்டு கம்பளம்
தானடுக் குற்ற தன்மை நோக்கி
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னவோ னளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றுன்றன தெவ்வந் தீரென'' (29, 14-25)

என்னும் அடிகளால், உலகில் போதிசத்துவர்கள் (=போதி மூலத்து நாதனவோர்) தோன்றி அருஞ்செயல்கள் நிகழ்த்து மிடத்தும், அவர்கட்கு இடுக்கண் விளையும் காலத்தும் இந்திரனது ஆசனமாகிய பாண்டுகம்பளம் நடுங்கும் என்றும், அஃதறிந்து அவன் உரியவற்றைச் செய்ய முந்துவன் என்றும், அம்முறையே ஆபுத்திரனது தருமச்செயல்களும், கோவலன் முன்னோனது கடல்விபத்தும் இந்திரனது ஆசனத்தைக் கம்பிக்கச்செய்ய அஃதறிந்து அவ்விந்திரன் நேரிலோ பிறர்மூலமோ தன் கடமையைச் செய்பலாயினன் என்றும் கூறப்படுதல் தெரியலாம். பாண்டு கம்பளம் என்பது இந்திரனது கம்பளவடிவான ஆசனம் என்று இதுவரை கருதப்பட்டது. ஆனல், ஜாதகக்கதைகளில் இஃது ஒப்புயர்வற்றதும் மஞ்சணிறமுள்ளதுமான ஸ்படிகமணியால் அமைந்த சிங்காதனம் என்று கூறப்படுகின்றது.[1]

''ஹா! பாண்டு கம்பல சிலா!
ஹா! தேவஸபா''

---

1. The *Jātaka*, Vol. ii, p. 63; iv, p. 168.

என்ற திவ்யாவதானத் தொடராலும்[1], இவ்வாசனம் சிலைவடிவானது என்பது தெரியலாம். மேற்கூறியபடி, போதிசத்துவரால் உண்டாக்கப்படும் நிகழ்ச்சிகளால் இவ்வாசனங் கம்பித்ததென்று மணிமேகலை கூறியபடியே, ஜாதகக்கதைகளிலும் அடிக்கடி இச்செய்தி கூறப்படுதல் அறியத்தக்கது.

4. மணிபல்லவம்

மணிபல்லவம் என்ற தீவிற்கு மேற்கூறிய சமுத்திரதேவதையால் மணிமேகலை அழைத்துச்செல்லப்பட்டதும், அங்குள்ள புத்த பீடிகையால் அவள் தன் பழம்பிறப்பு உணர்ந்துகொண்டதும், அங்கே பொய்கையொன்றிற் பெற்ற அமுதசுரபி என்ற அக்ஷய பாத்திரத்தோடு அவள் வெளியேறி அறங்கள் பல செய்ததும், பிறவும் மணிமேகலைநூலால் அறியப்படும். இம்மணிபல்லவம், காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தெற்கே[2] முப்பது யோசனையில் உள்ளதாகச் சாத்தனர் கூறுவர். இத்தீவு, இப்போது யாழ்ப்பாணப் பகுதிகளுள் ஒன்றாகவே பலராலும் கருதப்படுகின்றது. அவற்றுள்ளும் காரைத்தீவு என்றபகுதியே மணிபல்லவமாகக் கருதப் பொருத்தம் உண்டு. இதற்கும் புகார்நகர்க்குமிருந்த தொடர்பை அடியில்வரும் அகித்தி ஜாதகக்கதையால்[3] அறியலாம்.

காசியில், பெருஞ் செல்வமுடைய பிராமணகுடும்பமொன்றிற் பிறந்த அகித்தி என்பவர், தம் தந்தை இறந்ததும் தமக்குக் கிடைத்த செல்வமுழுமையும் ஏழுநாளில் தானதருமங்களிற்செலவு செய்துவிட்டுத் துறவியாய்த் தம் சகோதரியுடன் தமிளராஜ்யத்துக்குச் சென்று, காவேரிப்பட்டினத்தில் உள்ள உபவனமொன்றில் தங்கித் தியானத்திலிருந்தனர் என்றும், பின் அவ்விடமும் அவர்க்கு ஏற்றதாகாமையால், ஆகாசவழியே நாகதீபத்தின் வடபாலுள்ள காரைத்தீவிற்குச் சென்று, அங்கிருந்த காரைமரத்தின்கீழ்க் குடிலமைத்துக்கொண்டு அதனுளிருந்து தனியே நோற்றுவந்தனர் என்றும், அவரது அருஞ்செயல்கள் இந்திரனதுபளிங்காசனத்தை நடுங்கச்[4] செய்யவே, அவன் நேரில்வந்து அவரது பெருமையை அறிந்து உரியவற்றைச்செய்து சென்றான் என்றும் அந்த ஜாதகங் கூறுகின்றது. இலங்கையை நாகதீபம் என்ற பெயரால் ஜாதகங்கள் பலவும்

---

1. *Divyāvadāna*—University Press, Cambridge, pp. 194-5.
2. மணிமேகலை, 10, 57.
3. The *Jātaka*, Vol. v, p. 150.
4. இந்திரனது பளிங்காசனத்தைக் கொதிக்கச் செய்ததாக மொழிபெயர்ப்புக் கூறும்.

வழங்கும்[1]. இத்தீபத்தின் வடபால் உள்ள காரைத்தீவு பௌத்தர்களால் முற்காலத்தே பெரிதும் மதிக்கப்பட்டதென்பதற்கும், காவிரிப் பூம்பட்டினத்தோடு இதற்கு நெருங்கிய தொடர்பிருந்தது என்பதற்கும் இக்கதையே தக்க சான்றுதலால், மணிமேகலையிற்கண்ட மணிபல்லவம் இவ்வியாழ்ப்பாணத்தீவாகக் கருதற்குரியதன்றோ ?

5. மணிபல்லவத்துப் புத்தபீடிகை

மேற்கூறிய தீவிலிருந்த புத்தபீடிகையின் தரிசனத்தால் மணிமேகலை தன் பூர்வஞானம் பெற்றவள் என்பது அவள் வரலாற்றால் தெரியலாம். இப்பீடிகையின் வரலாற்றை,

"தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனம்
கீழ்நில மருங்கி னாகநா டாளும்
இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
எமதீ தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு வொழிமின் எமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்
தரும பீடிகை" (9, 5 2-63)

என்ற அடிகளிற் காண்க. இவற்றால், நாக நாட்டரசர் இருவர் அம்மணிப்பீடிகையைப் பெறவிரும்பிப் பெரும்போர் புரிந்துவந்தபோது, புத்தபகவான் ஆங்குத் தோன்றி, அது தமக்குரியதென்று கூறி, அதனில் வீற்றிருந்து அவர்கட்குத் தருமோபதேசம் புரிந்து அன்னோர் கொண்டிருந்த பகைமைநீக்கி உய்வித்தருளினர் என்பது விளங்கும். இவ்வரலாறே, இலங்கைச் சரித்திரமாகிய மகாவமிசத்தும் சிறுமாறுபாட்டுடன் கூறப்பட்டுளது. நாகதீபத்தில், மகோதரன் சூலோதரன் என்ற மாமனும் மருகனுமாகிய அரசரிருவர்க்குள் மணியிழைத்த சிங்காதனமொன்றன் விஷயமாக விவாதமுண்டாய்ப் பெரும்போர்நிகழப் புத்தபகவான் அதனைத் தடுக்கவிரைந்து அவர்கள் முன் பிரசன்னராகி, அன்னோரது அஞ்ஞானம் நீங்கும்படி தருமோபதேசம் புரிய, உடனே அவ்விருவரும் தம் பகைமை நீங்கி அவ்வாசனத்தைப் பகவானுக்கே சமர்ப்பித்தனர் என்றும், அம்மணியாசனத்தில் அவர் வீற்றிருந்து, அவ்வேந்தரளித்த தெய்வவுணவை அமுது செய்தனர் என்றும், பின் ராஜாயதன (அரசு

1. The *Jātaka*, Vol. ii, 90; iii, 124 ; iv, 150.

போதும்) மரக்கிளையை ஆங்கே அடையாளமாக நாட்டி அம்மணிப் பீடிகையையும் அவர்க்கே திரும்பவளித்து அதனை வணங்கிவரும் படி ஆணையிட்டுச் சென்றனர் என்றும் அந்நூலுட் காணப்படுகின் றன[1]. இம்மகாவமிசவரலாறும் புத்தஜாதகங்களுள் ஒன்ருகவே கருதத்தக்கது. இவற்ருல் மணிபல்லவப் பீடிகைச்செய்தி, இலங்கை வரலாற்ருலும் ஆதரிக்கப்படுதல் அறியப்படும்.

6. இந்திரவிகாரம்

காவிரிப்பூம்பட்டினத்தில், ஏழரங்குகள் உடையதாய் மிகப் பிர பலம் பெற்ற பௌத்தவிகாரம் ஒன்றிருந்த செய்தி சிலப்பதிகார மணிமேகலைகளால் அறியப்படுகின்றது. இதனை ஆதியில் நிருமித் தவன் இந்திரன் என்று அந்நூல்கள் கூறும். அசோக சக்கரவர்த்தி யால், பௌத்தமதப் பிரசாரஞ்செய்வதற்கு அனுப்பப்பட்ட அவன் இளவலும் பிக்ஷுவுமான மகேந்திரன் என்பான், தமிழ் நாடு சென்று சோணுட்டில் ஒரு பெரிய விகாரங்கட்டிக்கொண்டு அத னிற் சிலகாலம் வசிக்கலாயினன் என்றும், அவ்விகாரத்தின் இடிந்த பகுதிசில 7-ம் நூற்ருண்டில் இங்கு வந்து சென்ற யுவான் ஸுவாங் காலத்தும் காணப்பட்டன என்றும் கூறப்படுகின்றன[2]. இங்கே சோணுட்டிற் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுவது, காவிரிப்பூம் பட்டினத்தில் விளங்கிய விகாரமாகவே கொள்ளல் பொருத்தமாகும். ஆயின் இந்திரவிகாரம் என்பதற்கு மகேந்திரன் கட்டிய விகாரம் என்பதே பொருளாக வேண்டும். அரசகுலத்தவனை இந்திரன் அல்லது மகேந்திரன் கட்டியதொன்றே தேவனை இந்திரன் கட்டிய தாகப் பின்னோராற் கருதப்படலாயிற்று என்பது இதனாற் பெறப் படும். மகேந்திரன் கட்டிய விகாரம் அமைந்த ஊரை வேருகச் சிலர் கருதுவர்.

7. கச்சித் தருமதவனம்

மணிமேகலை, கச்சிமாநகர் சென்றபோது, அந்நகரின் தென் மேற்காகவுள்ள தருமதவனத்தை முதலில் அடைந்தனள் என்றும், அவள் வருகையறிந்த அந்நகரத்தரசனை இளங்கிள்ளி மணிமேகலை யைச் சென்று வணங்கிய பின், அவளேவலால், மணிபல்லவப் பீடிகை போன்ற பீடிகையும், மணிமேகலா தெய்வம் வழிபடற் கேற்ற புத்தசைத்தியமும் வகுத்தனன் என்றும், அவ்வுபவனத்தே மணிமேகலை அறஞ்செய்து கொண்டிருக்கும்போது, அறவணவடி

1. *Mahāvaṁśa*, 1, 45-49.
2. V. A. Smith's *The Early History of India*, 3rd Edition, p. 185.

களைத் தன் தாயுடன் ஆங்குச் சந்தித்தனள் என்றும் கூறப்பட்டுள்ளன. சீனயாத்திரிகரான யுவான் ஸுவாங்கும், கச்சிக்குத் தெற்கேயுள்ள சங்காராமம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடுதல் இதனுடன் ஒப்பிடத்தக்கது. இவ்வாராமத்துள், அசோகனாற் கட்டப்பட்டதாகக் கருதப்பட்டதும் 100 அடி உயரமுள்ளதுமான ஸ்தூபமொன்று தம் காலத்து விளங்கியதாகவும் இதனுள் பௌத்தப் பெரியோரும் கற்றவர்களும் கூடும் இடமுள்ளதாகவும் அவர் குறிப்பிடுவர்[1]. அசோகன் கச்சியில் ஸ்தூபம் கட்டியதாகச் சொல்லப்படுவதற்கு வேறு தக்க சான்றின்மையால், அஃது இளங்கிள்ளி கட்டியவற்றுள் ஒன்றாகவே கருதத்தக்கது[2]. மயிலுருவமாக அமைந்த கச்சிமாநகர்க்குத் தோகைபோல் அமைந்த சோலையொன்று இருந்ததென்பது,

“வரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிருக்
காருடைய பீலி கடிகாவாச்—சீருடைய
அத்தியூர்[3] வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு”

என்ற பழைய வெண்பாவால் அறியலாம். இதனுட் கூறப்பட்ட கடிகா மணிமேகலை கூறும் தருமதவனம்போலும்.

8. அறவணவடிகள்

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிகாரத்திருந்த பௌத்த சங்கத்தாரின் தலைவரும் மாதவிமணிமேகலையிருவரையும் பிக்ஷுணிகளாக்கிய பெரியாருமாகிய அறவணவடிகள், புகாரைக் கடல்கொண்டதும் மாதவியுடன் கச்சிமாநகரடைந்து, மணிபல்லவத்தினின்று வந்த மணிமேகலையை ஆங்குச் சந்தித்து, அவளுக்குத் தருமோபதேசஞ்செய்துகொண்டு, அவளுடன் கச்சியிலே தம் இறுதிக் காலத்தைக் கழித்தவர் என்பது மணிமேகலையால் அறியலாம். இவ்வறவணவடிகளை,

‘மறவண நீத்த மாசறு கேள்வி யறவணவடிகள்’
‘நரைமுதிர் யாக்கை நடுங்காநாவி னுரைமூதாளன்’

என்றும் பிறவாறும் சாத்தனார் பலபடப் புகழ்வர். இப்புலவர் உள்ளுருகி அறவணவடிகள் பெருமையைத் தம் நூலிற் சிறப்பித்துக்கூறுவதை நோக்குமிடத்து, சாத்தனார்க்கும் ஞானகுருவாய் விளங்கியவர் இவ்வடிகளோ என்ற ஐயம் நிகழக்கூடியதேயாம். இவ்வடிகள் கச்சி

---

1. Beals *Siyu Ki*, Vol. ii, p. 230.
2. Buddhistic Studies—*Buddhism in Tamil Literature* by Mr. V. R. Ramachandra Dikshitar, M. A., pp. 687-8.
3. அத்தியூர்—சின்ன காஞ்சீபுரம்.

மாநகரில் தம் இறுதிக்காலத்தைக் கழித்தவர் என்பதற்கு மற்றொரு சிறந்த ஆதாரவும் உண்டு. பெரிய காஞ்சீபுரத்தில் அடிஸன் பேட்டைக்குச் சமீபத்தில் உள்ள தொண்டைமானத்தத்தை அடுத்து அறப்பணஞ்சேரி என்ற தெரு உள்ளது. இச்சேரிப்பெயர் அறவண வடிகள் நாமம்பற்றி வழங்கியதாக வேண்டும் என்பது அவற்றின் பெயரொற்றுமையால் எளிதில் உணரப்படும். அறவணன்சேரி என்பது அறப்பணஞ்சேரி என மாறுதல் தமிழ்வழக்குக்கு ஒத்ததே யாம். காஞ்சியில், கச்சபேசுவரர் ஆலயத்துக்கு வடபாலுள்ள தெரு புத்தேரி (புத்தச்சேரி) என்ற பெயரால் வழங்குதலும் அறியத் தக்கது. பௌத்தர்கள் ஒரு காலத்தே இத்தெருவில் மிக்கு வசித்தவர் கள் என்பது இதனுல் அறியப்படும். ஏகாம்பரநாதர் கோயிலிலும் பிறவிடங்களிலும் அகப்பட்டுள்ள புத்தச் சிலைகளும், பிற பௌத்த அடையாளங்களும், யுவான்ஸுவாங் கூறியவாறே, 7-ம் நூற்றாண்டுக்கு முன்பே பௌத்தமயமாக ஒருகாலத்துக் கச்சிப்பதி யிருந்த நிலைமையைக் குறிப்பிக்கக்கூடியன.

9. ஏழு என்ற எண்வழக்கு

ஏழு என்ற எண், பௌத்தருள் சிறப்பாகக் கொள்ளப்பட்டிருந்த செய்தி மணிமேகலையால், அறியப்படும். இதனை,

"எழுநா ளெல்லை யிடுக்கண்வந் தெய்தா" (29, 19)
"இன்றேழ் நாளி லிந்நகர் மருங்கே, வந்து தோன்றும்" (7, 24)
"இன்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனெடு நின்பிறப் புணர்ந்து" (7, 106-107)
"எழுநா ளெல்லையு ளிரவலர்க் கீத்து" (28, 129)

என்பன முதலியவற்றுல் அறியலாம். போதிசத்துவரது துயரை ஏழாம் நாளில் மணிமேகலா தெய்வம் தீர்த்துவைத்ததென்பதும், அப்புண்ணியசீலர் ஏழுநாள்களில் தம் செல்வத்தைத் தானவழியிற் செலவிட்டனரென்பதும், மற்றும் பல செய்திகட்கு ஏழு நாள்கள் கொள்ளப்பட்டிருப்பதும் புத்தஜாதகங்களிலும் பரக்கக்காணலாம்[1]. 'நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும், எழுநாளே மேனி பசந்து' (1278) என்ற குறளும் இவ்வழக்குப்பற்றிக் கூறப்பட்டதுபோலும்.

10. பிக்ஷுக்களுக்குத் தாம்பூலம் உதவல்

அறவணவடிகள் கச்சியிலுள்ள தருமதவனத்தே மணிமேகலையைச் சந்தித்தபோது, அவள் அவ்வடிகளை வணங்கி,

---

1. The *Jātaka.* See Index, *Seven.*

"நன்றென விரும்பி நல்லடி கழுவி
ஆசனத் தேற்றி அறுசுவை நால்வகைப்
போனக மேந்திப் பொழுதினிற் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து" (28, 240-43)

உபசரித்தனள் என்று சாத்தனுர் கூறுவர். இதனுள் திரையல் என்பது வெற்றிலையும், பளிதம் என்பது கர்ப்பூரமும் ஆகும். இவ்வாறு, உணவளித்தபின் தாம்பூலம் படைத்துப் பிக்ஷுவை உபசரிக்கும் வழக்குப் புத்தஜாதகம் ஒன்றினுங் காணப்படுகின்றது[1]. தாம்பூலந் தரிக்கும் வழக்கம் பிற்காலத்ததே என்று, சரித்திரகாரர் சிலர் கொண்ட கருத்துத் தவறுனது என்பது இந்த ஜாதகச் செய்தியால் வெளியாகத் தடையில்லை. தாம்பூலத்திற் சுண்ணும்புக்குப் பிரதியாகக் கர்ப்பூரமிட்டுக் கொள்ளுதல் பண்டை முறையாகும்.

"அடகு புலால்பாகு பளிதமு முண்ணுன்
கடல்போலுங் கல்வி யவன்" (தோல். இடை. 36, இளம்.)

என்ற பழைய குறள்வெண்பாவினும் கர்ப்பூரமே தாம்பூலத்திற்கு உரியதாகக் கூறப்படுதல் காண்க.

11. பிக்ஷுணிகளின் சமயவாராய்ச்சி

மணிபல்லவத்தினின்று வஞ்சிமாநகர்க்கு ஆகாயவழியே சென்ற மணிமேகலை, அந்நகரில் தங்கிச் சமயவாதியர்பலருடன் அளவளாவி அவ்வவர் கொள்கையை அறிந்துகொண்டனள் என்று கூறப்படுகின்றது. இவ்வாறே பௌத்தபிக்ஷுணிகள் முற்காலத்துச் சமயவாராய்ச்சியில் முனைந்துநின்றவர்கள் என்பது ஜாதகக்கதையாலும் விளங்கும். மதபேதங்களைத் தெரிந்து உண்மையறியவே மணிமேகலை சமயக்கணக்கருடன் அளவளாவியவளாயினும், சமயவாதப்போரை நேரில் நடத்திவந்தவர் பழைய பௌத்தமகளிர் என்பது ஜாதகக் கதையால் அறியலாம். குண்டலகேசியென்பாள் பௌத்தசங்கத்தைச் சார்ந்தபின் இவ்வாறே வாதம் புரிந்து பிறசமயத்தவரை வென்று பௌத்தசமயத்தை நிலைநாட்டியவள் என்று அவள் வரலாறு கூறுகின்றது. சைனரிலும் இத்தகையோர் உண்டென்பது நீலகேசிவரலாற்ருல் அறியப்படும். சமயவாதத்துக்குச் செல்லும் மகளிர் நாவல்மரக்கிளையைக் கையிற்கொண்டு சென்று அதனைக் குறித்த விடத்தே நட்டுப் பிறமதத்தவரை அறைகூவி வாதுக்கழைப்பதுண்டு[2] என்பது குண்டலகேசி சரிதத்தால் அறியலாம். இவ்வழக்கு ஜாதகக்கதையொன்றுலும் நமக்குத் தெரியவருகின்

1. The *Jātaka*, Vol. i, pp. 132, 152.
2. செந்தமிழ்த் தொகுதி, 1, பக். 94,

றது.[1] அதனில், அறைகூவி நட்ட நாவற்கிளையைப் பிடுங்கியெறிந்து மிதிப்பாருடன் அவ்வாதம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. நாவல் என்பதற்குப் போருக்கழைத்தல் என்ற பொருள் கூறுவர் மயிலைநாதர்[2]. 'நாவலோ நாவல்' என்பது அறைகூவும்போது வழங்குந் தொடர். 'நாவலிட் டுழிதர்கின்றோம் நமன்றமர் தலைகள் மீதே' என்றார் தொண்டரடிப்பொடிகளும்[3]. இத் தமிழ்நூல்வழக்கு நாவல் மரக்கிளையை நட்டு எதிரிகளை அறைகூவியழைக்கும் மேற்குறித்த செய்தியுடன் ஒப்பிட்டறியத்தக்கது. பிறரைத் தடைசெய்தலைக் குழைபிடித்தல் என்றதொடரால் யாழ்ப்பாணத்தார் வழங்குவதும் இந்நாவல்வழக்கைக் குறிப்பதுபோலும்.

12. பிற வழக்குக்கள்

இவ்வாறே ஜாதகக்கதையிற் கூறப்பட்ட பௌத்தச் செய்திகள் பலவற்றை மணிமேகலையிலும் நாம் காணலாகும். உதாரணமாக:—

1. இருத்திபெற்ற பௌத்தப் பெரியோர் ஆகாயவழியே சேறல் (ii, 70, 71, 191).
2. உபவனங்கள் பௌத்தமுனிவர் தங்குமிடங்களாக அமைதல் (vi, 37).
3. பிக்ஷாபாத்திரப் பெருமையும், அதுகொண்டு மன்னுயிர்க்கு உணவளித்தற் சிறப்பும்.
4. சக்கரவாளகிரிச் சிறப்பு (v, 137).
5. சக்காவாளக் கோட்டம் போன்ற நகரமயானங்கள் அறச்சாலையாதல்.
6. சதுக்கப் பூதர்க்கு (நாற்சந்தியிலுள்ள தேவதைகட்கு)ப் பலியிடும் வழக்கு (i, 187).
7. பளிக்கறைச் செய்தி.

என்பன முதலியன காண்க. பஞ்சகாலம் நேர்ந்தமையால் மணிமேகலை கச்சிமாநகர் சென்று, அமுதசுரபி என்ற தன் அக்ஷய பாத்திரத்தைக் கையில் ஏந்தியவளாய் 'உண்ணுதற்கு எல்லா உயிர்களும் வருக' என்றழைத்ததும்,

> "மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
> காணார் கேளார் கான்முட மானோர்
> பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
> படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
> மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்

---

1. The *Jātaka*, Vol. iii, p. 1.
2. நன்னூல், 100, உரை.
3. திருமாலை, 1.

பன்னா ருயிரம் விலங்கின் ஞெருகுதியும்
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி ''

அவ்வமுதசுரபியின் உணவை அருந்தி மகிழ்ந்தன என்றும், அவ்வறச்செயலால் எங்கும் மழைபெய்து நாடு வளம்பெற்றதென்றும் மணிமேகலை கூறும். கச்சிமாநகர்க்கு இத்தகைய அறச்செயல்கள் முற்காலத்துச் சிறந்திருந்தன என்பது மற்ருெரு வரலாற்ருலும் தெரிகின்றது. அந்நகரிற் கோயில்கொண்ட ஸ்ரீகாமாக்ஷியம்மை சிவபிரானை நோக்கித் தவம்புரிந்த காலத்தே தான்பெற்ற இருநாழி நெற்கொண்டு எண்ணான்கறங்களையும் செய்து வறுமையால் வருந்திய மன்னுயிர்களைக் காத்தருளினள் என்பது அந்நகர்ப் புராண வரலாறு. இக்கதை, மேற்குறித்த மணிமேகலைவரலாற்றுடன் ஒருவகையில் ஒப்பிடத்தக்கதாகும். மற்றும் புத்ததேவரது முற்பிறவி வரலாறுகளாக மணிமேகலை முதலியன கூறுவனவற்றை ஜாதகங்கள்மூலம் விரிவாக நாம் அறியலாம். அவற்றை இங்கு விரிப்பிற் பெருகும். இந்த ஜாதகங்களால் வேறு தமிழ்நூல்களிற் கண்ட வழக்குக்கள் சிலவும் அறிய இடமுண்டு. உதாரணமாக அடியில் வருவன காண்க :

'' நாய்பெற்ற தெங்கம் பழம்.'' (பழமொழி. 216)—இது பயனின்மையைக் குறிக்க ஜாதகத்தில் (v, 206) வழங்கப்படுகின்றது.

'' காழ்வரை நில்லாக் கடுங்களிற் ஞெருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு'' (கலித்தொகை)—யானை யாழிசைக்கு வசப்படுதலை ஜாதகமுங் (vi, 127, 130) கூறும்.

இவ்வாறு புத்தஜாதகம் போன்ற பௌத்த வரலாறுகளை அடிப்படையாகக்கொண்டு மணிமேகலைச் செய்திகள் அமைந்தவையாயினும், அந்நூல் கூறுவன யாவும் கற்பனைகளே என்று நாம் கருதிவிடல் தகாது. மணிமேகலைகாலத்து அமைந்த அரசியன் முறைகளும், அவ்வச்சமயங்களின் நிலைமையும், மக்களின் வழக்கவொழுக்கங்களும், மற்றும் பல அரிய தமிழ்வழக்குக்களும் சரித்திரவாராய்ச்சிக்கு உற்றவைகளாகும். உண்மை நிகழ்ச்சிகளான செய்திகளும் அந்நூலுள் அநேகமுள்ளன. அவை இன்ன இன்னவென்பதை எடுத்துரைத்தற்கு இஃது இடமன்று. இவற்ருல் ஜாதகக்கதைகள் போலும் பழைய பௌத்தநூல்கள், தமிழ்நூல் வழக்குக்களை அறிதற்கு ஏற்ற சாதனங்களாயிருத்தலால், அவற்றை அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துதவல் பெரிதும் வேண்டத்தக்கது என்னலாம்.

தொழிற் சிறப்பு

ரா. இராகவையங்கார்

கடவுள் வாழ்த்து

எல்லா மலர்வ தெவன்கொப்பூ ழிவ்வுலகம்
எல்லாந் தரிப்ப தெவன்வயி றிவ்—வெல்லாம்
புரப்ப தெவனருளப் பொய்யாத தெய்வம்
இருப்ப வியங்கு மெலாம்.

1. எவனின்று மன்பதைகட் கிவணுதய மெய்தியதோ
இவைமுழுது மெவனாலே யினிதுநிறைந் துள்ளனவோ
அவனைத்தன் றொழிலானே யாராதித் தொருமனிதன்
இவர் தருவன் சித்தியினி லெனமுதுநான் மொழிவதுவே.
(ஸ்ரீ கீதை-18-46.)

2. எல்லாமும் வினைசெய்தே யிருக்கவென வெல்லாஞ்செய்
வல்லாள னெண்ணியதான் மரங்கள்செடி கொடிமுதலாச்
செல்லாது நிற்பனவுந் திரிவனவு மாமெவையும்
சொல்லாமற் றொழில்புரிந்தே துலங்குவன கண்டீரே.

3. காரியங்குந் தீயியங்குங் கடும்பரிதி தானியங்கும்
ஊரியங்கு மொளிர்மதியு முடுவிசும்பின் மீதியங்கும்
பாரியங்கும் பிறகோளும் பகுத்தியங்கு மியங்காவேல்
நீரியங்கு மாறுளதோ நிலைத்திணையு மிலையாமே.
ஊர்-பரிவேடம். நீர்-இயங்கு திணையாகிய நீவிர்.

4. வினைபுரியாப் பொழுதத்தே வெறும்பிணமாய்ப் போவதுமெய்
எனையபல வினைசெய்தோ விருப்பதெனத் தெரிவீரால்
நினைவனவுங் கற்பனவு நிகழ்த்துதற்கே துணையென்று
மனையினிலும் வெளியினிலும் வளர்தொழிலே புரிவீரே.
மெய்-உடம்பு. எனையபல-எத்துணையோ பல.

5. மூச்சுவிடு முள்ளீர்க்கு முடுகுதிர நரம்போட்டும்
பேச்சியம்பு மலசலங்கள் பெயர்த்துவிடு முளமடிக்கும்
நாச்சுவைகண் டுட்கொள்ளும் நனிசெரிக்கு மின்னபல
மீச்செயலா லன்றோநம் மெய்யிருப்ப தென்பதுவே.

6. ஒருமரமோ தன்னைத்தா னுண்டுபண்ண வெத்துணையோ
பெருமுயற்சி செய்வதெனப் பெயர்த்துரை மாட்டாதார்
திருமயற்சி தானின்றிச் செல்லளவும் பிறர்மெய்யால்
வருமுயற்சி தருபொருளால் வயிறருத்தி வாழ்குவரே.
செல்லளவும்-உயிர்போம்வரையும்.

7. இவனுயிருக் கிதமாக வியல்வதனை யெவ்வெவனுந்
தவமுயன்று புரியானேற் றன்னிருணந் தவிரானல்
அவமிகந்து வினைமுடித்தோ னகத்தினெழும் பெருமகிழ்வைப்
பவமுழனும் வினைமுடியான் பரிப்பதுவு மிலையாலோ.
தவ-மிக. தன் இருணம்-தன் கடனை.

8. தோண்மீது முடவனைத்தான் றாக்கிநெடுந் தூரம்போம்
கோண்மீது கொண்டவன்றன் குளிர்மனத்தின் றகைமையையவ்
வாண்மீது புக்கிருந்த வம்முடவ னெய்தானல்
நாண்மீது கொள்வதுட னனிதுயரு முறுமன்றே.
கோள்-கொள்கை. உறும்-முடவன் அடைவன்.

9. வயலெவையும் விளைவித்து வறிதாய பெருங்குளனும்
பயில்புனலே யிலையாய பாழ்ங்குளனு மொப்பாமோ [கைமை
இயல்வவெலாம் பிறர்க்கீத்திங் கின்மையுற்றோன் பெருந்த
அயலெவர்க்கு மீயாத வவ்வறிய னெய்துவனே.

10. கடனீந்திக் கரையமர்ந்தோன் கனமனத்தி னுவகையையவ்
விடனீந்தா தக்கரையி னிருந்தவனு மெய்துவனே
மடனீந்த மதியின்றி மடியாலே வினைமுடியான்
உடனீந்த மாட்டாதா லுறுதுயரக் கடலையரோ.
மடன் நீந்த—அறியாமையைக் கடக்க.

11. தானுண்டு பிறவுயிர்க டாமுண்டு மற்றெவையும்
ஈனுண்டு பண்ணியவோ ரிருங்கடவு ளுண்டிதனல்
ஊனின்ற வுயிர்க்களித்த லொருதனக்குத் தவமியற்றல்
மேனின்ற கடவுளுக்கு வேள்விசெய லெனவிதித்தார்.

12. தவந்தானம் வேள்வியிவை தரையினுளா ரேவருக்கும்
உவந்தான முதற்றொழிலா யுரவோர்கள் விதித்தனரால்
அவந்தானிங் கடையாம லரியமனத் தருள்வளர்த்துப்
பவந்தானும் பயனுறவும் பண்ணினரிம் மூவகையே.

13. தனித்தனியா வெவ்வுயிருந் தவமியற்றிக் கொடைநல்கி
இனித்தபெருங் கடவுளையே யெப்பொழுதும் வழிபட்டுப்
பனித்தபெரும் பவநீங்கப் பண்ணியுல குள்ளமர்ந்தே
செனித்தவுயி ரிவைபுரிந்து சீவிக்கத் தொழில்விதித்தார்.

14. தானருந்தப் பெருந்தெய்வத் தனிவேள்வி யவிசொரிய
ஊனிருந்த உயிர்க்கெல்லா முணவுதவத் தக்கதெனக்
கானிருந்த நிலனெல்லாங் காறுழுது வயலாக்கித்
தேனிருந்த நெற்பயிரே செயுமாறு முறைசெய்தார்.
காறு—உழுகொழு.

15. இதமான தொழிலெல்லா மிருங்கடவுட் கருச்சனையாய்
முதனூலின் மொழிந்தபடி முன்னோர்நற் றொழில்களைப்பல்
விதமான பரம்பரையின் விடாதுபுரி கென்றிட்டு
நிதமாகத் தொழினிலைத்து நிகழநெறி காட்டினரால்.

16. மக்களுட லாவுலக மன்னுவது மற்றுடலோ
புக்கவுண வுண்ணுங்காற் பொன்றுவதென் றுள்ளுணர்ந்து
தக்கபயிர் விளைப்பதுவே தம்வினையென் றெண்ணுது
மிக்கபொலம் விளைப்பதிலே மெய்வருந்து வார்பலரே.
பொலம்—பொன்.

17. நெல்லுண்டு பண்ணுது நீருண்டு பண்ணுமெலாம்
செல்லின்று வறங்கூரிற் றிருந்துணவுக் கீவனவாம்
புல்லுண்டு பண்ணினும்பால் பொழியுநல கறவைகளும்
இல்லுண்டு பண்ணுவதோ வெதுதானென் றறியீரே.
செல்—மேகம்.

18. புல்லுண்ணும் பசுவெல்லாம் புலாலுண்ணும் புலியெல்லாம்
நெல்லுண்ணு முயிராயா னீளறிவின் மேம்படுவேம்
கல்லுண்ணும் புறவுண்டு கனலுண்ணும் புள்ளுண்டு
சொல்லுண்ட வுணவாற்பஃ றொகைகொண்ட வுலகமிதே.

19. வருத்துபசி வயிற்றுடலை வாசனையாற் பூசியென்ன
திருத்துபல கலன்களையுஞ் செறித்தென்ன தினம்புதிதாய்ப்
பொருத்துதுகி லுடுத்தென்ன பொற்கட்டில் கிடத்தியென்ன
பருத்தமனை யிருத்தியென் பயனறிந்து புரிவீரே.

20. பசித்தபெரும் படைதானும் பசியாத சிறுபடையை
ஒசித்துவிடு மெனவுணர்தற் கொல்லாது வில்லாண்மை
நசித்துவிடும் பசியெய்தி னசியாத பசியகற்ற
விசித்தபடை யுழுபடையே வெலுமென்று வேண்டுதிரே.

21. வேண்டளவிற் சிறிதுடுத்து மேதக்க மேழியினல்
ஈண்டளவி னிலனுழுதா விருஞாலந் திருமலியும்
பூண்டகைய சீதையெனப் பொன்மாது சிறந்ததுதான்
காண்டகையோர் காணுரோ காட்டுவதும் வேண்டுவதே.
சீதை—உழுகொழுச்சாலின் பெயர்.

22. பாலையிலே பசித்தவன்பொற் பைபெற்று வெறுத்ததிறம்
காலையிலே கேட்டிருந்துங் கண்டறியார் வாய்மையினை
வேலையிலே முத்தெடுத்தென் வெற்பினிலே மணியெடுத்தென்
சாலையிலே யருந்துதற்குத் தமதென்றேன் றின்றெனினே.

23. உடையாக்குஞ் செடியுண்டிங் குணவாக்கும் பயிருண்டு
படையாக்கும் வெதிருண்டு பகைபாக்க மாட்டேமால்
நடையாக்க மறையுண்டு நமக்கென்ன குறையென்று
மடையாக்க முயல்வீரால் வயிறுக்கும் பசிக்கெதிரே.
படையாக்கும் வெதிர்—விற்படையாக்கும் மூங்கில்.
மடை—மடுக்கும் உணவு.

24. வயலழித்து மனைகட்டி மனையுள்ளே யினிதருந்த
அயலிடத்துத் துப்புரவுக் கலைகிற்பீர் புரிகின்ற
செயலழிப்ப தல்லாது திருவினையுண் டாக்குவதோ
வியன்மரத்தி னடியிருந்தும் விளைபயிரை விளைப்பீரே.

25. உடலுக்குப் பொன்னாலே யுண்டாவ தொன்றில்லை
கடலுக்குட் புகுந்தாலுங் கார்வானம் பறந்தாலும்
இடலுக்கு வயிற்றினுக்கென் றெவ்விடத்தும் வேண்டுவதூண்
அடலுக்குத் துப்புரவா மதனைமுனம் புரிவீரால்.

26. பையாகச் சணல்விளைத்துப் பைந்நிறைக்க நெல்லின்றி
மெய்யான முயற்சியெலாம் வீணாக வினைபுரிவீர்
பொய்யான வொழுக்கத்தீர் பொன்வேண்டி நாடெல்லாம்
செய்யாத தீதுபுகச் செய்தென்ன கண்டீரே.

27. தற்பேணித் தன்வயிறு தாழியெனத் தனியுண்போன்
அற்பேணி யேறுமே யவன்வான மேறுனல்
இற்பேணி நல்விருந்தை யினிதூட்ட விளைவெல்லாம்
முற்பேணிக் கொள்ளுவதே முதல்வினையாய் முயல்குவிரே.
அற்பு ஏணி—அன்பாகிய ஏணி.

28. தாகத்தி னீரருந்தித் தளர்பசிக்குச் சோறுண்டு
போகத்தி னினைவின்றிப் பொருடொகுத்துப் பிறர்க்குதவி
மோகத்தை யறமுனிந்து முழுப்பொழுதும் விழுத்தொழின்
சோகத்தின் கடல்கடந்து சுகநிலையின் வாழ்குவிரே. [மேளய்ச்

(தொடரும்)

கலைமகள்

பி. ஸ்ரீ.

நதிக்கரை நாகரிகம்

தற்காலத்தில் நாகரிகத்திற்கும் கலைச்செல்வத்திற்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாக ஐரோப்பா விளங்குகிறது. ஆனால் சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்,

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்"

என்று வருணிக்கப்பெறும் வெண்ணிற மேனியாளான சரஸ்வதி தேவி வெள்ளைக்காரர் நாடுகளை விரும்பி அடையவில்லை. நம்மை ஆளும் மக்கள் வர்ணப் பூச்சும் கொச்சைப் பேச்சுமாய்த் தோலாடை சுற்றிக் 'கற்காலக் கருவி'களோடு குகைகளிலே வசித்து வந்த காலத்தில், கலைமகள் நீல நதிக்கரையிலும் ஹ்வாங்ஹோ (*Hwangho*) சரஸ்வதி சிந்து கங்கை முதலிய நதி தீரங்களிலும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். பண்டைப் பழங்காலங்களில், 'சரசமும் மாதுரிய ஜலமு'முள்ள சரஸ்வதி அந்நதிக்கரையில் வேள்வி செய்துகொண்டு வாழ்ந்து வந்த வேத முனிவர்களின் நாகரிகவாழ்க்கைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாத வசதிகளை அளித்தது. எனவே ஆதியில் நதியின் பெயராக இருந்த சரஸ்வதி யென்பது நாளடைவில் அறிவுத் தெய்வத்தின் பெயராகப் பரிணமித்ததென்று கருதல் கூடும்.[1]

இவ்வாறு சரஸ்வதிநதிக்கும் சரஸ்வதி தேவிக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு புராணங்களிலும் ஒரு விதமாகப் பிரஸ்தாபிக்கப் படுகிறது. ஒரு காலத்தில் சரஸ்வதியும் இலட்சுமியும் மாறுகொண்டு தங்களில் உயர்ந்தார் யார் என்று பிரமனைக் கேட்டனராம். பிரமன் சரஸ்வதியை நாயகியாகக் கொண்டு நாவிலே தரித்திருந்தும் அத்தேவியின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து கொள்ளாமல், இலட்சுமி தேவியே உயர்ந்தவள் என்று வாய் கூசாது பேசினனும். அப்பொழுது கோபம் கொண்ட சரஸ்வதி, பொங்கிக் கொதித்

---

1. வேத காலத்தில் 'சரஸ்வதி' ஒருநதியின் பெயராகவே யிருந்ததென்பது கவனிக்கத்தக்கது.

தெழுந்து நதியுருவாயினள் என்பது பௌராணிகர் கூற்று. நதி தேவி ஆயிற்று என்ற சரித உண்மை, தேவி நதி ஆயினள் என்ற புராணக் கதையாக உருமாறிப் பிறந்திருக்கிறது!

சரஸ்வதி என்னும் பெயர் பண்டைக்கால நதிக்கரை நாகரிகத்திற்கு நமது கவனத்தை ஈர்த்துச் செல்கின்றது. இத்தகைய நாகரிகம் வட இந்தியாவிலே பெரிய நதி தீரங்களில் பெருகி வளர்ந்தது போல், தென்னாட்டிலும் காவேரி வையை தாமிரவருணி (தண்பொருநை) முதலிய ஆற்றங்கரைகளில் தழைத்து வளர்ந்ததென்று ஊகித்தல் கூடும். இத்தமிழ் நாகரிகம், தொன்மை மாட்சியில் வட இந்தியாவில் வளர்ந்த ஆரிய நாகரிகத்தையும் வென்று விடுகிறதென்று கருதுவோரும் உண்டு.

இயற்கை யன்னை

பண்டைத் தமிழகத்தை நாம் சங்க நூல்களின் வாயிலாகக்கண்டு களிக்கிறோம். தொல்காப்பியர் கூறும் 'மைவரை யுலகம்' கைசெய்து பிறப்பியாத இயற்கைப் பேரழகோடு மீண்டும் கட்புலனாகிறது. பகலிலும் இருள் தூங்கும் காடுகள், சுழிபலவாய் ஒழுகும் காட்டாறுகளோடு நம் கண்முன் வருகின்றன. காட்டாறு[1] தழுவிய அகன்ற காட்டிடங்களில் அங்கும் இங்கும் காடு கெடுத்து நாடாக்கும் நன் முயற்சி நீண்ட காலமாக நடைபெற்று வருவதையும் காண்கிறோம். மலைக்காடுகளில் தினைப் பயிரைச் சூழ்ந்து வளர்ந்த தமிழ் நாகரிகம், நதி தீரங்களிலே நெற்பயிரோடு வளர்வதையும் காண்கிறோம்.

ஒருகால், காட்டாறுகளில் முதலை முதலான பிராணிகளோடு நீர்மிதவைகளும் கட்புலனாகின்றன. ஒருகால், மலை முழைஞ்சுகளிலே வீழ்ந்து ஒலிக்கும் ஆறுகளின் ஓசையோடு, கானவர் செய்யும் சப்த ஜாலங்களும் நம் காதில் விழுகின்றன. ஒருசமயம், காடுகளில், கடும்புலிகள் கொடிய முள்ளம்பன்றிகள் யானைக்கூட்டங்கள் சஞ்சரிப்பதையும் கானவர்கள் விலங்கு தேர்ந்து சுழன்று திரிவதையும் காண்கிறோம். வேறு சமயங்களில், எருமையேறுகள் பொருகின்ற ஆரவாரமும் வேட்டை நாய்களின் கடுங்குரலும் கானவரும் காட்டு மிருகங்களும் தம்முள் பூசலிடும் ஓசைகளும் மக்கள் போருக்குத்திரண்டு செல்லும் பேரொலிகளும் நமது செவிகளில் விழுகின்றன.

---

1. இத்தகைய ஓராற்றினை நத்தத்தனார் என்ற புலவர் நிலமடந்தையின் முத்துவடமென்று வருணித்துள்ளார்.

சுருங்கக் கூறுமிடத்து இப்பழைய உலகில் சுந்தரியாகவும் பயங்கரியாகவும் ஒருங்கே திருவிளையாடல் புரியும் இயற்கை யன்னையையும், இவ்வன்னையின் நிலைமையும் குணங்களையும் காலக்கிரமத்தில் சிறிது சிறிதாக அறிந்துகொண்டு வாழ்வு நடத்த முயலும் நம்முன்னோரையும் காண்கிறோம்.

இயற்கையின் 'கோற்றவை' வடிவம்

இயற்கையன்னையை ஆச்சரியத்தோடும் பயபக்தியோடும் நோக்கிய பண்டை மக்கள், இவ்வன்னையைப் 'பழையோள்' என்றும், 'மலைமகள்' என்றும், 'காடு கிழாள்' என்றும், 'கோற்றவை' என்றும் போற்றி வழிபடுவாராயினர். இவர்கள் 'கடவுள் அயிரை' என்றும், 'அணங்குடை நெடுங்கோடு' என்றும் தங்கள் மலைகளையும் மலைச்சிகரங்களையும் போற்றிப் பாராட்டினர். இயற்கையன்னை, தன் தெய்விகப் பெருமாட்சி தோன்றக் கொலு வீற்றிருக்கும் மலைகளிலே பண்டை மக்களுக்குத் தன் பயங்கரமான கோற்றவை வடிவத்தைக் காட்டியது இயல்பேயாகும்.

> "ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
> அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
> பெருங்கல்"[1]

என்பது போன்ற வருணனைகளை[2] வாசிக்கும் போது, குளிர்ந்த மலைகளும் கருஞ்சிகரங்களும் இருள் தூங்கும் பெருமுழைகளும் நம் கண் முன் வருவதோடு, அவற்றைக் காக்கும் 'அருந்திறற்கடவு'ளாகிய கொற்றவைக் கடவுளின் சாயையுங்கூட நமக்குப் புலனாகின்றது.

வீர முரசினை முரசுறை கடவுள் என்றும் வெற்றியின் அறிகுறியாகிய வாகையினைக் கடவுள் வாகை யென்றும் வழிபட்ட வீரமக்கள் இயற்கையைக் கோற்றவையாக வழிபட்டு அக்கொற்றவை மேல் வீரவாளை நிறுத்தி நீராட்டி வாள்மங்கலம் கொண்டாடிப் பரவுக்கடன் செலுத்தினர். ஆதியில் அயிரை முதலிய மலைகளை உறைவிடமாகக்கொண்டிருந்த கொற்றவைக் கடவுள் (வனமும் வனப்பும் வாய்ந்த மலைகள் 'இயற்கை யழகனாகிய முருகக்கடவுளின் இயற்கைக்

---

1. புறநானூறு, 158.

2. இத்தகைய வருணனைகளில் பல, மலையாளக் காட்சிகளுக்கும் பெரிதும் பொருந்துவன ஆகும். மலையாள வாசிகள் இன்றும் கோற்றவையைக் கோற்றி யென்பர். முன்னாளில் மலையாளநாடு தமிழகத்தின் பகுதியாக அமைந்திருந்தது.

கோயில்கள்' என்று கருதப்பெற்ற) பின்னாளில் வனதுர்க்கையாகப் பரிணமித்து நீரும் நிழலும் பெறாத பாலை வனத்தில் குடி புகுந்த தென்னலாரா. எனினும் 'குறிஞ்சிக் கிழவன்' என்றும், 'சேருவில் ஒருவன்' என்றும் தமிழுலகம் போற்றும் தமிழ்க் கடவுள் (முருகன்) கொற்றவையின் குழந்தையாகவே ஆதி மக்களால் மதிக்கப் பெற்றமை,

'கொற்றவை சிறுவ' (முருகாற். 258.)
'பழையோள் குழவி' (,, 259.)
'சேய் பயந்த......செல்வி'

என்றிவ்வாறு வரும் ஆதாரங்களால் இனிது புலனாகும்.

'வெற்றி வெல்போர்க் கொற்றவை' முன்னாளில் 'மைவரை யுலகம்' காக்கும் 'சேயோ'னுக்குத் தாயாக அமைந்ததோடு, 'காடுறை யுலகம்' காக்கும் 'மாயோனு'க்குத் தாயாகவும் மதிக்கப் பெற்றாள்.

"நீனின்ற படிவத்தான் நெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமுறை பாவினும்
யாய் என்றல்லாது யாம் துணிபலமே"

என்று புலவர் கூறுவது காண்க.

இமயமலைக் காட்சிகளுக்கு அடுத்த படியாக ஆன்ம எழுச்சியும் அறிவுவிளக்கமும் அளிக்கவல்ல மேற்கு மலைத்தொடர்ச்சியின் அரும் பெருங்காட்சிகளை நினைத்துப் பாருங்கள். விண்முட்ட நிமிரும் நீலமலைகளோடு, கண்முட்ட வளம்படைத்த காடுகளையும் மனக் கண்ணால் உற்று நோக்குங்கள். இடையிடையே துகில் போல மின்னும் அருவிகளையும், அருள்போலப் பெருகிவரும் நீர்ப் பெருக்கையும் சிந்தித்துப் பாருங்கள். பழைய மலை நாடுகளிலும் பறம்பு நாடுகளிலும் காட்டு நாடுகளிலும் மனோசக்தியின் மகிமையால் சென்று சேர்ந்து சஞ்சரியுங்கள். அப்பொழுது இயற்கையன்னை, 'பார்பூத்த பச்சைப் பசுங்கொடியாகி' 'ஒங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டும் மெல்லியலாளா'கவும், பயபக்தியைத் தூண்டும் பராசக்தியாகிய கொற்றவையாகவும் காட்சிதருவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.

இத்தகைய இயற்கையன்னையின் சந்நிதியிலே, தன்னை அழியாது காத்துக்கொள்ளும் பொருட்டு, உயிர்க்குலம் என்ன பாடுபட்டிருக்கிறது! எத்தகைய 'வாழ்க்கைப் போர்' (*struggle for existence*) விளைத்திருக்கிறது! இவ்'வாழ்க்கைப் போ'ரில் இயற்கையாய் ஒத்து வாழத் தெரியாத எத்தனை உயிரினங்கள் அடியோடு அழிந்துபோயின! இன்றும் நம் கண்முன் அழிந்து வருகின்றன!

இவ்'வாழ்க்கைப் போர்' என்றென்றும் தொடர்ந்து நடைபெறும் ஒரு பாரதமே யன்றோ ? இவ் வரும் பெரும் பாரதத்திற்கு உலகம் முழுமையும் குருக்ஷேத்திரமாக உதவுகிறது !

இக் குருக்ஷேத்திரத்திலே, இயற்கைக் கோற்றவையோடு மனிதனும் பலவேறு பிராணிகளைப்போல் முதல்முதல் ஒத்து இணங்கிவாழ முயல்கிறான் ; பிறகு அவன் காலப்போக்கில் சிறிதுசிறிதாகப் பெருகி வளர்ந்த தன் அறிவுத் திறமைக்கு ஏற்ப, கைக்கு எட்டிய துணைக் கருவிகளின் உதவியால் எதிர்த்துப் போராடி இயற்கையைத் தன்னோடு ஒத்து இணங்குமாறு செய்து வாழ்வுநடத்தவும் முயல்கிறான் ! இங்ஙனம் விலங்கு நெறியைக் கைவிட்டு ஆபத்தான—கத்திமுனைபோன்ற—அறிவு நெறியிலே துணிந்து செல்வதற்கு மனிதன் செய்த—செய்கிற—செய்யும் பகீரதப் பிரயத்தினங்கள் எத்தனை ! அவை எட்டில் அடங்குமோ ? எண்ணில்தான் அடங்குமோ ? வாழ்க்கைப் பெரும் போரில் வாகைசூடிவரும் மனிதன் இந்நாளில் நாகரிக ஏணியின் உச்ச ஸ்தானத்திலே நின்று, இயற்கையன்னையின் சக்திப்பேய்களையே தனக்குத் தொண்டுபூண்டுழைக்கும்படி ஏவுகிறான் !

நாகரிக ஏணி

ஆனால் பழைய உலகிலே, உயிர் இருப்பதற்கு அடையாளம் ஓங்கிவளர்வதே என்ற உண்மை கண்ட நம் முன்னோர், வளைந்து வளைந்து செல்லும் மலை வழிகளில் வேடர்கள் நெறிபிடித்துச் செல்வதுபோலவும், செங்குத்தான பாறைகள்மீது கானவர் கண்ணேணி அமைத்து ஏறுவது போலவும், நாகரிக ஏணியிலே படிப்படியாக மெல்லமெல்ல ஏறி வந்தார்கள். மலைகளிலும் மரங்களிலும் சுடுகாடுகளிலும் தெய்வங்களுண்டென்று நம்பிப் பலவேறு பேய்களையும், சூளி சூரரமகளிர் கள்ளிநீழற்கடவுள் ஆதிய சிறு தெய்வங்களையும் நெல் உகுத்துப் பலிதூவி விழா எடுத்து வழிபாடுசெய்து ஆவேசமுற்று ஆடிய பண்டைமக்கள், அறியாமையின் சொரூபமாகிய மகிஷாசுரன் அல்லது 'எருமை' அசுரனை வென்று வலியழித்த மகா சக்தியாகிய கொற்றவைக் கடவுளை வழிபடக் கற்றுக்கொள்வதற்குள், குறித்த நாகரிக ஏணியில் எவ்வளவு கஷ்டத்தோடு எத்தனைபடிகள் ஏறியிருத்தல் வேண்டும் !

வீரர் தெய்வமாகிய கொற்றவை அல்லது துர்க்கை, வித்யா ரூபம் தரித்து, மந்த புத்தியும் மிருகத்தன்மையும் வாய்ந்த 'எருமையசுரனை'யும் வேறு தானவர்களையும் அவுணர்களையும் மாய்த்து மன்பதை காத்தனள் என்ற புராணக் கதை,

'விண்தோயு மணிநீல
வெற்பினிடை வேய்மிடைந்தாங்கு
எண்தோளும் இடுநீழல்
இளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்த
கோட்டெருமைத் தலையின்மிசை
மிதியாத சீறடி
மிதித்தன போல்தோன்ற
* * * *"

"வாளுறழ் உயர்விசும்பின்
வாய்மடித்து விறற்சுட்டித்
தாள்சோர நினக்குடைந்த
தானவரை நினைக்குங்கால்
பூளையார்ந் தெழில்எய்தப்
பொறியணை புரையும்நின்
தோளின தளவெண்ணில்
தோற்றூரும் போலுமே"

"பெருந்தகைமை பிறிதொழியப்
பிடிக்கோடும் களிறேபோல்
அருஞ்சமத்து நினக்குடைந்த
அவுணரை நினைக்குங்கால்
கரும்புருவ நுதல்விபார்ப்பக்
கச்சினுல் விசித்தநின்
மருங்குல தளவெண்ணில்
மாயமும் போலுமே"

என்ற புலவர் வாக்குக்களால் அறியக்கிடக்கிறது.

நீலமலைகளில் நெருங்கிவளரும் மூங்கிற்காடுபோல் வளர்ந்தோங்கிப் பரந்து எட்டுத் திசைகளையும் போர்த்து நிற்கும் எட்டுத் தோள்களோடு காட்சிதரும் இயற்கை யன்னையாகிய கொற்றவை அறியாமையை வென்று அறிவைப் பரப்புகிறாள்; தீமையைக் கொன்று நன்மையைக் காப்பாற்றுகிறாள்; பொய்ம்மையை அழித்து உண்மையை நிலைநாட்டுகிறாள். பொய்யிருள் கெடுத்து உலகம் ஒளிநெறியாகிய செந்நெறி பிடித்து ஒழுகல் வேண்டுமென்பது அன்னையின் திருவுளம். இவ்வாறு நம் முன்னோர் கருதி, இயற்கையோடு இணங்கியும் தமது அறிவாற்றல்களுக்கு ஏற்ப இயற்கையைத் தம்மோடு இணங்குவித்தும் ஒருவாறு நாகரிக வாழ்க்கை நடத்திவந்தனர்.

பொய்யிருளாகிய தீமையை அரக்கரென்றும் அவுணரென்றும் அசுரரென்றும் இதிகாச புராணங்கள் இயம்புகின்றன. தேவரும் முனிவரும் மெய்யொளியாகிய நல்லறிவையும் நல்லறத்தையும் குறித்து நிற்கின்றார். இயற்கையன்னை இருளின் சக்திகளான அவுணராதியோரை அழித்து, ஒளிமேனியரான தேவரையும்,

'மன்பதை காப்ப அறிவு பலியுறுத்தும்
நன்றறி யுள்ளத்துச் சான்றோ'

ரையும் காப்பாற்றுகிறாள் என்பது, ஆரியதிராவிட நாகரிகங்களின் சமரச நன்னிலை கண்ட பண்டைப் பெரியோர் கொள்கை. இப்பெரியோர், தாயாகிய கொற்றவையை இயற்கையின் பயங்கரமான பேய்த் தோற்றங்களுக்கும் போர்ப்பெருங் கோலங்களுக்கும் அதிதேவதையாக்கி, காளி, துர்க்கை, பகவதி ஆகிய பலவேறு பெயர்களால் போற்றியதோடு, அவ்வியற்கைத் தெய்வத்தையே அறிவொளி பரப்பும் கலைத் தெய்வமாக்கியும் வழிபடுவாராயினர்.

மலைமகள்—கலைமகள்—திருமகள்

(இயற்கையின் இரண்டு நிலைகள்)

பயங்கர நிலையில், இயற்கையன்னையாகிய கொற்றவை, காளித்தாயின் கரும் பெரும் பூதவடிவில் காட்சி தருவதோடு, சாந்த நிலையில் மலைமகளாகவும் கலைமகளாகவும் திருமகளாகவும் காட்சி தருகிறாள். மஹிஷாசுரனுக்கு அஞ்சி, மும்மூர்த்திகளுங் கூட மக்களைக் கைவிடத்துணிந்தன ரென்றும், அம்மூர்த்திகளின் தேவியரான மலைமகளும் கலைமகளும் திருமகளும் உலகமக்கள்மீது தங்களுக்கு இயற்கையாக எழுந்த கருணையின் மிகுதியால், அசுரனை எவ்வாறு கொல்வதென்று கலந்து ஆலோசனை செய்தனரென்றும் பிறகு அவர்கள் தங்கள் மூன்று உருவங்களையும் மறைத்து, வித்யாரூபமாகிய ஒருருவமாகச் சமைந்து, அவித்தையின் வடிவமான மஹிஷாசுரனை[1] அழித்து உலகத்தைக் காப்பாற்றினர் என்றும் புராணம் கூறுகிறது. மலைமடந்தை கலைமடந்தை மலர்மடந்தை என்னும் மும்மைப் பெருந்தெய்வங்களும் சாராம்சத்தில் ஒன்றேயென்பதும் இத் தெய்வங்களின் உயர்ந்த உருவம் வித்யாரூபமே யென்பதும் புராணக்கதையின் திரண்டபொருள்.

---

1. மைசூர் ஆதியில் மஹிஷாசுரபுரமாயிருந்ததென்றும் மைசூரிலேதான் மஹிஷாசுரவதம் நிகழ்ந்ததென்றும் ஜனங்கள் நம்புகிறார்கள். மகிஷாசுர வதத்தைப் பற்றிய கதை தென்னாட்டின் பண்டைப்பழங்கதைகளிலே ஒன்றென்று ஊகிக்கலாம்.

இப்பொருள்,

"இமையவர்கள் மோலி இணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—இமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை எண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்" (தண்டி. மேற்.)

என்ற புலவர் வாக்காலும் அரண் செய்யப்படும்.

இயற்கையின் பேய்க்கோலங்களிலும் போர்க்கோலங்களிலும் துணிந்து தெய்வத்தன்மை கண்டதுபோலவே, நம்முன்னோர் இயற்கையன்னையின் அழகுத்தோற்றங்களிலும் இன்பக்காட்சிகளிலும் தெய்வத்தன்மை காண்பாராயினர். ஒளியும் இருளும், மந்தமாருதமும் சண்டமாருதமும், காதலும் சாதலும், இன்பமும் துன்பமும் அவர்கள் உள்ளத்திலே தெய்வநாட்டத்தைத் தோற்றுவித்தன.

"மூவிலை நெடுவேல் ஆதி வானவன்
இடமருங் கொளிக்கும் இமயக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கஇம் மலர்தலை யுலகே"

என்ற பாட்டில், இயற்கையன்னை, இமயமலைக்குரிய தேவியாகவும் வளைக்கையில் வாள்பிடித்து ஆளியேறித் தானவன் மாளக் கடும்போர் கடந்த குமரியாகவும் வருணிக்கப்படுகிருள். அயிரை முதலிய மலைகளுக்குரிய அன்னையும் இமயமலைக்குரிய தேவியும் ஒன்றே. இவ்வியற்கைத்தேவி சேயோனையும் மாயோனையும் முதற்பயந்த முதியோளாயினும், அகிலாண்ட கோடிகளை ஈன்றெடுத்த அன்னையாயினும், இன்றும் என்றும் குமரியாகவே விளங்குகிருள்.

இறவாத இளமையும் அழியாத அழகும் வாய்ந்த இயற்கையரசியைக் களங்கமற்ற குழந்தையுள்ளம்கொண்ட தமிழ்ப் பெரியார் ஒருவர், "அகிலாண்டகோடி யீன்ற அன்னையே! பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே!" என்று வாய்குளிர வாழ்த்தி அழைக்கின்ருர்.

'வளைக்கையில் வாள்பிடித்து ஆளிஏறி'ய கொற்றவைக் கடவுளின் திருமேனியில், பயங்கரமான இயற்கைப் பெருஞ்சக்திகள் சீறிக் குமுறுகின்றன எனினும் அத்திருமேனியில் இயற்கையழகுகளும் கொஞ்சிக் குலாவுகின்றன. இக்கருத்து,

"படுமணி படும் ஒருகை ; பைங்கிளி யது ஒருகை
வடி நுதி வேல்ஒருகை; வாள்கொண்ட தகைத்தொருகை"

என்ற ஆன்றோர் வாக்கிலிருந்தும் உய்த்துணரத்தக்கது.

இயற்கை யன்னையின் பசுந்தளிர்க் கரங்கள்—காடுற்ற தோள்கள்—பல; இவை பலவேறு சக்திகளைத் தாங்குகின்றன. அன்னைக்கு அழகு பொழியும் செல்வக் கைகளும் உண்டு. போர்ப் பெருங்கோலம் பூண்டு புவனமுற்றும் அசைந்திடப் புடைக்கும் பேய்க் கைகளும் உண்டு. அமுதளாவிய பூந்தென்றலில் அம்மையின் அறக்கருணை பொலிகிறது. ஆலகாலவிஷம்போலச் சீறும் ஊழிக் கூத்தில், அன்னையின் மறக்கருணை பிரதிபலிக்கிறது. அருமருந்தன்ன அழகுச் செல்வியாக அமைந்து அருள் பொழியும் இயற்கை, அல்லல் விளைக்கும் பேய்க்கோலங்களிலும் வெளிப்பட்டு இடிக்குரலாலும் ஆணையிடுகின்றது. இவ்வாறு ஜகன்மோஹன சுந்தரியாகவும் அகில லோக பயங்கரியாகவும் ஒருங்கே காட்சி தந்து, அறக்கருணையும் மறக்கருணையும் பொழியும் இயற்கை யன்னையின் அருள் வடிவினைத் தமிழ்க் கவிஞர்,

"பெரு மட மான்பிணை வென்றது நோக்கு ;
சிறு மருங்கிற் கொல்கின முல்லைக் கொடி"

என்று வருணித்துள்ளார். இவ் வற்புத அருள் வடிவம்—இயற்கையின் அருட்பெருஞ் சக்தி—அம்மையாகிய உமாதேவி (மலைமகள்) ஆகும். இவ் வம்மையின் அடி நிழலாகிய அருள் நிழலிலே உலகம் தங்கி வாழ்வு பெறுகின்றதென்பது பக்தர் கொள்கை.

இயற்கையின் அழகு சுமந்த செல்வ வடிவம், செய்யாள் அல்லது திருமகளாகும். இயற்கைப் பொருட் காட்சிகளிலே களிநடம் புரியும் திருமகள், மக்களது பொருட்செல்வச் சிறப்பிலே காட்சி தரும் பொன்னரசியாகவும், விளங்குகிறாள். 'யாவர்க்கும் செல்வ' மாகிய இவ்வழகுத் தெய்வம், இயற்கைப் பொற்கோயிலாகிய செந்தாமரை மலரில் செம்மாந்து கொலு வீற்றிருக்கிறதென்று கவிஞரும் பௌராணிகரும் கருதுவாராயினர். மலையிலும் காட்டிலும் நாட்டிலும் இத் தெய்வம் விளங்கும் இடங்களே வளமும் வனப்பும் சிறந்தோங்கும் தலங்களாகுமென்றும், கட்டழகிற் சிறந்த பாக்கியசாலிகளும் வீரமன்னர்களும் திருமகளின் கடைக்கண் நோக்கம் படைத்தவரே யாவரென்றும் நம் முன்னோர் நம்பி வாழ்ந்தனர்.

இவ்வழகுத் தெய்வத்தை எவ்வாறு உபாசிப்பது ?

"நெய்யொடு திரியொக்கச் செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத உள்ளமே மெய்யாதல் வேண்டுமே"

என்பது ஒரு பழம்பாட்டு. அழகுத் தெய்வமே நெய்யாகவும், உபாசகனுள்ளம் திரியாகவும், உண்மையொளி விளக்கமாகவும் அமையும்போது, வாழ்க்கை, அழகும் இன்பமும் தூய்மையும் பெருமையும் பெற்று விளங்கும் என்பது வெள்ளிடைமலை. இத் தகைய உபாசகன் வஞ்சமற்ற தொழில் புரிந்து வாழ்வு நடத்து வான் என்பது,

> "வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
> தருஞ் சிவந்த தாமரையாள் தான்"

என்ற ஔவை வாக்கில் குறிப்பாக வெளியிடப்படுகின்றது.

இவ்வாறு இயற்கையின் அருட்செல்வம் மலைமகளாகவும் அழகுச் செல்வம் திருமகளாகவும் போற்றப் பெறுகின்றன. அவ்வண்ணமே இயற்கையின் அறிவுச் செல்வம் கலைமகளாகக் கருதப்படு கிறது.

கலைமகளின் வடிவம்

இனி, அழகுச் செல்வியாகிய திருமகளை அடைவதற்கு இன் றியமையாத மெய்யொளியும், அருட்செல்வியாகிய மலைமகளை அடை வதற்கு இன்றியமையாத அருளொளியும், அறிவுச் செல்வியாகிய கலைமகளை அடைந்து இன்புறுவதற்கும் இன்றியமையாதன என்பது நல்லறிஞர் கருத்து. ஈரமிலாத உண்மையொளி பெறாத—மனக் கருங்கற் பாறைமீது அறிவுத் தெய்வம் கோயில்கொள்வதில்லை. மென்மலர்க் கோயிலாகிய நன்மனத்திலன்றோ கலைமடந்தை குடி புகுவதுண்டு? இக்கருத்து,

> "என்னை யுடையாள் கலைமடந்தை எவ்வுயிர்க்கும்
> அன்னை யுடைய அடித்தளிர்கள்—இன்னளிசூழ்
> மென்மலர்க்கே தங்கும் எனவுரைப்பர் மெய்யிலா
> வன்மனத்தே தங்குமோ வந்து" (தண்டி.)

என்னும் செய்யுள்மணியில் பொதிந்துள்ள கவிஞனது பொன்னுள் ளத்திலே ஆழ்ந்து பதிந்து கிடப்பது காண்க.

அழகுத் தெய்வம் சிவந்த தாமரைமலரில் வீற்றிருப்பதென்று கருதிய நம்முன்னோர், அறிவுத் தெய்வம் வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பதென்று கருதுவாராயினர். மேலும், அவர்கள், கரு நிறம் கொற்றவையாகிய காளிதேவியின் நிறமென்றும், பச்சை நிறம் அருட்பெருஞ் செல்வியாகிய உமாதேவியின் நிறமென்றும், பொன் னிறம் அழகுத் தெய்வத்தின் நிறமென்றும் கருதியதுபோல், அறி வுத் தெய்வத்தின் திருநிறம் தூய வெண்ணிறமே யாகுமென்று

துணிந்தனர். இந்நிறம் அறிவுச் செல்வியின் திருமேனி நிறமாகவும் அவளது இயற்கைக் கோயிலாகிய தாமரையின் நிறமாகவும் அமைவதோடு, அவளது கலை அணி ஆதியவற்றின் தூய்மையைக் காட்டும் நிறமாகவும் அமைந்துளது.

பூந்தாமரைமேல் வீற்றிருக்கும் புகழரசியாகிய கலைமகளின் கண்ணும் முகமும் கையும் காலும் பூந்தாமரைபோலவே யிருக்கின்றன. உடம்பெல்லாம் படிகநிறம்; வாய்மாத்திரம் சிவந்து பவளம் போலிருக்கிறது. வெண்ணிற மேனியில் விளங்கும் பவளச் செவ்வாய் கவிஞர்க்கு விரைந்து அருள்செய்யுமாறு துடிக்கின்றது! இந்த நம்பிக்கை,

"படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி"

என்ற புலவன் வினாவிலே தொனிக்கின்றது.

இத்தகைய நம்பிக்கை வாய்ந்த புலவன்

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்அம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்கு வாரா திடர்"

என்று துணிகின்றான். பளிங்குபோலக் களங்கமற்ற குழந்தையுள்ளத்தோடு தன்னை உபாசிக்கிறவர்களுக்கே, பரிசுத்தமான பளிங்கினை ஒத்து விளங்கும் கலைத்தெய்வம் விசேஷ நல்லருள் செய்யுமென்பது குறிப்பு.

நான்கு திசைகளையும் தழுவி ஆதரிக்கும் கலைமகளுக்கு நான்கு கைகள் உண்டு. ஒரு கையில் அவள் ஏடும் எழுத்தாணியும் வைத்திருக்கிறாள்; மற்றொன்றில் ஜபமாலை தரித்திருக்கிறாள்; வேறு இரண்டு கைகளிலும் வீணைவைத்து வாசிக்கிறாள்.[1] இவ்வாறு எழுந்தருளி யிருக்கும் தேவி எப்பொழுதும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் ஜபம் செய்துகொண்டும் ஆனந்தமாகப் பாடிக்கொண்டும் வீணை வாசித்துக்கொண்டுமிருக்கிறாள்.

---

1. இதனால் நம்முன்னோர் அழகுக் கலைகளை (*Fine Arts*) எவ்வாறு போற்றினர் என்பது ஒருவாறு புலனாகும்.

இத்தகைய கலைத்தெய்வத்திற்கு ஞானமே மேனி;[1] தூய்மையே ஆடை ; வாய்மையே மெய்யணி ; சாஸ்திரமே முகம் ; கற்பனையே இதழ் ; காவியமே இதயம் ; சிற்பம் முதலான கலைகள் தேவியின் மலர்க்கரங்கள் ; கவிஞர் செந்நாவே இவள் மலர்ப்பதம். இங்ஙனம் கவிஞரும் பௌராணிகரும் கலைத்தேவியை வருணித்திருக்கிறார்கள்.

கலைமகளைக் குறிக்கும் கதைகள்

கலைமகள் வடிவம் தாங்கி, இயற்கை யன்னை அறியாமையின் சொரூபமான மஹிஷாசுரனை மாய்த்த கதையைக் குறித்தும் கலைமகளுக்கும் 'சரஸ்வதி'க்குமுள்ள தொடர்பினை வெளியிடும் கதையைக் குறித்தும் முன்னமே பிரஸ்தாபித்திருக்கிறோம். சரஸ்வதி அல்லது கலைமகளைக் குறிக்கும் வேறு கதைகளுமுண்டு.

இக்கதைகள், கலைமகளாகிய சரஸ்வதியைப் படைப்புக் கடவுளான பிரமதேவனது மனைவியாக்கிப் பேசுகின்றன. படைப்பு அல்லது சிருஷ்டிக்கு அறிவு இன்றியமையாததல்லவா ? எனவே, கலைமகள் நவராத்திரி காலத்தில் பிரமனை நோக்கித் தவம் கிடந்து, அவனால் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாளென்று புராணம் கூறுகிறது.

எனினும், பிரமன் சரஸ்வதியின் பெருமையை நன்குணர்ந்து கொள்ளவில்லை ; அவளுடைய நிலைமையும் குணங்களும் கூட அவனுக்கு உள்ளவாறு விளங்கவில்லை. இதைக்குறித்து வழங்கும் புராணக் கதையின் சாரம் வருமாறு :—

ஒரு காலத்தில், பிரமன் சரஸ்வதிதேவியோடு கங்காஸ்நானத்திற்குச் சென்றான். அவர்கள் ஆகாயமார்க்கமாகச் செல்லுகையில், அவ்வழியில் ஒரு வித்தியாதரப்பெண் மின்னற்கொடிபோல நின்றுகொண்டு அழகிய குரலில் ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பெண்ணரசியின் மோகனப்பாட்டிலே நெஞ்சைப் பறிகொடுத்த சரஸ்வதி தன்னைமறந்தாள்; காசியாத்திரையை மறந்தாள் ; தனது நாயகனையும் மறந்தாள் ; லட்சியத்தையே மனத்தில் கொண்டிருந்த பிரமனோ, செவிகளைச் சிக்கென அடைத்துக் கொண்டு, கங்கையை அடைந்து நீராடி மீண்டான். பிறகு படைப்புக் கடவுள் கலைமகளை நோக்கி, "தேவியே ! நீ ஸ்திரமான குணமில்லாதவள்; உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. உன் விளையாட்டே உனக்குப் பெரிதாக

1. 'மெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன நிற்கின்ற நின்னை'

—சகலகலாவல்லிமாலை,

இருக்கிறது. பாட்டிலும் கூத்திலும் அழகுப் பொருள்களிலும் ஆனந்தக்காட்சிகளிலும் உன்னை நீ இழந்துவிடுகிறாய்.[1] இன்று பாட்டிலே நெஞ்சைப் பறிகொடுத்த நீ மண்ணுலகில் புலவருரு வாகத் தோன்றுதல் வேண்டும்'' என்று கூறிச் சாபம் கொடுத்தான். இதனால், பாவலர்களையும் நாவலர்களையும் சங்கீதம் முதலிய கலை களில் வல்லவர்களையும் சரஸ்வதியின் அம்சமென்றும் அவதார மென்றும் கூறுவர்.

“நாற்பத்தெட்டு அட்சரவடிவாகிய நீ தமிழுலகத்தில் நாற்பத் தெட்டுப் புலவர் உருவாகத்தோன்றிச் சிவபெருமான் தந்த சங்கப் பலகையில் வீற்றிருந்து தமிழ் வளர்த்து வருக!'' என்று கலைமகளை நோக்கிப் படைப்புக் கடவுள் சாபம் கொடுத்ததாகவும் நம்மை ஆளும் அன்னையும் சந்தோஷமாகச் சாபத்தை ஏற்றுக்கொண்ட தாகவும் தமிழர் புராணக்கதையைச் சிறிது மாற்றிக்கூறுவர். சரஸ் வதி தேவியின் அம்சமாகத்தோன்றிய இப் பழந்தமிழ்ப் புலவர்களைச் சங்கப் புலவர்களென்று கூறுவதுண்டு. இவர்கள் அழகான பாடல் களைப்பாடி நங் தாய்மொழிக்கு அழியாத புகழைத் தந்திருக்கிறார் கள். சரஸ்வதியே சங்கப்புலவராக அவதரித்தாள் என்று கருதும் தமிழ் மக்கள், படைப்புக் கடவுளாகிய பிரமதேவனே திருவள்ளுவ ராகப் பிறந்தானென்று சொல்லுகிறார்கள்.

பெருந்தமிழ்க் கிழவியான ஔவையாரையும் நம் மக்கள் சரஸ் வதியின் அம்சம் என்று போற்றுகிறார்கள். கம்பர் முதலிய மகாகவி களும் காளி அல்லது சரஸ்வதியின் அருளால் கவிதாசக்தம் பெற் றனரென்று கதைகள் வழங்குகின்றன. இத்தகைய கதைகள் காளி தாசன் முதலான வடமொழிப் புலவர்களைக் குறித்தும் வழங்குகின் றன. கலைமகள் படைப்புக் கடவுளின் நாவிலும் கற்பனை யுலகில் புதிய புதிய சிருஷ்டிகள் செய்யும் கவிஞர் நாவிலும், ஒருங்கே யிருந்து விளையாடுகிறாள் என்று நம்முன்னோர் கருதுவாராயினர்.

சகலகலாவல்லி

கலைமகள் வாக்கின் சக்தியாக இருப்பதால் **வாணி** யென்றும் **கலைவாணி** யென்றும் **நாமகள்** என்றும் அழைக்கப்படுவதுமுண்டு.

---

1. சரஸ்வதி பிரமனைக் குறித்துத் தவம் செய்த காலமாகிய நவராத்திரி யில் பெண்கள் 'அம்மன் கொலு' என்ற பெயரால் அழகிய பொம்மைக்கொலு வைத்துப் பாடுவதுண்டு. கிராமப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களும் மாணக்கர் மாணக்கியர்களும் பாடல்களோடு பின்னல் கோலாட்டம் முத லிய கோல் விளையாட்டுகள் விளையாடுவார்கள். இராஜதர்பார்களில் சங்கீதக் கச்சேரி முதலியன நடைபெறுவதுண்டு.

தமிழர் இத்தெய்வத்தைத் தமிழ்வாணி யென்று விசேஷமாகப் பாராட்டுவது முண்டு. வட நாட்டிலே சரஸ்வதி, சிந்து, கங்கை, யமுனை முதலான நதி தீரங்களில் சரஸ்வதி தேவி வளர்ந்து வந்தது போல், தமிழ்நாட்டிலே வையை பொருநை காவேரி முதலான ஆறு களின் கரைகளிலே தமிழ்வாணி தழைத்தோங்கினள் என்று கருது தல் வேண்டும். பிறகு சங்க காலத்திலேயே சரஸ்வதியும் தமிழ் வாணியும் கருத்தொருமித்துக் கலந்து நமது நாட்டிலே கலைமகள் என்ற ஒருருவமாகச் சமைந்து விளங்குகின்றன ரென்னலாம். இத னாலன்றோ, குமர குருபரசுவாமிகளும்,

"தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே"

என்று அருளிச் செய்வாராயினர்.

இங்ஙனமாக வடமொழி வாணியோடு இரண்டறக் கலந்து வளர்ந்த தமிழ்வாணி, இந்நாளில் மேற்றிசையிலிருந்து நவயௌவன சௌந்தரியத்தோடு தோன்றியுள்ள ஆங்கிலவாணியைத் தழுவி வளர்கின்றாள். நதிக்கரை நாகரிகம், கடற்கரை நாகரிகத்தோடு கைகோத்து உலாவுகிறது! இனி, நமது தாய் நாட்டிலே கலைமகள் ஆங்கிலச் செல்வியோடு தோழமைபூண்டு சமீப எதிர்காலத்தில் பல வேறு புதிய கலைத்துறைகளிலும் வளர்ந்தோங்கி உண்மையிலேயே சகலகலாவல்லியாகக் காட்சி அளிப்பாளென்று நம்புகிறோம். அக்காலத்திலேதான், தமிழராயுள்ளார்,

"விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே"

என்று தமிழ்த் தெய்வத்தைப் போற்றிப் பாராட்டுதல் கூடும்.

அரசியல் முறை*

டி. சிவராமசேதுப் பிள்ளை

(92-ம் பக்கத் தொடர்ச்சி)

1917-ம் வருஷம் மாண்டேகு பிரபு தொடங்கிய முயற்சி 1919-ம் வருஷம் முடிவு பெற்றது. 1919-ம் வருஷம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கங்கள் ஊன்றிக் கவனிக்கத்தக்கன. முதலாவது: சட்டங்கள், தீர்மானங்கள் போன்றவை நிறைவேற்றும் சபை ஒன்று; அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பணியாளர்கள் அங்கம் மற்றொன்று. சட்டசபையும் அதிகார சபையும் தனித்தனியே ஏற்படவேண்டும்; சட்டசபை அதிகார சபையின் ஒரு பாகமே என்று கருதப்படும் கொள்கை அறவே நீக்கப்படவேண்டும். இரண்டாவது: இந்தியா கவர்ன்மெண்டின் அதிகாரம் ஒன்றே முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இராஜதானியில் உள்ள ஏனைய வகுப்புக்களெல்லாம் இந்திய ஆட்சியின் உட்பிரிவுகளே. அவற்றின் அதிகாரங்கள் எல்லாம் இந்தியா கவர்ன்மெண்டு காட்டின வரைக்குள்தான். அவை ஒவ்வொன்றும் தனித் தனி அரசாங்கம் என்று சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இத்தகைய அமைப்பு இந்தியாவின் சுய ஆட்சிக்குத் தகுந்த ஏற்பாடல்ல. மாகாணங்கள் தனித்தனியே வளர்ந்து செல்ல ஏற்பாடு பண்ணவேண்டும் என்ற மற்றொரு முக்கிய தீர்மானத்துடன் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியை முடிக்கத் தொடங்கினர் மாண்டேகு மந்திரி.

என்னே? இட்டவேலையைச் செய்துவைக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் பணியாளர்கள், தாமே எந்த வேலையைச் செய்யவேண்டும் என்று தீர்மானிப்பது எந்த அரசியலில்தான் இருக்கும்? பெரிய தேசமாய் விளங்கும் நம் நாட்டின் ஆட்சிக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும், கங்கை நதிக்கரையில் அமர்ந்திருக்கும் சிற்சில பெரியார்கள் வரை கட்டிவிட்டார்கள் என்றால், திருநெல்வேலியில் உழுதுண்டு உண்ணும் உழவர் எப்படி நம்புவது எனக் கேள்விகள்

---

*இவ்விஷயங்கள் இந்தியா முழுமைக்கும் உரியனவாகையால் சென்னை யென்பது எடுத்துவிடப்பட்டது.

I—25

பிறக்கலாம். ஆயினும், 1919-ம் வருஷத்திற்கு முன் சட்டப்படி அமைக்கப்பெற்றிருக்கும் அரசியலின் தன்மையை ஆராய்ந்தால் அது தெற்றென விளங்கும். நாளடைவில் நடந்தேறும் அமுல்களில் ஒவ்வொன்றும் இந்தியா கவர்ன்மெண்டினிடமிருந்து பிறந்தது என்று எண்ணுவது தப்பு. இன்னவின்ன காரியங்கள் இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு நம்பிக்கையுள்ள பிரதிநிதிகளை ஏற்படுத்தி, அவர்கள் வகுத்திட்ட வரை கடவாதபடி அரசியல் நடத்தப்பெற்றது. ஆனால் சட்டசபை வேறு, நிர்வாக சபை வேறு என்று பார்லிமெண்டு மூலமாய்த் தீர்மானிக்கப்படவில்லை. மேலும், 1833-ம் வருஷம் வர்த்தகச் சங்கத்தார் கையில் இருந்து விக்டோரியா அரசியின் கையில் வரும் போது இந்திய ஆட்சி எப்படி நடைபெற்று வந்ததோ அப்படியே பின்னும் நடந்தது. இதுவன்றி, இந்தியாவிற்குள் சென்னை ஆட்சி என்றும், பம்பாய் கவர்ன்மெண்டு என்றும், பார்லிமெண்டு ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், இந்தியாவில் வசூலிக்கப்படும் வரி முழுவதும் அரசரின் அமைச்சருக்கே உரியது. அவர் இட்ட கட்டளைப்படிதான் ஏனையோர் அந்தப் பொருளைச் செலவிடலாம். இந்தியா மந்திரியின் ஏவலின் கீழே இந்தியாவின் அரசாங்கம் நாளுக்கு நாள் நடக்கவேண்டியனவற்றிற்குச் சிற்சில சுதந்திரத்தை அடைந்துகொண்டது. மாகாணத்தில் உள்ள அரசாங்க ஏவலாளர்கள் செலவு திட்டத்திற்கும், கடன் வாங்குதற்கும், இந்தியா கவர்ன்மெண்டின் உத்தரவும் ஆங்கில அமைச்சரின் ஆதரவும் அவசியம்.

மூந்நூறு ஆண்டுகளாய் இம்மாதிரி இயற்றப்பட்டுக்கிடக்கும் வலிய கட்டிடத்தில் புதிய சித்திரம் தோன்றவைப்பது கடினம் என்று கடிதில் கண்டார் மாண்டேகு. 1917-ம் வருஷம் இந்தியர்கள் நாளடைவிலே தம் நாட்டைத் தாமே தம்மக்களின் உதவியாலும், அவர்கள் ஏற்படுத்தும் வரம்பிற்குள்ளும் ஆட்சி புரிய வேண்டும் என்று, பார்லிமெண்டின் சம்மதத்துடன், நம் மன்னர் மொழிந்த கொள்கையை முன் கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்குள் அமைப்பது அசாத்தியம். ஆகவே அதனை ஒருவாறு அகற்றிவிட்டு, புதிய மண்டபம் தோற்றுவிப்பதுவே நலம். ஆனால் பற்பல ஆண்டுகளாய்ப் பழக்கப்பட்டுள்ளவைகளைத் திடீரென்று மாற்றுதல் புத்திமான்கள் வழியல்ல. ஒவ்வோர் அடியும் நன்றாக ஆலோசித்து வைக்கவேண்டும். எப்படிப் புறப்படவேண்டும்? எம்மாதிரிச் செல்லவேண்டும்? வழியில் ஏதேனும் களைப்பு ஆறும் மடம் நியமிக்க வேண்டுமா? என்று அரசியல் முறைக்கு வேண்டியனவற்றை ஒரு

வாறு வகுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். ஆகவே, அரசரின் கொள்கையை நிறைவேற்றுதற்கு உதவும்படி நான்கு பிரதான மார்க்கங்களை வகுத்தனர்.

(1) ஜில்லாத்தோறும் சுகாதாரம், கல்வி, பாதைகள் முதலியவற்றைக் கவனிக்க ஏற்பட்டிருக்கும் கழகங்கள் *(Local Boards)*, தங்கள் இலாகாவில் கூடிய மட்டும் சுய ஆட்சி.

(2) மாகாணங்களில் தான் சுய ஆட்சியின் கல்விச்சாலை முதலில் ஏற்படுத்தவேண்டும். நாளடைவிலே, ஆழ்ந்த அறிவு அப்பியாசத்தில் ஏற்பட்ட பிறகு, மாகாணங்களில் சுயஆட்சி கொடுக்கவேண்டும். அக்காலம் வரும்வரை, இந்தியா கவர்ன்மெண்டார், தங்களிடம் ஒப்பித்திருக்கும் கடமைகளுக்குக் கெடுதியில்லாமல், கூடிய வரைக்கும், சட்டம் ஏற்படுத்தவும், அரசியலின் கடமைகளை நடத்திவைக்கவும், வருமானத்தைச் செலவு பண்ணவும் மாகாணங்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் *(Legislative, Administrative and Financial devolution)*.

(3) பார்லிமெண்டிற்கு, இந்தியா கவர்ன்மெண்டே இந்திய நாட்டின் நல்ல ஆட்சிக்கு உத்தரவாதம். மாகாணங்களில் புதிதாய் அளிக்கப்பட்டிருக்கும் ஆட்சியின் கவுரவத்தை இந்தியா கவர்ன்மெண்டே நற்றாய்போல் பார்த்து வரவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்ட சபையை ஓங்கவைக்க வேண்டும். நாட்டின் பிரதிநிதிகளை அதிகமாய்ச் சேர்க்கவேண்டும்.

(4) முன் கூறின மூன்று மார்க்கங்களிலும் ஆட்சிமுறை ஊன்றி வர வர, இந்திய அமைச்சர் தம்முடைய ஆட்சிக் கயிற்றை மெல்ல மெல்லத் தளர்த்தி விட்டுக் கொண்டே வர வேண்டும்.

இந்நான்கு மார்க்கங்களையும் கையாளும் எண்ணம் கொண்ட பார்லிமெண்டில் 1919-ம் வருஷம் இந்திய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தினால், அரசாங்கம் அமைந்த முறையைப் பின்னர்க் கூறுவோம்.

(தொடரும்)

முதுமை நிலயம்*

வி. விசாலாக்ஷியம்மாள்

சேகரனுடைய தேசத்தவருள் ஒரு புராதன வழக்கம் இருந்தது. குழந்தை பேசத்தொடங்கியதும் அதன் காலில் இரும்பு விலங்கைப் பூட்டி விடுவார்கள்; விலங்கிட்ட காலுடன் கைதிகள் போல் நொண்டிக்கொண்டே குழந்தைகள் விளையாடுவார்கள்; யௌவன பருவத்தில் இளைஞர்களும் யுவதிகளும் தளையிட்ட காலுடன் கஷ்டப்படுவது பரிதபிக்கத்தக்க காட்சியாக இருக்கும்; வயோதிகர்களும், அநேக வருஷங்களாக இரும்பு காலில் உராய்ந்து உண்டான பல புண்களினால் வேதனை அடைந்து, காலை இழுத்து இழுத்து நடந்து துன்பப்படுவார்கள்; ஆனால், யாருமே மரண பரியந்தம் அந்த விலங்கைக் கழற்ற மாட்டார்கள்.

சேகரனுக்கு வயது பத்திருக்கும். அந்நிய நாட்டார் பலர் அந்தத் தேசத்தின் வழியாக வியாபாரார்த்தம் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். காலை வீசி அவர்கள் விரைவாய் நடப்பதைக் கண்ட சேகரன் வியப்புற்றான்; "இவர்கள் தடையில்லாமல் இஷ்டப்படி நடக்கிறார்களே! நாம் மட்டும் ஏன் விலங்கைப் பூட்டிக்கொண்டு கஷ்டப்படுகிறோம்?'' என்று சிந்தித்தான்.

இதைக் குறித்து அவன் தத்துவம் உபதேசிக்கும் தன் மாமனைக் கேட்டான்.

"அப்பா, சேகரா! உன் விலங்கைப் பற்றிக் குறை சொல்லாதே. விலங்கு பூட்டிக் கொள்ளாத ஜன்மம் ஒரு ஜன்மமா? நம்மைப் போல் விலங்கைப் பூட்டிக் கொள்ளாதவர்கள் சந்தோஷமாக இருப்பதில்லை; அவர்கள் நல்லவர்களில்லை. தவிரவும் இதைப்பற்றி எல்லாம் நீ பேசக்கூடாது. உனக்கு எவ்வளவோ பெரியவர்களான நாங்கள் ஏதாவது சொல்லுகிறோமா? விலங்கைப்பற்றி முணுமுணுத்தால் மஹாபாவம் வந்து சேரும்! விலங்கைக் கழற்றினால் உடனே தலையில் இடி விழுந்துவிடும்'' என்று சொன்னான்.

"இந்தப் பிரயாணிகள் தலையில் ஏன் இடி விழவில்லை?'' என்று சேகர் கேட்டான்.

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தமைத்தது.

"அவர்களுக்கு அறிவு போதாது; அதனால்தான் அவர்கள் வெறுங் காலாக இருக்கிறார்கள். இந்தப் பாபத்தை இன்னும் ஒரு ஜன்மத்தில் அனுபவிப்பார்கள். 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' என்னும் வசனம் நீ கேட்டதில்லையா?" என்றான் மாமன்.

"அவர்கள் மாதிரி எனக்கும் அறிவு இல்லாமலிருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. விலங்கு தடுக்கிறது; புண் வலிக்கிறது. அறிவு இல்லாமலிருந்தால் நானும் அவர்களைப்போல் விரைவாய் நடப்பேனே!" என்று சேகர் பெருமூச்செறிந்தான்.

"சீ, அவர்களைக் கண்டு பொறாமைப் படாதே. அவர்கள் பாவிகள்; அவர்களுக்குப் பகுத்தறிவு போதாது. ஐயோ பாவம்! அவர்களுக்காகப் பரிதவிக்கவேண்டும்! விலங்கு பூட்டிக் கொள்ளுவதால் உண்டாகும் ஆனந்தத்தை அவர்கள் உணரவில்லை! அவர்கள் கதியை நினைக்க என்மனது சஞ்சலமடைகிறது. உண்மையில், அவர்கள் இழிவான ஜன்மம் படைத்தவர்கள்; மனிதத்தன்மையை அவர்கள் இன்னும் முழுவதும் அடையவில்லை. மிருகங்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் பொருந்தும்! விலங்கு போடாதவன் மனிதனில் சேர்ந்தவனா? நீ அவர்களிடம் பேசாதே; பழகாதே; அவர்கள் துராத்மாக்கள்" என்றான் தத்துவ உபதேசியாகிய மாமன்.

இதைக்கேட்டது முதல், சேகரும் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விலங்கு போடாமல் போகும் பிரயாணிகள் மேல் கல்லை எறிந்தும் அவர்களை வைதும் தன் ஜாதி வழக்கத்தைக் கைவிடாமல் நடந்துகொண்டான். இவ்வாறாக ஐந்து ஆண்டுகள் கழிந்தன. சேகரனுடைய பதினைந்தாவது பிறந்தநாளன்று மாலை அவன் நதி ஓரத்திலிருந்த ஒரு நந்தவனத்துக்குச் சென்றான். ஆகாயம் நிர்மலமாக இருந்தது; மரஞ்செடிகளில் பட்சிகள் பாடியும் ஆடியும் உல்லாசமாக இருந்தன; அலர்ந்த புஷ்பங்களின் வாசனை எங்கும் வீசிற்று; ஆற்றோரத்தில் ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து சேகர் தன் காலைத் தடவிக் கொடுத்தான். அன்று அவன் காற்புண் அதிகமாக வேதனை எடுத்தது. அருகிலிருந்த புதரின்பின் யாரோ குதித்துப் பாடும் சப்தம் திடீரென்று கேட்டது. சேகர் எழுந்து புதரை நீக்கிப் பார்த்தான். தன் ஊர்ச் சிறுவன் ஒருவன் விலங்கைக் கழற்றிக் கீழே வைத்து விட்டு வெறுங்காலுடன் குதித்துத் துள்ளி விளையாடும் காட்சியைக் கண்டான்!

"ஐயோ! நீ ஏன் விலங்கைக் கழற்றி விட்டாய்?" என்று கேட்டான்.

"ஐயையோ ! யார் ? சேகரனா ? உன்னை நான் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறேன் ; உன் மாமனிடம் சொல்லாதே" என்றான் அந்தப் பையன்.

"நீ ஏன் இடி விழுந்து சாகவில்லை? என் மாமனிடம் ஏன் சொல்லக்கூடாது?" என்று சேகர் வினவினான்.

"இடி விழும் என்பது வெறும் கதை ; சின்னக் குழந்தைகள் தாம் அதை நம்புவார்கள். எத்தனையோ தடவை இங்கு வந்து விலங்கைக் கழற்றிவிட்டு நாங்கள் விளையாடியிருக்கிறோம். ஒன்று மாக வில்லை. ஆனால் உன் மாமனுக்குத் தெரிந்தால் அனர்த்தந் தான். அவரிடம் சொல்லாதே" என்று கூறி அந்தப்பையன் சென்றான்.

சேகரன் மனத்தில் பல புதிய எண்ணங்கள் உதித்தன. அவன் சுபாவத்தில் தீரமான மனமுடையவன். தன் விலங்கினால் உண்டான கஷ்டங்களை அதுவரை பொறுமையாகவே அனுபவித்து வந்தான். ஆனால், தான் இவ்விதம் ஏமாற்றப்பட்டது அவனுக்கு ஆத்திரத்தை விளைவித்தது. யாரும் அறியாமல், தன் ஊர் வழியாகச் செல்லும் பிரயாணிகளுடன் அவன் சம்பாஷிக்கலுற்றான். இருட்டு வேளை களில் சாலை ஓரத்தில் ஒளித்து நின்று தங்களைப் பல கேள்விகள் கேட்கும் சேகருக்கு, தங்களுக்குத் தெரிந்ததை அவர்கள் சொன் னார்கள். விலங்கு பூட்டிக் கொள்ளுவது கடவுளின் கட்டளை இல்லை என்றும், தன் தேசத்தில் முதுகாட்டில் முதுமை நிலயத்தில் வசிக்கும் வெளுத்த முகமுடைய ஒரு மந்திரவாதியே இந்த வழக்கத் துக்கு மூலகாரண மென்றும் அவர்களிடமிருந்து சேகர் அறிந்து கொண்டான். அந்த மந்திரவாதியால் பல ரூபங்கள் எடுக்க முடியு மென்றும், அவ்வாறு எடுத்த போதிலும் அவனை இன்னாரென்று அறிந்து கொள்ளுவது சுலபமென்றும், அவன் இஷ்டத்துக்கு மாறு பட்டால் அவன் 'கொக்கரகோ' வென்று கோழி போல் கூவுவா னென்றும் அவர்கள் சேகருக்குச் சொன்னார்கள். மேலும் அந்த மாந்திரீகனுக்கு மூன்று உயிர்கள் உண்டென்றும், மூன்று முறை அவனைக் கொன்று விட்டால் பிறகு அவன் மந்திரம் மாயமாகப் பறந்துவிடுமென்றும், விலங்குகள் தாமே கழன்றுவிழ, அந்தத் தேசத் தார்கள் சந்தோஷத்துடன் கூத்தாடுவார்களென்றும் கூறினார்கள்.

"உங்கள் ஊரிலோ?" என்று சேகர் கேட்டான். ஆனால், அந் தப் பிரயாணிகள் யாருமே இதற்குச் சரியான விடை பகரவில்லை. அதிலிருந்து, ஒரு தேசத்திலுமே முற்றிலும் சந்தோஷமாகக் குறை யற்று வாழும் மனிதர்கள் இல்லை என்று சேகர் எண்ணிக்

கொண்டான். ஆனாலும், விலங்கு போட்டுத் திண்டாடும் தன் தேசத்தவர்களைக் காணக் காண அவன் மனம் கிலேச முற்றது. சுயேச்சையாக ஓடிஆட முடியாமல், நொண்டி நொண்டிக் குழந்தைகள் விளையாடும் காட்சி அவன் கண்முன் எப்பொழுதும் நின்றது. புண்களினால் வேதனையுற்று முனகுவாரின் சப்தம் அவன் காதில் சதா தொனித்துக்கொண்டேயிருந்தது. கடைசியில், தான் இந்த விலங்கிலிருந்தும் அவர்களை விடுவிப்பதன்பொருட்டே பிறந்தவன் என்ற எண்ணம் அவன் மனத்தில் உதித்தது.

சேகரனுடைய ஊரிலுள்ள கோயிலில் ஒரு கத்திஇருந்தது. அது தெய்வீகத் தன்மை வாய்ந்த கத்தி என்றும், மயனால் செய்யப்பட்டதென்றும், அதன் வெளிச்சத்தில் சத்தியம் விளங்கும் என்றும் சேகர் கேள்விப் பட்டிருந்தான். அந்தக் கத்திக்குப் பூஜை செய்வார்களே யன்றி அதை ஒருவரும் வெளியில் எடுப்பதில்லை. ஒரு நாள் இரவு யாரும் அறியாமல் கத்தியைத் திருடிக் கொண்டு சேகர் வெளியே கிளம்பினான்.

அவன் இரவெல்லாம் நடந்து, காலையில் கழனிக்குச் செல்லும் சில உழவர்களைக் கண்டான். அவர்களிடம் முதுகாட்டுக்கு வழி எது, மாந்திரிகனுடைய வீடு எவ்விதமானது? என்று விசாரித்தான். ஒருவன் கிழக்கே காட்டினான்; மற்றொருவன் வடக்கே காட்டினான்; இவ்வாறு அவர்கள் பலவிதமாக வழி சொன்னார்கள். அவர்கள் உண்மையைக் கூறாமல் தன்னை ஏய்க்க முயலுவதைச் சேகர் அறிந்து கொண்டான். பிறகு, யாரை வழி கேட்கும் பொழுதும் உறையினின்றும் கத்தியை உருவி அதை அவன் முன் பிடித்துக் கொண்டு கேட்டான். சேகரனுடைய கேள்விக்கு அவன் உத்தரம் பகருமுன், அவன் காலிலுள்ள விலங்கு 'டங்' என்று சப்தம் செய்தது; அவனுக்குப் பதிலாக அதுவே விடை அளித்தது; 'நேரே செல்' என்ற பதிலே எப்பொழுதும் கூறிற்று. ஆனால் இவ்விதம் தன் விலங்கு விடை அளிப்பதைக் கேட்டதும் அதை அணிந்திருப்பவன் கோபித்துக் கல்லால் சேகரை அடித்துத் துரத்துவான். இவ்விதம் பலரிடம் அடிபட்ட சேகருடைய தலையில் அநேக காயங்கள் ஏற்பட்டன.

கடைசியில், அவன் முதுகாட்டை அடைந்து அதனுள் புகுந்தான். அதன் நடுவில் ஒரு நிலயமிருந்தது. அதைச் சுற்றிலும் நாய்க்குடை முதலிய அநேகம் பூண்டுகள் முளைத்திருந்தன. அதன்மேல் பல மரங்களின் நிழல் விழுந்தது. சூழ இருந்த சதுப்பு நிலத்திலிருந்து ஆவி புகைபோல் கிளம்பிற்று. அந்த மனை இடுக்கு

முடுக்காய் ஒரு சீரில்லாமல் அமைக்கப்பெற்றிருந்தது. சில பாகங்கள் மிகவும் பழையனவாகவும், சில மிகவும் புதியனவாகவு மிருந்தன. ஒரு பாகமும் முழுவதும் கட்டி முடிந்திருக்கவில்லை. இருந்த பொழுதிலும் அது நன்ருகச் செப்பனிடப்பட்டே இருந்தது. அம் மனை நாற்புறமும் திறந்திருந்ததால் எத்திக்கிலிருந்தும் உள்ளே பிரவேசிக்க வசதியாக இருந்தது. தான் முதுமை நிலயத்தை அடைந்து விட்டதைச் சேகரன் உணர்ந்தான்.

அவன் உள்ளே நுழைந்தான். அங்குப் பல அறைகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மனிதன் வசிப்பதற்கு அவசியமான பொருள்கள் மட்டும் இருந்தன. மேலும், ஒவ்வோர் அறையிலும் கைகால் கழுவ ஒவ்வொரு பாத்திரத்தில் தண்ணீரும் செம்பும் வைத்து, உண்ணுவதற்குத் தயாராகப் பலகை இலை போட்டுப் பரிமாறியும் இருந்தன. ஆனல் எங்குமே ஒரு பிராணியையும் காணவில்லை. "இந்த வீட்டில் அதிதிக்கு எல்லாம் தயாராகவே இருக்கின்றன. இருந்தாலும் சதுப்பு நிலத்தில் கட்டியிருப்பதால் அஸ்திபாரம் கெட்டியாக இல்லை என்று தோன்றுகிறது. நான் ஒவ்வோர் அடி வைக்கும்பொழுதும் வீடெல்லாம் நடுங்குகிறதே!" என்று சேகர் நினைத்துக்கொண்டான்.

சேகரனுக்கு நல்ல பசியுண்டாயிற்று; அவன் முதல் நாள் இரவு ஊரை விட்டுப் புறப்படுமுன் சாப்பிட்டதுதான்; பிறகு யாதும் அருந்தவில்லை. முதலில், அந்த மனையிலிருந்த உணவை உண்ண அவனுக்குப் பயமாக இருந்தது. கத்தியை உருவி அதன் வெளிச்சத்தில் அந்த ஆகாரத்தைப் பரிசோதித்தான்; குற்றமற்றதாகவே தோன்றிற்று; உண்டு களை தீர்ந்தான். "இந்த மந்திரவாதியின் வீட்டில் நல்ல ஆகாரம் இருப்பது அதிசயந்தான்" என்று எண்ணினன்.

அவன் இவ்வாறு சிந்தித்துக்கொண் டிருக்கும்பொழுது அவன் மாமனுடைய உருவம் அந்த அறைக்குள் வந்தது. தான் கத்தியைத் திருடி அங்கு வந்ததைக் குறித்துத் தன் மாமன் கோபிப்பானே என்று சேகர் பயந்தான். ஆனல், அவன் மாமன் அவனுடன் பக்ஷமாகப் பேசி, கத்தியை அவன் தைரியமாக எடுத்து வந்ததற்காக அவனை மெச்சினன். அவர்கள் இருவரும் சற்று நேரம் உல்லாசமாகப் பேசினர்கள். இதுவரை சேகர் மேல் மாமன் இவ்வளவு அன்பு பாராட்டினதில்லை. சேகருக்குத் தன்னை அறியாமலே மாமன்மேல் வாஞ்சை உண்டாயிற்று.

"நீ செய்தது ஒரு வீரச் செயலே! கத்தியை அபகரித்துந் தனியே முதுமை நிலயத்துக்கு நீ வந்தது ஒரு தைரியமான காரியந் தான். உனக்குத் திருப்தியாகி விட்டதில்லையா? இனி நாம் இருவரும் இரவுப் போஜனத்துக்கு வீட்டுக்குப் போகலாம்; நேரமாகிறது, வா!" என்று மாமன் அழைத்தான்.

"இல்லை, எனக்கு இன்னும் ஒன்றும் திருப்தியாகவில்லை" என்ருன் சேகர்.

"ஏன்? உனக்குப் பசி தீரவில்லையா? இன்னும் களைப்பாகவா இருக்கிறது?" என்று மாமன் வினவினன்.

"சாப்பாடு நன்ருகத்தான் இருந்தது. ஆனல் ஒரு மனிதன் தன் வலது காலில் விலங்கை ஏன் பூட்டிக் கொள்ள வேண்டும் என்பது விளங்க வில்லையே?" என்ருன் சேகர்.

உடனே, அவன் மாமனின் உருவம் 'கொக்கரகோ' என்று கோழி போல் கூவிற்று.

"ஈசனே! இவனு மந்திரவாதி?" என்று சேகர் கத்தினன். அவன் நெஞ்சு பதைபதைத்தது; அவன் கை எழவில்லை. தன் மாமன் என்ற பிரமையினல் எவ்வாறு அவனைக் கொல்லுவது என்று தயங்கினன். இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, கத்தியினல் அந்த உருவத்தின் தலையில் அடித்தான். மாமனது குரலுடன் கதறிக்கொண்டே அது கீழே விழுந்தது; அந்த அறையினின்றும் ஒரு சிறிய வெளுப்பான உருவம் வெளியே ஓடிற்று.

அந்தக் கதறல் சேகரின் காதைத் துளைத்தது; அவன் கால்கள் நடுங்கின; அவன் மனச்சாக்ஷி அவனைத் துன்புறுத்தியது. இருந்தாலும் அந்த மாந்திரிகனைக் கொன்றுவிடவேண்டும் என்ற அவா அவனைத் தூண்டியது. "மந்திரவாதியை மூன்று தரம் கொன்ருல் தானே விலங்குகள் நீங்கும்? இவனைக் கொன்று விட்டு வீட்டுக்குச் சென்று அங்கே சந்தோஷத்தினல் கூத்தாடும் என் மாமனை நான் பார்ப்பேன்" என்று தேறினன்.

அவன் அந்த வெளுத்த உருவத்தைப் பின் தொடர்ந்து மற்ருெரு அறைக்குள் சென்ருன். அங்கு, தன் தகப்பனின் உருவத்தைச் சந்தித்தான். அவன் தகப்பன் அவனைத் திட்டி அவன் கடமையை அவனுக்கு நினைவு மூட்டி, காலதாமதம் செய்யாமல் வீட்டுக்குப் போகும்படி சொன்னன்; "நீ இப்பொழுதே சென்ருல் சூரிய அஸ்தமனத்துக்குள் வீடு போய்ச் சேரலாம்; அப்படிச் செய்தால் தான் உன்னை மன்னிக்க முடியும்" என்று சொன்னன்.

"சுவாமி சாக்ஷியாக, உங்களுக்குக் கோபம் வரும்படி நடப்பதைப்பற்றி நான் விசனிக்கிறேன். ஆனல், நீங்கள் கோபிப்பதால்

ஒரு மனிதன் தன் வலது காலில் ஏன் விலங்கு போடவேண்டும் என்பது ருசுவாகவில்லையே ?'' என்று சேகர் சொன்னான்.

உடனே அவன் தகப்பனின் உருவம் 'கொக்கரகோ' என்று கோழி போல் கூவிற்று.

"ஜகதீசா ! இதுவும் மந்திரவாதியா ?'' என்று சேகர் திகைத்தான்.

தன் தகப்பன் என்ற பிரமையினால் அவன் தேகம் நடுக்குற்றது; அவன் கைகால்கள் சுவாதீனமற்றனபோல் தோன்றின. இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அந்த உருவத்தின் மார்பில் கத்தியால் குத்தினான். அந்த உருவம் அவன் தகப்பன் குரலில் அலறிக் கீழே விழுந்தது ; அந்த அறையினின்றும் ஒரு சிறிய வெளுத்த உருவம் வெளியே ஓடிற்று.

அந்த அலறல் சேகரின் ஆத்மாவை ஊடுருவிப் பாய்ந்தது; அவன் மனம் சோகத்தால் இருண்டது. ஆனால், அவனுக்கு அதனுடன் ஆத்திரமும் கோபமும் உண்டாயின. "நினைக்கச் சகிக்காத காரியத்தை நான் செய்துவிட்டேன். இனிப் பின் வாங்குவதில் பிரயோசனமில்லை. ஒன்று, இந்தக் காரியத்தை ஜயத்துடன் முடிப்பேன் ; அல்லது இந்தப் பிரயத்தினத்தில் என் உயிரைத் துறப்பேன். நான் வீடு சேர்ந்ததும், இது ஒரு கனவாக முடியவேண்டும். என் தகப்பனார் விலங்கு நீங்கின சந்தோஷத்தினால் குதித்துக்கொண் டிருக்கும்படிக்கு என் முயற்சி முடியுமாறு சுவாமி கிருபை செய்வாராக'' என்று பிரார்த்தித்துத் திடமடைந்தான்.

தப்பி ஓடிய அந்த உருவத்தை மறுபடியும் பின் தொடர்ந்தான். ஓர் அறையில் தன் தாயின் தோற்றத்தைச் சந்தித்தான். அவள் அழுது கொண்டிருந்தாள். "நீ என்ன காரியம் செய்துவிட்டாய் ? நீ செய்திருக்கும் வேலையை என்னென்று சொல்லுவது ? ஐயோ ! வீட்டுக்கு வா. நீ இப்பொழுதே வந்தால் இரவு படுக்கைக்குப் போய் விடலாம். இன்னும் எனக்கும் என் இனத்தாருக்கும் தீங்கு செய்யாதே ! என் சகோதரனையும், உன் தகப்பனையும் கொன்றது போதும்; வா'' என்றழைத்தாள்.

"ஐயோ, அம்மா ! அவர்களை நான் கொல்லவில்லையே ! அவர்கள் உருவம் எடுத்துக் கொண்ட அந்த மந்திரவாதியையே கொன்றேன். அப்படியே இருந்தாலும், அதனால் ஒரு மனிதன் வலது காலில் ஏன் விலங்கு போட்டுக் கொள்ளவேண்டும் என்பது ருசுவாகவில்லையே ?'' என்று சேகர் சொன்னான்.

உடனே அந்த உருவம் 'கொக்கரகோ' என்று கோழிபோல் கூவிற்று.

அவன் அந்தக் காரியத்தை எவ்விதம் செய்தான் என்பது பிறகு அவனுக்கு நினைவேயில்லை : எப்படியோ கத்தியை ஓங்கி அந்த உருவத்தை வெட்டினான் ; அது அவன் தாயாரின் குரலுடன் ஓலமிட்டுக் கொண்டு கீழே விழுந்தது. உடனே வீடு மாயமாகப் போய் விட்டது. சேகரின் காலிலிருந்த தளை தெறித்து விழுந்தது. அவன் நடுக்காட்டில் தனித்து நின்றான்.

“சரி, மந்திரவாதியைக் கொன்றாய் விட்டது ; விலங்கும் நீங்கி விட்டது” என்று கூறிக்கொண்டான். இருந்த பொழுதிலும் அந்த அலறு சப்தங்கள் அவன் மனத்தைத் துளைத்தன ; பகல் இருண்டு இரவுபோல் தோன்றிற்று. “எவ்வளவு சிரமமாக இருக்கிறது! இந்தக் காட்டை விட்டுச் சென்று, என்னால் மற்றவர்களுக்கு விளைந்திருக்கும் நன்மையைக் கண்ணாரக் காண்கிறேன்” என்று தீர்மானித்தான்.

முதலில், விழுந்த இடத்திலேயே அந்த விலங்கைப் போட்டுச் செல்ல உத்தேசித்தான். பிறகு, அதை எடுத்துத் தன் மார்புடன் அணைத்து வைத்துக்கொண்டு சென்றான். நடக்கும் பொழுது இரும்பு தோலில் உராய்ந்ததால் அவன் மார்பு புண்ணாகி இரத்தம் வடிந்தது.

அவன் காட்டை விட்டுச் சாலைக்கு வந்தான் ; கழனியினின்றும் வீடு திரும்பும் சில உழவர்களைச் சந்தித்தான். அவர்கள் வலது காலில் தளையில்லை. ஆனால் அத்யாச்சரியம் ! இடது காலில் விலங்கு பூட்டி இருந்தது. அதன் கருத்து என்னவென்று அவர்களை வினவினான். “வலது காலில் விலங்கு போட்டுக் கொள்ளுவது ஒரு மூட பக்தியாம் ; இதுதான் சரியான முறையாம்” என்று அவர்கள் விடை அளித்தார்கள். சேகர் அவர்கள் கால்களை உற்று நோக்கினான். வலது கால் புண்கள் இன்னும் ஆறவில்லை ; இடது காலில் புதிதாகப் புண் பட்டிருந்தது !

“வீட்டில் நான் எல்லாரையும் சௌக்கியமாகப் பார்ப்பேனா ? எல்லாம் சுவாமி கிருபை” என்று தயங்கினான்.

அவன் வீடு சென்றான் ; தலையில் காயம் பட்ட அவன் மாமனும், இருதயத்தில் குத்துண்ட அவன் தகப்பனும், உடம்பு இரண்டாக வெட்டுண்ட அவன் தாயும் அங்குப் பிணமாகக் கிடக்கக் கண்டான் ; யாருமில்லாத அந்த வீட்டில், அந்தப் பிரேதங்களின் மத்தியில் தன்னந்தனியாக உட்கார்ந்து சேகர் தேம்பி அழுதான்.

கல்பகம்

கே. சாவித்திரி அம்மாள்

சீர்காழித் தாலுக்காவிற்கருகே இரண்டு மூன்று மைல் தூரத்தில் உள்ள பூண்டி என்பது ஒரு சிறு கிராமம். அங்குப் பிராமணர் பிராமணரல்லாதாராகிய சில குடித்தனக்காரர்களைத் தவிர மற்றவரெல்லாம் பயிர்வேலை செய்து ஜீவிக்கும் குடியானவர்களே. அக்கிராமத்திற்கு நேரே ரெயில் கிடையாது; சீர்காழியிலிறங்கி வண்டி வைத்துக்கொண்டுதான் செல்லவேண்டும். நவ நாகரிகம் சற்றும் எட்டிப்பாராத வெறும் குக்கிராமமா யிருப்பினும், சரீரத்திற்கு ஹிதத்தை யளிக்கக்கூடிய இயற்கைவிசேஷங்களையுடையதாய் அவ்வூர் விளங்கிற்று. அங்குச் சிதம்பரம் பிள்ளை யென்பவர் ஓர் எளிய வேளாளர் குடும்பத்திற் பிறந்தவர். கும்பகோணத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி செய்துவந்த ஒரு செட்டியினிடம் கணக்கெழுதும் குமாஸ்தாவாக அமர்ந்து அவர் வேலைபார்த்து வந்தார். தம் சாமர்த்தியத்தினாலும், ஊக்கத்தின்மிகுதியாலும் செட்டியளிக்கும் சொற்பச் சம்பளத்தைக்கொண்டு அவர் ஒருவாறு காலக்ஷேபம் செய்துவந்ததுமன்றி, மிக்க சிரமத்துடன் சிறிது பணமும் சேர்த்துக்கொண்டேவந்தார். அவர் நாணயத்தைக்கண்டு சந்தோஷித்துச் செட்டியும் அதற்குத் தக்கபடி அவரைக் கௌரவித்து உதவி புரியாமலிருக்கவில்லை. கடைசியில் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உடம்பு அசௌக்கியமென்று அவர் வேலையைவிட்டு நீங்கும் பொழுது, இவ்வளவுகாலம் யோக்கியமாய்த் தன்னிடம் வேலை பார்த்ததற்குநன்றி பாராட்டுவதற்கடையாளமாய்ச் செட்டி கொஞ்சம் பொருள் வெகுமதியாகவளித்ததுடன், அவர் உயிருள்ளமட்டும் தன்னிடம்பெற்றுவந்த சம்பளத்தை உபகாரமாக அடையும் படியும் திட்டம் செய்து அனுப்பினன். சிதம்பரம்பிள்ளையும் அத்தொகையைக் கையிலிருந்த பணத்துடன் சேர்த்துப் பூண்டிக்கருகில் ஐந்தாறு வேலி நிலம் வாங்கிவிட்டார். தம் குடும்பத்துடன் அங்குச் ... ன்று நிலத்தின் வருமானத்தைக்கொண்டும் செட்டியினிடமிருந் ... ரும் உபகாரச் சம்பளத்தைக்கொண்டும் நிம்மதியாயும் சுகமா ... பதி ... ம் கழிக்கலானர்.

நமது கதை தொடங்கும்பொழுது அவர் இறந்து ... ழிபோல் வருஷங்களாய்விட்டன, அவர் மனைவியின் பெயர் தாயாரம் ...

அவர்களுக்கு ஐந்தாறு குழந்தைகள் பிறந்து இறந்துபோய்க் கடைசியில் தெய்வகதியாய் ஓர் ஆண்குழந்தை தங்கிற்று. ஆகவே அதை, பெற்றோர் கண்ணுக்குக் கண்ணாய்ப் பாவித்தனரென்று சொல்லவும் வேண்டுமோ ? அக்குழந்தையின் பெயர் மாசிலாமணி. சிறுவயதில் தந்தை யிறந்ததால் அவன் தாய்க்கு மிகவும் செல்வப் புத்திரனாய் விளங்கினான். அவனுக்கு இப்பொழுது வயது இருபத்திரண்டிருக்கும். ஏதாவது ஒருவேலை கற்றுக்கொள்ளட்டுமென்று தாயாரம்மாள் சென்னையில் தகுந்த ஸ்திதியிலிருக்கும் தன் சகோதரனிடம் பிள்ளையை யனுப்பிவைத்தாள். அவன் போய் ஏறக்குறைய இரண்டு வருஷகாலமாயிற்று. மாமனின் சிபார்சின்பேரில் பெரிய கம்பெனியொன்றில் வேலையில் அமர்ந்திருப்பதாகச் சமீபத்தில் தாயாருக்குக் கடிதமெழுதியிருந்தான்.

இக்கதை யாரம்பிக்கும்பொழுது தாயாரம்மாளுக்கும் வயது ஏறக்குறைய ஐம்பத்தைந்திருக்கலாம். பார்வைக்கு லக்ஷணமா யிருக்கமாட்டாள். குள்ளமாய் மிகவும் இரட்டைநாடி தேகமுடைய வளாயிருப்பாள். கடுகடுப்பின்றிச் சிரித்த முகமாய் அவள் காணப் படுவது மிக்க அபூர்வம். அடிக்கடிக் கலைந்து விழுவதனால் காரியம் செய்வதற்கு இடையூறுண்டாகுமென் றெண்ணித் தன் நரைத்த மயிரை இழுத்துச் சேர்த்து ஒருபக்கம் அவள் சொருக்கிட்டிருந்தது அவள் இயற்கையான குரூபத்தைப் பின்னும் அதிகரிக்கச்செய்தது. வீட்டுக்காரியங்களில் மிகவும் செட்டும் கட்டுமாயிருப்பாள். அநாவசியமாய் அரைக்காசும் அவள் செலவழித்து அக்கிராமத்தில் ஒருவரும் கண்டவரல்லர். அதனால்தான் சிதம்பரம் பிள்ளை தம்மகன் கண்டபடி செலவழித்து இழித்து விடாவண்ணம் முன் ஜாக்கிரதையாக மனைவியையே சொத்து முழுவதற்கும் யஜமானியாக நியமித்து அவளுக்குப் பிற்காலம் அது மகனைச் சேரும்படி உயில் எழுதி வைத்தார்போலும்.

அவளுக்கு அவ்வளவு சாமர்த்திய முண்டென்பதில் அவருக்குத் திடமான நம்பிக்கையிருந்தது. அந்நம்பிக்கை வீண்போகாமல் தாயாரம்மாளும் சொத்தை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்தாள். தன் நடவடிக்கைகளில் மிகவும் கண்டிப்புள்ளவளென்றாலும் அவளை முற்றிலும் தயை தாக்ஷிண்ய மற்றவளென்று நாம் சொல்ல முடியாது. தன்னைச்சேர்ந்த எளிய பந்துக்களுக்கு அவள் ஒவ்வொரு சமயங்களில் ஏதாவது உபகாரஞ் செய்வதுண்டு. ஆயினும் அவ்வுபகாரத்தைத் தனக்காகத் தோன்றி அவள் செய்யவேண்டுமே யொழிய, அவர்கள் வாய்திறந்து கேட்டுவிட்டால் உடனே

அவள் மனம் கடினமாய்விடும். ஆகவே, அவளுதவியை விரும்புவோர் அவளுக்குச் சந்தேகம் உதிக்காவண்ணம் மிகவும் சாமர்த்தியமாய் அவளிடம் நடந்துகொள்ளவேண்டும். ஒருவர் எதிர்பார்த்தபடி செய்வது தன் திடச்சித்தத்திற்குக் குறைவு என்பது தாயாரம்மா ளின் கொள்கை. பணத்தில் எவ்வளவோ கண்டிப்புள்ளவளா யிருந்தும் அருமைப்புதல்வனை மாசிலாமணியிடம் அப்படி யிருக்க அவளுக்கு மனம் வரவில்லை. அவனுக்கிஷ்டமான விடங் களுக்குச் செல்வதிலோ, ஆடைகளணிந்துகொள்வதிலோ செல வழியும் தொகையைப்பற்றி அதிகக்கவலை கொள்ளாமல் மௌனமா யிருந்து விடுவாள். ஆயினும், ஒரே புதல்வன், அவன் விஷயத்தில் உதாரமாயிருப்பது ஓர் ஆச்சரியமா ? ஒரு விஷயத்தை நோக்கும் பொழுது தாயாரம்மாள் உண்மையாய் உதாரகுணமுடையவ ளென்றே கூறவேண்டும். நில சம்பந்தமான காரியங்களைக் கவ னிக்கும் வேலையில் அவளிடம் தீனதயாளு என்ற ஒருவன் சில வருஷங்களுக்கு முன்னிருந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தை யுண்டு. அதைப்பெற்ற சில மாதங்களுக்குள் அதன் தாய் இறந்து விட்டாள். அதற்கு மூன்று வயதாயிருக்கும்பொழுது தீனதயாளு வும் கடுஞ்சுரத்திலடிபட்டு உயிர் துறந்தான். அக்குழந்தைக்கு வேறு திக்கில்லாமற் போகவே அதிகயோசனையொன்றும்செய்யாமல் தாயாரம்மாள் அதைத் தானே யெடுத்து வளர்க்கத் தொடங்கினள். தனியாயிருந்த மாசிலாமணிக்கும் இப்பொழுது கூடவிளையாடு வதற்கு ஒருதுணை கிடைத்தது நிரம்பச் சௌகரியமாகவே யிருந்தது. அச்சிறுமியின் பெயர் கல்பகம். நாளடைவில் அவள் அங்குள் ளோரனைவருக்கும் மிக்க அருமையாயினள். மாசிலாமணிக்குக் கொஞ்சம் வயதானதும் அவளைத் தன் மனைவியாகவே கருதத் தொடங்கினன். இது தாயாரம்மாள் அறிவிற் படவில்லை. ஆனல் அவ்வூரிலுள்ளோர்மட்டும் இம்மாதிரி ஏதாவது நேருமென்று முன்பே எதிர்பார்த்தனர். கடைசியில், தன் ஒரே அருமைப் புதல்வன்—தான் எவ்வளவோ ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவரும் சொத்திற்குப் பாத்திரமாயுள்ளவன்—தாய் தந்தையாற்ற ஓர் அநா தைப் பெண்ணை மணம்புரிய எண்ணங்கொண்டிருப்பது தாயா ரம்மாளுக்கு வெளியாயிற்று. தன்னுடைய தர்மத்தில் வளர்ந்து வரும் ஏழைக் கல்பகத்தைக் கலியாணம் செய்துகொள்ள யாவ ரேனும் முன் வருவார்களென்ற எண்ணமே அவள் புத்திக்கெட்ட வில்லை.

கல்பகத்திற்கு இப்பொழுது பதினைந்து வயதாயிற்று. இளைஞர் கள் கண்டாசைகொள்ளும்படியான அழகியாய் அவள் விளங்குவது

தாயாரம்மாளின் கண்களிற் சிறிதும் படவில்லை. வீட்டுக் காரியங்களுக்கு அவள் மிகவும் உதவியாயிருப்பதொன்றுமட்டுந்தான் அவளுக்குப் புலபட்டிருந்தது. ஆனால் அச்சிறுமியினிடம் அவளுக்கிருந்த அன்பும் கொஞ்சமல்ல. தன் வீட்டு விஷயங்களைப் பற்றி அவளைத் தவிர வேறொருவரிடமும் அவள் யோசனை கேட்கும் வழக்கம் கிடையாது; ஆயினும் கல்பகம் அழகும் இனிமையும் ஒருங்கே வடிவெடுத்தது போன்றிருப்பதைமட்டும் அவள் சிறிதும் அறிந்துகொள்ளவேயில்லை; அவளுக்கு விளங்கவில்லையென்றால் மாசிலாமணிக்கும் அவ்வண்ணமே யிருக்குமா? கல்பகத்தின் வடிவழகு அவன் மனத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. இளைஞர்களுக்குள்ள ஆர்வத்துடன் அவளை மிகவும் நேசிப்பதாய்த் தெரிவித்தான். கல்பகமும் அவ்வாறே அவனை மிகவும் நேசிக்கத் தொடங்கினாள்.

இதுவரையும் தன் விருப்பத்திற்கு மாறாகவொன்றும் தன் தாய் கூறாமலிருந்ததனால் இதற்கும் ஒன்றும் சொல்லமாட்டாளென மாசிலாமணி கருதியிருந்தான். ஆயினும், ஸ்திரீகளுக்கியல்பாயுள்ள அறிவுடன் கல்பகம் தாயாரம்மாள் சம்மதிக்க மாட்டாளென்றறிந்து அவளிடம் சொல்வதைப்பற்றி அஞ்சினாள். தக்கவிடத்தில் பெண் பார்த்து மகனுக்கு மணம் செய்விக்கவேண்டுமென்று பேராவல் கொண்டிருந்த தாயாரம்மாளோ சமாசாரத்தைக் கேட்டதும், முதலில் கண்டபடி கோபித்துக்கொண்டாள்; இரைந்தாள். பிறகு அச்சிறுமியினிடம் முகம் கொடுத்துப் பேசுவதையே நிறுத்திவிட்டாள். கல்பகத்தை அவ்விடத்தைவிட்டு எங்கேயாவது அனுப்பிவிடவேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. மாசிலாமணியின் சந்தோஷ சௌக்கியங்களுக்குக் குறைவு நேரிடுவதாயிருக்கும் பொழுது கல்பகம் எக்கேடுகெட்டாலென்ன? ஆனால் அவள் கோபம் முற்றிலும் நீடித்திருக்கவில்லை. வெளிக்குக் கண்டிப்புள்ளவளாகத் தோன்றினும், உண்மையில் இளகிய மனமுடையவளல்லவா? தனது கோபம் சற்றுத் தணிந்த பிறகு வெறும் அநாதையாய் அச்சிறு பெண்ணை அவ்விடத்தினின்றும் எப்படி அனுப்புவதென்று யோசிக்கலானாள். அச்சிறுமியில்லாவிடின் தன் வீட்டுக்காரியங்களில் தனக்கே மிகவும் சிரமமாயிருக்குமென்று அவளுக்குத் தோன்றிற்று. இதுவன்றி முக்கியமான விஷயங்களில் அவள் யோசனை கேட்கும் அந்தரங்க நண்பன் ஒருவனுண்டு. இருவரிலொருவரை அவ்விடத்தைவிட்டு அப்புறப் படுத்தித்தானாகவேண்டுமென்னும் பக்ஷத்தில் மாசிலாமணியைக் கொஞ்சகாலம் எங்கேயாவது அனுப்பிவைப்பது நலம்; வீட்டைவிட்டு வெளிச்செல்வது அவனுக்கு நன்மையளிப்பதுடன், ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் கல்பகத்தைப்

பார்க்காமலிருந்தால் அவன் அவளை எளிதில் மறந்துவிடக்கூடு மென்று அந்நண்பன் ஆலோசனை கூறினன்.

இவ்வாறு ஆலோசனை சொல்லக்கூடியவன் யாரென்பதை விசாரிப்போம்: நாராயணம்பிள்ளை யென்று பெயர்கொண்ட அவன் தாயாரம்மாளிடம் பத்து வருஷமாகக் காரியம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏகாங்கி; அவனுக்கு மனைவிமக்கள் இல்லை. முதலில் காரியமுள்ள வேளைகளில் மட்டும் வந்து போய்க்கொண்டிருந்தவன் சமீபத்தில் சில வருஷங்களாத் தாயாரம்மாளின் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு வசித்துவந்தான். ஊரில் அவனை யாவரும் 'பிள்ளை' யென்றே அழைப்பது வழக்கம். இதனால் அவன் சொந்தப்பெயர் வெகுபெயர்களுக்குத் தெரியாது. அவனுக்கு 45 வயதிருக்கும். ஆள் உயரமாய் லக்ஷணமாயிருப்பான். எப்பொழுதும் நிமிர்ந்து நடப்பான். ஒருகால் மட்டும் சிறிது ஊனமாயிருந்தது. கொஞ்சம் சாய்த்து நடப்பதைத் தவிர அவன் நடையில் வேறு குற்றம் கூறுவதற்கில்லை. தினந்தோறும் இரவில் சாப்பாடானதும் தாயாரம்மாளும் அவள் காரியஸ்தனும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு பிரிந்து படுக்கச்செல்லுவது வழக்கம். இவ்விதம் அவள் அவனைத்தனக்கு மிகவும் வேண்டியவனாகக் கருதியதைப்பற்றி ஊரில் சிலர் விபரீதமாகவும் பேசிக்கொண்டார்கள். ஆனல் தாயாரம்மாள் அதையொன்றும் சட்டைசெய்யவில்லை. அவன் யோசனையின்பேரில்தான் கல்பகத்திற்குப் பதிலாய் மாசிலாமணி வீட்டைவிட்டுச் சென்னைக்குத் தன் மாமனிடம் அனுப்பபட்டான்.

"அதிருக்கட்டும்; இதற்காக என் மகன் எவ்வளவுகாலம் வீட்டைவிட்டு வெளியிற் போயிருக்க முடியும்?'' என்று தாயாரம்மாள் கவலைப்பட, அது முடியாதுதானென நாராயணம் பிள்ளையும் ஒப்புக்கொண்டான். ஆனல் இரண்டு வருஷம் கழித்து மாசிலாமணி திரும்பி வருவதற்குள் கல்பகத்திற்கு விவாஹத்தை முடித்துவிடலாமல்லவாவென, அவளை யாருக்குக் கல்யாணம் செய்துகொடுப்பதென்னும் யோசனை இப்பொழுதுண்டாயிற்று. மாப்பிள்ளை தேடும் விஷயத்தில் தனக்கு அதிக அனுபவமில்லையென்றும், தாயாரம்மாள் செலவை ஏற்றுக்கொள்ளும்பக்ஷத்தில் மாப்பிள்ளை அகப்படுவது எளிதாயிருக்குமென்றும் நாராயணம்பிள்ளை கூறினன்.

இவ்வாறு சிலமாதங்கள் சென்றன. பாபம்! கல்பகம் என்ன செய்வாள்? வாடிவதங்கிய உள்ளத்துடன் வீட்டுக்காரியங்களைச் செய்துகொண்டிருந்தாள். மாசிலாமணி சென்னைக்குப் புறப்படும்

பொழுது எது எப்படியானாலும் அவளைத்தவிர மற்றெவரையும் விவாஹம் செய்துகொள்ளுவதில்லையென உறுதிமொழியளித்துச் சென்றிருந்ததொன்றே அவளுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது.

ஒருநாள் திடீரென்று தாயாரம்மாளுக்கு ஒரு யோசனை யுதித்தது. கல்பகத்தை நாராயணம்பிள்ளைக்குத்தான் கொடுத்தாலென்ன ? இதுகாறும் நாராயணம் பிள்ளைக்கு இவ்வெண்ணம் தோன்றியதேயில்லை. தாயாரம்மாள் இதனைக் கூறும்பொழுது அவனுக்கு மிகவும் புதிதாகவே யிருந்தது. கல்பகத்தினிடம் தனக்கு வளர்த்த வாஞ்சையுண்டென்றும், அவளுக்கு ஸ்ரீதனமாக ஏதாவது கொடுக்கத் தான் தயாராயிருப்பதாகவும் தாயாரம்மாள் சொன்னாள். அவள் பின்னும் உதாரமனத்துடன் செய்ய ஒப்புக்கொண்டதென்ன வெனின், தன் மகன் கிராமாந்தரத்தில் வசிக்கப் பிரியப்படமட்டா னாதலின் அவர்கள் உள்ளமட்டும் அவ்வீட்டைத் தம்முடையதாகவே பாவித்து அங்கிருக்கலாமென்பதே. அவ்விஷயம் அவ்விருவருள் அடிக்கடி பேசப்பட்டுக் கடைசியில் கல்பகத்திற்கும் ஒருவாறு அறிவிக்கப்பட்டது. தனக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கணவன் வயதானவனையும் ஒருகால் ஊனமுள்ளவனையும் இருப் பதைக்கண்டு அச்சிறுமி அதிகம் வருந்தவில்லை. ஊரில் அவளைப் போன்ற பெண்கள் எவ்வளவோ பெயர்கள் இரண்டாம் தாரமாக வயதான கணவர்களுக்கு மணம் செய்விக்கப்படுவதை அவள் பார்த் திருக்கிறாள். ஆயினும், மாசிலாமணியைத் தவிர வேறொருவருக்கும் மனைவியாவதில்லையென உறுதி கூறியபின் மற்றொருவனுக்கு வாழ்க் கைப்படுவ தெப்படி யென்று யோசிக்கலானாள். தன் காரியஸ்தனை விவாஹம் செய்துகொள்ளுவதிலேற்படும் சௌகரியங்களை ஒவ் வொன்றாய் எடுத்துக்கூறித் தாயாரம்மாள், அவள் அங்கு வேலை செய்வதை விட்டு இனித் தனக்கடுத்த யஜமானியாகவுமிருக்கலா மென்றதும், ஒன்றும் பதில்கூற அறியாதவளாய் அச்சிறுமி கண் களில் நீர் பெருக நின்றாள். "கவலைப்படாதே. நான் உன்னை நன்றாய் வைத்துக்கொள்ளுவேன்" என்று நாராயணம் பிள்ளை சொல்ல, கல்பகம் நீர்பெருகும் கண்களால் அவனை யொருமுறை நிமிர்ந்து நோக்கிவிட்டுப் பிறகு தலைகுனிந்து கொண்டாள். இதைப்பார்க்க அவன் மனம் இரங்கிற்று. "இன்னும் கொஞ்சநாள் போகட்டும். நாம் அவளை வற்புறுத்த வேண்டாம்" என்றான். எது எப்படி யானாலும் ஒன்று மட்டும் நிச்சயம். மாசிலாமணி கல்பகத்தை விவாஹம் செய்துகொள்வதென்பதுமட்டும் முடியாது. உலகில் அழகுவாய்ந்த ஒவ்வொரு பெண்ணும் தன் மனத்துக்கிசைந்த வனையே மணம்புரிவதென்றால் சாத்தியமா ?

இவ்வாறு நாட்கள் செல்ல, கடைசியாக மாசிலாமணி ஊருக்குத் திரும்பிவரும் காலம் கிட்டிற்று. அவன் வருவதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருந்தன. அதற்குள் யாவற்றையும் யோசித்து ஒருவிதமாக முடிவு செய்துவிடவேண்டும். இல்லாவிடில் மீண்டும் கஷ்டமாக முடிந்துவிடும். தாயாரம்மாள் கல்பகத்தைக் கடுமையாக ஒரு பார்வை பார்த்து, ''நீ இன்னும் மாசிலாமணியைத்தான் மணம் புரிவதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறுயோ?'' என்று அதட்டிக்கேட்க, அதற்குப் பதில் கண்ணீருதிர்ப்பதைத்தவிர அச் சிறுமி வேறென்னசெய்வாள்? கடைசியாக அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். கல்பகம், மாசிலாமணி ஊருக்குத் திரும்பி வந்து தன்னை விவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை யென்று அவன் வாயினுலேயே சொல்லிவிட்டால், பிறகு தான் நாராயணம் பிள்ளையை மணக்கச்சம்மதிப்பதாக ஒப்புக்கொண்டாள். ''அத்தான் திரும்பி வந்து அதைத் தன்வாயினுலே என்முன் சொல்லிவிடட்டும். பிறகு ஆச்சி! நீங்கள் எதைச் செய்யச்சொன்னுலும் நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்'' என்று கல்பகம் அழுது கொண்டே சொன்னுள். முகம் வேறுபடாமற் கேட்டாலும் தாயாரம்மாள் மனம் இளகாமலிருக்கவில்லை. தன் மகனைக் கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணத்தைமட்டும் விட்டுவிட்டால் அவளைத் தன் பெண்ணுகவே பாவித்துத் தன்வீட்டில் சகலஸ்வதந்திரங்களுமளிப்பதாகச் சொன்னுள். இவையெல்லாம் கல்பகத்திற்கும் தெரியும். ஆயினும் ஒன்றே ஒன்றுமட்டும் இவ்வுலகில் யாவற்றிற்கும் மேலாக அவளுக்குத் தோன்றிற்று. அது மாசிலாமணியின் அன்பே யென்று நாம் கூறவும் வேண்டுமோ ?

மேற்கண்ட சமாசாரங்களைக்குறித்து மாசிலாமணிக்கும் கடிதங்கள் சென்றன. கல்பகத்தைத் தான் வெகுவாய் நேசித்தபோதிலும் தாம் மணம் புரிந்துகொள்ளுவது இருவரில் ஒருவருக்கும் நன்மையில்லையென்பது நிச்சயமாகும் பக்ஷத்தில், அவர்கள் சொற்படி நடப்பதே யுக்தமென்று எண்ணுவதாகப் பதிலெழுதினுன்; கல்பகத்தை நாராயணம் பிள்ளைக்கு மணம் செய்துகொடுப்பதைப்பற்றியும் தனக்குச் சம்மதந்தானென்று தெரிவித்திருந்தான். ஆஹா! ஆடவர்களின் மனமும் வாக்கும் இவ்வண்ணந்தானல்லவா ? கடிதத்தைக் கல்பகத்தினிடமும் காட்டினுர்கள். ஆனுல் அவள் அதைப் பார்த்துச் சிறிதும் அஞ்சவில்லை. கடிதத்திலென்ன இருக்கின்றது? நேரில் கண்டு பேசினுல் அவன் முகத்தினின்றும் குரலினின்றும் அவன் மனநிலைமை யெப்படி யென்பதைத் தான் கண்டு கொள்ளக் கூடுமென்றெண்ணினுள்.

ஊருக்குத் திரும்பிவந்து மாசிலாமணியே நேரில் சொல்லு வதாகத் தீர்மானமாயிற்று. கல்பகத்தைக் காட்டிலும் நாராயணம் பிள்ளைக்கு உலகானுபவம் கூடவிருக்குமன்றோ? தன்னைவிட்டு அவள் எங்குப் போகிறாளென்றெண்ணிக் கொண்டான். சென்னையில் இரண்டு வருஷம் இருந்த பிறகு மாசிலாமணி கல்பகத்தை லக்ஷியம் செய்வது சந்தேகம்; அங்குள்ள உற்சாகங்களிலுள்ள நினைவில் அவன் அவளை எளிதில் மறந்துவிடுவான்; பிறகு கல்பகமும் தான் கொடுத்துவைத்தது அவ்வளவுதானென்று பேசாமலிருந்து விடுவா ளென்று நினைக்கலானான். மகன் ஊருக்குவரும் முதல்நாளிரவு தாயாரம்மாள் வழக்கம்போல் தன் காரியஸ்தனுடன் பேசிக்கொண் டிருந்தாள். சிறிதும் யோசனையில்லாமல் கல்பகத்தின் இஷ்டப்படி விட்டுவிட்டதைப்பற்றி அவள் இப்பொழுது சந்தேகிக்கத்தொடங் கினாள். அவ்விருவரும் மணம் புரிந்துகொள்வதும் கொள்ளாததும் இப்பொழுது அவர்களிஷ்டத்தைப் பொருத்தனவாகவல்லவா ஆய் விட்டன? இவ்வித ஏற்பாட்டிற்கு வருமென்று அவள் ஒருபோதும் எண்ணவில்லை. தான் விரும்பியபடி நடந்தால் அவள் மனமார ஆசீர் வதிப்பதில் தடையில்லை. அப்படிக்கின்றித் தன் விருப்பத்திற்கு மாறாக நடந்தால், அப்பொழுது அவளிடம் சாபங்களுக்கும் கணக்கு இராது. மாசிலாமணி கல்பகத்தைக் கலியாணம் செய்துகொள்ளு வதற்குமட்டும் அவள் ஒருகாலும் சம்மதிக்கமுடியாது; இது நிச்சயம்.

"என்னவோ எனக்குப் பயமாய்த்தானிருக்கிறது. மாசிலாமணி நான் சொல்லுவதைக் கேட்காவிட்டால் என்ன செய்வது?" என் றாள் தாயாரம்மாள்.

"அப்படியொருநாளும் செய்ய மாட்டான். அதைப்பற்றிக் கவலைவேண்டாம்" என்று நாராயணம் பிள்ளை தயங்காமற் சொன் னான். இக்கலியாணப் பேச்சிற்குப் பிறகு அவன் முன்னிலும் அதிக தாராளமாய்ப் பேசுவதையும் நடந்துகொள்ளுவதையும் தாயாரம் மாள் கவனித்துவந்தாள். அவளுக்கு அது பிடிக்கவில்லை. கலியாண மாகட்டும், பிறகு இவன் செருக்கை யடக்கி விடலாமென்று தீர் மானித்துக்கொண்டாள்.

"மாசிலாமணி கல்பகத்தின்மீதுதான் தனக்கு நாட்டமென்று கூறினால்?"

"நான் சொல்லுகிறேன்; அப்படியொன்றும் சொல்லமாட் டான். சென்னையில் கல்பகத்தைப்போல் அழகுள்ள பெண்கள்

பலரை அவன் பார்த்திராமலா இருப்பான்? தவிர, உங்களுக்கு அவன் எழுதின கடிதந்தான் இருக்கிறதே.''

"அதிலென்ன விருக்கிறது? எழுதிய கடிதத்தையா எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கப்போகிறான்? அவன் சுபாவம் எனக்குத்தெரியும்.''

"மேலும் சொத்தெல்லாம் தங்கள் அதீனத்தில்தானே யிருக்கிறது? தங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக நடந்தால் பணவிஷயத்தில் சிரமமேற்படுமென்பது அவனுக்குத் தெரியாதா?''

"ஆமாம்; பாபம்! அரைக்காசு என்னுத்தரவன்றியில் அவனுக்கேது?''

"மாசிலாமணிக்கு இப்பொழுது உலகம் சற்றுத்தெரிந்திருக்கும். சொற்பலக்ஷணத்தைக்கண்டு மயங்கி அதற்காக மற்றெல்லாவற்றையும் இழந்து விடத் துணிவானா? அதெல்லாம் புத்தியற்ற சிறுபையன்கள் வேலையல்லவா? இப்பொழுது அவன் வயதுவந்தவனாயிற்றே. நீங்கள் யோசிக்க வேண்டாம். எல்லாம் தங்கள் மனத்தின்படி நடக்கும்.''

"பாவம்! இதனால் கல்பகம் மனம் வருந்தி ஏங்கிப்போனால் என்ன செய்கிறதென்று கவலை ஒருபக்கம் தோன்றுகிறது.''

"உம்! இதற்காகவெல்லாம் பெண்கள் தங்கள் உயிரை விட்டு விடுவார்களா?'' என்று நாராயணம் பிள்ளை சற்று அசட்டையாய்க் கூறினான். அதனுடன் அவர்கள் பேச்சு நின்றது.

மறுநாட்காலை மாசிலாமணி ஊருக்குவந்து சேர்ந்தான். அவன் வருவதற்கு இரண்டுநாள் முன்புவரையில் கல்பகத்திற்கு அவனைப் பற்றி நம்பிக்கை குறையாமலிருந்தது. ஆனால் வரவர அந்நம்பிக்கை குன்றி மனத்தில் ஒருவித பயமேற்பட்டது. தாயாரம்மாளும் அவள் காரியஸ்தனும் தனக்கு விரோதமாய் ஆலோசனை செய்து கொண்டிருப்பதை யறிந்து உள்ளமொடுங்கினாள். முதல்நாளிரவு அவள் படுக்கச் செல்லும்பொழுது, தாயாரம்மாள் அவளைத் தன் சமீபமழைத்து அன்புடன் அவள் கன்னத்தைத் தடவிக்கொடுத்துப் பிறகு போகும்படி கூறினாள். இவ்வருமையின் காரணம் கல்பகத்திற்கு நன்றாய் விளங்கிற்று.

(தொடரும்)

கோபால செட்டியார் கோதானம்

ஆங்கீரஸர்

வெள்ளையூர் வயிரவன் செட்டியார் குமாரர் கோபாலசெட்டியார் தம் தாயார் அங்காளம்மாள் ஆகாரம் ஏற்காமல் அவஸ்தைப் படுவதைப்பற்றி என்னசெய்வதென்று ஆலோசிக்கலானார். அவரிடம் வந்திருந்த சோதிடர்கள், அம்மாளுக்கு வந்திருக்கும் நோயின் மூல காரணம், முன்னர் வயிரவன் செட்டியார் சந்திரசேகரபுரத்திலிருந்த பசுக்களை அபகரித்து விட்டதென்றும், அதற்குப் பரிகாரமாக அப்பசுக்களைக் கன்றுகளோடு அவ்வூராருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டால் நோய் தீருமென்றும் கூறினர்.

அது கேட்டு அருகில் நின்ற மலைக்கொழுந்தென்பவன் தன் தமையனாராகிய கோபால செட்டியாரைப் பார்த்து வெகு கோபத்துடன் உரைக்கலானான்:

"அண்ணா! இவர்கள் சொல்லும் பொய்வார்த்தைகளையெல்லாம் நம்பாதீர்கள். நம் தகப்பனார் பசுக்களை அபகரிக்கவே யில்லை. நம் தேகப் பிரயாசையினால் சம்பாதித்த பணத்தைச் செலவிட்டுச் சிறு கன்றுகளாக விருந்த இவற்றை வளர்த்துப் பயன்படும்படி செய்து வைத்திருக்கிறார். இவைகளுக்கும் சந்திரசேகரபுரத்தாருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இவைகளை அவர்களிடத்தில் ஒப்பிப்பதாக நீங்கள் கனவிலும் நினைக்கக்கூடாது. அப்படி ஒப்பித்தால் பசுக்கள் நாசமடையுமென்பதிற் சந்தேகமேயில்லை"

அவன் இவ்வாறு கூறியதைக் கேட்ட மற்றொரு தம்பியாகிய சங்கரன்,

"மலைக்கொழுந்து கூறியவெல்லாம் உண்மையாக இருந்தபோதிலும் நம் அன்னையின் அரிய நோயைத் தீர்ப்பது அவசியமாகையால் அப்பசுக்களைத் திரும்பக் கொடுப்பதென்று சொல்லாமல் தானம் செய்வதாகக் கூறி விடலாம்'' என்றான்.

அது கேட்டு மற்றொரு தம்பியாகிய பலதேவன் தானமாய்க் கொடுப்பதென்றாலும் இதுவரையில் நாம் அவற்றிலிருந்து அடைந்த பாலுக்குக் குறைவில்லாமல் இருக்கும்படியான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், அன்றியும் சந்திரசேகரபுரத்தார் நெடுநாளாய் மாடுகளில்லாமல் வாழ்ந்தவர்களாதலால் இப்பொழுது பசுக்களைப் பாதுகாக்கும் முறைமையை அறியாரென்றும், அல்லாமலும் அவ்வூராருக்குள் ஜனங்கள் பலவகைப்பட்டு ஒற்றுமையில்லாமல் இருக்கிறதனால் அப்பசுக்கூட்டங்களைப் பெற்றவுடன் அதிகச் சச்சரவுகள் உண்டாகுமென்றும், முதலில் பசுக்களைக் காப்பாற்றும் திறமை

அவர்களுக்கு நன்றாய் உண்டாகிவிட்டதென்று தெரியும் வரையில் தங்களுடைய ஆட்களை விட்டே பாலைக்கறந்து வந்துவிடவேண்டு மென்றும் சொன்னான். இவற்றை யெல்லாம் கேட்ட கோபால செட்டியார் எல்லாவற்றிற்கும் சந்திரசேகரபுரத்திலுள்ள முதன்மை யான சிலரை அழைத்து இவ்விஷயத்தைப் பற்றிக்கலந்து யோசிப்போ மென்று சொல்லி அவர்களை வரவழைத்து அவர்களிடத்தில் பல தேவன் சொன்ன விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்.

வந்தவர்களில் தலைமை வகித்திருந்த பிரபாகரனென்பவன், "பசுக்கள் எங்கள் ஊராருக்குச் சொந்தமே யொழிய உங்கள் குடும் பத்திற்கு அவைகளின் விஷயத்தில் யாதோருரிமையும் இல்லை; அவற்றை இது காறும் வளர்த்ததற்குத் தக்க பிரதிப் பிரயோ ஜனத்தை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். எங்களுக்கு அப்பசுக் களைத் தானம் கொடுப்பது அவசியமில்லை; அவற்றை நாங்களே திருப்பி ஓட்டிக்கொள்ள ஸித்தமாகவிருக்கிறோம். அவற்றைப் பாதுகாக்கும் விஷயத்தில் எங்களுக்கு முன்னிருந்த சாமர்த்தியங் கள் இப்பொழுது குறைந்துவிடவில்லை" என்று கூறினான். அதைக் கேட்டவுடன் அவரருகில் இருந்த மூக்கணக் கவுண்ட னென்பவன் தன்னைச் சேர்ந்தவர்களும் இன்னும் மந்தன் முதலியவர்களும் பசுக்களை மேய்த்துப் பாடுபடுவதற்குரிய சக்தியடையவில்லை யென் றும், தாங்கள் அந்நிலைமையை அடையும் வரையிற் பசுக்களைச் சந்திரசேகர புரத்திற்கு ஓட்டிவிடக் கூடாதென்றும் சொன்னான்.

இவ்வாறு உரைக்கவே மலைக்கொழுந்தென்பவன் எழுந்திருந்து "நான் சொல்லியது இப்பொழுதாவது தோன்றுகின்றதா?" என்று கோபால செட்டியாரைக் கேட்டதுடன், "இனி இந்த ஆலோசனை செய்வது கொஞ்சமேனும் சரியல்ல; பசுக்களைத் திருப்பும் யோச னையை நிறுத்தி விடவேண்டும்" என்று கூச்சலிட்டான்.

ஆயினும் செட்டியார் தம் தாயின் நிலைமையை நினைந்து அவளைத் தேற்றுவது அவசியமென்று எண்ணியவராகையால் தம் சகோதரன் சங்கரனையே சந்திரசேகரபுரத்திற்கு அனுப்பி அவ் விடத்திலுள்ள கலகங்களை ஒருவாறு நிவர்த்தித்துப் பசுக்களை அவ் வூருக்குத் திருப்புவதென்றால் அவைகளைப் பாதுகாக்கும் முறைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்டித் தக்க ஏற்பாடுசெய்யவேண்டுமெனத் தீர்மானித்தார். செட்டியார்மனத்தில் மாத்திரம் முன்செய்த பாபத் திற்குப் பரிகாரமாக இப்பொழுதாவது பசுக்களைத் திருப்பிக் கொடுத்துத் தாயைக் காப்பாற்றவேண்டுமென்பதுதான் கருத்து; தம்பியர்களின் கோபத்திற்குப் பயந்து அவர் தயங்கிவிட்டார்.

இவ்வாறு கோபால செட்டியார் கோதானம் மனோராஜ்யமாக முடிந்தது.



ஸ்திரீகள் மகாநாடு—காட்சி விநோதம்

வி. விசாலாக்ஷி அம்மாள்

நம் நாட்டுக்கு இப்பொழுது முக்கியமாய் வேண்டுவது ஒற்றுமையே. ஒற்றுமையைக் கோரியே, பஞ்சாப், ஸிந்து, திராவிடம், வங்காளம் என்ற பல பிரிவுகளையும் தன்னிலடக்கிய பாரத நாட்டுக்கு "ஜய ஹே" என்று நாம் வாழ்த்துப் பாடுகிறோம். இந்தப் பாட்டின் கருத்தை ஒரு சித்திரக் காட்சியாகப் பெண்பள்ளிக் கூடங்களில் அடிக்கடி காட்டுவதுண்டு. திரை நீங்கியவுடன், ஒரு பெண், சிவப்புப் பட்டுடுத்தி, மல்லிகைப் பூச்சரங்களுடன் கூந்தல் அவிழ்ந்து தோள்மேல் சரிய, வலதுகையை இடுப்பின்மேல் வளைத்து வைத்துக்கொண்டும், இடது கையால் முன்தானையை விரித்துப் பிடித்துக்கொண்டும் சிலைபோல் நிற்பாள். அவளைச் சுற்றிலும், அச்சிபோல முண்டணிந்தும், பஞ்சாபிப் பெண்போல நிஜாரும் முகத்திரையு மணிந்தும், இன்னும் பலவித வேஷ உடைகள் தரித்தும் சிறுமிகள் நிற்பார்கள்; பின்னறையிலிருந்து தேசீய கீதங்கள் தொனிக்கும். போன டிசம்பர் மாதம், அகில இந்திய ஸ்திரீகளின் மகாநாடு சென்னையில் கூடியதால், இந்தச் சித்திரக் காட்சி சிலநாட்களுக்குத் தெருக்காட்சியாய் நடைபெற்றது. வந்த ஸ்திரீகளில் அநேகமாய் எல்லாரும், ஒன்று மெல்லிய கதர் அல்லது விசித்திரமான சரிகைவேலை செய்த பட்டுக்களை உடுத்தியிருந்தார்கள். பந்தற்காலுக்குச் சுற்றியதுபோலவும், முன்கொய்சகம் வைத்து விரிந்த பாவாடைபோலவும், அவரவர் தேசாசாரத்துக்கு ஏற்றபடி அவர்கள் சேலை கட்டியிருந்த பாவனைகள் விநோதமாயிருந்தன. முன்தானையைத் தொங்கவிடும் விதத்திலேயே பத்துத் திநுசுகள் இருந்தன. காலில் சடாவும் தலைக்கு முக்காடும் போட்டுக் கொள்ளாதவர்கள் இல்லை யெனலாம். கைத்தையலால் அழகிய

பூவேலைசெய்த சேலைகளையே வடஇந்திய ஸ்திரீகள் அதிகமாக உபயோகிக்கிறார்களென்று தோன்றிற்று. இதனால், தையல், பூவேலை, சடாவின்மேல் சரிகைவேலை முதலியன, ஏழைப்பெண்கள் சம்பாத்தியத்துக்காகவும் சீமாட்டிகள் ஆசைக்காகவும் கற்றுக்கொள்ளும் கைத்தொழில்களாக வடக்கே வழங்குகின்றனவாம். ஊசி கண்டறியாத பதினெட்டுமுழப் புடவையுடனும், வெறுங்காலுடனும், துணியால் மூடாத தலையுடனும் நம்மூர்ப் பெண்கள் விரைந்து நடப்பதைக் கண்டு அவர்கள், "தக்ஷிணம் வேறு, வடசீமை வேறுதான்" என்று சொல்லிக்கொண்டார்கள். நம் ஸ்திரீகளிற் சிலர், தங்களுக்குள்ளேயே, சுயபாஷையைவிட்டு அடிக்கடி இங்கிலீஷில் பேசிக்கொண்டது அவர்களுக்கு வியப்பாயும் வெறுப்பாயு மிருந்தது. இது நியாயமே; ஆனால் இனிமையெனும் பொருள்கொண்ட நமது தமிழ்ப் பாஷையையும் கர்ணகடூரமாய்த் தொனிப்பதாக நிந்தித்துவிட்டார்கள்! இந்தியர் அனைவருக்குள்ளும் ஒரு பாஷை வழங்கும்படி, எல்லாரும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் செய்த பிரசாரம் கொஞ்சமல்ல.

வந்தவரிற் சிலர்

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டின் தீர்மானங்கள் அவ்வப்பொழுதே தினசரிப்பத்திரிகைகளில் வெளியாய்விட்டன. சபை நடவடிக்கைகளைக்காட்டிலும் சபையோரின் நடையுடைபாவனைகளைக் கவனிப்பதுதான் எனக்குச் சாரமாயிருந்தது. அவர்களில் அநேகர் கொழுத்த பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; பரம்பரையாக ஆண்டுவந்த ஆஸ்தியுள்ளவர்கள்; சம்சாரிகள்; திடீரென்று ஜனசமூகநிலையும் நோக்கங்களும் மாறுவதில் வெறுப்பும் அச்சமும் கொண்டவர்கள். இத்தகையவர்களே சபையிற் கூடினவர்களில் அதிகச் செல்வாக்குள்ளவர்கள். வேறு சிலர் பயமறியாத இளங்கன்றுகள்; பரீக்ஷைகளில் தேறி, வேலையிலமர்ந்து சுயசம்பாத்தியம் செய்பவர்கள்; 'கலகம் பிறந்தாலல்லவோ நியாயம் பிறக்கும்' என்று எண்ணுபவர்கள். ஆனால் இவர்கள் கக்ஷிக்குக் கட்டில்லை; இவர்கள் பெரியோர் சொற்படி கேட்டு நடக்கவேண்டியதாயிற்று. அநேகருக்குப் பிரசங்கங்கள் செய்வதிலும் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் உற்சாகமே யில்லை. 'நாம் ஒருவரையொருவர் கலந்துகொள்வதற்காகவே கூடுகிறோம். நம்மூரில் நம்மாலான மட்டும் செய்யவேண்டியதைச் செய்வோம். அதுவேயன்றி வாய்ப்பேச்சு கற்கண்டென்று நாமேன் ஏமாறவேண்டும்?" என்று சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் எல்லாருக்கும் பொதுவான ஒரு கொள்கை தேச பக்திதான். எவ்வாறுவது நம் நாடு ஒற்றுமை பெற்றுச் சிறப்படைய வேண்டுமென்று எல்லாரும் தம் பிரார்த்தனைகளில் சிந்தித்தார்கள். ஜனசமூகச்சீர் திருத்த விஷயங்களில் அவர்களுக்கிருந்த அபிப்பிராய பேதங்கள் அதிகம் வெளிவராததற்குக் காரணம், இந்த ஒரு விஷயத்தில் அவர்களுக்கிருந்த மன ஒற்றுமையே. பெண்கள் மானத்தை விற்றுப் பிழைப்பதைத் தடுக்கவேண்டும், எல்லாப் பெண்களுக்கும் எழுதப்படிக்கக் கற்பிக்கவேண்டும் என்ற அனைவருமே ஒப்பக்கூடிய, இரண்டு பொதுவிஷயங்களையும்பற்றி, அவர்களும் ஒத்த கருத்துடையவர்களா யிருந்தார்கள். மற்ற விஷயங்களில், தாகூர் சொல்லிய அழகிய உவமைப்படி சரத்தில் கோத்த நவமணிகளைப்போல, ஒற்றுமையில் வேற்றுமைகளே அவர்களிடம் சிறந்து விளங்கின. சிலர் பரான்னம் சாப்பிடாத வைதிகிகள்; சிலர் தீண்டாச்சாதியார்; தம் அந்தஸ்தை எண்ணிக் கர்வம் கொண்டவர்கள் சிலர்; குலம், பணம், பதவி எதையும் பெரிதெனப் பாராட்டாத நவநாகரிகக் கொள்கைகள் நமக்கே உண்டென்று கர்வம் கொண்டவர் சிலர்.


பெண்களுக்கு உயர்தரக்கல்வியும், உத்தியோகப்பதவியும் மேன் மேலும் கிட்டவேண்டுமென்று சிலர் விரும்பினார்கள். ஒருநாளும் கைசளைக்கக் காரியம் செய்தறியாத பணக்கார ஸ்திரீகள் சிலரும், வேறு சிலரும் பொதுவாய்ப் பெண்களுக்கு உயர்தரக்கல்வி அநாவசியமென்றும், வீட்டுவேலையே பெண்களுக்கு முக்கியமான கல்வியென்றும், குடித்தனப்பாங்கைப் பரீக்ஷைப்பாடமாகக் கலாசாலைகளில் கற்பிக்கவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்.

கேலி நாடகம்

ஆனால் இத்தகைய அபிப்பிராயபேதங்களால் ஒரு மனஸ்தாபமும் ஏற்படவில்லை. எல்லா ஸ்திரீகளும் வேளைக்கொருவிதமாய் அலங்காரம் செய்துகொண்டு, ஓழிவுநேரத்தை விருந்துண்டும் கடைகளுக்குப்போயும், பாட்டுக்கேட்டும் சல்லாபமாய்ப் போக்கினார்கள். நான்காம் நாளிரவு, சில பெண்கள் பாடுவதற்குப் பதிலாக ஒருகேலி நாடகம் நடித்துக் காட்டினார்கள். அந்த நாடகத்தின் விஷயம் அகிலஇந்திய ஸ்திரீகள் மகாநாடு கூடுவதே. சபையில் தலைமை வகித்த, ராணிகள் காரியதரிசிகள் முதலியோரின் தேக அமைப்பைச் சற்று ஒத்திருந்த மற்றப்பெண்கள், அவர்களைப்போல உடுத்திக் கொண்டு, அவர்களுடைய பேச்சையும் போக்கையும் நடித்துக் காட்டினார்கள். சபையில் ஸ்திரீகள் சிலவேளை தற்பெருமையாகப் பேசுவதைப் பரிகசித்து, "ஸ்திரீகளே இவ்வுலகத்தின் தாய்மார்;

ஆதலால் புருஷருக்குள்ள சர்வசுதந்திரங்களையும் ஸ்திரீகள் மட்டுமே இனி அநுபவிக்கத்தகுந்தவர் என்று இம்மகாநாடு கருதுகிறது'' என்று ஒரு கேலித்தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

சென்னைப் பெண்களுடன் கலந்து உறவாடினதும், மகாபலிபுரம் சென்று அங்குக் கண்ட சிற்பக்காட்சிகளும், நாம் ஒருநாளும் மறக்கமுடியாவென்று சொல்லி, இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் வந்துகூடின ஸ்திரீகள் அவரவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.



மீன்கள்

சி. கே. லக்ஷ்மி அம்மாள்

(104-ம் பக்கத்தொடர்ச்சி)


இது வரை எலும்பு உள்ள, எலும்பு இல்லாத இரண்டு வகை மீன்களையும் பற்றிப் பொதுவாகச் சொன்னோம். எலும்பு உள்ள மீன்களுக்கு உள்ளே எலும்புக் கூடும், அதன் மேல் சதையுமாக இருக்கும். இல்லாத மீன்களுக்கு உள்ளே எலும்புக் கூடு கிடையாது. அதற்குப் பதிலாகச் சதையின்மேல் எலும்பு மூடி போல் மூடிக் கொண்டிருக்கும். நண்டு, பெரிய இறால் மீன், சிப்பி மீன் ஆகிய எல்லாம் எலும்பு இல்லாத இனத்தைச் சேர்ந்தவைகள்.

சங்கு நண்டுகள் (*Shell-Fish*)

மட்டி அல்லது சங்குநண்டின் மேல் மூடி கெட்டியானதாகவும் பச்சை நிறமுள்ளதாகவும் இருக்கும். இது தண்ணீரில் அசைந்து செல்லுவதில்லை. பாறையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். நண்டுகளின் மேல்ஓடு இவ்வளவு கடினமானதில்லை. சமுத்திரக் கரை ஓரங்களில் ஆயிரக் கணக்கான நண்டுகள் விளையாடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். நாம் அருகில் போனால், அவைகள் தங்கள் வளைகளுக்குள் ஓடி விடும். பெரிய இறால் மீனின் மேல் ஓடு மிகவும் மெல்லியதாகவும் கண்ணாடி போன்றும் இருக்கும். எப்பொழுதும் அது தண்ணீரிலேயே வசிக்கும்; நண்டைப் போல் கரை மேல் வராது.

பெரிய இறால் மீனுக்கும், நண்டுக்கும், சங்கு நண்டுகளுக்கும் மற்ற மீன்களைப் போல் சிதள்களும் சிறகுகளும் இல்லை. பெரிய இறால் மீனுக்கும் நண்டுக்கும் சிறகுகளுக்குப் பதிலாக ஜதை ஜதையான கால்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. சங்குநண்டுகளுக்குக் காலுக்குப் பதிலாகக் கனமான கட்டிச் சதைதான்

இருக்கிறது. சங்கு நண்டுகளின் உடம்பு எல்லாம் சிப்பியால் மூடப் பட்டிருக்கும். அநேக தினுசான சங்குநண்டுகள் (சிப்பி மீன்கள் சமுத்திரத்தில் வசிக்கின்றன. இவைகள் சாப்பிடுவதற்கு மிகவும்



சங்கு நண்டுகள்.

ருசியாக இருக்குமென்றும் ஆனல் மற்றை மீன்களின் மாமிசத் தைப் போல் இலேசில் இவை ஜீர்ணமாகாவென்றும் சொல்வார்கள்.

முட்டை

சுற்று நிலைக்குத் தக்கபடி மீன்கள் தங்கள் நிறத்தை மாற்றிக் கொள்ளும் என்று முன்பு சொன்னோம். ஆண் மீன்கள்தாம் பெண் மீன்களை விட அதிகப் பிரகாசமான நிறங்களை எடுத்துக் கொள்ளும். முட்டை இட்டுக் குஞ்சுகளைக் காப்பாற்ற வேண்டி இருப்பதால் பெண் மீன்கள் அதிகப் பளபளப்பான நிறங்களை எடுத்துக் கொள்ளுவதில்லை. மாப்பிள்ளை கலியாணத்துக்கு என்று நல்ல உடைகளை உடுத்தித் தன்னைச் சிங்காரம் செய்து கொள்ளுவான் அல்லவா? அப்படியே ஆண் மீன்களும் பருவ காலத்தில் தான் இப்படி மிகவும் பிரகாசமான நிறங்களை எடுத்துக்கொள்ளும்.

பெண் மீன் முட்டை இடும். ஒரே மீன் ஆயிரக் கணக்கான முட்டைகளை இடும். சில வேளைகளில் லக்ஷக் கணக்கான முட்டைகளைக் கூட இடும். ஆனால் இந்த முட்டைகளில் அநேகம் ஜல ஜந்துக்களால் ஆகாரமாக விழுங்கப்பட்டு நசித்து விடும். இப்படி நசிக்காமல் எல்லா முட்டைகளும் குஞ்சு பொரித்தால், சமுத்திரம், ஏரி, குளம் எல்லாம் மீன்களால் நிரம்பி விடும். அப்புறம் ஆகாரமும் காற்றும் போதாமல், இவைகள் லக்ஷக்கணக்கில் இறக்க நேரிடும்.

மீன் முட்டைகள் சிறியனவாகவே இருக்கும்; சில வகை மீன்கள் சற்றுப் பெரிய முட்டைகளை இடும்; ஆனால் இவைகள் ஆயிரக் கணக்கில் இடப்படுவதில்லை. இவைகளைக் கெட்டியான மேல் ஓடு மூடிக் கொண்டிருக்கும். ஆனதினால் இவைகள் மற்றை மீன் முட்டைகளைப் போல் அவ்வளவு சுலபமாக நசிப்பதில்லை. சுறா மீனின் முட்டை இப்படித்தான் இருக்கும். சமுத்திரத்தின் அடியில் வசிக்கும் மீன்கள் சமுத்திரத்தின் தரையிலேயே முட்டை இடும்; மற்ற மீன்கள் கரை ஓரங்களிலுள்ள வளைகளிலும், தண்ணீரில் உள்ள செடிகளுக்கு நடுவிலும் முட்டை இடும்.

மீன்களில் இரண்டு வகுப்பு உண்டு. அவை உப்பு நீரில் வாழும் மீன், நல்ல நீரில் வாழும் மீன் என்பனவாம். நல்ல நீரில் வாழும் சில ஜாதி மீன்களுடைய முட்டை உஷ்ணமான உப்பு நீரில் தான் முற்றிக் குஞ்சு பொரிக்கும். அப்படியே உப்பு நீரில் வாழும் சில மீன்களுடைய முட்டை குளிர்ந்த நல்ல நீரில்தான் குஞ்சு பொரிக்கும். ஆகையால் உப்பு நீரில் வாழும் மீன் நல்ல நீருக்கும் நல்ல நீரில் வாழும் மீன் உப்பு நீருக்கும் வருஷந்தோறும் மாறும். ஆகாரத்தைத் தேடிக் கொண்டு இந்த மீன்கள் இடம் மாறுவதும் உண்டு. இப்படி இந்த மீன்கள் இடம் மாறுவதைப் பக்ஷிகள் ஊர் விட்டு ஊர் போவதற்கு ஒப்பிடலாம்.

ஸால்மன் என்ற மீன், முட்டை இடுவதற்கு நல்ல நீரைத் தேடும் இனத்தைச் சேர்ந்தது. இது சமுத்திரத்தை விட்டு நதிகளில் சென்று கரை ஓரமாக முட்டை இடும். பெண் மீன் நதியின் கரை ஓரத்தில் மணலில் நெளிந்து போகும். அப்போது அங்கு உண்டாகும் பள்ளத்தில் தன் முட்டைகளை இடும். முதலில் சில முட்டைகளை இட்டு, அவற்றை இலேசாக மணலால் மூடிவிடும். பிறகு இன்னும் ஓர் இடம் பண்ணி முட்டை இட்டு மூடும். எல்லா முட்டைகளையும் இப்படி இட்ட பிறகு சமுத்திரத்தைவிட்டு நதியில் பிரயாணம் செய்த சிரமம் நீங்கும்படி ஆணும் பெண்ணும் சாப்பிட்டுக் களைப்பாறும். ஒரு வாரத்தில் இந்த முட்டைகள் பொரித்துச் சின்ன மீன் குஞ்சுகள் வெளியே வரும்.




மீன் பிடித்தல்.

பறவைகளைப் போல் மீன்கள் முட்டைகளை அடை காப்ப தில்லை ; குஞ்சுகள் தாமே பொரிக்கும். மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள் எல்லா ஜாதியிலும் பெண் தான் குஞ்சுகளைப் பரிபாலிக்க வேண்டும் என்பது வழக்கம். ஆனால் மீன்களிற் சில இனத்தில் ஆண்களே குஞ்சுகளைப் பாதுகாக்கின்றன. இவைகள் முட்டைகளைத் தங்கள் வாயில் வைத்துக் காக்கின்றன. குஞ்சு பொரிக்கும் வரை ஆகாரம் சாப்பிடாமல் பட்டினியே கிடக்கின்றன. நாய்மீன் முட்டைகளாக இடுவதில்லை ; குஞ்சுகளாகவே பிறக்கின்றன.


சமுத்திரத்தில் அதிக ஆழத்தில் இருட்டாக இருக்கும். அங்கு வசிக்கும் மீன்களுக்குக் கண்கள் நன்றாகத் தெரிவதற்காகப் பெரியனவாக அமைக்கப்பட்டிருக்கும். இன்னும் அதிக ஆழத்தில் சூரிய வெளிச்சமே இருக்காது. அங்கு வசிக்கும் மீன்கள் சில குருடாகவே இருக்கும் ; அல்லது மின்மினிப் பூச்சிக்கு இருப்பது போல் வெளிச்சம் தரக் கூடிய ஓர் அவயவம் உடையனவாக இருக்கும்.

மீன் பிடித்தல்


மீன் பிடிப்பது மனத்துக்கு விளையாட்டாக நன்றாகவே இருக்கும். ஆனால் பாவம், மீன்களுக்கு இது கஷ்டந்தான். குட்டைகளில் மீன்கள் விளையாடுவதைக் குழந்தைகள் பார்த்தால் அவர்கள் மீன் பிடிக்க ஆசைப்படுவார்கள். ஒரு துணியை மீன்களின் மேல் போட்டும், தூண்டிலாலும் மீன் பிடிப்பார்கள். இப்படிச் செய்வதால் ஒரு தடவையில் ஒன்று அல்லது இரண்டு மீன்கள் பிடிக்கலாம். ஆனால் நிறைய மீன் பிடிக்க வேண்டுமானால் நல்ல கெட்டியான வலை வேண்டும்.



1. ‘ரம்பாயிட்’ வலை.



2. அர்த்த சந்திரவலை.



3

3. 'டிரட்ஜ்' வலை.

சுலபமாகக் கை வலைகள் செய்யலாம். ஒரு கம்பியை வளைத்து ஓர் இரும்பு அல்லது பித்தளைக் குழாய்க்குள் அதனை நுழைத்துவிட வேண்டும். இந்தக் குழாய், கைபிடியாக உதவும். வலையை வளைத்த கம்பியுடன் சேர்த்துத் தைத்துவிடவேண்டும். முதற்படத்தில் இருப்பது போன்ற (ரம்பாயிட்) மாதிரியிலும் வலை செய்யலாம். ஒரு கோணத்தில் பிடியை வைத்துவிடலாம். மற்றைய கோணம் பாறையில் உள்ள இடுக்குகளில் நுழைத்துத் தேடுவதற்கு உபயோகமாக இருக்கும். அர்த்த சந்திரன் போன்ற வலையும் பாசிபடர்ந்த பாறைகளைச் சுறண்டுவதற்கு உபயோகமாக இருக்கும்.

வலை கெட்டியானதாக இருக்கவேண்டும். வளையைக் கம்பியில் தைப்பதைவிடக் கம்பியைச் சுற்றிக் காலிகோ துணியைத் தைத்து அதில் வலையைத் தைத்தால் பிய்ந்து போகாமல் இருக்கும். மேல் சொன்ன மூன்று தினுசான வலைகளாலும் அதிக ஆழம் இல்லாத இடங்களில் மீன் பிடிக்கலாம். அதிக ஆழமான இடத்தில் மீன் பிடிப்பதற்குப் பெரிய வலை வேண்டும். மூன்றும் படத்தில் உள்ளது (டிரட்ஜ்) போன்ற வலை இதற்குச் சௌகரியமாக இருக்கும். படகில் போய் இதைக் கீழே ஜலத்தில் முக்கி மீன் பிடிக்கலாம். பாறை முதலிய கரடு முரடான இடங்களில் உபயோகிக்க வேண்டி இருப்பதால் வலை நல்ல கெட்டியானதாக இருக்க வேண்டியது முக்கியம்.

சிறு கதைகள்

வே. நாராயண ஐயர்

1. மயிற் கண்

மூன் காலத்தில் மயில்கள் நீல வர்ணமுள்ளவைகளாய் இருந்தன; அவைகளுக்குத் தோகைகள் இல்லை. பின்பு தேவேந்திரனுடைய வரத்தினாலே அவைகள் மயிற்கண்கள் என்று சொல்லப்படும் அழகிய தோகைகளைப் பெற்றன.

திரேதா யுகத்திலே இராவணன் என்ற ஒரு ராக்ஷஸன் இருந்தான்; அவன் அதிக பராக்கிரமம் வாய்ந்தவன்; யாரோடு யுத்தஞ் செய்யலாம் என்று பூமி எல்லாம் திரிந்தான். அப்பொழுது, ஓர் இடத்தில் மருத்தன் என்னும் அரசன் ஒருவன் தேவர்கள் சூழ இருந்து யாகம் செய்வதைக் கண்டான். இவனைக் கண்டதும் தேவர்கள் பயந்து அருகிலிருந்த பக்ஷிகளுள் புகுந்து கொண்டார்கள். இந்திரன் ஒரு மயிலாக மாறினான். இயமன் காக வடிவு கொண்டான். வருணன் அன்னப்பறவை யானான். குபேரன் ஒரு பச்சோந்தியுள் புகுந்துகொண்டான். யாகஞ் செய்து கொண்டிருந்த அரசன் இராவணனோடு யுத்தம் செய்யாமல் இருக்கவே, அவன், "நான் ஜயித்தேன்" என்று சொல்லிக் கொண்டு போய்விட்டான். இராவணன் போன பிறகு தேவர்கள் தங்கள் சுய உருவங்களை எடுத்துக்கொண்டனர்.

அப்போது இந்திரன் மயிலைப் பார்த்து, "மயிலே! நீ எனக்கு இடங்கொடுத்ததால் உன் பேரில் எனக்குப் பிரீதி அதிகம். நீ இனிப் பாம்பினின்றும் பயப்படவேண்டியதில்லை. நான் மழை பெய்யச் செய்யும்பொழுது நீ இன்புறுவாய். அப்பொழுது உன்னால் தோகையை விரித்து ஆட முடியும். உன் சிறகில் எனக்குள்ள ஆயிரம் கண்களும் தோன்றி உன்னை அழகுறச் செய்யும்" என்று வரம் அளித்தான். அது முதற்கொண்டே மயிலுக்கு ஆயிரம் கண்கள் அமைந்த அழகிய தோகை உண்டாயிற்று.

இயமனும் காக்கைக்கு வரம் கொடுத்தான். "என் உலகத்திலுள்ள பிதுருக்களுக்கு அன்னமிட விரும்பும் மனிதர்கள் 'வாயஸ பிண்டம்' என்று உனக்கு அன்னத்தை இட்டால் போதும். நீ உண்

டால் அவர்கள் திருப்தி அடைவார்கள்'' என்று அவன் சொன்னான். அதனாலேதான் சிராத்தம் முதலிய விசேஷகாலங்களில் பிண்டத் திரளைக் காக்கைக்கு இடுகின்றார்கள்.

2. காக்கை நோக்கு

காக்கைக்குக் கண்கள் இரண்டு இருந்தாலும் ஒரு சமயத்திலே ஒரு கண்ணாலேதான் பார்க்க முடியும்; அதனால் அது பார்க்க வேண்டிய புறமாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு பார்க்கும்.

முன்பு காக்கைக்கு இரண்டு கண்களும் சரியாக இருந்தன; இந்திரனுடைய பிள்ளை ஒருவன் காக்கை வடிவம் கொண்டு சஞ்சரித்தான்; அப்பொழுது சித்திர கூடத்திலே சீதா தேவியின் மடியிலே தலையை வைத்து இராமர் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்; சீதா பிராட்டியின் மார்பில் தன் மூக்கால் கீறினான்; தேவியின் மார்பிலிருந்து இரத்தம் வடிந்து இராமர் மேல் விழவே, அவர் விழித்துக்கொண்டு, காக்கை கீறியதைக் கண்டு அதன் மேல் ஒரு புல்லை எடுத்து எறிந்தார். அந்தப் புல் கூரிய அம்பாகி அந்தக் காக்கையைத் துரத்திற்று. அனைத்துலகிலும் திரிந்தோடிய அந்தக் காக்கையைக் காப்பாற்றுபவர் ஒருவரும் இல்லை. எனவே, அது திரும்பவும் இராமரிடம் வந்து அவர் காலிலே விழுந்து அபயம் தர வேண்டுமெனறு பிரார்த்தித்தது. அப்பொழுது இராமர் அதற்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார். தாம் விட்ட அம்பு ஒரு புல்லானாலும் அது வீணாகாது என்பது தோன்ற, அந்தக் காக்கையின் இரண்டு கண்களில் ஒன்றின் பார்வையை மட்டும் அந்தப்பாணத்திற்கு இரையாக்கினர். அது முதற்கொண்டு, இந்திரன் பிள்ளையான காக்கைக்கு மட்டு மல்ல, காக்கையின் குலத்திற்கே, ஒரு கண்பார்வை ஏற்பட்டது.

3. அணிற் பிள்ளை

அணில் ஓர் அற்பப்பிராணி. அணிலுக்கும் மலைக்கும் ஒரு காலத்தில் விவாதம் நடந்தது. அப்போது மலை, "இதோ என் வலிமையைப் பார்; காடு காடாக மரங்களை நான் என் முதுகிலே தாங்கிக்கொண்டிருக்கிறேன்'' என்று பெருமை பேசிற்று. அதைக் கேட்ட அணில், "மெய்தான். என்னால் முதுகிலே மரங்களைச் சுமக்க முடியாது. ஆனால் உன்னால் ஒரு பழக்கொட்டையையாயினும் கடித்துண்ண முடியுமோ? ஒவ்வொருவருக்கும் ஒன்று செய்ய இயலும்'' என்று பதிலளித்தது.

இவ்வாறு உருவிலே சிறிய அணிலின் முதுகிலே மூன்று விரல்கள் போன்ற வெள்ளை வரிகள் இருப்பது ஏன்?

ஸ்ரீராமரின் மனைவியான சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போய்ச் சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள இலங்கைத் தீவிலே ஒரு வனத்திலே ஒளித்து வைத்திருந்தான். இராமர் அதை அறிந்து வானர சேனையுடன் இலங்கையின்மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு ஓர் அணை கட்டினர். சேனையிலிருந்த குரங்குகள் எல்லாம் மலைகளையும் மரங் களையும் பெயர்த்துக்கொண்டு போய்ச் சமுத்திரத்திலே போட்டன. அங்கே சமுத்திரக் கரையோரத்திலிருந்த மரத்தில் விளையாடிக் கொண்டிருந்த அணில் ஒன்று இதைக்கண்டது. உடனே, தானும் இராமருக்கு அணை கட்ட உதவி புரியவேண்டும் என்று அதற்குத் தோன்றிற்று. அதன் முதுகிலே மண் துளிகள் ஒட்டிக் கொள்வதற் காக, முதலில் சமுத்திரத்திலே குளித்தது; பின்பு மணலிலே புரண் டது. புரண்டபோது முதுகிலே ஒட்டிக்கொண்ட மணலைச் சமுத் திரத்திலே உதிர்த்தது. மறுபடியும், குளித்துப் புரண்டு ஓடி உதிர்த் தது. இவ்வாறு தனக்கு இயன்ற அளவிலே உதவ முன் வந்த அணிலைக் கண்ட இராமர் அதனை அன்புடன் நோக்கி, "பிள்ளாய்!" என்று அதன் முதுகிலே தடவிக் கொடுத்தார். இராமருடைய விரல்கள் தடவினதாலே அணிலுக்கு முதுகில் விரல்கள் போன்ற வரிகள் காணப்படுகின்றன. அது முதற்கொண்டே, எல்லோரும் அணிலை "அணிற் பிள்ளை! அணிற் பிள்ளை!" என்று அழைக் கின்றனர்.



அணுவுளுள்ள அளவற்ற ஆற்றல்:—ஆடம் (Atom) என்று சொல்லப் படும் அணுவினுள் அளவு கடந்த ஆற்றல் தங்கியிருக்கிறதென்று இரசாயன சாஸ்திரஞானிகள் சிறிது காலமாகக் கூறிவருகின்றனர். அணுவானது உடைந்து சிதறும்போது இந்த ஆற்றல் வெளிப்படுகிறதென்பதும், பிரபஞ்ச சக்திகளின் முயற்சியால் அணுவானது இடையறாது தாக்கப்பட்டுத் தளர்ந்து உடைந்துபோகிறதென்பதும் அவர்கள் துணிபு. அமெரிக்காவிலே கொலம் பியா சர்வ்கலாசாலையார் முன்பாக டாக்டர் மில்லிகான் (Dr. Millikan) என்னும் பிரபல இரசாயன சாஸ்திரி தாம் அணுவை உடைத்துவிட்டதாகக் கூறினாராம். அதனுள் உள்ள மின்சாரசக்தியின் வன்மை 30 கோடி வோல்ட் (Volt) என்று கணக்கிட்டுச் சொன்னாராம்! 'இது 13 கோடி வோல்ட் வெளிவிடப்படுவதைக் காட்டுகிற படம்; இது 17 கோடி வோல்ட் வெளிவருவதைக் காட்டுகிற படம்' என்று படங்களையும் காட்டிப் பிரசங்கம் செய்தாராம்!

அ.

நியூபியாவில் ஆராய்ச்சி:—ஆப்பிரிக்காவிலே உள்ள நியூபியா (Nubia) என்னும் பாலைவனத்திலே அடிக்கடி பிரசண்ட மாருதங்கள் வீசிக்கொண் டிருக்கும். அங்கே வாடி ஹாபா (Wady Halfa) வுக்கு நாற்பது மைலுக்கு வடக்கே உள்ள கியாதிபெற்ற அபூசிம்பால் (Abusimbal) கோயிலுக்குச் சிறிது தென்புறமாகவுள்ள கோஹா மேடுகளைத் (Mounds of Goha) தோண்டி ஆராய்வதற்காக ஆராய்ச்சியாளர் சைனியம் ஒன்றுசென்றிருந்தது. அது சிறிது காலமாக வேலைசெய்து வந்தது. சமீபத்தில் சில ஆச்சரியமான காட்சிகளை அங்கே அவ்வாராய்ச்சியாளர்கள் கண்டார்களாம்.

இம் மேடுகள் எதியோபியா தேசத்தாரால் அவர் நாட்டில் மரித்தவர் களைப் பூமிக்குள் அடக்கம் செய்த சமாதிகளின் மீது இயற்றப்பட்டவை என்பது சிறிது காலமாகத் தெரிந்தவிஷயம். இப்பொழுது அவற்றைத் தோண்டிப்பார்த்ததில் ஒரு மேட்டினுள் குதிரைகள் ஒட்டகங்கள் நாய்கள் ஆகியவற்றின் எலும்புக்கூடுகள் பலவற்றைக் கண்டார்கள். பரலோகத்துக்குச் சென்ற யஜமானனுக்கு அவ்வுலகத்திலே உதவவேண்டுமென்று அவனுடைய சவாரிக்குதிரைகள் ஒட்டைகள் முதலியவற்றையும் அவனுடைய சொந்த நாய்களையும் அவன் செத்தவுடன் கொன்று அவன் பிரேதத்தோடு அடக்கம் செய்வது வழக்கம். இவைதவிர அவனுக்குக் குற்றேவல் செய்யப் போது மான அளவில் அடிமைகளையும் பணிப்பெண்களையும் மூச்சைப்பிடித்துக் கொன்று அவனுடைய சவ அறையில் போட்டுவிடுவது இந்நாட்டு வழக்கம். இப்பொழுது திறக்கப்பட்ட அறைகளில் அடிமைகளின் எலும்புக் கூடுகளும்

அகப்பட்டனவாம். சுருக்குப்போட்ட கயிறு அவர்களின் கழுத்தைச்சுற்றி அன்றுபோலவே காணப்பட்டதாம். விலையுயர்ந்த பளபளப்பான சிறந்த சேணங்கள் கட்டி வெள்ளிக் கடிவாளங்கள் கழுத்துப் பட்டைகள் வெள்ளிச்சங்கிலிகள் மணிகள் முதலியவை குதிரை எலும்புகளைச்சுற்றிக் காணப்பட்டனவாம். கிரேக்க தேசத்துச் சித்திரவேலைகளும் எகிப்து தேசத்துச் சித்திரவேலைகளும் மிகுந்து காணப்பட்டனவாம். மேலும் மரத்தால் செய்த ஒரு சதுரங்கப்பலகையும் தந்தத்தாலும் கருங்காலியாலும் செய்யப்பட்ட சதுரங்கக் காய்களும் அகப்பட்டனவென்று ஹிந்துப் பத்திரிகை கூறுகின்றது. அ.

மிளகுக் கொடி :—இது மலையாள தேசத்திலும், பிறமலைத் தொடர்களில் உயர உள்ள காடுகளிலும் காணப்படுவது. அனேக இடங்களில் பயிரிடப் படாது தானாகவே—அதாவது பக்ஷி, காற்றுக்களின் உதவியாலே—முளைத்து உண்டாகும். குடகு முதலிய நாட்டு மலைகளிலும் ஏராளமாகக் காணப்படுகிறது. அங்கெல்லாம் இது மிகுதியும் தோட்டக் கொடியாகவே காணப்படுகிறது. இது முதன்முதலில் இந்தியாவில் மலையாள தேசத்தில்தான் செழித்து வளர்ந்ததெனினும் இதனை உலகெங்கும் உபயோகிக்கத் தொடங்கியதன் பிறகு பிற நாடுகளிலும் பயிராகி வருகிறது. இப்பொழுது மலாய் நாட்டிலும், கீழ் இந்தியத் தீவுகளிலும் ஏராளமாய் இக்கொடி பயிராகிவருகிறது. ஆயினும், மலையாளத்தில் விளைந்து தலைச்சேரியிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகே மிகவும் உயர்ந்த மிளகென்று சொல்லுகிறார்கள். இந்த மிளகே ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்ததற்குக் காரணம் என்பர். இந்தியா நாட்டில் ஐரோப்பாவிலிருந்து முதல்முதல் குடியேறிய ஜாதியாரான போர்த்துக்கல் நாட்டார் இதன்பொருட்டே இங்கு வந்தனர் என்றும், அதற்குப் பின் பிறநாட்டார் ஒருவரையும் இந்த வியாபாரத்தில் தலையிடவொட்டாது தனி ஒப்பந்தம் பேசி மிளகு வியாபாரம் முழுவதும் தாமே நடத்தி வந்த ஹாலண்டு நாட்டாரான டச்சுக்காரர் இதன்பொருட்டே இங்கு வந்து குடியேறினர் என்றும், அப்படி இவர் தனி வியாபாரம் நடத்தி மிளகின் விலையைத் தம்மிஷ்டம்போல் எல்லாம் உயர்த்திவந்தது கண்டு மனம் பொறாத சில ஆங்கில தனவான்கள் ஒன்றுகூடி இந்தியாவோடு நேரே வியாபாரம் செய்வதற்கென்று நிறுவிய சங்கமே ஈஸ்டு இந்தியா கம்பெனி என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மிளகுக் கொடியானது நமது நாட்டின் சரிதத்தை மாற்றிவிட்டது. அ.

அமுது :—இது வடமொழியிலுள்ள 'அம்ருதம்' என்னும் சொல்லுக்கு நேர்; வடமொழியில் இதற்குத் 'தேவர்களின் பானம்' என்றும் 'நீர்' என்றும் பொருள். பிராமணர்கள் உண்ணும்போது, தொடக்கத்தில் உள்ளங்கையிலே சிறிதளவு ஜலத்தை யேந்தி "அமிர்தமே! நீ (உண்ணப்படும் உணவுக்கு) அடி விரிப்பாகிறாய்" என்றும், இறுதியில் அவ்வாறே "அமிர்தமே! நீ மேல் விரிப்பாகிறாய்" என்றும் கூறி ஜலத்தை உட்கொள்வதுண்டு; "உண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம் அமிர்தமாய் மாறு

கிறது" என்பது இம்மந்திரங்களின் கருத்து. இது பற்றியே போலும் உண்டலை 'அமுது செய்தல்' என்னும் வழக்கம் எழுந்தது; "ஆடி அமுது செய்; அப்பனும் உண்டிலன்; உன்னோடு உடனே உண்பான்" என்பர் பெரியாழ்வார்; இப்பழைய வழக்கத்தை நன்கு விளக்கும் பிரயோகங்களை வைஷ்ணவ பரிபாஷையில் இன்றும் காணலாம்; பருப்பமுது, கறியமுது, தயிரமுது, இலையமுது, திருக்கன்னலமுது முதலிய சொற்கள் இவ்வழக்கத்தை விளக்குகின்றன. சோறிடுதலுக்கு 'அமுது படைத்தல்' என்பதும் பழைய வழக்கு. அரிசிக்கு 'அமுது படி' என்றும், சமையலறைக்கு 'அமுது மண்டபம்' என்றும், புளியோரை தத்யோதனம் முதலிய உணவுப் பண்டங்களைப் பிரித்துக் கொடுக்கும் கோயில் மண்டபங்களிலுள்ள கற்பாறைகளுக்கு 'அமுதுபாறை' என்றும், உணவூட்டுவதற்கு 'அமுதூட்டுதல்' என்றும் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. வே. நா.



தலயாத்திரைப்படமும் படவிளக்கமும் : [சைவசித்தாந்த மகா சமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை. விலை அணா, 4]

இப்படத்தில் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள், திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியஸ்தலங்கள் என்பன இருக்குமிடங்களும் அவற்றிற்குரிய மார்க்கங்களும் யாவருக்கும் விளங்கும்படி காட்டப்பெற்றிருக்கின்றன. இப்படவிளக்கப் புத்தகம் ஒவ்வொரு தலத்திற்குமுரிய பெயர், இப்பொழுது வழங்கும்பெயர், நாடு, ரயில்வே ஸ்டேஷனும் கிளையும், ஸ்டேஷனுக்கும் கோயிலுக்கும் எத்தனை மைல், வண்டி வசதிகள் என்னும் விவரங்களை விளக்குகின்றது. இப் படமும், படவிளக்கப்புத்தகமும் தலயாத்திரை செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சரித்திரம் : [மாந்தை. சா. கிருஷ்ணையர் எழுதியது; ஸ்ரீகிருஷ்ணா பப்ளிஷிங் ஹவுஸ், மயிலாப்பூர். விலை அணா எட்டு]



சங்கீத வித்துவானாக விளங்கிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சரித்திரத்தை ஒருவகைப் படுத்தி இடையிடையே தமிழ்ச் செய்யுள்களையும் வடமொழிச் சுலோகங்களையும் மேற்கோள் காட்டி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பாடிய கீர்த்தனங்கள் பலவற்றின் சந்தர்ப்பமும் சிலவற்றின் பொருளும் இதிற் காணப்படுகின்றன. இது ஸ்ரீ சுவாமிகளின் சரித்திரத்தைச் சுருக்கமாக அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு உபயோகமாக இருக்கும். இப்புத்தகத்திலும் பலபடங்கள் உள்ளன.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம்: [பக்கம் xvi + 168; விலை ரூ. ஒன்று]

இப்புத்தகமும் மாந்தை. சா. கிருஷ்ணையர் அவர்களால் எழுதி மேற் கூறிய நிலயத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. இது நவீன முறையில் எழுதப்பட்ட ஒரு கதை. இடையிடையே நீதிகளைவிளக்கிச் சிறுவர் சிறு மிகளுக்கும் உபயோகப்படும் முறையில் இதனை ஆசிரியர் எழுதியுள்ளார். பலபடங்களுடன் நல்ல காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டுள்ளது. இதற்குப் பலர் நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

சரீரமனோரக்ஷிணி: [செ. வே. பாலகிருஷ்ணன், 1, சைபுல் முல்க் தெரு, கோமளீசுவரன் பேட்டை, சென்னை; இதன் விலை இரண்டணா]

இது துளஸியின் இரகஸியமென்னும் வேறு பெயர் கொண்டது. பாபா ஸர் யூதாஸ் ஜி மஹந்து அனுக்கிரகத்தின்படி ஸ்ரீமான் செ. வே. பால கிருஷ்ணன் அவர்களாற் பிரசுரிக்கப்பெற்றது. துளஸியின் வேர்முதல் விதைவரையில் உள்ளவற்றைப் பலவகை மருந்துகளாக உபயோகிக்கும் 63 முறைகள் இச்சிறுநூலிற் கூறப்பட்டுள்ளன.



கலைமகள்

திருமயிலைப் பதிகம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. கலையுறு மதியி னோடு கதிரவற் சகட மாக்கி
மலையதைச் சிலைய தாக்கி மறைகளைப் பரிக ளாக்கி
அலைகட லரணங் காய்ந்தா னருளினா லவனி தன்னில்
மலைமகள் பாக னாகி மயிலையில் வைகி னானே.

2. கதிர்மதி குடைய தாகக் கழையது சிலைய தாகப்
பொதியவிழ் மலர்க ளேதாம் பொழிகணை மாரி யாக
எதிரெழுந் தெய்த வேளை யெரியெழ மூட்டி னான்றான்
மதிநுதல் தனைம ணந்தே மயிலையில் வைகி னானே.

3. மலையினை மத்தா நாட்டி வாசுகி கயிற தாக்கி
அலைகடல் கடைந்த வந்நா ளடர்ந்தெழு மாலந் தன்னை
நிலைகொளு மமரர் காண நெஞ்சிடைத் திகழ வைத்தான்
மலைமக ளொடுமு வந்து மயிலையில் வைகி னானே.

4. தக்கன்றன் வேள்வி தன்னிற் றங்கிய தேவ ராவி
கக்கிடும் வண்ணம் நெஞ்சு கலங்கிடக் கோபத் தோடே
உக்கிர வேடங் கொண்ட வுருத்திர மூர்த்தி தானே
மைக்குழல் பாக னாகி மயிலையில் வைகி னானே.

5. முன்னமே கொடுத்த வாயுள் முடிந்திட வஞ்சி வந்து
தன்னையே தஞ்ச மென்று சார்ந்தவன் தனனுக் காகத்
துன்னியே தொடர்ந்த காலன் தொலைந்திடச் செய்த தூயோன்
கன்னியோர் கூற னாகி மயிலையிற் கலந்து ளானே.


6. குன்றினை யெடுத்திட் டான்றன் குலவரைத் தோள்கள் வீயத்
தன்றிரு வடியை யூன்றித் தடிந்திட்ட செல்வன் றானே
மன்றலார் குழலி னள்தன் மனத்துய ரொழித்து மேனள்
ஒன்றுடல் தழுவ வந்து மயிலையில் ஒளிர்கின் றானே.

7. கரியின துரிவை போர்த்துக் கையினிற் கபால மேந்தி
விரிகுழ லணங்க ளார்தம் வெள்வளை கவர்ந்து கொண்டு
திரிதருந் தோகை யாகித் தவஞ்செய்த சிறப்பி னன்ற
வரிவளை பாகம் வைத்து மயிலையில் வைகி னனே.

8. ஏனமோ டெகின மாகி யெய்திய விருவர் தாமும்
ஆனவம் முடியி னேடு மடியிணை காணு வண்ணம்
தானெரு தாணு வாகித் தனியொளி மேனி கொண்டான்
மானினை யாகம் வைத்து மயிலையில் வைகி னனே.

9. பேயுறுஞ் சுடலை தன்னிற் பெருநடம் புரிந்து தானே
பாயுறும் புலித்தோல் ஆர்த்துப் பையர வணியும் பூண்டே
ஆயுறும் மனத்தா ருள்ளத் தமர்ந்திடு மமரர் கோமான்
வேயுறு தோளி யோடு மயிலையில் விளங்கி னனே.

10. விண்ணெடு மண்ணும் வேறு விரிந்தபூ தங்கள் நாசம்
நண்ணிய போது தானஃ தெய்திடா நம்பன் தன்னை
எண்ணியே யிறைஞ்சுந் தேவ ரிதயத்துள் வைகி நின்றான்
பண்ணியல் மொழியி னேடு மயிலையிற் பயில்கின் றானே.



துரங்காட்டி.

By courtesy of the artist, Mr. M. S. Sundara Sarma, B.A.



குரங்காட்டி

எம். எஸ். சுந்தர சர்மா

கலைமகளின் கருணையால் நற்கலைகளாக வழங்கிவரும் கலைகளில் ஒவியக்கலையும் சிற்பக்கலையும் சிறந்து விளங்குகின்றன. உயிரின் போக்கைக் காட்டும் உருவங்களைக் கிரகிக்கக்கூடிய கண்கள் ஐம்பொறிகளில் விசேஷமானவையாதலால் இவை அச்சிறப்பு வாய்ந்துள்ளன. தமிழகத்தின்கண் இவ் விருகலைகளும் மிகக் கொண்டாடப் பெற்று உயர்ச்சி அடைந்திருந்தன வென்பதை இப்பொழுது கிடைக்கும் அபூர்வ நூல்களிலிருந்து நாம் அறிவதோடுகூட வானத்திலுள்ள நட்சத்திரங்களைப்போல நமது தேசத்திற் சிதறிக் கிடக்கும் கோயில் குளங்கள் முதலியவைகளிலிருந்தும் அறியக்கூடும்.

நமது முன்னோர்கள் தங்கள் இயல்புவழக்கங்கள் முதலியவைகளை நன்றாய் உணருவதற்கு நமக்கு அளித்திருக்கும் பல சாதனங்களுள் ஓவியங்களும் சிற்பங்களும் மிகச் சிறந்தனவாகும். ஆகையினால் அவ்விரு கலைகளின் தன்மையை நாம் நன்றாக அறிய வேண்டும். அவ்வாறு அறிய அநேக இடையூறுகள் இக்காலத்திலிருந்து வருகின்றன. உருவ பேதங்களைக் கண்டு களிப்படையச் செய்யும் குணமுள்ளன கண்கள். ஓசைகளையும் கண்களால் கண்டுணரும்படி குறிகளாக அமைத்து வருகிறது இக்காலத்து நாகரிகம்! இதுவே முதன்மையான இடையூறாக இருந்து நமது நாட்டாருடைய கண்களுக்கு ஓவியச்சிறப்பும் சிற்பச்செல்வமும் புலப்படாது நிற்பதற்கு முக்கிய காரணமாகிறது.

கற்களில் இழைத்த சிற்பச்செல்வத்தைப் பெற்ற அநேககோயில்களும், சித்தன்னவாசல், தஞ்சை, காஞ்சீபுரம், அஜண்டா போன்றவிடங்களிற் காணப்படும் ஓவியச்சிறப்பும் தென்னிந்தியாவிற்கே உரியன. பஞ்சவுலோகத்தில் வார்த்த ஆயிரக்கணக்கான படிவங்கள் சிதறிக்கிடக்கும் இடமும் இதுவே. இவ்வகையில் காணப்படுவன

வற்றைக் கண்டு அவைகளினால் வெளியிடப்பட்ட உண்மைகளைக் கண்டறிய வேண்டியது மிகவும் அவசியம். ஆங்கில பாஷையிலும் பிற மொழிகளிலும் இவைகளைப்பற்றிச் சிலர் சில நூல்களை எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவற்றை எழுதி வெளியிட்டவர் களில் பெரும்பான்மையோர் அந்நியர்களாயிருக்கிறார்கள். அந்நிய நாட்டினராயிருந்தும் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தை மிகவும் மெச்சத்தக்கது. ஆனால் அவர்கள் அப்படிக் கஷ்டப்பட்டு சிரத்தையெடுத்துக்கொண்டிருப்பது அவரவர் நாட்டிலுள்ள கலை களின் விருத்தியின்பொருட்டேயென்பதனையும், அவர்களால் நம்முடைய தேசத்தின் ஆழ்ந்த தத்துவங்களை அறிந்து எடுத்துக் காட்ட இயற்கையில் முடியாதென்பதனையும் வெளியாக்குகிறது. நாம் வாயை மூடிக்கொண்டிருக்குமளவும் அவர்களது வியாக்கியா னம் எவ்வளவு வேண்டுமென்றாலும் நீட்டப்படலாம். நாமும் 'ஆமாப்பாட்டு'ப் பாடுவோமேயாகில் அவர்களது கட்டுரை வியாக்கி யானங்களுக்குக் கரையே இராது.

நமது நாட்டின் ஓவியங்களும் சிற்பங்களும் மேன்மை பெற்ற வைகளென்று நாமே அறிந்து பெருமைகொள்ளாமல் பிறநாட்டினர் மெச்சிக் கூறின பிறகு நாமும் ஆமோதிப்பதைக்காட்டிலும் கேவலம் யாதுளது ?

கண்டு கேட்டறியவொண்ணாதவைகளை நமக்குத் தெளிவாய்ப் புலப்படும்படி செய்துவைத்திருக்கும் சிற்பசித்திரங்கள் நமது நாட் டில் அளவற்றுக் கிடக்கின்றன. அவைகளுள், பண்டைக்கால முதல் பெயர் பெற்றுவரும் பாண்டிய தேசத்திற்கு முக்கிய நகராக வாய்ந்த மதுரையின்கண் விளங்காநிற்கும் ஆலயத்தின் ஈசானிய மூலையில், பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பாதியில் விமரிசையாக அரசுபுரிந்து வந்த நாயக்கவரசர்களில் மகாஜனங்களின் விருத்தியின் பொருட்டுச் சிற்றணை பேரணை முதலிய அணைக்கட்டுகளைக் கட்டு வித்துக் காத்துச் சிறந்தோங்கிவந்த விசுவநாத நாயகரின் அமைச்சர் அரியநாயக முதலியாரின் ஊக்கத்தினாலும் ஏற்பாட்டினாலும் கட்டப் பட்ட ஆயிரக்கால் மண்டபம் ஒன்று வாய்ந்துளது.

இஃது அளவில்லாச் சிற்பச்செல்வம் பொருந்தியுளது. ஒரே அளவு வாய்ந்த ஒவ்வொரு தூணும் வித விதமாய்ப் பொளியப்பட் டிருப்பதோடுகூட அநேக தூண்கள் பெருஞ்சிற்பங்களுடன் அமைக் கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் சிற்பியென்று பெயர் வகித்து, வெண்ணெபோன்ற களிமண்ணில் உருவங்கள் உருட்டிப் பிறகு இட் டாலிக்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ அனுப்பி அந்நாட்டி லுள்ள வல்லோரின் உதவியால் வெண்கலத்தில் வார்த்து

வரவழைத்து, தாம்செய்த சிற்பம் என்று பெருமை பாராட்டுபவர்களைப்போலன்றி, சிற்பியே கருங்கற்கள் நிறைந்தவிடம் சென்று தகுதியான கற்களைப் பெயர்த்தெடுத்து வெயில் நிழலென்று பாராது அவ்விடத்திலேயே பெருவெட்டிட்டுப் பிறகு நிறுத்த வேண்டிய விடத்தில் கொண்டு வந்து அங்கு, சிற்றுளிகளினுல் தானே வெட்டிச் சீர்படுத்திச்செய்த சிறந்த சிற்பங்கள் அநேகம் இம்மண்டபத்தில் உள்ளன. அச்சிற்பங்களின் தொழிற்றிறமையை மெச்சாத தொழிலாளிகள் இவ்வுலகில் இல்லை. நமது முன்னோர்கள் ஆராய்ந்தறிந்து வெளிப்படையாய் அச்சிற்பங்களில் காட்டி யிருக்கும் தத்துவங்களை இங்குத் திரட்டிக் கூற இயலாது. ஒரு நற்கலைக் காட்சிச் சாலையாக விளங்கும் இம்மண்டபத்தின் அருமை பெருமைகளை ஒரு சிறு வியாசத்தில் எடுத்துரைப்பது எப்படி முடியும்?

ஆனல் இம்மண்டபத்தின் முகப்பிற் காட்டப்பட்டுள்ள சிலைகளில் ஒன்றை இங்குச் சற்று கவனிப்போம். அச்சிலையின் உருவம் இங்குப் புனையா ஓவியமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

கடினமான கற்களை வெண்ணெபோல் உருட்டித் திரட்டின சிறந்த தொழிலாளர்களின் பயிற்சியை விளக்குவதற்கு இதுவே போதும். உலகிலுள்ள எந்தச் சிற்பத்தைச் செய்தவனும் இதை இழைத்த சிற்பியினும் மேற்பட்ட திறமையுடையவனன்று. இஃது அளவும் அமைப்பும் பொருந்தியிருப்பதோடுகூட மிக்க அழகும் வாய்ந்துளது. இக்கடினமான கல்லில் வேலைத்திறமையைக் காட்டிய சிற்பிக்கு வெண்பளிங்கில் கண்ணை மூடிக்கொண்டே வேலைசெய்யும் திறமையுண்டென்பதில் ஐயமில்லை. கருங்கல்லில் இதைக்காட்டிலும் அருமையான வேலை செய்யவே முடியாது.

இது நிற்க; இச் சிலையைச் சற்றுக் கவனித்தால் இவ்வுருவத்தைப் போன்ற மக்களை இந்நாளிலும் நாம் வீதிகளில் குரங்கும் கோலும் கொண்டவர்களாய்க் காணலாம். கேவலம் ஒரு குரங்காட்டியினுருவைச் சிறந்த இம்மண்டபத்தின் முகப்பில் காட்டியிருக்கும் தன்மை யாது? இவ் வுருவத்தின் பக்கத்தில் இதைப்போன்ற ஸ்தானம் பெற்றுள்ள மற்ற உருவங்களைக் கவனிக்குமிடத்து, சிவனது உருவமும், சிவனடியாரிற் சிறந்த கண்ணப்பரின் உருவமும்*, சிவபக்தரான ஓர் அரசரது உருவமும், சிறந்த அமைச்சரான அரியநாயக முதலியாரின் உருவமும், ஒரு குதிரை வீரனது உருவமும், கூடையும் குழந்தைகளும் தாங்கிய ஒரு மாதின் உருவமும் வரிசை

---

* இவ்வுருவத்தைக் 'கலைமகள்' 144-ம் பக்கத்துக்கெதிரிற் காணலாம்—ப-ர்.

யாக முகப்பிற் காணப்படுகின்றன. இவ்வாறு இவற்றை முகப்பில் ஒருங்கே காட்டியிருக்கும் தன்மை என்னவென்று ஊகித்தால் பல வெண்ணங்கள் தோன்றுகின்றன.

மனிதர் வேறுவேறு பிறப்பெடுத்து வேறுவேறு தருமத்தைக் கைக்கொண்டபோதிலும் ஈசனது சன்னிதியில் வித்தியாசம் கிடையாதென்பதையும், இக்காலத்தில் ஜாதிபேதத்தினால் ஆக்கப்பட்ட வித்தியாசக் குறைகளற்று எக்குடிப் பிறந்து எத்தொழில் செய்தோரும் இச்சம்சார சாகரத்தில் ஒரு நிலைப்பட்டவர் என்பதையும், வாயில்லாச்சீவனாகிய குரங்குடன் பழகி அதற்கு நாட்டியம் பயில்வித்து அதனுடன் தானும் ஆடிப்பாடிச் சீவனம் செய்பவனும், கூடை முடைந்து அதைச்சுமந்து குழந்தை குட்டிகளை ஈன்ற மாதும், குதிரையேறிப் போர்புரிந்து தேசத்தைக் காப்பாற்றும் போர் வீரனும், தந்திரமாய் இராஜ்யத்தைப் பரிபாலனம் செய்யும் மந்திரியும், பிரஜைகளை ஆதரிக்கும் மன்னனும், தனது கண்ணைக்கூடப் பறித்தளிக்கும் பக்தனும் ஆகிய யாவரும் வித்தியாசமற்றுச் சகோதர பாவத்தை அடைந்தவர்களென்று கருதியிருந்த நாகரிகத்தையும் காட்டுகிறது.

இவ்வாறான எண்ணங்களையெல்லாம் மண்டபத்தின் முகப்பில் அமைத்துக் காட்டியுள்ள சிற்பங்களின் பெருமையை என்னென்று மெச்சுவது ?

தொழிற்றிறமை வாய்ந்து, சிறந்த வாழ்க்கையின் உண்மைகளை வெளிப்படுத்தும் இக் கற்சிலைகளைச் செய்து நாட்டிய நமது முன்னோரின் நாகரிகத்தை நாம் தழுவி அவர்கள் நமக்கு அளித்திருக்கும் செல்வத்தைப்போல் நாமும் நமது பின்னோருக்கு அளிப்பதைக் காட்டிலும் வேறு பெருமை நமக்குண்டோ ?

சாஸ்திரம்

வழக்கமும் சூழ்வும்

பி. என். அப்புஸ்வாமி

(123-ம் பக்கத்தொடர்ச்சி)

முற்கூறியவாறு உண்டாகும் மாற்றங்களிற் சில, பிராணிகளுக்கு மிக்க பிரயோஜனமுள்ளனவாய் இருக்கும். அப்பொழுது அவை, மீண்டும் மீண்டும், ஒவ்வொரு தலைமுறையிலும், ஏற்படும்படி முன்போன்ற வளர்ப்பு விகற்பங்களால் அமைத்துக்கொள்ளுவது நல்லதாகும். அப்படிப் பயன்தரும் மாற்றங்கள் ஒவ்வொரு தலைமுறையிலுள்ள ஜந்துக்களிலும் மீண்டும் மீண்டும் ஏற்பட்டுக்கொண்டே வந்தால் அவை அந்தஅந்த ஜந்துக்கள் தொலைந்துபோகாது தடுத்துக்கொண்டுவரும் ரக்ஷையாக அமைந்துவிடும். அப்படிச் சில தலைமுறைகளாக நடந்து வந்தால், பின்பு ஒருகால்—நல்ல வேளையாய்—அடுத்த தலைமுறையில் வமிசார்ச்சித குணமாக அத்தகைய மாற்றமானது தோன்றினும் தோன்றக்கூடும். உதாரணமாக, உடலில் தோலில் காணப்படும் ஒருவகைக் கருநிறந்தான் தோலைக் கறுப்பாகத் தோன்றச்செய்கிறது. இதற்குப் பிக்மேண்ட் (*Pigment*=மை) என்று பெயர். இந்தப் பிக்மெண்ட் தோலில் இல்லாதவர் வெள்ளை மனிதர். இது தோலில் உள்ளவர் இதன் அளவுக்கேற்பத் தவிட்டு நிறமோ கருநிறமோ உள்ள கறுப்பு மனிதர். சூரியனுடைய கிரணங்கள் உடலைத்தாக்கிக் கெடுதி விளைவிக்காமல் இந்தப் பிக்மெண்ட் தடுக்கின்றது. இஃது ஒரு வித ரக்ஷையாகும். வெயிலில் போய் உலவும் வெள்ளை மனிதரின் தோலானது சிறிது சிறிதாகத் தவிட்டு நிறமாய் மாறிவிடுகிறது. இக் கன்றிய நிறமானது அவர்களைச் சிறிது ரக்ஷிக்கின்றது. முன்னொருகால் உலகம் முழுதும் பனி மூடியிருந்த காலத்தில் யாவரும் வெள்ளை நிறம் கொண்டவரே என்பதும், வரவர நாளடைவில் உஷ்ண நாடுகளில் வசித்துலவி வந்தபோது முதன்முதலில் ஒரு தலைமுறையிலுள்ளவர்களுடைய தோல் மட்டிலுமே கறுத்து வந்தது என்பதும், அவர்களுடைய குழந்தைகள் அனைவரும் வெள்ளை

நிறமுடையவராகவே பிறந்து வந்தனர் என்பதும், பின்பு ஒருகால் காப்பு நிறமாகிய கறுப்பு நிறங்கொண்ட குழந்தைகள் பிறக்க, இக் கறுப்பு நிறம் வமிசார்ச்சிதமாகப் பெறப்பட்டதென்பதும், அக் குழந்தைகளின் சந்ததி கறுப்பாகவே இருக்கத் தொடங்கிற்றென் பதும், இவ்வாறு மீண்டும் மீண்டும் சூழ்வால் ஏற்பட்ட ஒரு விசேஷ நிறமாறுபாடானது இறுதியில் வமிசார்ச்சிதமாகவே தங்கிவிட்ட தென்பதும் ஒரு சாராரின் கொள்கை.

மாற்றங்கள் மேலே சொன்னபடி வமிசார்ச்சிதமாய் வராவிடி னும், அடுத்த தலைமுறையில் அப்படி அப்படியே தோன்றாவிடினும், அல்லது ஒரு சிறிது அளவாவது மாறுபட்டுச் சந்ததியில் காணாவிடி னும், அவை சிற்றுயிர்க் கண்ணறைகளில் சிற்சில நேரல்லாத மாறு பாடுகளையோ அல்லது சார்பான மாறுபாடுகளையோ செய்தல் கூடும். அதாவது, மாற்றங்களே காரணமாகச் சிற்றுயிர்க் கண்ணறைகள் நஞ் சுற்றோ, வலியற்றோ, வலி குன்றியோ, வலிமிக்கோ ஆதல் கூடும். உதா ரணமாக, எலிகளின் உடலிலே உணவின் வழியோ அல்லது மூச்சின் வழியோ சாராயச் சரக்கை (*Alcohol*) அடிக்கடி சிறிதளவாக உட் புகுத்தினால் அவற்றின் சிற்றுயிர்க் கண்ணறைகள் கெட்டுப்போகின் றன. இஃது இரசசீன முறையால் உண்டாகிற மாறுபாடோ அல் லது உயிர் முறையால் உண்டாகிறதோ என்பது நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆயினும் இம்முறையால் ஜந்துவின் சந்ததியின் குணநிலை தன்மைகள் மாறுபடுகின்றன என்பதில் ஐயமில்லை.

ஸ்தன்னியபான ஜந்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் இதைப் பற்றி உறுதியாகச் சொல்லுவதற்கே இல்லை. சிற்றுயிர்க் கண்ணறை உடலின் உள்ளேயே தங்கி வளர்ந்து பிறக்கின்றது. அப்படியிருக் கும்போது, சிற்றுயிர்க் கண்ணறையின் வமிசார்ச்சித குணம் இன் னது, தாயுடலில் தங்கும்போது சூழ்வு முதலியவற்றால் உண்டான மாற்றம் இன்னது என்பன யாரால் உறுதியாகச் சொல்லக்கூடும்?

ஆயினும், தொழிலின் இயல்பும் சூழ்வின் இயல்பும் ஜீவியை மிகவும் பாதிக்கின்றன என்பது உறுதி. சிற்றுயிர் சம்பந்தமான காரணங்களும் அதற்குரிய வளர்ப்பும் சேர்ந்து, முதிர்ந்த உயிர்ப் பிராணிகளிடத்தில் காணப்படும் ஒவ்வொரு குணத்தையும் உண் டாக்கியிருக்கின்றன. இயல்புகள் மாறுபடுவது சூழ்வால் என்பதற்கு ஐயமில்லை; அவை வளரும் சூழ்வைப் பொறுத்துள்ளன அவ்வவற் றின் தனி இயல்புகள். சூழ்வுக்கு ஒப்ப இயல்புகள் மிகவும் மாறுபடு கின்றன. இஃது ஓர் உதாரணத்தால் விளங்கும். மூடுற்ற ஓரிடத்தில் கருவுற்ற முட்டைகள் இருக்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். நாம் செயற்கையால் அந்த இடத்துள்ள முட்டைகளின் எண்ணைக்

கூட்டவோ குறைக்கவோ முடியாது. ஆயினும் சொத்தையான முட்டைகளை வளர வொட்டாது செய்யவும், நல்ல முட்டைகளில் சிலவற்றை நன்கு வளராது தடுக்கவும், அவற்றுள் வேறு சிலவற்றை நன்கு போஷித்துச் செம்மையாகவும் செழிப்பாகவும் வளரச் செய்யவும் கூடும். சிற்சிலவகையான இயல்புகளை நாம் இவ்வாறு மாற்றுதல் முடியாது. வேறு சிலவற்றை நாம் மனங்கொண்டவாறெல்லாம் மாற்ற முடியும். உதாரணமாக, சைன பிரிம்ரோஸ் (*Chinese Primrose*) என்னும் ஒருவகைப் பூச்செடியானது 15, 20 டிகிரி சூடுள்ள இடத்தில் வளர்க்கப்பட்டால் அதன் புஷ்பங்கள் சிவப்பாக இருக்கின்றன. அதே செடியை 30, 35 டிகிரி சூடுள்ள இடத்தில் வைத்து அங்கு ஈரமும் நிழலும் செறிந்திருக்கச் செய்தால் அப்பொழுது அதன்புஷ்பங்கள் வெள்ளைவெளேரென்று இருக்கின்றன.

அரிந்த தைராய்ட் பொருளை (*Thyroid*) உணவாக உண்ணும் வால் நீண்ட தவளைக் குஞ்சுகள் வளர்ந்து வால் உதிர்ந்து முற்றிய தவளைகளாகின்றன வெனினும் அளவில் சிறியனவாகவே இருக்கின்றன. அரிந்த தைமஸ் (*Thymus*), ஸ்பிலீன் (*Spleen*) என்பவற்றையே உணவாக உண்டு வளரும் தவளைக் குஞ்சுகளோவெனின் அளவில் பெரியன வாகின்றனவாயினும் வாலிழந்து உரு மாறுவதில்லை.

காமரூபி என்று பெயரிடத்தக்க ப்ரோடியஸ் (*Proteus*) என்னும் ஒருவகை ஜந்துவானது டால்மேஷியா (*Dalmatia*) நாட்டுக் குகைகளிலுள்ள இருண்ட நதிப்புறங்களில் வாழும்போது நிறமற்று வெளுத்துக் காணப்படுகின்றது. ஆனல் அதைப் பிடித்துச் சாதாரணமான ஒரு நீர்ப்பிராணிக் காட்சிச்சாலையில் (*Aquarium*) கொண்டு வைத்தால் அது சிறிது சிறிதாய் நிறமாறுகிறது. முதலில் உடலில் புள்ளிகள் தோன்றுகின்றன. பிறகு அதன் உடல் முழுவதும் கறுத்துப்போகிறது. இப் புது இடத்தில் அதற்குப் பிறக்கும் சந்ததியும் அவ்வாறு கறுப்பாகவே பிறக்கின்றன.

ஆகவே 'மாற்றங்களுக்குக் காரணம் பிறப்பா? அல்லது வளர்ப்பா?' என்று கேட்பது அவ்வளவு சரியான வினு அல்ல. 'அலைக்குக் காரணம் காற்ரு? அல்லது நீரா?' என்பது போன்றதேயாகும் அக் கேள்வியும். அலைக்குக் காரணம் காற்றும் நீரும். இவற்றுள் யாதாயினும் ஒன்றில்லாவிடின் அலை யென்பது கிடையாது. அதுபோலவே, பிறப்பும் வளர்ப்பும் ஆகிய இரண்டும் சேர்ந்தே மாற்றங்கள் தோன்றுகின்றன. இவற்றுள் எதுமேல் என்பதும் எளிதில் சொல்லமுடியாது. சிற்சில வேளைகளில் சிற்சில உயிர்ப் பிராணிகள் எவ்வகையான வளர்ப்பாலும் சிறிதும் மாறுபடாது இருப்பதையும்

காணலாம்; சூழ்வுக்கு ஏற்றபடி நிமிஷத்துக்கு நிமிஷம் நிறமாறும் பச்சோந்தியைப்போன்ற ஜந்துக்களையும் காணலாம்.

சாதாரணமாய் ஜீவிகள் அனைத்தும் வளர்ப்புக்கும் சூழ்வுக்கும் ஏற்றபடி மாறுபடக் கூடியன என்பது உறுதி. ஆனால் அவற்றை எவ்வளவு மாறுபடுத்தக் கூடும் என்பதும், ஒரு ஜீவியில் உரிய காரணங்களால் ஏற்படும் மாறுபாடுகள் எவ்வாறு எவ்வளவு அதன் சந்ததியை மாறுபடுத்தவும் வமிசார்ச்சிதமாய்த் தலைமுறை தலைமுறையாய் இறங்கவும் வல்லன என்பதும் இன்னும் வரையறுத்து அறிந்துகொள்ளப்பட வில்லை.

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்

Aggressive colour—வஞ்சக வர்ணம்.
Alcohol—சாராயச்சாக்கு.
Aquarium—நீர்ப்பிராணிக் காட்சிச்சாலை.
Association—கூட்டுவாழ்க்கை.
Beet root—சிவப்புச் சர்க்கரைக் கிழங்கு.
Biologist—உயிர் நூலறிஞர்.
Bristle—சிலும்பு.
Commensalism—ஆகாமித்ரபாவம்.
Dragon fly—தட்டாரப்பூச்சி.
Ectoparasite—புறத்தொத்தி.
Endoparasite—அகத்தொத்தி.
Fat—கொழுப்புச் சத்து.
Fertilisation—கர்ப்பாதானம்.
Foundation line—அஸ்திவார ரேகை.
Germ body—சந்ததித் தாள்.
Hermit crab—சந்யாசி நண்டு.
Hook worm—கொக்கிப்புழு.
Insectivorous plant—பூச்சியைக் கொல்லும் செடி.
Light house—கலங்கரை விளக்கம்.
Mineral salt—உப்புச் சத்து.
Parasite—கொள்ளைச்செடி, தொத்துப்பிராணி.

போரிடும் செடிகள்

எம். எஸ். சபேச ஐயர்

மனிதர்களும் ஆடுமாடுகளும் செடிகளை அழித்து வருவதை நாம் பார்க்கிறோம். மிருகங்களுக்குச் செடிகள் சாதாரணமாய்த் தீங்கு செய்வதில்லை. ஆயினும் சிலவகைச் செடிகளால் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பெருத்த நஷ்டமேற்படக்கூடும். இத்தகைய செடிகள் போரிடத் தயாராயிருப்பதுபோல் தோன்றக் கூடும்.

(1) மற்றைய செடிகளைத் தம் நடுவே வளரவொட்டாது தாமே எங்கும் பரவும்படியான செடிகள் சில.

(2) மனிதர்களுக்கு உணவாகும் தின்பண்டங்கள், கனிகள், தானியங்கள் முதலியவற்றைக் கெடுக்கக்கூடிய செடிகள் சில.

(3) வியவசாயிகளின் பயிர்களையும் கட்டிடவேலைக்குரிய காட்டில் வளரும் மரங்களையும் அழிக்கக்கூடிய செடிகள் சில.

(4) வாந்திபேதி பிளேக் என்பன போன்ற கொடிய நோய்களால் வருத்தி நாசஞ்செய்யும் செடிகள் மற்றுஞ் சில.

(5) பூச்சிகளிலுள்ள உணவுப்பொருளை அடைவதற்காக அவைகளைக் கொல்லும் செடிகள் சில.

பலவிதத்தில் நமக்குத் தொந்திரவுசெய்து மிகப்பெரிய நஷ்டத்தை விளைவிக்கக்கூடிய இத்தகைய செடிகள் பலவற்றின் வாழ்க்கையை நாமறியவேண்டியது அவசியம்.

1. எங்கும் பரவுதல்

'வாடர் ஹயாஸிந்து' (*Water-Hyacinth*) என்னும் செடி சில வருஷங்களுக்கு முன்புதான் இந்நாட்டையடைந்தது. இது நாடெங்கும் குட்டைகளிலும் கால்வாய்களிலும் கூட்டமாய்ச் செழித்து வளர்வதைக் காண்கிறோம். நீர்மட்டத்தையே மறைக்கும்படியாயடர்ந்து வளர்வதால் வேறு செடிகள் புகுதற்கு வழியில்லை.


கால்வாய்களில் நெருங்கிவளர்வதால் தண்ணீர் விரைவாய்ச் செல் லாது தடுக்கப்பட்டு வயல்களுக்கு ஜலம் பாய்வது கடினமாகிறது. வாய்க்கால்களும் சீக்கிரத்தில் மேடிடுகின்றன. இந்தச் செடியால் குடிகளுக்கு மிக்க நஷ்டமுண்டாவதாகத் தெரியவருகிறது.

நாகதாளி (*Prickly Pear*) அல்லது சப்பாத்திச் செடி எங்குப்பார்த்தாலும் பரவிச் செவ்வையாய் வளர்கின்றது. ஆஸ்தி ரேலியாவிலிருந்து சமீபத்தில் சொண்டுவரப்பட்டப் பூச்சியில்லா விடில் சப்பாத்தியை ஒடுக்குவது அசாத்தியம்.

லாண்டானு (*Lantana*) என்னும் செடியும் வெளியூரிலிருந்து சில வருஷங்களுக்கு முன்பு இந்நாடு புகுந்தது. ஆயினும் நாட்டுப் புறங்களிலும் தடையின்றிப்பரவுவதைப் பார்க்கலாம். இத்தகைய செடிகள் வேறுவிதச் செடிகளைப் பரவமுடியாமல் தடுத்து வருகின்றன.

2. உணவுப்பொருளைக் கெடுக்குஞ் சேடிகள்

இவ்வகைச் செடிகளில் முக்கியமானது 'பூஞ்சக்காளான்' (*Mould*). மழைநாளில் ரொட்டி, தின் பண்டம், பழம், புத்தகம், செருப்பு முதலியவற்றின் மீது மெல்லிய நூல் பரந் திருப்பதை யாவரும் பார்த்திருக்கலாம். அதுவே 'பூஞ்சக்காளான்' என்னும் செடி. அதனுடல் மிகவும் மெல்லிய நூல் போன்று வெண்மையாயும் அங்க வேறு பாடின்றியும் காணப்படும். உயிருள்ள செடியானபடியால் அதற்கு உணவு வேண்டும். ரொட்டி, பழம் முதலியவற்றி லடங்கியிருக்கும் உணவுப்பொருள்களை மாற்றித் தனக்கு வேண்டியதை யெடுத் துக் கொள்ளும். திறந்துவைக்கப்பட்ட ரொட்டி முதலியன ருசி கெட்டுப்போவது பூஞ்சக்காளானலேயே. அச்செடி மேன்மேல் வளர உணவுப்பொருள் இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோம். பூஞ்சக் காளானைப் போன்ற செடிகள் இல்லாவிடில் உணவுப்பொருள்களை வெகுநாள் கெடாமல் வைத்திருக்கலாம். தின்பண்டங்களைப் பூஞ்சக் காளான் எவ்வாறு அடையக் கூடுமெனச் சிலர் கேட்கலாம். பூதக் கண்ணுடியால் நூல் தொகுதியைக் கவனித்துப் பார்த்தால், சில கிளை நூல்கள் நிமிர்ந்து வளர்வது தெரியவரும். இந்நூல்களின் முனைகள்




பூஞ்சக்காளான்.

கொண்டை அல்லது பைபோன்று உப்பியிருக்கின்றன. ஒவ்வொரு கொண்டை (*Sac or Sporangium*) யிலும் அநேகம் சிறிய தூள்கள் தோன்றுகின்றன. இத்தூள்கள் வெளியே சென்று சந்ததியுண்டு பண்ணும் சந்ததித்தூள்களாம் (*Germ-body or Spore*) இவைகள் காற்றுலெடுக்கப்பட்டுத் திறந்து கிடக்கும் தின்பண்டங்களில் படியக் கூடும். பிறகு ஒவ்வொரு தூளினின்றும் நூல் தொகுதியுண்டாகிறது. உணவுப்பொருளைக் கெடுத்து விடுகிறபடியால் பூஞ்சக்காளானைப் போன்ற செடிகள் நமக்குச் சத்துருக்களே.

3. பயிரழிக்கும் சேடிகள்

பூஞ்சக்காளானென்பது காளான் என்னும் பெரிய கூட்டத்தைச் சேர்ந்தது. காளான் (*Fungus*) கூட்டத்தைச் சேர்ந்த செடிகளில் பசுமைநிறம் தோன்றுவதேயில்லை. இவற்றிற் சில, பூஞ்சக்காளானைப் போன்று தின்பண்டங்களிலிருந்து உணவையடையலாம். ஆயினும் இக்கூட்டத்தைச் சேர்ந்த பல செடிகள் உயிரோடிருக்கும் பசும் பயிர்களோடு நெருங்கி வளர்கின்றன. தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பசுமை நிறச் செடிகளினின்றும் அபகரிக்கின்றன. ஆகவே இத்தகைய காளான் செடிகளை 'கோள்ளைச் சேடிகள்' (*Parasites*) எனலாம். இவைகளின் வளர்ச்சியால் பயிர்கள் அழிய வேண்டியனவே. வியவசாயிகளின் பயிர்கள் பலவிதக் கொள்ளைச் செடிகளால் தாக்கப்பட்டு மடிகின்றன. நெல்,கரும்பு, வெங்காயம், திராக்ஷை முதலியன அழிவதால் வியவசாயிகளுக்கு நஷ்டமேற்படுகிறது. பிரான்சு (*France*) தேசத்தில் திராக்ஷைச்செடி, நோயால் வருந்துவதால் சில வருஷங்களில் முக்காற்பாகம் நஷ்டமாகிறது. ஒருசமயம் நியூயார்க்கில் (*New York*) உருளைக்கிழங்கு சாகுபடியில் ஒருகோடி டாலர்கள் நஷ்டமேற்பட்டதாம். அமெரிக்காவில் இரண்டு மாகாணங்களில் கோதுமை சாகுபடியில் இரண்டு கோடி டாலர்கள் நஷ்டமாம். காடுகளில் வளரும் விலையுயர்ந்த மரங்கள் காளான் கூட்டத்தி னிடைஞ்சலால் அநேகமாய்க் கெட்டுப் போகின்றன வென்று யாதாஸ்திலிருந்து அறியலாம்.



மரத்தின்மேல் காளான்.

கொள்ளைச் செடிகளினுடலும் நூல் தொகுதிபோன்றிருக்கும். சில இடங்களில் நூல்கள் அடர்ந்து நாய்க்குடையிற் காணப்படுவது

போல் கெட்டியாகத் தோன்றலாம். காளான்களின் நூல் தொகுதியைப் பயிர்களின் பல அங்கங்களிலும் பார்க்கலாம். இலைகளிலும், தண்டிலும், பூக்களிலும் நூல் பரவலாம். அங்குமிங்கும் சில கிளை நூல்கள் பயிர்களினுள்ளே நுழைந்து சதைப்பாகத்தில் அதிகமாய்ப் பரவலாம். பக்கத்திலுள்ள ஜீவாதார வஸ்துவடங்கிய அறைகளை யொட்டி நூல்கள் வளர்வதால் அவைகளிலுள்ள உணவுப் பொருள்களை எளிதிலடையக் கூடும். கொள்ளைச் செடி பசும்பயிர்களில் பரவுவதால், பயிர்கள் வலிகுன்றி, வளர்ச்சியில்லாமல், வியாதியடைந்தன போல் விளங்குகின்றன. இலைகள் சுருங்கியும், குருத்து வாடியும், தண்டு துவண்டும், பசுமை நிறமாறியும் பயிர்கள் காணப்படலாம். மேலும் விகாரமான புள்ளிகளும், திட்டுகளும் (*Patches*) பலவிடங்களில் தோன்றுகின்றன. இவைகள் வியாதியின் குறிகளாவன. ஏதேனுமொரு செடி வியாதியடைந்ததாகக் காணப்படின் அதைப் பிடுங்கி அடக்கம் செய்ய வேண்டும்.



நூல்கள் உள்ளே பரவுதல்.



சட்டையினுள்ளே நூல் பரவுதல்.

இல்லாவிடில் சீக்கிரத்தில் பயிரிலுள்ள பலசெடிகள் வியாதியடைந்து அழியவேண்டி வரும். ஒரு செடியினின்றும் வேறொரு செடிக்கு வியாதி எவ்விதம் பரவக்கூடுமெனச் சிலர் நினைக்கலாம். வியாதியடைந்த செடியின் இலைகளிலும் தண்டிலும் காணப்படும் புள்ளி அல்லது திட்டைச் சுரண்டி அப்பாகத்தைப் பூதக்கண்ணாடியில் பார்ப்போம். நூல்களிலிருந்தும் சந்ததித்தூள்கள் வெளிவருவதைக் காணலாம். இத்தூள்கள் காற்றால் வேறு செடிகளினிடம் சேர்க்கப்படுகின்றன. இலைகளிலோ தண்டிலோ சிறிய புண்ணிருப்பின் சந்ததித்தூள் அதில் தங்கி உள்ளே நுழைந்து செல்லக்கூடிய நூலையுண்டு பண்ணும்.

கொள்ளைச் செடிகள் விளைவிக்கும் நஷ்டத்திற்கு அளவேயில்லை. சில பயிர்கள் நாற்றாயிருக்கும்போது தாக்கப்பட்டு கீழே சாய்ந்து


இளஞ்செடி சாய்தல்.


விடுகின்றன. உருளைக் கிழங்குச் செடியில் இலைகளும் கிழங்குகளும் கெட்டுப் போகின்றன. அமெரிக்காவில் 'துரு' (*Rust*) என்னும் வியாதியால் கோதுமைப் பயிருக்கு நஷ்டம் பலதடவைகளில் ஏற்பட்டது. துருவிற்குக் காரணமான கொள்ளைச் செடியின வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சிசெய்து வியாதியைத் தடுக்கும் வழியைக் கண்டுபிடித்துள்ளார்கள். துருவையுண்டுபண்ணும் கொள்ளைச் செடி முதலில் கோதுமைச் செடியில் பரந்து வளர்கிறது. இச்செடி நீடித்துத் தங்கவேண்டுமானால் பார்பரி (*Barberry*) யெனப்படும் செடியின் இலைகளில் சிலகாலம் வசித்தல் அவசியமாகிறது. பார்பரியென்னும் செடியில்லாவிடில் துருக்காளான் வாழ்க்கையைப் பூர்த்தி செய்யமுடியாது. ஆகவே பார்பரிச்செடியை யொழிக்கும்முறையைத் தேடிவருகிறார்கள். எங்கேபார்த்தாலும் 'பார்பரியையழியுங்கள்' எனத் தேசவாசிகளுக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். எங்கே பார்ப்பினும் யாரும் பார்பரிச் செடியைப் பிடுங்குவதற்கான அதிகாரத்தைச் சட்டமூலமாய் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

வியாதிகளைத் தடுப்பதற்குச் சில உபாயங்களுண்டு. ஆரம்பத்திலேயே துருசுகலந்த நீரைப் பீச்சாங்குழாயால் பயிர்மேல் பீச்சினால் திராக்ஷைபோன்ற செடிகளைத் தப்பிக்கச் செய்யலாம். ஒவ்வொரு பயிர்வகையிலும் பல தினுசுகளிருப்பதை (*Strain*) யாவருமறிந்திருப்பார்கள். நெல்லிலும் பருத்தியிலும் கரும்பிலும் மற்றைப் பயிர்களிலும் பல தினுசுகளுள்ளன. சில தினுசுகள் வியாதியால் எளிதில் பீடிக்கப்படுவதில்லை. இத்தகைய தினுசுகளையே விதைக்காக உபயோகித்தால் நஷ்டமேற்படாதென்று தெரிவித்துவருகிறார்கள். மேலும் வியாதியால் வருந்தாத தினுசை உண்டாக்கக் கூடுமாவென்று ஆராய்ச்சிக்கலாசாலைகளில் கவனித்து வருகிறார்கள்.

பூக்களையுடைய உயர்தரச் செடிகளிலும் சில, கொள்ளைச் செடிகளாக வாழ்நாளைக் கழிக்கின்றன. காடுகளிலும் சாலைகளிலும் உள்ள மரங்களின் கிளைகளில் புல்லுருவியும் அதைப் போன்ற



கஸ்கூடா.



கஸ்கூடா உணவெடுத்தல்.

செடிகள் சிலவும் கொத்துக் கொத்தாய்வளர்வதைப் பார்த்திருக்கலாம். இச்செடிகளின் கீழ்ப்பாகம் மரத்தின் கிளைகளினுள்ளே நுழைந்து ஜலம் உப்பு முதலிய பொருள்களை எடுத்துக் கொள்ளும். கஸ்கூடா (*Cuscuta or Dodder*) என்னும் செடி மழைபெய்தவுடன் செடிகளின்மேல் கொடியாய்ப் படரும். இதன் தண்டு மஞ்சளாயிருக்கும்; இலைகளில்லையென்றே சொல்லலாம். எந்தச் செடியைச் சுற்றிக் கொண்டிருக்கிறதோ அதினின்றும் காளானைப் போலவே எல்லா உணவுப் பொருள்களையும் இஃது அபகரித்துக் கொள்கிறது.


4. பாக்டீரியாக்கள் (*Bacteria*)

இவைகள் மிகவும் நுட்பமான செடிகள். பூதக்கண்ணாடியால் பார்த்தாலும் கண்ணுக்குப் புலப்படுவது கஷ்டம். நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் எங்கும் இவையிருக்கின்றன. பாக்டீரியாக்களில் பசுமை நிறந்தோன்றுவதில்லை. சில பாக்டீரியாக்கள் பூஞ்சக்காளானைப் போன்று தின்பண்டங்கள் செத்த மிருகங்கள் முதலியவற்றையடைந்து அவற்றை மாற்றி உணவை அடைகின்றன. பல பாக்டீரியாக்கள் உயிர்ப் பிராணிகளின் உடலில் வாழ்கின்றன. நம்முடலில் பல பாக்டீரியாக்கள் தண்ணீருடனும் உணவுடனும் செல்லக்கூடும். நம் தேகத்திலும் சதையினைத்தாக்கி உணவையடைகின்றன. அப்போது விஷசம்பந்தமான பொருள்களுண்டாவதால் மனிதனுக்கு வியாதியுண்டாகிறது. வெகு சீக்கிரத்தில் பாக்டீரியா லக்ஷக்கணக்காய் அதிகரிக்கலாம். வாந்திபேதி, பிளேக், பித்தவாதசுரம் ஆகிய பலவியாதிகளால் மனிதன் வருந்துகின்றான். வியாதிக்காரனுடைய மலம், கோழை முதலியவற்றின் மூலமாய்ப் பாக்டீரியா வெளியே வருகின்றது. மற்றவரும் எளிதில் வியாதியால் பீடிக்கப்படுகிறார்கள்.

பாக்டீரியாவாலுண்டாகும் வியாதிகள் தொத்து வியாதிகள். வருஷந்தோறும் நம் நாட்டில் இந்நோய்களால் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் மடிகிறார்கள். பாக்டீரியாக்கள் நம்மை எல்லாப் பக்கங்களினின்றும் தாக்குகின்றன. இவைகளினின்றும் தப்புவது கடினமே. ஆயினும் தப்பிக்க வழியுண்டு. சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் பாக்டீரியாவைக் கொல்லக்கூடும். சுகாதார முறையைக் கைக்கொண்டு ஒவ்வொருவரும் தம் வீட்டைச் சுத்தமாய் வைத்திருப்பதோடு பொதுவிடங்களும் சுத்தமாயிருக்குமாறு பிறரைத் தூண்டுவாரானால் கொடிய நோய்களை அறவே யொழித்துவிடலாம். அம்மை குத்துதல் (*Vaccination*), இனாகுலேஷன் (*Inoculation*) முதலிய சிகிச்சைகள் அபாயத்தைத் தற்சமயம் நீக்கும் வழிகளாகும். தெருக்களும், ஆறுகளும், குளங்களும் சுத்தமாய்ப் பாதுகாக்கப்படின் கொடிய நோய்கள் ஒழிந்துபோம்.


5. பூச்சியைக் கோல்லும் சேடிகள் (*Insectivorous plants*)

பசுமைநிறத்தோடு கூடிய செடிகள் ஜலம், உப்புகள், கரியமலவாயு முதலியவற்றைக்கொண்டு தமக்குவேண்டிய உணவை உண்டாக்கிக்கொள்கின்றன. இவைகள் வேறு செடிகளையோ பிராணிகளையோ உணவுக்காக நாடுகிறதில்லை. ஆயினும் சில செடிகள் பூச்சிகளைக் கொன்று அவைகளினின்றும் கனப்பொருள்களை (*Proteids*) அடைவதாகத் தெரிகிறது. இச்செடிகளில் பூச்சிகளைக் கவரவும், பிடிக்கவும், கொல்லவும் பல உபாயங்களிருக்கின்றன. டிராஸிரா (*Drosera or Sundew*) என்கிற செடியை நம்மூரில் பார்க்கலாம். இதன் இலைகள் அகப்பைபோன்றிருக்கின்றன. கொத்தாய் அடுக்கப்பட்டிருக்கும் இலைகளின் பத்திரங்களில் அநேகம் கொண்டையோடு கூடிய சிலும்புகளைப் பார்க்கலாம். கொண்டையிலிருந்தும் ரசம் சுரப்பதுண்டு. சிறிய பூச்சியொன்று இலையில் சிலும்பினிடம் தங்கினால் பக்கத்துச் சிலும்புகள் பூச்சியைக் கவிந்துகொண்டு



டிராஸிரா.

ரசத்தைச் சுரக்கின்றன. பூச்சியிறக்கவும் அதிலுள்ள உணவை இலையெடுத்துக் கொள்ளுகிறது. அமெரிக்காவிலும் வேறு சில இடங்களிலும் 'ஜாடிச்செடிகள்' (*Pitcher plants*) என வழங்கப்படும்



நெபந்திஸ்.

விநோதமான செடிகளிருக்கின்றன. நெபந்திஸ் (*Nepenthes*) என்னும் செடியில், இலையின் நடுநரம்பு மிகவும் நீண்டு முனையில் ஒரு ஜாடியைத் தாங்குகிறது. ஜாடியின் விளிம்பு வழுவழுப்பாயிருக்கும். ஜாடியினுள்ளே ரசமிருக்கிறது. சிறிய பூச்சி ஜாடியின் நிறத்தால் கவரப்பட்டு விளிம்பையடைகிறது. நழுவி ஜாடியினுள்ளே ரசத்தில் விழுந்துவிடவே பூச்சி மடியும். அதிலுள்ள உணவுப்பொருளைச் செடி உபயோகிக்கும்.

மேலே கூறப்பட்ட பலவகைச் செடிகளும் மனிதனுக்குப் பல வகைகளில் துன்பத்தைச் செய்து நஷ்டத்தை விளைவிக்கக் கூடியவை. பெரிய யுத்தத்திலும் இவ்வளவு துன்பமும் உயிர் நஷ்டமும் ஏற்படுமென்று நினைப்பதற்கில்லை. இவற்றால் செடிகள் சாமானியமானவையல்லவென்று நாம் கண்டுகொள்ளலாம்.

பிராணிகளுள் கூட்டுவாழ்க்கை

(*Association of Animals*)

எம். ஏகாம்பரநாத ஐயர்

ஐச்வர்யவான்களான சில மைனர்களை ஆச்ரயித்து முகஸ்துதியினால் அவர்களுடைய ப்ரீதியை ஸம்பாதித்துச் சுகஜீவனம் செய்துவரும் சிலரை மனிதர்களுள் காணலாம். இவ்வித ஒட்டுணிகளுக்கு அகவிலை, வாழ்க்கையின் சிரமம் முதலானவற்றை அறிய வேண்டுவ[illegible] ஆச்ரயிக்கும் பிரபுக்கள் தனவான்[illegible]யமல்லவா! ஆ[illegible] ஒரு குறைவுகளாகவிருக்கும்வரையில் இவ்வொட்டுணிகளு[illegible]மில்லை. வாழ்க்கையில் இவர்களுடைய வெற்றிக்கு வேண்டி[illegible] முக்கிய குணங்கள், தனவான்களைக் கெட்டியாகக் கைப்பற்றிக் கொள்ளும் சக்தியும், அவர்களிடமிருந்து தனத்தை அபகரிக்கும் திறமுமேயாகும்.

மனிதவர்க்கத்துள் உள்ளதுபோல், தாழ்ந்த பிராணிகளுள்ளும் இவ்வித ஒட்டுணிகள் இருக்கின்றன. இவற்றைத் தோத்துப் பிராணிகள (*Parasites*) என்று கூறலாம். இவைகளால் ஆச்ரயிக்கப் பட்ட பிராணிகளைப் போஷகர்கள் (*Hosts*) என்று சொல்வோம். இவ்விதத் தொத்துப் பிராணிகளுள் பேன் ஒன்றாகும். இப்பிராணியை அறியாதவர் மிகச் சிலரேயாவர். இதன் போஷகர் மனிதரேயாவர். இதன் வாசஸ்தலம், அழுக்கடைந்த உரோமங்களையுடைய தலையேயாகும். சீலைப்பேன் என்று சொல்லும் ஒரு விதமான பேன் மனிதனுடைய தேகத்திலும் வசிக்கும். இப்பேனுடைய ஆகாரம் மனிதனுடைய இரத்தம். இதன் தேகம் தட்டையாகவும் நிறம் கருமையாகவும் இருப்பதால் மயிருடன் தலையில் ஒட்டி யிருக்கும்போது இதைக் கண்டுபிடிப்பதற்குச் சூக்ஷ்மமான திருஷ்டி வேண்டும். நன்றாக உரோமத்தைப் பற்றிக்கொண்டு கீழே உதிர்ந்துவிடாமல் இருப்பதற்கு இதன் கால்கள் கொக்கிகளைப் போல் அமைந்திருக்கின்றன.




பேன்.

பேன் எடுக்கும்போது கூரிய நகங்களால் மயிர்க்கால்களிலிருந்து அவற்றை இழுத்துள்ளோர்க்குப் பேன்களுடைய பற்றுதலின் சக்தி தெரியும். பேனுடைய வாயானது தோலைக் குத்தி இரத்தத்தை

உரிஞ்சுவதற்கு ஏற்றபடி குழல்போல் இருக்கிறது. ஒருவர் தலையிலிருந்து மற்றொருவர் தலைக்குப் பரவுவதற்கேற்றபடி பேனுடைய கால்கள் அமைந்திருக்கின்றன. பேன்களின் முட்டைகளையே ஈர்கள் என்று சொல்கிறோம். இம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரிந்து ஒட்டுப்பேன்களாகின்றன. கரப்பான்பூச்சி தோலுரிந்து வளர்வது போல் இவ்வொட்டுப் பேன்களும் தோலுரிந்து பெரியனவாகின்றன. இவ்விதமாக எறிந்த சட்டைகளைத்தான் 'சாவட்டைப் பேன்கள்' என்று கூறுகிறோம். பேன்கள் வேர்வையிலிருந்து உண்டாகின்றன வென்பது தப்பெண்ணம். பேன்களுள் ஆண் பெண் என்று இரண்டு ஜாதிகள் இருக்கின்றன. பெண் பேன்கள் முட்டைகளிட்டு, அவற்றை உரோமங்களில் ஒருவகைப் பசையினால் ஒட்டுகின்றன. அம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரிந்து [illegible] அல்லது ஒன்பது நாட்களில் மூன்று முறைகள் தோலுரிந்து [illegible]ன்றன. சாதாரணமாகப் பேன்கள் ஆறு [illegible] முழுவளர்ச்சியை [illegible]ப்பதாகக் கூறுகின்றனர்.

பேன்கள் மனிதர்களுடைய இரத்தத்தை உரிஞ்சுவதனால் இவற்றின் கூட்டுவாழ்க்கை அல்லது ஸகவாஸம் மனிதர்களுக்குக் கெடுதலேயாகும். குழந்தைகளைப் பார்த்து, 'சாப்பிடும் சோறெல்லாம் ஈருக்கும் பேனுக்குந்தான்' என்று பெரியோர்கள் சாதாரணமாகச் சொல்வதிலிருந்து இவற்றால் மனிதர்களுக்கு விளையும் தீமை நன்கு தெரிந்துளது.


தெள்ளுப்பூச்சி.

மனிதர்களுடைய தேகத்தின்மேல் உள்ளனபோல், மற்றப் பிராணிகளுடைய தேகத்தின்மேலும் பல தொத்துப்பிராணிகள் வாழ்கின்றன. மாடு, நாய் முதலானவற்றின்மேல் வாழும் உண்ணிப் பூச்சிகளும், எலியின்மேல் வாழும் தெள்ளுப் பூச்சிகளும் இவற்றிற்கு உதாரணமாகும். இம்மாதிரியாகவே நண்டு, மீன், பாம்பு, ஆமை, பக்ஷிகள், நாற்கால் மிருகங்கள் முதலான சகலவிதமான பிராணிகளின்மேலும் வேறு வேறு விதமான தொத்துப் பிராணிகள் வசிக்கின்றன. பேன்களுக்கு இருப்பனபோல் இவ்விதமான தொத்துப் பிராணிகளுக்கெல்லாம், பற்றுக் கருவிகள் நன்றாக வளர்ந்தும், ஆகாரத்தைப் போஷகர்களிடமிருந்து உரிஞ்சுவதற் கேற்றபடி வாயமைப் பமைந்தும் இருக்கின்றன.

பிராணிவர்க்கத்திலுள்ளதுபோல், தாவரத்திலும் புல்லுருவி போன்ற தொத்துச் செடிகள் இருக்கின்றன. 'நல்ல மரத்தில் புல்

ஓருவி பாய்ந்ததுபோல்' என்ற பழமொழியிலிருந்து போஷகச் செடிகளுக்கு இவற்றால் உண்டாகும் கெடுதல் நன்கு புலப்படுகிறது.

மேற்கூறிய தொத்துப்பிராணிகள் போஷகர்களின் வெளிப் பாகத்தில் வசிக்கின்றன ; புறப்பாகத்தில் உள்ளனபோல் அநேக தொத்துப்பிராணிகள் தேகத்தினுள்ளேயும் வசிக்கின்றன ; இவற் றிற்கு உதாரணமாகக் கிரைப்புழு (*Round worm*), நாக்குப்பூச்சி (*Thread worm*), நாடாப்புழு (*Tape worm*), கொக்கிப்புழு (*Hook-worm*) முதலானவற்றைக் கூறலாம். இவ்விதமாகத் தேகத்தி னுள்ளே வசிக்கும் பிராணிகளை **அகத்தோத்திகள்** (*Endopara-sites*) என்றும், புறத்தில் வாழ்வனவற்றைப் **புறத்தோத்திகள்** (*Ectoparasites*) என்றும் கூறலாம்.

மேற்கூறிய அகத்தொத்திகள் மனிதனுடைய குடலில் வசிக்கின் றன. இவற்றிற்குக் கால்களோ, கண்களோ இல்லை. ஆகாரம் கி[illegible]ர நீவையும் ஏறப்[illegible]ம், பகைவர்களிடமிருந்து [illegible]டைக்கும் இடத்தைத் தேடிச் செல்ல[illegible]ம் என்று [illegible] முக்கிய தப்பித்துச் செல்லவும் அல்லவா கால்கள் பிராணிகளு[illegible]யம். மாக உதவுகின்றன? இப்படியே, ஆகாரமுள்ள இடத்தைக் கண்டுபிடிக்கவும் பகைவர்களைத் தெரிவிக்கவும் கண்கள் உபயோக மாகின்றன. நன்கு ஜீர்ணிக்கப்பட்ட ஆகாரத்தின் மத்தியிலேயே வசிக்கும் இப்புழுக்களுக்கு, ஆகாரத்தைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமெங்கே? பகைவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற பயமுமில்லை. 'ஒரு போஷகனிடமிருந்து மற்றொரு போஷகனிடம் செல்லுவதற்குக் கால்களும் கண்களும் அவசிய மில்லையா?' என்று கேட்கக்கூடும். ஆனால் இவ் வகத்தொத்திகள் வேறு விதங்களில் பரவுகின்றன. நாக்குப்பூச்சி, போஷகர்களுடைய குடலில் முட்டைகளை யிடுகிறது. இம் முட்டைகள் மலத்துடன் சேர்ந்து வெளியே வருகின்றன. இம் முட்டைகள் கலந்துள்ள நீரை யோ, ஆகாரத்தையோ மனிதன் உட்கொண்டால், இவைகள் அவ னுடைய தேகத்தினுள்ளே செல்லும் ; இம் முட்டைகளினின்று புழுக்கள் விருத்தியடைகின்றன. நாடாப்புழு, கொக்கிப்புழு முத லானவைகளுடைய முட்டைகளும் மலத்துடன் வெளியே வரும் ; ஆனால், இம் முட்டைகளிலிருந்து வெளியே வரும் சிறிய புழுக்கள் வேறு விதங்களில் மற்றொரு போஷகனை யடைகின்றன.


மேற்கூறிய கூட்டுவாழ்க்கையில், ஒரு பிராணிக்குமட்டும் நன்மையுண்டாகிறது ; மற்றொரு பிராணிக்குத் தீமையே விளைகிறது. போஷகனுடைய சத்தை உறிஞ்சியே அதிதி வளர்கிறது. ஆனால், சில விதமான கூட்டுவாழ்க்கைகளில் இரு ஜந்துக்களுக்கும் பரஸ்பரமாகப் பிரயோசன முண்டாகிறது. படத்தில் காட்டியுள்ள இரண்டு பிராணிகள் இவ்விதமான வாழ்க்கையை அனுசரிப்பனவாகும்.

படத்தில் காட்டியிருக்கும் கடல் அனிமோனீ (*Sea-anemone*)



கடல் அனிமோனீ.


என்கிற பிராணி சமுத்திரத்தில் வாழ்கிறது. இடம் விட்டு இடம் நகர்ந்து செல்ல இதனால் முடியாது. இதன் தேகம் மிருதுவாகவிருக்கும்; பரிமாணத்தில் ஒன்று அல்லது இரண்டு அங்குல நீளமுள்ளதாக இருக்கும்; இதன் அடிப்பாகம் கற்பாறையில் ஒட்டிக்கொண்டிருக்கும்; மேற்பாகத்தின் மத்தியில் வாய் இருக்கிறது; வாயைப் படத்தில் துவாரமாகக் காணலாம்; மேற்பக்கத்தைச் சுற்றிலும் அநேக ஸ்பர்சக்கொ... (*Tentacles*) இருக்கின்றன; இவைகளைச்... நீட்டவும் முடியும்; இவற்றை அசைத்து, ...கள் ஜலத்துடன் அருகே வந்தால், அவற்றை உட்கொள்ளும். இந்த ஜந்துவுக்குச் சில விஷக்கருவிகள் இருக்கின்றன; அவற்றினால் சிறு பிராணிகளைக் கொட்டி விஷத்தை அவைகளுள் செலுத்தும். ஒரே இடத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதால், ஆகாரம் இதனிடம் வரும்போதுதானல்லவா, இதனால் பிடிக்கமுடியும்? இடம் விட்டு இடம் போகாமையால் இதற்குக் கண்கள் காதுகள் முதலான இந்திரியங்கள் இல்லை.



ஸன்யாசி நண்டு.

படத்தில் மேற் பாகமாக இறால் போன்ற ஒரு பிராணி காட்டப்பட்டிருக்கிறது; இது ஸமுத்ரத்தில் வசிக்கிறது. இதற்கு ஸன்யாசி நண்டு (*Hermit-crab*) என்று பெயர்; சாதாரண நண்டு, இறால் முதலிய பிராணிகளைப்போலிராமல், இதன் உடலின் பின்பாகம் மிருதுவாக இருக்கும்; இப்படி மிருதுவாக இருப்பதனால் இதற்குச் சுலபமாகத் தீங்கு நேரிடக்கூடும். ஆகையால் ஓர் இரக்ஷகம்

அவசியமாகிறது. இவ்விஷயத்தில் இப்பிராணி ஒரு விசித்ரமான முறையை அனுசரிக்கிறது: நத்தையினத்தைச் சேர்ந்த அநேகக் கிளிஞ்சற் பிராணிகள் சமுத்திரத்தில் வசிக்கின்றன. அம்மாதிரியான பிராணிகளுடைய கிளிஞ்சல்களில் ஒன்றை இது தன் தேகத்திற்கு ஒரு கவசமாக்கிக்கொள்கிறது. ஸன்யாசி நண்டின் உடற்பாகம் பின்புறமாக வளைந்து இருக்கும்; கடைசியில் சில கொக்கிகள் போன்ற கால்கள் இருக்கின்றன. கொக்கி போன்ற கால்களால் இந்தப் பிராணி, கிளிஞ்சலின் மத்தியிலுள்ள இம் மத்தியஸ்தம்பத்[illegible] பற்றிக்கொண்டு அதைத் [illegible] தன்னுடன் [illegible] லாம் தூக்கிச்செல்லும். படத்தில் கீழ்ப்பாகத்தில் ஒரு ஸன்யாசி நண்டு கிளிஞ்சலுடன் காட்டப்பட்டிருக்கிறது.



ஸன்யாசி நண்டும், கடல் அனிமோனீயும்.

இடம் விட்டு இடம் செல்லக்கூடிய மேற்கூறிய ஸன்யாசி நண்டும், நடமாட்டமில்லாத கடல் அனிமொனீயும் ஒன்று சேர்ந்து ஸகவாசம் செய்கின்றன. ஓரிடத்திலேயே இருத்தலைக்காட்டிலும், ஆங்காங்குக் கொண்டுபோகப்பட்டால் கடல் அனிமொனீக்கு ஆகாரம் கிடைப்பதற்கு இடம் அதிகமுண்டல்லவா? ஸன்யாசிநண்டுக்கும் விஷக்கருவிகளையுடைய கடல் அனிமொனீயைத் தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தால், இரக்ஷகத்திற்கு இடமாகுமல்லவா? ஸன்யாசிநண்டு வசிக்கும் கிளிஞ்சலின்மேல் கடல் அனிமொனீ ஒட்டிக்கொண்டு, இரண்டும் சேர்ந்து வசிக்கின்றன. நடக்கக்கூடிய ஸன்யாசிநண்டு, நடமாட்டமில்லாத கடல் அனிமொனீயைத் தூக்கிக் கொண்டுசெல்லுகிறது. ஸன்யாசிநண்டுக்குக் கடல் அனிமொனீயின் விஷக்கருவிகளால் இரக்ஷகமும், கடல் அனிமொனீக்கு இடம் விட்டு இடம் கொண்டுபோகப்படுவதால் அதிக ஆகாரமும் கிடைக்கின்றன. இக்கூட்டுவாழ்க்கையில் இருபிராணிகளும் பிரயோஜனத்தை யடைகின்றன; இவ்வித வாழ்க்கையை ஆகாரமித்ரபாவம (*Commensalism*) என்று உயிர்நூலோர் கூறுகிறார்கள். ஸன்யாசி நண்டு, கடல் அனிமொனீயுடன் வாழ்வதுபோல் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த அநேகப் பிராணிகள் இவ்விதக் கூட்டுவாழ்க்கை முறையை அநுசரிக்கின்றன.

சில தாவரங்கள், தாழ்ந்த பிராணிவர்க்கத்தைச் சேர்ந்த சிலவற்றின் தேகத்தினுள்ளேயே வசித்து ஒன்றற்கொன்று ஆகாரம் சேகரிக்கும் விஷயத்தில் பிரயோஜன மடைகின்றன. இவ்வாழ்க்கையில் அன்யோன்யமும் பரஸ்பர ஆச்ரயமும் ஆகாரமித்ரபாவத்தை விட அதிகமாக இருக்கின்றன. இந்த விதமான கூட்டுவாழ்க்கையை ஸகஜீவத்வம் (*Symbiosis*) என்று உயிர்நூலோர் கூறுகின்றனர். இதைப்பற்றிப் பின்பு விவரிப்போம்.

நம் ஆகாரப்பொருள்களின் குணாதிசயங்கள்

டி. என். எஸ். இராகவாசாரி

ஒரு குழந்தை பிறந்து இருபது வயது ஆகிற வரையில் அதன் சரீரம் வளர்ந்து வருகிறது. இதுதான் வளர்ச்சிப் பருவம். அதன் பிறகு சரீர வளர்ச்சி நின்று விடுகிறது. சரீரம் வளர்வதற்கு ஏற்ற உணவுப் பொருள்கள் உட்கொள்ளப் படாவிட்டால், சரியான வளர்ச்சியும் [illegible]காகார நிலையும் ஏற்படா. ஆகவே நாம் சாப்பிடும் ஆகாரம் எவ்விதமானதாக இருத்தல் வேண்டும் என்று ஒவ்வொருவரும் அறிந்து கொண்டு அந்தக் கிரமப்படி புசித்தல் அவசியம். நாம் வசிப்பதற்கு ஏற்ற வீடு ஒன்று கட்டுவதாக வைத்துக் கொள்வோம். அதற்கு வேண்டிய அம்சங்கள் என்னவென்றால், செங்கல், மரம், ஓடு, சுண்ணாம்பு முதலிய உயிரில்லாத வஸ்துக்களும், கொத்தன், தச்சன், கூலியாட்கள் முதலிய உயிருள்ள பிராணிகளுமல்லவா? அது போல நமது சரீரமான வீட்டைச் செவ்வனே கட்டி முடிக்க அரிசி கோதுமை முதலிய மாவுப்பொருள்களும், உளுந்து, துவரை முதலிய தசை வளரும் சத்துப் பொருள்களும், நெய், எண்ணெய் முதலிய கொழுப்புப் பொருள்களும், உப்பும் வேண்டும். உயிரில்லாத மேற்கூறிய வஸ்துக்களைத் தவிர, ஜீவ சத்துக்களான விட்டமின் (*Vitamins*) என்று ஆங்கில பாஷையில் வழங்கப்படும் சில கண்ணுக்குப் புலப்படாத பதார்த்தங்களும் அவசியம்.

அரிசி முதலிய பதார்த்தங்களைச் செங்கல், மரம், சுண்ணாம்பு என்பவற்றிற்கும், விட்டமின் என்று சொல்லிய பதார்த்தங்களைத் தச்சன் முதலிய சிற்பிகளுக்கும் ஒப்பிடலாம். தச்சன், கொல்லன், கூலியாட்களென்பவர்களுக்கு வேறு வேறு பெயர்களிட்டுக் கூப்பிடுவது போல, விட்டமின் என்று சொல்லப்படும் ஜீவ சத்துக்களுக்கும் ஏ, பீ, ஸீ, டீ, ஈ, (*A*, *B*, *C*, *D*, *E*) என்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கொத்தன் செங்கல்களால் சுவர் எழுப்புகிறான்; தச்சன் மரங்களைக் கொண்டு வாயிற்கால், ஜன்னல் முதலியவைகளைச் செய்கிறான்; கற்றச்சன் அஸ்தி வாரத்துக்கும், தூண்களுக்கும் வேண்டிய கற்களை உளியால் அடித்து நிருமிக்கிறான். அது போலவே, ஏ (*A*) விட்டமின் என்னும் ஜீவசத்து,

நம்முடைய கண்கள், சுவாசாசயம், இரைப்பை, குடல் முதலிய அவயவங்களை வளரச்செய்யும் சக்தி யுடையது. பீ (*B*) என்பது நமது மூளை, நரம்புகள், இரத்தாசயத்தின் தசை முதலியவைகளையும், ஸீ (*C*) என்ற சத்து இரத்தத்தையும், டீ (*D*) என்பது பற்களை யும் எலும்புகளையும் முறையே வளரச்செய்யும் திறம் வாய்ந்தவை. ஈ (*E*) என்ற ஜீவசத்து பிரஜோற்பத்தி சம்பந்தமான அவயவங் களைத் திடப்படுத்தும் சக்தியுள்ளது. ஆகவே நமது சரீரமாகிய வீட் டைக் கட்டி முடிக்கச் சரியான உணவுப் பொருள்களும் ஜீவ சத்துக் இதை[illegible]ளும் வேண்டிய அளவு இன்றியமையாதவை. சரியாகச் சுடப்பட்ட க[illegible], முதிர்ந்த மரங்களும், தத்தம் தொழில்களைச் சரிவரச் கற்களுட[illegible]க்கும் வல்லமை வாய்ந்த தொழிலாளிகளும் இல்லாமல், செய்து முடிக[illegible]வற்றிற் குறையுண்டானல், கட்டப்படும் வீடு ஏதேனும் சில[illegible]சீக்கிரத்[illegible] குறைவுபட்டுச் [illegible]முதல பழுது அடைவதே போல, நாம் உட் கொள்[illegible]ளும் உணவில் மேற்கூறிய அம்சங்கள் ஏதேனும் குறைவடைந் தால் சரீரத்தின் அவயவங்களும் மேற்கூறிய குறைவுக் கேற்றவாறு வலிகுறைந்து பிணியின் வாய்ப்படும். ஓர் அவயவம் குறைவடைந் தால், மற்ற அவயவங்களும் சீக்கிரத்தில் பலஹீனப்பட்டு, சரீரம் சவுக்கியம் குறைந்து பிராணபாயமான நோய்க்கு இரையாகும்.

ஆகவே இந்தப் பத்திரிகையைப் படிக்கும் சகோதர சகோதரி களுக்கு ஆகார விஷயத்தில் விசேஷ அறிவு புகட்டுமாறு ஒவ் வொரு சஞ்சிகையிலும் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி எழுத முயல்கிறேன். நமது உணவுப்பொருள்களின் சாராம்சங்களையும் தேக வளர்ச்சிக்கேற்ற குண குணங்களையும் பற்றி இடையிடையே குறிப்பிடுவேன்.

ப்ரோடீன்ஸ் (*Proteins*) என்னும் உணவுப்பொருள் தசையை யும், மூளை, பித்த ஈரல், இரத்தாசயம், குண்டிக்காய் முதலிய அவய வங்களையும் வளரச்செய்வதற்கு இன்றியமையாதது. இது முக்கிய மாகப் பால், மாமிசம், கோழிமுட்டை, மீன் என்பவைகளிலும், கோதுமை, ஓட்ஸ், வாற்கோதுமை, சோளம், கம்பு, வரகு, பருப்பு வகைகள், அரிசி, காய் கறிகள், பழங்கள் முதலியவைகளிலும் நிரம்பவோ குறைந்தோ இருக்கும்.

உப்புச் சத்துக்கள் (*Mineral Salts*) பற்களையும் எலும்புகளை யும் வளரச் செய்யவும், இரத்தத்தைச் சுத்தமாக விருக்கும்படி செய்யவும், இடைவிடாது தேகத்தின் பற்பல பாகங்களுக்கு இரத் தோட்டத்தைச் செய்து வருவதற்கு உதவியாகவும் இருந்து வருகிற பொருள்கள். நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்கள் எல்லாவற் றிலும் உப்புச் சத்துகளுண்டு. பழங்களிலும் விசேஷமாக உப்புச் சத்துக்கள் நிரம்பியுள்ளன.

கொழுப்புச் சத்து (*Fats*) உயிர் ஜந்துக்களின் மாமிச பதார்த்தங்களிலும், காய்கறி வகைகளிலும் காணப்படும் வஸ்து. வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் (*Cod Liver Oil*) என்பவை உயிர் ஜந்துக்களின் மாமிசக் கொழுப்பு வகையைச் சேர்ந்தவை.

மார்வோ (*Marvo*) கோகோஜெம் (*Cocogem*) நல்லெண்ணெய், தேங்கா யெண்ணெய், கடலைக்கொட்டை யெண்ணெய், இலுப்பை யெண்ணெய் என்பவை மரஞ்செடி வர்க்கங்களிலிருந்து கிடைக்கும் கொழுப்புச் சத்துக்கள்.

கார்போ ஹைட்ரேட்ஸ் (*Carbohydrates*): மாவுப் பொருள்களும் சர்க்கரையும் இந்த இனத்தைச் சேர்ந்தவை. கொழுப்புக்களைப் போல இவையும் தேகத்தின் சுக உஷ்ண நிலையைப் பாதுகாக்க அவசியமான பொருள்கள். மாவுப்பொருள்களுக்கு உதாரணம்: அரிசி, கோதுமை, ஓட்ஸ், வாற்கோதுமை, சோளம், கம்பு வரகு, கேழ்வரகு, உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, டபபாய் அரிசி (*Tapioca*) முதலியவை. சர்க்கரைப் பொருள்கள் கரும்பு, பீட் ரூட் (*Beet Root*) என்னும் சிவப்புச் சர்க்கரைக் கிழங்கு, பழங்கள் என்பவற்றிலும் வேறு சில செடிகளிலும் விளங்குகின்றன. மேற்கூறிய உணவுப் பதாத்தங்களுடன் நம் சரீர வளர்ச்சிக்கு ஏராளமான ஜலமும் அவசியம். இது நிற்க; ஏற்கனவே நாம் சொல்லிய ஜீவாதார சத்துக்களான விட்டமின்கள் (*A,B,C,D,E*) அத்தியாவசியமான சிற்பிகள். ஏ, டீ (*A, D*) ஜீவசத்துக்கள் வெண்ணெய், நெய், பால், கோழி முட்டையின் மஞ்சள் கரு, மீன் எண்ணெய் என்பவைகளிலும், காரட்ஸ் (மஞ்சள் முள்ளங்கி), தக்காளிப்பழம் (*Tomatoes*), சர்க்கரை வள்ளிக் கிழங்கு, வாழைப்பழம் முதலிய காய்கறிகளிலும் விசேஷமாக வுண்டு.

பீ, ஈ (*B, E*) ஜீவசத்துக்கள் அரிசி, கோதுமை முதலிய மாவுப் பொருள்களில் கிடைக்கும்.

ஸீ (*C*) என்ற சத்து பச்சைக் காய்கறிகளில் அதிகம். முட்டைக் கோஸ், முளைக்கீரை, பசலைக்கீரை முதலியவை உதாரணம்.

ஆகவே சரீரம் சரிவர விருத்தியடைந்து சுகாதார நிலைமை குன்றுமல் இருக்க, இது வரையில் எடுத்துக்காட்டிய உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றும் வேண்டிய அளவு அமைந்திருக்கும்படி நம்முடைய ஆகாரக் கிரமத்தைத் திட்டம் செய்துவைத்து அதன்படி உட்கொள்ளவேண்டும்.

(தொடரும்)

பண்டைத் தமிழர் காலங்கணித்த வகை

பிரான்சிஸ் கிங்ஸ்பரி

நமது முன்னோர் தமிழகத்தில் எவ்வாறு காலங்களைக் கணித்தனர் என்னும் கேள்விக்கு விடைகாண்பதே இச் சிறு உபந்நியாசத்தின் நோக்கமாம்.

1. நாள்

பூமி தன்னைத்தானே ஒரு [illegible] அஃதாவது பூமி [illegible] றுண்டானால், கட்டப்படும் சேடு [illegible] குறைவுபடிக்கிரக் [illegible] முடியும் [illegible], [illegible] ஒருமுறை அங்கப்பிரதக்ஷிணம் செய்து முடியுங் காலமே ஒரு நாள் ஆகும் என்பர் அறிவுடையோர். இஃது உண்மையேயாயினும் நேரே அனுபவத்திற் கண்ட காரியம் அன்று. பல நியாயங்களைக்கொண்டு அனுமானித்த உண்மையே. ஆயின் நம் கண்ணாரக்கண்ட விஷயம், சூரியன் காலையிற் கிழக்கே உதிப்பதும், நாழிகைதோறும் மேல் ஏறுவதும், மத்தியானத்திலே உச்சியில் நிற்பதும், பின் சிறிது சிறிதாய் மேற்கே சாய்வதும், பின் அஸ்தமிப்பதும், அடுத்த நாட்காலையில் மறுபடியும் உதிப்பதுமே. ஆரியர் சூரியோதயம் தொடங்கி அடுத்த சூரியோதயம் வரையும் செல்லும் காலம் ஒருநாள் என்பர். தற்காலத்து ஐரோப்பிய வான சாஸ்திரிகள் சூரியன் உச்சியில் நிற்கும் க்ஷணம் தொடங்கி மறுபடியும் உச்சிக்கு வரும் காலம் ஒருநாள் என்பர். நம் முன்னோராகிய தமிழரோ, இவ் விருவகையிலும் நாளைக் கணியாது ஞாயிறு மேற்கே பட்ட நொடிமுதல் ஞாயிறு மறுபடியும் படும்வரையும் உள்ள பொழுதே ஒருநாள் என்றனர். அஃதாவது சூரியாஸ்தமனம் தொடங்கிச் சூரியாஸ்தமனம் வரையும் உள்ள காலமே ஒருநாள் ஆகும். இஃது எப்படி அறியலாம் எனின், 'இரவும் பகலும்', 'அல்லும் பகலும்', 'கங்குல் பகல்', 'இராப்பகல்' என்கிற சொற்றொடர்களைக் கவனிக்க. பகலும் இரவும், பகலும் அல்லும், பகல் கங்குல், பகல் இரா என்று சொல்ல எளிதில் வராது. அன்றியும்,

> "மாலை யாமம் வைகுறு வென்று
> காலை நண்பகல் எற்பா டென்று"

என்ற இலக்கணவிளக்கச் சூத்திரத்தையும் பார்க்க. 'இராப்பகல்' எனத் தமிழர் கூற ஆரியரோ 'அஹோராத்ரம்' (அஹஸ்+ராத்ரம்) என்பர். (அஹஸ்=பகல்; ராத்ரம்=இரவு.) இனி, இரவை

மூன்று பொழுதாகவும் பகலை மூன்று பொழுதாகவும் பிரித்தனர் தமிழர். ஆகவே ஒரு நாளைக்குப் பொழுது ஆறும். அவை முற் கூறிய சூத்திரத்திற்கண்டபடி, மாலைப்பொழுது, யாமம், வைகுறு அல்லது வைகறை என இராப்பொழுது மூன்றும், காலைப் பொழுது, நண்பகல், எற்பாடு எனப் பகற்பொழுது மூன்றுமாக ஆறு பொழுதாகும். ஒவ்வொரு பொழுதுக்கும் நாழிகை பப் பத்து. ஆகவே ஒரு நாளைக்கு நாழிகை அறுபது ஆகும். (தற் காலக் கணக்கின்படி 24 மணி 60 நாழிகை. ஒரு மணிநேரம் 2½ நாழிகை. ஒரு நாழிகை 24 நிமிஷம்.)

2. திங்கள்

திங்கள் என்பது சந்திரனென்பதன் தமிழ். (சந்திரன் என்பது [illegible] மொழி.) ஓர் அமாவாசை வடமொழி; திங்கள் என்பது தமிழ் [illegible] வரையும் கழிந்த க்ஷணம் தொடங்கி அடுத்த அமாவாசை [illegible]கள் ஒரு திங்கள் ஆகும். (ஆங்கிலத்திலே *Month* என்ற சொல்லும் *Moon* என்ற சொல்லடியாகப் பிறந்த பதமே.)

"ஐயிரண்டு திங்களா அங்கமெல்லாம் நொந்து பெற்று"

என்ற பட்டினத்தடிகள் கூறிய வெண்பாவைக் கவனிக்க. ஒரு திங் களை இரண்டு கூறு ஆக்கி, ஒரு கூற்றை வளர்பிறை என்றும்; மறு கூற்றைத் தேய்பிறை என்றும். இதனால் தமிழர் மாதம் சாந்திர மாதமே என்பது புலப்படும். ஆயினும் பிற்காலத்துத் தமிழர், சூரியன் ஒரு ராசியிற் பிரவேசித்து மறுராசிக்குப் போகும் காலம் வரையும் ஒரு மாதம் எனக் கணிக்க ஆரம்பித்தனர். ஆகவே சாந்திரமாசம் சௌர மாசம் என இருவகைக் கணிப்பும் பெற் றூர் தமிழர்.

3. யாண்டு

பூமி சூரியனை ஒருமுறை பிரதக்ஷிணம் பண்ணுங்காலம் ஒரு வருஷமாகும் என்பார் ககோள சாஸ்திரிமார். பண்டைத் தமிழரோ மழைகாலந் தொடங்குவது முதல் அடுத்த மழைகாலந் தொடங் கும் வரையும் உள்ள பொழுதே ஓர் யாண்டு என்றனர். யாண்டு என்பது ஆண்டு என மருவிற்று, யானை என்பது ஆனை என மருவி னதுபோல.

"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில்" (இலக்கணவிளக்கம்.)

ஓர் யாண்டை ஆறு பெரும் பொழுதாகப் பிரித்தனர் தமிழர்.

1. கார்ப்பருவம் : மழைகாலம்; ஆவணியும் புரட்டாசியும்.
2. கூதிர்ப்பருவம் : குளிர்காலம்; ஐப்பசியும் கார்த்திகையும்.

3. முன்பனிப்பருவம் : இரவின் முற்பகுதியிலே பனிபெய்யும் காலம் ; மாசியும் பங்குனியும்.

4. பின்பனிப்பருவம் : இரவின் பிற்பகுதியிலே பனிபெய்யும் காலம் ; மார்கழியும் தையும்.

5. இளவேனிற்பருவம் : உஷ்ணம் மிகுதியில்லாத காலம் ; சித்திரையும் வைகாசியும்.

6. (முதிர்) வேனிற்பருவம் : உஷ்ணம் மிகுதியுள்ள காலம் ; ஆனியும் ஆடியும்.

('சித்திரை' 'வைகாசி' முதலிய பெயர்கள் சித்திரை, விசாகம் முதலிய நக்ஷத்திரங்களிலே பூரணசந்திரன் வரும் மாதப்; ஆகையால், இவை எல்லாம் முதலிலே சாந்திரமாசங்களின் பெயராம்; பின் 'மேடரவி' 'இடபரவி' என்னும் சௌரமாசங்களின் பெயராயின. இது விபரீதமேயாயினும், இதனை இப்பொழுது மாற்றுவது முடியாது.)

மேலைச் சூத்திரத்தினாலே நாம் காண்பது, தமிழர் வருஷப் பிறப்பு ஆவணி மாதம் முதற்றேதி யென்பது. இதுவே இக்காலத்திலும் மலையாள வருஷப் பிறப்பு. 'கோல்லமாண்டு' தொடங்குவது ஆவணி மாத முதற்றேதிதானே. இப்பொழுதும் கடைக்காரர் புது எட்டிலே கணக்குப்பதிக்கத் தொடங்குவது ஆவணி முதற் றேதியிலாம். ஆயின், 'சித்திரை மாதம் முதற்றேதி எப்படி வருஷப் பிறப்பாயிற்று ?' எனக் கேட்பின், தமிழர் ஆரியர் கணிதத்தை அனுசரித்ததினாலே என்க.

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்.

Fungus—காளான்.
Mould—பூஞ்சக்காளான்.
Patch—திட்டு.
Pigment—மை.
Pitcher plant—ஜாடிச்செடி.
Pollen—மகரந்தப்பொடி.
Pollination—மகரந்தப் பொடியை யெடுத்துச்செல்லல்.
Psychology—மனோதத்துவ சாஸ்திரம்.
Round worm—கீரைப்புழு.
Rust—துரு.
Sac—கொண்டை.
Sperm—நாதம்.

சரித்திரம்

மனிதவர்க்கத்தின் முதற் புத்தகங்கள்

ஓ. பி. தேசிகன்

(143-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதங்கள்

கடவுளுக்கடுத்தபடியாகக் கோடிக்கணக்கான ஆரிய மக்களால் மிகப்புனிதத்தன்மை பொருந்தியவைகளாகக் கருதப்படும் வேதங்களும், அவைகளை யொட்டிப் பிற்காலத்தில் தோன்றிய வேத நூல்களும் கிருஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னதாக வாவது எழுதப் பட்டிருத்தல் வேண்டுமென மேனுட்டு ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள். ஆனல் ஹிந்துக்கள் தமது வேதங்களை அநாதியென்றும், அபௌருஷேய மென்றும்—அதாவது ஆதியந்த மற்றவையென்றும், ஒருவரால் இயற்றப்படவில்லையென்றும், எங்கும் நிறைந்த ஜோதிஸ்வரூபனை ஸாக்ஷாத் பரம்பொருளால் உணர்த்தப்பட்டுப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக எழுதாக் கிளவியாக வாய் மொழியாகவே அவை வழங்கி வந்திருப்பதாகவும் நம்புவதால் ஹிந்துக்களின் வேத காலத்தைக் குறித்து ஒரு வரையறை கூறுவது எளிதன்று.

அதன் பின், கி. மு. 6-ஆவது நூற்றுண்டில் புத்தர் பிரான் நமது திருநாட்டில் தோன்றிப் புதிதாக ஒரு மதத்தைத் தோற்றுவித்தார். அஃது உலகத்தின் மூன்றிலொரு பகுதியினர் தழுவக்கூடிய அளவிற்குத் தழைத்து வியாபகமடைந்தது. புத்தருடைய உபதேசங்களையும் அவரது வாழ்க்கை வரலாறுகளையும் தழுவித் தொகையில் பிரம்மாண்டமானதோர் நூலினம் இந்நாட்டில் உண்டாகி விசேஷமாகப் புறநாடுகளிலும் பரவத் தொடங்கியது. பௌத்த நூல்களைச் செம்மையாகப் பதப்படுத்திய தோல்களின்மீதும் ஓலைச் சுருள்களிலும் எழுதிவைத்தனர்.

ஹீப்ரூ பாஷையில் மிகவும் தொன்மை வாய்ந்தனவாகக் கூறப்படும் புத்தகங்களெல்லாம் கிருஸ்து பிறப்பதற்கு 600 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டனவாகும். ஜப்பான் தேசத்திலோ இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் எழுதிய நூல்கள் ஒன்றுமே யில்லையெனக் கூறிவிடலாம். ஆனல், சீன, கிரீஸ் முதலிய தேசங்களைப் போலவே ஜப்பான் தீவிலும் புத்தகங்கள் எழுத்து வடிவில் தோன்றுவதற்கு நெடுங்காலம் முன்னிருந்தே பொதுப்பாடகர்கள் வாய் மொழியாகவே அறிவைப் பரவச்செய்வதற்குக் காரணர்களாக இருந்து வந்தனர்.

பூர்வ காலத்தில் வட ஆப்பிரிக்காவில் குடியேறி, தமது உழைப்பாலும் சுறுசுறுப்பாலும், உலகப்பிரசித்த யடைந்த போனீஷி கள் (*Phoenicians*) என்னும் ஜாதியினர், கார்த்[illegible] என்ன இடத்தைத் தமது இராஜ்யத்தின் தலைநகராக [illegible] தேசங்களின் வாணிகத் துறையிலும் நாகரிகச் சிறப்பிலும் மேம்பட்டவர்களாய விளங்கினர்கள். அவர்களே கிரேக்க நாட்டினருக்கு முதன் முதலாக அக்ஷரங்களைக் கற்பித்தவர்களென்று பெருமை பாராட்டுதற்குரியவராம். அதன் பிறகு, புத்தகம் அமைக்கும் தொழிலைக் கிரேக்கர்கள், எகிப்தியர்களிடமிருந்து அறிந்து கொண்டனர். கிரேக்க பாஷையின் நெடுங்கணக்கு (*Alphabet*) கிருஸ்து ஜனிப்பதற்கு எட்டு நூற்றுண்டுகளுக்கு முன் ஏற்பட்டதாகும். கிரேக்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்திருக்கும் ஜேவான் (*Jevon*) என்னும் அறிஞர், அந்நாட்டினர் கி. மு. ஐந்தாவது நூற்றுண்டிலேயே ஓதுவதற்கும் எழுதுவதற்கும் நன்கறிந்திருந்ததாகக் கூறுகிறுர். அதுகாலை சியாஸ் (*Chios*) என்னும் தீவில் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவதற்காகப் பாடசாலைகளும் இருந்தனவாம். கல்வி யறிவில்லாதவர் கசடரெனக் கருதி ஓதுக்கப்பட்டனர். ஆனல், அக்காலத்தில் மக்களுக்குப் போதிக்கப்பட்ட கல்வி முறையானது, அவர்கள் தமது கணக்குக்களைக் குறித்து வைக்கவும், தமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கடிதங்கள் வரையவும் மட்டில் பயனளிக்கக் கூடியதாக இருந்ததே யன்றி, அதுபோன்ற பழைய நாட்களிலேயே கிரேக்கர்கள் புத்தகங்களை ஏராளமாகப் படிக்கும் வழக்கம் பெற்றிருந்தார்களில்லையென்று அவ் வாசிரியர் உரைக்கிறுர். புத்தக உருவத்திலும் எழுத்து வடிவிலும் நூல்கள் பெருகிப் பரவுவதற்கு நெடுங்கால முன்பிருந்தே கிரேக்கப் பாடகர்கள், நமது தமிழ் நாட்டுப் பாணர்களைப்போல நாடு முழுவதும் யாத்திரை செய்தவாறே அந் நாட்டுக் காவியங்களைப் பாடி ஜனங்களை மகிழ்வித்து வந்தனர்.

அவர்களை ராப்ஸோடிஸ்ட்ஸ் (*Rhapsodists*) எனப் பெயரிட்டு மக்கள் அழைத்து வந்தனர். தற்காலத்தில் நாடகக் கூட்டத்தார் ஊரூராய்ப் பிரயாணம் செய்வதைப் போல, கிரேக்கப் பாணர்களும் நாடுமுழுவதும் சுற்றியலைந்து அத்தேசத்து ஹோமர் கவியைப் போன்ற புலவர் பெருமக்கள் இயற்றிய அருங் காவியங்களை, வெட்ட வெளிகளிற் பாடி மக்களுக்கின்ப மூட்டி அதனால் தமக்குக் கிடைக்கும் வருமானத்தினின்றும் ஜீவனத்தை நடத்தி வந்தனர்.

அலெக்ஜாந்திரியா நூல் நிலயம்

ஆ கலையுணர்விலும் கவிதைச் சுவை நலத்திலும் மிக்க சிறப்புடன் திகழ்ந்த ஏதென்ஸ் நகரத்தின் கீர்த்தியும் பெருமையும் நாளடைவில் அலெகஜாந்திரியா நகரம் அடைந்தது. அத்தேசத்தில் டாலமி (*Ptolemy*) என்னும் வமிசத்தைச் சேர்ந்த பெரியார்கள் புத்தகங்களையும் காவிய நூல்களையும் சேகரித்து வைப்பதில் மிகவும் சிரத்தையுள்ளவர்களா யிருந்தனர். அதுகாலை கிரேக்க பாஷையில் வெளியான காவியங்கள், இலக்கியங்கள், உலக நூல்கள் என்பவைகளை ஒன்று தவறாமல் சேமித்து வைக்கவேண்டுமென்ற விஷயமாக அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையும், கொண்ட ஆவலும் கட்டுக்கடங்காதனவாக இருந்தன. அலெக்ஜாந்திரியாவில் பண்டை நாட்களிலேயே பிரம்மாண்டமானதோர் புத்தகாலயம் நிறுவப் பட்டிருந்தது. பிரவஸித்தி பெற்ற அப்புத்தகாலயத்தில் ஏழுலக்ஷத்திற் கதிகமான கிரேக்க நூல்கள் அடங்கியிருந்தனவாம். பிரம்மாண்டமான இப்புத்தகசாலையின் ஒரு பகுதியை கி. மு. 48-ஆம் ஆண்டில் ஜூலியஸ் ஸீஸர் என்ற மன்னன் தீக்கிரையாக்கியதாகக் கூறப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைய தினம் ப்ரிட்டிஷ் மியூஸியத்தில் 40 லக்ஷம் புத்தகங்களே இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அலெக்ஜாந்திரிய நூல் நிலயத்தின் அலமாரிகளில் ஹோமர் கவியின் 'இலியட்' 'ஒடிஸ்ஸி' என்ற உலகப் பிரசித்தி பெற்ற காவியங்களும், ப்ளேடோ என்பவரால் எழுதப்பட்ட 'குடியரசு' (*Republic*) என்னும் உயர்ந்த அரசியல் நூலும், க்ஷணபன், ஹேரோடோடஸ், (*Herodotus*) முதலிய அறிவாளிகளின் கிரந்தங்களும், யூரிபிடீஸ் (*Euripides*), ஸோபோக்ளீஸ் (*Sophocles*) என்பவர்களைப் போன்ற கீர்த்திவாய்ந்த நாடகாசிரியர்களின் நாடக நூல்களும், யூக்ளிட் (*Euclid*)

என்பாரது க்ஷேத்ர கணிதமும், ஏனைய கணித நூல்களும், பூத பௌதிக சாஸ்திரங்களும் மிகவும்அருமையாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தனவாம். அவைகளில் பெரியதொரு பகுதி திரும்பவும் கிடைப்பதற்கு மார்க்கமின்றி அழிந்துபட்டது.

பூர்விக மக்களிடையே, சிறப்பாக உரோம நாட்டினர் ரஸ்தாக்களையும் ராஜ மார்க்கங்களையும் அமைப்பதிலும், கரடுமுரடான பாதைகளைச் சீர்திருத்திப் போக்குவரத்துக்குரிய சாதனங்களைப் பெருக்குவதிலும் மிகவும் திறமைபெற்று விளங்கிய போதிலும், சாஸ்திரீய முறைகளையும் யுக்திகளையும் தழுவியே தமது போக்குவரத்து வசதிகளை யமைப்பதில் அவர்கள் கண்ணுங் கருத்துமுடையவராக இருந்தனராயினும், இத்துறையில் அவர்கள் தங்[illegible] நுட்பத்தையும் திறமையையும் விளக்கினர், [illegible] ஜாந்திரியப் புத்தக[illegible] யென்[illegible] [illegible] பழைய நூல்கள் [illegible] மாசங்களின் [illegible] வருந்துதற் குரியதாகும். மக்களது சிறப்புத் திற[illegible]ய வெளியிடும் அரிய கிரந்தங்கள் அக்காலத்தில் எழுதப்படவில்லையென நாம் கூறிவிட முடியாது. அவை யாவும் அடியோடு அழிந்து, மறைவுற்றிருக்க வேண்டுமென்பதே ஒருதலை.

பாபிரஸ் புத்தகங்கள்

அலெக்ஜாந்திரியா நூல் நிலயத்திலிருந்த புத்தகங்கள் தோற்றத்தில் பிரிட்டிஷ் மியூஸியத்திலுள்ள புத்தகங்களைப் போலவாவது, ஸாதாரணமாக இப்பொழுது நாம் உபயோகித்து வருகின்ற புத்தகங்களைப் போன்றவைகளாகவாவது இருக்கவில்லை. அவை உருவத்திலும் தோற்றத்திலும் முற்றிலும் மாறுபட்டனவாகும். அந்நூல்களில் பெரும்பான்மையானவை எகிப்திய நாட்டில் வளரும் நாணல் போன்றதோர் புல்லினத்தைச் சேர்ந்த பாபிரஸ் (*Papyrus*) என்னும் பொருளின் சோற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட (காகிதங்களைப் போன்ற) வஸ்துக்களில் எழுதப்பட்டிருந்தன. வேறு சில, 'பார்ச்மெண்ட்' என்னும் செம்மையாகப் பதனிட்ட மெல்லிய தோல்களின் மீது எழுதப்பட்டவை. அலெக்ஜாந்திரியா புத்தகசாலை நிக்கிரையாவதற்கு நூறு வருடங்களுக்கு முன் ஜனங்கள் அவைகளின் உபயோகத்தைக் குறித்து ஒருவாறு தெரிந்து கொண்டிருந்தனர். 'பாபிரஸ்' புத்தகங்கள் பார்வைக்குத் தற்காலத்திய தேசப் படங்களைப் போன்றவை. அவற்றில் ஒரு பக்கத்தில் மாத்திரமே விஷயங்கள் எழுதப்படும்; அதன்பிறகு இவ்வாறு எழுதிய தாள்களை ஒன்றாகச் சேர்த்து, மரச் சட்டமொன்றால் இணைத்து, அதன் மீது தாள்களைச் சுற்றிவிடுவது வழக்கம். இத்தகைய புத்தகச்

சுருள்களிற் சில வெகு நீளமுள்ளவை. எனினும் சாதாரணமாக அவற்றை உருவத்தில் எவ்வளவு சிறியதாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குக் குறுக்கியே வந்தனர்.

சாதாரணமாகப் பாபிரஸ் புத்தகம் ஓரடி அகலமுள்ளதாக இருக்கும். அந்தச் சுருள் எவ்வளவு நீளங் கொண்டதோ அந்த அளவு வரையில் மிகக் குறுகிய பத்திகளாக அது முழுவதிலும் வரைந்திருப்பார்கள். இந்தப்பத்தி (*Column*) ஒவ்வொன்றும் 2 முதல் 3½ அங்குலம் வரையில் அகலமுள்ளதாக இருக்கும். ஒவ்வொரு வரிக்கும் மத்தியில் சிகப்பு நிறத்தில் கோடுகள் வரையப்பட்டிருக்கும்.

ஹோமர் கவியின் 'இலியட்' என்னும் காவியத்தை எழுத 24 சுருணைகள் பிடித்திருக்கலாமென முற்கூறிய கணக்குகளை யாராய்ந்தோர் கூறுவர். அதேநூலின் தனிப்பிரதிகளிற் பல அலெக்ஜாந்திரிய நூல் நிலயத்திலிருந்தன. புத்தகங்களைப் பாபிரஸ் தாளின் மீது எழுதியபின் எழுத்தாளியானவன் அவற்றைச் சித்திர வேலைக்காரனிடம் ஒப்புவிப்பான். அவன் அவற்றை அழகு பெற அலங்கரிக்கத் தொடங்குவான். தற்காலத்தில் புத்தகங்களுக்குச் சித்திரங்களை வரைவோரின் ஸ்தானத்திலேயே அவர்களையும் வைத்துக் கூறவேண்டும். பின்னர் அவை 'பயிண்டு' செய்வோரிடம் அனுப்பப்படும். அவர்கள் தாள்களை ஒழுங்காக வெட்டியும் தாள்களையும் பாபிரஸ் அல்லது பார்ச்சுமெண்டையும் மிருதுப்படுத்தி வழவழப்பாகச் செய்து முடிப்பார்கள். அதன் பிறகு தனித்தனியாக விருக்கும் ஏடுகளை உருண்டதோர் மரச்சட்டத்தில் இணைத்து அந்த உருளைகளின் இருபுறங்களிலுமுள்ள குமிழ்களை உலோக வகையால் அழகு படுத்துவது முண்டு. ஏட்டுப் பிரதிகளை லேகினியால் விளக்குக்கரியும் பிசினும் கலந்ததொருவகை மையினுல் எழுதுவார்கள். புத்தகங்களின் பின் புறத்தை மஞ்சள் சாயமேற்றி, நீலம் அல்லது மஞ்சள் வர்ணமுள்ள கவசங்களில் சுருணைகளை யடக்கம் செய்வார்கள்.

எகிப்திய தேசத்து எழுத்தாளிகளே உலகத்தில் முதன்முதலாகப் புத்தக வியாபாரம் செய்யும் பெருமை பெறுவதற்குரியவராவார். அவர்கள் ஏட்டுப் பிரதிகளை விலை கொடுத்து வாங்கி மிகவும் பிரயாசைப்பட்டு அவற்றைப் போன்ற பிரதிகளைப் பாபிரஸ் தாள்களில் தயாரித்து அவற்றை விலைக்கு விற்பது வழக்கம். கிருஸ்து பிறப்பதற்கு 50 வருடங்களுக்கு முன்பு கூட இது போன்ற புத்தக வியாபாரத்திலீடுபட்ட எழுத்தாளிகள் பலர் ஏதென்ஸ் நகரத்தில்

குடியிருந்து வந்தனர். அவர்கள் கடைத்தெருக்களிலும், சந்தைகளிலும் தமது காரியாலயத்தையமைத்துக் கொண்டிருந்தனர். அலெக்ஜாந்தர் சக்ரவர்த்தியின் நாட்களிலேயே புத்தக வியாபாரமென்பது ஒரு நிலையான வருமானத்தையளிக்கும் தொழில்களில் ஒன்ருக விளங்கியது.

பண்டை நாள் புத்தக வியாபாரி முற்றிலும் யோக்கியப் பொறுப்புள்ளவனுக இருக்கவில்லை. அவன் புதியதாகத் தன்கைப் படத் தயாரித்த புத்தகத்தை மிகவும் பழமைவாய்ந்ததென்று பிறர் நம்பும்படி செய்வதற்குத் தன்னுடைய ஜாலங்களை உபயோகித்து வந்தான். கையேட்டுப் பிரதி யொன்றைத் தானியத்தில் சிறிது காலம் புதைத்து வைத்தபின், அதனுடைய நிறம் மாறிப் பாபிரஸைச் செல்லரிக்குந் தறுவாயில், அவன் அதை மிகப் பழைய நூலெனப் புகழ்ந்து விற்று மக்களை ஏமாற்றி வந்தான்.

ராணா ராஜஸிம்ஹன்

கே. ஜி. சங்கர்

*ர*ஜபுத்ரஸ்தானத்தில் மேவாட் ராஜ்யத்தில் ராணா ராஜஸிம்ஹன் (கி. பி. 1653-1680) என்று ஓர் அரசன் இருந்தான். அவன் ஜகத்ஸிம்ஹன் (I) மகன். அவன் தாய் மார்வாட் ராஜ வம்சத்தில் பிறந்தவள். அவன் பட்ட மெய்தி நாலைந்து ஆண்டுகள் சென்றதும் டில்லியில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அக்காலத்திய பாதுஷா ஷாஜஹானுக்கு வயது முதிர்ந்துவிட்டதால், அவனுடைய நான்கு மக்கள் தாரா, சூஜா, மூராத், அலம்கிர் என்ற ஔரங்ஜேப் என்பவர்கள் தமக்குள் பட்டத்திற்காகச் சண்டையிடலானார்கள். ஹிந்து அரசரின் தலைவனான ராஜ ஸிம்ஹனின் உதவியை நால்வரும் நாடினார்கள். ரஜபுத்ரரனைவரும் மூத்தவனான தாராவின் சார்பாகவே இருந்தார்கள். ஆனால் கி.பி. 1658-இல் அலம்கிர் தாராவைச் சமூகரென்னு மிடத்தில் போரில் வென்று ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு தன் தந்தையை மரணம்வரை சிறையில் வைத்தும் தன் தமையன்மார்களைக் கொன்றும் தன் நிலைமையை ஸ்திரப் படுத்திக்கொண்டான்.

பிறகு கி. பி. 1660-இல் மேவாட் ராஜ்யத்தில் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஆஷாடம், சிராவணம், பாத்ரபதம் என்ற கார் காலம் முழுவதும் சென்று விட்டது. ஆனால் ஒரு துளி மழைகூடக் கிடையாது. பசி எங்கும் அதிகரித்தது. பசி பொறுக்க முடியாததால், க்ணவன் மனைவியையும், தந்தை தாய்கள் தங்கள் மக்களையும் மறந்தனர். நதிகளும் ஏரிகளும் வற்றிவிட்டன. வர்ணாசிரம தர்மங்கள் எல்லாம் மறைந்து விட்டன. மனிதர் மரம் மட்டைகளையும், போகப் போக மனிதரையும் தின்பாராயினர். எங்கும் ஆண் பெண் யாவரும் ஆயிரக் கணக்காகப் பசியால் இறக்கலானார்கள். தன் ஜனங்கள் வருந்துவதைக் கண்டு ராஜ ஸிம்ஹன் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்க வழி தேடினான். கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு ஆரவல்லிமலை யடிவாரத்தில் ஓர் ஏரி கட்டத்தொடங்கி ஏழாண்டுவரை தன் குடிகளுக்கு வேலை கொடுத்து உணவளித்து வந்தான். ராஜ ஸமுத்ராம் என்ற அந்த ஏரி, தலைநகரான உதயபுரத்திலிருந்து 25 மைல் வடக்கில் 12 மைல் சுற்றளவும் சலவைக் கற்களாலாய படிக்கட்டுகளும் உடையது. அதற்கு நீரளிப்பது கோமதி யென்ற ஜீவநதி. அதற்குத் தென்பக்கத்தில் கோட்டை

மதில்களுடன் கூடிய ராஜ நகர் என்ற ஒரு பட்டினத்தையும் கட்டுவித்தான். அவைகள் இன்றும் அவன் பெயரை நிலை நிறுத்தி விளங்குகின்றன.

இப்படி நாடெங்கும் மறுபடியும் செழித்து வரும்பொழுது, அலம்கிர் ரூப்நகர் ராஜ குமாரியை மணம் புரிய விரும்பி அவளை அழைத்துவர 2000 குதிரைப் படையை அனுப்பினன். அக்பர் காலம் முதல் டில்லிச் சக்ரவர்த்திகள் ராஜ குமாரிகளை மணப்பது வழக்கமாய் விட்டபடியால், அலம்கிர் தன் விருப்பத்திற்குத் தடையொன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆனல், ரூப்நகர் ராஜகுமாரி அவனை மணக்க விருப்பமில்லாதவளாய்த் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போக வேண்டுமென்றும், தவறினல் தற்கொலை புரிந்து கொள்வேன் என்றும் ஒரு லிகிதம் எழுதித் தன் குல குரு மூலமாக ராஜஸிம்ஹனுக்கு அனுப்பினள். ராஜ ஸிம்ஹனும் உடனே விரைவாக ரூப் நகர் சென்று சக்ரவர்த்தியின் குதிரைப் படையை முறியடித்து ராஜ குமாரியைக் கைக்கொண்டு அவளைத் தானே மணந்தான்.

பின்னர், அலம்கிர் மார்வாட் அரசன் யசோவந்தஸிம்ஹனை விஷம் கொடுத்துக் கொன்று அவன் இளமக்களைக் கைப்பற்ற முயன்ருன். ஆனல் துர்க்காதாஸ் என்ற மார்வாட் வீரன் இரு நூற்றைம்பது ரஜபுத்ரருடன் 5000 சக்ரவர்த்திப் படையை எதிர்த்துத் தன் இளவரசனைத் தப்புவித்தான். இளவரசனை அஜித்ஸிம்ஹனுடைய தாய் ஒரு மேவாட் ராஜ குமாரியாதலால், ராணவைச் சரணடைந்தாள். ராணவும் அவர்களை வரவேற்று அஜித்ஸிம்ஹனைத் தன் ராஜ்யத்தில் கெல்வாவில் துர்க்காதாஸின் கண்பார்வையில் வைத்துக் காப்பாற்றி வந்தான்.

இப்படியிருக்க, அலம்கிர் தான் பட்டத்திற்கு வந்தது முதல் தன் ஹிந்துக் குடிகளை மிகவும் வருத்திவந்தான்; கொடுந் தண்டனைகளாலும், மரணபயத்தினலும் அவர்களை இஸ்லாம் வகுப்பிற் சேர்க்க முயன்ருன். அதனல் பயிரிடும் தொழிலும், கைத்தொழில்களும் குறைந்து நாட்டில் வருமானம் மிகவும் குன்றிவிட்டதால், மாகாணத் தலைவர்களின் வேண்டுகோளால் அலம்கிர் தன் மற்ற முயற்சிகளை நிறுத்திவிட்டு ஹிந்துக்களிடம் ஜிஜியா என்ற ஒரு தலைவரி மாத்திரம் வாங்கி வந்தான். இதைப் பொறுக்கமுடியாமல் மஹாராஷ்டிர அரசரான சிவாஜி அலம்கிருக்கு முக்கியமான கடிதம் ஒன்றை அனுப்பினர். அதில் அவர் அலம்கிரின் முன்னவர்களான அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான் என்னும் மூவரும் மத விஷயங்களில் சமநிலையினல் தங்கள் ராஜ்யத்தைப் பெருக்கிச்

செழிக்கச் செய்ததையும், அலம்கிர் தன் மத அபிமானத்தால் பிற மதஸ்தர்களை வருத்தி நாட்டை அழித்து வருவதையும் கூறிவிட்டு, கடவுள் எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாய் நின்று எல்லாராலும் போற்றப்படுவதையும் போதித்து, முடிவாக அலம்கிருக்கு ஹிந்துக்களிடம் ஜிஜியாவை வாங்கியே தீரவேண்டுமானுல் முதலில் ஹிந்துக்களுக்கெல்லாம் தலைவனான ராஜஸிம்ஹனிடமிருந்தும், அப்புறம் தம்மிடமிருந்தும் ஜிஜியாவை வாங்கின பிறகே மற்ற ஹிந்துக்களிடம் கேட்பது ஆண்மையென்று எடுத்துக் காட்டியிருந்தார்.

முன்னரே ரூப்நகர் ராஜ குமாரியையும் அஜித்ஸிம்ஹனையும் கைப்பற்றத் தவறினதை மறவாத அலம்கிருக்கு இந்தக் கடிதம் புண்ணிற் கோலிட்டாற்போலாயிற்று. ஆகவே, அவன் எப்படியும் ராஜஸிம்ஹனை அடக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான். அவன் ராஜ ஸிம்ஹனின் போர்த்திறமையை நன்கு அறிந்தவன். ஆகையால் தான் நினைத்த காரியத்தை முடிப்பதற்குப் பெருமுயற்சி செய்தான். தன் மக்களுள் அக்பரை வங்காளத்திலிருந்தும் அஜமென்பவனைக் காபூலிலிருந்தும் முவஜத்தைத் தக்ஷிணத்திலிருந்தும் வருவித்தான். கி. பி. 1678-இல் தன் பெரும் சேனையுடன் அலம்கிர் மேவாடடைந்து காப்பாற்ற முடியாதென்று முன்னரே கைவிடப்பட்ட தாழ்நிலங்களைக் கைப்பற்றிச் சித்தூர், மண்டல்கர், மந்தஸார், ஜீரன் முதலான பல கோட்டைகளை முற்றுகையிட்டுப் பிடித்துக் கொண்டான். ரஜபுத்ரர்களனைவரும் ஒன்று சேர்ந்து ராணுவின் செங்கொடியைச் சார்ந்தனர். ராஜஸிம்ஹன் தன் சேனையை மூன்ருகப் பிரித்தான். ஆரவல்லிமலை யுச்சியில் தன் மூத்த மகன் ஜயஸிம்ஹனை நிறுத்தினான். குஜராத் போகும் வழியைப் பாதுகாக்கத் தன் மகன் பீமனை மேற்கே அனுப்பினன். முக்கியமான படையை வைத்துக்கொண்டு தானே நேரில் நைக் கணவாயில் காத்திருந்தான். அவ்விடத்தில் பகைவர் அவனைத் தாக்கமுடியாது. ஆனல் அவர்களின் இடது பக்கத்தில் தாக்கி வெருட்டி அவர்கள் மலைக்குள் சென்றதும் அவர்களைத் திரும்பவிடாமல் வழி மறிக்கத் தயாராயிருந்தான். தேபரிக்கு வந்ததும் அலம்கிர் நின்றுவிட்டுத் தான் நேரில் செல்லாமல் அக்பரை 50,000 படையுடன் உதயபுரத்திற்குப் போக விடுத்தான். இதை எதிர்பார்த்தே ராஜஸிம்ஹனும் ஏற்பாடுகள் செய்திருந்தான். ஸக்தவாத் தலைவனான கரிப்தாஸ் என்பவன்தான் இந்தச் சூழ்ச்சிக்குக் காரணம். அவன் கூறியதாவது, "அவர்களைத் தாராளமாய் உள்ளே செல்லவிடுங்கள். சென்றதும் அவர்களை

அடைத்துவிட்டுப் பஞ்சத்திற்காளாக்குங்கள்'' என்பதே. ஆகவே அக்பர் செல்வதை ஒருவரும் தடுக்கவில்லை. உதயபுரமடைந்ததும் அங்கே தங்கினன். ஜனங்கள் ஒருவரும் காணப்படாததற்குக் காரணம் பயமே என்று நினைத்து நிம்மதியாய் இருந்தான். அவன் சேனையிற் சிலர் கடவுளை வணங்கிக் கொண்டும், சிலர் விருந்துண்டு கொண்டும், சிலர் சதுரங்கம் ஆடிக்கொண்டும் இருந்தார்கள். அவர்கள் இவ்வாறிருக்கும்பொழுதே ஜயஸிம்ஹன் திடீரெனத் தோன்றி அவர்களை ஹதம் செய்தான். இதற்குள் ராணாவின்படைகளிற் சில, அக்பர் மீண்டும் அலம்கிரைச் சந்திக்கவிடாமல் தடுத்தன. அதனல் அக்பர் கோகுண்டா வழியாக மார்வாடடைய முயன்ருன். வழியில் ஒரு கணவாயில் நுழைந்ததும் முன்னல் பில்லர் முதலான மலைவாஸிகளும் பின்னல் ஜயஸிம்ஹனும் அவனைச் செல்லவிடாமல் தடுக்க, அவன் பணிவதைவிடத் தப்ப வேறு வழி காணுமல் ஸமாதானத்திற்கு வந்தான். பெருந்தன்மையனுன ராஜஸிம்ஹனும் அதற்கு இசைந்து அவனை ஜில்வாராக் கணவாய் வழியாகச் சித்தூர் அடையச்செய்தான்.

இவ்வாறு அடைபட்டு ராஜஸிம்ஹன் தயவால் பிறகு தப்பினது அக்பரென்று கூருமல், ஓர்ம் என்ற ஆங்கில ஆசிரியர் அலம்கிரே இவ்வாறு செய்ததாகவும் இரண்டு நாள் அடைபட்டுப் பஞ்சத்தால் வருந்தின அவன் சேனைக்கு ராஜஸிம்ஹன் உணவளித்ததாகவும் அலம்கிரின் மனைவி உதயபுரி என்பவள் தன் கையில் அகப்பட, அவளை மிக்க கௌரவத்துடன் கணவனுடன் ராஜஸிம்ஹன் சேர்ப்பித்ததாகவும் கூறுவர். இதனலோ வேறு காரணத்தாலோ பின்னல் அலம்கிர் ராஜஸிம்ஹனிடம் நேரில் போர்புரிவதை விடுத்துத் தன் மக்கள் மூலமாக அஜமேரிலிருந்தே போர் நடத்தலானன்.

சக்ரவர்த்தியின் படைகளில் வேருெரு பிரிவு திஹிர்கானின் தலைமையின் கீழ் மார்வாடிலிருந்து தேசுரிக் கணவாய் வழியாக உட்சென்ற பிறகு ரூப்நகர் தலைவனுன விக்கிரம ஸோலங்கியாலும், கானேராவ் தலைவனுன கோபினுத் ரட்டோராலும் முற்றிலும் நாசமாக்கப் பட்டது. அதே காலத்தில் தேபரியில் அஜமுடனிருந்த அலம்கிரை, கி. பி. 1680-இல் ராஜஸிம்ஹனும் துர்காதாஸனும் முறியடித்து விட்டார்கள். இவ்வாறு உயிருடன் தப்பிவந்த மொகலாயர் சித்தூரில் கூடினர்கள். ஆனல் சித்தூருக்கும் அஜமேருக்கும் இடையில் ஸவல்தாஸ் வருவதைக் கண்டு அலம்கிர் அஜமேருக்கு ஓடிப் போய் 12,000 படைகளை ஸவல்தாஸுடன் போர் புரிய அனுப்பினன். அவர்களும் புர்மண்டலில் முறியடிக்கப் பட்டார்கள்.

இங்கு இவ்வாறிருக்க, பீம்ஸிங் குஜராத்தின்மேல் படையெடுத்துப்போய், இடாரைப் பிடித்து வீரநகர் வழியாகப் பாடன் முன் திடீரெனத் தோன்றி அதையும் சித்தபூர், மோதஸா முதலான ஊர்களையும் கொள்ளையிட்டுச் சூரத்துக்குச் சென்ருன். ஆனல் இதற்குள் ராஜஸிம்ஹன் பிறநாடுகளை வருத்த மனம் பொருந்தாமல் அவனைத் திரும்பி வர உத்தரவிட்டான். தயால்ஸாஹா என்ற மந்திரி வேருெரு படையுடன் சென்று மாளுவத்தைச் சூறையாடி ஸாரங்கபூர், தேவஸ், ஸிரோன்ஜ், மாண்டு, உஜ்ஜயினீ, சந்தேரி முதலான நகரங்களைக் கொள்ளையிட்டு ஜயஸிம்ஹனுடன் சேர்ந்து கொண்டு சித்தூரில் அஜமை முறியடித்து ரணஸ்தம்பபுரம் வரை வெருட்டினன். பிறகு பீம்ஸிம்ஹனும் துர்க்காதாஸூம் சேர்ந்து மேவாட் மார்வாட் முழுப்படையுடன் அக்பரை முற்றிலும் முறியடித்தார்கள். இந்த வெற்றிக்கு ஆதாரமான ஒரு சூழ்ச்சியென்னவென்ருல் சக்ரவர்த்தியின் 500 ஒட்டகைகளைப் பிடித்து அவைகளின் மேல் தீப்பந்தங்களைக் கட்டி அவைகளை மொகலாயர் இருப்பிடத்திற்கு ஏவிவிட, பகைவர் மிகுந்த குழப்பமடைந்திருக்கும் ஸமயத்தில் அவர்களை ரஜபுத்ரர்கள் எதிர்த்ததே.

பின்னர் ராஜஸிம்ஹன் அலம்கிரைக் கைதியாக்கி அக்பரைப் பட்டத்தில் நிறுவ நினைத்தான். அக்பரும் இதற்கிணங்கி அஜமேரை நோக்கிச் செல்லும் சமயத்தில் அலம்கிர் இச்சூழ்ச்சியைத் தெரிந்து கொண்டான். அவன் உடனே, ராஜஸிம்ஹன் தன்னைத் தாக்கும்படி செய்து அப்பொழுது அவனைத் திடீரென எதிர்க்க வேண்டுமென்றே அக்பர் இந்த ஆலோசனைக்கிசைந்ததாகத் தோன்றும்படி ஒரு கபடக் கடிதத்தைத் துர்க்காதாஸின் கையில் கிடைக்கும்படி செய்தான். இதனல் ரஜபுத்திரருக்கு ஸந்தேகம் தோன்றி அக்பர் தங்களை மோசம் செய்தான் என்று நினைத்து அவனை மஹாராஷ்டிரத்திற்குத் துர்க்காதாஸைக் கொண்டு கடத்தி விட்டார்கள். மஹாராஷ்டிர அரசன் சம்புஜியும் அவனைக் கப்பலேற்றிப் பாரசீகத்திற்கு அனுப்பிவிட்டான். அக்பரைத் துர்க்காதாஸ் கடத்தும்பொழுது அவனைத் தங்களிடம் காட்டிக்கொடுக்க அஜம் ஒரு பெருந்தொகையைத் தருவதாகக் கூறியும் சரணமடைந்த எதிரியைக் கைவிடுவது தர்மமில்லையென்று துர்க்காதாஸ் மறுத்து விட்டான். இவ்வாறு தான் நினைத்த எண்ணம் கை கூடாமல் அலம்கிர் போரில் பல முறையும் தோல்வியுற்று ராஜஸிம்ஹனுடன் ஸமாதானத்தை நாடலானன். திலிர்கானிடம் அவனுக்குத் துணை புரிந்து வந்த பிகானேர் அரசன் சியாமஸிம்ஹன்தான் அந்த உடன்படிக்கையை முடித்து வைத்தது. அதனல் சித்தூரிலும் மார்வாடிலும் தான் பிடித்ததை யெல்லாம் திரும்பக் கொடுத்து விட்டு அலம்கிர் விலகி விட்டான். இந்த ஸமயத்தில் தன் கடமைகளை முடித்துவிட்ட ராஜஸிம்ஹன் இறந்தான்.

அரசியல் முறை

தி. சிவராம சேதுப்பிள்ளை

(191-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் குறிப்பிட்ட நான்கு கொள்கைகளையும் ஊன்றிநோக்கினால் மாகாணங்களில்தான் சுயஆட்சிக் கல்விச்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்றதன் அவசியம் விளங்கும். ஆகவே மாகாணங்களின் ஆட்சி அமைப்பை அறியவேண்டியது அவசியம்.

1918-ம் வருஷம் பார்லிமெண்டு நிறைவேற்றிவைத்த சட்டம் இதற்கு அடி ஆதாரம். ஆனால் அந்தச் சட்டத்தை மாத்திரம் ஒருவர் படித்து அதன் அங்கங்களை நோக்கின் ஆட்சியின் முழு வரலாறும் அவருக்கு விளங்குவதரிது. சட்டத்தில் காணக்கிடப்பன, ஆங்கில அமைச்சன் அதிகாரமும், இந்தியப் பொருள் யாவையும் அவன் ஆட்சிக்குட்பட்டனவே என்பதும் ஆம். எனின், சுய ஆட்சி என்பது என்ன ? அதைப்பற்றிக் கற்கவேண்டியது அவசியமேனும் கற்கவேண்டிய முறையைக் காட்டிக் கொடுப்பது கடமையல்லவா ? என்கிற கேள்விகளுக்கு 1919-ம் வருஷச் சட்டம் அளித்தபதில் பின் வருமாறு.

சட்டப்படி, இந்நாட்டினர் பூர்ண சுதந்திரத்திற்கு உரியவரென்று ஒப்புக்கொள்ளமுடியாது ; அச்சட்டத்தில் பார்லிமெண்டுக்குக் கீழ்ப்பட்ட சட்டசபையும் பணியாளர்களும் செய்யவேண்டியனவற்றைத் தோராயமாய்க் குறிப்பிட்டோம் ; இவை எவ்வாறு நாளடைவில் நடத்திவைக்கப் படவேண்டுமென்பது சட்டமுறையில் ஏற்படுத்தின விதிகளின் (*Rules*) மூலமாய் அமைக்கப்பட வேண்டும் என்றனர். இவ்விதிகளின் வழியே, துரைத்தனம் நிகழும் முறையும், பொருள் ஆதார முறையும், சட்டம் விதிக்கும் முறையும் கூடியவரைக்கும் உதவியில்லாமல் நிகழ இடம் கொடுக்கப்பட்டது. மாகாண அரசாங்கத்தார் சுய ஆட்சி நடத்திவைக்கக் கூடிய வகுப்புக்கள் ஏனையவை. மாகாண சட்டசபை எவ்விஷயங்களைக் குறித்துச் சட்டங்கள் நிறைவேற்றலாம் ; எவ்விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டு பார்லிமெண்டு என்பவற்றின் அனுமதி இல்லாமல் பொருளைச் செலவுபண்ணலாம் என்பவற்றை இச்சட்டவிதிகள் குறிப்பிடலாம். ஆகவே இவ்விதிகள் மாகாண ஆட்சிக்குரிய அரசதந்திரத்தை அறியவேண்டியதற்கு இசைந்த சுதந்திரம் அளித்தன என்பது தெளிவு.

ஆனல், இவ்விதிகளின் முழு நோக்கமும் இன்னதென்றுணர வேண்டும். மாகாணசர்க்கார் ஆளக்கூடிய விஷயங்கள் குறிப்பிடப் பட்டாலும், மாகாணகவர்ன்மெண்டு என்று ஓர் ஆட்சி, பார்லி மெண்டுச் சட்டத்தின் மூலம் நிறுவப்படவில்லை. நியாய வழக்கிட வேண்டுமானல் லண்டனில் ஆளும் அமைச்சரே வாதிப் பிரதி வாதியாக இருக்கவேண்டும். சந்தேகமுள்ள விஷயங்களில் முடிவான தீர்ப்பு இந்தியா கவர்ன்மெண்டினிடமே உள்ளது. இருதலை யாட்சி அல்லது பிளவிட்ட ஆட்சி (*Dyarchy*) என்றழைக்கப்படும் அமைப்பு, சட்டத்திலேயே காணப்படவில்லை.

1917-ம் வருஷத்தில் அரசர் பெருமான் வெளியிட்ட பத்திரத் தின் முக்கிய கொள்கைகளால் சட்ட மூலமாய் இல்லாமல், பின்னர் விதிகள் மூலமாய்க் கவர்னர் ஆட்சி வகுப்புக்கள் ஏற்படுத்தலாம் என்ற விதி விதிக்கப்பட்டது. தற்கால அரசியல் முறையை நன்கு அறிய விரும்புவோர் இக்கட்டுப்பாடுகளைக் கவனிக்கவேண்டும்.

மாகாண அரசியல் முறை

இனி, மாகாண அரசியல் முறையை விவரிக்கலாம். முதலில் சட்டசபையின் இயக்கத்தை எடுத்துக் கொள்வோம். சுருங்கச் சொன்னல், இந்தியா சட்டசபையும், மாகாண சட்டசபையும் எந்த எந்த விஷயங்களைப் பற்றித் தீர்மானிக்கலாமென்பது வரையறுக்கப் படவில்லை. பொது நன்மை முதலிய விஷயங்களிலும் மாகாணம் சம்பந்தப்பட்ட வரையிலும் முறையே இரண்டு சட்டசபைகளிலும் வேண்டியனவற்றை நிறுவலாம். சட்டவிதிகள் சிற்சிலவற்றை ஒதுக் கின. சம்பந்தம் அல்லாதனவற்றைத் தள்ளுதல் அரசர் பிரதிநிதியின் கடமையாய் விதிக்கப்பட்டது. இவற்றின் முழு வரலாற்றைப் பின்னர் நோக்குவோம்.

இரண்டாவது, நாளடைவில் அரசாங்கம் நடத்தும் முறையில், மாகாண சம்பந்தமானவைகள் எல்லாம் மாகாண அரசாங்கத்திற்கும், ஏனையவை இந்தியா கவர்ன்மெண்டிற்கும் ஒப்பிக்கப்பட்டன. இராணுவம், வெளிநாட்டு விஷயம், இறக்குமதி வரிகள், இருப்புப் பாதை, தபால் தந்தி முதலியன இந்தியா கவர்ன்மெண்டின் பொறுப்பு; சுகாதாரம், ஜில்லா தாலுகாக் கழகங்கள், கல்வி, நியாயம் முதலியன மாகாணத்தைச் சேர்ந்தவை. எந்த இலாகா யாருடையது என்ற சந்தேகம் நேரிடும்பொழுது அரசர் பிரதிநிதியின் தீர்ப்பே முடிவானது.

பிறகு, மாகாண ஆட்சிக்குள்ளாகவே, சட்டசபைக்கு உத்தர வாதமுள்ள அமைச்சர்கள் கைக்கொண்டு நடத்தவேண்டியன இவை,

பார்லிமெண்டிற்குப் பதில் சொல்லும் அங்கத்தினர்கள் ஆள வேண்டியவை இவை என்பன குறிக்கப்பட்டன. அரசின் அவயங்களில் இத்தகைய் பிரிவு அமைத்ததன் கருத்து நம்மவர் பழக்க வழக்கங்களுக்கு ஒத்த வகுப்புக்களை முதல்முதல் அவரிடம் கொடுக்கவேண்டியது. அவர்கள் அதைச் சரிவர நடத்திவந்தாற் பின்னர்ப் படிப்படியாய் மாகாண ஆட்சி முழுவதும் கொடுத்து விடலாம் என்பதே. இந்த எண்ணத்துடன் மாண்டேகுவின் அபிப்பிராயத்தோடு ஒப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுகாதாரம், கல்வி, பாதைகள் முதலிய பொதுஜனக் கட்டிடவேலைகள், கலால் முதலியன மந்திரிகளிடமும், நியாயம், நில இலாகா, பொருள் ஆதாரம், போலீஸ் முதலியன பார்லிமெண்டிற்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டுள்ள கவர்னர் நிர்வாகசபை அங்கத்தினர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வளவு அமைப்புக்களும் முறைப்படி தம் பொறுப்பாய் நடைபெற்று வருவதற்கு, பொருள் சேகரிக்கவும், செலவிடவும் உரிமைவேண்டும். ஆங்கிலர் அரசு கைக்கொண்ட நாள்தொட்டு நம் நாட்டின் செல்வ வரவு முழுவதும் அரசரின் அமைச்சருக்குட்பட்டது. அவர் உத்தரவின்றி ஒரு பைசாக்கூட இந்தியாவில் செலவுபண்ண முடியாது. அவர் அனுமதிக்கிணங்க அரசப் பிரதிநிதி நடந்துகொள்ளவேண்டும். அப்பிரதிநிதியின் ஏவலாளர்களே மாகாணத்தில் உள்ளவர்கள். இம்முறையைச் சட்டப்படி மாற்றுவிட்டாலும், 1818-ம் வருஷச் சட்டத்தின் சார்பாக எழுந்த விதிகள், மாகாணத்திற்கு வேண்டிய சுதந்திரங்களைக் கொடுத்தன. இவற்றின் விரிவை அடுத்த இதழில் ஆராய்வோம்.

(தொடரும்)



வண்டானம் முத்துசாமி ஐயர்

உ. வே. சாமிநாத ஐயர்

உண்மையான கல்விமான்கள் யாவரையும் உலகம் அறிந்து கொள்வதில்லை; உருவத்தைக் கண்டும் வெளி ஆடம்பரங்களைக் கண்டும் புலமையை வரையறுக்க முடியாது. ஏழைமை நிலையிலே பிறந்து வளர்ந்த புலவர்கள் பலர் பின்பு அரசரோடு அரியாசனத்தில் ஒருங்கு வீற்றிருக்கும் பேறு பெற்றார்களென்று பண்டை வரலாறுகளால் அறிகிறோம். வீண் ஆடம்பரத்தினாலும் அறிவுக்கு யாதோர் இயைபுமில்லாத உலகியற் பயிற்சியாலும் பலர் அறிவாளிகளாக மதிக்கப்படுகிறார்கள். அவ்விரண்டு மில்லாத பல உண்மையறிவாளிகள் ஏனைய மனிதர்களோடு ஒருங்கு எண்ணப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுட் சிலர் அறிவற்றவர்களாகவும் கருதப்படுவதுண்டு. சிலர் சிலகாலம் புறக்கணிக்கப்பட்டுப் பின்பு கல்விமான்களாக மதிக்கப்படுகிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வண்டானம் என்னும் ஓர் ஊரில் முத்துசாமி ஐயர் என்ற ஒரு ஸ்மார்த்தப் பிராமணர் இருந்தார். இவர் வடம வகுப்பைச் சேர்ந்தவர்; குறிய வடிவினர்; சிவந்த மேனியர்; எப்போதும் குனிந்துகொண்டே யிருப்பார்; அகன்ற நெற்றியையும் விசாலமான கண்களையும் உடையவர்; எதிலும் உவப்பையாவது வெறுப்பையாவது காட்டமாட்டார். இவர் பிறரோடு அதிகமாகப் பேசுவதில்லை; பாடங் கேட்பதிலும் கேட்டவற்றைச் சிந்திப்பதிலுமே காலம் போக்குவார்; எப்போதும் தனித்தே யிருப்பார்; பாடங்கேளாத சமயங்களில் தோட்டங்களிலுள்ள மரத்தடியிலும் நீர்த்துறைகளிலும் ஆற்றுமணலிலும் தனியே அமர்ந்து மண்ணிலும் மணலிலும் எதனையேனும் எழுதிக் கொண்டே யிருப்பார்.

ஏறக்குறைய 60 வருடங்களுக்கு முன் இவர் திருவாவடுதுறை மடத்துக்குப் பாடங்கேட்க வந்தார். அப்போது இவருக்குப் பிராயம் 22 இருக்கும்.

அக்காலத்தில் திருவாவடுதுறை மடத்தில் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆதீனகர்த்தர்களாக இருந்தார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் அந்த மடத்தில் ஆதீன வித்துவானாக இருந்துகொண்டு பல மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடஞ் சொல்லி வந்தார்கள். அப்போது பாடங் கேட்டவர்களுள் யானும் ஒருவன். மாணவர்களுக்கு உரிய போஜன வஸதி முதலியவைகளெல்லாம் திருவாவடுதுறையில் ஆதீனகர்த்தரவர்களால் நன்றாக அமைக்கப் பெற்றிருந்தன. இதனால் மாணாக்கர்கள் யாதொரு கவலையுமில்லாமல் ஊக்கத்தோடு பாடங் கேட்டு வந்தனர்.

புதியவர்களாகப் பாடங்கேட்க வருபவர்கள் பிள்ளையவர்களிடம் முன்னமே பாடங்கேட்டு வருபவர்களிடம் கேட்டல் வழக்கம்.

ஆதி குமாரகுருபரஸ்வாமிகள் மரபினரும் பிற்காலத்தில் திருப்பனந்தாட் காசிமடத்துத் தலைமையை வகித்தவருமான ஸ்ரீ குமாரசாமித் தம்பிரானென்பவர் அப்போது பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டு வந்தார். அவர் பிறந்த ஊர் வண்டானம். அவருக்கும் முத்துசாமி ஐயருக்கும் முன்னமே பழக்கம் இருந்தமையால் அவரிடமே முத்துசாமி ஐயர் படிக்கலானார். ஊரிலிருந்த பொழுதே நிகண்டையும் சில பிரபந்தங்களையும் படித்திருந்தவராதலின் தமிழ்ப் பயிற்சியில் இவர் சிறந்து விளங்கினார். இரவிலும் பகலிலும் யாவரும் உண்டபின்பு உண்ணும் விடுதிக்கு இவர் தனியே சென்று பிறரோடு கலவாமல் உண்டு வருவார். இவர் உடுப்பது அழுக்கான வஸ்திரமே.

இவர் இவ்வளவு பரமஸாதுவாகவும் நாகரிக மில்லாதவராகவும் இருத்தலைக் கண்ட மாணவர்களுக்கும் பிறருக்கும் இவரிடம் நன் மதிப்பு உண்டாகவில்லை. இவரைக்கண்டால் யாவரும் பரிகாஸம் செய்வார்கள்; 'வண்டானம் வந்தது, போயிற்று' என்று அஃறிணையாகவே இவரைப்பற்றிப் பேசுவார்கள். இப்படி ஒருவர் இருப்பது சுப்பிரமணிய தேசிகருக்கேனும் பிள்ளையவர்களுக்கேனும் தெரியாது.

எவரேனும் சிலேடையாகப் பேசினால் இவருக்கு மிக்க சந்தோஷம் உண்டாகும்; அப்பொழுது இவர் முகத்திற் சிறிது மலர்ச்சி காணப்படும். இவர் ஏதாவது பேசின் அது சிலேடையாகவே இருக்கும். ஒருநாள் மாணாக்கராகிய ஒரு தம்பிரான் இவரைப் பார்த்து, "வண்டானம் இப்பொழுது என்ன செய்கிறது?"

என்று நகைப்புடன் கேட்டபொழுது, இவர் சினமுற்று, "நீங்கள் சிவப்புத்தேள்" என்று சிலேடையாகப் பேசியதைக் கேட்டிருக்கிறேன். சிவனாகிய தேவனெனவும் சிவப்பு நிறம் பொருந்திய தேளெனவும் அத்தொடர் இரண்டு பொருள்படுதல் காண்க. இவர் வார்த்தையால் யாருக்கும் கோபமுண்டாகாது. இவ்வாறு இவர் கூறிய சிலேடைகள் அளவிறந்தன. ஒருநாள் இவரை நோக்கி, "வாரும் இரும், படியும்" என்றபோது, "வாரும் இரும்பு அடியுமா!" என்றார். மற்றொரு நாள் ஒருவரை இவர் 'வேஷ்டியைத்துவைக்கின்றீரோ' என்று கேட்கவந்தவர், "கலையைச் சிலையிற் கலையாமல் தோயத்திற் றோய்த்துத் துவைக்கின்றீரோ?" என்றார். வேறொரு நாள் ஒருவர், "உண்டு வந்தீரோ?" என்று வினவினபொழுது, "உண்டு உவந்தீரோவா" என்று பிரித்துக் கூறிச் சிறிது மகிழ்ச்சி கொண்டார்.

ஒரு நாள் சாப்பாட்டுவிடுதியின் சுவரிற் கீழேகண்ட பாடல் மாக்கல்லால் எழுதப்பட்டிருந்தது:—

"இந்தவறச் சாலைதனி லேயிரவும் பகலும்
வந்தவரி முதன்மதிதம் வரைவாங்கிக் கொண்டே
அந்தணருக் கடிசிலிட யாதுமிலை யெனலாற்
சுந்தரசுப் பிரமணிய தேவனிடஞ் சொன்மின்."

[இதன் பொருள்:—இந்தத் தர்ம விடுதியில் இராத்திரியிலும் பகலிலும் (சமைத்துப் பிறருக்கு இடுவதற்காக மடத்திலிருந்து வரும்) அரிசிமுதல் தயிர்வரையிலுள்ள பொருள்களைப் பெற்றுக் கொண்டு (உண்ணவருகின்ற) பிராமணர்களுக்கு (உணவளிப்பதற்கு) ஒன்றுமில்லை யென்று (இங்குள்ளோர்) சொல்லுவதால், (இச்செய்தியை) அழகிய சுப்பிரமணிய தேசிகரிடம் சொல்லுங்கள். அரி-அரிசி, மதிதம்-தயிர், அடிசில்-உணவு.]

அங்கே சென்று உண்டு வந்த ஒரு மாணாக்கர் சுவரில் இச்செய்யுள் எழுதியிருப்பதைக் கண்டு ஞாபகப்படுத்திக்கொண்டு பிற்பகலிற் பிள்ளையவர்களிடம் பாடங்கேட்பதற்காக வந்திருந்த தம் நண்பர்களிடம் தனித்துச் சொல்லிக்காட்டிக்கொண்டிருந்தார். பிள்ளையவர்கள், "என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்க அவர்களிடத்தும் சொன்னார். கேட்ட அவர்கள், "இதனை யார் செய்திருக்கக் கூடும்?" என்று ஐயமுற்று அவ்விடுதியில் உண்பவர்களுள் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு ஆராயத் தொடங்கினார்கள். அப்பொழுது குமாரசாமித் தம்பிரான், "என்னிடம் பாடங்கேட்டு வரும் வண்டானம் எழுதியிருக்கலாம். அது

பெரும்பாலும் அகாலத்திலேதான் உண்ணுவது வழக்கம். தனக்குச் சரியானபடி ஆகாரம் கிடைப்பது இல்லையென்று சில சமயங்களில் என்னிடம் சொல்லியிருக்கிறது. அதை விசாரிக்க வேண்டும்'' என்றார். "அவரைப் பார்க்க வேண்டும். இங்கேவருவிக்க வேண்டும்'' என்று பிள்ளையவர்கள் சொன்னார்கள். உடனிருந்தவர்களுக்கு அவரை எப்படியேனும் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்ற ஊக்கம் உண்டாயிற்று. சிலர் விரைந்து சென்று பல இடங்களில் தேடியும் இவர் அகப்படவில்லை. அப்பால் ஊருக்கு வடபாலுள்ள தோட்டத்தில் ஒரு மரத்தடியில் இவர் ஏதோ யோசனை செய்து கொண்டிருத்தலைக் கண்டார்கள். அப்பொழுது பிற்பகல் 2 மணி இருக்கும். கண்டு அழைக்கையில் இவர் விரைவில் எழவில்லை. சென்றவர்கள், "ஓய்! உமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. வாரும். பிள்ளையவர்கள் அழைக்கிறார்கள்'' என்று கூறி இவரைப் பிள்ளையவர்களிடம் அழைத்து வந்தார்கள். இவர் யாதுமறியாதவராய், அழைத்தது எதற்காகவோ வென்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தார். இவரைப் பிள்ளையவர்கள் இருக்கச் செய்து, "இந்தப் பாடலைச் செய்தவர் யார்?'' என்று அன்புடன் கேட்டபொழுது இவர், "நான் செய்யவில்லை'' என்று கூறிவிட்டார். அப்பால் ஒருவரை உண்ணும் விடுதிக்கு அனுப்பி அப்பாடலை யாரெழுதியதென்று விசாரிக்கச் செய்ததில் அப்பாடலின் விஷயத்தை அறியாத சமையற்காரர், "ஏதோ ஒருநாள் வண்டானம் வந்து சில நேரம் நின்று எழுதிக்கொண்டிருந்தது'' என்றார். அவர் வந்து அதனைப் பிள்ளையவர்களிடம் சொன்னார். சொன்னவுடன் அவர்கள் பின்னும் இவரை வற்புறுத்திக் கேட்கையில், "சரியாக நடந்து கொள்ளாமற் போனால் பின் என்ன செய்கிறது?'' என்றார். குமாரசாமித் தம்பிரான், "நீ அகாலத்திற் போனால் உனக்கு என்ன கிடைக்கும்? உன்னுடைய தவறு அது'' என்று சினத்துடன் சொல்லுகையில் பிள்ளையவர்கள், "சும்மா இருக்கவேண்டும்'' என்று கையமர்த்திவிட்டு, "இதனால் இவர்தாம் இதனைச் செய்தவரென்று தெரிகின்றது. இந்தச் செய்யுளின் நடையைப் பார்க்கும்பொழுது இதற்குமுன் இவர் பல பாடல்கள் செய்து பழகி யிருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. அதைப்பற்றி விசாரிக்க வேண்டும்'' என்றார்கள். பின்பு விசாரித்ததில் இவர் தாம் யாதொன்றும் செய்ததில்லையென அஞ்சிக்கூறினர். "உமக்குப் பாடுகிற பழக்கம் உண்டென்பதை இப்பாடலே தெரிவிக்கின்றது. செய்திருந்தாற் சும்மா சொல்லும்'' என்று பின்னும் பிள்ளையவர்கள் முதுகைத் தட்டிக்கொடுத்து வற்புறுத்திக் கேட்டார்கள். அப்பால் இவர், தாம்

முன்னமே செய்திருந்தவற்றுள் சாதாரணமான சில பாடல்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்ல ஆரம்பித்தார். கேட்டுக்கொண் டிருந்தவர்களுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அப் பால் சிறிது ஊக்கமுற்று இவர் தாம் இயற்றிய திரிபு, யமகம், சிலே டை முதலியன அமைந்த சில செய்யுட்களைச் சொல்லிக் காட்டினார். தம்மூருக்கு அருகிலுள்ள பசுவந்தனை யென்னும் தலத்தைப்பற்றித் தாம் இயற்றிய 'பசுந்தையந்தாதி' என்பதிலுள்ள சில பாடல்களை யும், பின்பு சந்தங்கள் வண்ணங்கள் முதலியவற்றையும் சொன்னார். அவை சுவையுடையனவாக இருந்தன. பிள்ளையவர்கள் சுப்பிர மணிய தேசிகரவர்கள்மீது இயற்றியுள்ள 'துங்கஞ்சார்' என்ற நோட்டின் மெட்டில் தம்மை ஆதரித்த பிச்சுவையரென்பவர்மேல் இயற்றிய கீர்த்தனம் ஒன்றையும் சொன்னார்; "உச்சஞ்சார் வண் டா னத்துறை பிச்சுவைய தயாநிதியே" என்ற அதன் பல்லவி மட்டும் இப்போது என் ஞாபகத்தில் இருக்கிறது.

இவர் சொன்ன செய்யுட்களைக் கேட்ட பிள்ளையவர்கள் இவரைப் பார்த்து மிகவும் வருந்தி, "இப்படி ஒருவர் இருப்பது இதுவரையில் எனக்குத் தெரியவில்லையே! இவர் இவ்வளவு அழுக் கான வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு தமிழ்ச் சுவையை யறிந்த இந்த ஊரில் ஏனென்று கேட்பாரில்லாமல் எலலாரும் பரிகசிக்கும் படி இருப்பது மிகவும் வருத்தத்திற்கு இடமாக இருக்கிறது. உங்களுடைய அலட்சியத்துக்கு இடையில் இவர் இவ்வளவு சுவையுள்ள செய்யுட்களைப் பாடினாரென்றால் நீங்கள் அன்புடன் ஆதரித்து வந்திருப்பின் இன்னும் எவ்வளவு பிரகாசிப்பார்? இவர் ஸாதுவாக இருக்கிறாரென்று நீங்கள் புறக்கணித்ததால் தமிழையே புறக்கணித்தவர்களாகி விட்டீர்கள். இனி இவருடைய அருமையை நன்கு அறிந்து பாராட்ட வேண்டும். படித்தவர்களைப் படித்தவர் களே அறிந்து கொள்ளாவிட்டால் வேறு யார் அறியப் போகிறார் கள்? [1]ஸந்நிதானத்திற்கும் அறிவிக்க வேண்டும்" என்று மனங் கனிந்து கூறினார்கள். அருகிலிருந்த மாணவர்களுக்கெல்லாம் அப் பொழுது தான் முத்துசாமி ஐயரின் கல்வித்திறன் நன்றாக விளங் கிற்று. தாங்கள் அவர்பாற் காட்டிய அவமதிப்பை நினைந்து இரங் கினார்கள். பிள்ளையவர்கள், "ஸந்நிதானம் உமது செய்யுட்களைக் கேட்டால் மிக்க திருப்தியை யடையும். ஆதலின், வஸ்திரங்கொடுக்க

---

1. மடத்தில் ஆதீனத் தலைவர்களை இவ்வாறு வழங்குதல் மரபு.

வேண்டுமென்று அவர்கள் விஷயமாக ஒரு செய்யுள் செய்யும்'' என்றார்கள். அவ்வாறே ஐந்து நிமிஷத்தில் அவர்,

''மாசாரக் கவிநுவல்வோர் குறைகடமை யடியோடே
மாற்ற வெண்ணித்
தூசார நிதியமுண வடிகடர றெரிந்துபெறத்
துணிந்து வந்தேன்
ஏசார வறுமையெனுங் கொடும்பிணியா னெடுந்துயருற்
றிருக்கின் றேற்கின்
றாசார மளித்தருள்சுப் பிரமணிய தேசிகமெய்
யறிஞ ரேறே''

என்னும் செய்யுளைச் சொல்லிக் காட்டினர்.

[இதன் பொருள்: சுப்பிரமணிய தேசிக! உண்மை அறிவுடையாருள் மேம்பட்டவ! மிக்க சுவை பொருந்திய செய்யுட்களைக் கூறுபவர்களுடைய குறைகளை முற்றும் ஒழிக்க நினைந்து உடை, ஹாரம், பொருள், உணவு என்பவற்றை அடிகள் வழங்குதலை யறிந்து யானும் ஒன்றைப் பெறத் துணிந்து வந்தடைந்தேன். ஆதலின், வறுமை யென்னும் கொடிய நோயால் மிக்க துன்பத்தை அடைந்திருக்கும் எனக்கு இன்று ஆடை வழங்கியருளல் வேண்டும். சாரக்கவி-சுவையையுடைய செய்யுள், தூசு-ஆடை, ஆரம்-ஹாரம், ஏசு ஆர-ஏசுதல் பொருந்த, ஆசாரம்-ஆடை.]

இதனைக் கேட்ட பிள்ளையவர்கள் மிக மகிழ்ந்து, ''ஸந்நிதானத்தினிடம் இவரை அழைத்துச் சென்று இப்பாடலைச் சொல்லிக் காட்டச்சொல்லி இங்கே நிகழ்ந்த வற்றையும் சொல்ல வேண்டும்'' என்று என்னிடம் சொன்னார்கள். அப்படியே நான் இவரைத் தேசிகரவர்கள்பால் அழைத்துச் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி இச் செய்யுளைச் சொல்லச் செய்தேன். கேட்ட தேசிகரவர்கள் இப் பாடலின் சுவையையறிந்து இன்புற்றதன்றிச் சரிகைக் கரையுள்ள இரண்டு ஜோடி வஸ்திரங்களை அளித்து, ''உடுத்திக்கொண்டு பிள்ளையவர்களிடம் செல்லவேண்டும்'' என்று கட்டளை யிட்டார்கள். அப்படியே இவர் பிள்ளையவர்களிடம் வந்தார். கண்ட யாவரும் மகிழ்ந்தார்கள்.

அது முதல் மாணாக்கர்கள் இவரிடம் பிரியத்துடன் நடக்க ஆரம்பித்தனர்; இவரும் எல்லாரோடும் பேசிப் பழகி வந்தார். நூல்களிலுள்ள பாடல்களைப்பற்றி இவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டால், ''இது முதலாவது; இஃது இரண்டாவது; இதில் இன்ன பாகம் சுவையுடையது'' என்று கூறுவார். செய்யுட்களின்

சுவையை அறிந்து தாம் கூறுதலில் இவர் வல்லவராக இருத்தலை நான் பன்முறை கேட்டறிந்திருக்கிறேன்.

பிள்ளையவர்கள் காலத்திற்குப் பின்னரும் சில காலம் இவர் மடத்திலிருந்து பாடங்கேட்டு வந்தார். பின்பு தம்மூருக்குச் சென்றார். பல பிரபுக்களையும் ஜமீன்தார்களையும் கண்டு அவர்கள் மீது பாடி அவர்களை உவப்பித்தும் பழைய நூல்களில் உள்ள சுவையை எடுத்துக் காட்டியும் காலங்கழித்து வந்தார். இடையிடையே சில சமயம் திருவாவடுதுறைக்கு வந்து செல்வதுண்டு.

நான் கும்பகோணத்திற்கு வேலையாகச் சென்ற பின்பு ஒரு சமயம் திருவாவடுதுறைக்கு வந்து தேசிகரிடம் செல்லும் சமயத்தில், வாயிலில் உள்ளே செல்லச் சமயம்பார்த்துக் கொண்டு நின்ற இவரைப்பார்த்து, "இன்னும் கல்யாணம் இல்லையா?" என்றேன். இவர்,[1] "கல்யாணம் இல்லை" என்றார். அந்த விடையில் 'மணமாகவில்லை' என்ற பொருளும், 'பணம் இல்லை' என்ற பொருளும் சிலேடையாக அமைத்திருத்தலைக் காண்க.

ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்த ஹ்ருதயாலயமருதப்ப தேவரிடம் ஒரு சமயம் இவர் சென்று அவர் விஷயமாகச் [2]சில செய்யுட்களைப் பாடிக்காட்டித் தமக்கு விவாகம் ஆகவேண்டியிருப்பதால் அதற்குரிய பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஜமீன்தார், "நீர் முகூர்த்தம் வைத்துக் கொண்டு வந்தால் நான் நூறு ரூபாய் தருவேன்" என்றார். இவர் தம்மூர் சென்று சிலகாலங் கழித்து வந்து தமக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதாகவும் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

ஜமீன்தார் :—எவ்வளவு தருவேனென்று முன்பு சொன்னேன்?

முத்துசாமி ஐயர் :—நானூறு ரூபாய் தருவேன் என்றீர்கள்.

ஜமீன்தார் :—இராதே; அப்படிச் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லையே.

முத்து :—(அச்சங்கொண்டவர்போல) முந்நூறு தருவேனென்றீர்கள்.

ஜமீன்தார் :—அப்படியும் சொல்லவில்லையே.

முத்து :—இல்லை, இருநூறு தருவேனென்றீர்கள்.

---

1. கல்யாணம்-விவாகம், பணம்.

2. இச்செய்யுட்கள் ஹ்ருதயாலய மருதப்ப தேவர் பிரபந்தத்திரட்டிற் காணப்படும்.

ஜமீன்தார் :—என்ன பொய் சொல்லுகிறீரே !

முத்து :—இல்லை! நூறு ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள்.

ஜமீன்தார் :—பின் எதற்காக நானூறு, முந்நூறு, இருநூறென்று ஏமாற்றுகிறீர்.

முத்து :—நான் உள்ளதைத்தானே சொன்னேன். நீங்கள், "நான் நூறு தருவேன்'' என்று சொல்லவில்லையா ? முன் (நான் வந்த பொழுது) [1]நூறு தருவதாகச் சொல்லவில்லையா ? இரு; (காத்திரு) நூறு தருகிறேனென்றதும் பொய்யா ?

இவ்வாறு உடன் உடன் சாதுரியமாக விடை பகர்ந்ததைக் கேட்ட ஜமீன்தார் வியந்து தாம் வாக்களித்த நூறு ரூபாயோடு மற்றொரு நூறு ரூபாயும் சேர்த்து இருநூறாக அளித்தார்.

1887-ஆம் வருஷத்திற்குப் பின் இவரை நான் பார்க்கவில்லை. அக்காலத்திற்கூடத் தாமாக ஒருவரிடம் பேசாமையும், வலிந்து ஒருவரிடம் பழகாமையுமாகிய பழைய இயல்புகள் இவரிடம் காணப்பட்டன. இத்தகைய அறிஞரிடம் உலகியலறிவு இல்லாதிருந்தமையே இவரைப் பிரகாசிக்கச் செய்யவில்லை; ஆனாலும், தெரிந்தவர்கள் இவரைப் பாராட்டிக் கொண்டுதானிருந்தார்கள்.

1. சிலேடையில் தந்நகர றன்னகர பேதம் இல்லை; அன்றியும் பேச்சில் அத்தகைய பேதம் காணற்கரியது.

தொழிற் சிறப்பு

ரா. இராகவையங்கார்

(174-ம் பக்கத் தொடர்ச்சி)

29. பொருளீட்ட லரிதாகப் புகலேம்யாம் புதைத்தபொலம்
மருளீட்டு முளத்தினர்க்கும் வாய்ப்பதுபோல் வாய்ப்பதுவாம்
இருளீட்டுங் கொடுநெறியி லிறைத்துவிடா தாங்கதனை
அருளீட்டு நல்லாற்றி லரியதரோ செலவிடலே.

30. போக்கியங்க ளனைத்தினையும் புறந்தள்ளி யுலகுண்ண
ஆக்கிபடல் துப்புரவே யகனிறைத்துப் பலர்குழுமும்
பாக்கியப்பே றெய்தாது பலதேய வீண்பொருள்கள்
தேக்கியவீ டுறதலினுஞ் சிறுகாடு நலனுடைத்தே.

31. போடகத்தைத் தாரகத்தைப் போக்கியத்தைப் புந்திசெய்து
நாடகத்தாற் பகுத்துணர்ந்து நல்லுடல நிலைபெறுதல்
ஆடகத்தா லிலையென்றிங் கருந்துணவுந் தண்ணீரும்
வாடகத்தார்க் கூட்டினரே வானுலகில் வாழ்குவரே.

போஷகம்-சோறு முதலியன. தாரகம்-தண்ணீர் முதலியன. போக்கியம்-வெற்றிலை முதலியன.

32. விழற்பயிரை வளர்ப்பதுபோல் வெறுந்தொழில்கள் பலபயில்வார்
நிழற்பயிராய்ப் பலியாது நின்றிளைத்துக் கெடுகிற்பார்
சழக்குமடி யிடைக்கிடப்பார் தமக்குடல நிலைபெறிவ்
வழக்கிலுள தெனத்தேற்ற மதியுடையார்க் காண்கிலமே.

33. நீர்பிடித்து நிலம்பிடித்து நீர்நாளு நாணுமல்
ஏர்பிடித்து விளைவாக்கு மிருஞால மினிதுண்ணும்
பார்பிடித்த வறுமையெலாம் பாறுதற்கு மாறிதுவாம்
ஊர்பிடித்த வுயிரெல்லா முயர்வாழ்வி னேங்குமரோ.

ஆக்கும்-ஆக்குங்கள்.

34. தமக்குடையுந் தமக்குணவுந் தாமுண்டு பணமாட்டார்
எமக்குரிய விவைதருவா ரெவரென்று பிறநாட்டார்
அமைப்பனகொண் டுயிர்வாழு மவரன்றே கடைப்பட்டார்
இமைப்பதுட னடைப்பிணமா யியன்றுகழி கின்றவரே.

35. ஊர்க்கின்றி யமையாத வொன்றுண்டு பண்ணுமவன்
போர்க்கின்ற புகழ்முன்னே புரவலர்சீர் புல்லிதரோ
கார்க்குன்ற மெனநின்ற களிறேறி யுலாவருவோர்
சீர்க்கின்ற வளனெல்லாந் திருந்துகுடி வளனன்றோ.

36. வயலாக்கி யெருவிட்டு வளமாக்கி விதைவிதைத்துப்
புயலாக்கு களைகட்டுப் புனல்பாய்த்தி யினிதளித்துச்
செயலாக்கு பொழுதெல்லாந் திருவாக்கிச் செலவானே
அயலார்க்குத் துயர்விளையா தறம்விளைப்ப ருழவோரே.

37. புயலுக்கு நடுங்காதார் பொருகாற்றிற் குயங்காதார்
வெயிலுக்கு மறையாதார் வெறுங்காலி னெடுந்தூரம்
பயிறற்கு மடியாதார் பாரத்திற் கிளையாதார்
அயிறற்குப் பயிர்விளைக்கு மருமந்த தொழிலாரே.

38. எருதோடு மொருபடியா யிடருழந்து படிதிருந்த
மருதோடு நிகராக மழைதோய்ந்து வெயில்படிந்தே
ஒருதோட மிலராகி யுயிர்வளர்க்கப் பயிர்வளர்த்து
விருதோடு புகழ்விளைக்கு மெய்யுடையார் செய்யுழவோர்.
படி-நிலம்.

39. பூதங்க ளெனநின்று பொருபுனலைச் சிறைசெய்து
மாதங்க மெனமிளிரும் வயலுழவர் குழுமுன்னே
பாதங்க ளேமென்று படர்தற்கு மியலாமல்
ஏதங்கொ ணகரந்தோ றிருப்பவரும் பெரியவரே.
மாதங்கம்-யானை.

40. மரம்வெட்ட மலையுடைக்க வரம்பெடுக்கக் குளம்பெருக்க
உரம்பட்ட வினைக்கெல்லா முதவாத மெய்யருத்தித்
தரம்பட்டம் பலபுனைந்து தளர்கிற்ப ரிலையுழவர்
நிரம்பட்ட திக்கயம்போ னின்றுலகந் தாங்குவரே.

41. நாட்டார்நல் லுழவானே நகரங்க ளுண்டதுதான்
ஊட்டாதே லுண்ணவா முயர்நகரத் துயிர்களெலாம்
காட்டாள ரெனவவரைக் கதழ்ந்துரைப்பீர் நீர்பெரிய
வீட்டாள ராயிருந்தெவ் விதமுழவர்க் குதவுதிரே.
கதழ்ந்து-சினந்து.

42. அணிகாட்டி யுடைகாட்டி யழகென்று பெயரிட்டுப்
பிணிகாட்டி வேண்டுதலைப் பெரிதாக்கி விட்டதலால்
தணிகாட்டி லினிதமர்ந்து தமரோடு முலகருந்தப்
பணிகாட்டு முழவருக்கென் பயன்காட்டி னீர்நகரீர்.
பணி-தொழில். நகரீர்-நகருள்ளீர்.

43. தழைக்கமரந் தனைவளர்த்துத் தருமலர்காய் கனியாலே
பிழைப்பவனம் மரத்தைநிதம் பேணுதல்போற் குடிபேணீர்
இழைத்தமரங் களைவெட்டி யெரியாலே கரியாக்கிப்
பிழைப்பவன்போ லாவீரேற் பெருநரகிற் சுழல்வீரால்.

44. ஏசதிக வசையில்லா தியல்வினையின் முயறலினாற்
காசதிகங் கிடைத்தக்காற் காசாளப் புகுநும்மை
மாசதிக மூர்ந்துகொளா வழியறிந்து நீரதனைத்
தேசதிகம் பெறவாண்டாற் சீர்மிகுவீர் செகத்தினிலே.

45. இயல்கின்ற விருகாலுக் கியங்குற்ற விருகாமும்
முயல்கின்ற வளவிறந்து முன்னதிகம் வீசுமெனின்
அயனின்ற பிறர்பித்த னவனென்று சிரியாரோ
செயலென்று முலகியலிற் றிரியாது புரிவதுவே.

46. உலகெல்லாம் பொருண்மிடியா லொறுக்கப்பட் டொழிநாளிற்
கலகலெனப் பணிபூண்டு கனகத்திற் றகிலுடுத்துச்
சிலகூத்திற் பொன்னிறையச் செலவிட்டென் கண்டீரோ
அலகிலுயி ரூட்டுவதே யறமாக முயலீரே.

47. சிறிதுண்டு பெருநூலைச் செய்துளநம் பெரியோர்நன்
னெறிகண்டு கொள்ளாது நீரென்ன கண்டீரோ
வெறிகொண்டு பிறநாட்டு வெய்தாய நாகரிகத்
தெறிகொண்ட கல்லேபோ லேறிவிழு கின்றீரே.

48. சகடிருப்ப தெங்கேயாந் தாவடிபோ வேமென்று
முகடியொப்பச் செல்லாது முறையாய நெறியினிலே
தகடிளைத்த விலையாய் தொழின்முடிக்கப் புகுவீரேல்
அகடிசிக்கும் பசிநீங்க வாருயிருக் குதவுதிரால்.
முகடி-மூதேவி.

49. தமக்காய பொருளெல்லாந் தம்மாலே யுளவாக்கி
எமக்காய பிறிதொன்று மில்லையய னுட்டிலென
அமைக்காத பெருநாட்டா ரடியோராய் விலைப்பட்டுச்
சுமக்காத பொறையெல்லாஞ் சுமப்பதுமோர் வியப்பன்றே.

பண்டைத் தமிழ் நாட்டு அணிகலன்கள்

ச. சோமசுந்தர தேசிகர்

I

ஆடவர்க்கு உடை அழகு செய்வது போலப் பெண்டிர்க்கு அணிகலன்கள் அழகு செய்வனவாகும். அணிகலன் என்ற தொடருக்கு அணிந்து கொள்ளும்—உடலிற் பூட்டிக்கொள்ளும்—ஆபரணம் என்றும், அழகினைச் செய்யும் பூண் என்றும் பொருள் கொள்ளுதல் கூடும். இவ் வணிகலன்கள் இயற்கை யணிகலனென்றும் செயற்கை யணிகலனென்றும் இரு பாகுபாடு படும். 'பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்' என்பது போன்ற பழமொழிகளிற் காணப்படுவனவும், நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என இலக்கண இலக்கியங்களிற் காணப்படுவனவும் இயற்கை யணிகளாம். 'பெண்டிர் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை' த்தங்களை யலங்காரஞ் செய்து கொள்ளும் நகைகள் செயற்கை யணியாகும். எவ்வித நகையாலாயினும் தங்களை அலங்கரித்துக் கொள்வது பெண்டிர் வழக்கம். இதுபோது மக்கள் கண்கூடாகக் காண்பது போன்றே முற்காலத்திலும் பெண்கள் தங்களைச் சிங்காரித்துக் கொண்டனர். அவ்வாறு அலங்கரித்துக் கொள்வதைத் தமிழ்நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. ஈண்டுச் சிலப்பதிகாரம் என்னும் நூலிற் காணப்படும் அணிகலன் விவரிக்கப்படும்.

சிலப்பதிகாரம் என்ற நூல் காவிரி கடலோடு கலக்கும் இடமான சங்கமத்தின்வாய் அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கோவலன் கண்ணகி என்ற இரு வணிகர்குல மக்களின் வாழ்க்கையைக் குறித்துச் சொல்லுவது. அவ்வூரில் வாழ்ந்த கோவலன் என்ற வணிகன் கண்ணகி யென்னும் பேருடைய மனையாளோடு இல்லறம் நடாத்தும் நாளில் மாதவி யென்ற ஒரு நாடகக் கணிகையைக் கண்டு அவளது அழகில் ஈடுபட்டு அவளொடு வாழ்வானாயினன். அக்காலத்திலே இந்திரன் என்ற தெய்வத்துக்கு விழாச் செய்வது வழக்கு. திருவிழா முடிந்த மறுநாள் கடலாட்டு நடக்கும். நாட்டிலுள்ளோர் அக் கடலாட்டிற்குச் செல்வர். ஊரைப் போல அவ் விழாவிற்குச் சென்ற கோவலனும் மாதவியும் கடற்கரை மணற் பரப்பிலே யிருந்து பொழுது போக்காகப் பாடும்போது காலக்கேட்டால் வேறு குறிப்புடையவர்கள் போலப் பாடினர்.

கோவலனுக்கு மாதவியிடம் வெறுப்புண்டாயிற்று. ஆயினும் அவன் அதற்குள் கையிலுள்ள பொருள் முழுவதையும் இழந்து விட்டது மாத்திரமன்றி மனைவியின் அணிகலன்களையும் செலவிட்டு விட்டான். இனி, மாதவியோடு வாழ்வது தவறென்று எண்ணின கோவலன் தன் இல்லத்திற்கு மீண்டான். வாடிய முகத்துடன் திரும்பிய மனையாளனைக் கண்ணகி கண்டபொழுது, அவள் தன் நாயகன் பொருள் முட்டுப்பாட்டால் கவலுற்றனனென்றெண்ணி, தன்னிடம் சிலம்பு ஒன்று மிகுந்திருப்பதாகக் கூறவே, கோவலன் மனைவியை அதுகாறும் அலட்சியம் செய்ததற்கு மிகவும் வருத்த முறுவதாகக் கூறியதோடு அச் சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு மதுரையம்பதி சென்று பொருளீட்ட எண்ணியுள்ளதாகவும், தன் மனைவியான கண்ணகியும் தன்னொடு வருதல்வேண்டுமென்றும் கூறினன். உடனே அவ் விருவரும் யாவரும் அறியாவண்ணம் காவிரிம்பூம்பட்டினம் நீங்கி, வழிநடந்து, மதுரைமாநகர்ப் புறஞ்சேரி யுற்றனர். அங்கே இடைச்சேரியில் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக விட்டுக் கோவலன், சிலம்பை விற்றற்கு மதுரைமாநகர் சென்றனன். முன்னரே பாண்டிமாதேவி காற்சிலம்பொன்றைக் கவர்ந்த கள்வனன பணிசெய்யும் பொற்கொல்லர் தலைவன், பலர் சூழ எதிர்வருதலும் அவனிடம் கோவலன் தன் சிலம்பினை விலைமதிக்க வல்லனோ என்றனன். தான் தப்பித்துக்கொள்ள அற்றம் பார்த்துக்கொண்டிருந்த கள்வனன தட்டான் அச்சிலம்பு அரசனை யன்றி வேறொருவரும் கொள்வதற்கிலரென்று கூறி, தான் அரசனிடம் போய் வருமளவும் கோவலனை ஓரிடத்து இருக்க வேற்பாடு செய்து அரசன்கோயிற்குச் சென்றனன். அப்பொழுது அரசன் தன்தேவியின் ஊடல் தீர்ப்பானெண்ணி அவள் கோயிற்குச் சென்றிருந்தானாகலின், பொற்கொல்லன் ஆண்டுச் சென்று சிலம்பைக் களவாடின கள்வன் கோயிற்புறத்து இருப்பதாகவும், அவனை ஓரிடத்திருக்கச் சொல்லித் தான் வந்திருப்பதாகவும் அரசனுக்கு அறிவித்தான். அரசனுக்குத் தீங்கு விளையும் காலமாகலின், அவன் ஆராய்ந்து பார்க்காது கள்வனைக் கொன்று சிலம்பினைக் கொண்டுவரும்படித் தன்காவலர்க்குக் கட்டளையிட்டனன். சென்ற காவலர் அவ்வாறே கோவலனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவந்தனர். இதனை யறிந்த கண்ணகி கோபித்தெழுந்து மதுரையம்பதி புகுந்து அரசனிடம் சென்று, அரசன் பிழைசெய்தான் என்று கூறி, சிலம்பு தன்னுடையதென்றும் அச் சிலம்பினுள் மாணிக்கப்பரல் போடப்பட்டுள தென்றுஞ் சொல்லிச் சிலம்பை யுடைத்தாள். உடைக்கவே அதிலிருந்த மாணிக்க மொன்று அரசன் முகத்திற் றெறித்தது. தன் பிழையை உணர்ந்த

அரசன் ஏங்கி உயிர்துறந்தான். அரசன் தேவி கண்ணகியைப் பொறுக்க வேண்டினள். கண்ணகி கோபந்தணியாது ஊருட் புகுந்து தனது கொங்கை யொன்றைத் திருகி 'ஊர் தீமூண்டெரிக' எனச் சாபமிட்டு எறிந்தாள். பத்தினி சாபம் பொல்லாததாகை யால் ஊர் தீப்பற்றிச் சாம்பராயிற்று என்பது கதை. இக் கதை சிலம்பு காரணமாக எழுந்ததாகலின் இக்கதையைக் கூறும் நூலுக் குச் சிலப்பதிகாரம் என்று பெயரிடப்பட்டது. இக் கதை நடந்தது ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னென்று கூறுவர் பெரியார். இவ்வாறு பெருமை பெற்ற நூலிற் காணப்படும் மாத ரணிகலன்களை ஈண்டுக் குறிப்பாம்.

கால்விரலணி : மகரவாய் மோதிரம், பீலி, கான்மோதிரம்.

காலணி : பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி.

துடையணி : குறங்குசெறி.

நுசுப்பணி : மேகலை.

முன்கையணி : ஆடகம், கைவளை, பரியகம், வால்வளை, பவழப் பல்வளை, நவரத்தினவளை, கடகம்.

கைவிரலணி : வாளைப்பகுவாய் வணக்குறு மோதிரம், செங் கேழ் கிளர்மணி மோதிரம், மரகதத்தாள் செறி.

கழுத்தணி : வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, ஞாண், கோவை, சவடி, சரப்பளி, முத்தாரம், பின்றாலி.

காதணி : நீலக்குதம்பை, சந்திரபாணி.

தலையணி : சீதேவி, வலம்புரி, தொய்யகம், புல்லகம், சூளா மணி, பொன்னரிமாலை, கோதை என்பனவாம்.

மகரவாய் மோதிரம் என்பது மகரமீனினது திறந்தவாய் போல் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்படுவது. இது கை விரலணி களில் ஒன்றாகிய நெளியைப் போல் செய்யப்படுவது. கால் நடுவிர லில் அணிவது. இஃது இக்காலத்தில் வழக்கிலில்லை.

பீலி என்பது பெருவிரலுக்கு அடுத்த விரலில் (மூன்றாவது விரலில்) அணிவது. இஃது அடியில் விரலைச் சுற்றும்படி வளைய முடையதாயிருக்கும். வளையத்தின்மேல் ஒரு தகடு வைக்கப்பட்டு அதன்மேல் பழத்தட்டில் பழங்கள் கோபுரம் கட்டுவதையொப்ப அடுக்குவது போல் பொன் முத்துக்கள் வரிசையாகவும் படிப்படி யாகவும் பிணைக்கப்பட்டிருக்கும். இக்காலத்தில் இது வெள்ளியினாற் செய்யப்படுகிறது. இஃது அடுக்குப்பீலி யென்றும் வெங்காயப்பீலி

யென்றும் இருவகைப்படும். 'தாலிக்குப் பீலி துணை' யென்பது பழமொழி.

கான்மோதிரம் என்பது பெருவிரலணி. இது வளைவாகவே செய்யப்படுவது. இக்காலத்தில் பெருவிரற்சுற்று என்றும் காலாழி என்றும் சொல்லப்படும். 'பீலி காலாழியின்றியும் கல்யாணமா?' என்பது பழமொழி.

பாதசாலம் என்பது பொன்னாற்செய்த சிறுவடங்களைச்சேர்த்து முறுக்கி ஒரு புறத்தைப் பெருவிரல் மோதிரத்திற் பொருத்தி மற்றொரு புறத்தைச் சிலம்பின் கீழ் அணிவது. இதனைக் காற்சவடி யென்றும், பரியகம் என்றும் கூறுவர். இக்காலத்து வழக்காறற்றது.

சிலம்பு என்பது பொன்னால் நீண்ட வளைவாகவும் கூடுடையதாகவும் செய்யப்படுவது. சிலம்பு ஒலித்தற்பொருட்டு மாணிக்கக் கற்களாவது, முத்துக்களாவது உள்ளே போடப்பட்டிருக்கும். கண்ணகி காற்சிலம்பிலிருந்தவை மாணிக்கம். பாண்டிமாதேவி சிலம்பிலிருந்தவை முத்துக்கள். இக்காலத்தில் வெண்கலத்தாற் செய்யப்பட்டுப் பருக்கைக் கற்கள் செறித்துக் கோயில்களில் கையாளப்பட்டு வருகின்றன.

பாடகம் என்பது சிலம்பின்மேல் அணியப்படுவது. கனமுடைய அகலமான தகட்டாற் செய்யப்படுவது. இதழ்கள் சேர்ந்ததுபோலச் செய்யப்பட்டிருக்கும். இக்காலத்து வெள்ளியினாற் செய்யப்பட்டு அருகி வழங்குகின்றது. 'காற்பாடகம் கழன்று விடுமோ?' என்பது பழமொழி.

சதங்கை என்பது முத்துக்கள் போலப் பொன் வெள்ளிகளாற் செய்து மூன்று சேர்ந்த கொத்துக்களாகவும், தனித்தனியாகவும் கம்பியிற்கோத்து அணிவது. இக்காலத்தில் இவ்வணியைச் சலங்கை யென்பர். இதற்குக் கிண்கிணி யென்றும் பெயருண்டு. பல சேர்ந்து 'கிண்' என்ற ஓசையை எழுப்புவதால் இப்பெயர் பெற்றது.

காற்சரி என்பது பொன் வளையங்களைக் கோத்துப் பட்டைச் சங்கிலியாகச் செய்து அடிப்பாகத்தில் பொன் முத்துக்கள் கட்டப்படுவது. இக்காலத்தில் வெள்ளியினாற் செய்யப்பட்டுப் பாதசரம் என்னும் பேருடையதாக வழங்கப்படுகின்றது. கால் பாதத்தில் சரிந்து கிடப்பதால் இப்பெயர் பெற்றது.

தோடையணி தொடையிலேயே அணிந்து கொள்ளும் ஓர் அணிகலன். இதற்குக் குறங்குசெறி என்றும் கவான்செறி என்றும் பெயர். இந்நகையின் விவரம் ஒன்றும் அறிவதற்கில்லை,

தோளணி மாணிக்கம் அழுத்தின பொன் வளையும், முத்துக் களைப் பொற்றோடாற் பிணித்த முத்துவளையும் ஆம்.

ஆடகம் வளையாகப் பொன்னுற் செய்து முகப்பில் மாணிக்க மும் பத்திகளில் வைரமும் அழுத்திச் செய்யப்பட்டதோர் ஆபா ணம். ஓரங்களில், சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக்கும். இக் காலத்திற் பாட்டில் என்று வழங்குகிறது.

கைவளை இது பலரும் அறிந்ததொரு ஆபரணம். இக்காலத்தில் காப்பு என்பர்.

பரியகம் இதனைக் கைச்சரியென்பர். இக்காலத்திற் சங்கிலி யென்றும், கொலுசு என்றும் சொல்லப்படும்.

வால்வளை வெள்ளியினுற் செய்யப்படுவது. பல நிறங்களோடு வெண்மையும் கலந்திருக்க வேண்டி இடப்படுவது. அன்றி, சங்கு வளையுமாம்.

பாசித்தாமணி உயர்ந்த மரகதம் பச்சைகளாலாய கைவடம். இக்காலத்தில் குழந்தைகளுக்கு இடப்படுகின்றது.

பவழப்பல்வளை பவளம் கோத்த வளை. பட்டையாகவும் பரு மனாகவும் இருக்கும் பவளங்களைக் கோத்த வளையணி. இக்காலத் தில் இஃது அருகி வருகின்றது.

நவரத்தினவளை நவரத்தினங்களைப் பொன் வளையில் அழுத்திச் செய்யப்பட்ட கையணி.

கடகம் காலிற்போடும் சிலம்பை யொப்பக் கைக்குச் செய்வது. மகரவாய் உடையதாகவும் மாணிக்க முதலிய அரதனங்கள் அழுத்தி யும் செய்யப்படுவதுண்டு. இக்காலத்தும் வழக்கிலுள்ள ஓர் அருமை யான ஆபரணம். 'இது செய்த கைக்குக் கடகம் போடவேண்டும்' என்பது பழமொழி.

வாளைப்பகுவாய் வணக்குறு மோதிரம் வாளைமீன் வாய் திறந் திருப்பது போல் செய்யப்படும் விரலணி. இதனை நெளி யென்பர். சுண்டு விரலுக்கு அடுத்த விரலில் அணிவது. இக்காலத்தும் பொன் னுலும் வெள்ளியாலும் செய்யப்பட்டு அணியப்படுகிறது. கைப் பின்புறம் நீண்டிருக்கும் பாகத்தில் மாணிக்கம் பதிக்கப்பட்டு முத்து கட்டித் தொங்குவது முண்டு.

சேங்கேழ்கிளர்மணி மோதிரம் ஒளிவிடும் மாணிக்கம் அழுத் தின மோதிரம். இஃது அணிவிரல் என்றும் மோதிரவிரல் என்றும் பேருடைய நடு விரலில் அணியப்படுவது. மாணிக்கப் பீடம் என் றும் பேர் பெறும். இதனை அடுக்காழி என்றும் கூறுவர்.

மரகதத்தாள் செறி சுற்றுப் பக்கங்களில் வயிரம் அழுத்தி நடுவில் மரகதம் பதித்துச் செய்யப்படும் மோதிரம். இதைச் சுட்டு விரலில் அணிவர். மரகதக் கடைச்செறி என்றும், வட்டப்பூ என்றும், மரகதநாயகம் என்றும் கூறுவர்.

வீரசங்கிலி பொன்னுற் பெரிதாகச் செய்யப்பட்ட சங்கிலி. இப்பொழுதும் வழக்கிலுள்ளது.

நேர்ஞ் சங்கிலி பொன்னாலே சிறியதாகச் செய்யப்பட்ட சங்கிலி

ஞாண் திரட்சியாகப் பின்னப்பட்ட பொன்னுபரணம். இதைச் சரடு என்பர். இப்பொழுது அருகி வருகின்றது.

கோவை ஐந்தாறு வடங்களாகச் செய்யப்பட்டுப் பின்னல் படுகண் கோக்குவாயோடு கூடிய முகப்புடையது.

சவடி கனமான பொன் தகடுகள் பிறைபோற் செய்யப்பட்டு ஒன்றுடனென்று இணைக்கப்படுவது. இதைச் சந்திரஹாரம் என்பர். 'சரப்பளி சந்திரஹாரம் தாங்கமுடிய வில்லை' என்பது பழமொழி.

சரப்பளி சிறு குண்டுகளாகச் செய்யப்பட்டுப் பொன் சரட்டிற் கோக்கப்படுவது ; இரண்டு மூன்று வடங்களுடையது.

முத்தாரம் முத்துமாலை. நல் முத்துக்களோடு, இடையிடையே பொன்மணியைக் கோத்தும் கோவாமலும் செய்யப்படுவது.

பின்றாலி அணிகலன்களைப் பூட்டவும் கழற்றவும் வேண்டி இரு பக்கங்களிலும் துளையுடன் கூடிய சிறு குண்டுகள் வைக்கப் படுவதுண்டு. இவற்றைப் பிணைக்கக் கொக்கி ஒன்று போடுவதுண்டு. இதைக் கொக்குவாய் என்றும் கோக்குவாய் என்றும் கூறுவர். கொக்கின்வாய் போன்றிருத்தலாற் கொக்குவாய் என்றும் கோப்பதற்கு எளிதாக விருப்பதால் கோக்குவாய் என்றும் பேர் பெறும். இவ்வாறன்றிப் பெரிய முகப்புடையதாக நவரத்தினங்களிழைத்துச் செய்யப்படுவது முண்டு. அதையே பின்றாலி என்பர். பின்புறம் தொங்கும்படியாக விடப்படுவதோர் ஆபாணமென்பார் ஒரு சாரார்.

நீலக்குதம்பை இந்திர நீலமணி தொங்கக் கட்டிய காதணி.

சந்திரபாணி வயிரங்களழுத்திச் செய்த வயிர ஓலை. இவையிரண்டும் சேர்த்தணிவதாற் கடிப்பிணையெனப் பேர் பெற்றது.

சீதேவி இது தலைக்கணி யென்பதைத் தவிர வேறென்றும் அறிவதற்கில்லை. எனினும் இது வலது தலைப்புறம் அணிவதென ஊகிக்க வேண்டியிருக்கின்றது.

வலம்புரி வலம்புரிச்சங்கு வடிவாகச் செய்யப்பட்டது. இதற்கு நந்தவட்டப்பூ என வேறொரு பெயரும் உண்டு. இஃது இடது புறத்தில் அணிவது.

தொய்யகம் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டுத் தலை மயிர்ப்பிரி வின் நடுவில் வைக்கப்படுவது. இதைத் தலைப்பாளை யென்றும் பூரப்பாளை யென்றும் முற்காலத்தில் வழங்கினர். இதுபோது வாகுசுட்டி என்று பெயர்.

புல்லகம் பல்லி வடிவாகச் செய்யப்பட்டு இரு புறங்களிலும் அமைந்திருக்கும் அணிவகை. தென்பல்லி, வடபல்லி என்றும் இரு பிரிவை யுடையதாய் இரண்டு புறங்களிலும் அமையப்பெற்றது.

சூளாமணி வில்லையாக நவரத்தினங்கள் இழைத்துச் செய்யப் படுவது. இக்காலத்தில் இரத்தினச்சுட்டி என்பர்.

பொன்னரிமாலை பொன்னாற் செய்யப்பட்ட நெற்றிப்பட்டம். இக்காலத்தில் மாணிக்க மிழைத்துச் செய்யப்படுவது. நெற்றிப் பட்டம் என்று வழங்குகிறது.

கோதை தலையிலணிந்து கொள்வதற்குத் தக்கபடி சிறியதாகச் செய்யப்பட்ட பொன் பூமாலை.



எலியாழ்குடித் தலபுராணம்

பி. ஸ்ரீ. ஆச்சார்யா

1. திருநெல்வேலிச் சீமையில் ஒரு திவ்யஸ்தலம்

சீமை என்றவுடனே இராஜ பக்தர்களின் உள்ளம் குளிர்கிறது; உடம்பு பூரிக்கிறது; சீமை யென்றால் ஆங்கிலச்சீமை—இங்கிலாந்து, என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நாங்கள் இராஜ பக்தராயினும் தேசபக்தராயினும் எங்கள் ஜில்லாவைத் **திருநெல்வேலிச் சீமை** யென்றே கூறி மகிழ்வதுண்டு. 'ஆங்கிலச் சீமையோடு திருநெல்வேலிச் சீமை போட்டிபோடப் பார்க்கிறதா?' என்று இராஜ பக்தர்கள் ஆச்சரியப்படலாம்; கோபித்துக்கொள்ளலாம். திருநெல்வேலிச் சீமை போட்டிபோடப் பார்க்கவில்லை; போட்டிபோட்டு ஆங்கிலச் சீமையை வென்று ஜயக்கொடி கட்டியாய்விட்டதென்றே நாங்கள் நம்புகிறோம். அது எப்படி? ஆங்கிலச் சீமையில் சுதந்திர லட்சுமி அவதாரம் செய்தாள் என்று ஆங்கிலேயர் மார்தட்டுகிறார் அல்லவா? நாங்களோ 'எங்கள் திருநெல்வேலிச் சீமையில் தமிழ் பிறந்தது; தென்றல் பிறந்தது; பிறவாத சிவபெருமானும் பிறந்தார்' என்று தோள் கொட்டுகிறோம்.

இத்தகைய பேரும் புகழும் சீரும் சிறப்பும் வாய்ந்த திருநெல்வேலிச் சீமையில் **விட்டல நகரம்** என்றொரு திவ்ய தேசமுண்டு. ஆறுபார்த்திராதவனுக்குக் **கங்கையாடி** என்ற பெயர் இடப்பெற்றிருப்பதுபோல் ஒரு தபாலாபீசுகூட இல்லாத ஊர் **விட்டல நகரம்** என்றும் **திவ்ய தேசம்** என்றும் பெயர் பெறுவது விசேஷமல்லவா? இந்நகரத்திற்கு அருகே நதிக்கரையில் **ஆழ்குடி** என்ற திவ்ய ஸ்தலம் ஒன்றுண்டு.

எக்காரணத்தால் இப்பெயர் இந்தஸ்தலத்திற்கு ஏற்பட்டது? என்ற வியவகாரம், இன்னும் திருநெல்வேலிச் சீமைப் புலவர்களுக்குள் சொற்சண்டையோடு கைச்சண்டையையும் விளைத்து வருகிறது. "ஆழ்+குடி=ஆழ்குடி; அதாவது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலத்தும் ஆழ்ந்த—ஆழ்கின்ற—ஆழும் குடிகளையுடையது; இது வினைத்தொகை" என்று இலக்கணப் புலவன் இயம்பினான். "தீவினையின் தொகைதான் இப்படி உம்மைச் சொல்லும்படி தூண்டுகிறது; இத்திவ்ய ஸ்தலத்திலே எதிர்காலத்

திலும் குடிகள் ஆழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்வதற்கு உமக்கு ஜோசியம் தெரியுமா ? தீவினை ஆழ்கின்ற குடியிருப்பு என்று சொல்லலாகாதா ?'' என்று வேதாந்தப் புலவன் கோபித்துக் கொண்டான்.

இச் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த ஆங்கிலப் புலவனுக்கு,

'' அங்கே பொருள் ஓங்குகிறது ; ஆனால் குடிகள் ஆழ்கின்றார்!'' என்ற ஓர் ஆங்கிலக் கவிஞன் பிரலாபம் நினைவிற்கு வந்தது. உடனே அப்புலவன் அக்கவியை ஆழ்குடிக்காகச் சிறிது மாற்றி,

'' இங்கே பொருளும் ஆழ்கின்றது ; குடிகளும் ஆழ்கின்றார்'' என்று உரக்கப் பாடினான்.

ஆழ்குடியில் மண்ணிலே ஆழ்ந்து புதைந்த கோவில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதால் அது ஒரு திவ்ய ஸ்தலமாகக் கருதப்படு கிறது. எனவே ''இவ்வூரைத் திரு ஆழ்குடி எனத் திருவை (அதாவது லட்சுமியை)ச் சேர்த்துச் சொல்ல வேண்டும்'' என்று பக்த னொருவன் மன்றாடினான்.

''அப்படியானால் நான் இப்பொழுது பாடிய இங்கிலீஷ் பாட் டிற்கும் அது பொருத்தமாகிவிடும். திரு ஆழ்குடியில் திருவும் ஆழ்கின்றது ; குடியும் ஆழ்கின்றது ! அச்சா !'' என்று ஆங்கிலப் புலவன் சிரித்தான். ''திரு ஆழ்குடி யென்பதற்கு ஆதியில் லக்ஷ்மீ நாசபுரம் என்ற வடமொழிப் பெயர்தான் இருந்திருக்கவேண்டும்'' என்று வடமொழிப் புலவன் வாதம் செய்தான்.

'' திரு + வாழ்குடி = திருவாழ்குடி என்பது தமிழ் இலக்கணம். எனவே திரு அல்லது லட்சுமி வாழ்ந்த—வாழ்கின்ற—வாழும் குடி யென்ற மங்களமான பெயரையும் பெற்றோம்'' என்று இலக்கணப் புலவன் இறுமாப்போடு கூவினான்.

திருவாழ்குடி யென்னும் திருப்பெயரைக் கேட்டுத் திருநெல் வேலிச் சீமைப் புலவர்களெல்லாம் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். பிறகு ஆழ்குடி என்ற திருவாழ்குடிக்கு ஒரு தலபுராணம் பாட வேண்டும் என்று அவர் தங்கள் சங்கக் கூட்டம் ஒன்றில் ஒரு முகமாகத் தீர்மானித்தார்கள்.

திருநெல்வேலிச் சீமையிலுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் ஒரு புராணம் ஏற்பட்டிருக்கிறது ; ஒவ்வொரு ஜாதிக்கும் புராணம் இருக்கிறது ; ஒவ்வொரு கோவிலுக்கும் புராணமுண்டு. தாமிர வருணியாற்றுக்கென்றே தனியாக ஒரு பெரும் புராணம் உண்டு.

திருநெல்வேலிச் சீமையிலுள்ள நீரருவிகளெல்லாம் ஆகாச கங்கை ; கிணறுகள் கேணிகளெல்லாம் பாதாள கங்கை ; குன்றுகள் பாறைகளெல்லாம் கைலேயங்கிரி ; கல்லெல்லாம் சிவலிங்க மூர்த்திகள் ; புழுவும் பூச்சியும் மாசும் பாசியும் மலிந்த திருக்குளங்களெல்லாம் எழுகடல் ! அதாவது, சப்த சமுத்திரம். இவ்வாறு அகத்தியர் தொடக்கமான திருநெல்வேலிச் சீமைப் புலவர்கள் நீண்டகாலமாகப் பாடிவந்திருக்கிறார்கள். இப்படியிருக்க, திருவாழ்குடி என்ற ஆழ்குடி மாத்திரம் தனக்கு உரிய தல புராணத்தைப் பெறுமல் இருப்பது அழகாகுமா ?

2. புராணம் பிறந்த கதை

முதல் முதல், தல புராணம் பாடுவதற்குத் தலத்தைப் பற்றிய பொருத்தமான கதை யொன்று வேண்டுமல்லவா ? இக்கதை யாருக்குத் தெரியும் ? அச் சூதபுராணிகரை எப்படிக் கண்டு பிடிப்பது ?

பொதுவாகப் புராணம் பிறக்கும் தலங்களில் ஒரு ஜமீன்தார் இருப்பார். அவர் தம்மைப் 'புவிச் சக்கரவர்த்தி' என்று சொல்லிக்கொள்வார். புவிச் சக்கரவர்த்திக்கு ஒரு கவிச்சக்கரவர்த்தி இருப்பார். இப்படிப்பட்ட 'இரண்டு சக்கரவர்த்திகள்' ஒரூரிலே தோன்றினல், அவ்வூருக்கு ஒரு தலபுராணமும் தோன்றிவிடும். ஆழ்குடிக்கு இப்படிப்பட்ட பாக்கியம் ஒன்றும் ஏற்படவில்லே. அவ்வூரிலே தோண்டிக் கண்டு பிடிக்கப் பெற்ற கோவிலும் பாடல் பெற்ற (அதாவது ஆழ்வார் நாயன்மார்களால் பாடப் பெற்ற) கோயில் அன்று. சிறிதளவு தமிழ்ப்பழக்க முள்ளவர்களும் அங்கு மிகச் சிலரேயாவர். தமிழை ஆதரிக்கும் பிரபுக்கள் அவ்வூருக்குப் பக்கத்திலும் இல்லே. இந்நிலேயில் அவ்வூருக்குத் தல புராணம் இல்லாத குறையை நிறைசெய்து திருநெல்வேலிச் சீமையின் நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பிய புலவர் பெருமக்களின் தியாக உணர்ச்சியை என்னென்று கூறுவது ?

இத்தகைய புலவர்களுக்கு ஆழ்குடியின் பெயருக்கு இசைந்த கதையை எடுத்துரைப்பதற்கும் ஒரு 'சாமியார்' கிடைத்தாரென்றால், ஆழ்குடிக்கு வந்த அதிர்ஷ்டத்தை என்னென்று புகழ்வது ?

சாமியார் மரவுரியோடும் மான்தோலோடும் ஜடாமகுடத்தோடும் வண்டெனக் கறுத்த தாடி மீசையோடும் யௌவன புருஷராகக் காணப்பட்டார். அகத்திய மலேயிலிருந்து இறங்கி நேரே புலவர் சங்கத்திற்கு வந்ததாகவும் அவர்களுடைய குறையை நீக்குவதற்காகவே தாம் அகத்திய முனிவரால் அனுப்பப் பெற்றதாகவும் சொன்னர்.

பிறகு அவர் புலவர்களை நோக்கி, "ஆழ்குடியின் மகிமை அபாரமானது; ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் சொல்ல முடியாதது; இரண்டாயிரம் கைகளோடிருந்த பாணாசுரனாலும் எழுத முடியாதது. இப்படிப்பட்ட மகிமைவாய்ந்த ஆழ்குடியின் கதையை ஆதிகைலாசத்திலுள்ள ஸாக்ஷாத் பழைய பரமசிவம் பார்வதிதேவிக்கு சொன்னார்; அதை நந்திதேவர் கேட்டுக்கொண்டிருந்தார்; அவர் இரகசியமாக அக்கதையைச் சிவகணங்களுக்குச் சொன்னார்; இத்தேவரகசியத்தைத் தேவரிஷியான நாரத பகவான் எப்படியோ ஒற்றுக்கேட்டு வந்து, தேவபாஷையில் சூதபுராணிகருக்கு அருளிச் செய்தார். சூதபுராணிகர் நைமிசாரணியம் என்ற காட்டிற்கு ஓடிச் சென்று அங்கேயிருந்த முனிவர்களை நோக்கி, 'கேளுங்கள், நைமிசாரணியவாசிகளே!' என்று இக்கதையைச் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது நைமிசாரணிய வாசம் செய்த ஒரு கரடியும் இதைக் கேட்டுக் கொண்டிருந்தது. அது அகத்திய மலைக்கு வந்து கரடி பாஷையில் அகத்திய முனிவருக்கு விரிவாகக் கூறியது. அதை நான் உடனிருந்து கேட்டேன், அகத்தியர் அதைக் கரடி பாஷையிலிருந்து வடமொழியில் பெயர்த்து லட்சம் கிரந்தமாகப் பாடிவைத்திருக்கிறார். நான் இக் கதையை இப்பொழுது சுருக்கமாக உங்களுக்குத் தமிழில் சொல்லப் போகிறேன். நீங்கள் இதனை உலகம் உய்யும் பொருட்டு இருபதினாயிரம் விருத்தப் பாடல்களால் தூய செந்தமிழில், உதடுகள் ஒட்டாமல் வாசித்து மூச்சு முட்டிப் பொருள்காணும்படி, பாடி வெளியிடல் வேண்டும்" என்று சொன்னார். புலவர்கள் ஆனந்தக் கடல் ஆடினார்கள்.

3. ஆழ்குடியைக் குறிக்கும் புராணகதை

சாமியார் சொன்ன புராணகதை வருமாறு:—

திருநெல்வேலிச் சீமைப் புலவர்களே! கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் விசேஷமானது கடலுமல்ல; இவ்வுலகமுமல்ல. தாமிர வருணிதீரமாகிய இத்திருநெல்வேலிச் சீமையே விசேஷமானது; இச்சீமை, தேம்ஸ்நதி தீரமான ஆங்கிலச் சீமையைக் காட்டிலும் அதிக விசேஷமானது. நீலக் கடலாடை உடுத்த நிலமாமகளின் திருமுகமே திருநெல்வேலிச் சீமையென்றால், திருமுகத்தை அழகு செய்யும் திலகமே ஆழ்குடி யாகும்.

இதை இப்பொழுது நீங்கள் திருவாழ்குடியென்று அழைக்கிறீர்கள் அல்லவா? ஒருகாலத்தில் இத் திருவாழ்குடி எலிவாழ்குடியென்ற பெயர்வாய்ந்த திருநகரா யிருந்தது. அருகேயிருந்த

விட்டல நகரத்து அரசனை விட்டல ராயன் எண்ணிறந்த பட்டப் பெயர்களோடு எலிவாழ்குடியையும் ஆண்டு வந்தான்.

எலிவாழ்குடியில் அந்நாளிலே எலிகளும் இருந்தன; மனிதர்களும் இருந்தார்கள். முதல் முதல் எலிகளே அங்கு வசித்தன என்றும் மனிதர்கள் பின்னல் குடியேறினார்கள் என்றும் சரித்திரக்காரர்கள் சொல்லுவார்கள். இது எப்படியிருந்தாலும் நமது கதை நடந்த காலத்தில் எலிகளின் தொகை மனிதர் தொகையைக் காட்டிலும் அதிகமாயிருந்த தென்பது நிச்சயம்.

எலிகள் மனிதர்களை அவ்வூரிலிருந்து துரத்திவிடவேண்டுமென்று தீர்மானித்தன. அவை தொகையில் அதிகமாயிருந்தது போல், பலத்திலும் பேர் பெற்றிருந்தன. அவை பூனைகளுக்கும் அஞ்சுவதில்லை; நாய்களுக்கும் அஞ்சுவதில்லை; மனிதர்களுக்கும் அஞ்சுவதில்லை.

எலிகளின் திருவிளையாடல்

எலிகள் அவ்வூரில் பொறிகளையும் இழுத்துச் செல்லும்; பூனைகளின் தலைமேல் தத்திக் குதிக்கும்; நாய்களின் வாலைப் பற்றி இழுக்கும். குழந்தைகளின் தோள்மேலேறிக் கதை சொல்லும்; காதைக் கடிக்கும். வீட்டிலுள்ள சட்டி பானைகளை உருட்டித் தள்ளும். வெல்லத்தைக் கவர்ந்து விழுங்கும். உறைதயிர் ஆடி வெண்ணெயில் புரண்டு வெண்மை பெற்று வெள்ளை மக்களைப் போல் மிடுக்கொடு நடக்கும்.

பால் கலயத்தைத் தள்ளி உடைத்து நிலத்தில் ஓடும். பாலைப் பருகி மகிழும். சோறு படைக்கும் அகப்பையைப் பற்றி இழுக்கும். சுட்டு வைத்த அதிரசம் ஆறுவதற்கு முன்னமே எலிகள் அதை இழுத்துச் சென்றுவிடும்.

பட்டுத் துணிகளையும் அலட்சியமாகக் கடித்துக் கிழிக்கும். கதவுகளையும் பெட்டிகளையும் சுவர்களையும் குடைந்து வசதியான வளைகள் செய்து கொண்டு, குஞ்சுகள் பெற்றுக் களித்து வாழும். வம்பர் மகாசபைகளிலே கணகண வென்று ஒலி செய்யும் பெண் மணிகளின் பேச்சும் வெளியே கேளாதபடி எலிகள் கத்தி முழங்கும். எலிவாழ்குடியெங்கும் 'கீச்சுக் கீச்சு' என்று எலிகள் செய்த போர் முழக்கம் கடல் முழக்கம் போல் நிறைந்திருந்தது.

ஜனங்கள் அரசனிடம் முறையிடுவது

எலிப்படை அரசர் படைபோலவே பல பல கேடு விளைப்பதைக் கண்டு, நகரவாசிகளான மக்கள் நடுங்கிப் போயினர். அவர்

கடல் போலத் திரண்டு மாலைப் பொழுதிலே விட்டல நகரம் சென்று விட்டல ராயனை அடைந்து ஓலமிட்டுத் தங்கள் குறைகளை அறிவித்துக் கொண்டார்கள்.

முடிவில் நகரத் தலைவன் அரசனை நோக்கி, "மாட்சிமைதங்கிய மகா ராஜாவே! நாங்கள் பூமியில் இல்லாத புதுமையைக் கண்டோம். எங்கள் துன்பத்தை உடனே துடைத்தல் வேண்டும். நாங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உழைத்து உழைத்து எவ்வளவு கஷ்டத்தோடு தீர்வை செலுத்துகிறோம்! குடிகள் வழங்கும் வரிப்பணத்தை விழுங்குகின்றன உன் படைகளும் அரண்மனையும் ஆடம்பரங்களும் சுகபோக வாழ்வும்! காவல் செய்வது காவலன் கடமையன்றோ? காக்கும் தொழிலைக் கைவிடும் காவலன் கோல் செங்கோலாகுமோ? கொடுங்கோல் கடிதில் விழுந்து, குடிகள் வடிக்கும் கண்ணீரில் முழுகி அழிந்து விடுமன்றோ? அரசே! 'குடி உயரக் கோல் உயரும்' என்பதை மறந்தாயோ? காவல் செய்யாத காவலனுக்கு நாங்கள் இனி வரி வழங்கப் போவதில்லை; அல்லது இந்த நாட்டை உன் படைகளுக்கும் எலிப் படைகளுக்குமே விட்டு விட்டு, நாங்கள் வேறு நாட்டில் போய்க் குடியேறுவோம்" என்று ஜனங்கள் பெயரால் முறையிட்டுக் கொண்டான்.

எலிவேட்டையா? எலிப்போரா?

கேளுங்கள் திருநெல்வேலிச் சீமைப் புலவர்களே! மாட்சிமை தங்கிய விட்டல ராயன் பேராச்சரியம் அடைந்து வீராவேசத்தோடு எலிவேட்டைக்குப் புறப்பட்டான். பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் கைலாகு கொடுத்துவர, மந்திரிகளும் மற்ற அதிகாரவர்க்கங்களும் சூழ்ந்துவர, ஆயுதங்கள் ஜண ஜண என்று ஒலி செய்ய, போர்ப்பறை முழங்க, தலையிலே இரத்தின மரக்கால்போன்ற ஒரு பெரிய கிரீடத்தைக் கவிழ்த்துக்கொண்டு, அரசன் படாடோபமாகச் சேனை வெள்ளத்தோடு சென்றான். பார்த்தவர்கள் "அரசன் வேட்டையாடப் போகிறானா? அல்லது போருக்குத் தான் புறப்படுகிறானா?" என்று அதிசயித்தார்கள்.

இராஜசைனியம் எலிவாழ்குடியை அடைந்து அங்கேயே இராப் பொழுதைக் கழித்தது; மறுநாள் எலிவேட்டையாடலாம் என்பது அரசன் கருத்து. ஆனால் அன்றிரவே எலிகளெல்லாம் 'திடும்!' என்று வளைகளிலிருந்து குதித்துக் கும்பகர்ண உபாசனை செய்து கொண்டிருந்த இராஜசேவகர்கள் மீது தைரியமாகப் பாய்ந்து அவர்கள் ஆடைகளையும் சாமான்களையும் நாசம் செய்யத் தொடங்கின.

போர்வீரர்களும் விழித்துக்கொண்டு "இந்த எலிகளை இப்பொழுதே தொலைத்து விடுவோம்" என்று வீரவசனம் கூறி 'பம் பம்' என்று சங்கநாதமும் சிங்கநாதமும் செய்தனர். பொல்லாத எலிகளும் அஞ்சாது 'கீச்சுக் கீச்சு' என்று வீரவாதம் கூறிப் போர் புரிந்தன. அரசன் முதலானோர் எதிர் பார்த்திருந்தபடி எலி வேட்டை எலிப் போராகவே முடிந்தது.

புலவர்களே! விட்டலராயன் செய்த எலிப்போருக்கு இராம ராவணயுத்தமும் ஒப்பன்று; மகாபாரத யுத்தமும் ஒப்பாகாது; சென்ற உலக மகாயுத்தமும் ஒப்பாகாது. எலிப் போருக்கு உபமானம் எலிப் போரேயாகும். அப்போரைப் பார்த்துக்கொண்டிருந்த தேவகணங்களும் அசுரகணங்களும் திகில் அடைந்து போயின.

சூரியோதயம் ஆவதற்குள் பயங்கரமான அந்த எலிப் போர் முடிவெய்தியது. கேளுங்கள், புலவர்களே! அப் போர் எலிகளுக்கு வெற்றியாகவும் மனிதர்களுக்குத் தோல்வியாகவும் முடிந்தது. மனித வீரர்களின் ஆடம்பர உடைகளெல்லாம் எலி வீரர்களுக்கு விருந்தாயின. அரசனும் பிறரும் வெட்கத்தோடு தலைநகரத்தை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

விட்டல வேந்தன் துயரம்

விட்டல ராயனும் அவனுடைய வீரர்களும் 'எலி' யென்ற சொல்லைக் கேட்டவுடனே 'கிலி' பிடித்தவராயினர். இன்னது செய்யலாம் என்பதை அறியாதவனாகி, அரசன் சிங்காதனத்திலிருந்து பேய் கண்டவனைப் போல் மருண்ட முகத்தோடு விழித்துக் கொண்டிருந்தான். அருகே இருந்த அமைச்சர்களும் ஒன்றும் தோன்றாது ஆந்தைபோல் 'துறு துறு' என்று விழித்துக் கொண்டிருந்தனர்; அங்கே கூடியிருந்த நிர்வாக சபையினரும் திகைப்புற்று ஒருவித அபிப்பிராயமும் வெளியிடாமல் எழுதிவைத்த சித்திரம் போல் ஆசனங்களில் அசையாது அமர்ந்திருந்தனர்.

அந்த நிலையில் அரசன் "என் சிங்காதனத்தையும் செங்கோலையும் மணிமுடியையும் இந்த இராஜ்யத்தையும் இன்றே துறப்பேன்; கொள்வார் இருந்தால் கொள்ளலாம்" என்று சொல்லித் தலையைச் சொறிந்தான். மந்திரிமாரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் தங்கள் பதவிகளை விட்டு விட்டுப் பரதேசிகளாக எங்கேயாவது ஓடிப்போய்ப் பிழைக்கலாமா? என்று யோசித்தார்கள். இவ்வாறு அவர்கள் கதவை அடைத்துத் தாள் இட்டுக்கொண்டு அரண்மனைக்குள் இருந்து ஆலோசனை செய்தார்கள்.

அவர்கள் மந்திராலோசனையில் ஆழ்ந்திருக்கையில், திடீரென்று யாரோ கதவைத் தட்டிய ஓசை காதில் விழுந்தது. மன்னன் மருண்டு, "ஐயோ! அஃது என்ன ஓசை? எலிகள் படையெடுத்து வந்து என் அரண்மனையை முற்றுகை செய்கின்றனவோ?" என்று அலறினன்.

"அரண்மனையை எதிரிகளிடம் விட்டு விட்டு நாம் ஓட்டம் எடுப்போம்" என்று பதறிக் கொண்டே உத்தியோகஸ்தர்கள் கதவைத் திறந்து பார்த்தார்கள். அப்பொழுது புதியவன் ஒருவன் பளிச்சென்று உள்ளே நுழைந்து, ஏங்கி மருண்டு நடுங்கிக் கொண்டிருந்த அரசன் முன் நின்றான்.

புதுமைச் சித்தன்

மெலிந்து நீண்ட உடலில் அவன் காவியாடை கட்டியிருந்தான்; தாடியும் சடையும் இன்றி, மழித்த சிரமும் மொழு மொழு என்ற முகமும் உடையனாயிருந்தான்; பளபளவென்று காந்த ஒளி வீசும் கண்கள்! கூரிய ஊசிபோல் கூர்ந்து நோக்கும் பார்வை! இதழ்களில் உள்ளும் புறமுமாக ஓடி ஆடும் அழகிய இளஞ்சிரிப்பு!

அப்புதியவன் விட்டல வேந்தனை முகம் நோக்கி, 'ஜய விஜயீபவ ராஜேந்திர!' என்று வாழ்த்தினன். அக்கோலத்தையும் சீலத்தையும் கண்டு ஆச்சரியம் அடைந்த அரசனும் அதிகாரிகளும் 'தவ ராஜேந்திரா! உனக்குக் கோடி வந்தனம்' என்று உபசரித்தனர்.

பிறகு அப்புதியவன் பெயர் என்ன என்றும் ஊர் எது என்றும் அவர்கள் விசாரித்தார்கள். அதற்கு அவன் "பூவுலகத்திலே என்னைப் புதுமைச்சித்தன் என்பார். ஆனால் எனக்குப் பேருமில்லை; ஊருமில்லை" என்று சொன்னன்.

சித்தன் பின்னும் கூறுவான் :—"விட்டல வேந்தே! நான் பல உலகங்களிலும் சஞ்சரித்து வருகிறேன். செவ்வாய் மண்டலத்திலும் சந்திர சூரிய மண்டலங்களிலும் தவம் கிடந்து சித்திபெற்றிருக்கிறேன். 'வானத்தை வில்லாக வளைப்பேன்; மணலைக் கயிறாகத் திரிப்பேன்' என்று கூறும் தமிழ்ச் சித்தர் கூட்டத்தில் சேர்ந்தவன் அல்லேன். நான் அடைந்திருக்கும் மந்திரசித்தியின் மகிமையால், மண்ணிலே ஊர்ந்தும் நடந்தும் செல்லும் பிராணிகளையும் நீரிலே மிதந்தும் நீந்தியும் செல்லும் ஜந்துக்களையும் விண்ணிலே பறந்தும் பாய்ந்தும் செல்லும் உயிர்களையும் மயக்கி இழுத்துச் செல்வேன். உங்களை வருத்தும் பேய் பூதம் தேள் பாம்பு சிங்கம் புலி முதலான எவ்வுயிரையும் மடிந்து விழச் செய்யும் மந்திரத்தை

எனக்குச் சூரியநாராயண மூர்த்தியே நேரில் உபதேசித்தருளினர்'' என்றான்.

உடனே அரசன் சித்தனை நோக்கி, "மகாபுருஷனே! நீ இந்தப் பிரதேசத்திலுள்ள எலிகளையும் மயக்கி விடுவாயோ?'' என்று அவநம்பிக்கையோடு கேட்டான்.

சித்தன், கையிலே புல்லாங்குழலொன்று வைத்திருந்தான். அவன் அதனை அரசனிடம் காட்டி, "என் சித்தியும் சக்தியும் இக் குழலுக்குள் அடங்கியிருக்கின்றன. இதன் உதவியால் நான் கோபால புரத்திலே கொசுவை ஓட்டினேன். வாசவபுரத்திலே வௌவாலை ஓட்டினேன். மூரம்பநாட்டிலே மூட்டுப் பூச்சியை ஓட்டினேன். ஆயிரம் பொற்காசு கொடுத்தால், எலிவாழ்குடியிலும் எலியை ஓட்டு வேன்'' என்றான்.

அப்பொழுது விட்டல ராயன் "ஆயிரம் பொன்னா? பதினாயிரம்—லட்சம்—பொன் வேண்டுமானாலும் தருவேன்'' என்று ஆத்திரமாக வாக்களித்தான்.

சித்தன் குழல் ஊதிய சிறப்பு

புதுமைச் சித்தன் புன்னகை பூத்தான். எலிவாழ்குடிக்கு வந்து குழல் ஊதினான். கூரிய கண்கள் விரிந்து மிளிர்ந்தன. ஒரு சமயம் அக் குழலோசை அமுத கீத வலையொன்றைப் பின்னி இழைப்பதுபோல் இசைத்துக்கொண்டிருந்தது. ஒரு சமயம் அஃது ஓல்லென்று ஒலித்து ஓ வென்று குமுறியது; ஆ வென்று அலறியது. ஒரு சமயம் அது கண்ணனது குழலின்பம் போலவும் நாரதனது வீணா கானம் போலவும் ஒலி செய்தது. வேறொருசமயம் அது கல்லென்ற பேரொலி எழுப்பிப் போர் முரசுபோல் கம்பீரமாக ஒலித்தது. அப்பால் அது குழந்தைகள் மிழற்றும் மழலைபோலவும் உத்தமக் கவிஞனது தெய்வப்பாடல் போலவும் இசைத்துக் கேட்போர் உள்ளங்களில் ஆயிரம் ஆனந்தக் கனவுகளைத் தோற்றுவித்தது. சித்தன் எழுப்பிய குழலோசை எலிவாழ்குடி யெங்கும் பரந்து நிறைந்து எதிரொலி செய்தது.

எலிகள் புறப்பட்ட காட்சி

எலிகள் கூட்டம் கூட்டமாக வெளிப்பட்டெழுந்தன. பெரிய எலி, குட்டி எலி, குதிரெலி, சதுரெலி, நீரெலி, காரெலி, செவ்வெலி, தவிட்டெலி, வெள்ளெலி, முள்ளெலி, விஷஎலி, தூங்கெலி, வீங்கெலி, புடையெலி, வரப்பெலி, மெலிந்தஎலி, தடித்தஎலி, ஸாண்டோ எலி, சோதா எலி, முதலான பல வகை எலிகளும்

ஆணும் பெண்ணுமாகப் புறப்பட்டு வந்தன. தாயெலி, தந்தையெலி, மாமனெலி, மருகனெலி, மச்சானெலி, பாட்டனெலி, பூட்டனெலி, பேரன்-பேத்தியெலிகள், அண்ணன்-தம்பி யெலிகள், அக்காள்-தங்கையெலிகள், மாப்பிள்ளை-மணப்பெண் எலிகள், ஆகிய எலிகளெல்லாம் குடும்ப சகிதமாகப் பந்து மித்திரர்களோடு கூடிக் கோத்திரம் கோத்திரமாகவும் ஜாதி ஜாதியாகவும் இனம் இனமாகவும் பிரிந்து பட்டாளம் பட்டாளமாக வந்தன.

வீர எலிகள் மீசை முறுக்கி வந்தன. உற்சாக எலிகள் வால்களை ஆட்டிக்கொண்டு வந்தன. அவ் வெலிகளெல்லாம் குதித்துக் குதித்துக் கூத்தாடிக் கொண்டும், கீச்சுக் கீச்சு என்று கீதம் பாடிக் கொண்டும் புதுமைச் சித்தனைப் பின் தொடர்ந்தன.

சித்தன், குழல் ஊதிக்கொண்டே சென்றான். அக் குழலோசை ஒரு சமயம் எலிகளின் உள்ளத்தில் தேனெனப் பாய்ந்தது. ஒரு சமயம் அது, நெய்க்குடம் கவிழ்ந்தது போலவும் வெண்ணெய்ச் சட்டி தகர்ந்தது போலவும் மீன் கலயம் உடைந்தது போலவும் ஊறுகாய்ச் சாடி உருண்டது போலவும் தானியவகைகள் அங்குமிங்கும் சிதறியது போலவும் எலிகளின் செவிகளிலே ஒலி செய்தது.

ஒரு சமயம் அக்குழலோசை எலிகளுக்குப் போர் வெறியை உண்டாக்கியது. ஒரு சமயம் அது எலிகளுக்கு வெற்றிகாட்டி ஜய கோஷம் செய்வதுபோலிருந்தது. வேறொரு சமயம் அது எலிகளை நோக்கி "வாருங்கள்! வந்து பாருங்கள்! ஆனந்தம் அடையுங்கள்" என்று பொதுவாக வேண்டிக் கொள்வது போலிருந்தது. மீண்டும் அது "வாருங்கள், எலி வீரர்களே! இதோ! பாலைப் பருகுங்கள். வெண்ணையை விழுங்குங்கள். காயும் கனியும் ஊனும் மீனும் உண்டு மகிழுங்கள்" என்று கொஞ்சும் குரலில் கூறுவது போலிருந்தது. முடிவில் அது "உணவே தெய்வம், உண்பதே பேரின்பம்" என்று குயிலினும் இனிய குரலில் பாடுவது போலிருந்தது.

எலிகள் பரகதியானது

சித்தன் தாமிரவருணி ஆற்றங்கரைக்குச் சென்றான். எலிகளும் அவனோடு சென்றன. ஆற்றிலே வெள்ளம் பெருகி இருகரையும் புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. சித்தன் தண்ணீரில் இறங்கினான். உடனே எலிகளெல்லாம் வெள்ளத்தில் விழுந்து மாண்டன. அவை தாமிரவருணியின் தீர்த்தமகிமையால் தவசிகளுக்கும் எட்டாத மோட்ச லோகத்தை அடைந்தன.

அவற்றுள் ஓர் எலிமாத்திரம் இராஜதந்திரியாக இருந்ததால் எப்படியோ தப்பித்துக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரையிலுள்ள

வல்ல நாட்டை அடைந்தது. அதன் பரம்பரையில் வந்த எலிகளே இன்று இவ்வுலகில் மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் பரவி எவ்வளவோ தொந்தரவை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

அரசனும் சித்தனும்

எலிகள் ஒழிந்த நற்செய்தி கேட்டு விட்டல ராயன் ஆனந்தம் அடைந்தான். ஜனங்களும் பரம சந்தோஷம் அடைந்து அத்தினத்தை ஒரு திருவிழாவாகக் கொண்டாடினார்கள். எலிவாழ்குடி மகா ஜனங்கள், எலிகள் ஆற்றில் ஆழ்ந்து போனதற்கு அறிகுறியாகத் தங்கள் நகரத்திற்கு எலி ஆழ்குடியென்று பெயர் வைத்தார்கள். அப்பெயர்தான் சுருக்கமாக ஆழ்குடி யென்று வழங்கலாயிற்று.

கேளுங்கள் புலவர்களே! எலிப்பகை ஒழிந்த செய்தியை விட்டல நகரத்து வெண்கல மணிகள் கணீர்! கணீர்! என்று ஒலித்துப் பிரசுரம் செய்தன; சங்குகள் சப்தித்தன; மங்கலவாத்தியங்கள் இசைப்ப, மங்கையர் சோபனம் பாட, ஜயபேரிகை முழங்க, மாட்சிமைதங்கிய விட்டலராயன் மணிமுடிசூடித் தன் சிங்காதனத்தில் ஆடம்பரமாகக் கொலுவீற்றிருந்தான். அமைச்சரும் பிரபுக்களும் 'ஜய ஜய ராஜேந்திர!' என்று கோஷித்தார்கள். அப்பொழுது புதுமைச் சித்தன் மீண்டும் அரசன் முன் தோன்றினன்; வாக்களித்திருந்தபடி ஆயிரம் பொன்னையும் விரைவாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டான்.

அரசனும் இராஜதந்திரிகளும் தமக்குள் நீண்ட நேரம் ஆலோசனை செய்தபின், சித்தனை நோக்கி "நீ செய்தது சாமானிய வேலை. அதற்கு ஐந்து பொன் கொடுப்பதே அதிகம். ஐந்து பொன்னுக்கு மேல் கொடுத்தால், உலகம் சிரிக்கும். அதுவும் வேண்டாமென்றால் வந்தவழியே திரும்பிப் போகலாம்" என்று சொல்லிவிட்டார்கள்.

இதைக் கேட்ட சித்தன் அரசனை முகம் நோக்கி "அரசனே! நீ முழு மோசக்காரனயிருக்கிறாய். மோசம் நாசம் என்ற சட்டம் உனக்குத் தெரியாதா?" என்று சொல்லி வெளியே சென்றான்.

பிறகு சித்தன் விட்டல நகரத்திலிருந்து ஆழ்குடி வரையிலும் குழல் ஊதிக்கொண்டே போனன். அக் குழலோசை ஒரு மாயவலை போலப் பின்னி வளர்ந்து மனைதோறும் பரவிச் சென்றது. அது விட்டலராயனது அரண்மனைக்கும் சென்றது. உடனே அங்கிருந்த சிறுவர் சிறுமியர் அனைவரும் தாளம் போட்டுக் கொண்டே சிரித்துக் கொண்டு எழுந்து சித்தனைத் தொடர்ந்தார்கள். அரசன் குழந்தைகளும் அவனைத் தொடர்ந்து சென்றன.

சித்தன் குழந்தைகளோடு மறைந்தது

விட்டல நகரத்துக் குழந்தைகள், விளக்கை நெருங்கும் விட்டிலைப் போலச் சித்தனை நெருங்கி ஆனந்தக் கூத்தாடின. ஆழ்குடி வாசிகளான சிறுவர் சிறுமியர் தேனில் ஆழும் ஈ யெனச் சித்தன் இசைத்த கீதத்தில் ஆழ்ந்து தம்மை மறந்தனர். குழந்தைகள் கூட்டம் அலையலையாகப் பொங்கிப் பரந்து சென்றது.

இக் காட்சியைக் கண்டும் ஜனங்கள் இன்னது செய்வது என்று அறியாமலே சும்மா இருந்தார்கள். மந்திரிகள் மதிமயங்கியிருந்தார்கள். உத்தியோகஸ்தர்களெல்லாம் ஊமைகளைப் போலிருந்தார்கள். அரசனும் பேச நா எழாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

பாகனை மீறிய குதிரைபோல், தாமிரவருணி வெள்ளம் நுரை கக்கி வழிதுறை அறியாது மண்டிப் பாய்ந்தது. எலிகளைப் போல் நமது குழந்தைகளும் வெள்ளத்தில் மூழ்கிவிடுமே என்று அரசனும் பிறரும் அஞ்சி நடுங்கினர். ஆனால், சித்தன் குழந்தைகளோடு அவ் வழியே செல்லாமல் கிருஷ்ணகிரியை நோக்கி நடந்தான். அதனைக் கண்ட அரசன் "இனி நாம் அஞ்சவேண்டாம்; குழந்தைகளோடு அம்மலையைத் தாண்டுவது அரிது. சித்தன் இரங்கிக் குழல் ஊதுவதை நிறுத்திவிடுவான், தாய்மார் முகம் நோக்கிக் குழந்தைகள் ஓடி வரும்" என்று நினைத்தான்.

ஆனால் சித்தனும் குழந்தைகளும் கிருஷ்ணகிரியை அடைந்ததும், அம்மலையடிவாரத்தில் இருந்த மாயக் கதவு ஒன்று படீரென்று திறந்தது. அம்மலை வாசலுக்குள் சித்தனும் குழந்தைகளும் நுழைந்து மறைந்தார்கள். குழந்தைகளை இழந்த அரசனும் பிறரும் மோசம் நாசம் என்று சித்தன் சொன்னதை நினைந்து கொண்டு துக்கத்தில் ஆழ்ந்தார்கள். ஆழ்குடி வாசிகள் ஆற்றுவெள்ளத்தில் ஆழ்ந்த எலிகளைப்போல் சோக வெள்ளத்திலே ஆழ்ந்துவிட்டார்கள்.

4. புலவர் மகிழ்ச்சி

இவ்வாறு சாமியார் கதைசொல்லி முடித்தார். திருநெல்வேலிச் சீமைப் புலவர்கள் ஆனந்தத்தால் மெய்மறந்து தலைவிரிகோலமாகத் தாண்டவமாடினார்கள். "கதை மங்களமாக முடியாவிட்டாலும் பாதகம் இல்லை. சாமியார் உள்ளது உள்ளபடியே கூறினார். நாமும் உள்ளது உள்ளபடியே பாடவேண்டும். கம்பர் முதலான வம்பர்களைப் போல் கற்பனை செய்து காவியத்தைப் பாழாக்கலாகாது" என்று தூய தமிழ்ப்புலவர்கள் துணிந்தனர்.

மோனை பிசகினால், பிராசம் தவறினால், ஒவ்வொரு பிசகிற்கும் தவறுதலுக்கும் ஓராயிரம் ஆண்டு ரௌரவாதி நரகங்களில் காலம்

தள்ள வேண்டியிருக்குமென்று சாமியார் முன் எச்சரிக்கை செய்தார். ஒவ்வொரு பாட்டிற்கும் பல பொருள் காட்டவேண்டியிருக்குமென்றும் சாமியார் முன் கூட்டியே எச்சரித்து விட்டார்.

ஆனால் பொருள் கண்டு பிடிப்பதைப் பற்றிய கவலை புராணம் பாடுவோர்க்கு வேண்டியதில்லையல்லவா ? பாடும் புலவர்கள் பாடி வைத்துவிட்டால், பொருள் தேடும் புலவர்கள் மற்றவேலையைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் முறை.

எனவே, பல புலவர்கள் பங்கு போட்டுக்கொண்டு காண்டம் காண்டமாகவும் படலம் படலமாகவும் பாடத் தொடங்கினர். இப் புராணத்தில் எலிகளின் திருவிளையாடலைக் கூறும் பகுதியே திருவிளையாடற் புராணத்தின் அளவிற்கு விரிந்துவிட்டது. 'விட்டல வேந்தன் செய்த எலிப் போர்' கம்ப ராமாயண யுத்தகாண்டத்திற்கு மேல் விரிந்துவிட்டது. 'எலிகளின் தேகம் பரகதியான வரலாறு' வாசகர் மூச்சை அடைக்கும்படி வருணிக்கப்பட்டிருக்கிறது. இப் புராணத்தைக் குறித்துக் கேள்வியுற்ற ஆழ்குடி வாசிகள் தங்கள் ஊரின் பெருஞ்சிறப்பை உள்ளபடி அறிந்து கொண்டவர்களாய், ஆனந்த வெள்ளத்திலே ஆழ்ந்து கிடக்கிறார்கள்.

கல்பகம்

கே. சாவித்திரி அம்மாள்

(208-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாட்காலை பொழுது விடிவதற்குள் தாயாரம்மாள் எழுந்து மகன் வரவிற்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கிருந்த ஆவலில் பலமுறை அவன் வரமாட்டானோவென்று தானே சொல்லிக்கொண்டாள். கல்பகமும் அதிகாலையிலெழுந்து வீட்டுக்காரியங்களை யெல்லாம் செய்துவிட்டாள். அன்று அவள் மனமிருந்த நிலைமையை யார் அறிவார்? சிறிதுநேரத்திற்கெல்லாம் சலங்கை கட்டிய ஒரு மாட்டுவண்டி வாயிலில் வந்து நிற்க மாசிலாமணி வண்டியினின்றும் குதித்து உள்ளே நுழைந்தான். ஆள் முன்னிலும் வாட்டமாய்ச் சிவந்து பருத்து விளங்கினான். வீட்டின் பின்கட்டினின்றும் மெதுவாய் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்த கல்பகத்தின் கண்களுக்கு அவன் மன்மதனே வடிவெடுத்து வந்திருப்பதுபோல் தோன்ற, தன்னை இப்பொழுது அவன் லக்ஷியம் செய்வானோவென்ற சந்தேகமுதித்தது. தாயாரம்மாள் மகனைப்பார்த்து உள்ளம் பூரித்தாள். மாசிலாமணியும் யாவருடனும் வெகு தாராளமாய்ப்பேசலானான். சற்று நேரத்திற்குப்பிறகு அவன், "கல்பகமெங்கே?" என்று கேட்க, "உள்ளே வேலையாயிருக்கிறாள்; வருவாள்" என்றாள் தாயாரம்மாள். இரண்டுவருஷமாய் அவன் ஊரிலில்லாததால் அங்குள்ளோரனைவரும் அவனைப்பார்க்க ஆவலாய் வந்தனர்.

"பார்த்தீர்களா? நான் கூறியது சரிதானல்லவா? எல்லாம் நாம் நினைத்தபடி நடக்குமென்று எனக்குத்தெரியும். மாசிலாமணி முன்போலில்லை. இப்பொழுது வயதுவந்தவனாகிவிட்டான். இதோ என் கையிலிருக்கும் இம் மண்கட்டியைவிட அதிகமாய் இனி அவன் கல்பகத்தை மதிக்கமாட்டான்" என்று நாராயணம்பிள்ளை முக மலர்ச்சியுடன் சொல்ல, அவன் கூறியது உண்மையென்று தாயாரம்மாளுக்கும் பட்டது.

இனி நாம் பின்கட்டில் கல்பகம் என்ன செய்கிறாளென்று பார்ப்போம். "துரைபோல் உடுப்பணிந்து இப்பொழுது எவ்வளவு அழகாயிருக்கிறார்! கல்பகம், நீ பார்க்கவில்லையா?" என்று வேலைக்காரப்பெண் வேணு ஓடிவந்து சொல்ல, "சரி, உன்வேலையைப்

பார்த்துக்கொண்டுபோ; நான் எல்லாம் பார்த்தாய்விட்டது'' என்று கல்பகம் முகவாட்டத்துடன் கூறினாள். மாசிலாமணி தன்னைப்பற்றிக் கேட்கவில்லை; ஒருகால் தன்னைக் கைவிடுவானோவென்று எண்ணி அவள் மனம் ஏங்கிற்று. அப்படியாயின் அவள் நாராயணம் பிள்ளைக்கன்றோ வாழ்க்கைப்படவேண்டும்? இடிந்தமனத்துடன் அவள் அவனையும் அவன் நொண்டிக்காலையும்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

சாப்பாடானதும் தன் காரியங்களைப்பற்றிப் பேசுவற்காகத் தாயாரம்மாள் மகனை ஓர் உள்ளுக்கு அழைத்துச்சென்றாள். அவர்களுடன் நாராயணம் பிள்ளையும் சென்றான். அம்மூவரும் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு வெளிவந்தனர். தாயாரம்மாளின் முகம் மலர்ந்து திருப்தியோடு விளங்கிற்று. அவள் காரியஸ்தனோவெனில்—பெரியகாரியவாதியாகையால், என்றும் போல் அவன் முகத்தினின்றும் ஒன்றும் அறியக்கூடாமலேயிருந்தது. மாசிலாமணிமட்டும் முகம் குன்றித் தோன்றினான். கல்பகத்தைப் பற்றி இனி நினைப்பதில்லையென்று தாயாரம்மாள் அவனிடம் உறுதி மொழி வாங்கிக்கொண்டாள். ஆனால் அதை அவனே நேரில் கல்பகத்தினிடம் சொல்லவேண்டுமென, "அம்மா! நீதான் கூறிவிட்டாலென்ன?'' என்று மாசிலாமணி தலைகுனிந்தபடி கேட்டான். அவனே நேரில் சொல்லுவதென்று முன்பே ஒத்துக்கொண்டிருப்பதால் அவ்விதந்தான் செய்யவேண்டுமென்று தாயாரம்மாள் சொன்னாள்.

"நீ அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். கல்பகத்திற்குத் தெரியும்'' என்றான் நாராயணம் பிள்ளை. "ஏதோ குழந்தைத்தனமாக நீயே நேரில் சொல்லி உத்தரவு கொடுக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். அவ்வளவுதான். ஒன்றும் ஆக்ஷேபிக்கமாட்டாள்'' என, அவ்வார்த்தைகளைக் கேட்க மாசிலாமணிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அவனை உதைத்து வீட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. "அப்படியானால் சாயந்திரம் அவளைக் கொல்லைத்தோட்டத்திற்கு வரச்சொல். நான் பேசுகிறேன்'' என்றான். இதற்கு அவன் தாய் சரியென்று ஒப்புக் கொண்டாள்.

அவர்கள் வீட்டின் பின்புறம் விஸ்தாரமான கொல்லை. பல வகைப்புஷ்பச் செடிகளும், பழவகை மரங்களும் வைத்துப் பயிராக்கப்பட்டிருந்தன. தோட்டத்தின் கடைசியில் ஒரு பெரிய தூரவு இருந்தது. அதிலிருந்து இறைத்துத் தோட்டத்திற்கு ஜலம் பாய்ச்சுவது வழக்கம். மாலைப்பொழுது நெருங்கியதும் தாயாரம்மாள் கல்பகத்தைப் பரிவுடனழைத்துப் புன்னகை தவழும்

முகத்துடன் தோட்டத்திற்குச் செல்லும்படி கூறினாள். இதைக் கேட்டதும் தன் மனோராஜ்ய மெல்லாம் தீர்ந்துவிட்டதெனக் கல்பகத்திற்குத் தோன்றியது.

"மாசிலாமணி உனக்கு எல்லாவற்றையும் உள்ளபடி சொல்லுவான். கல்பகம்! எங்களாலியன்றதை நாங்கள் உனக்குச் செய்வோம். இத் துக்கமயமான உலகில் நாம் விரும்பியதனைத்தையும் அடைவதென்றால் சாத்தியமா? எழுந்திரு, தோட்டத்திற்குப்போ" என்றாள் தாயாரம்மாள்.

"ஆகட்டும் ஆச்சி" என்றாள் கல்பகம்.

"போய் சமத்தாய் நடந்துகொள்; தெரியுமா?"

"அப்படியே யாகட்டும்" என்றாள் அச்சிறுமி மீண்டும் மெதுவாய். அப்பொழுது அவளுள்ளம் தவித்த தவிப்பை யார் அறிவார்? தாயாரம்மாள் அவள் தலையைத் தன் மார்பிற் சாய்த்து அன்புடன் முத்தமிட்டாள்.

கல்பகத்திற்கு முன்பே மாசிலாமணி தோட்டத்திற்குச் சென்றுவிட்டான். அவ்விருவரும் குழந்தைகளா யிருக்கும்பொழுது அங்கேதான் எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். பின்பு அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்க ஆரம்பித்த பிறகும் அவ்விடத்தில்தான் அடிக்கடி சந்தித்து அளவளாவிப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால் இப்பொழுதோ அவள் வரவை எதிர் நோக்கி நின்ற மாசிலாமணிக்கு அவள் வருவதற்குமுன் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய்விட வேண்டுமெனத் தோன்றியது. ஒரு முல்லைப்பந்தலின் கீழ்ச் சற்று மறைவாயிருந்த மேடையின்மீது உட்கார்ந்துகொண்டான். கல்பகம் உள்ளிருந்து மெதுவாய்த் தயங்கிய நடையுடன் அவனிருக்குமிடம் வந்து சேர்ந்தாள். திடீரென்று மாசிலாமணிக்குச் சிறிது தைரியம் பிறந்தது. நாராயணம் பிள்ளை கூறியதுபோல் ஒருவேளை அவள் அதிகமாயொன்றும் கவலைகொள்ளாதிருக்கலாகாதா வென்று எண்ணலானான்.

"கல்பகம்! இப்படி யுட்கார்" என்று சாதாரணமாய்க் கூறுவதுபோல் ஆரம்பித்து, "நாம் ஒருவரையொருவர் பார்த்து இரண்டு வருஷகாலமாய்விட்டது" என்றான்.

தன்னை நேசிப்பதற்கடையாளமான வேறு குறிப்பொன்றும் காணவில்லையே யென்று யோசனையிலாழ்ந்தவளாய், கல்பகம்

"ஆம்" என்று மெதுவாய்ப் பதில் சொன்னாள்.

"இப்பொழுதோ இங்குப்பார்த்தால் எல்லாம் ஓரே குழப்பமாயிருக்கிறது. ஆயினும், யாவும் நமது நலத்திற்கென்றே நினைக்கிறேன்."

"இருக்கலாம்" என்றுள் கல்பகம் நடுங்கிய குரலில் தலை குனிந்தபடியே. இரண்டொரு நிமிஷம் இருவரும் மௌனமாயிருந் தனர்.

மாசிலாமணி தன்னைச் சிறிது தைரியப்படுத்திக்கொண்டு "கல்பகம்! நாமிருவரும் நிரம்ப அசட்டுத்தனமா யிருந் துவிட்டோம். உனக்கும் தோன்றவில்லையா ? நான் உன்னை விவாகம் செய்துகொள் வது முடியாதென்பது எனக்கு இப்பொழுது நன்றுய் விளங்கு கிறது" என்றுன். அவ்வார்த்தைகளைக்கேட்டுக் கல்புகத்தின் தலை சுற்றிற்று. முன்பு கூறிய உறுதிமொழிகளெல்லாம் வெறும் மொழி களாயினவா ? கீழே விழுந்துவிடாவண்ணம் மேடையை இறுகப் பிடித்துக்கொண்டாள். அவள் இளமையும் அழகும் அவன் மனத் திற்படவில்லை யென்றுல், கிராமாந்தரத்தில் வளர்ந்த அவளுக்கு வேறென்ன பேசத்தெரியப்போகின்றது ?

"அத்தான் ! நாம் மணம்புரிந்துகொள்வது ஒருகாலும் முடி யாதென்று சொல்லுகிறீர்கள் ?" என்று விக்கிய குரலில் கேட்டாள்.

"ஆம், என் கல்பகமே ! அம்மா அதற்கு மிகவும் விரோதமா யிருப்பதை நீ அறிந்துகொள்ளவில்லையா ?"

"கல்யாணத்திற்கு இப்பொழுதென்ன அவசரம் ? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே."

"ஹா ! அதுதான் முடியாது கல்பகம் !" என்றுன் மாசிலாமணி. "நாம் இன்றே இரண்டிலொன்று தீர்மானிக்கவேண்டும். அம்மா பணம் கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டால் நானென்ன செய்வேன் ? நீ நாராயணம் பிள்ளையை மணம்புரிய ஒப்பாவிட்டால், அப்புறம் நீ இவ்வீட்டிலிருக்கவும் அவள் சம்மதியாள். ஏன் ? கல்பகம் ! சற்று வயதானவனுயிருந்தாலும் அவனுக்கென்ன குறை ? நீ அவனைக் கலியாணம் செய்துகொண்டால் இவ்விடமேயிருக்கலாம். நானும் இங்கு வரும்போதெல்லாம் உன்னைப் பார்த்துப்போவேன்."

"அப்படியானுல் நீங்களே என்னை நாராயணம் பிள்ளையை விவாஹம் செய்துகொள்ளும்படி கூறுகிறீர்களா ?"

"ஆம், அதுவே சரியென்று தோன்றுகிறது."

கல்பகம் மௌனமாய்விட்டாள்.

"நானென்ன செய்வது ? நீயே சொல். இப்பொழுது அம் மாவிடம் சென்று உன்னை விடமுடியாதென்று சொன்னுல் என்ன விளையுமென்பதை யோசித்துப்பார் கல்பகம்."

"தம் சொந்த மகனையே உலகில் எங்கேயாவது புறக்கணிப் பார்களா ?"

"அது எதுவோ, உன்னை முதலில் இவ்வீட்டைவிட்டு துரத்தி விடுவாள்; அது நிச்சயம்."

"அதைப்பற்றி நான் அஞ்சவில்லை" என்றுகூறிக் கல்பகம் அவனை ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தாள். "நீங்கள்மட்டும் என்னை நேசிப்பது குறையாதிருந்தால்—"

"அப்பொழுதென்ன செய்வாய்?"

"எங்கேயாவது வேலைசெய்து பிழைப்பேன். உலகில் இந்த வீடு ஒன்றுதானா? வேறு வீடுகளில்லையா?"

"அப்பொழுது நானும் கையிற் காசற்றுத் திரியும்படியாகுமே" என்று மாசிலாமணி சொல்ல, கல்பகம் தன் மலர்ந்த விழிகளால் அவனை நிமிர்ந்து நோக்கி, "என் பூர்ணமான உள்ளன்பு தங்களுக்கு இல்லையா? நாமிருவரும் ஒருவரை யொருவர் மனமார நேசிக்கும்பொழுது நமக்கு உலகில் வேறென்ன வேண்டும்?" என்றாள்.

"கல்பகம், அதெல்லாம் வீண்பேச்சு" என்றான் மாசிலாமணி.

"ஒன்றும் வீண்பேச்சல்ல. உங்கள் மனத்தை அவர்கள் கெடுத்துவிடப் பார்க்கிறார்கள். இவ்வளவுகூட நாம் ஒருவருக் கொருவர் செய்துகொள்ளாவிடில் அப்புறம் அன்பு என்பது என்ன? அத்தான்! நீங்கள் என்னைத்தவிர வேறொருவரையும் விரும்பமாட்டீர்கள். அது எனக்குத் தெரியும்."

"ஆம் உண்மையே" என்று மாசிலாமணி அதையொத்துக் கொள்ள இஷ்டமில்லாதவன்போல் கூறினான்.

"நானும் உங்களை எவ்வளவு விரும்புகின்றேன்! என் ஆசை எவ்வளவென்பது உங்களுக்குத் தெரியாது. உங்களைத்தவிர வேறொருவரை மனத்தாலும் ஸ்மரியேன் என்று நான் எவ்வளவு முறை உறுதிமொழியளித்திருக்கிறேன்! அப்படியிருக்கும்பொழுது நான் எப்படி அம்மனிதனைக் கலியாணம் செய்துகொள்வது? நான் அவனுக்கு வாழ்க்கைப்படுவது உங்களுக்குச் சம்மதமாகுமா?" இப்படிச் சொல்லி அவள் அவனை இரங்கிப் பார்த்தாள்.

"ஆம், ஆம். எனக்கிஷ்டமில்லை. ஆனால்—" என்று மாசிலாமணி இழுத்தான். தான் பணத்திற்காக யோசித்துக்கொண்டு அவளை யிழக்கத் தீர்மானித்திருப்பதை அவளிடம் எப்படிச் சொல்லுவான்?

"ஆனால் என்று இழுக்கிறீர்களே? என்னைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப்போவதாக நீங்கள் எவ்வளவுமுறை சபதம்செய்து இருக்கிறீர்கள்? அச்சொற்களெல்லாம் பொய்யா? ஐயோ! எனக்கு

ஏதாவது சமாதானமாய் ஒரு வார்த்தை சொல்லலாகாதா?'' அவள் இவ்விதம் மன்றுடுவதைப் பார்க்க முடியாதவனுய் அவன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான். மாசிலாமணி அவளேக் காதலிக்கவில்லேயென்பதில்லே. நீர் பெருகும் கண்களால் அவள் ஆவலுடன் நோக்கிக் கேட்கும்பொழுது அவன் மனமுருகிற்று. ஆனல் அவன் என்ன செய்வான்! தன் தாயின் விருப்பத்திற்கு மாருக நடந்தால், கல்பகம் வீட்டைவிட்டுத் துரத்தப்படுவதுடன் தானும் கையிற் பொருளின்றித் தவிக்கவேண்டி வருமேயென்று கவ லேப்பட்டான்.

"ஆயினும் வேறுவழி யில்லேயே'' என்றான் அவன்.

"நாம் உண்மையாய் நடந்தால் நமக்கொன்றும் குறைவில்லே'' என்ருள் கல்பகம். "எனக்கொன்றும் பயமில்லே. அவள் எனக் குத் தாயல்லவே. அத்தான்! உங்கள் சொந்த அன்னேயிடமே நீங்கள் இவ்வாறு அஞ்சுவது அநாவசியம்."

"பயமா? அதொன்றுமில்லே. ஆனல் நாம் செய்யக்கூடியது என்னவென்பதுதான் எனக்கு விளங்கவில்லே."

"நான் நாராயணம் பிள்ளேயை மணம்புரிந்துகொள்ளமாட்டே னென்று ஆச்சியிடம் சொல்ல நீங்கள் அனுமதி கொடுக்கின்றீர் களா? அவள் என்னே வீட்டைவிட்டுப் போகச்சொன்னுலும் நான் சித்தமாயிருக்கிறேனென்று கூறிவிடுகிறேன்."

"அதனுலொன்றும் பயனில்லே."

"இல்லே, எவ்வளவோ பயனுண்டு நீங்கள் மட்டும் முன்போல் என்னே நேசிப்பதாயிருந்தால். இவ்விடம் உங்களுக்கு ஞாபகமில் லேயா? இங்கேதானே என் அன்பை வெளியிடும்படி நீங்கள் செய் தீர்கள். இவ்விடத்திலேயே நான் மோசம் போனதையும் அறிந்து கொள்ளவேண்டுமோ?"

"நான் உன்னே ஏமாற்றவில்லே, கல்பகம்!'' என்றான் மாசிலா மணி. "நீ ஏன் என்னேப்பற்றி இவ்வளவு தவருக நினேக்கிருய்? எனக்கேற்பட்டிருக்கும் கஷ்டம் போதாதென்று நீ வேறு கிளப்ப வேண்டுமா?''

"ஆஹா! நான் உங்களுக்கு ஒரு கஷ்டமாகத் தோன்றினல் இனி நானென்றும் பேசவில்லே. உங்களிஷ்டப்படியே இருக்கட் டும்'' என்று கல்பகம் மனம் நொந்து பதில் சொன்னுள். மாசிலா மணி எழுந்து மெதுவாய் அங்குமிங்கும் நடக்கத் தொடங்கி னன். அவளேத் தன் மனேவியாக்கிக்கொள்ள அவனுக்கு முழுச் சம்மதந்தான். நாராயணம் பிள்ளே அவளே மணம் புரிந்துகொள் வதைப்பற்றி நினேக்கும்பொழுதெல்லாம் அவனுக்குச் சற்று ஆத்திர

மாய்த்தானிருந்தது. ஆயினும் தாயின் கோபத்திற்காளாய்ப் பண மில்லாமல் கஷ்டப்படநேர்ந்தால் அதை எப்படித் தாங்குவதென்று அவனுக்குப் பயமாயிருந்தது.

"நான் சொல்லுகிறேன் கேள்" என்றான் அவன் வெகு நேரம் பொறுத்து. "நான் அம்மாவினிடம் தனியாய்ப் பேசிக் கொஞ்சநாள் இவ்விஷயத்தைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்காம லிருக்கும்படி செய்கிறேன்."

"உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால் வேண்டாம்" என்றாள் கல்பகம். மானமுள்ளவளாதலால் இனியும் தாழ்ந்துபோக அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

"கல்பகம்! அம்மாவும், நாராயணம் பிள்ளையும் என்னை என்ன பாடு படுத்துகிறார்களென்பது உனக்குத் தெரியாது."

"அதிருக்கட்டும். தாங்கள் இப்பொழுது என்னை நேசிக்கி றீர்களா?"

"அதுதான் உனக்குத் தெரியுமே. ஆயினும்—"

"நீங்கள் என்னைக் கைவிடமாட்டீர்களே?"

"நான் அம்மாளிடம் பேசுகிறேன்; அவளை எப்படியாவது சம்மதிக்கச் செய்துவிடுகிறேன்" என்று மாசிலாமணி சொல்லியும் கல்பகத்திற்கு அவனிடம் நம்பிக்கை குறைந்துவிட்டது. ஆயினும் தன்னை அடியோடு கைவிட்டதாக இன்னும் கூறவில்லையே யென்று சிறிது ஆறுதலடைந்தாள். அவ்விருவரும் பிரிந்து வீட்டிற்குச் சென்றனர். தாய்க்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணையை நாம் இங்கு விவரிக்கவேண்டியதில்லை.

அன்றிரவு போஜனம் முடிந்து படுக்கச் செல்லுவதற்குமுன் தாயாரம்மாள் கல்பகத்தைத் தன்னிருப்பிடத்திற்கு வரும்படி சொல்லியனுப்பினாள். அவள் ஒரு சாய்வு நாற்காலியில் வீற்றி ருக்க எதிரில் மாசிலாமணியும் உட்கார்ந்திருந்தான்.

"கல்பகம்! கதவைச் சாத்திவிட்டு இப்படிவா" என்றாள் தாயாரம்மாள். அவள் குரலினின்றும் அவள் மிகவும் கோபமாயும் தீர்மானமாயுமிருந்தது அச்சிறுமிக்கு நன்றாய் விளங்கிற்று. அவள் சொன்னபடியே செய்து சமீபத்தில் வந்ததும், "கல்பகம்!" என் றாள் தாயாரம்மாள் கடுமையாய். "என் காதில் படுவதெல்லாம் என்ன? எனக்கு விளங்கவில்லையே. உன்னைக் கலியாணம் செய்து கொள்ள மாசிலாமணியைக் கட்டாயப் படுத்தும்படி உனக்கு அவ்வ ளவு தைரியமுண்டா?"

இக்கேள்விக்குக் கல்பகம் என்னபதில் சொல்லுவாள்? பரிதா பமாய் மாசிலாமணியை ஒரு பார்வை பார்த்தாள்.

"என்ன, பதிலில்லை?" என்று தாயாரம்மாள் அதட்டினாள். "என் தர்மத்தில் வளர்ந்த ஒரு அநாதை என்னையே எதிர்ப்பதா? நான் உன்னை எடுத்து வளர்த்திராவிட்டால் உன் பிழைப்பென்ன வாகும்? நான் செய்ததற்கெல்லாம் நீ செய்யும் பதில் நன்றாயிருக்கி றதே. உனக்குச் சோறிட்டு உடுக்கத் துணியளித்துக்கொண்டாடி யது போதாதென்று நீ என் மகனையும் கைவசப்படுத்திக் கொள்ள லாமென்று பார்ப்பது அதைவிட நன்றாயிருக்கிறது. அதெல்லாம் முடியாது. மாசிலாமணி ஒருகாலும் பிறர் தர்மத்தில் வளர்ந்த ஒரு அநாதையை மணம்புரிய மாட்டான். ஞாபகமிருக்கட்டும்."

இக்கடும் சொற்களைக் கேட்டு கல்பகம் அசைவற்றுப்போய்விட் டாள். தாயாரம்மாள் அவளை இதற்குமுன்பு எவ்வளவோதரம் வைததுண்டாயினும் அது ஒரு தாய் தன் மகளைக் கண்டிப்பதுபோ லிருக்குமேயொழிய வேறுவிதமாக இராது. தன் மகனும் கல்பக மும் ஒருவரையொருவர் நேசிப்பது தன் காதுகளுக் கெட்டிய பொழுதுகூட இவ்வளவதிகமாய் அவள் கோபிக்கவில்லை. இப்பொ ழுதுதான் கல்பகத்திற்கு யாவும் தெளிவாய் விளங்கிற்று. தான் ஒரு ஏழை; பிறர் தர்மத்தில் வளர்ந்தவள். மாசிலாமணிக்கேற்ற மனைவியல்ல என்பதை அறிந்துகொண்டாள். தாயாரம்மாள் பேசி ஓய்ந்ததும் அவள் மறுபடியும் தன் காதலனிருக்குமிடம் நோக்கி னாள். ஆனால் இச்சமயம் அவள் பார்வை முன்போல இரக்க முடையதாயில்லை; அவனும் தன் தாயைப்போலவே நினைக்கிறானோ வென்ற சந்தேகத்தை உண்டாக்கிற்று. ஆனால் மாசிலாமணியோ குனிந்தபடியே கையிலிருந்த ஒரு காகிதத்துண்டைக் கிழித்தவண் ணம் உட்கார்ந்திருந்தான்.

"இப் பைத்தியக்காரத்தனம் இத்துடன் நின்றதா இல்லையா வென்று எனக்குத் தெரியவேண்டும்" என்று தாயாரம்மாள் மீண் டும் ஆரம்பித்தாள். "எங்கள் சந்தோஷத்தையும் நிம்மதியையும் கெடுக்க இனி உன்னை நான் இங்கு வைத்துக்கொள்ளப் போவ தில்லை. நாராயணம் பிள்ளை உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதமாயிருக்கிறான். அவனை மணம்புரிந்துகொண்டால் நீ முன் போல் இங்கிருக்கலாம். இல்லாவிடில் வீட்டைவிட்டுப் போகவேண் டியதுதான். என் மகன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லையென்பதை இதோ அவனையே நேரில் சொல்லச் சொல்லுகிறேன்." இதற்கும் மாசிலாமணி குனிந்த தலை நிமிர வில்லை.

"கல்பகம் என்ன பேசாமலிருக்கிறாய்?" என்றாள் தாயாரம் மாள். இனி மௌனமாயிருப்பதிற் பயனில்லையென்று கல்பகம்

கண்டுகொண்டாள். மாசிலாமணியைப் பார்த்து, "நீங்கள் சொல்லுங்கள். உங்களிஷ்டப்படி செய்ய நான் தயாராயிருக்கிறேன்" என, அவன் முதலில் ஒரு பெருமூச்சுவிட்டுப் பிறகு அவளையும் தன் தாயையும் நோக்கினான்.

"உண்மையாய், கல்பகம்! அம்மா கூறுவது சரிதான். நாம் நினைப்பது கூடாத காரியமே."

"அப்படியாயின் நானினி யோசிப்பதற் கொன்றுமில்லை" என்றாள் கல்பகம்.

"நாராயணம் பிள்ளையைக் கல்யாணம் செய்துகொள்ளுவதற்கும் உனக்குச் சம்மதந்தானே?" என்று தாயாரம்மாள் கோபம் நீங்கித் திருப்தியுடன் கேட்க, ஆம் என்று சொல்வதற்குப் பதிலாய்க் கல்பகம் தன் தலையை யசைத்தாள்.

"அப்படியாயின் நம் மனஸ்தாபம் ஒழிந்தது. கல்பகம், இப்படி என்னருகில் உட்கார். நீ புத்திசாலியாயிற்றே. என் மகனின் நலத்தைக் கவனிக்க வேண்டியது என் கடமையல்லவா? உன்னை அநாவசியமாய்க் கண்டபடி கோபித்துக்கொள்ளவும் எனக்கு மனமில்லை. நீ மட்டும் நாராயணம் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டால் உன்னை என் வயிற்றிற்பிறந்த பெண்ணைப்போலவே நினைப்பேன்" என்று கூறிக் கல்பகத்தின் குனிந்த தலையை நிமிர்த்தி முத்தமிட்டாள். அதற்குப்பிறகு அம்மூவரும் தம்தம் படுக்கைக்குச் சென்றனர். போகுமுன் தாயாரம்மாள் கல்பகத்தை அன்புடன் நோக்கி, முகத்தைத் தடவிக்கொடுத்து இனி அவள்மீது தனக்குக் கோபமில்லை யென்று சொல்லியனுப்பினாள்.

இதை வாசிப்பவர்கள் தாயாரம்மாளை முழுவதும் தவறாக நினைக்கக்கூடாது. இதுவரையும் அவள் கல்பகத்திற்கு எவ்வளவோ செய்யவில்லையா? படுக்கையிற்சென்று படுத்துக்கொண்ட பிறகு, தான் அத் திக்கற்ற அநாதைச் சிறுமியினிடம் கடுமையாய் நடந்துகொள்ளவேண்டி இருந்ததைக் குறித்து வருத்தப்பட்டாள். தன் மகனின் நலத்தைக்கருதித் தான் இவ்வாறு செய்வதைக் கடவுள் க்ஷமிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கலானாள். இதற்கெல்லாம் பதிலாகக் கல்யாணத்திற்கென்று கல்பகத்திற்கு நல்ல நகையொன்று செய்து போட்டுவிட்டாற் போகிறதென்று தீர்மானித்துக்கொண்டாள்.

அவர்கள் சம்பாஷணைக்குப் பிறகு கல்பகம் நேராகப் படுக்கச் செல்லவில்லை. மாசிலாமணியின் அறைப்பக்கம் மெதுவாய்ச் சென்றாள். தூக்கம் பிடியாமல் மாசிலாமணியும் நடந்தவைகளைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். கல்பகம் அவ்

வளையின் வாயிற்படியண்டை போய் நின்றுகொண்டாள். முன் பிருந்த தீனப்பார்வை இப்பொழுது அவள் முகத்தில் காணவில்லை. ஒருவிதப்பிடிவாதமும் தைரியமும் அவள் கண்களில் பிரகாசித்தன. மாசிலாமணிக்கு அவளைப்பார்க்க மனத்தில் ஒருவித அச்சம் உண் டாயிற்று.

"இனி நமக்குள் யாவும் தீர்ந்ததுபோலும்?" என்று அவள் அவனை நிதானமாய்ப் பார்த்துக்கொண்டே கேட்க,

"ஆம், அது நல்லதுதான். இல்லையா கல்பகம்?" என்ருன் மாசிலாமணி.

"நாம் செய்துகொண்ட உறுதிமொழிகளின் முடிவு இது தானே?"

"கல்பகம்! அம்மா கூறியவைகளை நீ கேட்கவில்லையா?"

"ஐயோ! இப்பொழுது நான் உங்களை என்னை நேசிக்கும்படி கேட்க வரவில்லை. நீங்கள் என்னை மனைவியாக வரித்து என்கழுத்தி லிட்ட பொற் சங்கிலி இதோ இருக்கிறது. இனி அது எனக் கெதற்கு? அம்மனிதனுக்கு வாழ்க்கைப்படவேண்டிய நான் இதை இனி எவ்வாறு அணிந்துகொண்டிருப்பேன்? என் கழுத்தை இறுகப் பிணித்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். இந்தாருங் கள்" என்று தன் கழுத்திலிருந்த சங்கிலியைக்கழற்றி அவனெதிரில் வைத்தாள்.

"கல்பகம்! உனக்கேன் இவ்வளவு ஆத்திரம்?"

"ஆத்திர மொன்று மில்லை. உங்களிடம் நான் ஏன் ஆத்திரத் தைக் காட்டவேண்டும்? நான் போய்வருகிறேன். நமக்குள் பேசு வதற்கு இனியொன்றுமில்லை. உங்கள்மீது நான் அன்புகொண்டது மட்டும் பெரிய பிசகென்று எனக்கு இப்பொழுது புலப்படுகிறது. மற்ற எளிய வேலைக்காரப் பெண்களைப்போல் நானுமிருந்திருக்க வேண்டும். ஆனல், அந்தோ! இனியென்னசெய்வது?" மாசிலா மணி இதற்கொன்றும் வாய்திறவாதிருக்க அவள் திரும்பித் தன் னிடம் சென்ருள்.

மறுநாள் தங்களுக்கு மிகவும் வேண்டியவர்களான சிலரை வைத்துக்கொண்டு தாயாரம்மாள் கல்பகத்தை நாராயணம் பிள்ளைக் குக் கொடுப்பதென்று நிச்சயித்துச் சம்பிரதாயப்படி நிச்சய தாம் பூலம் நடத்தினள். திக்கற்ற அநாதையென்று இகழ்ந்தவள் இப் பொழுது கல்பகத்தை முன்னிலும் பன்மடங்கு பரிவுடன் நடத்த லானள். கல்யாணக் காரியங்களெல்லாவற்றையும் தானே நேரில் கவனித்தாள். நாராயணம் பிள்ளை தன் காரியம் ஜயமடைந்து விட்டதைக்கண்டு உற்சாகத்துடன் தன் நொண்டிக்காலைச் சாய்த்து

இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தான். மாசிலாமணி முகம் மட்டும்வாட்டத்துடன் விளங்கிற்று. இச்சம்பிரமத்தின் மத்தியில், கல்பகமோ வாய்திறந்து ஒன்றும்பேசவே யில்லை. தாயாரம்மாள் இதைக் கவனித்தும் போனாற்போகிறதென்று விட்டுவிட்டாள். தன் அருமை மகனின் சந்தோஷத்திற்குத் தீங்கு நேரிட்டதாக வெண்ணியபொழுது அவள் மனம் கல்லினும் கடினமாயிருந்தது. ஆனால் இப்பொழுது அச்சிறுமியைப்பார்க்க அவள் உள்ளம் சற்றிலும் இளகிவிட்டது.

தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள எப்படி சம்மதித்தாளென்று நினைக்க நாராயணம் பிள்ளைக்குச் சற்று ஆச்சரியமாய்த் தானிருந்தது. ஆயினும் கல்பகம் சொன்னபடி கேட்பவளென்று தெரிந்தவனாகையால் தன்னுடன் குடும்ப வாழ்க்கை நடத்த, நாளடைவில் அவள் மனம் ஒத்துப்போய்விடுமென்றெண்ணினான்.

கல்யாணத்திற்கு முகூர்த்தமும் குறிப்பிட்டாய் விட்டது. "சுபஸ்ய சீக்கிரம்" என்றிருக்கும் பொழுது எதற்காகத் தாமதிக்க வேண்டும்?" என்று தயாரம்மாள் சொல்ல, நாராயணம் பிள்ளையும் அதை ஆமோதித்தான். கல்பகம் ஒன்றுக்கும் வாய் திறக்கவேயில்லை. ஆச்சி இஷ்டப்படி எதைச் செய்தாலும் சம்மதமென்றும் தன்னை மட்டும் ஒன்றும் கேட்கவேண்டாமென்றும் கண்டிப்பாய்க் கூறிவிட்டாள். வளர்த்த அபிமானத்திற்காகத் தாயாரம்மாள் இவ்வளவு செய்யும்பொழுது இந்தப்பெண் இவ்வாறு சந்தோஷமில்லாமலிருப்பது மிகவும் நன்றியற்றதனமென்று அங்குள்ளோர் கல்பகத்தைச் சிறிது நிந்தித்தனர். ஆனல் தாயாரம்மாளுக்குமட்டும் கோபம் சிறிதும் வரவில்லை. நாம் எண்ணியது நிறைவேறிட்டது; இனி இதற்குமேலும் எதிர்பார்க்கலாகாது என்று பேசாமலிருந்தாள்.

கல்யாணத்தன்று பொழுது விடிந்தது. கல்பகத்திற்கு நல்ல புடைவை கட்டி அலங்காரம் செய்தார்கள். தாயாரம்மாள் தான் புதுமாதிரியாகச் செய்துவைத்திருந்த சங்கிலியைத் தானே அவள் கழுத்தில் போட்டுச் சந்தோஷித்தாள். அவர்கள் எதைச்செய்தாலும் கல்பகம் வேண்டாமென்று மறுக்கவில்லை. முகூர்த்தம் நெருங்கிற்று. நாணம் தயக்கம் ஒன்றும் காட்டாமல் அவள் மணமகனுகிய நாராயணம் பிள்ளையினருகிற் சென்று மணையிலுட்கார்ந்து கொண்டாள். வழக்கம்போல் மாசிலாமணி நல்லாடையணிந்து மற்றவர்களுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க "இவனும் ஒருமனிதனு" வென்று எண்ணி அவள் மனம் அதிசயித்தது. குறித்த லக்கினத்தில் நாராயணம் பிள்ளையின் கையினுல் அவள் கழுத்தில்

தாலியும் கட்டப்பட்டது. அப்பொழுது அவள் தேகம் சிறிது பதறிக் குலுங்கியதைத் தாயாரம்மாள்மட்டும் கவனித்தாள். "இன் னும் ஒருவாரம் போனால் எல்லாம் சகஜமாய் விடும். அப்புற மென்ன ? நானும் எவ்வளவோ அன்பாயிருப்பேன்" என்று தானே கூறிக்கொண்டாள்.

மணையைவிட்டு எழுந்த சிறிது நேரத்திற்குப் பிறகு அவ்விடம் விட்டுச் சென்ற கல்பகம் வெகுநேரம் வரையும் திரும்பி வராதிருக் கவே நாராயணம் பிள்ளை தாயாரம்மாளிடம் அதைப்பற்றி விசாரிக்க லானான்.

"உம்மைப்போலவா ? அவள் சிறு பெண் தானே. இக்கூட்ட மும் நாட்டமும் மனத்துக்கு என்னவோ போலிருந்திருக்கும்" என்று கல்பகத்திற்காக அவள் பரிந்து பேசினாள். பிறகு பின் கட் டிற் போய்ப்பார்த்துவிட்டுக் கல்பகம் தலைவலியால் வருந்திக்கொண்டு படுத்திருப்பதாக வந்து தெரிவித்தாள். சாயந்திரம் அவளுக்குத் தலைவாரிப் பின்னி வேறு புதிய புடைவைகட்டி அழைத்துப் போவ தற்காக இரண்டு மூன்று முறை தாயாரம்மாள் அவளிருக்குமிடம் சென்று பார்த்தாள். "ஆகட்டும் ஆச்சி. இன்னும் சற்றுப் போகட் டும்" என்று கல்பகம் அழுதழுது வீங்கிய கண்களுடன் கவிழ்ந்து படுத்தபடியே பதில் சொன்னாள். அவள் நிலைமையைக்காணத் தாயாரம்மாளுக்கும் மனமிளகிக் கண்களில் நீர் ததும்பிற்று. "ஐயோ ! பெரிய பழி பாவத்தை யேற்றுக் கொண்டுவிட்டேனே. நானேன் இதில் தலையிட்டேன்? கட்டிய தாலியை இனி எவ்வாறு அவிழ்ப்பது ?" என்று வருந்தத் தொடங்கினாள்.

சூரியாஸ்தமனமுமாயிற்று. தாயாரம்மாள் நிரம்ப மனக்கலக் கத்துடன் உள்ளுக்கும் வாயிலுக்கும் பன்முறை நடந்தாள். கல் யாணத்திற்கு வந்திருந்தோர் ஏதோ சரியாயில்லை யென்றறிந்து ஒருவரோடொருவர் குசு குசு வென்று பேசிக்கொண்டனர். "கல் யாணப்பெண்ணுக்கு உடம்பு அசௌக்கியமோ ?" என்றும், "இல்லை. அவளுக்கு இவ் விவாஹம் சம்மதமில்லை. அதுதான் கார ணம்" என்றும், "இருந்தாலும் மணமகன் ரொம்ப வயதானவன் தான்" என்றும் பல விதமாய் வார்த்தைகளெழும்பின. இச்சமயத் தில் தாயாரம்மாள் வேகமாய் வந்து முதலில் மாசிலாமணியிடமும் பிறகு நாராயணம் பிள்ளையினிடமும் ஏதோ ரகசியமாய்ச் சொன் னாள்.

"என்ன ? உள்ளே இல்லையா ?" என்று மாசிலாமணி கேட்க, "எங்கேயாவது மறைவாய் ஓரிடத்தில் படுத்துக்கொண்டிருக் கிறாளோ என்னவோ" என்று நாராயணம் பிள்ளையும் கூறினான்.

"இல்லை, முழுவதும் தேடியாயிற்று. அவள் வீட்டிற்குள்ளேயே இல்லை" என்றாள் தாயாரம்மாள். அதற்குமேல் அவர்கள் சாதாரணமாய்ப் பேசுவதை நிறுத்திவிட்டார்கள். நாராயணம் பிள்ளைமட்டும், "ஒருவேளை எதற்காயினும் கொல்லைப்பக்கம் சென்றிருக்கலாம்" என்று சொல்லிப்பார்த்தான்.

"தோட்டத்தில் ஒரே இருட்டாயிருக்கிறதே" என்றாள் தாயாரம்மாள். அம்மூவரும் ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு தோட்டத்திலிறங்கினார்கள்.

"கல்பகம்! கல்பகம்! எங்கிருக்கிறாய்?" என்று தாயாரம்மாள் பதறிய குரலில் கூப்பிட்டாள். கல்யாணத்திற்கு வந்திருப்பவர் இக்கூப்பாட்டைக் கேட்டு ஏதாவது நினைத்துக்கொண்டால் என்ன செய்கிறதென்று நாராயணம் பிள்ளைக்குக் கவலையாயிருந்தது. ஆனால் தாயாரம்மாள் அதையொன்றும் கவனிக்கவில்லை.

"கல்பகம்! கல்பகம்! பதில் சொல்லேன்" என்று முன்னிலும் உரத்துக் கூவினாள். "நாம் ஏன் இவ்வளவு முயன்று இக்கல்யாணத்தை நடத்தி வைத்தோம்" என்று இப்பொழுது தன்னையே கடிந்துகொண்டாள். கையில் விளக்கைப் பிடித்துக்கொண்டு வழிகாட்டிச்சென்ற மாசிலாமணியும் மிகுந்த திகிலுடன் "கல்பகம்! கல்பகம்!" என்று கத்தினான். ஒரு பதிலுமில்லை. தோட்டக் கடைசியிலிருந்து தூரவண்டை நெருங்கியதும் அதனுள் ஜலத்தில் ஏதோ பொத்தென்று விழுந்த ஓசை அவர்கள் காதுகளுக்கெட்டிற்று. "அதென்ன சப்தம்?" என்று வாய் குழறிக் கேட்டுவிட்டு நாராயணம் பிள்ளை தூரவின் பக்கம் ஓடினான். மாசிலாமணியோ கையிலிருந்து விளக்கு நழுவி விழக் கைப்பிடிச் சுவரின்மேல் பிரக்ஞையற்று விழுந்துவிட்டான்.

இனி விஸ்தரிப்பானேன்? ஜலத்தில் விழுந்ததென்னவென்று பார்த்து எடுக்கும்பொழுது, காலையில் தான் தாலி கட்டிய மனைவி இருட்டு முன் பிரேதமாயிருப்பதை நாராயணம் பிள்ளை கண்டான். தாயாரம்மாள் பாவம்! அன்று படுக்கையிற் படுத்தவள் தான். அப்புறம் அவள் எழுந்திருக்கவேயில்லை. பாரிசவாயு நோயுடன் ஏழு வருஷம் படுத்த படுக்கையாயிருந்து முடிவில் உயிர் துறந்தாள். நாராயணம் பிள்ளையோ—அவன் எப்படிப்போனால் நமக்கென்ன? அவன் இதற்கெல்லாம் மனமுடைந்து போகப்பட்டவனல்ல. அல்லது, தன்னலத்தையே பெரிதாகக் கருதி நல்லுணர்ச்சியற்ற மாசிலாமணியைப்பற்றித் தான் இனி நமக்கென்ன கவலை?

அன்பின் ஜோதி

ஸ்ரீ

இது ஒரு பாரசீகக் கட்டுக் கதை; பாரசீகப் பாஷையில் பாட்டாய் அமைந்துள்ளது. இதன் உட்கருத்து இன்னதென்று நிச்சயமாய் விளங்கவில்லை. உரையாளர் சிலர், அழகு உருவமாறுவதன்றி அழிவில்லாத் தன்மையுடைய தென்பதை இக்கதையின் பயனாகக் கூறுகிறார்கள்; மற்றவர், காலப்போக்கில் மனிதரின் மனம் மாறிவிடும் தன்மையை இக்கதை விளக்குவதாகச் சொல்கிறார்கள். இவ்வுலகத்தில் அழகின் வன்மையையோ, அன்பின் நிலையாமையையோ, எதை இக்கதை தன் கருத்தாகக் கொண்டதென்று, பழைய உரைகளில் ஒருமுடிவு காணப்படாததால், வாசகர் தம் இஷ்டப்படி, கதையின் பயனை அமைத்துக்கொள்ளலாம். கதை பின்வருமாறு:—

தூரதேசமாகிய இந்தியாவின் வடபாகத்தில், பஞ்சநதிபாயும் செழித்த பிரதேசமொன்றிருக்கிறது. நீர்வளம், நிலவளம், மலைவளம் பொருந்திய அந்நாடு முன்னொருகாலத்தில் ஷாஜி என்ற சிற்றரசனாட்சிக்கு உட்பட்டிருந்தது. அவ்வரசன், ஜோதி என்ற பெயர் கொண்ட, அழகில் இணையில்லாத ஒரு மங்கையை மணந்தான்; அவள் காதலில் மூழ்கி, தேவருலகத்தும் கிட்டாத இன்பத்தையெய்தி, ஆனந்த பரவசமானான்; ஷாஜியும் ஜோதியும் ஒருவர்க்கொருவர் கொண்டிருந்த மெய்யன்பு, இத்தன்மையதென்று சொல் வன்மையால் கூறத்தக்கதன்று. பாட்டின் இன்னோசையாற் குறிப்பிடவல்ல எல்லையையும் கடந்து அக்காதல் இருவருள்ளத்திலும் ஒளி போலத்திகழ்ந்தது. இவ்வாறாகக் காதலர் இருவரும் காலப்போக்கை உணரவில்லை; சில நாட்கள், சில மாதங்கள் கழிந்தன; மணம் முடிந்து ஒரு வருஷமும் ஒரு மாதமும் சென்றபின், ஒருநாள் ஜோதி, கணவனுடன் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது திடீரென்று பாம்பு தீண்டி இறந்தாள்.

ஜோதி இறந்தாள். ஷாஜியின் அளப்பரிய சோகத்தை எவரும் ஆற்றத்துணியவில்லை. அவளுடைய சவத்தைக் கிடத்தியிருந்த மஞ்சத்தின்மீது, அவன் இரண்டு நாள் முழுவதும் பசிதாகசாந்தியின்றி, அசைவின்றிக் கிடந்தான். பிறகு தானாக எழுந்து உணவருந்தினான். அவன் கண்கள் நீர்வறண்டிருந்தன. பணியாளரை யழைத்து அவன்

சாதாரணக் குரலில் பேசினான். அரியதொரு பிரதிக்ஞையை மேற்கொண்டவன் போலத் தோன்றினான்; தன் மனைவியின் உடலைத் தைலமாட்டிப் பட்டாற் போர்த்தி, வெள்ளியும் ஈயமும் கலந்து வார்த்த ஒரு பெட்டியில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டான்; அந்தப் பெட்டிக்கு மேலுறையாகத் தந்தமும் நவமணியுமிழைத்துச் சந்தன மரத்தாலாகிய வேறொரு பெட்டியும், அதற்கு மூடியாகப் பளிங்காலொரு கல்லறைப் பெட்டியும் சித்தம் செய்யும்படி கட்டளையிட்டான். முறைப்படி, காலையிலும் மாலையிலும் மார்பிலடித்துக் கொண்டும் புலம்பியும் அவன் துக்கப்படவில்லை. அரண்மனையில் இந்தக் கல்லறை வேலை நடைபெறும் நாளெல்லாம் அவன் தன் காதலியுடன் உலாவியிருந்த தோட்டங்களிலும், ஆற்றோரத்திலும் தன்னந் தனியே திரிந்தான்.

பிறகொரு நாள் அவன் சபையோரைக் கூட்டித் தன் கருத்தை வெளியிட்டான். இனி ஒரு பெண்ணையும் தான் விரும்புவதில்லையென்றும், தன் தம்பிக்கு இளவரசுப்பட்டம் சூட்டி விடுவதென்றும், தன் மனைவியினழகும் தான் அவள் மேற்கொண்ட காதலும் இவ்வுலகில் இணையற்றனவென்பதை எல்லாருக்கும் எக்காலத்தும் நிரூபிக்கும் பொருட்டு அவள் கல்லறைக்கு உறைவிடமாக ஒப்புயர்வற்ற ஒரு மசூதி மண்டபம் கட்டவேண்டுமென்றும் தான் தீர்மானித்து விட்டதாகச் சொன்னான். சபையோர் அவன் கருத்துக்கிசைந்தனர்; குடிகள் அவனன்பை மெச்சினார்கள்; தொழிலாளிகளும் சிற்ப நிபுணரும் பலர் கூடினர்; கட்டடவேலை அந்த வருஷமே தொடங்கியது. அந்த வேலை ஒருவாறு முடிய முப்பது வருஷங்களாயின. அதில் விரயமான பணத்தை எவரும் தொகுத்துக் கணக்குப் பார்க்கவில்லை. வருஷங்கள் செல்லச் செல்ல அரசன் அந்த மாளிகைவேலையிலேயே மனமுழுவதும் ஈடுபட்டுவிட்டான்; சிற்ப நிபுணரைக் காட்டிலும் சிற்பத்திற் தேர்ந்தவனானான்.

அவனன்பையும், அவன் காதலியின் பெயரையும் இணைத்து 'அன்பின் ஜோதி' என்று பெயரிடப்பட்ட அம் மசூதி காலப் போக்கில் ஆதியில் வகுத்தவாறின்றிப் பல மாறுதல்கள் அடைந்தது. ஆரம்பத்தில் சித்திரச் சிற்பக்கலைகளில் அரசனுக்குத் தேர்ச்சியில்லை. அரசியின் கல்லறையை நடுவில்வைத்து அதற்கொரு மண்டபம் நாட்டி, அம்மண்டபச் சுவர்களில் விசித்திர வேலைகள் செய்து, அதைச் சூழ்ந்து ஒரு பெரிய மணடபம் கட்டுவதையே சிற்பிகள் முதல் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். நாளடைவில் அரசன் வயதும் அறிவும் முற்றி விரிந்த சிந்தனை கொண்டவனானான். அம் மாளிகை தன் மனங்கொண்ட அளவு மாட்சிமை பெற்றிலங்கவேண்டு

மென்று நினைத்தான். விலை மதிப்புக்குட்படும் அலங்காரம் அம்மாளிகைக் கொவ்வாதென்றெண்ணி, நடு மண்டபத்திலிழைத்த நவமணிகள் பதித்த பொற்றகடுகளையெல்லாம் எடுத்தெறியச் செய்தான்; அம் மசூதியின் விரிவை முதலில் வகுத்ததைவிடப் பதின்மடங்காகப் பெருக்கி, அதன் வெளித்தோற்றமே கண்டவர் பிரமிக்கத் தக்கதாயிருக்கும்படி செய்தான். இருபது வருஷங்கள் சென்றபின் அந்நாட்டில் அரசனினும் தேர்ந்த சிற்பி எவனுமில்லை; சிற்ப நிபுணர்கள் அவனேவல்களின் கருத்தின்னதென்றறியாமலே, அவற்றைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றினர். கடைசிப் பத்து வருஷங்களாக அம்மசூதியை நிருமித்தவன் அரசனே யென்னலாம். அது முடிந்த பின் அவன் முதலெண்ணப்படி, இவ்வுலகில் ஒப்பற்றதாய் அது விளங்கிற்று. அந்தக் கட்டடத்தின் வெண்மையும் தூய்மையும் அழகும் பெருமையும் கண்டோர் கண்ணையும் உள்ளத்தையும் கவர்ந்தன. அம்மசூதியைச் சுற்றிலு மிருந்த சுனைகளும் நீர்க்கால்களும் பூப்பாத்திகளும் அமைந்த நந்தவனம், அதை அந்நாட்டின் இயற்கை வனப்புடன் பொருத்துவது போலிருந்தது. மசூதிக்குக் கிழக்கே இருநூறு மைலுக்கப்பாலுள்ள குன்றில் கதிரவன் உதயமானவுடன், செங்கிரணங்கள் அம்மசூதியின் ஸ்தூபி மேற்பட்டு, அதை ஜோதி மயமாகப் பொலியச் செய்தன. மசூதியினுள் பல தோட்டங்களும் பிரகாரங்களுமிருந்தன; அவைகளிலொவ்வொன்றும் தனி யழகு வாய்ந்தது; அது தெரியக்கூடாமல், அவை ஒன்றோடொன்றைத் திருந்த இசைவினழகு விரிந்து சோபித்தது. மசூதியின் நடுவில் அரசனமைத்த ஓர் ஆயிரக்கால் மண்டபம் இருந்தது. அதன் தளம் நீலமோடிய பளிங்காலமைந்து ஆகாய வர்ணத்தை யொத்திருந்தது. அதன் தூண்கள் திண்மையும் மென்மையும் சேர்ந்து அழகினுருக் கொண்டிருந்தன. அம்மண்டபத்துள் நுழைந்து தூரத்தில் விளங்கும் குன்றின்மேற் கண்ணுய்ச் சிந்தனையிலாழ்ந்திருப்பது அரசனுக்கு வழக்கமாய் விட்டது. அந்த ஆயிரக்கால் மண்டபத்திற்கு மத்தியிலிருந்த, அரசியின் கல்லறையைத் தன்னுட்கொண்ட சிறு மண்டபம் இந்நாட்டத்தைத் தடுத்துக் கண்முட்டுவதாயிருந்தது. அச்சிறு மண்டபம் ஆயிரக்கால் மண்டபத்தின் விரிவுக்கும் உயரத்துக்கும் தோற்றத்துக்கும் ஏற்ற நடுநாயகமாக விருக்கவில்லை. அதைக் கட்டியபோது அவ்வளவு பெருமிதத்தை யாரே கனவிலும் கண்டார்! வெகுநாளாகச் சிந்தனை செய்த பின் அரசன், பல விசித்திர வேலைப்பாடுகளமைந்த அச்சிறு மண்டபத்தை இடித்தெறிந்து தளத்தைச் சீர்படுத்தும்படி உத்தரவிட்டான். அப்படியே நடந்தது. அதன் பின்னரோ அவ்வாயிரக்கால் மண்டபத்தின் விரிவும் மாண்பும் முற்றிலும்

வெளிப்பட்டன. முதலில் அச்சிறு மண்டபத்திலடங்கிய சிற்பவேலைகள் வீணாவதையெண்ணி மனம் நொந்தவர் பலர், பின்னர்த் தோன்றிய அவ்வாயிரக்கால் மண்டபத்தின் பெருமையைக் கண்டு வியந்து அரசனாணையைச் சிரமேற்கொண்டு கொண்டாடினர். தினமும் அம்மண்டபத்தைக் காணப் பல்லாயிரம் ஜனங்கள் அவ்வூருக்கு வந்தார்கள். ஒரு பெண்ணால் இவ்வுலகில் இவ்வளவு அழகுண்டாயிற்றென்று பெருமை யுற்றுப் பெண்பாலர் அனைவரும் அவ்வரசனை வாழ்த்தினார்கள்.

அழகு நிறைந்து விளங்கியது, அவ்வாயிரக்கால் மண்டபம். அவ்வழகு பரிபூரணமாயில்லாமல் ஒரு மறு இருந்தது. மண்டபத்தின் நடுவிலிருந்த பளிங்குக் கல்லறை அதன் மாண்போடொவ்வாமல் ஒரு மாசுபோலிருந்தது. மண்டபத்தினழகைக் கண்டு வியந்து செல்லும் பல ஜனங்களும் அக்கல்லறையைத் தாண்டி விரைந்து சென்றனர். இக்குறையை உணர்ந்தும் அரசன் வெகுநாளாக ஒன்றும் செய்யவில்லை. பிறகு, ஒருநாள், கொத்துவேலைக்காரர் சிலரும் தன் பரிவாரமும் பின் தொடர அரசன் ஆயிரக்கால் மண்டபத்துக்கு வந்தான். குறைவேலை இனியேதென்றெண்ணிப் பல ஜனங்களும் அவனைச் சூழ்ந்து நின்றார்கள். அரசன் அம்மண்டபத்தின் அழகை நாற்புறமும் சுற்றி நோக்கினான்; பின்பு அக்கல்லறையை உற்று நோக்கினான். நீல நிற ஆகாயவெளியில் ஒரு கைப்பெட்டி கிடந்தாற்போல அம்மண்டபத்தின்நடுவில் அக்கல்லறைப் பெட்டியிருந்தது. அதற்குள் சந்தன மரப் பெட்டி; அதற்குள் வெள்ளிப் பெட்டி; அதற்குள் இவ்வழகுக்கெல்லாம் காரணத்தாயான, அரசனின் இன்னுயிர்க் காதலியின் உடல் சேமித்து வைத்திருந்தது.

அரசன் பணியாளரை நோக்கினான்; தன் விரலால் அக்கல்லறைப் பெட்டியைச் சுட்டினான். "அதை யெடுத்து அப்புறப்படுத்துங்கள்" என்றான்.

சோதிடப்புலி சோணாசலம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

சென்ற திங்கட்கிழமை காலை சுமார் 7-மணிக்கு வீட்டின் புறத் திண்ணையில் உட்கார்ந்து, வரும் மாதப்பத்திரிகைக் கென்ன எழுதுவதென்று நினைந்து கண்மூடி இருக்கையில் மோட்டார் சத்தம் கேட்டது. வண்டி வந்து வீட்டிற்கெதிரில் நின்றவுடன் நரைத்த தாடியுடைய ஒருவர் இறங்கிவந்தார். யாரோ இடந் தெரியாமல் வருகிறாரோ என்று எண்ணங்கொண்டிருக்கையில், அவர் வந்து என்னெதிரில் உட்காரவும் அவர் என் பாலிய நண்பன் சோணாசலமென்று தெரிந்தது. அவன் என்னைப்பார்த்து, "என்ன நான் யாரென்று தெரிகிறதா?" என்றான்.

நானும், "தெரியாமலென்ன? நீ இங்கிருந்து போய்ச் சுமார் பத்து வருஷகாலம் ஆகிறதே. இதுகாறும் எங்கு உன் கடையை விரித்திருந்தாய்? எவர்களை உன் பொய்வலையில் சிக்கவைத்தாய்?" என்றேன்.

"அடே! உன்னை அறியாமலே என்னைப் புகழ்கிறாயே. நான் என்ன அவ்வளவு படித்தவனா? ஏதோ புலியாருளால் நான் கூறுவ தெல்லாம் பொய்யெனுவெண்ணம் புகலும் சக்தி பெற்றிருக்கிறேன். அதனையன்றி என்னாலாவதொன்றுமில்லை. இங்கு உன்னைவிட்டுப் பிரிந்ததுமுதல் காசியாத்திரை சென்றேன்; வடஇந்தியாவிலுள்ள பல ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் பார்த்து வந்தேன்."

"அப்படியா! ஆனால் இனி என்போன்றவர் காசிக்குப் போவதில் பயனில்லைபோலும்! எங்கள் பாவத்தைத் தொலைப்பதெப்படி யென்று கவலை கொள்ளுகிறேன்."

"ஓ! நீ சொல்வதைப் பார்த்தால் என் பாபத்தினால் பாருளோர் பாபங்களெல்லாம் தீர்க்கவல்ல கங்கையும் தன் சக்தி குறைந்து விட்டதென்கிறாற்போலிருக்கிறது!"

"அதற்கென்ன சந்தேகம்? சோதிடமென்று நீ சொல்லும் பொய்க்கோரளவில்லையே; அதன் பலன் எங்குப்போகும்?"

"அடாடா! உன்னைத்தவிர வேறொருவரும் சோதிடத்தை நம்பாதவரில்லை. நீயும் நான் சொல்வதைக் கேட்டபின் நம்பாமல் இருக்கமாட்டாய். அது நிற்க; பொய்யும் மெய்யும் காலத்தாலும் சம்பந்தத்தாலும் வருவனவன்றோ? நல்லது. நீ கனவு காணும்போது

அது மெய்யாகவே தோன்றுகிறதல்லவா? விழித்தபிறகன்றே அது பொய்யாகத் தோன்றுகிறது. நீ வேதாந்த சாஸ்திரம் அறிந்தவனாயிற்றே. பிரமநிஷ்டையில் இருப்பவனுக்கு உலகம் தோற்றுதிருப்பின் மற்றவர்களுக்கு உலகம் பொய்யெனக் கூறலாமா? அது நிற்க; நான் சொல்லுவது எப்பொழுதாவது பொய் போனதுண்டா? ஏன் இப்படி வீண் குதர்க்கம் செய்கிறாய்? நான் இந்த யாத்திரையில் அனேக புதிய விஷயங்கள் உணர்ந்து வந்தேன். அவைகளையெல்லாம் உனக்கு எடுத்துக் கூறுவதானால் அனேக நாள் செல்லும். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுவேன். நான் கயிலாசத்திற்குச் சென்றிருந்தபொழுது மாமுனி அனுக்கிரகத்தால் மந்திரசித்தியடைந்தேன்''.

''அது கெட்டது போ! ஆழ்வாரே போதாதா அஷ்டாயுதமும் வேண்டுமா? சோதிடமொன்று போதாதென்று மந்திரமும் கூடக் கொண்டுவந்துவிட்டாயா? ஒவ்வொன்றுமே உலகிற்கு இடர் தருமே. அவையெலாம் ஒருங்கே கூடின் என்படுமுலக மென்றறியேன்.''

''உலகத்தினிடத்தில் இவ்வளவு தயை உனக்கிருக்கிற தென்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. பிரமன் சிருஷ்டி செய்யும்பொழுது உன்னைக் கேட்கவில்லை போலும்! கேட்டிருந்தால் உலகத்தவர்களுக்கு ஒன்றிலும் நம்பிக்கையில்லாமல் அடித்துவிடும்படி சொல்லியிருப்பாய். இச்சாஸ்திரங்களை யெல்லாம் வெளியிட்டருளிய மகான்களும் உன் அபிப்பிராயத்தைக் கவனித்தார்களில்லை. ஐயோ பாவம்! கவனியாரில்லாமல் தனியே நீ இருப்பது எனக்கு வருத்தமாயிருக்கிறது. என்ன செய்கிறது! அதிக புத்தியுள்ளவர்கள் கதி இது தான். நமக்குள் இந்த வழக்குத் தீராததன்றோ? நாம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ள வேண்டியது; ஒரு நாளில் பேசி முடிவு செய்யக்கூடிய தல்லவே. நான் கொஞ்சகாலம் இப்பக்கங்களிலேயே இருப்பதாக எண்ணியிருக்கிறேன். அடிக்கடி ஒழிந்த நேரங்களில் விசாரிப்போம்.''

''எ அப்பா! பெரிய உபந்நியாசம் பண்ணிவிட்டாயே. வடக்கே போய் வந்ததின் பயனோ? அல்லது மந்திரசித்தியின் பயனோ? இருக்கட்டும். நீ இப்பொழுது எங்குத் தங்கியிருக்கிறாய்? கார் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறாயா?''

''நான் இப்பொழுது எழும்பூரில் ஒரு பங்களாவில் வாடகைக்கிருக்கிறேன். இன்னம் கார் வைத்துக் கொள்ளும் ஸ்திதி வரவில்லை. ஆனாலும் எண்ணத்தின்படி கூடிய சீக்கிரத்தில் அதுவும் வரும். நான் இப்பொழுது ஸர் வாசுதேவராவ் வீட்டிற்குப் போகி

றேன். அவர் வண்டிதானிது. போகும் வழியில் ஞாபகம் வந்தது. ஆகவே இங்கு வந்தேன்.''

''இதென்ன ஆச்சரியம்! அவரை அதிக புத்திமானென்று கருதியிருந்தேன். அவர் எப்படி உன் பொய்யில் மயங்கினர். உன் மாயை செல்லாத இடமில்லை போலும்! ஒரு சமயம் எனனை யுங்கூட மயங்கச் செய்து விடுவாயோ வென்று மனம் கலங்கு கிறேன்.''

''பேஷ்! இவ்வளவு தற்புகழ்ச்சியா! உனக்கு மேலான புத்தி மான்கள் உலகத்தில் இல்லை யென்றோ நினைத்தாய்? நான் உலகத்த வரை மயக்குகிறேனென்றாயே. ஈசுவரனிடத்தில் நம்பிக்கை யுள்ள வர்கள் அவன்தாளில் மயங்குவது போலன்றோ என் வாக்கிலும் மயங்குகிறார்கள்! நான் சொல்வதனைத்தும் புலியருளென்பதைச் சற்றும் கவனியாது நீ இவ்வாறு இகழ்வது சரியன்று. இக்கலி காலத்தில் கண் கண்ட தெய்வமாய் விளங்கும் எனது குருவாகிய புலிச்சித்தர் அருளிய சனி நாடியல்லவோ நான் கூறுபவை. உன் னைப் பற்றியே இப்பொழுது சொல்லுகிறேன் பார்:—

'வில்லதனிற் சனிசேர வியாழனுமே விடையேறி நின்றக் காலே
சொல்லரிய குடத்தினிடைத் தோன்றியவன் சீரதனைக் கூறுவாய்நீ
அல்லலுறு மறுபதெனு மாண்டுகடந் தப்பாலோர் அருமைவாய்ந்த
நல்லதமிழ்ப் பத்திரிகைக் கெழுதிநல மெய்திடுவன் நாளுமென்றே.''

''அப்பா! சமாசாரத்தை முன்னம் தெரிந்து கொண்டு சொல் வது கஷ்டமா? என் ஜாதகம் உனக்கு நன்றாய்த் தெரியும். அதை வைத்துக் கொண்டு ஒரு கவிபாடுவது பெரிய காரியமா?''

''பலே! நான் சனிநாடியிலிருந்து சொன்ன பாடல் உண்மை யென்று ஒப்புக்கொண்டுவிட்டாய். நான் ஏதோ முன்னம் அறிந்த விஷயத்தைச் சொன்னேனென்றாய். நானிங்கு வந்தது நேற்றிரவு தானே? எனக்கு நீ பத்திரிகைக்கெழுதுகிறாயென்பது எப்படித் தெரியும்? உடலைப் பிளந்து காட்டினாலும் ஜாலவித்தையென்று சொல்லுகிறாயே! இதென்ன விபரீதம்! சரியாயிருப்பதைச் சரி யென்று கூறாதிருப்பது பொய் சொல்லுவதற்குச் சமானமல்லவோ? நல்லது; நான் போய் மறுபடியும் வருகிறேன். இப்பொழுது உன் னோடு வாதாடுவதற்குப் பொழுது இல்லை''

என்று சொல்லிவிட்டுச் சோணசலம் வண்டியேறிச் சென் றான். நானும் இவ்விஷயங்களையே, பத்திரிகையில் வெளியிட்டால் படிப்போர் உண்மையை அறிந்துகொள்வார்களென்று எழுதினேன்.



பனை ஓலைச் சித்திரம்

வீ. விசாலாக்ஷியம்மாள்


தையல் வேலை, பூ நூல் வேலை, மணி கோத்தல் முதலிய வேலைகளைச் செய்வதில் மாதர்களுக்கு விசேஷமான பிரியம் உண்டு. வீட்டு அலுவல்களைக் கவனித்ததால் களைத்திருந்த பொழுதிலும், சிரமத்தையும் கவனியாமல், ஓய்வு நேரங்களில் பெண்கள் உற்சாகத்துடன் தையல் முதலிய சித்திர வேலைகளைச் செய்கிறார்கள். இது பற்றியே 'தையல் தையலுக்கே அடுத்தது' என்ற மொழி ஏற்பட்டுளது போலும்!

மேலும், தன் குழந்தைக்குத் தானே சட்டையை வெட்டித் தைத்துப் போட்டு, அழகு பார்ப்பதில் ஒருவித ஆனந்தம் இருக்கத்தான் இருக்கிறது; அதே சட்டையைத் தையற்காரன் மிகவும் நேர்த்தியாக வெட்டித் தைத்திருந்த போதிலும், தன் கையினால் தைத்துப்போட்ட சந்தோஷம் அதில் ஏற்படுவதில்லை. 'ஒரு தாயானவள் தன் குழந்தைக்கென்று ஓர் உடுப்பைத் தைக்கும் பொழுது, அவள் மனத்தில் குழந்தையின்மேல் பெருகும் அன்பில் அந்தச் சட்டை மூழ்கப்பட்டு, ஒரு தனிச் சோபையை அடைகிறது' என்று ஆங்கிலத்தில் எங்கேயோ நான் வாசித்திருக்கிறேன். மனத்திற்கு உற்சாகத்தைக் கொடுத்துக் கைத்தொழில்களில் ஒன்றாக விளங்கும் தையல் முதலிய சித்திர வேலைகள் ஒவ்வொரு மாதுக்கும் அவசியமாகத் தெரிந்திருக்க வேண்டும். பனை ஓலையிற் சித்திரங்கள் வரைந்து, வெட்டி, அவைகளுக்குக் கண்ணாடி போட்டு வீட்டிற்கு அலங்காரமாகச் சுவரில் மாட்டுவது ஒரு புதிய கைவேலையாகக் கிளம்பி இருக்கிறது. அதைச் செய்யும் முறைகளைக் கீழே எழுதுகிறேன்.

பனை ஓலை நல்ல குருத்து ஓலையாக இருக்கவேண்டும். இதனை, ஏடுகளுக்குப் பதன் இடுவதுபோல் தயாரிக்கவேண்டும். இந்த வேலை செய்வதற்கு மிகவும் கூரான சிறிய உளிபோன்ற ஆயுதம் ஒன்றும், அதேமாதிரியில் கூரானதும் அடியில் அர்த்த சந்திரன் போல் வளைந்ததுமாகிய ஆயுதம் ஒன்றும் வேண்டும். ஆயுதங்கள் நுட்பமான வேலை செய்வதற்குச் சௌகரியமாக மிகக் கூராகவும், சிறிதாகவும் இருத்தல் அவசியம். பதனிட்ட உலர்ந்த ஓலையில், சித்திரப் படங்களில் உள்ள லக்ஷ்மி, சரஸ்வதி, பிள்ளையார், வேணு கான கிருஷ்ணன் முதலிய இஷ்டமான சித்திரங்களை 'கார்பன் பேபரின் உதவியைக்கொண்டு ஒரு கூரிய பென்சிலால் வரைய வேண்டும். பிறகு உளிபோன்ற ஆயுதத்தாற் சித்திரத்தை ஓலையி லிருந்து நறுக்கி எடுக்கவேண்டும். வளைவான இடங்களுக்கு அர்த்தசந்திரன் போன்ற ஆயுதத்தை உபயோகிக்கலாம். கண், மூக்கு, கைகால்களின் விரல்கள் இவைகளை அறுக்கும்பொழுது சற்றுக் கவனக் குறைவாக இருந்து விட்டால் ஒரு பக்கம் மூளி யாகி முழுச் சித்திரமும் கெட்டுவிடும். நடுவில் வைக்க உத்தேசிக்கும் சித்திரத்தைத் தயாரித்த பின், பூக்கொடிகள், கோலங்கள், தூண்கள் மாதிரியில் எல்லாம் பனை ஓலையில் எழுதி நறுக்கி, சித்திரத்தின் நாலு பக்கமும் அலங்காரமாக வைக்கலாம். இந்தப் பனை ஓலைச் சித்திரங்களை நறுக்கியான பிறகு வெல்வெட்டில் வைத்துத் தைத் துக் கண்ணாடி போடவேண்டும். வெல்வெட்டின் நிறம் கருநீலம், சிகப்புப்போன்ற கப்பு நிறமாக இருக்கவேண்டும். அவ்விதம் இருந்தால்தான் சித்திரம் எடுப்பாகத் தோன்றும். இவ்விதம் வெல் வெட்டில் தைக்கப்பட்ட சித்திரங்கள், ஓலை வெளுப்பாக இருப்ப தால், தந்தத்தில் செய்தனபோல் தோன்றும். பாசிமணி வேலை, 'லேஸ்' போடுதல் இவைகளைச் செய்யும்பொழுது, உற்றுப் பார்க்க வேண்டி யிருப்பதால் கண்களுக்கு ஏற்படும் சிரமம் இந்தப் பனை ஓலை வேலையில் அவ்வளவாகக் கிடையாது.

ஓய்வு வேளைகளில் பனை ஓலை வேலையை ஒரு பொழுதுபோக் காகச் செய்யலாம்; பிறகு வீட்டின் சுவரில் அலங்காரமாக மாட்ட லாம்; 'இந்தப்படம் நான் செய்தது' என்று சிநேகிதர்களிடம் பெருமை கூறிக்கொள்ளலாம். சித்திரம் வரைதல் நம் நாட்டில் புராதன காலத்தில் சிறப்புப்பெற்றிருந்தது. தற்சமயத்தில் வங் காளத்தில்மட்டுமே அந்த முறைகள் ஒருவாறு கையாளப்பட்டு வருகின்றன. அதுபற்றியே அந்த முறைக்கு வங்காளச் சித்திர முறை, என்ற பெயர் ஏற்பட்டுளது. மற்றப்படி இப்பொழுது கற்றுக் கொடுக்கப்படும் சித்திர முறை முற்றிலும் மேல்நாட்டு வழிகளை

அனுசரித்ததாகவே இருக்கிறது. இதைக் கற்றுக்கொள்ளுவதற்கு அதிகப் பொருளும் வேண்டி இருக்கிறது. மாதம் நாற்பது ரூபாய்கள் ஐம்பது ரூபாய்கள் என்று பணத்தைச்செலவு செய்து, மேல்நாட்டு முறைகளில் 'வாடர்-கலர்,' 'ஆயில்-பெயின்டிங்' இவைகளைக் கற்றுக் கொள்ளுவதற்கே இப்பொழுது சௌகரியங்கள் இருக்கின்றன. பனை ஓலை வேலையை முற்றிலும் சித்திர சாஸ்திரத்தில் சேர்ந்ததாகக் கூறுவதற்கில்லை; இருந்த போதிலும் அது முற்றிலும் கைத்திறமையே அவசியமில்லாத வேலையும் அன்று. சித்திரம் எழுதத் தெரிந்தவர்கள் ஓலையில் சுயமாகவே சித்திரங்களை வரைந்து நறுக்கிக் கொள்ளலாம். பிறர் எழுதிய சித்திரத்தில் இருந்து பிரதி எடுத்துப் பிறகு சித்திரம் கெடாமல் நறுக்குவதற்கு நல்ல கைத் திறமை வாய்ந்தவர்களாகவே இருக்க வேண்டுமாதலால், சித்திரம் எழுதத் தெரியாதவர்களும் இதனை ஒரு கை வேலையாகச் செய்யலாம். இது கேவலம் பிரதி எடுக்கும் வேலை மட்டும் அன்று; நறுக்குவதற்கும் பயிற்சி வேண்டும். 'சித்திரமும் கைப்பழக்கம்' என்ற ஔவை சொல்லுக்கேற்ப, அநேகம் முறை செய்த பிறகே இந்த ஓலைச் சித்திரம் நன்றாக அமையும். இதைச் செய்யத் தொடங்குபவர்கள் பொறுமை உள்ளவர்களாகவும், விடாமுயற்சி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். கண், காது, மூக்கு இவைகளை நறுக்கும் பொழுது முதலில் சித்திரம் கெட்டு விடும். அநேகம் சித்திரங்களை இவ்விதம் நறுக்குவதால், பழக்கத்தால் ஏற்படும் கைத் திறமை உண்டாகும்; அது வரையில் 'மெய்வருந்தக் கூலிதரும்' என்று பொறுமையாக இருக்க வேண்டும்; பிறகு, அநேக தினுசான பனை ஓலைச் சித்திரங்களை வரைந்து நறுக்கி, கண்ணாடி போட்டு மாட்டி, கிரியா சக்தியை எவ்விதத்திலும் உபயோகிப்பதால் உண்டாகும் சந்தோஷத்தை அனுபவிக்கலாம்.



குரு பக்தி

தமாஷ் வாலா

சுப்பா சாஸ்திரிகள் வியாகரணத்தில் நல்ல அறிவு வாய்ந்தவரென்று சொல்லிக்கொள்வார்கள். அந்த விஷயத்தை 'ரூபி' என்றால் மேலே சொல்லாமல் நழுவி விடுவேனென்று முன்னறிக்கை செய்து கொள்கிறேன். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்: உலகத்தில் இப்பொழுது தாண்டவமாடும் புது நாகரிகத்திற்கும் அவருக்கும் எத்தனையோ காதங்கள் தூரம். இது நானறிந்த உண்மை. அவருண்டு; கோழி மங்கலமுண்டு. வேறு பெரிய ஊரோ, நகரமோ அவர் பார்த்ததே கிடையாது. அவர்பால் அளவற்ற குருபக்தி குடிகொண்டிருந்தது. குருவினுடைய பேச்சு வந்துவிட்டால் தலைமேற் கையைக் குவித்துக் கொள்வார்; அவருடைய பெயரைச் சொல்லவே மாட்டார்; 'சாஸ்த்ரீள்வாள்' என்று மட்டுஞ் சொல்வார்; அப்படிச் சொல்லும்பொழுதுகூட அவர் உடம்பில் மயிர்க்கூச்சலெடுத்துவிடும். அவருடைய ஆசை யொன்று நெடுங்காலமாகப் பூர்த்தியாகாமலிருந்தது. சில சிவஸ்தலங்களுக்குப் போய் ஸ்வாமிதரிசனம் செய்யவேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால் இதுவரையில் தூரமான ஊர்களுக்குப் போனதே கிடையாது: ரயிற்பிரயாணம் செய்ததுமில்லை. அவருடைய ஊர் மூலைக்காட்டில் இருந்தது இவற்றிற் கெல்லாம் ஒரு காரணமென்பதிலும் உண்மையிருக்கிறது.

சுப்பா சாஸ்திரிகளுடைய ஆசை அரும்பிப் பூத்துக் காய்த்துப் பழுத்தும் விட்டது. இனி எப்படியாவது நாலு ஸ்தலங்களுக்குப் போய் வந்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பதென்று துணிந்து விட்டார். 'ரயிலோ, மோட்டாரோ, கட்டை வண்டியோ, கால் வண்டியோ—ஏதாயிருந்தால்தானென்ன? நம் யாத்திரைக்கு அநுகூலமானது நல்லதுதானே' என்ற சமாதானத்துடன் நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டார். சில மைல்கள் தூரத்தில் ரயில் ஸ்டேஷன் ஒன்றுண்டு. அங்கே சாஸ்திரிகள் வந்து சேர்ந்தார். ரயிலில்

ஏறிப் போகவேண்டுமென்ற ஞாபகம் வந்துவிட்டது சாஸ்திரி களுக்கு. ஸ்டேஷனில் டிக்கட் கொடுக்கிற சமயம். சின்ன ஸ்டேஷ னாகையால் கூட்டம் அதிகமில்லை. மெதுவாக டிக்கட் கொடுக்கும் ஜன்னலருகிற் சென்றார். உள்ளே டிக்கட் கொடுப்பவர் நின்றார். அவரைக் கண்டவுடன் மெல்ல, "ஹரிஹி! ஹரிஹி!!" என்று கூப்பிட்டார். உள்ளே யிருந்தவர் இந்தப் புது அழைப்பைக் கேட்டு அதிகாரத்தோடு, "ஓய்! யாரையா அது?" என்று கனைத்துக் கொண்டே கேட்டார். சாஸ்திரிகள் இத்தகையவர்களோடு பழகினவ ரல்லராகையால்-பாவம்-பயந்து விட்டார்.

"நான் தான் சுப்பாமங்கலம் கோழி சாஸ்திரிகள்" என்று உளறிக் கொட்டிக் கிளறி மூடினார். அவருடைய பயம் ஊரையும் பேரையும் மாற்றி வைத்து விட்டது.

"யாரையா? கோழி சாஸ்திரிகள்?" என்று உள்ளே யிருந்த வர் எட்டிப் பார்த்து இடி யிடி யென்று சிரித்தார்.

"ஹரிஹி! டிக்கட்டு வேணும்."

"எந்த ஊருக்கையா?"

"எவ்வளவு கொடுக்கவேண்டும்?"

"எந்த ஊருக்கு? சொல்லும்; பின்பு சொல்கிறேன்."

"நீங்கள்தான் முன்னே சொல்லுங்கள்."

"என்ன ஐயா, பேரிழவாயிருக்கிறது. இந்த ஊருக்கென்று சொல்லித் தொலையுமே."

"தாங்கள்தான் இவ்வளவென்று சொல்லித்தொலையுங்களே." இந்தக் கூத்தைப் பார்க்க ஜனங்கள் கூடி விட்டார்கள்.

"ஓய் பிராமணா! எந்த ஊருக்கையா போகிறீர்? சொன்னால் தானே இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று சொல்ல முடியும்."

"நான் ஒரு சிவஸ்தலத்திற்குப் போகிறேன்."

"அதை யெல்லாம் ஆரையா கேட்டார்கள்? ஊர்ப்பேரைச் சொல்லுமே."

"அந்தப் பேரைச் சொல்லப்படாதே!"

"ஏன்?"

"அதிலே எங்கள் ஆசார்யாள் நாமதேயம் வருகிறது!"

"உங்கள் ஆசார்யாளை ஏனையா இழுக்கிறீர்? அந்த ஊர்ப் பேரைச் சொன்னால் சொல்லும்; இல்லாவிட்டால் அப்புறம் போய் விடும். மற்றவர்களெல்லாம் காத்திருக்கிறார்கள்."

"ஸ்வாமின்! கோபித்துக் கொள்ளப்படாது; எங்கள் குரு நாதன்—அப்புறம் கோயில்."

"என்ன ஐயா உளறுகிறீர்? குருநாதனாவது, கோயிலாவது!"

"இல்லை, இல்லை, எங்கள் ஆசார்ய மூர்த்தியின் கோயிலென்று வரும்."

"அவரென்ன பிள்ளையாரா? பிடாரியா? அவருக்கென்ன கோயில்?"

"அபசாரம்! அபசாரம்!! அப்படிச் சொல்ல வேண்டாம். அவர்கள் பேருக்கப்புறம் கோவில்; கோவிலுக்கு முந்தி அவர்கள் பேர்."

"ஓப்! உமக்குப் பயித்தியம் கியித்தியம் பிடித்து விட்டதோ?"

"இல்லை, சில கோவில்களைச் சொல்லுங்களேன்."

"பிள்ளையார் கோவில்..."

சாஸ்திரிகளுக்கு ஆத்திரம் ஒரு பக்கம்; கோபம் ஒரு பக்கம்; இவற்றிற்கு மேலே பயம் ஒரு பக்கம்; என்ன செய்வார்!

"ஏன் பரிஹாஸம் செய்கிறீர்கள்? ஊர்ப்பேரைச் சொல்லுங்களேன்."

"தஞ்சாவூரா?"

"இல்லை! கோயில்."

"பிடாரிகோயிலா?'

"ஐயையோ! ஊரும் கோவிலும்—கோவில்தான் ஊர்."

"கோவிலூரா?"

"அட கஷ்டமே! வேறே."

"நாகர் கோயிலா?"

"அப்படித்தான் வரும்-உம்-மேலே சொல்லுங்கள்."

"பிக்ஷாண்டார் கோவிலா?"

"மேலே சொல்லுங்கள்."

"வைத்தீசுவரன் கோவிலா?"

இதைக்கேட்டதுதான் தாமதம்; சாஸ்திரிகள் ஒரே துள்ளலாகத் துள்ளிக்குதித்தார். இரண்டு கையையும் நீட்டினார். "அதுதான் ஸ்வாமி! அதுதான் ஸ்வாமி!" என்ற பொழுது அவருடைய முன் பற்களில் எத்தனை விழுந்திருக்கின்றன வென்பதை அவர் சிரிப்பு வெளிக்காட்டிற்று. அப்பொழுதுதான் அவர் வைத்தீசுவர சாஸ்திரிகளின் உத்தமோத்தமமான சிஷ்யரென்று நன்றாக வெளியாயிற்று.

குறிப்பும் திரட்டும்

ஸர். டி. முத்துசாமி ஐயர் நூற்றாண்டு:—ஒருவன் நன்னடக்கையும் விடாமுயற்சியும் உடையவனாயின் 'தெய்வத்தானாகாதெனினும் முயற்சி'யான் எதனையும் சாதிக்க வல்லவனாவான் என்பது ஹை கோர்ட்டு ஜட்ஜாயிருந்து காலஞ்சென்ற ஸர். டி. முத்துசாமி ஐயரவர்கள் வாழ்க்கையால் அறியலாகும். அவர்கள் பிறந்து 28-1-1932 ஓடு ஒரு நூறு ஆண்டு ஆகிறது.

காவிரியின் நீர் வளத்தால் நிலவளமோங்கிய தஞ்சாவூர் ஜில்லாவிலே சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய திருவாரூருக்கு ஐந்து ஆறு கட்டை தூரத்தில் உச்சிவாடி யென்றொரு சிற்றூர் இருக்கின்றது. அவ்வூரிலே வேங்கடநாராயண சாஸ்திரி யென்றொருவர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களுள் முத்துசாமி ஐயர் மூத்தவர். இளையவர் பெயர் வைத்தியநாத ஐயர். இவர்கள் இளம்வயதிலேயே இவர்களுடைய தகப்பனார் காலம் சென்றுவிட்டார். ஆகவே இச்சிறு பிள்ளைகளைக் காப்பாற்றும் பொறுப்பு இவரது தாய்க்கு உண்டாயிற்று. அந்த அம்மாள் தமது இரு கண்மணிபோன்ற இருபிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அக்காலத்திலே தாலூக்கா நகராயிருந்த திருவாரூருக்கு வந்து சேர்ந்தாள். முத்துசாமிக்குத் தன்னாலியன்றவரை ஒரு திண்ணைப்பள்ளியில் கல்வி கற்பித்தாள். முத்துசாமி பயின்று ஒரு கணக்கனுக்கு உதவியாக மாதம் ஒரு ரூபா சம்பளத்தில் அமர்ந்தார். அக்காலத்தில் கிராமக்கணக்கர்கள் தங்கள் வட்டம் சம்பந்தப்பட்ட சர்க்கார் கணக்குகளைத் தாலூக்கா கச்சேரியில் எழுதவேண்டும். ஆகவே இளைஞரான முத்துசாமிக்கு அத்தாலூக்காத் தலைவரான தாசில்தாரைக் காண்பது சுலபமாயிருந்தது. அப்பொழுது தாசில்தாராயிருந்தவர் முத்துசாமி நாயகர் என்பவர். இவர் இளைஞரான முத்துசாமியின் சுறுசுறுப்பைக் கண்டு தாமே ஆங்கிலபாஷை யாரம்பப் புத்தகமொன்று கொடுத்துக் கற்பித்தார். முத்துசாமி ஐயரின் அதிதீவிர புத்தியைக் கண்டு வியந்து, அவர் மேல் இரக்கங்கொண்டு அவர் சம்மதத்தின்மேல் நாகைப்பட்டினத்தில் அக்காலத்தில் இருந்த பாதிரி பள்ளிக்கூடத்திற்கு ஆங்கிலம் படிக்க அனுப்பினார். அப்பொழுது அவருக்கு வயது பதினான்கு. நாகைப்பட்டினத்திலே ஒன்றரை வருஷத்துக்குமேல் படிக்கவில்லை. அதற்குள் அவர் ஆங்கிலத்தில் ஆரம்பப் படிப்புக்கு போதிய அளவு கற்றுக்கொண்டார்.

இவரது தீவிர புத்தியைக் கண்ட தாசில்தார் முத்துசாமி நாய இவரைக் கல்வியின்பொருட்டுச் சென்னைக்கு அனுப்பினார். அப்பொழு அதாவது 1847-8-ம் ஆண்டில் அரசாங்கத்தாரால் நடாத்தப்பட்ட ஒரே ஆங்கில நடுத்தரசாலைதான் சென்னையில் இருந்தது. அக்கலாசாலை

தலைவராக விருந்தவர் பவல் என்ற துரை மகனார். இவர் தமது மாணவர்களிடத்தில் நெருங்கிப் பழகி அவர்கள் குணாகுணங்களை யறிந்து அவரவர்கள் மனப்போக்குக்கு உற்ற கல்வியெதுவோ அதனை விசேடமாகப் போதிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். தஞ்சை ஜில்லாவில் வெகுநாள் உத்தியோகத்தி லமர்ந்திருந்து சென்னையில் பெரிய உத்தியோகத்தி லிருந்த ஸர் ஹென்ரி மங்கோமாரி தஞ்சாவூர் ஜில்லாப் பிள்ளைகளது கல்வி விஷயத்தில் அதிகப் பொறுப்புக் காட்டிவந்தார். முத்துசாமி நாயகரும் முத்துசாமி ஐயரைப்பற்றி இவருக்குச் சிபார்சுக் கடிதம் எழுதியிருந்தார். ஆகவே இவர்கள் இடையில் நின்ற நமது சரித்திர நாயகருக்குக் கல்விநலம் பெரிதும் கிடைத்தது. அவரும் விடாமுயற்சியோடு உழைத்து அப்பாடசாலையில் ஏற்படுத்தி யிருந்த பரிசுகளை யெல்லாம் பெற்று மேன்மேலும் விருத்தியும் ஊக்கமுங் கொண்டார். 1854-ம் ஆண்டிலே கல்விச்சங்கத்தார் 'தேசியக் கெடுதிகளும் அவற்றை நீக்கும் வழியும்' என்ற மகுடம்கொண்ட ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதுபவருக்கு ஐந்நூறு ரூபா பரிசளிப்பதாக விளம்பரம் செய்தனர். அந்தப் பரிசையும் இவரே யடைந்தார். அதனோடு அரசாங்கத்தில் இவர் எந்த வேலைக்கும் தகுதியுடையவரென்றும் கஜட்டில் விளம்பரமாயிற்று. இஃதோடு இவர் பாடசாலைக் கல்வி முடிந்தது. அந்த ஐந்நூறு ரூபா பரிசையளிக்கும் போது பாடசாலை யதிபதியான பவல் துரைமகனார் 'இவர் இந்த முடிப்பைச் சேமதனமாகக்கொண்டு பெரும்பொருள் ஈட்டவல்லராகுக' என வாழ்த்தினார்.

அந்த ஆண்டிலேயே இவர் 60 ரூபா வருமானமுள்ள உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். பின்னர், தஞ்சை ஜில்லா கலெக்டர் கச்சேரி தஸ்தாவேஜு குமாஸ்தாவாக நியமனம் பெற்றார். 1856-ம் ஆண்டு மார்ச்சு மீ 12உ 150 ரூபா சம்பளத்தில் பள்ளிக்கூடப் பரிசோதகராக நியமனம் பெற்றார். பள்ளிக்கூடப் பரிசோதகரா யிருக்கும்பொழுதே அரசாங்கத்தாரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வக்கீல் பரீட்சைக்குப் படித்து அதனிலும் முதன்மை பெற்றார். உடனே அக்காலத்தில் தரங்கன்பாடியிலிருந்த முன்சீப் கோர்ட்டில் முனிசீப்பாக நியமனம் பெற்றார். சிறிதுநாளையில் இனாம் நிலங்களைப்பற்றி விசாரணைபுரிந்து தீர்மானிக்க ஏற்பாடாயிற்று. அதனில் இவரும் ஒருவராக அமர்ந்து 'டிப்டி கலெக்டர்' பதவிபெற்றார். 1862-ம் ஆண்டில் டிப்டி கலெக்டர் பதவியோடு மாஜிஸ்டிரேட் என்னும் குற்றவிசாரணை நீதிபதியாகவும் நியமனமடைந்து முதலில் மஞ்சக்குப்பத்திலும் பின்னர் தஞ்சையிலும் அலுவலிலமர்ந்தார். சென்னையில் அக்காலத்தில் சிறப்புடன் நியாயவாதி அலுவல் பார்த்த ஜே. பி. நார்ட்டன் துரை இவர்முன் தோன்றி வாதித்தபோது இவர் ஒரு பெரும்பதவியை வகிக்கத்தகுந்த நல்ல புத்திசாலியென்று கண்டுகொண்ட
ாடு, அந்த விஷயத்தைத் தன் நண்பர்களான ஜட்ஜ் ஆலோவே, ஜார்ஜ்
ஆர் என்பவர்களுக்கும் கூறினார். அச்சமயம் மங்களூரிலே நல்ல
சட் தெரிந்த நீதிபதி யொருவர் வேண்டியிருந்தது. உடனே அவ்வூருக்கு
யா சப் ஜாக நியமனம்பெற்றார். இது நடந்தது 1865-ம் ஆண்டு ஜூலை மீ த்தி
லாகு பின்னர் மூன்றாண்டு கழித்து சென்னையில் குற்றவிசாரணை யதிகாரி
ாக (residency Magistrate) நியமனம் பெற்றார்.

சென்னைவந்து சேர்ந்தபின் இவர் கல்வி பயின்ற நாளிலிருந்த நண்பர்களும் பெரியோர்களும் உதவுவாராயினர். ஆலோவே நீதிபதி நியாய சாஸ்திரத்தை நன்ருகப் பரிசிலனை செய்து அறிந்துகொள்ளும்படி தூண்டினதுமன்றி, ஹைகோர்ட்டுத் தீர்மானங்களையும் பிரிவி கௌன்ஸில் மன்னவனுணைகளையும் (*Privy Council Judgments*) ஆராய்ந்து அவை நியாயத்தையொட்டி யிருக்கின்றனவா வென ஆராய்ச்சி செய்யச் செய்து, தாமே அவற்றைக் கண்காணித்துவந்தார். அக்காலத்தில் இவர் செய்த ஆராய்ச்சிப் பாகுபாட்டின் திறனே, பிற்காலத்தில், தாம் ஹைகோர்ட்டு நீதிபதியாயிருந்த காலத்தில் வழக்குகளைக்கேட்டு அவற்றிலுள்ள சிக்கல்களை நீக்கப் பெருஞ் சாதனமாயிருந்தது. பி. எல். என்ற சட்டநிபுணப் பரீட்சை ஏற்படுத்திய காலத்தில் அப்பரீட்சையிலும் முதல் வகுப்பிற் றேறினர். பின்னர் சென்னையில் 'ஸ்மால் காஸ் கோர்ட்டு' நீதிபதியாக நியமனமாகி வேலைபார்த்துவந்தார். 1878-ம் ஆண்டில் ஹைகோர்ட்டு நீதிபதிகளில் ஒருவராக நியமனம்பெற்று இறக்கும்வரை அந்த உத்தியோகத்தி லமர்ந்திருந்தார். பதினேழாண்டு அவ்வுத்தியோகம் செய்து தமது அறுபத்துமூன்ருவது வயதிலே 1895-ம் ஆண்டு முதலில் புன்குரம்பை நீத்துப் புகழுடம்பு பெற்ருர்.

இவர் பெரியோர்முதல் சிறியோர்வரையிலும் செல்வர்முதல் ஏழைவரையிலும் எவரையும் அன்புடன் ஏற்று உபசரிக்கும் குணமுடையவர். ஐரோப்பியராலும் ஒருங்கே புகழப்படுவோர் இவர் ஒருவரே. இளமையில் பழகின சாதாரண நடையுடை பாவனைகளே இறக்கும்வரை யிருந்தன. அடையக்கூடாத பெரிய பதவியை யடைந்தும், தாம் வழக்கம்போலக் காலையில் நீராடின பின், தமது வழக்கமான கணக்கர் மேஜையில் உட்கார்ந்து தமது தீர்ப்புக்களையெழுதுவார். இவர் சென்னையில் போலீஸ் நீதிபதியாக விருக்கும்போது ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் தன் தோட்டத்துக்குள் நுழைந்த ஒரு இந்தியரை யடித்தார். இவ் விந்தியர் இவரிடம் முறைப்பாடு செய்து விண்ணப்பமிட்டார். ஐயர் குற்றமிழைத்தவர் ஐரோப்பியர் என்று கருதாமலும் தமக்கு மேற்பட்டவரொன்று நினைக்காமலும் சட்ட திட்டங்களுக்குட்பட்டே அவரைத் தம் முன் வந்து விண்ணப்பத்திற்கு விடை யிறுக்கும்படி கட்டளை யிட்டார். அந்த ஹைகோர்ட் ஜட்ஜும் இவருடைய உத்தரவை மீற அஞ்சி இவர் முன்னிலையிற் றேன்றி அவர் செய்த தீங்குக்காக மூன்று ரூபா அபராதம் விதிக்கப்பட்டார். தஞ்சையில் டிப்டி கலெக்டராக விருக்கும்பொது ஒரு பெரிய தனிகன் குற்றஞ் செய்ததாகப் பிரியாது வர, அதை விசாரித்துக் குற்றவாளியை ஜில்லா நீதிஸ்தலத்தில் விசாரணைக்கு அனுப்பினர். இவர் சர்வகலா சங்கக் காரியக்குழுவில் ஒருவராக அமர்ந்திருந்தபோது தகுந்த கல்விமான் ஒருவருக்குப் பரீட்சாதிகாரி வேலையொன்று வேண்டியிருந்தது. ஒருவரும் பரீட்சாதிகாரி வேலைக்கா[illegible] சிபார்சு செய்யக்கூடாதென்பது சர்வகலா சங்க விதிகளில் ஒன்று. [illegible] அக்கல்விமானைப் பார்க்க மறுத்துவிட்டாலும் அவருக்கு அவ்வுத்திய[illegible]கத்தை யளிக்கச் சிபார்சு செய்தார். இறக்கும்வரை தன் அறிவை வி[illegible] செய்துகொள்ளப் பல நூல்களைப் படித்துவந்தார். அபார ஞாபககுரு

யுடையவர். இதனாற்றான் முதுமையிலும் பல அலுவல்களுக்கிடையிலும் பல பரீட்சைகளைத் தேற இயன்றது.

இப்பெரியாருடைய குணங்களை மெச்சி அரசாங்கத்தார் 1877-ம் ஆண்டு டில்லியில் நடந்த கூட்டத்திற்கு வரவழைப்பு அனுப்பிப் பதக்கமும் அளித்தனர். 1878-ம் ஆண்டில் C. I. E. என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1893-ம் ஆண்டில் K. C. I. E. என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1872-ம் ஆண்டு முதற்கொண்டே சென்னைப் பல்கலைக் கழக அங்கத்தினராயும், உயர்தரச் சட்ட பரீக்ஷாதிகாரியுமாக விருந்துவந்தார். இவருடைய ஞாபகக் குறியாக வெள்ளைக்கல்லில் ஒரு உருவம் செய்யப்பட்டு சென்னை ஹைகோர்ட்டை அலங்கரிக்கின்றது.

இவ்வாறு சிறப்புற வாழ்ந்த இப்பெரியாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிவாழவேண்டியது நமது கடமைகளிலொன்றாகும். [ஸ்ரீமான். சோமசுந்தர தேசிகர், 'நவசக்தி'யில் (27—1—'32) எழுதியதின் சுருக்கம்.]

கல்வி முறையிலுள்ள குறைகள்:—சில நாட்களுக்கு முன்பு இங்கிலாந்திலே தலைமை உபாத்தியாயர்கள் மகாநாடு ஒன்று நடந்தது. அப்பொழுது ஈடன் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயரான டாக்டர் சி. ஏ. ஆலிங்டன் என்பார் அந் நாட்டிலே கற்பிக்கப்படும் கல்வி முறையிலுள்ள குறைகளைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்:—பள்ளிக்கூடத்திலே கல்விகற்கும் மாணவர்கள் உலக விஷயங்களில் தலையிடுவதற்குப் போதுமான அறிவைப் பெற்றுக்கொள்ளுவதில்லை என்று பொது ஜனங்கள் குறை கூறுகிறார்கள். அவர்கள் தாம் கற்றுக்கொள்ளும் கல்வியைப் பழிக்காவிட்டால் எதைத்தான் பழிப்பது? அதனால் தான் அவர்கள் பள்ளிக்கூடக் கல்வியைப் பழித்துப் பேசுகிறார்கள். இப்படிக் குறை கூறுபவரைத் திருப்தி செய்ய முயலும் சில தலைமை உபாத்தியாயர்கள் பல வகையான பாடங்களை மாணவர்கள் தலையில் சுமத்துகிறார்கள். இது முற்றிலும் பிசகு. அறிவு என்பதற்கு நாம் அளவுக்கு மிஞ்சிய மதிப்பு வைத்துவிட்டோம். கணக்கும் பாஷா ஞானமும் ஒரு மாணவருக்குத் தெரிய வேண்டியது அவசியந்தான்; என்றாலும், சாதாரணமாகத் தப்புப்போடாமல் கூட்டக் கழிக்கத் தெரிய வேண்டியது மட்டிலும் அவசியம்; தன்னுடைய பாஷையைப் பிறர் பேசினால் தெரிந்து கொள்ளவும், தானே உபயோகிக்கவும் வேண்டிய அளவு மட்டிலுள்ள பாஷா ஞானமும் அவசியம். இதற்கு மேற்பட்ட அளவில் கணித சாஸ்திர ஞானமும் அவசிய மென்று சொல்லுவது பொருத்தமாகாது. நாம் செய்து வருகின்ற முக்கியமான தவறு என்னவென்றால் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கும் எல்லா விஷயங்களையும் ஒரே நோக்கத்துடன், அதாவது மாணவன் அவ்விஷயத்தில் சிறந்த பாண்டித்தியம் அடைய வேண்டுமென்னும் நோக்கத்துடன் கற்றுக்கொடுப்பதேயாகும். சாதாரணப் பையனுக்கு வேண்டாத பல விஷயங்கள் அவனைப் பண்டிதனாக்க முயலும் முறையில் நம்மால் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மாணவருக்கு இன்றியமையாத அறிவு எது என்றும், இன்றியமையாததல்லவாயினும் எந்த அறிவை அவன் கற்றுக்கொண்டால் நலம் என்றும் பள்ளிக்கூடங்களில் நாம் பிரித்துக்

கொள்ளவேண்டும். ஒவ்வொருவனுக்கும் இயற்கையாக உள்ள ஆர்வத்தையும் கவனசக்தியையும் தூண்டுவதே நாம் பின் பற்ற வேண்டிய சிறந்த கல்வி முறையாகும்.

ஹார்ரோ நகரத்துப் பள்ளிக்கூடத்துத் தலைவரான டாக்டர் சிரில் நார்வுட் என்பார் இதை ஆமோதித்தார். இரு நாட்டுப் பள்ளிக்கூடங்களிலும் லத்தீனும், ஆங்கில வசன நடையும், கணிதமும் வேண்டாத அளவு கடினமாக இருந்து வருகின்றன. இப்பொழுது உள்ள பரீக்ஷை முறைகளை மாற்றுவது தான் முதன் முதலாகச் செய்ய வேண்டிய முயற்சி. நாட்டிலே உள்ள வியாபாரங்கள் போன்ற பிற துறைகளுக்கும் மாணவர்கள் பயன் படுவார்கள் என்பதைத் தற்காலத்திலே சர்வ கலாசாலைகள் மறந்துவிட்டு மாணவர்கள் பண்டிதர்களாக வேண்டும் என்னும் நோக்கத்தையே கைக் கொண்டிருக்கின்றன. இந்தத் தவறான நோக்கத்தைக் கொண்டே இந் நாட்டில் கல்விகற்கும் 25 லக்ஷம் மாணவர் மாணவிகளுடைய கல்வி முறை வகுக்கப்பட்டு வருகிறது. இதை ஒழுங்கு படுத்துவது அவசியமாகும் என்று அவர் வற்புறுத்தினர். நமது நாட்டுக் கல்வி முறைகளும் இந்தக் குறைகளுக்கு உட்பட்டனவல்லவா? அவற்றை உடனே சீர்திருத்துவதும் மிக்க அவசியமல்லவா? அ.

சுக்கூர் அணை:—இமயமலையில் பிறந்து அதிவேகமாய்ப் பாலைவனத்திடையிற் பாய்ந்தோடும் ஸிந்து நதியின் ஜலப்பிரவாகத்தைத் தடுத்து நிறுத்தி வாய்க்கால் வழியோடி நாடெங்கும் செழிக்கச் செய்தற்கானது இப் பெரு முயற்சி. உலகத்திலே யாவற்றிலும் பெரிதான எஞ்ஜினியரிங் வேலை இதுவே என்று யாவரும் சொல்லும்படி அவ்வளவு பெரிது இவ்வாச்சரியமான வேலை. ஸிந்துநதியின் விபரீதப் போக்குக்களையும், இந்த அணையானது நிருமிக்கப் பட்டிருக்கும் பிரதேசத்தின் அத்யுஷ்ண நிலைமைகளையும் அறிந்தோர்க்கன்றி மற்றவர்க்கு இதை நிருமிப்பதில் உள்ள பெருங்கஷ்டங்கள் தெரியா. இதன் அளவைப் பற்றிச் சாதாரணமாக ஜனங்களுக்குத் தெரியாது. செழுமை மிகுந்த எகிப்துதேசத்தில் பயிராயிருக்கும் விஸ்தீர்ணத்தைக் காட்டிலும் லக்ஷக் கணக்கான ஏகராக்கள் அதிகமான ஒரு பாலைவனத்தை நீர் வளம் பொருந்தச் செய்து பயிரிட்டுப் புஷ்பிக்கச் செய்ய முயலுவது இம்முயற்சி. இதனால் பயிராகக் கூடிய பிரதேசம் இங்கிலாந்திலுள்ள ஐந்து பெரிய மாகாணங்களின் அளவைக் காட்டிலும் அளவில் பெரியது. இந்த அணையிலிருந்து புறப்படும் பல வாய்க்கால்களுள் இரண்டு சூயஸ் வாய்க்காலைக் (*Suez Canal*) காட்டிலும் அகலமானவை. மற்றொன்று மான்செஸ்டர் கப்பலோடையைக் (*Manchester Ship Canal*) காட்டிலும் இரண்டு மடங்கு அகலமானது. இவ்வாச்சரியமான முயற்சியால் பாலைவனத்தின் மணலானது தானியமணியாக மாற்றப்படும் என்பதற்கு ஐயமில்லை. அ.

கற்பு:—தலைவன் தலைவி இவர்களுக்குள்ள காமத்தை, களவு, கற்பு என்று இருவகையாகக் கூறுவது தமிழ் வழக்கு; உருவும் திருவும் பருவமும்

குலமும் குணமும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையாராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி, பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது களவு என்றும் தலைவர் தலைவியரின் பிரிவைக் கற்பு என்றும் கூறுவர் பரிமேலழகர். தலைவன் தன்னைப் பிரிந்து செல்ல நேரிடின், அவனுக்கேயாகவுள்ள தலைவி அவனிடம் அன்பு மாறாதிருப்பின் அவளைக் கற்புடையாள் என்றும் பத்தினி என்றும் கூறுவது மரபு. இத்தகைய கற்பு இருவகைப்படும். இதனை 'ஆறியகற்பும் சீறியகற்பும் எனக் கற்பு இருவகை' என்று அடியார்க்கு நல்லார் வகுத்துக்காட்டிச் சிலப்பதிகாரக்கதையுள் வீரபத்தினியான கண்ணகி மறக்கற்புடையாள் என்றும் கோப்பெருந்தேவி அறக்கற்புடையாள் என்றும் கூறுவர். இவ்வழியே வகுத்துக்கொண்டால், திரௌபதி மறக்கற்புடையாள் என்றும் சீதை அறக்கற்புடையாள் என்றும் கூறலாம். கற்புடைப் பெண்டிராலேயே மாதமும் மாரியுள் ஒரு மழை பெய்கின்றது என்பர்;

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்னும் குறளும் 'வான்தருகற்பு' என்னும் சொல்வழக்கும் இதனை விளக்குகின்றது; இவ்வாறு கொண்டோனல்லது தெய்வமும்பேணாப் பெண்டிரின் பெருமையைப் பேசப்புகுந்தால் பேச்சும் அஞ்சும் என்று திருத்தக்கதேவர் கூறுவர்; "மாற்றம்மஞ்சும் மன்னியகற்பின் மடவாளும்" (சீவக. பா. 361).

தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஏழு ரிஷிபத்தினிகளையொத்த ஏழு கற்புடைமகளிர் தோன்றினர் என்றும் அவர்களுள் கண்ணகி அருந்ததிபோற் சிறந்தவள் என்றும் சிலப்பதிகாரத்து வஞ்சினமாலையாலே தெரியவருகின்றது. வே. நா.

அற்புதமான இராமாயணம்:—காசி அரசாங்கப் புத்தகாலயத்திலே மிகவும் அற்புதமான ஓர் இராமாயணம் இருக்கிறது. அஃது ஏழு புத்தகங்கள் அடங்கியது. பண்டைக்கால இந்தியச் சிற்பிகளால் ஆச்சரியமான முறையில் சித்திரிக்கப்பட்டது. இச்சிற்பிகள் தலைமுறை தலைமுறையாக இப்புத்தகங்களுக்கு உரிய படங்களை வரைந்து வந்திருக்கின்றனர். புத்தகத்தை விரித்தால் ஒரு புறம் ஸம்ஸ்கிருத கவியும் அதற்கு நேராக எதிர்ப் புறத்தில் அந்தப் பக்கத்திலுள்ள விஷயத்தை விளக்கிக் காட்டும் அழகிய படங்களும் இருக்கின்றன. இச்சித்திரங்களிற் சில அநேக விஷயங்களை ஒருங்கே விளக்குவனவாயும், பலபொருள்கள் மிருகங்கள் முதலியவற்றைத் தோற்றச்செய்வனவாயும் காணப்படுகின்றன. சிற்சில ஒரு செயலையன்றித் தொடர்ச்சியான பல செயல்களைக் குறிப்பனவாயும் காணப்படுகின்றன. அவற்றைப் பார்க்கப் பார்க்க மனம் திகைக்கின்றது. அவ்வளவு நுட்பமாயும் ஆச்சரியமாயும் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு படத்தைச் சுற்றியும் அழகிய விளிம்பு ஒன்று புஷ்பங்களைத் தொடுத்தது போல் காணப்படுகின்றது. புத்தகத்தில் விளிம்புகளில் ஒன்றாவது மற்றொன்றைப்போல் இருப்பதில்லை. எழுதப்பட்

டிருக்கும் எழுத்துக்களும் அவ்வாறே அழகாயும் ஒழுங்காயும் துல்லியமாயும் எழுதப்பட்டிருக்கின்றன. என்று ஹிந்து பத்திரிகை கூறுகின்றது. அ.

வைரக்கணக்கு:—1924-ம் வருஷத்திலே எடுத்த கணக்குப்படி உலகத்தில் 42 டன்னுக்கு மேல் நிறையுள்ள வைரக்கற்கள் வழங்கி வருகின்றன. அதில் முக்காற் பங்குக்கு மேல் தென் ஆப்பிரிக்காச் சுரங்கங்களிலிருந்து 40 வருஷத்துக்குள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

ஜோடுகளைத் துலக்க:—ஜோடுகள் பாலிஷ் (மெருகு) போட்டும் பளபளப்பாகா விட்டால் கொஞ்சம் எலும்மிச்சம்பழச் சாற்றை நன்றாகத் தடவித் தேய்த்து விட்டுப் பின்பு பாலிஷ் போட்டால் பாலிஷ் நன்றாக ஏறும்.

நாற்காலி மேஜை முதலியவற்றில் விழும் கோடுகளை நீக்க:—ஸாலட் எண்ணெயையும் (*Salad oil*) காடியையும் சம அளவாகக்கலந்து கொள்க. மிருதுவான துணியைக் கொண்டு மெத்தென்று ஒரு முடிச்சுக் கட்டி அந்த முடிச்சை அத் திராவகத்தில் நனைத்து மேஜை நாற்காலிகளை நன்றாகத் துடைத்தால் கோடுகள் எல்லாம் மறைந்து விடும்.

வார்ணிஷ் போட்ட மரசாமான்களினின்று அழுக்கைப் போக்க:—உபயோகப்படுத்திய தே இலைகளின்மேல் மறுபடியும் கொதிக்கும் நீரைவிட்டு வடிகட்டி நீரைக்கொண்டு துடைத்தால் அழுக்கு எடுபட்டுப்போம்.

மருந்துக் கறைகளை நீக்க :—சிற்சில வேளைகளில் உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகள் சிந்தித் துணிகளைக் கறையாக்கி விடுகின்றன. அம்மோனியாவைக் (நவாச்சாரம்) கொண்டு அத்துணிகளிலுள்ள மருந்துக்கறைகளை நீக்கி விடலாம்.

வெள்ளை வர்ணம் பூசிய பொருள்களிலிருந்து அழுக்கை எடுக்க :—தண்ணீரில் வெங்காயத்தைக் கொதிக்க வைத்து அந்த நீரைக்கொண்டு கழுவினால் அழுக்கும் நீங்கும் ; பொருள்களும் பளப்பளப்பாகும்.

பிடி கத்தி விட்டுக் கழன்று வந்து விட்டால் அதை மறுபடியும் பிடியில் பதிக்க :—ரோசனத்தையும் செங்கல் தூளையும் சம அளவாகக்கலந்து பிடியிலுள்ள துவாரத்தில் நிறைய அடைத்துப் பிறகு கத்தியின் செருகு முனையைத் தீயில் நன்றாகச் சுடவைத்து பிடியின் துவாரத்துக்குள் செருகி விட்டால் நன்றாகப் பிடித்துக் கொள்ளும்; அப்புறம் பிடி இலேசாகக் கழலாது.

புடவை சாயம் போகாமலிருக்க :—இலேசுச் சூடாக இருக்கும் நீரில் சிறிது உப்பைக் கரைத்து அதில் புடவையை அலசிப் பிறகு துவைத்தால் சாயம் ஓடிப்போகாது.

மைக் கறைகள் பழக் கறைகள் இவைகளை எடுக்க :—குளிர்ந்த நீரில் நிறைய உப்பைக் கரைத்து அதில் நனைத்துப் பிறகு கழுவினால் கறைகள் நீங்கிப்போகும்.



ரிஷபவிஜயம்: [ஸ்ரீமான் கே. வி. பஞ்சநத ஐயர் எழுதியது ; பக்கம், XX + 136. கிடைக்குமிடம்: மைியிலாப்பூர், லா ஜர்னல் அச்சக்கூடம் ; விலை 10 அணா.]

இது, பிரமோத்தரகாண்டத்திலுள்ள ரிஷபயோகி இயற்றிய சில அற்புதங்களை நாடகமாக அமைத்து எழுதப்பட்டிருக்கிறது. இந்நாடகம் தெளிவும் செறிவும் உள்ள நடையில் இடையிடையே சந்தர்ப்பத்துக் கேற்ற கீர்த்தனங்களோடு விளங்குகிறது. கருத்துக்களின் தொடர்ச்சி சுவை பட அமைந்திருக்கிறது. அடியார்கள், அல்லாதவழியிற் செல்லுங்கால் இறைவன் அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் அருட்செயலின் திறமும், கற்பின் சீர்த்தியும், பொறுமையின் பொற்பும் வேறு பல நீதிகளும் இந்நாடகத்தினால் அறியப்படும். இது காலேஜ் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக வைத்தற்குரிய தகுதியுடையதென்று கருதுகிறோம்.

நாரதர் : [ஆசிரியர் : ஸ்ரீமான் எஸ். கே. பார்த்தஸாரதி ஐயங்கார், பி.ஏ., பீ.எல்., டிஸ்டிரிக்ட் முன்ஸீப், மன்னார்குடி ; பக்கம், XII + 84. ஆசிரியரிடம் கிடைக்கும். விலை 12 அணா.]

இப்புத்தகம், நாரதருடைய கருவத்தை மகாவிஷ்ணு அடக்கிய வாலாறு, துருவனுடைய சரிதை, அகல்யையின் கதை, சத்தியபாமையின் கருவமடங்கிய வரலாறு என்னும் கதைகளில் உள்ள நாரதருடைய சம்பந்தத்தை முக்கியமானவைகளாக எடுத்துக்கொண்டு எழுதிய ஒரு நாடகமாகும். இந்நூலாசிரியர் இதற்குமுன் பல நாடகங்களை இயற்றியவரென்பதும் அவை சில இடங்களில் நடிக்கப்பெற்றுவருவதும், ஹைகோர்ட் ஜட்ஜ் கனம்தங்கிய திவான் பகதூர், கே. சுந்தரம் செட்டியாரவர்களும் பல தமிழ் நாடகங்களைத் தமிழில் எழுதியுள்ள ராவ்பகதூர், பி. சம்பந்த முதலியாரவர்களும் இந்நாடகத்தைப் பற்றி உயர்ந்த மதிப்புரைகள் எழுதியுள்ளார்கள் என்பதும் இந்நூலின் சிறப்பைப் புலப்படுத்தும். இந்நூலின் அனுபந்தமாகச் சில கீர்த்தனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் மற்றப் பாஷைகளிலுள்ள கீர்த்தனங்களைப் பின்பற்றி யமைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டனவாகத் தோற்றுகின்றன.

இரட்டைக் கோலமர்மம் : [கடலூர் ஸ்ரீமான் வெ. இராமச்சந்திரன் எழுதியது; பக்கம்: 28 ; கிடைக்குமிடம்: பாலவித்யா ஆபீஸ், கும்பகோணம் ; விலை 4 அணா.]


இஃது ஒரு சிறிய துப்பறியும் கதை; இடையிடையே சில சில நீதிகளை விளக்கிக் கொண்டிருப்பது.

பெண்கல்விக்கும்மி : [நாகை ஸ்ரீமான் ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் பாடியது ; தருமபூஷண புத்தகசாலை, நாகபட்டினம்.]

பெண்களுக்குக் கல்வி இன்றியமையாத தென்னும் நோக்கத்தோடு எழுதப்பட்ட இந்நூல் யாவரும் உணரக்கூடிய எளிய நடையில் அமைந்துள்ளது. கல்வியின்சிறப்பு, நீதிசாஸ்திரம், சங்கீதசாஸ்திரம், வாகடசாஸ்திரம், பாகசாஸ்திரம் முதலியவற்றைப் பெண்கள் அறியவேண்டுமென்பது, பண்டைக்காலத்திலிருந்த கற்பிற்சிறந்த பெண்மணிகள் பெருமை முதலிய செய்திகளை யமைத்துக் கேட்பார்க்கு இனிய ஓசையைத் தரும்வண்ணம் பாடப்பட்ட இச்சிறியநூல் பெண்களுக்கும் பிறருக்கும் மிக்க பயனைத்தரும்.

பத்திரிகை வரவு

1. கானவித்யா ப்ரகாசினி—(ஸ்ரீவைகுண்டம்)
2. யாதவமித்திரன்—(மதுரை)
3. குலாலமித்திரன்—(பழனி)
4. மனோரஞ்சனி—(சென்னை)
5. ஹரிசமயதிவாகரம்—(மதுரை)
6. ஹிந்திப்ரசாரக்—(சென்னை)
7. இந்துநேசன்—(சென்னை)
8. இந்துசாதனம்—(யாழ்ப்பாணம்)



கலைமகள்

திருமயிலைப் பதிகம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

கலிவிருத்தம்

1. **ந**தியுறு சடைமேலோர் நாகம தணிவானும்
பொதியவிழ் நறுங்கொன்றைப் போதணி முடியானும்
கதிரொளி காட்டியவெங் கண்ணுறு நுதலானும்
மதிதவழ் மாடஞ்சூழ் மயிலையி லுறைவானே,

2. அயிலுறு படையானும் அனலுறு கையானும்
வெயிலுறு விழியானும் வேலுறு கண்ணாளை
மயிலுறு வடிவோடும் மணம்புரி பெருமானும்
பயிலுறு பாட்டோவா மயிலையிற் பயில்வானே.

3. செய்தவ முடையானும் செறிமலர்க் கழலானும்
கைதவ முடையாரைக் கடிந்திட வல்லானும்
மைதவழ் கண்ணாளோர் மாதிட முடையானும்
உய்திற முடையார்சூழ் மயிலையி லுறைவானே.

4. மதகரி யுரியானு மறலியை முனிவானும்
இதமெனு மொழியானு மிமையவர் பெருமானும்
பதமலர் பணிந்தோர்தம் பருவரல் களைவானும்
மதுமலர் நிறைசோலை மயிலையி லுறைவானே.

5. கண்ணுறு கழையென்னும் கையுறு படையானைக்
கண்ணுறு கனல்காட்டிக் காய்ந்திட வல்லானும்
ஒண்ணுத லுமையாளோ டுடலொரு கூறானும்
பண்ணுறு பாடல்சேர் மயிலையிற் பயில்வானே.

6. நஞ்சினை நெஞ்சத்து நணுகிட வைத்தானும்
செஞ்சர மெய்யாதே திரிபுர மட்டானும்
பஞ்சணி விரலாளைப் பாகம துடையானும்
மஞ்சணி மணிமாட மயிலையி லுறைவானே.

7. சேந்தொளி மெய்யானும் செழுமறை நாவானும்
பாந்தளி னணியானும் பாயுறு விடையானும்
சாந்தணி நகிலாளைத் தாங்கிடு முருவானும்
மாந்தளி ருறுசோலை மயிலையி லுறைவானே.

8. மலையுறு சிலையானும் மதியணி முடியானும்
தலையுறு கலனாகத் தகுபலி கொள்வானும்
கலையுறு கண்ணாளைக் காதலித் திட்டானும்
அலையுறு கடலைச்சேர் மயிலையி லமர்வானே.

9. வானவர் பெருமானும் வரையணி வில்லானும்
ஆனையி னுரியானும் அவிரிழை யரவானும்
தேனையு மிகழ்சொல்லாள் தேர்ந்திடு செயலானும்
மானொடு மயிலானும் மயிலையி லுறைவானே.

10. பன்றியி னுருவாகிப் பாய்ந்தவ னுடல்மாய
வென்றிகல் கணையேவி விசயனொ டமர்செய்தே
அன்றவன் றனிவெல்ல வரும்படை யருள்வானும்
மன்றலின் மலிசோலை மயிலையி லுறைவானே.

கலைமகள் வாழ்த்து

என். கோடீசுவரையர்

கட்டளைக் கலித்துறை

தண்ணார் மொழிமீன் விழிவலக் கண்திருத் தையலென்னிற்
கண்ணார ஞானமுக் கண்தரச் செய்துந்தண் கண்ணெனும்நீ
பண்ணார் பனுவ லெனும்நின் இருபரி பூர்ணக்ருபைக்
கண்ணால் அருளியும் காத்தருள் என்னைக் கலைமகளே.

குறிப்பு:—பராசக்தி மீனாக்ஷியின் வலக்கண் லக்ஷ்மி; உக்கண் அதாவது நடுக்கண் ஞானம்பிகை; தண்கண் அதாவது சந்திரலோசனம் அதாவது இடக்கண் ஸரஸ்வதி; பண், பனுவல் அதாவது கீதமும், ஸாகித்யமும் கலைமகளின் இரு கண்கள்.

கீர்த்தனம்

இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்

பல்லவி

வரவேணும் வாணி—என்நாவில் வந்
தமர வேணும் காண்நீ—மணிவீணாதாரிணி (வர)

அனுபல்லவி

வரவேலாயுத பாணி—பதம் பேணிப்—பாவுதமிழ்
தரவே நித்யகல் யாணி—நீ (வர)

சரணம்

அனையே நீ என் அகமதில் காணி—கொண்டுறைகந்த
கானா முதம் தரும் தேனி—என
உனையே நினை எனை ஆள் நீ—அயன்
உளமகிழ் ராணி—உன் அருட்கவி ஆம்
குஞ்சரதாஸனும் என் கேள் நீ (வர)

ஸ்வர ஸகித ஸாகித்யம்

பல்லவி

; * ஸரிஸா நீஸரிகாகரிகம | கா ; ; கா | கம பா கமகரி ||
* வர வே ணும் வா | ணீ என் | நா வில் வந் ||
ஸநி * ஸமகரி ஸநி நீ ஸா தா நீ | ஸா, தநிஸ்ாரி | நித பம கா கரி ||
த * மர வே ணும் கா | ணீ மணிவீ | ணா தாரி ||
ஸநி * (ஸரி)
ணீ * (வர)

அனுபல்லவி

; * மத பம கம பா ; பா மா | பாதநிதாநீபா; | , , , , , ஸ்தநி ||
* வர வே லா யு த பா ணீ | ப தம் ||
ஸ்நி * தநி ஸ்ர ; பம பத நித பம | ; கம தா பா | மா, ஸம க மரி ||
* பே ணிப் பர வு தமிழ் | ; தர வே | நித்யகல்யா ||
ஸநி *
ணிநீ *

சிட்டா ஸ்வரம்

* ஸரிகமபமாகாரிஸநிதநி | ஸா,ரிகரிஸநி | ஸரி கம பத பம ||
கரி * கம பத நிஸ் நித பதநி ரீ, | ஸ்ா, ரிக்ம்க்ரி | ஸ்நி த பா மகரி ||
ஸநி * (ஸரி)
* (வர)

சரணம்

; * நிஸ கரி ஸநித ஸநிபதா நீ | ஸா ; ; ஸநி | ஸரி கா , ரி ஸநி ||
* அனையே நீ என் அகமதில் கா | ணீ கொண் | டுறை கந்த ||
; ஸா கரி கா கா மாரீ கா | மா்பாகரிஸா | , , , , , மகா ||
* கானு முதம் தரும் | கேணீ | என ||
மரி * மத பம கம பா பா பா மா | பாதநிதாநீபா; | ; ஸ்நி தநி ஸ்நி ||
* உனையே நி னை எ னை | ஆள் நீ | அயன் உள மகிழ் ||
* பஸ் நிஸ்ா,நிஸ் ரி க்ா ரிஸ்நி | , பர்ஸ்ா,ஸ்ரி | நிதப பம க கரி ||
ரா ணீ உனருட் கவி | ஆம் குஞ் சர | தா ஸனுமென்கேள் ||
ஸநி * (ஸரி)
நீ * (வர)

ஆசிரியர் அறிவிப்பு

நமது, 'கலைமகள்' பலதுறையிலும் சிறப்படையும்படி செய்யவேண்டுமென்னும் எண்ணத்துடன் இப்பத்திரிகையில் பழைய தமிழ்நூல்களை வெளியிடலாம் என்று பிரம்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாத ஐயர் அவர்களிடம் தெரிவித்துக்கொண்டோம். அவர்கள் அவ்வேண்டு கோளுக்கு இணங்கி ஒவ்வொரு மாதமும் இதுகாறும் வெளிவராத அரிய நூல்களைத் தனியே குறிப்புரை முதலியவற்றோடு, கலைமகளில் தொடர்ந்து வெளியிட மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். முதலாவதாக, பலபட்டடைச் சொக்கநாதப்புலவரால் இயற்றப்பெற்ற 'தென்றல்விடுதூது' என்னும் பிரபந்தம் ஐயரவர்களுடைய குறிப்புரையுடன் இப்பகுதியில் வெளிவரத் தொடங்கி யிருக்கிறது. தமிழன்பர்களுக்கு இவ்வாறு வெளிவரும் நூல்கள் நல்லபயனை அளிக்குமென்று நம்புகிறோம்.

சென்னைப் புத்தகாலய சங்கத்தாரால் அவ்வப்போது பல அறிஞர்களைக்கொண்டு பலதுறைகளில் அறிவு வளர்ச்சிக் குபகாரமாகப் பிரசங்கங்கள் ஆங்கிலத்திற் செய்விக்கப்படுகின்றன. அவை யாவரும் அறிதற்குரியன. ஆதலின் அவற்றை அவ்வப்போது மொழி பெயர்த்து இப்பத்திரிகை வாயிலாக வெளியிட எண்ணியிருக்கிறோம். இத்துறையில் அன்பர் ஸ்ரீமான். பி. என். அப்புஸ்வாமி ஐயரவர்கள் உதவிசெய்வதாக மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப் பிரசங்கங்களை வெளியிடுவதற்கு வேண்டிய அனுமதி கொடுத்த புத்தகாலயச் சங்கத்தலைவருக்கு நமது வந்தனங்கள் உரியனவாகின்றன. மேற்கூறிய சங்கத்தின் ஆதரவில், ஸ்ரீமான். எச். நாராயணராவ் அவர்களால் 'வைரமும் அதன் குணாதிசயங்களும்' என்னும் பொருள்பற்றிச் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் முற்பகுதி இப்பத்திரிகையில் வெளிவருகிறது. அன்பர்களுடைய ஆதரவு இருக்குமெனின் இன்னும் இவற்றைப்போன்ற பலவகையிற் சிறப்புற்று இப்பத்திரிகை வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற பகுதியில் வெளிவந்த 'அன்பின் ஜோதி' என்னும் கதையானது ஆங்கிலத்தினின்று மொழிபெயர்த் தமைக்கப்பட்டது. இக்குறிப்பு, சென்ற பகுதியிலேயே காட்டப்படாது விடுபட்டுப் போனமைக்கு நாம் வருந்துகிறோம்.



ரஸிகபுரத்து இசைவினோதர்

கே. வி. இராமச்சந்திர ஐயர்

கான வித்தைக்குரிய தெய்வமான மாதங்கி என்பாள், இசைக்கலையின் யோக க்ஷேமங்களைக் கண்கூடாக அறியுமாறு மானிட உரு எடுத்து, நாடுநகரங்களிலெல்லாம் திரிந்து, முடிவில் ரஸிகபுரத்தை அடைந்தாள்.

அகன்ற வீதிகளூடே பற்பல ஜயவிருதுகளுடன் வாஹனாதிகளில் ஊர்வலம் செய்யும் சிலர்பொருட்டு, இருமருங்கிலுமுள்ள பாதசாரிகள் பலர் ஓயாது புன்சிரிப்புக்கொண்டும், ஙப்போல் வளைந்தும், வேகமாகவும் அதிலாகவத்தோடும் கைகளால், ஸலாம் ஸல்யூட் அஞ்சலி முதல் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் ஈறாக, உபசாரங்கள் அனைத்தும் இடைவிடாது செய்வதைக்கண்ட மாதங்கி, இருதிறத்தாரையும் இன்னாரென்றறிய ஆவல் கொண்டவளாய் விசாரிக்கப் புக, முன்னவர் ரஸிகபுரத்துப் பாமரலோக நிர்வாஹகர்களென்றும், பின்னவர் இசைப்புலவர் என்றும் கேட்டு, "இப்புலவருடைய கரசாதுர்யமும், தேக சுவாதீனமும் அதிசயிக்கத் தக்கனவாயுள்ளன; கானக்கிரியையில் இவர் சாமர்த்தியம் எத்தகையதோ!" என்று எண்ணமிட, அங்கிருந்த வயோதிகர் ஒருவர், "அம்மா! இவ்வூர் மஹாஜனங்கள், தாங்கள் கண்ட ஹஸ்தலாகவத்திலும், சரீர வினயத்திலும்மட்டுமே புலமையைக் கோருவதல்லாது, இசைத் தொழிற் புலமையைச் சிறிதும் அபேக்ஷிப்பதில்லை; அரசர்கள் இவ்வூரை ஆண்டுவந்தபோது, இரண்டொரு சிறந்த வித்துவான்கள் இருந்தனர்; அந்நாளில் புலவர் மட்டுமென்றி ஸாமாஜிகரும் பண்டிதராகவே இருந்தனர்; பாமரராஜ்ய ஆதிக்கத்தால் அவர்கள் பிறநாடடைந்தனர்; தற்காலம் இங்குள்ளது பாமரராஜ்யம் என்று ஞாபக மூட்டிக்கொள்ளவும்" என்று சொல்ல, கேட்ட மாதங்கி ஆச்சரியப்பட்டாள்.

வீடுகளே பாட்டுக்கு இருப்பிடம் என்று அவள் நினைத்து, ஒரு வீட்டுக்குள் நுழைந்து, யஜமானிக்கும் பாட்டுப் போதகருக்கும் நடந்த ஸம்வாதத்தைக்கேட்டு நின்றாள். அப்பெண்மணியது உபந்நியாஸமாவது: 'எட்டாம் நாள், மாப்பிள்ளை பெண்பார்க்க வருகிறான். அதற்குள் தசரதராஜகுமாரா என்று படிப்படியாக இறங்கும் ஸங்கதிகளில் மூன்று; பறிகொடுத்தேனே பரிதவித்தேனே, முடிந்தவரையில்; ஐயோ நான் பெண்பிறந்தேனே, ஒரு சிறிது; லேகனு நின்னு சுட்டுகோன்னாரு, அனுபல்லவி பரியந்தம். ஸர்வகலாசாலையிலும் இதற்குமேல் பாடமிடுவதைக் காணோம். ஏழுமலை கந்தர்வ ஆலயத்திலும், முதல் வருஷம் பல்லவியும், இரண்டாவது வருஷம் அனுபல்லவியும்தானே போதிக்கிறார்கள். மேலும் ச்ருதிப்பெட்டி இரவல்; ஒன்பதாம் நாள் திருப்பிக் கொடுத்தாகவேண்டும்' என்பது. போதகரோ என்றால், பிறரைப்போல இருபது முப்பது பிடுங்கும் துராப்பியாசம் தம்மிடம் இல்லை என்பதையும், அன்னவரது ச்ருதி லயஹீனமான பாட்டு பாட்டல்ல என்பதையும், தாம் சிறந்த பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதையும், லோகோபகாரமாக அற்பத்தொகைக்குத் தாம் பாடம் சொல்லும் குணாதிசயத்தையும் பலவாறு பாராட்டிக் கொண்டிருந்தார்.

மாதங்கி அவரைத் தனியாக அழைத்து, "தங்கள் பரம்பரையைப் பற்றி அறிய அவாக்கொண்டேன்; தங்கள் குரு யாவர்? பரமகுரு யாவர்?" என, அவர், "குருமுகமாய்க் கற்ற வித்தையினும் கேள்வி பலத்தால் சாதித்தது மேலல்லவா? நாம் குரு ஒருவரையும் ஒப்புவதில்லை; நாம் கேட்டுள்ள நாடகப் பாட்டுக்களாவது, கொலம்பியா, பெக்கா முதலிய ரிகார்டுகளாவது எண்ணுக்கடங்கா; இது லக்ஷியப்பிரதானமான கலையாகையால், முற்கூறிய ரிகார்டுகளே எமது லக்ஷியம்; லக்ஷணமோ எனில் ஆபிரஹாமும் ஆதியும்" என்றார். மாதங்கி, "ஆதி பரதமோ? அல்லது ஆதிவாயிலார் செய்த பஞ்சபாரதீயம் என்ற இசைநூலோ?" என, அவர், "அப்படியன்று; ஆதி அண்டு கம்பெனியார் பிரசுரம் செய்த [illegible]ானபாண்டாகாரம்; ஆபிரஹாமின் பெருமையும் என் [illegible] அகப்படுமோ?" என்றார். மாதங்கி, "சாரங்கதேவர், ஸோமநாதர், புண்டரிக விட்டலர், வேங்கடமகீ முதலியோரது நூல்கள் என்னவாயின?" [illegible]ன, அவர், "அவையெல்லாம் செல்லாக்காசு; அவர் பெயரும் தாங்கள் சொல்லித்தான் கேட்டேன்" என்றார். "ஸர்வகலாசாலையிலும், ஆதியும் ஆபிர[illegible] பிரமாணமோ?" என, அவர் "அதற்கென்ன ஸந்தேஹம் [illegible]றுரைக்க, மாதங்கி, "நூற்பயிற்சி ஒரு

சிறிதும் இல்லாததில், இருவரும் ஸமானர்தாம்; பேதைமையிலும் ஸமானரே; ஆனால் இவர்களுள் ஒருவர் குருவாம், ஒருவர் சிஷ்யராம்'' என்ற திருவாக்கை நினைந்து அகன்றாள்.

பிறகு, கான ஸபைகள் ஒன்றுவிடாமல் ஆராயத்தொடங்கின மாதங்கி, எங்குத் திரும்பினாலும் அதே பாடகர், அதே வாத்தியக்காரர், அதே பாட்டுக்களை அதே ஸபைகளுக்குச் சலிக்காமல், தினந்தோறும் வினியோகம் செய்வதைக்கண்டு, இவ்விசைப் பிரபந்தங்களை இயற்றிய வாக்கேயகாரர் எவர் என வினவ, அவர் காலமாய் நூறு வருஷமாய் விட்டதென்றும், அவருக்குப்பிறகு வேறு எவரும் கிளம்பவில்லை என்றும், தற்காலத்தவரில் சிலர் தாது மாத்திரமும் சிலர் மாது மாத்திரமும் செய்யவல்லவர் என்றும், பெரும்பாலர் பிறரது தாது மாதுக்களை அபகரித்துத் தமதாகப் பிரசுரப்படுத்துவது பெருவழக்கமாய்விட்டதென்றும் அறிந்தாள். இக்கடைசி வகுப்பினர் ஆதிக்கத்தைக்கண்டு பெருமூச்செறிந்து, “பிராசீன ராக தாளங்களில் அமைந்த தேவாரங்களும், திருவாய்மொழிகளும், ஜயதேவரது ஸாஹித்யங்களும் இறந்தொழிந்தனவோ?'' என, அங்குள்ளார், “இவை பிரசாரத்திலுள்ளவையே; ஆனால் பார்ஸி, இங்கிலீஷ் மெட்டுக்களிலிட்டுப் பாடப்படும்; இப்பழைய கீதங்களைப் பழைய முறைப்படி பாடினால் யார்தாம் ஸஹிப்பர்?'' என்றார். அன்றியும், ஊஞ்சல், லாலி, ஓடம் முதலிய அழகுள்ள பாட்டுக்களும் கால வித்தியாசத்தால் மறைந்தன என்பதையும் அறிந்தாள். மேலும் தனது என்ற வீணை ஜாதியைச் சேர்ந்த ஏகதந்த்ரீ, நகுலம், சித்ரா, விபஞ்சிகா, பரிவாதினி, மத்தகோகிலம் முதலியனவும், கின்னரி, பினாகி, கச்சபி, ராவணை, ஹஸ்தகம் என்பனவும், பிறவும் எங்குச் சென்றன என்று ஆராய்ந்தபொழுது, ரஸிகபுரத்தில் ஹார்மோனியம் என்ற நூதனயந்திரம் வீணைக்குலத்தையே வேரறுத்துவிட்டது என்று உணர்ந்தாள். திரும்பும்போது முன்பார்த்த பாட்டுப்போதகர் இலவசப்பிரவேசம் பெற டிக்கட்டு விற்பவரோடு கடும்போர் புரிவதைக் கண்டு, “இச்சபைகள் கானம் என்ற பண்டத்தை மாற்றும் சந்தைகள் போலும்'' என்று எண்ணிச்சென்றாள்.

பின்னர் ஸர்வகலாசாலையைச் சேர்ந்த ஸங்கீத அங்கத்தினருள் முக்கியமானவரைக் கண்டுபிடித்து வந்த காரியத்தைத் தெரிவிக்கவும், அவர், “நாம் பாட்டைக் கனவிலும் கேட்டோமல்லோம்; அது கிடக்க, எம்மை அடைந்த ஆராய்ச்சி வல்லுநர் மூவருளர். அவர்களுள் முதல்வர், கர்நாடக ஸங்கீதத்தில் தமக்குள்ள சந்தேகங்கள் சிலவற்றைத் தீர்த்துக்கொள்ள அமெரிக்கா சென்றுள்ளார்; அவர் ஸுஷிர வாத்தியமான 'ட்ரம்பெட்'டிலும், அவனத்த ஜாதியைச்

சேர்ந்த டமாரத்திலும் அஸுர ஸாதகம் செய்து சித்தி பெற்றவர்" என்றார். "இங்கிருப்பவர் செய்யும் ஆராய்ச்சி எத்தகையது?" என, "ஒருவர் இருபது வருஷங்களாகப் பாடகருக்கும், பாடினிகளுக்கும், வாச்சியக்காரர்களுக்கும் அளிக்கப்பட்ட சன்மானங்களின் அட்டவணையைத் தயார் செய்கிறார்; இன்னுமொருவர் ஹார்மோனியத்துக்கு ஆதாரமான ஜாதிக்காய்ப் பலகையின் குணதோஷங்களை ஆராய்ந்து வருகிறார்" என்றுரைத்தார்.

அருகே பெரிய கூடாரமொன்று போட்டிருக்கக்கண்டு கவனிக்க, 'நிகில பூமண்டல இசைமஹாநாடு' என்றறிந்து உள்ளே சென்றாள். அக்கிராஸனாதிபதி யார் என்று விசாரிக்க, தான் முதல் முதல் தரிசித்த பாமரலோக நிர்வாஹகர்களுள் முதல்வரும், ஸுஸ்வரம், அபஸ்வரம், தாளம், விதாளம் எல்லாவற்றுக்கும் தலையசைப்பவரும், கானம் நர்த்தனம் என்றால் துவேஷிப்பவரும், பாடினிகள், நர்த்தகிகள் என்றால் பிரேமாதிசயத்தால் மனமுருகுபவருமான ஒரு பிரபு என அறிந்தாள்.

அவரெதிரில் ரஸிகபுரத்தார் அபிமானத்துக்குப் பாத்திரரான சேங்காலிபுரம் அம்மான்கள், திருப்பனந்தாள் அத்தைகள், பரமக்குடி ஒர்ப்படிகள், திருப்புல்லாணி நாத்தனார்கள் முதலியோரும், ஒற்றைத்தந்தி சாமாவும், தலைகீழாகவிருந்து வீணை வாசிக்கும் அப்பண்ணாவும், கால்விரல்களால் தவுல் வாசிக்கும் தாமோதரனும், கல் நாகஸ்வரம் கந்தப்பனும் பிறரும் 'ரிஸர்வட்' என்று சீட்டொட்டிய கௌரவ ஸ்தானங்களில் கொலுவிருந்தனர்.

இன்னமொரு புறத்தில் சாரீர ஸௌக்கியமில்லாவிடினும், ஸங்கீத சாஸ்திரத்தை ஸம்பூர்ணமாக அத்யயனம் செய்து, "ஸ்வரங்கள் ஏழு; ஸ்தானம் மூன்று; கிராமம் இரண்டு" என்று ஸாங்கோபாங்கமாய் உபந்நியசிக்கவல்ல கார்த்தபத்தை ஒத்தவரும், வேபனங்களின் ஸ்வாரஸ்யத்தில் ஈடுபட்டு "இது சங்கராபரண காந்தாரம்; இது கல்யாணி நிஷாதம்; வராளியில் பிரயோகம் காகலிநிஷாதமல்ல; பேகட மத்யமத்துக்கு ஒரு பெயர் வேண்டும்" என்று உத்கோஷிப்பவரும், ஷட்ஜத்தை ஷட்ஜமம் என்றே அழைப்பவரும், சிறந்த ஆஸனங்களில் வீற்றிருந்தார். இவர் ஸல்லாபத்தை இறைப்பொழுது கேட்ட மாதங்கி "ஆயுள் முழுவதும் ஒரேவிஷயத்தைப் பற்றிப் பேசமுடியுமா என்றொரு பந்தயம் வைத்தால், அதில் இவரை வெல்வதரிது" என்று எண்ணிக் கடந்து சென்றாள்.

ஸங்கீதம் என்ற சொல் கீதம், வாத்தியம், நிருத்தியம் இம்மூன்றையும் குறிப்பதன்றோ? இங்கு நிருத்தியத்துக்கு அனுப்

பிரவேசம் கிடையாதோ என்ற சந்தேகத்துக்குத் தடையாக, ஒரு வர், அடிநாளில் வேசை நேச வாயிலாக அபிநய தரிசனம் செய் திருந்த விருத்தர் ஒருவரைக் குருவாகக்கொண்டு, அவர் கேட்டன வும், ஸ்மரித்தனவும், ச்ருதி, ஸ்மிருதியாக மதித்து, பரதகலையைத் தாம் ஐயந்திரிபறப் பயின்றதாகவும், முன் தண்டு, நந்திபட்டர், கணதாஸர், ஹரதத்தர் முதலிய ஆசிரியர் பலர் வஹித்த பாரம் அனைத்தையும் தாம் ஒருவராகவே வஹிப்பதாகவும் எண்ணி நிருத்தியத்தைக் கடாட்சித்து இருந்தார்.

அருகே கனச்யாமர் என்ற பௌராணிகர் தாமியற்றிய **காயக திவ்விய சரித்திரம்** என்ற நூலை ரஹஸ்யமாக விற்பனை செய்து வந்தார். சரித்திரத்துக்கு விஷயமகப்படாதவிடத்து, சரித்திரத் தையும் காயகரையும் ஒருங்கே புனைந்துரைத்து, மஹாஜனங்களை இன்புறுத்தவல்ல இவர், தம் புலமையைப் பிறர் புகழுவதற்குப் பதி லாகத் தாமே புகழ்ந்து, புலமைக்கறிகுறியாக, கங்கணம், பதக்கம் முதலிய அணிகலன்கள் பிரகாசிக்க வீற்றிருந்தார்.

வேறோரிடத்தில் பால காயகர்களான டவுன் ஹைஸ்கூல் ட்ராயிங் மாஸ்டர் பிள்ளையும், டைபிஸ்டு சாமண்ணாவும், வேறு பல 'பாய்' பாகவதர்களும் தங்கள் வித்தையை மஹாநாட்டில் அரங் கேற்றப் பகீரதப் பிரயத்தினம் செய்தும் முடியாமல் போனமையால், ரஸிகபுர மஹாஜனங்கள் முன்னணியில் இருந்து பேரிரைச்சலிட்டனர்.

மஹாஜனங்களைக் கண்ணுற்ற மாதங்கி, உலகத்துச் சண்டை கள் எல்லாம் ஒருங்கே இங்கு நடை பெறுவதால், இப் பெருமை வேறு எந்த ஊருக்கும் கிட்டுவது அரிது என்று எண்ணி னாள். அவர்களுக்குள் தியாகையர் கக்ஷி என்றும், தீக்ஷிதர் கக்ஷி என்றும், ஜாதி மதம் பாஷை முதலியவற்றால் ஏற்பட்ட வகுப்பு கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்தாறு வீதம் பற்பல கக்ஷிகளும், தவிர வட ரஸிகபுரம், தென் ரஸிகபுரம் என்ற பலத்த கோஷ்டிகள் இரண்டும் கோலாஹலம் செய்திருந்தன. ஆனால் அவர்கள் எல் லோரும் ஒருவிஷயத்தில் மட்டும் அபிப்ராய பேதம் ஒரு சிறிது மின்றி ஒரே மனத்தராய் இருந்தனர். அதாவது தமக்குள் வைத்திய ரல்லாதவராவது, சோதிடரல்லாதவராது, பாடகரல்லாதவராவது ஒருவருமில்லை என்பது. புலவருக்காவது இரண்டோரிடத்தில் சந் தேகம் உதிக்கலாம்; இம் மஹாஜனங்களுக்கோ, கனவிலும், எள் ளளவும் சந்தேகம் கிடையாது.

மற்றோரிடத்தில் மஹாநாட்டுக் காரியதரிசிகளுக்கும், பாட கருக்கும் வெகுமானத்தைப் பற்றி வாதம் மேலிட, மாதங்கியும்,

"இது மஹாநாடல்லவா? மஹாநாட்டில் சன்மானமேது? பாட்டுக்கும் விலை உண்டோ? அல்லது இது வெறும் சபைதானோ?" என்று சந்தேகப்பட அங்கொருவர், "இக்காயகர்கள், சபையாகட்டும், மஹாநாடாகட்டும், ஈச்வர ஸந்நிதியாகவே இருக்கட்டும், பணம் வாங்காமல் பாடுவது தர்ம விரோதம் என்ற கொள்கையினர்; அது கிடக்க; மஹாநாட்டில் முக்கிய வியவஹாரம் லக்ஷணம் ஆகையால், இவர்களுக்குத் தற்சமயம் பிராதானியம் கிடையாது" என, மாதங்கி, லக்ஷணத்தை அவசியம் கேட்டுணர வேண்டுமெனத் தாமதித்து, கண்களை இறுக மூடியும், பற்களைச் சதாகடித்தும், அழு முகங்காட்டியும், காக்கை ஓட்டையெனக் கரைந்தும், திறந்த வாய் மூடாத கராளராயும், கழுத்து நரம்புகளை வீங்கச்செய்து தலை சாய்த்தும், ஆடு அசைபோடுவதுபோல் வாயை அசைத்தும், மிடற்றுத்தொழில் செய்யும் காயகர், அவ்யக்தராயும், அவ்யவஸ்தராயும், அனுநாஸிகராயும், கம்பிதராயும், ராக தாள ப்ரஷ்டராயும் மனம் போனபடி கலந்து பாடுவதையெல்லாம் ஸஹித்திருந்தாள்.

முதல் நாள் பக்கிரிஸாமி பிள்ளை குனைக்கோல் தனிக் கச்சேரி; இரண்டாவது நாள் அங்கமுத்து ஜாலரா தனிக்கச்சேரி; மூன்றுவது நாள் மோர்ஸங், உபவாத்தியம் கிரிகிட்டகம்; நான்காவது நாள் சங்கம், உபவாத்தியம் சேகண்டி (ஜயகண்டிகா); வித்துவான்களோ பலதேசங்களினின்றும் பொறுக்கி எடுத்தவர்கள்; ஸாமாஜிகரோ ரஸிகபுர வாஸிகள். பார்க்க வந்த இதர தேச ஜனங்களும், தக்ஷிண தேசத்தார் தாள நைபுண்யத்தைப் பெரிதும் கொண்டாடி, "இவர்கள் தாளலீலைகள் சீனத்திலும் கண்டிலோம்" எனப் புகழ்ந்து சென்றனர்.

பிறகு ஒரு லக்ஷணவித்தகர் எழுந்து நாகஸ்வரம் என்ற பெயரை நாதஸ்வரம் என்று மாற்றவேண்டும் என்றார். ஆதாரமாக நமது முன்னோர் அறியாமையால் நாகஸ்வரம் என்று அழைத்து வந்தாரென்றும், தற்காலத்திலும் அவ்வாறு மதியீனமாக வழங்குவது அழகல்ல என்றும் காரணத்தோடு நிரூபித்தார். அச்சமயம், உத்தரதேசத்துப் பிரதிநிதி ஒருவர், "இவ்வாத்தியம் எங்கள் பக்கத்திலும் உண்டு; பெயரும் நாகஸ்வரம் என்பதே; பெயர்கள் இருவிதம், இடுகுறி காரணம் என" என்று ஆரம்பிப்பதற்குமுன் "பிரஸங்கம் கர்நாடக ஸங்கீதம். இதைப்பற்றி, உத்தர தேச வாஸிகளுக்கு என்ன தெரியும்?" என்ற கேள்வி எழ, அவர் இடம் தெரியாமல் மறைந்தார். வேறொருவர், "நாதம் என்ற சப்தத்திலேயே ஸ்வரம் உள்ளடங்கியபடியால், புனருக்தி தோஷம் பாதிக்கும்" என, அக்கிராஸனதிபதி "பேசுவது வாத்தியத்தைப்பற்றி; பதார்த்த

மன்று'' என்று வெருட்ட, அவர் அடங்கிவிட்டார். பின் அக்கிராஸனாதிபதி, "இத்தகைய சீர் திருத்தங்களை நிறைவேற்றவும், நுட்பமான விஷயங்களை நொடிப்பொழுதில் பரியாலோசனைசெய்து உண்மை காணவும், ஏற்பட்ட "வோட்'' என்ற சிறந்த ஸாதனம், முன்னாளில் இல்லாமையாலல்லவோ, நமது கானவித்தை சீர்கெட்டது? இனி, மேஜாரிடியின் மனத்தை அறிய ஏன் தாமதம்?'' என எல்லோரும் ஏகோபித்து நாதஸ்வரம் என்பதே சரி என்று தீர்மானித்து விட்டார்கள்.

பிறகு ச்ருதிகளைப் பற்றி நீண்ட வாதம் நடந்தது. ஒருவர் 22 என்றார்; வேறொருவர் 96 என்றார்; மற்றொருவர் 212 என்றார்; ஒருவர் சொன்னதாவது: "ச்ருதிகள் பணத்துக்குச் சமானம்; எவ்வளவுக்கெவ்வளவு அவை விருத்தியாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு லாபம்தானே; ஆகையால் 212 என்ற கக்ஷியே எனக்குப் பிரியம்'' என்பது.

இதைக் கண்டித்த வேறொருவர் "ச்ருதிகள் கடனுக்கு ஸத்ருசம்; இவை எவ்வளவுக்கெவ்வளவு குறையுமோ அவ்வளவுக்கவ்வளவு மேன்மை; அடியோடு இல்லாமலிருப்பது மிக நல்லது; இந்நாளில் ச்ருதிகளை ஒத்துக்கொள்ளுவது, புலவர் செய்கையல்ல; பழைய கடனுக்கு நாம் ஒருபோதும் பாத்தியப்படோம்'' என்று முடித்தார்.

அக்கிராஸனாபதி மறுபடி மஹாஜனங்கள் அபிப்ராயத்தை "வோட்'' மூலமாகத் தெரிவிப்பதற்குமுன், 212 என்ற தொகையை அங்கீகரித்தால், ச்ருதிகளுக்கு அனாவசியமான விரயம் ஏற்படும்; ஆகையால், தமக்கு அந்தப் பக்ஷம் இஷ்டமில்லை என்பதை மட்டும் அறிவுறுத்த, ஸகலரும் கரகோஷம் செய்து, ஆமோதித்து 96 தான் என்று முடிவு செய்து, அவரால் உண்டான சீர் திருத்தங்களுக்குக் கைம்மாறாக ஒரு வனமாலையை அவர் கழுத்திலிட்டனர்.

இவையெல்லாம் கண்ட மாதங்கியும், தன் ஏட்டில் பின்வருமாறு எழுதலுற்றாள்:

பாட்டின் எல்லைகண்டோரும், இந்நகரமாந்தர்க்கு நிகராவரோ? இவர் திருப்தியும், தைரியமும் எவர்க்கும் கிட்டா; இந்நகரில் பாடகருக்குக் குறைவில்லை; பாட்டுப் போதகருக்கும் குறைவில்லை. சபைகளென்ன, மஹாநாடுகளென்ன, ஸர்வ கலாசாலைகளில் ஸங்கீத பாடாவளிகளென்ன, கந்தர்வ வித்யாலயங்களென்ன, ரேடியோ, போனகிராப், இவையொன்றிலும் குறைவில்லை; ஆனால் கானம் என்பதுமட்டும் தேடித்தேடிப் பார்த்தும் புலனாகவில்லை.

இலக்கியம்

நமது கிராம வாழ்க்கை

கே. எஸ். வேங்கடரமணி

I

நம் இந்தியா தேசத்தின் மேன்மைக்கும் பெருமைக்கும், எல்லாச் சிறப்பும் வளமும் பொருந்திய, அதன் குக்கிராம வாழ்க்கையே சிறந்த காரண மென்பதைப் பல பெரியோர் உணர்ந்து கூறியிருக்கின்றனர்; கூறி வருகின்றனர். கிராம வாழ்க்கை யென்பது இந்தியாவில் அநாதி காலமாக நடந்து வருவது. இப்பொழுது இக்கால நாகரிகத்திற் கிசைய நகரங்களிலிருந்து ஓயாம லொழியாமல் உழைத்துச் சலித்தவர்களுக்குக் கிராமவாழ்க்கையானது சுவர்க்கம் போல் இன்பந் தரத் தக்கதாயிருக்கிறது. ஆதலால், கல்விக் கிளர்ச்சி கொண்டு, நகர வாழ்க்கையின் நன்மை தீமைகளையும் கிராம வாழ்க்கைக் குறைவினால் ஏற்பட்டுள்ள குறைகளையும் எல்லோரும் சீர்தூக்கி யறிகிற இக்காலத்தில் நம் நாட்டில், நகரங்களிலெங்கும் 'ஊருக்குத் திரும்புவோம்' என்னும் குரல் கேட்கப்படுகிறது. ஆம்! அக்குரல் இன்றியமையாததே; நம் பாரதநாடானது பழைய வளத்தை யடைந்து அதில் தேனும் பாலும் பெருக்கெடுத் தோட வேண்டுமாயின், நம் கிராமச் சீர்திருத்தமே அதற்கு ஆதாரமாகும். கிராமச் சீர்திருத்தமில்லாவிடின் நம் நாட்டில் எந்தப் பெரிய காரியத்தையும் சாதிக்க இயலாது. உலக நன்மைக்காக நாமும் உழைக்க வேண்டுமென்றால், நம்மைப் போஷிக்கும் கிராமங்களின் நிலைமையை முன்னதாக ஒழுங்கு படுத்தி உயர்த்தியே தீரவேண்டும்.

முற்காலத்தில் கிராம வாழ்க்கைதான் நமது நாகரிகத்தைச் சிதறவொட்டாமல் சுத்தமாகச் சேர்த்து வைத்திருந்தது. அன்னியர் படையெடுப்பு, ஆட்சி முதலிய பெருங் காற்றாற்கூட நம் திருந்திய கொள்கைகளாகிய தீபங்கள் அணையாவண்ணம் இன்றும் அதுதான் பாதுகாத்து வருகிறது. அப் பெருங்காற்று நமது கிராம வாழ்க்கையை இன்னும் முழுதும் சிதைத்துவிட வில்லை; தொன்றுதொட்டு வரும் நமது முன்னேற்றத்தையும் முறித்துவிட வில்லை. இடையே உண்டாகும் சிற்சில கேடுகளையுங்கூடக் கிராம வாழ்க்கையிலிருந்து

உண்டாகும் பெரு நன்மைகளால் மாற்றி நமது நாட்டின் ஜீவதாதுக் களை விருத்திசெய்து வருகிறோம்.

நமது நாட்டின் உயிர்நிலை, மேல் நாடுகளிற்போல ஒரு நகரத்திலே முடிச்சிட்டு வைக்கப்பட வில்லை. அதை நாம் பலவாகப் பகுத்து ஒவ்வொரு கிராமத்திலும் உட்புகுத்திப் பாதுகாத்து வந்தோம். அதனாலேயே நமது கிராமவாழ்க்கை இன்னும் சிதையாமல் மேன்மையுடன் நிலைத்திருக்கிறது. சுவாஸப் பையிலுள்ள சிறு கண்ணறைகள் பிராணவாயுவை உட்கொண்டு உடலிலுள்ள கெட்ட ரத்தத்தைச் சுத்திசெய்வது போல, ஆயிரக்கணக்கான நம் குக்கிராமங்கள் அவ்வப்போது நம் நாட்டின் கேடுகளை நீக்கி நமது வாழ்வை மேன்மைப் படுத்தி வந்துள்ளன. எப்பொழுதும் அலை இயங்கும் கடலில், பவளக் கொடிகள் அவ்வலைகளாற் கேடுறாமல் மேன்மேலும் படர்ந்து நிலைத்திருப்பது போல, நம் கிராமங்களும் பலவகைக் கேடுகளுக்கும் தப்பி நிலைத்து அழியாத நல் வளத்தை நம் நாட்டுக்கு அளித்து வந்துள்ளன.

II

கிராமங்களின் இத்தகைய சிறப்புக்குக் காரணமென்ன? அவற்றுக்கேன் இவ்வளவு சக்தி? என்பவற்றை ஆராய்வோம். மக்கள் அபிவிருத்தி யடைவதற்கு அவர்கள், கூடியும் தனித்தும் வாழவேண்டியிருக்கிறது. சமூக வாழ்வினால் அபிவிருத்திக்கு ஆதாரமான அனுபவங்கள் கிடைக்கின்றன. ஓடித்திரிந்து மந்தையில் மேய்ந்த பசுவானது தனியே படுத்திருக்கும்பொழுது தான் மேய்ந்து உண்ட உணவை அசைபோட்டுப் பயன்படுத்துவதுபோல, தனிமை வாழ்வினால் சமூக வாழ்வினாலுண்டாகும் அனுபவங்களை யெல்லாம் பழக்கத்திற் கொண்டுவந்து அனுஷ்டிக்கலாம். ஆகவே இவ் விருவகை வாழ்க்கைகளும் இன்றியமையாதனவே. ஆனால், இவற்றிற்கு ஓர் அளவு வேண்டும். தனிமையான வாழ்க்கையால் நாட்டு நடப்பொன்றுந் தெரியாமல் கிணற்றுத் தவளை போலாய் விட நேரும். எப்பொழுதும் கூட்டத்திலேயே இருந்து வந்தாலும் ஆற்று வெள்ளத்தில் மிதக்கும் கட்டையைப் போல இழுத்த வழி யெல்லாம் போகவேண்டியதாய்விடும். ஆதலால் இவ்விருவகையும் கலந்ததொரு வாழ்க்கை நமக்கு வேண்டியதாகிறது. கிராமவாழ்க்கை தான் இவ் விருவகை வாழ்வையும் சரிவர இணைத்துப் பக்குவப் படுத்தி அமைத்து நமக்கு மேன்மை தருவதாகும். ஆதலால் தான் கிராம வாழ்க்கை சிறந்த சக்தி யுடையதாகிறது. எனவே கிராமங் களின் நேர்மைக்குரிய சாதனங்கள் எவை யென்று நாம் தேடுவது மிகவும் அவசியம்.

நம் கிராமங்களின் சீர்திருத்தம் நம் நாட்டுக்குமட்டு மன்றி உலகத்திற்கே நன்மை தருவதாகும். ஏனெனின், இந்தியாவிலுள்ள கிராம வாசிகளின் தொகை உலக முழுதுமுள்ள ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்காகும். அதாவது சுமார் 30 கோடி ஜனங்கள் இந்தியக் கிராமவாசிகள். இவ்வாறு உலகின் ஜனத்தொகையில் ஐந்திலொருபங்கு ஒரே நாட்டி லிருந்து மேன்மையுறுவது ஒரு பெருஞ் சிறப்பன்றோ ? இப்பொழுது தேசபக்திக் கிளர்ச்சி மிகுந் துள்ள நம் பாரத நாட்டில் பெரும்பாலோர் இடையே கைவிட்ட கிராம வாழ்க்கையிலும் அதன் சீர்திருத்தத்திலும் ஊக்கங்கொண் டிருப்பது நாட்டிற்கு நல்லகாலத்திற்கறிகுறிதான். நோய் வந்தால் தானே நோயற்ற வாழ்வின் பெருமை புலப்படும்? நிழலின் அருமை வெயிலில் போனால்தானே தெரியும் ?

III

பழைய வளப்பமான முறையைப் பின்பற்றி வருவதாற் சிறந்து விளங்கும் கிராமங்களே இப்பொழுது பார்ப்ப தரிதாகிவிட்டது. இடையே சுமார் 50 வருஷத்திற்குள் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், குளந் தூர்ந்து குட்டையாகி அதுவும் வறண்டு போனா லும் நீர் இருந்தவிடத்தின் அடையாளங்கள் காணப்படுவதுபோல, கிராமங்களின் பழைய சின்னங்கள் இன்னும் சிறிதளவு சிதையாது காணப்படுகின்றன.

ஊர்ப்புறமாயோடும் ஆற்றையும் கால்வாயையும் ஏரியையும் பழைய சாலையையும் எல்லையாகக்கொண்டு, தோப்பு, துரவு, குளம், குட்டை, வயல் வெளிகளுடன் திகழ்வது சிறந்த கிராமம். தோப் பின் நடுவில் அக்கிரகாரமும், அதன் ஒரு புறத்தில் ஆலயமும், அதனையடுத்துக் குளமும், புறத்தே சூழச் சேரிகளும், தொழி லாளர்கள் வீடுகளும் அமையப்பெற்று விளங்கும் கிராமத்தின் சிறப்பை என்னென் றுரைப்பது! 'கோவிலில்லா வூரிற் குடி யிருக்கவேண்டாம்' என்னும் கொள்கையானது நமது தமிழ்நாட்டி னரின் மனத்தில் ஆழமாக வேரூன்றி யிருக்கிறது. ஆகவே கிராமத் திற்குக் கோவில் ஒரு சிறந்த அங்கமாகக் கருதப்பட்டு வருகிறது. அது கிராமத்தாரின் ஒற்றுமைக்கு ஒரு சிறந்த கருவியு மாகிறது. ஒரு நல்ல கிராமத்தின் உயர்வு அதன் நீர் நில வளங்களினால் மட்டுமன்று; அது கிராம வாசிகளின் குணகுணங்களையும் இயற்கை யையும் பொறுத்துத்தானிருக்கிறது.

ஒரு நல்ல கிராமமானது தனக்கு வேண்டிய உணவுப் பொருள் களைத் தானே உற்பத்திசெய்து கொள்ளக்கூடியது ; பிற அவசிய

மான தேவைகளையும் தானே பூர்த்திசெய்து கொள்ளக்கூடியது; நெல்லும், நவதானியங்களும், பயிருக்கும் பாலுக்கும் வேண்டிய கால்நடைகளும் குறைவின்றி உடையது. மேல்நாட்டு நாகரிகத்தின் உல்லாச வாழ்வுக் கேற்ற ஆடம்பரப் பொருள்களைச் செய்ய இயலாதவராயினும் சாதாரணமான தேவைகளைத் தடையின்றி நிரப்பக்கூடிய தொழிலாளிகள் பலர் அங்கே இருப்பார்கள். தச்சன், கொல்லன், கொற்றன், வண்ணான், அம்பட்டன், சேணியன், தட்டான் ஆகிய அத்தொழிலாளர்கள் அனைவரும் கிராமத்தாருடன் ஒன்றுசேர்ந்து கிராமத்தின் நன்மையைக் கருதி மனமொத்துழைப்பார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளம் மானியமாய் விடப்பட்ட நிலமே. அந்நிலம் விளைந்தால்தான் அவர்களுக்குச் சாப்பாடு. ஆதலால் மிராசுதார்களுக்குள்ள பொறுப்பு அத்தொழிலாளிகளுக்கும் உள்ளதாகிறது. ஒரு கிராமவாசி எந்தத் தொழில் செய்து வந்தாலும் அது கடைசியில் வியவசாயத்தில் போய்த்தான் நிற்கும். மேற்கூறிய பலவேறு தொழிலாளிகளையும் ஒன்று படுத்துவது கோவில் கைங்கரியமாகும். அஃது எல்லாருடைய வேலைக்கும் பொதுவான ஓர் ஊக்கத்தை யுண்டாக்குகிறது.

கிராமவாழ்க்கையின் மேன்மைக்கு முக்கிய காரணம், பண்ணையார்களுக்கும் பண்ணையாட்களுக்கும் உள்ள அந்நியோன்னிய பாவமே. அவர்கள் எப்பொழுதும் நகமும் சதையும்போற் கலந்து காரியங்களில் ஈடுபட்டு உழைப்பார்கள். ஆட்களுக்கும் தொழிலாளிகளுக்கும் தொன்று தொட்டு வந்த முறையை அனுசரித்து அவரவர் வேலைக்கும் தேவைக்கும் ஏற்பக் கூலிகள் வரையறுக்கப் பட்டிருந்ததனால் மனஸ்தாபங்களுக்கு இடமில்லை.

பழைய முறையிலுள்ள கிராமங்களில் மேற்கூறியபடி ஒவ்வொரு தொழிலாளிக்கும் விடப்படும் மானிய நிலங்கள் சாதாரணமாக அவனவன் குடும்பத்தை ஆதரிக்கப் போதுமானவைகளாயிருக்கும். கிராமவாழ்க்கையில் சுகமாய் வாழ்வதற்குத் தேவைகள் அதிகம் வேண்டுவதில்லையன்றோ? இரண்டு தென்னை, நாலு வாழை, சில ஆடு மாடுகள், மூன்று ஏகர் நிலம் ஆகிய இவை ஒருவனுக் கிருப்பின் அவன் பாடு இராஜபோகம்தான்! தொழிலாளிகளுக்கு இந்த மானியவரும்படி தவிர, அதிகப்படியாக அவர் செய்யும் சில வேலைகளுக்காக அவ்வப்போது நெற் கூலியும் கொடுக்கப்படும். அவர்களுக்குக் குடியிருக்க மனைக்கட்டும் உண்டு. சுருங்கச் சொல்லின், நகரவாசிகள்போல ஜோபியில் போட்டுக் குலுக்கி உல்லாசமாய்க் கண்டவற்றிலெல்லாம் வாரியிறைக்க வேண்டிய காசு அவர்களுக்கு இல்லாவிடினும், சாதாரணமாக ஒருவன் சௌக்கியமாய்

வாழ்வதற்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களும் கிராமங்களில் உண்டு.

நிலம் நன்கு விளைந்தாலன்றிக் கிராமவாசிகளுக்கு ஜீவனம் நடைபெறாதாகையால், நிலச்சாகுபடி விஷயத்தில் அனைவரும் உரிய காலங்களில் ஒத்துழைத்தே தீரவேண்டும். அவ்வாறு உழைப்பதில் நகரவாசிகளைப்போலக் கிராமவாசிகளுக்கு அடிக்கடி சளைப்பு ஏற்படுவதில்லை. அவர்கள் நெற்றிவேர்வை நிலத்திற் சொட்ட நாள் முழுதும் உழைத்தாலும், 'அதனால்தானே நமக்குணவு' என்ற உணர்ச்சி அந்தக் கஷ்டத்தை மாற்றிவிடும். கேவலம் காசுக்கூலிக்காகப் பிறருக்கு உழைத்தாலன்றோ மனவெறுப்புக் கிடமிருக்கப் போகிறது. ஆகையால், கிராமத்தைப் பொறுத்த வயல் வாய்க்கால் வெட்டு, எருவடித்தல், தண்ணீர்பாய்ச்சுதல், வடிகட்டுதல், குளம் வெட்டுதல், கோவில் கட்டுதல் முதலிய எல்லாப்பொதுக் காரியங்களிலும் அனைவரும் மனமொத்துச் சிரத்தையுடன் சிறியதையும் பெரியதாக மதித்துச் சிறக்க நடத்துவார்கள்.

ஒரு கிராமத்தில் இத்தனை பேருக்கும் நிலம் தேடிக்கொடுக்க வேண்டியிருக்கிறபடியால், ஒருவருக்கும் பிறரைத் துன்புறுத்தி அடக்கியாளத் தக்க பெருமிதமுண்டாக்கும்படியான அதிக நிலங்கள் கிடைப்பதில்லை. இதனால் ஒரு நல்ல, பழையமுறையிலுள்ள, சிறந்த கிராமத்தில், அநேகமாய் எல்லோருக்கும் நிலம் சமபாகமாய்த் தான் இருக்கும்.

IV

இனி, கிராம சமுதாய நடவடிக்கைகளும் வயல்வெளி வேலைகளும் எவ்வாறு நடைபெறுகின்றன வென்பதைப் பார்ப்போம். தொழிலாளிகளைப்போலவே பண்ணையாட்களுக்கும் மானியமும் குடியிருப்பு வீடும் உண்டு. இவை தவிர, அறுப்புக்காலத்தில் கண்டுமுதலில் கலத்திற்கு இவ்வளவென்று குறிப்பிட்ட பங்கு ஒன்றும் பரம்பரைப் பண்ணையாட்களுக் குண்டு. தீபாவளி, பொங்கல் சமயங்களில் ஒரு ஜோடி வேஷ்டியும் படியும் உண்டு. வாரச்சாகுபடி செய்பவர்கள் அந்த அந்த நிலத்தின் தாத்துக்கேற்றவாறு பழமையாக விதிக்கப்பட்டுள்ள வீதப்படி நெல்லைப் பெறுவார்கள். மிராசுதார்களும் பண்ணையாட்களின் வீட்டுச் சுக துக்கங்களில் பொறுப்புடையவர்களாய்ச் சமயங்களில் உதவிபுரியக் கடமைப்பட்டிருந்தார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் 'தலையாரி' 'நீராணிக்கக்காரன்' என்ற சில்லறைச் சிப்பந்திகள் உண்டு. இவருள் தலையாரியின் வேலை கிராம

ஆட்சிக்கு மிகவும் முக்கியமானது. கிராமக் காவல் அவன் பொறுப்பு. கிராமத்தின் உயிர்நிலை அவன் கையில்தான். ஊர்க் காவல் தவிர, கிராமப் பொதுவேலைகளுக்கு ஆட்களைச் சேர்த்து அவற்றைக் கவனிப்பதும் அவன் பொறுப்பு. அவனுக்கும் முதல்தர மான மானியம் உண்டு. நீராணிக்கக்காரனுக்கும் மானியந்தான். அவன் வேலை, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோ ருடைய வயலுக்கும் ஒன்றுபோல நீர்ப்பாசனத்தைக் கவனிக்க வேண்டியது. கண்டுமுதல் காலத்தில் நீராணிக்கக்காரனுக்கு ஒவ் வொரு பண்ணையிலும் களத்திலும் ஒரு கட்டு நெற்கதிர் உண்டு.

ானிய

இவர்களையெல்லாம் அடக்கியாண்டு கிராமநிர்வ வர்களுக் வர நடத்துவதற்கு, வெளிநாடுகளிலும் பெயர்பெ ப்பு அத் சாயத்து முறை ஏற்பட்டுளது. 'பஞ்சாயத்து' சி எந்தத் பேர் கொண்டதோர் ஆலோசனைச் சபை; இது கிராமசாயத்தில் சேர்ந்து தமக்குள் அமைத்துக்கொள்வதாகும். இச் ளிகளையும் வர் 'முதல் பஞ்சாயத்து' அல்லது 'நாட்டாண்மைக்காரர்' எனப படுவார். இப்பதவி வம்சபரம்பரையாய் வரும். பிரிட்டிஷ் அரசாங்க முறைகள் பரவுமுன், நம் தமிழ்நாட்டில், அரசர்கள் முடிதரித்துச் செங்கோல் பிடித்துச் சிங்காதனம் ஏறிப் பேருக்கு அரசுபுரிந்து வந்தாலும், இப் பஞ்சாயத்துச் சபைகளே ஆட்சி முழுவதையும் தாமே நடத்திவந்தன.

பஞ்சாயத்து, சம்பளமில்லாத கௌரவவேலை யாதலால் இதி லிருப்பவர்கள் பெரும்பாலும் நல்ல நிலையிலுள்ளவர்களாய்க் கிரா மாபிவிருத்தியில் எப்பொழுதும் நோக்கமுடையவர்களா யிருப்பார் கள். அதிலும், பஞ்சாயத்துத் தலைவர் பரம்பரைப் பிரபுவாய்க் கல்வி யறிவும், சாந்தம், பொது நோக்கம், தருமசிந்தனை முதலிய சிறந்த குணங்களும் உடையவராகவே யிருப்பது வழக்கம். ஆதலால் கிரா மத்தில் அவரிட்டது சட்டமாயிருக்கும். நம் நாட்டில் இதுவரை குணத்திற்கே பெருமை அதிகமன்றிப் பணத்திற்கன்று. ஒருவ னுடைய சாமர்த்தியத்துக்கும், அஞ்சாது தொழில் புரியும் ஆற்ற லுக்குமாகப் பளபளவென்று மின்னும் வெள்ளி ரூபாய்களைப் பரிசாக அளிப்பதில்லை. வணக்கம், ஒடுக்கம், சாந்தம், சீலம் இவைகளுக்குத் தான் கௌரவம். ஆனால், இம்முறையும், மேல்நாட்டு நாகரிகம் முற்றிய இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறிவருகிறது.

நாட்டாண்மைக்காரருக்கு எல்லா அதிகாரமும் இருந்தாலும், நடவடிக்கையில் அவர்கள் பண்டைக்கால முறைகளையும் சுற்றியுள்ள பலரையும் அனுசரித்தே போகவேண்டும். மலைச் சரிவுகளிலிருந்து

ஒரு வழியின்றிப் பலமுகமாகப் புரண்டோடி வரும் மழை நீர், சம பூமியையடைந்ததும் ஒரு வழிப்பட்டு 'ஆறு' என்ற பெயர்பெற்று வரம்பு கடவாமல் ஓடுவதுபோல, நமது நாட்டில் ஒரு நெறி நில்லாத மனிதவாழ்க்கையைத் தரும பரிபாலனமென்னும் ஆற்றின் கரை கொண்டு ஒழுங்கு படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆறு வரம்பு கடக்க முடியாததல்லவா? ஆதலால் தருமத்தை விட்டு விலகிக் கிராமப் பஞ்சாயத்தும் நடக்கமுடியாது.

சாகுபடிக் காலத்தில் கிராமத்தின் நிலங்களைச் செவ்வை செய் உணாசாமத்தா ரெல்லாருடைய ஊக்கமும் ஒத்த உழைப்பும் காகப் பிறரு ஆதலால், ஒரு நல்ல கிராமத்தில் எல்லாரும் ஒற் போகிறது. வர்களாகவே இருப்பார்கள். ஆடம்பரமற்ற எளிய வெட்டு, எருகதருமசிந்தனையும், ஒற்றுமையுமே கிராமவாசிகளுக்கு வெட்டுதல், கேள் கணக்கில்லாமல் கண்ட புத்தகங்களை யெல்லாம் களிலும் அனை லும், வரிசை வரிசையாக மேடைகளில் பலவாறான பெரியதாக மதி கேளாவிட்டாலும் அவர்களுடைய பொது அறி வின் வளர்ச்சிக்கும், வாழ்க்கையின் தேர்ச்சிக்கும் சிறிதும் குறை வில்லை. தம் வயலிலும் வாழ்விலும் விழல் மண்டாதபடி தினந் தோறும் களையெடுத்த வண்ணமாகவே யிருப்பார்கள். இதன் பலனே கிராமத்தில் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், தர்மசிந்தை பொறுமை சாந்தம் முதலிய உயர் குணங்களும் குடிகொண்ட குடிகள் நிரம்பியிருத்தலாகும்.

இவ்வுலகில் உள்ள பொருள்கள் எல்லாம் அழியும் பொருள்களாதலால், உணவுப்பொருள்களையும் விற்றுக் காசாக்கிச் சேர்த்துப் பாங்கியில் போடும் புத்தியை நம் கிராமவாசிகளுக்கு ஈசன் கொடுக்கவில்லை. ஆகையால் அவர்கள் தமக்குக் கண்டு மிஞ்சும் காய்கறி, தானியங்கள் முதலியவற்றைச் சுற்றத்தாருக்கும், ஏழைகட்கும் கொடுத்துதவுவார்கள். சமாராதனை முதலிய தரும வழிகளிற் செலவிடுவார்கள். வயலில் உழைக்கும் பண்ணையாட்களுக்கும் அவரவர் தேவைக்கேற்ப வேண்டிய சமயங்களில் கொடுப்பார்கள். இவ்வாறு பலவகையிலும் அவை செலவிடப் படுவதன்றி விற்பதென்ற வழக்கமே கிடையாது. கிராமத்தார்கள் உணவுப்பொருள்களை விற்பதென்பது சமீபகாலத்தில் ஏற்பட்ட புதுவழக்கமாகும். இப்பொழுது குழந்தைகள் அருந்துவதற்குரிய பாலையும் விற்றுக் காசாக்கிக் காப்பிக்கொட்டையும் மண்ணெண்ணெயும் வாங்குகின்றோம்; என்ன கொடுமை! இத்தகைய கொடுமைகளின்றி மேற்கூறியபடி செவ்விய முறையில் நடந்துவந்ததனால்தான் நம்முடைய கிராமங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் செழிப்புற்று ஓங்கி எங்கும்

அமைதி நிலவ மேழிச் செல்வத்தின் கெடாத மேன்மைக்குச் சாட்சியாக விளங்கிவந்தன.

இப்பொழுது நகரவாழ்க்கையில் முழுகியிருப்பவருக்கு, இதுவரை கூறியவையெல்லாம் ஏதோ புனைந்துரையாகத் தோன்றலாம். ஆயினும், காவேரிதீரத்தில், பேராலமரம்போல நெடுங்காலமாக விளங்கிவரும் சில இனும் கிராமங்களில் மேற்கூறிய மாசற்ற முறைகள் இன்றும் வழங்கி வருவதைக் காணலாம். எல்லாக் கிராமங்களிலும் மீண்டும் இம்முறைகள் வந்து, எளிய இனிய வாழ்க்கை நடைபெற்றால்தான் நம் நாட்டில் சுவர்க்க இன்பத்தினும் இனிய சுகமும், அமைதியும் உண்டாகும்; நிலைபெறும்.

'உழவே தலை' என்னும் கொள்கையை நெடுங்காலமாய்க் கையாண்டு நிற்கும் கிராம மக்களின் மனம், பிற ஆடம்பரத் தொழில் முயற்சிகளிற் செல்லுமாயின் கிராமங்களின் பெருமை நிலையாது. ஏனெனில், கிராமங்களின் அளவையும் அழகையும் வாழ்க்கையையும் வேறுபடுத்தாமல், இயற்கைக் குடிசைகளில் அவ் வாடம்பர யந்திரத் தொழில்களை ஒருநாளும் நடத்தமுடியாது. ஆதலால், இத்தகைய மாறுபட்ட ருசியே நம் கிராம வாழ்க்கையின் சிதைவுக்கு முக்கிய காரணமாகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல பல படையெடுப்புக்களும் சச்சரவுகளும் ஆட்சி முறைகளும் தாக்கிய போதிலும் தாங்கிப் பிழைத்து ஓங்கி வளர்ந்துவந்த நமது கிராமங்களின் சீர் கெடுதலுக்கு, ஆடம்பர வாழ்க்கையிலுள்ள மோகமே தாமகேதுவாகத் தோன்றியுளது. பல புயற்காற்றுக்கும் தப்பி ஓங்கி வளர்ந்து, நன்கு குலைகுலையாய்க் காய்க்கும் ஒரு தென்னைமரத்திலே வேர்க்கறையான் பற்றியது போலத் திருந்திய கிராமவாழ்க்கையிலே இந்த மனக்கறையான் பற்றியுளது.

மேல்நாட்டு நாகரிகமாகிய புது வெள்ளம் நம் நாட்டிற் பரவி வருதலால், பல பல புதிய பழக்க வழக்கங்கள் தோன்ற, அவை நமது புராதன ஆசாரங்களாகிய பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போய்விடுகின்றன. அவை, அவ்வப்போதுண்டாகும் அற்ப சந்தோஷமாகிய மயக்கத்தைத் தருவனவன்றி வேறில்லை. அவற்றால் இம்மையில் அமைதியான, இனிய, எளிய வாழ்வையோ அல்லது மறுமையில் நல்ல பயனையோ அடைய முடியாது.

ஆரம்பத்தில் சிறிது சௌகரியத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் வாங்கும் பொருள்களும் கைக்கொள்ளும் பழக்கங்களும் நாளடைவில் இன்றியமையாதனவாய் விடுகின்றன. அவற்றிற்காக நம் உணவையே விற்று அவற்றைப் பெறவேண்டியிருக்கிறது. அதனால் வருஷத்திற்கு வருஷம் நம்முடைய செல்வங் குறைய, கிராமங்

களும் க்ஷீணிக்கின்றன. கிராமங்களில் பெரிய சீமான்களாய், நெல் களஞ்சியம் எந்நாளும் குறையாமலிருக்கக் கூடியவர்களுக்கும், இப்பொழுது, ஆறுமாதத்துச் சாப்பாட்டுக்கு வேண்டிய நெல் கூடக் குதிரிலிருப்பது அரிதாய்விட்டது. அவ்வாருயின் கூலிவேலை செய்வோர் நிலைமையைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? இந்தக் கஷ்டத்தால் அவர்கள் தங்கள் மானியங்களையும் வீடு வாசல்களையும் ஊரையும் விட்டு, நகரங்களையும் அந்நிய நாடுகளையும் தேடிச்சென்று சொல்ல முடியாத கஷ்டங்களுடன் பல ஈனத் தொழில்களைச் செய்து[illegible] வயிறு வளர்க்க நேருகிறது. அப்படியும் அரை வயிற்றுக் கஞ்சிக்குத்த[illegible]ான் கிடைக்கிறது. அதிலும் மண்ணைப்போடப் பல கெட்ட பழக்க[illegible]ங்கள் அவர்களைப் பற்றிக்கொள்கின்றன. கிராமங்களில் அவர்க[illegible]் வயிற்றுக்குத் தாழாமல் சோறு கிடைத்தாலல்லவோ முணுமுணு[illegible]க்காமல் வேலை செய்ய முடியும்; மேழிச் செல்வமும் வளரும்.

நம் நாட்டுக்கு வந்த கேடு இதனுல் மட்டுமன்று. கிராமங்களில் தலைமையுள்ளவர்கள்—பா[illegible]ம்பரைப் பஞ்சாயத்தார்கள்—நாட்டாண்மைக்காரர்கள் கூட, ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்று, கலெக்டர்களாகவும், ஜட்ஜுகளாகவும் ஆகிவிடுவோம் என்னும் ஆசையுடனும், பொருளை மூட்டை-மூட்டையாக வாரிக்கட்டலாமென்னும் நோக்கத்துடனும் தங்கள் கிராமம் பாழாக நகரங்களில் சென்று தங்கிக் குமாஸ்தாக்களாகவும் வக்கீல்களாகவும் அமர்ந்து வீணே உழைத்துக் கைப்பொருளையும் இழந்து கஷ்டமடைகிருர்கள். இதுவும் கிராமங்களுக்கு வந்த ஒரு பெரிய துரதிர்ஷ்டமல்லவா? இந்தப் பேராசையே சாத்விக விருத்தியிலிருந்து நம் மனத்தைத் திருப்பிப் பொய்க்காசு செய்யும் பொல்லாப் புத்தியை உண்டாக்கி, நோயற்ற உயர்ந்த கிராம வாழ்க்கையைத் தொலைத்து, நகரங்களின் சாக்கடையில் நம்மைத் தள்ளிவிட்டது. கிராமங்களில் மனவமைதியுடன் கையிற் சுவடியேந்தித் தியானஞ் செய்துவந்த நாம், நகரங்களின் சந்தையிரைச்சலிற் குடியிருந்துகொண்டு பெட்டியடியில் உட்கார்ந்து கையில் தராசு பிடிக்கத் தொடங்கிவிட்டோம். ஆகவே கிராமங்களின் செல்வமும் அமைதியும் சீர்குலைவது ஆச்சரியமா?

நமது பாரத நாட்டில், தேனடையிலுள்ள சிற்றறைகள் போல 7 லக்ஷம் கிராமங்களிருக்கின்றன. அவற்றிலுள்ள 30 கோடி தேனீக்களும் பரிசுத்தமான, ஈசுவரனுக்குப் பிரியமான தும்பைப் பூவைவிட்டுக் கேவலமான புளியம் பூவைச் சுற்றித் தேன் சேகரிக்க முயலுகின்றன. இந்த 7 லக்ஷம் கிராமங்களின் நிலைமையையும் சீர்ப்படுத்துவதே இப்பொழுது இந்தியரின் முதற்கடமை. அதுவே

நமது அழியாத பாக்கியம். ஆதலால் இப்பொழுது நாட்டிலேற் பட்டுள்ள புதிய கிளர்ச்சியின் முக்கியமான வேலை யென்னவென்றால் முதலில் சீர் குலைந்துள்ள இந்த லட்சக்கணக்கான கிராமங்களைத் திருத்தியமைப்பதாகும். அவ்வாறு செய்வதில், மேல்நாட்டு நாக ரிகத்தின் நல்ல அம்சங்களையும், சுகாதார முறைகளையும் கைக் கொண்டு பழைய முறைகளோடு கலந்து மேன்மைப்படுத்த வேண் டும். அப்படிச் செய்யின் நம் நாட்டில் மட்டுமன்று, உலக முழு துமே கிராமவாழ்வின் சிறப்பை நாம் பரவச் செய்தவர்க ளாவோம். அது நமது கடமையுமாகும்.

VI

இனி, கிராமவாசத்தின் மேன்மைக்குக் காரணமும், அதன் உட்பொருளும், அதனால் உலகத்தார் அறிந்துகொள்ள வேண்டி யதும் என்னவென்று பார்ப்போம்.

உலகில் மேம்பட்டுவரும் ஜனசமூகங்களின் மேடுபள்ளங்க ளுடன் கூடிய இல்லறவழியைக் கிராமவாழ்க்கையானது ஒரு நிர வின சமவழி யாக்குகிறது. கிராம வாழ்க்கையில்தான் கடவுளுக்கு உகந்ததொரு சிறந்தகொள்கை யிருக்கிறது. அஃதாவது, உயர்ந் தோர் தாழ்ந்தோரென்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் அவரவர் தேவைக்கேற்ப உணவுப்பொருள்கள் தட்டாது கிடைக்கவேண்டு மென்பது. அதுதான் நம் பாரதநாட்டின் சிறந்த கொள்கை. அது கிராமங்களில்தான் உளது. சாமர்த்தியத்துக்குத் தக்கபடி சம்பாத் திய மென்ற மேல்நாட்டுக் கொள்கைக்கு நமது புண்ணிய பூமியில் இடமில்லை. பசியென்பது எவருக்கும் சமந்தானே. மிகச் சுறுசுறுப் புள்ள தொழிலாளியாயிருந்தாலென்ன, பண்ணை வேலை செய்யும் பேதைப் பறையனாயிருந்தாலென்ன,

> "சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
> பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
> பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
> நாழி யரிசிக்கே நாம்" (நல்வழி)

என்றபடி சாண்வயிறு எல்லோருக்கும் ஒன்றுதானே?

நம் நாட்டில் நற்புத்திக்கும், நன்னடக்கைக்கும், விடாமுயற்சிக் கும், தெய்வபக்திக்கும், பிறநற்குணங்களுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளமும் வருஷாந்த உயர்வும் பரிசாக அளிப்பது வழக்க மில்லை. அத்தகைய மேன்மைக் குணமுடையோருக்குப் பிறர் செய் யும் வணக்கமும் காட்டும் மரியாதையுமே பரிசு. எவருக்கும் இன்பம்

அளிக்கத்தக்க இவ் வுயர்ந்த சட்டமல்லவோ உலகமெங்கும் பரவ வேண்டும்? நமது புராதன கிராம வாழ்க்கையின் உயர்ந்த லக்ஷியம் இதுதான்.

உழவைத்தவிர வேறு சிறந்தனவாயுள்ள கைத்தொழில்களுள் ஒன்றையும் இந்தியர் தெரிந்துகொள்ளாமையால்தான் அவர்கள் குக்கிராமங்களில் கிடந்து கஷ்டப்பட்ட போதிலும், புன்மையான அந்த வாழ்வையே உயர்வானது என்று புகழ்ந்து கூறுகிறார்கள் என்று சிலர் நம்மைக் குறைகூறுவதுண்டு. உண்மை அப்படியன்று. ஒவ்வொரு மனிதனுடைய தனிவாழ்க்கையிலும் சாத்விக ராஜஸ தாமதமாகிய முக்குணங்களும் கலந்து அலைபோல் புரண்டு காணப் படுகின்றன. நகரவாழ்க்கையில் தாமத குணமே மிகுந்து காணப்படு மாதலாலும், சாத்விக குணத்துக்குக் கிராம வாழ்க்கையே உரிய சாதகமாதலாலும் அவ் வியற்கைகளை யறிந்து முக்காலமு மறிந்த நம் முனிவர்கள் அம் முக்குணங்களிற் சிறந்த ஸாத்விகம் ஓங்கவும், அதம மாகிய தாமஸம் குறையவும் ஏற்றவகையில் கிராம வாழ்க்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எப்பொழுதும் கர்மாவையே செய்யும்படி தூண்டும் மாமிச பிண்டமாகிய இச்சரீரத்திற்கும், கர்மாவை விட்டு விலகி ஏகாந்த மாய் ஈசனுடன் கலந்து நிற்க விரும்பும் ஆத்மாவுக்கும் அபிவிருத்திக் குரிய சாதனங்கள் கிராம வாழ்க்கையிலேதான் கிடைக்கும். அலை கடலில் அகப்பட்டுப் புயலால் மோதுண்டு தத்தளிக்கும் மரக்கலத் துக்கு அதனை நங்கூரம் பாய்ச்சி அசையாமல் நிறுத்துதற்கேற்ற அலையற்ற துறைமுகமாக—உயிருக்கு உடலாவதுபோல்—இந்த ஜன சமுதாயத்துக்குக் கிராமவாழ்க்கையே மிகச் சிறந்த ஆதாரமாகும்.

புத்தர் மகனை யிழந்த தாயின் மனந்தேறச் செய்தல்

எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை

மண்ணில் வாழ்வுறும் மக்கள் மடிவது
திண்ண மென்றுளந் தேறத் தெளிவுரை
அண்ண லன்றோ ரணங்கினுக் கோதிய
புண்ணி யம்பெறு காதை புகலுவாம்.

வேறு

முடமான இளமறியை முதுகி லேந்தி
மூவுலகும் கருணையினல் வென்ற வீரன்
திடமாகப் பலவுயிரு மளிக்குஞ் சோணைத்
தெய்வநதிக் கரைவந்து சேர்ந்த போது,

வேறு

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்—பெண்ணின்
தெய்வ நிமனத்தகும் சீருடையாள்

ஆருகக் கண்ணீர் வடித்து நின்ருள்—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்தி நின்ருள்
தேருத உள்ளமும் தேற்று விக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றி நின்ருள்.

வேறு

சந்திர மதிபோல் நின்ற தையலை நோக்கி ஐயன்
வெந்துயர் விளைந்த தென்னை விளம்புக எனலு மன்னுள்
நைந்துநொந் துருகி உள்ளம் நயனத்தின் வழியா யோட
மைந்தனைக் காட்டி யிந்த மறுமொழி கூற லுற்ருள்.

வேறு

அத்திமர மோங்கியெழு மருஞ்சோலை யதனில்
அயலொருவர் துணையின்றி அடியாளு மன்பாய்ப்
புத்திரனைப் போற்றிவரும் பொறுமையினைக் கண்டு
புண்ணியநீ கொண்டபரி வளவுண்டோ ஐயா !

தலைநாளில் நீகண்ட சிறுமகனு மின்று
தள்ளாடு முயிரோடு கிடக்கின்றானையா
தொலையாத கொடும்[illegible]யானுமினி யிந்தத்
தொல்லுலகில் [illegible]வதிலோர் பயனுண்டோ ஐயா !

சிரித்தமுக மெனமல[illegible] செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடுமவ் வேளை
விரித்தபட மெடுத்தரவொன் றடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்துகிடந் ததுவே !

பால்மணமா றாதசிறு பாலகனு மறியான்
படவரவை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டான்
வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வலித்து
வருத்தமெழச் சிறுகுறும்பு செய்துவிட்டானையோ !

சிறுபொழுது சென்றிடஎன் செல்வமக னுடலில்
சீதமிகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட தையா !

விடமேறி மடிந்ததென விளம்புகின்றார் சிலரே
விதியாலே விளைந்ததென விரிக்கின்றார் சிலரே
தடையில்லை இதுமூடு சன்னியென்றார் சிலரே
சஞ்சீவி யளித்தாலும் சாமென்றார் சிலரே !

வயித்தியரைக் கண்டிந்த வரலாறு சொல்லி
மயக்கமிது நீங்கவொரு மருந்திலையோ என்றேன்
பயித்தியமோ இனியேதும் பயனில்லை என்றார்
பட்டமரம் தளிர்த்திடுமோ பாரிடத்தி லென்றார்.

அன்பாக அரவிட்ட சிறுமுத்த மதனால்
ஆவிக்கு மிடையூறுண் டாமோஎன் ஐயா
வன்பாரில் மகவிழந்து வாழ்வேனோ ஐயா
மலையேறிக் குதித்துயிரை மாய்ப்பேனே ஐயா !

கண்டாரில் மிக்கவுளக் கனிவுடையர் ஒருவர்
காரிகையே மலைமீது காவியுடை யணிந்து
முண்டிதமா யலையுமொரு முனிவரடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியுமென வுரைத்தார்.

வேறு

காடு மலையும் கடந்து வந்தேன்—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்க வந்தேன்

வாடு மலர்ச்செண்டு போல் கிடக்கும்—இந்த
மைந்த னுயிரெழச் செய்யு மையா.
நெஞ்சிற் கிடத்தி வளர்த்த பிள்ளை—கண்ணில்
நித்திரை நீக்கியான் காத்த பிள்ளை
விஞ்சு தவத்தினில் பெற்ற பிள்ளை—என்னை
விட்டுப் பிரிந்தறி யாத பிள்ளை.

பெற்ற வயிறு துடிக்கு தையா—ஒரு
பிள்ளையும் வேறெனக் கில்லை ஐயா
உற்ற உறவினர் இல்லை ஐயா—என்மீ
துள்ள மிரங்கிட வேணு மையா!

வேறு

வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா!

முகம்பார்த்துப் பேசாமல்
முலைப்பாலு முண்ணமல்
மகன்கிடக்கும் கிடைகண்டு
மனம்பொறுக்கு தில்லை ஐயா!

நீடு மதியினைப்போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடிநிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா!

பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூச் சூட்டிடம்மா
என்னு மொழிகளினி
எக்காலம் கேட்பனையா!

நெஞ்சிற் கவலையெலாம்
நிற்காம லோட்டுமெந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது
புத்திதடு மாறுதையா!

இட்டளந்து கூழைஎனக்
கின்னமுத மாக்கியகை
கட்டழிதல் கண்டுமனம்
கறங்காய்ச் சுழலுதையா!

சோலைப் பசுங்கிளிகள்
தோழனையும் காணுமல்
நாலு திசைகளிலும்
நாடித் திரியாவோ ?
அன்னப் பறவைகளென்
அழகனைப் பார்க்கவந்தால்
என்னமொழி கூறஇனி
என்னு வெழுமையா ?
துள்ளிவிளை யாடஎன்றன்
சுந்தரனைத் தேடிவரும்
புள்ளிமான் கன்றினுக்கெப்
பொய்சொல்லி நிற்பனையா ?
சித்திரத் தேரும்
சிறுபறையும் கூடியெனைப்
பித்தியிலும் பித்தி
பெரும்பித்தி ஆக்குதையா !
குஞ்சை யிழந்தகுயில்
கூவியழக் கண்டகனு
நெஞ்சை யறுக்குதையா
நினைப்பொழிய மாட்டாதையா.
கொம்படர்ந்த மாவின்
குலையடர்ந்த பூம்பிஞ்சு
வெம்பிவிழக் கண்டகனு
மெய்யாய் விடுமோ ஐயா.
கழுத்திற் கயிறிறுகிக்
கன்றுவிழக் கண்டகனு
பழுத்துப் பலித்திடுமோ
பலன்மாறி நின்றிடுமோ ?
தாயாகி உள்ளம்
தருக்கி யிருந்ததுபோய்ப்
பேயாகி யின்று
பிணந்தூக்கி நிற்பேனே ?
இந்தப் பிறவியில்யான்
எப்பிழையும் செய்தறியேன்
எந்தவிதம் என்வயிற்றில்
இவ்விடியும் வீழ்ந்ததையா !

வேறு

கன்றொ ழிந்தநா ராவின் கலக்கமொத்
தன்ற ரற்றி அழுத அரிவையை
என்றும் எங்கணும் எவ்வுயி ருந்தொழ
நன்று கண்டமெய்ஞ் ஞானியும் நோக்கியே.

வேறு

தாயே நின் மனக்கவலை—ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்
சேயினை எழுப் பிடுவேன்—விளையாடித்
திரியவும் செய் திடுவேன்.

நாவிய கடுகு வேண்டும்—அதுவுமோர்
நாவுரி தானும் வேண்டும்
சாவினை அறியாத—வீட்டினில்
தந்ததா யிருக்க வேண்டும்.

பக்கமாம் பதிகளிலே—சென்று நீ
பார்த்தித வாங்கி வந்தால்
துக்கமும் அகலுமம்மா—குழந்தையும்
சுகமாக வாழு மம்மா.

வேறு

என்றுரைத்த மொழிகேட்டவ் வேழை மார்பில்
ஏந்திணைத் திடுமகனோ டேரி லெங்கும்
சென்றடு கிரந்துவெறுங் கைய ளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற் கொண்டு,

வேறு

"புவியெலாம் நிறைந்த புகழோய்; புலவர்
கவியெலாம் நிறைந்த கருணையங் கடலே!
ஊரெலா மலைந்தேன் ஒவ்வொரு மனையும்
ஏறி யிறங்கினேன், என்குறை உரைத்தேன்
ஏழை ஒருமகள்—ஏழையலா தெவர்
ஏழைக் கிரங்குவர்?—என்கதை கேட்டு
மார்போ டணைத்த மதலையைக் கண்டு
மாறாக் கண்ணீர் வடிவதை நோக்கி
ஆறாத் துயரம் அடைந்தன ளிவளெனப்
பரிவு கொண்டென் பக்கம் நின்று
நாவிக் கொழித்த நாவுரிக் கடுகையும்
அளந்தென் மடியில் அளித்திட வந்தனள்

பிள்ளை யென்றிடில் பேயு மிரங்குமே
பெண்டிர் இரங்குதல் பேசவும் வேண்டுமோ ?
யானும், இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்
தாயரே நீவிர் தங்கும் மனையிது
சாவறி யாத தனிமனை தானே ?
தந்தை தாயர் தமக்கை தங்கை
மைந்த ரெவரும் மரித்தது முண்டோ ?
உரைத்திடு மென்றேன். உரைகேட் டவரும்
"வினவிய தென்னை ? விரி நீருலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன்
மாலையில் தளர்ந்து மறைவது மிலையோ ?
இம்மா நிலத்தில் இயற்கையின் குறிப்பெலாம்
அம்மா நீயும் ஆய்ந்திலை போலும் ?
இவள், கணவனை யிழந்த கைம்பெண் ணம்மா
இவள், தந்தையை யிழந்த தமிய ளம்மா
இவள், மைந்தனை யிழந்த வறியவ ளம்மா
இவள், தமையனை யிழந்த தங்கை யம்மா
இவள், மாமனை யிழந்த மருகி யம்மா
இவள், அன்னையை யிழந்த அகதி யம்மா
இறந்தவ ரெண்ணிலர் இருப்பவர் சிலரே
பிறந்தவ ரிறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகி னியற்கை ; ஒழித்தலும் எளிதோ ?"
எனவாங்குத், தேற மொழிகள் தெரிந்தவை கூறிக்
கண்முன் சான்றுகள் காட்டி நின்றனர்.
யானுமுன்,
கட்டளை யுணர்ந்து கவலை கைம்மிக
மற்றொரு வீட்டின் வாயிலிற் சென்றேன்.
அங்குளார்,
"கடுகினை யளந்து கட்டிவைத் தம்மா
உழுதவரிந் நாள் உலகி லில்லை
விதைத்தவர் அன்றே விண்ணுல கெய்தினர்
காத்தவர் காலமும் கழிந்து விட்டது
அடிமையு மிறந்துநா ளைந்தா றுகுது
காலனை எவரே கடக்க வல்லவர்"
என்று கூறினர் என்செய ஐயா ?

வேறு

ஐயமிடு மனைகளிலே மரணமென்றும்
அறியாத மனையேது மில்லை யில்லை
வையகத்தில் பிறப்புளதே லிறப்பு முண்டு
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்
கையமர்ந்த மகவினையும் கானி லிட்டேன்
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ
செய்யதிரு வடிபணிந்து போற்றி யிந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்'' என்றாள்.
மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினு லறிந்தவளை நோக்கி அம்மா
எங்குமிலாப் பொருள்தேடச் சென்று நீயும்
யான்நினைத்த பொருளினைப் பெற்று வந்தாய்
தங்குமிந்த உலகியற்கை மாறு தம்மா
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டாம்
அங்கமெலாம் வாயாக அழுதிட் டாலும்
அவனெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ ?

வேறு

பசும்புல் லடர்ந்து பன்மலர் விரிந்து
விசும்பு மண்ணில் விழுந்த தோவெனக்
கண்டவர் ஐயுறு காட்சிய தாகி
மண்டல வளமெலாம் மலிந்து தங்குமிப்
புலத்தின் வழிமன் புரமது சென்று
கொலைக்கள வேள்விக் குண்டினுக் கிரையாய்
ஆவதை அறியும் அறிவிலா ஆட்டினைப்
பாவிக ளோட்டுமிப் பரிசு போல
ஆசையும்
இன்ப வழியில் இதமா யிழுத்துத்
துன்ப மென்னும் தொடக்கில்
மன்பதை யுலகை மாட்டி விடுமே.

வேறு

இம்மா நிலத்திவ் வுண்மை யெலாம்
யானும் அறியச் செல்கின்றேன்
அம்மா நீயும் உன்மகனை
அடக்கம் செய்போ வென்றுரைத்தான்
வெம்மா வினையின் வேரறுத்து
விளங்கும் ஞான ஒளிகண்டிங்
கெம்மா தவரும் தொழுதேத்த
எழிலார் கமலத் தெழுந் தோனே,

நமது கல்விப் பயிற்சி

கே. ஸி. வீரராகவையர்

இக்காலத்தில் எல்லாருக்கும் கல்வி அவசியமென்று சர்வ சாதாரணமாகக் கற்றறிந்தவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மேலும் அஃது ஆண் பெண் இருபாலாருக்கும் அவசியமென்றும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத் திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்." ஆதலின், நமது பெண்மணி களையும் கற்கச்செய்யவேண்டும். காலப்போக்கும் அதையே ருசுப் படுத்திக் காட்டுகின்றது. நமது நூல்களில் கல்வியின் இன்றியமை யாமையைப்பற்றிச் சிறப்பாகப் பலபுலவர்கள் எழுதியிருக்கின்றார் கள். கல்வியின் சாரம் எண்ணிலும் எழுத்திலும் அடங்கியுள்ளது. எல்லாருக்கும் அர்த்தம் புரியும் விதமாக இவ்வுண்மையைப் பல பாக்களில் அறிஞர்கள் அமைத்திருக்கின்றனர். உதாரணம்:

(1) எண்ணெழுத்திகழேல்;

(2) எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்;

(3) எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

இப்படி நம் இந்திரியங்களில் மிக அருமையானதும் சிறந்ததுமான கண்களுக்குச் சமமான எண் எழுத்து என்ற அஸ்திபாரத்தின்மேல் கட்டப்படும் கல்வி மிக்க உபயோகமானது. அதுதானும்,

வெள்ளத்தே போகாது, வெந்தணலில் வேகாது, வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது,
கள்ளர்க்கு மிகஅரிது, காவலோ மிகஎளிது, கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க ஊரெல்லாம் பொருள்தேடி உழல்வ
[தென்னே.

மேலும்,

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

இப்படிப்பட்ட கல்வி,

தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு

என நிரந்தரமாயிருக்கும். இப்படியாக,

> கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
> நிற்க அதற்குத்தக

என்று ஒருவனிருந்தால், அவன்

> மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
> மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
> தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
> சென்றவிட மெல்லாஞ் சிறப்பு

என்ற மதிப்பை அடைவான். இவ்வளவு சிறப்பைத் தரக்கூடிய கல்வி பிறப்புரிமையால் எல்லாருக்கும் பொதுவானது என்ற கொள்கை பரவிவருகிறது. ஆகையால் நம்மவர்களுக்கு எந்தவிதமாகக் கல்விபுகட்டவேண்டும், எந்தக்கல்வி வேண்டும், பழைய வழக்கம் எத்தன்மையது, இக்காலத்தில் அஃது எப்படி அமையவேண்டும் என்ற சில விஷயங்களைச் சிறிது ஆராய்வோம்.

பழைய வழக்கம் யாது? குருகுலவாசம் பெரிதும் பாராட்டப் படுகிறது. அஃது எவ்வாற்றானும் எல்லா மக்களுக்கும் பொதுவாக ஏற்பட்டிருந்தது என்று தெரியவில்லை. பிராமணர்களும் அரசகுமாரர்களும் பூவைசியர்களும் தனவைசியர்களுமே பெரிதும் பயன் எய்தினர் எனத்தெரிகிறது. அம்முறை பெரும்பான்மை சிஷ்யர்களைக் குருவுக்கு அடிமையாக்கியதென்றும், குருட்டுத்தனமான மனப்பாட முறையையே கையாளச் செய்ததென்றும், இலக்கணத்தையும் மதநூல்களையுமே மிகுதியாக அப்பியசிக்கச் செய்ததென்றும், சிஷ்யர்களைக் குருவுக்கு நகலாகச் செய்து தாமாக உணரும் சுதந்திர வுணர்ச்சியற்றவர்களாக ஏற்படுத்தியதென்றும் குறைகூறுவாருமுண்டு. அஃது எப்படியாயினு மாகுக. அப்படிப்பட்டமுறை இக்காலத்தில் நமது நாட்டில் நிலைத்தல் மிகவும் அரிதான விஷயம். ஏறத்தாழ இக்குருகுல வாசத்துக்கு ஒப்பானது ஆங்கில நாட்டில் நடந்துவரும் "பப்ளிக் ஸ்கூல்" என்பது. அந்தமாதிரி ஒன்றை நடத்துவதற்கு முப்பது லக்ஷ ரூபாய் வேண்டுமென்று உத்தேசித்து நமது இந்தியா கவர்ன்மெண்டு மாஜி சட்டமெம்பர் எஸ். ஆர். தாஸ் வேண்டிய முயற்சி செய்து வந்தார். இவ்வளவு பெருந்தொகையை நமது தமிழ் நாட்டில் சேர்க்கவல்ல மனிதரும் இல்லை; கொடுக்கவல்ல மனமுடைய பிரபுவும் இல்லை. அப்படியே ஒன்று ஏற்பட்டாலும், அதில் இருநூறு அல்லது முன்னூறு பையன்களுக்குமேல் பயிலல் இயலாது; ஆதலின் அது சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் போலவே யாகும்.

இன்னும், இக்காலத்தில் செட்டி நாட்டுத் தனவந்தர்களால் பரிபாலிக்கப்பட்டு வரும் வேதபாடசாலைகளில் முன் சொல்லிய குருட்டுத்தன மனப்பாடமே பெரிதும் திகழ்கிறது. அவைகள் முழுதும் பிராமண ஆண்பாலர்களுக்கே பிரயோஜனமாயிருக்கின்றன. ஆகையால் அவையும் இக்காலத்துப் படிப்புக்குப் போதா.

மேலும் பழைய வழக்கத்தில் பெருங்கேடு ஒன்றுளது. உலக வியவகாரங்களில் வேதாந்த தத்துவத்தைப் புகவிட்டு, வீணே பலர் தம் நிலைக்குரிய சிறந்த கருமங்களைச் செய்யாது போலி வேதாந்திகளாகக் காலம் போக்கி வருபவராயினர். பாஞ்சால தீரர் லஜபதிராய் இது விஷயமாய்ச் சொல்லியிருப்பவை முற்றும் உண்மையே. "உலகமாவது மாயம்" "இல்லற வாழ்க்கை விலக்க முடியாத துன்பம்" "சம்சாரம் துக்கசாகரம்" "ஆசையை அடக்கவேண்டும்" "இந்திரியங்களை ஒடுக்கவேண்டும்" "எப்படியாவது இனிப் பிறவாமல் தப்பவேண்டும்" என்ற இன்னோரன்ன கருத்துக்கள் பெரிதும் பரவி,கால அளவில் திடகாத்திரர்களாய், வித்தையில் வல்லுநராய் "இல்லறமல்லது நல்லறமன்று" என்ற ஆன்றோர் கொள்கையை நாடினவராய் ஒழுகாமல், மடியென்னும் மாசூரப் போலி வேடதாரிகளாய், பூமிக்குப்பாரமாய், பிறருக்கு இடுக்கணுய் நாடுமுழுவதும் திரிகின்றனர். இவ்வெண்ணம் அடியோடு அழிந்து, நமது ஆன்றோர்களால் வகுக்கப்பட்டிருக்கும் பிரமசரியம், இல்வாழ்க்கை, வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற காலவரையறைகளை நன்குமதித்து அவற்றுக்குத்தக ஒழுகி, ஊழினாலாவது, பொருளில்லாமையினாலாவது, மெய்வருத்தத்தாலாவது நமக்குத் துன்பம் வந்தவிடத்து மனங்கலங்காதவர்களாய் வாழ நாம் முயலவேண்டும். அப்படியானால் தான் நாகரிகமலிந்த நன்னாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டு நம் நாடும் முற்போக்கை அடைய முடியும். நிற்க; இக்காலத்திய வழக்கம் யாதெனச் சிறிது விசாரிப்போம். சாதாரணமாக நமது தமிழ் ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் முற்கால முறைகளை அனுசரித்தவர்கள் என்பதால் சிறிது தாழவே மதிக்கப்படுகின்றனர். சிதம்பரம் ஸம்ஸ்கிருத காலேஜ் ஆண்டுவிழாக் கொண்டாட்டதினத்தன்று ஸ்ரீமான் கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி முறை இதுவரை மேனாட்டு ஆசிரியர்களிடமே விளங்கிவந்ததென்றும், சமீபகாலத்தில் இந்தியர்களில் பலரும் அம்முறையை அறிந்து நமது தேசச் சரித்திரத்தின் உண்மைகள் பலவற்றை ஆயாய்ந்து வெளியிட்டு வருகின்றனரென்றும் சரித்திரச்சார்பாகவும், குணதோஷங்களையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் உய்த்துணரும் ஆற்றல் உள்ளதாகவும், காரண காரிய அமைதிகளை அறிந்து ஆராய்வதாகவுமுள்ள இப்புது

முறையைப் பண்டிதர்கள் பெரிதும் உபயோகித்து வந்தால் ஸம்ஸ்கிருதப் பயிற்சிக்குப்பெரிய வருங்கால வாழ்வு உளது என்றும் சொன்னார்கள். இப்புது முறையை அனுஷ்டிப்பதற்குப் போதிய சௌகரியங்கள் முக்கியமான இடங்களில் ஏற்படவேண்டும். முற்காலத்திற்போல ஒருவரது பயிற்சிக்களஞ்சியம் அவரது மூளையாக இருப்பது இக்காலத்தில் துர்லபமாக இருக்கிறது. எந்த விஷயத்தைப்பற்றின பல பாகுபாடுகளையும் சடேரென்று, "அப்புத்தகத்திலுள்ளது, இப்பத்திரிகையில் வெளியானது" என்று குறிப்பிடும் ஆற்றல்வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் காலந்தோறும் பிரசுரமாகும் நற்பத்திரிகைகளையும் புதிது புதிதாக அச்சேறிவரும் புத்தகங்களையும் படித்தறிதல் வேண்டும். "கோயிலில்லா ஊர் பாழ்" என்றதற்கு ஒப்ப, ஸரஸ்வதி திகழும் புத்தகசாலைகளும் மலிந்து ஒவ்வொரு கிராமத்திலும் வளரவேண்டும். ஓதும் ஆற்றலும் போதிய சாவகாசமும், மிதமான வருவாயும் ஆதிய சௌகரியங்கள் ஒருவருக குண்டானால், அவர் பெரிதும் இப்புது முறையை அனுஷ்டிக்க முடியும். கடைசியாகச் சொல்வன்மை வேண்டும்.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்து
உய்த்துணர் வில்லெனி னில்லாகும்-உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னும் அஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

என்பது ஆன்றோர் வாக்கு. ஊமைக்கு ஊளறுவாயன் சண்டப்பிரசண்டன்; ஊளறு வாயனுக்கு நேர் வாயன் உத்தமத்தொண்டனுவன். கல்வி கேள்விகளால் ஒருவன் அறிவு பெறவேண்டும்; பெற்ற அறிவைப் பிறகு தன் முயற்சியால் ஓங்கி வளரச்செய்யவேண்டும்; அப்படி வளரும் அறிவைத் தன் சமூகத்தாருக்கும் ஓதுவித்துப் பிரயோஜனமாக்கி நன்னடையில் பின் வருவோருக்கும் உபயோகமாகும்படி நூல்கள் எழுதிவைக்கவேண்டும். சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்; துரும்பிலும் உளர், தூணிலும் உளர் என்றார்கள், நமது மூதாதையர்கள். தனிக்காட்டில் அலரும் அற்பப்பூவும் உயரிய கருத்தினை என் மனத்தில் எழுப்பக்கூடியது என்று சொல்லிப் போந்தார் ஆங்கிலக் கவிவாணர் வோட்ஸ்வோர்த். ஆகவே அற்பங்களையும் அவமதியாது சிறந்தவைகளையும் உள்ளடக்கிய நூல்கள் பல உதிக்கவேண்டும். இந்தத் தொண்டைப் பல பாஷை பயின்ற பண்டிதர்களே நன்கு நிறைவேற்ற யோக்கியதை உடையவராவார்கள்.

இனி எவ்விதக்கல்வி வேண்டுமென விசாரிப்போம். கேவலம் இலக்கிய இலக்கணக்கல்வி மாத்திரம் ஒருபோதும் பயனைத்தராது. நமது தமிழ்நாட்டில் வறுமையும் மடமையும் அடிமையும் மேலிட்

டிருக்கின்றன. இவைகளைப் போக்கத்தக்க படிப்பு நமக்கு அவசியம் வேண்டும். இலக்கியம் இலக்கணம் காவியம் வியாகரணம் இவைகளில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றால், நாம் பிறர் கையையும் கண்ணையும் பார்த்தவண்ணமாய் நிற்கவேண்டியிருக்கிறது. தமிழ்க் கவி சொன்ன,

"எண்ணான்கு முப்பத் திரண்டுபல் காட்டி இசையுடனே
பண்ணாகச் செந்தமிழ் பாடிவந் தாலும்இப் பாரிலுளார்
அண்ணாந்து கேட்பர் அழகழ கென்பர் அதன்பிறகு
சுண்ணாம்பு பட்ட இலையுங் கொடார்கவி சொன்னவர்க்கே"

என்பது பலருக்கும் அனுபவ உண்மையாகும். மேலும், அவர்கள் "இல்லது கூறல்" "அதிசயோக்தி" முதலிய குற்றங்களுக் காளாகிறார்கள். அப்படிச்செய்தவர் பிரலாபிப்பதைப் பாருங்கள்!!

கல்லாத வொருவனையான் கற்றா யென்றேன்
காடெறியு மறவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனையான் நல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாத சொன்னேனுக் கில்லையென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே

என்றார் ஒருவர். மற்றொருவர்,

"ஏட்டைக் கட்டி எழுத்தோ டெழுத்துவைத்
திணைத்துக் கட்டி யிசைகட்டி லோபர்மேல்
பாட்டைக் கட்டியென் தொண்டையும் கட்டின
பாவங் கட்டின தென்றைக்குத் தீருமோ"

என்றார். என்று நம்மவர்களுள் இம்மாதிரிக் கவிவாணராகப் பெரும்பாலார் இல்லாதிருக்கின்றாரோ, என்று நம்மவர்களில் பெரும்பாலார் "பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்று சர்க்கார் சேவக விருத்தியைப் பெரிதும் நாடாதிருக்கின்றனரோ, என்று நமது ஊர்களில் கிடைக்கும் மூலப்பொருள்களை உபயோகப் பண்டங்களாக மாற்றிப் பொருளாதார நிலையை விருத்தி பண்ணுகின்றாரோ, என்று அவர்களுடைய மூளைவன்மையைக் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் விவசாயத்திலும் பிரயோகிக்கின்றாரோ, அன்று தான் இந்த வசையும் தீரும். ஆகவே இக்காலத்தில் பெரும்பாலார் கைத்திறன் வாய்ந்தவராய், மற்றவர் பல மொழிகளிலும் வல்லவராய் அம்மொழிகளிலுள்ள உயர்ந்த கருத்துக்களையும் கலைஞானங்களையும் தமிழில் மொழி பெயர்த்து உதவுபவராய் ஏற்படல் வேண்டும்.

இப்படிப்பட்ட கல்வியைப்பெற்ருல் நாம் வாழ்க்கைப்போருக்குத் தயாரானவர்களாவோம்; இல்லையேல் என்றும் அடிமைகளாகவே இருக்க நேரிடும். இக்கல்வி பொதுவாக நாம் எப்பொழுதும் பேசும் பாஷையாகிய தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் சந்தேகிகள் இக்காலத்திலும் பலர் உளர். ஆங்கில பாஷை மூலமாகவாவது ஸம்ஸ்கிருத பாஷை மூலமாகவாவது இரண்டுகோடி ஜனங்களான நமது தமிழர்கள் பெரும்பான்மையோருக்குக் கல்வி புகட்டல் முடியாத காரியம். பிரிட்டிஷ் ராஜ்யம் நன்ருக ஏற்பட்டு நூற்றைம்பது வருடங்களாயினும், சர்வகலா சங்கங்கள் ஏற்பட்டு எழுபது வருஷங்களாயினும் , இன்னும் நூற்றுக்கு ஒருவர்கூட இங்கிலீஷ் பயின்றவர்களாகத் தெரியவில்லை. அப்படி யிருக்க மற்ற 99 பேருக்கும் ஆங்கில பாஷை மூலமாகக் கல்வி கற்பித்தல் மணற்காட்டை உழுது பயிரிடுவது போலாகும். ஸம்ஸ்கிருதமும் சில பேர்வழிகளாலே ஆளப்பட முடியுமே தவிர பெரும்பாலர்க்கு உதவுதல் அசாத்தியம். லஜபதிராய் இது விஷயமாகச் சொல்லுவது பின்வருமாறு: "ஸம்ஸ்கிருத பாஷையிலும் இலக்கியத்திலும் எனக்கு அதிக பிரியமுண்டு; ஆனல் பொதுவான கல்விப்பயிற்சியை அதன் மூலமாய்க் கொடுத்து அதைக்கொண்டு நாட்டை முன்னேற்றமடையச் செய்வதென்பது என் அபிப்பிராயத்தில் சாத்தியமுமில்லை; உசிதமுமில்லை. புராதன ஆராய்ச்சிக்கு முக்கியமானது அது; வேண்டிய பதங்களை உதவி நமது தாய் மொழிகளை வளர்த்துப் பெருகச்செய்ய அஃது இன்றியமையாதது. எனவே பண்டிதர்களுக்கும் ஆராய்ச்சிக்காரர்களுக்கும்ஸம்ஸ்கிருதம் அவசியமே. வேறு சாமானிய ஜனங்களுக்கு அது முக்கியமன்று."

ஆதலின் தமிழராகிய நமக்கு ஆங்கிலப் பயிற்சியும் ஸம்ஸ்கிருதப் பயிற்சியும் மாத்திரம் போதா. வங்க நாட்டு ரவீந்திரர் நூல்களைப் படிக்க வேண்டுமானல் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பை வாசிக்கும் தாழ்வு நிலை நம்மிடம் இருத்தல் கூடாது. அதேமாதிரி டால்ஸ்டாய், ரோலண்டு, கதே, இப்சன், முதலிய பிற பாஷை ஆசிரியர்களுடைய நூல்களின் நயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானல், அந்த அந்தப் பாஷைகளைக் கற்றுச்சொல்நயம் பொருள்நயம் நடைநயம் அறிந்து நமக்குத் தமிழில் சொல்லக்கூடிய பல பண்டிதர்கள் வேண்டும்.

இனி, தேசியக் கல்வி என்று ஒன்று சமீபத்தில் தோன்றி நடனமாடுகிறது. அதன் உட்கிடைப் பொருள் யாதென்று இன்னும் அனேகருக்குப் புலப்படவில்லை. ஆங்கிலக் கல்வி பெற்று ஆங்கில நூல்களையும் பத்திரிகைகளையுமே தினசரி படிக்கும் பெரியார் பலர்,

"தேசியக் கல்வியில் இரண்டும் இரண்டும் கூட்டினால் ஐந்து என்று கற்பிக்கப் போகிறார்களா? திரிகோண வடிவத்திலுள்ள மூன்று கோணங்களும் இரண்டு நேர் கோணங்களுக்குச் சமமில்லை என்று கற்பிக்கப் போகிறார்களா? அக்பர் சக்ரவர்த்தி 1605-ம் வருஷத்தில் மரித்தார் என்பதை மாற்றிக் கற்பிக்கப் போகிறார்களா? அன்றேல் பொன்னும் வெள்ளியும் மூலப்பொருளல்ல, சேர்க்கைப் பொருள்கள் என்று கற்பிக்கப் போகிறார்களா? இவை எல்லாம் வீண் வார்த்தை" என்று ஏளனம் செய்தனர். அவர்கள் பயின்ற விதமே அவர்களுக்குப் பின் வருபவர்களும் பயிலவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். அதுவோ நடவாத காரியம். தேசியக் கல்வி தேசத்தவர் நன்மைகளை அபிவிருத்தி செய்யவேண்டும். தேசத்தவர் நன்மைகளாவன: ஒவ்வொரு குழந்தைக்கும் பிரதமக் கல்வியை யாவது அளிக்கவேண்டும்; பிறகு அவர்கள் கற்றறிந்தவராகப் பெருக வேண்டும். கற்றறிந்த சன்மார்க்கங்களில் பழகி ஒழுகிச் சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்ற உயரிய கொள்கைகளைத் தமது இல்லற வாழ்க்கையில் உபயோகித்தல் வேண்டும். உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை யென்று தொழில் ஏதேனும் ஒன்றைப் பழகிப் பொருளாதார நிலையைச் செம்மையாக்க வேண்டும். இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்வதே தேசியக் கல்வியாகும்.

இத்தகைய கல்வியை அளிப்பதற்குப் பலபல முயற்சிகள் பலபல இடங்களில் செய்யப்பட்டன. ஹரித்துவாரக்ஷேத்திரத்திலுள்ள குருகுல வித்யாலயமும், போல்பூரிலுள்ள சாந்தி நிகேதனமும், வாரணாசி செண்ட்ரல் ஹிந்து கலாசாலையும், வங்காள தேசத்து நேஷனல் கவுன்ஸில் ஆப் எடுகேஷனது பாடசாலைகளும், பந்தர் ஜாதீய கலாசாலையும், சேலம் பாரத்வாஜ ஆஸ்ரமும், சேர்மாதேவி குருகுல வாசமும் பிறவும் இத்திறத்தனவாகும். இவைகளில் மடிந்தன பல; தளர்ந்து மெலிவன சில; உயர்ந்து ஓங்கி நிற்பன வெகுசிலவாகும். இவைகளும் நமக்குப் போதா.

இப்பொழுது நடந்துவரும் கல்விப் பயிற்சி பிரதம, நடுத்தர, உயர்தரக் கல்வி என மூன்று தட்டுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் பலனாக வெளிவரும் உயர்தரப் பட்டதாரிகள் சர்க்கார் சேவைக்கும் பிற நாட்டு வர்த்தகர்கள் துணைக்குமாகவே பயிற்றப்பட்டு வந்தனர் என அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்பயிற்சியை அப்பியசிப்பவர் பெருகப் பெருக, வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிற்று. பட்டாவிழந்து, பணமிழந்து, பெற்றோரைப் பிரிந்து பாடுபட்டுக் கற்ற கல்வி ஊதியமளிக்கத் தவிக்கின்றது. இக்கல்வியாளர் தமது சரக்கு, தம் நாட்டில் விலையாகாது போகவே

டைப் அடி என்றும் சுருக்கெழுத்தென்றும் சில கற்றுத் தமது வீடுவிட்டு நெடுந்தூரமுள்ள டெல்லி, பாம்பே, கல்கத்தா, ரங்கூன் என்ற இடங்களில் கூடி வசிக்கின்றனர். அங்கே அவர்கள் அருமையால் வேண்டாப் பண்டங்களாக ஒளிர்கிறார்கள். ஆகவே நமது கல்விப் பயிற்சிப் பிரசினை தீர்ந்தபாடில்லை!

பிரதமப்படிப்பு எல்லா மக்களுக்கும் உரித்து; அவசியமானது; துரைத்தனத்தார் தமது கடமைகளில் முதன்மையாக மதிக்க வேண்டுவது. இதுவே துரைத்தனத்தின் அழகு. இம்முறை சென்ற இருபது வருஷங்களாக நமது மாகாணத்தில் அமுலில் உளது. ஆயினும் ஹார்டாக் கமிட்டியார், இம்முறையில் செலவிடும் பணமெல்லாம் இதுவரை வியர்த்தமாகவே உளது என்று பல புள்ளி விவரங்களைக் காட்டி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். ஒரு சிறுவன் 5 வருஷங்கள் பிரதம வகுப்புகளில் படித்து விட்டு, கடைசியில் சிறிது வாசிக்கத் தெரிந்தவனாய் வேலையிலமர்ந்து மேன்மேலும் வாசிக்க வசதியற்றவனாய் உள்ளதையும் மறந்து சீக்கிரத்தில் படிக்கத் தெரியாதவனாய் மாறிவிடுகிறானாம்; இன்னும் பலர் தகுந்த இடமும் உபாத்தியாயருமில்லாததால் ஒரே வகுப்பில் பல வருஷங்கள் வாசித்து ஒன்றுமே கற்க இயலாது வெளியேறுகிறார்களாம்; இப்படியாகப் பிரதமப் படிப்பு முறை வீணாகப் போகிறதாம். உயர்தரப் படிப்பின் திறத்தை முன்னர் விவரித்துளோம். இனி என் செய்ய?

மூளையைப் பழக்கினேமே தவிர, கண்ணைக்கையும் கைத்திறனையும் பழக்கவில்லை எனக் கவலைகொண்டு, கல்வியிலாகா நிபுணர்கள் நடுத்தரப் பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு மானுயல் டிரெயினிங் என்றும் வோகேஷனல் பயிற்சி யென்றும் சில போதிக்கும்படி சமீபகாலமாக முயற்சித்து வருகிறார்கள். திருப்பதிக்குப் போகிறவர்களுக்கெல்லாம் மொட்டையடிப்பது போல நடுத்தரப் பள்ளிகளுக்குப் படிக்கவருபவர்களுக்கெல்லாம் தச்சு வேலையும் கொல்வேலையும் பயிற்றுவிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவைகளைப் போதிப்பதற்குக் காலம், வாரத்தில் ஒரு மணிதான் கிடைக்கும்; ஒரே காலத்தில் நாற்பது சிறார்கள் பயில வருவதால், அவர்களுக்கு வேண்டிய கருவிகள் பல வாங்குவதற்குப் பணமில்லையே யெனப் பள்ளிக்கூட நிர்வாகிகள் மயங்கி நிற்பர்; நிர்வாகிகளுக்குப் பணமுதவச் சக்தியற்றவர்களாய்த் தியங்கி நிற்பர் கல்வியிலாகா அதிகாரிகள். இந்நிலைக்கு நாமென் செய்வது?

நமது கல்விப்பயிற்சி காலத்துக்கேற்ப மாறவேண்டும்; அப்படி மாற்றும் திறமை வாய்ந்த மகான் உதிக்கவேண்டும். அவர் எப்பொழுது தோன்றுவாரோ?

லௌகிக தர்மம்.

வே. ஸாரநாதன்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒன்றோடொன்று பிணைந்து அமைந்திருக்கும் இருவிதமான வாழ்க்கை முறைகள் இருக்கின்றன. அதிலொன்று நமது நூல்களில் சரீரயாத்திரை என்று சொல்லப் படும் ஊழ்வினைப் பயனுக்குச் சாதனமாம். இதற்கு லௌகிகதர்மம் என்று பெயரிடலாம். உடம்பிற்கும் அது வேண்டும் சுகங்களுக்கும் பேருதவியாயிருக்கிற செயல்களெல்லாவற்றையும் இவ்விதம் குறிப் பிடலாம். நம்முடைய உள்ளத்திற் குடிகொண்டிருக்கும் ஆசையும் அஞ்சிப்பிழைக்கும் புத்தியுமே நம்மை மயக்கி உலகப்பற்றென்பதை நமக்கு உண்டாக்கச் சிறிது காலம் நமக்குப் போகத்தை இந்த லௌகிகதர்மம் அளிக்கும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசையையும் அகங்காரத்தையும் உத்தமர்கள் கூட ஒழிக்க முடியா மல் ஒருவாறு அவற்றைச் சாதகப்படுத்த முயலுகிறார்களே தவிர வேறில்லை. அவற்றைத் தங்கள் ஞானவாழ்வுக்கு அடிப்படையாக வும் செய்துகொள்ளப் பார்க்கிறார்கள்.

ஒருவன் தன் வாழ்க்கையின் அம்சங்களெல்லாம் ஒற்றுமைப் பட்டு இசைந்து ஞானவழியில் ஒருங்கு சேர்ந்து செல்வதை லக்ஷிய மாக வைத்துக்கொண்டு தன் வாழ் நாளைச் செம்மையாய்க் கழிக்க வேண்டும். தான் செய்யும் முயற்சியிலெல்லாம் ஓர் அம்சமாவது மெய்யுணர்தலுக்கு இசைந்ததாவென்பதைக் கவனிக்கவேண்டும். பாடுபட்டுப் பொருள் தேடுவதினாலும், இன்பம் தேடி உழல்வதினா லும், கீர்த்தி பெரிது என்று வீரச்செயல்கள் செய்வதினாலும் நாம் ஒருவேளை கொஞ்சம் கொஞ்சம் ஞானத்தை எட்டிப் பிடிக்கலாம். லௌகிகதர்மமும் ஞானவாழ்வும் நமது குணங்களிலேயே அமுங்கிக் கிடக்கின்றன ; அவை ஒன்று சேர்ந்து வெளிப்படும் போது நாம் புகழ் அடைகிறோம். லௌகிகதர்மத்தாலேயே ஞானவுறுப்புக்களை அடைந்து விளங்கலாம். பொருளியலை நாம் நன்கு மதிக்கவேண்டும். மனிதன் பூதேவியின் மகன். உலகப் பொருளனைத்தும் அவனுக்கு நலம் பயக்கும். அவனளவில் அவை விலையுயர்ந்த பண்டங்கள்; அவை அவனுடைய வாழ்வைப் பெருக்குகின்றன. பணம், செல்வாக்கு, பலம், இன்னும் மற்ற சக்திகளுள் சிறியது பெரியது யாவும் மனித னுக்கு அந்தரங்க சுகத்தைக் கொடுக்கவில்லையா ? இந்த உலகப்பற்று

என்ற சக்தி தொன்றுதொட்டு வரும் பெரும் சக்தியே. அப்படியே துறவு அல்லது அவாவறுத்தலும் பெரிய சக்தியாயிருக்கிறது. இரண்டும் நம்முள்ளத்தில் களித்து ஒன்றோடொன்று போராடிப் பெருகிவருகின்றன. நம் புலன்களினால் அறியப்படும் விஷயங்களையும் நம்முடம்பின் நலத்தையே கருதி வாழும் மனப்போக்கையும் உலகப்பற்று என்ற இச்சக்தி பாராட்டி வளர்த்து வருகிறது. தியாக புத்தியோவெனில் இதற்கு எப்போதும் எதிர்ப்படையாயிருந்து வருகிறது. இவ்விரண்டின் மகிமையினால் இன்பமும் துன்பமும் பாவமும் புண்ணியமும் விளைகின்றன. ஆத்மசக்தியுள்ள பௌருஷத்தைக் கையாளுவது எதனால் என்றால் உலகப்பற்றையும் தியாக புத்தியையும் தன் வசமாக்கி அவ்வாயிலால் பெருமை நிரம்பிய புத்தி நிலையை அடைவதாலேயாம். "புத்தி நிலையில் சரணம் புகு" என்று கீதையிலிருக்கிறது. அதை இவ்விடம் சாமான்ய அர்த்தத்தில் உபயோகிக்கலாம். இவ்விதம் போகத்திற்கும் தியாகத்திற்கும் நடுவில் யோகநிலை ஒன்று இருக்கிறது. அந்நிலையிலிருந்து நாம் சில கலியாண குணங்களைப் பேரவாவுடன் பற்றிக் கையாளலாம். அதற்கு நாம் எப்பொழுதும் வழி தேடியவண்ணமாகவே இருக்கவேண்டும்.

நம் வாழ்க்கையை நடத்துவது ஒரு கலையில் தேர்ச்சியடைவது போன்றது. நாம் படிப்பில் விருத்தியடைவதும், குணாதிசயங்களைப் பெறுவதும், ஞான மார்க்கம் புகுவதும் கீதம் சிற்பம் முதலியவைகளிற் பயில்வது போன்றன. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை நுட்பமான அறிவாற்றலும் அப்பியாசமும் வேண்டும். நம்முடைய ஆத்மா தனக்காக மேன்மையும் அழகும் வாய்ந்த ஸ்தூல சரீரமாகிய கோயிலைக்கட்டி அதில் வாழவந்திருக்கும் போதே ஞானத்தை மறவாமலிருக்கக்கூடும். மெய்யன்பு, அமைதி, வாய்மை, நிதானம், ஒழுங்கு என்ற குணங்களை லக்ஷியமாய் வைத்துக்கொண்டு மனிதன் லௌகிக காரியங்களைப் பழுதில்லாமல் செய்து முடிக்கலாம். ரோமாபுரி சக்ரவர்த்தியான மார்கஸ் ஆரீலியஸ் இவ்வண்ணம் அகத்திலும் புறத்திலும் சிறப்புள்ள உபசாந்தத்தைப் பெற்றவரென்று நாம் அறிவோம். "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" எல்லாரும் புத்தியோகம் என்றதை வழிபடுகிறார்கள். இவ்வித ஆத்மப் பயிற்சியானது மனிதஜாதியார்களின் வேதங்களில் விளங்கியும், கவிகளின் அந்தக்கரணத்திலிருந்து பொங்கும் கற்பனை ரசத்தில் கலந்தும் இருப்பதை நாம் அறிவோமல்லவா?

உள்ளத்தின் நாகரிகம் யாது? அஃது எப்படி நமக்குக் கைகூடும்? "ஐயோ, நமக்கு நல்லமனப் பான்மை வேண்டுமே. எல்லாப் பூதங்களுக்கும் பொதுவான உயிர் வாழ்க்கையை நாம் யோக

நுகர்ச்சியால் அறிந்து உணர வேண்டுமே'' என்று நம்முள்ளிருக்கும் தியாக புத்தியானது ஆவல்கொண்டிருக்கிறது. இதனையன்றி வேறு வஸ்துக்களில் அஃது ஆசை வைப்பதில்லை. ஆனால் உலகப் பற்று என்பது கூடவேயிருந்து நம்மை ஆட்டிவைக்கிறது. வித்வானென்று சொல்லும் ஒவ்வொருவனும் பொருள்களின் உண்மையையறிந்து, அவ்வறிவால் பிரதிபலிக்கும் அபிருசிகளைப் பெறுகிறான். எக்கருமங்களையும் அவன் பிரியத்துடன் செய்கிறான். தன் நிதான புத்தியை மட்டிலும் கைவிடுவதில்லை. பொருள் யாவற்றையும் நன்கு விலைமதிக்க அவனுக்கு இயலும். 'அளவின்கண் நிற்றல்' என்ற அப்பியாசம் அவனுக்கே உரியது. ஆங்கிலக் கவியாகிய மில்டன் இதையே புகழ்ந்து, "உன் வாழ்நாளில் அதி சீக்கிரமாகவே நீ அளவின் கண் நிற்பதற்குப் படிக்க வேண்டும்; நல்ல இயல்புள்ள சுகத்தை அடையக் கற்றுக்கொள்'' என்னும் பொருள்படப் பாடியிருக்கிறார். ஒருவாறு அவர் கருத்தைச் சிறிது மாற்றிச் சொல்லுகிறோம் என்று தோன்றலாம். ஆனால் மில்டன் கவியின் கருத்து இந்தச் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமானதே. மதப்பற்று அவருக்குப் பலமாயிருந்த போதிலும் பால்யதசையில் அவர் மதம் அதிகக் கடுமையாயில்லாமல் சுககரமாகவே யிருந்தது. அஃது அவரிடம் நிறைந்த கலியாண குணங்களைச் சேர்த்தது.

ஆனால் மதச்சார்பு ஒன்றுமில்லாமலே ஒருவன் தன் அக வாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் இனியதான ஒற்றுமையைக் கொள்ளமுடியும். லௌகிக தர்மமும் ஞானவாழ்வும் ஒருங்கு சேர்ந்து அவனிடம் பரிமளிக்கலாம். அவனே பாக்கியவான். அவன் ஆஸ்திகனாயில்லாமற் போனாலும் அவனிடம் சுகமாகவே செம்பொருளாகிய விளக்கு ஒன்று இருக்கிறது. "என்னுடைய விளக்கை நீரே ஏற்றவேண்டும்'' என்று ஓர் இஷ்டதேவதையைப் பார்த்து அவன் சொல்ல வேண்டியதில்லை. அவனிடத்தில் மதவெறி ஒன்றும் இல்லாததால் அழகுபெற நிதானமாய் அவனுள்ளத்திலுள்ள ஞான விளக்கு எரிகிறது.

சௌபாக்கியமுள்ள இந்த ஞானமானது காவிய நூல்களைப் பயின்றும் சரித்திர சாஸ்திரச் சுவையை அருந்தியும் மனிதனால் அடையக்கூடியது. கலைப்பயிற்சியின் பயனாகிய புத்தி சாதுர்த்தியத்தாலும் அஃது உண்டாகின்றது. இக்காலத்திலுள்ள தத்துவ சாஸ்திரப் பயிற்சியும் விசால புத்தியைக் கொடுத்து, அகங்காரத்தைக் குறைத்து, உள்ளக் கொதிப்பை நீக்கி நமது புத்தியின் ஆக்கத்தை எவ்வாறேனும் தேடச்செய்கிறது. ஞானம் அடைவதற்கு இக்காலத்தில் தனித்தனியே அனேக லௌகிகமான வழிகளிருக்கின்றன.

ஆனால் ஒருவனுக்குச் சுயமாக அதிர்ஷ்டமிருந்தால்தான் இந்தத் தெய்வசம்பத்து கைகூடும்; உடல் நலம் மனநலம் என்பன இயற்கையாய் ஏற்படும்; பிறகு அருட்செல்வம் எளிதாய்க் கிடைக்கும். ஆண்மக்களின் ஆண்மையையும் பெண்மக்களின் குண அழகையும் மேன்மைப்படுத்தும் விதம் இதுவே. ஆனால் அப்பியாசத்தினாலும் இந்தப் பாக்கியத்தைச் சிறிது சிறிதாய் ஒருவன் சேர்த்துக் கொள்ளலாம். எந்தச் செயலிலும் நடுநிலையில் நிற்பது, தராதரம் பார்ப்பது, சுற்றும் நோக்குவது, முயற்சியிலும் இளைப்பாறுதலிலும் உபசாந்தத்தையடைவது, சேர்ப்பதிலும் செலவிடுவதிலும்-அப்படியே துறப்பதிலும்-ஓர் அமைதியைப் பெறுவது, எண்ணாத எண்ணங்கள் எல்லாம் எண்ணுவதிலும் அவற்றிலிருந்து பிரிந்து மனத்தைத் தன் வசப்படுத்துவதிலும் சாமர்த்தியம், சர்வபோகங்களு மடங்கிய நகரத்தின் அதிபதியா யிருக்கும்போது மலைப்பிராந்தியத்தில் ஓர் ஆடுமேய்ப்போன் குடிசையிலிருப்பது போல் நினைத்துக் கருமங்களைக் கையாளுதல் என்னும் இவை தாம் வித்வான் என்பவனுக்கு ஞானமயமான வைபவத்தை அளிக்கின்றன. ஓர் ஆங்கிலக் கவி தம் நண்பர் ஒருவரைப் பற்றிப் பின்வருமாறு பாடியிருக்கிறார்: "வெகுளியால் மனம் திரிந்து சுணங்காமல், உலக வதந்திக்கு அஞ்சாமல், காம்பீர்யமும் அடக்கமும் மேற்கொண்டு கர்வமின்றிச் சரசியாய்ப் பேதைமையும் கேவலம் இன்பப்பற்றும் இல்லாமல் வாழ்க்கை புரியும் நியமமுடையவர்'' என்பது.

இங்ஙனம் மனிதருக்கு ஆண்மையும் சாத்விகமும் ஒருங்கு சேர்ந்து அதிசயமான அருட் செல்வத்தைப் பயக்கும். ஆனால் சாத்விகம் ஒரு பெரிய நெருப்பைப்போல் அமிதமான வல்லமை பெற்றதாகும். சுத்த யோகிகளின் பலம் அவ்விதமே வாய்ந்தது. இதே மாதிரி லௌகிகமான செயல்கள் யாவும் புஷ்டியும் பராக்கிரமமும் வாய்ந்தவை. அவை இக்காலத்து மனிதரின் முன்னிலையில் அழகும் ஆடம்பரமும் பெற்று மேன்மேலும் அவர் சிந்தனையைக் கொள்ளை கொள்ள வில்லையா? ஜனநாயகத்தின் வாழ்த்தும் ஆராதனமும் அவற்றிற்கே செல்லுகின்றனவல்லவா? வரங்கள் கொடுக்கும் கடவுளும் லௌகிகரேயல்லவா? வலித்து வீங்கிப்போன கைகளுடனும் புண்பட்ட கால்களுடனும் நாம் தோண்டித் தோண்டி மண்ணைக் குவித்துக் கல்லை ஒன்றின்மேலொன்றாய் அடுக்கி, லௌகிக தெய்வத்திற்கு எல்லா விதத்திலும் கோயில் கட்டுகிறோமே. அக் கோயில்கள் நமக்கு வீண் போகவில்லை; ஒரு வித அறிவும், உபசாந்த நிலையும், அவை பிரதிபலித்துப் பெருகும் செயல்களும், சரித்திரக் கிளர்ச்சிகளும், செவிக்கெட்டும் புஷ்டியுள்ள

கீதங்களும், இன்னும் செவிக்கெட்டாத மிக இனிய கீதங்களும் நமக்கு லௌகிக தர்மத்திலிருந்து வரும் நலங்களல்லவா ? ஆனாலும் திருவள்ளுவர் கூறுவதை நாம் மறக்கலாமா ? "இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி, மாசறு காட்சி யவர்க்கு."

முஹம்மது நபியும் அவரது மார்க்கமும்

பா. தாவூத் ஷா

இம்மஹான் அரப்நாட்டின் தலை நகராய மக்காவின்கண் கி. பி. 571-ல் ஒரு திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் ("யானையாண்டின்" ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 9-ல்) அத் தேயத்தின் கண் விளங்கி வந்த மஹா சிரேஷ்டம் வாய்ந்த கோத் திரமாம் குறைஷிக்குலத்திலே அப்துல் முத்தலிபின் இளைய குமாரராகிய அப்துல்லாவுக்கு, அவரது பாரியாள் ஆமினா என்பவ ரின் உதரத்தினின்று உதயமாயினர். இம்மஹானது அவதாரத் திற்கு முன்னே அவ்வரப்நாடு மட்டுமல்லாது இவ்வுலகத்தின் ஏனைப்பகுதிகளுங்கூட அஞ்ஞானமென்னும் அந்தகாரத்துள்ளே அதிகம் ஆழ்ந்து தாழ்ந்து கிடந்தனவென்பதற்கு அவ்வத்தேய சரித்திரங்களே சான்று பகர்ந்துகொண் டிருக்கின்றன. இப்பெரி யாருக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னேதான் இயேசுகிறிஸ்து ஆசியாவின் மேற்குப் பகுதியிலும், அவருக்கு ஐந்து நூற்றாண்டு முன்னேதான் கௌதமபுத்தர் ஆசியாவின் கிழக்குப் பகுதியிலும் அவதரித்து நல்லுபதேசம் புரிந்து சென்றிருந்தும், கி. பி. ஆறாவது நூற்றாண்டில் எல்லா மேற்குத் தேயங்களும் எல்லாக் கிழக்குத் தேயங்களும் நாகரிகத்திலும், நல்லொழுக்கத்திலும், ஞானப் பிரகாசத்திலும் மிகமிகத் தாழ்ந்த பாதாளத்திலே பதிந்து கிடந்தன வாதலின், அப்பொழுதொரு விசுவப் பொதுத்தீர்க்கதரிசி இத்தாணி யின் உஜ்ஜீவிப்பின் பொருட்டே அவதரிக்கவேண்டுவது அத்தியா வசியமாய்க் காணப்பட்டுவிட்டது. ஆயின், ஒழுக்கவீனத்திலும் மடமைத்தனம் குடிகொண்ட இழிய பாமரத் தன்மையிலும் அப் பண்டை உலகின் மத்தியபாகமாய் விளங்கிய அரப்தேயமே அத் தகைய தீர்க்கதரிசியின் அவதாரத்திற்குரிய சிறந்த பூபாகமாய்க் காணப்பட்டுவந்தது. எனவே, முஹம்மதென்பார் கி.பி. 6-வது நூற்றாண்டின் இறுதியிலே இந்நாட்டின்கண் ஜனனமாகி, ஆண்ட வனுக்குரிய ஏகேசுவரக் கொள்கையையும், ஏக சகோதர வாஞ் சையையும் எல்லோருக்கும் சரிசமானமாகவே எடுத்தோதத்

தொடங்கினர். இவர் ஜனனமாதற்குச் சிலமாதம் முன்னரே இவரது தந்தை காலகதியால் தேகவியோக மாய்விட்டார். பிறந்து ஆறு வயதாகும் முன்னரே அன்னை ஆமினவும் ஆண்டவனடி சேர்ந்து விட்டார். ஆகவே, அன்னையும் பிதாவுமற்ற அநாதை முஹம்மதை அப்துல் முத்தலிபே பிறகு ஈராண்டுகள் மட்டும் போற்றிவந்தார்; அதன்பின் அப்பாட்டனரும் இறந்துபட்டபின் பெரிய தந்தையாய் விளங்கிய அபூத்தாலிபின் மீதே அவ்வநாதைச் சிறுவரை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு முழுதும் வீழ்ந்துவிட்டது.

இப்பெரிய தந்தையார் அவ்விளைஞருக்கு வயது 25 ஆகும் வரை தம்மிடத்திலேயே வைத்திருந்து, ஷாம் (ஸிரியா) முதலிய பகுதிகளுக்குச் சென்று வர்த்தகம் செய்துவரும் முறையைக் கற்றுக் கொடுத்து வந்தார். பாலியமுதலே இந்த யுவர் வாய்மையுடைமை, தீமையின்மை, யோக்கியப் பொறுப்பு, ஒழுக்கப் பெருமை, நம்பிக்கைக்குரிய தன்மை முதலிய சற்குணங்களில் தலைசிறந்து விளங்கியமையான் "அல் அமீன" (சரியான நம்பிக்கைக் குரியவர்) என்னும் அழகிய பட்டத்தை அத்தேய மக்களால் வழங்கப் பெற்று அம்மக்கா நகரின் கண்ணே அதற்குமுன் 40 பிராயத்தை அடைந்து விதவையாய்ப் போயிருந்த கதீஜாவென்னும் பெரிய பணக்காரச் சீமாட்டியின் வர்த்தகத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். அம்மாது சிரோமணியின் ஷாம் தேய வியாபாரத்தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல இலாபத்தையும் காண்பித்துத் தந்ததனல் இன்னவரது யோக்கியப் பொறுப்பிலும் வர்த்தகவாய்மையிலும் களங்கமற்ற ஒழுக்கத்திலும் பெருமதிப்புக்கொண்டு விட்ட கதீஜாப் பிராட்டியார் இவரையே திருமணம் செய்துகொள்ளத் துணிவு கொண்டுவிட்டார். ஒழுக்க வீனத்திற்கே தலை சிறந்து விளங்கிய அவ்வரப் தேயத்தின்கண் தம்முடைய 25-வது பிராயம்வரை மஹா பரிசுத்தத்துடனே நடந்து வந்த முஹம்மதானவர் 40 பிராயம் நிறைந்திருந்த அவ்விதவையை மனமார மணந்துகொண்டு, தமது 50-வதுபிராயம்வரை சம்பூர்ண சௌஜன்யத்துடனேதான் இல்லறம் நடாத்திவந்தார்; அதுகாறும் வேறொருகன்னியையும் அப்பெரியார் மணந்துகொள்ளவில்லை. ஆகவே, அந்த கதீஜாப் பிராட்டியுடன் ஐக்கியப்பட்டு, அந்தச் சீமாட்டியின் ஐசுவரியங்க ளனைத்தையும் தானதர்மங்களிலே அதிகம் செலவிட்டுக் காலங்கழித்து வந்தார். அந்த விவாகத்திற்குப் பின் முஹம்மதென்பார் வர்த்தகத்திலே ஈடுபடாது, தனித்திருந்து தியானம் புரிவதிலும், தானதர்மம் செய்வதிலும், சமூகசேவை புரிவதிலும், இம்சிக்கப்பட்ட ஏழை எளியோர்களுக்கு உதவி செய்வதிலுமே காலங் கடத்தி வந்தார்.

அப்படிப்பட்ட யோகநிஷ்டைகளிலெல்லாம் அடிக்கடி வானவர்கள் (மலக்குகள்) வந்து அவரது ஞானக் கண்ணுக்குப் புலனாவது வழக்கமா யிருந்துவந்தது. இவ்வுலகமக்களின் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டுவதற்கும், இவர்களையெல்லாம் ஏக தெய்வத்தின் மக்களாகவே அமைப்பதற்கும், எனவே இவர்களுக்குள் ஏக சகோதரக் கொள்கையை நிலைநாட்டுவதற்கும் அவ்விறைவனாலேயே நல்வழி யொன்று காட்டப்பட மாட்டாதாவென்று அல்லும் பகலும் அனவரதமும் சதாசிந்தாகுலரா யிருந்துவந்தார்; இவ்வாறாகப் பதினைந்து ஆண்டுகள்வரையில் கழிந்தன. அதன் பின் முஹம்மதுக்கு 40-ஆவது பிராயம் நிகழ்ந்துவந்தக்கால், அம் மஹானுபாவர் ரம்ஜான் மாதத்தில் நோன்பு நோற்றுக்கொண்டு, மக்காவுக்குச் சிறிது தூரத்திலுள்ள ஹிராவென்னும் ஒரு மலைப் பொதும்பருள்ளே தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து அல்லும் பகலுமாக ஆண்டவனையே தியானம் புரிந்து வந்தபோது, அம்மாதத்தின் 27-வது தினத்தன்று இரவிலே வானவர் ஜிப்ரீல் என்பார் அவர்முன் தோன்றி, மஹாகண்ணியம் வாய்ந்த இப்பிரபஞ்ச கர்த்தாவின் திருநாமத்தின் உதவியைக் கொண்டு ஓதுமாறு கட்டளையிடப்பட்டார்; உடனே அந்தச் சிருஷ்டிகர்த்தாவின் அனுக்கிரஹத்தைக் கொண்டு முஹம்மது நபி ஞானோதயம் பெற்று ஓதக் கற்றுக் கொண்டார்.

எனினும், அந்த நபிபெருமானார் தமக்குக் கிடைத்த ஞானோபதேசத்தை வெளியிலெடுத்துப் பிரசாரம்செய்யத் தயங்கிக்கொண்டே சிலமாதங்கள் வரை காலங்கடத்திவந்தார். பிறகும் ஜிப்ரீல் என்னும் அந்த வானவர் மூலம், தமக்கருளப் பட்டிருக்கும் ஞானவிகாசத்தை வெளியிலெடுத்து அனைவருக்கும் போதிக்குமாறு ஆண்டவன் அறிவித்திருப்பதாக அறிவுறுத்தப்பட்டார். அப்பொழுதும் அப்பெரியார் இரகசியத்திலேயே முதல் மூன்றாண்டுகள் மட்டும் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்தார். எனினும், மக்காவிலுள்ள குறைஷிகள் இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டு இஸ்லாத்தில் சேர்ந்துவந்தவர்களை யெல்லாம் ஏளனம் செய்து இம்சிக்கத் தொடங்கினார்கள். மறைமுகமாக முஹம்மது நபி பிரசாரம் செய்துவந்ததனாலும், எதிரிகளின் இன்னல்களும் இடையூறுகளும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்ததனாலும் முதல் மூன்றாண்டுகளில் சுமார் 40 மனிதர்களே இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். அவர்களுள்பணக்காரர்களுட்பட ஏழைகளும் எட்டிலெழுதி முடியாவண்ணமெல்லாம் எதிரிகளால் சித்திரவதை செய்யப்பட்டும், உயிருடனே ஒரு சிலர் கொல்லப்பட்டும், அம்முஸ்லிம்களுள் ஒருவரேனும் தீனுல் இஸ்

லாத்தை விட்டுப் பிரிந்துவிடவில்லை. எனவே, அந்தக் குறைஷிகள் தங்களுடைய விக்கிரஹ ஆராதனைக்கும், வேறு பல தெய்வக் கொள்கைக்கும், தாங்கள் வகித்துவந்த மக்காவின் தலைமைப் பதவிக்கும் பேராபத்து விளைந்து விட்டதெனக் கண்டு, இச்சன்மார்க்க முயற்சியை அடியோடு கல்லி யெறிந்துவிடுவதே சாலச் சிறந்ததெனக்கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் எடுத்துக்கொண்டார்கள். இவ்வாறு அந்தக் குறைஷிகள் செய்து வந்த பல சாமபேததானதண்டங்களாலெல்லாம் அம்முஸ்லிம்களை ஓறுத்துப்பார்த்தும் ஒன்றும் பலியாதுபோய்விட்டமை கண்டு, அம் மக்காவாசிகள் சில தூதர்களை அனுப்பி நபிபெருமானுக்குப் பொன்னும், பெண்ணும், அரசபதவியுங்கூட அளிப்பதாகக் கூறினார்கள். இதற்கும் அந்தத் தீர்க்கதரிசி இணங்கிவராதது கண்டு, அவர்கள் அபூத்தாலிபிடம் சென்று, இந்த இயக்கம் இனி நிறுத்தப் படாவிடின், உள்நாட்டுக் கலகமே அதிகம் விளையுமென்று பயமுறுத்தினார்கள். அதுசமயம் அபூத்தாலிப் வேண்டிக் கொண்டதற்கு நபிபெருமான், எதிரிகள் சூரியனைக் கொணர்ந்து தம் வலக்கரத்திலும், சந்திரனைக் கொணர்ந்து தம் இடக்கரத்திலும் வைத்த போதினும், தம்முடைய சத்தியசன்மார்க்கப் பிரசாரத்தை ஒரு சிறிதும் விட்டுவிட முடியாதென்றும், இம்முயற்சியில் இறுதிவரை வெற்றி பெறுவிட்டால் தாம் மடிந்து தீருவதே சரதமென்றும் உறுதி கூறினர். இவ்வாறெல்லாம் ஒன்றும் பலியாததுகண்ட குறைஷியரின் கொடுமை இன்னம் பன்மடங்கில் மஹா உக்கிரத் துடனே தலைவிரித்தாடத் தொடங்கிற்று. அவர்களுடைய இன்னல் களைச் சகிக்கவியலாது நபிப்பட்டம் வந்தபின் ஐந்தாவது ஆண்டில் 15 ஆண்களும் பெண்களும் சேர்ந்து செங்கடல் கடந்து அபிஸ்ஸீனியாவிலிருந்த நஜ்ஜாஷீ என்னும் கிறிஸ்தவமன்னனது பாதுகாப்புக்குள் சென்று தங்கிவிட்டார்கள். அப்பொழுதும் அவர்களைச் சும்மாவிடாது குறைஷிகள் சிலரை அந்த மன்னனிடம் அனுப்பி அம்முஸ்லிம்களைத் திருப்பிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். ஆனால், அந்த நஜ்ஜாஷீ மன்னன் வாதி பிரதிவாதிகளின் கக்ஷிகளைக் கேட்டு, சன்மார்க்கர்களாகிய அம்முஸ்லிம்களைத் துன்மார்க்கர்களாகிய அந்தக் குறைஷியரிடம் திருப்பிக்கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டான். அதன் பின் சிறுகச் சிறுக 101 முஸ்லிம் ஆண் பெண்கள் வரை அந்த அபிஸ்ஸீனியாவுக்கே சென்று புகலிடம் தேடிக்கொண்டார்கள். பிறகு அபூஜஹ்ல் என்னும் கொடியதுஷ்டன் நபிபெருமானை ஒருநாள் உதிரம் சொரிய அடித்துவிட்ட செய்தி கேட்டு முஹம்மது நபியின் சிற்றப்பாராகிய

ஹம்ஜாவும் அந்த அபூஜஹ்லைப் பதிலுக்குத் தமது தனுஸைக் கொண்டடித்துவிட்டு இஸ்லாத்திலே சேர்ந்துகொண்டார். இச் செய்திகேட்ட குறைஷிகளெல்லோரும் ஆத்திரம் அதிகம் கொண்டு விட்டார்கள். ஆதலின், அபூஜஹ்ல் உமரென்னும் வாலிபரை அழைத்து, முஹம்மதைக் கொன்றுவிட்டு வந்தால் தக்க சன்மானம் அளிப்பதாகக் கூறினன். ஆனல், ஆண்டவனது நாட்டம் வேறு விதமாக இருந்ததனல் முஹம்மதைக் கொல்லச் சென்ற அந்த உமரே (பிறகு உலகப்பிரசித்திபெற்று 2-வது கலீபாவாய் விளங்கியவர்) தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டு விட்டார். இச் செய்தியையும் கேட்டு அக் குறைஷியர் பட்ட அவதிக்கோர் அளவில்லை. ஆதலின், அவ்விரோதிகளெல்லாரும் சேர்ந்துகொண்டு முஹம்மது நபியையும் அவரைச் சார்ந்த முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதார் ஆகிய எல்லா பனூஹாஷிம் குடும்பத்தினரையும் ஒரு மலைக்கணவாய்க்குள்ளே அடைத்து மூன்ருண்டுகள் வரை ஜாதிக்கட்டென்னும் கட்டுப் பாட்டுக்குள்ளே ஒடுங்கிவைத்து விட்டார்கள். அந்த மூன்ருண்டு கழியும்வரை அவ்வடைபட்ட மக்கள் பட்டுவந்த பாட்டிற்கோர் அளவுசொல்லி முடியாது. இறுதியில் ஒரு சில மக்கா இளைஞர்களால் அக்கட்டுப் பாட்டுச் சீட்டுக் கிழித்தெறியப்பட்டு, அடைபட்டிருந்தவர்களெல்லாரும் விடுதலை செய்யப்பட்டார்கள். அதன் பின் நபிப்பட்டம் வந்த 10-வது ஆண்டில் அபூத்தாலிபும் கதீஜாப் பிராட்டியும் காலகதி அடைந்துவிட்டார்கள். இதனல் நபிபெருமானுக்குப் பக்கபலமென்பது ஒரு சிறிது அம்மக்காவின்கண் தளர்வுறத் தலைப்பட்டது கண்டு எதிரிகளும் அதிகம் துள்ளத்தொடங்கி விட்டார்கள். எனவே, முஹம்மது நபி தாயிபென்னும் மற்ருெரு நகருக்குப் போந்து, அங்கேனும் பிரசாரம் செய்யலாமென்றெண்ணிச் சென்ருர். ஆங்கிருந்தும் காவாலிகளால் கல்லாலெறியப் பட்டுக் காலில் உதிரம் சொரியத் துரத்தப்பட்டார். பிறகும் மக்காவுக்கே திரும்பிவந்து, யாத்திராகாலங்களில் வெளியூர்களிலிருந்து அங்கு விஜயம் செய்யும் மனிதர்களை நோக்கி இஸ்லாத்தின் உபதேசம் புரிந்துவந்தார். அவர்களுள் ஒரு சிலர் செவிதாழ்த்துவதும் மற்றும் பலர் உதாசினம் செய்வதுமாகவே சிலகாலம் கடந்து வந்தது. ஒருமுறை மதீனுவிலிருந்து மக்கத்திற்கு விஜயஞ்செய்திருந்த அறுவர் முஹம்மது நபியின் உபதேசத்தைக் கேட்டு இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டார்கள். எனவே, அடுத்த ஆண்டில் அவ்வறுவரும் மற்றுமோர் அறுவருடனே வந்து இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். இது நபிப்பட்டம் வந்த 11-வது ஆண்டிலாகும். அடுத்த ஆண்டில் மதீனுவிலிருந்து 75 ஆண் பெண் முஸ்லிம்கள்

மக்காவிற்கு வந்து நபிகள் நாதரை மதீனாவிற்கு வந்து விடுமாறும், அவருக்காகத் தங்கள் உயிரையுங் கொடுக்கக் காத்திருப்பதாகவும் வாக்குறுதி செய்து கொடுத்தார்கள். என்ன நேரினும் இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளாது விடுவதில்லையென்பதே அவர்களுடைய பிடிவாதமா யிருந்துவந்தது. எனவே, நபிபெருமானும் அதற்கு இடங்கொடுத்து விட்டமையால், அபிஸ்ஸீனியாவுக்குச் சென்று தங்கிய முஸ்லிம்களல்லாத ஏனையோரெல்லாம் சிறுகச் சிறுக அனேகமாக மதீனாவுக்குச் சென்று விட்டார்கள். பிறகு நபிப்பட்டம் வந்த 13-வது வருட ஆரம்பத்திலே நபிபெருமானும் புறப்பட்டுச் செல்லலாமென்னும் ஆண்டவனது அருள்வாக்கு அனுப்பப்பட்டது; உடனே நபியும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் புறப்படச் சித்தமாகிவிட்டார். இதற்கிடையில் எல்லா முஸ்லிம்களும் மதீனாவிற்குத் தப்பி ஓடிவிட்டார்களென்னும் ஆத்திரங்கொண்டு, முஹம்மது நபியையும் அவ்வாறு ஓடவிடக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டு அக்குறைஷியர் ஒருநாள் இரவிலே அந்த முஹம்மது நபியைக் குத்திக் கொன்றுவிடுவதென்றே ஏற்பாடு செய்து முடித்து விட்டார்கள். இது தெரிந்து முஹம்மது நபி அன்றிரவே தம் படுக்கையின்மீது அபூத்தாலிபின் மைந்தர் அலீ என்னும் தமது (பிற்கால) மருகரைப் படுக்கச்செய்துவிட்டு நள்ளிரவிலே அவ்வீட்டைவிட்டுப் புறப்பட்டு அபூபக்ர் என்னும் தம்முடைய பிரதம சிஷ்யரைமட்டும் அழைத்துக்கொண்டு அவ்விருளிலே சென்று 'தௌர்' என்னும் ஒரு குகைக்குள்ளே மறைவாகத் தங்கிவிட்டார். அவ்வாறு அந்தத் தீர்க்கதரிசி புறப்பட்டபோது அவ்வீட்டை வளைந்து முற்றுகைபோட்டிருந்த எதிரிகளெல்லாரும் ஆண்டவன் சோதனையால் அயர்ந்து உறங்கிவிட்டார்களென்று சரித்திராசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், விடிந்தவுடனே விஷயம் தெரிந்து அவ்வெதிரிகளனைவரும் எங்கெங்கும் ஓடித் தேடினார்கள்; தௌர்க்குகையின் வாயில் வரையுங்கூடச் சிலர் தேடிக் கொண்டுவந்துவிட்டார்கள். ஆனால், ஒருவரும் அதற்குள்ளே எட்டிப் பார்க்க எண்ணங் கொள்ளவில்லை. ஆதலின், எதிரிகள் ஏமாந்து மக்காவிற்குத் திரும்பியபின் நபிகள்நாயகம் மூன்றுநாள் வரை அக்குகையினுள்ளே தங்கி யிருந்து நான்காவது நாள் புறப்பட்டு மதீனாவிற்குச் சென்றார்கள். வழியிலும் ஆபத்தொன்று நேரும்போற் காணப்பட்டது. ஸுராக்கா என்னும் மக்காவாசி முஹம்மது நபியின் சிரத்தைக் கொய்துவந்து நூறுஒட்டகம் பரிசு பெறுவான் வேண்டித் துரத்திச் சென்றான். ஆனால், அவனுடைய குதிரை இடைவழியிலே பல முறை இடறி விழுந்து அவனையும் தள்ளிவிட்டதால்

நபிநாயகத்தைக் கொல்ல மனந்துணியாது பயந்து அன்னவர்பால் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு அவன் திரும்பிவிட்டான். பிறகு சுகமே நபிநாயகம் அபூபக்ருடனே மதீனா போய்ச் சேர்ந்தார். இது நிகழ்ந்தது நபிப்பட்டம் வந்த 13-வது ஆண்டு ரபீஉல் அவ்வல்மாதம் பிறை 8 ஆகும். இதுதான் நபிநாயகத்தின் சரித்திரத்தில் ஹிஜ்ரத் தென்று பிரபலமாகச் சொல்லப்படுகிறது ; இதிலிருந்துதான் முஸ் லிம்களின் ஹிஜ்ரி வருடம் கணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மக்காவைவிட்டு வடக்கே 300 மைல்களுக்கப்பா லுள்ள மதீனாவுக்குச் சென்று ஆங்கிருந்த யூதர்களையும் ஏனையோ ரையும்சீர்திருத்திவந்தபொழுதும் குறைஷிகள் மட்டும் முஸ்லிம்கள் மீது வைத்த வர்மத்தைச் சிறிதும் மறந்துவிடவில்லை. எனவே, இஸ்லாத்தை ஒழித்துவிடுவான் வேண்டி 1000-க்கு மேற்பட்ட குறைஷிகள் அம்மதீனாவின்மீது ஹிஜ்ரி 2-ல் படையெடுத்துச் சென் றார்கள் ; ஸிரியாவுக்குச் சென்று திரும்பிவரும் மக்கத்தவரின் வர்த் தகக் கூட்டத்தை அம்மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப்போகிறார் களென்னும் ஒரு பொய்வதந்தியைச் சாக்காக வைத்துக்கொண்டே அம்முஸ்லிம்களைத் தாக்கச் சென்றார்கள். நபிபெருமான் இவ் விஷயம் தெரிந்து தம்வயமிருந்த சிறுவர்களும் வயோதிகர்களும் பலாட்டியர்களும் சேர்ந்த 313 ஆயுதபாணிகளல்லாத முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு, மக்காவிலிருந்துவரும் குறைஷிப் படைகளை நடுவழியிலேயே தடுக்கச் சென்றார். ஆகவே, பத்ரென்னுமிடத் தில் அந்தக் கடும்போர் நிகழலாயிற்று. குறைஷிகள் ஆயுதபாணி களாகவும் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாகவும் இருந்து வந்தத னால், அளவிறந்த மமதையுடனே அலக்ஷியமாக யுத்தம் புரிந்தார்கள். ஆனால், நிராயுதபாணிகளாயிருந்த முஸ்லிம்களோ தங்கள் தெய்வத் தின் மீது வைத்த உறுதியின் காரணத்தால் ‘இருந்தால் வெற்றி, இறந்தால் வீரசுவர்க்கம்’ என்ற திண்ணிய எண்ணத்துடனே மிக்க திறமையோடு யுத்தம் புரிந்து வெற்றிக்கொடி நாட்டினார்கள். ஆனால், பத்ரின் யுத்தகளத்தில் முழுத்தோல்வியுற்றுப் புறமுதுகு காட்டி மக்காவிற்கு ஓடிய குறைஷிகள் தங்கள் இனத்தவர்களையும், சுற்றுப் புறங்களிலுள்ள மற்றெல்லாவர்க்கத்தினரையும் திரட்டிக்கொண்டு 3000 வீரர்கள் வரை மதீனாவிற்கருகே வந்து பாடி வீடு செய்து கொண்டார்கள். அதுபோது முஹம்மதுநபி தம்முடைய 700 சிஷ்யர்களுடனே சென்று மிக்க தீரத்துடனே உஹுதென்னும் மலை யடிவாரத்தில் யுத்தம் புரிந்து, அந்த எதிரிகளனைவரையும் சின்னா பின்னமாக்கிவிட்டார். ஆனால், நபிபெருமானின் ஒரு சில வில்வீரர்கள் அம்மலைக் கணவாயின் வழியில் நின்று எதிரிகளைப்

பின்புறமாக வரவொட்டாது தடுத்துவைத்தார்கள்; ஆயின், எதிரிகள் தோல்வியுற்றுக் கலைந்தோடுவதைக் கண்ட அவ்வில்வீரர்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டுக் கீழேயுள்ள சமவெளிக்கு வந்து சேர்ந்தார்கள். இதனை யுணர்ந்த எதிரிகள் மீண்டும் வந்து அக்கணவாய் வழியே நுழைந்து அணி கலைந்து நின்ற அவ்வெற்றிபெற்ற முஸ்லிம்களை யெல்லாம் பின்புறமாகத் தாக்க ஆரம்பித்தார்கள். இதனால், மீண்டும் அப்போர் மிக்க கடுமையாக மாற, நபிநாயகமும் ஒரு பள்ளத்துள் வீழ்ந்து எதிரிகளெறிந்த கவண் கல்லால் இரண்டொரு தந்தங்களையும் இழந்துவிட்டார்; அதுசமயம் முஹம்மது இறந்துவிட்டாரென்ற ஒரு வதந்தியையும் எதிரிகள் கிளப்பிவிட்டார்கள். ஆகவே, முஸ்லிம்களெல்லோரும் அவ்வெதிரிகளால் செவ்வனே தாக்குண்டு அல்லோலகல்லோலப் பட்டு ஓடினார்கள். பிறகு நபிகள் நாயகமும் ஒரு சில முஸ்லிம்களும் சேர்ந்து எதிரிகளைத் தாக்கிக்கொண்டே ஆங்கிருந்த ஒரு குன்றின் மீது ஏறிக்கொண்டார்கள். பின்பு எதிரிகளால் ஒன்றும் செய்ய இயலாது வாளா திரும்பிவிட்டார்கள். எனவே, இந்த உஹத் யுத்தத்தில் முஸ்லிம்கள் ஜயித்தார்களென்று கூறுவதற்கில்லை. எனினும், குறைஷிகளும் வெற்றி மாலை சூடி முஸ்லிம்களைத் தொலைத்துவிட முடியவில்லை. ஆதலின், ஆங்குச் சம்பூரண வெற்றிபெற முடியாது திரும்பிய குறைஷியர் மக்காவிற்குச் சென்ற பின்னரும் தங்கள் குரோதபுத்தியை விட்டனரில்லை. ஆகவே, அவர்கள் அரபுநாடுமுழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லா அராபிக் கூட்டத்தினரையும் முஸ்லிம்களுக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டார்கள். மதீனாவிலிருந்த யூதர்களையும் தூண்டிவிட்டனர்; முஸ்லிம்களுக்குள்ளும் ஒரு சிலரைக் கிளப்பிவிட்டு நயவஞ்சகராக நடக்குமாறு செய்துவிட்டனர். இவ்வாறெல்லாம் செய்துகொண்டு, குறைஷிகளும் ஏனைக்கூட்டத்தினர்களும் 24,000 படைகள்வரை திரட்டிக்கொண்டு ஹிஜ்ரி 5-ல் மதீனாவிற்கே சென்று அந்நகரைச் சூழ்ந்து முற்றுகை போட்டுவிட்டார்கள். அந்நகரத்துக்குள்ளே யூதர்களும், முஸ்லிம் நயவஞ்சகர்களும் எந்தநேரத்திலும் எத்தகைய துரோகமும் செய்யக்கூடிய நிலையிலிருந்தும், நபிபெருமான் தமக்குக் கிடைத்த 3,000 வீரர்களுடனே சென்று மதீனாவைச் சூழ ஓர் அகழ்வெட்டிக்கொண்டு யுத்தத்திற்குச் சன்னத்தராய் நின்றார். எனவே, எதிரிகள் அவ்வகழைத் தாண்டமுடியாது மூன்று வாரகாலம் வரை வெளியில் நின்றே முற்றுகையை நடத்தினார்கள். பிறகு ஒரு சில வீரர்கள் தங்கள் புரவிகளின் உதவிகொண்டு அவ்வகழைத் தாண்டியும் தோல்வியே யுற்றார்கள். மீண்டும் சிலதினம்வரையில் அம்முற்றுகையை

அகழுக்கு வெளியிலிருந்து நடத்திப் பார்த்தார்கள். இறுதியில் இறைவன் சோதனையாலேற்பட்ட கடும் புயலாலும் மழையாலும் குளிராலும் அந்த 'நேசப்படையினர்' 24 ஆயிரம் பேர்களும் தங்கள் ஆயுதங்களையும் பிற தட்டுமுட்டுச் சாமான்களையும் எறிந்துவிட்டு மக்காவை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். எனவே, மேற்கூறிய நேசப்படையார் நிகழ்த்திவந்த அகழ்யுத்தமும் இவ்வாறு அக் குறைஷியருக்குச் சற்றும் பயனளிக்காமலே போய்விட்டது. அதன் பின் தக்கசமயத்தில் நபிநாயகத்துடன் செய்துகொடுத்திருந்த உடன்படிக்கைக்கு மாறாக மதீனாவிலிருந்த யூதர்கள் இந்த அகழ் யுத்தத்தின் போது எதிரிகளுக்குச் சார்பாக நடந்துகொண்டதன் நிமித்தம் பலர் அந்நகரத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள்; ஒரு சில குறும்பர்கள் மட்டும் யுத்தகால முறைப்படி சிரச்சேதம் செய்யப் பட்டார்கள்.

பிறகு ஹி. 6-ல் நபிபெருமான் 1400 தோழர்களுடன் மக்காவை நோக்கி ஹஜ்ஜூ செய்யப் புறப்பட்டார்கள். ஆனால், மக்காவிற்கருகிலுள்ள ஹூதைபிய்யா என்னுமிடத்தில் அந்தக் குறைஷியர் எதிர்கொண்டு வந்து அம்முஸ்லிம்களைத் தடுத்துவிட்டார்கள். முஸ்லிம் வீரர்கள் யுத்தத்திற்குச் சித்தமாயிருந்தும், நபிகள் நாயகத்தின் கருத்திற்கிணங்கக் குறைஷியரின் சமாதானத்திற்குக் கட்டுப்பட்டு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு திரும்பினார்கள். இவ்வாண்டு திரும்பிச் சென்று அடுத்த ஆண்டிலேதான் ஹஜ்ஜூக்கு வரலாமென்பது ஒரு நிபந்தனை. மக்காவாசி இஸ்லாத்தில் சேர்ந்து மதீனாவிற்கு ஓடிவிட்டால் அன்னவரை முஹம்மதுநபி திருப்பியனுப்பிவிடவேண்டும்; ஆனால், ஒரு முஸ்லிம் காபிராய்ப்போய் மக்காவிற்கு ஓடிவந்துவிட்டால் அவரைக் குறைஷிகள் திருப்பியனுப்பார் என்பது மற்றொரு நிபந்தனை. இருகட்சியாரும் தத்தமக்குரிய வேறு வர்க்கத்தினருடனே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளலாம். எனவே, குறைஷிகளின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது; அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர் தாக்குவது தகாது என்பது இன்னமொரு நிபந்தனையாகும். ஆனால், இந்த உடன்படிக்கையின் இறுதி நிபந்தனைக்கு மாறாகக் குறைஷியரின் நேசக் கூட்டத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக் கூட்டத்தினரை அகாரணமாகத் தாக்கிக் கஃபாவென்னும் தேவாலயத்திற்குள்ளும் துரத்திச் சென்று சிலரைக் கொலையும் புரிந்துவிட்டார்கள்; அதுசமயம் குறைஷிகளும் தங்கள் நண்பர்களுடனே சேர்ந்து முஸ்லிம்களின் நேயர்களைத் தாக்கினார்கள். இதற்குச் சமாதானம் யாதெனக் கேட்டனுப்பியபொழுது, அந்த மக்கா

வாசிகள் ஒன்றும் திருப்திகரமான சமாதானம் கூறாது, முஸ்லிம்களை யுத்தத்துக் கழைத்தனர். எனவே, ஹி. 8-ல் நபிபெருமான் 10,000 முஸ்லிம் வீரர்களுடனே புறப்பட்டுச் சென்று அம்மக்கமாநகரைக் கைப்பற்றிக் கொண்டார். குறைஷிகள் எதிர்த்து நிற்கவுமில்லை; வேறொன்றும் செய்து கொள்ளவும் முடியவில்லை. எல்லோருஞ் சிரங்குனிந்து வாளா இருந்துவிட்டார்கள். ஆதலின், முஹம்மது நபி ஒருதுளி இரத்தமும் சிந்தாது அந்நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டதோடு, அந்த ஜன்மப் பகைவர்க ளனைவர்களையும் அடியோடு மன்னித்தும் விட்டார்கள். இதற்கிடையில் அரபுதேயத்தின் பற்பல பகுதிகளும் சுயமே இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்தன. ஒரு சில முரடர்கள் மட்டும் சிறிது எதிர்ப்பிற்குப் பின்னே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். ஹி. 9-ல் ஹஜ்ஜுக்குச் சென்ற முஸ்லிம்களால் நபிபெருமானின் அரசவிளம்பரம் ஒன்று அந்நகரின்கண் வாசிக்கப்பட்டது. அதன் மூலம், இனி விக்கிரஹ ஆராதனைக்காரர்கள் கஃபாவுக்கு ஹஜ்ஜு செய்ய அனுமதி யளிக்கப்படார்கள் என்றும், அதற்குமுன் பண்டைப் பாமரமக்கள் செய்து வந்ததே போல் இனி ஒருவரும் நிர்வாணத்துடனே அவ்வாலயத்தைச் சுற்றி வலம்வரக் கூடாதென்றும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பின்னர் ஹி. 9-10-ல் அரபுதேயத்தின் பற்பல பகுதிகளிலிருந்தெல்லாம் தூதுக் கூட்டங்கள் அடுக்கடுக்காக வந்து தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்தன. பிறகு ஹி. 10-ல் நபிபெருமான் 1,50,000 சிஷ்யர்களுடனே புறப்பட்டு மக்காவிற்குச் சென்று தம்முடைய இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டார். அது சமயம் அருகிலுள்ள அரபாத்மைதானத்தில் நின்று ஓர் இனிய இறுதிப் பிரசங்கமும் செய்து முடித்தார். அதில், ஏகதெய்வக் கொள்கையும், ஏகசகோதரக் கொள்கையும், ஸ்திரீகளின் உயர்வும், அடிமைகளின் மேன்மையும், அண்டை அயலாருடனும் பந்துமித்திரர்களுடனும் நடந்துகொள்ள வேண்டிய முறையும் அதிகம் வற்புறுத்திக் கூறப்பட்டன. கொலை, களவு, காமம், கள், சூது, அனாதைக் குழந்தைகளின் பொருளை அபகரித்தல் ஆதியவற்றைப் பற்றியும் அழகாக வற்புறுத்தப்பட்டது. இறுதியாக, ஹி. 11 ரபீஉல் அவ்வல் மாதம் முதற்றேதியன்று (கி. பி. 632) ஆண்டவனின் திருவடி நீழலை அடைந்துவிட்டார்.

முஹம்மது நபி இஸ்லாத்தைப் பரப்புவதற்காக எப்பொழுதுமே வாளின் துணையைக் கோரியதில்லை. ஆனாலும், எதிரிகள் இவரையும் இவர் போதித்துவந்த இஸ்லாத்தையும் இங்கில்லாது செய்துவிடுவான்வேண்டி எதிர்த்து வந்தபோதுதான் தற்காப்பினிமித்தமாகவே

யுத்தத்தில் இறங்கியிருக்கின்றார். ஒருபோதும் ஒருவரையும் இப் பெரியார் பலவந்தம்செய்து இஸ்லாத்தில் சேர்க்கவில்லை. இவர் தமது 25-ம் பிராயம்வரை மகா பரிசுத்தத்துடனே இருந்து, பிறகு தம்மினும் 15 பிராயம் முதிர்ந்திருந்த ஒரு விதவையையே முதன் முதலாக மணந்து கொண்டு முழுத்திருப்தியுடனே தமது 50-வது வயதுவரை சுகமாகக் காலங்கழித்துவந்தார். பிறகு 60-வது பிராயத்திற்குள் வேறு பல விதவைகளையும் விவாகவிலக்குப் பெற்றவர்களையும் மண முடித்துக்கொண்டார்; அபூபக்ரின் குமாரி ஆயிஷா ஒருவரே கன்னி மனைவியாவார். இவையெல்லாம் சித்தவிகாரத்தால் நிகழ்த்தப்பட்ட விவாகங்களல்ல; அகதியானவர்களை ஆதரிப்பான் வேண்டியும், ராஜ்ய தந்திர நிபுணத்துவத்தைக் கொண்டுமே செய்துகொள்ளப்பட்ட திருமணங்களாகும். இப்பெரியாரின் வாய்மையைப் பற்றியும், சீலத்தைப் பற்றியும், அகப்புறப் பரிசுத்தத்தைப் பற்றியும் இவரை நேரில் கண்டவர்கள் அதிகம் கூறியிருக்கின்றார்கள்.

இஸ்லாம்

முஹம்மது நபியால் நிலை நிறுத்தப்பட்ட மதத்திற்கு **'இஸ்லாம்'** என்பதே சரியான பெயராகும். இதனைப் பின் பற்றுவோர் **'முஸ்லிம்கள்'** என்றே அழைக்கப்படுவர். (முஹம்மதியமார்க்கம், முஹம்மதியர்கள் என்னும் பிரயோகங்கள் தவறானவை.) ஏக தெய்வக் கொள்கையும் ஏக சகோதரக் கொள்கையுமே இம்மார்க்கத்தின் அடிப்படையாகும். எனவே, இந்த இஸ்லாம் முஹம்மத் நபியால் உற்பத்தி செய்யப்பட்டதன்று. மனிதன் உற்பத்தியான காலம் முதற்கொண்டே இத்தகைய இஸ்லாம் இறைவனால் இவ்வுலக மன்பதைகளுக் கெல்லாம் அடிக்கடி அறிவுறுத்தப்பட்டு வந்திருக்கிறதென்பதுதான் இம்மார்க்க வேதம் (குர்ஆன்) கூறியிருப்பது. எனவே, எல்லாத் தேயங்களுக்கும், எல்லா மக்களுக்கும், அவ்வக்காலத்திலே ஆண்டவனுடைய அடியார்களான தூதர்கள் (நபிமார்கள்) அனுப்பப்பட்டே வந்திருக்கின்றார்கள் என்பதும் ஒரு முக்கியக்கொள்கையாகும். ஆதலின், எல்லாத்தேயத்தின் தீர்க்கதரிசிகளையும், அவர்களின் வேதங்களையும் உண்மையென்றே முஸ்லிம்கள் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். மனிதன் இறந்தபின் மறு ஜன்மம் இல்லையென்பது இவர்களின் நம்பிக்கை. ஆனால், உலக இறுதி நாளன்று இறைவனால் இம்மன்பதைகளெல்லாரும் நியாய விசாரணை புரியப்பட்டு, அவரவருடைய இகலோக நன்மை தீமைகளுக்குத் தக்கவாறே பலாபலன்களைப் பெற்றுக் கொள்வார்களென்பது இம்மார்க்கம் கூறியிருக்கும் இறுதி வாழ்க்கையாகும். மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை இவ்விகலோக வாழ்க்கையின்

தொடர்பேயென்றும், அஃது இத்தரணியின் வாழ்க்கையினது பிரதி பிம்பமேயென்றும், அந்தச் சூக்குமலோகத்திலுள்ள ஆன்ம முன்னேற்றமானது முடிவற்றதென்றும் இவர்கள் வேதம் கூறுகின்றது. அவ்வான்ம உலக வாழ்க்கையின் நரகமென்பது ஆன்மாக்களின் இகலோகப் பாபத்தை ஒழித்தற்குரிய பிராயச் சித்தமாகவே இருக்கிறதல்லாது ஆண்டகையின் க்ஷாத்திரமாக அமைந்ததில்லை. எனவே, அவரவரின் பாபத்திற்குரிய தண்டனை கழிந்து ஆன்ம பரிசுத்தம் அடையப் பெற்றவுடனே எல்லாப் பரிசுத்த ஆன்மாக்களும் மேன்மேலும் முடிவில்லாத சுகானந்த அபிவிருத்தியை அடைந்து கொண்டே செல்வதுதான் முஸ்லிம்களின் சுவர்க்கானந்தமாயிருக்கிறது. இத்தகைய நம்பிக்கைகளுக்குரிய அனுஷ்டானங்கள் ஐவகைப்படும். 1. ஏக தெய்வத்திற்கு இணையில்லை யென்று கொண்டு, அவ்வொருவனையே அல்லும் பகலும் அனவரதமும் இடைவிடாது வணங்கிவருதல் வேண்டும்; ஏக தெய்வத்திற்கு இணையாகவேனும், உறவாகவேனும், பிரதிநிதியாகவேனும், அவதாரமாகவேனும் எவரும் இத்தரணியில் காணப்படுவதில்லை. 2. ஆதலின், அவ்வொருவனையே தியானித்துத் தினமும் ஐந்து வேளைத் தொழுகைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்; வேறெந்த இறந்தவரை நாடியோ, உயிருள்ளவர்களைக் கோரியோ, அல்லது வேறு பிராணிகளையேனும் ஜடப்பொருள்களையேனும் முன்னிட்டோ முஸ்லிம்கள் தொழுது பிரார்த்தனை புரிய மாட்டார்கள். 3. சுமார் 52 ரூபாய்க்கு மேற்பட்ட முதலையுடைய ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஆண்டுக்கொருமுறை 100-க்கு $2\frac{1}{2}$ விகிதம் ஏழைவரி கொடுத்துதவ வேண்டும்; இதனால் யாசகர்களைப் பெருக்கிவருவதென்பது கருத்தன்று. 4. ஆண்டுக்கொருமுறை ரம்ஜான் மாதத்தில் அம்மாத முழுதும் முஸ்லிம் ஆண் பெண் வயோதிகர் சிறுவர் அனைவரும் நோன்பு நோற்றல்வேண்டும்; வைகறைக்குப் பின் சூரியாஸ்தமனம்வரை ஒன்றும் புசிக்காமலும் தாகத்துக்குத் தண்ணீர் அருந்தாமலும் மனைவியரை நெருங்காமலும் இருப்பதே இந்நோன்பின் முக்கிய லக்ஷணமாம். 5. போதியமுதலும், துணையும், பலமும் உள்ளவர்கள் தங்கள் ஆயுளிலே ஒருமுறை மக்காவிற்குச் சென்று ஆங்குள்ள கஃபாவைத் தரிசித்து ஹஜ்ஜு செய்து வரவேண்டும்; இந்தக் கஃபாவென்பது உள்ளே ஒன்றுமில்லாது நாற்புறச் சுவரையுடைய ஒரு வெறுங்கூடமேயாகும்; இதற்குள்ளே விக்கிரஹமேனும், சித்திரமேனும், அல்லது வேறெந்த உருவத்தோற்ற அடையாளமேனும் வைக்கப்படவில்லை. பண்டைக்கால முதலே ஏகேசுவரக்கொள்கைக்காக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயமென்று இது

கருதப்படுகிறது. இப்ராஹீம் நபியும் (ஆபிரகாம் தீர்க்கதரிசி) இஸ்மாயீல் நபியும் (இஸ்மவேல் தீர்க்கதரிசி) இவ்வாலயத்தைப் பழுதுபார்த்து ஏகேசுவரக் கொள்கையை நன்கு நிலைநாட்டிச் சென்றார்கள். பிறகு விக்கிரஹங்கள் 360 வரை காலக்கிரமத்திலே இதற்குள் புகுந்துவிட்டன. எனவே, அவற்றையெல்லாம் அப்புறப் படுத்தி ஏகேசுவரக் கொள்கையை இனியில்லாவண்ணம் இறுதியாக நிலைநிறுத்திச் சென்றவர் முஹம்மது நபியேயாவார். இவருடைய சமாதி ஸ்தலங்கூட மக்கத்தி லில்லை. இவர் இறந்தபோது மதீனாவி லேயே ஆயிஷாவின் இல்லத்தினுள்ளே புதைக்கப்பட்டிருக்கிறார். எனவே, மக்காவிற்கு ஹஜ்ஜுக்குச் செல்லும் முஸ்லிம் யாத்திரீகர் கள் பெரும்பாலும் மதீனாவிற்கும் சென்று இவரது கோரியையும் மரியாதையாகத் தரிசனம் செய்துவருகிறார்கள்.

முஸ்லிம்களுக்கு வியபிசாரம், மதுபானம், சூதுபொருதல், வட்டி வாங்கல் கொடுக்கல் ஆகிய பாதகங்களெல்லாம் அடியோடு விலக்கப்பட்டிருக்கின்றன.

மலர்வனம்

ஒரு கவிமலர்

பி. ஸ்ரீ. ஆசார்யா

ஒரு காலத்தில் பொருட் செல்வத்தோடு செவிச்செல்வமும் படைத்த பிரபு சிகாமணி ஒருவன் இருந்தான். அவனுள்ளம் எப்பொழுதும் அழகுக் கலைகளையும் அறிவுக் கலைகளையும் தழுவி வளர்ந்தது. பண்டைத் தமிழகத்தில் தமிழரது பெருவாழ்விலே பூத்துச் செழித்த இலக்கிய நறுமலர்கள், அவனது வாழ்க்கையினை நீங்காது சூழ்ந்து பரிமளித்துக் கொண்டிருந்தன. அவனது வள்ளன்மை உத்தமக் கவிஞர்க்கும் கலைஞர்க்கும் ஓர் ஊன்றுகோலாக உதவியது.

சில ஆண்டுகளாக, அப்பிரபு புதியதொரு நல்ல பாட்டைக் கேட்டு இன்புற வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தான். ஆனால் பாட்டு, பெரும்பொருளாலும் ஆக்கப்படுவதன்று என்பதை அவன் நன்கறிவான். நற்கவிதைக்கு அலந்துபோன அவனுள்ளத்தில் ஒரு புதிய ஆலோசனை பிறந்தது. அதற்கிணங்க, அவன் தன் ஆஸ்தான மண்டபத்தில் ஒரு பொற்கிழி தூக்கி, அதனைத் தன் உள்ளத்திற்கு இன்னமுதமாகும் ஓர் அருங்கவி பாடும் புலவருக்கு அளிப்பதாக நாடெங்கும் அறிவித்தான்.

பிரபு இரஸிகனாக இருந்ததால் அப்பொற்கிழியை அழகு பெற அமைந்துள்ள இலட்சுமி சிலையொன்றின் கரத்திலே திகழ்வித்தான். இலட்சுமிதேவி உயிரோவியமாகச் சித்திரிக்கப் பெற்றிருந்தாள். பொய்கையில் புதிதாக மலர்ந்ததொரு செந்தாமரை மலரில் செம்மாந்து வீற்றிருப்பதாக அத்தேவி அமைக்கப் பெற்றிருந்தாள். சிறிது தூரத்தேயிருந்து நோக்குவோர், மண்டபத்தின் ஒரு பகுதியில் பொய்கை குளிர்ந்த நீரோடு அலை யெறிந்து கொண்டிருப்பதாகவும், அந்நீர்ப்பரப்பிலே ஓர் இனிய செந்தாமரை தளைய விழ்ந்து மலர்ந்திருப்பதாகவும் அம்மலரின் மீது அழகுத் தெய்வத்தின் ஆனந்த ரூபம் அரசிருந்து பொற்கிழியும் கையுமாக எதிர் நோக்கி நகை புரிவதாகவும் கருதி மயங்குவாராயினர்.

பொன்னரசியின் கரத்தினின்றும் பொற்கிழியைப் பெற வேண்டும் என்ற பேரவா பிடர் பிடித்துந்த, எண்ணிலாத புலவர்கள்

பிரபுவின் சபாமண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். அவன் அவர்களை உபசரித்து, அவர்கள் பாடும் பாடல்களை ஆவலோடு கேட்பான். ஆனால் அப்பாடல்களில் ஒன்றும் அவனுள்ளத்திற்கு ஆறுதல் அளிக்க வில்லை. எல்லாம் வெறும் சொல்லடுக்குகள்! மோனைகள்! பிராசங்கள்! இச்சொற் குப்பைகளிலே உண்மை மணி ஒன்றேனும் காணப் பெறவில்லையேயென்று பிரபு பெருமூச்செறிவது வழக்கம். எனவே வந்த புலவர்களெல்லாம் விதியை நொந்துகொண்டு வீடு செல்வாராயினர்.

இங்ஙனம் இருக்கையில், ஒருநாள் ஆண்டினும் அறிவினும் ஒருங்கே பழுத்த பெருங்கிழவி—தமிழ்ச் செல்வி—கலைத்தாய்—ஔவைப்பிராட்டி, அச்சபைக்கண் திடீரென்று தோன்றினாள். "இக்கிழவி எவ்வாறு பொற்கிழி பெறுதல் கூடும்?" என்று சபையிலிருந்தவரில் பலரும் இரங்கித் தம்முள் உரையாடலுற்றார். ஆனால் பிரபுவோ உருவினைக் கண்டு இகழாது, அந்நரை மூதாட்டியை விரைந்தேற்று உபசரித்து, "வந்த காரியம் என்ன?" என்று அன்போடு வினவினான்.

அப்பொழுது ஔவை, பிரபுவின் அகக்கருத்தினை நன்குணர்ந்து கொண்டு, பொன்னரசியையும் பொற்கிழியையும் நோக்கி ஒரு வெண்பாவை உருக்கமான குரலில் பாடினாள். அது வருமாறு:—

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு"

ஔவையெனும் அருட்கொடியில் பூத்த இக்கவிமலரின் அழகும் ஒளியும் மணமும் பிரபுவின் உள்ளத்தையும் அங்குக் குழுமியிருந்த புலவர்களின் உள்ளத்தையும் ஒருங்கே வசீகரித்தன. பிரபு மனமுவந்து பொற்கிழியை ஔவையாருக்கே அளித்தான்.

அன்பர்களே! இக்கவிமலரின் மாட்சி உங்களுக்கு இனிது புலனாகலாம். நூற்றில் ஒருவரே அறிஞர் பேசும் சபைகளில் சொல்லுதற்குரியவர். அவ்வாறு சொல்பவருள், புலமைப் பெருக்கோடு விஷயங்களை உய்த்துணர்வோர் ஆயிரத்தொருவரே. அப்புலவருள்ளும் பதினாயிரத்தொருவரே வார்த்தையின் நயம் தெரிந்த கவிப்புலவர்!

இவ்வண்ணம் சில அரிய உண்மைகளை வெளியிட்டு வரும் ஔவை, பிரபுவை விளித்துப் பேசாது, 'பூத்தமலர்த் தண்டாமரைத் திருவே!' என்று இலட்சுமிதேவியை விளித்துப் பேசத்தொடங்கி

முடிவாகத் தான் கண்டுகொண்ட உண்மையினை வெளியிடப் புகுந்து, 'தாதா கோடிக்கொருவர்' என்று இரசிகமணியான பிரபுவின் பெருவள்ளன்மையினைச் சிறப்பித்துப் பேசுகிறாள். இவ்வாறு தான் வெளியிட்ட உண்மைக்குப் பொன்னரசியாகிய இலட்சுமியையே சாட்சியாக்கி, 'உண்டாயின் உண்டேன்றறு' என்று பொற்கிழியை நோக்கிக் குழந்தையுள்ளத்தோடு கூறி முடிக்கிறாள். இப்பாட்டு ஔவையாரின் அழகிய மனோதர்மத்தை அப்படியே இன்னோசை பெற்று வரும் செஞ்சொற்களால் சித்திரித்துக் காட்டுவதாகும்.

வாசகர்களுக்கு இக்கவிமலரை ஒரு கையுறையாக வழங்குகிறோம்.


சாஸ்திரம்

குழலற்ற கிரந்திகள்—எண்டோக்ரைன் அங்கங்கள்

என். ஆர். ரகுநாதாச்சாரி

மனித சரீரத்தினுள் அவயவங்கள் பல உள. ஒவ்வோர் அவயவமும் தனக்குரிய ஏதோ ஒன்று அல்லது இரண்டு முக்கியமான கிரியைகளைச் செய்து கொண்டு வருகிறது. எல்லா அவயவங்களும் சேர்ந்து சரீரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, தங்களுடைய கிரியைகளைச் செய்து, ஒன்றுக்கொன்று மாறுபாடு இல்லாமல் பொது நன்மைக்காக ஒத்து உழைக்கின்றன.

மனித சரீரத்தினுள், எலும்பு, சதை, ஆகாரக்குழாய், அதைச் சார்ந்த கல் ஈரல் (*Liver*), பாங்கிரியஸ் (*Pancreas*), ஹ்ருதயம், ரத்தக் குழாய்கள், ச்வாஸப் பைகள், மூத்திர கோசங்கள், மூளை, மற்றப்பெரிய சிறிய நரம்புகள், கண், காது, மூக்கு, நாக்கு, மேல் தோல் முதலிய இந்திரியங்கள் இருக்கின்றனவென்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமே. மேற்கூறிய அவயவங்களுள் கல் ஈரலும் (*Liver*) பாங்க்ரியாஸும் (*Pancreas*) 'கிரந்திகள்' (*Glands*) என்னும் இனத்தைச் சார்ந்தன. ரத்தத்திலிருந்து சில வஸ்துக்களைப் பிரித்து எடுத்துக்கொண்டு, அவைகளின் ஆதரவினால் சரீரத்திற்கு உபயோகமான வேறொரு வஸ்துவை உண்டாக்கும் சக்தியை யுடைய அவயவத்திற்குக் 'கிரந்தி' என்பது பெயர். மனித சரீரத்தில் இருவகைக் கிரந்தி உள; அவையாவன: (1) தான் உண்



குழலற்ற கிரந்திகள்.

1. பிருக்கோபரி. 2. தைராய்ட். 3. தைமஸ். 4. பிட்யூடரி.

டாக்கும் வஸ்துவை ஒரு குழாயின் வழியே மற்றோர் அவயவத்திற்குச் செலுத்தி, அங்கே ஏதோ ஓர் உபயோகமான வேலையைச் செய்வது ஒரு வகை. கல் ஈரல், பாங்க்ரியாஸ், எச்சிலை உண்டாக்கும் உமிழ்நீர்க் கிரந்திகள் (*Salivary Glands*), வயிற்றிலும் குடலிலும் இருக்கும் சிறிய கிரந்திகள் என்பன இவ்வகையைச் சார்ந்தவை. (2) தாம் உண்டாக்கும் புதிய வஸ்துவைத் தனிக்குழாயில்லாமல், நேராக ரத்தத்திலேயே செலுத்தும் கிரந்திகள் மற்றொருவகை. பிருக்கோபரி (*Adrenal or Suprarenal*), தைராய்ட் (*Thyroid*), தைமஸ் (*Thymus*), பிட்யூடரி (*Pituitary*) என்னும் கிரந்திகள் இவ்வகை. சரீரத்தில் இவைகள் அமைந்திருக்கும் ஸ்தானங்கள் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது வகுப்பைச் சார்ந்த குழாயில்லாத கிரந்திகளைப் (*Ductless Glands*) பற்றி வெகுகாலம்வரை நமக்கு யாதொன்றும் தெரியாமலிருந்தது. இப்பொழுது தான், சுமார் 20, 25 வருஷமாக, இவைகளைப் பற்றிய குணாதிசயங்கள் மேன்மேலும் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழாயில்லாத கிரந்திகள் ஜீவன் சரீரத்திலிருப்பதற்கு இன்றியமையாதவை என்பதும், இவைகளுக்கு ஏதாகிலும் கேடு நேர்ந்தால் சரீரத்தின் தோற்றமே மாறிவிடுமென்பதும் இப்பொழுது சந்தேகமறத் தெரிந்திருக்கின்றன. தேக ஆரோக்கியம், தேக வலிமை, இளமை, முதுமை, சாந்தம், கோபம், நெட்டை, குட்டை, ஆண்மை, நல்லொழுக்கம், தர்ம சிந்தனை, துரெண்ணம், துர் நடவடிக்கை முதலிய குணங்கள் பெரும்பாலும் பாரம்பரியமாக இருந்த போதிலும், குழாயில்லாத கிரந்திகளால் மிகவும் ஆளப்பட்டு வருகின்றன. மூளையின் அடிப்பாகத்தில் இருக்கும் சிறிய பிட்யூடரி (*Pituitary*) கிரந்தியை எடுத்துவிட்டால் வெகு சீக்கிரத்தில் மரணம் ஸம்பவிக்கும். இந்தக் கிரந்திக்கு ஏதாவது வியாதி சிறு வயதில் நேர்ந்தால், சரீரத்தில் உள்ள எலும்புகள் நீண்டும் பெருத்தும் ஒரு விதமான ராக்ஷஸ உருவம் உண்டாகும். இந்தக் கிரந்தியினுள் உற்பத்தியாகும் ரஸமானது ரத்தத்தின் வழியே தேக முழுவதும் வியாபித்து அங்கங்கு அவயவங்கள் சரிவர வேலை செய்யும்படி செய்கின்றது; பிரஸவ காலத்தில், சிசு சுலபமாய் வெளிவருமாறும், நஞ்சுக் கொடி விழுந்த பின் ரத்தச் சேதம் இல்லாதிருக்குமாறும், சிசுவின் உணவிற்காக ஸ்தனங்களில் பால் உண்டாகுமாறும் செய்கிறது. பிட்யூடரிக்குக் கெடுதி ஏற்பட்டால், ஜனனேந்திரியங்கள் க்ஷீண தசையை அடையும்.

தைராய்ட் (*Thyroid*) கிரந்திகள், நெஞ்சில் சுவாஸக்குழாய்க்கு முன்புறத்தில் இருக்கின்றன. இந்தக் கிரந்திகள் உண்டாக்கும்

ரஸத்தில் ஐயொடின் (*Iodine*) என்னும் வஸ்துவின் சம்பந்தம் இருக்கிறது. இதன் ரஸமானது சரீர மனேவிருத்திக்குக் காரண மாகும். தைராய்ட் எக்காரணத்தாலாவது குழந்தைப் பருவத்தில் சரிவர வளராவிட்டால், சரீரம், புத்தி, மற்ற எல்லாம் மழுங்கு கின்றன. வயது முதிர்ந்த காலத்திலும், குழந்தைப் பருவத்தில் போலவே சரீரமும் நடவடிக்கைகளும் இருக்கும். இந்த வியாதிக்கு க்ரெடினிஸ்ம் (*Cretinism*) என்று பெயர். இந்த வியாதியைப் போக்கத் தைராய்ட் சத்தடங்கிய மாத்திரைகள் உபயோகிக்கப் படுகின்றன. வாலிபம் தாண்டின பிறகு தைராய்டுக்குக் கெடுதி நேர்ந்தால், தேகம் பருத்து, மூடத்தனம் உண்டாகி, மேல் தோல் வறண்டு, கால் கை முகம் விகாரமாகக் காணப்படும். பிருக்கோபரி கிரந்திகள் வயிற்றின் பின்பாகத்தில் மூத்திர கோசத்திற்கு (*Kidneys*) மேலே இருக்கின்றன. இவைகளைச் சரீரத்திலிருந்து எடுத்து விட்டால் சிறிது காலத்தில் மரணம் நேரிடும். இவைகள் எடுபட்ட கொஞ்ச நேரத்தில், அதிகப் பலஹீனமும், பெரு மூச்சு, மூர்ச்சை முதலியவையும் ஏற்படும். இவைகளுக்கு வியாதி நேர்ந்தால் சரீரம் ஒரு விதமான தாம்பிரத்தை (*Bronzing*) உடையதாயிருக்கும். இந்தக் கிரந்திகளில் ஆட்ரீனலின் (*Adrenalin*) என்னும் ஒருவகை ரஸம் உண்டாகித் தேக மெங்கும் பரவுகிறது. இந்த ரஸம் தனியாக எடுக்கப்பட்டு வைத்தியர்களால் கையாளப்படுகிறது. இந்த ரஸத்தை இஞ்செக்ஷன் (*Injection*) செய்தால் ஹ்ருதயத் துடிப்பு மெதுவாகும்; ரத்தப்போக்கு அதிகமாயிருப்பது குறையும். கோபத்திற்கும், பயத்திற்கும் இக்கிரந்திகளே காரணம்.

தைமஸ் (*Thymus*) என்னும் கிரந்தி ஹ்ருதயத்தின் மேல் பாகத்தில் உள்ள ஓர் அங்கமாகும். இது குழந்தைப் பருவத்தில் நன்றாக வளர்ந்திருந்து, யௌவனப் பருவமடையுங் காலத்தில் வளர்ச்சி குறைகிறது. இது க்ஷீணித்த பிறகு ஜனனேந்திரியங்கள் பருவமடைகின்றன.

வைரமும் அதன் குணாதிசயங்களும்

எச். நாராயண ராவ்—பி. என். அப்புஸ்வாமி ஐயர்

வைரம் என்பது என்ன? அதன் குணங்கள் யாவை? அது விளைவது எப்படி? எங்கெல்லாம் அது கிடைக்கின்றது? என்பனவற்றைப் பற்றிச் சிறிது கூறலாமென்று எண்ணுகிறேன். ஆனால், மணியரசு என்று சொல்லத் தகும் வைரத்தைப் பற்றிப் பேசுமுன், இரத்தினங்கள் எனப்படுவனவற்றின் குணாதிசயங்களைப் பற்றிப் பொதுவாகச் சில விஷயங்களைக் குறிப்பிடுவது அவசியம்.

இப்பூமியிலே அநேகவஸ்துக்கள் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகின்றன அல்லவா? அவைகளுக்கும் இரத்தினங்களுக்கும் முக்கியமான அமிசங்களில் ஒன்றிலாயினும் வித்தியாசம் கிடையாது. மற்றக் கனிப்பொருள்களிலெல்லாம் எந்த எந்த இரசாயன மூலங்கள் எந்த எந்த விதிகளை அனுசரித்து ஒன்றோடொன்று சேர்ந்து காணப்படுகின்றனவோ, அதே மூலப்பொருள்கள் அதே விதிகளை அனுசரித்து இரத்தினங்களிலும் சேர்ந்து காணப்படுகின்றன. இரத்தினங்களுக்கெல்லாம் அத்யற்புதமான சில விசேஷ குணங்கள் பொருந்தியிருக்கின்றன அல்லவா? ஆதலால், பற்பல அற்புதமான இரசாயனப் பொருள்களைக் கொண்டு, மிகவும் விந்தையான முறைகளில், அவைகளெல்லாம் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஒரு காலத்தில் பலர் எண்ணி வந்ததுண்டு. இரத்தினங்களிலெல்லாம் மிகவும் விலையுயர்ந்த அரிய வஸ்துக்கள் சிற்சிலவாவது இருக்கவேண்டுமென்று அப்பொழுது ஜனங்கள் உறுதியாய் நம்பியிருந்தனர். ஆனால் இது தவறு. உலகிலெங்கும் காணக்கிடக்கின்ற, விலைமதிப்பு அதிகமில்லாத, சர்வசாதாரணமான கரிப்பொருள், அலுமினியம், ஆக்ஸிஜென் என்பவைகளின் சேர்க்கையாலே தான் மிகவும் விலையுயர்ந்த இரத்தினங்கள் கூட அமைக்கப்பட்டிருக்கின்றன. இது பிற்காலத்தில் செய்த இரசாயனப் பரீக்ஷைகளிலிருந்து தெரிய வந்தது. தங்கம், வெள்ளி, பிளாடினம் ஆகியவை போன்ற விலையுயர்ந்த உலோகங்களுள் ஒன்றுகூட இரத்தினங்களிற் காணப்படுவதில்லை. அரிய மூலப்பொருள்கள் எனப் பெயரிடப்பட்டிருக்கும் சிற்சில விசேஷ இரசாயனப் பொருள்களையும் அவற்றில் அருகித்தான் காணக்கூடும்.

இரத்தினக் கற்களின் இரசாயன அமைப்பு முறைகள் பலவகையாக ஏற்பட்டுள்ளன. இம்முறைகள் கல்லுக்குக் கல் அதிகமாக வேறுபட்டுக் காணப்படுகின்றன. சிற்சில கற்களின் அமைப்பானது மிகவும் சாதாரணமானதா யிருக்கிறது. வேறு சில கற்கள் பல பொருள்களின் சேர்க்கையால் உண்டாகியனவாய்க் காணப்படுகின்றன. அவற்றின் அமைப்பானது மிகவும் சிக்கலானதாய்த்தான் இருக்கும். இரத்தினக் கற்கள் எல்லாவற்றினும் வைரத்தின் இரசாயன அமைப்புத்தான் மிகவும் சாதாரணமானது. இதுவும் வைரத்தின் சிறப்புக்களில் ஒன்று. சுத்தமான வெறும் கரிப்பொருள் ஒன்றைக் கொண்டே வைரமானது அமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, இரத்தினக் கற்களின் இரசாயன அமைப்பானது இரண்டு மூலங்களை யாவது கொண்டுள்ளதாகக் காணப்படும். பெரும்பான்மையான கற்களோவெனில், இரண்டல்ல, பல மூலங்களின் சேர்க்கையாலேயே அமைக்கப்பட்டனவாய்க் காணப்படும். விலையுயர்ந்த இரத்தினங்களில் ஒன்றாகிய மாணிக்கத்தில் இரண்டே இரண்டு மூலங்கள்தாம் உள்ளன. அவை அலுமினியமும் ஆக்ஸிஜெனுமாம். நீலநிறம் திகழும் இந்திரநீலமணியும் செவ்வொளி வீசும் மாணிக்கமும் இரசாயன ரசனையில் ஒன்றாய் முடியினும் நிறத்தில் எவ்வளவு வேறுபட்டுத் தோன்றுகின்றன ? ஓர் இரத்தினத்தைப் பற்றி நிச்சயமாக அஃது இன்னதுதான் என்று தீர்மானிக்கவேண்டுமாயின் இரசாயன முறையில் அதைப் பரிசோதிப்பதுதான் உறுதியான முறையாகும். சிற்சில வேளைகளில், அம்முறையினாலன்றி, வேறு எம் முறையாலும் அஃது இன்னதென்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்வது இயலாதிருப்பதும் உண்டு. ஆனால் இரசாயன முறையின்படி ஒரு பொருளைச் சோதித்துப் பரீக்ஷை செய்யும்போது அதைப் பொடிப்பதும், கரைப்பதும், அழிப்பதுமே அவசியமாகின்றன. ஆகையால் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக் கற்களை யொட்டிய மட்டில் இவ்விரசாயன முறையானது அதிகமாகக் கையாளத் தகுந்ததில்லை என்பது வெளிப்படை. ஆதலால் இவற்றைப் பரிசோதித்தறிந்து கொள்வதற்கு இவற்றின் பௌதிக குணங்களைத் தாம் முழுமுதல் ஆதாரங்களாகக் கொள்ளவேண்டியதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. இத்தகைய பௌதிக குணங்கள் யாவையெனில்,

(1) படிகவடிவம் அல்லது உருவம் (இதைக் கிரிஸ்டல் வடிவம் என்பர்),

(2) தகருமுறை அல்லது பிளக்குமுறை,

(3) காடினியம் அல்லது வடுப்படாத்தன்மை,

(4) தண்ணீர்த்தூக்கம் எனத்தகும் ஸ்பெசிபிக் கிராவிடி,

(5) காந்தி அல்லது சோபை,

(6) ஒளி கோடலும், ஒளி சிதறலும் (இதை ரிப்ராக்ஷன் என்பர்),

(7) ஒளி இருமுறைகோடல் (டபிள் ரிப்ராக்ஷன்),

(8) நிறம் அல்லது வர்ணம்,


(9) இருநிறங்காட்டல்,

(10) உஷ்ண மின்சார காந்த குணங்கள்

என்பனவாம்.


சோதிக்கப்படும் பொருள் இன்னதுதான் என்று நிருணயிப்பதற்கு இவற்றுள் ஒவ்வொன்றும் எவ்வாறு பிரயோஜனமாகின்றது என்பதை ஒருவாறு விளக்கும் பொருட்டு இவற்றைப் பற்றிய சில விஷயங்களை மட்டிலும் கீழே குறிப்பிடுகிறேன்.

(1) படிகவடிவம் :—இரசாயனச் சேர்க்கைப் பொருள்களிற் பெரும்பான்மையன கட்டிப்பொருள்களாகவே காணப்படுகின்றன. அதிலும், அவை இணைஇணையாகவுள்ள பட்டைகளையுடையனவாய்க் காணப்படுகின்றன. இரசாயனப் பொருள்களில் ஒரு சிறு பகுதியாகிய கனிப்பொருள்களும் அவ்வாறே தட்டையான முகங்களை யுடையனவாய்த்தான் பெரும்பாலும் இருக்கின்றன. அப்படி அமைந்துள்ள பொருள்களுக்குப் **படிகங்கள்** அல்லது **கிரிஸ்டல்கள்** என்று பெயர். வைரம், மாணிக்கம், இந்திரநீலம், மாகதம், கோமேதகம் என்னும் இவை எல்லாம் படிகங்களாகவே காணப்படுகின்றன. ஒவ்வொரு கனிப்பொருளுக்கும் பிரத்தியேகமான படிகவடிவம் ஒன்று உண்டு. அவ்வடிவம் அதற்கென்றே அமைந்தது; அதில் மட்டிலும் காணப்படுவது; அதற்கே அடையாளமாவது. அவ்வடிவத்தைத் துணையாகக் கொண்டே கனிப்பொருள் இன்னதுதானென்று ஒருவாறு கூறமுடியும். இவ்வாறு வெளிப்படையான தோற்றமாகிய படிக வடிவமானது மனம்போனபடியெல்லாம் அமைவதல்ல. பொருளிலே உள்ள அணுக்கள் எவ்வாறு அதனுள்ளே அமைந்து கிடக்கின்றன என்பதை வெளியிடும் தோற்றமே அது. அன்றியும், ஒரு பொருளின் காடினியத்துக்கும் பிளக்கு முறைக்கும் மற்றைய பௌதிக குணங்களுக்கும் பொருத்தமான படிகவடிவம் எதுவோ அதுதான் அப்பொருளுக்கு உரிய படிகவடிவம். அப்பொருளானது அதைத்தான் பெறும். மிகவும் ஒழுங்காக அமைந்




ஆறு பட்டைக் கட்டி.

துள்ள படிகவடிவத்தைப் பெற்றிருக்கும் பொருள்களில் வைரமும் ஒன்று. வைரப் படிகம் சாதாரணமாக நான்கு பட்டைக் கட்டி வடிவமுள்ளது. அஃது ஒன்றுபோல உள்ள நான்கு முகங்களையுடையது அதன் ஒவ்வொரு முகமும் ஒரு சமபுஜத் திரிகோணம். (மூன்று பக்கங்களையுடைய ஒரு பரப்புக்குத் திரிகோணம் என்று பெயர்; அப்பக்கங்கள் மூன்றும் ஒரே அளவுள்ளனவாயிருந்தால் அப்பொழுது அதற்குச் சமபுஜத் திரிகோணம் என்று பெயர்). ஆனால் வைரப் படிகத்தின் பட்டைகளில் ஒவ்வொன்றும் ஒரே தட்டையாயிருக்காது; சற்று உருட்டியது போல் ஒருவகையாய் வளைந்து தோன்றும். இவ்வகையான வளைவானது படிகத்தினுடைய வளர்ச்சி முறையினால்தான் உண்டாகின்றது. நான்கு பட்டைக்கட்டி வடிவமே வைரத்துக்கு



நான்குபட்டைக் கட்டி.

உரிய சிறந்த வடிவமாயினும், வைரப்படிகமானது சிற்சில வேளைகளில் ஆறுபட்டைக் கட்டியாகவும் சிற்சில வேளைகளில் எட்டுப் பட்டைக் கட்டியாகவும் காணப்படுவதும் உண்டு. தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் தேசத்தில் காணப்படும் வைரமெல்லாம் ஆறு பட்டை வடிவமுள்ளதாகத்தான் இருந்து வருகின்றது. இதுதான் அந்நாட்டு வைரத்துக்குள்ள விசேஷகுணம்.



எட்டுப்பட்டைக் கட்டி.

(2) **தகருமுறை அல்லது பிளக்குமுறை:**—தன்னந்தனியான படிகவடிவத்தைப் பெற்றுள்ள கனிப்பொருள் ஒவ்வொன்றையும் கவனித்தால் அது தகரும்போதெல்லாம் குறிப்பிட்ட ஒரேவகையாய்த்தான் தகருகிறது என்பது தெரியவருகிறது. ஒவ்வொரு பொருளும் அதனதனுக்குத் தனியாகவுள்ள ஒரே வகையாய்த்தான் தகரும்; குறிப்பிடத்தக்க ஒரே தட்டின்வழியேதான் அப்பிளப்பு உண்டாகும்; அதன் வழியே அப்படியே தான் ஒவ்வொரு பொருளும் பிளவுபடும். ஒவ்வொரு பொருளிலும் உள்ள அணுக்களெல்லாம் ஒன்றோடொன்று இறுக ஒட்டிக்கொண்டிருப்பதால் தான் ஒரு பொருளானது ஒன்றுசேர்ந்து கட்டியாகக் காணப்படுகிறது. அதாவது பொருளிலுள்ள அணுக்களுக்குள்ளே ஒரு நெருங்கிய பிணைப்பு ஒன்று இருந்துவருகிறது. ஒரு பொருளானது குறிப்பிட்ட ஒரே

தட்டின்வழி பிளவுபடும்போது நாம் அறிந்துகொள்வது யாதெனில், அணுக்களுள் ஒன்றுக்கொன்றுள்ள பிணைப்பானது இவ்வாறு கீறுகின்ற தட்டுப் புறங்களில் மிகவும் வன்மை குன்றியதாகவே இருக்கவேண்டு மென்பதுதான். ஆதலால்தான் ஒரு படிகமானது உடைந்துபோகும்போது மற்ற இடங்களின் வழியே பிளவுபடாமல் குறிப்பிடத்தக்க சிற்சில தட்டுக்களின் வழியாகவே சுலபமாகக் கீறிப்போகிறது. நன்றாக அழுத்தப்பட்ட ஒரு கனிப்பொருளானது கீறும் வகையும்—அதாவது, அஃது இலேசாகத் தகருகிறதா அல்லது கஷ்டப்பட்டுத் தகருகிறதா என்பதும்—, அது தகருகின்ற வழியும் —அதாவது, அஃது எந்தப் போக்காக எந்தத் தட்டின் வழி தகரு கின்றதென்பதும்—, அந்தவந்தக் கனிப்பொருளுக்கென்றே தனியாக ஏற்பட்டவையென்பது இப்பொழுது நன்கு அறியப்பட்டிருக்கிறது. ஆதலால் தகர்தல் என்னும் குணமும் நாம் எடுத்துக்கொண்ட கனிப் பொருளானது இன்னது என்று பிரத்தியேகமாய்ப் பிரித்துக் குறிப் பிடுவதற்குரிய அறிகுறிகளுள் ஒன்றாகின்றது. வைரமானது ஒன்று போலவுள்ள எட்டுப்பட்டைகளையுடைய கட்டிகளாகக் தகரும். நான்கு பட்டைக்கட்டியாகிய வைரப்படிகம் ஒன்றைக் கொல்லன் பட்டடையின்மேல் வைத்துச் சுத்தியால் ஒரு தட்டுத் தட்டினாலும் சரி, அல்லது சீதோஷ்ண நிலையைத் திடீரென்று மாறுபடுத்தி அம் மாறுபாடுகளுக்கு அதை உட்படுத்தினாலும் சரி, அப்பொழுது அது சுக்கல் சுக்கலாய் உடைந்துபோகும். அப்படி உடையும்போது உண்டாகும் ஒவ்வொரு துண்டும் ஒன்றுபோல ஒழுங்காக அமைந் துள்ள சுத்தமான எட்டுப்பட்டைக் கட்டியாகவே இருக்கும். அதா வது அந்தப் படிகத்துண்டுகளில் ஒவ்வொன்றும் ஒன்றுபோலுள்ள எட்டுப்பட்டைகள் அல்லது முகங்களை உடையதாகக் காணப் படும்.

(3) காடினியம் அல்லது வடுப்படாத்தன்மை:—நாம் சோதிக் கின்ற கனிப்பொருளானது இன்னது தான் என்று நிச்சயிப்பதற்குப் பயன்படும் குணங்களுள் இதுவும் ஒன்று. தேய்த்து உரைக்க முயலும் மற்றொரு பொருளானது தன்னை உரைக்க வொட்டாமல் தடுத்துக்கொள்ளும் வன்மையையே நாம் காடினியம் என்று கூறு கிறோம். இரத்தினக்கற்கள் எனப்படுபவை எல்லாம் பொதுவாக இக் காடினிய குணம் விசேஷமான அளவிற் பொருந்திய கனிப்பொருள் கள். இரத்தினங்கள் எல்லாவற்றிலும் விலையில் மிகவும் உயர்ந்ததாக உள்ள வைரமானது, அவ்வாறே நமக்குத்தெரிந்த வஸ்துக்கள் எல்லா வற்றைக் காட்டிலும் காடினியத்திலும் மிகுந்ததாகவே காணப் படுகிறது.

(4) தண்ணீர்த் தூக்கம் எனத்தகும் ஸ்பேசிபிக் கிராவிடி :— விலையுயர்ந்த கனிப்பொருளைக் குறிக்கவல்ல விசேஷ குணங்களில் கனம் என்பதும் ஒன்று.

இவ்வுலகத்திலே காணப்படும் பொருள்களெல்லாம் எத்தனையோ வகையாய் வித்தியாசப்படுகின்றன வெனினும், ஒவ்வொரு பொருளையும் மற்றெந்த வஸ்துவினின்றும் பிரித்துக் காட்டக் கூடிய குணங்கள் ஒன்றோ பலவோ இருந்துவருகின்றன. அவை ஒவ்வொரு வஸ்துவிலும் வேறுவேறாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வஸ்துவுக்கும் குறிப்பிட்ட ஒவ்வொரு கனம் உண்டு. அதைக்கொண்டே மற்றெந்த வஸ்துவினின்றும் அதைப் பிரித்தெடுத்து விடலாம். அதாவது ஒரே பரிமாணமுள்ள பற்பல வஸ்துக்களை ஆராய்ந்தால் அவற்றின் கனமானது வஸ்துவுக்கு ஏற்றபடி மிகுந்தோ குறைந்தோ காணப்படும். ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஏற்பட்ட—அதைக் கொண்டு அதை நிருணயிக்கக்கூடிய—கனம் ஒன்று உண்டு. ஒரு பரிமாணமுள்ள தண்ணீரின் கனத்தை ஒன்று என்று அளவு கருவியாக ஏற்படுத்திக்கொண்டு, அதனோடு அதே பரிமாணமுள்ள பிறபொருள்களை யெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றின் கனத்தை வரையறுத்து வைத்திருக்கின்றனர். இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவரும் கனத்துக்குத் தான் அதனதன் ஸ்பேசிபிக் கிராவிடி என்று பெயர். இது தண்ணீரின் துணையைக் கொண்டும் தண்ணீரின் கனத்தையே அளவாகக்கொண்டும் அறிந்து கொள்ளப்பட்டிருப்பதால், இதற்குத் தண்ணீர்த் தூக்கம் என்று பெயரிடலாயிற்று

சோதிக்கும் பொருள் இன்னதென்று நிச்சயிப்பதற்கு, மேலே சொல்லியபடி, இது மிகவும் பயன்படக்கூடிய அறிகுறி. ஒவ்வொரு கனிப்பொருளும் நிச்சயமாய்க் குறிப்பிடத்தக்க ஒவ்வொரு கனத்தை உடையதாகக் காணப்படுவதால், பெரும்பாலும் அதைக்கொண்டு மட்டிலுமே அந்த வஸ்து இன்னதென்று—மற்ற வஸ்துக்களினின்று அதைப் பிரித்துக்—கூறிவிடலாம். ஒரு பொருளின் கனத்தை நிருணயிக்கும்பொழுது அதை அழிக்கவேண்டியதில்லை யாதலாலும், அதனால் பொருளுக்கு இரசாயனமுறைகளில் உண்டாவதுபோல் வேறெவ்விதமான கெடுதியும் இம்முறையால் ஏற்படுவதில்லை யாதலாலும், விலையுயர்ந்த கற்களையும் மணிகளையும் இவை இன்ன வின்னவென்று அடையாளம் கண்டுபிடிப்பதற்கு இம்முறை மிகவும் பிரயோஜனமாயிருந்து வருகிறது.

(5, 6, 7, 8) காந்தி, ஒளி கோடல், ஒளி சிதறல், ஒளி இருமுறை கோடல், நிறம், இருநிறங்காட்டல் :—இவை யாவும் ஒளி

சம்பந்தமான குணங்கள் என்று இவற்றைப்பற்றி மொத்தமாகக் கூறிவிடலாம். அதாவது கனிப்பொருளுக்கும் ஒளிக்கும் சம்பந்தம் ஏற்படும்போது அப்பொருள்களில் காணப்படும் குணாதிசயங்களே ஆவன இவை யாவும். இரத்தினங்களை ஒட்டியமட்டுமே இவை மிகவும் முக்கியமானவையாயும் நன்கு கவனித்தற்குரியனவாயும் இருக்கின்றன. தெளிவு, காந்தி, பல நிறங் கலந்த தளதளப்பு என்பனவெல்லாம் இரத்தினங்களின் மதிப்பை விசேஷமாய் உயர்த்தும் சீரிய குணங்கள். இக்குணங்களெல்லாம் ஒளி சம்பந்தமானவை என்றோம். ஒரு பொருளின் மீது ஒளி பட்டால் அவ்வொளியின் ஒரு பாகமானது வஸ்துவின் மேற்புறத் தட்டினின்றே பிரதிபலிக்கப்படுகிறதென்பதும், மற்றொரு பாகமானது வஸ்துவினுள் புகுந்து நின்றோ, வஸ்துவை ஊடுருவியோ, போகிறதென்பதும் எல்லாரும் அறிந்த விஷயம். வஸ்துவின் மேற்புறத்தினின்று பிரதிபலிக்கப்படும் ஒளியின் அளவுதான் அதன் காந்தி இவ்வளவு என்பதை ஏற்படுத்துகிறது. பொருளினுள் புகும் ஒளியின் ஒரு பாகமானது அப்பொருளால் கிரகிக்கப்படுகிறது. பலநிறங்கொண்ட சூரிய கிரணத்தின் வெள்ளொளியின் பிரிவுகளாகிய பல்வேறு நிறங்கள், ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகிற அளவுகளிலே, வஸ்துவினால் கிரகிக்கப்படுகின்றன. இதனால் தான் ஒவ்வொரு வஸ்துவும் நிறம் உடையதாகக் காணப்படுகின்றது. நிறமென்பது பொருளைச் சார்ந்ததாய் அதற்குச் சுயமாகவே—இயற்கையாகவே—உள்ள ஒரு குணமல்ல. நிறம் என்பதெல்லாம், பொருளின் வழியாக ஒளியின் கிரணம் ஒன்று சென்று அவ்வொளியின் பிரிவுகளாகிய நிறங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும் அளவில் கிரகிக்கப்படும்போது ஏதோ ஒரு நிறமானது மற்றவைகளைக் காட்டிலும் மிகுதியான அளவில் கிரகிக்கப்படுவதால் தோன்றுகின்ற, ஒளி விநோதமேயன்றி வேறல்ல.

வஸ்துவை ஊடுருவிச் செல்லுகின்ற ஒளிக் கிரணமானது அப்படி ஊடுருவிப் பாயும்பொழுது வளைந்தோ கோடியோ போகிறது. எவ்வளவிலே ஒளிக் கிரணமானது கோடுகிறதென்பது எந்தக் கனிப்பொருளை அல்லது இதர வஸ்துவை அஃது ஊடுருவுகிறதோ அந்தப் பொருளின் அழுத்தத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. படிகப் பொருளின் அழுத்தமானது வெவ்வேறு போக்கில் பெரும்பாலும் வெவ்வேறாகத்தான் இருக்கிறது. இவ்வாறு படிக வடிவம் பொருந்திய கனிப்பொருள் ஒன்றின் வழியாக ஒளிக்கிரணம் ஊடுருவும்பொழுது **ஒளி இருமுறை கோடுதல்** என்னும் விநோதம் சிற்சில வேளைகளில் நிகழ்கின்றது. அதாவது ஊடுருவும் ஒளிக் கிரணமானது இருபிளவாகப் பிரிந்துவிடுகிறது. நாம் மேலேகூறிய,

ஒளி சம்பந்தமான மற்ற குணங்களாகிய தெளிவு, நிறம், பல நிறங் காட்டல் போன்ற குணங்களைப்போல ஒளி இருமுறைகோடல் என்னும் இக்குணமானது இரத்தினப் பரீக்ஷையில் அவ்வளவு முக்கியமானதல்ல. ஏனெனில், இஃது இரத்தின நிர்ணயத்துக்கு அதிகம் பயன்படுவதில்லை. அவையோவெனில் இரத்தினத்தின் அழகுக்கும் அதனால் அதன் விலைமதிப்புக்கும் காரணமாயிருக்கின்றன. பொதுவாக இரத்தினக்கற்களின் காந்தியானது—அதிலும் விலையுயர்ந்த கற்களின் காந்தியானது—ஜாஜ்வல்லியமானது. கல்லுக்குப் பட்டையும் தீர்த்து மெருகும் போட்டுவிட்டால் கேட்பானேன்? ஓர் இரத்தினமானது மிக்க காந்தி பொருந்தியதாயிருந்தால் அதனுடைய அழகும் விலையும் மிகமிக உயர்ந்துவிடுகின்றன. பட்டைதீர்ப்பதும் மெருகு போடுவதும் காந்தி என்னும் இக்குணத்தை எவ்வளவு அதிகமாக்கலாமோ அவ்வளவு ஆக்கவேண்டும் என்னும் நோக்கத்தைக் கொண்டுதான். இரத்தினத்தின் சொலிப்பு அல்லது நீர் என்று நாம் சொல்லுவதெல்லாம் இக்காந்தியைத்தான். ஒளியானது ஒரு கனிப்பொருளினது மேற்புறத்தின்மீது குறிப்பட்ட ஒரு முடக்காகப் படுமாயின் அப்பொழுது ஒளிக்கிரணமானது முற்றிலும் பிரதிபலிக்கப்படுகிறது. இத்தகைய ஸம்பூர்ணப் பிரதிபலனமானது அநேக மணிகளின் காந்தியை மிகவும் அதிகமாக எடுத்துக்காட்டுகிறது. ஓர் இரத்தினத்தின் மேன்முகத்தில் விழுகின்ற ஒளியானது அதன் பின்புறமுள்ள பட்டைகளின் முகங்களால் முற்றிலும் பிரதிபலிக்கப்பட்டு, மீண்டும் முன்வழியாகவே வெளிவந்து, நோக்குவோனது கண்ணில் அழகாகப் படுகின்றது. எவ்வளவுக் கெவ்வளவு இவ்வாறு ஒளியானது கல்லின் பின்புறமிருந்து அதிகமாகப் பிரதிபலிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கல்லின் சொலிசொலிப்பும் மிகுந்து தோன்றுகின்றது. ஆதலால், இப்பட்டைகள் அல்லது வெட்டுமுகங்களின் போக்கானது எவ்வளவு முக்கியமானது என்பது இதிலிருந்து தெரியவரும்.

இந்த விஷயத்தை யொட்டிய இன்னொரு குணத்தையும் பற்றி இங்கே கூறவேண்டியது அவசியம். ஒன்றாகவே தோன்றும் சூரிய கிரணமானது உண்மையில் ஒரு கலப்புப் பொருள். பிரிஸ்ம் என்று சொல்லப்படும் பட்டையுருளைக் கண்ணாடியின் வழி அவ்வொளி பாய்ந்து செல்லும்போது அதன் பிரிவுகளாகிய பல நிறங்களாக அது சிதறிப்போகிறது என்பது நீங்கள் யாவரும் அறிந்தவிஷயம். இவ் விநோத நிகழ்ச்சிக்கு ஒளி சிதறல் என்று பெயர். அநேக இரத்தினங்களுடைய—முக்கியமாக வைரத்தினுடைய—அழகிய தோற்றத்துக்குக் காரணமாவது இவ்வாறு உண்டாகும் ஒளிச் சிதறலே. வெள்

ளொளியாகிய சூரிய வெளிச்சத்தின் பல நிறங்கள் கொண்ட பிரிவுகள் தம்முள் நிறத்தால் மட்டிலும் பேதப்படுவன அல்ல. அவை ஒவ்வொன்றும் தமது கோடும் குணத்திலும், அதாவது எவ்வளவு கோடக்கூடியன என்பதிலும், ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன.

சிவப்பு வெளிச்சத்தின் கோடற்குணம் மிகக் குறைவானது; ஊதாவின் கோடற்குணம் மிகவும் அதிகமானது; மஞ்சள் பச்சை நீலம் ஆகிய இவை கூறப்படும் முறையிலேயே, கோடுமளவில் இவ்விரண்டுக்கும் நடுவில் நிற்கின்றன. வெள்ளொளி அல்லது சூரிய வெளிச்சமானது ஒரு பட்டையுருளைக் கண்ணாடியின் வழி போகும் பொழுது, சிவப்புக்கிரணங்கள் மிகக் குறைவாயும் ஊதாக்கிரணங்கள் மிக அதிகமாயும் கோடுவன. மற்றக் கிரணங்கள் எல்லாம் இவ்விரண்டு ஈறுகளுக்கும் இடையில் தத்தம் நிலைகளை அடைந்து நிற்பன. கோடச் செய்யும் முகத்திற்கு அண்டைப்புறத்தில் இவ்வாறு தோன்றும் பல நிறப் பட்டை என்னும் ஸ்பெக்ட்ரத்தின் செந்நுனியும் தொலைப் புறத்தில் ஊதா நுனியும் காணப்படும். மற்றைய நிறங்கள் எல்லாம் இவ்விரண்டு நுனிகளுக்கும் இடையேயுள்ள இடம் முழுவதையும் சிறிதும் இடவெளியின்றி நிரப்பிநிற்கும். அவை வானவில்லில் தோன்றுகின்றவாறே சிவப்பு, ஆரஞ்சு (காஷாயம்), மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம் (நீலி), ஊதா என்ற முறையையே அநுசரித்தனவாகக் காணப்படும். இவ்வாறு உண்டாகும் இந்திரசாபம் அல்லது ஸ்பெக்ட்ரத்தின் நீளமானது பட்டையுருளை என்ன பொருளினாலானதோ அப்பொருளின் சிதறுந் திறத்தையே ஒருவாறு ஒட்டியதாயிருக்கும். இச் சிதறுந் திறமானது வெவ்வேறு இரத்தினங்களில் வெவ்வேறு அளவுள்ளதாக இருக்கும். உதாரணமாக, வைரமானது மிகமிக அதிகமான சிதறல் திறத்தையுடையது. ஒரே அளவான பிரதிபலிக்கும் கோணத்தையுடைய வைரப் பட்டையுருளை யொன்றும் கண்ணாடிப் பட்டையுருளை யொன்றும் இருக்கின்றனவென்று வைத்துக் கொள்ளுவோம். இவ்விரண்டின் வழியாகவும் தனித் தனியே ஒளி ஊடுருவிப் பாய்ந்தால், வைரத்தின் வழி ஊடுருவிச் சென்றதால் உண்டான ஸ்பெக்ட்ரமானது கண்ணாடியினால் உண்டான ஸ்பெக்ட்ரத்தின் நீளத்தைக் காட்டிலும் இரண்டு பங்குக்கு மேல் அதிக நீளமுள்ளதாயிருக்கும். சரியானபடி பட்டைபோடப் பட்ட வைரத்தினின்று சிதறிப் பின் நமது கண்ணில் வந்துபடுகின்ற நிறங்கள் ஒன்றின்மேலொன்று அதிகம் ஒட்டாமல் செவ்வனே பிரிந்து தோன்றுவன. வைரத்தின் அழகும் அதன் சொலிப்பும் பெரும்பாலும் இதனாலேதான் ஏற்படுவன. வைரத்திலே ஒருபோக்

காக இல்லாமலிருக்கிற ஏதோ இரண்டு பட்டைகள் சேர்ந்து ஒரு பிரிஸ்ம் ஆகிவிடக் கூடும். அவை இரண்டுமாக வைரத்தின் மீது படும் வெள்ளொளியைப் பிரித்துப் பல்வேறு நிறங்களாகச் சிதறக் கூடும். கல்லின் மேன்முகப்பட்டையும் பின்புறப்பட்டையும் ஒன்றுக் கொன்று எப்படி அமைக்கப்படவேண்டுமென்றால், பென்னம் பெரிய பிரிவினையையும் சிதறலையும் செய்யக்கூடிய அளவில் அவை வைக்கப்படவேண்டும். கல்லின் பின்புறமுள்ள பட்டைகள் நன்கு சாய்ந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் முன்பக்கத்தின் வழியாய்க் கல்லினுள் புகும் ஒளியானது, அதன் பிரிவுகளாகிய நிறங்களாக நன்கு பிரிக்கப்பட்டபின், பின்புறப்பட்டைகளின் மீது ஒரு முடக்காகத் தாக்கி, அவற்றால் முற்றிலும் பிரதிபலிக்கப்பட்டு, கல்லின் முன்புறமாக மீண்டும் வெளியே வரும். ஆகையால் தான் இவ்வகையான ஸம்பூர்ணப் பிரதிபலன குணத்தை யனுசரித்தே கற்களைப் பட்டைபோடவேண்டுமென்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

(10) **கற்களின் உஷ்ண மின்சார காந்தகுணங்களை** யொட்டிய மட்டில் அவை அவ்வளவு விசேஷமென்று சொல்லுதற்கில்லை. இவை படிகவடிவத்தை மிகவும் ஒட்டியனவாகக் காணப்படுகின்றன. படிக வடிவ மாறுபாட்டுக்கு இணங்க இவையும் மாறுபடுகின்றன. உஷ்ணஅலைகளும், மின்சார காந்த அலைகளும் படிகத்தின் வழியாக வெவ்வேறு போக்குக்களில் எவ்வளவு வேகத்தோடு செல்கின்றன என்பதை ஒட்டியவைதாம் இக்குணங்கள்.

பொதுவாக இரத்தினக்கற்களின் குணாதிசயங்கள் யாவை என்பதை இவ்வாறு சுருக்கமாக ஆராய்ந்தோம். இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயமாகிய 'வைரமும், அதன் குணங்களும்' என்பதைக் கவனிப்போம்.

(தொடரும்)

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்

Angle—முடக்கு, கோணம்.
Anvil—பட்டடை.
Atom—பரமாணு.
Brazil—பிரேசில்.
Characteristic—பிரத்தியேகமான.
Chemical—இரசாயன சம்பந்தமான.
Cleavage—தகருமுறை, பிளக்குமுறை.
Crystal—படிகம், கிரிஸ்டல்.
Colour—நிறம், வர்ணம்.

Cube—ஆறுபட்டைக் கட்டி.
Diamond—வைரம்.
Dichroism—இருநிறங்காட்டல்.
Direction—போக்கு.
Dispersion—ஒளி சிதறல்.
Double refraction—ஒளி இருமுறை கோடல், டபிள் ரிபிராக்ஷன்.
Electric—மின்சார சம்பந்தமான.
Emerald—மரகதம்.
Equilateral triangle—சமபுஜத் திரிகோணம்.
Face—பட்டை, முகம்.
Form—வடிவம்.
Hardness—காடினியம், வடுப்படாத் தன்மை.
Lustre—காந்தி, சோபை.
Magnetic—காந்த.
Mineral—கனிப்பொருள்.
Molecule—அணு, மாலிக்யூல்.
Octohedron, Octahedron—எட்டுப்பட்டைக் கட்டி.
Physical—பௌதிக சம்பந்தமான.
Plane—மட்டமான, தட்டு.
Prism—பிரிஸ்ம், பட்டையுருளைக் கண்ணாடி, முப்பட்டைக் கண்ணாடி.
Rare Element—அரிய மூலப்பொருள்.
Reflection—பிரதிபலனம், பிரதிபலித்தல்.
Refraction—ஒளி கோடல்.
Regular—ஒழுங்காக அமைந்த.
Ruby—மாணிக்கம்.
Sapphire—இந்திரநீலம்.
Solid—கட்டிப் பொருள்.
Symmetrical—இணை இணையாகவுள்ள.
Specific Gravity—ஸ்பெசிபிக் கிராவிடி, தண்ணீர்த் தூக்கம்.
Spectrum—ஸ்பெக்ட்ரம், இந்திரசாபம், பன்னிறப்பட்டை.
Tetrahedron—நான்குபட்டைக் கட்டி.
Thermal—உஷ்ண.
Topaz—கோமேதகம்.
Triangle—திரிகோணம்.
Volume—பரிமாணம்.

இந்தியாவின் பொருள் நிலை

ஜே. எஸ். போன்னையா நாடார்

சென்னைமாநகரின் வீதிகளில் நீங்கள் சென்றீர்களாகில் நம் முன்னோர் பார்த்திராத அநேக அரும்பெரும் காட்சிகளைப் பார்க்கலாம். விரைந்து செல்லும், சிறிதும் பெரிதுமான நூற்றுக் கணக்கான மோட்டார் வண்டிகளையும், வீதிகளின் இருபக்கங்களிலும் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்க விதமாய் அலங்கரிக்கப்பட்டு விலையுயர்ந்த சாமான்கள் விற்கப்படும் பலவிதமான கடைகளையும் காணலாம். இன்னமோர் பக்கத்தில் இருப்புப் பாதைகளின்மேல் பெருங்கூச்சவிட்டுச் செல்லும் 'எலக்டிரிக் டிரேயின' என்னும் மின்சார வண்டிகளைக் கண்டு மகிழலாம். இவை மட்டுமா? ஆகாயத்தில் பறவைகள் பறந்து திரிந்தாற் போல மனிதர் ஏறிச்செல்லும் ஆகாய விமானங்களும், ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள நாடுகளில் நடக்கும் விஷயங்களையெல்லாம் சில மணி நேரங்களில் தெரிந்து கொள்ளுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஆகாயத்தந்தி ஸ்தாபனங்களும், நீராவியின் சக்தியால் பெருங்கடலைக் கடந்து செல்லும் கப்பல்களும், அம்மம்ம! இவற்றை யியற்றியவர் மனிதரோ? பூதமோ? என அதிசயிக்கக்கூடிய காட்சிகளும் பலவுள.

இவ்வித விநோதங்களெல்லாம் சென்னையின்கண் மட்டுமன்று, மற்றப் பெரிய நகரின் கண்ணும், உலக முழுவதிலுமே காணலாம். இத்தகைய மாறுதல்கள் எங்ஙனம் ஏற்பட்டன? நம் தேயத்திற்கு அவை எவ்வாறு வந்தன? என்பனவும் இவைபோன்ற மற்ற வினாக்களும் எளிதே நமதுளத்தில் எழுதலால் அவற்றிற்குரிய விடைகளைச் சிறிது ஆராய்வோம்.

சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலேயர் நூல் நூற்பதற்கும் துணிகள் நெய்வதற்கும் விசித்திரமான கருவிகளைக் கண்டு பிடித்தனர். இக்கருவிகள் நீராவியின் சக்தியினால் இயங்கின. பின்னர் இந்நீராவி இயந்திரங்கள் ரெயில் வண்டிகளை இழுக்கவும், தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் இருக்கும் கருவிகளை ஓட்டவும் உபயோகிக்கப்பட்டன. நாளடைவில் இப்புதிய கருவிகளும், முறைகளும், ஜெர்மனி, பிரான்சு, அமெரிக்கா

முதலான சகல தேசங்களிலும் பரவின. அத்தேசத்தாருடைய செல்வப் பெருக்கும், தொழிற் பெருமையும் அதிகரிக்கவே, அக் காலம்வரை சிறப்புற்றோங்கியு கீழ் நாட்டாருடைய் வியாபாரமும் தொழில்களும் தேய்பிறைபோல ஒவ்வொன்றாய்க் குன்றத் தலைப் பட்டன. ஆங்கிலேயர் நம்முடைய நாட்டைக் கைப்பற்றிய நாள் முதல் அவர்களுடைய தொழிற்சாலைகளும் நாம் மேற்கூறிய தபால் தந்தி ஸ்தாபனங்களும் இருப்புப்பாதைகளும் இங்கும் நாட்டப் பெற்றன.

இப்புதிய அமைப்புக்களால் நம் பூர்வத்தொழில்களெல்லாம் கெட்டு, நாம் வெள்ளையர்களுக்கு அடிமைகள் ஆயினோம் என அழுது புலம்புவார் சிலர். வேறு சிலர், நமது தேசத்தில் இம்மாறு தல்களாலே நாகரிகமும், மேம்பாடும், செல்வமும் விருத்தியடைந் தன என்பர். இவ்விரு திறத்தாருடைய கொள்கைகளில் ஒன்றற் கொன்று முரண்பட்டதேயாயினும் ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது உண்மையடங்கியிருக்கிறது. அவற்றை யெல்லாம் பின்வரும் அத் தியாயங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவற்றிற் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுவோம்.

பற்பலவிதமான பாஷைகளும் ஜாதிகளும் மதங்களும் நிரம்பிய நமது தேசத்தில் தேசீய ஒற்றுமை ஏற்படுத்துவது எவ்வளவு அரிதாயிருக்கிறது? ஆனால் பொருளாதார விஷயமாய் ஏற்பட்ட ஒற்றுமை மிகவும் வியக்கத்தக்கதே. நமது தேசத்தின் தென் கடைக்கோடியிற் பஞ்சம் ஏற்படுமாயின் வங்காளத்திலிருந்தும் பர்மாவிலிருந்தும் கணக்குக் கடங்காத நெல் மூட்டைகள் வந்து குவிவதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். காசிப்புடைவைகள் உலவாத இடம் எது? தென்னாட்டில் விளையும் எண்ணெய் வித்துக் கள் (எள், நிலக்கடலை போல்வன) வடநாடெங்கும் ஏறிச்செல் கின்றன. மார்வாரிகளான வியாபாரிகள் எல்லாப் பட்டணங்களி லும் கிராமங்களிலும் சென்று தொழில் நடத்துகின்றனர். நமது பெருங்கண்டத்தின் பற்பல பாகங்களும் பொருள்கொள்ளல் வாங் கல் முதலான விஷயங்களில் இத்தகைய ஒற்றுமை யடைந்ததன் காரணமென்ன? ரெயில் வண்டிகளினாலும், தபால், தந்தி ஸ்தாப னங்களினாலும், புதியனவாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளி னாலும் அல்லவா?

இவ்வாறாக ஏற்பட்ட ஒற்றுமையினாலும், மனிதர்கள் பல விடங்களிலும் சென்று பிறருடன் வியாபாரம் செய்வதனாலும் நாகரிகம் ஏற்பட்டதென்பதை எவரால் மறுக்கவியலும்?

ஆனால் இந்நவீன நாகரிகத்தால் சில பரதேசப் பழக்கங்களான குடியும் அநாசாரங்களும் குளத்திற் கொட்டப்பட்ட எண்ணெய் போற் பரவியுள்ளன. உடையிலும் உணவிலும் மேனாட்டாரைப் பின் பற்றுவதனால் அவர்களுடைய பொருள்களையே மிகுதியும் வாங்கி நமது தேசத்தின் செல்வநிலையைக் குறைக்கின்றோம். புகையிலையினால் செய்யப்படும் சிகரெட்டுக்கள், பருத்தி பட்டு முதலானவற்றால் ஐரோப்பியர் செய்தனுப்பும் துணிவகைகள், சோப்பு முதலான வாசனைத் திரவியங்கள் என்பன போன்ற பலவற்றிற்கும் நமது தேசத்திலிருந்து வருடந்தோறும் கோடிக்கணக்கான பணம் விரயமாகிறது. இக்காரணத்தையிட்டு மேனாட்டார் நாகரிகத்தைக் கட்டோடொழித்து விடுவதென்று கூறுவது தவறு. நாகரிகம் அதிகப்பட, எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாக நாகரிகப் பொருள்களை யெல்லாம் நமது தேசத்தில் நாமே செய்துகொள்ளல் வேண்டும். உலகமெங்கணும் மணிபோல் விளங்கும் இங்கிலாந்து தேசம் ஹாலந்தியரான டச்சுக்காரர், பிரான்சியர், ஜெர்மானியர் மூலமாய்த்தான் தற்போது எய்தியிருக்கும் சீரும் சிறப்பும் பெற்றது என்பது சரித்திரம் கற்றுணர்ந்த யாவரும் அறிந்த விஷயம்.

அந்நிய நாட்டாராகிய ஆங்கிலேயர் உதவியின்றி நமது தேசத்தில் நாம் காண்கிற பெரும் பெரும் தொழிற்சாலைகள் முதலில் ஏற்பட்டிருக்க முடியா. பருத்தி, சணல், கம்பளி, பட்டு முதலானவற்றை நூற்பதற்கும் நெய்வதற்கும் பல தொழிற்சாலைகள் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்றன. பம்பாய் நகரிலுள்ள பஞ்சு நூல் நெசவுச் சாலைகளிற் பெரும்பான்மையானவை இந்திய தனவான்கள் ஆதரவில் நடைபெறுகின்றன. டாட்டா என்னும் பார்சியப் பெருமானுடைய முயற்சியால் இரும்பு உருக்கு முதலானவற்றால் அரிய பெரிய சாமான்கள் செய்யப் பதினொரு கோடி ரூபாய் மூலதனம் வைத்துத் தொழிற்சாலை யொன்று ஜாம்ஷெட்பூர் என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. பீகார் மாகாணத்தில் நிலக்கரி எடுக்கப்படுகிறது. மைசூரில் தங்கம் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. பர்மாவிலிருந்து கெரோசின் என்னும் மண்ணெண்ணெயும், மோட்டார் வண்டிகள் ஓட்ட உதவும் பெட்ரோல் என்னும் எண்ணெயும் உற்பத்தியாக்கப் படுகின்றன. இவை போன்றவற்றை உண்டாக்கும் தொழிற்சாலைகள் நமது தேசத்தில் பலவுள. அவற்றால் கூலி ஜனங்கள் அநேகர் பிழைப்படைகின்றனர். இத்தகைய தொழில்களை நடத்துவதற்குரிய நிபுணர்களும், இவைகளில் உபயோகிக்கப்படுகிற கருவிகளும் மேனாட்டிலிருந்துதான் வரவேண்டியிருக்கின்றன. ஆங்கிலேயர் இவைகளை யெல்லாம் தங்கள்

இலாபத்திற்கென்றும் தங்கள் பிழைப்புக்கென்றும் நடத்தின போதிலும், நமது நாட்டினர்க்கு உதாரணமாகவும் உதவியாகவும் இருந்து வருகின்றனரல்லவா?

கைத்தொழில்கள் விருத்தியடைந்தது மட்டுமன்று; விவசாயத்திலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கு வேண்டிய பல பொருள்களும், வியாபாரத்திற்கு வேண்டிய பல பொருள்களும் மிகுதியும் நமது தேசத்தில் விளைக்கப் படுகின்றன. பருத்தி, எண்ணெய் வித்துக்கள், தேயிலை, காப்பிக் கொட்டை, ரப்பர் முதலான பொருள்களால் குடியானவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் மிகுந்த இலாபம் ஏற்பட்டிருக்கிறது. மூலப்பொருள்கள் எல்லாம் அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதியாகிவிடுவதனால் நாம் சீமான்கள் ஆகிவிடவில்லை. நிலத்தின் கொழுமை குன்றுகிறது; அயல் நாட்டார் வியாபாரம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இவையெல்லாம் புதிய மாறுதல்களினால் ஏற்பட்ட தீமைகள்! ஆயினும் அப்பொருள்களை நாம் உபயோகிக்க அறியும் வரை, அவற்றால் வரும் இலாபத்தை முற்றிலும் கெடுதியென்று கூறித் தள்ளிவிடுவது தவறு. நமது தேசத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாறுதல்களினால் பெரியதொரு கடமை நமது தொழிலாளிகளையும், தனவந்தர்களையும் பொது ஜனங்களையும் சார்ந்திருக்கிறது. தேசத்தில் வறுமையையொழிக்கவும் அறிவைப் பரப்பவும் நாகரிகத்தை நிலைநாட்டவும் நமக்குக் கிடைத்திருக்கும் நற்றருணம் இதுவேயெனக்கருதி அவற்றின் சார்பான பல விஷயங்களை எவரும் தெள்ளிதில் அறியும் பொருட்டே பின் வரும் வியாசங்கள் எழுதப்பெறுகின்றன.

(தொடரும்)

பல்லவச் சிற்பங்களில் தேவிக்கு இடும் தலைப் பலி

க. அ. நீலகண்ட சாஸ்திரி

தமிழ்நாட்டில் பல்லவ அரசர்கள் காலத்தில், அதாவது கி. பி. ஏழுமுதல் ஒன்பது முடியவுள்ள நூற்றாண்டுகளில், சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பௌத்தம் சைனமுதலிய வேத விருத்தமான சமயங்களை வாதில்வென்று ஹிந்துமதத்தை நிலைநிறுத்தினார்களென்பதை யாவரும் அறிவர். அதே காலத்தில் சைவ சமயமானது காபாலிகம், காலாமுகம், பாசுபதம் முதலிய பல கிளைகளாகப் பிரிந்திருந்ததென்பதும், இக்கிளைகளிற் சில, கோரமான கொள்கைகளையும் குரூரமான வழக்கங்களையும் கைப்பற்றி வந்தனவென்பதும் சாஸனங்களாலும் பல்லவ அரசனாகிய மஹேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசம் முதலிய நூல்களாலும் அறியக் கிடக்கின்றன. இப்படிப் பலவாறாக ஏற்பட்டிருந்த பிரிவுகளின் நடுவே தேவி உபாஸனையை முக்கியமாகக் கைக்கொள்ளும் சாக்தமும் ஒன்றாயிருந்திருக்கலாம் என்பதை எளிதில் ஊகிக்கலாம். இஃது எப்படி யிருந்தபோதிலும், தேவி உபாஸகர்கள் அக்காலத்தில் மேற்கொண்டுவந்த விரதங்களில் தங்கள் தலையை அறுத்துத் தேவிக்குப் பலியாக இடும் ஒருமுறையுண்டென்றும், இந்த முறையைப் பல்லவர் காலத்துச் சிற்பங்களினின்று நாம் நன்றாய்த் தெளியலாமென்றும் டாக்டர் வோகல் (*J. Ph. Vogel*) என்னும் ஒரு டச்சு (*Dutch*) அறிஞர் ஓர் அரிய கட்டுரை எழுதி லண்டனில் உள்ள பூர்வ தேசியகலாசாலை (*School of Oriental Studies, London Institution*) யினின்று பிரசுரமாகும் பத்திரிகை (*Bulletin*)யில் சில மாதங்களுக்கு முன் வெளியிட்டார். அக்கட்டுரையின் மொழிபெயர்ப்பே பின்வருவது.

சென்னைக்குத் தெற்கே, மாமல்லபுரம் அல்லது மாவலிவரம் என்னும் ஊரின்கணுள்ள அற்புதமான கற்குகைக் (*rock-cut*) கோயில்கள் ஐந்தும் பலகாலும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வதிசயம் வாய்ந்த கோயில்களைப் பொதுஜனங்கள் பாண்டவர்களுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள்; அதனால்தான் இவைகளில் மிகச் சிறிதாயமைந்துள்ள கோயிலுக்குத் திரௌபதியின் இரதம் எனப்



1. மாமல்லபுரம் திரௌபதி இரதத்திலுள்ள துர்க்கையின் உருவம்.



2. மாமல்லபுரம், வராஹமண்டபச் சிற்பம்.

பெயர் வழங்குகிறது. யதார்த்தமாக இக்கோயிலானது துர்க்கா தேவியின் ஒரு மூர்த்திபேதத்திற்காக ஏற்பட்டதேயாகும். மயிடாசுரனது வெட்டுண்ட தலையின்மீது நின்றுகொண்டிருக்கும் துர்க்கைவடிவம் இக்கோயிலின் வெளிச்சுவரில் செதுக்கப்பட்டிருப்பதன்றி, அவள் வாகனமாகிய சிங்கமும் செவ்வனே ஆரம்பிக்கப்பட்டு முடிவுபெறாத நிலையில் சிறிது தூரத்தில் காணப்படுகிறது.

கர்ப்பக்கிருகத்தின் பின் சுவரில் ஒரு சிற்பமிருக்கிறது; அதன் நடுவே ஆழியும் சங்குமேந்திக்கொண்டு நான்கு கைகளுடைய ஒரு தேவி நிற்கிறாள்; அவளது இரண்டாம் வலக்கை அபயமுத்திரையைக் காட்டுகிறது; இரண்டாம் இடக்கை இடுப்பின்மேல் வைக்கப்பெற்றிருக்கிறது (படம்—1). பிரசித்திபெற்ற பிரெஞ்சுச்சிற்ப அறிஞரான ஸ்ரீமான் ஜூவோ-துப்ராயில் என்பவர் அவ்வுருவமானது குரூர தேவதையான சாமுண்டிகா தேவியின் வடிவமென்றும், அவ்வடிவம் கர்ப்பக்கிருகம் முகப்பு என்ற வித்தியாசமின்றி எல்லா இடங்களிலும் செதுக்கப்பட்டிருக்கிறதென்றும், விசேஷமாகக் கீழ்த்திசை முகப்புக்களில் எருமைத் தலையின்மேல் நிற்கும் காளியின் வடிவாகக் காணப்படுகிறதென்றும் கருதுகிறார்.

ஆனால் யார் இந்தத் தேவதை என்று நாம் இப்போது விசாரிக்கப் புகவேண்டாம். இக்கட்டுரையின் விஷயம் திரௌபதி இரதம் என்று வழங்குகிற கோயிலில் உபாசிக்கப்படும் தெய்வத்தைப் பற்றியதன்று; அவளுடைய அணுக்கரில் ஒருவனைப்பற்றியதேயாம். தேவியின் பாதங்களினருகே மண்டிபோட்டுக்கொண்டு இருக்கிற இரண்டு உருவங்கள் இருக்கின்றன; இருவரும் ஆண்மக்களென்பது வெளிப்படை. தேவியின் வலக்கைப்புற மிருக்கும் மனித உருவமானது நம் கவனத்தை ஈர்க்கும்படியான ஒரு விசேஷ நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இம் மனிதன் இடதுகையினால் தன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, வலக்கையில் பிடித்திருக்கும் வாளால் அம்மயிரை வெட்டுகிறவன்போல் இருக்கிறான். இதுதான் மிகப் பொருத்தமான கருத்தென்பது நான் 1910-ம் வருஷம் கிரிஸ்மஸ் சமயத்தில் ''ஏழு கோயில்'' (*Seven Pagodas*) என்று கூறப்படுமிடத்திற்கு (அதாவது மஹாபலிபுரத்திற்கு) போயிருந்தபோது எனக்குத் தோற்றியது. நான் எழுதிய ''ஏழு கோயில்களைக் குறித்த சிற்ப விஷயங்கள்'' என்னும் கட்டுரையில் இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டதோடு பற்பல நாட்டினரிடத்துப் பரவியிருப்பதும் யாவருக்கும் நன்றாகத் தெரிந்ததுமான முடியிறக்கும் வழக்கத்தையும் குறிப்பிட்டேன்.


தொன்மையாராய்ச்சி (*Archæological Survey*) இலாகா வைச்சார்ந்த மிஸ்டர் ஏ. எச். லாங்ஹர்ஸ்ட் சமீபத்தில் பல்லவர் சிற்பத்தை (*Pallava Architecture*) விரிவாகவும் நுட்பமாகவும் வர்ணிக்குமிடத்து என் கருத்தை அங்கீகரித்துக்கொண்டார். அவர் கூறுவது பின்வருமாறு: "துர்க்கையின் வலதுபுறம் மண்டியிட்டுக்கொண்டிருக்கும் ஆராதகன் தன் நீண்ட முடியை வாளால் வெட்டித் தேவிக்குப் பலியிடுவதுபோல் காணப்படுகிறான்; இந்த வழக்கம் இப்போதும் தென் இந்தியாவில் உள்ளது; புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் அநுஷ்டிக்கப்படுகிறது. இந்த உருவம் மிகவும் கவனிக்கத்தக்கது; வராஹமண்டபமென்று வழங்கும் மண்டபத்திலே இதே தேவியைக் காட்டுகிற மற்றொரு சிற்பத்திலும் கூடக் காணப்படுகிறது."

மிஸ்டர் லாங்ஹர்ஸ்டு குறித்துள்ள வராஹ மண்டபத்துச் சிற்பமானது (இம்மண்டபம் மாமல்லபுரத்துக் குகைக்கோயில்களில் ஒன்று) சதுர்புஜங்களுடைய தேவியை நடுநாயகமாகக் கொண்ட ஓர் உருவக்கூட்டம் (படம்—2). திரௌபதியென்று வழங்கும் தேவியைப்போலவே, இவளும் நான்கு கணங்களைத் தனது பரிவாரங்களாகப் பெற்றிருக்கிறாள். சிற்பத்தின் மேல்மூலைகளிலே ஒரு சிங்கமும் ஒரு மானும் அரைகுறையாகத் தெரிகின்றன. தேவி பின் பாதங்களினருகே மண்டியிட்டிருக்கும் இரண்டு புருஷ உருவங்களையும் கவனிப்போம். அவளுக்கு வலப்புறமிருப்பவன் நமக்கு முதுகு காட்டிக்கொண் டிருக்கிறான்; தன் இடதுகையினால் நீண்ட தலைமயிரினையும் வலது கையால் வாளையும் பிடித்திருக்கிறான். இந்தச் சிற்பத்திலும் இம்மனிதன் தன் தலைமயிரை வெட்டப்போவதுபோலத் தோன்றினபோதிலும், வாள் வைத்திருக்குமிடமானது முடிக்கு வெகுதூரம் கீழே யிருப்பது கவனிக்கத்தக்கது.

திருச்சினப்பள்ளியில் கீழ்க் குகையில் இதே பொருளடங்கிய மூன்றாவது சிற்பமொன்று இருக்கிறது (படம்—3). ஆனால் இதைப் பார்க்கும்போது, நாம் முதற்கூறிய கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை. சதுர்ப்புஜையான தேவியினடிகளை வணங்கிக் கொண்டிருக்கும் மனிதன், மற்ற இரண்டிடங்களிற் போலவே தன் குடுமியைப் பிடித்திருப்பினும், அவன் தன் வலக்கை வாளை வைத்திருக்குமிடமானது தன் கழுத்திலேயே யொழிய அவன் தலைமயிரிலில்லை யென்பது பிரத்தியக்ஷம். ஆகையால் நியாயமாய் இங்கு ஒரு கேள்விக்கிடமுண்டு: அதாவது இவ்விடத்தில் சிற்பி காட்டப் புகுந்த விஷயமானது முடியைப் பலியாகக் கொடுப்பதன்றித் தலையையே பலியாகக்கொடுப்பதல்லவா? என்பது.



3. திருச்சிறுப்பள்ளிக் கீழ்த்துறையில் உள்ள சிற்பம்.



4. புள்ளமங்கைச் சிவன் கோயிலிலுள்ள சிற்பம்.

இவ்வரிய விஷயத்திற்கு உதாரணமாகக் கிடைத்திருக்கும் நான்காவது சிற்பத்தையும் பார்த்தால் நமது கேள்விக்கு விடை 'ஆம்' என்றே சொல்லிவிடலாம். இந்தச் சிற்பமானது தஞ்சாவூருக்குத் தெற்கில் பத்து மைல் தூரத்தில் பசுபதி கோயிலின் அருகேயுள்ள புள்ளமங்கை என்னும் கிராமத்துச் சிவன் கோயிலிலுள்ள கர்ப்பக் கிருகத்தின் பின்சுவரை அலங்கரித்து நிற்கிறது. இது நீண்ட கொம்புகள் வாய்ந்த மயிடன் தலைமேல் எட்டுக் கைகளுடன் நின்றுகொண்டிருப்பதாய் வெகு அழகாக அமைந்த துர்க்காதேவியின் உருவம். தேவியானவள் விசித்திரமாகச் செதுக்கப்பெற்ற மகர தோரணத்தோடு கூடின ஒரு மாடப்புரையில் அமைக்கப்பட்டிருக்கிறாள். இம்மாடப்புரைக்கு இருபுறமும் கொடுங்கையைத் தாங்கி நிற்கும் வெளித்தூண்கள்வரையு முள்ள இடத்தில் காட்டப்பட்டிருக்கும் உருவங்கள் இப்பயங்கர தேவியின் பரிவாரங்களையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். முதலாவது, மாமல்லபுரத்து வராகமண்டபத்துச் சிற்பத்தில் மேல்மூலைகளில் அமைக்கப்பட்ட சிங்கம் மான் ஆகிய இவ்விரண்டு மிருகங்களும் இங்கேயும் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இங்கு உள்ள மானின் கொம்புகள் கிளைத்திருக்கின்றன; அதன் முன்பாக ஒரு கணத்தானும் உண்டு. இவ்விரண்டு மிருகங்களுக்கும் கீழே ஒவ்வொரு புருஷன் மண்டிபோட்டுக்கொண்டு இருக்கிறான். துர்க்கையின் வலதுபுறமிருப்பவனே, நாம் இதுகாறும் விசேஷமாகக் கவனித்துவந்த உருவங்கள் மற்றச் சிற்பங்களில் என்ன நிலையில் காணப்பட்டனவோ அதே நிலையில் காணப்படுகிறான்; ஆனால் இந்தச் சிற்பத்தில் அவன் தன் தலையை அறுத்துத் தேவிக்கு பலியாக இடத் துணிந்திருக்கிறானென்பது ஐயமறத் தெளியக்கூடியதாக இருக்கிறது. அதே மாதிரி, தேவியின் இடதுபுறம் மண்டியிட்டிருப்பவன் தன் தொடையினின்றும் சதையை வெட்டுகிறவன்போல் புலப்படுகிறான்.

புள்ளமங்கைச் சிவாலயத்தில் அக்கோயிலுக் குரியனவாயும் பரகேஸரிவர்மன் முதலிய சோழ அரசர்கள் காலத்தனவாயும் உள்ள பல தான சாஸனங்கள் இருக்கின்றன. அக் கோயிலின் அலங்காரச் சிற்பங்கள் பல்லவர் காலத்துச் சிற்பங்களைப்போல் சுத்தத் தன்மையும் ஆற்றலும் வாய்ந்திராவிடினும், பிற்காலத்துத் தமிழ்ச் சிற்பங்களிற்போல் மிதமிஞ்சி வளர்த்தப்படாது வளப்பமும் வனப்பும் பெற்று மிகச் சிறந்து விளங்குகின்றன. பிரகிருத விஷயமான சிற்பக்குழாமானது, பல்லவர்காலத்துக் கட்டடங்களில் கண்ட சிற்பங்கள் காலக் கிரமத்திலடைந்த பரிணாமமென்பது திண்ணம். ஆகையால், நாம் எடுத்துக்காட்டிய ஒவ்வொரு சிற்பத்திலும் தேவியின்

வலது பக்கம் மண்டிபோட்டுக்கொண்டிருக்கும் மனிதன் தன் தலையைப் பலியாகக் கொடுக்கத் துணிந்தவனென்றே தீர்மானிப்பது தவறாகாது. ஒரு சமயம் இந்நிலையில் காட்டப்பெற்ற தேவியின் பக்தன் அக்கோயிலை ஸ்தாபித்தவருள் ஒருவனாயிருக்கலாம். தெய்வத்தினிடத்துத் தனக்கிருந்த மிகுந்த பக்தியையும், அத்தெய்வத்திற்குத் தன் தலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தான் சித்தமாயிருப்பதையும் இவ்வாறு குறித்திருக்கலாம்.*

யாராவது இச்சிற்பங்களிற் காட்டியபடி தானே தன் தலையை அறுத்துக்கொள்ளுவது சாத்தியமா என்று விசாரிக்கும் நோக்கம் நமக்கில்லை. இஃது எப்படி யிருப்பினும், இக்காரியத்தில் தலைப்படுவான் ஒருவனுக்கு அளவிறந்த மனத்துணிவும் அசாதாரணமான கைச் சாமர்த்தியமும் அவசியம். இந்தியாவில் முற்காலத்தில் இம்மாதிரியான ஆத்மத் தியாகம் சம்பவிக்கக் கூடியதாகக் கருதப்பட்டு வந்ததுமாத்திரம் நிச்சயம். வடமொழியிலுள்ள இலக்கிய நூல்களில் இதே விஷயத்தைக் காணலாம். சோம தேவருடைய 'கதா ஸரித்ஸாகர' த்தினின்று சில உதாரணங்களைத் தருகிறேன்.

முதலாவது, வீரவரனைக் கதா நாயகனாகக்கொண்ட பிரசித்தமான கதை ஒன்று இப் பெருங்கதைக் கடலில் இரண்டு விதமாக அமைந்திருக்கிறது. அதில் இரண்டாவதாயமைந்தது வேதாளம் கூறும் கதைகளில் நான்காவது. ஆகையால் இக்கதையானது யாவராலும் விரும்பப்பட்ட 'வேதாள பஞ்சவிம்சதி' என்னும் கதைக் கொத்தைச் சேர்ந்ததாகும். மேலும் இவ்வுருக்கமுடைய கதையானது ஹிதோபதேசத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கதா ஸரித்ஸாகரத்திலிருக்கிறபடி இக் கதையைப் பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். இங்கு ஒரு பிராமணனாகக் குறிக்கப்பட்ட கதா நாயகன் வீரவரன் என்பான் தன் எஜமானனான சூத்ரகனென்னும் அரசனுடைய வாழ்நாளை நீடிக்கும்பொருட்டாக, தன் மகன் சத்வவரனுடைய தலையைச் சாமுண்டி தேவிக்குப் பலியிடுகிறான். அதனாலுண்டான சோகத்தினால் அவன் மகள் இறந்துபட, அவனுடைய மனைவி தன் இரு குழந்தைகளும் ஏற்றப்பட்டிருக்கும் ஈமத்தின் மீதே தானும் ஏறி உயிர் நீக்கத் தீர்மானிக்கிறாள். பிற்பாடு வீரவரன் தன்னையும் பலியாகக் கொடுத்து அம்பிகையின் பிரஸாதத்தைப் பெற விரும்புகிறான். காளி மஹிஷாசுரமர்த்தனியின் மீது ஒரு ஸ்தோத்திரஞ் சொல்லிவிட்டு, தன்

* இந்த அபிப்பிராயம் அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.—நீ.

வாளால் ஓரே வெட்டாகத் தன் தலையை வெட்டிவிடுகிறான். அரசனான சூத்ரகனும், இவனுடைய பெரும் பக்திக்கு ஈடுபட்டு, தன் அருமைச் சேவகனைத் தானும் பின்பற்ற எத்தனிக்கிறான். அப்போது ஆகாயத்தினின்று ஒரு குரல் அவனைத் தடுக்கிறது. கடைசியாய் யாவரும் உயிர் மீண்டனர்.

கதா ஸரித்ஸாகரத்தில் மற்றோரிடத்திலும் இக்கதையே சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. இவ்விடத்தும் கதா நாயகன் வீரவரனென்னும் ஓர் அந்தணனே. ஆனால் அவன் எஜமானன் விக்ரமபுரத்தில் வசித்த விக்ரமதுங்கனென்னும் ஓர் அரசன். வீரவரன் சண்டிகாதேவியைத் துதித்துத் தன் தலையை யறுக்கத் தயாரானபோது அசரீரியானது அவனை ஆத்திரமாக ஒன்றுஞ் செய்யலாகாதென்று தடுத்து ஒரு வரம் தருவதாகச் சொல்லிற்று. அப்போது வீரவரன் விக்ரமதுங்கன் உயிரையும் தன் பெண்டு பிள்ளைகளின் உயிர்களையும் தரும்படி வேண்டினான்.

ஹிதோபதேசக் கதையானது வேதாளக் கதையை ஒத்திருக்கிறது. வசன நடையில் அமைந்திருக்கும் இக்கதையில் வீரவரன் ஒரு ராஜபுத்ரனாகக் கூறப்பட்டிருப்பது சகஜமே; ஆயினும் இஃது ஒரு புதிய கற்பனை. அரசன் பெயர் சூத்ரகன்தான். அரசனுக்கு வரப்போகிற கதியை அழுதுகொண்டு கதா நாயகனுக்கு அறிவுறுத்தும் பெண்ணானவள் பூதேவியல்ல; சூத்ரக அரசனின் இராச்சிய இலக்குமியே.* வீரவரனென்னும் ராஜபுத்ரன், தன் மகன் தலையை இங்குப் பகவதி ஸர்வமங்களையென்று அழைக்கப்பட்ட தேவிக்குப் பலியாகக் கொடுத்த பிறகு, தன் தலையையும் வெட்டிவிடுகிறான். அவன் மனைவியும் அப்படியே செய்கிறாள். இச்செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்த அரசன், தன் தலையையும் அறுத்துவைக்க வாளைக் கையில் எடுக்கவே, தேவி பிரத்யக்ஷமாக வந்து அவனைத் தடுக்கிறாள். யாவரும் திரும்ப உயிர் பெறுகிறார்கள்.

கதா ஸரித்ஸாகரத்தில் வேதாளம் சொல்லுகிற ஆறாவது கதையிலும் தேவிக்கு இடும் தலைப் பலிக்கு ஒரு விந்தையான உதாரணம் உண்டு. இந்தக் கதைக்கு நாயகன் தவளன் என்ற ஒரு வண்ணான். அவன் மணம் புரிந்துகொண்டு சோபவதி என்னும் ஊரிலுள்ள மிகப் பிரவசித்திபெற்ற ஒரு கௌரி கோயிலினுட் சென்று தேவியைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்ற எண்ணத்தை மேலிட்டுக்கொண்டு, தன் தலையைக் கோயில்மணியின் சங்கிலியில்

* இவ்விடத்தில் பூதேவியே அரசனின் லக்ஷ்மியாகக் கூறப்பட்டிருக்கிறாள் என்பது தெளிவு—நீ.

கட்டிவிட்டுப் பிறகு அதைத் துண்டித்தான்; தலையை முதலில் சங்கிலியிற் கட்டியது அதை அறுப்பது கொஞ்சம் இலகுவாயிருத்தலின் பொருட்டே. அவன் மனைவியுடன் வெளியிற் காத்திருந்த மைத்துனன் கடைசியில் கோயிலினுட் சென்று நடந்த செய்தியை யறிந்து தானும் அவ்வளவு உத்தமமான தியாகமுறையைப் பின்பற்றினன். கல்யாணப் பெண்ணானவள் தன் மணவாளனும் சகோதரனும் தற்கொலை செய்துகொண்ட விபரமறிந்ததும், தானும் மனமுடைந்து ஓர் அசோக மரத்தில் தூக்குப் போட்டுக்கொள்ளத் தொடங்குகிருள். தானே ஏற்படுத்திக்கொண்ட இம் மரண வழியினின்றும் ஓர் அசரீரியாற் றடுக்கப்பட்டு அதனிடத்து ஒரு வரமுமடைந்தாள். அவள் கேட்ட வரமானது தன் கணவனும் சகோதரனும் உயிர் பெற்று எழவேண்டுமென்பதென்று சொல்ல வேண்டா; ஆனல் அவ்விரு தலைகளையும் அவ்விருவருடைய உடல்களோடு பொருத்தவேண்டியதா யிருந்தது; பதட்டத்தால் தலைகளை மாற்றி வைத்துவிட்டாள். அவ்விரு புருஷர்களில் யார் அவள் கணவனுவா னென்னும் வினவுடன் கதை முடிவு பெறுகிறது.

இதுகாறும் காட்டப்பட்ட உதாரணங்களால் தங்கள் தலையைத் தாங்களே பலிகொடுக்கும் முறை ஸஹஜமாயிருந்ததென்று ஏற்படுகிறது. இந்த உத்கிருஷ்டமான பலி எப்போதும் ஒரு தேவிக்கே கொடுக்கப்படுகிறது. இது பிரகிருதத்தில் கவனிக்கத் தகுந்த விஷயம். ஏனென்ருல் நாம் மேல் எடுத்துக்காட்டிய சிற்பங்களிலும் இதையே காண்கிரேம். தங்கள் தலையைப் பலியாகக் கொடுக்கும் முறையானது இந்தியாவில் யதார்த்தமாகக் கையாளப்பட்டு வந்ததென்பது மிஸ்டர் ஹீராலால் எழுதிய ஒரு விசித்திரமான கட்டுரையாலும் வெளிப்படுகிறது. ஹிந்துக்களில் சில கிளையினர், அதற்காகப் பிரத்தியேகமாக ஏற்பட்ட மண்டபங்களில் தங்கள் தலைகளையும் நாக்குக்களையும் வெட்டியிடுவது வழக்கமென்பதும், அவர்கள் இவ்விஷயத்திற் காட்டிய ஆற்றலானது இதைக் காட்டிலும் மேன்மையான காரியத்தில் செலுத்தப்படவேண்டுந் தகுதிவாய்ந்த தென்பதும் அன்னவர் கூற்று.

பாஹியன் யாத்திரை வரலாறு

ஜி. தாத்தாச்சாரி

முன்னுரை

குதிரைகளும் தாமே இயங்கும் (மோடார்) வண்டிகளும் பழையனவாகி ஆகாய விமானமே பிரயாண சாதனமாக வழக்கத்தில் வருகிற இக்காலத்தில் கால்நடையாகச் செய்த ஒரு பிரயாண வரலாற்றைப்பற்றி எழுதுவது உசிதமோவெனச் சிலர் நினைக்கலாம். என்றாலும் இந்தப் பிரயாணம் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னால் செய்யப்பட்டதென்பதை நினைக்கும்போது உள்ளம் உவகை அடைகின்றது. தமது மார்க்கஸ்தாபகருடைய கிரந்தங்களைத் தேடுவதற்காகவே இந்தப் பிரயாணம் செய்யப்பட்டதென்றால் இதைச் செய்த பா-ஹியனுடைய பரமோபகாரம் இத்தன்மையதென விளங்கும். இவருக்குப் பிறகு பலர் இதே நோக்கமாக வேறு நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். என்றாலும் இவர்தாம் இவ்விஷயத்தில் வழி காட்டியவர்.

பா-ஹியன் சீனதேசத்தில் ஷன்-ஸி மாகாணத்தில் பிங்-யங் ஜில்லாவில் வூ-யங் என்னும் நகரத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் குங் என்பது. இவர் தம்முடைய மூன்றாவது பிராயத்தில் பௌத்த பிக்ஷுவாகி, அக் கொள்கையின் முறைதவறாதொழுகினர். தம்முடைய நாட்டில் புத்தபகவானுடைய ஆகமங்கள் கிடைக்காமையால் அவைகளைத் தேடிவருவதற்காக இவர் இன்னும் சில பிக்ஷுக்களுடன் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். பதினான்கு வருஷங்கள் இவர் இந்தியாவில் தங்கிச் சஞ்சாரம் செய்து கிரந்தங்களை அரிதின் முயன்று பெற்றுத் திரும்பிச் சீனதேசம் சென்றனர். சென்றதும் தாம் கொணர்ந்த கிரந்தங்களைச் சீனபாஷையில் மொழிபெயர்த்துத் தமது பிரயாண வரலாற்றையும் எழுதிவைத்தார். காலகதியை அடையும்போது இவருக்கு வயது எண்பத்தாறு.

இவ்வரலாறு சீனபாஷையில் போ-க்வோ-கி (*Fo-Kuo-Ki*) என்று பெயர் பெறும். முதன்முதலில் இது பிரஞ்சு பாஷையில் ஆபெல் ரேமுஸத் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது. ஆங்கிலத்தில் பீல் என்பவருடைய மொழி பெயர்ப்பு முதலில்

உண்டாகியது. பின்னர் 7, 8 வருஷங்களுக்கு முன்னால் ஜைல்ஸ் என்பவருடைய மொழி பெயர்ப்பு வெளிவந்தது. தென்னிந்தியாவில் வழங்கும் பாஷைகளில் இதுவரையில் யாதொரு மொழி பெயர்ப்பும் வெளியானதாகத் தெரியவில்லை.

இந்த மொழிபெயர்ப்பு ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவிச் செய்யப்பட்டது. சீன மூலத்திலிருந்தே நேரில் மொழி மாற்றப் படாததால் பா-ஹியனுடைய உள்ளக்கருத்து ஒரோவிடங்களில் ஒரு சிறிது மாறியிருக்கவும் கூடும். என்றாலும் இவ்வரலாறு பதினைந்து நூற்றாண்டுகளுக்குமுன் நமது நாடிருந்த நிலைமையை நன்கு தெரிவிக்கிறபடியால் சரித்திர ஆராய்ச்சிக்காரருக்கும் மற்றும் பிராசீன அபிமானிகளுக்கும் உபயோகமாக இருக்கும் என்ற நம்பிக்கையே இந்தத் தமிழ் மொழி பெயர்ப்புக்குக் காரணமாயிற்று.

நூல்

சங்கன் நகரத்தில் முன்பு பா-ஹியன் வசித்த காலத்தில் விநய பிடகம் முற்றிலும் கிடைக்காமலிருந்தது. இதனால் அவருக்கு மன வருத்தம் உண்டாயிற்று. ஆகவே பின்னர் அவர் சி-ஹை ஸம்வத்ஸரமான ஹூங்-ஷியின் இரண்டாவது வருஷத்தில் ஹ்-விகிங், தவோ-சிங், ஹ்வி-யிங், ஹ்வி-வூ முதலியவர்களுடன் விநயபிடகத்தின் ஆகமங்களைத் தேடுவதற்காக இந்தியாவுக்குப் போக உடன் பட்டனர்.

இவர்கள் சங்கன் நகரத்திலிருந்து யாத்திரையாகப் புறப்பட்டு லுங் ஜில்லாவைத் தாண்டிச்சென்று, கீன்-க்வி தேசத்தை அடைந்தனர். இங்கு இவர்கள் மழைக்காலத்தினால் தங்கினர். மழைக்காலம் கழிந்த பிறகு இவர்கள் பயணப்பட்டுச்சென்று நியு-தன் தேசத்துக்கு வந்தனர். பிறகு யங்-லு மலைகளைக் கடந்து ராணுவ ஸ்தலமான சங்-யே நகரையடைந்தனர். அப்போது சங்-யே நகரத்தில் கலவரம் மிகுந்திருந்தது. பாதைகள் மூடப்பட்டிருந்தன. சங்-யேயின் அரசன் கவலை கொண்டு இவர்களை அங்கேயே தங்கச் செய்து, தானே இவர்களுக்கு உணவு முதலியன அளித்தான். இங்கே இவர்கள் சி-யேன், ஹ்வீ-கின், ஸங்-ஷௌ, பவோ-யுன், ஸங்-கிங் முதலியோரைச் சந்தித்தனர். அவர்களும் இவர்களைப் போலவே ஒரே மனத்தினராக இருக்கக்கண்டு சந்தோஷித்து, இரு சாராரும் சேர்ந்தே மழைக்காலத்தை அங்குக் கழித்தனர். மழைக்காலம் அகன்றதும் அவர்கள் துன்-ஹ்வங் நகரை நோக்கிப் புறப்பட்டுச்சென்றனர். இதன் அரண்கள் கிழக்கு மேற்கில் 80 லீ விஸ்தாரமும் தெற்கு வடக்கில் 40லீ விஸ்தாரமும் இருக்கும். அவர்கள்

எல்லோரும் இங்கு ஒரு மாதமும் சில நாள்களும் தங்கினர். அப்பால் பா-ஹியனும் மற்றவர்களுமாக ஐந்து பேர்கள் ஓர் உத்யோகஸ்தரைப் பின்பற்றி முதலில் புறப்பட்டுப் பவோ-யுன் என்பவரையும் எஞ்சிய மற்றவர்களையும் விட்டுப் பிரிந்தனர். துன்-ஹுவங் நகரின் அதிபதியான லீ-ஹோ என்பவன் இவர்கள் பாலைவனத்தைக் கடந்து செல்வதற்கான சவுகரியங்களைச் செய்து கொடுத்தான். இந்தப் பாலைவனத்தில் தீயகுணங்கொண்ட பூதங்கள் பல வுள்ளன. உஷ்ணமான காற்று வீசிக்கொண்டேயிருக்கும். இவைகளை எதிர்த்துப் போகிறவர்கள் அனைவரும் ஒருவர்கூட மிச்சமில்லாமல் இறந்து போகின்றனர். பக்ஷிகள் ஆகாயத்தில் பறப்பதில்லை. கீழே மிருகங்கள் சஞ்சரிப்பதில்லை. அங்கு இறந்துபோன மனிதர்களுடைய நொறுங்கிய எலும்புகள் மட்டும் திசையைக் காட்டுமே தவிரப் போக வேண்டிய பாதையை நாடி எங்கும், கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் பார்த்தபோதிலும் மார்க்கத்தைத் தெரிந்துகொள்வது அசாத்தியமாக இருக்கும்.

பதினேழு நாள்களில் 1500 லீ தூரம் கடந்து சென்றதும் இவர்கள் ஷேன்-ஷேன் என்ற நாட்டை அடைந்தனர்.

இந்த நாடு மேடுபள்ளமுள்ளதாயும் பயன் தராததாயும் இருக்கிறது. ஸாதாரண ஜனங்களின் உடை நயமற்றதாயும் சீனர்களின் உடையைப்போன்றதாயும் உள்ளது. பட்டிலும் உரோமத்தாலான வஸ்திரத்திலுந்தான் அவர்களிடம் வித்தியாசம் காணப்படுகிறது. இந்நாட்டு அரசன் (பௌத்த) தர்மத்தை அபிமானிப்பவனாக இருக்கிறான். இங்கு 4000 பிக்ஷுக்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஹீனயன மார்க்கத்தை அவலம்பித்தவர்கள். இந்த நாட்டிலுள்ள ச்ரமணர்களும் மற்றவர்களும் இந்தியாவில் வழங்கும் தர்மத்தையே அனுஷ்டிக்கின்றனர். ஆனால் சிலர் நாகரிகமுள்ளவர்களாயும் சிலர் நாகரிகமற்றவர்களாயும் இருக்கின்றனர். இங்கிருந்து மேற்கே சென்றால் இடைப்படும் நாடுகள் எல்லாம் இவ்விஷயத்தில் ஒரே மாதிரியாக விருக்கின்றன. பேசும்பாஷைகளில் மட்டும் ஜனங்கள் வித்தியாசப்படுகின்றனர். என்றாலும் பௌத்த பிக்ஷுக்கள் அனைவரும் இந்தியக் கிரந்தங்களையும் இந்திய பாஷையையுமே உபயோகிக்கின்றனர். இங்கு ஒரு மாதமோ அதற்கு மேலாகவோ இவர்கள் இருந்து மறுபடி புறப்பட்டு வடதெற்கு முகமாகப் பதினைந்து நாட்கள் சென்று வூ-யி நாட்டை அடைந்தனர். வூ-யியிலும் சுமார் 4000 பிக்ஷுக்கள் இருக்கின்றனர். அனைவரும் ஹீனயன மார்க்கத்தினர். அவர்களுடைய ஆசார அனுஷ்டானங்கள் நன்றாக வரையறுக்கப்பட்டுள்ளன. சீனதேசத்து ச்ரமணர்கள்

இங்கு வரும்போது அந்தப் பிக்ஷுக்களுடைய ஆசார அனுஷ்டானங்கள் இப்படி இருக்குமென்று எதிர்பார்த்திருப்பதில்லை. இங்குப் பா-ஹியன் பூ வம்சத்து உத்யோகஸ்தரான குங்-ஸுன் என்பவருடைய ஆதரவைப் பெற்று இரண்டு மாதமும் சில நாளும் தங்கியிருந்தனர். பிறகு அவர் பவோ-யூனும் மற்றவர்களும் இருந்தவிடத்துக்குத் திரும்பிச்சென்றனர். கடைசியில் வூ-யி நாட்டு ஜனங்கள் இவர்களுக்குத் தகுந்தபடி மரியாதை காட்டாமலும் அதிதி ஸத்காரத்தை மனப்பூர்வமாகச் செய்யாமலும் இருந்த காரணத்தால் சி-யேன், ஹ்வீ-கின், ஹ்வீ-வூ என்பவர்கள் யாத்திரைக்கு வேண்டிய அவசிய ஸாதனங்களைப் பெறுவதற்காகக் கவோ-சங் என்னுமிடத்துக்கு உடனே திரும்பிப்போயினர். பூகுங்-ஸுன் அளித்த ஸன்மானங்களால் திருப்தியடைந்த பா-ஹியனும் மற்றவர்களும் உடனே தென்மேற்கு முகமாய்ப் பிரயாணமாயினர். பாதையில் வீடுகளாவது ஜனங்களாவது தென்படவில்லை. வழியாலும் வழியிலுள்ள நதிகளாலும் இவர்களுக்கு யாத்திரை செய்த காலத்தில் நேர்ந்த கஷ்டங்கள் அளவுபடுவனவல்ல. மார்க்கத்தில் ஒரு மாதமும் ஐந்து நாள்களும் இருந்து, பிறகு மெதுவாகக் கோடான் போய்ச் சேர்ந்தனர்.

இந்தத் தேசம் சுபிக்ஷமாக இருக்கிறது. ஜனங்கள் செல்வவான்களாக இருக்கின்றனர். மிச்சமொருவரும் இல்லாமல் எல்லாரும் பௌத்த தர்மத்தை அபிமானிக்கின்றனர். பரஸ்பர உபசரணைகளிலும் அவர்கள் தர்ம ஸம்பந்தமான ஸங்கீதத்தை உபயோகிக்கின்றனர். பிக்ஷுக்கள் கோடிக்கணக்காகவே இருக்கின்றனர். முக்கியமாக அவர்கள் மஹாயான மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவருக்கும் (பொதுவாகவே) உணவளிக்கப்படுகிறது. ஜனங்கள் இங்குமங்கும் வாழ்கின்றனர். வீட்டின் கதவுகளின் முன்னால் அவர்கள் சிறிய ஸ்தூபங்களை எழுப்புகின்றனர். அவைகளில் வெகு சிறியது சுமார் இருபது அடி உயரமிருக்கும். அந்நிய நாடுகளிலிருந்து வரும் பிக்ஷுக்களுடைய உபசரணைக்காகவும் அவர்கள் வேண்டியவற்றைக் கொடுப்பதற்காகவும் விஹாரங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நாட்டு அரசன் பா-ஹியனையும் மற்றையோரையும் ஒரு ஸங்காராமத்தில் தங்கச்செய்தான். அந்த ஸங்காராமத்தின் பெயர் கோமதி யென்பது. அது மூவாயிரம் பிக்ஷுக்கள் உள்ள மஹாயானத்தைச் சேர்ந்ததோர் ஆலயம். மணி ஓசை கேட்டதும் அவர்கள் உணவுக்காக ஒன்று கூடுகின்றனர். போஜனசாலைக்குள் நுழைந்தவுடன் அவர்கள் கம்பீர நடையுடையவராகி, ஒழுங்காகத் தங்கள் தங்களுக்கேற்பட்ட இடங்களில் உட்காருகின்றனர்.

எல்லோரும் மௌனமாகவே இருக்கின்றனர். போஜன பாத்திரங்களிலிருந்து சப்தமுண்டாவதில்லை. பரிசாரகர்கள் மேன்மேலும் ஆகாரங்களைப் பரிமாறும்போது, ஒருவரோடொருவர் பேசாமல் கைகளால்மட்டும் சமிஜ்ஞை காட்டவேண்டு மென்ற விதி ஏற்பட்டுள்ளது. ஹ்வீ-கிங், தவோ-சிங், ஹ்வீ-தா (மூவரும்) கீ-ஷா தேசத்தை நோக்கி முன்னதாகப் புறப்பட்டுப் போயினர். ஆனால் பா-ஹியனும் மற்றையோரும் விக்ரக உத்ஸவத்தைக் காண ஆவல் கொண்டு அங்கேயே மூன்று மாதமும் சில நாள்களும் தங்கினர். இந்தத் தேசத்தில் சிறியவைகளைக் கணக்கிடாமல் பெரியவைகளான ஸங்காராமங்கள் மட்டும் பதினான்கு உள்ளன. நான்காவது மாதத்தின் முதல் நாள் தொடங்கி நகரிலுள்ள வீதிகளைச் சுத்தமாக்கித் தண்ணீர் தெளித்துத் தெருக்களை அலங்காரம் செய்கின்றனர். நகர வாசலுக்கப்பால் ஒரு பெரிய பந்தர்போட்டு அதில் ஒவ்வொருவிதமான அலங்காரத்தையும் செய்கின்றனர். இவ்விடத்தில் அரசனும் அரசியும் அந்தப்புர ஸ்திரீகளும் உட்காருவர். கோமதி ஸங்காராமப் பிக்ஷுக்கள் அரசனால் முக்கியமாக அபிமானிக்கப்படும் மஹாயானத்தைச் சேர்ந்தவராதலால், அவர்கள் தங்களுடைய விக்ரகங்களை முதலில் எழுந்தருளுவிக்கின்றனர். நகரத்துக்கு மூன்று அல்லது நான்கு லீ தூரத்தில் அவர்கள் முப்பது அடி உயரமும் நான்கு சக்கரங்கள் உள்ளதுமான சலிக்கும் அரண்மனையைப்போன்ற ரதத்தைச் செய்து அதை ஏழுவிதமான ரத்னங்களால் அலங்கரிக்கின்றனர். அதன் மீது பட்டுக் கொடிகளையும் திரைச் சீலைகளையும் கட்டுகின்றனர். துணைவர்களான இரண்டு போதிஸத்வர்களுடன் புத்தவிக்ரகத்தை ரதத்தில் எழுந்தருளச் செய்கின்றனர். தேவர்கள் அவர்களுடைய அருகில் நின்று ஏவல் கேட்கின்றனர். பொன்னாலும் வெள்ளியாலும் செய்த ஆபரணங்கள் பலவும் ஆகாயத்தில் தொங்குகின்றன. நகரவாசலுக்கு நூறு தப்படிக்குள் விக்ரகம் வந்தவுடன் அரசன் தனது கிரீடத்தை அகற்றிவிட்டு, பழைய வஸ்திரங்களைக் களைந்து, புதிய வஸ்திரங்களைத் தரித்து, புஷ்பங்களையும் தூபங்களையும் தன் கையில் கொண்டு, பரிவாரங்கள் சூழ்ந்துவர, நகரினின்றும் பாதசாரியாகப் புறப்படுகிறான். அவன் விக்ரகத்தின் அருகில் வந்தவுடன், தலைவணங்கி, அதன் திருவடிகளில் புஷ்பங்களை அருச்சனை செய்து தூபங்காட்டி வழிபாடு செய்கிறான். நகருக்குள் நுழைந்ததும் அரசியும் அந்தப்புர ஸ்திரீகளும் கோபுரவாசலின் மீதிருந்து எல்லாவிதமான புஷ்பங்களையும் தூவி வாரிக் கீழே யிறைக்கின்றனர். வழிபாட்டுக்கான ஏற்பாடுகள் அவ்வளவு அழகாகவுள்ளன.

ரதங்கள் எல்லாம் வெவ்வேறு விதமானவை. ஒவ்வொரு ஸங்காராமத்துக்கும் தனித்தனியே உத்ஸவதினம் ஏற்பட்டுள்ளது. உத்ஸவங்கள் நான்காவது மாதத்தின் முதல் நாளில் ஆரம்பமாகி, பதினான்கு நாள் வரையில் நடந்து முடிவடைகின்றன. அவை முடிந்ததும் அரசனும் அரசியும் அரண்மனைக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

நகரத்துக்கு ஏழு அல்லது எட்டு லீ மேற்கில் ராஜன்ய நவவிஹாரம் என்றவோர் ஸங்காராமமுள்ளது. அதைக் கட்டி முடிப்பதற்கு எண்பது வருஷங்கள் ஆயின. மூன்று அரசர்களுடைய காலத்துக்குப் பிறகுதான் அது முடிவுற்றது. அஃது இருபது சங் (290 அடி) உயரமிருக்கும்; இழைப்பு வேலையாலும் சித்திர வேலையாலும் அலங்கரிக்கப்பட்டுப் பொன்னாலும் வெள்ளியாலும் மூடப்பட்டுள்ளது. முகட்டின்மேலே எல்லாவிதமான ஆபரணங்களும் ஒன்று கூடி அதன் அழகை முற்றுவிக்கின்றன. கோபுரத்தின் பின்னால் வெகு பெரியதும் அழகானதுமான ஒரு புத்த சைத்யம் இருக்கிறது. அதன் உத்திரங்கள், தூண்கள், கதவுகள், நிலைச்சட்டங்கள் எல்லாம் பொன் தகடுகளால் மூடப்பட்டுள்ளன. இன்னும் வெகு அழகானவையும் இப்படிப்பட்டவை யென்று விவரிக்கமுடியாதபடி அலங்கரிக்கப்பட்டவையுமான பிக்ஷுக்களின் அறைகளும் அங்கே உள்ளன. லிங் மலைக்குக் கிழக்கேயுள்ள ஆறு தேசத்தார்களும், தங்களிடமிருக்கும் விலைமதிக்கக்கூடாத அருமையான ஆபரணங்களிற் பலவற்றை (இந்த விஹாரத்துக்கு)க் கொடுத்திருக்கின்றனர்.

(தொடரும்)

அரசியல் முறை

தி. சிவராம சேதுப்பிள்ளை

சட்டப்படி சேகரித்த பொருள்யாவையும் பார்லிமெண்டின் உத்திரவின்றிச் செலவிடச் சுதந்திரம் இல்லையேனும் 1818-ம் வருஷம் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் மூலமாக நிறுவப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நடக்க முடியும் என்ற கருத்துக் குறிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் ஆற்றலும் செயலும் வளரவளர மாகாணங்களுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கவேண்டியது அவசியமாயிற்று. 1858-ம் வருஷம் விக்டோரியா மகாராணியார் இந்திய அரசின் பொறுப்பைக் கைக்கொண்டார். 1859-இல் வில்ஸன் என்பவர் பொருள் ஆதார அங்கத்தினராய் அரசர் பிரதிநிதியின் அவையில் அமர்ந்திருந்தார். அச்சமயம் நம் ஆட்சியின் பொருள் நிலை மிக்க கேவலமாய் இருந்தது. ராணுவத் திட்டத்திலும், ஏனைய சர்க்கார்ச் செலவுத் திட்டத்திலும் சிக்கனம் செய்தார். கணக்குப் பரிசோதகர்களும், நோட் நாணயங்களும் ஏற்படுத்தினர். நம் தேசத்தின் பொருள் ஆதார இலாகாவின் (*Finance Department*) அஸ்திவாரத்தை அப்பெரியாரே நன்கு அமைத்துச் சென்றார்.

பத்து ஆண்டுகள் கழிந்தன. மேயோ (*Mayo*) என்பவர் அரசர் பிரதிநிதியாய் ஆண்டார். மாகாண சர்க்கார்கள் தங்களிடம் ஒப்புவித்த கடமைகளைச் சரிவர நடத்திவைக்க அவைகளுக்கு இவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்பதைத் தீர்மானங்கள் மூலமாய் நிர்ணயித்தார். இந்த ஏற்பாடு சரிவர நடந்து வந்தபடியால் 1877-இல் லிட்டன் பெருமான் வரிகளில் இவை இவை மாகாணங்களுக்குரிய வரிகள் என்று ஏற்படுத்தத் துணிந்தார். அங்ஙனம் குறிப்பிட்ட வரிகளில் முக்கியமானவை: முத்திரைத்தாள் கப்பம் (*Stamp duty*), கள் வரி (*Excise on alcohol*), வருமான வரி (*Income Tax*); ஆனால் வருமான வரியில் எவ்வளவு மாகாணங்களில் வசூலிக்கப்படுகின்றதோ அம்மட்டுந்தான் மாகாணங்களுக்கு உரியது.

இவ்வண்ணம் வகுக்கப்பட்ட வரிகள் 1882-ம் வருஷம் மறுபடியும் கவர்ன்மெண்டின் ஆராய்ச்சிக்குள் கொண்டுவரப்பட்டன. நாளடைவில் மாகாணங்களுக்குச் சௌகரியங்கள் ஏற்பட்டும், வேண்

டியனவற்றிற்குப் பணம் சேகரித்துக் கொள்ளவும், தகுந்த முறையில் செலவிட்டுக்கொள்ளவும் முடியாமல் போயிற்று. பொருணூல் நிபுணர்கள் கூடினர். இந்தியா கவர்ன்மெண்டிற்கு வேண்டிய திரவிய ஆதாரங்கள் எளிதில் அமைந்து கிடக்கவேண்டும்; பின்பு, மத்திய கவர்ன்மெண்டிற்கு உட்பட்டு ஆட்சிபுரியும் மாகாணங்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் கடமைகளைச் செவ்வனே நடத்திவைக்கப் போதுமான பொருள்வேண்டும்; இவைகளை எப்படி ஏற்படுத்துவது என்பது 1882-ம் வருஷம் தீர்மானிக்கப்பட்டது.

தொழில் முறைமையாயும் வியாபார முறைமையாயும் சிற்சில இலாகாக்கள் நடந்தேறின. அவை தபால் இருப்புப்பாதை முதலியன. அவற்றில் வரும் லாபங்கள் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்தவை. பின்னர், சிலவருமானங்கள் எந்த மாகாணத்தில் உற்பத்தி என்று குறிப்பிட முடியாமல் போயின. அவை, உப்புவரி, அபின்வரி, கடற்சுங்கம் (*Customs*) போன்றவை. இவைகளும் இந்திய சர்க்காருக்குச் சொந்தம். ஆயினும் இந்த வரிகளால் கிடைத்த தொகை செலவிற்குக் கட்டவில்லை. ஆகையால் மற்றவரிகளை மாகாண கவர்ன்மெண்டும் இந்தியா கவர்ன்மெண்டும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். எப்படிப் பங்கிடுவது? ஒவ்வொரு மாகாணத்தின் வரும்படியும், வருஷச் செலவும் பரிசோதிக்கப்பட்டன. பொது விஷயத்தில் சுக்கான் செட்டிக்குக் காலமில்லை. எவர் அதிகம் செலவழிக்கிறாரோ அவருக்கு அவசியம் அதிகம். ஆகவே அவசியத்திற்குத் தகுந்தபடி பங்கை நியமி என்றார்கள் அக்காலத்துப் பொருள்நூல் கரைகண்ட மேதாவிகள். இப்பங்குகள் தொடக்கத்தில், இத்தனை வருஷங்கட்கு என்று ஏற்படுத்தப்பட்டு, பிறகு நிலையாயின. இம்மாதிரி அமைந்து கிடந்த பொருள் ஆதார அமைப்பை மாண்டேகு கண்ணுற்றார்.

சுய ஆட்சி நாளடைவில் வளரவேண்டுமேல், முதலில் மாகாணங்களுக்குக் கூடுமான சுதந்திரம் கொடுக்கவேண்டும். எச்சுதந்திரமும் பொருட் சுதந்திரம் இல்லையேல் பிரயோசனமில்லை. ஆயினும் இந்தியா கவர்ன்மெண்டை, தற்சமயம் நம்மவர்கையில் ஒப்புவிக்க இயலாது. பார்லிமெண்டிற்கு உத்தரவாதிகளான பணியாளர்களே இந்தியா ஆட்சியை நடத்திவரவேண்டும். ஆகையால் பொருள் சேகரிக்கும் முறைகளைக் கூடுமானவரையில் மாகாண கவர்ன்மெண்டிற்கும் இந்திய சர்க்காருக்கும் சம்பந்தமில்லாமல் ஏற்படுத்த வேண்டும். இத்தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர வரிகளை மாகாண வரி என்றும் இந்திய வரி யென்றும் பிரித்து வைப்பது அவசியம். அப்படிப் பிரிக்கும்பொழுது, சிற்சில வரிகளின் இயல்

பாலும், சிற்சில ராஜதானியின் சிக்கனச் செலவின் காரணத்தாலும் இந்தியா கவர்ன்மெண்டிற்கு வரும்படிக் குறைவும் சில ராஜதானிகளுக்கு அதிகத்தொகை வரவும் இருப்பதாக ஏற்பட்டன. இதைச் சரிப்படுத்தி, இந்தியா ஆட்சி நடைபெற எம்மாதிரி ஏற்பாடு செய்யவேண்டும் என்று யோசனை கூற மேஸ்டன் பிரபுவின் தலைமையின் கீழ் ஒரு கழகம் ஏற்படுத்தப்பட்டது.

மெஸ்டன் கமிட்டியார் சென்ற வழி, பார்லிமெண்டு ஏற்படுத்தின நிபந்தனைகளுக்குட்பட்டதென்றே கூறவேண்டும். இந்திய ஆட்சிக்கும் மாகாண ஆட்சிக்கும் எம்மாதிரி பொருள் ஆதார ஏற்பாடு பண்ணலாம் என்று மெஸ்டன் கமிட்டியைக் கேட்டாரில்லை. அவர்களிடம் சொன்னதாவது: 'இன்ன இன்ன வரிகள் இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்தவை; இன்ன இன்ன வரிகளை மாகாணங்கள் கையில் கொடுத்துவிட்டோம். இந்தியா கவர்ன்மெண்டிற்குப் பணம் போதாது. சில மாகாணங்களில் இப்புதிய ஏற்பாட்டால் ஏராளமான தொகை மிச்சம் இருக்கிறது. இவற்றை எப்படிப் பங்கிடலாம் என்பதைக் குறிக்கவேண்டும்' என்பதே. மெஸ்டன் கமிட்டியார் ஒவ்வொரு மாகாண வரவுசெலவுத் திட்டத்தையும் பரிசோதித்தார்கள். எங்கே அதிகம் மிஞ்சிற்றோ அங்கிருந்து கப்பம் கட்டவேண்டியது கடமை; ஆனால் கப்பம் என்கிற ஏற்பாடு கூடியசீக்கிரத்தில் ஒழித்து விடவேண்டும்; அந்த அந்தச் சர்க்காரும் அததற்கு வேண்டிய அளவு தன் பிரதிநிதிகளைக்கொண்டு வரியைச் சேகரித்துக் கொள்ளவேண்டும்; இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட வரிகளையும், இன்னும் மாகாணங்களுக்கு என்று ஒதுக்கப்படாமலிருக்கும் புதிய வரிகள் ஏதேனுமிருந்தால் அவைகளையும் கொண்டு வேண்டிய பொருள் சேகரித்துக் கொள்ள வேண்டும்; அதுவரையில்தான் கப்பம் கட்டும் முறை அநுஷ்டானத்தில் இருக்கலாம் என்று மெஸ்டன் கமிட்டியார் குறித்தனர்.

இந்த ஏற்பாடுதான் மாண்டேகு சீர்திருத்தத்தில் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. 1919-ம் வருஷச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட பொருள் ஆதார ஏற்பாடு பின்வருமாறு: சட்டப்படி மாகாண சம்பந்தமான விஷயங்கள் என்ன என்று தீர்மானிக்கப்பட்டன. அவை மூலமாய் வரும்படி யாவையும்—மாகாணத்திற்கு உரியவைகூட—மாகாணங்களில் வசூலிக்கப்படும் வருமான வரியில் சொற்பப்பாகமும், மாகாண கவர்ன்மெண்டு இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஏதேனும் பணிபுரிந்தால் அதற்குள்ள சம்பளமும் பெறலாம். மேலும், சில கட்டுப்பாட்டுடன், புதிய வரிகள் விதிக்கலாம்; கடனும்


வாங்கலாம். வரிச்சட்டம் சட்டசபைக்கு வருமுன் கவர்னர் அனுமதி பெறவேண்டும். மாகாண சட்டசபை, விவசாயம் செய்யப்படாத நிலத்தின்மேல் வரி, சூதாட்டவரி, வார்சுவரி, முத்திரை வரி முதலியன தானே விதிக்கலாம். பிறவேண்டுமானால் அரசர் பிரதிநிதியின்முன் அனுமதி பெறவேண்டும். சட்டசபை முன் வராமல் சர்க்காரே, கள் வரி முதலியனவற்றின் திட்டத்தைத் தூக்கிவிடலாம். கடன் வாங்குவதற்குமட்டும், ராஜப்பிரதிநிதியின் உடன்பாட்டை முன் பெறவேண்டும். பிற தேசங்களிடமிருந்து வாங்கவேண்டுமானால் அரசர் அமைச்சர் மூலமாய் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். எவ்விதக் கடனும் சாதாரணமாய் லாபம் வரக்கூடிய செலவு பண்ணுதற்குமட்டும் வாங்கலாம். நாளடைவில் செய்ய வேண்டிய செலவிற்குக் கடன்வாங்கிச் செலவிடுவது சரியான வழியல்ல. எக்கடனும் அரசர் அமைச்சர் பேரிலும், அகில இந்தியாவின் நாணயத்தின் பேரிலும் வாங்கப்பட்டிருக்கிறது. ஆகவே நாளடைவில் நாணயம் பெறுதல் இந்தியா கவர்ன்மெண்டின் கடமையாய் ஏற்பாடு செய்யப்பட்டது.

சகல கவர்ன்மெண்டுகளுக்கும் பொக்கிஷதார் இந்தியா கவர்ன்மெண்டாரே; சாவுகாரும் அவரே. வரும்படி யெல்லாம் அவர் ஏற்படுத்திய பொக்கிஷதாரிடமும், அவர் நிர்ணயித்த கணக்கு வல்லாரிடமும் ஒப்படைக்கப்பட்டன. தங்கள் பணத்தில் இந்தியா கவர்ன்மெண்டிற்குக் கட்டவேண்டிய கப்பம் முதற் கொடுக்கவேண்டியது. பிறகு, பஞ்ச நிதிக்கு ஒரு பங்கு செலுத்தவேண்டியது. மிஞ்சினதைத் தங்கள் இஷ்டப்படி செலவு பண்ணலாம். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டின் பொறுப்பு வேணும் என்கிற சமயம் பொருள் எந்தவித நாணயத்தில் வேண்டுமானாலும் கொடுக்கவேண்டியதாகையால், தங்கள் நிதியில் இவ்வளவு தொகை குறையாமல் இன்ன கவர்ன்மெண்டு வைத்திருக்கவேண்டும் என்று குறிக்கலாம். தங்கள் இஷ்டப்படி தங்கள் பணத்தை மாகாண சர்க்கார் செலவு பண்ணலாம் என்றாலும், சிற்சில விஷயங்களில் அரச அமைச்சர் உத்திரவு வேண்டும். அவையாவன, அரச அமைச்சர் நியமித்த பணியாளர்கள் சம்பள சம்பந்தமான காரியங்கள், அதிகச் சம்பளம் உள்ள வேலைகள், கவர்னருடைய சௌகரியங்களைச் சேர்ந்த ஏற்பாடுகள் முதலியன. சுருக்கமாக, தற்கால ஏற்பாட்டில், மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட நிர்ப்பந்தமாகிய கப்பங்களைக் கட்டின பிறகு, பொறுப்புள்ள விஷயங்களில், தங்கள் சட்டசபை வரையறுத்த வரம்பிற்குள், பொருளைத் தங்கள் இஷ்டப்படி செலவு பண்ணலாம்.

இதுவரைக்கும் விளக்கிய விஷயம், மாண்டேகு தம் இரண்டாவது கொள்கையின், முதல் அம்சம். அதாவது, மாகாணங்களில் எவ்வளவு கூடுமோ அவ்வளவு சுய ஆட்சி கொடுக்க வேண்டும் என்னும் நியதி, எப்படிச் சட்டமூலமாயும் விதிகள் வழியாயும் ஏற்படுத்தப்பட்டது என்பதே.

தன்னைப் பற்றினவரைக்கும் சிற்சில விஷயங்கள் நடத்திக் கொள்ளவேண்டிய சுதந்திரம் இருந்தால் போதாது; மற்றவர் அதாவது, பார்லிமெண்டும் அரச அமைச்சரும் அரசப் பிரதிநிதியும் அவர் கவர்ன்மெண்டும் மாகாண விஷயத்தில் தலையிடுதலைக் குறைத்து, அவர்களுடைய உத்தரவையும், அனுமதியையும் எதிர்பாராமல், தாங்களே அரசியல் புரியவேண்டியது அவசியம். இஃது எப்படி அமைக்கப்பட்டது என்பது பின்னர்க் கூறப்படும்.

(தொடரும்)



சோதிடப்புலி சோணசலம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

"சாஸ்திரிகளுக்குச் சனிநாடி சொன்னது"

நான் சென்ற திங்கட்கிழமை காலே காபி அருந்திய பின்னர், சுமார் 7 மணிக்குமேல் வெளியில் புறப்பட்டுச் சிறிது தூரஞ் சென்றவுடன், ஒரு மோடார்கார் வருவது கண்டு ஒதுங்கி நின்றேன். அவ்வண்டி என் அருகில் வந்து நின்றது. அதனுள் இருந்த சோணசலம்,

"நல்லவேளே; உன்னேத்தான் தேடிக்கொண்டு வந்தேன்; வண்டியில் ஏறு; போகலாம். இன்றைக்கு அதிக விசேஷங்கள் நடக்கப்போகின்றன" என்றான்.

"அடே! இதென்ன உன்னுடைய பொய் வியாபாரத்திற்கு நானும் உதவியா? எள்ளுத்தான் எண்ணேக்குக் காய்கிறது; எலிப் பிழுக்கை எதற்காகக் காயவேணும்? நீ தான் பணத்திற்காகப் பொய் சொல்லப் போகிருய்; நான் எதற்காக வருவது? வேண்டாமப்பா."

"இந்த வீண் தருமமெல்லாம் பேசாதே. இப்பொழுது என்னுடன் வந்தால் நீ என் சனி நாடியை ஒரு பொழுதும் பொய் யென்று சொல்லமாட்டாய்; வா, ஏறு, தடை செய்யாதே."

"அதிருக்கட்டும்; இப்பொழுது ராகுகாலம் வந்திருக்குமே; இது உனக்குத் தெரியாதா?"

"அடே! சோதிடம் பொய்யென்று சொல்லும் நீயா ராகு காலம் பார்க்கிருய்! இது வெகு ஆச்சரியம் தான்! ஆனல் அரனருள் வாய்ந்த அடியார்களுக்கு, 'சனியொடு பாம்பிரண்டும் அவை நல்ல நல்ல' என்ற ஆன்ருேர் வாக்கு அறிந்திலேயோ? ஒன்றும் பயப்படவேண்டாம். வா என்னுடன்."

இது கேட்டு நானும் வேறு அவசியமான காரியம் ஒன்றும் இல்லாததால், வண்டியில் ஏறிச் சென்றேன். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் வண்டி ஸர். வாசுதேவராயர் வீட்டு வாசலில் போய் நின்றது. நாங்கள் இறங்கி உள்ளே சென்று முன்னறையை அடைந் தோம், அங்குப் போடப்பட்டிருந்த சோபாக்கள் ஒன்றில் நாங்கள் உட்கார்ந்தோம். அவ்விடத்தில் ஒருவர் அரையில் பட்டுக்கரை

வேஷ்டி உடுத்து மேலே பட்டு அங்கவஸ்திரம் போர்த்துக் கையில் பிரம்பு பிடித்து உட்கார்ந்திருந்தார். அவர் கால்மேல் காலிட்டு ஆட்டிக் கொண்டும் சிறிது நேரம் மேல் நோக்கியும் பின் கண்களை மூடிக்கொண்டும் ஏதோ ஆலோசனையில் ஆழ்ந்தவர் போல் காணப் பட்டார். உள்ளிருந்த ராயரவர்கள் வந்து உட்கார்ந்து சோண சலத்தை நோக்கி, "என்ன தாங்கள் வந்து வெகு நேரமாயிற்றோ? நான் கொஞ்சம் வேலையாயிருந்தேன்; அதனால் தான் தாமதப் பட்டது."

"நானும் தாங்கள் தாமதிப்பீர்களென முன்னரே உணர்ந்து இப்பொழுது தான் வந்தேன். நான் வரும்பொழுது என் நண் பரையும் கூட அழைத்து வந்தேன். நாங்களும் வந்து உட்கார்ந் தோம்; தாங்களும் இங்கு வந்தீர்கள்."

"பலே! நீர் காலந்தப்பி வந்துவிட்டுச் சாமர்த்தியமாகப் பேசிக்கொள்ளுகிறீரோ?"

"அடாடா! காலத்தின் கூறதனை அறிபவர்களன்றோ சோதி டர்கள்? என் சக்தி தங்களுக்கு இன்னமும் தெரியவில்லை போலும்!"

"அப்படியா? சரி; இப்பொழுது உமது சனி நாடியின் திற மையைப் பார்த்துவிடலாம்; நல்ல சமயம் வாய்த்திருக்கிறது; நல் லது; இங்கிருக்கும் இவரை நீர் அறிவீரா?"

"அவரை நான் முன்னர்ப் பார்த்ததில்லை; ஆனால் பார்த்ததி லிருந்து அவர் சாஸ்திரம் அறிந்தவரென்று தெரிய வருகிறது. அதன்றியும் அவர் கண்களின் பார்வையிலிருந்து கவிசெய்ய வல்லவ ரென்றும் தோற்றுகிறது."

"நீர் சொல்லியதெல்லாம் சரிதான்; இப்பொழுது இவர் ஜாதக நிலையை அறிந்து சனி நாடியில் குறித்த விஷயம் ஏதாவது சொல்லும் பார்ப்போம்."

"அடே! இதென்ன யமகண்ட பரீக்ஷையா யிருக்கிறது? எல் லாம் புலியர் அருள்; சொல்லுகிறேன் கேளும்:

'அத்தரிவர் விடையதனிற் சனிசோ ஆடதனிற்
குருவுங் கூடச்
சத்தியுறும் அரியினிடைச் ஜனித்தவன்தான் புவியினிடைத்
தமிழி லுள்ள
சித்தாது நூல்கள்பல தேர்ந்துசிறப் பெய்துபொரு
ளுணர்ந்தி லாது
சித்தமது கலங்கியே யுலகதனிற் றிரிந்திடுவ
னிதுவே திண்ணம்'.

இப்பாட்டைச் சோணாசலம் சொன்னவுடன் ராயரவர்கள்,

"சோதிடரே! உமது சாயம் இன்று வெளுத்துப்போய் விட்டது; இவர் சம்ஸ்கிருத பாஷையில் மகாகவி; சாஸ்திரங்களில் தேர்ச்சி யடைந்தவர். இவர் தமிழில் சித்த நூல்கள் படித்தாரெனக் கூறும் உமது சனிநாடி பொய்யென்பதில் யாதும் ஐயமில்லை."

"ராயரவர்கள் அவசரப்படக் கூடாது. சனி நாடி ஒரு நாளும் பொய்யாகாது. புலியர் அருளிய சனி நாடி பொய்யாகாதென்று கையில் மழுவேந்தி உரைக்கவல்லேன். எதற்காக நாம் வீண் விவாதம் செய்யவேண்டும்? சாஸ்திரிகளையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே."

இவ்வாறு சோணாசலம் கூறியவுடன் சாஸ்திரிகள் அவனை நோக்கி, "அதெல்லாம் நிற்க, நீர் எப்படி என் ஜாதகமறிந்தீர்?" என்றார்.

"அது தான் என்னுடைய இரகசியம்; ஆனாலும் தாங்கள் நல்ல கவியாயிருப்பதால் அதைச் சொல்லுகிறேன். இம்முறை எனக்கும் புலியருக்கும் அன்றி வேறு ஒருவருக்கும் தெரியாது. தங்கள் நெற்றியிலுள்ள ரேகைகளைப் பார்த்து ஜாதகத்தின் கிரக நிலைகளை அறிவேன்."

"அடே இதென்ன புதுமை! எல்லாரும் கைரேகைகளைப் பார்த்தன்றோ கிரக நிலையை அறிகிறார்கள்?"

"தாங்கள் சொல்வது சரிதான். ஆனால் அம்முறை தவறு என்பது சற்று ஆலோசித்தால் தங்களுக்கே தெரியவரும். சாமான்யமாய் உலக வழக்கத்தில் ஒருவன் வினைப்பகுதியைக் குறிப்பதற்கு அவன் தலையெழுத்து என்கிறார்களே யொழியக் கையெழுத்தென்று கூறுவதில்லையே. வடமொழியிலுங் கூட 'லலாட லிகிதா ரேகா' என்று சொல்லுவதன்றிக் கரலிகிதாரேகா என்று சொல்வதில்லை யென்பது தங்களுக்குத் தெரியாததல்லவே? இதை யறியாது, கை ரேகைகளைப் பார்த்துக் கிரக நிலை அறிபவர்கள் கூறும் பலன்கள் எவ்வாறு உண்மையாகும்? அவர்கள் எல்லாம் மெய்யான சாஸ்திரம் அறியாது சொல்வதனால்தான் சோதிடத்திற்கே பொய்யென்ற பெயர் வந்து விட்டது."

"ஓ! நீர் சொல்லியது மிகவும் பொருத்தமாகவே யிருக்கிறது. இதுவரையில் நானும் இதைக் கவனியாதிருந்தேன். நான் புலிச் சித்தர் செய்த சில சித்த சாஸ்திரங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர் சனிநாடி யென்ற சோதிட நூல் செய்ததாகக் கேள்விப் பட்டதில்லை. நீர் இப்பொழுது சொல்வதிலிருந்து அது வெகு அருமை வாய்ந்த நூலென்று தோன்றுகிறது. அதை நானும் படிக்க

வேணும் என்ற எண்ணம் பிறக்கிறது. ஆனல் வயது முதிர்ச்சியினல் முடியுமோவென எண்ணுகிறேன்.''

"தாங்கள் சொல்வது நிரம்பவும் உண்மையே. நெற்றி ரேகைகளிலிருந்து கிரக நிலை உணரும் முறை அருளிச்செய்த காலத்தில் என் குருநாதன் தாம் இதுவரையிலும் ஒருவருக்கும் உரைத்ததில்லை யென்றும், அது பூர்வ ஜன்ம பரிபாகமுள்ளவர்களுக்கே அருளப்படுமென்றும் சொல்லியுள்ளார். தம்முடைய அனுமதியின்றிப் பிறருக்கு உபதேசஞ் செய்யக் கூடாதென்றும் எனக்கு ஆணையிட்டார். இப்பொழுது தாங்களே ராயரவர்களுக்கு இதன் பெருமையை எடுத்துரைக்கலாம். நான் சொல்லவேண்டுவதொன்றும் இல்லை.''

"இன்னம் நான் சொல்லவும் வேண்டுமோ? ராயரவர்கள் உமது சனி நாடியின் பெருமையை நன்குணர்ந்திருப்பாரென்பதிற் சந்தேகமில்லை.''

இவ்வாறு சாஸ்திரிகள் கூறவும் யோசனையில் ஆழ்ந்திருந்த ராயரவர்கள்,

"சோதிடரே! நான் இதுவரையில் உம்முடைய சாஸ்திரத்தில் நம்பிக்கை யில்லாதிருந்தேன். ஆனல் இன்று நடந்ததிலிருந்து அதில் எனக்குப் பூர்ணமான நம்பிக்கை வந்து விட்டது. உம்மைப் பரீக்ஷித்ததைப் பொறுத்துக்கொள்ளும். நான் உம்மைச் சாதாரணமான சோதிடரைப் போல நினைத்தது பிசகு. இப்பொழுது இதை வைத்துக்கொள்ளும்'' என்று சொல்லி ஒரு கவரில் நோட்டுகள் வைத்துக் கொடுத்துப் பிறகு, "என் குழந்தைக்கு இரக்ஷை கட்டுகிறேன் என்றீர்களே; அது எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?'' என்ருர்.

"அதற்குத் தாங்கள் சொல்லவேண்டியதில்லை. அதை நல்ல வேளை பார்த்து ஆரம்பிக்கிறேன். அந்தக் குழந்தையை இனிமேல் என்னுடையதாக எண்ணுங்கள். அதைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். நான் போய்விட்டு அடுத்த வெள்ளிக்கிழமை தினம் இங்கு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சோணசலம் எழுந்து என்னுடன் வெளியே வந்து வண்டியில் ஏறினன். வண்டியில் உட்கார்ந்தவுடன் அவனைப்பார்த்து, "அப்பா! அந்தச் சாஸ்திரிகளுடைய விஷயத்தை எவ்வாறறிந்தாய்?'' என்றேன்.

"என்னையா இது ஒரு கேள்வியா? விடிய விடிய இராமாயணங் கேட்டுச் சீதைக்கு இராமன் சிறிய தகப்பன் என்பதுபோல் கேட்கிருயே! அவருடைய கிரகங்களின் சாரங்களை அறிந்தல்லவா சொன்னேன்?''

"அப்படியா! நீ அவர் கிரகங்களை உன் சாரர்களாலறிந்து சொன்னாய் போலும்! சாரர்களால் தூரத்திலுள்ள விஷயங்களையும் பார்ப்பார்கள் அரசர்கள் என்பது போல் நீயும் கிரகந்தோறும் சாரர்களை வைத்திருக்கிறாய் போலும்!''

"இதென்ன விபரீதம்? நான் என்ன வீடுதோறும் சாரர்களை வைப்பது சாத்தியமா? நான் என்ன சொல்லியும் என் குருநாதன் முக்காலமுமுணர்ந்த முனிவர் என்பதில் உனக்கு நம்பிக்கை வருவதில்லை. ஏதாவது விதண்டாவாதமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய். நல்லது; இருக்கட்டும்! உன் வீடு வந்து விட்டது; இங்கே இறங்கலாம். நான் அவசரமாகப் போகவேண்டியிருப்பதால் நேரே போய்விட்டு இரண்டு மூன்று நாள் கழித்துத் திரும்பிவருகிறேன்.''

என்றவுடன் நானும் இறங்கி வீடடைந்து அன்று நடந்த விஷயங்களைக் குறித்து எண்ணி எண்ணி மனந்தேறாமல் அவைகளை எழுதி வெளியிட்டேன்.

வீண் வம்பு

பே. கோ. சுந்தரராஜன்

இரவு சுமார் ஏழரை மணியிருக்கும். மீனாக்ஷி தன் சமையலை முடித்துக் கொண்டிருந்தாள். அன்று தன் கணவனுடைய நண்பன் சாப்பிடவருவதால் மீனாக்ஷி விசேஷமான பதார்த்தங்களைத் தயாரித்தாள். சமையல் முடிந்ததும் சாமான்களைச் சரியாய் வைத்துவிட்டு மிகுந்த கருத்துடன் அப்பளாம் வடாம் முதலியவைகளை வறுத்தாள். பிறகு சந்தோஷத்தோடு எல்லாவற்றையும் நோக்கியபொழுது அவள் மனத்தில் ஒரு சந்தோஷ முதித்தது. ரஸத்திற்குப் போதிய உப்பு சேர்க்கப்பட்டதாவென்று தோன்றிய சிறு சந்தேகம் நீரிலுண்டாகும் அலையைப்போல் பெரிதாய் வளர்ந்து மற்றப் பதார்த்தங்களின் ருசியையும் பற்றி மீனாக்ஷிக்கு அதைரியம் உண்டாக்கிவிட்டது. உடனே மீனாக்ஷி, தன்னோடு குடித்தனமிருந்த குடும்பத்தின் சிறு பையன் ராமுவை அழைத்து அவன் வாயில் சிறிது ரஸத்தை ஊற்றி அதற்கு உப்புப் போதுமாவென்று பார்க்க வேண்டினாள்.

விருந்துச் சாப்பாட்டின் முதல் ருசி தனக்குக் கிடைத்ததைக் கண்டு களிகொண்ட ராமு "பேஷ்!" என்று ரஸத்தின் ருசியை அங்கீகரித்தான். குழம்பு, கறி, முதலியவைகளையும், முன்போலவே ராமுவின் மூலமாய்ப் பரீக்ஷித்தபின் அவனுக்கு ஓர் அப்பளாமும் அளித்துத் தன்னோடு சாப்பிடவரும்படி அழைத்தாள். ராமுவுக்கு இரண்டாம் முறை சாப்பிட விருப்பந்தானென்றாலும், தன் பாட்டிக்குப் பயந்து சாப்பிடவர இயலாதென்று சொல்லிவிட்டான்.

முற்றிலும் திருப்தியடைந்த மீனாக்ஷி, சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்தாள். இரண்டு ஆசனப்பலகைகளை அழகாயமர்த்தி அவைகளின் முன் பள பளவென்று பச்சைக்கற்கள்போல் பிரகாசிக்கும் வாழையிலைகளைப் போட்டாள். நடுவில் அன்றைக்காகப் பெட்டியிலிருந்தெடுக்கப்பட்ட இரண்டு வெள்ளி டம்ளர்களுடன், நன்றாய்த் தேய்த்த ஒரு வெண்கலக் கூஜாவில் வெந்நீரும் வைத்தாள். பிறகு விருந்தாளியின் பீடத்திற்குமேலிருந்த அலமாரியிலிருந்து, முன் யோசனையுடன், நெய், தயிர், ஊறுகாய் முதலியவைகளை யெடுத்துத் தனக்கெட்டிய தூரத்தில் வைத்துவிட்டு சமையலறையை விட்டு வெளியேறினாள். குடித்தனம் நிறைந்த சென்னை வீடுகளில் 'கூடம்'

என்ற பெரும் பெயருடைய சிறுதரைப் பகுதியைக்கடந்து தன் கணவனுக்குப் படிக்குமறையாயும், தனக்குப் படுக்கையறையாயும், சமயோசிதமாயும் உபயோகப்பட்ட அறைக்குட் சென்றாள்.

அந்நாளே களிப்பளிக்கும் நன்னாள். அன்றே அவள் தன் சமையற்றிறத்தை வெளியிடச் சமயம் வாய்த்தது. அவள் கணவனுடன் இல்லறம் நடத்தத் தொடங்கியதிலிருந்து அன்றுதான் முதல்தடவையாக அவள் கணவன் நண்பனொருவனைச் சாப்பாட்டிற் கழைத்திருந்தான். உத்தம இல்லாளின் இயற்கைக்குணங்கள் பொருந்தியவளாதலின் மீனாக்ஷி, தான் எட்டுமாத கர்ப்பிணி என்பதையும் கருதாமல் சிரமப்பட்டனள். தன் கசங்கிய புடவையைச் சரிப்படுத்திக் கொண்டு முகத்தைத் துடைத்துக் குங்குமமணிந்து கடிகாரத்தைப்பார்த்தாள்.

"ஏழரை மணிக்கே வருவதாகச் சொல்லியவர் எட்டு மணியாயும் வரவில்லையே'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, மீனாக்ஷி சிரமத்துடன் கீழே சாய்ந்தாள்.

தன் கணவனுடைய காலதாமதத்தைப் பற்றிய நினைவுடன், கீழே ஊன்றிய தன் வலதுகையின்மேல் சாய்ந்துகொண்டு, இடதுகையால் கால் விரல்களிலிருந்த வெள்ளி ஆபரணங்களைத் திருகிய வண்ணம், சிலையுருவேபோல் உட்கார்ந்திருந்தாள் மீனாக்ஷி. களிப்புடன் ஒளி வீசும் கண்களுடன் தனக்குக் குழந்தை பிறக்கப்போகும் காலத்தையும், தன் கணவன் மகிழ்வைப்பற்றியும் கனவு கண்டாள். தன்னைத் தன் சகோதர சகோதரிகளிடம் அழைத்துப் போவதற்காக இன்னும் ஒருவாரத்தில் வரப்போகும் தன் தாயாரைப் பற்றியும் நினைத்துத் கொண்டிருந்தாள். தான் விசேஷச் சமையல் செய்ததைக்கேட்டுத் தன் தாயார் எவ்வளவு களிப்படைவாள்? தன் நாயகன், நல்லுணவை யருந்தித் தன்னை எவ்வளவு அன்போடு நேசிப்பான்? விருந்தாளியும் அவள் அடிசிற்சிறப்பைக்கண்டு ஆச்சரியமடைவானல்லவா? ஆயினும் அவர்கள் வருமுன் சமையல் ஆறிப் போய்விடுமென்று மீனாக்ஷிக்குப் பயம் தோன்றியது. உறைந்துபோன நெய்யையாவது மறுபடி காய்ச்சுவதற்காக அடுப்புமூட்ட வேண்டுமென்று எழ முயன்றாள். ஆனல் புயல் காற்றிலகப்பட்ட பூங்கொடியேபோல் செயலற்றுச் சாய்ந்தாள். தன் புடைவையின் முன்றானையைக் கீழே விரித்து மடக்கப்பட்ட கையின்மேல் தலையை வைத்துச் சீக்கிரத்தில் நிர்மலமான மனத்துடனும் கவலையற்ற நினைவுடனும் தூக்கத்திலாழ்ந்தாள்.

நேரம் கழிவதேதெரியாமல் உறங்கிய மீனாக்ஷி தன்னை யாரோ கூப்பிடுவதறிந்து திடீரென எழுந்தாள். பின்கட்டிலிருந்து வந்த

ராமுவின் தாயார் மீனுக்ஷியை எழுப்பி "மீனு, உன் ஆத்துக்காரர் இன்னும் வரவில்லையா ?" என்றுள்.

"ஓ, நான் தூங்கினேனு ?" கடிகாரத்தைப் பார்த்து "ஒன்பதரை மணியாய்விட்டதே !" என்றுள் திகைப்புற்ற மீனுக்ஷி.

"மீனு, ரொம்ப நாழியாயிடுத்தே. உன் ஆத்துக்காரர் வேறெங்கேயாவது சாப்பிட்டிருப்பார். நீ சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கோ."

"இல்லே அம்மாமி. அவர் கட்டாயம் வருவார். ஒருவேளை சினிமாவுக்குப் போயிருப்பார்" என்று மீனுக்ஷி பதிலளித்தாள்.

"அப்படியிருந்தாலும் நாழியாயிடுத்தே. இப்படித் தூக்கமில்லாமலிருந்தா உனக்குக் கஷ்டமாயிருக்குமே."

"அதொன்றுமில்லே அம்மாமி. கொஞ்சம் சிரமமாயிருந்தது. அவ்வளவுதான்."

"மீனு, உன் தேகஸ்திதி உனக்கே தெரியவில்லே. நானுவது துணையிருப்பேன். ஆனு, காரியம் பாதிகூட ஒழிந்தபாடில்லே. பத்துத் தேச்சிண்டிருக்கிரப்போதான், நீ தூங்கிப் போயிட்டேன்னு என் மாமியார் சொன்னு. வேணுமின்னு கூப்பிடு. பாட்டியும் தூங்கிவிட்டா. இல்லாவிட்டால் அவளாவது வருவா."

"இல்லே அம்மாமி ஒன்றும்வேண்டாம்" என்றுரைத்துக் கிழவியின் துர்க்குணத்தை அறிந்த மீனுக்ஷி பின்னும், "பாட்டியைக் கஷ்டப்படுத்தவேண்டாம் அம்மாமி" என்றுள்.

ராமுவின் தாயார் சென்றபின், மீனுக்ஷி சமையலறையைப் பார்த்தாள். அங்குப் பரிமாறப்படாத இலேகளும், ஆறிப்போன சமையலும், அணேந்துபோன அடுப்புமே அவளுடைய கவலேக்காக இரக்கப்படுவதைபோல் ஓசையின்றி விளங்கின. வாயிற் கதவை யாரோ தட்டுவதுபோல் சத்தம் கேட்டது. உடனே மீனுக்ஷி நடையிற்சென்று கதவருகில் உற்றுக்கேட்டாள். ஒன்றும் கேட்கவில்லே. திரும்பித் தன்னறைசேர்ந்து ஒரு புத்தகத்தை யெடுத்துத் தன் மனக்கவலேயை யொழிக்கப் படிக்க ஆரம்பித்தாள். அவள் கண்களே புத்தகத்தின் வார்த்தைகளேப் பார்த்தனவன்றி அவள் மனம் படித்ததை உணரவேயில்லே. கார்காலக் கருமேகங்களேப்போல் திரண்டு வரும், எண்ணுத எண்ணங்களே யெல்லாம் தடுக்கவே படித்தனள். மனமோ கடல்வாய்ப்பட்ட கட்டுமரம்போல் தத்தளித்தது. புத்தகம் முழுவதையும் முடித்துவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தாள். முட்களிரண்டும், மீனுக்ஷி துயரத்தைச் சிறிதும் உணராது தம் வேலேயே கருத்தாகப் பதினென்றை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தன.

"என்ன? பதினொன்று?" என்று வினவினாள் மீனாக்ஷி திடுக்கிட்டு.

அதற்குப்பதிலாகப் பின் கட்டிலிருந்து, "மீனா, நீ இன்னும் தூங்கவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே 'அம்மாமி' தோன்றி அவளை அன்புடன் கோபித்துக்கொண்டாள்.

"நான் சொல்வதைக் கேள், மீனா. அவர் தன் தமக்கையாத்திலே சாப்பிட்டிருப்பார். நீ போய்ப் படுத்துக்கோ.

"ஆனா, கார்த்தாலேதானே என் நாத்தனார் தன் தம்பி ஆபீஸுக்குப் போறபோது தன் ஆத்துக்குப்போனா. அதோடே, யாரோ சாப்பிடவருவான்னு அவர் என்னண்டை சொல்லிவிட்டுப் போனாரே!" என்று திடநம்பிக்கையுள்ள குழந்தையைப் போல் கூறிவிட்டு, மீனாக்ஷி "இல்லாவிட்டால்—" என்று பயந்த குரலில் நிறுத்தினாள்.

"ஆம், என்ன?"

"அவர் க்ஷேமமாய்—இல்லை எங்கே பார்த்தாலும் மோட்டாரும் ட்ராமுமாய் இருக்கிறதே. ஆ, அம்மாமி! அவர் க்ஷேமமாய்த் திரும்பிவருவாரா?" என்று தன் கமலக்கண்களில் நீர் ததும்பக் கேட்டாள் மீனாக்ஷி.

"இந்தா, மீனா! இதென்ன அசட்டுத்தனம். உன் ஆத்துக்காரர் குழந்தையென்று நினைத்தாயா? பயப்படாதே. அவர் கட்டாயம் வருவார்" என்று கூடிய தேற்றமொழிகளைக்கேட்டு மீனாக்ஷி தன் கண்களைத் துடைத்துக்கொண்டிருக்கும் சமயத்தில், அத்தேறுதலுக்கொப்பத் தெருக்கதவு பலமுறை பலமாய்த் தட்டப்பட்டது. தன் துணையின் வரவைநோக்கி எதிர்பறக்கும் பேடுபோல் தன் தலைவனைக்காண முன் பாய்ந்த மீனாக்ஷியைத் தடுத்துத் தானே கதவைத் திறக்கச் சென்றாள் ராமுவின் தாயார்.

அதற்குள், கை கால் சுத்திசெய்வதற்காக இரண்டு செம்புகளில் தண்ணீரெடுத்து வைத்துவிட்டு மீனாக்ஷி சமையலறைக்குட் சென்றாள். உள்ளிருந்து தன் கணவன் வருகையைப்பற்றிக் களிப்புறும் சமயம், ஒரு செம்பின் தண்ணீரே உபயோகிக்கப்பட்டதைக் கேட்ட மீனாக்ஷிக்கு விருந்தாளி வரவில்லையோவென்ற சந்தேகம் தோன்றியது. தன் கணவன் அறைக்குட் சென்றதைப் பார்த்துச் சிறிது நேரம் பொறுத்து விருந்தாளி வரவில்லையென்று தெரிந்து, மனத்தாங்கலுடன் அறை சேர்ந்து தன் கணவனின் நண்பன் வரவில்லையாவென்று வினவினாள். அவள் கணவன் சுப்பிரமணியன் ஒன்றும் பதில் சொல்லாதிருக்கவே, ஏதோ சுறுசுறுப்பாயிருக்கிறானென்று

நினைத்துச் சிறிதுநேரம் கழித்து, ''இலை போட்டிருக்கிறது'' என்றாள் மெல்லியகுரலில்.

அதற்குச் சுப்பிரமணியன், ''நான் சாப்பிட்டுவிட்டேன்'' என்றான்.

தன்னையும் மறந்து, ''ஏன்? எங்கே சாப்பிட்டீர்கள்? விருந்தாளி வரவில்லையா?'' என்று கேட்ட மீனாக்ஷியைக் கோபத்தோடு நோக்கி,

''அது உன்வேலையல்ல; நீ போய்ச் சாப்பிடு'' என்றான் அவள் தலைவன்.

இடிந்தமனத்துடன் சமையலறை சேர்ந்து, கண்களில் நீர் பெருக மீனாக்ஷி வீணான பதார்த்தங்களை நோக்கினாள். அவள் வருத்தத்திற்குக் காரணம், தாழ்வுற்ற தற்சிறப்பல்ல. இன்பம் நிறைந்த இல்வாழ்க்கைப் படத்தின், ஆணிகளடைந்த மறுபக்கத்தின் முதல் தரிசனமே. பிறகு கனவுகாண்பவளைப்போல் தனக்கு உணவு பரிமாறிக்கொண்டாள். ஆனால் ஒரு கவளம் எடுத்து உட்கொள்ளும் போதே தொண்டையை அடைத்துக் கொண்டது. மற்றொருக்கென்று தயாரித்த மாசிலாச் சமையல் அவளுக்கே ருசிக்கவில்லை.

மறுநாட் காலை மீனாக்ஷி வீட்டு வேலைக்காரிக்கு அதிர்ஷ்டம் நிறைந்ததாயிருந்தது. ஏனெனில் முன்னிரவின் சாப்பாடு முழுதும் அவளுக்குக் கிடைத்தது. மீனாக்ஷிக்கோ, உலகிற்கெல்லாம் உஷ்ணத்தைப் பரவச்செய்யும் கதிரவன், துக்கம் நிறைந்த கிரணங்களை வீசிக்கொண்டு உதித்ததுபோலிருந்தது. சுப்பிரமணியன் மனநிலை முன்னிரவுபோன்றேயிருந்தது. காலையில் காபியும் மறுத்துவிட்டான். ஆனால் அக்காபி ராமுவுக்குக் கிடைத்தது. பாட்டி பார்த்துவிடுவாளென்ற பயத்தினால் ராமு காபியை ஒரேதடவையில் குடித்துவிட்டான். மீனாக்ஷியும் காபி அருந்தவில்லை. அவள் கணவன் அவளோடு வழக்கம்போல் பேசவில்லை. ஆனால் பால் வாங்குவதற்கு வாயிற்படியினருகில் போகவேண்டாமென்று மாத்திரம் கட்டளையிட்டான். படிசொற்கடவாத பாவையாகிய மீனாக்ஷிக்கு இது ஒருவாறு சகாயமாகவே யிருந்தது. ஏனெனில் வாயிலில் பால்காரன் பாலில் நீரைக் கலந்துவிடாவண்ணம் பார்த்துக்கொண்டு, தெருவில் போவார் வருவார் தன்னை உற்றுநோக்கும்படி நின்றுகொண்டிருக்க, நாணமுள்ள மீனாக்ஷிக்குக் கஷ்டமாகவே யிருந்தது.

சுப்பிரமணியன் மௌனத்துடன் சாப்பிட்டுவிட்டுத் தன் ஆபீஸுக்குச் சென்றான். அவனகன்ற மறுநிமிஷமே ராமுவின் பாட்டி மீனாக்ஷிமுன் தோன்றி, மீனாக்ஷியின் களிப்பிலாத்தோற்றத்தைப் பற்றி விசாரித்தாள். மீனாக்ஷி ஏதோ நினைவுடன் தனக்காகத்

தன் கணவன் சாப்பிட்ட தட்டில் சாதம் பரிமாறிக்கொண்டிருந்தாளாதலின், கிழவி சொல்லியதைக் கேட்கவில்லை. மீனாக்ஷியைக் கடிந்து நோக்கி ஆத்திரத்துடன் கிழவி மறுபடியும் வினவினாள்.

"ஒன்றுமில்லை பாட்டி. கொஞ்சம் தலைவலியாயிருந்தது" என்று தன் இனிய குரலில் மீனாக்ஷி பதிலளித்தாள்.

"உன் ஆம்படையான் நேத்து ராத்திரி சாப்பிடவில்லையாமே. கார்த்தாலே காபியும் குடிக்கவில்லையாம். ஏன்?" ராமுவுக்குக் காபி கொடுத்ததை கிழவி எப்படியோ அறிந்துவிட்டாள்.

மீனாக்ஷிக்கு என்ன பதிலுரைப்பதென்று தெரியவில்லை. தன் கணவன் மனமாறுதலைப் பற்றித் தெரிவிக்கவும் அவளுக்கு இஷ்டமில்லை. சிறிது நேரங்கழித்து, "நேற்று என் நாத்தனாரைப் புரசைப் பாக்கத்திற்கழைத்துக்கொண்டு போனார். அங்கேயே சாப்பிடும்படி சொன்னதினால் தன் சிநேகிதரையும் அங்கேயழைத்துக்கொண்டு போய்விட்டாராம்" என்றாள்.

கிழவி இன்னும் பல கேள்விகளைக் கேட்கவிருந்த தறுவாயில் ராமுவின் தாயார் கூப்பிட்டதால் முணு முணுத்துக்கொண்டே சென்றுவிட்டாள். பாட்டி அகன்றபின் மீனாக்ஷி சாப்பிட உட்கார்ந்தாள். முன்னிரவுபோலவே அன்றும் அவளுக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை. பல எண்ணங்களுடன் நெடுநேரம் உட்கார்ந்திருந்தாள். தன் குடித்தனத் திறமையைப்பற்றிக் கேட்க ஆவலோடு வரப்போகும் தன் தாயாருக்குத் தன் தலைவன் தன்மையைப் பற்றிக் கூறவேண்டுமே யென்றதை நினைக்க அவளுடல் நடுங்கிற்று. இன்னுமென்ன நேருமோ என்பதைப்பற்றிக் கவலைப்பட்டாள். நெடுநேரம் கழித்துத் தான் சாப்பிடாத உணவை எடுத்துக்கொண்டு தெருவில் எறிவதற்காகச் சென்றாள். அவள் ரேழியை அணுகியதும், வாயிலில் தன்னைப்பற்றி எதிர் வீட்டுக்காரியுடன் கிழவி பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் தயங்கிநின்றாள். அந்நேரத்தில் கிழவியின் வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் மீனாக்ஷியின் வருத்தத்தை அதிகரிக்கச் செய்தன.

"......அதனால் அவளை வாசலுக்குப்போய்ப் பால் வாங்க வேண்டாமென்று சொல்லிவிட்டான். ஐயோ அவளுடைய நடத்தையைக் கேட்பையா! கார்த்தாலே நான் கூப்பிட்டபோது பேச மாட்டேன்னுட்டா. அதுக்கப்புறம் ஒரு பெரிய பொய் சொன்னா" என்ற பாட்டியின் கடைசி வார்த்தைகளையே கேட்டாள் மீனாக்ஷி.

இன்னும் மற்ற தூர்வார்த்தைகளைக் கேட்க மனமில்லாத மீனாக்ஷி வீட்டுக்குள் திரும்பும் சமயத்தில், உள்வந்த கிழவி குற்றமுள்ள பார்வையுடன் பின் கட்டுக்குச் சரேலென்று சென்றாள்.

அன்று சாயங்காலம் மீனாக்ஷிக்கு மற்றொரு திடுக்கிடச் செய்யும் சம்பவம் நேரிட்டது. சிறிதும் அமைதியில்லாத பகலைக் கழித்துவிட்டுப் பால் பாத்திரத்துடன் நடையினருகில் நின்று கொண்டிருந்தாள். வெளியில் தெரு முழுவதும், அநேகமாய் ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் இளம் பெண்களும் வயது முதிர்ந்த மாதரும் பாலை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தனர். காலத்தைப் போக்க, சிலர் மற்றவர்களின் விஷயங்களைப் பற்றியும், சிலர் தாங்கள் கோயிலில் பார்த்த பெண்ணின் ஆடையாபரணங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தனர். மீனாக்ஷி வீட்டு வாயிலில் பாட்டி தன் பக்கத்து வீட்டுக்காரியுடன் பேசிக்கொண்டிருந்தாள். பாட்டி வெளியிலிருந்தது மீனாக்ஷிக்குத் தெரியாது ; மீனாக்ஷி அருகிலிருப்பதைப் பாட்டியும் அறியாள். அண்டையகத்தம்மாளோ, எதிர் வீட்டு ஸ்திரீ மீனாக்ஷியிடத்தில் எவ்வளவு சிரத்தை கொண்டிருந்தாளோ, அவ்வளவே தானும் காண்பித்தாள்.

மீனாக்ஷி பால் வாங்குவதற்கு ஏன் வரவில்லையென்றதற்குப் பதிலாகப் பாட்டி, "அவ மனசிலேதான் கோஷா ராணீன்னு நெனச்சிண்டிருக்கா. எப்படித்தான் ஆம்படையானெப் பம்பரம் போலாட்டி வைக்கிறளோ. நேத்திக்கி என்னென்னமோவெல்லாம் சமெச்சுத் தானே சாப்பிட்டா. அவ தைரியந்தான் என்னடி ? பாவம் முத்துப் போலெ மூணு கொழந்தைகளோடெ நாத்தனாரை இருக்கப்படாமெப் பண்ணிவிட்டா. போருக் குறைக்குத் தாயார் வரப் போருளாம். கார்த்தாலே நான் அலமேலுவோடே பேசிக்கிண்டிருந்தாரேழியிலே இருந்து ஒட்டுக் கேட்கிறுடி அவள் !''

இக்கடுமொழிகள், நெடுந்தூரத்திலிருந்துவரும் காட்டாற்று வெள்ளத்தின் இரைச்சல் போல மீனாக்ஷியின் காதில் விழுந்தும் அவள் தன்னையே மறந்து நினைவுலகிலீடுபட்டிருந்ததால், இவ்வார்த்தைகளின் பொருள் முதலில் முற்றிலும் விளங்கவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம், மணலில் வார்த்த நீர்போல் இச்சொற்கள் அவள் மனத்திற் சென்று பதியவும், திகைப்புற்றுப் பின்னடைந்தாள். பாட்டி தன்னையே எப்பொழுதும் தூஷித்துக் கொண்டிருப்பது கண்டு வருத்தமுற்றுள். மேலும் அன்று காலை நடந்த சம்பவமும் நினைவிற்கு வந்தது. "அதனால் அவளை வாசலுக்குப்போய்ப் பால் வாங்கவேண்டாமென்று சொல்லிவிட்டான்'' என்ற வார்த்தைகள் அவள் காதில் தொனித்தன. ஆயின், அவள் கணவனின் கடுமொழிக்குக் காரணமுமிருக்கிறதென்று அப்பொழுதுதான் அவளுக்குத் தெரிந்தது. அக்காரணம் என்னவாய் இருக்கக் கூடுமென்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போது, சலனமிலாச் சுனை

நீரைக் கலக்கும் கல்போல் பால்காரன் தோன்றி அவள் ஆராய்ச்சியைக் கலைத்துவிட்டான்.

இஃதிங்ஙனமாக; தன் ஆபீஸில் ஒன்றும் தோன்றாது பித்தனைப் போல் சுப்பிரமணியன், தன்னெதிரே உள்ள பொருள்களை நோக்கி உட்கார்ந்து கொண்டிருந்தான். முன்னாள் நடந்த விஷயங்களைப் பற்றி யோசித்தான். தன் சகோதரி, மீனாக்ஷியின் துர்நடத்தையைப் பற்றிக் கிழவி கூறியதாக அவனிடம் தெரிவித்திருந்தாள். தான் தன் மனைவியிடம் நடந்துகொண்டது சரியான முறையா? மேலும் அவனுடைய சகோதரி, கிழவியின் குணம் குற்றம் கூறுவதேயென்றும், கிழவியின் கூற்றை மதிக்கவேண்டாமென்றும் சொல்லியிருந்தாள். ஆனால், மீனாக்ஷி, வாயிலில் நின்றுகொண்டு எதிர் வரிசையிலொரு வீட்டில் வசித்துக்கொண்டிருந்த ஒரு வாலிபனை உற்று நோக்கியதாகக் கிழவி தன் சகோதரியிடம் கூறிய விஷயத்தை நினைத்தலும் காற்றுப்பட்ட கனல் போல் அவன் பொறாமை பொங்கியெழுந்தது. தன் இல்லற வாழ்க்கையில் முதல் தடவையாக இப்பொழுதே அவன் தன் மனைவியைப் பற்றிச் சந்தேகப்பட்டான். இப்பொறாமைப் பேயால் பிடிக்கப்பட்டே, என்னநேருமோவென்று நினைத்துத் தன் நண்பனை ஹோட்டலுக் கழைத்துச் சென்றனன். அதோடு தன் மனைவிக்குத் தேக அசௌக்கியமென்று பொய்யும் புகன்றனன்.

இப்பொழுதோ பச்சாத்தாபம் அவன் மனத்திற் குடிகொண்டது. தன் சகோதரி தன் செய்கையைப் பற்றிக் கேள்விப்பட்டால் என்ன சொல்வாளோவென்று பயந்தான். முன்யோசனையின்றிச் செய்த காரியங்களின் பின், பொருளோடு வரும் நிழல் போல், இளகிய மனத்தார்க்குத் தோன்றும் கழிவிரக்கம் அவனையும் வருத்தியது. வேலைமுடிந்ததும் தன் துக்கத்தைத் தொலைக்க ஒரு ஸினிமாவுக்குச் சென்றான். அந்தோ! அப்படக் கதை சோகரஸம் நிரம்பியதாயிருந்ததால் அவன் கவலையை அதிகரிக்கச் செய்ததேயொழியக் குறைக்கவில்லை. அதன் பின் தன் மனைவியிடம் தனக்குள்ள அன்பைத் தெரிவிக்கும்பொருட்டுப் பல விதமான பழங்களை வாங்கிக்கொண்டு இல்லம் திரும்பினான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் மீனாக்ஷி களைப்பு மேலிட்டுத் தூங்குவதைக் கண்டான். பின் தூங்கி முன்னெழும் பேதை அன்று முன் தூங்கும் காட்சியும், விளக்கொளியில்லா இருட்டும் அவனைத் தாக்கி, அவனுக்குத் திடீரென்று வெறுப்பையுண்டாக்கின. அன்று சாப்பிடுவதில்லை யென்ற தீர்மானத்துடன் அவன் தன் சட்டையையும் குல்லாவையும் கழற்றும் போது தன் காலருகில் படுத்துக்கொண்டிருந்த மீனாக்ஷியின் முகத்திலிருந்து சூடான மூச்சு வருவதைக்

கண்டு கீழே குனிந்து பார்த்தான். மீனாக்ஷியின் முகம் சிவந்து வேர்வை நிரம்பியிருந்தது. திக்திக்கென்று அடித்துக்கொள்ளும் இருதயத்துடன் தன் காதலியின் நெற்றியின்மேல் கைவைத்துப் பாத்தான். அவளுடைய முகத்திலிருந்து நெருப்பிற் காய்ந்த இரும்பின் சூட்டைப்போல் உஷ்ணம் வெளிப்பட்டது. மீனாக்ஷிக்கு மனக்கவலையின் காரணமாகக் கடினமான காய்ச்சல் கண்டிருந்தது. தன் கண்களில் கிளம்பிய நீரைத் துடைத்துக்கொண்டு அணைந்து போன விளக்கை மறுபடியும் ஏற்றி, ஒரு போர்வையையெடுத்து மீனாக்ஷியின்மேல் போர்த்தி அன்போடு தன் கையை அவளுடைய பின்னலிடப்படாத தலையின்மேல் வைத்துக்கொண்டு எண்ணக் கடலில் ஆழ்ந்தான். சிறிது நேரங்கழித்து சமையலறைக்குச் சென்று காய்ச்சிய பாலை யெடுத்துக்கொண்டு வந்து மீனாக்ஷியை மெதுவாக எழுப்பினான்.

மீனாக்ஷி கண்களைத்திறந்து சுற்றிலும் பார்த்து ஒரு சாப்பாட்டைப் பற்றியும் தன் நாயகனின் காலதாமதத்தைப் பற்றியும் உளற வாரம்பித்தாள். அவளுக்குச் சித்தப்பிரமையாயிருந்தது. சுப்பிரமணியனுக்கு இம்மாதிரி இதுவே முதல் அனுபவமாதலால் ஒன்றும் தோன்றாது மதிமயங்கி, ராமுவைக் கூப்பிட்டு அவன் தாயாரின் உதவியை நாடினான். அம்மாதரசியும் உடனே வந்து மீனாக்ஷிக்கு, உத்தம இல்லாள் எப்பொழுதும் அறிந்த சிகிச்சையைச் செய்தாள்.

மறுநாள் மீனாக்ஷிக்கு உடம்பு சிறிது சௌக்கியமாயிருந்ததால் வீட்டுவேலைகளைச் செய்ய முடிந்தது. அவள் கணவன் தன் சகோதரியை அழைத்துவருவதாகக் கூறியும் மறுத்துவிட்டாள்; அவளுடைய தாயாருக்குத் தந்தியனுப்புவதாகச் சொல்லியதையும் தடுத்துத் தனக்கு உடம்பு சௌக்கியமாய் விட்டதென்றும் முந்தியநாள் கண்டிருந்த காய்ச்சல் மிகவும் லேசானதுதானென்றும் கூறிவிட்டாள்.

ஆனால், சுப்பிரமணியன் மனத்தில் அன்று முழுவதும் இரண்டு விஷயங்கள் குடிகொண்டு வருத்தின. ஒன்று, அன்று காலை கிழவி தன் எதிர் வீட்டுச் சிநேகிதையிடம், மீனாக்ஷி பாசாங்கு செய்கிறாளென்று சொல்லியது. "வாஸ்தவமாகக் காய்ச்சலாயிருந்தால் இன்றைக்கு எப்படி அதற்குள் எழுந்திருக்கமுடியும் ?" என்றாள், பாட்டி. இரண்டாவதாகத் தான் ஆபீஸுக்குப் போகும்பொழுது முன் சொல்லப்பட்ட வாலிபன் தன் வீட்டையே நோக்கிக்கொண்டிருப்பதாகத் தோன்றியது. இவ்விரண்டும் ஒரு புறம் தாக்க, தன் மனைவியினிடம் கொண்ட காதல் ஒரு புறம் கண்டிக்கச் சுப்பிரமணியன் இருதலைக் கொள்ளியெறும்பாயினான்.

இவ்வாறாக, மீனாக்ஷியின் மெய்யும் மனமும் வருந்த, ஒருவாரம் கழிந்தது. சுப்பிரமணியனோ மாறி மாறி வெறுப்பும் விருப்பும் கொண்டிருந்தான். பல தடவை, தன் சகோதரியிடம் எல்லாவற்றையும் சொல்லத் தீர்மானித்தான். ஆனால் தான் செய்த செய்கைக்குப் பின் அவனுக்கு மனந்துணியவில்லை. முடிவில் பாட்டி சொல்லியதே உண்மையாயிருந்தாலு மிருக்கலாம். தன் மனைவியினிடத்துள்ள அன்பினால் தான் ஏமாற்றமடைந்து விடக்கூடாது. அவன் என்ன கோழையா? இல்லை, ஒருகாலுமில்லை! "எங்குப் பார்த்தாலும் ஆண் பெண் சமத்வப் பேச்சுக் குடிகொண்டிருக்கும் இந்நாளில் ஒரு பெண்ணை நம்பினால் என்ன தான் நேரிடாது? இவள் தாயார் தான் வருகிறாளே. இவளை அழைத்துக்கொண்டு போகட்டும். ஒருவேளை பிரிவினால் இவளுடைய நடத்தை திருந்தும். நான் என்ன செய்ய வேண்டும் இப்பொழுது? விஷயங்களைத் தம் போக்காக விட்டு விடுவதா? அல்லது கிழவியின் மீது அவநம்பிக்கை கொள்வதா? பாட்டி எத்தனை தடவைகளில் ஜாக்கிரதையாய்ப் போகும்படியும் தன்மனைவியைச் சரியாய்ப் போஷிக்கும்படியும் போதித்திருக்கிறாள்! அப்படியிருக்க அவள் காரணமின்றி மற்றவர்களைத் தூஷிப்பாளா? ஆனால் மீனாக்ஷி அப்படிப் பட்டவளல்லவே. அவள் சின்னஞ் சிறு பெண்ணாயிற்றே. ஒருவேலை கிழவியிடமே கேட்கலாமா? ஆனால் அதுவும் அபாயத்துக்கிடமாகும்."

இம்மாதிரி, பரீக்ஷையில் தன் விடையைச் சீக்கிரம் முடித்து விட்டு, தன் தலைவரிடம் காகிதத்தைக் கொடுத்தால் அபாயத்துக் கிடமாகுமே யென்றும், முடிவுவரையில் உட்கார்ந்திருந்தால் கஷ்டமாயிருக்குமே யென்றும் தத்தளித்துக் கொண்டிருக்கும் மாணவனைப் போல் சுப்பிரமணியன் தனக்குள்ளேயே வாதித்துக் கொண்டிருந்தான்.

வாரமும் கழிந்தது; அவனுடை மாமியார், மாப்பிள்ளைக்காகப் பல பக்ஷணங்களோடு வந்து சேர்ந்தாள். மீனாக்ஷியை அவளுடைய தாயார் இன்னும் இரண்டு நாட்களில் அழைத்துக் கொண்டு போய்விடுவாளென்ற விஷயம் தன் மனத்தில் பதியவும் சுப்பிரமணியனுக்குத் திடீரென்று பிரிவாற்றாமை தோன்றியது. களிப்பிலாக் காதலர் பிரிவால் தன் மனைவிக்கு ஏற்படும் தீமையை அப்பொழுதே உணர்ந்தான். அன்றிரவு நித்திராதேவியும் அவனை நிராகரித்தனள்.

மறுநாள், எப்படியாவது ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று தீர்மானித்துச் சுப்பிரமணியன் கிழவியினிடம் உண்மை முழுவதும் கேட்பதற்காகப் பின் கட்டு நோக்கிச் சென்றான். அவ்விடம் தன்

மாமியாரோடு பாட்டி பேசிக்கொண்டிப்பதைக் கண்டு அதைத் தன் காதில் போட்டுக்கொள்ள இஷ்டமில்லாமல் திரும்பித் தன்னறை சேர்ந்து பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து, ராமுவின் தந்தையினுடைய கோபக்குரல் அவனுக்குக் கேட்டது.

"இம்மாதிரி மானக்கேடான குணத்தை விட்டுவிடு என்று ஆயிரந்தரம் உனக்குச் சொல்லியும் நீ உன் இஷ்டம்போலவே செய்கிறாய். குடும்பத்தையும் பாழாக்கிவிட்டாய்; மற்றவர்களையும் பகைத்துக்கொண்டாய். ஒரு நாளாவது பேசாமலிருக்கமாட்டாயா? அம்மா, ஏன் இம்மாதிரி என்னை அவமானப்படுத்துகிறாய்?" என்றதற்குப் பதிலாக, அவர் தாயாரான பாட்டி,

"ஏண்டாப்பா, நான் என்ன பண்ணினேன்? நன்னாருக்கு. என்னமோ மீனாக்ஷி தாயார் தன்னுடைய கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்......"

"என்ன? என்னிடமே பொய் சொல்லுகிறாயா?" என்று கர்ஜித்தார் கோபமிகுந்து; "மீனாக்ஷியைச் சுப்பிரமணியன் தமக்கை கஷ்டப்படுத்தினாளென்று நீ சொல்லிக்கொண்டிருக்க வில்லையா? அந்த அம்மாளுடைய ஆட்சேபனைகளை நான் கேட்கவில்லையென்று நினைத்தாய்? அதோடே மீனாக்ஷியைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறாய். கடைசித்தரமாய் சொல்லுகிறேன்; நீ இந்த வெட்கக்கேடான காரியத்தை நிறுத்தாவிட்டால்..........." என்று துக்கத்துடன் முடித்தார்.

சுப்பிரமணியன் தான் போய்ச் சமாதானம் கூறவேண்டுமென்று நினைத்தான். கிழவியோ ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டாள். மறு நிமிஷம் அப்பெரியவரே வந்தார்.

"சுப்ரமணியம், என்னை மன்னிக்கவேண்டும். என்தாயாருக்கு இதே ஸ்வபாவமாய்ப் போய்விட்டது. அவள் ஏதாவது விஷமம் செய்துகொண்டே இருக்கிறாள். இதனால்தான் குடித்தனக்காரர்களும் எங்களுடன் சண்டைபோட்டுக்கொண்டு போய்விடுகிறார்கள். உன் மனைவியைப் பற்றியும் கேவலமாய்ப் பேசியதாய்க் கேள்விப் பட்டேன். சுப்ரமணியம், அதையெல்லாம் நீ மறந்துவிடுவாயானால் நான் அதிகக் கடமைப்பட்டவனாவேன். அவளால் உங்களிருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதற்காக வருந்துகிறேன்" என்றார்.

சுப்பிரமணியன் அசைவற்று நின்றான். திடீரென விஷயம் முழுவதும் இம்மாதிரி விளங்கியது, அவனைச் செயலற்றவனாக்கி விட்டது. அவனுக்கு இன்னும் திருப்தியாகவில்லை யென்று நினைத்த ராமுவின் தந்தை மறுபடியும்,

"சுப்ரமணியம், உனக்கே தெரியும். இவளுக்கோ வயதாய் விட்டது. காரியம் செய்யமுடியாமல் எப்பொழுதும் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறுள். அவள் மனப்பான்மை எப்பொழுதும் சரியாயிருந்ததேயில்லே. என் தாயாராகையால் அவள் செய்வதெல்லாம் நான் பொறுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. வீண் வார்த்தை பேசுகிருளே யொழிய அதனுல் கெடுதி ஒன்றும் நினைப்பதில்லே. ஒரு சமயம் உன்னேடு அன்பாய்ப் பேசுவாள். மறு நிமிஷமே......"

"ஆமாம் சார். நீங்கள் சொல்வது முழுவதும் எனக்குத் தெரிகிறது. இதெல்லாம் வயசானதினுல் நேரும் தவறுகளே. என் மனைவியும் ஊருக்குப் போகப்போகிருள். இனிமேல் ஒன்றும் கஷ்டமிருக்காது. நான் அநுதாபமில்லாதவன் போல் தோன்றினுலும் மன்னிக்கவேண்டும்; சென்ற சில நாளாக நான் பட்ட கஷ்டங்கள்......" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே ராமுவின் தந்தை, "ஆம், வருத்தப்படாதே. கடவுள் தான் உங்களேக் காப்பாற்றவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே சென்றுவிட்டார்.

சுப்பிரமணியன், தன் மாமியார் சமையலறையைவிட்டு எப்பொழுது வெளிச் செல்லுவாள் என்று பொறுமையின்றிக் காத்துக்கொண்டிருந்தான். மீனுக்ஷியின் தாயார் ஏதோ காரியமாக வெளியிற் சென்றதும், ஒரே பாய்ச்சலாகப் பல நினைவுகளுடனும் ஒரே கருத்துடனும் மீனுக்ஷியிருந்த சமையலறைக்குள் நுழைந்தான்.

* * * *

சென்ட்ரல் ஸ்டெஷன் பிளாட் பாரத்தில் பெங்களூர் எக்ஸ்பிரஸில் ஸ்திரீகளுடைய வண்டியின் முன் சுப்பிரமணியன் நின்றுகொண்டிருந்தான். நெருக்கித் தள்ளிக்கொண்டு செல்லும் பிரயாணிகளேயும், கற கறவென்று சப்தம் செய்துகொண்டு போகும் சாமான் வண்டிகளேயும் கவனியாது, ஸ்டேஷனிலுள்ள பெரிய கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு, எதிர்காலத்தில் மீனுக்ஷி குழந்தையுடன் திரும்பிவரும் தினத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். ஒருவருக்கும் தெரியாமல் கடைக்கண்ணுல் மீனுக்ஷியை நோக்கினுன். மீனுக்ஷியிடம் அவள் தாயார், "மீனு, உன் ஆத்துக்காரரிடம் சொல்லி உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல். அடுத்த மாதம் ஒரு மாதம் ரஜா வாங்கிக்கொண்டு ஊருக்கு வரச்சொல். உன் நாத்தனுரையும் குழந்தைகளேயும் கேட்டதாகச் சொல்" என்று சுப்பிரமணியனுக்கும் கேட்கும்படி சொன்னுள்.

மீனுக்ஷியோ, தன் நாத்தனுர் தனக்குக் கொடுத்த ஒரு பட்டு ரவிக்கையை அழகு பார்த்துக்கொண்டிருந்தாள். புகைவண்டியும்

தன் சந்தோஷத்திற்கு அறிகுறியாகச் சத்தமிட்டது. அக்குரலைக் கேட்ட மீனாக்ஷி திடுக்கிட்டு, பிறகு நாணத்துடன் தன் கணவனையும், தாயாரையும் பார்த்துக்கொண்டே மெல்லிய குரலில்,

"அம்மா, உன் மாப்பிள்ளையிடம் சொல்லி நான் சீனுவைக் கேட்டதாகச்சொல். அவனைப் பற்றியே நினைவாயிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்ட சுப்பிரமணியன் திரும்பி மீனாக்ஷியைப் பார்த்தான். களிப்பினால் தனக்கு வந்த புன்சிரிப்பை அடக்கமுடியவில்லை. தன் தமக்கையின் குழந்தையாகிய சீனுவைப்பற்றி நினைக்கும் மீனாக்ஷியையும், இனிமேல் வரப்போகும் ஒரு சீனுவையும்பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ரயில்வண்டி, இம்மாதிரியான குழந்தைத்தனமான பேச்சுகளைக் கேட்க மனமில்லாதது போல நகர ஆரம்பித்தது. தம் தலையை உயர்த்தி, ஒருவர்க்கொருவர் வந்தனம் செய்துகொண்டு ஆட்டும் தலைகளுக்கும் கைக் குட்டைகளுக்கும் நடுவில், ஜன்னலின் வெளியே தன் மகிழ்ச்சியும், பிரிவாற்றாமையும் நிறைந்த அழகிய முகத்தோடு எட்டிப்பார்த்துத் தன் மனைவி தலை யாட்டுவதைக் கண்டு மகிழ்ந்தான். வண்டி ஒரு வளைவில் மறையும் வரையும் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு பெருமூச்செறிந்து தன்னுடைய தினசரி வேலையை நோக்கி, ஸ்டேஷனை விட்டு வெளிக் கிளம்பினான் சுப்பிரமணியன்.



வேனில் உடை

வி. விசாலாக்ஷி அம்மாள்

மழை காலம், பனிக் காலம் எல்லாம் முடிந்துவிட்டது ; இப் பொழுது நல்ல வேனில் காலம் தொடங்கிவிட்டது. இதுவரை உபயோகித்துவந்த பட்டுடைகள், கம்பளி உடைகள், கெட்டியான துணி உடைகள் இவைகளைப் பூச்சி அரிக்காமல் தாற்சூடம் போட்டு ஜாக்கிரதையாக இனி மடித்து வைத்துவிட வேண்டியது தான். மெல்லிய துணி உடைகளே இனிமேல் கோடையின் உஷ்ணத்திற் குச் சௌகரியமாக இருக்கும்.

காலத்தின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறெல்லாம் உடைகள் வாங்குவது நவீன நாகரிகத்தில் ஏற்பட்ட வழக்கந்தான். நம் முன்னோர்கள் மழை காலங்களில் பட்டும், வேனில் காலங்களில் துணியுமாகக் கட்டி இருக்கலாம். ஆனால், அழுத்தமான பட்டுப் புடைவை, மெல்லிய பட்டுப் புடைவை, பட்டும் நூலும் கலந்த புடைவை, கெட்டியான துணிப் புடைவை, சாதாரணமான துணிப் புடைவை என்று பல தினுசான புடைவைகளை வாங்கி, காலத்திற்கு ஏற்ப உபயோகிக்க வில்லை. தற்காலத்தில் நாம் வாங்குவதைப் போல் ஒருத்தி கட்ட 'டஜன்' கணக்கில் புடைவைகளை அவர்கள் வாங்கவும் மாட்டார்கள். அந்த நாட்களில் இவ்வளவு தினுசுப் புடைவைகளும் விற்கவில்லை. ஓடும் நதிகளின் ஆரோக்கியமான தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நல்ல காற்றில் வசித்த அவர்களுக் குப் பட்டணவாசிகளான நம்மைப்போல் கோடையின் கொடுமை அவ்வளவு தூரம் உறைக்கவில்லை என்றும் கூறலாம். பல காரணங் களினால், வேனில் காலத்தில்மெல்லிய துணிப் புடைவைகள் உடுத்து வதே 'நாசூக்கு' என்று இப்பொழுது கருதப்படுகிறது. பணம்

உள்ளவர்கள் சரிகைபோட்ட—சற்று விலை உயர்ந்த துணிகளையும், இல்லாதவர்கள் விலை மட்டான துணிப்புடைவைகளையும் வாங்கிக் கட்டுகிறார்கள். வேனில் உடை என்று இரண்டு புடவைகளாவது வாங்காமல் இருப்பதில்லை.

வாங்குபவர்களுக்கு ஏற்ப எளிய விலையில் பல தினுசுப் புடைவைகள் விற்கவும் செய்கிறது. இந்தப் புடைவைகளைத் துவைத்தும் கட்டலாம்; சற்று அழுக்கானதும் தாராளமாக வண்ணானிடம் போட்டும் விடலாம். ஆறு கஜம் புடைவைகளாக வாங்குவதாக இருந்தால் இருபது ரூபாய்களுக்குள் அழகழகான கரை முந்தானையுள்ள ஐந்தாறு புடைவைகளை வாங்கிவிடலாம். இந்தப் புடைவைகளின் சாயம் நல்ல கெட்டிச் சாயமானதாகவே இருக்கிறது; அப்படியே வண்ணானுக்குப் போட்டதால் வெளுத்து விட்டாலும், அரை ரூபாய் செலவு செய்தால் இஷ்டமான சாயம் ஏற்றி விடலாம். மேலும், வெயிலின் கொடுமை அதிகமாக இருப்பதால் ஒரு தினத்திற்கு இரண்டு முறை ஸ்நானம் செய்தால் தான் ஆரோக்கியமாகவும் சுசியாகவும் இருக்கும். இவ்விதம் அடிக்கடி மாற்றுவதற்கெல்லாம் இத் துணி உடைகளே ஏற்றவைகள்.

உள் உடை

ஆனால் ஒன்று; துணிப் புடைவைகளில் இரண்டு தினுசுகள் இருக்கின்றன. ஒன்று சாதாரணமான புடைவை; குசும்பாப் புடைவைகள் போலிருப்பவைகள்; அதிக அழுத்தமானவை யல்ல; மிகவும் மெல்லியதாகவுமில்லை. இந்தப் புடைவைகளை எட்டு அல்லது ஒன்பது கஜ நீள முள்ளனவாக வாங்கி உள் உடை போட்டுக் கொள்ளாமல் கட்டலாம். மற்றொன்று மிகவும் மெல்லிய துணிப் புடைவை; இது சாதாரணமாக ஆறு ஏழு கஜம் நீளத்திலேயே விற்கப்படுகிறது. இந்தப் புடைவை நல்ல நாசூக்கான வேனில் உடையாகக் கருதப்படுகிறது. நாகரிகத்தில் அதிக முன்னேற்றம் இல்லாத ஒரு தகப்பனார், பள்ளியில் படிக்கும் தன் பெண் இந்த மெல்லிய துணிப் புடைவையை வாங்கி வந்ததும், "அம்மணி, இதை எப்படிக் கட்டுவது? நல்ல குடியில் பிறந்தவர் இந்த மாதிரியான உடைகளை உடுத்துவார்களா?" என்று கேட்டார். அது தான் தன் பள்ளியில் பலர் உடுத்தும் புடைவை, அதை உடுப்பதால் யாரும் வித்தியாசமாக நினைக்கமாட்டார்கள் என்று பெண் பலவாறு சொன்ன பின் அவர் அரை மனத்துடன் சம்மதித்தார். இந்தப் புடைவைகளைச் சரியான உள் உடை கட்டாமல் உடுத்தவே கூடாது. பாவாடை கட்டிக் கட்டலாம்; உள் நிஜார் மட்டும் போட்டுக் கட்டவே

கூடாது. இதை அறியாமற் சிலர் உள் நிஜார் போட்டு அதன்மேல் மெல்லிய துணிப் புடைவைகளைக் கட்டிவிடுகிறார்கள். இவர்கள் இவ்விதம் செய்வது நாகரிகத்தில் முன்னேற்றம் அடையாதவர்கள் இவர்களைப் பழிக்கவும், முன்னேற்றம் அடைந்தவர்கள் சிரிக்கவும் இடமாகிறது. மெல்லிய துணி உடைகளை உடுப்பது புதிய நாகரிகத்தைச் சேர்ந்த பத்ததி. அதைக் கையாள உத்தேசிப்பவர்கள் அத்துடன் சேர்ந்த உள் உடை முறையையும் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டும்; இல்லையேல் பலர் பரிகாசத்திற்கு உள்ளாக வேண்டியது தான்.

வேனில் உடை எல்லாம் வேனில் காலத்திற்குக் குளிர்ச்சியான ஊர்களுக்குப் போகாமல் பட்டணத்திலேயே வசிக்க உத்தேசிப்பவர்களுக்குத் தான். வேனில் காலத்திற்குக் குளிர்ந்த ஊர்களுக்குப் போகும் பழக்கமும் நவீன வாழ்க்கையில் ஏற்பட்டது தான். முதலில் ஆண்மக்கள் மட்டுமே இவ்விதம் சென்றார்கள். தற்சமயத்தில் காலத்தின் மாறுபாடுகளுக்கு ஏற்ப, "அவர்களுக்குக் கோர்ட்டு, காலேஜ், கச்சேரி முதலியவைகள் மூட, அல்லது லீவ் கிடைக்க இன்னும் ஒரு மாதமாகும்; இந்த வெயில் எனக்குத் தாங்கவில்லை; குழந்தைக்குக் கோடைக் கட்டி வெடிக்கிறது" என்று ஸ்திரீகள் முன்னமே கொடைக்கானல், பங்களூர், ஊட்டி முதலிய குளிர்ந்த ஸ்தலங்களுக்குச் சிறிய குழந்தைகளை அழைத்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். இவர்கள் தலைகீழாக, வேனில் உடை வாங்குவதற்குப் பதிலாகக் கம்பளி, பட்டு உடைகள் வாங்குகிறார்கள். இவைகளிலும், உஷ்ணத்தை விளைவிக்கக் கூடிய உள் உடைகளை வாங்குவதே சௌகரியமானது. குளிர்ந்த ஊர்களில் உள் உடை இரவு உடை இவைகள் நல்ல உஷ்ணம் அளிப்பதாக இருந்தால் தான் குளிர் அதிகமாகத் தெரியாமலிருக்கும். இரவில் நல்ல தூக்கமும் உண்டாகும். கம்பளிச் சட்டைகளைப் போடுவதால் மட்டும் உஷ்ணம் உண்டாகாது. நல்ல உயர்ந்த கம்பளி, கம்பளிப்பனியன், பட்டு இவைகளில் உள் உடைகளை வாங்கிவிட்டால், பிறகு சௌகரியம் போல் மேலே மெல்லிய சட்டை, புடைவை இவைகளைப் போட்டுக் கொள்ளலாம். இப்படிச் செய்யாமல் அழுத்தமான பட்டுப் புடைவையும், கம்பளிச் சட்டையும் போட்டுக் கொண்டால் கூட குளிரத்தான் செய்யும். குளிர்ந்த ஊர்களுக்குச் செல்ல உத்தேசிப்பவர்கள் இதை அறிந்துகொண்டு தங்கள் 'ஷாபிங்கைச்' செய்தால், பிறகு சௌக்கியமாக இருக்கலாம்.

விகட மஞ்சரி

கோணங்கி

வீட்டுவரி வசூலிப்பவர் :—எவ்வளவு நாளையா சாக்குச் சொல்லுகிறீர். உங்களுக்காகத் தாட்சணியம் பார்த்தது போதும். புது வருஷம் பிறந்துவிட்டது.

வீட்டுக்காரர் :—இன்னும் கொஞ்சம் பொறுக்கக்கூடாதா ?

வரி வசூலிப்பவர் :—ஜனவரி வந்தும் வீட்டுவரி வரவில்லையென்றால் எவ்வளவு நாள் காத்திருப்பது ?

* * * * *

சினிமாவாயில் காப்பவர் :—இந்தப் பையனுக்கு அரை டிக்கட் வாங்கியிருக்கிறீரே ; இவனுடைய வயதென்ன ?

வந்தவர் :—பத்து.

வாயில் காப்பவர் :—நான்கு வருஷங்களாக இப்படியே சொல்லி வருகிறீரே ?

வந்தவர் :—நான் எப்பொழுதும் புரட்டிப் பேசுவதே கிடையாது.

* * * * *

கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் கொஞ்சதூரத்திலிருந்த வீட்டிலுள்ள கடியாரத்தைப் பார்த்து மணியறிந்து வரும்படி ஒரு பையனை அனுப்பினர். அவன் ஓடிப்போகும் அவசரத்தில் ஒரு முள்ளுச் செடியில் விழுந்து முள்ளைத் தைத்துக்கொண்டு வந்தான்.

உபாத்தியாயர் :—மணிபார்த்தாயா ? சின்னமுள் எங்கே இருக்கிறது ? பெரியமுள் எங்கே இருக்கிறது ?

பையன் :—சின்னமுள் கையில் ; பெரியமுள் காலில் என்று சொல்லி அழத்தொடங்கினன்.

* * * * *

"மணி என்ன ?"

"பத்தாகப்போகிறது"

"ஒன்பதேகால்தானே ஆகிறது ?"

"இனிமேல் ஆகப்போகிறது பத்துத் தானே !"

‘வருக, கலைமகள்’

சுகவனம் சிவப்பிரகாசன்

1. சீர்திக ழமுதத் தமிழ்மொழிப் பெருமை
தெரிந்தவ ராங்கிலந் தெளிந்தோர்
பார்புக ழதிகா ரச்சிறப் புள்ளோர்
பண்ணியல் வகைத்தொழிற் பாங்கார்
ஏர்தரு முலகி னனுபவங் கண்டோ
ரெனைப்பல வலவர்தங் கரத்தே
பேர்தர வெழுந்து மதிதொறு முலாவும்
பிரியையெங் கலைமகள் வருக !

2. நற்கலை யொன்றோ பலகலை யகத்தே
நண்ணினை, கண்ணிய புலவோர்
பற்பல வகையாச் சித்திரித் திடுஞ்சீர்ப்
பரப்பினை, வரப்பினைக் கடவாக்
கற்புளா ரெவர்நின் னினமென வவர்பாற்
களித்தமு தருந்தினை, மேலுஞ்
சொற்பல மலராந் தொடையணிந் தினிதிற்
றோன்றினை ! கலைமகள் வருக !

3. அருந்தமிழ்க் கலையை யுதவினன் சங்கத்
தான்றநாள் விரிசடைக் கடவுள்
தருந்திருக் குமரன் பின்முறை காத்தான்
றண்டமிழ்க் குரவரே யுருவா
வருந்தியக் கால மிதிலதை வளர்க்க
வருந்தமிழ்ச் சாமிநா தன்றன்
பொருந்திய வடிவுங் ‘கலைக’ளெ னுளமும்
பொதுளினை ! கலைமகள் வாழ்க !!



டாக்டர் பட்டம் :—பல அரிய சங்க நூல்களையும் பிற பழைய நூல்களையும் நன்றாக ஆராய்ந்து வெளியிட்டுத் தமிழுலகுக்குப் பெரிய உபகாரம் செய்து வரும் தமிழ்ப் பேரறிஞர் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்குச் சென்னைச் சருவகலா சங்கத்தினர் 'டாக்டர் ஆப் லிடரேச்சர்' (*Doctor of Literature*) என்னும் கௌரவப் பட்டத்தை அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறோம். இந்தக் கௌரவத்தை ஸ்ரீ ஐயரவர்கட்கு அளிக்க முன் வந்த சென்னைச் சருவகலா சங்கத்தாருடைய செயலைத் தமிழ் நாட்டினர் பெரிதும் போற்றி ஆதரிப்பார்களென்பதில் ஐயமில்லை. டி. எஸ். ரா.

காபி டீக் கறைகளை நீக்க :—பட்டுத் துணிகளினின்றும் கம்பளித் துணிகளினின்றும் கறைகளைப் போக்கக் கறையான இடங்களைக் கிளிசரினைக் (*Glycerine*) கொண்டு தேய்த்துத் துடைக்கவேண்டும். அப்பொழுது மெத்தென்று இருக்கும்படியாயும் மிகுதியான கிளிசரினை எடுப்பதற்கும் பஞ்சைத் துணிகளுக்கு அடிப்புறத்தில் வைத்துக் கொள்ளுவது நல்லது. கறை நீங்கியதும் சற்று வெதுவெதுப்பான வெந்நீரால் அந்த இடத்தைக் கழுவிவிட வேண்டும். பிறகு அடிப்புறத்தில் இஸ்திரிப் பெட்டியால் சூடுவரும் வரை இஸ்திரி போடுக.

கடல் நீரின் உப்பு :—அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் நீரில் ஒரு டன் நீரிலிருந்து 81 பவுண்டு உப்பும், பசிபிக் மகாசமுத்திரத்து நீரிலே ஒரு டன் நீரிலிருந்து 79 பவுண்டு உப்பும், மரண சமுத்திர நீர் ஒரு டன் இடையுள்ள நீரிலிருந்து 187 பவுண்டு உப்பும் கிடைக்குமாம்.

ரோல்ஸ் ராய்ஸ் :—இஃது உலகத்திலுள்ள மோடார்கார்கள் எல்லாவற்றிலும் மேன்மையானது என்று புகழ் பெற்றது. சி. எஸ். ரோல்ஸ் (*C. S. Rolls*), எப். எச். ராய்ஸ் (*F. H. Royce*) என்ற இருவர்களால் செய்யப்பட்டதால் அவ்விருவர் பெயரையும் பிணைத்த இப்பெயர் பெற்றது.

சுண்டெலிகளை ஓட்ட :—பண்டங்கள் வைத்திருக்குமிடத்தில் கேயென் மிளகுத் தூள் தூவி வைத்தால் சுண்டெலிகள் கிட்ட வர மாட்டா.

உலோகப் பொருள்களைப் பளபளப்பாக்க :—கிண்ணம் நிறையச் சலித்த சாம்பலும் ஸோடா உப்பு (*Bicarbonate of Soda*) இரண்டு டீஸ்பூன் அளவும் சேர்த்துத் தண்ணீரோடு கலந்து பசை போக்கி வைத்துக் கொண்டு, அதைத் தடவித் தேய்த்தால் உலோகப்பொருள்களைப் பளபளப்பாக்கும். அ.



தர்மவாசகம் என்னும் அறவுரை : [ஸ்ரீமான் சாது. கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் எழுதியது; ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன், சென்னை ; விலை அணா, 3].


இச்சிறு நூல் வேதாந்தக் கருத்துக்கள் சிலவற்றைச் சுருக்கமாக எளிய நடையில் கூறுவது. இதன் ஆசிரியர் தமிழ் நாட்டிற்குப் புதியவரல்லர். பல தமிழ் வேதாந்த நூல்களைப் பதிப்பித்தவர். விஷய சுகம், ஆயுள், காமிய கருமம் என்பனபோல உள்ள 32 தலைப்புக்களில் அமைக்கப்பட்ட இந்நூல் யாவரும் படித்தற்குரியதாம். 'சச்சிதாநந்த சிவம் தானே' என்ற சிறிய கட்டுரையொன்றும் நிர்வாண தசகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பும் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

வள்ளுவரும் மகளிரும் : [ஸ்ரீமான், தென்பட்டினம் மீனாக்ஷி சுந்தரனார், M. A., B. L., Dip. Ec. M. R. A. S., அவர்கள் எழுதியது ; பக்கம் 168; ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை; விலை ரூ. 1-0-0].

இது, திருக்குறளில் திருவள்ளுவர் மகளிரைப்பற்றிக் கூறியசெய்திகள் எங்ஙனம் அவர்களது பெருமையை உணர்த்துகின்றன என்னும் பொருள் பற்றி ஆராய்ந்தெழுதிய நூல். குறளில் பல அதிகாரங்களில் உள்ள பல செய்திகளைத் திரட்டி இயைபுடைய வண்ணம் அமைத்து, பெண்களுக்குப் பெருமை தந்தவர் வள்ளுவர் என்னும் கொள்கையை நிறுவுகின்றனர் இவ்வாசிரியர். ஆராய்ச்சிமுறை அறிவியற் சுவையோடு கூடி நன்கு விளங்குகின்றது. இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் அறிஞர்களுக்கு இன்ப முண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. வள்ளுவர் குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் கருத்துக்களுக்கு உரிய சமாதானம் கூறிச் செல்லும் இடங்களில் ஆசிரியர் அவர்தம் சிறப்பையும் தமிழுக்கு அவர் செய்த உபகாரத்தையும் எடுத்துக்காட்டி யிருத்தல் பெரிதும் போற்றற்குரிய தொன்றாம்.

புத்தக வரவு

கமலம், கார்மண்டலசதகம்,
சந்திரமதி, திருவேங்கடமாலை.



திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம்

இப்பிரபந்தம் உள்ள எட்டுப்பிரதியொன்றை, இப்பொழுது புரசபாக்கம் இ. எம். எல். எப். ஹை ஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராக இருக்கும் சிரஞ்சீவி, ச. கு. கணபதி ஐயர், சேலம் ஜில்லா வேலூரில் தாமிருந்தபொழுது ஒரு வருஷம் பதினெட்டாம் பெருக்கிற் காவிரியில் நீராடுகையில் அவ்வாற்றில் மிதந்துவந்த ஒற்றை யேடுகளிலிருந்து எடுத்து வந்ததாகச் சொல்லிச் சில மாதங்களுக்கு முன் என்பாற் சேர்ப்பித்தனர். சுவடியின் பழமையை நோக்குகையில் அது நூறு வருஷத்திற்கு மேற்பட்டிருக்கவேண்டுமென்று தோற்றியது.

இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இச்செய்யுட்களின் நடை எளியதாக இருத்தலின் ஸ்ரீ கபாலீசரைத் துதிக்கும் அன்பர்களுக்குப் பயன்படுமென்றெண்ணுகிறேன்.

உ. வே. சாமிநாதையர்

இரட்டை ஆசிரிய விருத்தம்

1. சீர்கொண்ட கங்கையுந் திங்களுங் கொன்றையணி
 திகழ்சடைக் கற்றை யழகும்
சிலைமதனை வென்றவிழி வளருமிரு நுதலினிற்
 றிரிபுண்ட ரத்தினழகும்
பார்கொண்ட திருவயிற் றரசிகற் பகவல்லி
 பாகத் திருக்குமழகும்
பாதவிரு போதழகு மேழையேன் கண்டுமுற்
 பழவினை யொழிப்பதென்றோ

காா்கொண்ட விடமுண்ட கண்டலோ லாவிரு
கரத்தொரு கபால சூலா
கனமூலா கமநாலா மறைமேலா கியசீலா
காளியுட னுடிகாலா
ஆர்கொண்ட கொள்கைக்கு முரியலோ லாசச்சி
தானந்த மான லீலா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரி கபாலீசனே.

2. மடியாத சனனப் பெருங்காட்டி லேதுட்ட
மனமெனும் வல்லிருளிலே
வாதாடு காமாதி யெனுமழையி லேயுலக
மாயையெனு முள்வழியிலே
முடியாத வைம்புலக் கள்ளர்கையி லேசிக்கி
மூதறிவெ னுந்தனமெலாம்
முழுவதும் பறிகொடுத் துழலுமெனை வாவென்று
முத்திநீ தந்தருளுவாய்
கடியார் மலர்ப்புன்னை வனவுலா சாபுலிக்
கான்முனி தொழுஞ்சர்வேசா
கயிலாசா அகிலேசா விசுவாசா பசுபாசா
கல்லாலி னிழல்விலாசா
அடிமாறி நடனமிடு சுயம்ப்ரகா சாவிழிக்
கானந்த மானதேசா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரிக பாலீசனே.

3. மெய்யெனும் பொய்யுடலை நிலையென்று பலகோடி
வீணினைவெலாம் நினைந்து
மின்னாசை பொன்னாசை மண்ணாசை யெனுமூன்று
வெள்ளக் கடற்குண்மூழ்கி
உய்யும்வகை செய்யும்வகை யொன்றுமறியாதலைந்
துழலும்வெறி யேனைவாவென்
றுண்மைநிலை காட்டிமரு ளோட்டிநன் னெறிகாட்டி
யொழியாத செல்வமருள்வாய்
கையின்மறி மான்மழு விளங்குநா தாகருங்
காலனை யுதைத்தபாதா
கதிநீதா பரபோதா துதிவேதா கணநாதா
காண்பவ ரிடத்தபேதா

ஐயமிடு மென்சொலி னின்றருகு தாவகண்
டாகார வெகுவிநோதா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரிக பாலீசனே.

4. நல்லா ரிணக்கமொரு நாளுமறி யேன்வீணில்
நாடாது நாடும்வெறியேன்
நானெனு மகந்தையொழி யாதசிறி யேனன்பர்
நட்பினை யிகழ்ந்துகுறியேன்
மல்லாடு மைம்புலக் கள்ளரை யடக்கியுன்
வடிவைநிலை நின்றுகுறியேன்
மாயையெனு மூலமல வேர்கள்பறி யேனெந்த
வாறுனைச் சொல்வதுரையாய்
கல்லா லெறிந்தவர்க் கருள்சகா யாமலர்க்
காமனை யெரித்த தூயா
கனிவாயா பரிவோயா வுயிர்நேயா மறைவாயா
கடுமிடற் றிடுமுபாயா
அல்லாது செய்பவர்க் கரியசே யாவென்
பணங்கெனச் செய்யுமாயா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரி கபாலீசனே.

5. வானாதி பூதபே தத்திலோ பகிரண்ட
மாமுடியி லோவடியிலோ
மாசற்ற பருதிமதி மண்டலந் தம்மிலோ
மறைநான்கி னுட்பொருளிலோ
நீநானெ னாதவ ருளத்திலோ மெய்ஞ்ஞான
நிறையஞ் செழுத்ததனிலோ
நித்தபரி சுத்தவுல கத்திலோ யாதிலோ
நீவிற் றிருப்பதுரையாய்
நானா வகைத்திற மெடுத்ததே காவளகை
நாடாதி பன்சினேகா
நதிமோகா வுமைபாகா சிவலோகா தவயோகா
நற்கதி தருந்தியாகா
ஆனாத மணிநாக மணியும்வா காவெங்கு
மாகிநிறை யேகபோகா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரி கபாலீசனே.




காஞ்சீபுர மதிலோவியங்கள்

எம். எஸ். சுந்தர சர்மா

தமிழகத்திற் சிறந்த ஓவியங்களிருந்தனவென்று கேள்வியிலிருந்தும் பல நூல்களிலிருந்தும் நாம் அறிந்துவந்தோமேயாயினும், அஜண்டா, பாக் முதலிய இடங்களுக்குத் தெற்கில் சித்திரங்களைக் கண்ணாரக் கண்டதில்லை. வனைபவர் தீட்டும் மைய நுண்பலகைகளும், வஸ்திரங்களும், மதில்களும் இந்நாட்டில் சிதறிக்கிடந்த பெருமையைக் காதினால் கேட்டிருக்கிறோமேயொழியப் பார்த்ததில்லை.


அஜண்டாவிலுள்ள மதிலோவியங்களைக் கண்டறிந்த நூறு வருஷங்களுக்குப் பிறகு 1919-ம் வருஷத்தில் தற்செயலாய் நமது தேசப் பூர்வசரித்திர ஆராய்ச்சி முதலியவைகளில் நிபுணரான கோபிநாதராயரவர்கள் புதுக்கோட்டை குடுமியாமலை முதலிய இடங்களுக்கு அருகேயுள்ள சித்தன்னவாசல் என்ற ஸ்தலத்தையடைந்து கல்வெட்டுக்களைக் கருதி உலாவுங்கால் ஒரு குடைந்த மண்டபத்தின் மதில்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் கண்டறிந்தார்.

உடனே அவருடைய ஒத்துழைப்பு நண்பரான டேப்பிரியேல் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதி, அச்சித்திரங்களின் அபூர்வத் தன்மையையும், எடுத்தெழுதிக்காட்டவேண்டிய கடமையையும் தெரிவித்தார். பல்லவர்களின் நாகரிகத்தை முற்றுமுணரப் பாடுபட்டுவரும் அந்த அறிஞரும் உடனே சித்தன்னவாசலுக்குச் சென்று அவ்விடம் கண்ட ஓவியங்களின் உயர்வை அறிந்து எழுதித் தம்மால் இயன்றமட்டும் அங்குக் காணப்படும் ஒரு நடனப் பெண்ணின் உருவைப் புனையா ஓவிய விளக்கத்தோடும் அச்சிட்டு வேண்டியவர்களுக்கெல்லாம் தெரியும்படி அனுப்பினார். அவ்வச்சிட்ட தாள் ஒன்று என்னிடம் சேரவும், மழையை எதிர்பார்த்திருக்கும் சகோரத்தைப் போல் இம்மாதிரி அபூர்வ ஓவியங்கள் நமது தமிழகத்தில் எங்கு



1. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.




2. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.



3. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.



4. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.

எப்பொழுது காணப்போகிறேமென்று அவாவுடனிருந்த யான், உடனே சித்தன்னவாசலுக்குச் சென்று அங்குள்ள பழைய ஓவியங்களைக் கண்ணும் மனமுமாரக் கண்டு களித்துச் சிற்சிலவற்றை எடுத்தெழுதி வெளியாக்கியதுண்டு.

அங்ஙனமிருக்கச் சென்ற வருஷத் தொடக்கத்தில், அதே டூப்பிரியேல் அறிஞர் காஞ்சீபுரம் சென்று அங்குப் பூர்வமாய்ப் பல்லவ அரசர்களின் காலமுதல் நின்றுநிலவும் கைலாசநாதர் கோயிலின் சுவரின்மேல் கண்மூடித்தனமாய் வெள்ளையடித்துக் கெட்டித்த காரை அடைகளைத் தோண்டிப் பார்த்தபொழுது திடீரென்று மேன்மையான சிற்சில புராதன ஓவியங்கள் தோன்றினதைக் கண்டு மகிழ்ந்து பின்னும் தோண்ட ஆரம்பித்தார். அப்படிப் பார்த்ததில் மற்றும் சிற்சில உருவங்கள் அரையும் குறையுமாய்ப் புலப்பட்டன.

உடனே அவைகளைக் கண்டுபிடித்ததைப் பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார். அப்பிரசுரங்களைப் பார்த்த மறுநாளுதயத்திலேயே அவ்வோவியங்களைக் காணவேண்டி ஆவலுடன் புறப்பட்டுக் காஞ்சீபுரம் சென்று பாழடைந்த கைலாசநாதர் கோயிற் குருக்களினுதவியால் உட்புகுந்து புதியனவாக அறியப்பட்ட ஓவியங்களைக் கண்ணாரக் கண்டு கண்டவற்றையெல்லாம் உள்ள அளவில் புனைந்து சுயவர்ணங்கள் தீட்டி வந்து சேர்ந்தேன். இங்கு விளக்கப் படங்களாக அவை அச்சிடப்பட்டிருக்கின்றன.

அங்கே ஐந்து தலைகளும், ஓர் உடலும், ஒரு முழங்கையும் காணப்படுவதோடு ஒரு கையின் விரல்கள் விரித்தவகையில் காணப்படுகின்றன. அச்சித்திரங்கள் முழுவதாய்க் காணக்கூடாமையினால் அவை எவற்றை விளக்குகின்றனவென்றும், எதற்காக வரையப்பட்டவைகளென்றும் உறுதியாய் நிதானிக்கமுடியவில்லை. லிங்கஸ்தாபனம் பெற்ற ஆலயத்தின் மதில்களிற் காணப்பட்டமையால், பௌத்தரது அல்லது ஜெயினரது ஓவியங்கள் என்று உரையாமல் அவைகளை ஹிந்துக்களின் ஓவியங்களென்று அறிஞர் டூப்பிரியேல் ஓதியுள்ளார்.

நான் சரித்திரக்காரனல்ல. ஆகையால் அவைகள் யாரைச் சேர்ந்தனவென்றும், யாருடைய காலத்தில் வரையப்பட்டவைகளென்றும், அவைகளின் பெயர் எவைகளாயிருக்கலாமென்றும் உள்ள கேள்விகள் என்னைப் பாதிக்கவில்லை.


ஓவியச்சிறப்பும், அபூர்வமும், முகங்களில் காணப்படும் லக்ஷணங்களும், தேர்ந்த கைகளினால் திறமையான எல்லைவரைகள் வாய்ந்

திருக்கும் தன்மையும், கண்குளிரும் அருமையான வர்ணங்கள் தீட்டி யிருக்கும் வைபவமும், அவ்வோவியங்களின் கண்களிலிருந்து புலப் படும் கருத்துக்களுமே என்னைக் கவர்ந்துகொண்டன. பங்கிவாலாக் களின் அரையும் குறையுமாய் மூடின கண்ணினையே ஆத்மீகக் கண்க ளென்று காட்டி இந்திய ஓவியங்களென்று வங்காளத்திற் கூத்தாடும் சில இருண்ட படங்களும் ஒருபுறம் ஞாபகத்திற்கு வந்தன. இந்திய ஓவியங்களின் உண்மையான மேன்மையையும், திறமையையும் எடுத்துக்காட்டும் இவ்வோவியங்கள் சித்தன்னவாசலைத்தவிர இவ் விடத்திலும் கிடைத்துள்ளது நமது தமிழகத்தின் பாக்கியமென்றே கருதினேன்.

இவ்விதமான ஓவியச்செல்வத்தை ஆதாரமாகக்கொண்டு அவை களின் உண்மையான பெருமைகளை நன்கறிந்து ஓவியப்பயிற்சியை மறுபடியும் நம் நாட்டார் முன்னுக்குக் கொண்டுவருவார்களே யாயின் நமது பெருமை எவ்வளவு உயருமென்று எடுத்துரைக்கக் கூடுமோ ?

இக்காலத்தில் பஞ்சாங்கவிதழ்களில் மூளையற்ற அச்சுக்களினல் அடிக்கப்பட்ட படங்களைச் சுவர்களில் கௌரவமாய்த் தொங்க விட்டுக் களிக்கும் கனவான்களெல்லாம் அவைகளைத் திரட்டி ஒரு தீக்குச்சியினல் 'சொக்கப்பனை' செய்து தம்தம் சுவர்களில் ஒரு சிறு ஓவியமேனும் வல்லோரினல் வரையச்செய்து களிப்படையக் கற்றுக்கொள்வரேயானல் நமது தமிழகத்தில் ஓவியப்பயிற்சி குன்றி யிருக்கும் நிலைமை எவ்வளவு நாள் நிற்கும்?

காஞ்சீபுரத்தில் காணப்படும் ஒரு முகத்தின் கண்களைச் சற் றுக் கவனியுங்கள் (வர்ணப்படம்). பார்க்கப் பார்க்க, ஒரு கண்ணுயி னும் அஃது உங்களுடன் பேச ஆரம்பிக்கும்; அது மிக்க பரிதாபத் துடன், "நீங்கள் இக்காலத்தில் கருவிகளினுதவியாலும், ரசாயன முயற்சியாலும் கைத்தேர்ச்சி யில்லாதவர்கள்கூடப் பிடித்து எளி தாய் எடுக்கும் படங்களின் உருண்டு திரண்ட உடல்களைமட்டுமே கண்டு களிப்படையக் கற்றதனல், மனோபாவமாய் எண்ணத்தி லுதித்து ஆனந்தத்தை உண்டாக்கிய உருவங்களைச் சாமர்த்திய மாய்க் கைவன்மையால் வரைந்துள்ள சாதுர்யத்தைக் கண்டு உவக் கும் தன்மையையும், ஊக்கத்தையும் இழந்தீர்கள்" என்று சொல் வதைக் கேட்பீர்களென்று நம்புகின்றேன்.




5. காஞ்சீபுரம், கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.

[illegible]

[illegible]



6. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம்.

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B A.

திருமகள் துதி

என். கோடீசுவர ஐயர்

கீர்த்தனம்

இராகம் ஸ்ரீ—ஆதி தாளம்

பல்லவி

அம்பொன் அனேயே—நான்
உனேயே—நம்பினேன் (அம்)

அனுபல்லவி

செம்பொன் அம்போருகத்
திருவே—பக்த—தருவே—ஸத்
குருவேலவர் பதம்பரவு தமிழ் இதம்பெறவே (அம்)

சரணம்

மதுரமாமொழி கொடெழில் குலவு திருமால்
மன மகிழ் ரமா—எனவே
மதுர பாரதி சசியு மாரதி
துதி புரி ஸுந் தரியே,
மதுரமோடமர் சதுர மதுற நவ
ரஸமதார—உன—துதார சுபகர
வரமதார கவி குஞ்சர தாஸன் என்
மனமதார வர குமாரன் இசை வர (அம்)

ஸ்வரஸகித ஸாகித்யம்

பல்லவி

ஸா; ஸநிபம பாநீஸாரிம	ரி ஸ ரி மா பா ,	ப ம ரீ க ரி ஸ நி	||
அம் பொன் அனேயே நா	ன் உனேயே	நம் பி னேன்	||
,, ரிமபாநி	ஸ்நிபம ப நீ ஸ்ா ,	ஸ்நிபம ரிகரி நி	||
,, நா	ன் உனேயே	நம் பி னேன்	||

(ஸா)
(அம்)

அனுபல்லவி

பமப நி ப மரிமபமரிகாரிஸா | ; ப மா பா , | ; ; ம ப நி நி ||
செம்பொன்அம் போருகத் | தி ரு வே | ப ||
பமபஸ்நிஸ்ா, பமபரிஸ்ரீ, | ஸ்நிபஸ்ாநிபம | ப ம ரி காரி ஸநி ||
க்ததருவே ஸத்குரு வே | லவர்பதம்பரவு | தமிழ்இதம்பெறவே ||

சிட்டா ஸ்வரம்

ஸா,ரிமபநீ, ஸ்நிபமரிகரி | ஸா, ரிபமரிக | ரி ஸ நி பா நி ஸ ரி ||
மரீபமரிகாரிஸரிமபநிஸ்ரி | க் ரீஸ்ாநிபத | நி பம ரி கரி ஸ நி ||
(ஸா)
(அம்)

சரணம்

ரிமப நீ, ஸ் நிபமரிகரிஸரிஸ | ரீ, ஸ நி ப ஸ நி | ஸா , , , ம ரி ஸ ||
மதுரமாமொழிகொ
டெழில் குலவுதிரு | மால்மனமகிழ்ர | மா வெனவே ||
ரி ம ப ரீ, காரிஸ ரிமபநீ, | ஸ்நிபம ம்ரிஸரி | பமரீ , ஸா , ||
மதுர பா ரதி சசியு மா | ரதிதுதிபுரிஸுந்த | ரியே ||
மபநிமா, ம பரிரிமமபபபப | மபநிநிபம பம | ப நீ நி ஸ் ஸ் ஸ் ஸ் ||
மதுரமோடமர் சதுரம
துறநவ | ரஸமதாரஉன | துதார சு ப க ர ||
பபபரீரிஸ்நிஸ்ாஸ்ஸ்ஸ்நிபம | பநிஸ் பாமபத | நிபமரி க ரி ஸ நி ||
வரமதாரகவிகுஞ்சர
தாஸனென் | மனம தார வர | குமார னிசை வர ||
(ஸா)
(அம்)

இலக்கியம்



தாயுமானவர்

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

தரும்பு வனத்திடைப் பேர்த்தாயு மானவ சற்குருநின்
னரும்பு வனமலர்ப் பாதத்தெ னுள்ள வளிபடரும்
விரும்பு வனமுத மீந்திடல் வேண்டும் வெறுத்திடல்செங்
கரும்பு வனமெனப் பாடிய பைந்தமிழ்க் காவகத்தே.

தாயுமானவர் சரித்திரத்தை அறிதற்குப் பல கருவிகள் உள்ளன. அவற்றுள், முதலாவது, அவர் இயற்றிய பாடல். இப்பாடல்கள் கி. பி. 1835, 1844, 1851, 1885, 1897, 1902-ம் ஆண்டுகளிலும் அவற்றின் பின் பல ஆண்டுகளிலும் பிரசுரிக்கப்பட்டவை. அவற்றுள் முதற்பதிப்பு, தாயுமானவர் குருமரபில் தஞ்சாவூருக்கு வடகீழ்பால் திட்டைக்கு ஒருமைல் கிழக்கேயுள்ள அன்னப்பன்பேட்டையிலுள்ள மடத்தில் 1835-ம் வருஷத்தில் ஐந்தாவது பட்டத்திருந்த அம்பலவாண சுவாமிகளுடைய அடியார் ஆகிய எடுத்துக்கட்டி அருணசல நாயனரிடத்திருந்த ஆதீனச்சுவடியைக் கொண்டு திருத்தணிகைச் சரவணப் பெருமாளையராற் பிரசுரிக்கப்பட்டது. மற்றைப் பதிப்புக்கள் பெரும்பாலும் இதனைப் பார்த்துப் பிரசுரிக்கப்பட்டவை. இரண்டாவது, மேற்கண்ட பிரசுரங்கள் சிலவற்றில் (1844, 1902) அச்சிடப்பட்டுள்ள பாயிரச்செய்யுள்கள். இவை மறைக்காட்டுத் தாயுமானவரும் சொர்க்கபுரத்து அழகிய திருச்சிற்றம்பல தேசிகரும் சமகாலத்தவர்கள் என்பதையும், இவருள் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் அறிவானந்த சமுத்திரம், கிளிவிடு தூது முதலிய நூல்களையும், தாயுமானவர் தமது திருப்பாடலையும் பாடினர்கள் என்பதையும் விவரமாகக் கூறுவன. இப்பாயிரச் செய்யுள்கள் தாயுமானவர் காலத்தே அவரது அடியார் மரபின் அபியுக்தர் ஒருவரால் இயற்றப்பட்டவை. மூன்றாவது, தாயுமானவர் மாணுக்கராகிய அருள்வாக்கியர் எழுதிய அகவலும் (232 அடிகள்), தாயுமானவர் பாடிய வண்ணத்தின் இடையிடையில் கொச்சகப்பாவில் அவ்வருளையர் பாடிய திண்ணமும் ஆகும். இவற்றுல்

தாயுமானவர் மறைசை (வேதாரண்யம்)யில் பிறந்தனர் என்பதும், இன்னவின்ன பொருள்களைத் தமக்கும் பிறர்க்கும் உபதேசித்தனர் என்பதும், மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர் என்பதும் அவர் புலப்படுத்தினர். நான்காவது, திருத்தணிகைச் சரவணப்பெருமாளை யர் எடுத்துக்கட்டி அருணுசல நாயனுரிடம் நேரிற் கேட்டு 1835-ம் வருஷம் அச்சிற் பிரசுரித்த தாயுமானவருடைய சரித்திரம். இதனை அனுசரித்தே பிற்பட்ட பதிப்பாசிரியர்கள் தாயுமானவருடைய சரித் திரத்தைப் பிரசுரித்துள்ளார்கள். இவை யாவும் ஆசிரியர் காலத்துப் பெரியார்கள் கூறிய கூற்றுக்கள்; ஆதலின் திடப்பிரமாணமாகக் கொள்ளத்தக்கன. சமீபகாலத்துப் பதிப்பொன்றில் குருதோத்திர மாக அருளையர் பாடிய பாடல் 5, கோடிக்கரை ஞானியார் பாடல் 1, கரபாத்திர சுவாமி பாடல் 3, பாலஞானியார் பாடல் 2 காணப் படுவன.

இவற்ருல், மதுரை, திரிசிரபுர நகரங்களில் அரசு செலுத்தி வந்த நாயக்க மன்னருள் விஜயரங்க சொக்கநாதர் (1704-1731) ஆட்சியில் கேடிலியப்பபிள்ளை அம்மன்னருக்குச் சம்பிரதியாக விருந்த காலத்தில் (1705 அல்லது 1707) தாயுமானவர் பிறந்தவர், அம்மன்னருக்குப் பின் அரசுரிமை வகித்த மீநாக்ஷி அம்மாள் (1731-1736) காலத்தில் துறவு பூண்டவர் என்பது போதரும். சொக்கநாதர் (1662-1682) காலத்தே இவரிருந்தாரெனக் கொள்ள லாகாதோவெனின், அவருக்குப் பின் அவருடைய புத்திரர் அரங்க கிருஷ்ணமுத்துவீரப்பரும் (1682-1689), இவர் தாயார் மங்கம் மாளும் இராஜ்ய காரியம் பார்த்துவந்தனர். ஆதலின் ஐதிகப்படி பதிக்குப்பின் சதியாளத்தொடங்கியது விஜயரங்க சொக்கநாதர் காலத்துக்குப் பிறகேயாம். அன்றியும் விஜயரங்க சொக்கநாதர் காலத்து இராஜாங்கம் க்ஷீணதசைக்கு வந்துவிட்டது. அவரது பத் தினி மீநாக்ஷியம்மாளும் ஒழுங்காக அரசியலை நடத்தவில்லை; பெய ருக்கு மாத்திரம் அவர்களுடைய சுவீகார புத்திரர் குமாரமுத்துத் திருமலை என்பவர் மன்னராக விருந்தார். இவரது ஜனக பிதாவா கிய பங்காரு திருமலை மிக்க அசக்தர். இன்னோர் காலத்துத் தமது பிதாவுக்குப்பின் சம்பிரதியாக விருந்த தாயுமானவரும் ஜனக மகா ராஜனைப்போல வேத்தியலிலும் துறவியலிலும் வாழவேண்டியிருந் தும் அவ்வரச வம்சம் க்ஷீணித்து விட்டபடியால் வேத்தியலை விட்டுத் துறவியலை மாத்திரம் பூண்டார். இது மீநாக்ஷியம்மையின் அரசியற் கடைசி வருஷமாகிய 1736-க்குச் சற்று முன்பின்னுக வேண்டும். ஆகவே சொக்கநாதர் காலத்தே (1662-1682) தாயுமானவர் இருந் தார் என்பது கொள்ளத் தக்கதன்று.

இலக்ஷ்மி நகரத்தில் பழமையான சுவரெழுத்தை மாற்றிப் பின்பு சாலிவாகன சகாப்தம் 1581 அதாவது கி. பி. 1659-ல் தாயுமானவர் பரிபூரண நிஷ்டையுற்றார் என்று லிபி பொறிப்பித்திருப்பதும், அதற்கேற்றபடி செய்யுள் ஒன்று பிரசுரித்திருப்பதும் சமீபகால ஏற்பாடுகள். கோடிக்கரை ஞானியார் பாடியதாகச் சொல்லப்படும் இச்செய்யுள் அச்சில் உள்ளபடி,

துகளறு சாலி வருடமா யிரத்தைஞ்
ஞாற்றெடெண் பத்தொன்று தொடரு
மிகுசுப கிருதாம் வருடந்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூர்ணத் திதியினி லருத்த
மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கரை யதனிற் றாயுமா னவனார்
சிவத்தினிற் கலந்தநற் றினமே

என்பது. சகம் 1581 (கி. பி. 1659) சுபகிருது வருஷமன்று; விகாரியாதல் வேண்டும்.

தாயுமானவ சுவாமிகளுக்குப்பின் அவர் ஸ்தாபித்த அன்னப்பன் பேட்டை மடத்தில் இருந்த பெரியோர்கள் (2) அருளையர், (3) கனகசபாபதிமூர்த்தி, (4) அக்ஷயலிங்க தேசிகர் (3-வது பட்டத்தின் பௌத்திரர்), (5) அம்பலவாண தேசிகர், (6) சோமசுந்தர தேசிகர், (7) வைத்தியலிங்க தேசிகர், (8) நமச்சிவாய தேசிகர் என்பவர்கள். இவர்களுள் பெரும்பாலார் மக்கள் முறையில் வந்தவர். இப்போது (1932) ஒன்பதாவது பட்டத்து எழுந்தருளியிருப்பவர் சபாபதி சுவாமிகள். உத்தேசக் கணக்கின்படி இம்மடாலயத்து ஆதிகுருமூர்த்திகளின் காலம் 18-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியாதல் வேண்டும். தாயுமானவருடைய குரு மவுனசுவாமி முதல்முறை திரிசிரபுரத்துச் சாரமா முனிவர் மடத்திலும், இரண்டாம் முறை வேதாரண்யத்திலும் தோன்றிய அவதாரத்திருமேனி. திரிசிரபுரத்தில் மௌனத்தம்பிரான் என்று வேறோரடிகள் இருந்தனர் (சகம் 1501-69). இவர் சீடர்மரபில், (2) தாயுமான தம்பிரானும் (சகம் 1566-84), (3) நமசிவாய தம்பிரானும் (சகம் 1584-1607), (4) தில்லைநாயகத் தம்பிரானும் (சகம் 1607-1615), (5) சிதம்பரநாதத் தம்பிரானும் (சகம் 1615-1637) இருந்தனர். இச்சிதம்பரநாதத் தம்பிரான் காலத்தே மங்கம்மாள் (கி. பி. 1689-1704) அரசாட்சி புரிந்தனர். இம்மரபில் வந்த தாயுமான தம்பிரானும், திருப்பாடல்கள் பாடிய தாயுமானவ சுவாமியும் வெவ்வேறு புருஷர்கள். தாயுமான தம்பிரான் (சகம் 1584) திரிசிரபுரத்திலும், தாயுமானவ சுவாமிகள் (சகம் 1664) இலக்குமி நகரத்திலும் பரிபூரணம் அடைந்த சிவஞானிகள். "துகளறு"

எனத் தொடங்கும் செய்யுளில் கண்ட தாயுமானவர் (சகம் 1581) கங்கைக் கரையில் சிவத்தினிற் கலந்தவர். இப்புண்ணியவானைப்பற்றி இனியும் விசாரித்தறிதல் வேண்டும். ஆகவே திருப்பாடல் பாடியருளிய தாயுமானவர் பழைய லிபிப்படி சகம் 1663, கி. பி. 1742, துன்மதிஹு தைமீ விசாக நக்ஷத்திரம் கிருஷ்ணபட்ச தசமியில் பரிபூரணம் அடைந்தவராதல் வேண்டும். இதற்குச் சார்பாகச் சில பெரியோர் கொள்கைகளும் பின்னர்க் குறிக்கப்படும்.

இனிப் பாயிரச் செய்யுளிற் கண்ட அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் வரலாற்றைச் சிறிது கவனிப்போம். சோணாட்டில் திருவம்பர்மாகாளம் என்பது மேலைத்திருமாகாளம் எனவும், கீழைத்திருமாகாளம் எனவும் இருபிரிவினையுடையது. கீழைத்திருமாகாளத்தில் சொர்க்கபுரம் என்னும் சிவாலயமும் சைவமடாலயமும், அம்மடத்திற்குத் தென்பால் திருக்குளமும் அரசலாறும் பொருந்தியுள்ளன. இந்நதியின் வடகரையை மாகாளம் இலந்துறையென வழங்குவர். இந்த இலந்துறையில் சோணாட்டு வேளாளர் குலத்தில் அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் திருவவதாரஞ் செய்தார். இவர் தருமபுர ஆதீனத்து 8-வது பட்டத்துக் குரியவராயிருந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிகர். இவரோடு தாயுமானவரும், இவரிடம் திருநாவுக்கரசு தேசிகரும் உண்மைநூலைக் கேட்டுணர்ந்தார்கள். இவ்வழகிய திருச்சிற்றம்பலவர் தருமபுரத்தை விட்டுச் சொர்க்கபுரம் சென்றபின் அவ்வெட்டாவது பட்டத்தில் கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் அமர்ந்தார்.

இவ்வடிகள் சைவசமயத்தை விருத்தி செய்தற்பொருட்டுக் காசி முதல் குமரிவரை யாத்திரை செய்து தாம் தங்கிய ஸ்தலங்களில் சைவமடங்கள் ஐம்பத்தாறினை ஸ்தாபித்தார். அவற்றுள் இப்போதுள்ளவை மாகாளம், தென்காசி, குடவாசல், முத்துப்பேட்டை, கருந்தட்டான்குடி, திரிசிரபுரம், கும்பகோணம், சிதம்பரம் ஆகிய இவ்விடத்திருப்பனவே.

(தருமமுற்றி) சொர்க்கபுரம் என்னும் திருமடத்திற்குத் தஞ்சாவூர் மகாராஷ்டிர அரசர் பாபாசாகிபு ஏகோஜி II மிக்க பூஸ்திதிகளைக் கொடுத்தார். தஞ்சாவூர் மகாராணி சுஜாணபாய் (கி. பி. 1737) அடிகள் நிஷ்டையில் இருந்த கோலத்தைத் தரிசித்து அருள் பெற்றதாகக் கனாக்கண்டு தன் பரிவாரங்களோடு மாகாள மிலந்துறை வந்து இவரை நேரில் கண்ணுற்று அருளைப்பெற்றுச் சொர்க்கபுரத்திற்குச் சில மானியங்களை அளித்தாள். இவ்வாறெழுகுநாளில் அன்னாரைக் குருவாகக் கொண்டு அவர் அருள்வழிப்பட்டு மெய்ஞ்ஞானம் பெற்ற மாணாக்கர்கள் நாகைப்பட்டினத்துச் செட்டிப் பெண்

களாகிய வடிவியாரும் அழகியாரும், தேசிகரது இளவலாகிய வைத்தியலிங்கத் தம்பிரானும் (I), பாயிரம் பாடிய சுப்பநாயனூரும் ஆவார். திருச்சிற்றம்பல தேசிகர், அறிவானந்த சமுத்திரம், கிளிவிடு தூது, வினவுரை, அழுங்கல், திரிபதார்த்த தீபம், சித்தாந்த நிச்சயம், சிவ தரிசனம், அனுஷ்டானவிதி என்னும் நூல்களை அருளிச் செய்து 18-ம் நூற்றுண்டிடைப்பகுதியில் ஒரு கார்த்திகை மாதம் புனர்வசு நக்ஷத்திரத்தன்று பரிபூரணமானூர். மறுநாளே இருவர் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் வடிவியாரும் அழகியாரும் சாக்ஷாத்காரமாயினூர்.

இவ்வடிகட்குப் பின் அந்தத் தானத்தில் சீடர் முறைப்படி தலைமை வகித்தவர், (2) வைத்தியலிங்க தேசிகரும் (II), (3) தவப்பிரகாசரும், (4) சரவணதேசிகரும் (தவப்பிரகாசர் துதி, பஞ்சாக்கர அநுபூதி), (8) உலகமறிய வித்தகச் சித்தராக விளங்கிய சங்கிலிச் சாமியாரும், (9) செட்டித்திருமேனி தேசிகரும், (10) ஞானதேசிகரும், (11) முத்துக்குமார தேசிகரும், (12) சதாசிவ தேசிகரும் ஆவார். இப்போது 13-வது தலைமுறையில் அமர்வோர் மருதவாணச் சிவப்பிரகாச தேசிகர். இவர்களுள் செட்டித்திருமேனி தேசிகர் காலத்தில் மடத்துள்ள எல்லாப் பொருளையும் திருடர் கவர்ந்து சென்றனர். சிவனடியார் பொருளைக் கவர்தல் செந்தீயினும் வெந்தீயாகலின் அஃது அவர்களைக் குருடராமாறு சுட்டு வருத்தியது. சங்கமப் [சங்கமம்-சிவனடியார் கூட்டம்] பொருளைக் கவர்ந்ததால் ஏற்பட்ட பங்கமென இதன் உண்மையை உணர்ந்து அக்கள்வர் மிகவும் பயந்து, கவர்ந்த பொருளனைத்தையும் கொண்டு வந்து சேர்த்து அடிகள் அருளால் குருடு நீங்கினூர்கள். இவ்வற்புதத்தைக் கண்ட கனவான்கள் அம்மடத்திற்குச் சில நிலங்கள் மானியமாகக் கடலைப்பிரம்பூரில் விட்டனர். இங்ஙனம் இத்தலைமுறை நோக்கிக் கணக்கிட இற்றைக்கு இருநூறு வருடங்களுக்குமுன் இவர் பரிபூரணமாயிருத்தல் வேண்டும்.

இத்தகைய அழகிய திருச்சிற்றம்பலவருடைய ஆசான் ஆகிய திருவம்பல தேசிகர் மெய்கண்ட பரம்பரைத் தருமபுர வாதீனத்து ஏழாவது பட்டத்திலகியவர். அவ்வாதீனத்து (10) சிவஞான தேசிகர் காலம் (1748-1768) 18-ம் நூற்றுண்டின் இடைப்பகுதி (வைத்தீசுவரன் கோவில் சிலாசாசனம் கி. பி. 1768.) இவர் காலத்தே திரிசிரபுரத்துச் சாரமாமுனிவர் மடாலயம் தருமபுர ஆதீனத்தின் வசமாயிற்று. அக்காலத்திற்குச் சற்று முன்னர்ச் சாரமாமுனிவர் மடத்துக்கு விஜயம் செய்த மூன்று மௌன குருமார்களுள் சுத்த மௌனி என்பவரிடம் தாயுமானவர் திருமூலரது மௌனமரபில்

ஞானோபதேசம் பெற்றார் என்பது சைவாதீனத்துத் தம்பிரான்களின் துணிபு.

இந்நாட்டிற்கு முதல் நூற்றாண்டில் தோமாவும், ஏழாம் நூற்றாண்டில் நெஸ்தோனியரும், சீரியரும், இவருக்கு முன்னும் பின்னும் மேற்றிசையாத்திரிகர் சிலரும், பதினாறும் நூற்றாண்டு தொடங்கி ஐரோப்பிய வியாபாரிகள் பலரும், கிறிஸ்துமார்க்கப் பிரபல சங்கத்தாரும் வந்தனர். இவர்களுள் சவேரியார் (1500), ராபர்ட் டி நொபிலி (1606-56), டி பிரிட்டோ (1693), புட்டாரி, பூச்சே (1702) முதலியோர் தமிழ் மண்டலத்துத் தமது சமயவிருத்தியின் பொருட்டு உழைத்தனர். இவரது சமயம் செஞ்சிக்கோட்டையின் பக்கத்தில் பரவ ஆரம்பித்தபோது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமி (1642-1652) கிறிஸ்து மார்க்கத்தைப் பரபக்ஷமாக வைத்து நிராகரித்து ஏசுமத நிராகரணம் எழுதினர். பெர்ட்டோ, சீகன்பால்க், ஷூல்ஸ், பெப்ரிஷஸ், வீரமாமுனிவர் (1711-1742) முதலியோர் பல தமிழ் நூல் எழுதித் தஞ்சாவூரில் தமது மதத்தைத் தாபிக்கக் கருதியதால், அக்காலத்தில் தாயுமானவர் சைவசித்தாந்தத்தை ஸ்தாபித்து வந்தார் என்பது சமயவிசாரதர்கொள்கை. இக்காரணங்களாலும் தாயுமானவர் 18-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியினராதல் காண்க.

தாயுமானர் திருப்பாடற்றொகை (அபியுக்தர்)

விண்ணுறுந்தே வர்கண்முனிவர் கணங்கள்சித்தர்
    புகழ்மௌனி வியப்பால் ஞானத்
தண்ணுறுதண் டமிழ்மாலை யைஞ்னூற்றெண்
    பத்தேழுந் தாயு மானேன்
எண்ணுறுங்கண் ணிகளெண்ணூற் றறுபத்தைந்
    தகவல்வண்ண மிரண்டும் பாடி
மண்ணுறுநால் வகைமாந்தர் தமக்காகப்
    பக்குவர்பால் வைத்தா னன்றே.

தாயுமானவர் வம்சாவளி (பெரியார் கூறியபடி)

சிவசிதம்பரர் (மறைசை) — அக்ஷயலிங்கர் (சிக்கல்)

அருணசலர் — கேடிலியப்பர் = கனகவல்லி — அம்புஜவல்லி = காயாரோகணர் (நாகை)

அருளையர்

சிவசிதம்பரர் — தாயுமானவர் = மட்டுவார்குழலி (திரிசிரபுரம்)

கனகசபாபதி (திரிசிரபுரம்)

தாயுமானவர் கால அட்டவணை

கி. பி.	1704	விஜயரங்க சொக்கநாதர் மகுடாபிஷேகம்.
,,	1705-7	தாயுமானவர் சுபஜனனம்.
,,	1723	கேடிலியப்பர் சிவப்பேறு.
,,	1731	விஜயரங்க சொக்கநாதர் பரமபதம், மீனாக்ஷி அரசாளத் தொடங்கியது.
,,	1736	தாயுமானவர் துறவு, மீனாக்ஷி பரமபதம்.
,,	1742	தாயுமானவர் பரிபூரணம்.

கேடிலியப்பப் பிள்ளை சற்றேறக்குறைய 170 வருஷங்களுக்கு முன்பாகவே இருந்தார் என்று அவரது பிரபௌத்திரராகிய அம்பல சுவாமி 1835-ல் எழுதுவித்திருக்கிறார்.

நாயக்கமன்னர் திருமுடியடைவு (சரித்திரப்படி)

நாகமன், 1559
|
விசுவநாதர் I, 1559-63
|
குமாரகிருஷ்ணப்பர், 1563-73
|
கிருஷ்ணப்ப பெரியவீரப்பர், 1573-95 — விசுவநாதர் II, 1573-95

கிருஷ்ணப்ப பெரியவீரப்பர்
|
இலிங்கையகுமாரகிருஷ்ணப்பர் 1595-1602 — விசுவப்ப விசுவநாதர் 1595-1602

இலிங்கையகுமாரகிருஷ்ணப்பர்
|
முத்துக்கிருஷ்ணப்பர், 1602-09
|
முத்துவீரப்பர், 1609-23 — திருமலை, 1623-59 — குமாரமுத்துவீரப்பர்

திருமலை
|
முத்து அளகாத்திரி, 1659-62
|
சொக்கநாதர், 1662-82
=மங்கம்மாள், 1689-1704
|
அரங்ககிருஷ்ண முத்துவீரப்பர், 1682-89
=பத்மாசனை
|
விஜயரங்கசொக்கநாதர், 1704-31 — பங்காரு திருமலை
=மீனாக்ஷி அம்மாள், 1731-36

விஜயரங்கசொக்கநாதர்
|
குமாரமுத்துத் திருமலை (ஸ்வீகார புத்திரர்).

பங்காரு திருமலை
|
குமாரமுத்துத் திருமலை

ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யம்

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை

சீகாளத்திநாதர் வரகுணபாண்டியனுக்கு அநுக்கிரகித்தது

ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்ய கிரந்தத்தில் 84-ம் அத்தியாயத்தில் வரகுணபாண்டியனொருவனுடைய வரலாறு உரைக்கப்பட்டுளது:

திருவாலவாயில் சந்திரவம்சமாகிய கடலி லெழுந்த சந்திரனாகிய அரசன் சுந்தரபாண்டியனுடைய குலத்து வந்தோன், விநயத்தால் விளங்கிய வரகுணப் பெயரினன், வீரியவானொருவன் இருந்தான். அவனுடைய புண்ணியத்தால் பிப்பலாத னென்னும் யோகி ஒருகால் அவனிடம் வந்தான். அரசன் அவனை உபசரித்து வணங்கி எந்த உபாயத்தால் ஜன்மஸம்ஸார பந்தத்தினின்று விடுபட்டு முத்தியை யடையலாமென்று வினவ, அவனும் ஹரிஹர அபேத ஞானத்தாலேயே முத்தியுண்டாகுமென்று விளங்க உரைத்துப் பஞ்சதசாக்ஷர மந்திரத்தை உபதேசித்துச் சென்றான். வரகுணனும் நியமத்தோடு மந்திரசெபம் முதலியன செய்துவந்தான். காலதோஷத்தால் பௌத்தர் வந்து சேர அவர் சொற்கேட்டுப் பிரஷ்டனாகி மந்திரங்குருவெல்லாம் மறந்தவனாய் அபஸ்மார நோயாலும் பீடிக்கப்பட்டான். இவ்வாறு மூன்று ஆண்டுகள் கணத்தில் கழிந்தன. அதன் பிறகு, அவன் முன்செய்த புண்ணிய பரிபாகத்தால் தேவவிருடியாகிய நாரதர் அவ்வழி வந்து அவனால் உபசரிக்கப்பெற்று, 'முன் உனக்கு வந்து உபதேசித்தவர் பிப்பலாத வேடத்தோடு வந்த சிவபெருமானே. நீ உலகிலுள்ள தலங்களனைத்தினும் சிறந்த காளத்திக்குச் சென்று உன் பெயரால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து முன்பெற்றுள்ள மந்திரசெபாதிகளைச் செய்வாயாயின் முத்தி உனக்குக் கிடைக்கும்' என்று அநுக்கிரகித்தார். அவனும் பாலசந்திரகவர்மனைத் தனக்குப்பின் அரசாள வைத்துக் காளத்திக்கு வந்து நாரதர் சொல்லியபடியே செய்து சிவபெருமானது அனுக்கிரகம் பெற்றுச் சாயுச்சியத்தை அடைந்தான்.

சீகாளத்திநாதர் இராசேந்திரசோழனுக்குச் சாயுச்சிய மளித்தது

அக்கிரந்தம் 85-ம் அத்தியாயத்தில் இராசேந்திர சோழனொருவனுடைய வரலாறு கூறப்பட்டுளது. இது சேவ்வந்திப்

புராணக் கதையை யொத்ததாயினும் இதற்கும் அதற்கும் பேதமுண்டு.

தென்னாட்டிலே திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஒரு கடிகை தூரத்தில் காவேரியின் தென்கரையிலுள்ள தருமபுரத்தை இராச தானியாகக் கொண்டு போஜசோழன் முதலிய சோழர் பலர் அர சாண்டனர். அவருள்ளே அசுவரோஹனென்பவன் ஒருவன். அவன் சகல சற்குணங்களும் நிறைந்தவன், சிவபக்தன், அறத்தின் வழி நிற்பவன். அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். நாடெங்கும் பரந்த புகழுடையான், சிறந்த வீரன், அறிஞன், அச்சத்தை அறவே யொழித்தவன், உண்மையுரைப்பவன், நல்லொழுக்கமுடையான், பெரியோரைப் பணிபவன், புலன்களை வென்றவன், யோகி, திரிபுர மெரித்தார் பூசையி லீடுபட்டவன், வள்ளல்களுள் தலைவன், சிவனடி யாரைப் பூசிப்பவன். இராசேந்திர சோழனென்னும் அரசன் எல்லா உயிர்களிடத்தும் தயை நிறைந்தவன். அவன் செவ்வந்திநாதருக்கு விசேஷ பக்தன். தன்னுடைய பேரறத்தால் இராச்சியத்தை ஆண்டு வந்தான்.

காசிமீர தேசத்தில் பிரமவஜ்ரமென்னும் பெயரிய ஊரினின் றும் வந்த விப்பிரேந்திரனொருவன், யோகி, மஹாமதி, எல்லா மறிந்தவன், புலன்களை வென்றவன், எல்லா வேதங்களையும் ஓதிய வன், எல்லாச் சாஸ்திரங்களையும் அறிந்தவன், யோகசாஸ்திரம் முதலியவற்றில் நிபுணன், மஹேசுவரனைச் சாக்ஷாத்கரித்தவன், மஹேசனுக்கு ஸ்ரீ நந்திகேசுவரரைப்போலத் தயாபாத்திரமா யிருப் பவன், சிவாதனென்னும் பெயரினன், தக்க தொழில் புரிபவன், எப்பொழுதும் நேர்வழியிற் செல்பவன், உண்மை வாக்குடையான், சத்தியசங்கற்பன், சமாதி குணங்களை அணியாக வுடையான், ஒரு கை யுணவுமட்டுமே கொண்டு பிராணனைத் தரித்திருப்பவன், தேவ தேவனுடைய சந்நிதியிலேயே வாசம் செய்தான். இப்படி வசிக்கும் சிவாதனென்னும் யோகிக்கு அந்தரியாமியின் தூண்டுதலால் ஒரு காலத்தில் ஒரு புத்தி பிறந்தது. 'இந்த என் சரீரத்தை இவ்விடத் தேயே இப்பொழுது வைத்து யோகமகிமையால் இந்திரனாற் பாலிக் கப்படும் சுவர்க்கத்துக்குச் சென்று எல்லாப் பிராணிகளுக்கும் தேவாசுரராக்ஷஸர்களுக்கும் கண்ணுக்ககப்படாமல் நந்தனவனத்தி னின்றும் ரக்த ஜவ்வந்திக்கொடியைக் கொண்டுவந்து, மகாதேவனுக் குப் பிரியமானதும் திவ்யமானதும் பூலோகத்தில் சாதாரணமாய் அரிதிற் கிடைப்பதும் மனோகரமாகிய பூங்கொத்துத் தருவதுமாகிய அதனை நல்ல தலத்தில் தாபித்து, சிவனுக்கு விசேஷப் பிரீதி தரும் படி வளர்த்துப் பிரதி தினமும் ஆதரத்தோடு சிவனை அதனால் அர்ச்

சித்து ஒரு கைப்பால் பாரணம் செய்வேன்' என்று நிச்சயித்து, அவ்வாறே, திருச்சிராப்பள்ளிப் பெருமானும் மகாதேவருமாகிய சூலிக்குச் செய்ய அப்பொழுது அவருக்குச் செவ்வந்திநாதரென்று பெயர் வந்தது.

இராசேந்திரசோழன் காலத்திலே சிவப்பிராமணனொருவன் சிவராதனால் அர்ச்சிக்கப்பட்ட லிங்கத்தின்மே லிருந்த திவ்ய கந்தத்தையுடையவையும் மநோகரமானவையுமாகிய ரக்த ஜவ்வந்திப் புஷ்பங்களி லொன்றை அவனுக்குக் கொடுத்தான். அப்புஷ்பத்தைப் பார்த்து அரசன் காலவசத்தால் தன் ஏவலரைக் கூவி, "நீவிர் இன்று முதல் ரக்த சாமந்திப்புஷ்ப மத்தனையையும் அத்தலத்தினின்றுங் கவர்ந்து அவற்றை மூன்று மாலையாகக் கட்டித் தினந்தோறும் என்னிடத்தில் கொண்டுவந்து கொடுங்கள். அதற்குத் தடை செய்பவர் உளராயின் அன்னார் என் ஆஞ்ஞையால் தண்டிக்கற்பாலார்" என்னலும், அவரும் அவ்வண்ணமே நாடோறும் மூன்று மாலைகள் கொண்டுவந்து கொடுத்தனர். சிவராத யோகிக்கு விரதபங்கம் ஏற்பட்டது. சிவசந்நிதியில் ஒரு மாதம் நிராஹாரனாகக் கிடந்தான். தினந்தோறும் மூன்று மாலைகளைப்பெற்ற அரசனே ஒன்றைத் தான் தலையில் வைத்துக்கொண்டு மற்றொன்றைத் தன் பிரியையாகிய இரண்டாவது பாரியை காந்திமதிக்கும் மூன்றாவதைத் தன் பட்டமகிஷி சந்திரரேகைக்குங் கொடுத்தான். சந்திரரேகை அதனைப் பக்தியோடு தன் மாளிகையிலுள்ள சுண்ணத்தாற் செய்த சிவலிங்கத்துக்கு அணிந்து மகிழ்ந்தாள். சிவபெருமானும் அவளிடத்தில் பிரீதராகி உலகனைத்தையும் ஆளும் புத்திரனொருவனை அவளுக்கு அளித்தார். சிவபக்தனாயிருந்த அரசன் சிவத்துரோகியானான். ஒரு கைப் பாலுமின்றிச் சிவராதன் துன்பமுறுவதைக் கண்டு சிவபெருமான் கோபித்தவராய்க் கிழக்குமுகமா யிருந்தவர் மேற்கு முகமாகத் திரும்பினார். எப்பொழுது சந்திரசேகரர் மேற்கு நோக்கினாரோ அப்பொழுது மண்மாரி பெய்ய ஆரம்பித்தது. அப்பொழுது அங்குள்ள ஜனங்களெல்லாம் ஓடினார்கள். தர்மிஷ்டையாகிய சந்திரரேகையென்னும் அரசன்ஜேஷ்டபத்தினிக்கு நாலு பக்கத்திலும் கோரமாகிய மண்மாரி பெய்தது. ஆயுதத்தைக் கோசம் மறைத்தது போல அது மறைத்ததனால் அப்பொழுது கோசநகரமென்னும் பெயர் அதற்குண்டாயிற்று. தருமபுரமும் மண்மாரி மூடிப் போயிற்று. இராசேந்திரசோழன் இளைய பாரியை காந்திமதியோடு மண்மாரியைக் கடத்தற்காகக் குதிரையேறி வேகமாக வடக்கு நோக்கிச் சென்றான். இவன் போகுமிடமெல்லாம் அது வந்து கொண்டே யிருந்தது. காந்திமதி இடையில் விழுந்து செத்தாள்.

அரசன் இன்னுஞ் சிறிது தூரம் ஸ்தலங்களை நோக்கிக்கொண்டே சென்றான். குதிரையும் இறந்தது. கடைசியில் காளத்தியில் நதியைத் தாண்டிக் கிழக்கே சென்று மண்மாரி மேற்கே நின்றுவிட்டதைக் கண்டான். தருமபுரத்தில் சந்திரரேகைக்குப் புத்திரன் பிறந்து மந்திரிகளால் பட்டஞ் சூட்டப் பெற்றான். இராசேந்திரன் காளத்தி மகிமையைக் கேட்டு அங்கு ஓரிடத்தில் சிவபூசை பண்ணினன். ஈசுவரன் கனவில் தோன்றி அவனைப் பலவாறாகச் சோதித்துக் கடைசியில் அவனுக்கு உபதேசம் செய்தார். அவனும் மந்திரசெபாதிகள் செய்து காளத்திநாதரும் ஞானப்பூங்கோதையும் பிரத்தியக்ஷமாக வரப்பெற்றுச் சாயுச்சிய மடைந்தான்.

நான் கண்ட நாற் பறவைகள்

ஆ. வ. பதுமநாப பிள்ளை

வேலை புரிந்து விளைந்தசிர மந்தீர
மாலைப் பொழுதினிலே மனமகிழ்ச்சி எய்திடவே
உலவி வரயானும் உன்னி, இயற்கைஎழில்
நலங்கண் டுவக்கும் நாட்ட முடையவனாய்
இருபுற முங்கனிகள் ஈயும் மாங்களொடும்
அருமை மலர்ச்செடிக ளவையும் அமைந்துள்ள
எம்மூர் நதிக்கரையை எய்தினேன். அவ்வமயம்
வெம்மை மிகுத்த வெயிலோன் குடதிசையில்
பகல்முழு துந்திரிந்து பட்டசிர மந்தீரத்
தகதக வென்னும்ஒளி தன்னோ டியைந்தவனாய்
மேற்கில் மறைய விரைந்தான் ;அவ் வேளையினில்
நாற்புறமுங் கண்ட நவிலரிய காட்சியினை
வருணித் துரைக்கும் வகையறியேன் ; ஆயினுமத்
தருணம் நிகழ்ந்தவற்றைச் சாற்றுகிறேன் கேட்டிடுமின் !
நீலநிற வானில் நிமிடத்திற் கொவ்வொன்றும்
கோலம் புனைந்து கூடிக் குலைவனவாய்
நிறத்தில் உருவில் நிகழ்த்தரிய பல்வேறு
திறத்தனவாம் மேகத் திரள்சஞ் சரித்தனவே !
நெடிய திருமாலும் நெற்றிக்கண் ஈசனும்
வடிவிற் பிரிந்தாலும் வழுத்துமிரு மூர்த்திகளும்
ஒருவரே யென்னுமவ் வுண்மை விளக்குதல்போல்
கருமுகில்க ளோடு கலந்து பரந்தனவே
செக்கச் சிவந்த செம்மேகக் கூட்டங்கள் !
வானநெடு வீதியிலே வாட்டஞ் சிறிதுமின்றி
வானம் பாடியொன்று வட்டமிட்டுப் பாடியதே !
அப்பாட்டுக் கேட்டே அடைந்ததோ ரின்பம்போல்
எப்பா டகரிடத்தும் என்றும்யான் கண்டறியேன்.
என்னே அதன்குரலின் இனிமை !சுதந் தரவாழ்(வு)
என்னே ! அதன்மகிழ்ச்சி என்னே ! எனவியந்தேன்.
'அத்தகைய பறவையாய் அடியேன் பிறந்திருந்தால்,

எத்தகைய துன்பமும் எய்தாது வாழ்ந்திடலாம் ;
இன்ப உரிமையினை என்றும் நுகர்ந்திடலாம்'
என்ப தொருநினைவை எய்தியிருந் தேன்ஏங்கி;
அத்தருணத் தப்பறவை அமர்ந்ததொரு மாக்கிளையில் ;
சித்தத்தில் யான்பெற்றேன் செப்பரிய ஆனந்தம் !
பார்த்தேன்அப் பறவைப் பாடற் புலமையனைக்
கூர்த்ததொரு பார்வை கொண்டஅத னைஅடுத்து,
'இன்னிசையில் தேர்ந்த இன்பப்புள் மன்னவனே !
உன்னிசையைக் கேட்டே உள்ளம் உருகிவிட்டேன் !
சங்கீத ஞானத்தில் தலைசிறந்த புலவரென
எங்கும் பிரசித்தி எய்தப்பெற் றவர்பலரும்
திருவா யதனைத் திறந்துவிட்டால், எத்தனைபேர்
இருகரங்கள் தட்டுவர் ; பல்லிளிப்பர் ; புகழ்ந்திடுவர்!
ஆகாய வீதியிலே ஆனந்த மாய்ப்பாடி
ஏகா நிற்கின்ற இன்ப இசையரசே !
நீபாடும் இன்னிசையில் நேர்கின்ற இன்பம்போல்,
'பா-பா-ரீ -கா-மா- ப-த-பா- ச-நி' என்றே
ஆவேசங் கொண்டவர்போல் ஆடுந் தலையுடனே
மாவேக மாகச் சுரநீட்டிப் பாடுகின்ற
விற்பனர்கச் சேரிகளில் விளைந்திடுவ துண்டேயோ ?
சொற்பமுமே இல்லையெனச் சொல்கின்றேன் ; உண்மைஇது.
உன்பெருமை மக்கள் உணரும்நாள் எந்நாளோ ?
மன்பதையில் வந்துன் மாண்பைப் பலருக்கும்
காட்டி யருளக் கருதாயோ ?' என்றேன்நான்.
கேட்ட அதுகிக்கீ கிக்கீ எனச்சிரித்து,
'ஏத்தித் துதித்தே ஏய்க்கின்ற வித்தையிலே
மாத்திரமோ வல்லவர்கள் மானிடர்கள் ? அம்மம்ம !
மகிழ்ச்சி பிறர்க்கு வாய்த்திருப்பின், சற்றுமது
சகிக்ககிலார் ; அதுநீக்கச் சஞ்சலங்கொண் டிடுவர் ; பல
சூழ்ச்சிகளுந் தேடுவர் !அச் சூதினால் அவ்வஞ்சர்
தாழ்ச்சியலால், எவ்வின்பந் தன்னைப் பெறுகின்றார் ?
பேதை மனிதா ! பேச்சால் மயங்கேன்நான் ;
வாதைப் படும்மனிதர் வாழ்வுமொரு வாழ்வாமோ ?
யான்பாடும் பாட்டால் யான்கொள்ளும் ஆனந்தந்
தானெனக்குப் போதும் ; தலையாட்டிக் கைகொட்டி
என்னைப் பிறர்புகழில் என்னபயன் என்றனக்கே ?
முன்னால் புகழுரைகள் மொழிவார், பின் னால்இகழ்வர் !

தற்புகழ்ச்சி யாம்விருப்பந் தன்னிற் செருக்கிடுமோர்
அற்பபுத்தி எனக்கில்லை ; அழுக்காறும் இல்லையடா !
என்றும் பலசூழ்ச்சி எண்ணுகின்ற மனிதரைப்போல்
இன்றைய உணவுக்கென் செய்வோம் எனவேங்கும்
ஏக்கம் எனக்கில்லை ; இயம்பும் பணம்திரட்டும்
நோக்கமிலை யாதலினல் நோவதிலை என்மனமே.
சாற்றுகின்ற பற்பலவாம் சாதிப் பிரிவினையால்
வேற்றுமை ஏதும் விளைவதிலை எம்மினத்தில்.
தாழ்வும் உயர்வும் தவிர்த்த சமரசம்எம்
வாழ்விற் சிறப்பதனல் மனிதரினத் திற்போல
என்றும் பிணக்கிங் கெதுவுமிலை எம்மினத்தில்.
என்றுமே எம்மவர்கட் கெவரிடத்தும் அச்சமிலை !
தன்மதிப்பை விட்டுச் சாண்வயிற்றைக் காத்திடவே
வன்மொழிகள் நாளும் வழங்கினும், மானமின்றி
இன்னொருவர் கீழே ஈனமுறும் ஊழியம்
தன்னில் தலைப்படும் தாழ்ச்சி எமக்கில்லை !
எந்தம் சுதந்திரத்தை எவரும் தடைப்படுத்தார் !
அந்தமும் ஆதியும் ஆய தனிமுதல்வன்
அன்புகொண்டு முன்படைத்த அவனியில் தோன்றுகின்ற
இன்பம் பெருக்கும் இயற்கை எழிற்சிறப்பைக்
கண்டு தினமுங் களிக்கின்ற எம்மவர்போல்
உண்டுகொலோ மானிடர் உவகை நுகர்வதுவே ?
இயற்கையொடும் என்றும் இயைந்தஉயர் வாழ்வதனல்
அயர்ச்சி அறியோம் ! ஆனந்த மேபெறுவோம் !
செயற்கை நெறிகளெனும் சேற்றில் இழிந்தவராய்
மயர்வுமிகும் ஆசை வளர்க்கும் துறைகளிலே
உழலும் மனிதர்எமர் உவகை உணர்வாரோ ?
கழறினும் உண்மையினைக் கண்டே தெளிவாரோ ?
நின்பொருட்டாய் என்இன்பம் நீத்துப் புறப்பட்டு
வன்சிறையில் அடைபட வரவும்மனம் ஒவ்வுவனே ?
இயற்கைச்செந் நெறிநல்கும் இன்பத்தைக் கைவிட்டுச்
செயற்கைப்புன் னெறிகளில்யான் சிந்தை செலுத்துவனே ?
சாதி மதப்பிணக்கில் தலைப்பட்ட மானிடர்க்கிந்
நீதி தனையான் நிகழ்த்தியதாய்க் கூறிடுவாய் :
என்னைப்பற் றியகவலை எனக்கேன் ? இனிஇறைவன்
என்எய்து வித்தாலும் ஏற்பேன் மனமகிழ்வாய் ;
துன்பம் பலவாய்த் தொடர்ந்திடினும் கலங்காது

இன்பம் பெருக இறைவனையே போற்றிநிற்பேன் ;
பேராசை என்னும் பேயை வெருட்டிடுவேன் ;
ஆராத காதலொடும் ஆண்டவனைப் பாடிநிற்பேன் ;
இயற்கைப் பெருவனப்பில் இன்புறுவ தல்லால்,எச்
செயற்கை வியப்பினையும் சிறிதும் மதியேன் யான்
என்றுறுதிகொண்டே எவரும் களித்திருக்க
நன்றே மொழிந்ததாய் நவிலக் கடவாய் நீ'
என்றென்னை நோக்கி இயம்பியஅப் புள்பின்னர்த்
தென்றிசையை நோக்கிச் சிறகடித்துச் சென்றதுவே.
இன்னிசையில் மட்டும் ஏற்றம் உடையதென
உன்னியிருந் தேனதனை ; ஓதிய நீதிகளை
எவரிடத்தில் அப்பறவை எவ்வண்ணம் கற்றதென
உவமையிலாப் பெருமகிழ்வை உற்று மகிழ்ந்தவனுய்ச்
சற்றே நடந்து சார்ந்தேன் ஒருசோலை;
மற்ற மரங்கள் பலவும் வளர்ந்திருந்தும்,
ஒப்பற்ற இன்சுவை உடைய நறுங்கனிகள்
பற்பல வற்றைப் படைத்ததொரு மாமரமே
என்றன் கருத்தினை ஈர்த்திடுவ தாயிற்று.
தன்றனக் கேவரும் தண்ணீர்ஊற் றுவிடினும்
கைம்மாறு வேண்டுங் கருத்தின்றி நற்கனிகள்
வெம்மை மிகுவெயில் வெதும்பும் மதிகளிலே
அளிக்குஞ் சிறப்பை அகத்தினிலே உன்னிஉன்னிக்
களித்தேன்அம் மாமரம் காட்டுகின்ற உண்மையினில்.
அவ்வண்ணம் யானும் அவனியிலே உயிர்களுக்குச்
செவ்வியநற் றொண்டைச் செய்து களித்திடவே
அருள்புரியும் வண்ணம் ஆண்டவனை வேண்டிநின்ற
தருணமது தன்னில், தலைமேற் கிளையொன்றில்
நீல மணியனைய நிறத்தைப் படைத்ததொரு
கோலக் குயில் 'குயீல், குயீல்'எனக் கூவியதால்,
தேவர் கடைந்தெடுத்த தெவிட்டாத தெள்ளமுதோ ?
மூவகைய கனிரசமோ ? மொழிபுதிய மலைத்தேனோ ?
கற்கண்டோ ? பாகோ ? கரும்பின் ரசமோ ? எச்
சொற்கொண்டக் குரலினிமை சொல்வதற்குக் கூடும்யான் ?
'இணையெதுவு மில்லா இனிமைக் குரலினதாய்த்
துணையோடு கூடிச் சோலைதொறும் பாடுகின்ற
அருமைக் குயிலதனுக் கழகுக் குறையாகக்
கருமை நிறத்துடன்ஏன் கடவுள் படைத்திட்டான் ?'

என்ன மனத்தெண்ணி இசையிற் சிறந்தகுயில்
தன்னையான் நோக்கி, 'தன்னிகரொன் றில்லாத
சீரிசையி லேசிறந்த செல்வக் குயிலரசே!
சூரியஜம் பூங்கணைகள் கொள்மார வேளுக்குச்
சிந்தைக் கினிய சிறந்த துணையாவோய்!
'எந்தம் புவியில் இசையிற் சிறந்தவராய்
எங்கணும் கீர்த்தி ஏற்ற பெரும்புலவர்
தங்கள் குரலைத் தரணியோர் புகழுங்கால்,
'குயிலைப் பழிக்குங் குரலாம்' எனச் சொல்வர்;
குயிலே! உனதுகுரல் கொள்விக்கும் பேரின்பந்
தனக்கும் மனிதர் தங்குரலோ சைக்குமிடை
நினைக்கில், தென்குமரி நீலக் கடல்முனைக்கும்
இமய மலைக்கும் இடையிலுள்ள தூரம்போல்
அமையுமாம் வேற்றுமை; ஆணவங்கொள் மானிடரின்
பேதைமை எண்ணில், பெருநகைக் கிடமாகும்!
மாதர்களுட் பாகனைய வண்மொழியா டிஞ்சிலரை
உன்னோ டுவமித் துரைப்பார் சிலமனிதர்
அன்னோர், உன்னினத்தார் ஆண்கள் அணங்குகளுக்
குதவும் உரிமைகளை உணர்ந்தே நடப்பாரோ?
பதவியில் தாம்பெரியர்; பாவையர்கள் பேதையராம்
என்ப தொருசெருக்கில் இறையுங் குறைவாரோ?
அன்பு நெறியினிலே அகலா தொழுகுவரோ?'
என்னப் பகர்ந்துவிடை என்இறுக்கு மென்றிருந்தேன்.
என்னையது நோக்கி இணையற்ற கந்தருவ
இன்பக் குரலினிலே இயம்பத் தொடங்கியதால்:
'மன்பதையில் இன்னிசையில் வல்லுநராய் வாழ்புலவர்
என்னினும் மிக்க இனிய குரலினராய்
மன்னுவதும் உண்மையேல், வாழ்க அவர்நெடிதே!
அதுபற்றி என்மனத்தில் அழுக்கா றடையேன்நான்.
இதயங் கனிந்துருகி இறையைத் துதித்தபல
மெய்யன்பர் என்றனக்கு விமலன் திருநாமம்
உய்யவே ஓதி உகக்கப் பணித்தார்முன்;
உண்மைப்பே ரின்பமதை உணர்ந்தென் மொழியினிலே
வண்மைஇறை யைநாளும் வாழ்த்தி வருகின்றேன்.
இறைவன் திருவருளை எய்துவதற் கேஇசையாம்;
அறையும் பெரும் புகழும் ஆசை பலவளர்க்கும்
செல்வப் பொருளும் திரட்டற் கிசையறிவைப்

பல்புலவர் இந்நாளில் பயன்படுத்தி வருகின்றார் !
கூறுமவர் செயல்'இசைக் கொலை'என்று கூறுவன் யான் ;
ஆறு மலைசோலை ஆங்காங் கமைந்துள்ள
இயற்கைப் பெருவனப்பில் ஈடுபட்டுப் பாடுவன்யான் ;
செயற்கை நெறிமோகம் தினமும் வளர்கின்ற
சித்தத் தொடுபாடித் திரிகின்றார் பல்புலவர் !
சுத்த மனமுடையோம் ; சூழ்ச்சிகளை யாமறியோம் !
பள்ளத்தை நோக்கிப் பாயும் புனல்போலும்
உள்ளத்தி னின்றும்எழும் உவகையினால் எம்மவர்கள்
ஊனிற் கலந்துபின் உயிரோடு மேகலந்து
வானிற் களித்து வாட்டமின்றிப் பாடுவரே !
மேதினியிற் கீர்த்தியில் மிக்க இசைப்புலவர்
வாதினிலே தேர்ந்து வளர்த்திடுவர் கட்சிகளை !
அத்தகையோர் பாட்டுக்கும் ஆன்மாவுக் கும்இடையில்
எத்தகைய தொடர்பும் இருப்ப திலைசிறிதும் !
உயர்இசைத் தத்துவத்தை உணர்ந்துநட வாப்புலவர்
இயங்கி இசைபாடும் இயந்திரங்கள் போன்றவரே !
இறையை மறப்பின் இசையிற் சிறப்பாரோ ?
மறையை வழுத்தாதார் வாழ்வுமொரு வாழ்வாமோ ?
நல்லிசையாம் இன்கலைக்கு நற்றுணையாய் நிற்பவராம்
மெல்லியற்பெண் ணினத்தினரை விளம்பும் பலவழியில்
அடிமைப் படுத்தி அடக்கியே ஆளமுயல்
கொடியோர் தமக்கும்இசை கூட்டுமோ இன்பத்தை ?
உடலில் ஒருபாதி உற்சாக மற்றிருப்பின்,
உடலின் மறுபாதி உயரின்பம் எய்திடுமோ ?
பத்தினி யோடு பாட்டிற் கலத்தலிலே,
எத்திறத்த பேரின்பம் எய்தப் பெறுகின்றோம் !
பாவை யரைஅடிமைப் படுத்தி நடத்தியவெம்
பாவத்தி னாலன்றோ, பாரதநா டின்றடிமைப்
பட்டுப் பழஞ்சிறப்பைப் பறிகொடுத் தேங்குவதே !
கெட்டாலும் மேன்மக்கள் கீழ்மைப் படலாமோ ?
மாதர் அறஉரிமை வாழ்வில் திளைப்பாரேல்,
ஓதுதிருப் பாரதம் உலகத் திடைமுன்போல்
இணையற்ற மாண்பை எய்திச் சிறக்குமன்றோ ?
துணைதக்க தாயின் சோர்வும் விளைந்திடுமோ ?
கருநிறத்தென் மேனி கண்டு சிலஅன்பர்
அருமைக் குரலிருந்தும் அழகிலையென் றெண்ணிடலாம்.

கண்ணன் திருமேனி கருமுகிலை ஒத்ததொரு
வண்ணமெனினும், வனப்பிற் குறைவுண்டோ ?
இறைவன் படைத்தஇக் கரிய நிறமெண்ணிக்
குறைப்படுவ தில்லை ! கொள்வதிலை யான்கவலை !
வடிவிற் சிறத்தாரும் வனப்பெதுவு மில்லாரும்
படியில் எதிர்ப்படினும் பரிகசிக்க வொண்ணாது ;
சிறியதோர் அச்சாணி தேரையுமே ஓட்டிவைக்கும் !
சிந்தையிலே தூய்மை சேர்ந்திருப்பின், மேலழகால்
எந்தப் பயன்வேண்டி ஏங்கிடுவர் மெய்யன்பர் ?
தெய்வத் திருவருளில் சிந்தை செலுத்தாது
பொய்ச்செல்வ மும்நிலையாப் புகழும் பெறவிழைந்து
இசையைப் பயன்படுத்தல் இழிவென்னும் உண்மையினை
இசைத்திடுவாய் நீஉலகத் தெல்லாப் புலவர்க்கும்
இன்பத்தி னுக்குயிராம் எழிற்பெண் ணினத்தார்க்குத்
துன்பம் புரிவோர்க்குத் தோல்வியே யல்லாது
வெற்றி யெதன்கண் ணும் விளையாதெனுமுண்மை
வற்புறுத்திச் சொல்வாய்நீ மனிதர் தமக்கெல்லாம்'
செய்தி யதனைத் தெரிவித் ததன்பின்னர்
துய்யநெடு வானத்திற் சொல்லரிய உற்சாகங்
கொண்டு பறந்து குயிலும் மறைந்ததுவே.

(தொடரும்)

சாஸ்திரம்

வைரமும் அதன் குணாதிசயங்களும்

எச். நாராயண ராவ்—பி. என். அப்புஸ்வாமி ஐயர்

(410-ம் பக்கத் தொடர்ச்சி)

வைரத்தை நீங்கள் எல்லாரும் பார்த்திருக்கிறீர்கள். மிகவும் விலையுயர்ந்த இரத்தினங்களில் அதுவும் ஒன்று. வைரத்தின் விலை மதிப்பானது அதன் அளவு அல்லது பரிமாணத்திற்கும், நிறத்திற்கும், காந்தி அல்லது சோபைக்கும் ஏற்ப வித்தியாசப்படும். இரத்தினம் என்பதனால் அதற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு மதிப்புத் தவிர, அதனுடைய ஆச்சரியமான சிற்சில பௌதிக குணாதிசயங்களாலும் அது நமது மதிப்பிற்கு உரியதாயிருக்கிறது. சாஸ்திர ஆராய்ச்சியாளரும் தம் சாஸ்திரக் கண்களால் அதை ஆராய்ந்து அதன் இயற்கைக் குணாதிசயங்களைக் கண்டுகொண்டிருக்கின்றனர். விலை மதிப்பை ஒரு பொருட்டாக எண்ணாத அவர்கள் கூட அக்குணங்களின் பொருட்டு அதனை நன்கு மதிப்பதாக ஒத்துக்கொள்ளுகின்றனர்.

நமக்குத் தெரிந்துள்ள வஸ்துக்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அது மிகவும் கடினமானது. மற்ற இரத்தினங்களைத் தேய்த்துப் பட்டைபோடுவதற் கெல்லாம் இரத்தினவேலையாளர் அதன் தூளைத்தான் சாதனமாக உபயோகித்து வருகின்றனர். மற்றெல்லா இரத்தினங்களையும் வெட்டக்கூடிய வன்மை அதற்கு மட்டிலுந்தான் உண்டு. வைரத்தை மற்றொரு வைரத்தாலோ அல்லது வைரத்தூளாலோவன்றி வேறெந்தப் பொருளாலும் வெட்டமுடியாது. வைரத்தை வெட்டுவதும் அதைப் பட்டைபோடுவதும் அதன் பொடியேதான். அது மிக்க கடினமான பொருளாயிருந்தபோதிலும் எளிதில் உடைந்து போகக்கூடியது. அதனால் அதை உடைப்பதும் தூள்தூளாகப் பொடியாக்குவதும் எளிய காரியமே. அதன் காடின்னியத்தை நினைக்குங்கால் இது நமக்கு நம்பமுடியாததாகவே தோற்றும்.

வைரத்தின் மற்ரெரு குணுதிசயம் என்னவென்ருல் அதன் **கனம்** என்பது. அலோகப் பொருள்கள்—உலோகங்கள் அல்லாத பொருள்கள்—யாவற்றினும் அஃது அளவுக்களவு அதிகமான திண்மை பொருந்தியதாகக் காணப்படுகிறது. அதாவது ஒரு வைரக்கல்லையும் அதே பரிமாணமுள்ள மற்றேதேனும் அலோகப் பொருளையும் நிறைதூக்கிப் பார்த்தால் அப்பொருளினும் வைரம் மிகுந்த கனமுடையதாகக் காணப்படுகிறது. வைரத்தின் தண்ணீர்த் தூக்க எடை 3·5 அல்லது 3·6 ஆக இருக்கிறது. உலோக சம்பந்த மில்லாத வேறெந்தக் கற்பொருளைக் கவனித்தாலும் அதன் தண்ணீர்த் தூக்கமானது சாதாரணமாக 2·6 அல்லது 2·7 தானிருக்கும்; மற்ற எப்பேர்ப்பட்ட கல்லுங்கூட 3-க்குமேல் போவதில்லை. வைரத்தோடு காணப்படும் மற்றக் கனிப்பொருள்களெல்லாவற்றினின்றும் இந்த விசேஷ குணத்தைக் கொண்டே அதை எளிதில் பிரித்துவிடுகின்றனர். வைரமானது சுரங்கங்களில் சிற்சில வேளைகளில் மணலோடும் சரளைக் கற்களோடும் கலந்து காணப்படுகின்றது. அப்பொழுது நீரைக்கொண்டு கழுவி, நமது வீட்டிலே அரிசியில் கலந்து காணப்படும் கனமுள்ள கற்களைப் புடைத்துக் கொழித்து எடுத்து விடுவதுபோல், கனமுள்ள வைரக் கற்களை இலகுவாகக் கொழித்துப் பிரித்து எடுத்து விடுகிருர்கள்.

வைரத்தின் குணுதிசயம் வேருென்றும் கவனிக்கத் தக்கது. அஃதென்னவெனில், அதற்கு விசேஷ அளவில் வாய்ந்துள்ள **ஒளி கோடச்செய்யும் சக்தி**. அதாவது வைரத்தின் வழி ஊடுருவிச் செல்லும் ஒளி இரேகையானது மற்ற வஸ்துக்களின் வழியாக ஊடுருவிச் செல்லும்போது கோடுவதைக்காட்டிலும் மிகவும் அதிகமாகக் கோடுகிறது. அதாவது, அவ்வொளிக்கிரணமானது வைரத்தின்மேற் படுவதன்முன் எந்தப் பக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததோ அந்தப் பக்கத்தைவிட்டு அதிகம் விலகித்தான் அது வைரத்தினின்று வெளியே வரும்போது காணப்படுகிறது. இப்படி யமைந்த ஒளிகோடும் சக்தியானது, ஒவ்வொரு பொருளிலும் அதன் திண்மையைப் பொறுத்து மிகுந்தோ குறைந்தோ காணப்படும் என்று நீங்கள் பௌதிக சாஸ்திரத்தில் படித்திருப்பீர்கள் ; ஆதலால் மிகவும் திண்மை பொருந்திய வைரத்திலே இது மிகுந்து காணப்படுகிறது. நான் முன்பு சொல்லியபடி, இந்த ஒளிகோடுந் திறமையின் மிகுதி தான் வைரத்திற்கு அதன் விசேஷ ஒளியையும், சோபையையும், காந்தியையும் கொடுக்கிறது. அதனுல்தான் வைரம் தனியாகச் சொலித்துச் சிறந்து விளங்குகிறது. நல்ல வைரத்தின்மீது—அதிலும் நன்ருக வெட்டிப்

பட்டைபோடப்பட்ட வைரத்தின்மீது—ஒளிக்கிரணம் ஒன்று பட்டுக் கோடும்போது வைரமானது தகதகவென்று கண்ணைப் பறிக்குமளவில் நெருப்புப்போல ஜொலிக்கும்.

வைரத்தின் வேறுசில குணுதிசயங்களும் நமது கவனத்திற்குரியன. வைரமானது அமிலங்கள் என்று சொல்லப்படும் திராவகங்களில் கரைந்துபோகாது. அதற்குச் சாதாரணச் சூட்டினல் ஒரு கேடும் உண்டாகாது. உயர்ந்த தீக்ஷ்ணமான சூடுகளிலும் கூட அஃது இலேசாக இளகாது. ஆனல் தன்னந்தனியான ஆக்ஸிஜென் ஜ்வாலையைக் கொண்டு அதைத் தாக்கினல் அஃது எரிந்துபோகும். அப்பொழுது நமக்குக் கரியமில வாயு ஒன்றுதான் அதிலிருந்து கிடைக்கும். இதனல் வைரமானது தனிக் கரிப்பொருளைத் தவிர வேறல்ல என்பது தெளிவாகும். கரி, நிலக்கரி ஆகிய இவைகளை விடச் சுத்தமான கலப்பில்லாத கரிப்பொருளைக் குறிக்கினதுதான் வைரம். இரும்பு உருகியோடும் சூட்டிலே காற்றுச் சிறிதும் அணுகவொட்டாது மூடிய பாத்திரத்திலே வைரத்தை நன்ருகக் காய்ச்சினல் அது கிராபைட் (எழுதுகரி) என்னும் பொருளாக மாறிவிடுகிறது. இதுவும் தனிக்கரிப்பொருள் எடுத்துக்கொள்ளும் ஓர் உருவ மாறுபாடுதான். இதுதான் நாம் உபயோகிக்கும் காகிதப்பென்ஸில்களின் நடுவில் வைக்கப்பட்டு எழுதுவதற்கு உதவுகிறது. இதைச் சிலர் காரீயம் என்று எண்ணுவது தவறு. இஃது ஆங்கிலத்தில் தவருக இடப்பட்ட 'ஈயப்பென்சில்' என்னும் பெயரினல் ஏற்பட்ட பிழையாகும். ஆதலால், கரி, நிலக்கரி, கிராபைட், வைரம் ஆகிய இவையாவும் கரிப்பொருளின் உருவ மாறுபாடுகளேயன்றி வேறல்ல. இப்பொருள்களின் பௌதிக குணங்கள் மாறுபட்டனவாய்க் காணப்படுகின்றனவாயினும் இவையாவும் கரிப்பொருளென்ற ஒரே இரசாயனப் பொருளேயாகையால் இவற்றின் இரசாயன குணங்களும் அமைப்பும் ஒன்ருகவே இருக்கின்றன. கரிப்பொருளின் திண்மையானது இவற்றுள் ஒன்றைவிட மற்றென்றில் அதிகமாகிக் கொண்டே வந்து வைரத்தில் மிகுந்து காணப்படுகிறது.

இந்த விஷயத்திலிருந்து வைரமானது எவ்வாறு விளைந்திருக்கக்கூடும் என்பதையும், அஃது எங்குத் தோன்றக்கூடும் என்பதையும் பற்றிச் சிறிதளவு ஊகிக்க முடிகிறது. இதைப்பற்றி இனிக் கவனிப்போம்.

வைரமானது இந்தியாவிலே 'கங்கிளாமெரேட்' எனப்படும் கட்டிச் சரளையின் இடையில் ஒரு கூழாங்கல்லைப் போலத் தோன்றுகிறது. கரகரப்பாய் ரவைபோன்ற பொடிக் கற்களாகிய மணற்பாறைக்கு 'க்ரிட்' என்று பெயர். அதிலுள்ள ரவைகள் அளவிலே

சற்றுப் பெரியனவாயும் வடிவத்திலே சற்று உருண்டும் காணப்பட்டால் அவற்றைக் கூழாங்கற்களென்று சொல்லுகிறோம். கூழாங்கல்லளவுள்ள ரவைகள் பொதிந்து காணும் பாறைக்குக் 'கங்கிளாமெரேட்' அல்லது 'புட்டிங் ஸ்டோன்' என்று பெயர். இதில் காணும் கூழாங்கற்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்திருப்பினும் இருக்கலாம்; அல்லது அவை பலஜாதிக் கற்களாயிருப்பினும் இருக்கலாம். 'கங்கிளாமெரேட்' என்பது ஒருவகைச் சிமெண்டால் பிணைப்புண்ட சரளைக்கல்.

முன்னொரு காலத்தில் வழிந்தோ பாய்ந்தோ ஓடும் நீரானது உடைந்து தகர்ந்த பாறுங்கற்களோடு வைரக்கற்களையும் புரட்டிக் கொண்டு ஓடிற்று. அவ்வாறு உருட்டிக்கொண்டு ஓடும் நீரானது வழியிலே உள்ள ஒரு பெரும்பள்ளத்தையோ ஏரியையோ அடைந்தபோது அந்நீரில் உள்ள வண்டற் பொருள்களெல்லாம், நீரின்வேகம் குறைந்து நீர் தேங்கிய காரணத்தால், நீரின் கீழே படிந்து படிந்து பிறகு இறுகிக் கட்டியாகிக் காலகதியில் வைரம் தாங்கிய கங்கிளாமெரேட்டாக ஆகிவிட்டது. இந்தியாவில் வைரம் காணப்படும் பற்பல இடங்களிலெல்லாம் இவ்வாறு தான் வைரம் வந்து சேர்ந்திருக்கவேண்டும். அதாவது பண்டில்கண்ட் நாட்டிலுள்ள பன்னா ஸமஸ்தானத்திலும், சம்பல்பூர், வஜ்ரேகரூர், கர்னூல் ஜில்லாவில் உள்ள பங்கனப்பள்ளி என்னும் இந்தப் பிரதேசங்களிலே உள்ள கிராமத்து ஜனங்கள் அங்கே பலத்த மழை பெய்த பொழுதெல்லாம் வைரம் அகப்படாதா வென்று மழைநீர் கரைத்த வெளிகளிலெல்லாம் தேடுவார்கள். சிற்சில வேளைகளில் அதிர்ஷ்டமிருந்தால் அவர்களுக்கு வைரம் அகப்படுவதுமுண்டு.

இதிலிருந்து சில வுண்மைகள் வெளியாகின்றன. இப்பொழுது வைரந்தாங்கிப் பாறைகளாய் இருப்பவைகள் வைரத்தின் பண்டைப் பழைய வீடுமல்ல; வைரத்தின் பிறந்தகமுமல்ல. வைரம் முதலில் தோன்றியது இங்கல்ல. வேறெங்கோ தான் வைரமானது பிறந்திருக்கவேண்டும். வைரம் விளை பாறை யென்று வேறொரு வகைப் பாறை வேறெங்கேயோ இருந்திருக்கவேண்டும். காலத்தச்சன் கொடுமையாலும், காற்றாலும், நீராலும் அது தாக்குற்றபோது தகர்ந்து உடைந்து பொடிப்பொடியாகி யிருக்கவேண்டும். பின் பலவகைக் கற்களோடு கற்களாய் நீரால் வாரிக்கொண்டு போகப்பட்டிருக்கவேண்டும். அதன்பின் மற்றோரிடத்தில் படிந்து, பிறவகைக் கற்களினிடையில் அழுந்திக் கிடந்திருக்கவேண்டும். காலகதியில், அது கங்கிளாமெரேட் என்னும் பெயரிடப்பட்ட பாறையாகிய போது அதனிடையே பதிந்து கிடந்திருக்கவேண்டும். ஆதலால்

தான் அவ்வகைப் பாறையிலே உள்ள மற்றப் பொருள்கள் கரைந்து போனதும் வைரம் இப்பொழுது வெளித்தோன்றுகிறது.

தென் ஆப்பிரிக்காவிலும் வைரங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன வென்பதும், அத்தேசமானது வைரத்துக்குப் பெயர்போன தென்பதும் நீங்கள் நன்கு அறிவீர்கள். அத்தேசத்திலே வைரம் எவ்வாறு எங்கே தோன்றுகிறதென்பதைக் கவனித்தால் அது மிகவும் விந்தையான தொன்றாயிருக்கும். அவ்விடத்திலே அது கங்கிளாமெரேட்டினிடையில் காணப்படுவதில்லை. நீலக்களிமண் என்னும் பெயரிடப்பட்ட ஒரு வகைக் கட்டிக் களிமண்ணிலே பதிந்து காணப்படுகிறது. நீலக்களிமண் என்று கூறப்படும் இவ்வைரந்தாங்கிப் பாறையானது, பரிசோதித்துப் பார்த்ததிலே கரிப்பொருள் நிறைந்த களிமண் அல்லது ஷேலோவாக இருக்கிறது; இக் களிமண்ணில் தாவரப்பொருள் மிகவும் அதிகமாகக் கலந்து காணப்படுகிறது; எரிமலையின் சம்பந்தத்தால் பண்டைக்காலத்திலே நெருப்பினால் உருக்கி வார்க்கப்பட்ட சுவர்போன்ற செங்குத்தான அடுக்குப்பாறைகளினூடே இப்பாறை தோன்றுகிறது. இப்பூமியின் மேல்பரப்பிலே சிற்சில இடங்களிலே சிற்சில வேளைகளிலே எரிமலை சம்பந்தமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். எரிமலை வெடிக்கும்போது அதனுள்ளே சிவக்கக் காய்ந்து உருகிக்கிடக்கும் கற்பாறையானது நீர்ப்பெருக்குப்போல் வெள்ளமாய் வெளியிலே நான்குபக்கமும் ஓடும். இதற்கு 'லாவா' அல்லது கற்பிரவாகம் என்று பெயர். பூமியின் சூடலினின்று சூடுண்ட காற்றுக்களும் ஆவிகளும் வெகு வேகமாய் ஆகாயத்திலே வெகு தூரம்வரை உயரும்படி எறியப்படும். அவைகளுக்கு மேலே போர்வைபோலிருந்து வந்த பாறைகளை யெல்லாம் தம் வேகத்தால் அவை உடைத்துத் தகர்த்துத் தள்ளிக்கொண்டு மேலே கிளம்பும். இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் சேர்த்துத்தான் நாம் எரிமலை வெடிப்பென்று கூறுகிறோம். பூமியின் உட்புறமுள்ள இந்த வேகமானது, சிற்சில வேளைகளில், உருகிய கற்பாறையை வெளியே தள்ளப் போதிய வன்மையற்றிருக்கும். அப்பொழுது கற்பிரவாகமானது வெளியே வராது; அடியிலேயே நின்றுவிடும். ஆனால் அப்பொழுது பூமியின் மேன்மட்டத்தில் ஓர் அதிர்ச்சியாக மட்டும் அது தோன்றும். இதைத்தான் நாம் பூகம்ப மென்கிறோம். அவ்வேளைகளிலே, நீர்போல உருகிய பாறை வெள்ளமானது மற்றப் பாறைகளினிடையே அகப்பட்ட சந்து பொந்துகளாகும் இடைவெளிகளிலெல்லாம் உருக்கிவார்த்த உலோகம்போல ஓடிப்பாயும்.

இந்த வெள்ளத்தின் வேகமானது சூடு குறையக் குறைய மட்டுப் பட்டுப் போகும். பின்பு வரவர அஃது ஆறிக் குளிரும்போது இடை வெளிகளிற் புகுந்த கற்பாறை வார்ப்பானது சுவர்களைப்போல் செங் குத்தாகவோ சற்றுச் சாய்ந்தோ இறுகிவிடும். இவற்றை 'டைக்' என்று கூறுகிறார்கள்.

அளவிறந்த சூடுகொண்ட இக் கற்பாறைகள் தம் அண்டையி லுள்ள பலவகைப் பாறைகளின்மீது படும்போது அவை எல்லாம் இச்சூட்டால் அநேக விதமான மாறுபாடுகளை அடைகின்றன. அவற்றுள் சிற்சில சூளையிலிடப்பட்ட செங்கலைப்போல் சுட்டுப் போகின்றன. வேறு சில, சூட்டினால் உருகி ஒன்றோடொன்று கலந்துபோகின்றன. இன்னும் சில, தம் உருவமே தெரியாதபடி அவ்வளவு மாறுபட்டுவிடுகின்றன. சாதாரணமாகச் சூட்டினால் சற்றேனும் உருகாத கட்டிப் பாறைகளும் கற்களும்கூட, கற்பிர வாகம் அவைமீது சிறிது பட்ட உடனேயே, வெயிலில் உருகும் பனியைப்போல், எளிதில் உருகிப் பெருக்கெடுத்து நீர்போல ஓடத் தொடங்குவதினின்று அதன் அத்தியந்த உஷ்ணமானது ஒரு வாறு நமக்குப் புலனாகும். இடையிற் செருகிய ஆக்கினேயமான கற்சுவரானது கரிப்பொருள் செறிந்த களிமண் பொருளின் மீது தொட்டுக் கொண்டிருக்கும் இடங்களில் மட்டும் வைரங்கள் ஏராள மாகக் காணப்படுவது மிகவும் விநோதமான விஷயமாயிருப்பதோடு சூசகமாகவும் இருக்கிறது. அதனினின்று ஒருவாறு வைரத்தின் உற்பத்தியைப்பற்றி நாம் ஊகிப்பதற்கும் அஃது இடந்தருகிறது.

செக்கச் சிவந்து தகதகவென்று கொந்தளிக்கின்ற, ஆக்கினேயக் கற்பாறைப் பிரவாகமானது, களிமண் நிலத்திலுள்ள கரிப்பொருளைத் தாக்கும்போது அக்கரிப்பொருளானது மிகவும் மாறுபட்டு வைர மாகிறது என்பது கிட்டத்தட்ட வெளிப்படை. பண்டைத் தாவர மாம் கரிப்பொருள்களின் மீது அப்படிச் சூடு தாக்கும்போது அதி லுள்ள நீரும் ஆவியாக மாறக்கூடிய பிறபொருள்களும் ஆவியாகி அதினின்று வெளியேறி விடுகின்றன. அதிலுள்ள கரிப்பொருளா னது மிகவும் அழுந்தி இறுகி நெருங்கிக் கட்டியாகிறது. ஆதலால் இவ்வாறு உண்டாகும் பொருளான வைரமானது மிக்க காடினியம் பொருந்தியதாயும், மிக்க திண்மையுள்ளதாயும், மிகவும் இறுகியதா யும் ஆகிவிடுகிறது. சுருங்கச் சொல்லின் அது படிகப்பொருளாகி விடுகிறது. வைரமென்பது கரியின் படிக வடிவமே தவிர வேறல்ல. மேலே கூறிய பற்பல விசேஷ குணங்களெல்லாம் எவ்வாறு வைரத் தில் பொருந்திக்காணப்படுகின்றன வென்பதை விளக்குவதற்கு இதுவே சரியான ஆதாரமாகும்.

இம்மாறுபாடானது பூமிமட்டத்திற்கு வெகு ஆழத்திற்கு அடியில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். மேல் நின்று அழுத்தும் மலை போன்ற கற்பாறைகளின் அளவிறந்த கனத்தால் மிகவும் அதிகமாய் அழுத்தப்பட்டபோதுதான் இத்தகைய மாறுபாடு உண்டாகக் கூடும்.

சில வருஷங்களுக்கு முன்பு பிரெஞ்சுதேச இராசயன சாஸ்திரி ஒருவர் தம்முடைய பரிசோதனைச் சாலையில் வெறும் கரியை அத்தியந்தச் சூட்டுக்கும் அழுத்தத்துக்கும் உட்படுத்திச் சிற்சில செயற்கை வைரங்களை அரிதில் செய்துமுடித்தார். அவ்வைரங்கள் இயற்கையிற் காணப்படும் மெய்வைரங்களினுடைய குணாதிசயங்கள் அனைத்தையும் உடையனவாகவே காணப்பட்டன. அவற்றுக்கும் மெய் வைரங்களுக்கும் குணத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆனால் அவை அளவில் மட்டும் மிகச்சிறியனவாய் இருந்தன. எவ்வளவோ முயன்றுபார்த்தும் அளவில் சற்றுப் பெரிய வைரங்களை அவரால் செய்ய முடியவில்லை. ஆதலால் அவை விற்பனைக்கு உரியனவாகாது போயின. இயற்கைத் தாயின் அரும்பெருந்தொழிற் சாலையாம் இவ்வுலகில் அமைந்துள்ள இயற்கைச் சௌகரியங்களையெல்லாம் அப்படியப்படியே சின்னஞ்சிறிய மானிடச் சோதனைச் சாலையில் செயற்கையால் இயற்றிக்கொள்ள முடியுமா? முடியவே முடியாது. எளிய தாவரப்பொருளை அரிய வைரமாக்குவதற்கு வேண்டிய சாதகங்களைச் சம்பாதிப்பது எப்படி? அத்தனை தீக்ஷ்ணமான சூட்டை உண்டாக்குவது எப்படி? அவ்வளவு மிகுந்த அழுத்தத்துக்கு எங்கே போவது? இவை இரண்டைக்காட்டிலும், முக்கியமானது இன்னுமொன்றுண்டு. அதாவது, இயற்கைத் தொழிற்சாலையில் எண்ணரிய காலமாக நடைபெறுவது போலவே நீடித்த காலமாக அம்முறைகளை விடாது செயற்கைச் சோதனைச் சாலையில் நிகழ்த்துவதுதான். அற்பாயுளுள்ள மனிதனால் இஃது எங்ஙனம் இயலும்? சர்வலோக சிருஷ்டிகர்த்தாவின் அற்புத் தொழிலாகிய இதிலுங்கூட விளங்கா நிற்கும் இணையற்ற தேர்ச்சியையும், ஒழுங்கையும், முறையையும், வகையையும் நினைக்குங்கால், அத்தியந்த தீவிரத்துடனும் புத்தியுடனும் முயன்றுவரினும் கேவலம் மானிடமேயாகிய பிரயத்தினத்தின் சிறுமையும் புன்மையும் எவ்வளவு! அதற்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டாகும். இது நிற்க.

தென் ஆப்பிரிக்காவிலே பிரசித்திபெற்ற கிம்பெர்லி சுரங்கத்திலே ஆக்கினேயக் கற்சுவரும் கரிப்பொருள் செறிந்த களிமண்ணும் ஒன்றோடு ஒன்று நெருங்கி யிருப்பதை நாம் இன்னும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இத்தகைய சேர்க்கையானது வெகு காலத்துக்கு

முன் நிகழ்ந்தபோது பூமியின் உட்புறத்திலே வெகு ஆழமான இடத்திலேதான் நிகழ்ந்தது. என்றாலும், எண்ணரிய காலங்களாகக் காற்றாலும் வெயிலாலும் மழையாலும் இடையறாது தாக்கப்பட்ட போது அதன் மேலிருந்த மிக்க கனமான கல்மூடியும் சிறிது சிறிதாகத் தளர்ந்து தகர்ந்து முற்றிலும் கரைந்து போய்விட்டது. ஆதலால் அப் பிரதேசமானது இப்பொழுது சற்றேறக்குறையப் பூமி மட்டத்திலேயே வெளித்தோன்றலாயிற்று. இந்தியாவிலே, அதிலும் தீபகற்பப் பிரதேசத்திலே அநேக இடங்களில் இவ்வாறு கரிப்பொருள் அடுக்குக்கள் பூமியின் மேற்புறத்தில் தோன்றுகின்றன. இந்தியாவிலுள்ள நிலக்கரிச்சுரங்கங்கள் எல்லாம் இத்தகைய கரிப்பொருள் அடுக்குக்கள் தாம். நிலக்கரி என்பது தாவரப்பொருள் தான் என்பதையும், முன்னொரு காலத்திலே பூமியின் மேல் முளைத்திருந்த செடி கொடி மரங்களுள் இதுவரை மிகுந்தவைதாம் அவை என்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். பூமியின் மேல்பொருக்கானது வெப்பத்தாலும் குளிர்ச்சியாலும் அழுத்தத்தாலும் இழுப்பினாலும் பலவகையாய்த் தாக்குற்று மாறுபட்டு இயங்கியபோது பண்டைக் காலத்திலே மரஞ்செறிந்த காடுகளாயிருந்த இப்பிரதேசங்கள் தாழ்ந்து போயின பின்பு இவற்றின் மீது நீரின் துணைகொண்டு மண்ணும் மணலும் மேன்மேலும் படிய இவை அவற்றுள்ளே ஆழ்ந்து தாம் இருந்தவிடம் தெரியாதபடி காலக்கிரமத்தில் மூழ்கிவிட்டன. இவ்வாறு புதைபட்ட தாவரப்பொருளானது மேல்நின்று இடையறாது நிகழ்ந்துகொண்டேயிருக்கும் அழுத்தத்துக்கு உட்பட்டு வந்தபோது அதிலுள்ள நீரையும் ஆவியாகக் காற்றில் பறந்துபோகக்கூடிய மற்றப் பொருள்களையும் கொஞ்சங் கொஞ்சமாக இழந்தது. பின் வரவர இறுகித் திண்மைபெற்றது. இவ்வாறு நாளடைவில் உயிருள்ள மரமானது கனிப்பொருள் வகையில் ஒன்றாகிய உயிரற்ற நிலக்கரியாக மாறி அமைந்துவிட்டது. நெருங்கிக் குறுகிய கட்டி விறகுதான் நிலக்கரி. இவ்வாறு தாவரமானது படிப்படியாகக் கனிப்பொருளாக மாறும் முறையிலே, சூடும் அழுத்தமும் ஒருங்கே மிகுந்து வரம்பில்லாது தாக்கும்போது அம்மாறுபாடு மேன்மேலும் அதிகமாக நிகழ்ந்துவந்ததன் முடிவே வைரம் என்னும் கனிப்பொருள். மேற்கூறியபடி வைரத்தின் உற்பத்தியானது மிகவும் ஆழ்ந்த இடத்தில் நிகழும். அதாவது பூமியின் மேன் மட்டத்திலிருந்து வெகு தூரம் பூமியினுள்ளே ஆழ்ந்திருக்கும் கீழிடத்தில்தான் வைரம் விளையும். அங்கேதான் அது விளைவதற்குப் போதிய அழுத்தம் இருக்கும். ஆனால் பூமியின் மேல் பொருக்கின் அசைவு வீழ்வுகளாலும், காற்று வெயில் மழைகளின் தாக்குத்

தகர்வுகளாலும், நீரின் கரைவாலும் பெருக்காலும் இயங்கித் தகர்ந்து இடம் பெயர்ந்துபோகிறது. அதனால் முன்பொரு காலத்தில் கண்ணுக்குத் தெரியாது பூமியினுள் ஆழ்ந்துகிடந்தனவெல்லாம் சிறிது சிறிதாகப் பூமியின் மேன்மட்டத்துக்கு வந்து சேர்ந்து மனிதர் கண்களுக்குப் பிரத்தியக்ஷமாகின்றன. நாம் அவற்றைக் கையாளவும் கூடுகிறது. ஆழ நிகழ்ந்து வந்த எரிமலைச் செயல்கள் ஆழ்ந்திருக்கும் காரணத்தாலேயே உண்டாகிய அழுத்தத்தை உதவியாகக் கொண்டு அளப்பரிய காலமாக நடந்துவந்ததுதான் வைரம் பிறப்பதற்குச் சாதகமாக உள்ள முக்கிய காரணம். அதனால் தான் பண்டைத் தாவரம் படிகவைரமாக மாறிவிட்டது என்பது நன்கு தெளிவாகிறது.

இந்தியாவிலே இப்பொழுது ஓர் எரிமலை கூடக் காணப்படாமையினால், இந்தியாவிலே எரிமலைகளின் செயலைப் பற்றி நான் சொல்லுவதெல்லாம் உங்களுக்குச் சற்று வியப்பாகவே இருக்கலாம். ஆனால், இப்பொழுது இந்தியாவிலே காணப்படும் பாறைகளைக் கவனித்தால் முன்னொரு காலத்திலே இந்தியாவில் எரிமலைகள் இருந்தன என்பதும், அவற்றின் தொழில்களும் சர்வ சாதாரணமாகத்தான் நிகழ்ந்து வந்தன என்பதும் அறியக்கிடக்கின்றன. இந்தியாவின் பூதத்துவ சாஸ்திர சம்பந்தமான சரிதத்தை நாம் பார்த்தால், அதிலே 'ஈபாக்' அல்லது யுகம் என்று சொல்லப்படும் ஒவ்வொரு பெருங்கால அளவிலேயும் எரிமலை வெடிப்புக்கள் சாதாரண நிகழ்ச்சிகளாகவே நிகழ்ந்து வந்திருக்கின்றன வென்பது திண்ணம். பூமி மட்டத்திலே பண்டைப் பழைய பாறைகளினூடே எரிமலைச் செயல்களாலுண்டாகும் ஆக்கினேயக் கற்பாறைகளையும் காணுவதினின்று அதைப்பற்றி இவ்வளவு நிச்சயமாகக் கூற முடிகிறது. 'க்ரெடேஷஸ்'—சுண்ணும்புக் கற்காலம்—என்று குறிப்பிடப்பட்ட ஒரு யுகத்திலே எரிமலை வெடிப்பும் சுறுசுறுப்பும் பூமியிலெங்கும் நிகழ்ந்திருப்பதற்கு அத்தாட்சிகள் பல அகப்படுகின்றன. பம்பாய் ராஜதானியிலும் அதைச் சார்ந்துள்ள பிரதேசங்களிலும் வெகு இடங்களிலே லாவாவானது போர்வைபோல் போர்த்தியிருப்பது இன்றும் காணக்கிடக்கிறது. மேலே கூறிய மற்றக் காலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது நாம் இப்பொழுது வாழும் இக் காலத்தை மிகவும் அமைதியான காலமென்று சொல்லலாம். முன் காலத்திலே பூமியின் மேல் பரப்பானது அசைவுற்றுத் தள்ளாடியது. அதனால் பண்டைக்காலத்திருந்த காடுகள் மூழ்கிப்போய்விட்டன. அதனால் உயிருள்ள தாவரப் பொருள்கள் உயிரற்ற நிலக்கரியாகவோ கனிப்பொருளாகவோ மாறிவிட்டன வென்றெல்லாம் நான் கூறினே

னல்லவா? அவற்றைக்கூட நீங்கள் சந்தேகிப்பீர்கள்; அவற்றை எல்லாம் நம்புவது உங்களுக்குச் சற்றுக் கஷ்டமாகத் தானிருக்கும். ஏனென்றால், பூமியின் அசைவு அதிர்ச்சிகளும், பூகம்பங்களும், அஸ்ஸாமிலும் ஹிமயமலைச் சாரல்களிலும் நாள் தவறினாலும் அவை தவறாது—கடுமையாகவோ இலேசாகவோ—நிகழ்வ தாகக் கேள்விப்பட்டபோதிலும், தென்னிந்தியாவில் நிகழ்வதாக நாம் கேள்விப்படுவதே இல்லை. இதற்குக் காரணம் என்ன வென்றால், தீபகற்பப் பிரதேசமாகிய நமது தென்னிந்தியாவானது மிகமிகப் பழைய நாடு. இது யுகாந்தரங்களாக ஸ்திரமாகிவிட்ட பெரும் பிரதேசத்தின் ஒரு பகுதி. இமயமலைப் பிரதேசமோ வெனின் இதனோடு ஒப்பிடும்பொழுது புதிய நாடு என்றே சொல் லத் தகுந்தது. பூதத்துவ சாஸ்திர ரீதியிலுள்ள காலவகைகளை முன்னிட்டுத் தாரதம்மியமாய்ப் பேசும்போது சமீபகாலம் என்றே குறிப்பிடத்தகும் ஒரு காலத்துக்கு முன்பு வரையில், சமுத்திரப் பிரதேசமாகத்தான் அஃது இருந்துவந்தது. உலகில் இப்போதுள்ள மலைத்தொடர்கள் யாவற்றினும் உயர்ந்தனவாயுள்ள இமயமலைத் தொடரின் சாரல்களிலுள்ள பூமியின் அடுக்குக்களைக் கவனித்தால் அவை சமுத்திரத்தின் நீரின் அடியிலேயுள்ள தரையாகவிருந்தன வென்பது புலனாகும். படிப்படியாகப் படிந்து இறுகி வந்த மணல் களிமண் ஆகிய இவற்றினாலே தான் அவை அமைக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. மிகவும் வன்மை பொருந்திய பூசக்திகள் சிலவற் றால் அவை இவ்வளவு உயரமாகத் தூக்கப்பட்டன. அச்சக்திகள் இன்னும் அப் பிரதேசத்தில் வியாபித்து வருகின்றன. ஆதலால் அப் பிரதேசமானது ஸ்திரமான ஒரு நிலையை இன்னும் அடைய வில்லை. அங்கெல்லாம் அடிக்கடி நிகழும் பூகம்பங்களும் பூமியதிர்ச்சி களும் இதற்கு அத்தாட்சிகளாகின்றன. அவ் விமயமலைப் பிரதேசமா னது சமுத்திரத்திலிருந்துதான் வெளியேறியது என்பதை ஐயமறக் காட்டுவது ஒன்றுண்டு. அதைச் சொன்னால் நீங்கள் பிரமித்து விடு வீர்கள். ஹிந்துக்கள் அனைவரும் பூசைக்குரியதாக வைத்துக்கொண் டாடும் சாலிக்கிராமத்தை நீங்கள் அறிவீர்கள். அது ஸ்ரீ கிருஷ்ண பகவானது சக்கரத்தைப் போன்ற வடிவமுடையதா யிருக்கிறது என்பதுதான் அதன் தூய்மைக்குக் காரணம். இக்காலத்திலே நமது இந்துமகா சமுத்திரத்திலே வாழும் ஒரு சிற்றுயிர்ப் பிராணியை ஒத்த ஒரு பிராணியினுடைய சிப்பியின் முத்திரைதான் அதில் காணும் சக்கரமுத்திரை! இவை போன்ற கடல் வாழ்வன வாகிய சிப்பி இனங்கள் வேறு பலவும் இவ்வடுக்குக்களிலெல்லாம் காணப்படுவதால் இவை முன்னொரு காலத்திலே கடல் பிரதேச

மாகத்தாம் இருந்தனவென்பது உறுதிப்படுகிறது. இத்தகைய சிப்பிகள் பொதிந்து காணும் கற்பாறையானது, உண்மையில், இறுகிய கரிய களிமண்ணே. மலைச்சாரல்களிலே குதித்தோடும் அருவிகள் இக் கரிய களிமண் பாறைகளை உடைத்துக் கரைத்துத் தமது நீர்ப் பெருக்காம் நதிகளின் வழியே உருட்டிப் புரட்டிக்கொண்டு போகின்றன. வெள்ளத்தின் வேகத்தினால் கற்களின் மீதெல்லாம் உருட்டியடித்துக்கொண்டு போகப்படும் இச் சிறு கற்கள்—தமது முனைகள் மழுங்கித் தேய்ந்து போவதனால்—வழவழப்பாகி, உருண்டைவடிவமுள்ள சக்கரமுத்திராதாரிகளான சாலக்கிராமங்களாகி விடுகின்றன. வேகமாய் ஓடும் நீர்தான் இவற்றைப் புரட்டிக்கொண்டு போகமுடியுமேயன்றி மெதுவாக ஓடும் நீருக்கு இவற்றைப் புரட்டுவதற்கு வேண்டிய வன்மை இராது. ஆகையால் இக் கூழாங்கற்கள் மலையின்மேலிருந்து உருண்டு புரண்டு குதித்தோடிவரும் நீரின் வேகத்தால் மலையடிவாரத்திலே ஹரித்துவாரத்திலே கொண்டு தள்ளப்படுகின்றன. செங்குத்தான மலைப்புறங்களை விட்டகன்று சமவெளியை அடையும்போது ஆற்றின் வேகம் மிகவும் குறைந்து விடுவதால் அப்பொழுது இக் கூழாங்கற்களை மேன்மேலும் புரட்டிக்கொண்டு போவதற்கு வேண்டிய சக்தி அதற்கிருப்பதில்லை. ஆதலால் இக் கற்கள் ஹரித்துவாரத்திலேயே தங்கிவிடுகின்றன. இங்கே அவைகளைப் பொறுக்கிச் சாலிக்கிராமங்களென்று கூறி விற்கின்றனர்.

மலைச்சாரல்களில் காணப்படும் பூமியின் அடுக்குக்கள் சாய்ந்தும் மடிந்தும் காணப்படுவது, இவை கடலின் கீழ்ப்புற மட்டத்தினின்று உயர்த்தப்பட்டு மலையாயின என்பதற்கு இன்னுமொரு சான்றாகும். இச்சரிதமானது மிகவும் மனோரம்மியமானதெனினும் நாம் எடுத்துக்கொண்டவிஷயம் வேறொன்றாதலால், இதைப்பற்றி இங்கே விரிவாகக் கூறுவது பொருத்தமாயிராது. பூமியின் இயக்கங்களையும் எரிமலை வெடிப்புக்களையும் அதன் சேஷ்டைகளையும் துணையாகக்கொண்டு பண்டைக்கால உயிர்ப்பொருளான தாவரத்தினின்று எப்படி முதன் முதலில் நிலக்கரி உண்டாயிற்றென்பதையும், பின்பு இச் சக்திகள் ஒருபுறமிருந்து வேலைசெய்ய, அஃது ஆழக் கிடக்கின்ற நிலையில் மேலிருந்து அளவற்ற அமுத்தம் அதனைத் தாக்க, எவ்வாறு அது வைரமாயிற்றென்பதையும் விளக்கும் பொருட்டே இவ்விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினேன். ஆப்பிரிக்காவில் வைரமானது தான் பிறந்த அகத்திலேயே காணப்படுகிறதென்பதையும், இந்தியாவிலே வைரம், தான் பிறந்த பாறைகளினூடே காணப்படாமல் முதலில் தோன்றிய பாறைகளுடைந்து

தகர்ந்து, நீரின் துணையால் மற்றோரிடத்தில் படிந்திறுகி மீண்டும் பாறையாகிய மற்றோரிடத்தில் புக்கதாய்க் காணப்படுகிற தென்பதை யும் விளக்கினேன்.

வைரந்தாங்கிப் பாறையாகத் தோன்றும் இச் சரளைக் கற் பாறை எது உடைந்துபோனதால் உண்டாயிற்றோ அந்த, (வைரத் தின் உற்பத்தி மூலமாகிய) வைரம் விளைபாறை இன்ன இடத்தில் இருக்கிறதென்பதைத் தென் ஆப்பிரிக்காவில் கண்டு பிடித்ததுபோல் இன்னும் நமது நாட்டில் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், தென் ஆப் பிரிக்காவிலுள்ள ஆக்கினேயக் கற்பாறையை அடுத்துக் காணப்படு கின்ற நீலக்களிமண் கற்பாறைக்குச் சமமான ஒருவகை வைரமூலப் பாறையானது நமது நாட்டிலும் பூமியின் மட்டத்தில் ஒரு காலத் தில் தோன்றித்தான் இருக்கவேண்டும். பின்னர் அது பூமிமட்டத் தில் விழுந்து ஓடும் நீரினால் தகர்த்துக் கரைக்கப்பட்டிருக்கவேண் டும். இஃது ஊகம் தான். எனினும் இறுகிய சரளைக் கல்லும் கங்கி ளாமெரேட்டும் இதை நிரூபிப்பதற்குப் போதிய சான்றுகளாக இருந்துவருகின்றன. இதைத் தவிர, நமது நாட்டிலே வைரந்தாங் கிக் கங்கிளாமெரேட் தோன்றும் இடங்களிலெல்லாம், துளைக்கும் கருவிகளைக் கொண்டு, கீழே துளைத்துப் பார்த்ததில் கரிப்பொருள் செறிந்த ஷேல் அகப்படுகிறது. மேலும் இப் பிரதேசங்களிலே ஆக்கினேயக் கற்சுவர்போன்ற டைக்குக்கள் பூமிமட்டத்திலும் அதற் குக் கீழும் காணப்படுகின்றன. வைரங்களுக்குப் பெயர்போன பங் கனப்பள்ளிப் பிரதேசத்திலே ஓர் இடத்திலே பூமியைக் குடைந்த போது அங்கே பூமி மட்டத்துக்குச் சற்றுக் கிட்டத்திலேயே கரிய கரிப்பொருள் செறிந்த ஷேல் அகப்பட்டது. அப்பொழுது மிக நிதானித்துப் பேசும் ஓர் ஆங்கிலப் பத்திரிகையுங்கூட நமது மாகாணத்தில் ஒரு மட்டுக்கு நிலக்கரி அகப்பட்டுவிட்டதென்று பறையடித்தது; பூமியைக் குடைந்த ஆற்றலுடன் வேலைசெய்ய முன்வந்த வியாபாரியையும் வெகுவாகப் புகழ்ந்து கூறிற்று. அந்த இடத்தைப் பூதத்துவ நிபுணரைக் கொண்டு நன்றாகப் பரீக்ஷித்ததில் அத்தகைய அடுக்கில் இந்தியாவில் வேறெங்கும் நிலக்கரி காணப் படுவதில்லையென்பது தெரியவந்தது. ஆகையால் நிலக்கரிச் சுரங் கத்தை ஒட்டிய இவ்வாசையானது, நீரிற் குமிழிபோல், ஒரு கணம் தோன்றி மறுகணம் வெடித்துப் போயிற்று.

சரித்திரங்களின் வழி நாம் அறிந்த வைரங்களுள் மிக்க கியாதி பெற்ற வைரங்களைப்பற்றியும் அளவில் பெரிதான வைரங்களைப் பற்றியும் சிறிது கூறிவிட்டு இவ்வியாசத்தை முடித்துவிடுகிறேன். இவ்வைரங்களில் பெரும்பாலன இந்தியாவில் பிறந்தவை. இவ்

வைரங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய வைரத்துக்கு க்ரேட் மோகல் (பெரும் மொகல்) என்று பெயர். அது 1663-ம் வருஷத்திலே ஔரங்கசீப் மகாராஜனது பொக்கிஷத்தில் இருந்தது. உயரமாய், வட்டவடிவமாய், ரோஜாப்பட்டை போடப்பட்டதாய் அது காணப்பட்டது. அது மிகவும் ஜாஜ்வல்லியமான காந்தியை உடையது. அதன் எடை 280 காரெட். மொகலாய வமிசத்தை இந்தியாவிலே ஸ்தாபித்த பாபர் அரசனுடைய ஜீவிய சரித்திரத்திலே மற்றொரு பெரிய வைரமானது கூறப்படுகிறது. அது 320 காரெட் எடை யுள்ளதா யிருந்ததாம். மொகலாய ராஜ்யத்தைச் சீர்குலைத்த பாரசீக அரசனுன நாதர் ஷா 1739-ம் வருஷத்திலே கோஹினூர் என்னும் வைரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். 1813-ம் வருஷத்திலே அது லாகூர் அரசனது கைக்கு வந்துசேர்ந்தது. கிழக்கு இந்தியா கம்பெனியார் பஞ்சாப் மாகாணத்தைத் தம் வசமாக்கிக் கொண்டபொழுது அஃது அவர்கள் கையில் கிடைத்தது. அவர் 1850-ம் வருஷத்திலே விக்டோரியா மகாராணி அவர்களுக்கு அதைச் சமர்ப்பித்தனர். அதுவும் ரோஜாப்பட்டை போடப்பட்டது தான். ஆனல் அதன் வடிவம் அவ்வளவு அழகானதாய் இருக்கவில்லை. அது அப்பொழுது 320 காரெட் எடையுள்ளதாயிருந்தது. அதன் வடிவத்தை ஒழுங்குபடச் செய்யும் பொருட்டு 1852-ம் வருஷத்திலே அஃது வெட்டிப் பட்டை போடப்பட்டது. அதற்கு இப்போதுள்ள எடை 106 காரெட் தான். அஃது அத்தியாச் சரியமான காந்தியையும் சோபையையும் உடைய அருமையான வைரம். அதிர்ஷ்டம் கெட்ட ருஷியாச் சக்கரவர்த்தியின் நகைகளிலுள்ள வைரங்கள் அனைத்திலும் பெரியது ஆர்லாப் என்னும் வைரம். அதன் சரித்திரம் மிகவும் விநோதமானது. மைசூர் ராஜ்ஜியத்தில் உள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்த தெய்வத்தின் கண்களில் ஒன்ருக அஃது அமைக்கப்பட்டிருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே அங்கிருந்து யாரோ அதைத் திருடிக்கொண்டு போயினர். அதற்குப் பின் பிரெஞ்சுப் போர்வீரன் ஒருவன் கையில் அது சிக்கியது. அதற்குப் பின் ஓர் ஆங்கிலக் கப்பல்தலைவனை அஃது அடைந்தது. அதன் பின் ருஷியா நாட்டு ஆர்லாப் இளவரசன் அதை விலைக்கு வாங்கிக் கொள்ளவே ருஷிய அரசரின் நகைகளில் அஃது ஒன்ருயிற்று. அது 194 காரெட் எடையுள்ளது. போலார் ஸ்டார் என்பது 40 காரெட் எடையுள்ள மற்றொரு சிறந்த வைரம். அதுவும் ருஷிய மன்னரின் நகைகளில் ஒன்ருயிருந்தது. அதிலே மூன்று பாரஸீக மன்னரின் பெயர்கள் வரையப்பட்டிருந்தன. நிஜாம் என்பது மற்றொரு பெரிய இந்திய தேசத்து வைரம்.

அதன் எடை 277 காரெட். அது கோல்கொண்டாவிலே அகப் பட்டதாகக் கருதப்படுகிறது. இப்பொழுது நிஜாம் மன்னரின் கைவசமிருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. பாரசீக மன்ன ராகிய ஷாவினுனிடம் இரண்டு பெரிய வைரங்கள் இருந்தனவாம். அவற்றிற்குத் தாரிய நூர் (ஒளிக்கடல்) என்றும், தாஜே மா (சந்திர மகுடம்) என்றும் பெயராம். இரண்டும் ரோஜாப்பட்டைகள் போடப்பட்டவையாம். ரீஜெண்ட் அல்லது பிட் என்று சொல்லப் படும் வைரமும் அளவில் பெரியது; அழகில் மிகச் சிறந்தது. 1701-ம் வருஷத்திலே கிருஷ்ணா நதிக்கரையிலே அது கண்டெடுக் கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதை மாகாண கவர்னரா யிருந்த பிட் என்பார் விலைக்கு வாங்கினாராம். பிக்கட் வைரமென் பது 1775-ம் வருஷத்திலே முதன்முதலில் பிக்கட் பிரபுவால் இங்கி லாந்துக்குக் கொண்டுவரப்பட்டது. பிறகு எகிப்து தேசத்து ஆலி பாஷாவுக்கு விற்கப்பட்டது. மேற்கூறிய இவ்வைரங்கள் யாவும் நமது இந்தியா தேசத்திலே உற்பத்தியானவை. பிரேசில் முதலிய பிரதேசங்களிலே உற்பத்தியான சிற்சில வைரங்கள் அளவில் மிகவும் பெரியனவாயிருந்தபோதிலும், அவற்றைப் பற்றிக் கூறத் தொடங் கினல் நமது வியாசம் பெருகுமாதலால் இங்கே கூறவில்லை.

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச்சொற்கள்

Acid—அமிலம்.
Blue clay—நீலக்களிமண்.
Carat—காரெட், 4 கிரெயின் உள்ள எடை.
Carbonic acid gas—கரியமில வாயு.
Conglomerate—கங்கிளாமெரேட், கட்டிச்சரளைக்கல்.
Cretaceous—கிரிடேஷஸ், சுண்ணும்புக்கல் சம்பந்தமான காலம்.
Dyke—டைக், சுவர்.
Epoch—ஈபாக்கு, யுகம்.
Graphite—கிராபைட், எழுதுகரி.
Gravel—சரளைக்கல், பொடிக்கல், கற்பொடி.
Grit—கிரிட்.
Igneous rock—ஆக்கினேயக் கற்பாறை.
Oxygen—ஆக்ஸிஜென்.

Pebble—கூழாங்கல்.
Pressure—அழுத்தம்.
Pudding stone—புட்டிங் ஸ்டோன்.
Shell—சிப்பி.

பெயர்கள்

Banganapalle—பங்கனப்பள்ளி.
Bundlekhand—பண்டில்கண்டு.
Darianoor—தாரியநூர்.
Great Moghul—க்ரேட் மோகல்.
Kimberley—கிம்பெர்லி.
Kohinoor—கோஹினூர்.
Nizam—நிஜாம்.
Orloff—ஆர்லாப்.
Piggot—பிக்கட்.
Pitt—பிட்.
Polar Star—போலார் ஸ்டார்.
Regent—ரீஜெண்ட்.
Sambalpur—சாம்பல்பூர்.
Shah—ஷா.
Taj-e-moh—தாஜேமோ.
Wajre karur—வஜ்ரோ கரூர்.

இரஸவாதம்

கே. ஸி. வீரராகவையர்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிட வித்யா பூஷணம் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் கலைமகளின் தைமாத இதழில் எழுதிய "கலைகள்" என்ற அரிய வியாசத்தில் பழந் தமிழ்நூல்களிற் கண்ட முப்பது கலைகளைப்பற்றி அழகுபெற வரைந்து, அன்பார்ந்த அறிஞர்கள் (1) பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் (2) ஏட்டுச்சுவடிகளில் உள்ள கலைகளை ஆராய்ந்து வெளிப்படுத்தியும் (3) கலைவல்லார் வாய்மொழியாகக் கேட்டறிந்ததைத் தொகுத்து எழுதியும் (4) சாஸனங்களில் காணப்படும் கலைகளைப்பற்றிய விஷயங்களை ஆராய்ந்து வெளிப்படுத்தியும் தமிழுக்கு உதவி செய்யவேண்டுமென்று அறிவித்துள்ளார்கள். அறுபத்துநான்கு கலைகளில் ஒன்றாகிய இரஸவாதத்தைப்பற்றி நான் அறிந்த அளவில் சில ஈண்டு எழுதுவேன்.

I. பழைய இரஸவாதம்

இரஸவாதம் என்பது இரஸத்தைப்பற்றிப் பேசுவது என்று பொருள்படும். பண்டைக்காலத்தில் இரஸத்தின் உதவியைக் கொண்டு பல அறிஞர்கள் தங்களது பண ஆசையைத் திருப்தி செய்ய முயன்றார்கள். அதுவே இரஸவாதம் ஆயிற்று. தமிழ் அகராதியில் வாதம் என்ற பதத்துக்கு 'இரும்பு முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் வித்தை' என்ற பொருள் காணப்படுகிறது. அது பழைய பாகுபாட்டில் அறுபத்து நான்கு கலைஞானங்களில் ஒன்று ஆகும். அந்த வித்தையில் அநேகருக்குப் பைத்தியம் உண்டு. அதுபற்றியே தாயுமான சுவாமிகள் தமது காலத்தினியல்பை,


"ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீ திலே
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர்"

என்று பாடியுள்ளார். இம்மாதிரி அலைந்திடுவாரும் நெஞ்சு புண்ணுவாரும் இன்றும் உளர்; இன்னமும் உளராவர். ஏனெனின் பொன்னும் ஆயுசும் இளமையும் உளவேல் இகலோக போகம் பெரிதும் பெறலாம் என்ற நம்பிக்கை மனிதர் உளத்தில் குடிகொண்டிருக்கிறது.

சரித்திரபூர்வமாக ஆராயுங்காலத்தில், முதன் முதலில் நாகரிகம் மேம்பட்ட பண்டை நாடுகளில் முதன்மைபெற்ற ஈஜிப்டு, இந்தியா, சீனு, சால்டியா என்ற இடங்களில் கைத்தொழில்கள் பல சிறந்து விளங்கின. கைத்திட்டமாக ஆடை நெய்தலும், சாயம் போடலும், சவர்க்காரம் செய்தலும், நகை பண்ணலும், கண்ணுடி முதலியன வைத்து அலங்காரக் கட்டிடங்கள் கட்டலும், வர்ணம் தீட்டலும், நன்மருந்து வைப்பு முறைகளும் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தன. இது சற்றேறக்குறைய 5000 வருஷங்களுக்கு முந்திய சமாசாரம் என்பது இப்பொழுது கிடைத்திருக்கும் பழைய ஏடுகளிலிருந்தும், செப்புப்பட்டயம் கல்வெட்டு முதலியவைகளிலிருந்தும், சித்திரங்களிலிருந்தும், பல புதையல்களிலிருந்தும் தெரியவருகிறது. ஆனல் அவர்கள் பொருள்களின் தத்துவத்தில் அதிகமாகக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை; அக்காலத்தில் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம், நாணயங்கள், ஆபரணங்கள், குழாய்கள், கத்தி, கபடா, கேடயங்கள், வண்டி அச்சு வில்லு உருளைகள், உளி கோடரி முதலிய ஆயுதங்கள், கண்ணுடி வகைகள் எல்லாம் மலிந்து விளங்கின.

பின்னர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர்க் கிரேக்கர்கள் முற்பட்டனர். அவர்கள் ஈஜிப்டு தேசத்தின் கைத்தொழில்கள் பலவற்றையும் கற்றுப் பதார்த்தங்களின் தத்துவத்தையும் ஆராய ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவராகிய தேலிஸ் என்பவர் (கி.பி. 600) பதார்த்தங்களுக்கெல்லாம் மூலாதாரமாகவுள்ளது ஜலம் என்று உபதேசித்தார். மற்றொருவரான அனக்ஸமீனஸ் (கி. பி. 500) வாயுத்தான் மூலாதாரப் பொருளென்றனர்; ஏனெனின், வாயுவே ஆகாசவெளியில் கிளம்பிச்சென்று பின் மழை ஜலமாக நமக்கு வருகிறதென்றனர். இன்னும் ஹிராக்கிலிட்டஸ் (கி. பி. 475) என்னும் ஒருவர் நெருப்புத்தான் மூலாதாரப்பொருள் என்றனர்; ஏனெனின் நெருப்பு ஜலத்தைக் காற்றாய் மாற்றுகிறது; காற்று மேகமாகிறது; மேகம் ஜலமாக விழுகிறது என்றனர். பேரிக்டிஸ் என்னும் நாலாமவர் ஒருவர், பூமிதான் மூலாதாரப்பொருள் என்றனர். பின்னர், எம்பிடாக்லிஸ் என்பவர் இவை ஒவ்வொன்றும் பொருள்களின் தத்துவத்தை விளக்கப் போதாவென்று மதித்து, மேற்சொல்லிய

நான்கு ஆதாரங்களுமே பொருள்களுக்கு மூலமாயுள்ளன என்று கற்பித்தனர் ; அவைகளில் ஒன்றை மற்றொன்ருய் மாற்றமுடியா தென்றும், வெவ்வேறு குணங்களையுடைய அவைகளைப் பல பல விகிதங்களில் கலப்பதால் உலகத்தில் காணப்படும் எண்ணற்ற பொருள்கள் உண்டாகின்றன என்றும், அந்நான்கு மூலப்பொருள்களுக்குந் தெய்வீகத்தன்மையுண்டென்றும், அவை ஸீயுஸ் (தீ), ஹிரே (வாயு), நேஸ்டிஸ் (ஜலம்), ஐடோனியஸ் (பூமி) என்றும் விளக்கிவந்தனர். இக்கொள்கையை, பிளேடோ (கி. மு. 427-347), அரிஸ்டாட்டில் (கி. மு. 385-322) என்ற மகா அறிஞர்கள் ஆதரித்து விருத்திசெய்தனர். ஆனால் அரிஸ்டாட்டில் தமது 'பிறப்பும் இறப்பும்' என்ற நூலில் மேலே சொல்லிய நான்கு மூலாதாரப்பொருள்களும் தனித்தனி இவ்விரண்டு குணங்களை உடையன என்றும், இக்குணங்களின் விகாரப்பாட்டினுல் அவைகளை ஒன்றுக்கொன்று மாற்றமுடியுமென்றும் போதித்தனர். வெம்மை, தண்மை, ஈரம், உலர்வு என்பன இவைகளின் குணங்கள் ; இக்குணங்களைச் சுருக்கியும் பெருக்கியும் மூலாதாரப்பொருள்களை அடையமுடியும் என்றனர்.



வெம்மையையும் உலர்வையுமுடைய பொருள் தீயைப்போன்ற பொருள் என்றும், உலர்வையும் தண்மையையுமுடைய பொருள் பூமியைப்போன்ற பொருள் என்றும், தண்மையையும் ஈரத்தையுமுடைய பொருள் ஜலத்தைப்போன்ற பொருளென்றும், ஈரத்தையும் வெம்மையையுமுடைய பொருள் வாயுவைப்போன்ற பொருளென்றும் அரிஸ்டாட்டில் கற்பித்தார் ; இந்த நான்கு மூலப்பொருள்கள் அல்லாமல் ரூபமற்ற ஒரு பொருள் ஐந்தாவதாக உளது என்றும் கற்பித்தார். அதைப்பிற்காலத்தவர் குவிண்டேஸன்ஸ் (*Quintessence*) என்றனர். நமது காலத்தவர்கள் அதை ஈதேர் என்கிருர்கள். இந்த மகா சிரேஷ்டரான அரிஸ்டாட்டிலின் கொள்கைகள் 25 நூற்ருண்டுகளாக உலவி வருகின்றன.

கிரேக்கர்களுக்குப்பின் உலக ஆதிபத்தியம் பெற்ற ரோம ராஜ்ய அறிஞர்களும் அரிஸ்டாட்டிலைப் பின்பற்றி யுத்தி புத்தி பூர்வமாய்ப் பல ஆராய்ச்சிகள் செய்தனர். அவர்கள் பொருள்களைக் கையினால் பழகிச் சோதனை செய்வது அகௌரவமான வேலை யென்று நினைத்து, ஈஜிப்டுதேச அறிஞர்கள் பின்பற்றிய கைத் தொழில் முறைகளை விலக்கிவிட்டனர்; கைத்தொழில்களைச் செய் வது அடிமைகளின் தொழில் என்று மதித்திருந்தனர். அந்தக் காலத்தில் ஈஜிப்டு தேசத்தில் மகா அலக்ஸாண்டரால் கி. மு. 331-ல் நீலநதிக்கரையில் ஸ்தாபிக்கப்பட்ட அலெக்ஸாண்ட்ரிய நகர் சிறந்து விளங்கியது. அங்கு 70000 புத்தகங்கள் நிறைந்த புத்தகசாலையும், மியூஸியங்கள் என்ற பலகாட்சிச்சாலைகளும், வைத்தியசாஸ்திரம் படிக்க விரும்புவோருக்கு ஓர் இலக்காக விளங்கின. கல்விச்சாலையும் ஓங்கி வளர்ந்தன. கிரேக்க ரோம வாலிபர்கள் அங்குச் சென்று தத்தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார்கள். ஆகவே அறிஞர்கள் பலர் அலக்ஸாண்ட்ரிய நகரில் கூடிக்கூடி ஈஜிப்டுதேசப் பழைய கைத் தொழில் விஷயங்களையும் கிரேக்கர்களுடைய தத்துவமுறை விஷயங் களையும் ஆராய்ந்து கெமிஸ்ட்ரி என இப்பொழுது வழங்கும் நவீன சாஸ்திரத்துக்கு அஸ்திவாரம் அமைத்தனர். ஆராய்ச்சிகள் கோவில் களில் நடைபெற்றன; பூசாரிகளும் குருமார்களும் பாண்டித்தியம் பெற்றனர். அவர்களுக்குப் பொருள்களைக் காய்ச்சி உருக்கலும், கரைத்து ஸ்படிகங்கள் பெறலும், வடிக்கட்டலும், உலைகள் சூளைகள் கட்டி பஸ்மங்கள் பதங்கங்கள் செய்தலும், திரவங்களைக் காய்ச்சி இறக்குதலும் நன்றாய்த் தெரிந்திருந்தன. இந்த முறைகளை இரகசிய மாக வைத்திருந்து சிலருக்கே போதித்துவந்தனர். மூலாதாரப் பொருள்களை ஒன்றுக்கொன்று மாற்றமுடியும் என்ற கொள்கையி லிருந்து பொதுவாகப் பொருள்களையும் மாற்றமுடியுமென்ற நம் பிக்கை வலிவுற்றது. இரும்பையும் ஈயத்தையும் பொன்னுக்கும் வித்தை பிறந்தது. இதைப் பாமரர்கள் அறியாதிருப்பதற்காகத் தந்திரங்கள் பல கிளம்பின; அவைகளை எளிதில் அர்த்தம் செய்ய முடியாத மாதிரியில் நூல்கள் பல எழுதப்பட்டன. இரும்புப்பட் டையைத் துத்தம் கரைந்த ஜலத்தில் சிறிது நேரம் வைத்திருந்தால், அது சிவப்பாக நிறம் மாறுகிறது. 'ஆகா! இரும்பைச் செம்பாக்கி யாய்விட்டது!' என்றனர். செம்புடன் சிறிது சிந்தூரத்தைச் சேர்த் துக் காய்ச்சினால் வெண்மையான வெள்ளி கிடைத்துவிடுகிறது; இன்னும் செம்புடன் சிறிது நாகத்தைச் சேர்த்துக் காய்ச்சினால் பித்தளையின் மஞ்சள் நிறம் கிடைக்கிறது; இதையே பொன் என மதித்தனர்!! இவையே இரஸவாதம்; இவைகளினின்றே எலிக்ஸிர்

(*Elixir*), பிலாஸபர்ஸ் ஸ்டோன் (*Philosopher's stone*), டிங்க்சர் (*Tincture*) என்ற பதங்களும் கருத்துக்களும் எழுந்தன. இப்படியாக, கி. மு. 300 முதல் கி. பி. 400 வரை நடந்தது.

மேலே சொல்லிய காலத்தில் நமது நாட்டிலும் ஸம்ஸ்கிருதத் தமிழ் மொழிகளில் இன்னோரன்ன கொள்கைகள் ததும்பியிருந்தன. பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்கள் பொருள்களின் அமைப்புக்கு அடிப்படையாகக் கருதப் பட்டன. சிலப்பதிகாரத்துக்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் பின்வருமாறு எழுதுகிறார்: "உடம்புக்கு முதலாயுள்ள பூதமாவன மண், நீர், தீ, வளி, வான் என இவை; இப்பூதங்கள் தாம் ஒன்றோடொன்று கூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாகவுடையது; தீத் தெறுதலைக் குணமாகவுடையது; காற்று ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்று; நீர் நெகிழ்தலைக்குணமாகவுடையது; ஆகாயமென்பது ஒருருவுண்டில்லையன்று. மண் ஐந்து பயனுடையது; நீர் நான்கு பயனுடையது; தீ மூன்று பயனுடையது; காற்று இரண்டு பயனுடையது; வான் ஒரு பயனுடையது." இந்த மாதிரியாகப் பல உரைகள் நூல்களில் காணப்படுகின்றன.

இனி, கி. பி. 400 முதல் 1500 வரை இரஸவாதக்காலம் என்று பாகுபாடு செய்திருக்கின்றனர். அந்தக் காலத்தில் மகமதியர்கள் உலக ஆதிபத்தியம் பெற்றிருந்தனர். கி. பி. 641-ல் ஈஜிப்டு தேசத்தைக் கைக்கொண்டனர். பின்னர் ஸ்பெயின், ஸிரியா, பெர்ஷியா முதலிய தேசங்களில் தங்கள் முதன்மையைக் காட்டினர். 9, 10, 11-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாக்கண்டத்தில் அந்தகாரம் சூழ்ந்திருந்தது; நாகரிகமற்றிருந்தது. மகமதியர்கள் அந்த அந்த இடங்களில் சர்வ கலாசங்கங்களையும் கல்லூரிகளையும் நிருமித்துக் கல்வி அறிவுகளைப் பரவச்செய்தனர். பழைய கிரேக்க ஸம்ஸ்கிருத பாஷைகளிலுள்ள எண்ணிறந்த நூல்களை அரபிக் பாஷையில் மொழிபெயர்த்தனர். கி. பி. 786—809-இலிருந்த ஹரூன் அல் ரஸ்சித் என்ற கீர்த்திபெற்ற அரசன் காலத்தில் பல வித்வத் கோஷ்டிகள் கூடியிருந்தன. அபுமுசா ஷாபிர் அல் சூபி (702—765), அபு பாக்கர் ஸஹரிய ராஸி (கி. பி. 932), அபு அலி ஹசேன் அப்துல்லா இபின் ஸீன (980—1037), அபுமான்சர் (1000), அல் ஜில்டாகி (1250) என்ற பல மகமதிய இரஸவாத அறிஞர்களும், அல்பர்ட் மாக்னஸ் (1193—1282), ரோஜர் பேகன் (1214—1285), ரேமண்ட் லல்லி (1235—1315) என்ற ஐரோப்பிய மேதாவிகளும் சிறந்து விளங்கினர்கள். இவர்கள் வைத்திய சாஸ்திரத்தைப் பெரிதும் போற்றிக் கற்று வந்ததில் இரஸவாத வழிகள் பலவற்றையும்

அனுசரிக்கலாயினர். இதேமாதிரியாக இந்தியாவிலும் அக்காலத்தில் சரகர், ஸுச்ருதர், சாரங்கதரர், வாக்படர், நாகார்ஜுனர் முதலிய சிரேஷ்டர்கள் தங்கள் தங்கள் அரிய பெரிய நூல்களை இயற்றினார்கள்.

நமது தமிழ்நாட்டிலே சித்தர்கள் என்ற அறிஞர்கள் வாதத்தையும் யோகத்தையும் வைத்தியத்தையும் ஒருங்கே அறிந்து தங்களது ஆற்றல்களைப் பல நூல்களில் புலப்படுத்திப் பாடியுள்ளார்கள். அவர்கள் காலம் கி. பி. 400 முதல் 1500 வரையில் இருக்கலாம். அவர்களில் முக்கியமானவர்கள் (1) அகத்தியர் (2) தேரையர் (3) கொங்கணர் (4) சட்டைநாதர் (5) போகர் (6) புலிப்பாணி (7) திருமூலர் (8) மச்சமுனி (9) சுந்திரானந்தர் (10) கோரக்கர் (11) கருவூரர் (12) அழுகுணிசித்தர் (13) ரோமரிஷி (14) டமரானந்தர் (15) நந்திதேவர் (16) வியாக்ரபாதர் (17) இராமதேவர் (18) காலாங்கி நாயனர் என்பவர்கள். அவர்கள் செய்த நூல்களில் சிலவே அச்சில் வந்திருக்கின்றன; இன்னும் அச்சில் வராத பல சித்தர் நூல்கள் (1) சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகாலயத்திலும் (2) தஞ்சைச் சரபோஜி மகாராஜா புத்தகாலயத்திலும் (3) மடாதிபதிகள் புத்தகாலயங்களிலும் கையெழுத்துப் பிரதிகளாகவே மறைந்து கிடக்கின்றன. இரஸவாதத்தைப் பெரிதும் அப்பியசித்து வந்தவர்கள் நவநாத சித்தர்களென்றும், பதினெண் சித்தர்களென்றும் பலவாருகக் கூறுவர். இவர்கள் தங்கள் நூல்களைச் செய்யுள்களாகவே இயற்றியுள்ளார்கள்; பலர் பெரிய நூல்களைச் செய்து, பிறகு அவைகளின் சாரத்தைச் சிறு சிறு நூல்களாகத் தாமே சுருக்கியுள்ளார்கள்; அவர்கள் நூல் மொழிநடை சாதாரண வழக்குச் சொற்களாலே அமைவதாகும்; ஆனால் எளிதில் அர்த்தமாகாவண்ணம் ஒரு பொருட் பல மொழிகளை உபயோகித்திருக்கிறார்கள்; நூல்களின் பெயர்கள் பெரும்பாலும் ஆசிரியர் பெயர்களாலும் சிறுபான்மை அவ்வாசிரியர்களின் ஆசான் பெயர்களாலும் அமைந்துள்ளன; அவைகளில் ஒன்றிலாவது விஷயத்தை விளக்கும் சித்திரங்கள், படங்கள் வரையப்பட்டனவாகத் தெரியவில்லை. சித்தர்கள் ராஜாக்களையாவது மற்றப் பிரபுக்களையாவது அண்டியிருந்ததாகத் தெரியவில்லை; அவர்கள் தங்கள் வித்தையைப் பக்குவம் வந்த நெருங்கிய சிஷ்யர்களுக்கே அறிவித்து வந்தனர். அவர்களில் ஒருவர் போகர் என்பார் கி. பி. 300-ல் சீனுவிலிருந்து இந்தியாவுக்கு வந்து பல நூல்களையும் கற்று, தமக்குத் தெரிந்த வித்தைகளைத் தமிழருக்கும் கற்பித்து, பின்னர் மெக்கா, ஈஜிப்டு முதலிய தேசங்களுக்குச் சென்று அங்கும் ஜாலவித்தை முதலியவைகளைச் சிலருக்குப் போதித்துப் பிறகு தமது

தேசம் சென்று சீனபாஷையில் பல வைத்தியவாத சாத்திரங்களை மொழிபெயர்த்தனர் என்ற ஒரு வதந்தி உளது. இஃது ஆராயற்பாலது. ஏனெனின் சமீபத்தில் ''சீனரஸவாதம்'' என்ற விஷயத்தைப்பற்றி மேனாட்டு அறிஞர்கள் ''நேச்சர்'' என்ற வாரப்பத்திரிகையில் சர்ச்சை செய்து சீனாவில் இரஸவாதம் பௌத்தர்களால் கி. பி. மூன்றும் நூற்றாண்டளவில் பரப்பப்பட்டிருக்கலாமென்று ஊகித்து எழுதியுள்ளார்கள். நமது தமிழ்நாட்டில் கி.மு. 100 முதல் கி. பி. 800 வரை பௌத்தர்கள் பலர் மேன்மையுடன் விளங்கினார்களென்பது தமிழாராய்ச்சியால் கண்ட விஷயம். வடஇந்தியாவிலிருந்து தெற்கில் குடியேறிய பௌத்தர்கள் தம்மறிவையும் தமிழ் நாட்டில் விளங்கிய அறிவையும் கலந்து தமிழ் நூல்கள் பல இயற்றல் சாத்தியமானதே. பிறகு அவர்கள், சீனா, அரேபியா, பெர்ஷியா முதலிய இடங்களுக்குச் சென்று இரஸவாதப் பிரசாரம் செய்திருத்தலும் கூடும்.

இரஸவாதிகள் எல்லாரும் எல்லா நாடுகளிலும் ஜனங்களின் வியாதிகளை நிதானித்துச் சிகிச்சை செய்வதில் நிபுணத்துவம் அடைவதோடு இரஸவாதக் கலையையும் கற்றுவந்தனர். அவர்களுடைய முக்கிய நோக்கங்கள் மூன்று ; அவையாவன : இறப்பைத்தவிர்த்தல், என்றும் இளமையுடனிருத்தல், பொருள் நனிகுவித்தல் என்பனவே. இந்நோக்கங்களில் சித்திபெறுவதற்குப் பலவழிகளைப் பின்பற்றினர். அமிர்தம் கிடைத்தால் சாவை அகற்றி இளமையை யடையலாம்; ஸ்பர்சவேதி மணியைப் பெற்றால் பல தாழ்ந்த லோகங்களையும் உயரிய லோகங்களாக மாற்றிப் பொன் வெள்ளியை அடையலாம். ஆகவே அமிர்தத்தையும் ஸ்பர்சவேதிமணியையும் அடைய அவர்கள் பட்ட பாடுகளுக்குக் கணக்குக் கிடையாது. அவர்கள் வலையில் சிக்காத பிரமுகர்களும் ராஜாக்களும் இல்லை. ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய இரண்டாவது ருடல்பும், பிரஷியமன்னர்களாகிய முதல் இரண்டாம் பிரடெரிக்குகளும், பிரான்ஸ்மன்னர்களாகிய மூன்றும் பெர்டினண்டும் முதலாம் லெப்போல்டும், ஆங்கிலநாட்டு ஆறும் ஹென்றியும் நாலாம் எட்வர்டும் எலிஸபெத் அரசியும், ஸ்வீடன் தேசத்துப்பன்னிரண்டாம் ஜார்ஜும், டென்மார்க் தேசத்து நாலாம் கிரிஸ்டியனும் தங்கள் தங்கள் சமஸ்தானங்களில் பல பல இரஸவாதிகளைத் தங்கள் கஜானாவில் அபரிமிதமாகப் பணக்குவியல்களைச் சேர்க்கும் எண்ணத்துடன் ஆதரித்துவந்தனர். மெல்ல மெல்ல அவர்களது பாசாங்குகளும் வெளியாயின. அவர்கள் உண்மையில் தங்கத்தைச் செய்யமுடியாதபோதிலும் பொன் மதிப்புப்பெற்ற பல உபயோகமான பொருள்களைச் சேகரிப்பதில் நிபுணர்களாய்விட்டனர். அவர்

களை ஆதரித்த பிரபுக்களுக்கும் அரசர்களுக்கும் பொன்னே குறியாதலின், அப் பொன்னைச் செய்துதர முடியாது தவித்த இரஸவாதிகள் பலவாறு தண்டிக்கப்பட்டனர்; சிலர் மரணதண்டனையுமடைந்தனர். பிரன்ஸ்விக் மன்னர் 1575-ல் ஓர் இரஸவாதிப் பெண்மணியை எரித்தார்; பவேரியா மன்னர் 1590-ல் பிரகாடினோ என்ற இரஸவாதியைத் தூக்கில் போட்டார்; டேன்மார்க் அரசர் மூன்றும் பிரடெரிக், பொரி என்ற இரஸவாதியைப் பல ஆண்டுகள் சிறையில் அடைத்தார்; சிறையிலே அவன் 1695-ல் செத்தான். "இரஸத்தைக் கட்டும் வித்தை எனக்கு ஒருகாலத்தில் தெரிந்தது; இன்று என்னைக் கட்டின வித்தை தெரிந்தது" என்று ஓர் இரஸவாதி தூக்கிலிடப்பட்டபோது சொன்னான். ஜேம்ஸ் பிரைஸ், *F. R. S.*, தன் சரக்கு வெளுத்ததை நினைந்து வருந்தித் தற்கொலை செய்துகொண்டான். இம்மாதிரியாக இரஸவாதவித்தை சூதும் வாதும் நிறைந்தது என்று ருசுவாயிற்று. பேகன்பிரபு, "இரஸவாத வித்தையை, தனது திராக்ஷைத் தோட்டத்தில் வெகுதூரம் பூமிக்குக்கீழே தங்கம் புதைத்து வைத்திருக்கிறேன் என்று தனது புதல்வருக்குச் சொல்லிய ஒரு கிழவனுக்கு ஒப்பிடலாம்; பூமியைத் தோண்டிப்பார்த்த புதல்வர்களுக்குத் தங்கம் அகப்படாமற்போனாலும் அவர்கள் மெய்விதிர்க்கச் செய்த வேலைக்குத் தகுந்த கூலியாக அபரிமிதமாகத் திராக்ஷை மாசூல் பெற்று அவைகளை விற்றதனால் தங்கம் நிறையக் கிடைத்தது. அதுபோலத் தங்கத்தைத்தேடிய இரஸவாதிகளின் உழைப்பின் மூலமாய் நமக்குப் பல அரிய பொருள்களும் விஷயங்களும் கிடைத்திருக்கின்றன" என்று எழுதியுள்ளார். ஆகவே இரஸவாதத்தின் அசாதாரணத்துவம் வெளியாயிற்று.

(தொடரும்)

சரித்திரம்

பாஹியன் யாத்திரை வரலாறு

ஜி. தாத்தாச்சாரி

(428-ம் பக்கத்தொடர்ச்சி)

நான்காவது மாதத்திய ரதோத்ஸவத்திற்குப் பிறகு, யாத்திரிகர்களில் ஒருவரான ஸங்-ஷௌ, ஒரு தார்த்தாரிய (ஹூ) யாத்திரிகனோடு சேர்ந்து கி-பின் தேசத்தை நோக்கிப் புறப்பட்டுப்போனார். பா-ஹியனும் மற்றவர்களும் த்ஸியூ-ஹோ தேசத்தை நோக்கிச் சென்றனர். மார்க்கத்தில் இவர்கள் இருபத்தைந்து நாட்கள் இருந்த பிறகு இந்த ராஜ்யத்தை அடைந்தனர். தேசத்தின் அரசன் (பக்தியில்) சிரத்தையுள்ளவனாக இருக்கிறான். முக்கியமாக மஹாயானத்தைச் சேர்ந்த பிக்ஷுக்கள் ஆயிரவருக்கு மேலாக இருக்கின்றனர். இவர்கள் இங்குப் பதினைந்து நாள்கள் தங்கிய பிறகு தெற்கு நோக்கி நான்கு நாட்கள் சென்று த்ஸுங்-லிங் மலையில் பிரவேசித்தனர். யூ-ஹ்வீ என்னுமிடத்துக்கு வந்து அங்கே வர்ஷா காலத்தைக் கழித்தனர். வர்ஷா காலம் முடிவுற்றதும் இவர்கள் மறுபடி புறப்பட்டு இருபத்தைந்து நாட்கள் சென்று கீ-ஷா தேசத்தை யடைந்து அங்கே ஹ்வீ-கிங் என்பவரோடும் மற்றவர்களோடும் ஒன்று சேர்ந்தனர்.

இந்த நாட்டின் அரசன் பஞ்சே-யூஸேயைக் கொண்டாடுகிறான். பஞ்சே யூஸே என்னும் சீன வார்த்தைக்கு ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை நிகழும் (மஹா ஸங்கம்) என்பது பொருள். அந்தப் பரிஷத் மஹா ஸங்கம் கூடும் காலத்தில், அவ்வரசன் நான்கு திசைகளிலிருந்தும் ச்ரமணர்களை வரவழைக்கிறான். அவர்கள் மேகங்கள் போல வந்து கூடுகின்றனர். அவர்கள் கூடியதும் அவ்வரசன் தர்ம மண்டபத்தை அலங்காரஞ் செய்விக்கிறான். பட்டுக் கொடிகளைத் தொங்கவிட்டு மேல் விதானங்களை விரிக்கின்றனர். பொன்னாலும் வெள்ளியாலும் தாமரைப் பூக்களைச் செய்கின்றனர். ஸிம்மாசனத்தின் பின்னால் பட்டு வஸ்திரத்தை விரித்துத் தர்மோபதேசகர்களுடைய ஆஸ்தானங்களுக்கு வேண்டிய எடுபிடிகளையும் வரிசைப்படுத்துகின்றனர். பொதுவாக வஸந்த காலத்தில்

அரசனும் அரசனுடைய மந்திரிமார்களும் ஒன்று, இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரையில் தங்கள் தங்களுடைய தானங்களை வழங்குகின்றனர். அரசன் கூட்டிய பரிஷத் முடிவு பெற்றதும் அவன் தன்னுடைய மந்திரிமார்களை அவரவர்களுடைய தானங்களை வழங்கும்படி பின்னும் சொல்லுகிறான். அவர்கள் ஒன்று இரண்டு மூன்று அல்லது ஐந்து நாள்கள் வரையில் தங்களுடைய தானங்களை வழங்குகின்றனர். தானங்கள் வழங்கப்பட்ட பிறகு அவ்வரசன், தூதவர் தலைவரிடத்திலிருந்தும் நாட்டின் பிரதான மந்திரிமார்களிடத்திலிருந்தும் தான் ஏறுவதற்கான குதிரையைச் சேணம் கடிவாளம் ஆகியவைகளுடன் பெற்று அதன் மீது ஏறிக்கொள்கிறான். பிறகு ச்ரமணர்களுக்கு வேண்டிய பொருள்களையும் வெண்பட்டுகளையும் அநேக விதமான ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டு அவைகளை யெல்லாம் ச்ரமணர்களுக்கு வழங்கிவிடப் போவதாகத் தன் மந்திரிமார்களுடன் பிரதிஞ்ஞை செய்கிறான். அவைகளை அப்படியே கொடுத்த பிறகு ச்ரமணர்களிடமிருந்து அப்பொருள்களை யெல்லாம் விலை கொடுத்துப் பெற்றுக்கொள்கிறான்.

அந்த நாடு குன்றடர்ந்ததாயும் குளிர் உள்ளதாயும் இருக்கிறது. கோதுமை மட்டுந்தான் விளைகிறது. மற்றத் தானியம் ஒன்றும் உற்பத்தியாவதில்லை. பிக்ஷுக்கள் தங்களுக்கு வேண்டிய வருஷவாரிப் பொருள்களைப் பெற்ற பிறகு காலைவேளைகளில் பனி மூடியிருக்குமாதலால் வருஷந்தோறும் கோதுமைக் கதிர் முதிர்ந்த பின்னரே பிக்ஷுக்கள் தங்களுடைய வருஷவாரிப் பொருள்களைப் பெற வேண்டுமென்று அரசன் நிர்ப்பந்திக்கிறான். அந்த நாட்டில் புத்த பகவானுடைய கற் காளாஞ்சி ஒன்றுள்ளது. அஃது அவருடைய பிக்ஷாபாத்திரத்தைப் போன்ற நிறமுள்ளது. புத்த பகவானுடைய பல் ஒன்றும் அங்குள்ளது. இந்தப் பல் காரணமாக அந்நாட்டு ஜனங்கள் ஒரு ஸ்தூபம் கட்டியிருக்கின்றனர். ஹீனயான மார்க்கத்தைப் பின்பற்றி ஆயிரத்துக்கு அதிகமான பிக்ஷுக்கள் இருக்கின்றனர். மலைகளுக்குக் கிழக்கேயுள்ள சாதாரண ஜனங்கள் சீனதேசத்தினரைப் போலத் தாழ்ந்த பொருள்களாலான வஸ்திரங்களை உடுத்தியிருக்கின்றனர். ஆனால் உரோம ஸம்பந்தமான ஆடைகளில் வித்தியாசங்கள் உள்ளன. ச்ரமணர்களுடைய வைதிகக்கிரியைகள் எல்லாம் எழுத்தில் அடங்காதபடி பல வகைப்பட்டுப் பெருகியுள்ளன. அந்த நாடு த்ஸுங்-லிங் மலைத் தொடரின் மத்தியில் உள்ளது. த்ஸுங்-லிங் மலைக்கு அப்பால் தொடங்கி மூங்கில் மாதுளை கரும்பு இவைகளைத் தவிர மற்றச் செடிகள், மரங்

கள், பழங்கள் எல்லாம் (முன்னம் கண்டவைவையைவிட) வேறாகவே யிருக்கின்றன.

அங்கிருந்து வடஇந்தியாவை நோக்கிப் புறப்பட்டுப் போகையில் ஒரு மாத காலம் மார்க்கத்திலிருந்த பிறகு த்ஸுங்-லிங் மலையைத் தாண்டிச் சென்றோம். த்ஸுங்-லிங் மலையில் கோடைக் காலத்திலும் மாரிக்காலத்திலும் பனி இருக்கிறது. பின்னும், அங்கு விஷ நாகங்கள் உள்ளன. அவைகளுக்குக் கொடிய எண்ணம் உண்டாகும்போது விஷம் காற்று மழை பனி மணல் கல் இவைகளை உமிழ்கின்றன. பதினாயிரவரில் ஒருவர்கூட இந்த ஆபத்துக்களுக்கு தப்புவதில்லை. அந்த நாட்டு ஜனங்களும் பனிமலை ஜனங்கள் எனப் படுகின்றனர். த்ஸுங்-லிங் மலையைத்தாண்டி நாங்கள் வடஇந்தியாவை அடைந்தோம். எல்லைப் புறத்தில் நுழைந்ததும் தோ-லி என்ற ஒரு சிறு நாடு உள்ளது. அங்கும் ஹீனயான மார்க்கத்தைப் பின்பற்றிய பிக்ஷுக்கள் சிலர் இருக்கின்றனர். முற்காலத்தில் இந்த நாட்டில் ஓர் அர்ஹத் இருந்தார். மைத்ரேய புத்தரின் பருமை, நிறம், சாயல் இவைகளைக் கவனித்து வந்து அவரைப் போன்ற ஓர் உருவச்சிலையை மரத்தினால் செய்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் சாமர்த்தியமுள்ள ஒரு தச்சனைத் தமது மந்திர சக்தியினால் அந்த அர்ஹத் துஷித லோகத்துக்கு அழைத்துச் சென்றார். முதலும் கடைசியுமாக அந்தத் தச்சன் மும்முறை ஏறிச் சென்று கவனித்துவந்து மைத்ரேய புத்தரின் உருவச்சிலையைச் செய்து முடித்தான். அதன் உயரம் எண்பது அடி. திரும்பிய கால் எட்டடி நீளம். உபவாச தினங்களில் அஃது எப்போதும் ஒளி வீசிப் பிரகாசிக்கின்றது. சுற்றுப் பக்கங்களிலுள்ள அரசர்கள் அதற்கு வந்தனை வழிபாடுகள் செலுத்துவதில் 'நான், நான்' என்று முந்துகின்றனர். முன்போலவே இப்போதும் அஃது அந்த நாட்டில் இருக்கிறது.

த்ஸுங்-லிங் மலை வழியாகவே இவர்கள் தென்மேற்கு முகமாகப் பதினைந்து நாட்கள் பிரயாணம் செய்தனர். மார்க்கம் எளிதில் கடக்க முடியாததும் குன்றடர்ந்ததுமாக இருந்தது. வழியில் செங்குத்தான பாறைகளும் சிகரங்களும் இருந்தன. மலைப்பக்கம் பதினாயிரம் அடி உயரமாக நின்ற கற்சுவர் என்றே நினைக்கவேண்டியிருந்தது. கீழே குனிந்து பார்த்தால் கண்ணுக்கு ஒன்றும் புலப்படாது. மேல் நோக்கிப்போகலாமென்றாலோ காலை எடுத்து வைப்பதற்கு உறுதியான இடங்கிடையாது. கீழே ஸிந்து-ஹோ என்ற நதி இருக்கிறது. முற்காலத்தில் மார்க்கம் செய்து கொள்வதற்காக மனிதர்கள் கற்பாறைகளைக் குடைந்து பக்க ஏணிகளை விட்டிருக்

கின்றனர். அப்படிப்பட்டவைகள் எல்லாமாகத் தாண்டிச் செல்வ தற்கு எழுநூறு உள்ளன. ஏணிகளைத் தாண்டிச் சென்று தொங்குகின்ற கயிற்றுப் பாலம் ஒன்றின் வழியே நதியைக் கடந்து செல்ல வேண்டும். நதியின் இருகரைகளும் கியூ-யி (ராஜ்ய பூகோளம்) யில் கூறியிருக்கிறபடி எண்பது தப்படிக்குள்ளான தூரத்திலேயே இருக்கின்றன. ஆனால் சங்-கின் கன்-யிங் இவர்களில் ஒருவராவது இங்கு வந்ததில்லை. புத்த பகவானுடைய தர்மோபதேசம் கிழக்குத் தேசங்களில் எப்போது பரவிற்று என்பது தெரிந்து கொள்ளப் பட்டதோ என்பதைப் பாஹியனிடம் பிக்ஷுக்கள் கேட்டனர். அதற்குப் பா-ஹியன், "அந்த தேசத்து ஜனங்களிடம் நான் வினவினேன் ; அவர்கள் அனைவரும் மைத்ரேய போதிஸத்வருடைய விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்த காலமுதற்கொண்டும் அதற்குப் பிறகும் இந்த திக்கு அப்பால் தர்ம விநயத்தை இந்தியாவிலிருந்துவந்த ச்ரமணர்கள் பரவச் செய்தார்கள் என்ற பழைய கர்ணபரம்பரைச் செய்தி இருந்ததாகக்கூறினர்" என்றார். இந்த விக்ரகப் பிரதிஷ்டை புத்த பகவானுடைய நிர்வாணத்துக்குப் பிறகு முந்நூறுக்கு மேலான வருஷங்களுக்கப்பால் சௌ வம்சத்திய பிங்-வங் சக்கரவர்த்தி காலத்தில் நிகழ்ந்தது. இதிலிருந்து பௌத்த தர்மம் பரவியதற்கு இந்த மூர்த்தியே காரணம் என்னலாம். ஆகவே மைத்ரேய மஹா ஸத்வர் சாக்யருடைய தர்மஸந்ததி யில்லாவிட்டால், வேறு யார்தாம் மும்மணிகளை எங்கும் பரவச் செய்து தர்மத்தை எல்லைப்புறத்து ஜனங்களும் அறியும்படி செய்திருக்கக்கூடும்? தர்ம சக்கரத்தின் சுழற்சிக்கு மனிதனுடைய முயற்சி காரணம் அல்லவென்பதை நாம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். அதைப்போல மிங்-தியின் கனவும் இதிலிருந்துதான் உண்டாயிருக்கவேண்டும்.

நதியைத் தாண்டியதும் நாம் வு-சங் என்னும் நாட்டுக்கு வருகிறோம். இந்த வு-சங் நாடே வடஇந்தியாவின் ஆரம்பமாகும். மத்திய இந்தியாவில் வழங்கும் பாஷையையே இங்குள்ளவர் அனைவரும் பேசுகின்றனர். மத்திய தேசம் என்று எதை அவர்கள் சொல்கின்றனரோ அதுதான் மத்திய இந்தியாவாகும். இங்குள்ள ஜனங்களின் உடை உணவு பானம் எல்லாம் மத்திய தேசத்தில் உள்ளவை போலவே இருக்கின்றன. இங்குப் புத்த தர்மம் வெகு பிரபலமாகப் பரவி யிருக்கின்றது. பிக்ஷுக்கள் தங்கி வாழுமிடங்களை இவர்கள் ஸங்காராமங்கள் என்கின்றனர். எல்லாமாக இங்கே ஐந்நூறு ஸங்காராமங்கள் உள்ளன. அவைகள் எல்லாம் ஹீனயான மார்க்கத்தைச் சேர்ந்தவை. அந்நிய பிக்ஷு ஒருவர்

இங்கு வந்தால் அவருக்கு இவர்கள் மூன்று நாள்கள் விசேஷ மான அதிதி ஸத்காரம் செய்கின்றனர். அந்த மூன்று நாள்களும் கழிந்த பிறகு இவர்கள் அந்தப் பிக்ஷுவை சாசுவதமான வேறோர் இடத்தைத் தேடிக்கொள்ளும்படி சொல்லுகின்றனர்.

புத்த பகவான் வடஇந்தியாவுக்கு எழுந்தருளிய காலத்தில் அவர் இந்த நாட்டையும் தரிசித்ததாக ஒருகர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது. இங்கே அவர் தமது திருவடியின் சுவட்டை விட்டுப் போயிருக்கின்றனர். அத்திருவடிச் சுவடு, ஒரு மனிதனுடைய எண்ணத்துக்கேற்பச் சில சமயம் நீண்டும் சில சமயம் குறுகியுமிருக் கிறது. இப்போதும் அஃது அவ்விதமாகவே உள்ளது. இஃதன்றி யும் கொடிய பாம்பு ஒன்றை அவர் அடக்கியருளின விடத்தில் அவர் தம்முடைய வஸ்திரத்தை உலரப்போட்ட கற்பாறையும் இங்கே இன்னும் இருக்கிறது. அந்தக் கற்பாறையின் உயரம் $1\frac{4}{10}$ சங்; அதன் குறுக்களவு இரண்டு சங்குக்கு மேலாகும். அதன் ஒரு பக்கம் வழவழப்பாக இருக்கிறது. யாத்திரிகர்களில் மூவரான ஹ்வீ-கிங், தவோ-சிங், ஹ்வி-தா என்பவர்கள் புத்த பகவானுடைய நிழலையும் நகரஹாரத்தையும் காண உத்தேசங்கொண்டு முன்னோக்கிப் புறப் பட்டுச் சென்றனர். பா-ஹியனும் மற்றையவர்களும் மழைக் காலத்தில் இந்த நாட்டிலேயே இருந்தனர். அந்த மழைக்காலம் நீங்கியவுடன் அவர்கள் தெற்கே திரும்பி ஸூ-ஹோ-தோ (ஸ்வாத்) என்னும் நாட்டை நோக்கிச் சென்றனர்.

இந்த நாட்டிலும் புத்த தர்மம் பிரபலமாகப் பரவியிருக்கிறது. முன்னொரு காலத்தில் தேவர்களுக்கு அரசனான சக்ரன் புத்த பக வானைப் பரீக்ஷிக்க வேண்டி ஒரு பருந்தையும் புறாவையும் மாயையால் உண்டாக்கியபோது, அவர் அந்தப் புறாவை ரக்ஷிப்பதற்காகத் தமது சரீரத்தை அரிந்த இடம் இதுவாம். ஞானோதயம் பெற்ற பின்னர் புத்த பகவான் தமது சிஷ்யர்களுடன் இங்குச் சென்ற சமயத்தில், "முன்னொரு பிறவியில் புறாவை ரக்ஷிப்பதற்காக எனது சரீரத்தை அரிந்து கொடுத்த இடம் இஃது" என்றனராம். இவ்விஷயத்தைத் தெரிந்து கொண்ட இந்த நாட்டு ஜனங்கள் அந்த இடத்தில் ஒரு ஸ்தூபத்தை எழுப்பி அதைப் பொன்னாலும் வெள்ளியாலும் அலங் காரம் செய்தனர்.

இங்கிருந்து கிழக்கு நோக்கி இறங்கி ஐந்து நாள்கள் பிரயா ணம் செய்து காந்தாரம் என்ற நாட்டை அடைந்தோம். அசோக மகாராஜனுடைய குமாரரான தர்மவர்த்தனர் ஆண்டுவந்த பிர தேசம் இதுவாம். இந்த நாட்டில்தான் புத்த பகவான் தாம்

போதிஸத்வராக இருந்த காலத்தில் ஒரு மனிதனின்பொருட்டுத் தமது கண்களைத் தியாகம் செய்தனர். அந்த இடத்திலும் ஜனங்கள் ஒரு பெரிய ஸ்தூபத்தை எழுப்பி அதைப் பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரித்திருக்கின்றனர். இந்த நாட்டு ஜனங்கள் பெரும்பாலும் ஹீனயான ஆகமங்களையே கற்கின்றனர்.

இங்கிருந்து கிழக்கே ஏழுநாள் பிரயாணத்தில் சு-சா-ஷி-லோ (தக்ஷசிலா) என்னும் தேசம் இருக்கிறது. சு-சா-ஷி-லோ என்னும் சீன பதங்களுக்கு "வெட்டப்பட்டதலை" என்பது பொருள். புத்த பகவான் தாம் போதிஸத்வராக இருந்த காலத்தில் இங்கிருந்த ஒரு மனிதன்பொருட்டுத் தமது தலையைக் கொடுத்த காரணத்தால் இதற்கு இப்பெயர் வந்தது. மறுபடியும் கிழக்கே இரண்டு நாள் பயணம் சென்று பசியினால் வருந்திய ஒரு பெண்புலிக்குப் புத்த பகவான் தமது சரீரத்தைக் கொடுத்த இடத்தை யடைந்தோம். இவ்விரண்டு இடங்களிலும் ஒவ்வொரு விதமான விலையுயர்ந்த ரத்னத்தால் அலங்கரிக்கப்பட்ட பெரிய ஸ்தூபங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அருகிலுள்ள நாடுகளின் அரசர்களும் மந்திரிகளும் மற்றுமுள்ள ஜனங்களும் இங்கு இடைவிடாது புஷ்பங்களைத் தூவி, தீபங்களை ஏற்றிக் காணிக்கைகளைச் செலுத்துவதில் ஒருவரோடொருவர் போட்டி போடுகின்றனர். இவைகளையும் இதற்கு முன்னர் பிரஸ்தாபித்த இரண்டு ஸ்தூபங்களையும் சேர்த்து இந்நாட்டு ஜனங்கள் "நான்கு பெரிய ஸ்தூபங்கள்" என்கின்றனர்.

காந்தார நாட்டிலிருந்து தெற்கு நோக்கி நான்கு நாள் பயணம் சென்று போ-லு-ஷா (புருஷபுரம்—பிஷாவர்) என்னும் நாட்டை அடைந்தோம். முன்னொரு காலத்தில் புத்தபகவான் சிஷ்யர்களுடன் இங்குமங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது, இந்த நாட்டுக்கு வந்து, ஆனந்தரை நோக்கி, "பரிநிர்வாணத்துக்குப் பிறகு கி-னி-கி-யா (கனிகா-கனிஷ்கா) என்னும் பெயருள்ள அரசன் ஒருவன் இவ்விடத்தில் ஒரு ஸ்தூபம் எழுப்புவான்" என்றார். கனிஷ்கா அரசன் பிறந்த பின்னர் அவன் ஒரு சமயம் தனது நாட்டைச் சுற்றி வருவதற்காகப் புறப்பட்டான். அப்போது தேவர்களுக்கு அரசனான சக்ரன், தனது எண்ணத்தைத் தெரிவிக்கவேண்டி ஒரு இடைப்பையன் உருவத்தை எடுத்துக்கொண்டு சாலையின் பக்கத்தில் ஒரு ஸ்தூபத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். அந்த வழியாகச் சென்ற அரசன் இடைப்பையனை நோக்கி, "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். "புத்த தேவருக்கு ஒரு ஸ்தூபம் எழுப்பிக்கொண்டிருக்கிறேன்" என்று அவன் விடைகூறினான். அரசன், "நல்லது" என்று சொல்லிவிட்டு அந்தப் பையன்

கட்டிக்கொண்டிருந்த ஸ்தூபத்தின் மீது வேறொரு ஸ்தூபத்தை எழுப்பினான். அது நாற்பது சங்குக்கு மேற்பட்ட உயரமாயும் விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் இருந்தது. யாத்திரிகர்கள் பார்க்கக்கூடிய ஸ்தூபங்கள் விஹாரங்கள் எல்லாவற்றிலும் அழகிலும் உறுதியிலும் இதற்கு இணையானது வேறொன்றும் இருந்ததில்லை. ஜம்பூத்வீபத்தில் இதுதான் எல்லாவற்றையுங் காட்டிலும் உன்னதமான ஸ்தூபம் என்று கர்ணபரம்பரைச் செய்தி கூறும். அரசன் இந்த ஸ்தூபத்தைக் கட்டி முடித்தவுடன் (இடைப்பையன் எழுப்பிய) சிறிய ஸ்தூபமானது பெரிய ஸ்தூபத்துக்குத் தென்பாரிசத்தில் அதைக்காட்டிலும் மூன்றடி அதிக உயரமுள்ளதாய் வெளிவந்தது.

புத்த பகவானுடைய பிக்ஷாபாத்ரம் இன்னும் இந்த நாட்டில் இருக்கிறது. யூ-சி அரசன் ஒருவன் முன்னொருகால் அந்தப் பிக்ஷாபாத்ரத்தைக் கைப்பற்றிப்போக எண்ணி, சேனையுடன் வந்து இந்த நாட்டைத் தாக்கினான். நாட்டை ஜயித்த பிறகு, அவ்வரசன் புத்த தர்மத்தை மிகவும் பாராட்டி, அந்தப் பிக்ஷாபாத்ரத்தை எடுத்துக் கொண்டுபோக நினைத்தான். ஆகவே அவன் தனது வழிபாடுகளைச் செய்யத் தொடங்கினான். மும்மணிகளுக்கும் உரித்தான வழிபாடுகளை இயற்றிய பின்னர், அவன் ஒரு பெரிய யானையை அலங்கரித்து அதன் மீது அந்தப் பிக்ஷாபாத்ரத்தை ஏற்றிவைத்தான். உடனே அந்த யானை கீழேவிழுந்து அப்பால் நகரமாட்டாமல் போயிற்று. பிறகு அவ்வரசன் நான்கு சக்ரங்கள் கொண்ட சகடம் ஒன்றைச் செய்வித்து அதன் மீது அந்தப் பிக்ஷாபாத்ரத்தை ஏற்றிவைத்தான். அந்தச் சகடத்தை இழுப்பதற்காக எட்டு யானைகளை அதில் பூட்டினான். என்றாலும் அவைகள் கொஞ்சமேனும் நகரச் சக்தியற்றவையாயின. அப்பால் அந்த அரசன் தனக்கும் அந்தப் பிக்ஷாபாத்ரத்துக்கும் உள்ள சம்பந்த காலம் இன்னும் வரவில்லை என்பதைத் தெரிந்து கொண்டான். ஆகவே துக்கமும் வெட்கமும் மேலிட்டவனாய் அவ்விடத்தில் ஒரு ஸ்தூபத்தையும் ஒரு ஸங்காராமத்தையும் நிர்மாணம் செய்தான். அன்றியும் அங்கு ஒவ்வொரு விதமான வழிபாடும் செவ்வனே நடைபெறுவதைக் கவனிப்பதற்காகக் காவலாளர்களை நியமித்து வைத்துவிட்டுச் சென்றான்.

அங்குச் சுமார் எழுநூறு பிக்ஷுக்கள் இருக்கின்றனர். மத்தியான்ன வேளை வந்ததும் பிக்ஷுக்கள் அந்தப் பாத்ரத்தை வெளியே கொண்டுவந்து, உபாஸகர்களுடன் அதற்கு எல்லாவிதமான

வழிபாடுகளையும் செய்கின்றனர். பிறகு அவர்கள் மத்தியான்ன வேளைப் போஜனம் செய்கிறார்கள். சாயங்கால வேளைகளில் தூபங் காட்டும்போதும் இதைப் போலவே செய்கின்றனர். அந்தப் பிக்ஷா பாத்ரம் இரண்டு சிறங்கைக்குக் கொஞ்சம் அதிகமாகவே பிடிக்கும் அளவுள்ளது. முழுவதும் அது கறுப்பாக இருந்தாலும் கலப்பு நிறமுள்ளதேயாம். அதன் நான்கு பகுதிகளும் வெகு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் பத்தில் இரண்டு பங்கு கொண்டதாம். அது பளப்பளப்பாய்ப் பிரகாசிக்கிறது. ஏழை ஜனங்கள் சில புஷ்பங்களை அதில் தூவுவார்களானால் அது நிறைந்துவிடும். ஆனால் மிகுதியான புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனை செய்ய வெண்ணுகிற செல்வவான்கள் விஷயத்திலோ அவர்கள்எத்தனை கோடிச் சிறங்கைப் புஷ்பங்களை அதில் கொட்டி னாலும் முடிவில் அதை நிரம்பச்செய்ய முடியாது போகின்றனர்.

பவோ-யுன் என்பவரும் ஸங்-கிங் என்பவரும் மட்டுமே இந்தப் பிக்ஷாபாத்ரத்துக்கு வழிபாடு செய்துவிட்டுத் திரும்பிப் போயினர். ஹ்வீ-கிங் ஹ்வீ-தா தவோ-சிங் என்பவர்கள் புத்த பகவானுடைய சாயை பல் மண்டையோடு இவைகளுக்கு வழிபாடு இயற்றுவதற் காக முன்னதாக நகரஹார நாட்டுக்குச் சென்றிருந்தனர். ஹ்வீ-கிங்குக்கு உடம்பு குணமில்லாது போயிற்று. ஆகவே அவருக்குப் பணிவிடை செய்யும்பொருட்டு தவோ-சிங் அங்கே தங்கிவிட்டார். ஹ்வீ-தா என்பவர் மட்டும் போ-லு-ஷாவுக்குத் திரும்பிச் சென்று மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டார். பிறகு, ஹ்வீ-தா, பவோ-யுன், ஸங்-கிங் என்பவர்கள் சீன தேசத்துக்குத் திரும்பிப் போய் விட்டனர். புத்த பகவானுடைய பிக்ஷாபாத்ரம் வைக்கப்பட்டிருந்த விஹாரத்தில் தங்கிய ஹ்வீ-கிங் இங்கேயே இறந்து விட்டனர். அதன்பிறகு பா-ஹியன் மட்டுமே புத்த பகவானுடைய மண்டை யோடு வைக்கப்பட்டிருக்குமிடத்துக்குச் சென்றனர்.

பண்டைத் தமிழரசர்கள்

ஊ. சா. வேங்கடராம ஐயர்

முன்னுரை

தமிழ் மொழியிலே பல சிறந்த நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்து நூல்களும் பல. அந்த நூல்களிலே அக்காலத்தில் அரசாண்ட பல தமிழரசர்களின் வரலாறுகள் ஆங்காங்குக் குறிப்பாக வரையப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் தொகுத்து நோக்கிற் பண்டைத் தமிழரசர்களின் சிறப்பியல்புகளையும், ஆட்சிமுறை முதலிய பிறவற்றையும் ஓராற்றால் அறியலாம். இங்கு அம்முறையிற் சில கூறப்படுகின்றன.

கொள்கை

தமிழரசர்கள் தங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்துவரும் அரசச் செல்வத்தை விதிக்கடவுளாலே தரப்பட்ட கொடைப் பொருளாகக் கருதி வந்தார்கள்; தம் கீழ்வாழும் குடிகளை இனிது காக்கும் ஆற்றலிராதிருப்பின் அது தமக்குப் பெரும் பாரமானதாயிருக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள்; 'அரசர்களிடம் மேலான குணங்கள் நிறைந்திருப்பின் அரசாட்சி மிகவும் எளிதாயிருக்கும்' என்பதிலும், 'அரசர் குடிகள் பழிதூற்றக்கூடிய கொடுங்கோலராக இருத்தல் கூடாது' என்பதிலும் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார்கள்; அருளும் அன்பும் நிறைந்த பெரியோர்களது சேர்க்கையையே பெற்று வந்தார்கள்; தங்களுடைய முன்னோர்கள் பின்பற்றிவந்த நீதி நூல்களையும், பிற அறிவு நூல்களையும் கற்று வந்தார்கள்; புலவர்களால் பாடப்படுவதைப் புகழாகவும், பாடப்படாமையைப் பழியாகவும் கருதி வந்தார்கள்; இவற்றோடு படைக்கலப் பயிற்சி முதலியவற்றிலும் தலைசிறந்து விளங்கினார்கள்.

பொழுது போக்கு

அவர்கள் நல்லறிவாளர்களது சேர்க்கையைப் பெற்றிருந்தமையால் சபையிலே பேசப்பெறும் அரிய பெரிய விஷயங்களையும் அறியவல்ல புத்தி சக்திகளையுடையவர்களாகவும், விரைவிலே

முடிக்கவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதிலே சோம்பலில்லாதவர்களாகவும் இருந்தார்கள்; தம் கீழ்வாழும் குடிகளுக்கும் "விட்டில் கிளி நால்வாய் வேற்றரசு தன்னரசு, நஷ்டம் பெரும் பெயல் காற்று" முதலிய எவ்வகைத் துன்பமும் உண்டாகாவண்ணம் அவர்களை உயிர்போலக் காத்து வந்ததுடன் அவர்களிடம் சந்திரன் போன்ற கருணையும், மேகம்போன்ற தண்மையும் உள்ளவர்களாகவும் இருந்து வந்தார்கள்; சிறிதும் காலத்தை வீணுக்காமல் ஒவ்வொரு நாளிலும் பகற்பொழுதை மூன்று பாகங்களாகப் பகுத்துக்கொண்டு முதற் பத்து நாழிகைகளைப் பெரியோர்பாற் பல வகைப்பட்ட அறவுரைகளைக் கேட்பதிலும், இடைப் பத்து நாழிகைகளைத் தம்மைக் காணவந்த பரிசிலர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தல் விருந்தினர் சுற்றத்தார் முதலியவர்களுடன் உண்ணல் ஆதியவற்றைச் செய்வதிலும், கடைப்பத்து நாழிகைகளை மந்திரி முதலானவர்களுடன் ஆட்சிபற்றிய ஆலோசனைகளைச் செய்வதிலும் போக்கிவந்தார்கள்; நியாய முரசு, கொடை முரசு, வெற்றி முரசு என்ற மூன்று வகை முரசங்களால் தங்களுடைய செய்கைகளைக் குடிமக்களுக்கு அறிவித்துவந்தார்கள்.

மந்திராலோசனை

அவர்கள், பால் தனது இனிப்புமாறிப் புளிப்பினும், சூரியன் தனது ஒளிமாறி இருளினும், நான்கு வேதங்களின் ஒழுக்கம் வேறுபடினும் தங்களது இயற்கை அறிவினின்று சிறிதும் வேறு படாதவர்களும், அரசன் தவறி நடக்கும் காலத்தில்—அவன் தம்மை நன்கு மதிப்பதற்காக—அவன் சொல்வதையே சரி சரி என்று கூறித் தங்களுடைய கடைமையை மறந்து கைசோரவிடாமல் அப்பொழுதே அவனுடைய தவறுபாட்டை எடுத்துக்காட்டி இடித்துரைத்து அவனைத் திருத்தக்கூடியவர்களும், முக்காலங்களையும் முன்னர் உணர்ந்து நன்கு ஆராய்ந்து உறுதிபயப்பவற்றையே கூறுகின்றவர்களும், நால்வகை உபாயங்களையும் இடமறிந்து காலமறிந்து உபயோகப்படுத்தும் சதுரர்களும் ஆகிய உத்தம மந்திரிமார்கள் என்ற அறிவுடைச் சுற்றத்தார்களைப் பெற்றிருந்தார்கள்; பிற இன்றியமையாத படை, குடி, கூழ், நட்பு, அரண் ஆகிய ஐவகை உறுப்புக்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள்; இவற்றோடு மந்திரிமார், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத் தலைவர், இவுளிமறவர், யானைவீரர் என்ற வகையினர் கூடிய எண்பேராயம் என்ற சிறப்புவாய்ந்த இக்காலச் சட்டசபைபோன்ற ஓர் ஆலோசனைச் சபையையும், மந்திரிமார், புரோகிதர், ஒற்றர், சேனு

பதியர், தூதர் ஆகிய ஐந்து வகையினர் கூடிய ஐம்பெருங்குழு என்ற சிறப்பினையுடைய இக்கால நிர்வாக சபைபோன்ற ஓர் அதிகார சபையையும் பெற்றிருந்தார்கள்.

நியாயம் வழங்கல்

இவ்வாறு தெளிந்த அறிவுடன் தக்க ஆராய்ச்சியாளர்களாகிய பெரியோர்களோடு கலந்து யோசனை செய்தே நாட்டை ஆண்டு வந்தார்களாதலின், அவர்கள் தங்களது நாட்டிலுள்ளோர் எவ்வகைத் துன்பமும் இன்றி இனிது வாழ்வதற்காகவும், செங்கோல் கோடாது நீதி வழங்குவதற்காகவும் தம்மிடம் வந்து குறைகளைக் கூறி முறையிட்டுக்கொள்வோர் அனைவர்க்கும் எளிதிலே காட்சி கொடுத்து வந்தார்கள்; அவர்களோடு அளவளாவி இனிமையாகப் பேசிக் கூறுவனவற்றை முற்றுங் கேட்டுத் தீர ஆராய்ந்து தக்கவாறு நியாயம் வழங்கி வந்தார்கள். மேலும், நியாயம் வழங்கும் முறையில் அவர்கள் வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களைக் கவனிப்பதில்லை; 'இவர் நம்மைச் சேர்ந்தவர் ஆதலின் இவரை எப்படியாவது மன்னித்தல் வேண்டும்; இவர் புறம்பானவர் ஆதலின் இவரை எங்ஙனமேனும் தண்டித்தல்வேண்டும்' என்று எண்ணிக் கோல் கோணுமாறும் நடப்பதில்லை; யாண்டும் நடுவு நிலைமை தவறாது நீதியையே வழங்கி வந்தார்கள். ஓர் அரசன் எதிர்பாராமல் தானே தேர்க்காலிடைப் புகுந்து இறந்துபோன கன்றிற்கு இரங்கும் தாய்ப்பசுவின் நிலைமையைக் கண்டு அத்தேரிலிருந்த தனது ஒரே மகனைத் தேர்க்காலிடைக் கிடத்தி அரைக்கலுற்றான். ஓர் அரசன் தன்னாற் காப்பாற்றப்பட்டு வந்த ஒரு வீட்டை ஏதும் தீங்கு நேரிடாவண்ணம் எச்சரிக்கை செய்தற்பொருட்டுக் கதவைத் தட்டிய குற்றத்திற்காகத் தனது கையை—மந்திரிமார்களின் கருத்துக்குப் பொருந்த—நீதியில் தவறியதாக எண்ணிக் குறைத்துக்கொண்டான். ஓர் அரசன் இழிந்த பொற்கொல்லனது சொல்லைக் கேட்டுக் கோவலன் மாட்டு அநீதி வழங்கியமைக்கு வருந்தி இருந்த சிங்காதனத்திலேயே உயிர் துறந்தான். ஒரு மன்னன் தனது மகன் படிற்றொழுக்கம் காரணமாகப் பிறரால் கொல்லப்பட்டதை நியாயமானதெனக் கருதிச் சிறிதும் வருந்தாதிருந்தான். ஆண்டில் இளையவனான ஓர் அரசன் தன்னைச் சரியாக நீதி வழங்கும் அனுபவம் இல்லாதவன் என வழக்காளர் நினைக்காவண்ணம் நரை முடித்துச் சிங்காதனத்தமர்ந்து இனிது வழக்குத் தீர்த்தான். ஓரரசன் குடிமக்கள் படும் தொல்லைகளை உணர்ந்து வரிப்பொருள்களைத் தள்ளிக் கொடுத்தான். இத்தகைய இன்னும் பல.

சீர்திருத்தம்

இவ்வாறு சிறந்த முறையில் நடுநிலை பிறழாது செங்கோல் செலுத்திவந்த தமிழரசர்கள் தங்களது நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி முதலியவற்றின்பொருட்டுப் பெரிதும் உழைத்து வந்தார்கள்; "உழவினர் கை மடங்கின் உலகமே நிலைத்திராது" என்பது அவர்களது உறுதியான கொள்கை. உழு தொழில் இனிது நடை பெறுவதற்கும், அதனால் அரசாங்கம் சிறப்புறுவதற்கும் போதிய பல முன்னேற்பாடான காரியங்களைச் செய்து வந்தார்கள்; ஆறு, ஏரி, வாய்க்கால் முதலிய வசதிகளையும், அங்ஙனமே அணைக்கட்டுகள், மணற்போக்கிகள் முதலியவற்றையும் வேண்டிய அளவு அமைத்திருந்தார்கள்; நிலங்களை அளந்து மண்ணின் உயர்வு தாழ்வுக்கேற்பத் தரப்படுத்தி யிருந்தார்கள்; திருடர், விலங்கு முதலியவற்றால் இடையூறுகள் நேராமல் காத்துவந்தார்கள்; நாட்டின் இயற்கைப் பொருள்கள் நாட்டிற்கே பயன்படுந் துறைகளில் பலதிறக் கைத்தொழில்களையும் வளர்த்து வந்தார்கள்; நாட்டின் செயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுவதற்கும், வெளிநாடுகளிலேயே கிடைக்கக்கூடிய இன்றியமையாச் சில பொருள்கள் தமது நாட்டினர்க்குக் கிடைத்தற்கும் துணையாகப் பண்டமாற்று முறையை நடத்தி வந்தார்கள்; வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து தங்கவும், தமது நாட்டுக் கப்பல்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும் வசதியாகவும் வழிகாட்டியாகவும் துறைமுகங்களையும், கலங்கரை விளக்கங்களையும், அடையாளக்கொடி முத்திரை முதலியவைகளையும் உபயோகப்படுத்தி வந்தார்கள்; மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற இரு பகுதியினரும் ஓரே இடத்திலே தங்கி உணவு, உடை முதலிய இன்றியமையா வசதிகளைப் பெற்றுத் தமக்கு விருப்பமான மொழிகளைக் கற்கவும் கற்பிக்கவும் சாதனமாயிருக்குமாறு சர்வகலாசாலைகள் எனத்தகும் பல கல்விச் சாலைகளை நடத்திவந்தார்கள்; போக்குவரத்துக்குத் துணையாமாறு பல சாலைகளையும், ஆங்காங்குத் தருமச் சாவடிகளையும், நிழல்தரும் மரங்களையும் அமைத்திருந்தார்கள்; குடிமக்களின் சுகாதாரத்திற்கு இன்றியமையா நீர்நிலை, சிங்காரத்தோட்டம், வைத்தியசாலை முதலிய பல வேறு வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்கள்; பல அறக்கூழ்ச் சாலைகளையும், பொது மண்டபங்களையும் அமைத்து அகதிகளையும் ஆதரித்து வந்தார்கள்.

வரி வசூல்

இத்துணைச் சிறப்புக்களைச் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்த அவர்கள் தங்களுடைய செய்கைகளுக்கு உதவியாகப்

பொருளைச் சேர்ப்பதிலும் கை தேர்ந்திருந்தார்கள். நீரிலே கப்பல்கள் மூலமாகவும், நிலத்திலே வண்டிகள் மூலமாகவும் நடக்கும் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய பண்டமாற்றல்களால் வருகின்ற சுங்கப் பொருள்களையும், வழியற்றவர்கள் அறிவற்றவர்கள் ஆகியவர்களுடைய பொருள்களையும், குடிமக்களுடைய நிலவருவாயிலே ஆறிலொரு பங்கினையும், குறித்த ஓரளவுக்கு மேற்பட்டுக் கிடைக்கும் பூமியின் கீழ் இருந்து எடுக்கப்படும் புதை பொருள்களையும் தங்களுக்குச் சேரவேண்டிய பொருள்களாகக் கருதி வந்தார்கள். இங்ஙனம் தங்களுக்கென வரையறுத்துக்கொண்ட பொருள்களைக் குடிமக்களிடமிருந்து வரி என்ற பெயருடன் பல தண்டலாளர் முதலிய உத்தியோகஸ்தர்களைக்கொண்டு வசூல் செய்துவந்தார்கள். இவ்வாறு வரித்தொகைகளை வசூல் செய்வதில் குடிமக்களுக்கு ஏதும் துன்பம் உண்டாகலாகாது என்பதிலே அவர்கள் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார்கள்; எந்த எந்தக் காலத்தில் எப்படி எப்படி வசூல் செய்வது குடிமக்களுக்கு நன்மையைச் செய்யும் என்பதை முற்கூட்டிப் பொதுஜனங்களுடன் ஆராய்ந்துகொண்டே வசூல் செய்தார்கள். 'நிலத்திற்குரியவர்களிடமே வசூல் செய்ய வேண்டும்' என்பதில் எச்சரிக்கை உடையவர்களாதலின் பத்திரப் பதிவு, பட்டாமாறுதல் முதலிய செய்வதில் தவறுதிருந்தார்கள். "ஒரு மாநிலத்திலே விளைந்த நெல்லை முறைப்படி அறுவடை செய்து சேர்த்தால் அஃது ஒரு யானைக்குப் பலநாள் உணவிற்குப் போதியதாகும். அங்ஙனமின்றி யானையையே நிலத்தில் விட்டுத் தின்னுமாறு செய்தால் அந்த யானையின் வாயிற்புகுந்து உணவாவதிலும் அதன் கால்களாற் கெடுவது மிக அதிகமாகும். வண்டியை ஓட்டுபவன் நேரான வழியிற் செலுத்தாது தவறான வழியில் அந்த வண்டியைச் செலுத்துவானாயின் அந்த வண்டி குறித்த இடம் போய்ச் சேராமல் கெட்டு அழிந்துவிடும்" என்ற உவமைகளை அவர்கள் வரிவசூல் செய்யத் தொடங்குகையில் மறப்பதில்லை. 'தங்களுடைய அரசர்கள், வசூல் செய்யும் வரித்தொகைகளை மீட்டும் தங்களுடைய நன்மைகளின்பொருட்டே செலவு செய்து வருகின்றார்கள்' என்பதை உணர்ந்த குடிமக்கள் 'நீர் நிலைகளிலுள்ள நீர் சூரிய கிரணங்களால் இழுக்கப்பட்டு மேகமாக மாறி மீட்டும் மழையாகி நிறைவதுபோல'த் தாங்கள் செலுத்தும் வரித்தொகை தங்களுக்கே நன்மையாவதால் மகிழ்ச்சியுடன் செலுத்திவந்தார்கள்.

முடிவுரை

இங்ஙனம் ஆட்சி புரியும் அரசர்கள் நாட்டின் நலத்திற்குற்ற செயல்களைச் செய்து மிஞ்சிய பொருள்களைக்கொண்டு அறம்

காரணமாக வறியர் முதலாயினோர்க்கும், பொருள் காரணமாக நால்வகைச் சேனை, பிரிந்தார்ப் பொருத்தல், புணர்ந்தார்ப் பிரித்தல் முதலியவற்றிற்கும், இன்பம் காரணமாக இளமரக்கா, செய்குன்று முதலியவற்றிற்கும் பகிர்ந்து செலவிட்டு 'மறுமையிலே வீடுபேற்றிற்கு உரியவர்' என்று அனைவரும் ஊகிக்கத் துணையாமாறு இம்மை இன்பங்களாகிய அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் பேறுகளையும் குறைவின்றிப் பெற்று இன்புற்று வந்தார்கள். சுருங்கக் கூறின் அவர்களது வாழ்க்கை, "கல்வி தறுகண் இசைமை கொடை எனச், சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" என்ற ஓல்காப் பெருமைத் தொல்காப்பியனாரது கருத்துக்கு முற்றும் பொருந்தியதாக இருந்தது என்பதே போதியதாம்.

உத்தர துருவத்திலிருந்த பூர்விக ஆரியர்கள்

வி. சுப்பிரமணிய ஐயர்

பூர்விகத்தில் இந்தியாவில் வந்து குடியேறின ஆரியர்களின் வாஸஸ்தலம் உத்தர துருவமண்டலம் என்பது ருக்வேத மந்திரங்களின் ஆராய்ச்சினுல் அறியக்கிடக்கின்றது. மந்த்ர த்ரஷ்டாக்களாய் அக்காலத்தில் துருவ மண்டலத்திலிருந்த மகரிஷிகள்-வேத ஆராய்ச்சி செய்ததிலிருந்து-நல்ல வஸதியான பூமிகளை நோக்கிக் கொண்டு தென் திக்குகளிலுள்ள நாடுகளுக்குப் பிரயாணம் செய்து கடைசியில் இந்தியாவில் வந்து குடியேறினுர்களென்று தெரிகிறது. ருக்வேத காலத்து ஆரியர்களைப்பற்றி லோகமான்ய பாலகங்காதர திலகர் செவ்வனே ஆராய்ச்சி செய்து விஷயங்களைப் புஸ்தக ரூபமாய் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டிருக்கிருர். அவரும் தமது புத்தகத்தில் ஆரியர்கள் உத்தர துருவ மண்டலத்தில் சுமார் ஆறுயிரம் வருடங்களுக்கு முன்னுல் வஸித்திருந்தார்கள் என்று கூறி ஆதாரங்காட்டியிருக்கிருர். ருக்வேத மந்திரங்களில் மகரிஷிகள் செய்த ஸ்தோத்திரங்களிலிருந்தும், பூர்விக ஆரியர்கள் எந்த ஸ்தலத்தில் முன்னம் வஸித்திருந்தார்கள் என்பதை ஆராய்ச்சி செய்வோம். உத்தர துருவ மண்டலம் என்னும் பிரதேசம், பனிக்கண்டமாய் வருஷந்தோறும் சுமார் நாலு மாஸம் சூர்ய ரச்மியே தெரியாதிருக்கும் ஸ்தலமாகும். இந்த ஸ்தல நிர்ணயம் செய்வதற்காக மகரிஷிகளின் வேத வாக்கியங்களை ஆராய்ந்தமட்டில், இந்த மகரிஷிகளை உத்தர துருவத்தில் வசித்த மகரிஷிகளென்றும், அந்த ஸ்தலம்விட்டுச் சஞ்சாரம் செய்து வந்த மகரிஷிகளென்றும், இந்தியா வந்து குடியேறின மகரிஷிகளென்றும் மூன்று விதமாகப் பாகுபாடு செய்து கொண்டால், நாமெடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்கு அது தக்க சாதனமாகவிருக்கும்.

உத்தர துருவத்தில் சூரிய ரச்மியேயில்லாமல், ஒரு மாத காலம் எப்போதும் உஷத்காலம் போன்ற ஒளிகளே திருப்பித் திருப்பி வந்து கொண்டிருக்கும். இப்படி இடைவிடாது அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் உஷஸ்களை மகரிஷிகள் வேத

வாக்கினுல் வர்ணித்து ஸ்தோத்திரம் பண்ணுவதிலிருந்து அத்துருவ மண்டலத்தில் இந்த ஒரு மாதகாலத்தின் தன்மை இப்படிப்பட்ட தென விளங்குகிறது. இந்த உஷஸ்களைப் பற்றிய வர்ணனை, யஜுர் வேதத்தில் எங்கும் காணப்படவில்லையாகையால், யஜுர் வேத மந்திரங்கள் பிற்பட்டுக் கண்டு பிடிக்கப்பட்டனவென்றும், ருக்வேதம் சுமார் ஆறுயிரம் வருஷங்கள் முந்தி, உத்தர துருவ மண்டலத்தில் மந்திர த்ரஷ்டாவான மகரிஷிகளால் கண்டுபிடிக்கப்பெற்றனவென்றும் அறியக்கிடக்கின்றது. உத்தர துருவ மண்டலத்திலிருக்கும் போது நாலு மாஸகாலம் இராத்திரி காலமாகவே யிருக்குமாதலால், அக்காலம் அவர்கள் யாதொரு தேவகாரியம் செய்வதற்கும் சாதக மாயிருந்ததில்லை. அங்கேயிருந்த மந்திர த்ரஷ்டாவான மகரிஷி இவ்விரு இராத்திரி பகல் காலங்களை சுக்லம் கிருஷ்ணம் என்ற மொழிகள் கொடுத்து வர்ணிக்கும்போது ஒருகாலம் இருட்டுக் காலம், மற்றென்று பகற்காலம் என்பது தெளிவாயிருக்கின்றது. துருவ மண்டலத்தில் பூர்வ காலத்திலிருந்த மகரிஷிகளின் ருக்வேத மந்திரமொன்றில், ''எங்களுடைய பிரயாணம் நல்லதாகவிருக்கட்டும்'', ''எங்கே சூரியன் உதித்து நல்ல பயிர்களையும் ஆகாரப் பொருள்களையும் உண்டு பண்ணுகிறுனே அந்தப் பிரதேசத்திற்கு எங்களை யழைத்துப் போகட்டும்'' என்று கேட்பதிலிருந்து, உத்தர துருவ மண்டலத்தை விட்டு மகரிஷிகள் சிறந்த இடங்களை நாடிப் பிரயாணமானுர் என்றும், பிரயாண நிலையிலிருந்த மகரிஷியின் வாக்கு ஈதாகும் என்றும் அறியக் கூடியதாயிருக்கின்றது. இப்படிப் பட்ட துருவ மண்டலத்திலிருந்தும் புறப்பட்ட மகரிஷிகள் ஹிரணியஸ்தூபன் என்ற சேனுதிபதியின் ஆதிக்கத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்து போனுர்கள் என்று மற்றொரு ருக்வேத மந்திரம் சொல்லுகின்றது. இவர்கள் பாரஸீகதேசம் செல்லுகையில் இவர்களுக்கும் பாரஸீகருக்கு மிடையில் யுத்தம் நடந்த செய்தியும் மந்திரங்களில் காணப்படுகின்றது. பின்னர், இவர்கள் இந்தியா தேசத்தில் வந்து சேர்ந்தார்களாயினும், வேதமந்திரங்களில் ஹிமாலயபர்வதத்தினைப் பற்றிய வர்ணனையாகிலும், கைலாச சிகரத்தின் வர்ணனையாகிலும் காணப்படவில்லை. ஆனுல், மகமேருகிரியின் முடியினைப்பற்றியும், அதன் மேலுள்ள நீண்ட சக்கிரத்தின் வட்டவடிவமாக ஓடிக்கொண்டிருக்கும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களைப் பற்றியும் விஷயங்கள் காணப்படுவதினின்றும், இன்னும் இப்பொழுதும் ஆரியர்கள் செய்யும் மஹா சங்கல்பங்களிலெல்லாம் 'மேருவின் (உதாரணமாக 'மேரோ: தக்ஷிணே பார்சுவே, சகாப்தே, வர்த்தமானே' என்பது போல) தக்ஷிண பார்சுவத்தில்' என்று சொல்லிக் கொள்வதினின்றும்,

ஆரியர்கள் தாங்கள் பரம்பரையாய் முன்னம் வாழ்ந்து வந்த அந்த ஸ்தலத்தின்மேல் இன்றும் நன்றியறிதல் பாராட்டும் குண முடையவராயும், தாங்கள் முன்னம் வஸித்திருந்த அந்தப் புண்ய ஸ்தல ஞாபக முடையவராயும் அவ்வாறு கூறுகிறுர்களென்று கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும் இந்தக் காலத்தில் சூரியன் வடக்கே போகும் காலமாகிய உத்தராயணத்திற்குத் தேவகாலமென் றும், தெற்கே செல்லும் தக்ஷிணாயன காலத்திற்கு அசுர காலமென் றும், முன்அயனம் தேவகாரியம் செய்யத் தக்க காலமென் றும் சொல்லிச் சுபகாரியங்களை இதில் செய்வதையே, இந்தியா வந்த பின்னிட்டும் பரம்பரைப் பாத்தியமான சம்பிரதாய வழக்கமாய்க் கொள்வதிலிருந்தும், முன்னே உத்தர துருவ மண்டலத்தில் வழக்க மாயிருந்த உஷஸ்களை வியாபித்திருக்கும் காலத்தில் யாதொரு சற் கருமத்தையும் செய்யாமல் விடுத்திருந்ததையே மறவாமல் இங்கும் மேற்கொண்டதாய் அறியக்கிடப்பதிலிருந்தும் ஆரியர்கள் உத்தர துருவவாஸிகளாய் ஆறுயிரம் வருஷங்களுக்கு முன்னரிருந்தன ரென்பது தெளிவாய்த் தெரியவருகின்றது. ஆரியர்களின் புண்ணிய க்ஷேத்திரங்களைப்பற்றிப் பேசும்போதும், மஹாப்பிரஸ்தானமாக ஸ்ரீராமாதிகள் இராமாயண காலத்திலும், பாண்டவாதிகள் பாரத காலத்திலும் போகும் திசையை வடக்காக வைத்துக்கொண்டு போனதிலிருந்தும், ஆரியர்கள் தாம் முன்னம் வசித்திருந்து விட்டு விட்டு வந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் வைத்த அபிமானமும் பூஜிய தையும் இப்படிப்பட்டனவெனத் தெரிகிறது. அந்தக் காலத்தி லிருந்து பரம்பரையாய் வந்த ஜோதிஸ் தந்திர நிபுணர்கள், மகமேரு கிரியை மத்திய ஸ்தானமாக வைத்துக் கொண்டு கணனம் செய்ததி லிருந்தும், இந்த ஸ்தானமும் வட துருவ மண்டலமும் ஏறக் குறைய ஒன்றுக்கொன்று சமீபமான ஸ்தலங்களேயெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட துருவ மண்டலத்திற்கே, மஹாபாரத காலத்தில் அர்ஜுனன் போய் அங்கு நல்ல மஹா தீர்த்த மொன்றைத் தரிசித்து வந்தான் என்று சொல்லப்பட்டதி லிருந்தும், ஆரியர்களுக்குப் பூர்விக ஸ்தலமாய் உத்தர துருவ மண் டல மிருந்ததென்று சொல்வது மிக்க பொருத்த முடையதாகும்.

அரசியல்முறை

தி. சிவராம சேதுப்பிள்ளை

(433-ம் பக்கத்தொடர்ச்சி)

மாகாண ஆட்சிகள் எம்மட்டும் சுய ஆட்சி பெற்றன என்பதை விளக்கிக் காட்டினேம். ஆனல் அது முழுச் சுய ஆட்சி அல்ல. சட்டப்படி, நம் தேசத்தின் வரவு செலவு திட்டங்களை அமைத்தலும், இன்னும் ஏனைய கவர்ன்மெண்டு நடத்திவைக்க வேண்டியதற்கு அவசியமான அமுல்களும் அரச அமைச்சருக்கே உரியன. மாகாண கவர்ன்மெண்டின் நடவடிக்கைகளிலும் இந்தியா கவர்ன்மெண்டு தலையிடலாம். சட்டம் இவ்வாருக, 1919-ல் பார்லிமெண்டில் நிறைவேறின சட்டம் குறித்தது என்னவென்றால்: விதிகள் மூலமாய் இங்கிலாந்தில் ஆளும் காரியதரிசியும், டில்லியில் ஆட்சி புரியும் கவர்ன்மெண்டும், இன்ன இன்ன விஷயங்களில் தாங்கள் தங்கள் அமுலைச் செலுத்த மாட்டோம் என்று விதித்துக் கொள்ளலாம் என்பது. இதுதான் சரியான முறை என்று அபிப்பிராயப்பட்டனர் நம் தேசத்திற்கு நன்மை செய்துவைக்க விரதம் கொண்டிருப்பதாகக் கூறிய பெரியோர்கள்.

இனி, இக் கொள்கை எப்படி நிறைவேற்றப்பட்டது என்பதைக் கவனிப்போம். ஏராளமான விதிகள் விதிக்கப்பட்டன. முதலில், இந்தியர்கள் தாங்களே சுயமாய் ஆளட்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கும் இலாகாவிற்கு (*Transferred Departments*) அதிகக் கட்டுப்பாடுகள் இருத்தல் சரியல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் அரசரின் அமைச்சர் தம் பொறுப்பில் விடப்பட்ட விஷயங்களில் மாத்திரம் தலையிடலாம்; ஏனையவைகளில் மாகாண மந்திரிகளுக்கு உரிமையுண்டு. அவையாவன :—

(1) இந்திய விஷயங்கள் சரிவர நிறைவேறும்படி பாதுகாப்பது;

(2) மாகாணங்களுக்குப் பொதுவான விஷயங்களைத் தீர்மானிப்பது;

(3) அகில இராஜாங்கத்தைப் பாதுகாப்பது;

(4) இந்தியா கவர்ன்மெண்டும், பிரிட்டிஷ் நாடுகளும் ஒத்து நடத்தவேண்டிய தீர்மானங்கள்;

(5) முடிவாக, இந்தியாவிற்குக் கடன் வாங்கவேண்டியது முதலான ஏற்பாடுகள். இவைதவிர மற்றைய யாதொரு விஷயத்திலும் அரச அமைச்சர் தலையிடமாட்டார். அவ்வண்ணமே, மேலே குறிப்பிட்ட முதலிலும், இரண்டாவதிலும், கடைசியிலும் உள்ள சந்தர்ப்பங்களுக்குத் தவிர, இந்தியா கவர்ன்மெண்டும் மாகாண கவர்ன்மெண்டின் செய்கைகளில் தலையிடாது.

ஆனால், "ரிசர்வ்ட் சப்ஜெக்ட்ஸ்" என்று விலக்கி வைக்கப்பட்டிருந்த அரசாங்க விஷயங்களில், இன்ன இன்ன விஷயங்களில் தான் தலையிடுவோம், ஏனையவைகளில் சுய ஆட்சி என்பது குறிப்பிடப்படவில்லை. எக் காரணத்தைக் கொண்டும் எந்த விஷயத்திலும் தலையிடலாம். இறுதியில், அரச அமைச்சரே நல்ல ஆட்சிக்கு ஜவாப்பு ஆகையால் இதில் வரையறைசெய்வது சரியல்ல என்று கருதப்பட்டது. ஆனால் நாளடைவில் எவ்வளவு சுதந்திரம் கொடுப்பதாக உத்தேசம் என்று வழக்கத்தில் உணரக் கிடக்கட்டும் என்று விடப்பட்டது.

இனி, கவர்ன்மெண்டை இரண்டு பாகமாகப் (*Reserved, Transferred*) பிரித்தமைத்த விநோதம், எல்லாச் சர்க்காரின் முக்கியமான அங்கமான நிர்வாக சபையையும் இரண்டு பங்காக்கிற்று. சபைக்குப் பொதுத் தலைவர் கவர்னர். அவர் அரசர் கையொப்பமிட்ட உத்தரவின் மூலமாக ஐந்து வருஷத்திற்கு நியமிக்கப்பட்டார். அவர் சம்பளம் பார்லிமெண்டால் குறிக்கப்பட்டது. ஆனால் அவர் தாமே யாதொரு இலாகாவையும் நடத்தி வைக்கிறதில்லை. அரசாட்சியின் தொல்லைகள், ஒதுக்கப்பட்டன (*Reserved*), ஒதுக்கப்படாதன (*Transferred*) என்று நிர்ணயிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்டனவற்றை நடத்திவைக்க அங்கத்தினர்களும், ஏனையவைகளுக்கு மந்திரிகளும் நியமிக்கப்பட்டார்கள். அங்கத்தினர்கள் (*Members of Council*) அரசராலும், மந்திரிகள் கவர்னராலும் நியமிக்கப்பட்டார்கள். மந்திரிகள் மாத்திரம் சட்டசபை அங்கத்தினராய் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். மந்திரிகள் மாகாண சட்டசபைக்கும், மற்றைய நிர்வாகசபை அங்கத்தினர்கள் பார்லிமெண்டிற்கும் உத்தரவாதிகள்.


இம்மாதிரி பிளவுபட்டுக் கிடந்த ஆட்சியில் கவர்னரின் பொறுப்பு அதிகம். இரண்டு பாகமும் சரிவர ஒத்து உழைக்கும்படி செய்வது கவர்னரின் கடமை. அவர், எந்த எந்த அங்கத்தினர் எந்த எந்த இலாகாவை நடத்திவைக்க வேண்டியது, எந்த மந்திரி எதற்கு ஜவாப்பளிக்க வேண்டியது என்று தீர்மானிக்க வேண்டியது. ஏதேனும் ஒரு விஷயம் யார் இலாகாவைச் சேர்ந்தது என்று வாக்கு

வாதம் நேரிட்டால் மத்தியஸ்தம் பண்ணவேண்டியது கவர்னர். எந்த எந்த விஷயங்களைச் சேர்ந்து தீர்மானிக்க வேண்டியது என்று உத்தரவு அளிக்கவேண்டியதும் கவர்னர்தாம். சாதாரணமாய்த் தம் நிர்வாக சபையின் பெரும்பான்மையார் கொள்கையை ஒப்புக் கொள்ளவேண்டியது கவர்னரின் கடமை. ஆனால் சிற்சில விஷயங் களில், நாட்டிற்கு அவசியம் என்று தோன்றினால் தம் அபிப் பிராயமே மேலாகும்படி உத்தரவளிக்கக் கவர்னருக்குப் பாத்தியம் உண்டு.

மாகாண அரசாங்கத்தினுடைய நிர்வாக சபையின் அமைப்பு இம்மாதிரியாக, சட்டத்தின் விதிகள், பொருள் ஆதார இலாகாவின் (*Finance Department*) ஏற்பாட்டைச் செவ்வனே விளக்கிக் குறிக்கலாயின. இதன் நூதன அமைப்பு இராஜாங்கம் பிளவுபட்ட இராஜாங்கமாகையால் இரண்டு பிரிவிற்கும் இந்த இலாகா பொது வானது என்பது. இதன் தலைவர் நிர்வாக சபையின் ஓர் அங்கத் தினர். ஆனால் பார்லிமெண்டிற்கு உத்தரமளிக்க வேண்டிய செல விற்கும், மாகாண சட்டசபைக்கு ஜவாப்பளிக்க வேண்டியவற்றிற் கும் நடுவே நின்று வேலை செய்யும் இலாகா இது. இதன் கடமை களாவன பஞ்சநிதியும், கடன் தொகைகளும் விதிகளின்படி நிறை வேற்ற வேண்டியது ; செலவிடும் இலாகாக்கள் கொண்டுவரும் திட் டங்களைப் பரிசோதித்துத் தனக்குத் தோன்றினவைகளை அந்த அந்த இலாகாக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது. பொதுவாய்ப் பொருள் வரவு செலவு சரிவர நடந்து வரவேண்டியதற்கு உதவி யான விதிகளை நியமித்துக் கொடுக்கவேண்டியது. வருஷாந்தர வரவு செலவுத் திட்டம் தயாரித்துச் சென்னைச் சட்டசபைக்கு கொண்டு வரவேண்டியது. தயாரிக்கும் கடமை மாத்திரமேயன்றி இவ்வளவு பணம் இந்த இலாகாவிற்கு கொடுக்கலாம், இவ்வளவு இதற்குக் கொடுக்கப்படாது என்று சொல்லும் சுதந்திரம் கிடையாது. அத்தகைய கடமை கவர்னருடையது. புதிதாய் வரிபோட வேண்டு மானாலும் நிர்வாகசபை தீர்மானிக்கவேண்டியது.

இன்னோரன்ன கடமைகளைச் சரிவர நடத்திவைக்கப் பணியா ளர்கள் வேண்டும். புதிய ஏற்பாட்டில் பணியாளர்களின் நிலைமையும், பின்னர், மாண்டேகு ஏற்பாட்டின் முக்கியமானதாகிய சட்ட சபையின் அமைப்பும் நிகழ்ச்சிமுறையும் விளக்கி முடித்தால் தற்கால அரசியல்முறை, மாகாண கவர்ன்மெண்டைப்பற்றின அளவு முடிவு பெறும். அதன் பிறகு, இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பும், இங்கிலாந்தில் எஞ்சி நிற்கும் ஆட்சியின் நிகழ்ச்சியும் சுருங்கச் சொல்லி முடித்து விடலாம்.

(தொடரும்)



அநுபவநாடகம் அல்லது "தப்பிலி கப்"

ரா. கிருஷ்ணமூர்த்தி

கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திற்குள் நீங்கள் எப்போதாவது பிரவேசித்ததுண்டா? இல்லையென்றால் அதற்காக வருத்தப்படவேண்டாம். ஏனென்றால், அந்தப் பூலோக சொர்க்கத்துக்குள் நானும் நுழைந்தது கிடையாது. இந்தக் கதையைப் பொறுத்தவரையில், அந்த மைதானத்திற்குள் நீங்கள் பிரவேசித்திருக்கவேண்டுமென்னும் அவசியமும் இல்லை.

ஆனால் குதிரைப்பந்தயம் நடக்கும் சனி அல்லது புதன் கிழமைகளில் நீங்கள் கிண்டிஸ்டேஷன் வழியாக மாலை நேரத்தில் ரயில் பிரயாணம் செய்ய நேர்ந்தால், சிறிது தலையை நீட்டி வெளியில் பார்க்குமாறு சொல்வேன். அதனால் நீங்கள் அடையும் பலன் என்னவென்றால், சென்னை நகரில் சுமாராக எத்தனை மோட்டார் வண்டிகள் இருக்கின்றனவென்று ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். புள்ளி விவரங்களில் நீங்கள் பற்று உடையவர்களாயின், பின்வரும் கணக்குகள் போட்டு அறியலாம்:—

(1) சென்னையில் உள்ள மோட்டார் வண்டிகள் எவ்வளவு?

(2) சராசரி ஒவ்வொன்றின் விலை என்ன இருக்கும்?

(3) மொத்தம் விலை என்ன?

(4) ஒவ்வொன்றிற்கும் சராசரி பெட்ரோல் செலவு எவ்வளவு இருக்கும்?

(5) மொத்த பெட்ரோல் செலவு என்ன?

(6) கெட்டுப்போகும் கருவிகளைப் புதுப்பிக்கும் செலவு என்ன?

(7) கிராமாந்தரங்களின் ஏழைக் குடியானவர்களிடமிருந்து நகரவாசிகள் பெறும் பணத்தில், மோட்டார் மூலமாகமட்டும் எவ்வளவு ரூபாய் வருஷந்தோறும் அயல் நாட்டுக்கு அனுப்புகிறார்கள்? அல்லது நீங்கள் சமூக நிலைமையைப்பற்றிய ஆராய்ச்சியில் சிரத்தை உடையவர்களானால், அங்கு நிற்கும் மோட்டார்

வண்டிகளின் இலக்கங்களை யெல்லாம் குறித்துக்கொண்டு, பின்வரும் விவரங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கலாம் :—

கிண்டி குதிரைப்பந்தயத்திற்குப் போகும் சென்னைப் பெரிய மனிதர்களில்,

(1) சர்க்கார் உத்யோகஸ்தர்கள் எத்தனை பேர் ?
(2) அட்வொகேட்டுகள் எத்தனை பேர் ?
(3) நியாயாதிபதிகள் எவ்வளவு பேர் ?
(4) பத்திராதிபர்கள் எத்தனை பேர் ?
(5) சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வளவு பேர் ?
(6) பாங்கி முதலாளிகள் எத்தனை பேர் ?
(7) வியாபாரிகள் எத்தனை பேர் ?
(8) கலாசாலை ஆசிரியர்கள் எவ்வளவு பேர் ?

பந்தயம் முடிந்து ஜனங்கள் மைதானத்திலிருந்து வெளியே வரும்பொழுது சற்றே கவனித்துப் பார்த்தீர்களானால், நீங்கள் சிறிதும் எதிர்பாராத மனிதர்கள் பலர் அங்கிருந்து வெளிப்புறப் படுவதைக் காண்பீர்கள். மூன்றும் வகுப்பில் உங்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்த உபாத்தியாயர், உங்கள் தகப்பனர் சிராத்தத்தில் நிமந்தரணத்துக்கு வந்த சாஸ்திரிகள், அன்றையதினம் சாயங்காலம் திருவொற்றியூரில் தேர் பார்க்கப் போவதாக விடுமுறை பெற்றுச் சென்ற உங்கள் வீடு கூட்டும் வேலைக்காரி முதலியோரைப் பார்த்துத் திடுக்கிடுவீர்கள்.

* * *

உங்கள் விஷயம் எப்படி ஆனாலும் சரி, டி. கே. இராஜகோபாலன் இப்பொழுது மேற்படி மைதானத்துக்குள்ளிருந்து வெளிவருவதை அவனுடைய தாயார் பார்த்தாளாயின், மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவாளென்பதில் சந்தேகமில்லை. ராஜகோபாலன் திருவல்லிக்கேணியில் வசிப்பவன். அவனுக்குத் தபாலாபீஸில் ரூபாய் 40 சம்பளம். தாயாரைத்தவிர மனைவியும் தங்கையும் வீட்டிலிருந்தார்கள். ஜீவனத்துக்கு 40 ரூபாய் போதவில்லை. ஆதலால் அவன் 'நாவல்' எழுதிப் புத்தகப் பிரசுரக் கம்பெனிகளுக்குக் கொடுத்துக் கொஞ்சம் பணம் சம்பாதித்துவந்தான். அன்று 20 தேதி. சம்பளம் வர இன்னும் பத்து நாளாகும். மறுநாள் சமையல் பண்ணுவதற்கு வீட்டில் அரிசி சாமான் ; ஒன்றும் இல்லையென்று அவன் தாயார் சொன்னாள். இரண்டுமாத வாடகை பாக்கி என்று வீட்டுக்காரன் பிடுங்கி எடுத்தான்.

" அம்மா ! போனமாதம் எழுதிக்கொடுத்த நாவலுக்காக மூர்மார்க்கெட் கோவிந்தசாமி நாயுடு இன்று 30 ரூபாய் தருகிறே

னென்று சொல்லி யிருக்கிறார். அதை வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்னு சொல்லிவிட்டு அன்று காலை 10 மணிக்கு இராஜகோபாலன் வீட்டைவிட்டுக் கிளம்பினான். அவன் இப்பொழுது குதிரைப்பந்தய மைதானத்திலிருந்து வெளிவருவதென்றால்? அதிலும், அவனுடைய தோற்றமோ மகா கோரமா யிருந்தது. முகத்திலே பிரேத களை, மேலெல்லாம் ஒரே புழுதியும் வியர்வையும். காலையில் அழகாக மகிடு பிளந்து படிய வாரிவிட்டிருந்த தலைமயிர் இப்பொழுது செங்குத்தாக நின்றுகொண்டிருந்தது. அந்தத் தலைமயிர் காற்றினால் கலைக்கப்பட்டதோடல்லாமல், அவனுடைய கைகளினாலும் வெகு வேதனையை அடைந்திருக்கவேண்டுமென்று தோன்றியது. அவனுடைய இந்தக் கோர ஸ்வரூபத்தைப் பார்க்க நமக்கே சகிக்கவில்லையென்றால், அவனுடைய தாயாராவது மனைவியாவது பார்க்கும்பட்சத்தில், மூர்ச்சை யடைந்து விழுவார்களென்று கூறுவது மிகையாகுமா?

* * *

இராஜகோபாலன் வெளியே வந்ததும் அங்கு வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக நின்றுகொண்டிருந்த பஸ்களை ஒருமுறை ஊடுருவிப் பார்த்தான். பின்னர், அவ்வரிசையின் முதலில் ஜனங்கள் ஏறிக்கொண்டிருந்த பஸ்ஸை நோக்கி அதிவேகமாக விரைந்து சென்றான். அந்த பஸ்ஸுக்கு ஒருவர்தான் பாக்கியா யிருந்தது. "ஏறுங்கோ சார்! ஸ்டார்ட்!" என்றான் கண்டக்டர். ஆனால் இராஜகோபாலன் ஏறவில்லை. வண்டியின் முன்பக்கத்தில் இரண்டு தடித்த மார்வாரிசேட்டுகளுக்கு மத்தியில் உட்கார்ந்து திணறிக்கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து, "அடே சீனு! ஒரு சமாசாரம். இறங்கு கீழே!!" என்றான். நல்லவேளை என்று எண்ணிக்கொண்டு கீழிறங்கினான் சீனு.

"என்ன சமாசாரம்?" என்றான்.

"ஒன்றுமில்லை........."

"ஒன்றுமில்லையா? பின் எதற்காக என்னை இறக்கினாய்?"

"அடே அப்பா! கோபித்துக்கொள்ளாதே. இங்கே வா, சொல்கிறேன்" என்று ராஜு சீனுவைச் சிறிது ஒதுக்குப்புறமாய் அழைத்துக்கொண்டுபோய், "சட்டைப்பையைப் பார்! எவ்வளவு சில்லரை இருக்கிறது? என்று கேட்டான்.

சீனு எண்ணிப் பார்த்தான். ஐந்தரை அணா இருந்தது. "நல்லவேளை! நீ வந்து இருக்கிறாய். இல்லாவிட்டால் அவமானம்" என்றான், பஸ்ஸுக்கு 8 அணா கூலி. "இரண்டு பேருக்கு ரயிலுக்

காவது இருக்கிறதே'' என்றான் இராஜகோபாலன். இருவரும் கைகோத்துக்கொண்டு போய் டிக்கட் வாங்கி ரயில் ஏறினார்கள்.

* * *

ரயில் நகர ஆரம்பித்தது. சீனுவின் எதிரில் துக்கமே உருவாய் ஒருவர் உட்கார்ந்திருந்தார். மனைவி அல்லது குழந்தை செத்துப் போனால்கூட அவ்வளவு துக்கப்படுவார்களா என்பது சந்தேகம். ரயில் ஓடத் தொடங்கியதும் அவர் அருகிலிருந்த முதலியார் பக்கம் திரும்பினார். ''நாலு நாளாய் 'பவானி பிரஸாத்' தான் ஜயிக்கப் போகிறது என்று ஊரெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தேன். கடைசியில் உன் பேச்சைக் கேட்டுக் குட்டிச்சுவராய்ப் போனேன். என் புத்தியைச் செருப்பாலடித்துக்கொள்ளவேண்டும்'' என்று வெறுப்புடன் கூறினார். இப்படிச் சொல்லிக்கொண்டே அவர் தமது காலிலிருந்த செருப்பைக் கழற்றினார். பக்கத்திலிருந்தவர்கள் அவர் எங்கே புத்தியைச் செருப்பாலடித்துக்கொள்ளப் போகிறாரோ என்று பயந்துவிட்டனர். அப்படி ஒன்றும் அவர் செய்யவில்லை. பகலெல்லாம் நின்று கால் வலித்ததுபோலும்! காலைத் தூக்கிச் சப்பளங் கூட்டி உட்கார்ந்தார். ''எவனாவது கண் தெரிந்து 'டாபா' மேல் பணங் கட்டுவானா?'' என்றார் ஒருவர். ''அந்த ரேஸில் அது தான் ஜெயிக்கப்போகிறது என்று ஸ்பெஷல் தந்தி போச்சே'' என்றார் முதலியார். ''உன் தந்தியைக் கொண்டு உடைப்பில் போடு! குதிரையா அது? கழுதை. கடைசியிலல்லவா வந்தது?'' என்றார் நாயுடு. ''ஆமாம், ஐயா! எல்லாவற்றிற்கும் கடைசியாக அது எப்படித்தான் வந்ததோ தெரியாது. எனக்கு வந்த கோபத்தில் அதன்மேல் கல்லை விட்டு எறிந்தேன்'' என்றார் ஒரு சாயபு.

''தந்திப்படி குதிரை வந்தால் அப்பொழுதுமட்டும் என்ன சொல்வாய்?'' என்று முதலியார் கேட்டார்.

''ஆமாம்! உன் குதிரைதான் வந்ததே தெரியாதா? வாலை உயரக் கிளப்பிக்கொண்டு'' என்று சொல்லி நாயுடு கையைத் தூக்கினார். குதிரை வாலை அப்படித் தூக்கிக்கொண்டு போனதென்று காண்பிப்பதாக அவர் எண்ணம்.

''யாராவது தந்தியைப் பார்த்து நூற்றுக்கணக்காகப் பணத்தைத் தொலைப்பார்களா? கொஞ்சமாவது குதிரைகள் விஷயம் தெரியாமல் பணத்தைக் கட்டலாமா?'' என்று இடமில்லாமல் ரயில் கம்பியைப் பிடித்து நின்றுகொண்டிருந்த ஓர் ஐயங்கார் குறுக்கிட்டார்.

''ஒரு குதிரை எவ்வளவு தூரம் ஓடும்? அதன் வேகமென்ன? அதற்கு 'வெயிட்' எவ்வளவு? அதன்மேல் எந்த 'ஜாக்கி' ஏறு

கிறான்? என்று இந்த விஷயமெல்லாம் கவனிக்காமல் பணம் கட்டவே கூடாது" என்று சொல்லிக்கொண்டே ஐயங்கார் நாயுடுவுக்கும் முதலியாருக்கும் இடையே உட்காரப்போனார். நாயுடு இடம் விட்டார். "ஆமாம், நீர்தான் கணக்குப்போட்டுப் பணம் கட்டுகிறீரே; இதுவரையில் எத்தனை மாடிவீடு கட்டியிருக்கிறீர்? போனவாரம் 'சிவாஜி வரவே வராது. அன்வர்பாஷாதான் ஜெலிக்கப் போகிறது' என்று சொன்னீரே. அந்தப் பாஷா எல்லாக் குதிரையையும் துரத்தியடித்துக்கொண்டு வந்தது ஞாபகமில்லையாக்கும்."

"விஷயம் தெரியாமல் பேசாதேயும். அதுமட்டும் சரியாக ஓடினால் அதை அடிக்கிற குதிரை ஏது? அன்றைக்கு ஓரே 'பேவரிட்' (*Favourite*) ஆகப் போய்விட்டது. ஜாக்கி 'புல்' பண்ணிவிட்டான். அதற்கு யார்மேல் முட்டிக்கொள்கிறது?"

"குதிரை தின்னுகிறதற்குப் 'புல்' பண்ணினானுக்கும். போமையா போம்! சமயத்திற்குத் தகுந்தாற்போல் பேசுகிறீரே?" என்று முதலியார் பரிகசித்தார்.

"ஒருசமயம் இப்படி, ஒருசமயம் அப்படித்தான் இருக்கும். கணக்கும் பார்க்கவேண்டியதுதான். குதிரை 'ட்ரையா', 'ட்ரை' இல்லையா என்றும் பார்க்கவேண்டியதுதான்" என்று அதுவரையில் மௌனமாய் உட்கார்ந்திருந்த ஓர் ஐயர் சொன்னார்.

இவர்கள் பேசுவதை யெல்லாம் காதில் வாங்காததுபோல் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர், "பாருங்கள், நானும் இருபது வருஷமாய் ரேஸுக்குப் போய்வருகிறேன். நான் பணங்கட்டியதைப் போல் ஒருவரும் கட்டியிருக்கமாட்டார்கள். இழவை விட்டுத் தொலைக்கலாமென்றாலோ முடியவில்லை. லாபம் வருகிறதோ இல்லையோ நமது பணம் போகிறது நிச்சயம். நூற்றுக்கு எட்டு வீதம் கிளப்புக்காரன் எடுத்துக்கொண்டுவிடுகிறான். போதாததற்கு உள்ளே வர டிக்கட், ரயில் செலவு, கவலை, காலவிரயம் எல்லாம்" என்று பிரசங்கம் செய்யத் தொடங்கிவிட்டார்.

இராஜகோபாலனுக்குப் பக்கத்தில் பெரிய மனிதர் போன்றிருந்த ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

"இவர்கள் என்னமோ சொல்லுகிறார்கள்? குதிரைப்பந்தயம் என்றால் நாலாயிரம், ஐயாயிரம் ஒரு வரவு செலவாகவே எண்ணக் கூடாது. அதை ஒரு ஸ்போர்ட்டாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டும். ஒன்று போனால் இன்னொன்றில் வைத்துத் தாக்க வேண்டும். ஒரு குதிரையில் ஆயிரம் கட்டிப் போனால், இன்னொன்

றில் இரண்டாயிரம் கட்டுகிறது. அதுவும் போனால் நாலாயிரம் கட்டுகிறது. குதிரை வராமலா போய்விடும்? இப்படி இருபதாயிரம் முப்பதாயிரம் கட்டுவதற்குக்கூடப் பயப்படக்கூடாது'' என்றார் அவர்.

இந்தச் சமயத்தில் இரண்டு மூன்றுபேர், "அடடா! எக்மோர் ஸ்டேஷன் தாண்டிவிட்டதே'' என்று தவித்தனர். அவர்கள் எழும்பூரில் இறங்கவேண்டியது; பேச்சு மும்மரத்தில் மறந்துபோனார்கள். நாசமாய்ப்போகிற 'எலக்ட்ரிக்' வண்டிகள் ஒரு நிமிஷத்திற்குமேல் நிற்பதில்லை.

* * *

ராஜுவும் சீனுவும் ஒரு மூலையில் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். வாய் திறக்கக்கூடவில்லை. மற்றவர்களுக்கெல்லாம், 'ஏதோ அடுத்த சனிக்கிழமை அதிர்ஷ்டம் திரும்பாதா? பார்க்கலாம்' என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இவர்களுக்கோ எல்லா நம்பிக்கையும் போய்விட்டது.

மற்றொரு பக்கத்தில் பட்டுச் சட்டையும் தங்கச் சங்கிலியும் வைர மோதிரமும் அணிந்து உட்கார்ந்திருந்த ஒருவர், தம் அருகிலிருந்த சிநேகிதருக்கு ராஜுவைச் சுட்டிக் காட்டினார். "அதோ அந்த இரண்டு ஆஸாமிகளைப் பார்த்தீர்களா ஸார்? முகத்திலே ஈயாடவில்லை, பாருங்கள். இந்தமாதிரி ஆட்கள்தான் தூக்குப் போட்டுக்கொண்டும், விஷத்தைத் தின்றும் சாவது. இவர்கள் எல்லாம் ஏன் ஸார் வருகிறார்கள்?'' என்றார்.

"ஆமாம். ஒன்று நம்மைப்போல் நூறு, ஆயிரம் லட்சியமில்லாமலாவது இருக்கவேண்டும்; அல்லது சரியாய்க் கணக்குப் பார்த்து நிதானமாய் ஆடவேண்டும். இரண்டுங்கெட்டான் பேர்வழிகள் எல்லாம் வரக்கூடாது'' என்றார் அவர் நண்பர்.

* * *

வண்டி பார்க் ஸ்டேஷனில் வந்து நின்றது. "என்னுடைய அறைக்கு வருகிறாயா?'' என்று சீனு கேட்டான்.

"ஆமாம், வருகிறேன். இன்றிரவு அம்மாவின் முகத்தில் விழிக்க என்னால் முடியாது'' என்றான் ராஜு.

இருவரும் இறங்கிச் சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த சீனுவின் அறைக்குச் சென்றார்கள்.

நெருப்புப்பெட்டியைத் தேடி எடுத்து விளக்கேற்றி வைத்துவிட்டு, "உன்னை ஏன் கூப்பிட்டேன் தெரியுமா?'' என்று சீனு கேட்டான்.

"ஏன்?"

"இன்றிரவு நான் தனியாயிருந்தால் ஏதாவது விபத்து நேர்வது நிச்சயம். தூக்குப் போட்டுக்கொள்வேன்"

"நீகூடவா அப்படி? அவ்வளவு நஷ்டம் ஆய்விட்டதா?"

"உனக்கு ஞாபகமிருக்குமே? பாகவதர் பாய்ஸ் கம்பெனியிலிருந்து நான் சண்டை போட்டுக்கொண்டு விலகியபோது என்னிடம் 20,000 ரூபாய் பணம் இருந்தது. எல்லாம் போய்விட்டது. நாளைக்குக் காப்பி சாப்பிடப் பணங் கிடையாது."

"உனக்கென்ன, அப்பா! என்ன போனால்தான் என்ன? பெண்டாட்டி பிள்ளையா, தாய் தகப்பனரா, ஒருவரும் இல்லை. உன் ஒருவனுக்கு எப்படியும் சம்பாதித்துக்கொள்வாய். நீ கொடுத்து வைத்தவன்."

"ரொம்பக் கொடுத்து வைத்தவன்தான். இருக்கட்டும், உன் சங்கதி என்ன? தாயார் முகத்தில் விழிக்கமுடியாதென்று சொன்னாயே? ஏன்?"

"ஆமாம், வீட்டு வாடகை இரண்டு மாதம் பாக்கி. நாளைக்கு அரிசி இல்லை. 250 ரூபாய் கடன் இருக்கிறது. கடன்காரன் பிராது செய்வேன் என்கிறான்."

"ஊரிலே நிலம் இருந்ததே?"

"அதெல்லாம் முன்னமே கடன்காரன் கொண்டு போய்விட்டான்".

"அட பாவி! அப்படியானால் என்ன செய்யப்போகிறாய்?"

"பெண்டாட்டி கழுத்தில் சங்கிலிதான் பாக்கியிருக்கிறது. அதைக்கேட்டு வாங்குவதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று தோன்றுகிறது."

இப்படிச் சொல்லும்பொழுது ராஜுவின் கண்களில் நீர் ததும்பிற்று. சற்றுநேரம் விம்மி விம்மி அழுதான். சீனு அவனைத் தன் தோளில் சார்த்திக்கொண்டு சமாதானப்படுத்தினான். இருவரும் பால்ய நண்பர்கள்.

* * *

சீனு சட்டென்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். ராஜுவின் தோளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினான். "இதோ பார், ராஜு! ஒரு யுக்தி! முதல்தரமான யோசனை. நிமிர்ந்து உட்கார்ந்து கேள்" என்றான்.

"இனிமேல் என்ன யோசனை செய்து என்ன காரியம் நடக்கப் போகிறது?" என்றான் ராஜு.

"சீச்சீ! இவ்வளவுதானா? எழுந்திரு, சொல்லுகிறேன். எவனொருவன் தனக்கு வரும் விபத்துக்களையும் லாபகரமாக்கிக்கொள்கிறானோ அவனல்லவா மனிதன்?"

"சரி, சரி! உன்னுடைய நாடகப் பேச்சில் ஆரம்பித்துவிட்டாயாக்கும். என்னதான் அந்த அற்புத யோசனை? சொல்" என்று கேட்டுக்கொண்டே ராஜு எழுந்து உட்கார்ந்தான்.

"இதோ பார்! நீயோ ஆசிரியன். நான் பெயர்பெற்ற நடிகன். நாமிருவரும் சேர்ந்து வெற்றி பெறுவிடில் அப்புறம் என்ன விருக்கிறது? இத்தனை நாளும் நீ சிரமப்பட்டு நாவல் எழுதிப் பிறரிடம் கொடுத்துப் பாரத்துக்கு (16 பக்கத்திற்கு) 4 ரூபாயும் 5 ரூபாயும் பெற்று வந்திருக்கிறாய்; போதும் இந்தத் தொழில். இப்பொழுது ஒரு நாடகம் எழுது. குதிரைப்பந்தயத்தைப்பற்றி எழுது. உன்னுடைய அநுபவத்தையே முக்கிய சம்பவமாய்க்கொண்டு கொஞ்சம் காது மூக்கு வைத்து எழுதினால் போதும். நான் 'ஸ்திரீ பார்ட்' போட்டுக்கொள்கிறேன். நாடக உலகத்தை நான் விட்டு மூன்று வருஷந்தானாயிற்று. இப்போதும் என் பெயரைக் கேட்டே நாடகத்துக்கு வரக்கூடியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீ கதாநாயகனாக நடிக்கலாம். அதற்கு உன்னைத் தயார் செய்துவிடுகிறேன். உனக்குச் சொந்த அனுபவமிருக்கிறபடியால் உன்னளவு சோகரசத்துடன் யாரும் நடிக்க முடியாது. பாக்கி எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ நாடகம் மட்டும் எழுது" என்றான்.

"யோசனை நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் நாடகம் நடத்துவது அவ்வளவு சுலபமா? முதலில் தயார் செய்வதற்கெல்லாம் பணம் வேண்டாமா?"

"உனக்கேன் அந்தக் கவலை. எனக்கு வந்த மெடல்களை மட்டும் இன்னும் பத்திரமாய் வைத்திருக்கிறேன். அவைகளை விற்றாவது நான் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். அதிகம் வேண்டாம்; அடுத்தடுத்து மூன்றே நாடகம் போடுவோம். அதற்கு மேல் போட்டால் புளித்துப் போய்விடும். நாடகத்துக்கு ரூ. 1000 வீதம் குறைந்தது ரூ. 3000 மீதமாகும். தலைக்குப் பாதியாக எடுத்துக் கொள்வோம்."

"எனக்கு இன்னொன்றுகூடத் தோன்றுகிறது. புத்தகத்தையும் முதலிலேயே அச்சுப்போட்டுவிட்டால் நாடகக் கொட்டகையிலேயே விற்கலாம். 3 நாளுக்குள் முதல் பதிப்பு விற்றுவிடும். அதில் குறைந்தது 500 ரூபாயாவது வரும்" என்றான் ராஜு.

"அதற்கென்ன? அப்படியே செய்யலாம். புத்தகலாபம் எனக்கு வேண்டாம். நீயே எடுத்துக்கொள். அதற்குப் பிறகு மற்ற நாடகக் கம்பெனியாரும் அந்த நாடகத்தை நடத்த அநுமதி கேட்பார்கள். அவர்களிடம் நாடகத்துக்கு 50 ரூபாய்க்குக் குறையாமல் வாங்கலாம்."

"சரி, சீனு! இதுமட்டும் நிறைவேறினால் நான் பிழைப்பேன். என் குடும்பத்தையே காப்பாற்றியவனவாய். இன்றிரவே நாடகம் எழுத ஆரம்பிக்கிறேன். காப்பி சாப்பிட்டுவிட்டு வருவோம் வா!"

எனவே, இரவு ஒன்பது மணிக்கு இருவரும் போய்க் காப்பி சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். ராஜு காகிதமும் பேனவும் எடுத்துக்கொண்டு எழுதத் தொடங்கினன்.

"நாடகத்துக்கு என்ன பெயர் கொடுக்கிறாய்?"

" தப்பிலி கப் "

"பேஷ்! நல்ல பெயர். சத்யமே ஜயம். எழுது" என்றான் சீனு.

*　　　*　　　*

உலகத்து மக்களை இட்டார் என்றும், இடாதார் என்றும் பிரித்து "சாதியிரண்டொழிய வேறில்லை" என்றாள் ஔவை. அந்தக் கிழவிக்குப் பின்னல் இன்னும் அநேகர் ஜனங்களை இரு பிரிவாக்க முயன்றிருக்கின்றனர். வெள்ளைக்காரர்—கறுப்பு மனிதர், முதலாளிகள்—தொழிலாளிகள், கடன் கொடுப்பவர்—கடன் வாங்குபவர், பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற பிரிவுகளைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். ஆனல் சென்னைநகர மாந்தரைப்பொறுத்த வரையில் இந்தப் பிரிவுகளை யெல்லாம்விட, "குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்" "போகாதவர்" என்ற பிரிவினை அதிகப் பொருத்தமாயிருக்கும். சீனு இந்த நிலைமையை அறிந்தவன். ஜனங்களின் மனேபாவத்தை அவன் நன்குக் கண்டிருந்தான். ஆதலின் அவனுடைய யுக்தி ஆச்சரியகரமான பலனை அளித்தது.

*　　　*　　　*

ராயல் தியேடரில் " தப்பிலி கப் " நாடகம் போடப்பட்ட அன்று அப்பெரிய கொட்டகை முழுதும் ஏறக்குறைய நிறைந்திருந்தது. குதிரைப்பந்தயத்துக்குப் போவோர் இயல்பாக அந்த நாடகத்தின் பெயரினலேயே கவரப்பட்டு வந்து சேர்ந்தனர்.

குதிரைப்பந்தயத்திற்குப் போகாதவர்களோ, தங்கள் தங்களுக்கு வேண்டியவர்கள் குதிரைப்பந்தயத்திற்குப் போய்க் கெட்டுப் போவதைத் தடுப்பதற்கு இந்த நாடகம் பயன்படலாமென்ற நம்பிக்கையுடன் வந்துசேர்ந்தார்கள். ஆகவே, கொட்டகை நிரம்பிற்று.

*　　　*　　　*

நாடகத்தின் கதை என்னமோ சாமான்யமானதுதான். கதாநாயகன் சென்னையில் ஓர் அட்வொகேட். தொழில் ஆரம்பித்து இரண்டு வருஷந்தான் ஆயிற்று. "பிராக்டிஸ்" அதிகமில்லை. அவனுடைய மாமனார் (கதாநாயகியின் தந்தை) ஓர் எம். எல். சி. பெரிய இடங்களுக்கு அதிகம் வேண்டியவர். ஜில்லா முனிசீப் வேலைக்குக் கூடிய சீக்கிரம் ஏற்பாடு செய்வதாகச் சொல்லி இருந்தார்.

முதல் காட்சியில் கதாநாயகி, "இந்த வருஷம் கோடைக்கு ஊட்டிக்குப் போகலாமா?" என்று கேட்கிறாள். தன் அருமை மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றமுடியாமல், பாங்கிக் கணக்கில் மூன்று கலமும் பூஜ்யமாயிருப்பதை எண்ணிக் கதாநாயகன் கலங்குகிறான். ஆயினும் இதை அவளிடம் சொல்லாமல், ஊட்டிக்குப் போகாததற்கு வேறு ஏதோ பொய்க்காரணம் கற்பித்துக் கூறுகிறான். இவ்வாறு நாடகமானது ஆரம்பத்திலேயே சோக ரசத்துடன் தொடங்கி ஜனங்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிடுகிறது.

* * *

ஊட்டிக்குப் போகவேண்டும் என்னும் தன் மனைவியின் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது என்று கதாநாயகன் அல்லும் பகலும் அதே கவலையாயிருக்கையில், அவனுடைய நண்பனொருவன் குதிரைப்பந்தயத்தைப்பற்றி அவனுக்குச் சொல்லுகிறான். அதில் பத்தாயிரம், லட்சம் என்று பணம் சம்பாதித்தவர்களைப்பற்றி அவன் எடுத்துச் சொல்லச் சொல்ல, கதாநாயகனுக்குப் பந்தயப் பைத்தியம் பலமாகப் பிடித்துவிடுகிறது. அதுமுதல் அவன் குதிரைப்பந்தயத்திற்குப் போக ஆரம்பிக்கிறான். ஆனால் மனைவியினிடம் இதை மறைத்துவைக்கிறான். திடீரென்று ஒரு நாள் "நாளை நாம் ஊட்டிக்குப் போகிறோம்" என்று சொல்லித் திடுக்கிடச் செய்ய வேண்டுமென்று மனோராஜ்யம் செய்கிறான்.

* * *

மேலும் மேலும் நஷ்டமாகி வருகிறது. அவ்வளவுக்குப் பந்தயத்தில் மோகமும் வளர்ந்துவிடுகிறது. கடன் வாங்குகிறான். இவ்விடத்தில் மார்வாரி வட்டிக்கடையின் காட்சி நடத்தப்படுகிறது. ஏழைக் கூலிப்பெண்கள் செம்பு முதலிய பாத்திரங்களை அடகு வைத்துவிட்டுக் கால் ரூபாய் கடன் வாங்கி அடுத்த வாரத்தில் அரை ரூபாய் கொடுத்துப் பாத்திரத்தை மீட்டுக்கொண்டு போகிறார்கள். இவ்விதமாகவே வியாபாரிகள், சொற்பச் சம்பளக் குமாஸ்தாக்கள், பெண்களைப்பெற்ற தகப்பன்மார், தாசிவீடு செல்லும் மைனர்கள்

முதலியோர் வந்து கடன் வாங்கும் காட்சி ஹாஸ்யரஸத்துடன் நடத்திக் காட்டப்பெற்றது. சபையோர் சிரித்து வயிறு புண்ணாகப் பெற்றனர். இந்த மார்வாரி கடையில் நமது கதாநாயகனும் கடன் வாங்குகிருன்.

* * *

ஒரு நாள் குதிரைப்பந்தய மைதானத்தில் கதாநாயகனுக்கு அவனுடைய சிநேகிதன் ஒரு தாசியை அறிமுகம் செய்துவைக்கிருன். பிறகு ஒரு தினம் அவளுடைய வீட்டுக்குப் போகலாமென்று சிநேகிதன் அழைக்கிருன். கதாநாயகனுக்குச் சிறிதும் இஷ்டமில்லை. ஆனுல் பத்மாபாய்க்கு ஜாக்கிகள், டிரெய்னர்கள் அநேகம் பேரைத் தெரியுமென்றும், அவள் "டிப்" கொடுத்தால் தவறுவது கிடையாதென்றும் சினேகிதன் சொன்னபொழுது, கதாநாயகன் வேண்டாவிருப்பாய் அவள் வீட்டுக்குச் செல்கிருன். இதுவும் ஒரு ஹாஸ்யக் காட்சி. தாசி வீட்டிற்குப் புதிதாக வருவோரைப்பற்றியும், அவர்கள் அங்கே என்ன பேசுவது என்று தெரியாமல் விழிப்பதைப்பற்றியும், அவர்களைத் தாசிகள் ஏமாற்றிப் பணம் பறிப்பதைப்பற்றியும் மிக்க ஹாஸ்யரஸத்துடன் நடித்துக் காண்பித்தார்கள்.

ஆனுல் அடுத்தாற்போல், கதாநாயகன் பச்சாத்தாபப்படும் காட்சியானது சிரிப்பை எல்லாம் மறக்கும்படி செய்துவிட்டது. குதிரைப்பந்தயத்துக்குப் போவதைத் தன் அருமை மனைவியிடம் மறைத்து வைப்பது போதாதென்று, தாசிவீடு சென்ற துரோகமும் சேர்ந்துவிட்டதே என்று அவன் உருகுகிருன். அச்சமயம் "படாமுடியாதினித்துயரம்" என்று அவன் பாடியபோது சபையோரெல்லாம் கலகல வென்று கண்ணீர் வடித்தார்கள்.

* * *

கடன் மூண்டுவிட்டது. நான்குபக்கமும் கடன்காரர்கள் பிடுங்கித் தின்ன ஆரம்பித்தார்கள். கதாநாயகன், செய்வதென்னவென்று தெரியாமல் திணறுகிருன். இந்நிலைமையில் நாளை, சனிக்கிழமை "தப்பிலி கப்" என்னும் பந்தயத்தில் ஜயிக்கப்போகிற குதிரைக்கு அவனுக்கு "டிப்" கிடைத்தது. அந்தக் குதிரையை இரண்டு நாளாகப் பலபேர் வாங்க முயற்சி செய்வதாகவும், அதன் விலை ஏறிக்கொண்டே போவதாகவும், அவனுக்கு நிச்சயமாகத் தகவல் தெரிந்தது. நாளைமட்டும் அதில், 2000 ரூபாய் கட்டினுல் கட்டாயம் 20000 கிடைக்கும். கவலை யெல்லாம் தீர்ந்துவிடும். ஆனுல், 2000 ரூபாய்க்கு எங்கே போவது? இந்தச் சமயத்தில் அவனுடைய கட்சிக்காரன் ஒருவன் வந்து, கோர்ட்டில் கட்டுவதற்காக ரூ. 2000

கொடுக்கிறான். தான் படும் கஷ்டத்தைப் பார்த்துக் கடவுளேதான் இந்த ரூபாயை அனுப்பி இருக்கிறாரென்று கதாநாயகன் தீர்மானிக்கிறான்.

மறுநாள் சனிக்கிழமை கிண்டிக்குப்போய் "தப்பிலி கப்" பந்தயத்தில் குறிப்பிட்ட குதிரையின்மேல் ரூபாய் 2000-மும் கட்டுகிறான். அவனுடைய குதிரை புறப்படும்பொழுது முதலில் புறப்படுகிறது. வரும்பொழுது கடைசியில் வருகின்றது. இடையில் ஜாக்கி அதை 'புல்' பண்ணிவிட்டான் என்பது கதாநாயகனின் கொள்கை.

* * *

இனிமேல் எவ்விதக் கவலையும் கிடையாது. செய்யத்தக்கது ஒன்றே ஒன்றுதான் பாக்கி இருந்தது. கதாநாயகன் தனியாகத் தனது அறையில் உட்கார்ந்து தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். அதில் ஆதியோடந்தமாக எல்லா விவரங்களையும் கூறுகிறான். கட்சிக்காரன் பணத்தை நாளைத் திங்கட்கிழமை கோர்ட்டில் கட்டாவிட்டால், துர்வினியோகம் செய்ததாய் ஏற்படுமென்றும், அட்வொகேட் தொழிலிலிருந்து தள்ளப்பட்டு அழியாத அவமானத்துக்கும் உள்ளாக வேண்டுமென்றும், அவளுடைய நகைகளை விற்றுக் கொடுப்பது ஒன்றுதான் வழி என்றும், அதைவிடத் தான் தூக்குப் போட்டுக் கொண்டு இறப்பதே மேல் என்று தீர்மானித்து விட்டதாகவும் தெரிவிக்கிறான். அவளிடம் தான் கொண்ட அழியாத அன்பைப்பற்றிப் பிறகு விரிவாக எழுதி, அவளுக்கும் குழந்தைக்கும் தனது லட்சோப லட்சம் முத்தங்களை அளித்துக் கடிதத்தை முடிக்கிறான்.

* * *

கதாநாயகி ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் குழந்தையுடன் ஒரு சிநேகிதியின் வீட்டுக்குப் போகிறாள். அவள் போன பிறகு கதாநாயகன் மேற்படி கடிதத்தை அவளுடைய அறையிலிருந்த மேஜையின்மேல் வைத்துவிட்டுத் தூக்குப் போட்டுக்கொள்வதற்காகத் தன் அறைக்கு வருகிறான். மேலே உத்தரத்தில் சுருக்குப் போட்டுக் கயிறு கட்டிவிட்டுக் கடவுளை நோக்கித் தோத்திரம் செய்கிறான். ஞாபக மறதியால் வீட்டுக்கதவு எதையும் தாழ்ப்பாளிட மறந்து விடுகிறான். இதற்குள் சிநேகிதி வீட்டுக்குச் சென்ற கதாநாயகி தன் மனம் ஏதோ பரபரப்பு அடைந்திருப்பதைக் காண்கின்றாள். உடம்பு ஒரு மாதிரியாய் இருக்கிறதென்று சொல்லிவிட்டு உடனே வீடு திரும்புகிறாள். வீட்டுக்கு வந்து மேஜைமீதிருந்த கடிதத்தைப் [illegible]ார்க்கிறாள். உடனே பதைபதைத்து ஓடுகிறாள்.

கதாநாயகன் சுருக்கை மாட்டிக்கொள்ளும் சமயத்தில், அவனைப் போய்க் கட்டிக்கொண்டு, கோவென்று கதறுகிறாள்.

*　*　*

அந்தச் சமயத்தில் பாதிப் பாட்டும், பாதிப் பேச்சுமாகக் கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் நடந்த சம்பாஷணையின்போது சபையில் கண்ணீர்விட்டுக் கதறாதவர்கள் யாரும் இல்லை யென்று சொல்லலாம். "உங்களைவிட எனக்கு இந்த நகைகள் பெரிதா?" என்று சொல்லிக் கதாநாயகி ஒவ்வொரு நகையாகக் கழற்றிக் கொடுக்கிறாள். ஒவ்வொரு நகைக்கும் அவள் ஒரு பாட்டும், பதிலுக்குக் கதாநாயகன் ஒரு பாட்டும் பாடுகிறார்கள். இந்தக் கட்டத்தில் சபையில் முக்கியமாகப் பெண்மணிகள் பகுதியில் உண்டான அல்லோலகல்லோலத்தைச் சொல்லச் சாத்தியம் இல்லை. விம்மி விம்மி அழுதபடியால் தொண்டை காய்ந்துபோய், சோடாவாங்கிக் குடித்துத் தாகசாந்தி செய்துகொண்டு, மறுபடியும் அவர்கள் அழலானார்கள். கதாநாயகி தன் வைரக்கம்மலைக் கழற்றிக் கொடுத்த போது ஒரு பெண்மணி உருக்க மிகுதியால் மூர்ச்சையடைந்தே விழுந்து விட்டாளென்றால், வேறு சொல்லவும் வேண்டுமோ?

*　*　*

எல்லா நகைகளையும் கழற்றிவைத்துவிட்டுக் கதாநாயகி, "இவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். நாமிருவரும் கூலிவேலை செய்து பிழைப்போம். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் ஒரு வரங்கொடுங்கள்" என்று கேட்கிறாள். "என் உயிரைக் கேட்டாலும் தருகிறேன்" என்கிறான் கதாநாயகன். "இனிமேல் குதிரைப் பந்தயத்திற்குப் போவதில்லை என்று சபதஞ்செய்யுங்கள்" என்கிறாள். "ஆண்டவன் ஆணை! உன்மேல் ஆணை! நமது அருமைக் குழந்தையின்மேல் ஆணை! நான் இனிக் குதிரைப் பந்தயத்திற்குப் போவதில்லை. அதைப்பற்றி நினைப்பதுமில்லை" என்று கதாநாயகன் சபதஞ் செய்கிறான். அச்சமயம் சபையில் வீற்றிருந்தவர்களில் அநேகரும் இவ்வாறே தங்களுக்குள் சபதம் செய்துகொண்டார்கள்.

*　*　*

நாடகம் சந்தோஷமாக முடிகின்றது. கதாநாயகன் நகைகளை விற்பதற்காகக் கிளம்பும் தறுவாயில் ஒரு தந்தியும் ஒரு கடிதமும் வருகின்றன. தந்தியில் அவனுக்கு ஜில்லா முன்சீப் உத்தியோகமான செய்தி இருக்கிறது. கடிதத்தில் கதாநாயகியின் பாட்டி இறந்து போனதாகவும் அவள் தனது உயிலில் கதாநாயகிக்கு ரூ. 30,000 எழுதி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மங்களம் பாடித் திரைவிழுந்து நாடகம் முடிவுறுகின்றது.

*　*

எதிர்பார்த்த அளவுக்குமேல் வெற்றியுடன் நாடகம் நடந்தேறியதென்பதில் சந்தேகமில்லை. பின்னும் இரண்டு இரவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டது. முன்னைவிட அதிக ஜனங்கள் கூடினார்கள். அதிகக் கண்ணீர் வடிக்கப்பட்டது. அதிகம் பேர் குதிரைப் பந்தயத்திற்குப் போவதில்லை என்று சபதஞ்செய்தார்கள். கடைசியாகப் பொது ஜனங்களின் பிடிவாதமான வேண்டுகோளின் பேரில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை 'மாடினி' நாடகம் நடத்தினார்கள். அதுவும் சிறப்பாக நடந்தேறியது.

* * *

திங்கட்கிழமை ராஜுவும் சீனுவும் உட்கார்ந்து கணக்குப் பார்த்தார்கள். எல்லாச் செலவுகளும் போய் 5000 ரூபாய் மீதமிருந்தது. தலைக்கு ரூபாய் 2500 என்று பிரித்துங் கொண்டார்கள். போட்ட திட்டத்தில் ஒன்றே ஒன்றுதான் தவறிற்று. புத்தகம் அச்சிட்டார்களல்லவா? நாலுநாளும் நாடகக் கொட்டகையில் விற்றதில் 3 புத்தகங்கள்தாம் விற்பனையாயின. பாக்கி முழுதும் மிஞ்சிவிட்டது. ஆயினும் இதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. நாளடைவில் விற்றுவிடலாம், அல்லது பத்திரிகைகளுக்கு மதிப்புரை அனுப்பிச் செலவு பண்ணிவிடலாம் என்று தீர்மானித்தார்கள்.

"இன்னும் 15 நாள் உனக்கு லீவு இருக்கிறதே? என்ன செய்யப்போகிறாய்?" என்று சீனு கேட்டான்.

"ஊருக்குப்போய் ரொம்ப நாளாயிற்று. எல்லாரையும் அழைத்துக் கொண்டு போகலாமென்றிருக்கிறேன்" என்றான் ராஜு.

"சரி, போய்வா! வெகு நாளாக எனக்குக் கோடைக்கானலுக்குப் போகவேண்டுமென்று ஆசை. அங்கே போகிறேன்" என்றான் சீனு.

* * *

அடுத்த சனிக்கிழமை உதகமண்டலத்தில் குதிரைப் பந்தய மைதானத்தில் இரண்டு மனிதர்கள் தற்செயலாகச் சந்தித்தார்கள். அவ்விடத்தில் அவ்வாறு ஒருவரை ஒருவர் சந்திப்போமென்று அவர்கள் கனவிலும் எதிர் பார்க்கவில்லையாதலால், பிரமித்துப் போய் ஐந்து நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்கள்.

"நீ ஊருக்குப் போகவில்லை?" என்றான் சீனு.

"நீ கோடைக்கானலுக்குப் போகவில்லை?" என்றான் ராஜு.

அப்பொழுது அந்த மைதானத்தில் "தப்பிலிகப்" பந்தயத்திற்காகக் குதிரைகள் அதிவேகமாக ஓடிவந்து கொண்டிருந்தன.

ஜ்வரத்தால் விளைந்த கேடு

ஸி. வி. நாராயண ஐயர்

"ஏண்டா பாச்சா! பூட்ஸ் காலோடு கூடத்துக்கு வரக் கூடாது என்று எவ்வளவு முறை உனக்குச் சொல்லுகிறது? இது சுத்தமாயிருக்க வேண்டிய இடமல்லவா? உனக்குக் கொஞ்சமும் ஞானமில்லையே. நீ எப்படித்தான் முன்னுக்கு வரப்போகிறாயோ?" என்று கோபமாய்ச் சொன்ன தன் தகப்பனாரைப் பார்த்துப் பார்த்த ஸாரதி, "மறந்து விட்டேனப்பா! ஏதோ அவசரம்" என்று சொல்லி வெளியே போய்த் தன்னுடைய அறையில் சட்டை, நிஜார், பூட்ஸ், முதலியவற்றைக் கழற்றி வைத்து மீண்டும் உள்ளே போனான். கை கால் கழுவின பின்பு அவன் சமயலறைக்குச் சென்றதும் அவன் தாயார் சிற்றுண்டி கொடுக்க அதைப் பெற்றுத் தின்று கொண்டிருந் தான். அப்பொழுது தாயார் அவனிடம், "பாச்சா! அந்தப் புளு கன் இன்றைக்கும் வந்தாண்டா. நாளைக்குப் பூஜையாம். நமக்கு ஏதோ கேடுகாலம் வந்து விட்டது. இல்லாவிட்டால் இவ்வளவு காலமாய் நல்ல புத்தியோடிருந்த உன் தகப்பனாருக்கு இப்பொழுது இந்தப் பயித்தியம் பிடிப்பானேன்? தாம்ரத்தைத் தங்கமாக மாற்று வது இந்த நாளிலே முடியுமா? எவனோ ஒரு திருட்டுப்பயல் சொன்ன வார்த்தையைக் கேட்டு இவர் நம்புகிறாரே. அது மாத் திரமோ? ரூபாய் எவ்வளவு தொலைத்தாய் விட்டது? இன்னும் இரண்டு வருஷம் நீ 'எம்-பீ-வி-எம்' பரீக்ஷைக்குப் படிக்கவேணுமே. கோமளத்திற்குக் கலியாணம் நடக்கவேணுமே. இதெல்லாம் நினைத்து நினைத்து என் உடம்பு துரும்பாய்ப் போகிறது. இந்தக்கஷ்டத்தை யாரிடம் சொல்வது?" என்று மிகுந்த வருத்தத்துடன் சொன்னாள்.

அதைக் கேட்ட பார்த்தஸாரதி, "அம்மா! கவலைப்படவேண் டாம். நான் இதற்கு ஓர் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி ஆகாரத்தைத் தின்று முடித்தான். பிறகு தன் தகப்பனாரிடம் போய், "அப்பா! அந்த ஸித்தர் இன்றைக்கு வந்தாரோ?" எனவே விஜயராகவையங்கார் பின் வருமாறு விடை கூறலானார்:

விஜய:—ஆமாம்! வந்தார். அவர் சாதாரணப் பேர்வழியில்லை. வெகு காலமாய் மலைகளிலே சஞ்சாரம் செய்து பெரிய பெரிய மகான் களுக்கெல்லாம் குற்றேவல் செய்து இந்த 'ஹேம ஸித்தி'யைச்

சம்பாதித்திருக்கிறார். இப்பொழுது எனக்கு ஐம்பத்தெட்டாவது வயதாயிற்றல்லவா? இது வரையிலும் நான் இந்த மாதிரியான ஸித்திகளிலே நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் நாலு மாதங்களுக்கு முன் எனக்கு 'இன்ப்ளுவென்ஸா' என்ற ஜ்வரம் வந்ததே. அந்த ஜ்வரம் விலகின பிற்பாடு நான் ஆள் மாறிவிட்டேன். என் புத்திக் கூர்மை அதிகரித்து விட்டது. நித்திரை குறைந்து விட்டது. இரவிலே எனக்கு என்னென்ன காட்சிகளெல்லாமோ தோன்றுகின்றன. அப்பொழுது சில அபூர்வமான விஷயங்களெல்லாம் தெளிவாகின்றன. தாம்ரத்தைத் தங்கமாக மாற்றலாம் என்ற உண்மை எனக்கு இப்பொழுது தெரிந்திருக்கிறது. ஆகையினாலே தான் இந்த ஸித்தர் வார்த்தையை நான் நம்புவது. நீ சிறு பையன். உன்னைப் போல எனக்கும் இருபத்திரண்டு வயதாயிருந்த போது உலக வியவகாரங்களிலே முழுகிக்கிடந்தேன். மந்திர சாஸ்திரம் முதலியவற்றில் நம்பிக்கை யில்லாமல் காலம் கழித்தேன்.

பார்த்த:—சரி சரி. ஆனாலும் நாம் ஏன் பணத்தைச் செலவழித்து இந்தப் பரீக்ஷைகளெல்லாம் பார்க்கவேண்டும்? அப்படிச் செய்வது பேராசையையல்லவா குறிக்கும்?

விஜய:—அட போடா பயித்தியமே! எனக்கா பேராசை? என்னைப்போலத் தர்ம சிந்தை யாருக்கடா இருக்கும்? நம்முடைய நாட்டிலே எவ்வளவு ஏழைகளிருக்கிறார்கள்? அவர்களுக்காகவல்லவா நான் இந்த வழியிலே புகுந்திருப்பது? இந்த அபூர்வமான ஸித்தியைப் பெற்றுக் கொண்டோமானால் பல பேருக்குள்ள வயிற்றுப் பசியை மாற்றி விடலாமே.

பார்த்த:—அதென்னவோ. நமக்கு அவமானம் ஏற்படாமலிருக்கவேண்டும். அவ்வளவு தான்.

இப்படி அவன் சொல்லி முடிந்ததும் அவர்களாற் குறிக்கப்பட்ட ஸித்தர் வந்தார். அவர் பெயர் அற்புதானந்த யோகீசுவரர். அவரைக் கண்டதும் ஐயங்கார் அவர்கள், "வரணும்! வரணும்" என்று விரைவாய் அழைத்து நாற்காலியிலிருத்தி, "அம்மா! கோமளம்! ஸ்வாமியார் வந்திருக்கிறார். தோசையும் காப்பியும் கொண்டுவா" என்று உத்தரவளித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஆகாரம் வந்தது. அப்பொழுது,

யோகீசுவரர்:—ஐயங்காரவாள்! உங்கள் ஊர் திருநெல்வேலி தானே. இதோ வந்திருக்கிற தோசை யுண்டே. இதனுடைய மாகாத்மியத்தைப் பற்றித்தெரிந்திருப்பவர்கள் மிகவும் ஸ்வல்பம். தோசை தோசை [என்றால் எல்லாம் தோசையாகுமா? திருநெல்வேலி

ஜில்லாத் தோசை தான் தோசைகளுக்கெல்லாம் இராஜாதிராஜன். அந்த ஜில்லாவிலே பிறந்தவர்களுக்குத்தான் சில அபூர்வமான தோசை ரஹஸ்யங்கள் தெரியும். அங்கே விளைகிற உழுந்து தான் தோசைக் கென்று எடுத்த உழுந்து. அடாடா! அந்த வெள்ளைச் சம்பா அரிசியும், அந்த உழுந்தும், அவற்றைச் சேர்க்க வேண்டிய கணக்கும், அரைக்கவேண்டிய பக்குவமும்! ஆஹா! அதைப்பற்றிப் பேசுவதானல் ஒரு நாள் முழுதும் பேசலாம். இதோ பாருங்கள். இந்த ஊரிலே நியாயாதிபதியாக மாற்றப்பட்டு வந்த நெல்லையப்ப பிள்ளையைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே. அவர் எனக்கு நிரம்பவும் வேண்டினவர். இந்த ஊருக்கு வந்ததும் முதல் முதல் அவர் என்ன சாமான் வாங்கினர் என்று நினைக்கிறீர்கள்? ஒரு பெரிய கல்லுரல். அவரல்லவா தோசையின் சுவையை உணர்ந்தவர்?''

என்றிப்படி ஆரம்பித்து அரை மணி நேரம் பேசினர். இடையிடையே ஐயங்காரவர்களும் விடை கூறிக்கொண்டே இருந்தார். பார்த்தஸாரதி அந்த அறையிலே தனக்கு வேலையில்லையென்று தெளிந்து வெளியே புறப்பட்டுப் போனான். ஸித்தர் வீசின வலையிலே தன் தகப்பனர் சிக்கி விட்டாரே என்று நினைத்து வருத்தமுற்ருன். வைத்தியப் பரீக்ஷைக்குப் படிப்பவனதலால் தன் தகப்பனரின் உண்மையான தேக நிலைமை அவனுக்குத் தெரியும். 'இன்ப்ளுவென்ஸா' ஜ்வரம் கடினமாய் வந்திருந்தால் அதிலிருந்து தப்பினவர்களுக்கு அது ஏதாவது தீங்கு செய்தே தீரும் என்று அவன் அறிந்தவன். இயற்கையாகவே தன் தகப்பனர் அதிகமாய்ப் புத்தியை உபயோகப்படுத்துபவரானதால் அந்த ஜ்வரம் அவருடைய மூளை நரம்புகளைப் பாதித்து ஒரு விதமான பயித்தியத்தை உண்டாக்கி விட்டதென்று அவன் தீர்மானித்தான். ஆகையினலே தான் இந்த யோகீசுவரர் மீது அவர் நம்பிக்கை வைத்திருந்தார் என்றும் அறிந்தான். ஆகையால் எப்படியாவது யோகீசுவரர் தந்திரங்கள் பலியாமற்போக ஒரு வழி தேடவேண்டுமென்று நிச்சயித்தான்.

* * * *

மறுநாள் வெள்ளிக்கிழமை. காலையில் மணி ஏழரையாயிற்று. விஜயராகவையங்காருடைய வீட்டின் நடுக் கூடம் மெழுகிக் கோலமிட்டு வைத்திருந்தது. குத்துவிளக் கேற்றப் பட்டிருந்தது. யோகீசுவரர் வருகிருரோ என்று பார்த்துக்கொண்டே ஐயங்கார் வாயிலண்டை வருவதும் உள்ளே போவதுமாயிருந்தார். இடையிடையே பரபரப்புடனும் கோபத்துடனும் சில மொழிகளைப் பேசிக்கொண்டு இருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் யோகீசுவரர்

வந்தார். பிற்பாடு பல சூத்துக்கள் நிகழ்ந்தன. தரை மீது சில சக்கரங்கள் வரையப்பட்டன. வரட்டிகள் அடுக்கப் பெற்றன. எல்லாவித ஏற்பாடுகளும் முடிந்த பின் யோகீசுவரர், "ஐயங்காரவாள்! நான் கொஞ்சம் நிஷ்டையிலிருக்கிறேன். நீங்கள் அரையணுக் கொடுத்தனுப்பி ஒரு தாம்ரத்துண்டு வாங்கி வரச்செய்யுங்கள். நான் வரும்போது இந்தத் தெருக்கோடியில் ஒரு தட்டான் பட்டரை திறந்திருப்பதைப் பார்த்தேன். அவனிடம் கேட்டால் ஒரு துண்டு வாங்கலாமென்று நினைக்கிறேன்" என்றார். "ஆஹா! அப்படியே" என்று சொல்லி ஐயங்கார் வேலைக்காரனை யனுப்பினர். பத்து நிமிஷத்திலே தாம்ரக்கட்டியும் வந்தது. அதை யோகீசுவரர் கையிலெடுத்து அதன் மேல் ஏதோ ஒரு மருந்தைத் தடவி அதை வரட்டிக்குவியலின் மத்தியிலே வைத்து நெருப்பை மூட்டி ஸ்புடம் பண்ணினர். ஏதேதோ மந்திரங்களும் சொன்னர். ஒரு மணி நேரம் சென்றதும் வரட்டிச்சாம்பரிலிருந்து அதை எடுத்துப் பார்த்ததும் அது உண்மையாகவே தங்கக்கட்டியாய்க் காணப்பட்டது. பார்த்தவர்கள் யாவரும் வியப்புற்றார்கள்.

யோகீசு:—ஸ்வாமீ! இப்பொழுது பரீக்ஷை காண்பித்துவிட்டேன். இனி இந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமில்லையே?

விஜய:—சந்தேகமா? நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்களைப் போன்ற மகான்களுக்கு இதுவா பெரிது? இந்த வித்யையை எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அது தான் என் பிரார்த்தனை.

யோகீசு:—ஆஹா, செய்கிறேன். ஆனல் நான் முன்னமே சொல்லியிருப்பது போல இப்பொழுதும் சொல்லுகிறேன். தான தர்மம் செய்ய நினைப்பவர்களுக்கு மாத்திரந்தான் இந்த வித்யையைக் கற்றுக்கொடுக்கலாம். ஆகையால் நீங்கள் பதினயிரம் ரூபாய் செலவிடத் தயாராக விருக்கிறீர்களா? நான் ஒரு தர்மசாலை கட்டப் போகிறேன். வேண்டுமானல் நீங்கள் என்னிடம் உங்கள் தர்மத்தை ஒப்பித்து விடலாம்.

விஜய:—இந்த வித்தி வந்து விட்டால் பதினயிரமா பெரிது?

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பார்த்தசாரதி உள்ளே வந்தான். அவன் திடீரென்று யோகீசுவரரைப் பார்த்து, "ஓய்! யோகீசுவரரே! நீர் எங்களிடம் இது வரையில் வாங்கியிருக்கும் இருநூறு ரூபாயையும் மரியாதையாய்க் கீழே வைக்கிறீரா? இல்லை, நான் வெளியே நிறுத்தியிருக்கும் போலீசு உத்யோகஸ்தரிடம் உம்மை ஒப்புவிக்கட்டுமோ?" என்றான்.

இதைக் கேட்ட யாவரும் திகைத்தார்கள். ஐயங்கார் அவர்களுக்குக் கோபம் பொங்கிற்று. யோகீசுவரரும் வெகுண்டு, "என்னடா பயலே! என்னை யாரென்று நினைத்தாய்?'' என்றார்.

பார்த்த:—தெரியுமடா உன் செய்தியெல்லாம். உன் கடையைக் கட்டு. அடே மாயாண்டீ! ஸி-ஐ-டீ கோபால் ராவ் வெளியே நிற்கிறார். மாடசாமியை பிடித்தாய் விட்டது. அவனை 'அப்ரூவர்' ஆக எடுத்திருக்கிறார்கள். ஜாக்கிரதை.

யோகீசுவரர் இதைக் கேட்டதும் ஓட்டம் பிடிக்க நினைத்துக் கதவண்டை வந்தார். அங்கே பார்த்தசாரதிக்கும் யோகீசுவரருக்கும் ஒரு சிறு மல் யுத்தம் நடந்தது. அதிலே வெற்றி பெற்ற யோகீசுவரர் கதவைத்திறந்து வெளியே வந்ததும் அங்கே தயாராய் நின்று கொண்டிருந்த ஆறு பால்யர்கள் ஒன்று சேர்ந்து யோகீசுவரரைப் பிடித்துக் கட்டிவிட்டார்கள். பின்பு யோகீசுவரர் அணிந்திருந்த வஸ்திரத்தைச் சோதித்தபோது நோட்டாக ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. தம் ஜபம் சாயவில்லை என்று தெரிந்த யோகீசுவரர், "பாச்சா! அதிலிருந்து இருநூறு ரூபாயை எடுத்துக் கொண்டு பாக்கியைத் தந்து என்னை அனுப்பிவிடு. நான் இங்கே இனி வரவேமாட்டேன். இது உண்மை'' என்றார். கொஞ்சமும் பிரியமில்லாமல் இணங்குவது போலப் பாவனை செய்து பார்த்தசாரதி அப்படியே செய்தான். யோகீசுவரரும் வெகு விரைவாகப் போய் விட்டார்.

இதை யெல்லாம் கவனித்த விஜயராகவையங்கார், "பாச்சா! இதென்ன கூத்து? இவன் மாயாண்டி என்று எப்படி அறிந்தாய்? அப்படித் தெரிந்த பின்னும் அவனை ஏன் விட்டு விட்டாய்?'' என்றார்.

பார்த்த:—"இவன் வந்த நாள் முதல் நான் இவன் மீது சந்தேகம் கொண்டிருந்தேன. போலீசு ஸப் இன்ஸ்பெக்டரைச் சிநேகம் பண்ணிக்கொண்டு பழைய திருடர்கள் வரலாறெல்லாம் பார்த்தேன். போலீசாரிடம் இருக்கும் சில படங்களையும் பார்த்தேன். மூன்று வருஷங்களுக்கு முன் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துப் போன மாயாண்டித்தேவன் போட்டோவும் இவன் முகச்சாடையும் ஒரே மாதிரியாக இருப்பதால் என் சந்தேகம் அதிகரித்தது. மாயாண்டியும் மாடசாமியும் சேர்ந்து கல்லிடைக் குறிச்சியிலே கொள்ளையடித்தார்களென்றும் அவர்களைப் பிடித்தது ஸி-ஐ-டி. கோபால்ராவ் என்றும் போலீஸ் டைரியிலே எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சமாச்சாரத்தை உபயோகித்து இவனை இன்று மிரட்டினேன். திருட்டுத் தட்டான் செப்புக்கட்டிக்குப் பதி

லாகத் தங்கக்கட்டியைக் கொடுத்திருப்பான் என்று நிச்சயித்தேன். நான் நினைத்ததெல்லாம் உண்மை யென்று இப்பொழுது வெளிப் பட்டது. ஆனால் கேஸ் நடத்த நமக்குத் தகுந்த அத்தாட்சிகளில்லை. மாடசாமி அகப்பட்டானென்றதும் கோபால் ராவ் இங்கே யிருக் கிறார் என்றதும் என் கைச்சரக்கு. அவ்விருவரும் எப்படி யிருப் பார்கள் என்பது கூட எனக்குத் தெரியாது. வெளியே நின்று இவனைப் பிடித்தவர்கள் என்னுடன் படிக்கும் பிள்ளைகள். இனி நேரமாகிறது. நாங்கள் காலேஜுக்குப் போகவேண்டும்'' என்று சொல்லி வெளியே போனான்.

அவன் சென்ற பின்பு விஜயராகவையங்கார் சிறிது நேரம் மௌனமாயிருந்து, "சரி, சரி. என் புத்திமோசத்திற்குக் காரணம் இந்த 'இன்புளுவென்ஸா' ஜ்வரம் தான். மூளை கெட்டுப் போய் விட்டது போலும். இனி நான் பயித்தியம் தீர நல்ல மருந்து சாப் பிட வேண்டியது தான்'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண் டார்.

சோதிடப்புலி சோணுசலம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

" கணித ஆராய்ச்சி "

நேற்று வருஷப் பிறப்பன்று மாலே சுமார் 5-மணி நேரத்தில் கடற்கரைக்குச் சென்று மாதர்கள் கலாசாலேக்கெதிரில் தண்ணீர்க் கரையருகில் போய் உட்கார நினைந்து மணலில் இறங்கினேன். அங்கு ஆடவர்களும் பெண்மணிகளும் கூடி உல்லாசமாய் நடந்து கொண்டும் ஆங்காங்குக் கூட்டமாய் உட்கார்ந்து கொண்டும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனல் ஒருவர் மாத்திரம் தனியே உட் கார்ந்து தரையில் ஏதோ கோடுகிழித்து அதைப் பார்த்துக்கொண் டிருந்தார். அவர் அருகில் சென்றதும் அவர் என் நண்பர் கணித ஆராய்ச்சியில் தேர்ந்த கந்தசாமி யென்று தெரிந்தது. உடனே பக்கத்தில் உட்கார்ந்து அவரைத் தட்டி, "என்ன, இக்கடல் அலே களின் மீது தவழ்ந்து வரும் இளங்காற்றின் நலத்தைக் கொஞ்ச மேனும் மதியாது கணித ஆராய்ச்சியில் ஆழ்ந்திருக்கிருய்?'' என் றேன். அவர் திரும்பிப்பார்த்து, "நீயா ? நான் ஏதோ ஒரு கடின மான விஷயத்தைப் பற்றித்தான் ஆலோசித்துக் கொண்டிருந்தேன்'' என்ருர்.

இவ்வாறு நாங்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் பின் புறத்தில் யாரோ வருகிற சத்தங்கேட்டுத் திரும்பிப்பார்த்தேன்; என் நண்பன் சோணுசலம் வந்து பக்கத்தில் உட்கார்ந்தான்.

"என்னப்பா, இத்தனே நாளாய்க் கண்ணில் அகப்படவில்லேயே. இதுவரையில் எங்கே போயிருந்தாய்?'' என்றேன்.

"அதையேன் கேட்கிருய் ? கொஞ்சங்கூட ஒழிவில்லே. நான் போகாத இடம் கிடையாது. வீட்டிலிருந்தால் விடமாட்டேனென் கிருர்களென்று இவ்விடம் ஓடிவந்தேன். சற்று நேரமாவது கவலே யற்றிருக்கலாமென்று வந்தேன். நல்ல வேளே உன்னேயும் பார்த் தேன்.''

"அதிருக்கட்டும்; இவரை உனக்குத் தெரியுமோ ? இவர் என் நண்பர் கந்தசாமி.''

"அப்படியா ! உன் நண்பர் என்ருல் என்னுடைய நண்ப ரென்றே கருதுகிறேன். இவர் முகத்தைப் பார்க்கையில் இவர்

கணிதத்தில் வல்லவரெனத் தோற்றுகிறது. உனக்கோ அதில் பிரவேசமில்லையே. எப்படி உங்களிருவருக்கும் சினேகம் ஏற்பட்டதென்று வியக்கிறேன்''

"அடே! கேட்டதில்லையா? இருவரும் வித்வான்களாயிருந்தால் சினேகம் ஏற்படுவதில்லையன்றோ? அது நிற்க; இவருக்கும் என்னைப் போல் சோதிடத்தில் நம்பிக்கை இல்லை. நீயோ அதையே தெய்வமாகக் கொண்டாடுகிறவன். ஆதலினால் உங்களிருவருக்கும் நட்பு விருத்தியாகுமென்பதில் ஐயமில்லை''

"நீ நம்பாமலிருந்தால் அவரும் நம்பவில்லையென்று சொல்லுகிறாய்போலும்! நான் கூறும் சனி நாடியை அவர் கேட்ட பின் அவர் நம்புவாரென்பது நிச்சயம். உன் பேச்சைக்கேட்டு அவர் மயங்குவாரென்று நினைக்கவில்லை. இவருடைய ஜாதகத்தின் கிரக நிலையை ஒருவாறு நான் தெரிந்து கொண்ட வண்ணம் சொல்லுகிறேன்:

பெண்ணிற்புதன் சேரப்பெருங் கோலிற்சனி கூட
விண்ணிற்பொலி வில்லிற்குரு கூடவிடை யதனில்
மண்ணிற்பிறந் தவன்சேரதை வகையாயுரைத் திடுவன்
எண்ணிற்பல வாராய்ச்சிகள் இயல்பாயியற் றிடுவோன்''

"ஆகா! நாங்கள் கணிதத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு வந்து இப்படிச் சொல்லி விட்டாய். ஈதென்ன விசேஷம்?''

"அப்படியானால், அவர் ஜாதகத்தின் கிரகநிலைகளைக்கூட நீங்கள் பேசிக்கொண்டிருந்தீர்களோ? இல்லையே. அவைகள் எப்படி எனக்குத் தெரிந்தன? இம்மாதிரி குதர்க்கம் செய்வதைக் காட்டிலும் இவரிடத்திலிருந்து புதிய ஆராய்ச்சி விஷயங்களைத் தெரிந்து கொள்வது உபயோகமல்லவா? நம்முடைய வாதத்தை நிறுத்திக் கொள்வோம்''

"அப்படியானால், என்ன கந்தசாமி, இப்பொழுது ஏதோ புதிதாய் ஈன்ஸ்டீன் என்பவர் கண்டுபிடித்திருக்கிறதாய்ச் சொல்லுகிறார்களே; அதென்ன விஷயமென்பதை நாங்களறியும்படி சொல்லு பார்ப்போம்.''

"ஏ அப்பா! பெரிய போடாய்ப் போட்டுவிட்டாய். அவ் விஷயங்கள் கணித சாஸ்திர வித்வான்களுக்குக்கூட இன்னமும் தெளிவாய்த் தெரிந்தபாடில்லை. அவற்றைத் தமிழில் உங்களுக்குத் தெரியும் வண்ணம் சொல்லுவது அசாத்தியமாகும். ஆனால் என்னாலியன்றமட்டும் சொல்லுகிறேன். ஈன்ஸ்டீன் என்பவர் பேரால்

வழங்கும் கொள்கையை ஒருவாறு 'கால ஸாபேக்ஷத்துவம்' என்று சொல்லலாம். அதாவது எந்தப் பதார்த்தத்தைப் பற்றிக் கணக்கிட்டபோதிலும் காலத்தையும் கூட்டியே பார்க்க வேண்டும். அவ்வாறு காலத்தை அபேக்ஷித்துக் கணக்கிடாத பக்ஷத்தில் தவறுகள் வருகின்றன. ஆதலால் காலமும் ஒரு பொருளாகவே கருதப்பட வேண்டும் என்பதாம்''

இதைக்கேட்ட சோணாசலம், "அப்படியா! இக்கொள்கை எவ்வளவு காலத்திற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது?'' என்றான்.

"சுமார் பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன்னிருக்கும்''

"அப்படியா? இது புதிய கொள்கை என்று சொல்லுகிறீர்கள்? நம் தேசத்தில் ஆதியில் வைசேஷிக மதஸ்தர்கள் காலத்தையும் ஒரு பொருளாகக் கூறியிருக்கின்றனர். அது நிற்க; தமிழுலகில் ஆதியிலக்கணமாகிய **அகத்தியத்**தில் இது பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

ஆதிபூத மறுவகைத் தாகும், அவைதாம்
மண்ணொடு நீரும் தீயொடு வளியும்
விண்ணொடு காலமு மென்மனர் முனிவர்''

இதைக் கேட்ட கந்தசாமி பிரமித்திருக்கையில் நான் சோணாசலத்தைப் பார்த்து,

"இதென்ன! சோதிடம் போதாதென்று இலக்கணத்திலும் உன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டாயே! அகத்தியமென்று கேள்விப்பட்டதேயல்லாது, இதுவரையில் அப்புஸ்தகத்தைப் பார்த்தவர்கள் கிடையாது. அதிலிருந்து சூத்திரம் நீ எப்படித் தெரிந்துகொண்டாய்? அகஸ்தியர் இருப்பிடமாகிய பொதிய மலையை முழுவதுஞ் சல்லடைபோட்டுச் சலித்துப் பார்த்தும் அகஸ்தியரையும் காணவில்லை; அவரியற்றிய அகத்தியத்தையும் காணவில்லை எனத் திரும்பிவிட்டார்களே. நீ எங்குக் கண்டாய்?'' என்றேன் நான்.

"அடாடா! அதுவும் என் குற்றமா? ஆனைகெட்டவன் குடத்தில் தேடுவதுபோல் அகத்தியர் பொதிய மலையில் தேடினால் அகப்படுவாரோ? பூர்வத்தில் மகாதேவர் உமாதேவியை மணந்த காலத்தில் தென்திசை மேலெழும்பாமற் காத்தற் பொருட்டு அங்கு வந்து தங்கிய அகத்தியர் அங்கேயே நிலையாக இருக்கிறாரென்று எண்ணுவது பிசகன்றோ? மணம் முடிந்தவுடன் எப்பொழுதும் போல் அரனாருகில் அகலாது கைலாசத்தில் வசித்து அவரிடத்துத் தமிழறிந்து

வருகிறாரென்பது பொய்யா? இதை யுணராது உலகம் பொதிய மலையில் தேடுவது என் குற்றமா? நான் கைலாசத்திற்கு யாத்திரை போயிருந்த காலத்தில் அநேகம் மகான்களைக் கண்டேனென்று முன்னமே உனக்குச் சொல்லவில்லையா? அங்குத்தான் அகத்திய ரையும் கண்டு வணங்கும் பாக்கியமடைந்தேன். அவரிடத்தில் கொஞ்ச நாள் தங்கிய பொழுது அவரருளால் சில அரிய விஷயங் களைத் தெரிந்துகொண்டேன். இன்னமும் நமது முனிவர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை யென்பது உனக்குத் தெரியவில் லையே. உலகத்தில் ஒன்றும் புதுமையில்லை. நம்மவர்கள், ஜர்மனி தேசத்திலிருந்து வந்தவர்கள் இங்கிருந்த பழைய சுவடிகளைக் கொண்டுபோய் அவைகளிலிருக்கும் விஷயங்களைத் தாங்கள் புதியன வாகக் கண்டுபிடித்ததாக வெளியிடுகிறார்களென்று சொல்லுவது உண்மையென்று இப்பொழுது நான் நம்புகிறேன்.''

"ஏ அப்பா! மூச்சுவிடாமல் பேசுகிறாயே. மேல்நாட்டார்கள் புதியனவாகக் கண்டுபிடிப்பவைகளெல்லாம் நம்மவர்களிடத்திலிருந் தவை யென்று சொல்லுவாய் போலும்!''

"அதற்கென்ன சந்தேகம்? இப்பொழுது அவர்கள் காலத்தில் சாபேக்ஷத்துவத்தைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் அதனை நம் மவர்கள் எப்பொழுதும் நம்பியிருந்தார்கள். அதன்றியும் மற்றைய பூதங்களெல்லாம் காலத்தில் அடக்கமென்றும் அக்காலமும் கடவு ளிடத்தடக்கம் என்று கருதி வந்தனர். இதையே புலிச்சித்த ரியற்றிய பூதப்புகுதி யென்னும் நூலில் பின் வருமாறு கூறுகிறார்.

'மண்ணடங்கும் நீரதனில் மற்றதுதான் தீயதனி
 லடங்கு மந்த
நண்ணரிய தீயடங்கும் வளியதனில் நல்லதொரு
 வாயு வுந்தான்
விண்ணடங்கும் விரிந்ததொரு விசும்பதுவும் மாந்தர்கள்தம்
 மனத்த கத்தில்
எண்ணரிய காலத்தி லடங்கிடமெற் றதடங்கும்
 இறைவன் பாலே'

இதன்றியும் உலகனைத்தும் படைத்தளித்து அழித்திடும் பரம ரான திரிமூர்த்திகளுங்கூடக் காலத்திற்குட்பட்டவர்கள் என்பதை வசிஷ்டமாமுனி இராமருக்குப் பின் வருமாறு கூறுகிறார்:

'மூலம்வந் துதவிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்கற் பாலதோ'

இவ்வாறிருக்கக் காலத்தின் பெருமையை மேல்நாட்டார் புதி தாகக் கண்டார்களென்பதை எப்படி நாம் ஒப்புக்கொள்வது?''

"இன்றைக்குப் போதும். நீ பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பதனால் நாம் இன்று இரவு வீடுசேர முடியாது. கந்தசாமி! நீ அடிக்கடி இவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவதைக் கேட்க ஆவலுடையவராயிருக்கிறார். ஆனால் இருட்டாய் விட்டது. இப்பொழுது போவோம்" என்று சொல்லி எல்லோரும் எழுந்து அவரவர்கள் வீடு சென்றோம்.



வடாம்

வி. விசாலாக்ஷி அம்மாள்

மாசி மாத நிலா தாவள்ளியமாக வீசிக்கொண்டிருந்தது. தன் வீட்டின் முற்றத்தில் நிலவில் உட்கார்ந்திருந்த ஒரு தனிகன் தன்னுடைய மூன்று குமாரர்களேயும் அழைத்து, "இந்த நிலவு வெளிச்சத்தில் என்ன செய்யலாம்?" என்று வினவினன். மூத்த பிள்ளே, "நல்ல பாடகர்கள் பாடச் சுகமாகக் கேட்டுக்கொண்டிருக்கலாம்!" என்ருன்; இரண்டாமவன், "அநேக விதமான ருசியான பதார்த்தங்களேத் தயாரித்துச் சிநேகிதர்களுடன் உல்லாசமாக உண்ணலாம்!" என்ருன்; "காலத்தில் சரியான மழை பெய்யாத தனுல் நம் தென்னம் பிள்ளேகள் வாடித் தோன்றின. இந்த நிலவு வெளிச்சம் வீண்போகாமல் தென்னந் தோட்டத்திற்கு ஏற்றம் இறைக்கலாம்!" என்று மூன்ருவது பிள்ளே விடை அளித்தான் என்று ஒரு கதை உண்டு.

சித்திரை. வைகாசி மாதங்களில் வெயில் அதிக உக்கிரமாகத் தான் காய்கிறது. சிலர் வெயிலின் கொடுமை தாங்காமல் உதக மண்டலம் முதலிய குளிரான ஊர்களுக்குச் சுகமாக வாழச்சென்று விடுகிருர்கள். மற்றும் சிலர், துணிப் புடைவைகள், கஸ்கஸ் தட்டி, ஐஸ், ஷர்பத் இவைகளின் உதவியால் கதிரவன் உக்ரம் தெரியாமலிருக்கும்படிசெய்து சௌகரியமாகக் காலத்தைக் கழிக்க முயலுகிருர்கள். மற்றவர்கள் நல்ல வெயில் வீண்போகாமல் வருஷாந்தரத்திற்கு அவசியமான வற்றல் வடாங்களேத் தயாரிப்பதில் சுறுசுறுப்பாக இருக்கிருர்கள்.

வருஷம் முழுவதற்கும் அவசியமான வடாம் முதலிய வெயிலில் உலர்த்தவேண்டிய பதார்த்தங்களேச் சித்திரை வைகாசி மாதங்


களில்தான் செய்யவேண்டும். இந்த மாதங்களில் வெயில் நல்ல உஷ்ணமாக இருக்கும்; மழை பெய்வதும் மிகவும் அபூர்வமே. ஆனி ஆடி மாதங்களில் ஒருவிதக் காற்றுக் கிளம்பித் தூசியை வாரி இறைக்கும். ஆனதினால் இப்பொழுது வற்றல் வடாம் செய்வதே சௌகரியமானது. வெயிலை வீணாக்காமல் இப்பொழுது வருஷாந்தரத்திய வற்றல் வடாங்களைத் தயாரித்துவிட்டால், பிறகு, வீட்டில் முட்டுத் தட்டுக்கு வடாமும் இருக்கும். 'நான் பண்ணினது' என்று விருந்தாளிகள் வந்திருக்கும் பொழுது ஜம்பமாகப் பொரிக்கவும் செய்யலாம். எத்தனையோ காரியங்களுக்குச் சௌகரியமாக இருக்கும்.

குடித்தனத்தில் இருக்கும் பெண்களுக்கு அப்பளம் வடாம் இவைகள் செய்யத் தெரிந்திருக்கவேண்டும். அப்பளம் வடாம் எல்லாம் தற்காலத்தில் விலைக்குக் கிடைக்கின்றன. சிரமப்படாமல் வேண்டிய பொருளைப் பணம் கொடுத்து வாங்கிச் சாப்பிடலாம். இருந்தாலும் 'வாங்கின பதார்த்தங்கள் நம் வீட்டில் செய்த வடாம்போல் அவ்வளவு ருசியாக இருப்பதில்லை' என்றே இவைகளைச் செய்யத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். மேலும் ஒரு சமயத்தில் இவைகள் விலைக்குக் கிடைக்காமலும் இருக்கலாம். கிடைத்த பொழுதிலும் 'வீட்டில் செய்யேன்' என்று யாராவது சொல்லலாம். இதைப்பற்றிய ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒரு கணவன் தன் மனைவியை 'டாபியோகா' வடாம் செய்யச் சொன்னான். பக்குவம் தெரியாததனால் அதைச் சரியாக ஊறவைக்காமல் அவள் செய்த வடாம் கல்லித்துவிட்டது. ஊருக்குச் சென்றிருந்த அவள் மாமியார் வந்து பார்த்து, 'அம்மணீ! எப்படி இப்படிக் கல்லுக் கல்லாய் வடாம் போட்டாய்? சிங்காநல்லூரில்தான் முடுக்குச் சொல்லவேண்டும் போலிருக்கிறது! வாயில் போட்டதும் கடல் நுரைபோல் கரைகிறதே!' என்று பரிகாசம் செய்தாள். ஏதோ செய்யும் பக்குவம் தெரிந்திருந்துவிட்டால் பிறகு இவ்விதமான குறைகளைக் கேட்டுக்கொள்ளும்படி நேரிடாது. தானே சிரமப்பட வேண்டும் என்பதும் இல்லையே? பவுஷு உள்ளவர்கள் வேலையாட்களைக்கொண்டு செய்யச் சொல்லலாம்; இஷ்டம்போல் செய்து கொள்ளலாமே? கோதுமை வடாம் செய்யும் முறையைக் கீழே எழுதுகிறேன்.

கோதுமை வடாம்

கோதுமை சம்பாக் கோதுமையாக இருக்கவேண்டும். அதை நன்றாகக் குத்திப் புடைத்துக் கல்லு நோம்பி, ஐந்தாறு மணி நேரம்

வரையில் குளிர்ந்த தண்ணீரில் ஊறவைக்கவேண்டும். காலையில் எழுந்ததும் கோதுமையை ஊறவைத்துவிடலாம். கோதுமை நன்ருக ஊறினதும் அதை உரலில் போட்டு நன்ருகக் குடையக் குடைய அரைக்கவேண்டும். அரைத்த மொத்தையை இரண்டு படி ஜலத்தில் கரைத்து மெல்லிய சவுக்கத்தினுல் வடிகட்டவேண்டும். சக்கையை மறுபடியும் அரைத்து நீரில் கலக்கி வடிகட்டவேண்டும். இவ்விதம் சக்கையில் உள்ள பால் எல்லாம் வரும்வரையில் மூன்று நான்கு தரம் அரைத்து வடிகட்டவேண்டும். பிறகு பாக்கி இருக்கும் சக்கை மொத்தையை எறிந்துவிடலாம். வடிகட்டி எடுத்திருக்கும் கோதுமைப்பாலை ஓர் ஈயம் பூசின பாத்திரத்தில் விட்டுத் தெளிய வைக்கவேண்டும். அன்று இரவெல்லாம் தெளிய வைத்திருந்தால் காலையில் ஜலம் முத்துப்போல் மேலே தெளிந்து நிற்கும். பாத்தி ரத்தைக் கூடியமட்டில் அசக்காமல் தெளிந்திருக்கும் நீரை வடிக்க வேண்டும். அடியில் கோதுமைப்பால் குழம்புபோல் நிற்கும். அடுப் பில் தீயை நிழல்போல் எரித்துப் பாலை அடுப்பில் வைத்து, ஒரு கரண்டியால் துழாவிக் கிளறவேண்டும். வேண்டிய அளவு உப்பை நன்ருகப் பொடி செய்து கோதுமைப்பாலில் முதலிலேயே போட்டு விடலாம். கோதுமைப்பால் சீக்கிரத்தில் இறுகி ஒரே மொத்தை யாகிவிடும். உடனே அதை அடுப்பைவிட்டு இறக்கிக் கொஞ்சம் பெருங்காய ஜலம் விட்டு நன்ருகக் கிளறவேண்டும். முதலில் இருந்து கைவிடாமல் கிளறவேண்டும்; இல்லாவிட்டால் அடிப்பிடித்துவிடும். ஈச்சம்பாய் அல்லது துணியில் இந்த வடாத்தை இடலாம். ஓமப் பொடி நாழியில் கொஞ்சம் கோதுமை மொத்தையைப் போட்டுச் சிறிய சிறிய வடாங்களாகப் பிழியவேண்டும். இது இரண்டு மூன்று தினங்கள் வரையில் காயும். இதில் பாலில் ஜலம் வடிக்கும் பக்குவந் தான் முக்கியமானது. அதிக ஜலம் நின்றுவிட்டால் வடாம் சரியாக உலராது; 'ஜவ்'வென்று நமுத்த மாதிரியே இருக்கும். வறுத்தா லும் எண்ணெயைக் குடித்துக்கொண்டு சிவக்கும். அதிகம் ஜலத்தை வடித்துவிட்டால் கோதுமை சரியானபடி வேகாததினுல் வடாம் 'கடுக்'கென்றிருக்கும். பால் கைகையாகக் குழம்புபோல்இருக்க வேண்டும். சரியான பக்குவத்தில் செய்த வடாம் பொரித்தால் பார்வைக்கு வெள்ளையாகவும் வாய்க்குக் 'கரகர'வென்றும் இருக்கும். இந்த வடாம் உடம்பிற்கும் நல்லது; பார்வைக்கும் நன்ருக இருக் கும்; வாய்க்கும் ருசியாக இருக்கும். கோதுமையை அரைப்பது மட்டும் சற்றுச் சிரமம். ஆனுல் வடாம் எவ்வளவோ நன்ருக இருக்கும்.



குரங்குகள் தோட்டத்துக்கு ஜலம் விட்டது*

பி. என். அப்புஸ்வாமி ஐயர்

முன் ஒரு காலத்திலே காசி நகரத்திலே பிரமதத்தன் என்ற ஓர் அரசன் இருந்தான். அந்த இராஜ்ஜியத்திலே ஒரு பெரிய திருவிழா வந்தது. அன்று காலையில், "நகரத்து ஜனங்கள் எல்லாரும் திருவிழாவைக் கொண்டாடவேண்டும்" என்று அரசனுடைய அரண்மனை வாயிலிலுள்ள நகராக்கள் முழங்கின. ஊர் ஜனங்களெல்லாரும் அவ்வாறே திருவிழாவைக் குதூகலமாகக் கொண்டாடினர். எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டன. மாலைகள் கட்டப்பட்டன. பாட்டும் வாத்திய கோஷமும் எங்கும் முழங்கின. எல்லோரும் நல்ல ஆடைகளைத் தரித்துக்கொண்டு உற்சாகமாகக் களித்து வந்தனர்.

அவ்வரசனுக்கு மிகவும் அழகிய நந்தவனம் ஒன்று இருந்தது. அதிலே பலவகைக் கனி விருக்ஷங்கள் இருந்தன. நிற நிறமான அழகிய பூக்களையுடைய செடிகளும் கொடிகளும் இருந்தன. பலவித வாசனைப் புஷ்பச் செடிகளும் இருந்தன. பூந்தோட்டமானது மிகவும் மனோகரமா யிருந்தது. அதிலே குரங்குகளும், பலவகைப் பட்சிகளும் வாழ்ந்து வந்தன. அந்தத் தோட்டத்திலுள்ள செடி கொடிகளுக்கு ஜலம் விட்டு வளர்க்க ஒரு தோட்டக்காரனை அரசன் வைத்திருந்தான்.

அந்தத் தோட்டக்காரன் எண்ணினான்: "ஊரில் எல்லாரும் திருவிழாவைக் கொண்டாடுகிறார்களே; நான் மட்டிலும் இங்கே வேலை பார்த்துக்கொண்டிருப்பானேன்? தோட்டத்திலுள்ள குரங்குகளை இன்று மட்டிலும் செடிகளுக்கெல்லாம் ஜலம் விடச் சொல்லிவிட்டு நானும் விழாவுக்குப் போவேன். ஊர் ஜனங்களோடுகூட

---

*புத்தர் ஜாதகக் கதைகளினின்று எடுத்து மாற்றியும் விரித்தும் சுருக்கியும் எழுதியது.

இருந்து உற்சாகமாகப் பொழுது போக்குவேன்.'' இவ்வாறு சொல்லிக்கொண்டு அவன் குரங்கு ராஜாவிடம் போனான்.

"குரங்கு ராஜாவே! நீயும், உன் ராணியும், உன் குழந்தைகளும், உன் பிரஜைகளும் வெகுநாளாக நம்முடைய தோட்டத்திலே குடியிருந்து வாழ்ந்து வந்திருக்கிறீர்கள். இந்தத் தோட்டத்திலே காய்த்துப் பழுக்கும் தித்திப்பான பழங்களைப் பறித்துப் புசித்திருக்கிறீர்கள். இளம் குருத்துக்களைப் பிடுங்கித் தின்றிருக்கிறீர்கள். அழகிய பூக்களைப் பார்த்தும், மோந்தும், கிழித்தும், கசக்கியும் மகிழ்ந்திருக்கிறீர்கள். தோட்டமானது உங்களுக்கு வீடாக இருந்திருக்கிறது. உங்களுக்கு உணவையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்கிறது. இப்படிப்பட்ட தோட்டத்திற்கு இன்றுமட்டிலும் உங்களால் ஒரு சிறிய காரியம் ஆகவேண்டி இருக்கிறது. அதைச் செய்வீர்களா?'' என்று கேட்டான்.

குரங்குராஜா மிகவும் சந்தோஷமாக, "அதைப்பற்றி நீ ஏன் சந்தேகப்படவேண்டும்? நாங்கள் நன்றி இல்லாதவர்களா? நீ எது செய்யச் சொன்னாலும் நாங்கள் மிகவும் சந்தோஷமாகச் செய்கிறோம்'' என்றது.

"நீ செய்யவேண்டிய காரியம் மிகப் பெரிது ஒன்றும் இல்லை. இன்று ஊரில் திருவிழா நடக்கிறது. அதற்கு நான் போக ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அங்கே சிறிது நேரம் உல்லாசமாகப் பொழுது போக்கிவிட்டு வரலாமென்று எண்ணுகிறேன். இன்று மட்டிலும் நீங்கள் தோட்டத்தில் உள்ள சிறு செடிகளுக்குப் பார்த்து ஜலம் விடமாட்டீர்களா?'' என்று தோட்டக்காரன் சொன்னான்.

"இவ்வளவுதானா? இது ஒரு கஷ்டமா? கட்டாயமாய்ச் செய்கிறேன்'' என்று அந்தக் குரங்கு ஏற்றுக்கொண்டது.

"ஞாபகம்; மறக்கக்கூடாது. மறந்துவிட்டால் நல்ல செடிகளெல்லாம் பட்டுப்போகும்; அரசன் கோபிப்பான்; ஆதலால் ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கை செய்துவிட்டுக் குரங்குகளிடம் குடங்களையும் தண்ணீர்த் துருத்திகளையும் கொடுத்துவிட்டுத் தோட்டக்காரன் போய்விட்டான்.

உடனே மந்தி அரசு குரங்குகளைக் கூப்பிட்டுத் துருத்திகளையும், குடங்களையும் அவைகளிடம் கொடுத்து, "சின்னச் செடிகளுக்கெல்லாம் பார்த்துப் பார்த்து ஜலம் விடுங்கள்'' என்று [illegible]ளையிட்டது. "ஆனால் ஒன்று; நீங்கள் ஜலத்தையெல்லாம் வீணாக[illegible]டாது. செடிகளுக்கு ஜலம் விடும்போது ஒவ்வொரு

செடியையும் பிடுங்கிப் பாருங்கள். எவ்வளவு வேர் அது விட்டிருக்கிறதோ அதற்குத் தகுந்தபடிதான் ஜலம் விடவேண்டும். வேர் ஆழமாகப் போயிருந்தால் அந்தச் செடிக்கு நிறைய ஜலம் விடவேண்டும். வேர் குறைவாக இருந்தால் அதற்குக் கொஞ்சமாக ஜலம் விட்டால் போதும். இந்த ஜலம் ஆகிப்போய்விட்டால் நமக்கு வேறு ஜலம் கிடைப்பது கஷ்டம். ஆகையால் நான் சொன்னபடி கவனித்துச் செய்யுங்கள். ஜாக்கிரதை!'' என்றது குரங்கு அரசு.

"உத்தரவு! மகராஜ்!'' என்றன குரங்குகள் எல்லாம்.

குரங்குராஜா சொன்னபடியே குரங்குகளெல்லாம் ஒவ்வொரு செடியாகப் பிடுங்கிப் பிடுங்கிப் பார்த்து ஜலம் விட்டுக்கொண்டு வந்தன. அந்தச் சமயத்திலே பெரிய புத்திமானான சந்நியாசி ஒருவர் தம் சிஷ்யர்களுடன் அந்த வழியாக வந்தார். நல்ல நல்ல செடிகளை யெல்லாம் குரங்குகள் பிடுங்குவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "நீங்கள் என்ன காரியம் செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

"வேர்களின் அளவைப் பார்த்து ஜலம் விடுகிறோம். இது கூடத் தெரியவில்லையா?'' என்று குரங்குகள் சிரித்தன.

"ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?'' என்றார் பெரியவர்.

"அதுதான் எங்கள் அரசனுடைய கட்டளை'' என்று சொல்லிக்கொண்டே குரங்குகள் அருமையான செடிகளையெல்லாம் மேன்மேலும் பிடுங்கிக்கொண்டும், ஜலம் விட்டுக்கொண்டும், ஒன்றோடொன்று பேசி விளையாடிக்கொண்டும் இருந்தன.

இதையெல்லாம் கண்ட அந்தப் பெரியவர், "ஆஹா! நன்மையே செய்யவேண்டுமென்று எண்ணினாலும் மூடர்கள் தீங்கையே செய்து முடிக்கிறார்கள். அறிவுதான் வெற்றிக்குக் காரணம். அறிவின்மையால் தீங்குதான் விளையும். இந்தக் குரங்குகளின் காரியமே இதற்கு உதாரணம்'' என்று சொல்லிக்கொண்டே தம்முடைய சிஷ்யர்களுடன் நந்தவனத்தை விட்டு வெளியே போனார்.



ஸ்ரீ மகாபாரதத் தமிழ் மொழிபெயர்ப்பு :—அறங்களனைத்திற்கும் ஓராலயமெனவும் கவியின்பம் பெருகும் கங்கையெனவும் கதைமணங் கமழும் பூஞ்சோலை யெனவும் கற்றோரால் கருதப்பெற்றதும் ஆன்றோரால் ஐந்தாம் வேதமென்றழைக்கப்பட்டதுமான ஸ்ரீ மகாபாரதத்தை ஸ்ரீமான், எம். வி. இராமானுஜாசாரியாரவர்கள் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுதவியது யாவராலும் மறக்கற்பாலதன்று. ஆசாரியாரவர்கள் அநேகம் பிரபல வடமொழி வித்வான்களைக்கொண்டு மொழிபெயர்த்துப் பிழையறப் பரிசோதித்து எல்லோராலும் எளிதிலுணரத்தக்க நடையிலமைத்து அச்சிட்டிருக்கிறார்கள். சுமார் இருபத்தைந்து வருஷங்களாக இவர்கள் தமது உடல் பொருளாவி யனைத்தையும் இப்பெருங் காரியத்திற்கே அர்ப்பணம் செய்திருப்பதற்கறிகுறியாகச் சென்னைச் சமஸ்கிருத சமிதியார் "பாஷா பாரத துரந்தரர்" என்னும் பட்டம் இவர்களுக்களித்ததோடு இரண்டு தந்த யானைகளால் தாங்கப்பெற்ற வெள்ளிப்பெட்டியில் அபிநந்தன பத்திரம் ஒன்றும் வைத்துக் கொடுத்தனர். டி. எஸ். ரா.

ஸேப்டி பின் (*Safty Pin*) துருப்பிடிக்காமல் இருக்க :—அம்மோனியா கரைந்த நீரில் சிறிது நேரம் ஊறவைத்துத் துடைத்தால் துருவில்லாமல் பளப்பளப்பாகும்.

ஆமணக் கெண்ணெய் சாப்பிட:—பொறுக்குமளவு வெந்நீரை வாயில் விட்டுக் கொப்புளித்து விட்டு உடனே எண்ணெயைச் சாப்பிட்டு மறுபடியும் உடனே வாயை வெந்நீரால் கொப்புளித்து விட்டால் எண்ணெயின் வழவழப்புச் சிறிதும் தெரியாதாம். வாயினுள் உள்ள தோல் சுருண்டு எண்ணெய் தட்டாமலிருக்குமாம்.

பாட்டில்களைக் கழுவ:—குளிர்ந்த டீ நீரைப் பாட்டில்கள் நிறைய நிரப்பி 24 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பிறகு சிறிது சிறிதாகக் குலுக்கிக் குலுக்கி நீரை முற்றிலும் எடுத்து விடவேண்டும். பிறகு குளிர்ந்த நீரைவிட்டு நன்றாய்க் கழுவிவிட வேண்டும்.

சூடு :—நமக்கு $88\frac{1}{2}^{\circ}$; பூனைக்கு 102° ; கோழிக்குஞ்சுக்கு 111° ; மின்மினிக்கு 84°.

ஓட்டமும் சாட்டமும் :—வேட்டை நாய் மணிக்கு 35 மைல் வீதம் சிறிது தூரம் ஓடும். மனிதன் $21\frac{1}{2}$ மைல் வேகத்துக்கு மேல் ஓட முடியாது; அதுவும் 100 கஜம் வரை தான் அவ்வாறு ஓட முடியும். வேட்டை நாய், பந்தயக் குதிரை, மான், முயல், ஒருவகைக் குழி முயல், நரி, காட்டு நாய், நரி நீர்[illegible]டை நாய், ஓநாய் இவை யாவும் வேகமாக ஓடவல்லன. இவற்றுள் நரி

யும் ஓநாயுமே வெகு தூரம் சளைக்காமல் வேகமாய் ஓடவல்லன. மற்றொன்றாலும் அவ்வளவு தூரம் ஓடமுடியாது. ஓநாய் ஒரே இரவில் 100 மைல் வரை ஓடும். பொதுவாகக் காட்டு மிருகங்களுக்கு வீட்டில் பழகிய மிருகங்களைவிடச் சளைக்காமல் ஓடும் சக்தி அதிகமாகவே இருக்கும். ஆனால் பழகிய மிருகங்களுக்குத்தான் வேகத்தின் கதி அதிகம்.

வெகு தூரம் (500 மைல் போல்) போக வேண்டுமானால் ஒட்டகத்துக்குச் சமானம் வேறு ஒன்றும் கிடையாது. நல்ல குதிரை மணிக்கு 14 மைல் முதல் 60 மைல் வரை போகும். ஒட்டகம் வேகமாய் ஓடினால் முதல் நாளில் 5 மணி நேரத்தில் 80 மைல் ஓடும்; அதற்கு மேல் நாள் ஒன்றுக்கு 12-14 மணி நேரமாக ஒரு வாரம் வரை எளிதாக ஓடும். சிறிது உணவிருந்தாலும் அதற்குப் போதும். ஒரே மொத்தமாக நீரையும் அருந்திக்கொள்ளும். தடி போன்ற யானையும் ஓட்டத்தில் குதிரையை வெல்லும். நித்தியம் 10 மணி வீதம் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் யானை நடக்கும். யானை மணிக்கு 8 மைல் வீதம் நடக்கும். அது சிறிது தூரம் வேகமாய் ஓடும்.

மனிதன் 6 அடி உயரம் தாண்டுவான். குதிரை 9 அடி தாண்டும். மான், சாமாய், காங்கரு இவை 12 அடி தாண்டும். அமெரிக்கா கறுப்பு ஜாகர் (*Black jaquer*) 15 அடி தாண்டும்.

கல் மேஜையைக் கழுவ:—டர்பெண்டைனில் ஒரு கந்தல் துணியை நனைத்துத் துடைக்கவேண்டும்.

தேனீயின் வாழ் நாள்:—அலித் தேனீ 6 மாதமும் ஆண் தேனீ 4 மாதமும் பெண் தேனீ 4 வருஷமும் ஜீவித்திருக்கும்.

பாய்களைக் கழுவ:—ஸோப்பை உபயோகப்படுத்தக்கூடாது ; அப்படிச் செய்தால் பாய்கள் பின்னும் கெட்டுப்போகும். அம்மோனியாவும் (நவாச்சாரமும்) ஜலமும் உபயோகித்தால் பாய்கள் சுத்தமாகும்.

கண்ணாடிச் சாமான்கள் மரச்சாமான்கள் இவைகளிலிருந்து வர்ணப் பொட்டுகளை எடுக்க:—ஸோடா (*Washing Soda*)வும் கொதிக்கும் நீரும் கலந்து உபயோகிக்கலாம். டர்பெண்டைனைக் (*Turpentine*) கந்தைத் துணியில் நனைத்து உபயோகிக்கலாம். அ.

உவாத்து:—இஃது 'உபாத்தியாயன்' என்னும் சொல்லின் சுருக்கம் ; 'உவாத்தி' என்ற பிரயோகமும் உண்டு ; சிஷ்யர்களுக்குப் பாடஞ் சொல்லுதலை 'உவாத்துச் சொல்லுதல்' என்று குறிக்கும் பழைய பிரயோகத்தை, "கற்பிப்பார்க்கு உவாத்துச் சொல்லார்" என்னும் சொற்றொடரிற் (சீவக. 1737, உரை) காணலாம். இத்தொடரின் கருத்தை விளக்கும் நச்சினார்க்கினியரும், "தம்மைக் கற்பித்தற்கு உரியார்க்குத் தாம் உவாத்துச் சொல்லார்" என்று உரை எழுதியுள்ளார்.

தும்முதல்:—தும்முதலைப் பற்றிய சில கொள்கைகளைத் திருக்குறளினின்றும் அறியலாம். ஒருவர் மற்றொருவரை நினைத்தால், நினைக்கப்பட்டவருக்குத் தும்முதல் வருமென்னும் கொள்கை இப்போதும் பரவி

யுள்ளது; "செய்மைக் கண்ணாய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றுமென்னும் உலகியல்" என்பர் பரிமேலழகர். இதனைத் திருவள்ளுவர் அழகாகச் சில குறளிலே உபயோகிக்கிறார் : தலைவனும் தலைவியும் ஊடிய காலத்திலே, தலைவியை வாய்திறக்கும்படி செய்வதற்காகத் தலைவன் தும்முகிறான் ; தும்முதல் வருங் கேட்டிற்கு முன்னறிகுறியாகும் என்னும் கொள்கையும் உள்ளதால், அருகிலிருக்கும் அன்புடையவர்கள், தும்மினவனை வாழ்த்துவது வழக்கம் ; இவ்வழக்கப்படி தலைவியும், தலைவனை வாழ்த்துகின்றாள் ; உடனே தன் காதலனை வேறொருத்தி நினைத்ததாலன்றோ அவன் தும்ம நேர்ந்தது, அவ்வாறு அவனை நினைத்த காதலி யார் என்று அவனைக் கோபத்துடன் கேட்கிறாள் ; இவ்வாறான கேள்விகளுக்கு இடந்தரக் கூடாதென்று மீண்டும் தும்மல் வந்தபோது தலைவன் தன்னை அடக்கிக் கொள்கிறான் ; அதைக் கண்ட தலைவி, " உமக்கு வேண்டிய காதலிமார் உம்மை நினைத்தலை நான் அறியக்கூடாதென்று மறைத்தீரோ " என்று அழுகிறாள். இவ்வாறு ஊடலை வருணிக்கும் பாடல்கள் பின் வருவன :

(1) "ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து."

(2) "வழுத்தினாள், தும்மினே னாக ; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று."

(3) "தும்முச் செறுப்ப அழுதாள், நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று."

சில வேளைகளில் தும்முதல் வரும்போலிருந்து வாராமலிருந்து விடும். வேறொருவர் நினைப்பதைத் தும்மல் வருவதுபோல வாராமலிருப்பது அறிவிக்கும் என்னும் அழகிய கருத்தினைக் கொண்டு, திருவள்ளுவர், தலைவியின் சொல்லாக,

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்"

என்று கூறுகின்றார். இவர் வேறொரு குறளிலே, தலைவி காமத்தை அடக்க முடியவில்லை என்பதற்கு உவமையாக, 'தும்மலை அடக்க முடியாதது போலக் காமத்தையும் என்னால் அடக்க முடியவில்லை' என்று கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது:

"மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மற்போற் றோன்றி விடும்". வே. நா.

குழந்தைகளின் சௌக்கிய அசௌக்கியங்களைப் பற்றி க்ஷயரோக வைத்தியரான டாக்டர் முத்து மார்ச்சுமீ 8-ம் தேதி சைதாப்பேட்டையில் ஒரு பிரசங்கம் செய்தார். அவர் கூறுவதாவது : குழந்தைகளின் தேக சௌக்கியம் கல்வியைவிட அதிக முக்கியமானது. தேக ஆரோக்கியமுடைய குழந்தைகள்தாம் ஓர் இராச்சியத்திற்குத் தக்க பலமாகும். குழந்தை சௌக்கியமாக வளர்வதற்கு அவற்றின் கூட்டுறவு அல்லது சேர்க்கை

(*Environment*) தகுதியாக அமையவேண்டும். அவ்வாறிருக்குமாயின் நோய்க்குக் காரணமான அனேக வித காரணங்கள் உண்டாக இடமில்லை. குழந்தைகட்கு முக்கியமானது புஷ்டியான ஆகாரம். புஷ்டியான ஆகார முடையோர் நோய்ப்படக் காண்பதில்லை. ஏழ்மையும் குறைவான ஆகாரமு முடைய கர்ப்பிணி பெற்ற பிள்ளை பலமுடையதாகக் காணப்படவில்லை. வயிறு நிறையாததும், தகுதியற்றதுமான ஆகாரம் மூளையை மழுங்கவடிப்ப தோடு ஞாபக சக்தியைக் குறைத்து விடுகிறது. அதனாலே கல்வியில் குறைவேற்படும். தினமும் செய்யும் வேலைகளால் குறைவுபடும் பலத் திற்குத் தகுந்த உணவு கொண்டாலொழிய அதனைச் சமப்படுத்த இயலாது. குறைவான நற்காற்றும், சத்து அற்ற ஆகாரமும் சேர்ந்து சொறி, சிரங்கு முதலான நோய்களுக்குக் காரணமாகின்றன. குழந்தைகள் நோயற்ற வாழ் வுடன் இருக்க விரும்புவோர் கருப்ப ஸ்திரீகளை நன்ருகப் போஷிக்கவேண் டும். தாய்ப்பாலுண்ணும் குழந்தை பெட்டிப்பாலுண்ணும் குழந்தையை விடப் பலமுள்ளது. குழந்தைகள் ஆகாரம் சத்துடையதாக விருக்கவேண்டும். அரிசி, பருப்பு, ரஸம், ஊறுகாய் உண்டு வளரும் குழந்தைகள் பலமானதாக இரா. பாலும், பால் கலந்த பண்டங்களும், ரொட்டி, புது வெண்ணெய், முட்டை, பச்சைக்கறிகள், சமைக்கலாகாத சலாது, பழங்கள் முதலியன உடலை வளர்க்கும் ஆகாரங்கள். காப்பி, தேயிலைப்பானம் முதலியன ஆகா தவை. குழந்தைகள் திறந்த வெளியில் நற்காற்றடிக்குமிடங்களில் மேல் ஆடையின்றி விளையாட விடப்படவேண்டும். அப்பொழுதுதான் சூரிய வெளிச்சமும் நல்ல காற்றும் உடலில் பட்டு க்ஷயம் போன்ற கொடிய நோய் கள் அணுகாமலிருக்கும்.

அ.



ஆனந்த விகடன்: ஆண்டு மலர்: [ஆனந்த விகடன் ஆபீஸ், தங்க சாலைத் தெரு, சென்னை; விலை அணா, 4.]

இந்த ஆண்டுமலருக்குக் கட்டுரைகளை எழுதியுள்ளவர்களின் பெயர்கள் இதன் தலைப்பிலே குறிப்பிக்கப் பெற்றுள்ளன. அக்குறிப்பினின்றுமே இம் மலர் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று கொள்ளலாகும்.

பூவின் அழகிலே மயங்கிய கவிஞர்களால் நிறைந்தது எம்முடைய நாடு என்பதை ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் மிகவும் திறம்பெற விளக்கியுள்ளார்கள்; சாஸ்திரத்துறைகளில் பல விஷயங்களைத் தமிழில் அமைத்துக் கூறும் ஆற்றல் பெற்ற ஸ்ரீமான். பி. என். அப்புஸ்வாமி ஐயர வர்கள் எழுதியுள்ளது 'பாசாங்குக்கார எறும்பு' என்னும் கட்டுரை. எறும்பு நாலு பேர் பார்க்கும்போது வேலை செய்வது போலப் பாசாங்கு செய்யுமே யொழிய அதற்கு ஒழுங்காக, புத்திசாலித்தனமாக முன் யோசனையுடன் வேலை செய்யத்தெரியாது என்பதை அவர் அறிவிக்கும் முறை ஹாஸ்யரஸத் தோடு அமைந்துள்ளது. காந்தாரி தன் கணவனுக்குக் கண் தெரியவில்லை என்று தன் கண்களைக் கட்டிக் கொண்டாள் என்பது பிரஸித்தம். அது சரியா தப்பா என்று 'சியாமா' சர்ச்சை செய்வதும் மென்னகைச் சுவை பொருந்தியுள்ளது. 'நோக்க வேறுபாடு' என்பது ஆங்கிலக் கட்டுரையின் இரீதியை நன்கு விளக்கும் ஒரு வியாசம்; இதனைத் தமிழிலே அமைத்தவர் ஸ்ரீமான். எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள். 'செம்படவச் சிறுமி' என்னும் சிறுகதை காதல் பிறக்கும் அதிசயத்தையும் அதன் விசித்திரமான போக்கை யும் விளக்குவதாய் எளிய நடையிலே ஸ்ரீமான். ஸு. சுப்பிரமணியம் அவர் களால் எழுதப்பெற்றுள்ளது. இவையெல்லாம் இந்த ஆண்டுமலரிலே காணப் படும் விசேஷங்களாகும்.

மற்றப்படி, ஆனந்த விகடனுக்கு இன்றியமையாதனவாக அமைந்துள்ள விகடக் கட்டுரைகளுக்கும் குறைவில்லை. 'கல்கி' எழுதியுள்ள 'யாருடைய மனைவி' என்னும் விநோத வழக்கு சட்ட நுட்பங்களை ஆராய்வோர்களைப் பரிக சித்தெழுதப்பெற்று வாசிப்போருக்கு மென்னகை விளைவிக்கிறது. 'மனக் கண்ணாடி' யும் அதற்கமைந்த சித்திரப்படங்களும் அவ்வாறே ஹாஸ்யம் நிரம்பியுள்ளன. ஹாஸ்யத்தின் மூலம் உண்மைகளைப் பசுமரத்தாணியைப்

போல மனத்திலே பதிப்பதற்கான முறையொன்று தலை கீழாக எழுவது என்பது. அம்முறையைக் கைப்பற்றியே 'வேர்க்கல்வி' என்பவர் 'இங்கிலாந்தில் தமிழ் ஆட்சி' என்பதனை எழுதியுள்ளார். சாரதா சட்டத்துக்கு முன் நடந்த அவசரக்கலியாணங்களால் நேர்ந்த தீமைகளைக்கூறும் ஸ்ரீமான். கி. வா. ஜகந்நாதனுடைய 'பாட்டியும் பேத்தியும்' என்ற பாடல் பேசுவதுபோலவே எழுதப்பெற்ற எளிய புதிய நடையிலே அமைந்துள்ளது. பாரதியின் தமிழிலே நவரசமும் ததும்புகின்றன என்று ஸ்ரீமான் ஆரியூர். வ. பதுமநாபபிள்ளையவர்கள் 'நவரசம் செறிந்த நவ பாரதீயம்' என்னும் பதிகத்தால் விளக்குகிறார். மாகாத்மிய புராணங்களின் இரீதியை அனுஸரித்து ஸ்ரீமான். டி. எஸ். இராமச்சந்திர ஐயரவர்களால் எழுதப்பெற்ற 'வெங்காய விஜயம்', அல்லி அரசாணிமாலை முதலியவற்றின் நடைப் போக்கினை வசனத்தில் அமைத்து ஸ்ரீமான். பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்களால் அழகுறப் புனையப்பட்ட 'நவரத்தின மாலை', பரீக்ஷை, காபி, உத்தியோகம் இவைகளைப் பற்றியுள்ள ஹாஸ்யக்கட்டுரைகள், சிரிப்பைப்பற்றிய கதைகள், விகடப்பேச்சு என்று இவ்வாறு படிப்பதற்கு இனிய பல விஷயங்களைக் கொண்டுள்ள இவ்வாண்டு மலர் பல வகையாலும் சிறப்புற்றிருக்கிறது. வே. நா.

கார்மண்டல சதகம்: [அவிநாசி ஆறை கிழார் இயற்றியது; பக்கம், XXVIII + 56; கிடைக்குமிடங்கள்: (1) ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள், சீகாழி; (2) சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 6, பவழக்காரத் தெரு, சென்னை; விலை அணா, 12.]

கார்மண்டலமென்பது காவிரி நதியின் உற்பத்தி ஸ்தான முதல் சோழ நாட்டின் உய்யக் கொண்டான் வளநாடு வரை அந்நதி இருபக்கமும் முப்பத்தாறுயிரம் சதுர மைல் விரவிய பரப்பினையுடையதென்பர். இம்மண்டலத்தின் விஷயமாக, கி பி. 1025 முதல் 1070 வரை இருந்த அவிநாசி ஆறை கிழார் என்னும் புலவர் ஒருவர் இயற்றிய நூறுபாடல்களை உடையது இது. இது பெரும்பான்மையும் கார்காத்த வேளாளர் பெருமை, அவர்களது ஒழுக்க வழக்கச் சிறப்புக்கள், சில வள்ளல்கள் புலவர் முதலியவர்களுடைய செய்திகள் முதலியவற்றைப் பற்றிக் கூறுவது. இந்நூலுக்குச் சீகாழி வித்வான் ஸ்ரீமான். ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் ஓர் அரிய உரை எழுதிப் பதிப்பித்திருக்கின்றார். உரையில் பல திறப்பட்ட ஆராய்ச்சிக்குறிப்புக்கள் விளங்குகின்றன. தமிழ் முகவுரையொன்றும் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சியுரையொன்றும் அபிதான விளக்கமொன்றும் இப்பதிப்புக்குச் சிறப்பைத்தந்து அமைந்திருக்கின்றன. ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

திருவேங்கடமாலை:—[ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க் டவுன், சென்னை; விலை அணா 1.]

இப்புத்தகத்தில் பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய அஷ்டப்பிரபந்தங்களுள் ஒன்றாகிய இந்நூல் மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மூல பாடம் செய்பவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் இது பயன்படும்.

திருக்குறட் குமரேச வெண்பா: [ஸ்ரீமான் ஜகவீர பாண்டியன் அவர்கள் இயற்றியது; கிடைக்குமிடம்: மானேஜர், திருவள்ளுவர் நூல் நிலயம், தூத்துக்குடி.]

திருக்குறள் ஒவ்வொன்றிற்கும் தக்க உதாரணக் கதையைத்தொகுத்து அதனைமுன்னிரண்டடியாகவும் குறளைப் பின்னிரண்டடியாகவும் அமைத்துப் பாடப்பட்டது இந்நூல். சோமேசர் முதுமொழிவெண்பா முதலிய நூல்களைப் பின்பற்றி இயற்றப்பட்டது. 1330 குறளுக்கும் 1330 வெண்பாக்களை உடையது. குமரேசா என இரண்டாவதடியின் மூன்றாஞ்சீர் அமைதலின் இப்பெயர் கொண்டது. உதாரணக் கதைகளைத் தொகுப்பதற்கு இதன் ஆசிரியர் பல நூல்களை ஆராய்ந்து மிக்க உழைப்பெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். தமிழ் நூல்கள், புராணங்கள் முதலிய பல வகை நூல்களிலுள்ள கதைகள் இதிற் காணப்படுகின்றன. எமது பார்வைக்கு வந்த முதல் நான்கு அதிகாரங்கள் இனிய நடை வாய்ந்தனவாக இருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளுக்கும் விரிவான உரையும் உதாரணக் கதையின் சுருக்கமும் ஆசிரியராலேயே எழுதப்பெற்றிருக்கின்றன. மாதந்தோறும் சஞ்சிகை உருவமாக இந்நூல் வெளி வந்து கொண்டிருப்பதாக அறிகிறோம். இத்தகைய பெருமுயற்சியில் தலையிட்டு நிருவகித்து வரும் ஸ்ரீமான் பாண்டியனவர்களது உழைப்பு, தமிழ் நாட்டாருடைய போதரவைப் பெறவேண்டுமென்று விரும்புகின்றோம். நூலின் விலை முதலியவற்றைப் பற்றிய செய்திகளைப் பதிப்பு நிலயத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

சியாமலா தண்டகம்:—[ஸ்ரீமான். இ. கே. கிருஷ்ண மூர்த்தி ஐயர், அவர்கள் (இலந்துறை) இயற்றியது; ஆசிரியரிடம் கிடைக்கும்; விலை அணு 1, பை 6.]

மகாகவி காளிதாசன் இயற்றிய சியாமலா தண்டகம் என்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு இது. வடமொழியறியாத தமிழர்கள் அம்பிகையைத் தோத்தரிப்பதற்கு இஃது உதவும்.

கமலம்: [ஸ்ரீமான். வி. என். ஸர்மா எழுதியது; 214 பக்கங்கள்; ஏ. எஸ். புஸ்தகக் கம்பெனி, மயிலாப்பூர்; விலை. ரூ. 1—4—0].


இது புது முறையில் எழுதப்பெற்ற ஒரு துப்பறியும் கதை. கதாநாயகியான கமலமென்பவள் முதலிற் கெட்ட நெறிகளிற் பழகித் திருடர்கள் கூட்டுறவு முதலியன கொண்டு இருந்து பின்பு தன் அருமைத் தோழியாகிய லீலா என்பவளால் நன்னெறியில் திருப்பப்பட்டுத் தெய்வபக்தி முதலிய உயரிய குணங்கள் பூண்டவளாக ஆனாளென்பது கதையின் கருத்து. கமலம் கூரிய அறிவும் கல்விப் பயிற்சியும் உடையவளாக இருந்தும் பேராசையின் வயப்பட்டுப் பல தீய செயல்கள் புரிதலைக் கூறும் பகுதிகளில் போலிச் சந்நியாஸிகள் முதலியோர் இயல்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன. கதை எளிய நடையில், வாசித்து முடித்துவிடவேண்டு மென்னும் ஆர்வத்தை உண்டாக்கும் அமைப்புடன் விளங்குகின்றது. பொருத்தமற்ற வருணனைகளும் பிறவும் இதில் இல்லாமலிருத்தல் இதன் சுவையை மிகுதிப்படுத்துகின்றது.

சந்திரமதி அல்லது தற்காலத்துத் தமிழ் மகள்:—[ஸ்ரீமான் ரத்நம் அவர்கள் எழுதியது; நாவல் பப்ளிஷிங் கம்பெனி, கண்டனூர்; விலை அணா 4.]

பெண்கள் மனமொத்த அன்பாகளை மணந்து வாழ்தலே இன்பத்தை அளிக்குமென்னும் கொள்கையை மேற்கொண்டு எழுதப்பட்ட ஒரு சிறு கதை இது. அழகிய வாக்கியங்களிற் புதிய வருணனைகளையும் சிறந்த கருத்துக் களையும் இதனை எழுதியவர் அமைத்திருப்பது நன்ருக விருக்கிறது.

வேள்பாரி: [ஸ்ரீமான் காந்தி தாஸன் இயற்றியது; நவீன கதா புத்தக சாலை, இரங்கூன்; விலை அணா 8.]

பாரியின் வரலாற்றைக் கதையாகக் கூறும் சிறு நூல் இது.



“ பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே ரசிகர் ஒருவருக்கு இத்தகைய ஞாபகம் வந்தது ” (ப. 611.)

By Courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.



கலைமகள்

கபாலீசர் தோத்திரம்

சென்ற வைகாசி மாதத்துக் கலைமகளில் வெளிவந்த 'கபாலீசர் பஞ்ரத்தினம்' என்னுஞ் சிறுநூலின் பிரதியொன்று பண்டிதநண்பரொருவரது அன்பினால் சிலகாலத்திற்குமுன் எனக்குக் கிடைத்தது. அப்பிரதியில் பஞ்சரத்தினத்தைத் தொடர்ந்து கபாலீசர்பேரில் இரண்டு பாடல்களும் கற்பகவல்லி யம்பிகைபேரில் இரண்டு பாடல்களும் உள்ளன.

இவ்வகைச் செய்யுட்களைத் தமிழ்நாட்டிற் பிரசாரத்திற்குக் கொண்டு வந்தவர் சிறந்த தத்துவஞானியும் கவிஞர்பிரானுமாகிய ஸ்ரீ தாயுமானவர். சுவாமிகளுடைய செய்யுணடை மிக்க கம்பீரமும், அழகும், இனிமையும், எளிமையும், பொருளாற்றலும் ஒருங்கே வாய்ந்து விளங்குவது. அவர்கள் எடுத்தாளுஞ் சொற்களிற் பெரும்பாலன உயிர்த்தத்துவம் நிரம்பி வழக்கிற் பயின்று நாடெங்கும் உலவிவருஞ் சொற்களே. ஓசையினிமையால் உளத்தைப் பிணிக்கும் வடசொற்களையும் தகுதிபெறப் பிரயோகிப்பர். இவ் விருவகைச் சொற்களையும் நயம்பெறத் தொடுத்தமைக்கும் முறை யாரையும் பரவசமாக்க வல்லது. வாக்கியங்களின் கதி தமிழ்மரபோடு ஒத்தே நிகழ்வதெனினும், புதுமைத் தன்மையிற் சிறிதுங் குறைபாடுடையதன்று. தமிழ்மொழியின் ஆற்றல் புதுமுறையிலே வெளிப்படுகின்றது ; அதன் அழகுவெள்ளமானது புதியதொரு துறையிலே பெருகி நிரம்புகின்றது. கருத்துக்களெல்லாம் ஸ்வாநுபவ ரஸத்திலே நெடுங்காலம் ஊறிக் கிடந்து இனிமை மிக்குக் கரைந்துருகி நமது மனத்திற் பாய்ந்து அதனை இன்பமகனியுமாறு செய்கின்றன. அவை கொள்ளும் புதுப்புது ரூப வைசித்திரியங்களால் உளக் கண்களை மயக்கி நம்மையே கொள்ளையிடுகின்றன.

இங்கே சுட்டிய அரிய நலங்களிற் பல மேற்கூறிய தோத்திரப் பாடல்களிற் புலப்படவில்லை. எனினும், இப்பாடல்கள் அந் நலங்களையுடைய கவிதாபரம்பரையில் தோன்றிவந்தனவென்பது எளிதில் உணரலாகும்.

எஸ். வையாபுரிப் பிள்ளை.

1. எத்தனை விதத்தில்முறை யிட்டாலு நின்செவிக்
கேறுதிலை யுன்னையன்றி
யென்னையை யாவஞ்ச லென்பவர்க ளில்லையொன்
றென்செயலி லாவதில்லை
சித்தசஞ் சலநெருப் பாறுதிலை நன்னெறிச்
செயலில்மன முயலுதில்லை
திக்கில்லை யிடர்வெள்ளம் நிலையில்லை வறுமையுஞ்
சிறுமையுந் தொலையுதில்லை
உத்தம ரிடத்தினி லடுப்பதில் லைபுல்ல
ருறவையும் விடுப்பதில்லை
யொருபோது நின்பாத விருபோ தினைப்பணிந்
துய்யும்வகை செய்வதில்லை
அத்தனே நீகடைக் கண்பார்க்கி லித்தனையும்
அழல்படும் பஞ்சல்லவோ
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரி கபாலீசனே.

2. பொல்லாத வன்றரும மில்லாத வன்பெரும்
பொய்யனுத வாதகையன்
பொருசினங் கொலைகளவு கட்காம மைந்தும்
பொருந்திய பெரும்பாதகன்
கல்லாத வன்கருங் கல்லனைய நெஞ்சகன்
கடுவனைய கொடுவஞ்சகன்
கசடனென் றென்னைநீ கைவிடுத லழகன்று
காத்தருள்வ தழகுகண்டாய்
சொல்லா ரணத்தினுக் குணர்வரிய பிரமமே
சோதியே சுகவாரியே
சுத்தநிர்க் குணஞான மோனவா னந்தமே
துரியமே யாதுமுன்னை
யல்லாம லொன்றில்லை யென்றெண்ணு முள்ளத்தி
லகலாத கருணைவடிவே
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரி கபாலீசனே.

கற்பகவல்லி தோத்திரம்

1. அத்துவித சித்தபரி சுத்தர்க ளிடத்தினி
லடுத்திடர் தொலைப்பமென்றால்
ஆசையெனு மூவகைப் பேய்பிடித் தாவேச
மாட்டுவது மல்லாமலே
தத்துபரி யொத்தமன மெத்தனைசொ னாலுமது
தன்வழியி லேயிழுத்துத்
தள்ளுதே பாழான கோபமு மடங்காது
தன்னரசு நாடுசெயுதே
இத்தனைவி தச்சனியி லெப்படி வழிப்படுவ
தெப்படி பிழைப்பதம்மா
இனியாகி லுங்கடைக் கண்பார்த்து வினைதீர்த்து
னிணைமலர்ப் பதமருள்செய்வாய்
வித்தக நுதற்கண னிடத்தில்வள ரமுதமே
விரிபொழிற் றிருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலிகற் பகவல்லியே.

2. மாயாத சனனக் கடற்காவ னேபிணி
மலைக்காவ னேவருத்தும்
வாதனைச் சமுசார வேதனைக் காவனே
வறுமைச் சனிக்காவனே
ஓயாத கோபக் கனற்காவ னேகெட்ட
வொன்னலர் பகைக்காவனே
வொழியாத சஞ்சலப் படுகுழிக் காவனே
வூழ்வினை தனக்காவனே
நீயா தரித்தெனைப் பாதுகாத் தருள்செய்து
நெடுநாட் படும்பாடெலாம்
நீக்கியழி யாதசுக மெய்தச்செய் தாலன்றி
நீச்சுநிலை யில்லையம்மா
வீயாத முக்கண னிடத்தில்வள ரமுதமே
விரிபொழிற் றிருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலிகற் பகவல்லியே.



தமிழ் நாடகத்தின் தற்கால நிலை

சிவ. கண்ணுசாமி

ஆதிகாலந்தொட்டே தமிழ் நூல்கள் இயல், இசை, நாடகம் என முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுவந்திருக்கும் உண்மை பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதொன்றாகும். ஆனாலும் மூன்றாவது பகுதியாகிய நாடகம் என்பது ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ்மொழிக்கு வந்ததா, அன்றித் தனிப்பட்ட முறையில் தமிழுக்கே ஏற்பட்டிருந்ததா என்ற வாதமே தற்காலம் கற்றோர் கருதும் பெருவழக்காயிருக்கிறது. 'நட்' என்னும் வடமொழி வேர்ச்சொல்லிலிருந்து வந்ததே 'நாடகம்' ஆதலின் அது வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்ததேயாகும் என்று வடமொழிப்பற்றுடையாரும், 'நாடு, அகம்' என்ற இரண்டு தமிழ்ச் சொற்களுஞ் சேர்ந்தே நாடகம் ஆதலின் அது தமிழுக்கே உரியதென்று தமிழ்ப்பற்றுடையாரும் வாதிட்டு வருவதால் அத்தீராப் பெருவழக்கை வல்லாராகிய அவர்மாட்டே விடுத்து, இந்நாட்டில் நிலவும் தமிழ் நாடகத்தின் தற்கால நிலையைப்பற்றி ஈண்டு ஆராய்வோம்.

நாடகப் பேருறுப்புக்கள்

நாடகம் நடைபெறுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன:—1. நாடக சாலை, 2. நாடக அரங்கு, 3. காட்சித்திரைகள் உடைகள் முதலியன, 4. நடிகர்கள், 5 நாடகக் கதைகள், 6. நாடகம் பார்ப்போர் ஆகிய ஆறுமாம். இப்பேருறுப்புக்கள் ஒவ்வொன்றினையும் முறையே சிறிது நுணுகி ஆராய்வோம்.

1. நாடக சாலை

நாடகம் என்பது ஆய கலைகள் அறுபத்து நான்கினுஞ் சிறந்ததொன்றாகக் கருதப்பட்டு வருவதை எந்நாட்டிலும் பார்க்கிறோம். நுண்கலைகள், கவின்கலைகள், அருங்கலைகள் என்று அடை கொடுத்துக்

கூறப்படும் நுட்பமும், கவினும், அருமையும் வாய்ந்த கலைகளின் பகுதிகளாய, இன்னிசை, எழிலோவியம், சித்திரம் முதலிய ஒவ்வொன்றிற்கும் நாடகத்தில் இடமுண்மையாலேயே அஃது அத்தகையதோர் சிறப்பைப் பெற்றுளது; எனவே அரிய நுண்கலைகள் அனைத்துஞ் செறிந்தது நாடகம் என்பது எளிதிற் பெறப்படும். இப்பண்பு வாய்ந்த நாடகம் நடைபெறும் இடமுங் கவினமைந்ததாய் நயம் மலிந்து விளங்குதலன்றோ சால்பாகும்? ஆனால் தற்காலம் நமது நாட்டிலுள்ள நாடக சாலைகள் இருக்கிற நிலைமை என்ன?

நாடக சாலையின் வெளிப்புறம்

தமிழ் நாட்டிலே, பொதுவாக எவ்வூரிலும், நாடக சாலைகள் ஊருக்கு வெளிப்புறத்திலேயோ அன்றி ஊரினுள்ளேயேயாயின் ஓர் ஒதுக்கிடத்திலேயோ அமைக்கப்படுவதே வழக்கமாக இருக்கிறது. சென்னை முதலிய பெரிய நகரங்களில் கால்வாயோரங்களிலும், வீடில்லாமக்கள் நெருங்கி வசித்துவரும் ஒதுக்கிடங்களிலும், இடமில்லா விடங்களிலுமே அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வெளியூர்களில் நாடகசாலைகள் இருக்குமிடம் தெரு அல்லது சாலையின் மட்டத்திற்குத் தாழ்ந்ததாகவே பெரும்பாலுமிருக்கும். தாழ்ந்துள்ள அந்த இடத்திலுள்ள நாடக சாலைக்குட் செல்லும் வழியோ கல்லும் முள்ளும் புல்லும் பூச்சியும் நிறைந்து போதுமான வெளிச்சமின்றியே பெரும்பாலும் இருக்கும். ஒன்று அல்லது இரண்டு வளிவிளக்கு அல்லது விளக்குகள் (*Gas-lights*) வழி காட்டப் போடப்பட்டிருந்தாலும் நாடக சாலையின் சுற்றுப் புறங்களைப் பார்த்தால் இருள் மயமாகவே இருக்கும். தப்பித்தவறி நாடகம் பார்க்கவரும் சில மகளிரும், "ஐயோ, நாடகம் பார்த்துத் திரும்பி நலமே வீடு சேரின் நாட்டுப் பிள்ளையாருக்கு நான்கு தேங்காய் உடைக்க வேண்டும்" என்று நினைக்கக் கூடியதாயிருக்கும் அவ்விருட் செறிவு. இந்நிலையில், உள்ளே சென்று வெளியே வருவதற்குள் இடறி விழுவோரும் எற்றுண்டு புண்படுவோரும் சிலர் இல்லாமற் போகார். வெளியூர் நாடக சாலையின் வெளிப்புறத்தின் நிலைமையிவ்வாறிருக்க, சென்னையிற் பார்த்தாலோ, நாடகசாலைக்குப் போகும் வழியில் பெரும்பாலும் ஏழை மக்கள் தத்தம் பானை சட்டிகள், தாழம் பாய்கள், கோணிகள் முதலியவற்றைப் போட்டுக்கொண்டு அவ்விடத்தையே அடுக்களையாகவும் படுக்கையறையாகவும் பயன்படுத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். இவர்களிடையே ஒரு காலொடிந்த மேஜையையும், கள்ளிப் பெட்டியாலாய இருக்கையையும் போட்டுக்கொண்டு, வெற்றிலைபாக்கு, பீடி சிகரெட்டு

கள், வெண்ணெய் பிஸ்கோத்துகள், பழங்கள் முதலியவற்றைச் சிறுவணிகர்கள் விற்றுக்கொண்டிருப்பார்கள். கவினமைந்த இந்த இயற்கைக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நாடகசாலைக்குள் ஒருவன் செல்வதற்குள் அவனுக்கு இருந்த ஒரு சிறிது அருங்கலையுணர்ச்சியும் அவிந்தே போகும் என்று கூறவும் வேண்டுமோ? மேனாட்டில் உள்ள நாடகசாலைகளின் படங்கள் பல வெளிவந்திருப்பதைக் கண்டிருப்போர், அவைகளில் ஒன்றுவது இத்தகைய அவலமான இடங்களில் அமைக்கப்படாதிருப்பதை உணரலாம். எனவே இக்குறைகள் இல்லாதபடி தூய்மையான இடங்களில் செம்மையான வழிகளோடு கூடியவையாய், கூடுமானால் மரஞ்செடிகளாலாய இயற்கை நலனமைந்ததாய் நாடகசாலையின் வெளிப்புறமிருத்தல் வேண்டும்.

நாடகசாலையின் புறவமைப்பு

இனி, நாடகசாலைக்குச் செல்லும் வழியை விடுத்து நாடகசாலையின் புறவமைப்பைக் கருதலாம். சொல்லி வைத்தாற்போல் நம்நாட்டில் அமைந்துள்ள நாடகசாலைகளெல்லாம் சுற்றி வளைக்கப்பட்ட கட்டமைந்து அதன் நடுவேயே மிளிரும். அவ்வளைவுகள் பெரும்பாலும் பாதி இடிந்த குட்டிச் சுவர்களாகவோ, கறுத்துக் கிழிந்த மூங்கிற் பாய்களாகவோ, தகரத் தகடுகளாகவோ, அன்றி முட்கம்பிகள் மூடி செடிகளாகவோதான் இருக்கும். அவ்வளைவுகளின் நடுவே அமைக்கப்பட்டிருக்கும் வாயில்கள் பெரும்பாலுந் திட்டிவாயில்களாகவோ, திறந்த வழிகளாகவோதான் இருக்கும். வாயிற்படியின் இரு புறங்களிலும் மூங்கிற்றட்டிகள் அல்லது தகரத் தகடுகளாலமைந்து மக்கள் வரவையே விரும்பாதது போன்று சீட்டுகள் விற்குமிடங்கள் அமைந்திருக்கும். இவற்றைக் கண்ணுறுவோர் உளங்களில் எத்தகைய உணர்ச்சி பிறக்கும் என்பதை எடுத்துக் கூறல் வேண்டுமோ? பாரிஸ் நகரத்தின் தலையணியாய் விளங்கும் "தி ஒப் பிரா" என்ற நாடகசாலையின் அமைப்பை நோக்கும் நம்மனோர் உள்ளே சென்று நாடகம் பார்க்கும் நினைவே எழாமல் வெளியில் நின்றபடியே நாடகசாலையின் புறவமைப்பைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்துவிடுவார்கள் என்று கூறுதல் மிகையாகாது. இயன்றவரையில் தற்காலம் கட்டப்பட்டிருக்கும் படக்காட்சிச்சாலைகள் (*Cinema Houses*) எல்லாம் அழகான புறவமைப்புக்களுடன் அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தரத்தக்கதொன்றாகும்.

புறவமைப்புக்கள் அமைக்குமுன், இயன்றவரையில் அவைகளை நாடகசாலைகளின் மேற்கூரைகள் வெளியில் தெரியாதவாறு உயர

முள்ளனவாயும் சித்திரவேலைப்பாடு அமைந்தனவாயும் அகன்றவை யாயும் இருக்குமாறு பார்த்து அமைத்தலே வேண்டப்படுவதாகும். இதுவும் பெரும்பாலும் நம் நாட்டு நாடகசாலைகளின் கூரைகள் பார் வைக்கு வெறுப்பையூட்டும் தகரத் தகடுகளால் இயற்றப்படுவதைக் கருதியே கூறியதாகும். சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலைப் போன்றும், மியூஸியம் தியேட்டரைப் போன்றும் குறை கூற முடியாதவாறு சுற்றுப்புறமும் புறவமைப்பும் கொண்ட நாடகசாலை கள் பல அமைக்கப்படுவது நாட்டின் பொருளாதார நிலையையும் மக்கள்தம் அருங்கலை உணர்வுத்திறனையும் பொறுத்ததேயாகும்.

நாடகசாலையின் உட்புறம்

இனி நாடகசாலையின் உட்புறஞ் சென்றால் முதற்கண் நோக்கத் தகுவது இருக்கைகளின் அமைப்பேயாகும். வேலைப்பாடதிகமில்லா விட்டாலும் பார்ப்பதற்கு அருவருப்பில்லாத வகையில் நாற்காலிக ளும் விசிப்பலகைகளும் சார்மணைகளும் அமைக்கப்பட்டிருத்தல் பெரிதும் வேண்டப்படுவதாகும். இருப்புத் தகட்டினாலும் கரடு முரடான மரச்சக்கைகளாலும் இயற்றப்பட்டு, நான்கு கால்களோடு கூடியிருக்கின்ற ஒரு காரணம் பற்றியே 'நாற்காலி' என்னும் பெய ரிலக்கணத்திற்கு உரிமை பூண்டுள்ள இருக்கைகளின் உரிமைகள் களையப்படுதல் வேண்டும். இத்தகைய நாற்காலிகளில் மிகவும் மென் மைப்பண்பமைந்த தேங்காய் நார், வைக்கோல், கருப்புப் பஞ்சுத் திரள்கள் முதலியவற்றாலாய மெத்தைகளைத் தைத்து 'ஸோபா' என்ற பெரும்பெயரை அவற்றிற்குச் சூட்டி இரட்டிப்புக் கட்டணங் கள் மக்களிடமிருந்து பறித்தல் தற்கால நாடகத்துயரங்களில் ஒன்றா கும். இருக்கைகள் அசைவில்லாதபடியும் எளிதில் கவிழாதபடியும் அமைக்கப்பட்டிருத்தலும் இன்றியமையாததாகும். நாடகம் நடை பெற்று வரும்பொழுது 'தடால்' 'தடால்' என்று நாற்காலிகள் நிலைதவறி உட்கார்ந்திருப்பவர்களுடன் கவிழ்வதும், பெரும்பாலும் அதன் பயனாக நாற்காலிகள் முக்காலிகளாகவோ இருகாலிக ளாகவோ புத்துரு வெடுத்தலும் நாடகச் சுவைக்கு உவர்ப்பூட்டு வதாகும் என்பது கூறாதே யமையும்.

இனி, நாடக சாலைகளில் இருக்கைகள் போடப்பட்டு மக்கள் உட்கார்ந்து பார்ப்பதற்கெனத் தற்காலம் ஆளப்பட்டுவரும் முறை, வழக்காறுபற்றிக் காலங்கண்டதொன்று என்ற ஒன்று தவிர மற்றெவ்விதத்திலும் சிறந்ததாகக் கூறப்பட முடியாததாகும். பெரிய நாடக சாலைகளை எடுத்துக்கொண்டால் கடைசி யிருக்கைக் கும் நாடக அரங்கிற்கும் இடையே குறைந்தது நாற்ப தைம்பது

கஜங்கள் தூரமாவது இருக்கும். ஆகவே அவ்விருக்கையில் அமரும் ஒருவருக்கு நாடகத்தில் பேசப்படுவதொன்றும் சரிவரக் கேட்க முடியாமல் அவர் குறை கூற நேர்ந்தால் அவருக்கு, "ஐயா, தாம் ஐந்தணா பதினொரு தம்பிடிதானே கொடுத்தீர்கள்; அதற்கு அவ் வளவுதான் கேட்கும்; குறைகூறிப் பயனில்லை" என்று கூறுதல் நீதியாகாது. எனவே மக்கள் உட்கார்ந்து கேட்குமிடம் (*Auditorium*) கூடியவரையில் அகன்றதாயும், நீளத்திற் குறைவுடைய தாயும், கூடுமானால் ஒன்று அல்லது இரண்டு உயர்நிலைகளமைக்கப் பட்டு இருக்கைகளோடு கூடியதாயும் இருத்தல் வேண்டும். இதுவே நாகரிக முதிர்ச்சியடைந்த நாடுகளில் நாடக நலன் நோக்கித் தற் காலம் கையாளப்பட்டு வரும் சீரிய முறையாகும். முடிவாகக் கூறுமிடத்து அரிதிலீட்டிய பொருளைக் கொடுத்து உள்ளே செல் லும் மக்கள், "பொருளைக் கொடுத்தாலும் சற்று நேரமாவது, மகி ழுத்தக்க முறையில் அழகமைந்த ஓரிடம் வந்து, நேர்த்தியான ஓர் இருக்கையிலமர்ந்து களிப்பை யூட்டும் வகையில் ஒரு நாடகத்தைப் பார்த்தோம்" என்று சொல்லிக் களிக்குமாறு நாடக சாலைகள் அமைக்கப்படுதலே தற்கால நாடக உலகத்தின் முதனோக்கமாக இருத்தல் வேண்டும்.

பன்னூறாண்டுகளுக்கு முன்பேயே நமது முன்னோர் நாடக சாலை அமைப்பதற்கு விதியிது விலக்கிது என்று வரையறுத்து வைத் திருந்தார்கள் என்பது பண்டை நூல்களிலிருந்து உய்த்துணரக் கிடக்கிறது. நாடக நிகழ்ச்சிக்குப் பேரொலி, மணியோசை, சண் டைக்கூக்குரல் முதலிய எதிர்பாராத மாறொலிகள் இடையூறாகக் கூடுமெனக் கருதியேபோலும் தெய்வத்தானம், அறவோர்பள்ளி, செருப்புகுமிடம், சேரி முதலியவற்றின் மருங்கே நாடக சாலை அமைத்தல் கூடாது என அவர்கள் விதித்தது! மற்றும் நாடகம் ஆடுவோர்க்கும், பார்ப்போர்க்கும் எத்தகைய உடல் நலக்கேடும் எய்துதல் கூடாதென்று கருதியே போலும் அவர்கள் யானை கட்டு மிடம், குதிரைச் சாலை, பாம்புப்புற்று நிறைந்த இடம் முதலிய வற்றின் அருகே இருத்தல் கூடாதெனவும் விலக்கி வைத்தது! இவ்வுண்மைகள்,

"ஆடலும் பாடலுங் கொட்டும் பாணியும்
நாடிய வரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமுஞ் சேபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைசா ராது
மாவின் பந்தியோடு மயங்கல்செய் யாது

சேருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருத்திய
இத்திறத்த தாகு (ம்) அரங்கினுக் கிடமே ''

என்ற ஒரு பழைய நாடக நூல் மேற்கோளால் எளிதில் அறியக் கிடக்கின்றன. 'ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிகளெதிர் முகமாக்கி'யே நாடக சாலைகள் பண்டை நாளில் நம் நாட்டில் அமைக்கப்பட்டு வந்தன. ஆனல் தற்காலத்திலோ . . . ???

(தொடரும்)

சரித்திரம்

பாஹியன் யாத்திரை வரலாறு

ஜி. தாத்தாச்சாரி

(515-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினாறு யோசனை மேற்கே சென்று, (பா-ஹியன்) ந-கீ (நகர ஹார) நாட்டை அடைந்தனர். அதன் எல்லைப்புறத்தில் ஹி-லோ என்னும் நகரில் புத்த பகவானுடைய மண்டையோட்டின் விஹாரம் இருக்கிறது. அது முழுவதும் பொன்னால் வேயப்பட்டு, ஏழு விதமான சிறந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டரசன் அந்த மண்டையோட்டை மிகப் பாதுகாத்து வருகிறான். அதை யாரேனும் திருடிக் கொண்டு போகக்கூடும் என்ற பயத்தினால் அவன் அந்நாட்டில் முதன்மை வாய்ந்த குடும்பத்தினரில் எண்மரை அதற்குக் காவலாக நியமித்திருக்கிறான். இராத்திரியில் விஹாரத்தைப் பூட்டிக்கொண்டு போகும்போது, வெளிக்கதவின் மீது அவ்வெண்மரும் தங்கள் தங்களுடைய முத்திரைகளை வைப்பார்கள். காலையில் அவ்வெண்மரும் வந்து, தங்கள் தங்களுடைய முத்திரைகள் சரியானபடி இருக்கின்றனவாவென்று பார்த்துத் திருப்தியடைந்த பிறகுதான் கதவைத் திறப்பார்கள். கதவு திறக்கப்பட்டதும், அவர்கள் வாசனை நீரினால் கைகளைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, அந்த மண்டை யோட்டை வெளியே எடுத்து வந்து, விஹாரத்துக்குப் புறம்பே ஓர் உயர்ந்த பீடத்தின் மீது வைப்பார்கள். ஏழு விதமான சிறந்த பொருள்கள் கொண்ட ஆஸனம் ஒன்றை எடுத்து அந்த மண்டையோட்டின் கீழே வைத்து அதன் மீது ஸ்படிகத்தால் செய்யப்பட்ட மணி ஒன்றை வைத்து மூடுவார்கள். இவையெல்லாம் முத்துக்களாலும் இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மண்டையோடு மஞ்சள் கலந்த வெண்மை நிறமுள்ளது. நடுச் சற்று உயர்ந்து நான்கு அங்குல அகலமுள்ளது. ஒவ்வொரு நாளும் பகற்போது அகன்றவுடன் இந்த விஹாரத்திலுள்ளவர்கள், ஓர் உயர்ந்த கோபுரத்தின் மீதேறி நின்று பெரிய மேளம் ஒன்றைத் தட்டிச் சங்கநாதம் செய்து கஞ்சதாளங்களைக் கொட்டுவர். இவைகளை அரசன் கேட்டதும்,

அவன் புஷ்பங்களையும் தூபங்களையும் ஸமர்ப்பிப்பதற்காக விஹாரத்துக்குப் புறப்பட்டுப் போவான். அது முடிந்ததும் அங்குள்ளவர் அனைவரும் வரிசைக் கிரமமாக அந்த மண்டை யோட்டைத் தங்கள் தலைமீது வைத்து வணங்கிச் செல்கின்றனர். ஒவ்வொரு நாட் காலையிலும் அந்த அரசன் கிழக்கு வாசற்படி வழியாக நுழைந்து இவ்விதமாக வழிபாடாற்றி விட்டு மேற்கு வாசலால் திரும்பிச் செல்வான். அதன் பின்னரே அவன் ராஜ்ய காரியங்களைக் கவனிப்பான். இல்லறத்தோரும் முதியோரும் முதன் முதலில் இதற்கு வழிபாடுகள் செய்துவிட்டுத் தான் தங்கள் தங்களுடைய குடும்ப விவகாரங்களைக் கவனிக்கத் தொடங்குவார்கள். சோம்பலால் அசட்டை செய்யப்படாமல் இவ் வழக்கம் ஒவ்வொரு நாளும் இப்படியே ஆரம்பமாகின்றது. எல்லா வழிபாடுகளும் முடிந்த பிறகு அந்த மண்டையோட்டை எடுத்துச் செல்வர். அந்த விஹாரத்தில் உள்ள ஏழுவித அரிய பொருள்களால் இயற்றப்பட்டதும் ஐந்து அடிக்கு மேலான உயரமுள்ளதுமான தாது கர்ப்பம் போன்றதொரு மண்டபத்தில் அது பத்திரமாக வைக்கப்படுகின்றது.

விஹாரத்தின் வாசலுக்கு முன்னால் புஷ்பங்களை விற்போரும் தூபப்பொருள்களை விற்போரும் ஒவ்வொரு நாளும் கூடியிருப்பார்கள். வழிபாடுகளை இயற்ற விரும்புவோர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வர். சுற்றுப்பக்கங்களிலுள்ள நாடுகளின் அரசர்களும் இங்கு வழிபாடு செய்வதற்காகத் தமது பிரதிநிதிகளைத் தவறாது அனுப்புகின்றனர். இந்த விஹாரம் நாற்பது தப்படிகள் கொண்ட சதுரத்தில் இருக்கிறது. ஆகாயமே இடிந்தாலும் பூமியே பிளந்தாலும் இந்த இடம் ஒரு போதும் சலிக்காது.

இங்கிருந்து வடக்கே ஒரு யோசனை சென்றால், நகரஹார நாட்டின் தலை நகரை அடையலாம். முன்னொரு பிறப்பில் போதி ஸத்வர் தீபங்கர புத்தருக்கு அர்ச்சனை செய்வதற்காக ஐந்து புஷ்பங்களைப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்ட இடம் இதுவாம். இஃதன்றியும், இந்நகரில் புத்த பகவானுடைய பல் ஒன்றின் மீது எழுப்பப்பட்ட ஸ்தூபம் ஒன்றும் உள்ளது. மேலே கூறிய மண்டை யோட்டுக்குச் செய்யப்படுவதைப் போன்ற வழிபாடு இதற்கும் செய்யப்படுகின்றது.

நகரத்துக்கு வட கிழக்கில் ஒரு யோசனை தூரத்தில் போதி ஸத்வரின் தண்டம் இருக்கும் பள்ளத்தாக்கின் முகத்வாரம் உள்ளது. அங்கும் ஒரு விஹாரம் எழுப்பப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. அந்தத் தண்டம் கோசீர்ஷ சந்தன மரத்தால் செய்யப்

பட்டது. அதன் நீளம் சுமார் ஒன்றேமுக்கால் சங் ஆகும். அதற்கு மரத்தினுல் செய்யப்பட்ட உறை ஒன்றுண்டு. அவ்வுறையினின்றும் அதனை ஆயிரம் மனிதர்களாலும் வெளியே எடுக்கமுடியாது. அந்தப் பள்ளத்தாக்கில் புகுந்து நான்கு நாள் பயணம் மேற்கே சென்றால் புத்த பகவானுடைய ஸங்காதியின் விஹாரம் காணப்படும். அதற்கும் வழிபாடுகள் செய்யப் படுகின்றன. அந்த நாட்டில் க்ஷாமம் நேருமானால், ஜனங்களும் அதிகாரிகளும் ஒன்று கூடி இந்த வஸ்திரத்தை வெளியே எடுத்துவந்து வந்தனை வழிபாடுகள் புரிவார்கள். உடனே மிக்க மழை பொழியும். நகரஹார நகரத்துக்கு அரை யோசனை தெற்கில் ஒரு குகை உள்ளது. அஃது ஓர் உன்னதமான மலையின் தென்மேற்குச் சரிவிலிருக்கிறது. புத்த பகவான் இங்குத் தமது சாயையை (நிழலை) விட்டுச் சென்றனர். சுமார் பத்துத் தப்படி தூரத்திலிருந்தால் புத்த பகவானுடைய வாஸ்தவமான சாயை போன்றதோர் பொன்னிறமான நிழல் காணப்படுகிறது. அதன் அங்க அடையாளங்கள் வெகு தெளிவாகவும் பிரகாசமாகவும் தெரிகின்றன. அதன் அருகில் சென்றாலும், சற்றுத் தூரத்தில் போனாலும், அது கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்குகின்றது. எல்லைப் புறத்தில் உள்ள நாடுகளின் அரசர்கள் அந்தச் சாயையைப் போன்றதோர் பிரதி செய்து கொண்டு வரும்படி சாமர்த்தியம் வாய்ந்த சித்திரக்காரர்களை அனுப்பினர். என்றாலும் அவர்கள் அதைச் செய்ய முடியாது போயினர். இஃதன்றியும் ஆயிரம் புத்தர்கள் இங்குத் தங்கள் தங்களுடைய சாயைகளை விடுவார்கள் என்ற கர்ண பரம்பரைச் செய்தியும் இங்குள்ள ஜனங்களிடம் கேட்கப்படுகிறது. அந்தச் சாயைக்கு ஐந்நூறு தப்படி மேற்கில், புத்த பகவான் தனியாக இருந்த காலத்தில், தமது கேசத்தைக் களைந்து நகங்களைக் கிள்ளிய இடம் உள்ளது. அதன் பிறகு புத்த பகவானும் அவருடைய சிஷ்யர்களும் வருங்காலத்தில் கட்டப்படவேண்டிய ஸ்தூபங்கள் இன்ன மாதிரி இருக்கவேண்டு மென்பதைக் காட்டுவதற்காக ஏழு அல்லது எட்டு சங் உயரமான ஸ்தூபம் ஒன்றை எழுப்பினர். அஃது இன்னும் இருக்கிறது. அதன் பக்கத்தில் உள்ள விஹாரம் ஒன்றில் ஏறக்குறைய எழுநூறு பிக்ஷுக்கள் இருக்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் அர்ஹத்துக்களின் பொருட்டும் பிரத்யேக புத்தர்களின் பொருட்டும் எழுப்பப்பட்ட ஸ்தூபங்கள் ஆயிரம் உள்ளன.

மாரி காலமாகிய இரண்டு மாதங்களை இங்குக் கழித்த பிறகு, பா-ஹியனும் அவருடைய துணைவர்களும் சிறிய பனி மலையைத் தாண்டித் தெற்கே சென்றனர். இந்த மலையானது கோடை காலத்

திலும் மாரிகாலத்திலும் ஒரே பனியினால் மூடப்பட்டிருக்கிறது. இம்மலையின் வடபாரிசத்து நிழலில் திடீரென்று அதிகமான குளிர் உண்டாகவே, எல்லாரும் பீதியினால் ஒன்றும் பேசமாட்டாதவரா யினர். ஹ்வீ-கிங் என்பவர் மட்டும் அப்பால் போவதற்குச் சக்தி யற்றவரானார். அவருடைய வாயிலிருந்து வெண்மையான நுரை வந்தது. அவர் பா-ஹியனை நோக்கி, "எனக்கு இனிமேல் சக்தி யில்லை. நீங்களும் இறந்து விடுவீர்களோ என்ற எண்ணம் உண்டா கின்றது. ஆதலால் சந்தர்ப்பம் இருக்கும்போதே நீங்கள் அனை வரும் முன்னோக்கிச் செல்லுங்கள்" என்று சொல்லிப் பிராணனை விட்டுவிட்டார். பா-ஹியன் அவரைத் தழுவிக் கொண்டு தீன ஸ்வ ரத்துடன், "பாக்கியவான்களாக ஆவது நமது செய்கையல்ல" என்று சொன்னார். பிறகு அவர்கள் சிரமத்தைப் பொறுத்துக் கொண்டு மறுபடியும் புறப்பட்டு முன்னோக்கிச் சென்று, அந்த மலை யைத்தாண்டி அதன் தென் பாரிசத்திலிருக்கும் லோ-யி நாட்டைச் சேர்ந்தனர். இதன் சுற்றுப் பக்கங்களில் மஹாயான மார்க்கத்தையும் ஹீனயான மார்க்கத்தையும் சேர்ந்தவர்களான பிக்ஷுக்கள் மூவாயிரவர் இருக்கின்றனர். இங்குப் பா-ஹியனும் துணைவர்களும் வர்ஷா காலத்தைக் கழித்தனர். அப்பால் அவர்கள் தெற்கு நோக்கி இறங்கி, பத்து நாள் பயணம் சென்று, போ-நா என்ற நாட்டை அடைந்தனர். அங்கு ஹீனயான மார்க்கத்தினரான பிக்ஷுக்கள் மூவாயிரவருக்கு மேலிருக்கின்றனர். அங்கிருந்து இவர்கள் கிழக்கு நோக்கிப்புறப்பட்டு மூன்று நாள் நடந்து சென்று மறுபடியும் ஸிந்து நதியைத் தாண்டினர். அந்நதியின் இருகரை களும் அவ்விடத்தில் சமமாக இருக்கின்றன.

நதியின் அக்கரையில் பி-து என்ற நாடு உள்ளது. அங்குப் புத்த தர்மம் வெகு பிரபலமாக விளங்குகிறது. ஜனங்கள் மஹா யான மார்க்கத்தையும் ஹீனயான மார்க்கத்தையும் அவலம்பித்தவர் களாக இருக்கின்றனர். சீன தேசத்திலிருந்து யாத்திரிகர்கள் வந் ததை அவர்கள் கண்டதும் உணர்ச்சி மேலீட்டால், "எல்லைப்புறங் களுக்கு அப்பாலுள்ள ஜனங்கள் எப்படிக் குடும்ப வைராக்கியத் தைப்பற்றிய தர்மத்தைத் தெரிந்து கொண்டு, புத்த பகவான் அரு ளிய பிடகங்களைத் தேடிக்கொண்டு வெகு தூரம் வந்தனர்?" என்ற னர். பிரயாணிகளுக்கு வேண்டிய பொருள்களை அவர்கள் அதிக மாகக்கொடுத்து, அதிதி ஸத்காரங்களை வெகு விமர்சையாகச் செய் கின்றனர்.

அங்கிருந்து தென் கிழக்கு முகமாகக் கிட்டத்தட்ட எண்பது யோசனை நாங்கள் நடந்து வந்த போது, கோடிக்கணக்கான

பிக்ஷுக்கள் இருந்த அநேகம் விஹாரங்களை ஒன்றன் பின்னொன்
றாக வழியில் கடந்து சென்றோம். இவைகளைத் தாண்டியதும் நாங்
கள் ஒரு நாட்டுக்கு வந்தோம். அது மோ-து-லோ என்னும் பெயர்
பெற்றது. மீண்டும் ஒரு முறை நாங்கள் பு-னா நதி போன வழியே
சென்றோம். நதியின் தென்கரையிலும் வடகரையிலும் ஏறக்
குறைய மூவாயிரம் பிக்ஷுக்கள் உள்ள இருபது ஸங்காராமங்கள்
உள்ளன. புத்த தர்மம் மிக்க பிரபலம் அடைந்து விளங்குகின்றது.
வனாந்தரங்களுக்கு அப்பால் மேலை இந்திய நாடுகள் இருக்கின்றன.
அந்நாடுகளின் அரசர்கள் எல்லோரும் புத்த தர்மத்தில் உறுதியான
பற்றுடையவர்கள். பிக்ஷுக்களுக்கு ஐயம் இடும்போது அவர்கள்
அதிகாரத்தைக் காட்டக்கூடிய தலைக்குல்லாவைக் கழற்றி விடுகின்ற
னர். அரச குடும்பத்தினரும் பிரதான மந்திரிகளும் நேரில் வந்து
ஐயமிடுவதைக் கண்காணிக்கின்றனர். ஐயம் இட்டு முடிந்ததும்
அவர்கள் அத்யக்ஷரின் ஆஸனத்துக்கு எதிரே ஒரு கம்பளத்தைத்
தரையில் விரித்து அதன் முன்னர் உட்காருகின்றனர். பிக்ஷுக்
களும் அவர்கள் கட்டில்களின் மீது உட்காரத் துணியார்கள். அர
சர்கள் ஐயமிடவேண்டிய முறைகள் புத்த பகவான் காலந்தொடங்
கியே இன்று வரையில் இடையறாது வந்திருக்கின்றன. இதன்
தெற்கில் மத்யதேசம் எனப்படும் நாடு உள்ளது. இந்த நாட்டின்
சீதோஷ்ண ஸ்திதி, உறைபனியும் மூடுபனியும் இன்றிச் சுககர
மாக இருக்கிறது. தலை வரியும் வேறு அதிகார நிர்ப்பந்தங்களு
மில்லாமல் ஜனங்கள் சுபிக்ஷமாக வாழ்கின்றனர். அரசனுக்குச்
சொந்தமான நிலங்களைச் சாகுபடி செய்கிறவர்கள் மட்டும்
நிலத்திலிருந்து கிடைக்கிற வரும்படியில் ஒரு பகுதியைத் திரும்பக்
கொடுக்கின்றனர். அவர்களுக்குப் போகப் பிரியமிருந்தால் போக
லாம்; இருக்க இஷ்டமிருந்தால் இருக்கலாம். சரீர தண்டனை
விதிக்காமல் அரசர்கள் ராஜ்யபாரம் புரிகின்றனர். சந்தர்ப்பங்களுக்
குத் தக்கபடி இலகுவாகவோ கடினமாகவோ குற்றவாளிகளுக்கு அப
ராதம் விதிக்கப்படுகிறது. அடிக்கடிக் கலகம் செய்பவர் விஷயத்தில்
கூட அவர்களுடைய வலக்கைகளை மட்டும் வெட்டி விடுகிறார்கள்.
அரசனுக்கு வலமும் இடமும் இருந்து அவனைக் காக்கும் மெய்
காவலர்களுக்கு வரையறுத்த சம்பளம் ஏற்பட்டுள்ளது. நாடெங்
கும் சண்டாளர்களைத் தவிர மற்ற ஜனங்கள் ஜீவவதை செய்வ
தில்லை; மதுபானம் பண்ணுவதில்லை. வெங்காயத்தையும் உள்ளிப்
பூண்டையும் தின்பதில்லை. சண்டாளர்களுக்குத் **துஷ்காமிகள்**
என்று பெயர். அவர்கள் மற்ற ஜனங்களினின்றும் விலகியே
தனித்து வாழ்கின்றனர். நகரத்துக்குள்ளும் சந்தை கூடுமிடத்துக்

குள்ளும் அவர்கள் வரும்போது தங்களை விலக்கிக் கொள்வதற்காக ஒரு மரக்கட்டையைத் தட்டி ஓசைப்படுத்துகின்றனர். அப்போது அவர்கள் இன்னார் என்பதைத் தெரிந்து கொள்ளும் மற்ற ஜனங்கள் அவர்களிடம் அணுகாமல் விலகிக்கொள்கின்றனர். இந்த நாட்டில் ஜனங்கள் கோழிகளையும் பன்றிகளையும் வளர்ப்பதில்லை. கால் நடைகளை விற்பதுமில்லை. அவர்களுடைய சந்தை கூடுமிடங்களில் சூதாடுமிடமாவது மதுபானக்கடைகளாவது கிடையா. வியாபாரம் செய்யும்போது சோகிகளையே அவர்கள் நாணயமாக உபயோகிக்கின்றனர். சண்டாளர்கள் மட்டுமே வேட்டையாடி மாமிசங்களை விற்கின்றனர். புத்த பகவானுடைய நிர்வாண காலந் தொடங்கி, இந்நாடுகளின் அரசர்களும் பிரதான மந்திரிகளும் கிருஹஸ்தர்களும் பிக்ஷுக்களுக்காக விஹாரங்களைக்கட்டி வைத்து, அவர்களுடைய காலக்ஷேபத்துக்காக விளை நிலங்களையும் வீடுகளையும் தோட்டங்களையும் விட்டுக் கொடுத்து, வேண்டிய வேலையாட்களையும் காளைமாடுகளையும் அளித்திருக்கின்றனர். இவைகளைக் குறித்தெழுதிய சிலாசாஸனங்கள் ஓர் அரசனிடமிருந்து அவனுக்குப்பின்வரும் அரசனிடம் கொடுக்கப்படுகின்றன. ஒருவனாவது இந்த மானியங்களைத் திரும்ப எடுத்துக் கொண்டதில்லை. ஆகவே இது வரையில் யாதொரு விதமான தடையும் நேர்ந்தது கிடையாது. இந்த விஹாரங்களில் தத்தமக்குள்ள அறைகளில் தங்கியிருக்கும் பிக்ஷுக்களுக்கு வேண்டிய படுக்கை, தடுக்கு, உணவு, பானம், வஸ்திரம் ஆகியவெல்லாம் குறைவில்லாமல் நிறையக் கொடுக்கப்படுகின்றன. இதேவிதமாக எல்லா விடங்களிலும் நடைபெறுகிறது. பிக்ஷுக்கள் எப்போதும் புண்ய கர்மங்களைச் செய்து கொண்டும், கிரந்த காலக்ஷேபம் பண்ணிக்கொண்டும், தியானத்தில் அமர்ந்து கொண்டும் காலம் கழிக்கின்றனர். புதியவராக ஒரு பிக்ஷு வந்தால் அவருக்காகப் பிக்ஷாபாத்திரத்தையும் வஸ்திரத்தையும் எடுத்துக் கொண்டு அங்குள்ள முதிய பிக்ஷுக்கள் அவரை எதிர்கொள்ள வெளியே வருகின்றனர். கால் கழுவ ஜலமும் (பாத்யம்) அக்கால்களில் தேய்த்துக் கொள்வதற்காக எண்ணெயும் அவருக்குக் கொடுக்கப்படுகின்றன. விகால (வேளையல்லாத) ஆகாரமும் அவருக்குக் கொடுக்கப்படுகிறது. சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொண்டதும் அவரை மறுபடியும் கேட்டு, அவருடைய பிக்ஷுத்துவம் எப்படிப் பட்டதென்பதைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப ஓர் அறையையும் உறங்குவதற்கான சாமக்கிரியைகளையும் அவருக்குக் கொடுக்கின்றனர். பிக்ஷுக்கள் எங்கெங்கே வசிக்கின்றனரோ அங்கங்கெல்லாம் அவர்கள் சாரீபுத்ரன், முத்கல புத்ரன், ஆனந்தன்

இவர்கள் பொருட்டும் விஹாரங்களை எழுப்பியிருக்கின்றனர். வர்ஷாகாலம் கழிந்தபின் ஒரு மாதம் வரையில் பக்திசிரத்தை யுள்ள உபாஸகர்கள் பிக்ஷுக்களுக்கென்று வேண்டிய பொருள் களைச் சேர்க்கத் தொடங்குகின்றனர். அவர்களுக்கு விகால போஜனமும் சித்தம் செய்கின்றனர். பெரிய ஸபைகளில் அந்தப் பிக்ஷுக்கள் தர்மோபதேசம் செய்வர். உபதேசம் முடிந்த பிறகு, அவர்கள் சாரீபுத்ரனுடைய விஹாரத்தை எல்லாவிதமான புஷ்பங்களாலும் நறுவிரைகளாலும் அர்ச்சிக்கின்றனர். வேறு வேறு மனிதர்களால் கொடுக்கப்பட்ட தீபங்களை இரவு முழுவதும் ஏற்றி வைக்கின்றனர். சாரீபுத்ரன் முதலில் ஒரு பிராம்மணனாக விருந் தான். ஒரு சமயம் அவன் புத்தபகவானிடம் சென்று தனக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று கேட்டான். சிரேஷ்டர்களான முத்கலரும் காச்பபரும் அவ்வாறே செய்தனர். ஸ்திரீகளையும் ஸங் கத்தில் சேர்த்துக் கொள்வதற்காக லோக (புத்த) பகவானிடம் அனு மதி வாங்கியவர் ஆனந்தர்; ஆனதால் அவருடைய விஹாரத்தைப் பிக்ஷுணிகள் கொண்டாடுகின்றனர். ச்ரமணர்கள் பெரும்பாலும் இராகுலனை வழிபடுகின்றனர். அபிதர்மத்தில் விசேஷப் பற்று உள்ள வர்கள் அபிதர்மத்தையும், விநயத்தில் பற்றுள்ளவர்கள் விநயத்தை யும் பாராட்டுகின்றனர். ஒவ்வொரு வருஷமும் குறித்த தினத்தில் ஒவ்வொரு வழிபாடுண்டு. மஹாயானத்தில் பற்றுள்ளவர்கள் பிரஜ் ஞாபாரமிதைக்கும் மஞ்சுஸ்ரீக்கும் அவலோகிதேசுவரர்க்கும் வழி பாடியற்றுகின்றனர். பிக்ஷுக்கள் தாங்கள் பெறவேண்டிய வருஷ வாரிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டதும், பிரதான மனிதர் களும் உபாஸகர்களும் பிராம்மணர்களும் அந்தப் பிக்ஷுக்களுக் கான வஸ்திரவகைகளையும் வேறு பொருள்களையும் கொண்டு வரு கின்றனர். பிக்ஷுக்களும் ஒருவருக்கொருவர் தானம் செய்து கொள்கின்றனர். புத்த பகவானுடைய நிர்வாண காலம் முதற் கொண்டே பிக்ஷுக்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமை இன்னதென்பது இடையறாது வழங்கி வந்திருக்கிறது.

ஸிந்து நதியைத் தாண்டிய பிறகு, தென்னிந்தியாவின் தென் கடல் நான்கு அல்லது ஐந்து கோடி லீ தூரமாக இருக்கிறது. பெரிய மலைகளும் பள்ளத்தாக்குகளும் இல்லாமல் பூமி எங்கும் ஸமபூமியாகவே இருக்கிறது. என்றாலும் நதிகள் பலவுள்ளன.

இங்கிருந்து தென் கிழக்காகப் பதினெட்டு யோசனை தூரத் தில் ஸாங்காச்யம் என்னும் நாடு இருக்கிறது. தமது மாதாவின் பொருட்டு மூன்று மாதகாலம் தர்மோபதேசம் செய்வதற்காகப் புத்தபகவான் த்ரயஸ்த்ரிம்ச லோகத்துக்கு ஏறிப்போய் அங்கிருந்து

இறங்கிய இடம் இதுவாம். ஸித்தியினால் புத்தபகவான் த்ரயஸ்த்ரிம்சலோகத்துக்குப போனபோது அவ்விஷயத்தைத் தமது சிஷ்யர்கள் தெரிந்து கொள்ளா வண்ணம் அவர் செய்திருந்தனர். (மேற்கூறிய மூன்றுமாதகாலம்) கழிவதற்கு ஏழு நாள் முன்னதாக, அவர் அந்த ஸித்தியை நிவர்த்திக்கவே, அனிருத்தன் தன்னுடைய திவ்யசக்ஷுஸால் லோக பகவானை ஆகாயத்தில் கண்டு, ஆர்யரான மஹாமுத்கல புத்ரனை நோக்கி, "நீர் போய் லோகபகவானை ஆராதித்து வரலாம்" என்றான். முத்கல்யாயனன் அவ்விதமே சென்று (பகவானுடைய) திருவடிகளில் தாழ்ந்து வணங்கி அவருடன் வார்த்தையாடினான்; இந்தச் சல்லாபம் நிகழ்ந்த பின்னர் புத்த பகவான் முத்கல்யாயனனிடம், "ஏழு நாட்கள் கழிந்ததும் நான் ஜம்புத்வீபத்துக்கு இழிவேன்" என்றார் அப்பால் முத்கல்யாயனன் திரும்பிப் போய்விட்டான். இதன்மேல் எட்டுநாடுகளின் பெரிய அரசர்களும் மந்திரிகளும் மஹாஜனங்களும் புத்த பகவானை வெகு நாட்களாகக் காணாதிருந்தபடியால் எல்லோரும் அவரைச்சந்திக்க ஆவலுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் இந்த நாட்டில் மேகங்கள்போலக் கூடி லோகபாலகரைச் சந்திக்க வந்தனர். அப்போது உத்பலா பிக்ஷுணீ என்ற ஒருத்தி தனக்குள்ளேயே, "நாட்டு அரசர்களும் மந்திரிகளும் மஹாஜனங்களும் இன்று புத்த பகவானைக் கண்டு வழிபாடு செய்யச் செல்கின்றனர். நானோ ஒரு பெண்பால். அவரை முதன் முதலில் நான் காண்பது எப்படி முடியும்?" என்று சொல்லிக்கொண்டாள். புத்தபகவான் உடனே தமது ஸித்தி சக்தியினால் அவளை ஒரு சக்கரவர்த்தியாக்கினர். ஆகவே அவளே அவரை முதன் முதலில் வழிபாடு செய்யும் உரிமையை உடையவளானாள். த்ரா ஸ்த்ரிம்ச லோகத்திலிருந்து பகவான் கீழே யிறங்கவிருந்த இச்சமயத்தில் சிலாக்கியமான மூன்று ஏணிகள் தோன்றின. மத்தியிலிருந்த ஏணி ஏழு விதமான அபூர்வ வஸ்துக்களால் செய்யப்பட்டிருந்தது. அதன் மேல் நின்று புத்த பகவான் இறங்கத் தொடங்கினர். அப்பால் பிரம்ம காயிகலோகத்து அதிபதி ஒரு வெள்ளி ஏணியைத் தோன்றச்செய்து அதன் மீது ஒரு வெண்மையான சாமரையைத் தன் கையில் கொண்டு, புத்த பகவானுடைய வலப் பக்கத்தில் இருந்தனன். பிறகு தேவர்களுக்கு அதிபதியான சக்ரன், பிரகாசிக்கிற ஒரு பொன் ஏணியைத் தோன்றச் செய்து அதன் மீது உயர்ந்த குடையொன்றைத் தன் கையில் கொண்டு, பகவானுடைய இடப் பக்கத்தில் இருந்தனன். புத்த பகவான் இழிந்தருளும்போது எண்ணிறந்த தேவகணங்கள் புடை சூழ்ந்து நின்றனர். அவர் கீழே இறங்கிய பிறகு அந்த மூன்று

ஏணிகளும் எழு படிகளை மட்டும் புலப்படும்படி விட்டுப் பூமியின் கீழே மறைந்து விட்டன. பிற்காலத்தில் அசோக மஹாராஜன், இந்த ஏணிகள் சென்றிருக்கக்கூடிய ஆழத்தை அறிய ஆவல் கொண்டு பூமியின் கீழே வெட்டிப் பார்க்கும்படி வேலையாட்களை ஏவினான். அவர்கள் வெட்டிக்கொண்டே போய், மஞ்சள் நிறமான நீரூற்றை (உலகத்தின் அடிவாரத்தை)க் கண்டனரென்றாலும் ஏணிகளுடைய அடிவாரத்துக்கு வரவேயில்லை. இதனால், பக்தி சிரத்தையில் இன்னும் அதிகமான பற்றுதல் உடையவனாகிய அவ்வரசன் உடனே அவ்வேணிகளின் மீது ஒரு விஹாரத்தை எழுப்பி, மத்தியிலுள்ள படிக்கட்டுக்கு எதிரே பதினாறடி உயரத்தில் புத்த பகவானுடைய நின்ற திருக்கோலமான விக்ரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தான். அந்த விக்ரகத்தின் பின்னால், அவன் முப்பது முழம் உயரமுள்ள ஒரு கல் தூணை நாட்டி அதன் உச்சி மீது ஒரு சிங்கத்தின் உருவத்தை வைத்தனன். அந்தத் தூணுக்குள் அதன் நான்கு பக்கங்களிலும் புத்த பகவானுடைய உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. உள்ளும் புறமும் அது கண்ணாடி போலப் பளபளப்பாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் தர்ம விரோதிகளான சிலருக்கும் ச்ரமணர்களுக்கும் இந்தத் தூணைப்பற்றிய பாத்தியா பாத்திய விவாதம் உண்டாயிற்று. ச்ரமணர்களுடைய கக்ஷி தோற்கத் தொடங்கியது. அப்போது, "இவ்விடம் ச்ரமணர்களுக்கு நியாயமாகவே சொந்தம் என்பதைத் தெரிவிக்க ஓர் அமானுஷ்யமான சாக்ஷியம் உண்டாகுமானால் அதனை ஒப்புக் கொள்வோம்" என்று இரு திறத்தாரும் ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். உடனே அந்தத் தூண் மீதிருந்த சிங்கம் உரத்துக் கர்ஜனை செய்தது. இந்த நிதர்சனத்தைக் கண்ட தர்மவிரோதிகள் வெட்கப்பட்டுத் தங்களுடைய கக்ஷியினின்றும் விலகிக்கொண்டு பணிந்தனர்.

(தொடரும்)

பராந்தக பாண்டியன் சாஸனம்

எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை

அடியில் வருவது ஸ்ரீ கோச்சடையபன்மனான திரிபுவன சக்ரவர்த்தி ஸ்ரீ பராந்தக பாண்டியனது சாஸனமாம். இது கன்னியாகுமரியில் பகவதி நாச்சியார் கோவில் இரண்டாவது பிராகாரத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பெற்றுளது. பிற்காலத்திலே அச்சுவரின் பழைய கற்களிற் சில மாற்றப்படவே சாஸனத்தின் பல பாகங்களும் எடுபட்டுப் போய்விட்டன. இவற்றுள் ஒரு சிறு பகுதி மட்டும் அக் கோவிலின் வெளிப்பிராகாரத்தில் படிகளாயமைந்து கிடக்கும் இரண்டு துண்டுக் கற்களில் காணப்படுகின்றது. சாஸனம் அரைகுறையாயிருப்பது வருந்தத்தக்க விஷயமே.

பராந்தக பாண்டியனுடைய வேறொரு சிலாலிகிதம் மேற்கூறிய கோயிலின் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிவரும் மண்டபத்தில் செதுக்கப்பெற்றுளது. அதைக் காலஞ் சென்ற ஸ்ரீமான் கோபிநாதராயரவர்கள் திருவிதாங்கூர் ஆர்க்கியோலாஜிகல் ஸீரிஸில் பதிப்பித்திருக்கின்றனர். இவ்விரண்டையுந் தவிர இப்பாண்டியனது சாஸனங்கள் வேறு எவ்விடங்களிலேனும் உள்ளனவாக இதுகாறும் அறிய வந்ததில்லை.

இவனது மெய்க்கீர்த்தியில் 'தெலிங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்கமடிப்படுத்து' என்று வரும் பகுதி, 'குளத்திடைத் தெலுங்கவீமன் விலங்கல் மிசை ஏறவும் கலிங்க பூமியைக் கனலெரிபருகவும் ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து வட திசை அடிபடுத்தருளி' என்று விக்கிரம சோழன் மெய்க்கீர்த்தியில் வரும் பகுதியை எளிதில் ஞாபகப் படுத்துகின்றது. இவ் வொற்றுமையை ஆதாரமாகக்கொண்டே சிலாசாஸன பரிசோதகர்கள் கலிங்கப் போர் நிகழ்ந்த காலத்தில் விக்கிரம சோழனுக்கு உதவியாகப் பராந்தக பாண்டியன் சென்றிருந்தானென்றும் ஆதலால் அவ்விரு வேந்தரும் சம காலத்தினராவாரென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். விக்கிரம சோழனது காலம் கி. பி. 1118 முதல் கி. பி. 1136 வரையிலுமாம். ஆகவே பராந்தக பாண்டியனுடைய காலம் கி. பி. 12-வது நூற்றாண்டின் முற்பகுதியென்று கொள்வதில் யாதும் தடையில்லை.

இவ்வுண்மை இன்னமொரு வழியாலும் உறதிப்படுகின்றது. ஜடிலவர்ம குலசேகர பாண்டியனது கன்னியாகுமரிச் சாஸனத்தைக் கவனிப்போமானால் அதில்[1] 'குமரிப் பிராட்டி கோவிலிலே நம்பேரால் மடமெடுத்துத் தேவி தைப்பூசத்திருநாளில் வந்த பரதேசிகளை ஊட்டுவதாக' என்று அப்புண்ணிய தலத்தில் நடைபெறும் தைப் பூசத் திருவிழாவை ஒட்டி அவன் செய்யும் அன்னதான தர்மம் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். தைப்பூசம் பராந்தக பாண்டியனது ஜன்ம நக்ஷத்திரம். இஃது அவனது இரண்டு கல்வெட்டுப் பிரமாணங்களிலும், 'நாம் பிறந்த தைப்பூசத் திருநாளுக்குச் செல்விதாக' என்று வரும் பகுதியினால் நன்கு விளங்கும். இத்தினத்தில் விசேஷ பூஜை திருவிழா முதலியவை நடைபெறும் பொருட்டு அதிகமான நன்செய் புன்செய் நிலங்கள் அவனால் நீர் வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்தியை ஆராய்ந்து நோக்கும்பொழுது ஜடிலவர்ம குலசேகர பாண்டியன் நம் பராந்தக பாண்டியனுக்குப் பின் தென்னாட்டை ஆண்டுவந்த ஓர் அரசனே யாவான் என்பது எளிதில் புலப்படும். குலசேகரன் கி. பி. 1190-ல் பட்டம் எய்தியவன். ஆதலால் பராந்தக பாண்டியனுடைய காலம் இதற்குச் சிறிது முந்தியதாக, அதாவது கி. பி. 12-வது நூற்றாண்டின் முற் பகுதியாக இருக்கலாமென்பது உறுதியாம். இவ்விரண்டாவது காரணமே முன்னதிலும் சிறந்ததென நடுநிலையுடையோர் ஒப்புக்கொள்வர். ஏனெனில், முன்னது மெய்க்கீர்த்தியில் வந்த பகுதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது; பின்னது சாஸனத்தின் காரியாம்சமான பகுதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. மெய்க்கீர்த்திகள் ஸாதாரணமாக அரசரின் சம்ஸ்தான வித்வான்களால் எழுதப்படுபவைகள். இவர்கள் தம் மன்னரை எட்டின மட்டெல்லாம் ஏற்றிப் புகழ்வது இயல்பு. ஓர் அரசனது மெய்க்கீர்த்தியில் அவனுடைய முன்னோர் பலர் பற்பல காலங்களில் செய்த அரும் பெருஞ் செயல்கள் யாவும் அவன்மீது ஏற்றப்பட்டு அவன் செயல்களாகவே கூறப்பட்டிருப்பதை நாம் பரக்கக் காண்பதுண்டு. தேவேந்திரனோடினிதிருந்ததும், வடிம்பலம்ப நின்றருளியதும், மால் கடலை எறிந்தருளியதும் நம் பராந்தக பாண்டியனது வீரச்செயல்களென யார்தாம் கூறத் துணிவர்? காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய செய்தி பெரும்பாலும் சோழ மன்னர்களுடைய மெய்க்கீர்த்திகளில் மட்டும் காணப்படுவதொன்றும். இப்பெருமையைப் பாண்டிய அரசரின்மீது ஏற்றிக்கூறும் சாஸனங்கள் மிக்க அருமையே.

---

1. *Kerala Society Papers, Trivandrum Series*, No. 5, p. 272.

ஆதலால் ஓர் அரசனுடைய மெய்க்கீர்த்தியைப் படிக்கும்பொழுது அதில் கூறப்படும் விஷயங்களுள் அவ்வரசனுக்குரியவை எவை எவை யென்றும், அவன் முன்னோருக்குரியவை எவை எவை யென்றும் தக்க சான்றுகளைக் கொண்டு நிதானிக்க வேண்டுவது மிக்க அவசியமாம். தென்கலிங்கப் போர் நடத்திய காலத்தில் விக்கிரம சோழனுக்குதவியாகப் பராந்தக பாண்டியனும் சென்றிருந்தான் என்பதற்கு, 'தெலுங்கவீமன் குளங்கொண்டு தென்கலிங்க மடிப் படுத்து' என்று அவன் மெய்க்கீர்த்தியில் வந்திருக்கும் பகுதியைத் தவிர வேறு ஆதாரம் ஏதேனும் உண்டோ என்பது தெரியவில்லை. 'காந்தளூர்ச்சாலை கலமறுக்கச் சென்ற சோழ அரசரோடும் இவன் சென்றிருந்தானோ?' என்னும் வினாவெழுந்தால் என்ன விடை வருமோ அறியேன். இரண்டாவதாகக் காட்டிய காரணத்தில் இவ் வித ஆக்ஷேபணைகள் ஒன்றும் ஏற்படுவதற்கு வழியில்லை என்பது எடுத்துக் கூறாமலே அறியற்பாலதாம்.

சாஸனம்

1 [ஸ்வஸ்தி ஸ்ரீ திருவளரச்செ]யம் வளர தென்னவர்தங் குலம் வளர அருமறை [நான்கவை வளர வனைத்துலகுந் துயர் நீங்கத் தென் மதுராபுரித் தோன்றி தேவேந்திரனோடினி திரு]

2 ந்து மன்னர் பிரான் வழுதியர் கோன்வடிம்ப [லம்ப நின்றருளி மால்கடலை எறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்துச் சே]ச ரலனைச் செருவில் வென்றுதி [றை கொண்டு வாகைசூடிக் கூப]

3 கர்கோன் மகட்குடுப்பக் குலவிழிநங்கைக் கொண்டு [கன் னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து மன்னுபுகழ் மறையவர்தம் மணியம்] பலத்திருந்தருளி ஆங் கவர் களற

4 ம் வளர்ப்ப அமைத்த பேராயிரத் தெண்மர விரோதம் பணிப் பணியால் மறை [பேர்த்துக் கல்நாட்டிப் பண்டுள்ள பேர்த] வி்ர்த்து அளப்பனவும் முகப்பனவுநி [றப்பனவும் கயலெ ழுதி அனந்தபுரத்தெம்மாற்]

5 கு நிலவியபொன் மணிவிளக்கு நின்றெரியப் பத்தமைத்து ஆங் கமைந்த தாயநல்லூர் [அடதென்னாட்டரையனென அறி வானை]யால் அறிந்துணர்த்த தென்னவ [ர் தங்குல தெய் வம் தென் குமரிகன்......] ... ...

6 ன் திருநாள் விழாவதனில் தைப்பூசப் பிற்றை நான்று வந்திரந் தே‌ செல்லா [ற்கும் மாற்றுதே தியாகமிட . அறத்தால்] விளங்கிய ஆழ்ந்த கேழ்விப் [புறத்தாய நாடு பூமகட்களித் துத் தெலிங்கவீமங்]

7 குளங்கொண்டு தென்கலிங்க மடிப்படுத்துத் திசையனைத்து முட ஞண்ட ஸ்ரீ [கோற்சடைய பன்மரான திரிபுவனசக்] கர வர்த்திகள் ஸ்ரீ பராந்தக தே[தவற்கு.........ராஜராஜப்ப]

8 ாண்டி நாட்டு உத்தம சோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரிக் கன்னியா [பகவதியார் தேவதானத்து] க்கு இருப்ப தாக உள்ளோலை......

9 ட்டு மேல் வேம்பனுட்டுக் கல்லூர் பிடிசூழ்ந்து குடுத்தபடிக்கு கீழெல்லை நெசச...................(மே)

10 லெல்லை நுணுவடி நங்கையார் கோயிலுக்குக் கிழக்கும் வட வெல்லை காளி.........

11 ான ராஜராஜப் பாண்டிநாட்டு மேல்வேம்ப நாட்டு ஊர்க்கும் கருணுகரபூ............

12 த்தினல் பெரும்பாண்டியாற்றார் நாட்டு கம் வீட்டில் உள்ளாலே மறைவடக்கூடா............

13 முதல் தவிர்ந்து இவ்வூர் ரூ. ாநிாடு மாவுக்கும் பூவழிமுதல வீரபாண்டியனல் ஊ.........

14 டுக்குமரிக்கன்னியர் பிடாரியாற்கு வேண்டுங் நித்தல் நிவந்தங் களுக்குங் நாம் பிற[ந்த தைப்பூசத் திருநாளுக்குஞ் செல் வதாக இறையிலிதேவதா]

15 னமாக வரியிலிட்டுக் குமரிச்சட்டர்கள் கையில் நாஞ்சொல்ல நீர்வார்த்து நம......

16 [உ]த்தம சோழவளநாட்டுத் தாயநல்லூர் அரையன் சோற ஞை தென்னவ......

குறிப்புக்கள்

1. தேவேந்திரனேடினிதிருந்து—திருவிளையாடற் புராணம் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் 34-வது பாடல் நோக்குக.

2. வடிம்பலம்ப நின்றருளி—'வடிம்பலம்ப நின்ற பாண்டி யன் வழியில் வந்தவனே' (மதுரைக் காஞ்சி உரை)

5. மால்கடலை எறிந்தருளி—திருவிளையாடற் புராணம், கடல் சுவறவேல் விட்ட படலம், 14-வது பாடல் நோக்குக.

4. மலையத்துக் கயல் பொறித்து—'வடவரையிற் கயல் பொறித்து' (T. A. S. Vol. II, p 18.)

5. சேரலனைச் செருவில் வென்று—இதன் விவரங்கள் அறியமுடியவில்லை.

6. கூபகர்கோன்—திருவிதாங்கூர் அரசன் (Tr. State Manual, Vol. I, p. 251.)

கூபதேசம் அல்லது கூபகதேசம்—திருவிதாங்கூர் சிறையின் கீழ்த் தாலுக்காவிலுள்ள ஆற்றங்கல் என்னும் ஊரின் பக்கப் பிரதேசங்களுக்கு ஏற்பட்டிருந்த பண்டைநாட்பெயர். (Tr. State Manual Vol. I, p. 254.)

'மலைநாட்டிலுள்ள நான்கு பெரும் பகுதிகளிலொன்று'—(T. A. S. Vol. II, p. 106.)

'எத்திசையும் புகழ்படைத்த கொல்லந்தோன்றி இருநூற்றுத் தொண்ணூற்றிரண்டாமாண்டு, வெற்றிசெயும் கும்பத்தில் வியாழன் நிற்க விளங்குபுதன் ஆவணி......தேதி, தத்திவிழும் பரளியாற்றணையும் தள்ளித் தமிழ்ப்பாண்டி ராஜ சிங்கம் தனையும் வென்று, கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சி நாடும் கோட்டாறும் கூபகர்கோன் கொண்ட நாளே' (விடுகவி)

7. விழிஞம்—திருவனந்தபுரத்தின் பக்கத்தில் கடற்கரையோரமாகவுள்ள ஓரூர். இது பண்டைக்காலத்தில் மிகவும் பெயர் பெற்ற ஒரு துறைமுகப் பட்டினமாயிருந்தது. குலோத்துங்க சோழ பட்டணம், இராஜேந்திர சோழ பட்டணம் என்பவை இதன் வேறு பெயர்களாம். தற்காலம் இஃது ஒரு சிற்றூராகவே காணப்படுகின்றது.

8. காந்தளூர்ச்சாலை கலமறுத்து—(Kerala Society Papers, Trivandrum Series 2, pp. 100-106 நோக்குக.)

9. மன்னுபுகழ் மறையவர்தம் மணியம்பலத்திருந்தருளி, ...மறைபேர்த்துக் கல்நாட்டி—

இப்பகுதியிலடங்கிய விஷயங்கள் இன்ன இன்னவை என இதுவரையில் யாரும் வெளிப்படுத்தியதில்லை. மணியம்பலம் எங்குள்ளது? காந்தளூர்ச்சாலையிலுள்ளதா அல்லது வேறெங்கேனுமுள்ளதா? 'அறம் வளர்ப்ப' என்பது எதைக்குறிக்கின்றது? ஆயிரத்தெண்மர் எவர்? அச்சாலையில் தங்கியிருந்தவர் மறையவரா? அந்நியரா? 'மறைபேர்த்துக் கல்நாட்டி' என்பதிலிருந்து அறிய வேண்டுவதென்னை? இவையாவும் ஆராய்ச்சிக்குரிய பாகங்கள் என்பதில் யாதும் ஐயமில்லை.

காந்தளூர்ச்சாலையைத் தென்னாட்டின் தக்ஷசிலையென்றோ, நாளந்தாவென்றோ, விக்ரமசிலையென்றோ கூறுவது மிகையாகாது. வட நாட்டு மன்னர் நாளந்தா முதலியவற்றை எவ்வாறு ஆதரித்து வந்தனரோ அவ்வாறே தென்னாட்டு மூவேந்தரும் காந்தளூர்ச்சாலையை ஆதரித்து வந்திருக்கின்றனர். நம் பராந்தக பாண்டியன் சேர நாட்டை வென்று அடிப்படுத்தியபொழுது அந்நாட்டின் கண்மணி போல் விளங்கிய காந்தளூர்ச்சாலையினைக் கைப்பற்றி அதில் சில சீர்திருத்தங்கள் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. மணியம்பலம் என்பது அச்சாலையிலுள்ளாரனைவரும் ஒருங்கு கூடும் சபாமண்டபமாம். 'ஆயிரத்தெண்மர்' என்பவர் அங்குத் தங்கியிருத்தற்குரிய ஆயிரத்தெட்டு அந்தணர்களேயாவர். வேதாகமங்களை ஆராய்ந்து உண்மைகளை அறிந்து உலக தர்மங்களைப் பாதுகாப்பதே அவரது முக்கிய கடமையாம். ஒவ்வோர் அரசனும் அச்சாலையைக் கைப்பற்றிய உடன் அதில் அநேக சீர்த்திருத்தங்கள் செய்து வந்திருக்கின்றனன். சாலையில் உண்ணுங்கலங்கள் இத்தனையென்று திட்டப்படுத்துவதோடு அங்கு ஓதப்படும் வேதாகமங்களில் விசேஷப் பயிற்சிக்குரிய பகுதிகள் இன்னஇன்னவை யென அறிவிற் பெரிய அந்தணர் குழாத்தைக்கொண்டு தீர்மானம் செய்விப்பதும் அத்தீர்மானத்தைச் சிலையில் எழுதி நாட்டுவதும் பண்டையரசரின் வழக்கமாயிருந்ததென்பது 'மறைபேர்த்துக் கல்நாட்டி' என்ற சொற்றொடரால் அறியக்கிடக்கின்றது.

10. வீரபாண்டியன்.—'வீரபாண்டியன்' என்னும் பெயருடைய மரக்கால். "பண்டுள்ள பேர் தவிர்த்து அளப்பனவும் முகப்பனவும் நிறப்பனவும் கயலெழுதி" என்று சாஸனத்தின் முற்பகுதியிலும், "வீரபாண்டியனால் ஊ" என்று அதன் பிற்பகுதியிலும் வந்திருப்பது கவனிக்கத்தகுந்த விஷயமாம். வீரபாண்டியன் மரக்கால் கோமாறபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர் காலத்திலும் வழங்கிவந்ததாகத் தெரியவருகிறது.

"பூவொன்றுக்கு வீரபாண்டியனால் உதகம் பண்ணின நெல்லு பதினெங்கலம்" (S. I. I. V. No. 347, p. 161.)

"வீரபாண்டியனால் நெல்லு முக்கலமும்" (S. I.I.V. No. 446, p. 168.)

அரசியல்முறை

தி. சிவராமசேதுப் பிள்ளை

(528-ம் பக்கத்தொடர்ச்சி)

ஊழியர்களின் வகுப்பு முறை, சம்பள திட்டம் முதலியன சட்ட விதிகளால் நிறுவப்பட்டன. மாகாண கவர்ன்மெண்டிற்கு ஊழியம் செய்பவர்கள் அகில இந்திய சேவகர்கள் என்றும், மாகாணப் பணியாளர்கள் என்றும், குறிப்பிட்ட ஒரு சேவகத்தில் வல்லார்கள் (*Specialist Services*) என்றும், தாழ்ந்தவர்கள் (*Subordinate Services*) என்றும் பகுக்கப்பட்டார்கள். முதல் வகுப்பார் சம்பந்தமான சட்டதிட்டங்களையும், காப்பு அடக்கம் என்பவற்றையும் கவனித்தல் அரச அமைச்சரின் கடமை. ஏனையவர்களது அடக்க ஒழுக்கங்கள் மாகாணத்தார் வரைந்திடலாம். மந்திரிகள் நடத்தி வைக்கும் இலாகாவிலும் முதல் வகுப்பார் வேலைசெய்து வரலாம். ஆனால் நாளடைவிலே அவர்கள் தொகை குறையவும், மந்திரிகள் தாங்கள் வகுத்து அடக்கும் பணியாளர்களை அமைத்துக் கொள்வதே மாண்டேகு சீர்திருத்தத்தின் முதல் நோக்கம்.

சட்டசபை அங்கம் (*Constitution*): மாகாண சட்டசபைகள் யாவும் ஒரு சபையையுடையதே (*Unicameral*). சாதாரணமாய் ஒரு சபையின் காலம் மூன்று வருஷம். ஆனால் கவர்னர் எச்சமயம் வேண்டினும் அதனைக் கலைத்து விடலாம். நிர்வாக சபையின் அங்கத்தினர்களுக்கும் சட்டசபையில் அமரும் உரிமை உண்டு. ஆனால் கவர்னருக்கு அச்சபையின் அங்கத்தினராய் வர ஏது வில்லை. சபையின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சுமார் நூற்றுக்கு எழுபதிற்குக்குறையாமல் சபையின் அங்கத்தினர்கள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சியவர்களைக் கவர்னர் நியமிக்கலாம். ஆனால் நூற்றுக்கு இருபது பேருக்குமேல் அரசாங்க ஊழியர்களைக் கொண்டு வந்து அடைத்துவிடல் கூடாது. அவசியம் சட்டசபையில் நடக்கும் வேலைகளுக்கு உதவியாக இருக்கக்கூடியவர்கள், சபைக்குத் தம் பலத்தால் வரமுடியாத தீண்டாதவர்களின் பிரதிநிதிகள், இன்னும் மற்றத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் முதலாயினோரைக் கவர்னர் நியமனத்தால் சட்டசபைக்குள் கொண்டு வரவேண்டும்.

I—76

தேர்ந்தெடுத்தல்: ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளை நேராகவே தேர்ந்தெடுக்கலாம். இந்தக் கடமையைச் செலுத்த உரியார்கள் ஏதேனும் சொற்பவரி செலுத்துபவர்களாக இருக்கவேண்டும். தேசத்தில் குடியிருந்துகொண்டு, தேசம் நடாத்தும் முறைமைக்குச் சொற்பக் கப்பமாவது கட்டினவர்களுக்கே பிதிரநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் உண்டு. மாதர்களுக்குப் பீஹார் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் ஓட் கொடுக்கும் உரிமை உண்டு. இம்மாதிரியான கட்டுப்பாடுகளால் மாகாணங்களில் சுமார் நூற்றுக்கு ஒருவருக்குக் குறையாமலும், பதினைன்கு பேருக்கு மேற்படாமலும் ஓட் கொடுக்கும் பாத்தியதை பெற்றிருந்தார்கள்.

ஒரு மாகாணத்தில் எந்தளந்த வகுப்புக்கள் எந்தளந்த வகையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டது. பொது வகுப்புக்கள், முகம்மதிய கிறிஸ்தவ வகுப்பென்றும், நிலச்சுவான்தார்கள் தொகுதி யென்றும் பிளவிடப்பட்டன. சில வகுப்பார்கள் முன்னேறவேண்டி அவர்களுக்கென்றே சில இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டன. மற்றப்படி யார் யார் ஓட் கொடுக்கலாமோ அவர்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட அபேக்ஷிக்கலாம்.

சட்டசபையின் கடமைகளும் அமுலும் (*Functions and control*): ஆதியில், மந்திரிகள் இலாகா முழுமையையும் அடக்கி ஆளவும் ஏனையவற்றிற்குத் தம்மால் இயன்றவரை முறையிட்டுக் கொள்ளவும் ஒரு சபை அமைந்து கிடக்கவேண்டும் என்பது ஆங்கியோர் கருத்து. ஆனால் பழக்க வழக்கத்தில் சட்டசபை சகல ஆட்சியின் ஓட்டத்திலும் தலையிடவே, அதனை ஒருவாறு ஒப்புக் கொள்ள நேரிட்டது. ஆகையால் பொதுவாய்க் கவர்ன்மெண்டின்மேல் எத்தகைய அமுல் செலுத்தி வந்தது என்று முன்னர் ஆராய்ந்தால், பின்னர் எந்த எந்த வழியில் சாதக முறையில் வளைத்துக் கொண்டுவர முயன்றது என்பதை நோக்கலாம்.

(தொடரும்)

சாஸ்திரம்

மனித சரீரத்தின் இரசாயனம்

டாக்டர் காங்தேகர்—பி. என். அப்புஸ்வாமி ஐயர்

இயற்கையிலே, நம்மைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம், பலவகையான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவற்றுள் சில மிகவும் சாமானியமெனக் கருதத் தகுவன. சிற்சில மிகவும் விந்தையா யுள்ளன; நமக்கு வியப்பைத் தருவன. சிற்சில நாம் எதிர்பார்த் திருப்பன. வேறு சில நாம் கனவிலும் நினையாதன. இவ்வாறான பலதிறப்பட்ட இயற்கை விநோதங்களை எல்லாம் நாம் நமது நல் லறிவுகொண்டு ஆராய்ந்து கவனித்தால் அவை அனைத்தினுக்கும் இரண்டு மூன்று விஷயங்கள் தாம் அடிப்படையானவை, அவைதாம் அவற்றின் மூலாதாரங்கள் என்பது தெரியவரும்.

இயற்கையில் நடந்துவரும் அற்புதச்செயல் ஒன்றைப் படிப் படியாக நுணுகி ஆராய்ந்து பார்ப்போமானால், நமக்கு அற்புத மாகத் தோன்றும் ஒவ்வொரு செயலுக்கும் சிற்சில குறிப்பிட்ட மூலகாரணங்கள் இருக்கின்றன, அவற்றால்தான் அச்செயலானது நிகழ்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்ளுவோம். 'காரண மின்றிக் காரியமில்லை' என்னும் விதியானது இயற்கையில் எல்லா விடத்தும் காணக்கூடிய அளவில் மலை இலக்காக உள்ளது. ஆரோக் கியமான நன்னிலையில் நாம் இருக்க விரும்புவோமாயின் சுகாதார விதிகள் எல்லாவற்றையும் நாம் பின்பற்றியே வாழ்தல் வேண்டும். சுகாதாரவிதிகளுள் யாதானுமொன்றையாயினும் நாம் இலக்ஷியம் செய்யாது நிராகரித்து நடந்துவந்தால், நாம் விழுந்து விழுந்து எத்தனை ஜபம் செய்தாலும் எவ்வளவு பிரார்த்தனைகள் செய்தா லும் ஆரோக்கிய நிலையில் நம்மால் இருந்துவர முடியாது. அவரை விதைத்தால் துவரை முளைக்கவே முளைக்காது.

இரண்டாவதாக, நாம் அறிந்துகொள்ளும் விஷயம் என்ன வென்றால், இயற்கையானது சற்றும் பக்ஷபாதமற்றதாயும், தாக்ஷிண் யமற்றதாயும், இரக்கமற்றதாயும், கொடியதாயும் நமக்குத் தோன்று

கிறது என்பது. இது நமது மனத்தைப் பிரமிக்கத்தான் செய்கிறது. கடவுள் சர்வ காருண்யமூர்த்தியாயிற்றே என்பதை எண்ணினால், இஃது அதனோடு ஒவ்வாமல் நம்மைக் குழப்பமடையச் செய்கிறது. இயற்கைவிதி எதையாயினும் நாம் மீறி நடந்தால் அதற்குள்ள தண்டனையை நாம் பெற்றே தீருவோம். நாம் அவ்வாறு மீறி நடப்பது அறியாமையினாலிருந்தாலும், அல்லது நாம் முற்றுமுணர்ந்தே மீறி நடந்தாலும் தண்டனையில்—பலனில்—ஒரு சிறிதளவுகூட வித்தியாசம் ஏற்படாது. 'தெரியாது செய்துவிட்டேன், கன்னத்தில் போட்டுக்கொள்கிறேன்' என்றாலும், 'நான் அறியேன், இந்தத் தடவைமட்டிலும் மாப்பு' என்று கேட்டுக்கொண்டாலும் சிறிதும் மன்னிப்புக் கிடையாது. அறியாமை காரணத்தால் தண்டனையின் அளவிலுங்கூடச் சிறிதளவு குறைவும் ஏற்படாது. இயற்கையின் தண்டனைகள், 'போற்றவும் போகா, பொருளொடும் போகா, நல்லார் என்னா, நல்குரவறியா, தீயார் என்னா, செல்வர் என்றுன்னா, தரியா ஒரு கணம்'. இயற்கைவிதிகள் அவ்வளவு நிஷ்பக்ஷபாதமானவை.

மூன்றாவதாக, நாம் கவனிப்பது என்னவென்றால், இயற்கையின் விதிகளுக்கும் மனிதர்களின் சட்டங்களுக்கும் உள்ள ஒரு முக்கியமான வித்தியாசம். மனிதர் உண்டாக்கும் சட்டங்கள் எல்லாம் நாம் இன்னவாறாக நடக்கவேண்டும் என்ற நியமத்தை—நிபந்தனையை—ஆணையை—நம்மீது சுமத்துகின்றன. அவற்றைப் புதியன புதியனவாய் அமைக்கின்றன. இயற்கை விதிகள் அவ்வாறானவை அல்ல. இன்றுவரை ஏற்பட்டுள்ள பிணைப்பானது—ஜீவ முறையானது—எத்தகையது, எவ்வாறானது, எது எது என்பதை விளக்குவனதாம் நாம் இயற்கை விதிகள் என்று கூறுவனவெல்லாம். இயற்கை விதிகளை நாம் மீறி நடந்தால் கையோடுகையாய் நமக்குத் தண்டனை ஏற்பட்டுவிடும். அந்தச் சட்டங்களை மீறியதற்காக உள்ள அபராதத்தை நாம் கொடுத்துத்தான் தீரவேண்டும். கோர்ட்டு வியவகாரத்தில் சொல்லுகிறபடி இயற்கைத் தீர்ப்புகள் எல்லாம் எக்ஸ்பார்டி தீர்ப்புக்கள் தாம்; அஃதாவது ஒரு முகமான தீர்ப்புக்கள்தாம். குற்றஞ் சாட்டப்பட்ட நாம் என்ன சொல்லுகிறோம், எவ்வாறு நாம் குற்றவாளியல்ல வென்று வழக்காடப்போகிறோமென்று இயற்கை எதிர்பார்ப்பதே யில்லை. நம்மைக் கேட்பதே கிடையாது. குற்றத்துக்கேற்ற முடிவு தானாகவே பிறந்துவிடுகிறது.

நமது மானிட சரீரத்தையும் அதனுள்ளே நிகழும் இரசாயன நிகழ்ச்சிகளையும்பற்றி ஆராயும்போது இவ்விஷயங்களை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது அவசியம்.

இவ்வுலகத்திலுள்ள இயந்திரங்கள் அனைத்தினும் நமது மானிட சரீரத்தைப்போல விந்தையானது வேறொன்றும் இல்லை. அஃது எத்தனை விந்தையானது என்பதை நாம் அறிந்துகொள்ளா ததற்கு ஒரு காரணம் உண்டு. அஃதென்னவெனில் நாம் அதனோடு அவ்வளவு நெருங்கிப் பழகுவதே. நாம் அஃதாயிருப்பதேதான் அதற்குக் காரணம். நாம் பழகிவரும் தன்மையாலேயே சீரிய பொருளின் சுவையையுங்கூட நாம் உணராது போய்விடுவது போன்றதே இதுவும். 'பழகினால் பாலும் புளிக்கும்' என்பது நமது தமிழ்நாட்டுப் பழமொழி. 'உலகு அனைத்துக்கும் சிறந்த வீரனாகும் ஒருவனும், தன் பணியாளுக்குக் கேவலம் மனிதனேயாவான்' என்பது ஆங்கிலப் பழமொழி. 'டில்லிக்குப் பாச்சா, தாய்க்குப் பிள்ளை' என்பது தெலுங்குப் பழமொழி. நம்முடைய உடலின் அற்புதத்தன்மையை அதனால்தான் நாம் சரியானபடி உணர்ந்து கொள்ளாது போகிறோம்.

உடலானது **சேல்** என்று சொல்லப்படும் **கண்ணறைகளின்** தொகுதியால் ஆகியது. இரசாயன சாஸ்திரத்திலே எவ்வாறு **ஆடேம்** என்னும் **அணு**வானது, ஒன்று என்று வைத்து எண்ணத் தகும் அளவின் மாத்திரையாகிறதோ, அதுபோலவே செல் என்பதும் உடலின் அளவைக் குறிப்பிடுவதற்கு உரிய ஒரு மாத் திரைக் கருவியாயுமிருக்கிறது. ஆடெம் என்பது முன்னொரு காலத் தில் பொருள் பிரிவினையிலே மூலப்பொருளென்று கருதி வரப்பட் டிருந்தபோதினும் இப்பொழுது அறிந்துகொள்ளப்பட்ட அளவிலே அஃது இறுதிமூலமல்ல வென்பது கிடைத்திருக்கிறது. ஆடெம் என்பது அதிலும் அடிப்படையாகவுள்ள வஸ்துவாகவோ சக்தி யாகவோ பிரிக்கப்படுகிறது. உதாரணமாக **ரேடியம்** என்னும் பொருளின் ஆடெமானது இவ்வாறு பிரிவதைப் பார்க்கிறோம். ஆனால் அப்படி ரேடியஆடெம் தகர்ந்து பிரிவதால் நமக்குக் கிடைப்பது ரேடியம் அல்ல. ஆதலால் அஃது உடையும்போது ரேடியமல்லாத வேறொன்றாக மாறிப்போய்விடுகிறது. இது மாதிரியேதான் பிற மூலங்களும். ஆதலால் ரேடியத்துக்கோ, அல்லது அதைப்போன்ற வேறெந்த மூலப்பொருளுக்கோ, அத னதன் ஆடெம்தான் ஏகமாத்திரையாகும் அளவு என்பது பெறப் படுகிறது. அதுபோலவே, செல் என்பதும் மானிட சரீரத்திலே ஏக மாத்திரையுடையதாகிய பொருள். உடலின் வெளிப்புறத்திலே வைத்துச் செல்லை ஆராய்வோமென்றாலோ அது முற்றிலும் முடி யாத காரியமாக இருக்கிறது. ஏனெனில் உயிர்வாழ்வதற்குரிய அநேக விஷயங்களை நாம் செயற்கையால் செய்துகொள்ளவோ,

மாற்றவோ சிறிதளவுகூடத் திறமையற்றவர்களாய் இதுகாறும் இருந்துவருகிறோம். செல் ஒன்றைச் சிருஷ்டிப்பதையோ, அல்லது உடலை விட்டுப் பிரிந்து உயிருடனிருந்து வாழும்படி பாதுகாப்பதையோ நாம் செய்துவிட்டால் உயிர் என்னும் பிதிரை நாம் ஒருவாறு விண்டுவிடுவோம். அப்பொழுது நாமும் பிரமனைப்போல உயிர்களைச் சிருஷ்டிக்க முடியும். உடலைவிட்டு வெளிப்புறத்தே, செல்லைப்பற்றிய ஆராய்ச்சியைச் சின்னஞ் சிறிதளவுதான் நிகழ்த்துவது கூடுமெனினும், அறிவில் மிக மிகச் சிறந்த பெரியார் சிலர் மிகவும் பாடுபட்டு உடலுள் நிகழ்ந்துவரும் தொழில்கள் அனைத்தையும் ஒன்றுவிடாது ஆராய்ந்து வந்திருக்கின்றனர். அந்த ஜீவ ரசாயனிகள் செய்துவந்த ஆச்சரியமான ஆராய்ச்சிகளின் பயனை, உடலினுள்ளே நடந்துவரும் செயல்களைப்பற்றிய விஷயங்களிற் பலவற்றை அங்கைக் கண்ணாடிபோல் நாம் அறிந்துகொள்ள முடிந்திருக்கிறது.

நாம் யாவரும் உயிர் தரித்திருக்கிறோம். உயிர் தாங்குவதற்கு வேண்டிய ஜீவசக்தியை நாம் உண்ணும் உணவினின்று பெறுகின்றோம். இஃது ஒன்று. இதுபோலவே நம்முடைய உடலிலே அழிந்துபோகும் செல்களுக்குப் பதிலாக வேறு செல்களை இயற்றுவதற்கும் நமது உடலை ஆரோக்கிய நிலையில் பாதுகாத்துவருவதற்கும் வேண்டிய பொருள்களையும் அவ்வுணவினின்றே எடுத்துக் கொள்ளுகிறோம். இஃது இரண்டு. ஆகவே நாம் உண்ணும் உணவில் இவ்விரண்டு பகுதிகளும் இருக்கின்றன. எவ்வகையான உணவுகளை நாம் உண்ணவேண்டுமென்பதைத் தெளிவாக நாம் அறிந்துகொள்ளவேண்டுமானால், நாம் உண்ணும் உணவுப்பொருள்களையெல்லாம் இரசாயன முறைகளால் சோதிக்கவேண்டும். அவைகளை இரசாயனக் கண்களால் உற்றுப் பார்க்கவேண்டும். மேலும், உடலின் உட்புறத்தே என்னவென்ன இரசாயன நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன, அவை எவ்வாறெல்லாம் நடக்கின்றன வென்பதையும் நன்குத் தெரிந்துகொள்ளவேண்டும்.

(தொடரும்)

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச்சொற்கள்

Atom—ஆடெம், அணு, இரசாயனப்பொருளில் ஒரு மாத்திரை அளவுள்ளது.

Bio-chemist—ஜீவரசாயனி.

Cell—செல்.

Chemical—இரசாயன சம்பந்தமான.

Chemistry—இரசாயனம்.

Element—மூலம், மூலப்பொருள்.

Ex-parte—எக்ஸ்பார்டி, ஒரு முகமானது.

Nature—இயற்கை.

Radium—ரேடியம்.

இந்தியாவின் பொருள் நிலை

ஜே. எஸ். போன்னையா நாடார்

(415-ம் பக்கத்தொடர்ச்சி)

முதலாம் அதிகாரம்

வியவசாயம்

நீர்வளமும் நிலவளமும்

இந்தியாவின் நகரங்களில் வீதிகளிற்றான் நீங்கள் மின்சார வண்டிகளையும், தொழிற்சாலைகளையும், பெரிய கடைகளையும் பார்க்கலாம். ஆனால் அவைகளைச் சுற்றியிருக்கும் சுமார் எழுபது லக்ஷம் கிராமங்களைப் பார்ப்பீர்களானால் முற்றிலும் வித்தியாசமான காட்சிகளே தோன்றும். எங்கே பார்த்தாலும் செழிப்பான வயல்களும், தோட்டங்களும், துரவுகளும் தென்படும். வயல் வெளிகளிலெல்லாம் ஆடுமாடுகளும் கன்றுகாலிகளும் கும்பல் கும்பலாய்த் திரிவதையும் காணலாம். இதற்குக் காரணம் என்ன ?

நமது தேசத்திற் பெரும்பாலார் வியவசாயிகள். நூற்றுக்கு எழுபத்தொன்பதின்மர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளார். ஏன் அவ்வித முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனரென்று நாம் சற்றாராயுங்கால் பின்வரும் உண்மைகள் புலப்படும். நமது தேசம் வேளாண்மைக்கு மிகவும் நன்கமைந்துள்ளது. வருஷத்தில் ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து நாளும் இருகரைகளும் புரண்டோடும் சில பெரிய நதிகளும், மற்றும் அநேக சிறு நதிகளும் உள. வடஇந்தியாவின்கண் சிந்து, கங்கை, பிரமபுத்திரா என்னும் பெரிய நதிகள் ஆயிரக்கணக்கான மைல் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் அளிக்கின்றன. கங்கை சிந்து நதிகளின் நடுவே இருக்கும் சமவெளி இரண்டாயிரம் மைல் நீளமும் இருநூறு மைல் முதல் ஐந்நூறுமைல் வரை அகலமும் உள்ளது. இப்பெரிய சமவெளி முழுவதிலும் ஒரு சிறு மலையேனும் குன்றேனும் காண்பதரிது. வருஷத்தில் சராசரி 80 அங்குலத்திற்குமேல் மழை பெய்கிறது. ஆகையால் இச்சமவெளிப் பிரதேசம் முழுவதிலும் கோதுமையும், விசேடமாக நெல்லும் விளைகின்றன. இந்தியாவிற்குக் கிழக்கேயிருக்கும் பர்மா தேச முழுவதும் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய நாடு; உலகத்தின் மற்றெப்பாகங்களைக் காட்டிலும் அங்கு

மழை அதிகம். வருஷத்தில் சுமார் 400 அங்குல மழைவரை பெய்யு மிடங்களும் உண்டு. எனவே, கண்ணுக்கெட்டாத் தூரம் வரைக் கும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல அழகாய்க் காணப்படும் நெல்வயல்கள் பல அங்குள்ளன. தென் இந்தியாவிலும், கோதாவரி, கிருஷ்ணு, காவேரி என்னும் நதிகள் பாயும் தீரங்களும் நெற்பயிருக் கேற்ற செழுமை நிறைந்துள்ளன.

இயற்கையிலேயே அமைந்துள்ள நதிகளும், ஆறுகளும், வாய்க் கால்களும் தவிர வேளாண்மைக்கு அநுகூலமாக மனிதர் வெட்டி யுள்ள கால்வாய்களும் பலவுள. அவற்றுள் முக்கியமானவை பின்வரு வனவாம்: 'ஷெர்ஷா' என்னும் மகமதிய அரசன் வடஇந்தியாவில் வெட்டியுள்ள 'சீனுப்' கால்வாய் அநேக மைல் நீளமுள்ளது. அது பாயும் தீரத்தில் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள கோதுமை விளைகிறது. 'பிரோஸ்ஷா' என்னும் அரசன் வெட்டிய 'ஜம்னு' கால்வாயும் அவ் வளவு சிறப்பு வாய்ந்தது. தென்னிந்தியாவில் 'கிருஷ்ணதேவராயர்' என்னும் விஜயநகர அரசன் கட்டிய 'துங்கபத்திரா' கால்வாயும் 'ராஜராஜசோழன்' காவிரி நதியில் அணைகட்டி உண்டுபண்ணியிருக் கும் கால்வாய்களும் கண்டு வியவாதவர் கிடையார்.

தற்காலத்தில் நமது தேசத்தை ஆண்டுவரும் ஆங்கிலேயர் தங்கள் சாஸ்திர முறைகளால் அரியனவும் பெரியனவுமாகிய நீர்ப் பாய்ச்சல் ஸ்தாபனங்கள் பல ஏற்படுத்தியுள்ளார்கள். காவேரி நதியில் கட்டியுள்ள மேல் அணைக்கட்டும், கோதாவரி, கிருஷ்ணு நதிகளில் கட்டியுள்ள அணைக்கட்டுக்களும் மிகவும் வியக்கத்தக்கன. தற்சமயம் 'மேட்டூர்' என்னும் ஊருக்கருகில் கட்டப்படும் அணைக்கட்டு சுமார் 10 கோடி ரூபாயில் தயாராகிறது; அதனுல் நீர்ப்பாய்ச்ச லுக்குக் கொண்டுவரப்படும் நிலம் 10 லக்ஷம் ஏக்கரா என்று மதிப் பிடப்பட்டுள்ளது. வடஇந்தியாவில் இப்பொழுது நடைபெறும் 'சுக்கூர் பாரேஜ்' என்னும் நீர்க்கட்டு ஸ்தாபனம் உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் பெரியது; 18 கோடி ரூபாய் செலவில் மதிப்பிடப் பட்டிருக்கிறது; 80 லக்ஷம் ஏக்கரா நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சல் ஏற்படும். வெட்டாந்தரையாய்க் கிடக்கும் 'சிந்து' என்னும் நாடு இனி ஒரு பெரிய தோட்டம்போலவும் நீலநதி பாய்வதினுல் வளம்பெற்றிருக்கும் எகிப்து தேசம்போலவும் ஆகுமெனக் கருதப் படுகிறது. 'சட்லஜ்' நதியிலும் இவ்வாறுன அணைக்கட்டும் கால் வாயும் அமைக்கப்பட்டுள்ளன.

நதிகளும் கால்வாய்களும் பாயாத மேட்டுப் பிரதேசங்களிலும் உள்நாட்டிலும் கணக்கற்ற ஏரிகளும், குளங்களும், நீர்நிலைகளும், கிணறுகளும் வெட்டப்பட்டிருப்பதையும் காணலாம். இவைகளால்

நிலம் வேளாண்மைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சோளம் கேழ்வரகுபோன்ற தானியங்களும், எள் கடலைபோன்ற எண்ணெய் வித்துக்களும், கரும்பு பருத்திபோன்ற விலையேறப்பெற்ற விளை பொருள்களும் இப்பிரதேசங்களில் விளைவிக்கப்படுகின்றன.

இவ்விதமான முயற்சிகளையும் ஏதுக்களையும் அதிகமாகக் கையாண்டால் நமது தேசத்தின் வேளாண்மை, இப்போதுள்ளதைக் காட்டிலும் பன்மடங்கு விருத்தியாகும் என்பதற்கு ஐயமில்லை.

விளைபொருள்களும் ஏற்றுமதியும்

இந்தியாவின் வேளாண்மை யியல்பு எத்தகையதென இன்னமொரு வாயிலாக அறியலாம். நமது தேசத்தின் மேற்பரப்பில் மலைகள், குன்றுகள், நதிகள், காடு மேடுகள்போகச் சாகுபடிக்கான நிலம் மொத்தத்தில் நூற்றுக்கு 35 வீதந்தான் உண்டு. அதில் 33 பாகம் இப்பொழுது சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன; இன்னும் இரண்டு பாகமே மிகுந்துள்ளன. சாகுபடியான நிலத்தின் அளவு சுமார் 255,000,000 ஏக்கர். இவற்றில் மூன்றில் ஒரு பங்குக்கு மேலுள்ள நிலத்தில் நெல் சாகுபடியாகிறது. ஏனெனில் நமது தேசத்தவருக்கு முக்கிய உணவு அரிசிதான். விளைகிற 300 லக்ஷம் டன் நிறையுள்ள மொத்த நெல்லில் 30 லக்ஷம் டன் தவிர மிகுதியெல்லாம் உள்நாட்டிலேயே செலவழிந்துவிடுகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் 30 லக்ஷம் டன் நெல்லினால் கோடி ரூபாய் இலாபம் கிடைக்கிறது. இந்த இலாபத்தின் முக்கால் பாகம் பர்மாவிலுள்ள வியவசாயிகளுக்குத்தான் செல்லுகிறது; ஏனெனில் அங்கு விளைகிற விளைவுதான் மிச்சமாகிறது. அப்படியிருந்தும் நமது தேசம் ஒன்றிலிருந்துதான் அந்நிய நாடுகளுக்கெல்லாம் இவ்வளவு மிகுதியான நெல் ஏற்றுமதியாகிறது. நெல்லைத்தவிர மற்றும் பலவிதமான தானியங்கள் (சோளம், கேழ்வரகு, கம்பு முதலியன) எல்லாம் உள்நாட்டிலேயே செலவழிந்து விடுகின்றன.

இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்வதென்ன? இவ்வளவு நீர்வளம் நிலவளம் பொருந்திய தேசத்தில், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் வியவசாயம் மிகவும் விருத்தியடைந்ததாகக் காணோம். தங்கள் தங்கள் உணவுக்கு வேண்டிய அளவுதான் விளைவிக்கப்படுகிறது. நமது தேசத்திற் பெரும்பான்மையான ஏழை மக்களுக்கு வயிறார உணவளிக்கவேண்டுமேல் நாம் ஏற்றுமதியாக்குகிற 30 லக்ஷம் டன் நெல்லையும் நிறுத்தவேண்டிவரும். உணவுப்பொருள்கள்மட்டும் விளைவித்து ஏற்றுமதியாக்கும் தேசம் மிகவும் தாழ்வடைந்த ஸ்திதியில்

இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பஞ்சாப் மாகாணத்தில் கோதுமை அதிகமாக விளைகிறது; ஆனால் 80 லக்ஷம் டன் நிறை தான்; வெளியே ஏற்றுமதியாக்கப்படுவது ஏழில் ஒரு பாகந்தான். ஆனால் வடஇந்தியாவில் கோதுமை யுணவு அருந்துகிறவர்களுக்கு அந்நியநாட்டுக் கோதுமையும் இறக்குமதியாக்கப்படுகிறது! மற்ற நாட்டினரைப்போல ஆடுமாடுகள் வளர்த்து, அவைகளின் இறைச்சி, பாற்கட்டி முதலான பொருள்களை உண்டுபண்ணி நாம் ஏற்றுமதி யாக்குவதில்லை; ஆனால் அவைகளை நாம் இறக்குமதி செய்கிறோம். பழவர்க்கங்களின் ஏற்றுமதி கிடையாது; ஆனால் ஆஸ்திரேலியா முதலான தேசங்களிலிருந்து நகரங்களில் அடைத்துவரும் பழங்களும், 'ஜாம்' என்னும் 'பழப்பிசைவும்' இறக்குமதியாக்கப்படுகின்றன. மிகவும் இன்றியமையாத சர்க்கரை 15 கோடி ரூபாய் மதிப்புக்குமேல் 1927-1928-ம் வருஷத்தில்மட்டும் இறக்குமதியாக்கப்பட்டது. 'நிலவளம் பொருந்தியது எம்நாடு, வேளாண்மையிற் சிறந்தது எம்நாடு' என்று நாம் இறுமாந்திருப்பது எத்துணை பேதைமை!

உணவுப் பொருள்களுக்குப் பின்னால் பருத்தி விளைவு நமது தேசத்தில் மிகுதி. 43 லக்ஷம் ஏக்கராவுக்குமேல் பருத்தி சாகுபடியாகிறது; இவற்றில் பாதிப் பாகம் 'பம்பாய்' மாகாணத்தில் இருக்கிறது; மிகுதிப் பாகம், மத்தியமாகாணம், ஐக்கியமாகாணம், பஞ்சாப், சிந்து, சென்னை மாகாணங்களில் இருக்கிறது. நாம் விளைவிப்பதில் பாதி உள்நாட்டிற்கும், பாதி வெளிநாட்டிற்கும் (முக்கியமாக ஜப்பான் தேசத்திற்கும்) அனுப்பப்படுகிறது. ஏற்றுமதியாக்கப்படும் பருத்தியின் மதிப்பு 45 கோடி ரூபாய்; அஃது உலகத்தின் மொத்தத்தில் நூற்றுக்கு 15 பங்கு. அமெரிக்கா தேசத்தின் விளைவு நூற்றுக்கு 65 பங்கு. இந்தியாவின் விளைவு அமெரிக்காவிற்கு இரண்டாவதாக இருந்தபோதிலும், வருஷத்திற்கு 45 கோடி ரூபாய் வருமானமிருந்தபோதிலும், நாம் ஏமாந்து இருப்பதற்கு இடமில்லை. பருத்தி விளைவினாற்றான் ஏழைக்குடிகளில் அநேகர் சிறிது பணமும் செல்வாக்கும் பெற்றிருக்கின்றனர். மேலும் இவ்வபிவிருத்தி 1905-ம் வருடத்திற்குப் பின் ஏற்பட்டதுதான். ஆனால் நமது விளைவு இன்னும் மத்திமமே. ஓர் ஏக்கர் நிலத்தில் எகிப்தில் 300 முதல் 400 பவுண்டு நிறைவரையும், அமெரிக்காவில் 180 பவுண்டு நிறையும் விளைகிறது; இந்தியாவிலோ 100 பவுண்டு நிறை தான். நல்ல வித்துக்களை உபயோகிப்பதினாலும், மிகுதியாக உரமிடுவதினாலும் நமது விளைவை இன்னும் அதிகரிக்கலாம். நமது

தேசத்தின் நெசவுத்தொழிலும் விருத்தியாகுமேல் இதனினும் அதிகமான விளைவு எடுக்க அநுகூலமிருக்கிறது.

பருத்திபோன்ற வேறொரு பொருள் சணல். சணல்நூலைத் திரித்துக் கோணிகளும், பைகளும், கயிறுகளும் செய்யலாம். சணற்செடி கங்கைநதித் தீரங்களிலும், அஸாம் மாகாணத்திலும் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. விளைவில் பாதி கல்கத்தாவில் நிறுவப்பட்டிருக்கும் சணல்நூல் தொழிற்சாலைகளில் செலவாகிறது. அச்சாலைகளின் தொகை 95; அவைகளில் வேலை பெறுவோர் 3½ லக்ஷம் பேர்; உபயோகப்படும் சணலின் மதிப்பு 30 கோடி ரூபாய். ஆனால் அத்தொழிற்சாலைகள் எல்லாம் ஆங்கிலேய வர்த்தகர் கையில் இருக்கின்றன; அவைகளை ஸ்தாபிக்கச் செலவழித்துள்ள மூலதனமும் ஆங்கிலேயருடையதே. ஆயினும், நமது தேசத்தினர் அடையும் பலனும் பல. மேலும், 30 கோடி ரூபாய் பெறுமான சணல்நூலும், சணல்நூலால் செய்யப்பட்ட பொருள்களும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதியாக்கப்படுகின்றன. வேறொரு தேசமும் சணல் விளைவிப்பதில்லை. எனவே, இந்திய வியவசாயிகளுக்கு (வங்காள மாகாணத்தினருக்கு மட்டுமே) இது மிகவும் இலாபகரமான விளை பொருளாகும். இது விளையும் இடங்களில் நளிர்சுரம் (மலேரியா) பரவுகிறதென்றும், நிலத்தின் உரத்தையும் கொழுமையையும் கெடுத்துவிடுகிறதென்றும், நெல்விளையும் இடத்தைக் குறைக்கிறதென்றும், இலாபம் முழுவதும் ஆங்கிலேய வியாபாரிகளுக்கே செல்வதனால் இந்திய வியவசாயிகளுக்கு நஷ்டமுண்டு பண்ணுவது சணல் என்றும் சிலர் கூறுவர். அது முழுவதும் உண்மையல்ல; நமது வேளாண்மையின் பெருங்குறைவு என்னவெனின், நமது நிலத்தின் மிச்சமான பாகத்தை உணவுப்பொருள் விளைவிக்கவே உபயோகிக்கிறோம்; நெல் விளையும் பாகத்தை இன்னும் அதிகமாகக் குறைத்துவிடுவதே நலம் என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சணல்நூல் தொழிற்சாலைகள் இந்தியர் அதீனத்திற்குள் கொண்டுவரப்பட்டு, வியவசாயிகளுக்கு உயர்ந்த விலை கிடைக்கச் செய்வதே உசிதமான கொள்கையாம்.

நமது விளைபொருள்களில் எள்ளு, நிலக்கடலை, யாளிவிதை, ஆமணக்குவித்து முதலான எண்ணெய்வித்துக்கள் மிகவும் விசேஷமானவை. விளக்கெரிப்பதற்கும், கறி சமைப்பதற்கும், மருந்து, வாசனைத் திரவியங்களென்பவற்றில் உபயோகிப்பதற்கும் சில எண்ணெய்கள் உபயோகப்படுகின்றன. ஆனால் சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் நமது எண்ணெய்வித்துக்களை மேனாட்டார்

மிகுதியாக இறக்குமதி செய்கிறார்கள். தேங்காய் எண்ணெயும் நிலக் கடலை எண்ணெயும் சோப்புச் செய்வதற்கும், விளக்கெண்ணெய் மோட்டார் வண்டி ஆகாயவிமானம் முதலியவைகளுக்குப் பசையிடு வதற்கும் மிகவும் விரும்பப்படுகின்றன. ஆகவே தற்சமயம் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள வித்துக்கள்—அவற்றில் நிலக்கடலையும், ஆமணக்கு வித்தும், பருத்திக்கொட்டையும் விசேடமானவை—ஏற்றுமதியா கின்றன. இப்பொருள்கள் சாதாரணமான நிலங்களில், மிக்கச் சொற் பச் செலவில், நீர்ப்பாய்ச்சலும் உரமும் அதிகமில்லாது விளை வதனால், வியவசாயிகளுக்கு மிகவும் இலாபம் என்றே சொல்ல லாம். சென்னைமாகாணத்தில் நிலக்கடலை விதைத்து நல்ல இலாபம் அடைந்தவர் அநேகர். ஆனால் இவ்வித்துக்களை அந்நியநாட்டிற்கு அனுப்பிவிடுவதினால் நிலத்திற்கு உரம் கிடையாதுபோகிறது; எண்ணெயெடுக்கும்படியான ஆலைகள் நிறுவி, எண்ணெயை மாத் திரம் அனுப்பினோமானால் பலருக்குத் தொழிலும் ஏற்படும். சென்னை மாகாணத்தில்மட்டும் 13 பெரிய ஆலைகள் உள்ளன.

மலைநாட்டிற் பயிராகிற தேயிலை, காப்பிக்கொட்டை, இரப்பர் முதலானவைகளின் ஏற்றுமதியும் மிகவும் விசேடமானவை. அஸா மிலும், திருவாங்கூர் மலைநாட்டிலும், 'சிலோன்' என்னும் இலங் கைத் தீவிலும் தேயிலைச்செடி அதிகமாகப் பயிராகிறது. காப்பிச் செடி மைசூரிலும், சென்னைமாகாணத்திற் சில மலைப்பிரதேசங்களி லும் பயிராக்கப்படுகிறது. தேயிலை ஏற்றுமதியின் மதிப்பு ரூபாய் 33 கோடி; காப்பிக்கொட்டையின் மதிப்பு 2 கோடி ரூபாய்; இரப்பர் 2 கோடி ரூபாய். இத்தோட்டங்களிற் பெரும்பான்மை யானவை ஐரோப்பியர்கள் கைகளிலேயே இருக்கின்றன. இவை களில் வேலை செய்யும் கூலியாட்களும் சிப்பந்திகளுமே இந்தியர்கள். குடியானவர்களுக்கு இவற்றால் யாதொருவிதமான இலாபமும் கிடையாது.

நமது விளைபொருள்களின் மொத்த மதிப்பு 1500 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவற்றில் நெல், கோதுமை, பருத்தி, பருத்திக்கொட்டை, சணல், காப்பிக் கொட்டை, தேயிலை, இரப்பர் முதலானவைகளின் ஏற்றுமதியால் தேசத்திற்குக் கிடைக்கும் இலாபம் 200 கோடி ரூபாய். ஆகவே வியவசாயத்தின் மொத்த வரவு தலைக்கு ஏறக்குறைய 40 ரூபாயாக இருக்கிறது. நமது தாழ்ந்த நிலைமைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

(தொடரும்)

பிராணிகள் தாமே உண்டாகுமா?

வி. ஆர். துரைஸ்வாமி சாஸ்திரி

தூசித்துரும்புகள் பிராணிகளாகுமா? கோழிமுட்டையிலிருந்து காக்கைக்குஞ்சு வருமா? மனிதனுக்குக் குரங்கு பிறக்குமா?

பிறப்பு, சிலகாலம் வாழ்வு, பிறகு மரணம், இவை மனிதருக்கும் எல்லாப் பிராணிக்கும் உண்டு. ஆனால், பிராணிகளின் ஆயுட்காலம் பல அளவினது. சில கிருமிகள் ஒரு மணிகாலமே வாழ்கின்றன. தட்டாரப் பூச்சியின் ஆயுள் ஏழுநாள்; பல்லிக்கு 2 வருஷம்; பூனைக்கு 12 வருஷம்; நாய்க்கு 25 வருஷம்; கிளிக்கு 30 வருஷம்; மனிதனுக்கு 100 வருஷம்; யானைக்கு 400 வருஷம். பிராணிகளுக்கெல்லாம் அவற்றின் ஆயுட் காலத்தில் முக்கியமான இரண்டு ஆசைகள் உண்டு. அவை இறக்கும் வரையில் தக்க உணவு உண்டு தேகத்தை விருத்திபாக்குவதும் வம்சத்தை விருத்திபாக்குவதும் ஆம். ஆகாரத்தை உட்கொண்டு ஆகாரமில்லாமல் சில நாட்கள் இருந்தால் தேக நாசம் உண்டாகும். பிராணிகள் வம்ச விருத்திசெய்யாதிருந்தால் உலகத்தில் அவைகளே இல்லாமல் போகும்.

இப்பொழுது நமக்குத் தெரிந்த அநேகம் பிராணிகள் உண்டு. பறவை, பாம்பு, பல்லி போன்றவை முட்டையிடுகின்றன. அம்முட்டைகள் உடைந்து குஞ்சுகள் வெளிவருகின்றன. பூனை, நாய், எலி, ஆடு, மாடு போன்றவை குட்டி போடுகின்றன. மனிதன் குழந்தையைப் பெறுகிறான். எல்லாப்பிராணிகளின் குட்டிகளும் ஆகாரம் உட்கொண்டு வளர்ந்து தாய் தந்தைகள் போலாகின்றன. ஆகையால் புதியனவாக உண்டான இப் பிராணிகள் தாமே உண்டாவதில்லை; இவற்றின் தாய் தந்தைகளாலே இவை உண்டாயின என்று அறிந்துகொள்கிறோம்.

ஆனால் சில பிராணிகள் சில இடங்களில் தாமே உண்டாவதைப் பார்க்கிறோம். சாக்கடை ஜலத்தில் அநேகம் கிருமிகளைக் காண்கிறோம். மாங்காய் முதலிய ஊறுகாயில் புழுக்கள் உண்டாகின்றன. நல்ல கத்திரிக்காய், புடலங்காய் முதலியவைகளை நறுக்கினால் உள்ளிருந்து புழுக்கள் வருகின்றன. சாணியில் புழுக்கள் உண்டாகின்றன. நல்ல மாம்பழக் கொட்டையினின்று வண்டுகள் வருகின்றன. காய்ந்த தரையில் மழை பெய்ததும் அதனின்று புழுக்கள் கிளம்பு

கின்றன. காய்ந்த வயல்களில் ஜலம் வந்ததும் அநேகம் மீன்கள் நண்டு நத்தைகள் நீர்ப்பூச்சிகள் புழுக்கள் காணப்படுகின்றன. இப்படி உண்டாவதற்குக் காரணம் தெரியாததால் இப் பிராணிகள் தாமே உண்டாகின்றன என்று சொல்லுவது வழக்கம். அது சரியல்ல. நமது நெல் களஞ்சியத்தில் பல்லி முட்டைகளையும் எலிக் குஞ்சுகளையும் பார்க்கிறோமல்லவா? அவை தாமே உண்டாயின என்று சொல்லுகிறோமா? இல்லை. பல்லிமுட்டைகளையும் எலிக் குஞ்சுகளையும் எடுத்தெறிந்துவிட்டுக் களஞ்சியத்தினுள் தாய்ப் பல்லியும் எலியும் போகாமல் அதை நன்றாக அடைத்துவிட்டால் பல்லியும் எலியும் உள்ளே போகா; முட்டைகளும் குஞ்சுகளும் இடா; புதுப் பிராணிகள் உண்டாகா.

அம்மா திரியே ஊறுகாய் முதலியவற்றில் தாய்ப் புழுவும் பூச்சிகளும் முட்டைகளிடும். அவற்றிலிருந்து புழுக்கள் உண்டாகின்றன. சாணியைச் சுற்றி ஈக்கள் மொய்த்துக்கொண்டிருப்பதையும் கொசு முதலியவைகள் ஊறுகாய் ஜாடியைச் சுற்றிக்கொண்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். பிஞ்சுக் கத்தரிக்காய் புடலங்காய் மாங்காய் இவைகளின்மேல் அநேகம் பூச்சிகளும் வண்டுகளும் இருப்பதைப் பார்க்கலாம். அதற்குக் காரணம் அப்பொருள்களில் அப்பிராணிகள் முட்டையிட உத்தேசிப்பதே யாகும். அவ்விடங்களில் அவற்றின் முட்டையிலிருந்து வரும் குஞ்சுகளுக்குத் தகுந்த உணவு இருக்கிறது. ஈ, கொசு, வண்ணாத்திப் பூச்சி இவைகளில் ஒரு விசேஷம் உண்டு. பல்லி முட்டையிலிருந்து வெளிவருவது பல்லிக்குட்டியாகும். கோழி முட்டையிலிருந்து வெளிவருவது கோழிக்குஞ்சாகும். ஆனால் பூச்சிகளின் முட்டையிலிருந்து வெளிவருவது புழுக்களைப் போலிருக்கும். இப் புழுக்கள் சிறிது காலம் ஆகாரம் உட்கொண்டு வளரும்; பிறகு உறங்கும். அப்பொழுது அப்புழுவின் சரீரம் பூச்சியின் சரீரமாய் மாறும். அஃது உறக்கம் நீங்கி இறக்கைகள் முளைத்துப் பறந்து வெளிவரும். புழுக்களிருக்கும் சாணியையாவது ஊறுகாயையாவது சாக்கடை ஜலத்தையாவது ஒரு ஜாடியிலிட்டு உள்ளே பூச்சி நுழைய முடியாமல் ஜாடி வாயை ஒரு துணியால் மூடிவைத்துச் சில நாட்களுக்கப்பால் கவனித்தால் சாணி ஜாடியினுள் ஈக்களும், ஊறுகாய் ஜாடியினுள் கொசுக்களும், சாக்கடைநீர் ஜாடியினுள் கொசுக்களும் பறப்பதைப் பார்க்கலாம். அவ்விடங்களிலுள்ள புழுக்களே இப் பூச்சிகளாக மாறிவிட்டன என்பதை அறியவேண்டும்.

காய்ந்த தரையிலும் வயல்களிலும் ஜலம் வந்ததும் அநேகம் புழுக்கள் பூச்சிகள் நண்டு நத்தைகள் இருப்பதைப் பார்க்கிறோம்.

இவைகளெல்லாம் அவ்விடங்களில் புதைந்திருக்கும் அவற்றின் முட்டைகளிலிருந்தே உண்டாயின. அவற்றின் முட்டைகளில் ஒரு விசேஷமுண்டு. இப்பொழுது அவரை நெல் முதலியவற்றின் வித்துக்களை ஒரு வருஷ காலம் நன்றாக வெயிலில் காயவைத்துப் பிறகு நனைத்து வெயிலில் வைத்தால் புதுச்செடிகளாகின்றன. ஏன்? அவை எவ்வளவு காய்ந்த போதிலும் அவற்றில் முளைப்பதற்கு ஆதாரமான சக்தி சாகாமல் உயிரோடிருக்கின்றது. அம்மாதிரியே அநேகம் புழுப் பூச்சிகளின் முட்டைகள் நன்றாய்க் காய்ந்தபோதிலும் சாகாமல் தரையில் கிடக்கின்றன. அவற்றின்மேல் ஜலமும் சூரிய வெப்பமும் பட்டவுடன் முட்டைகளிலிருந்து பல பிராணிகள் வெளி வருகின்றன.

பல வியாதிகளை உண்டு பண்ணும் கிருமிகள் (*Bacteria*) கண்ணுக்குத் தெரியாமல் மிகச் சிறியனவாய் இருக்கும். பூதக்கண்ணாடியால் (*Microscope*) பார்த்தால்தான் அவை தெரியும். அவை எங்கும் இருக்கும். தரையிலும் தண்ணீரிலும் இருக்கும். அவை இலேசான தேகமுடையவையாகையால் காற்றிலும் இருக்கும். அவைகளைக் கொல்லுவது மிகவும் சிரமம். பனிக்கட்டியில் வைத்திருந்தாலும் சாகா; கொதிக்கின்ற வெந்நீரில் போட்டாலும் உடனே சாகா. அவற்றைக் கொல்லுவதற்குச் செய்யவேண்டியது என்னவென்றால் புழுக்கள் பூச்சிகளின் முட்டைகள் கிருமிகள் இருக்கும் ஜலத்தைச் சீசாவில் இட்டுக் கொதிக்கக் காய்ச்சிச் சீசாவின் வாயைக் கனத்த பருத்தியால் மூடினால் உள்ளிருக்கும் கிருமிகள் அநேகமாயிறந்து விடும். வெளியிலிருந்து காற்று உள்ளே போகுமே தவிர வெளியிலிருக்கும் கிருமிகள் பூச்சிகள் எவையும் உள்ளே போகா. இந்தக் காய்ந்த ஜலத்தை ஆறவைத்துப் பிறகு பூதக்கண்ணாடி வழியாகப் பரிசோதித்தால் பின்னும் சில கிருமிகள் உயிரோடிருப்பது தெரியும். ஏனென்றால் ஒரு தடவை காய்ச்சினதால் சில கிருமிகள் சாவதில்லை. ஜலம் ஆறினதும் அவை உயிரோடிருப்பது வெளியாகிறது. சீசா ஜலத்தை மூன்று அல்லது நான்கு தடவை கொதிக்க வைத்து ஆற்றி வாயைப் பஞ்சினாலடைத்து வைத்திருந்தால் உள்ளிருக்கும் எல்லாக் கிருமிகளும் இறந்துவிடும். வெளியிலிருந்து புதுக் கிருமிகள் உள்ளே போகா. நூறு வருஷம் கழித்துப் பரிசோதித்தாலும் உள்ளே புழுப் பூச்சிகள் கிருமிகள் இரா. அநேகம் வியாதிகளைச் சொஸ்தம் பண்ணத் திரவம் (*Serum*) செய்து ஊசி குத்துவதுண்டு. இம்மாதிரி அநேகம் தடவை கொதிக்க வைத்தே அந்தத் திரவம் செய்கிறார்கள். அதனால் அந்தத் திரவத்தில் ஜீவாணுக்கள் இரா.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வன என்னவென்றால் யாதொரு பிராணியும் தானே உண்டாவதில்லை என்பதும், அதன் தாயிலிருந்தே உண்டாயிற்று என்பதுமேயாம்.

தூசித்துரும்புகள் பிராணிகளாகலாம் என்று அநேகர் நம்புவதுண்டு. குழந்தைகள் உண்ணும் மண்ணும் சாம்பலும் வயிற்றில் சென்று நாக்குப்பூச்சிகள் ஆகின்றனவாம். நமது தலையிலிருக்கும் அழுக்கு, பேன்களாக மாறிவிடுகிறதாம். நமது தேக வேர்வையே நமது படுக்கையில் மூட்டைப் பூச்சிகளாக மாறிவிடுகிறதாம். இப்படிப் பலர் சொல்லுகிறார்கள். இவர்கள் இவ்வாறு கூறுவது பொருந்ாது. அப்பிராணிகளும் அவ்வவைகளின் தாய்களிட்ட முட்டைகளிலிருந்தே உண்டாகின்றன.

ஜனங்கள் கண்ட இடங்களில் மலவிமோசனம் செய்வதுண்டு. அந்த மலத்திலுள்ள நாக்குப்பூச்சி முட்டைகள் மண்ணிலும் சாம்பலிலும் தங்கி இருக்கும். அவை மழை ஜலத்தாலடித்துக்கொண்டு போகப்பட்டுக் குளம் கிணறுகளில் போகும். அம்முட்டைகளுள்ள மண்ணையாவது ஜலத்தையாவது உட்கொண்டால் முட்டைகள் வயிற்றில் சென்று புழுக்களாகின்றன. பேன்களுள்ளவனுடனே அவன் படுத்த படுக்கைகளிலோ நாம் படுத்தால் அவனுடைய பேன் முட்டைகள் நமது தலை மயிரில் சிக்கிக்கொண்டு பேன்களாகின்றன.

இன்னும் சில விநோதமான நம்பிக்கைகள் உலகில் இருந்து வருகின்றன. அவையாவன: வில்வப்பழம் குளத்தில் விழுந்து ஆமையாய் விடுகிறதென்பதும் தென்னையோலை பச்சைப் பாம்பாகிறதென்பதும் ஆம். அவைகளும் தவறு. ஓலை விழுவதையும் அதே சமயத்தில் ஒரு பாம்பு அந்த விடத்தில் ஓடுவதையும் பார்த்திருக்கலாம். ஆனால் ஓலைதான் பாம்பாயிற்று என்று எப்படிச் சொல்லலாம்? ஓலையை ஒரு பெட்டியில் சீல் வைத்து அது பாம்பாய்விட்டால் நம்பலாம். இவை பூசனிக்காய் உடைந்து முயல் வெளிவந்த கதையைப் போன்றனவே தவிர வேறல்ல. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால் ஜீவனில்லாத பொருள்கள் ஜீவிகளாக மாறுவதில்லை என்பதேயாம்.

ஒரு பிராணி வேறு இனத்தைச் சேர்ந்த பிராணியைப்போல் குஞ்சுகள் உண்டாக்குவதுண்டு என்று சிலர் நம்புகிறார்கள். அதாவது கோழி முட்டையிலிருந்து காக்கையும் பல்லிமுட்டையிலிருந்து பாம்பும் வெளிவருகின்றனவாம். தவிர, சாரைப் பாம்பின் முட்டையிலிருந்து நாகப்பாம்பு உண்டாகிறதாம். சில காடிகளும் ஓநாய்களும் மனிதக் குழந்தைகளைப் பெறுவதுண்டென்றும், சில ஸ்திரீகள்

பாம்பு அல்லது குரங்குக் குட்டிகளைப் பிரசவிப்பதுண்டென்றும் சொல்லப்படுகின்றன. இவை யெல்லாம் தவறு. பிராணிகளெல்லாம் தம் இனத்தைச் சேர்ந்த குஞ்சுகளைப்பெறுமே தவிர வேறு குஞ்சுகளிடமாட்டா. ஆனால் அநேக காரணங்களால் சில குஞ்சு குழந்தைகள் விகாரமாய் வளர்ந்து (*Monstrosity*) அசைப்பில் பார்த்தால் விகாரமாயிருக்கலாம்; கரடிபோல் உரோமம் இருக்கலாம்; அல்லது குரங்குபோல் முகமிருக்கலாம். இதைத் தவிரக் கரடி அல்லது குரங்கு என்பவற்றுக்குள்ள அங்கபாகங்கள் இரா. நாயும் பூனையும் சேரா. காக்கையும் கோழியும் சேரா. வண்டும் நண்டும் சேரா. அவை வேறு இனத்தைப்போல் குஞ்சுகள் இடா.

இதிலிருந்து பிராணிகள் தாமேயாவது கல் மண் முதலியவற்றிலிருந்தாவது உண்டாவதில்லை யென்றறிந்தோம். அவையவை அவ்வவற்றின் தாயிலிருந்தே உண்டாகின்றன வென்றும் சொன்னோம். அதாவது பூனை அதன் தாயிலிருந்தும், அத் தாய் அதன் தாயிலிருந்தும், அந்தத் தாய் அதன் தாயிலிருந்தும், இப்படி எல்லாப் பிராணிகளும் தம் தம் தாயிலிருந்தும் உண்டானவையாகும். அப்படியானால் இந்தப் பூமி ஆதியில் உண்டானபொழுது எந்தப் பிராணிகள் இருந்தன. பாம்பு, பல்லி, ஈ, தேள், மூட்டை, நரி, நண்டு, மாடு, ஆடு, குரங்கு, மனிதன் போன்ற இக்காலத்திலுள்ள பிராணிகள் இருந்திருக்க வேண்டு மல்லவா? சிருஷ்டிக் காலத்தில் குறைந்தது ஒரு தாயும் ஒரு தந்தையும் இருந்திருக்க வேண்டு மல்லவா? அப்படியானால் ஆதியில் வாழ்ந்த அந்தத் தாய் தந்தையர் உண்டான விதம் என்ன? பூமியில் தாமே உண்டாயினரா? அல்லது கல் மண் போன்றவை உயிர்ப் பிராணிகளாக மாறிவிட்டனவா? அல்லது வேறே ஆகாயத்திலுள்ள சூர்யன், சந்திரன், நக்ஷத்திரம் போன்ற கிரகங்களிலிருந்து வந்தனரா? அல்லது தெய்வம் பிரத்தியேகமாகச் சிருஷ்டித்தாரா? என்ன? இவற்றைப் பற்றிப் பின்பு ஆராய்வோம்.

(தொடரும்)

இலக்கியம்



சரஸ்வதி அல்லது மனோதத்துவம்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

உண்மை ஒன்றைக் கண்டுகொள்ளுவதில் மக்கள் எல்லோருக்கும் ஒரு திருப்தி. சிறு பிள்ளைகளானாலும் சரி, வயோதிகர் ஆனாலும் சரி, சூரியகிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால் ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும் தெருவிலும் வந்து ஏறிட்டுப் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். கிரகணம் தீண்டி விட்டதா தீண்டிவிட்டதா என்ற கேள்வி எங்கே பார்த்தாலும் எழும். கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப் பேரன் அறுபது வயதுப் பாட்டனுக்குச் சுட்டிக்காட்டி ஆனந்திக்கிறதும், அப்படியே மாறிப் பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறதும், பெண்டுகள் தாளிதத்தையே விட்டுவிட்டு முற்றத்துக்கு ஓடி வந்து அண்ணாந்து பார்ப்பதும், அடுத்த வீட்டு அக்காளையும் பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுவதும், அவர்களும் அண்ணாந்து பார்த்துக் கன்னத்தில் கைவைத்த வண்ணமாய் அதிசயித்து நிற்பதும் இவையெல்லாம் உண்மை ஒன்றைக் கண்டு கொள்வதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன

இப்படி உண்டாகிற ஸமுதாய உணர்ச்சியிலும் உத்ஸாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே விழாவாக ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான வருஷங்களாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

சூரியன் தெற்கோரத்திலிருந்து வடக்குமுகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்துச் சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே ஆடி மாதம் காவேரிக் கரையெல்லாம் பதினெட்டாம் பெருக்கின் விழாக்கொண்டாட்டம்.

ஆகவே இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் கண்டுகொண்ட மாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது. இந்தப் பூரிப்பைச் சிறு குழந்தைகளுக்குக்கூட ஊட்டி

விடலாம். அது மக்கள் சுபாவத்திலேயே அமைந்து கிடக்கிற தத்துவம்.

ஆனால் சூரிய கிரகணத்தின் உண்மையைப் பார்க்கச் செய்கிறதும் அதை நம்மோடு ஒத்து அனுபவிக்கச் செய்கிறதும் மக்கள் ஒழிந்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாத காரியம். எந்த மாட்டு மந்தையாவது அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்க்கத்தான் செய்யமுடியுமா? நம்மைக் கண்டதும் வாலையாட்டிக் கும்மாளி போடுகிற நம்முடைய உயிர்த்தோழன் என்று சொல்லக்கூடிய நாய்க்குக்கூட நம்மோடு ஒத்துச் சூரிய கிரகணத்தைப் பார்க்கவும் பார்த்துக் களிக்கவும் முடியாது. சங்கராந்தியைப்பற்றியும் பதினெட்டாம் பெருக்கைப்பற்றியும் சொல்லவேண்டியதே இல்லை.

உடலமைப்பு, கைகால் முதலான அவயவ அமைப்பு, கண் மூக்கு காது முதலான இந்திரியங்களின் நுட்ப உணர்ச்சி—இவைகளில் எத்தனையோ பிராணிகள் நம்மைவிட எத்தனையோ மடங்கு சிறந்தனவாய்த்தான் இருக்கின்றன. புலியைப்போல் அழகான உடம்பு நமக்கு இல்லை; குரங்கைப்போல் எதையும் பற்றக்கூடிய காலில்லை; கழுகின் கண் இல்லை; நாயின் மோப்ப உணர்ச்சி இல்லை; முயலின் செவிப்புலனைப் பார்த்தால் நமக்கெல்லாம் 'தோட்டம் தூரத்தான்'.

இதையெல்லாம் யோசிக்கும்போது நாம் பிரமசிருஷ்டியில் மணிமகுடமாக விளங்குகிறோம் என்ற எண்ணம் போய்ச் சிறிது தலை கவிழும்படி ஏற்படுகிறது.

ஆயினும் இயற்கை தன் மடிக்குள் ஒளித்துவைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டுபிடிக்கிற திறத்திலும், கண்டுபிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும், அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாகப் பின்னிட்டு வரும் மக்கள் சமுதாயம் அனுபவிக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதிவைப்பதிலும் மனிதன் தனித்தே நிற்கிறான். மற்ற ஜீவராசிகளெல்லாம் அவனை விட்டு எவ்வளவோ தூரத்தில் விலகி நிற்கின்றன. நான்முகனுக்குச் சிறந்த கிரீடம் நாமே என்று சொல்லிக்கொள்ளலாம். இதுபற்றியே மேல்நாட்டு நிபுணர் ஒருவர் சொன்னார்:

"பேர் அண்டத்திலுள்ள பொருள்களில் எல்லாம் சிறந்தது மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள்களில் எல்லாம் சிறந்தது மனசு."

இத்தகைய அதிஅற்புதமான, பொருள்—மனசு, எப்படி உற்பத்தியானது? ஏன் மற்ற ஜீவராசிகளிடத்துக் காணப்படுதல் இல்லை? என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப் பொருளான நம் உடலுக்குள் மனசின் தத்துவங்கள் ஒன்று ஒன்றாக வளர்ந்து தெளிவடைந்து பிரகாசிப்பதை நோக்கும்போது இருள்மயம் என்று சொல்லக்கூடிய தண்ணீர்த் தடாகத்திலிருந்து முளைத்து எழுந்து மலர்ந்த வெண்தாமரை மலர் ஞாபகத்துக்கு வருதல் இயல்பு. பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே ரசிகர் ஒருவருக்கு இத்தகைய ஞாபகம் வந்தது. [முகதலைப் படம்] வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்விக தத்துவம். அப்படியே உள்ளுணர்வு முளைத்தெழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்விகதத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களிலிருந்து சரஸ்வதியென்ற தெய்வத்தை உள்ளத்தில் பாவனைசெய்யவும் அத்தெய்வத்தை வெண்தாமரையின் தெளிந்த குளிர்ந்த வெண்ணிறத்தோடு சமரஸப்படுத்தி அந்த மலரின்மீதே ஏற்றி வைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக்கலையும் வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன.

இப்படிப் பிறந்த தெய்வமகள் கலைமகள் என்றும், சரஸ்வதி என்றும், வாணி என்றும் பலவாறாகப் பேர்பூண்டு நம் நாட்டில் உலவுகிறாள். மேல்நாட்டிலும் ம்யூஸ் என்ற பேரோடு உலாவி வருகிறாள். இப்படிச் சரஸ்வதியாக உருவகப்படுத்தின ரசிகனுடைய பாவனாசக்தியை உள்ளூர்ந்து எண்ண எண்ண நமக்கு அதிசயம் எப்படிப் பொங்குகிறது!

சரஸ்வதிக்கு இருப்பிடமென்னும் கலைகள் அறுபத்துநாலு என்றார்கள். அறுபத்து நாலாயிரம் என்றாலும் பொருந்தும். வில் வித்தை ஒரு கலை; குதிரையைப்பற்றிய விசாரணை ஒரு கலை; சிற்பம் ஒரு கலை; நடனம் ஒரு கலை; சங்கீதம் ஒரு கலை; கவி ஒரு கலை; சமயமும் ஒரு கலைதான்.

தற்காலத்திலோ வில்வித்தையோடு ஒத்து எண்ணவேண்டிய கலைகள் எத்தனையோ. பிள்ளைகள் விளையாடுகிற கோலி ஆட்டம் முதல் உலகம் முழுதுமே இமை கொட்டாது பத்திரிகைகள் மூலமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிற கிரிக்கட் இறுதியாக உள்ள கலைகளைக் கணக்கிட்டு முடியாது. அப்படியே பூர்வமாக வகுத்த கலை ஒவ்வொன்றும் எத்தனையோ பிரிவாகக் கிளைத்தோடி மக்கள் வாழ்க்கையை வளம்படச் செய்து வருகிறது.

அந்தக் கலைகளில் எந்தத் துறையில் இறங்கி அனுபவிக்கத் தொடங்கினவர்கள் தான் இன்பத்தில் மூழ்கிப் போகாதவர்கள்! தென்துருவத்தின் கோடியைப் பார்க்கப்போவதில் ஷாக்கில்ட்ட னுக்கு இருந்த ஆர்வந்தான் என்ன! எடிஸன் சக்திகளையும் சாத னங்களையும் கண்டுபிடிக்க இராப்பகலாய் ஆராய்ந்ததுதான் என்ன! அவ்வாறே சரித்திரத்திலும் கவியிலும் ஈடுபட்டு அவைகளோடு வெறிகொண்டு சிலர் கூத்தாடுவதுதான் என்ன! இந்த முயற்சிகளில் உடல் பொருள் ஆவியையே பொருட்படுத்தாதவர்கள் எத்தனை பேர்! அப்படியானால் அதில் எத்தகைய பேரின்பம் இருக்க வேண்டும்! அவர்கள் உள்ளந்தான் கலைமகள் நின்று களிநடம் புரிகிற கலியாண மண்டபம்.

சில்நாள் பல்பிணி வசத்தராகிய நமக்கும் துன்பத்தை நீக்கிக் கொள்ளுவதற்கு உபாயம் உண்டா? உண்டு. அதாவது: கலைமகள் கடாக்ஷம் பெற்ற மேதாவிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கலை களைப் பயின்று அவைகளின் அதிசயங்களைக் கண்டும் நானாவித ரஸங்களைச் சுவைத்தும் இன்பத்தில் திளைப்பதுதான்.

மேலும் ஞாபகத்துக்கு எட்டாததோர் பண்டைக்காலந் தொட்டு நிலஉலகில் ஆங்காங்குப் பலதேசங்களில் சமயப் பரபரப்பு ஒன்று இருந்து வந்திருப்பதாகக் காண்கிறோம். நமக்குச் சாதாரண மாய்த் தோற்றுகிற பொருள் வடிவங்களும் அவைகளின் இயக்கங் களும் ஒரு தோற்றம். மற்றொரு தோற்றம் அவைகளின் இயல் பான உண்மையான தத்துவம். உதாரணமாக: நாம் செய்கிற செய லுக்கும் உணருகிற உணர்ச்சிக்கும் நாமே காரணம் என்றும் அதி காரி என்றும் கருதுகிறது சாதாரணப் பார்வை. இதை விட்டு விட்டு நம் செயலுக்கும் உணர்ச்சிக்கும் காரணமாய் இருப்பது—நம் முடைய உணர்ச்சிக்கெல்லாம் பின்னாக இருக்கும் தனிப்பொருள் வேறு ஒன்று என்று உணர்ந்துகொள்வதுதான் மற்றொரு பார்வை. இந்த உணர்ச்சியை "மெய்யுணர்வு" என்றும் "பதி ஞானம்" என்றும் சொல்லுவார்கள். இந்த உண்மையைக் கண்டு கொள்வதையே தனிநோக்கமாக உடையன சமயங்கள். இதுவே அறிவில் எல்லாம் அறிவு; உணர்வில் எல்லாம் உணர்வு; இன்பத் தில் எல்லாம் இன்பமான பேரின்பம்.

சாமான்யமாகக் கிட்டாத இத்தகைய பேரின்பத்தையும் மக்கள் அடையலாம். அதற்குச் சாதனம் அறிவைப் பின்பற்றிக் கலைகளை ஆராய்தலே. ஒரு சிறு அற்பப் புஷ்பம் ஒன்றின் தத்துவத்தை ஆராய்ந்தால் போதும் என்பர் மேல் நாட்டுக்கவி டெனிஸன். நம்முடைய கவி திருவள்ளுவரோ 'எப்பொருள் எத்தன்மைத்தாயி

னும், அப்பொருளின் உண்மைத் தத்துவத்தைக் காணப்புகுதல் போதும்' என்பர்.

ஆகவே கடவுள் தத்துவத்தை அல்லது வீட்டை அடைவதற்கு உடலை வருத்தி எல்லாம் செய்யும் ஹடயோக சாதனம் சாதனம் அல்ல. அறிவியல்க் கலைகளைக் கருவியாகக்கொண்டு நமது உள்ளத்தையே துருவி ஆராய்தல்தான் தக்க சாதனம்—எளிய சாதனம் என்று வற்புறுத்திக் கூறுவர் பெரியோர். அதாவது சமய உணர்ச்சிக்கும் கலைமகள் அருள் நோக்கம் வேண்டும் என்பர்.

இதுகாறும் சொல்லி வந்ததில்ப் பரந்தவாறாகக் கிடக்கும் உண்மைகளை நம்மவர் எடுத்துக் கூறும் முறை இன்னது என்று பின் வரும் கட்டளைக் கலித்துறை ஒருவாறு விளக்கும். மோக்ஷசாம் ராஜ்யம் நமக்கு எவ்வளவோ தூரத்தில், உள்புக முடியாதபடி இருப்பதாகத் தோன்றினும் அறிவியல்ப் பயிற்சியாகிய சாதன மானது வாசலைத் திறந்துவைத்துக்கொண்டு நம்மை வாவென்று அழைப்பதுபோல் இருக்கிறது, என்பதை,

> "சேயகம் ஆம்வீடு புக்கிடு தற்குத் திறந்துவைத்த
> வாயகம் ஆவதும்"

என்று கூறி, பிறகு துன்பங்களில்ப் பட்டுத் தத்தளிக்கும் மக்களுக்கு அந்தச் சாதனமே அவர்கள் அமிழ்ந்து போகாது தாங்கிக் காக்கவல்ல ஆதாரமாய் இருக்கிறது, என்பதை,

> "......துன்பக்கடற்பட்ட மன்பதைக்குத்
> தாயகம் ஆவதும்"

என்றும் கூறுகிறது. இனி இவ்விரண்டு உண்மையையும் கண்டனுபவித்ததிலிருந்து பிறக்கும் அதிசய உவகையைக் கவிமரபின்படி கவித்தத்துவத்துக்கு ஏற்றவாறாகக் கடைசியில் சொல்லி முடிக்கிறது:

> "சேயகம் ஆம்வீடு புக்கிடு தற்குத் திறந்துவைத்த
> வாயகம் ஆவதும், துன்பக் கடற்பட்ட மன்பதைக்குத்
> தாயகம் ஆவதும், பூதலம் பூத்த தகைமலர்க்குள்
> நாயகம் ஆவதும், கோதில் தவள நளினமதே"*

இந்த விரிந்த பூவுலகத்தில் விசித்திரமான நிறபேதங்களோடும் உள்ளத்தை மயக்கத் தகுந்த திவ்ய பரிமளங்களோடும், நோக்க

* சரசுவதியந்தாதி, 15-வது செய்யுளைப் பார்க்க.

நோக்கவும், மோந்து பார்க்கப் பார்க்கவும் தெவிட்டாத புஷ்ப வகைகள் எத்தனை எத்தனையோதான் ஆயினும் என்ன? கலைகளுக்கு எல்லாம் உறைவிடமான தண்மையும் நறுமணமும் தூய ஒளியும் படைத்துள்ள கோதிலாத வெள்ளிய வெண்தாமரைக்குச் சமானம் ஆகுமா?

தாயுமானவர்

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

(473-ம் பக்கத் தொடர்ச்சி)

துதி

வானார் கயிலைத் திருமலையின் மரபீ தெனயாந் தெரிந்துணராத்
தானா முதன்மைத் தாணுவருட் சாந்தத் தாயு மானவனீ
தேனார் மறைசை வேளாளன் றிகழ்கே டிலிக்கு மகிழ்வளிப்பான்
பானா றமுத விளங்குதலைப் பால னாய சிறப்பென்னே. (1)

தொன்றூர் நால்வர் குறைதவிர்த்துத் தொன்னூற் றேவர் தொழ
யொன்றூர் பரம குருபரனா யுயருந் தாயு மானவனீ [வருளி
யென்றூர் சிற்றம் பலனோடு மினிதி னோதிச் சம்பிரதி
யொன்றா நிலையின் றருண்மவுனி யுபதே சங்கொள் சிறப்பென்னே. (2)

விண்ணார் குருவா யுமையோடும் விரவி நிறைந்து வடமொழியிற்
றண்ணார் ஞான மறைமொழியுஞ் சாமி தாயு மானவனீ
கண்ணார் மவுனி பானெறியைக் கற்றுத் துறவு பூண்டுலகிற்
பண்ணார் தமிழிற் பலபாடற் பாடும் பனுவல் சிறப்பென்னே. (3)

இனி, நமது பெரியோர்கள் கர்ண பரம்பரையாகக் கூறிவந்தபடி தாயுமானவர் சரித்திரம் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் 1835-ம் வருஷம் அச்சிற் பிரசுரித்த பாடற் பதிப்பில் உள்ளது. இக் காலத்துப் பதிப்புக்களிற் காணுதலரிதாயிற் றாகலின் அதனை இங்குத் தருகின்றேன்:

'தென்னாடுகள் பலவற்றினும் சிறந்து விளங்குகின்ற சோழ மண்டலத்திலே உள்ள வேதாரணியமென்னும் வடமொழிப் பெயரையுடைய திருமறைக்காடாகிய சிவஸ்தலத்திலே சற்றேறக் குறைய 180 வருஷத்துக்கு முன்பாக வேளாண்குலதிலகராயும் குருலிங்க சங்கமபத்தியிலே சிறந்தவராயும் **கேடிலியப்ப பிள்ளை** யென்பவரொருவரிருந்தார். அவராலே அந்தச் சிவஸ்தல விசாரணை நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அக்காலத்திலே திரிசிரபுரத்திலே அரசாட்சி செய்துகொண்டிருந்த **விஜயரகுநாதசோக்கலிங்க நாயகரே**ன்பவர் கேடிலியப்ப பிள்ளையினுடைய நற்குணங்களையும் கணக்கு வல்லமையையும் சிலர் சொல்லக் கேட்டு அவரை அழைப்பித்துப் பரீட்சித்து அவருக்குப் பெரிய சம்பிரதி யுத்தியோகம்

கொடுத்துத் தம்மிடத்தே வைத்துக்கொண்டார். அந்தக்கேடிலியப்ப பிள்ளையானவர் சந்ததியில்லாதவராயிருந்த தமையனுருக்குத் தம்முடைய ஒரே பேருகிய சிவசிதம்பரப் பிள்ளை யென்னும் குமாரனைக் கொடுத்துவிட்டிருந்ததினுல் தமக்குச் சந்ததி யுண்டாக அருள் செய்யும்படிக்கு அந்தத் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற தாயுமானேசுரரைத் தரிசித்துக்கொண்டு வந்தார்.

'அக்கடவுளது திருவருளினுலே ஓராண்பிள்ளை பிறந்தது. அது கண்டு தகப்பனுர் மகிழ்கூர்ந்து அக்கடவுளுக்குக் காணிக்கை முதலானவை செலுத்திக் குமாரனுக்குத் தாயுமானவரென்கிற அக்கடவுளது பெயரைக் கொடுத்தார். அந்தத் தாயுமானவர் தம் தகப்பனுருக்கு மிகவும் மனமகிழ்ச்சி யுண்டாகும்படிக்கு அவர் செய்யும் முயற்சியளவிற்கு அதிகமான கீர்வாணம், தமிழ் முதலிய கல்விப் பயிற்சியிலே சிறந்தவரானுர். உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் இவை முதலிய நற்குணங்களெல்லாம் அவரோடு கூடவே வளர்ந்தன. ஓர் அஞ்ஞானியினது மனமானது நிலையில்லாத செல்வப்பொருளை எப்படி விரும்புமோ அப்படியே இவரது மனமானது தத்துவப்பொருளையே விரும்பிநின்றது.

'அப்படியிருக்கையில் திருமூலநாயனுர் மரபிலே எழுந்தருளிய மௌனதேசிகர் தாயுமானவரைச் சந்தித்து அவரது அதிதீவிர பக்குவத்தைக் கண்டு வேதாகமங்களின் முடிவான தத்துவப் பொருளை உபதேசித்தருளினுர். அதுமுதலாகத் தாயுமானவர் தமது ஞானசாரியரிடத்தே மிகுந்த பத்தியுடையவராய் அவ்வுபதேசப் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து தினந்தோறும் தட்சிணுமூர்த்தி சன்னிதியிலே நிஷ்டை செய்துகொண்டு வந்தார். பின்பு தாயுமானவருக்குத் தகப்பனுர் தேகவியோகத்தை அடைதலினுலே அவரது லௌகிகத் தொழிலை அரசனது வேண்டுதல்பற்றி அதில் விருப்பமில்லாதவராயிருந்தும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அரசனுனவன் அவரை முதலிலே ஞானவானென்று அறிந்திலனுயினும் கேடிலியப்ப பிள்ளையினும் இவர் யோக்கியரென்று நன்கு மதித்து மிகவுஞ் சிறப்புச் செய்து வைத்திருந்தான். ஆனுல் கழைக்கூத்தனுடைய கருத்து உடற்காப்பிலும் அவனது செய்கை கூத்திலும் எப்படி வைக்கப்பட்டிருக்குமோ அப்படியே தாயுமானவரது கருத்துச் சிவத்தினும் அவரது செய்கை லௌகிகத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

'இப்படிக்குச் சிலநாள் சென்றன. மேல், அரசன் அவரிடத்தே விளங்கிய அபூர்வமான சில செய்கைகளைக்கண்டு அவரது மகிமையை அறிந்துகொண்டான். உடனே விவேகியாகிய அவ்வரச

னுக்கு அவரைக் குறித்து அச்சமும் அன்பும் உண்டாதலால் அவரை அழைப்பித்து உயர்ந்த ஆசனத்தின்மேல் இருந்தருளப் பண்ணி, "சுவாமி, அடியேன் இதுவரையிலே உமது மகிமையைக் கண்டுகொள்ள மாட்டாதவனாயிருந்ததனாலே உமக்கு ஊழியஞ் செய்யத்தக்க நான் உம்மை எனது ஊழியத்திலே வைத்திருந்தேன். ஆயினும் இது பெரிய குற்றமாகலின் கிருபாமூர்த்தியாகிய தேவரீர் இக்குற்றத்தைப் பொறுத்தருளி இன்றுமுதலாக அடியேனால் ஆகவேண்டியவற்றைச் செய்வித்துக்கொண்டு நிஷ்டைக்குக் குறைவுபடாமல் இருந்தருளலாம்" என்று வேண்டுதல் செய்தான். அதுகேட்டவுடனே தாயுமானவர் திருவுளமகிழ்ந்து அன்று முதலாக அலைவற்ற ஞானயோகத்திலே இருந்துகொண்டு கடவுளையும் குருவையும் அற்புத சின்மய மதுரமான தமிழ்ச்செம் பாடல்களைப் பாடித் துதிசெய்துகொண்டு வந்தார்.

'இப்படியிருக்கையில் அவ்வரசன் இறந்து போய்விட்டான். அவ்வரசன் மனைவி தாயுமானவரது திருமேனியின் கண்ணேயுள்ள அழகைக் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துக் கண்களிகூர நோக்கிக் கேள்விப்பட்டவளவினும் அதிகமாக விளங்குதலால் உளமருண்டு அவரைத் தன்னரசாட்சிக்குத் தலைவராக்கவும் தன்னால் விரும்பப்பட்ட தகாத செய்கைக்கு உடன்படுத்தவும் தான் கொண்ட கருத்தைக் குறிப்பித்தாள். அக்கருத்தை அறிந்த தாயுமானவரோ என்றால் உடனே ஒருபாய வழியினாலே அங்கிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு அவள் அரசாட்சியி னெல்லையைக் கடந்து இராமநாதபுரத்துச் சீமைக்கு எழுந்தருளினார்.

'இச்செய்தி சிவசிதம்பர பிள்ளையின் செவியை அடைந்ததனாலே அவரும் சிறியதாய் குமாரராகிய அருளையப் பிள்ளையும் தேடிக் கண்டுபிடித்துச் சந்ததி விளங்க வேண்டுமென்னுங் கருத்தைக்கொண்டு திருக்கல்யாணம் செய்யும்படி முயற்சி செய்தார்கள். தாயுமான சுவாமிகளுக்கு அக் காரியத்திலே சிறிதும் திருவுளமில்லாதிருந்தும் தமையனாரது வேண்டுதலின் மிகுதியினாலே உடன்படலாயிற்று. உடனே பத்தினியார் ஓராண் பிள்ளையைப் பெற்று வைத்துச் சிவபதமடைந்தார். அந்தப் பிள்ளைக்குக் கனகசபாபதிப் பிள்ளை யென்று பெயர் இடப்பட்டது. அதுமுதலாகத் தாயுமான சுவாமிகள் கௌபீனத்தோடு பரிசுத்த சிவஸ்தலந்தோறும் சஞ்சரித்துக்கொண்டு இவ்வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பெற்று அஞ்ஞான விருளினின்று நீங்கி உய்யும்படிக்குப் பலவகைப்பட்ட அற்புதமான பாடல்களைச் செய்தருளினார். அருளையரென்பவரும் அவ்விடத்தே தத்துவோபதேசம் பெற்றுக்

கொண்டு அவரைவிட்டு நீங்காமல் பணிவிடை செய்துகொண்டு வந்தார்.

'தாயுமான சுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய சிவத்திலே கலந்த பின்பு அருளைய சுவாமிகள் அகவற்பாவினாலே குருவைத் துதித்துச் சிவயோகத்திலே யிருந்து தமக்குப்பின் பக்குவப்பட்டு வரும் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும்படி முற்கூறிய கனகசபாபதிப் பிள்ளைக்கு அபிஷேகஞ் செய்தருளினர். இக்குருபரம்பரையில் தஞ்சைமாநகரத்துக்குக் கீழ்பால் அன்னப்பன்பேட்டையிலுள்ள மடத்தில் இப்போது இருக்கின்ற அம்பலவாண சுவாமிகளுடைய அடியார் கூட்டத்திலே ஒருவராகியும் அந்த ஆதீனத்துக்கு உரியவராகியும் உள்ள எடுத்துக்கட்டி அருணசல நாயனரவர்களிடத்திருந்த ஆதீன புஸ்தகத்தையும் மற்றுஞ் சில புஸ்தகங்களையும் அழைப்பித்து ஒப்பிட்டு அச்சிடப் பட்டது.'

நான் கண்ட நாற்பறவைகள்

ஆ. வ. பதுமநாப பிள்ளை


(484-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்டதெலாம் எண்ணி வியப்புங் களிப்பும்மிகப்
பெற்றங்கு நின்றேன் ; பின்னர்ப் புறப்பட்டுச்
சற்று நடந்தேன் ; தண்கொன்றை மரமொன்றை
நண்ணினேன். அவ்வமயம், நாட்டம் பலபெற்ற
விண்ணிறையை ஒத்த விந்தை மயிலொன்று
கருமுகிலைக் கண்டு களிப்பிற் பெருகியதாய்
அருந்தோ கையைவிரித்தே அழகுபெற ஆடியதால்.
அடுத்தேன் அதனை. அச்சங்கொண் டம்மயிலும்
திடுக்கிட் டிரியவில்லை ; செம்மாந்து நின்றதுவே !
கண்டேன் அதனை ; களிப்பும் வியப்புமிகக்
கொண்டேன் ; இருகரமுங் குவித்தவனாய்க் கும்பிட்டேன்.
"அறிவும் அமைதியும் ஆனந்த முங்கலந்த
குறிஞ்சிநிலத் தெய்வமாம் குமரப் பெருமானைத்
தாங்கி நடந்து தாரணியில் மாண்பில்மிக
ஓங்கிய புள்வழியில் உதித்த மயிலாரே !
இறையன்பில் மேனி எழிலில் சிறந்தவரே !
நிறைசிந்தை யோடு நீலக்கொண் டல்கண்டு,
களிமிக் கவராய்க் கவின்தோ கையைவிரித்து
நளினபத நங்கையர்போல் நடஞ்செய்ய வல்லவரே !
மேனி யழகினிலே மிக்கவராம் மங்கையரை
நீனிறத்துச் செல்வரே ! நின்னோ டுவமிப்பர் !
தண்மைமிகு நீலமும் தழைத்த பசுமையெனும்
வண்மைநிற முங்கலந்த வண்ணத்தைப் பெண்மணிகள்
எய்தஎன் செய்வர் ? எழில்மிக்க பட்டதனால்
நெய்த பலதிறத்த நிறமுடைய சேலைகளால்
செயற்கை வழியிலல்லால் செல்வத்தி னாலல்லால்
இயற்கை வழியினிலே எய்த முடிந்திடுமோ ?
பாரி லழகைப் படைத்திருந் தும், பலமனிதர்
சீரிய நல்லொழுக்கம் சேரா துழல்கின்றார் ;
மேனியழ கால்மட்டும் விளையுமோ மெய்ப்பெருமை ?

தேனிகர்சொல் லார்பலர், புன் தீயவஞ்ச நெஞ்சினராய்ப்
பலரை மயக்கிப் படுமோசம் செய்கின்றார் !
உலகநிலை இவ்வாறே உள்ள''தெனப் புகன்றேன்.
என்னுரையைக் கேட்டமயில், ''என்னே விபரீதம் !
இன்னருளால் ஈசன் ஈந்த அழகிருந்தும்,
நெஞ்சத்தில் வஞ்ச நினைவுகள் கொள்வானேன் ?
வஞ்சகராம் அன்னவர்க்கு மனச்சான்றும் இல்லைகொலோ ?
பாவியர்தம் மேனியெழில் பதுமையழ கொப்பதுவே !
பூவுலகுக் கக்கொடியோர் புன்சுமையே ஆவாராம்.
நரைதிரை புன்முதுமை நலியும் பிணிகளென
உரைபகவர் மனிதரெழிற் கூறுசெயக் காத்திருப்பர் ;
நிகழ்த்துகின்ற மனிதர்எழில் நிலைத்துநிற்ப தன்றென்றும்.
புகழ்இறைவன் ஒருவனே பொன்று அழகுடையன்.
அவ்வுண்மை யான்உணர்ந்தே, அழியா எழிலுடைய
செவ்வேள் முருகனைத் தினமுந் துதிக்கின்றேன்.
''இயற்கையழ கைப்பேணும் இன்பமே பேரின்பம் ;
மயலகத்தில் உள்ளவரை மதியால் பயனில்லை ;
ஆருயிரை உய்விக்க ஆசான் அருள்வேண்டும் ;
சீரியஅவ் வருளிருப்பின், சீறியே அச்சுறுத்தும்
கடுநெஞ்சப் பாம்பையுங் காலால் மிதித்திடலாம் ;
இடுக்கண் எதனையும் இன்பமாய் ஏற்றிடலாம்'
என்னுங் கருத்துடன் எம்மினத்தின் தனித்தலைவர்
இன்னும் முருகனை ஏற்றிக்கொண் டுலவுகிறார் !
மெய்க்கல்வி கேள்விகளில் விளைகின்ற பேரின்பம்
துய்க்கின்ற தூயரே சுருங்கா அழகினராம் ;
உண்மை யதனை உணர்ந்தெம் இனத்தொருவர்
வெண்கமல நாமகளை விரும்பிச் சுமக்கின்றார் !
உள்ளத் தழகே உண்மையழ காமென்றும்,
கள்ளமனத் தார்அழகு கடைப்பதுமை யழகென்றும்,
இயற்கையழ கில்காணும் இன்பமே இன்பமென்றும்,
மயல்விலக, என்றும் மாறாப் பெருவனப்பை
உற்றமுரு கனைப்பரவல் உயிர்தனைஉய் விக்குமென்றும்,
கற்றவரை உய்விக்கும் கலைமகளை எல்லோரும்
என்றும் துதித்தெய்தும் இன்பம் பெரிதென்றும்
சென்று மனிதரிடைச் செப்புவாய்'' என்றுரைத்து
மயிலும் அகன்றது ; பின் மற்றோர் மரக்கிளையில்
அயில்பவள மூக்கும் அரிய மரகதம்போல்

பச்சைநிற மேனியும் படைத்த கிளிஒன்று,
அச்சமயத் தென்னை அழைத்துரைக்க லாயிற்று:
"நல்வானம் பாடியும் நற்குயிலும் இன்மயிலும்
சொல்லியன கேட்டுன்னைத் தொடர்ந்தே வருகின்றேன்!
அம்மூன்றுங் கூறியன அகத்திற் பதித்தனையோ ?
எம்மோ டழகினிலும் இனிய மொழியினிலும்
உலகிற்சில் மங்கையரை உவமித் துரைத்திடுவர்.
சொலவும் சிரிப்பே! சொல்லாடும் போதினிலே,
'பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்டிர்இரு வர்பேசில் பெயர்ந்துவிழும் விண்மீன்கள்'
என்று புலவர் இயம்பும் படிகடிய
வன்குரலில் பேசும் மாதர் பலர்உண்டு!
பெண்கள் முகத்தழகைப் பெருக்குங் கருத்துடனே
வெண்பொடியைப் பூசி வேடந் தரிப்பவர்போல்,
ஏற்கன வேஇருந்த எழிலும் இழப்பதுவும்
தோற்சட உடம்புக்குத் தொகையிற் பெருமதிப்பு
பெற்றபல சேலைகளில் பித்துப் பிடிப்பதுவும்
நற்கணவ ரோடுசமர் நாளும் தொடுப்பதுவும்
இல்லா அழகுதனை எய்துங் கருத்துடனே
பல்லா யிரத்தொகையில் பணத்தைச் செலவழித்தே
பற்பல் விதநகைகள் பண்ணுவித்துப் பூண்பதுவும்
மற்றும் பலவும் மனத்தில் நினைக்குங்கால்,
மெத்த யான்விழுந்து விழுந்து சிரித்திடுவேன்!
சித்தத் தழகுபித்து சேர்வோர்க் குரைத்திடுவாய்:
இயற்கைச்செந் நெறியோ டியைந்ததொரு வாழ்வினையே
மயலின்றி மேற்கொள்ளும் மங்கையரே அழகிகளாம்.
மெல்லியலா ரெல்லாம் வீணைக் குரலினிலே
சொல்லாட லேதொன்று தொட்டுவந்த வழக்கமதாம்.
சீறிச் சிடுசிடுத்துச் சீர்பொறைகொள் பெண்மையினை
மீறிக் கொடுமொழிகள் விளம்புவது பேய்க்குணமாம்.
இயற்கை வழியில் இயையும் அழகன்றிச்
செயற்கை முறைகளால் சேராதாம் மெய்யழகு!
மாடியினை வீதியினை மனையிலுறு தோட்டத்தை
நாடியபோ தெல்லாம், நங்கையர்தம் இயல்புகளை
பார்த்துணர்ந்து பன்னாள் பழகி அறிந்துரைத்த
வார்த்தைக ளாமிவற்றை மாதர்க் குணர்த்திடுவாய்"
பச்சைநிற மோகனப் பண்மொழிஅக் கிளிபின்னர்

அச்சமின்றிக் கீழிறங்கி அண்மையினில் நின்றதுவே.
எட்டிப் பிடித்ததனை இன்பமுற முத்தமிட்டு
மட்டில் மகிழ்ச்சியொடு மார்போ டணைக்கஎண்ணிக்
கையிரண்டும் நீட்டினேன் ; காணேன்அக் கிளிதன்னை !
'ஐயோ' எனக்கலங்கி அலறினேன். அவ்வளவில்,
கண்திறந்து பார்க்குங்கால், கண்டதெலாம் கனவென்னும்
உண்மை தனையான் உணர்ந்தேன், இவையெல்லாம்
அந்திப் பொழுதழகை அகத்திற் பலவாறு
சிந்தித் திருந்து சிறியேன் துயின்றதனுல்,
கற்பனை நெஞ்சம் காட்டியபற் பல்தோற்ற
அற்புதங்க ளேயென் றறிந்தேன் ; வியந்திட்டேன்.
நான்கண்ட நற்கனவில் நாற்புட்கள் சொன்னவெலாம்
ஆன்றபுகழ்ச் செந்தமிழ் அகத்தீர் ! உணர்ந்தீரோ ?
செயற்கைப்புன் னெறிகளிலே சேர்மோகம் தீர்ந்தீரோ ?
இயற்கைநன் னெறிகளிலே இன்பந்துய்த் திடுவீரோ ?



அவலக்ஷணத்தின் விலை

கி. வா. ஜகந்நாதன்

படடே படே ஆசாமிகளெல்லாம் காலம் கெட்டுப் போயிற்று என்று முணுமுணுத்துக்கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் 'நல்ல காலம்' ஓர் அவலக்ஷணத்துக்குப் பிறந்தது என்றால் யார்தாம் ஆச்சரியப்பட மாட்டார்கள்? நீங்கள் ஆச்சரியப்பட்டாலும் படா விட்டாலும் எனக்கு என்னவோ பெரிய ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

என்னுடைய நண்பன் ஜயராமன் அவலக்ஷணத்தின் அவதாரம். தடித்த உருவம், கோணலான மூஞ்சி, வாயின் இரண்டு பக்கத்திலும் மூன்றங்குலம் நீண்ட பற்கள், சப்பட்டை மூக்கு, பெரிய பயங்கரமான கண்கள், இவ்வளவையும் அவனுடைய திருமேனியழகுக்குக் காரணமானவைகளாகச் சொல்லலாம். நல்ல கறுப்பு; 'நல்ல' என்று சொல்லிவிட்டதனால் கிருஷ்ணர் ராமர் இவர்களைப்போன்ற கறுப்பென்று நினைத்து விடாதீர்கள். அவர்களெல்லாம் நிலக்கரியைப் போல் பளபளப்பான கறுப்பர்கள். ஜயராமன் வெறுங்கரி போல மழுங்கின கறுப்பன். உடலுக்கும் அறிவுக்கும் சம்பந்தமே கிடையாது என்பதை அவனிடம் காணலாம். சாதுர்யமாகப்பேசும் அவனுடைய பேச்சுக்களுடைய மதிப்பை அவனது அவலக்ஷண ஸ்வரூபம் உலகத்திற்குத் திரை போட்டு மறைத்தது.

*　　　*　　　*

ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தேன். தபால்காரன் ஒரு பெரிய கடிதம் கொணர்ந்து கொடுத்தான். அதைப் பிரித்து வாசித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! ஐந்து வருஷங்களுக்கு முன்பு எங்கேயோ ஓடிவிட்ட என் நண்பன் ஜயராமன் கடிதம் அது; சென்னையிலிருந்து எழுதப்பட்டது. அதனை அப்படியே உங்களுக்குக் காட்டுகிறேன். முற்றும் படித்த பிறகு நான் ஆச்சரியப்படுவது பிசகானால் 'வேறு என்ன செய்ய வேண்டும்?' என்று உங்களை யோசனை கேட்கலாமென்றிருக்கிறேன்:

*　　　*　　　*

அன்பார்ந்த நண்பனே !

இந்த ஐந்து வருஷங்களாக என்னைச் சந்திக்காமையால் ஒரு கால் என்னை மறந்திருக்கலாம். என்னுடைய அவலக்ஷணம் அவ்வளவு சீக்கிரம் மறப்பதற்குரியதென்று நான் நினைக்கவில்லை. நான் ஊரை விட்டு வந்து விட்ட பின்பு நீயும் பிறரும் என்னைப் பற்றிப் பலவாறாக நினைத்திருக்கலாம். என்னுடைய அவலக்ஷணம் எனக்கே அருவருப்பை உண்டாக்கி இந்த உலகத்திலிருந்தே மறைந்துவிடச் செய்திருக்கும் என்பது போன்ற எண்ணங்கள் எழுவது ஸஹஜந்தான். ஆனால் கடவுள் புண்ணியத்தால் என்னுடைய அவலக்ஷணம் நீடூழிவாழவேண்டுமென்று வாழ்த்துகிறேன்; நீயும் 'ததாஸ்து' என்று சொல். ஏன் தெரியுமா ? நான் இந்த உலகில் வாழ்வதற்கு ஒரு நிலையான காரணம் வேண்டுமென்றால் அஃது என் அவலக்ஷண உருவமேயாம். இதிற் சிறிதேனும் பொய்யில்லை.

என்ன ! நான் சொல்வது ஒன்றும் உனக்கு விளங்கவில்லையல்லவா ? நல்லது. இந்த அவலக்ஷணம் எனக்குப் பெரிய அதிர்ஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது. நீ இதை நம்புதற்கு இடம் இராது. ஒரு சமயம் அவலக்ஷணப்பரிசு ஒன்றை ஏற்படுத்தி உலகிலேயே மிகவும் அவலக்ஷண முள்ளவர்களுக்கு அதனைக் கொடுப்பதாகச் சிலகனவான்கள் முன் வந்தார்களென்றும் அது யாரோ ஒரு ஸ்திரீக்குக் கிடைத்ததென்றும் நீ கேட்டிருக்கலாம். அந்த மாதிரி ஒரு பரிசு ஆண்களுக்குள் அவலக்ஷண சிகாமணிக்குக் கொடுப்பதாக ஓர் இயக்கம் உண்டாயிருக்கலாமென்று நீ நினைக்கலாம். அந்த மாதிரி சமாச்சாரம் ஒன்றுமில்லை.

நானே உழைத்துச் சம்பாதித்து வருகிறேன். கௌரவமான வேலை. என்னுடைய பெயரும் பிரசித்தப்பட்டு வருகிறது. 'ஓகோ ! ஏதாவது பத்திரிகாசிரியர் அல்லது பிரசங்கியாகப் போயிருக்கலாம்' என்று அவசரப்பட்டு எண்ணிவிடாதே. பத்திரிகாசிரியருக்குப் புகழ் கிடைப்பது அவ்வளவு சுலபமல்ல. பிரசங்கியாருக்குக் கிடைக்கும் புகழின் ஒரு பங்கு அவருடைய லக்ஷணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் சொந்தம். ஸ்திரீகள் செய்யும் பிரசங்கத்திற்கும் கதைகளுக்கும் அதிகமான கூட்டம் கூடுவதும் மெடல்கள் விழுவதும் உருவத்திற்கும் பிரஸங்கத்திற்கும் நெருங்கிய ஸம்பந்தமிருப்பதைக் காட்டுகின்றன அல்லவா ? எனவே நான் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தால் என்னுடைய அவலக்ஷணம் குறுக்கே நின்று ஒருவரையும் வர வொட்டாமல் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விடுமே ! என்னுடைய உத்தியோகம் இவைகளுக்கெல்லாம்

மேலானது. என்னுடைய உயர்ந்த அவலக்ஷணமே அந்த உத்தி யோகத்திற்கு உரிய யோக்கியதை.

செப்பிடுவித்தைக்காரன் ஜாலம் செய்வது போல் எழுது வதாக எண்ண வேண்டாம். எனக்கு இப்பொழுது மாதம் ஐந் நூறு ரூபாய் வருகிறது. என் பெயரும் படமும் பத்திரிகைகளில் வருகின்றன. இந்த நிலை எப்படி எனக்கு வந்ததென்று அறிய விரும்புவாய்; சொல்லுகிறேன் கேள்:

நான் ஊரை விட்டுப் புறப்பட்டவுடன் சென்னைக்கு வந்தேன். சென்னையில் என்னுடைய உருவத்தோடு சஞ்சாரம் செய்ய நாணி னேன். கையிலிருந்த பணம் செலவழிந்த பிற்பாடு பசி கொடுக் கும் சாட்டையடியை என்னால் பொறுக்க முடியவில்லை. எங்கே யாவது ஒரு வேலையில் அமரலாமென்றாலோ வேறு உடம்பு வேண் டும். ஏன் சென்னைக்கு வந்தோம் என்று எண்ணினேன். இப்படிப் பசியோடும் ஆலோசனையோடும் ஒரு தெரு வழியே நடந்து கொண் டிருந்தேன். 'பயித்தியக்காரன் கூடப் பத்துப்பேர்' என்றபடி என் னுடைய போட்டிபோட முடியாத அவலக்ஷண ரூபதரிசனம் செய்து கொண்டு பல பேர்கள் என்னைத் தொடர்ந்து வந்தார்கள். 'அழ கைத்தான் பார்ப்பதுண்டு; அவலக்ஷணத்தை ஏன் இவர்கள் பார்க் கிறார்கள்?' என்று நினைத்தேன். எவ்வளவோ இடங்களில் அழகைப் பார்த்திருந்தாலும் என்னைப்போன்ற அவலக்ஷண உருவத்தை எங் கும் பார்த்தே இருக்கமாட்டார்கள்; ஆதலினால் என்னுடைய அவ லக்ஷணம் ஒரு புதுமையாக இருந்தது. அந்தப் பசியிலுங்கூட அவ்வளவு பேர்கள் என்னைப்பார்த்து வியந்தது என் உள்ளுக் குள்ளே கொஞ்சம் கர்வத்தை உண்டாக்கியது.

திடீரென்று ஓர் ஆள் என்னை அழைத்துக்கொண்டு ஒரு பெரிய கட்டிடத்திற்குள் சென்று கனவான் ஒருவரிடம் விட்டான். "நீர் எந்த ஊர்? இங்கே என்ன பண்ணுகிறீர்?" என்றார் அவர்.

"நான் தஞ்சாவூர்ப்பக்கம். பட்டணம் பார்க்க வந்தேன். இப் பொழுது பசியோடு போராடுகிறேன்" என்றேன்.

அவர் என் அவலக்ஷண உருவத்தைப்பார்த்து வியந்து கொண் டிருந்தார். உடனே சிற்றுண்டிகள் கொண்டுவரச் செய்து சாப் பிடச்சொன்னார். சாப்பிட்டேன். அவர் என்னைத் தலைமுதல் அடி வரையில் சாவதானமாக உற்று நோக்கினார். எதற்காக அவர் என்னை உபசரிக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை.

"ஐயா, என்னுடைய பசி தீர இவற்றை அளித்ததற்கு வந் தனம். முன்பின் அறியாத தாங்கள் இவ்வளவு அன்பு கூர்ந்து இந்தக் குரூபி—" என்று சொல்லுகையில் இரண்டு நாட்களாகச்

சென்னையிலலைந்த அலைச்சலும், 'ஏன் இந்த அவலக்ஷண உருவத்தோடு பிறந்தோம்' என்ற எண்ணமும் என்னை அறியாமல் துக்கத்தைக் கிளப்பிவிடவே, ஓவென்றழுது விட்டேன். அவர், "வருத்தப்படவேண்டாம். உமக்கு இனிப் பயமே வேண்டாம். என்னுடனே இரும்" என்று கூறிய குளிர்ந்த வார்த்தைகள் என் நெஞ்சைக் குளிர்வித்தன.

"ஐயா, என்னால் உமக்கு என்ன பிரயோசனம்? எழுதுதல் படித்தல் முதலிய காரியங்களை நான் செய்வேன். ஆனால் உங்கள் நண்பர்கள் என்னைக் கண்டால் அருவருக்கக் கூடுமே."

"உமது உருவந்தான் எனக்குப் பயன்படப்போகிறது. எனது நண்பர்களும் பிறரும் அதைத்தான் போற்றப் போகிறார்கள்"

"போதும் ஐயா! இனியும் ஏளனம் செய்யவேண்டாம். நான் பிறந்த பொழுதே அவமதிப்பும் எனக்கு உடன்பிறந்த உரிமையாகிவிட்டதால் நீங்கள் இப்படிக் கூறுவது புதிதல்ல. அநாவசியமாக உங்கள் நேரத்தை வீணாக்குகிறேன். எனக்கு விடை கொடுங்கள்."

"என்ன? நான் சொல்வதை நீர் நம்பவில்லையா? பாவம்! உலகம் உம்மைப் பயமுறுத்தி விட்டது. இப்பொழுது விஷயத்தை விளக்குகிறேன் கேளும். நான் ஒரு ஸினிமாக் கம்பெனியின் சொந்தக்காரன். எங்கள் கம்பெனியிற் பலவகையான நாடகங்கள் தயாராகின்றன. மிகவும் லக்ஷணமான நடிகர்கள் எங்கள் வசம் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தக்க சம்பளம் கொடுத்து வருகிறோம். இந்தியாவிற் பிரஸித்தி பெற்ற ஸினிமாக்களுள் எங்களுடையது முதன்மையானதாக இருக்கிறது. ஆனாலும், இப்பொழுது எங்கே பார்த்தாலும் போட்டி பலமாக இருக்கிறது. நாம் ஒன்று செய்தால் அதே மாதிரி மற்றொருவன் ஒன்று செய்து போட்டி போடுகிறான். நாங்கள் அமைக்கும் கதை நிகழ்ச்சியின் போக்கும் அந்த அந்த நடிகர்களுக்கேற்றவாறு கொடுக்கும் வேலையும் மேனாட்டாரும் மதிக்கத்தக்க புகழை எங்களுக்குக் கொடுத்திருக்கின்றன. வட நாட்டுக் கம்பெனிகளிற் சில எங்கள் முறையைப் பின் பற்றி வருகின்றன. அழகிய பெண்களும் ஆடவர்களும் தேசம் முழுவதும் நிரம்பியிருக்கிறார்கள். ஆகையால் ஊருக்கு ஒரு ஸினிமாக் கம்பெனி ஆரம்பித்தாலும் நடிகர்கள் கிடைப்பார்கள். உமக்கு நான் சொல்லிக்கொண்டு வருவது விளங்குகிறதா?"

"ஆகா விளங்குகிறது."

"ஆகையால், நாங்கள் எவ்வளவு அழகான நடிகர்களைச் சம்பாதித்தாலும் அவர்களைவிட மேலானவர்கள் மற்றக்கம்பெனிகளுக்

குக் கிடைத்துவிடுகிறார்கள். இந்தக்காரணத்தால், எங்களுடைய புகழுக்கு ஒன்றும் குறைவு இல்லாவிட்டாலும், மேலும் மேலும் புதிய புதிய நாடகங்களமைத்து உலகத்தாருடைய உயர்ந்த மதிப்பைப் பெறமுடியவில்லை. பழைய புகழின் ஒளியில் ஆடி வருகிறோம். எனவே புது முறையொன்றைக் கைக் கொண்டால் அதனால் புதிய கீர்த்தியைச் சம்பாதிக்கலாம் என்று நெடுங்காலம் யோசித்தேன். 'ஸ்திரீ வேஷங்களை ஆண்களுக்கும் ஆண்வேஷத்தைப் பெண்களுக்கும் போட்டு நடிக்கச் செய்யலாமோ?' என்ற பயித்தியக்கார எண்ணம் போன்ற எவ்வளவோ எண்ணங்களை நினைத்ததுண்டு. அவையெல்லாம் எங்கள் கம்பெனிக்குப் பென்ஷன் கொடுத்து மூலையில் உட்கார்த்தி விடுவதற்கு ஏற்றவையாக இருந்தன. 'லக்ஷணமானவர்களைக் கதாபாத்திரங்களாக அமைப்பதில் தானே போட்டி? ஏன் அவலக்ஷணமானவர்களைக் கதையில் முக்கியமான நடிகர்களாக வைத்துச் சில நாடகங்கள் நடத்தக் கூடாது?' என்ற ஒரு நல்ல எண்ணம் தோற்றியது. உடனே அதற்காக 40 வயதுள்ள ஒருவரைத் தேடிப்பிடித்து அவருக்கு நடிக்கும் முறைகளைக் கற்றுக் கொடுத்து மாதிரிக்காக ஒரு கதையைத் தயார் செய்தோம். எதிர் பார்த்ததற்கு அதிகமாக எங்களுக்கு அதிக மதிப்பை அந்நாடகம் உண்டாக்கியது. எங்களுடைய துரதிர்ஷ்டம்; அந்தப் பிரதம நடிகர் சென்ற மாதந்தான் திடீரென்று இறந்து விட்டார். இனி என்ன செய்வதென்று ஏங்கிக் கொண்டிருந்தோம். உம்மைக்கண்டவுடன் எனக்குப் போன உயிர் வந்தது போலிருக்கிறது. ஸினிமாவில் நடிப்பது எவ்வளவோ ஸந்தோஷமான செயல்'' என்று மேலேயும் சொல்ல ஆரம்பித்தார்.

"அதைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டாம். இந்த உடம்பை எப்படி வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். உங்கள் உத்தரவிற்கு இரண்டில்லை'' என்று அவர் காலடியில் வீழ்ந்தேன்.

* * *

நான் விரைவாக நடிக்கும் முறையைக் கற்றுக்கொள்வதும் உள்ளக்கருத்தை நன்றாகப் பாவனை செய்வதும் ஸினிமாக் கம்பெனிக்காரருக்குத் திருப்தியை விளைத்தன. அடுத்த மாதம் ஒரு கதையில் நான் பாதிக் கதாநாயகனாக நடித்தேன். ஒரு மந்திரியும் அரசனும் இளமையில் நண்பர்களாக இருந்தபோது ஒருவருக்குப் பெண்ணும் ஒருவருக்குப் பிள்ளையும் பிறந்தால் இருவருக்கும் கல்யாணம் செய்வதென்று சத்தியம் செய்து கொண்டார்கள். மந்திரிக்கு ஒரு பிள்ளை பிறந்தான். ஆனால் அவன் மிக்க குரூபியாக இருந்தான். அரசனுக்கு ஒரு குமாரி பிறந்தாள். அவள் நல்ல அழகி.

மந்திரி குமாரன் குரூபியாக இருப்பதைக்கண்டு அரசன் தன் சத்தியத்தை நிறைவேற்றாமல் இருந்தான். மந்திரி குமாரனுக்கும் அரசகுமாரிக்கும் அந்தச் சத்தியத்தைப்பற்றிய வரலாறு தெரிந்தது. அரசகுமாரி வாக்குப் பிசகக்கூடாதென்றும் தனக்குக் குரூபி கணவனாக ஆனாலும் அரசனுக்கு அசத்தியவானென்னும் இழிவு வரக்கூடாதென்றும் எண்ணினாள். மந்திரி குமாரன் எப்படியாவது அரசகுமாரியை மணப்பதென்று உறுதி கொண்டான். பல வீரச் செயல்கள் செய்து அவளைக் கவர்ந்து சென்று மணந்து கொள்கிறான். ஆனாலும் அவளை மனைவியாக நடத்தாமல் மரியாதையாக இருந்து வருகிறான். அவள் துக்கப்படுகிறாள். ஒரு முனிவருடைய அனுக்கிரஹத்தால் மந்திரி குமாரன் அழகிய உருவமடைகிறான். ஆனாலும் வேண்டியபொழுது பழைய குரூபத்தைக்கொள்ளும் சக்தியையும் பெறுகிறான். தன் அழகிய வடிவத்தை மனைவிக்குக் காட்டாமல் இருந்து வருகிறான். ஒருநாள் அவள் அதனைக் கண்டு விடுகிறாள். அப்புறம் அவன் பழைய உருவத்தைக் கொள்வதேயில்லை. இது தான் கதை.

இந்தக் கதையில் நான் யாராக இருந்திருப்பேன் என்பதைச் சொல்லவேண்டாம். ஆசை யென்பது இது தான் முடியும், இது முடியாதென்று எண்ணுகிறதே கிடையாது. மந்திரி குமாரன் அழகிய உருவத்தைப் பெற்றதைப் படம் பிடிக்கும்போது எனக்குப் பதிலாக வேறொரு நடிகர் வந்தார். நானே அப்படி மாறும் சக்தி உண்மையாகவே வந்துவிடக் கூடாதா என்று என் பேதை மனம் நினைந்து சில நிமிஷம் ஏங்கியது.

அந்த நாடகம், கம்பெனிக்காரர் நம்பினபடி கம்பெனிக்கு மிகச்சிறந்த பெயரை உண்டாக்கிற்று. அதற்கு முன் அமைக்கப்பட்டவற்றிற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம் ஒன்று தான். அது நான் பிரதான நடிகனாக இருந்தமையே. அந்த நாடகம் சென்னையில் பதினைந்து வாரங்களும் பம்பாயில் இருபது வாரங்களும் இன்னும் எங்கெங்கோ பலவாரங்களும் காண்பிக்கப்பட்டன. மேனாட்டுக்குக்கூடப் போய் வந்தது.

நான் நடிப்பது மிகவும் திறமையுள்ளவர்களாலும் செய்யமுடியாத சிறப்புடையதென்று சொல்லிக்கொள்கிறார்கள். எல்லாவற்றையும் விட என் அவலக்ஷணத்துடன் போட்டிபோடுபவர் இந்த உலகத்தில் எங்கும் இல்லையென்பது எங்கள் கம்பெனியின் சிறப்புக்கு முக்கியக்காரணம்.

மந்திரி மகனாக நடித்த கதைக்கப்புறம் பூதமாகவும், ராக்ஷஸனாகவும், பிசாசாகவும், வேதாளமாகவும் நான் நடித்த கதைகளுக்கு

அளவேயில்லை. கதாநாயகனாக நடித்த கதைகள் பல. என்னுடைய பெயர் ஜே. ஆர். மன் என்று மாறிவிட்டது. மாஸ்டர் ஜே. ஆர். மன்னைப்பற்றி நாள் தவறாமல் பத்திரிகைகள் எழுதுகின்றன. அவனுக்காகப் புதிய கதையை ஜோடிக்க இரண்டு கதாசிரியர்கள் பேனாவும் கையுமாக இருக்கிறார்கள். என்னை இந்தத்துறையில் புகுத்திய அந்த மகாப்பிரபு இந்தக் கம்பெனியின் லாபத்தில் ஐந்திலொரு பங்கை எனக்குக் கொடுக்கிறார். எனக்குத் தனிபங்களா; வேலையாள் முதலியவர்கள் உண்டு.

இந்தக் கூத்தில் ஒன்று கேட்டாயா? என் உருவத்தைக் காதலிக்கும் பெண் இருக்கப் போவதில்லை என்பது நிச்சயம். ஆனால் இதுவரைக்கும் ஒரு டஜனுக்கு மேல் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் பெண்கள் வந்தார்கள். வெறும் பணத்திற்கு வேண்டுமானால் அவர்களைக் கல்யாணம் செய்யலாமே யொழிய என்னுடைய லக்ஷணத்திற்கு அவர்கள் ஜோடியல்லவென்பது எனக்குத் தெரியும். நான் பிரமசாரியாகவே காலங்கழிக்க உத்தேசித்து விட்டேன். நான் சம்பாதிக்கும் பணமெல்லாம் என் அவலக்ஷணத்தால் வந்ததல்லவா? அதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! ஒரு பெருந்தொகையைச் சேர்த்து அவலக்ஷணமான ஸ்திரீ புருஷர்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவுதற்குரிய ஒரு ஸ்தாபனம் செய்யலாமென்பது என் உத்தேசம். அதற்குரிய யோசனை உனக்கு ஏதாவது தெரிந்தால் எழுதவேண்டும். என்னுடைய பல வேஷங்களின் படங்களைத் தனித்தபாலில் அனுப்பியிருக்கிறேன்.....

ஒரு கோடீசுவரர்

ஆர். குருஸ்வாமி ரெட்டியார்

"புதையலெடுத்த தனம்போலே"

கோடீசுவரரொருவர் பல கோடிகளுடையவரா யிருந்தார். அவரிருந்த நாட்டில் கோடீசுவரர்கள் பலர். அதைக் குபேர நகரத் திற் கொப்பிட நினைப்பது சாதாரணம். கோடிகள் எத்தனையோ! கோடிகளும் ஒன்று, இரண்டு, பத்து, நூறு...இம்மாதிரியாகப் பற் பலகோடிகள் பழக்கத்தில் வழங்கிவந்தன.

அவர் ஆலோசனையில் கெட்டிக்காரர். பலவாறாக எண்ணத் தொடங்கினர்:

மானிடர் வாழ்வது அதிகமானால் நூறு வருஷத்திற்கு—நூறு வருஷத்திற்கு அதிகமில்லை. கோடி வருஷத்திற்கில்லை. கோடி வருஷங்களுக்கிங்கிருந்து வாழ்வதில்லையே! சகஸ்ர வருடமில்லை; சதமுமில்லை. சதமல்லவென்று எண்ணினர்.

*　　　*　　　*

அவர் தம்மிடத்துள்ள கோடிகளை எண்ணினர்; கணக்கிட்டார். அவர் வாழ்வையும், வயதையும், மிகுதியுள்ள வாழ்நாட்களையும் நன்றாகக் கணக்கிட்டார். கணக்கில் வல்லவர், தீரர், கெட்டிக்காரர். நினைத்தார்! நெஞ்சு குமுறினர்!

*　　　*　　　*

தமக்கிருந்த பல கோடிகளையும் மிகுதியுள்ள வாழ்நாட்களையும் கணக்கிட்டு, ஒப்பிட்டு, வகுத்து, ஆண்டாண்டாகப் பிரித்து, நாட் களாகவும், மாதங்களாகவும் ஆண்டுகளாகவும் ஆண்டுத்தொகுதிக ளாகவும் ஈவு செய்து வைத்தார்.

*　　　*　　　*

அவர்—அக்கோடீசுவரர்—மாடமாளிகை கூடகோபுரங்களடங் கிய பற்பல கெட்டிக் கட்டடங்கள் கட்டினர். கட்டடங்களோவ் வொன்றிற்கும், லக்ஷியமின்றி லக்ஷலக்ஷமாகக் கோடிகளைச் செலவு செய்தார். கெட்டிக் கட்டடங்கள்-அவ்வளவு பணத்திற்கு எவ் வளவு கெட்டியாகும்!

*　　　*　　　*

ஒவ்வொரு மாளிகையையும் அரண்மனையையும் மிக்க கெட்டியாகக் கட்டுவிப்பார். கட்டுவித்து—அந்தோ !—ஒவ்வொரு கெட்டிக் கட்டடத்தையும், மாளிகையையும், கூடகோபுரங்களமைந்த அரண்மனையையும் கட்டியவுடன் வெடிமருந்திட்டு, தகர்ப்பித்து, புகை புகையாகப் போகச் செய்வார். முடிவிலே புகையுமின்றி அழிப்பர். கட்டிய கட்டடங்களொவ்வொன்றிலும்—யாரும் புகுமுன்னே—புகுந்து, இருந்து, வசித்து, உபயோகிக்குமுன்னமேயே, கட்டியவுடனேயே, ஒவ்வொன்றையும் அழித்து விடுவார். . . . தம் கோடிகளைச் செலவு செய்து கட்டடங்கள் உண்டாக்குவதும், அழிப்பதும், உண்டாக்குவதும் அழிப்பதுமாகச் செய்து வந்தார்.

* * *

கணக்கில் கெட்டிக்காரரன்றோ ! தாம் இவ்வுலகில் வாழ்ந்த நாட்கள் போக, தீர்க்காயுசு உடையவராயிருந்தால் தாம் இருக்கக் கூடிய நாட்களையும் ஆண்டுகளையும் தீரக் கணக்கிட்டிருந்தார்; ஈவு செய்து பார்த்திருந்தார். கட்டடச் செலவுகளைமட்டும் கணக்கிட்டதாகத் தோன்றவில்லை. காலம் போகப் போக மேன்மேலுஞ் செலவிட்டுக் கட்டிக் கட்டி, உடனுடனே அழித்துப் புகைத்தார்.

அவருக்குக் கல்யாணமில்லை ! ஆகவே மனைவிகளுமில்லை ! பந்துக்களுமில்லை ! அத்தனிகர் தனியே ஒருவராயிருந்துவந்தார் !

* * *

ஜனங்களுக்கு என்ன எண்ணுவதென்று புலப்படவில்லை. அளவுகடந்து ஆச்சரியப்பட்டார்கள். இச்செய்கையைக் குறித்து, ஆச்சரிய பரவசராகி எங்கும் பேசினர். இவ்விந்தைச் செய்கையின் செய்தி நாடெங்கும் பரவியது. யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்ன செய்வது ? ராஜாங்கத்தினர்களும் அவ்விதமே பேசினார்கள். செய்வ தொன்றுமில்லை ! பெருங் கோடீசுவரர் பொருட் குவியலை அவ்விதம் கட்டடங்களாகக் கட்டிக் கட்டிப் புகைத்தார் ! யார் என்ன செய்வது ? இவ்விதம் அவர் செய்வதன் கருத்தென்ன ? நோக்கமென்ன? எண்ணமென்ன? காரணமென்ன ? அந்தரங்கமென்ன ? என்று எங்கும் பலவிதமாகப் பேசினார்கள். சிலர் அவர் தலையெழுத்தென்றார்.

* * *

இவ்விதம் பல ஆண்டுகள் சென்றன. அவர் காலமுடிந்தது; பல கோடி திரவியங்களை ஆண்டுவந்த அவரும் மாண்டு மடிந்தார்.

அவர் ‘உயில்’ ஒன்று எழுதிவைத்திருந்ததாக வெளியாயிற்று. முன்பே ஆச்சரியபரவசராகியிருந்த ஜனங்களெல்லோரும், “அவர்

உயிலில் என்ன எழுதிவைத்திருப்பார்'' என்று அறிய ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஒருநாள் கைப்பெட்டியொன்றில் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த அவர் 'உயில்' கண்டெடுக்கப்பட்டது. அதிலென்ன விருக்குமென்று தெரிந்துகொள்ள, அதை எடுத்து வாசித்துப்பார்க்கும் சமயத்தை எதிர்பார்த்து வந்திருந்த ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்தார்கள். எதிர் பார்த்தெதிர் பார்த்து அதைக்கேட்கும் ஆசையுள்ளவர்கள் மேன்மேலும் வந்து பெருகி நிறைந்தார்கள்.

* * *

'உயிலை' எடுத்து வாசித்தார்கள்.

அதிமனோகரமான மாளிகைகள், அரண்மனைகள், பற்பல கட்டி வாழ்வில்லாமல் அழித்த கோடீசுவரரின் உயிலன்றோ? அவர் அந்த 'உயிலில்' தலையங்கமடங்க வரைந்திருந்தார்! வரைந்திருந்தது இது தான்:—

"முடிமன்னர்களும் முடிவிலடங்குவது கோடிகளிலே! முற்புகுவது மவர் புகைகளிலே! புதையல்களிலே!''.

ஜனங்களெல்லாம் மூச்சுப்பேச்சில்லாமல் கேட்டார்கள்! மெய் மறந்து அசைவற்று நின்றார்கள்.

கூளிப்பேயும் கட்டுச்சோறும்*

சி. வீரபாகு பிள்ளை

ஓர் ஏழை வேளாளன்—ஒருநாள் விடிவெள்ளி உதித்திருக்கிறது—தன் வயலை உழுவதற்குப் போனான். உணவுக்குக் கொஞ்சம் கட்டுச்சோறு இருந்தது. அதை, வரப்பிலே வளர்ந்திருந்த ஒரு செடிமறைவில் வைத்துவிட்டு உழுதான். பதினைந்து அல்லது பதினாறு நாழிகையிருக்கும். இவனுக்கு நல்லபசி; மாடுகளும் உழுது களைத்துப்போயிருந்தன. ஆகவே அவைகளை அவிழ்த்துச் சமீபத்திலுள்ள புல்லாந்தரிசில் மேய விட்டுவிட்டுக் கட்டுச்சோற்றை எடுப்பதற்குப் போனான்.

அவன் செடியை ஒதுக்கிக்கொண்டு சோற்று மூட்டையைப் பார்த்தான். காணவில்லை. மாடு தப்பினவனுக்குச் செடியெல்லாம் கண்ணல்லவா? இலைப்புரை கிளைத்தான்; பயனில்லை "என்ன இது? ஓர் ஆள்கூட வரவில்லையே! சோறு எப்படிப் போயிற்று? உம்; யாரோ ஒருவன் நமக்குத் தெரியாமல் வந்து இதை எடுத்துச் சென்றிருக்க வேண்டும்'' என்றான்.

இங்கு நடந்தது வேறு. ஒரு கூளிப்பேய் அவன் சோற்றை எடுத்துத் தின்றுவிட்டது. இப்பொழுதும் அது இங்குத்தான் இருக்கிறது. 'வேளாளன் தன் சோற்றைக் காணாமல் திட்டமாட்டானா? அதனால் அவனுக்குப் பாவம் சம்பவியாதா? நம் காரியம் வெற்றி பெறுமே' என்று அது ஆகாயக்கோட்டை கட்டுகிறது.

வேளாளன், "இனி நாம் என்ன செய்ய முடியும்? போனால் போகிறது. இப்பொழுது சாப்பிடவில்லையானால் செத்தா போய் விடுவோம்? எவனோ பசித்தவன்தான் எடுத்திருக்கவேண்டும். கடவுளே! என் கட்டுச்சோறு அவனுக்காவது பசிக்குதவட்டும்; அந்தப் புண்ணியம் எனக்குக் கிடைக்குமல்லவா?'' என்றான்.

நேரே கிணற்றுக்குப் போனான். கைகால் சுத்தி பண்ணிக் கடவுளைத் தொழுது வயிறு நிறைய நீரையள்ளி உண்டான். கொஞ்சம் பசியமர்ந்தது. தரிசில் புல் மேய்ந்துகொண்டிருந்த மாடுகளைக் கொண்டுவந்து ஏரில் பூட்டித் திரும்பவும் உழ ஆரம்பித்தான்.

---

* இது ருஷ்ய ஆசிரியன் தோல்ஸ்தோய் எழுதிய "தீ இம்ப் அண் தீ கிரஸ்ட்'' என்ற சிறுகதையைத் தழுவி எழுதியது.

கூளிப்பேய்க்கு இது இடி விழுந்ததுபோலாயிற்று. தன்னுடைய முயற்சி வீணாய்ப் போய்விட்டதற்கு அது அடைந்த வருத்தம் கொஞ்சமல்ல. மிகுந்த கவலையோடு இதைத் தெரிவிப்பதற்குத் தன் யஜமானன் பேயரசு வசிக்கும் அரண்மனைக்குப் போயிற்று. பேயரசு இதைக் கண்டதும், "குட்டி! வா. காயா, பழமா?" என்றது. கூளிப்பேய் தரையைப் பார்த்துக்கொண்டு நடந்ததை ஒருவிதம் சொல்லி முடித்தது.

இதைக் கேட்டதும் பேயரசுக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. கண்கள் சிவந்தன. கொள்ளி கொண்டிரண்டே முழையுட்புகக், குன்று தோன்றுவபோல விழிக்கும் அதற்குக் கோபமும் வந்துவிட்டால் எப்படி இருக்கும் என்று பாருங்கள். கூளிப்பேயைப் பார்த்து, "அந்த மனிதன் உன்னை ஜயித்துவிட்டான் என்றால் அது யாருடைய தவறு? கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்? நீ இன்னம் உன் வேலையைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. உலகத்தாருக்கு ஆணியாக இருக்கும் வேளாளரும், அவர்கள் மனைவி மக்களும் நம் வசப்பட்டால்தான் நம்முடைய பாவமாகிற சாம்ராஜ்யம் நிலைநிற்கும். ஆகையால் இந்த விஷயத்தை இப்படி விட்டுவிடுவது சரியல்ல. 'முயற்சி திருவினையாக்கும்' போ. எப்படியாவது முயன்று சரிப்படுத்து. இன்னும் ஒன்றிரண்டல்ல; மூன்று வருஷம் வாயிதா. அதற்குள் அந்த வேளாளனைக் கெடுத்துவிட வேண்டும். இல்லையானால் என்னை உனக்குத் தெரியுமே! தண்ணீருக்குள் முக்கி உன்னை யமலோகத்துக்கு அனுப்பி விடுவேன்; ஜாக்கிரதை!" என்றது.

கூளிப்பேய்க்கு மிகுந்த பயம். உடல்முழுதும் வியர்த்துவிட்டது. ஓரே ஓட்டத்தில் நாட்டுக்கு வந்தது. ஆள் வழக்கற்ற ஓர் இடம். அந்த இடத்திலே இருந்து இடையிடையே தலையைச் சொரிந்துகொண்டு யோசித்துக் கடைசியில் ஒரு நல்ல யுக்தி கண்டுபிடித்தது.

உடனே அது ஒரு மனித உருவம் எடுத்தது. பழைய வேளாளனிடத்தில் போய், "ஐயா! நீங்கள் ஏவிய வேலையைச் செய்கிறேன். எனக்கு வேளைதோறும் சோறு போட்டாற் போதும்" என்றது.

உண்ணச் சோறு கொடுப்பதற்கு வேளாளன் கொஞ்சமும் சலிக்கிறவனல்ல. தாராளம் இரக்கம் என்பன அவனது இயற்கைக் குணங்கள். ஆனால் அவன் பரம ஏழையே என்பீர்கள். சங்கு சுட்டாலும் வெண்மை தரும். அடுத்தபடி கூலியும் அதிகமில்லை. சம்மதித்து விட்டான்.

வேலைக்கு வந்த முதல் வருஷம் அது வேளாளனிடம் நல்ல நீரூற்றுள்ள பள்ளத்தில் விதையை விதைக்கும்படி சொல்லிற்று. அவனுக்கு முதலில் நம்பிக்கை இல்லை. ஆனாலும்,

> "உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
> கச்சாணி அன்னா ருடைத்து"

என்பது வேதவாக்காயிற்றே. "பார்க்கலாம்" என்று இசைந்து தண்ணீர்த்தட்டில்லாத பள்ளத்திலே விதைத்தான். அந்த வருஷம் மழையே பூச்சியம். கடுங்கோடை. மற்ற வேளாளர்களது பயிரெல்லாம் நீரில்லாமல் வாடிக் கருகிப் போயின. அவர்களுக்கு விதை முதலுக்கே மோசம் வந்துவிட்டது. அநேகருக்கு அது தானும் இல்லை. மறுபோகம் பயிரிடுவதற்கு உழ ஆரம்பித்து விட்டார்கள். அந்த வேளாளனது பயிரோ ஓர் ஆள் உயரம் செழிப்பாக வளர்ந்திருந்தது. தன் நிறைந்த கதிர்களுக்குக் கண் திருஷ்டி வந்துவிடப் போகிறதென்று அது வளைந்து தரையோடு தரையாய்ப் படுத்து விட்டது. வேளாளனுக்கு மட்டுக்கு மிஞ்சின சந்தோஷம். தன் பயிரைப் பார்த்துப்பார்த்து அவன் பூரித்துவிட்டான். "வேலைக்காரன், சபாஷ் சபாஷ்" என்று—அவனுக்கு முதுகுவலி எடுத்து விட்டது—ஓயாமல் தட்டிக் கொடுத்தான். அந்த வருஷம் அவனுக்கு நல்ல மிச்சம். விதைக்கும் பன்னிரண்டு மாசம் உணவுக்கும் போக மிஞ்சிய தானியம் பரணி பரணியாக இருந்தது.

மறுவருஷம் அந்தக் கூளிப்பேய் அவனைப் பார்த்து, "ஐயா! இந்த வருஷம் மேட்டில் உங்கள் விதையை விதையுங்கள்" என்றது. மறுபேச்சில்லை. அப்படியே செய்தான். அந்த வருஷம் முழுவதும் நல்ல மழை. பெரிய பெரிய கம்மாய்கள் உடைந்து வயல்களெல்லாம் வெள்ளக்காடு. மற்ற வேளாளர்களது பயிர்கள் ஒன்று பாக்கியில்லாமல் அழுகிப்போயின. அவன் பயிரோ மேட்டிலிருந்ததால் பச்சைப் பசேலென்று தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைந்தது. சென்ற வருஷத்திலும் இந்த வருஷம் முழுமேனி.

தானியத்தைப் போடுவதற்குத் தன் வீடு காணாமல் அயல்வீடும் அவன் வாடகைக்கு வாங்கும்படியாயிற்று. இவ்வளவு ஏராளமான தானியத்தை என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

அப்பொழுது பேய் அவனைப் பார்த்து, "ஐயா! தானியத்திலிருந்து ருசியான ஒரு ரசம் இறக்கலாம். அதன் சுவைக்கும் குணத்துக்கும் அமுதங்கூடப் பின்னடைந்து விடும்" என்றது. வேளாளனுக்கோ வேலைக்காரனிடத்தில் அளவு கடந்த விசுவாசம். ஆக்ஷேபணை ஏது? பேய், விதமும் பக்குவமும் சொல்லத் தானியத்தி

விருந்து* ரசம்—அதன் பெயர்தான் கள்ளு—இறக்கினன். தானுங் குடித்தான் ; தன் மனைவிக்கும் கொடுத்தான். "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?" என்கிறார்களே ! அக்காலம் இப்பொழுதே அவனுக்கு வந்துவிட்டது,

பேய்க்குக் காரியம் அனுகூலம். அது நேரே பேயரசின் சன்னிதானத்துக்குப்போய்த் தன் வெற்றிக்குக் கைகால்களெல்லாம் அமைத்து உருப்படுத்தி விஸ்தாரமாய்ப் பேசிற்று. அது கேட்டுப் பேயரசு, "உன் வாய்வீச்சில் நான் மகிழ்ந்துவிட முடியாது. நேரிலே பார்க்கவேண்டும். வா, போவோம்" என்றது.

உடனே இரண்டும் புறப்பட்டு வேளாளன் வீட்டுக்கு வந்து சேர்ந்தன. அங்கே விருந்து நேரம். விசேஷச் செல்வம், தொந்தி, செல்வாக்குகள் உள்ளவர்கள் தாம் விருந்தாளிகள். ஆதிகாலத்து வீடாயிருந்தாலும் முன்பத்திமட்டும் நாலைந்து ஜன்னல்கள் விட்டு வெளிச்சம் சுத்த ஆகாயம் உள்ளதாயிருந்தது. ஜன்னல்களின் கீழ்ப் பாதிக்குப் பட்டுத்திரை. திரையின் இருவிளிம்புகளிலும் பொற்சரிகையால் செருந்திப்பூ நெய்யப்பட்டிருந்தது. வாசலை யடுத்துள்ள திரைச்சீலையிலே திருமருதந்துறைக்காவும் இருகாமத்திணையேரியும் அழகாக எழுதியிருந்தன. உள்ளே தரைமுழுதும் ரத்தினக்கம்பளம். சாய்வதற்கு மகுமல் திண்டு. கம்பளத்தின் மத்தியில் கள்ளுக்குடம். வீட்டுக்காரி கள்ளைக் கிண்ணத்தில் விட்டு விருந்தினர்கள் கையிலிருக்கும் பளிக்குத் தமிளிரில் ஊற்றுகிறாள். அப்பொழுது கீழேகிடந்த கவறாடும் பலகை காலை இடறிவிட்டது. கையிலிருந்த கள்ளுக் கிண்ணத்தையும் போட்டுத் தானும் விழுந்து விடுகிறாள்.

வேளாளன் அவளைப்பார்த்து, "என்ன அஜாக்கிரதை? மூதேவி, கண் அவிந்தாபோயிற்று? ஒரு தமிளர் கள்ளென்றால் விலை யென்ன ? பாடென்ன? சரபோஜி மகாராஜா வீட்டுக் குழந்தை ! வாய்க்கால் தண்ணீரா தரையில் கொட்டி மெழுகுவதற்கு?" என்று வாயில் வந்தபடி—சொல்லக் கூசும் அசப்பிய மொழிகளைச் சொல்லித்—திட்டுகிறான்.

அப்பொழுது திரைமறைவிலிருந்த கூளிப்பேய் தன் அருகிலிருந்த பேயரசை முழங்கையால் இடித்து, "இந்த ஆசாமிதான்

---

* நெல்லிலிருந்து இறக்குங் கள்ளுக்கு அக்காலத்தில் தோப்பி என்று பேர். இதனை 'இல்லடு கள்ளின் தோப்பி பருகி' என்ற பெரும்பாணாற்றுப் படையடிக்கு நச்சினார்க்கினியர் 'தமது இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய நெல்லாற் சமைத்த கள்ளை உண்டு' என்று கூறுவதாலறியலாம்.

முன் தன் பசிக்கில்லாமல் சோற்றை இழந்தபோது எரிச்சல்படா திருந்தவன்'' என்றது.

திட்டு இன்னம் ஓயவில்லை. மனைவியை வேண்டாமென்று தானே எழுந்து வந்து ஓர் வளையம் பரிமாறுகிறான். அந்நேரத்தில் ஓர் ஏழை—அவனும் வேளாளன்தான்—நெடுநேரம் வேலைசெய்து களைத்துப்போய் அங்கு வந்து சேர்ந்தான். இங்கே அவனை யார் லக்ஷியம் பண்ணப் போகிறார்? ஆனாலும் ஒரு கும்பிடு போட்டு விட்டு—அழையாமல் வந்தவனல்லவா?—ஒதுங்கி ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். எல்லாரும் குடிக்கிறார்கள். 'எனக்கும் கொஞ்சம் கிடையாதா? அலுப்பு நீங்குமே!' என்று நினைத்தான். வழி இல்லை. அவனும் இருந்திருந்து பார்த்தான். நாக்கில் நீர் ஊறு கிறது. கடைசியில் வாய்திறந்தே கேட்டுவிட்டான். அதற்கு, விருந்து செய்கிறானே வேளாளன் கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமல், "கண்டவர்களுக்கெல்லாம் வழங்குவதற்கு இது சத்திரமல்ல; சாப்பாடும் அல்ல; வீடு விலையேறிய கள்ளு. போகலாம்'' என்றான்.

அதைக்கேட்டதும் பேயரசுக்கு அளவுகடந்த சந்தோஷம். அது குட்டிப்பேயைப் பார்த்து, "அப்பா! நீ என்க்கு ஒரு வலது கை'' என்றது. அதற்கு அது, "கொஞ்சம் பொறுங்கள்; இன்னம் இருக்கிறதே கூத்து'' என்றது.

விருந்துக்கு வந்தவர்கள் ஒரு தமிளர் கள்ளையும் காலிபண்ணி விட்டார்கள். விருந்து செய்கிறவனும் ஒரு தமிளர் ஊற்றிவிட்டு அவர்களோடு வந்து உட்கார்ந்தான். தமாஷ், வேடிக்கை, கேலி, சிரிப்பு; அதற்குப்பின் ஒருவரை ஒருவர் ஏமாற்றும் மொழிகள், நெஞ்சில் துளி ஈரமில்லாமல் போனாலும் விசேஷப் பிரிய வசனங்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

பேயரசுக்கு இவை கர்ணாமிருதமாக விருந்தன. 'அச்சா அச்சா' என்று சொல்லித் தன் குட்டிப்பேயின் கையைக் குலுக்கிற்று.

"பார்! இந்தக்குடி இப்படி இவர்களைக் குள்ளநரிகளாக்கிவிடு மானால், இவர்கள் ஒருவரையொருவர் வஞ்சித்து நம்முடைய வலை யில் கட்டாயம் சிக்கிக்கொள்ளப் போகிறார்'' என்றது.

"இன்னம் பொறுங்கள். அடுத்த தமிளர் வரட்டும். இப் பொழுது குள்ள நரிகளாகத்தானே இருக்கிறார்கள். இனி, பயங்கர, மான ஓனாய்களாகிவிடுவார்கள்'' என்றது குட்டிப்பேய்.

விருந்தினர்களுக்கு இரண்டாம் முறை தமிளர்நிறையக் கள் வார்க்கப்பட்டது. குடித்து முடிந்ததும் பேச்சுக்கள் மாறிவிட்டன. ஒருவருக்கொருவர் பச்சை பச்சையாகப் பேச ஆரம்பித்து விட்டார்

கள். மனிதன் காது கொடுத்துக் கேட்கமுடியாத பேச்சு முற்றிக் கலகம் தொடங்கிற்று. ஒருவரை ஒருவர் அடித்தார்கள், மிதித் தார்கள், கடித்தார்கள். விருந்து செய்தவனுக்கும் போதுமானபடி அடிகிடைத்தது.

அரசப்பேய்க்கு இந்தக் கலகம் நேத்திரானந்தம். அது மகிழ்ச்சி யால் பூரித்துவிட்டது. குட்டிப்பேயைப் பார்த்து, "இதுதான் முதல் தரமான வேலை" என்றது.

அதற்குச் சின்னப்பேய், "மகாராஜா! சற்றுச் சாந்தமாக இருக்க வேண்டும். அவர்கள், கூட ஒரு கிண்ணம் கள்ளுக் குடிக்கட்டும். மூன்றும் தமிளர் முடிந்துவிட்டதா? போதும். இந்த ஓனாய்கள் பன்றி களாகிவிடும்" என்றது.

விருந்தினர்கள் மூன்றாவது முறையும் ஒவ்வொரு தமிளர் கள் ளுக் குடித்தார்கள். வெறி மட்டுக்கு மிஞ்சிவிட்டது. ஒவ்வொரு வரும் தாமாகவே என்னென்னவோ புலம்புகிறார்கள். கள்ளுச்சாமி உள்ளே எழுந்தருளி யிருக்கிறதல்லவா? தில்லானாக்கள், ஜாவளிகள், கஜல்கள் உதயமாகிவிட்டன. அப்பா கள்ளுக்கொடிது! அப்படி இல்லாமலா குற்றாலத் தலபுராணம்,

"வீறாய பவக்கடலின் வீழ்ந்தவரைத் தவவாம்பில்
ஏறாம லழுத்துசுழி யறிவுவெளிக் கிருட்படலம்
தூறாய கொடுநரகி லழுத்துவிடுந் தோட்டிகதி
பேறான வழியடைக்குங் கதவமே பெருநறவூண்"

என்கிறது?

கூட்டம் புறப்பட்டுவிட்டது. சிலர் தனித்தனி போனார்கள். சிலர் இருவர் இருவராய்ப் போனார்கள். சிலர் மூவராய்க் கூடிச் சென்றார்கள். அவர்கள் தள்ளாடித்தள்ளாடி—வீட்டுக்குப் போவ தெங்கே?—வீதியிலேயே உருண்டுவிட்டார்கள். விருந்து செய் தானே பூரணயோக்கியன், 'சனியன்களைத் தள்ளிவிடவேண்டுமே' என்று வெளியிலேபோய் பிரஞ்ஞையற்று முற்றத்தில் விழுந்து விட் டான். மேலெல்லாம் சகதி. சவந்தான்; உயிர்மட்டும் இருக்கிறது.

இந்த நிகழ்ச்சி அரசப்பேயை ஆனந்த சாகரத்தில் முழுக்கி விட்டது.

அது தன் சிறுபேயைப் பார்த்து, "பேஷ், மகனே! நீ கண்டு பிடித்த கள்ளு இணையில்லாதது. எனக்குக் கண்ணான சிஷ்யன் நீ தான். நீ முன் செய்த பிழையை முழுதும் மன்னித்துவிட்டேன். என்ன, நீ இந்தக் கள்ளை இறக்கும்போது முதலில் குள்ள நரியின் ரத்தத்தைக் கலந்தாயா? அதனால்தான் அவர்கள் ஆரம்பத்தில் குள்ள நரிகளாகவிருந்தார்கள். பின்னால் நீ ஓனாய் ரத்தத்தைக் கலந்திருக்க

வேண்டும். அவர்கள் அசல் ஓனாய்களாகிவிட்டார்கள். கடைசியில், நீ பன்றி ரத்தத்தைச் சேர்த்து வடித்திருக்கிறாய். இந்த மனிதப் பன்றிகள் தெருவில் உருளுகின்றன'' என்றது.

அதற்குச் சின்னப்பேய், ''அப்படி ஒன்றும் இல்லை. நான் செய்ததெல்லாம் இதுதான்: வேளாளனுக்கு வேண்டிய தானியம் எவ்வளவோ, அதற்கு அதிகம் கிடைக்கும்படி செய்தேன். பண்படாத மனிதனிடத்தில் மிருகசுபாவம் இயல்பாகவே இருக்கிறது. வருவாய் வயிற்றைக் கழுவத்தான் காணுமென்றிருந்தால் அது இருக்குமிடந் தெரியாமலிருக்கும். அதனால்தான் வேளாளன் முன் தன் சோற்றை இழந்தபோது சாந்தமூர்த்தியாகவிருந்தான். இப்பொழுதோ இவனுக்கு வருவாய் அதிகம்; நிலை மாறிவிட்டது. சுகங்களில் மனத்தைச் செலுத்திவிட்டான். வேலைக்காரன் என்ற ஹோதாவில் அதற்கு நான் ஒரு வழி காட்டினேன்—அதுதான் குடி. செல்வச்செருக்கினால் சுகங்களை நாடின உடனே இவன் உடம்பிலிருந்த குள்ளநரி, ஓனாய், பன்றி முதலிய சுபாவங்கள் வெளிவந்து தாண்டவமாடிவிட்டன. இவன் இப்படியே குடித்துக்கொண்டிருப்பானானால் சாக்ஷாத் மிருகந்தான்'' என்றது.

அரசப்பேய் குட்டிப்பேயைப் பார்த்து, ''அப்பா! 'மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது' என்ற பழமொழி இப்பொழுதுதான் உன் அபாரச் செய்கையிலிருந்து எனக்கு மலையிலக்காகிவிட்டது. இந்தக் குடி இப்படியே எல்லாரிடத்திலும் பரவிவிடுமானால் கடவுளுக்கு இங்கே ஒரு துளி நெஞ்சுகூடச் சொந்தம் என்று சொல்லுவதற்கு ஆசை இல்லை.

'ஒருதின முதல்வன் பாற்பொய் ஒன்றுரை தோட நீங்க
வருதின மெல்லாங் கைதை வருதிரை மூழ்கா நிற்கும்
கருதிது கண்டும் தீரார் கரைவர்பொய் என்றும் ஞாலத்
திருவினர் என்னில் தீர்க்கு முபாயமென் னுணர்ந்தார் கொல்லோ'
(மாயூரபுராணம்)

இப்படி எத்தனை சனிகள் பாடட்டும்; நமக்குக் கவலை வேண்டாம். அவை வாசற்படிக்குப் போய்விடும். அக்காலம் உலகம் நம்முடைய சாம்ராஜ்யம். நாம் அதற்குச் சக்கரவர்த்தி'' என்றது.

இப்பொழுது கூளிப்பேய்க்குப் பேயரசு குலாம். ஆகையால் அதற்கு முதலாவது உயர்ந்தபதவி கிடைத்தது. இன்னம் பெரிய பட்டங்கள், பட்டில் தொங்கும் தங்கப் பதக்கங்கள், கைக்குத் தோடா. பட்ட சிரமத்துக்கு இந்த வரிசைகளாவது கிடைத்தனவே. அதற்குப் பூரண திருப்தி.

சோதிடப்புலி சோணாசலம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

"இயற்கை வாழ்க்கை"

இராஜா பிறந்த நாள் காலை சுமார் 8-மணி யளவில் கவர்ன் மெண்டு பூஞ்சோலையில் உலாவ எண்ணி அதில் நுழைந்தேன். அப் பொழுது என் நண்பன் சோணாசலம் என் பின் வந்து, "நீ இங் கிருப்பாயென்றறிந்தே நேராக இவ்விடம் வந்தேன்" என்றான்.

"அடே இதென்ன சோதிடமா! நான் இங்கு வருவதைப் பார்த்து விட்டு வந்தேனென்று சொல்லக்கூடாதா?"

"அடாடா! நான் முன்னமே நீ இங்கு வருவாயென்றுணரா விடின், இந்த வழியில் வந்திருக்க முடியுமா? இதைக் கவனியாது ஏன் இப்படி என் சக்தியை அவமதிக்கிறாய்? நல்லது இருக்கட்டும். அதோ எதிரில் தலைகீழாக எழுதிய நகரத்தைப்போல் உடல் வளைந்து கோலூன்றி ஊர்ந்து செல்பவரைத் தெரியுமா?"

"அவரை எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அவ்வாறு செல் வது தேக அசவுக்கியத்தாலன்றென்றும் ஏதோ அப்பியாசம் செய் வதற்காக அப்படிச் செல்கிறாரென்றும் தோன்றுகிறது."

"ஓ! நான் மறந்து விட்டேன் முன்னம் பல தடவைகளில் இவரைப்பற்றிச் சொல்லியிருப்பதை. இவர் தான் இயற்கை வாழ்க் கைச்சங்கத் தலைவர் பூவராக மூர்த்தி."

"அப்படியா, அவரிடம் சென்று விஷயங்களை யாராய்வோம் வா."

இவ்வாறு சோணாசலம் கூறவும் நாங்களிருவரும் அவரைத் தொடர்ந்து சென்று அவர் போய்ப் படுத்திருந்த மரத்தடியில் உட் கார்ந்தோம். பிறகு அவரை நோக்கி நான்,

"என்ன வராகமூர்த்தி! தேகம் சவுக்கியம் தானே? கூனிக் கோலூன்றி நடப்பதைப் பார்த்துச் சந்தேகித்தேன்."

"நான் நாளுக்கு நாள் சுகாதார வழக்கங்களை அனுஷ்டிப்பதால் நோயென்பதையே அணுகவொட்டாமல் செய்து விட்டேன் என் பதை அறியாயோ? நான் வளைந்து நடப்பதற்குக் காரணம் உனக் குத் தெரிவதற் கிடமில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்

வந்த பத்திரிகையில் அமெரிக்காவிலுள்ள பெரிய வயித்தியர் தாம் புதிதாகக் கண்டுபிடித்த விஷயமொன்றெழுதியிருந்தார். அதாவது: நோய்களனைத்திற்கும் காரணம் அருந்திய ஆகாரம் சீரணமாகாதிருப்பதாகும். அவ்வாறிருப்பதற்குக் காரணம் நமது சீரணக்கருவிகள் ஒன்றன்மேலொன்ருய்த் தங்கியமுத்திக் கொண்டிருப்பதாகும். இது நாம் நிமிர்ந்து நடப்பதால் வருங்கேடு. இதை நீக்குவதற்காக நாம் கூடிய மட்டில் அக்கருவிகள் ஒரு மட்டத்திலிருக்கும் வண்ணம் வளைந்து நடப்பதால் இக்குறையை நீக்கிவிடலாம் என்பதாம். இக் கொள்கைக்கு ஆதாரமாக அவர் மாந்தரல்லாத மற்றப் பிராணிகளனைத்திற்கும் இக்கருவிகள் ஒரே மட்டத்திலிருப்பதைக் குறிப்பிடுகிருர். இதனல் தான் அப்பிராணிகளனைத்தும் இயற்கையில் வயித்தியர்களின் ஒத்தாசையைத் தேடாது சுகமாய் வாழ்கின்றனவென்றும் கூறுகிருர். இதைப்படித்தது முதல் நான் இவ்வாறு வளைந்து நடக்கிறேன். முதலில் கொஞ்சம் முதுகில் வலியுண்டான போதிலும் பசிக்குக் குறைவில்லை. ஆகாரமும் அதிகமாகக் கொள்வதில்லை. எல்லா விதத்திலும் வெகு சவுக்கியமாகவேயிருக்கிறது.''

அவரிப்படிக் கூறி முடித்தவுடன் சோணாசலம்,

"என்ன, இவை யெல்லாம் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டவை யென்று சொல்லுகிறீர்கள்? நம்மவர்கள் அநேகம் நூற்ருண்டுகளுக்கு முன்னமே இவைகளை அறிந்திருக்கிருர்கள். நம்முனிவர்களறியாத தொன்றுண்டோ? நாம் கடவுளருளால் நாற்கால் பிராணிகளாந்தன்மை நீங்கி நிமிர்ந்து நடந்த பிறகு திரும்பிப் பழைய நிலையையடைவது தகாதென நன்குணர்ந்து இந்த மாறுதலால் வருங்கேட்டை ஒருவாறு நீக்கக்கருதியே காலையில் சூரிய நமஸ்காரம் செய்யும்படிக்கும் மாலையில் ஆலயங்களிற் சென்று நமஸ்காரங்கள் செய்யும்படிக்கும் ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள். இதன்றியும் சீரண சக்தி குறைவு படாதிருக்கும் பொருட்டே ஒளவையாரும் "நப்போல்வளை'' என்று கூறியிருக்கிருள். இக்கருத்தை யுணராத இக்காலத்துப் புலவர்கள் அதற்கு வேறு பொருளுரைக்கின்றனர்.''

"அடே சோணாசலம்! இந்தப் பொருள் நீ யாரிடத்தில் கேட்டுணர்ந்தாய்? இது வரையிலும் ஒருவரும் சொன்னதில்லையே.''

"நான் முன்னமே அகத்தியர் ஆசிரமத்திற்குப் போயிருந்தேனென்று சொல்ல வில்லையா? அங்கு ஒளவையாரிடத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொண்ட விஷயமிது.''

"ஏதப்பா! நீ திருமால் காலடியாலளந்த உலகனைத்தும் உன் பொய்யாலளந்து விடுவாய் போலிருக்கிறதே? ஒளவை பிறந்து எவ்

வளவு காலமாயிற்று. நீ இப்பொழுது அவளைப் பார்த்தேன் என்ருல் யார் நம்புவார்கள் ?''

"ஓ! நீயும் கேவலம் சாமான்ய ஜனங்களைப் போல் ஔவையும் திருவள்ளுவரும் இறந்து விட்டார்களென்று நினைக்கிருய்? அவர்களுக்கும் மரணமுண்டோ ? காலத்தைக் கடந்தவர்களல்லவோ ?''

"நல்லது ; உன் பொய்யின் பெருமையைப் பார்ப்போம். அவர்கள் எப்படி யிருக்கிருர்கள் ?''

"அப்படிக் கேள். சொல்லுகிறேன். ஔவை கூனிக் குறுகிய உடலோடு ஓரடியுயரமுள்ள கோலூன்றி நடக்கிருள். வள்ளுவரோ இரண்டடிக்குக் சற்றுக்குறைவான உயரமுள்ள உருவோடிருக்கிருர். ஆனல் அவர் உடல் குறுகியிருப்பினும் முகத்தில் காந்தி அங்கிருப்பவர்களனைவரையும் மயங்கச் செய்கின்றது.''

இவைகளை யெல்லாம் கேட்டுத் திகைப்பை அடைந்திருந்த வராகமூர்த்தி ஒருவாறு தெளிந்து சோணசலத்தைப் பார்த்து,

"இக்கொள்கையைத்தான் நம் முன்னேர்கள் கையாண்டு வந்தார்களென்றீர். இப்பொழுது ஜர்மனி தேசத்தில் புதிதாகக் காய்கிழங்கு வகைகளை வேக வைக்காமல் உண்பதனல் சவுக்கியமடையலாமென்றும், அவைகளை வேக வைப்பதினல் நோய்களுக் கிடமுண்டாகிறதென்றும் கண்டு பிடித்திருக்கிருர்கள். அன்றியும் அவைகளின் தோல்களே சீரணசக்திக் காதாரமென்றும் அவைகளை நீக்கிவிடுவதால் நமக்கு நோய் அதிகரிக்கின்றதென்றும் சொல்லி அதனை அனுசரித்து எங்கள் சங்கத்தினர் நடந்து வருவதால் நோயற்று வாழ்கிருேம். ஆனல் சங்கத்தினர்கள் எங்கேயாவது வேறு இடங்களுக்குச் சென்ற காலங்களில் சமைத்த உணவை அதிகமாகத் தின்று விடுவதால் மிகவும் நோயால் வருந்துகிருர்கள். இக்கொள்கைகளும் நம்மவர்களுக்கு முன்னமே தெரிந்திருந்தனவென்று சொல்லுவீர் போலும் !''

"அதற்கென்ன சந்தேகம்? நம்மவர்களில் தவமியற்றி நெடுங்காலமழியாதிருந்தவர்களெல்லாம் காய் கனிகளை அருந்தினவர்களன்ருே? இதைத்தான் தாயுமானவர், 'கனியேனும் வறியசெங்காயேனு முதிர்சருகு கந்த மூலங்களேனுங் கனல் வாதை வந்தெய்தி னள்ளிப்புசித்து நான் கண்மூடி மௌனியாகி' என்ருர். வயிற்றில் கனலிருக்க வேறுகனலில் பதார்த்தங்களைப் பக்குவம் செய்வது வீணன்ருே? இவ்வாறு கனலில் பக்குவம் செய்த உணவை அருந்துவதால் மாந்தரழிகிருர்கள் என்பதைக் கல்லாடர்

தாம் அருளிய உணவுரிமை யென்னும் நூலில் பின் வருமாறு கூறி யிருக்கிருக்கிறார் :

'தீயதனி லாக்கியதோ ருணவதனைத் தின்றவர்கள்
தீயபல நோய்களினாற் சிதைந்திடுவர் திண்ணியவாம்
காயினொடு கிழங்கதனைக் கனியுடனே யருந்திமிக
ஆயுறுநல் லறிஞரெல்லாம் அளவில்லா நாள்வாழ்வர்.'

இன்னுமொரு ரகசியம் கேளும். இராவணாதி அரக்கர்களை வெல்லவேண்டிப் பதினான்கு வருடம் கந்த மூலங்களையே புசித்து இராமர் வலியடைந்தார். இவைகளை யெல்லாம் மறந்து நாம் இக் காலத்திலிருப்பது நம்முன்னோர்களின் குற்றமாகுமா ?''

இவ்வாறு சோணசலம் கூறியதைக் கேட்ட வராகமூர்த்தி ஒன் றும் பதில் சொல்லத் தெரியாதவராய்த் திகைத்து நின்றார். மணி பத்தாய் விட்டபடியாலும் எனக்குப் பசியுண்டாகி விட்டபடியா லும் வராகமூர்த்தியைத் தட்டி யெழுப்பி,

''இன்றைக்கிவ்வளவு போதும். வீடு செல்வோம். பின்னர் இவ்விஷயங்களைப் பற்றி விரிவாகப் பேசிக் காலம்கழிக்கலாம்'' என் றேன். அவரெழுந்து ஊர்ந்து சென்றவுடன் சோணசலத்தைப் பார்த்து,

''சாமான்யமாய்ப் பொய்யை மெய்யால் வெல்ல வேண்டு மென்று சொல்லுவது வழக்கம் நீ இன்று உன் பொய்யினால் அவரது பொய்யை வென்று விட்டாய். நாம் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் உன்னை உபாத்தியாயர் மந்தியென்றழைப்பது வழக்கம். அப்படியிருக்க நீ இப்பொழுது இவ்வளவு பேசவும் கவி பாடவும் எப்படிக் கற்றுக் கொண்டாய் ?''

''எல்லாம் புலியருள்தான்'' என்று சொல்லிவிட்டுச் சோண சலம் வண்டியேறிச் சென்றான். நானும் வீடடைந்தேன்.

கலெக்டர் எம்டன்

ந. இராமசாமி

உலகத்தில் லஞ்சம் வாங்காத பிராணி ஒன்று உண்டென்றால் தாசில் தங்கசாமி ஐயரைத்தான் சொல்ல வேண்டும். லக்ஷம் லக்ஷமாகக் கொடுத்தாலுஞ்சரி, அவர் பணத்தைக் கண்ணாலும் திரும்பிப் பார்க்கமாட்டார். பணம் லஞ்சம் வாங்கும் விஷயத்தில் அவர் அவ்வளவு கண்டிப்பு. ஆனால் வாழைத்தாறு முதல் வைர அட்டிகை வரையில் சாமானாக எது கொடுத்தாலும் அவர் வேண்டாமென்று சொல்வதில்லை.

அவரிடம் இன்னமொரு நல்ல குணமிருந்தது. டெலிபோனில் துரை கூப்பிட்டபோது தலைப்பாகை வைத்துக்கொள்ள மறந்து போய்ப் பிறகு அதை வைத்துக் கொண்டு வந்து மரியாதையாகப் பேசினாரல்லவா ஒரு குமாஸ்தா சிகாமணி? தங்கசாமி ஐயர் சாக்ஷாத் அவருடைய பேரன்தான். இவர் உத்தியோகம் பார்த்த இருபது வருஷ காலமாக எத்தனையோ துரைகளுடன் பழகி யிருக்கிறார். இவருடைய யஜமான விசுவாசத்தைக் கண்டு மெச்சாத துரை கிடையாது. ஆனால் புதிதாகவந்திருந்த ஜில்லா கலெக்டர் எம்டன் துரையிடம் மட்டும் ஐயர் தமது யஜமான விசுவாசத்தைக் காண்பிக்கச் சந்தர்ப்பம் ஏற்படாதுபோலிருந்தது.

கலெக்டர் எம்டன்துரை வேலை ஒப்புக்கொண்டு இரண்டு நாள் கூட ஆகவில்லை. அதற்குள் கலெக்டர் ஆபீஸ் அல்லோல கல்லோலப்பட்டது. டைப் ரைட்டிங் குமாஸ்தா ஏதோ தப்புப் பண்ணி விட்டதற்காகத் துரை மெஷினையே தூக்கிக்கொண்டு குமாஸ்தாவை விரட்டி யடித்தாராம். சேவகன் யாரையும் அழைத்துக்கொண்டு போகாமல் திடீரென்று உள்ளூர்த் தாலுக்கா ஆபீஸுக்குச் சென்று சோதனை போட்டு இரண்டு மூன்று குமாஸ்தாக்களை ஸஸ்பெண்டு செய்துவிட்டாராம்.

கலெக்டரின் இந்தத் திருவிளையாடல்களை யெல்லாம் கேட்ட தங்கசாமி ஐயர் கதிகலங்கிப் போனார். எந்தச் சமயத்தில் தம் ஆபீஸுக்குச் சோதனைக்கு வந்துவிடுவாரோ வென்று பயந்து வழக்கத்துக்கு விரோதமாகப் பதினொரு மணிக்கே ஆபீஸுக்குக் கிளம்பி விட்டார். வண்டியிலிருந்து இறங்கும்போதே, "டபேதார்! எல்லாக்

குமாஸ்தாக்களையும் உடனே வரச்சொல்'' என்று உத்தரவு செய்து விட்டுத் தம் அறையில் போய் உட்கார்ந்தார்.

இடுப்பில் பஞ்சக் கச்சம் கட்டித் தலையில் குல்லாய் வைத்திருந்த ரிகார்டு குமாஸ்தா, தட்டுச் சுற்றுக்கட்டித் தலையில் தலைப்பாகை தரித்திருந்த தர்காஸ்து குமாஸ்தா, ரயில்வே முண்டாசு—அதாவது ஒன்றரை முழநீளமுள்ள துண்டைத் தலையில் கட்டிக்கொண்டிருந்த ஹெட் குமாஸ்தா எல்லாரும் தாசில்தார் முன் ஆஜரானார்கள்.

தாசில்தார் எல்லாரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "உங்களை யெல்லாம் இப்படியே போட்டோ பிடித்துப் பார்க்கவேண்டும். ஏன் இப்படி தெருக்கூத்தில் வேஷம் போடுவது போல் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? புது கலெக்டர் வேலை ஒப் புக் கொண்டுவிட்டாரே தெரியுமா?'' என்று ஹெட் குமாஸ்தா வைக் கேட்டார்.

"தெரியும். நேற்றுக்கூட...'' என்று பவுண்டு குமாஸ்தா ஆரம் பித்தார்.

"ஓய்! முதலில் வாயிலிருக்கும் வெற்றிலை பாக்கைத் துப்பி விட்டு வாரும்'' என்று தாசில்தார் அந்தக் குமாஸ்தா மீது எரிந்து விழுந்துவிட்டுப் புதிய கலெக்டரைப் பற்றித் தாம் கேள்விப்பட்ட விஷயங்களை யெல்லாம் விவரமாகச் சொன்னார். பிறகு, "ஓய்! தர் காஸ்து குமாஸ்தா! நீர் இன்னும் எத்தனை மனுக்கள் கட்டிவைத் திருக்கிறீர்? எந்த மனுவந்தாலும் உடனே மனுதார் வீட்டுக்குப் போய் அவரைப் பார்த்துவிட்டு வந்துதான் மனுமீது நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது வழக்கமாமே?'' என்று கேட்டார்.

"அப்படி ஒன்றும் இல்லை. தர்காஸ்து விஷயங்களை யெல்லாம் யஜமானே நேரில் பார்த்துப் பைஸல் செய்து விடுவதாகத் தெரிந் திருக்கும்போது நான் ஏன் தலையிடுகிறேன்?'' என்று அந்தக் குமா ஸ்தா வினயமாய்த் தெரிவித்துக் கொண்டார்.

"சரிதானையா போம்! ஓய் ரிகார்ட் குமாஸ்தா! உமது உறை யில் சிங்கம் புலி ஒளிந்து கொண்டிருந்தால்கூடத் தெரியாது. எந்த ரிகார்ட் தேடுகிறோமோ அதைத் தவிரப் பாக்கி யெல்லாம் அகப்படும். எம்டன்துரை ரிகார்டு ரூமுக்குப் போனால் குரங்கு மாதிரி பாய்ந்து பாய்ந்து பரிசோதிக்கிறானாம். ஆகையால் உடனே போய் எல்லாவற்றையும் சரியாக வையும். ஹெட் குமாஸ்தா! உம் மோடு என்ன பண்ணுகிற தென்று எனக்குத் தெரியவில்லை. வருஷக் கணக்காய்ப் பேப்பரைக் கட்டிப்போடுகிறீர். நேற்று நீர் கை யெழுத்துக்கு அனுப்பிய ஒரு மனுவைப் பார்த்தேன். அது மூன்று வருஷத்துக்கு முன் வந்த மனு. அதைக் கிழித்தெறிந்தாவது

வேலை பண்ணும். ஏய், அப்காரி குமாஸ்தா! போய் உமது கையால் நல்ல காபியாய் ஒரு கப் வாங்கி வாரும்'' என்று தங்கசாமி ஐயர் உத்தரவிட்ட வண்ணமாயிருந்தார்.

எல்லாக் குமாஸ்தாக்களும் போன பிறகு ஷராபை அழைத்து வரச் செய்தார். "நான் போனவாரம் லீவு எடுத்துக்கொண்டிருந்த போது சிரஸ்ததார் கஜானாவிலிருந்து ஆயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு பிறகு மறுநாள் வைத்துவிட்டதாக ஊரெல்லாம் புரளியாயிருக்கிறதே; உன்மைதானா?'' என்று கேட்டார்.

"இதென்ன அப்படிக் கேட்கிறீர்கள். நான் இங்கு ஷராபாக இருக்கும்போது அது மாதிரி தப்புத்தண்டாக்காரியம் நடக்கவே நடக்காது.''

"நடந்ததோ இல்லையோ இப்பொழுது கணக்குப்படி எல்லாம் ஒழுங்காயிருந்தால் சரிதான்'' என்றார் தாசில்தார். இதற்குள் அப்காரி குமாஸ்தா காபி வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். தாசில்தார் ஒரு வாய் குடித்துவிட்டு இரண்டாவது வாய் குடிக்கும் சமயம் டபேதார் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்து, "துரை! துரை!! துரை!!!'' என்று கூவினான். தாசில்தார் மேஜைமீது இருந்ததை எல்லாம் சரிப்படுத்தி வைப்பதற்குள் துரை வந்துவிட்டார். ஆபீஸுக்குள் நுழைந்ததும் துரை தொப்பியைக் கையிலெடுத்துக் கொண்டார். அவரைக் கண்ட தாசில்தார் டர்பனைத் தலையில் வைத்துக்கொண்டார்.

"இது என்ன ஆபீஸ்?'' என்று கேட்டார் துரை.

"தாலூகாபீஸ்''

"தாலூகாபீஸா? இங்கே ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ஆபீஸ் கிடையாதா?''

"இல்லை. இந்த ஊரில் தாலூகாபீஸ், மாஜிஸ்ட்ரேட் ஆபீஸ், ஸப் ரிஜிஸ்டிராபீஸ் இவை தாமிருக்கின்றன.''

துரை சிறிது நேரம் மௌனத்திலாழ்ந்து சுற்று முற்றும் கவனித்துக் கொண்டிருந்தார். மேஜையின் மீதிருந்த காபிப் பாத்திரம் தென்பட்டது.

"எனக்கு ரொம்ப தாகமாயிருக்கிறது. ஸோடா அகப்படுமா?'' என்று கேட்டார் துரை. உடனே தாசில்தார் பாய்ந்து ஓடிச் சென்று ஸோடா கொண்டுவந்து கொடுத்தார்.

துரை தாகசாந்தி செய்து கொண்டதும், "ஒரு பேபரும் பேனாவும் கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு எழுத ஆரம்பித்தார். துரை எழுதும்போது தம்மை வெறிக்க வெறிக்கப்

பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட தாசில்தாருக்குப் பாதி உயிர் போய்விட்டது. அவர் எம்டன் துரையை முன்பின் பார்த்தவரல்ல. பயந்ததுபோலவே திடீரென்று வந்துவிட்டானே, என்ன செய்வானோ, என்று அவர் ஏங்கிப்போனார். அவனைச் சந்தோஷப்படுத்திப் பார்க்கலாமென்று, "துரைவாள் ஒருவார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் ஸ்டேஷனுக்கு வண்டியுடன் வந்திருப்பேன். யஜமானுக்குச் சாப்பாடு..." என்று சொல்லிக் கொண்டு போனவர் துரை "ஹம்" என்று உறுமியதைக் கேட்டதும் நிறுத்திவிட்டார்.

தாசில்தார் தம்மிடம் மிகவும் பயந்து கொண்டு நடப்பதையும் தம்மை யஜமான், துரைவாள் என்று கூப்பிடுவதையும் கண்டு துரை சிறிது சிந்தனையிலாழ்ந்தார். துரையின் மௌனம் அதிகமாக ஆகத் தாசில்தாரின் பீதியும் அதிகமாயிற்று. இரண்டு மூன்று நிமிஷங் கழித்து, "இங்கே கஜானா இருக்கிறதா?" என்று கேட்டார் துரை.

"இருக்கிறது" என்று சொல்லிவிட்டு எல்லாம் சரியாய் வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காகத் தாம் மாத்திரம் கஜானாவுக்குப் போனார் தாசில்தார்.

துரை ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தாரே யன்றி ஆபீஸ் சோதனை செய்ய முயலவில்லை. இவன் பைத்தியம் மாதிரி இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறானோ வென்று குமாஸ்தாக்களெல்லாம் நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

தாசில்தார் கஜானாவைப் பார்க்கச் சென்றிருந்தபோது சிரஸ்ததார் துரையைப் பார்க்க வந்தார்.

"நீர் யார்?" என்று கேட்டார் துரை.

"ஹெட் அக்கௌண்டண்ட்"

"உமது பெயர்"

"ராசப்ப கிராமணி"

"என்ன?"

"ராசப்ப கிராமணி. கிராமணி ஜாதியில் நான் ஒருவன் தான் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறேன்."

"பெற்றிருந்தால் என்ன?"

"ஒன்றுமில்லை. துரையவர்கள் என்னை டிப்டி கலெக்டர் ஜாபிதாவில் சேர்க்க வேண்டும்"

"ஹம்"

"இந்தத் தாசில் பார்ப்பான் ஏராளமாக லஞ்சம் வாங்குகிறான். வண்டிகூட ஒரு மிராசுதாரிடம் லஞ்சமாகப் பெற்றதுதான்."

"அப்படியா? இங்கே சமீபத்தில் வாரும்! ஒரு சிறிய விஷயம்" என்று துரை சொன்னதும் சிரஸ்ததார் ஒரு கையால் வாயைப் பொத்திக்கொண்டு துரையினிடம் நெருங்கி வந்தார்.

"நான் திடீரென்று கிளம்பி வந்துவிட்டேன். வரும்போது பணப்பையைக் கொண்டுவர மறந்துவிட்டேன். எனக்கு..."

"என்னிடம் நூறு ரூபாய் இருக்கிறது. இந்தாருங்கள்!" என்று சிரஸ்ததார் ஒரு நோட்டை நீட்டினர்.

"எனக்கு இதை லஞ்சம் கொடுத்து விட்டதாக நினைத்துக் கொள்ளாதேயும். கடனுகப் பாவித்துக்கொள்ளும்" என்று சொல்லிக்கொண்டே துரை நோட்டை வாங்கிப் பையில் வைத்துக்கொண்டார். சிரஸ்ததார் துரையைச் சரிப்படுத்தி விட்டதாக எண்ணிக் கொண்டு சந்தோஷத்துடன் வெளியே சென்றதும் தாசில்தார் திரும்பி வந்தார்.

"நான் வரும்போது பணம் எடுத்துக் கொண்டுவர மறந்து விட்டேன். உடனே தந்தி அடித்துப் பணம் வரவழைக்க வேண்டும்" என்று துரை சொன்னர்.

"யஜமானுக்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டுக் கொண்டே தாசில்தார் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து மேஜை மீது வைத்தார்.

"நான் உம்மிடம் லஞ்சம் கேட்கிறேனென்று எண்ணுதேயும். இதைக் கடனுகப் பாவித்துக் கொள்ளும்" என்று சொல்லிக் கொண்டே துரை நோட்டுகளை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு, "நான் போய் வருகிறேன்" என்று கிளம்பி விட்டார். தாசில்தார், துரையை ரயிலுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து விட்டு வந்து சந்தோஷமாய் உட்கார்ந்திருந்த போது ஹெட் குமாஸ்தா வந்து சேர்ந்தார்.

"பார்த்தீரா! எந்தத் துரையாயிருக்கட்டுமே! கடைசியில் என் வழிக்கு வரவேண்டியது தான். பாரும்! இந்த ஆபீஸில் உள்ளே நுழைய விடாமலே பேர்வழியைத் தாஜா பண்ணி அனுப்பி விட்டேன்" என்று சொல்லி வாய் மூடுமுன் டபேதார் வேர்க்க விறு விறுக்க ஓடி வந்து, "ஜில்லா கலெக்டர் இப்பொழுது தான் மோட்டார் வண்டியில் வந்து முஸாபரி பங்களாவில் தங்கி யிருக்கிறாராம். தங்களை உடனே அழைத்து வரும்படி சேவகனை அனுப்பி யிருக்கிறார்" என்றான்.

தாசில்தாருக்கு ஒன்றுமே புரியவில்லை. "இப்பொழுது தானே இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போனான். ரயிலேறிப்போய்

விட்டதாகக் கூடச் சொன்னார்களே. அதற்குள்ளே எங்கிருந்து மறுபடியும் முளைத்தான்'' என்று அவர் திகிலுடன் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்த போது துரை எழுதிக் கொண்டிருந்த கடிதம் காற்றில் பறந்துவந்து விழுந்தது. அதில் எழுதப்பட்டிருந்த தாவது:—

ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்களுக்கு,

நான் இங்கிருந்து சென்னை புறப்பட்டுச் சென்று அங்கிருந்து இங்கிலாந்துக்குச் செல்ல வேண்டும். நான் பரம ஏழை. கையில் தம்பிடி கிடையாது. நான் ஓர் ஐரோப்பியன். ஆகையால் தயவு செய்து ஐரோப்பிய நாடோடிச் சட்டப்படி எனக்கு ஒரு நாள் படி கொடுத்துச் சென்னைக்கு டிக்கெட்டும் வாங்கிக்கொடுக்க வேண்டு மென்று பிரார்த்திக்கிறேன்.

ஆர். பி. ஜோன்ஸ்.



மாதர் கடை

வி. விசாலாக்ஷி அம்மாள்

சென்னையில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மாதர் கடைக்கு நான் சென்றிருந்தேன். இது மவுண்ட் ரோடில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'மதராஸ் சுதேசி எம்போரியம்' என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் இங்கு மாதர்கள் கடைக்காரிகளாக இருந்து பொருள்களை விற்பதால் இதற்கு மாதர் கடை என்ற பெயர் பொருத்தமானதாகவே இருக்கிறது.

இதற்கு முன்பும் மாதர்கள் கடைகளில் சாமான்களை விற்றிருக்கிறார்கள்; ஆனால் அவைகள் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்ட கடைகள் அல்ல. பெரிய யுத்தம் நடந்த பொழுதும், அவ்வப்பொழுது ஏதோ தர்மங்களுக்குப் பொருள் சேகரிப்பதன் பொருட்டும், 'எக்ஸிபிஷன்' 'ஸேல்ஸ்' இவைகள் வைத்த காலங்களில் நல்ல குடும்பத்து மாதர்கள் கடைக்காரிகளாக இருந்து சாமான்களை விற்றிருக்கிறார்கள். ஆனால் அதெல்லாம் தர்மார்த்தம் செய்யப்பட்ட காரியம்; ஜீவனார்த்தம் செய்யப்பட்டவை அன்று. வளைக்காரி, பூக்காரி, கறிகாய்க்காரி என்று ஸ்திரீகள் எத்தனையோ பெயர்கள் ஜீவனார்த்தம் வியாபாரம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் கைப்பாடுபட்டு வேலை செய்யும் வகுப்பினரைச் சேர்ந்தவர்கள். ஆண், பெண் இருவரும் வேலை செய்து கூலி சம்பாதித்துக் குடித்தனத்தைப் பாதுகாப்பது அவர்களுள் சகஜம் தான்; ஆனதினால் பெண்கள் வெளிச் சென்று வேலை செய்வதைப் பற்றி வித்தியாசமாகவோ, அல்லது அது ஒரு கேவலமான காரியம் என்றோ அவர்களுக்குள் எண்ணப்படுவதில்லை.


ஒரு காலத்தில் எவ்வளவு பணம் இருந்த பொழுதிலும் அவர் அவர்கள் வேலையை அவர் அவர்களே செய்தார்கள். இடையன்

நூறு பசுக்கள் உடைய செல்வவானுக இருந்தாலும் மனைவி பால் கறந்து, தயிர் கடைந்து, அவைகளை விற்றுத் தன் காரியங்களைக் கவனித்து வந்தாள். ஸ்திரீகள் தாராளமாக வெளியே சென்று தங்கள் அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். நடுவில், பல காரணங்களால், கைப்பாடுபட்டுக் குடும்பத்தைச் சம்ரக்ஷணை செய்ய வேண்டியிருக்கும் வகுப்பினரைத் தவிர, சற்றுச் சொத்து உடையவர்கள் வீட்டு மாதர்கள் வெளியில் சென்று இவ்விதமான தொழில்களைச் செய்வது கௌரவக் குறைவான காரியமாகக் கருதப் பட்டது. இவர்கள் வீட்டில் சமையல் முதலிய காரியங்களைச் செய்தார்கள். பிறகு இதற்கும் வேலையாட்கள் ஏற்படவே குடித் தனத்தில் கருத்தாக இருந்து சிக்கனமாக நடத்தி வேலையாட்களைக் கவனித்து வந்தார்கள். செட்டாகப் பணத்தை வீணுக்காமல் சேக ரித்துவைக்கவேண்டும் என்ற எண்ணம் மனிதருக்கு அநேகமாகப் பொதுவானது. இப்பெண்கள் வேறு பொழுது போக்கில்லாமல் குடித்தனச் செட்டில் முனைந்து, பூசனிக்காய் போகிற இடம் பொதியுடன் போகக் கடுகு போகும் இடத்தை ஆராயும் பரிதாப மான நிலைமைக்கு வந்துவிட்டார்கள். மேலும் 'செல்வோம், செல் வோம், எங்களை நம்பாதேயுங்கள், நாங்கள் நிலையற்றவர்கள்' என்று எப்பொழும் எச்சரிக்கை செய்வது போல் 'செல்வம்' என்ற பெயர் புனைந்த பொருளானது யாதொரு காரணத்தினுலாவது குறைந்து விட்டால், தங்கள் ஜீவனத்துக்கு வேண்டியதைத் தேடிக்கொள்ளச் சக்தி அற்றவர்களாகக் கஷ்டப்பட்டார்கள். நாகரிகமும், படிப்பும் முன்னேற்றம் அடையவே இவர்களுக்கு வைத்தியத் தொழிலும் உபாத்தியாயர் தொழிலும் ஏற்பட்டன. தற்சமயம் சுய சம்பாத் தியம் வேண்டிய அவசியம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதில் வைத்திய உபாத்தியாயத் தொழிலைத் தவிர வேறு தொழில் களுக்குச் செல்ல நம் தேசத்தில் ஸ்திரீகளுக்கு இன்னும் வசதிகள் ஏற்படவில்லை. கடைக்காரிகளாக இருந்து பொருள்களை விற்பதற்கு அதிகப் பயிற்சி வேண்டாம். இவ்வழியில் நல்ல குடும்பத்து மாதர் களுக்கு ஒரு தொழிலும் உண்டாகும் என்பது இந்தக் கடையை ஸ்தாபித்தவர்களுடைய நோக்கங்களில் ஒன்று.

மேலும் பணமுள்ள அநேக ஸ்திரீகள் இதில் முதல் போட்டு இருக்கிறுர்கள். கை முதல் போட்டு வியாபாரம் செய்து அதில் மாதர்களான தங்களுக்கு லாபமும் வரும்படியும் கிடைக்கும், மற் றைய மாதர்களுக்கு ஒரு தொழிலும் ஏற்படும் என்ற இருவகை நோக்கத்துடனேயே இது ஆரம்பிக்கப் பட்டுளது. தற்சமயத்தில் இதில்வேலைசெய்யும் மாதர்கள் கௌரவ வேலையாட்களே என்ருலும்,

கடை நிலைநின்ற பிறகு சம்பள ஆட்களே இதில் வேலை செய்வார்கள். செலவு கட்டுப்படி தெரியும் வரையில், இதில் முதல் போட்டுள்ள சில பெரிய குடும்பத்து மாதர்கள் கௌரவமாக வேலை செய்வதாக முன்வந்து கடையில் வேலை நடக்கிறது.

மில் துணிகள், பட்டுக்கள், கதர், ஊறுகாய், பெப்பர்மின்ட், சீப்பு, சோப்பு, காபிக்கொட்டை, பிஸ்கோத்து முதலிய சுதேசச் சாமான்கள் இங்கு விற்கப்படுகின்றன. வெளியில் டிராமும், பஸ்ஸும், மோட்டார் வண்டிகளும், ஜனக் கூட்டமும், தூசியும், சப்தமும் எல்லாம் ஒரே குழப்பமாக இருக்க, கடைக்குள் நுழைந்ததும், அழகிய உடைகள் நகைகள் அணிந்த மாதர்கள் சிரித்த முகத்துடன் நின்று வேண்டிய பொருள்களை எடுத்துக் காட்டி விலை கூறி விற்கும் காட்சி, கண்ணுக்கும் மனத்திற்கும் களிப்பை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு பக்கம் ஆண்மக்களுக்கு அவசியமான துணிகள் விற்கப்படுகின்றன. சுதேசக் கண்ணாடி வளையல்களும் இங்கு விற்கப்படுகின்றன. எத்தொழிலானாலும் அதைச் செய்வதில் ஒரு கௌரவம் உண்டு என்பதை எல்லாரும் வாயினால் சொன்ன பொழுதிலும் சில வேலைகளைச் செய்வதை இழிவாகவே நினைக்கிறார்கள். ஒருத்தி சாமான்களைத் தர்மத்துக்காக விற்றால் அவள் செய்கை சிலாகிக்கப்படுகிறது. ஜீவனத்துக்காகச் செய்யப்பட்ட அதே காரியம் கேவலமாகவே கருதப்படுகிறது. இது மானிட ஸ்வபாவம். இவ்விதம் கடைக்காரிகளாகச் சாமான்களை விற்பதில் யாதொரு தப்பும் கௌரவக் குறைவும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதன் பொருட்டுப் பல பெரிய குடும்பத்து மாதர்கள் வேலையை ஏற்றுக் கொண்டு பாடுபடுகிறார்கள். இவர்கள் விடா முயற்சியுடன் வேலை செய்து மெய் வருத்தத்துக்குரிய கூலியைப் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.



தந்திரமுள்ள திருடன்*

ச. கு. கணபதி ஐயர்

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனிடம் பொன்னும் மணியும் நிறைய இருந்தன. அவன் அவற்றைப் பத்திரப்படுத்தி வைக்க எண்ணினான். கைதேர்ந்த ஒரு சிற்பியைக்கொண்டு தன் அரண்மனைக்கு வெளியே கருங்கல்லினால் ஓர் அறை கட்டுவித்து அதில் தன் பொக்கிஷத்தைப் பத்திரப்படுத்தி வைத்தான்.

அந்த அறையைக் கட்டிய சிற்பி ஒரு திருடன். ஆதலால் அவன் அரசனுடைய கஜானாவைக் கொள்ளையிட எண்ணி அந்த அறையின் சுவர் ஒன்றில் எவரும் அறியாமல் ஒரு கள்ள வழியை அமைத்திருந்தான். சுவரொன்றில் ஒருகல் எடுக்கவும் பழையபடி மூடிவிடவும் சாத்தியப்படும் வகையில் அந்த அறை கட்டப்பட்டிருந்தது. இந்த இரகசியம் அவனைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

சில நாள் கழித்து அந்தச் சிற்பி தன் மகனுடன் வந்து அரசனுடைய பொக்கிஷத்தில் சிறிது பணம் களவாடிச் சென்றான். கதவு மூடி முத்திரையிட்டது கலையாமல் இருக்கப் பணம் மட்டும் காணாமற்போனது அரசனுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. இரண்டு மூன்று முறை பணம் கொள்ளை போய்விடவே அரசன், "பணம் எப்படிப் போகும்?" என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினான். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தான். பணம் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு பாத்திரத்தின் வாயிலும் எலிகளைப் பிடிக்கவைத்திருக்கும் பொறியைப்போன்ற ஒருவிதப் பொறியை அமைத்து வைத்தான் அரசன். இது முடிந்த இரண்டு நாளுக்கெல்லாம் சிற்பியும் அவனுடைய மகனும் பழையபடி திருட வந்தார்கள். சிற்பி மெல்லக் கல்லைப்பெயர்த்தெடுத்து வைத்துவிட்டு உள்ளே சென்றான். பணம் எடுக்க ஒரு பாத்திரத்தில் இரண்டு கைகளையும்

* இஃது எகிப்து தேசக் கதையொன்றைத் தழுவி எழுதப்பட்டது.

திறக்கும்போது அதில் வைத்திருந்த பொறி அவன் கைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டது. அவனால் கைகளை எடுக்கவோ அசைக்கவோ முடியவில்லை. இனி எப்படியும் அரசன் இதனை அறிந்துகொள்வான் என்றும் அப்பொழுது தானும் தன் மகனும் மரண தண்டனை அடையவேண்டிவரும் என்றும் நினைத்தான். இரு வர் இறப்பதிலும் ஒருவன் சாவது நல்லதென்றெண்ணித் தன் மகனைக் கூப்பிட்டுத் தன் தலையை அறுத்துக்கொண்டு போய்விடும் படி சொன்னான். இருவரும் தப்ப வழியில்லாமையை அறிந்த மகன் தந்தை சொன்னபடியே அவன் தலையை அறுத்தெடுத்துக் கொண்டு கல்லைப் பழையபடி மூடிவிட்டுப் போய்விட்டான்.

மறுநாள் அரசன் வந்து பார்த்தபோது ஒரு முண்டம் அந்த அறைக்கு எவ்விதம் வந்தது என்று பெரிதும் ஆச்சரியப்பட்டான். கதவுகளில் உள்ள முத்திரை கலையவில்லை; சுவரிலும் கன்னக்குழி ஒன்றையும் காணவில்லை. அரசன் ஏன் ஆச்சரியப்படமாட்டான்? ஆள் அடையாளம் தெரியாமலிருக்கத் தலையை அறுத்துப்போன வேறொரு மனிதன் இருக்கவேண்டும் என்றும், அவனை எப்படியும் பிடித்துவிடவேண்டும் என்றும், இல்லாவிட்டால் மேலும்மேலும் கஜானாவில் பணம் களவுபோகக்கூடும் என்றும் அரசன் எண்ணினான். உடனே அவன் சில காவற்காரர்களை அழைத்து அந்த முண்டத்தை ஊர்க்கு வெளியே கட்டித் தொங்கவிட்டு ஒருநாள் முழுவதும் அதைக் காவல் புரியும்படி கட்டளையிட்டான். அந்தக் குறையுடலைக் கண்டு அழுகின்றவர்களைத் தன்னிடம் பிடித்து வரும்படி அவர்க ளிடம் சொல்லியிருந்தான். அவர்கள் அரசன் கட்டளையின்படி முண்டத்தை ஊர்க்கு வெளியே கட்டித் தொங்கவிட்டுக் காவல் புரிந்து வந்தனர்.

சிற்பியினுடைய மகன் திருட்டுத்தொழிலில் தன் தந்தையைக் காட்டிலும் பதின்மடங்கு சமர்த்தன். தந்திரத்தில் குள்ள நரியையும் வென்றுவிடக் கூடியவன். அவன் தன் தந்தையின் சவத்தை எப் படியும் களவாடிச் சென்றுவிட வேண்டுமென்று எண்ணி ஒரு சூழ்ச்சி செய்தான். சில தோற்பைகளில் சாராயம் ஊற்றி நிரப்பி அவற்றைச் சில கழுதைகளின்மேல் ஏற்றி, அன்றிரவு வியா பாரியைப்போல் வேடந் தரித்துப் பிணம் தொங்கவிடப்பட்டிருந்த வழியாக வந்துகொண்டிருந்தான். பிணத்தின் அருகில் வந்தவுடன் ஒரு பையைக் காவலர் காணாமல் திறந்து சாராயம் வீணாக வழியும் படி செய்துவிட்டு, “சாராயப் பை பொத்துக்கொண்டுவிட்டதே!” என்று பெருங்கூச்சலுடன் அழத்தொடங்கினான். காசு இல்லா மலே சாராயம் கிடைப்பதைக்கண்டு காவலாளிகள் தங்களுக்கிஷ்டம்

போல வழியும் சாராயத்தைப் பிடித்துக் குடித்தனர். அவன் அவர்களை எல்லாம் கண்டபடி இகழ்ந்துரைத்துக் கொண்டே போலிக் கண்ணீர் வடித்தான். தாங்கள் திருப்தியாகக் குடித்த பிறகு காவலர்கள் மிகுதியாக இருந்த சாராயம் ஒழுகிவிடாமல் பையை அடைத்து அதைக் கழுதையின்மேல் நன்ருக அமைத்து வியாபாரியிடம் ஒப்புவித்தனர். அவர்கள் தனக்குச் செய்த உதவிக்கு நன்றியறிவு காட்டுபவன்போல் அந்த வியாபாரி இன்சொல்கூறி இன்னும் கொஞ்சம் சாராயம் அவர்களுக்கு ஊற்றினுன். அவர்கள் எல்லாரும் சிறிது நேரத்தில் குடிமயக்கத்தினுல் அயர்ந்து தூங்கிவிட்டனர். அதுதான் தக்கசமயமென்றறிந்த சிற்பியின் மகன் தனது தந்தையின் உடலைத்தூக்கி ஒரு கழுதையின்மீது கட்டிக்கொண்டு வந்து விட்டான்.

காவலர் சாராயத்தால் மயக்கப்பட்டு ஏமாற்றமடைந்ததும் சவம் காணுமற்போனதும் மறுநாள் காலை அரசன் செவிக்கு எட்டின. தன்னைப் பல விதங்களில் ஏமாற்றும் திருடன்மேல் அரசனுக்குக் கடுங்கோபம் பிறந்தது. எப்படியும் திருடனைக் கண்டு பிடிக்காமல் விடுவதில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

அந்த அரசனுக்கு ஒருமகள் இருந்தாள். அவள், தான் அந்தத் திருடனைப்பிடித்துத் தருவதாகத் தந்தையிடம் கூறினள். பிறகு அவள், தான் ஒவ்வோர் இரவிலும் ஒவ்வொருவருக்கு விருந்திடப் போவதாகப் பிரசுரப் படுத்தினுள். விருந்திற்கு வருகின்றவனுக்குப் போதை கொடுத்து அவனை மயக்கி அவன் செய்துள்ள ஒரு கெட்ட காரியத்தையும் ஒரு தந்திரமுள்ள செயலையும் தெரிந்துகொள்ளப் பலகேள்விகள் கேட்க யோசித்தாள். இந்தச் சமாசாரம் இளைய திருடனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவன், "அரச குமாரியையும் ஏமாற்றுவோம்" என்றுஎண்ணிச் சுடலைக்குச் சென்று அன்றிறந்த ஒரு பிணத்தின் கையை அறுத்து அதைப் பத்திரமாக மேலங்கியில் மறைத்துக்கொண்டு ராஜகுமாரியின் விருந்தினுகை ஓர் இரவு வந்து சேர்ந்தான். சாப்பாட்டிற்கு மேல் அவனுக்குப் போதை தரும்படியான குடிவகைகள் வழங்கப் பட்டன. அவன் அவற்றைக் குடிப்பதுபோல் பாவனைகாட்டிக் கொட்டிவிட்டு வெறிபிடித்தவன்போல் கிடந்தான். அச்சமயம் ராஜகுமாரி அவனை நெருங்கி, "அன்ப, நீ செய்துள்ள ஒரு தீய செயலையும் ஒரு தந்திரமுள்ள செயலையும் குறிப்பிடுக" என்ருள். அதற்கு அவன் எழுந்து தன் தந்தையைத் தானே கொன்றது தீய செயலென்றும், அவன் பிணத்தைக் களவாடிச்சென்றது தந்திரமுள்ள செயலென்றும் குறிப்பிட்டு அருகிலிருந்த விளக்கை

அணைத்துவிட்டு வெளியே கிளம்பினான். அரசிளங்குமரி கூச்சல் போட, அதைக்கேட்டு இரண்டு காவலர்கள் அவனைப் பிடிக்க வந்தனர். அவன் அவர்களில் ஒருவனைத் தள்ளிப் படிகளில் உருட்டிவிட்டு வேறொருவனிடம் தான் கொண்டு வந்த கையைக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டான். கையைப் பற்றிக்கொண்டவன் திருடன்தான் சிக்கிக் கொண்டான் என்று சில நிமிஷம் எண்ணியிருந்து பின்பு ஏமாற்ற மடைந்தான்.

இச்சங்கதிகள் எல்லாம் அரசனுக்கு வருத்தத்தை உண்டு பண்ணின. திருடன் வெகு சமர்த்தனென்பதை அவன் உணர்ந்து அத்திருடனைப் பார்க்க ஆவல் கொண்டான். தன் நாட்டில் அத்தகைய சமர்த்தன் இருப்பது தனக்குப் பெருமையே என்று எண்ணினான். அரசன் அதனுடன் நிற்காமல் அத்திருடன் இனி வெளிவரலாமென்றும், தான் அவன் விஷயத்தில் அதிக அன்பையும் ஆச்சரியத்தையும் பெருமையையும் கொண்டிருப்பதாகவும் அவனுக்கு வெகு மதி தர நினைத்திருப்பதாகவும் விளம்பரப் படுத்தினான். இந்த விஷயம் திருடனுக்குத் தெரியவந்தது. அரசன் தான் சொல்லிய படியே நடப்பான் என்ற நம்பிக்கை திருடனுக்கு ஏற்படவே அவன் அரசன் முன் தோன்றித் தான் திருடின விதத்தை எல்லாம் விரிவாகச்சொன்னான். மன்னவனும் அந்தத்திருடனை மெச்சிப் பல பரிசுகள் வழங்கி அவனைத் தன் மருமகன் ஆக்கிக்கொண்டான்.

தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு

ஒரு மறுப்புரை

தி. இளையாழ்வான்

தமிழ் நாட்டுச் சரித்திரத்தைத் தமிழிலக்கியத்தை உதவியாகக் கொண்டு தீர்மானிக்க முதன் முதன் முயன்றவரும் அந்த இலக்கியங்களையும் நமது நாட்டிலெங்கும் நாம் காணும் கல்வெட்டுக்களையுஞ் சமரசப்படுத்திச் சரித்திரத்தை ஒழுங்காகத் தீர்மானிப்பதில் ஒப்பிலியுமாகிய பண்டிதர் மு. இராகவையங்கார் தை மாதக் கலைமகளில் தமிழ் வேந்தர்களின் இமயப்படையெடுப்பைப்பற்றி எழுதியிருக்கும் வியாசம் புத்தியைக் கவர்ந்துவிடக்கூடியதாயிருக்கிறது. தமிழரின் ஒப்பற்ற வல்லமை தென்னாட்டைக் கடந்து வடநாட்டின் உத்தர வெல்லையையும் தாண்டிச் சென்றது என்னும் விஷயம் தமிழின் வளர்ச்சியை விரும்பிக்கிளம்பிய இப்பத்திரிகையின் முதல் சஞ்சிகையிலேயே எழுதப்பட்டது நற்சகுனம் என்றே கொள்ளலாம்.

தமிழ் ஆராய்ச்சி முறையில் அதிவல்லவரான நமது பண்டிதரவர்களின் முடிவுகளை ஆதரித்தே ஆங்கில முறையை யொட்டி யெழுதிய டி. ஜி. ஆராவமுதரும் தாம் பல வருஷங்களுக்கு முன் வெளியிட்ட "காவேரியும், மௌகரிகளும், சங்ககாலமும்" என்ற ஆங்கில நூலில் தமிழ் நாட்டரசர் உத்தர கோசலம்வரையில் பல தடவை படை யெடுத்துச் சென்றார்களெனவும், ஹிமாசலம் வரையில் தமிழ்ப்படைகள் அடைந்தன வென்பதற்குத் தமிழ் நூல்களில் பிரபல ஆதாரங்கள் உண்டெனவும், மகதநாட்டில் விட்டு விட்டு அரசாட்சி செய்துவந்த மௌகரிகள் என்ற வம்சத்தைச் சார்ந்தவனான அரசனொருவனைக் கரிகாலச்சோழன் ஜயித்திருக்கலாமெனவும் பண்டிதர் மு. இராகவையங்கார் எந்த எந்த நூல்களின் ஆதாரத்தைக் கொண்டு வாது செய்கிறாரோ அவைகளையே ஆதாரமாகக் காட்டி எழுதியிருக்கிறது பலரும் அறிந்தது. நேபாளத்தைக் கருநாடக வம்சஸ்தன் ஒருவன் அடிப்படுத்தியதையும் இராசேந்திரசோழன் கங்கைகொண்டசோழனான வகையையும் காண்பித்தே கங்கையைத் தாண்டிக்கூடத் தமிழர் படைகள் சென்றிருக்கலாமென்று அவரும் பண்டிதரவர்களுடன் ஒத்தே அபிப்பிராயப்பட்டிருப்பதும் பலருக்கும் தெரியும். தமிழ் முறையில் அதி சூரரும் ஆங்கில முறையைக் கைக்கொண்டவருமாகிய இவ்விருவரும் தாம் அடைந்துள்ள முடிவுகளிலும் காட்டும் காரணங்களிலும் ஒற்றுமை இருப்பதால் அவர்கள் தீர்மானப்பதில் நம்பிக்கை வைக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்கள் காட்டத் தவறின விஷயமொன்றும் அத்தீர்மானத்தை யாதரிக்கிறது. சங்க

காலத்தை யொட்டி யெழுந்த "மூத்தோள்ளாயிரம்" என்ற நூலில் சோழனைப்பற்றிய பாட்டு ஒன்று காணலாம்:—

"கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை தான் மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேநங்
கோழியர்கோன் கிள்ளி களிறு"

மாளுவ தேசத்துத் தலைநகரமாகிய உஞ்சை யென்ற உஜ்ஜயினி என்ற நகரத்தைச் சோழன் யானை ஒரு காலால் மிதித்தது என்பதைக் கொண்டு சிலப்பதிகாரத்திற் சொல்லியவாறு, "அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த நிவந்தோங்கு மரபிற் றோரண வாயில்" கரிகாலனிடம் உண்டென்பதன் உண்மை ஸ்தாபிதமாகும் என்பதில் ஐயமில்லை.

மகதநாட்டரசனைக் கரிகாலச்சோழன் வென்றிருக்கலாமென்று டி. ஜி. ஆராவமுதர் எழுதியதைப் படித்தவர் அப்பொழுது அஃது அஸம்பாவிதமென்று தம்மனதில் ஆக்ஷேபங் கொண்டவர்களும் கயலும் புலியும் வில்லும் இமயத்தின் பிடரியில் பொறி பட்டுள்ளனவென்று அவரெழுதியபோது கட்டுக்கதையைச் சரித்திரமென்றே ஏமாந்தாரென்று எண்ணினவர்களும் இப்பொழுது பண்டிதர் மு. இராகவையங்கார் தமிழ் நூல்களைக்கொண்டு உறுதிப்படுத்துவதுமல்லாமல் இந்நாட்டிற்கு வடவெல்லையாகிய ஹிமாசலத்திற்கும் வடபக்கத்திலிருக்கும் தேசமான டிபேட்டில் இப்பொழுது வழங்கும் சில பெயர்களைக் கொண்டு தமிழ்த் தேசத்தின் மூவரசரும் டிபேட்டு வரையில் படை யெடுத்துச் சென்றார்களென்றும் ஹிமாசலத்திலுள்ள கணவா யொன்றின் வழியாய் டிபேட்டு நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது அந்தக் கணவாயைப் பனி மூடிவிட்டதால் அவன் வழியடைபட்டுப்போக அவன் திரும்பினானென்றும் எழுதியதைப் படிப்பவர்கள் இதுவும் ஒரு மயக்கமோவென்று ஆராய முயல்வார்களென்றே நம்புகிறேன்.

இப்படையெடுப்பில் தமிழரசர் மூவரும் சம்பந்தப்பட்டவர்களென்றும் அவர்கள் மூவரும் ஒரே சமயத்தில் படையைத் திரட்டிக்கொண்டு கிளம்பினார்களென்றும் அவர்களுக்கு அப்பொழுது தலைமை வகித்தவன் கரிகாலனாகிய திருமாவளவனே யென்றும் பண்டிதர் அபிப்பிராயப்படுகிறார். இந்த அபிப்பிராயத்திற்கு அவர் ஓர் ஆதாரம் காட்டுகிறார். "தென்றமிழ் நாடாளும் வேந்தர் இமய நெற்றியில் விற்புலிகயல் பொறித்த நாள்" என்பதால் அவர்கள் பொறித்தது ஒரே நாளில்தான் இருக்க வேண்டுமென்றும் ஒன்றுகூடிச் சென்றதற்கு இது தக்க ஆதாரம் என்றும் அபிப்பிராயப்படுகிறார். ஆயினும், வில் ஒரு நாளும் புலி பின்னொரு நாளும் கயல் மற்றொரு நாளும் பொறித்திருக்கலாகாதோ? வெவ்வேறாக மூவர் சென்றபோதுங்கூட வடநாட்டார் புலமற்றுக்கிடந்தனர் என்பதால் அவர்களுடைய அசக்தியும் தமிழரசரின் சக்தியும் புலப்படாவோ? இரண்டுவிதமாகவும் அர்த்தம் செய்யக்கூடிய வாசகத்தை ஆதாரமாகக் காட்டி ஓர் அர்த்தந்தான் பொருத்தமுடையதென்று எப்படிச் சொல்லலாம்?

இமயப்படையெடுப்பைப் பற்றிப் பண்டிதரவர்கள் காட்டாத மற்றோ ராதாரத்தை ஆராவமுதர் காட்டியிருக்கிறார். சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் "முடி மன்னர் மூவருங்காத்தோம்பும் தெய்வ வடபேரிமயமலை" என்று வந்திருப்பது எல்லோரும் அறிந்ததே. ஏககாலத்தில் மூவராலும் காக்கப்பெற்ற தென்றால் ஏககாலத்தில் அந்த மூன்று பேரும் வெற்றியடைந் தனர் என்று ஊகிக்கலாமா ? தனித்தனியே வென்றாலும் அந்த வெற்றிகளின் பிரக்கியாதியால் எக்காலமும் மூன்றரசர்களின் ஆதிபத்தியத்திலிருந்து வந் தது என்று நாம் அர்த்தம் செய்யக்கூடாதா ? இந்த அற்பசந்தேகத்தையும் தீர்க்கக்கூடிய ஆதாரமொன்றை ஆராவமுதர் காட்டியிருக்கிறார். சிலப்பதி காரத்தில் ஆய்ச்சியர் குரவையில் "கயலெழுதிய விமயநெற்றியி னயலெழு தியபுலியும் வில்லும்" என்ற வரிகள் வந்திருக்கின்றன. இந்த வரிகளால் நாம் அறியக்கூடிய தென்னவென்றால் முதன் முதல் கயற்குறி யெழுதப் பட்டதென்பதும் பிறகே அதன் அயலில் புலியும் வில்லும் எழுதப்பட்டன வென்பதுமே. இப்படி முதன் முதல் பொறிக்கப்பட்டது கயற்குறி யான தற்குக் காரணம் ஏதாவது இருந்திருக்கவேண்டும். கயற்குறி பொறிக்கப் பட்டது காலத்தால் முற்பட்டதாக இருக்க வேண்டும் ; அல்லது கயற்குறி யானாகிய பாண்டியன் அப்படையெழுச்சிக்குத் தலைவனாயிருந்திருக்கவேண் டும். கயலை முன்வைத்துப் புலியையும் வில்லையும் பின்வைத்ததற்கு வேறு காரணம் காட்ட இயலாது. ஏககாலத்தில் மூவரும் படையெடுத்தார்களென் றும் அவர்களுக்குச் சோழன் தலைவனென்றும் கொண்ட பண்டிதரவர்களின் கொள்கைக்கு இந்த வரிகள் இடங்கொடுக்க மாட்டா.

மகதநன்னாட்டு வாள்வாய் வேந்தனைத் திருமாவளவன் பகைப்புறத்துச் சாய்த்தது எப்பொழுது என்று விசாரிக்கக் கிளம்பிய பண்டிதரவர்கள் இரு பொருளொட்டும்படியான வாசகத்தால் தம் முடிவை அதியுக்தியாய்க்கூறி யிருக்கிறார். இமாசலத்தை நோக்கிப் போவதற்கு முன்னாலேயே அவனை வென்றான் என்றும் இமாசலத்தினின்று திரும்பு காலையில் மகதத்தரசன் எதிர்க்க அவனை வென்றானென்றும் இரண்டு பொருளும் கொள்ளும்படி எழுதியிருக்கிறார். ஒரு பொருளே காணுமாறு அவ்விஷயத்தை முடிவு செய்கிறவரையில் மேலும் மேலும் சர்ச்சை செய்வதிற் பயனில்லை.

வலிபுள்ள விரோதிகளை ஜயிக்காமல் தனக்குப்பின்னால் விட்டு விட்டு வடக்கே கரிகாலன் சென்றான் என்பது அஸம்பாவிதம். அவர்களை வென்ற பின்பே வடக்கே சென்றிருக்கவேண்டும். 'அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த தோரண வாயில்' என்றதனால் மாத்திரமே அவனிடம் அவ்வளவன் சென்றவன் என்பதற்கு ஆதாரம் கிடைக்காது. நான் காட்டியுள்ள முத்தொள் ளாயிரச் செய்யுளைக் கூட்டிப் படிக்கா விட்டால் அந்தப் பொருள் கொள்ள முடியாது.

கலிங்கதேசத்தரசனாகிய காரவேலனுடைய வரலாறுகள் கரிகால னுடைய வரலாறுகளுக்குச் சில அமிசங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன என்று பண்டிதரவர்கள் கூறுகிறார். அந்த ஒற்றுமைகள் எவை யெவை

என்று சொல்லவில்லை. இருவர் பெயர்களிலும் உள்ள சகர, ரகர, லகர ஒற்றுமை தவிர வேறெதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

இமயமலையில் கரிகாலன் புலிக்குறியை எழுதினான் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் ஸிக்கிம் தேசம் வழியாகச் சென்று பண்டிதரவர்கள் சொல்லுகிறபடி சோல மலைக்கணவாய் வழியாகச் செல்லும்பொழுது வழியைப் பனிமூட அவன் திரும்பினான் என்று கொள்ளலாமா என்பதுதான் முக்கியமான கேள்வி. மகதம் நோக்கிச் சென்ற கரிகாலன் அதற்கப்பாலும் சென்றிருந்தால் பிற்காலத்தில் சேரன் செங்குட்டுவன் சென்றது போல் உத்தரகோசலம் சென்று இமயச்சிமயத்தை யடைந்து அங்குள்ள குயிலாலுவத் துமையொரு பாகத் தொருவனை வணங்கி யிருப்பான் என்பது நிச்சயம். வச்சிரநாட்டை அடைந்த கரிகாலன் மகதம் நோக்கிச் செல்லாமல் அதற்குக் கிழக்காகவுள்ள அங்கநாட்டின் வழியே சென்றிருக்க வேண்டும். அப்படியாயின் அந்த நாட்டையும் அடிப்படுத்தினான் என்று இளங்கோவடிகள் சொல்லாததற்குக் காரணம் என்ன என்பதைப் பண்டிதரவர்கள் சொல்லவில்லை. அவ்வழியை விட்டு விலகி வெகு தொலைவிலுள்ள அவந்தியைச் சொல்லியவர் அங்கத்தைச் சொல்லாமலிருக்க மாட்டார். இந்த விஷயம் ஒன்றையே முன்னிட்டு ஸிக்கிம் பிரதேசத்தை நோக்கிக் கரிகாலன் செல்லவில்லை யென்று சொல்லலாம்.

ஸிக்கிம் நாட்டிற் புகுந்து டிபேட்டை நோக்கிக் கரிகாலச்சோழன் சென்றானெனவும், அவன் சென்ற கணவாயொன்றிற்கு அதனால் சோல என்னும் பெயர் வந்திருக்கலாம் என்றும் பண்டிதரவர்கள் ஊகிக்கிறார். பண்டிதரவர்கள் கொண்ட அபிப்பிராயத்திற்கு அநுகுணமான விஷயமொன்றை நான் முதன் முதல் கண்டேன். அறிவாளர் அதையும் கவனிக்கவேண்டும். இலங்கை யெனப்பட்ட ஸிங்கலத்தைக் கரிகாலன் அடிப்படுத்தியிருந்தது. யாரும் அறிந்த விஷயமே. நான் காட்டியுள்ள முத்தொள்ளாயிரச் செய்யுளில் "ஈழமொருகான் மிதியா...வருமே கிள்ளி களிறு" என்பதும் கவனிக்கத்தக்கது. அவன் வடநாட்டிற்குச் சென்றபோது ஸிங்கலத்துச் சிற்றரசனும் அவனுடன் உதவியாக வந்திருப்பான் என்பது நிச்சயம். சோழன் சென்ற கணவாய்க்குச் சோல எனப் பெயர் வந்ததால் அவனுடன் வந்திருந்த ஸிங்கலத்தானுடைய பெயரால் ஸிங்கலி-ல என்னும் ஒரு பெயர் பிறந்திருக்கலாம். ஸிக்கிம்தேசத்தைப்பற்றிய நூல்களை நாம் படித்தால் ஸிங்கலி-ல என்ற மலைத்தொடர் ஒன்று அந்தத் தேசத்தில் உண்டு என்று அறிகிறோம்.[1] இந்த அருமையான விஷயத்தைக்கொண்டு சோழனும் ஸிங்கலனும் சேர்ந்து டிபெட்டின்மேல் படையெடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

---

1. "The main axis of the Himalayas, which runs east and west, forms the boundary between Sikkim and Tibet. The *Singālila* and Chola ranges.........run southwards from the main Chain . . . ." *Imperial Gazetteer of India*, XXII ; p. 365.

ஆனால், பெயர் ஒற்றுமையைக் கொண்டே நாம் வாது செய்வது நியாயமாகாது. ஒலியொற்றுமைக்குக் காரணங்கள் பல விருக்கலாம்; அஃதொன்றையே நம்பினால் ஆபாஸங்கள் பல வந்து சேர்ந்துவிடும். டிபெட்டு தேசத்துப் பாஷையில் ல என்று ஒரு வார்த்தை யிருப்பதாகவும் அதற்குக் கணவாய் என்ற அர்த்தம் இருப்பதாகவும் பண்டிதரவர்களே ஒப்புக் கொள்ளுகிறார். சோல என்னும் கணவாயின் பெயர் சோ என்றும் ல என்றும் இரு பிரிவாய்ப் பிரிபடுமோனால் சோல என்பது சோழன் என்பதன் மரூஉவாகக் கொள்ள முடியாது. இதை யறிந்த பண்டிதரவர்கள் சோல என்னும் வார்த்தைக்கு டிபெட்டு பாஷையில் வேறு பொருள் காணவில்லை என்றும் அந்தச் சொல்லானது இரு சொல்லாகாமல் ஒரே சொல்லென்றும் ஒரு சொல்லாகவே மலைத்தொடர் ஒன்றுக்குப் பெயராகி யிருக்கிறதென்றும் சொல்கிறார். இது விஷயம் ஆராயவேண்டியதுதான். சோல என்று மலைத்தொடருக்குப் பெயரிருந்தால் அச் சொல்லில் ல என்னும் பதத்திற்குக் கணவாய் என்று பொருளிருக்காது. சோல மலையில் உள்ள கணவாய்க்கு சோல என்பதுடன் ல வைக் கூட்டிப் பெயர் கொள்ளலாம். அப்பொழுது டிபெட்டுப் பாஷை யிலக்கணத்தின்படி சோலல என்றாகுமோ அல்லது சோல என்றே நிற்குமோ நாம் அறியோம்; பண்டிதரவர்களும் அறியார். அன்றி, சோ எனவும் ல எனவும் இரண்டு மொழிகள் புணர்ந்து சோல என்று பெயர் கிளம்பி யிருந்தால் சோ எனும் கணவாயின் பெயர் சோல என்று ஸ்வரூபம் ஏற்றுப் பிறகு அக் கணவாயைக் கொண்ட மலைச்சாரலுக்கும் பெயராகியிருக்கலாம். டிபெட்டுப் பாஷையின் அகராதி யொன்றில் சோ என்று ஒரு பதமுண்டெனவும் அதன் பொருள் விளங்கவில்லை யெனவும் சொல்லியிருக்கிறது.[1] சோ என்ற பெயர் அந்தப் பாஷையில் கிடைக்காமலில்லை. டிபெட்டின் தலைநகராகிய லாஸாவிற்குத் தெற்கே 30 மைல் தொலைவில் த்ஸாங்கோ என்னும் நதியின் தென்கரையில் சோ என்று ஒரு கிராமம் இருக்கிறது.[2] சோல மலைத்தொடரின் அருகில் சோ-கஞ்சன் எனவும் சோ-கஞ்சன்ஜிங்கா எனவும் இரண்டு மலைகள் இருக்கின்றன[3]; வடமேற்கில் சோஉயோ என்று ஒரு மலையும் உண்டு[4]; அந்நாட்டில் சோ-லுங் என்று மற்றொரு பெயரும் காணலாம்.[5] அன்றியும் சோ-லோ-ஸ்ஸு என்று ஒரு ஜனக்கூட்டமும் உண்டென்பதாகத் தெரிகிறது.[6] இவர்களால்தான் சோல மலை என்ற பெயர் வந்ததோ?

---

1. H. A. Jaschke, *Tibetan—English Dictionary*.
2. Sarat Chandra Das, *Journey to Lhassa and Centr al Tibet*, p. 235, and map at beginning.
3. *Ibid*, p. 21.
4. C. G. Bruce, *The Assault on Mount Everest*, pp, 72, 158, 209, 246.
5. Sven Hedin, *Southern Tibet*, IX, IV, p. 26.
6. *Ibid*, VIII, p. 305.

இவ்வாறு பலமுறையும் சோ என்பது தனிமொழியென்று வெளிப்படும் பொழுது, சோ வும் ல வும் சேர்ந்துண்டானது சோல என்று நாம் தீர்மானிப்பதே நியாயமாகத் தோன்றுகிறது.

பல விதங்களிலும் ஆராயுமிடத்து சோல மலைக்கும் சோழர்களுக்கும் எவ்வித சம்பந்தமு மில்லையென்றே தோன்றுகிறது. இந்தக் காரணங்களை யெல்லாம் மறுத்து வேறு பிரபலமான காரணங்கள் காட்டினாலன்றிப் பண்டிதரவர்களின் கொள்கை ஆதாரமற்றது என்று கொள்ளவேண்டும்.

ஆக்ஷேபணைகள் பல சொல்லிவிட்டேனாலும் பண்டிதரவர்களின் வியாசத்தைப் போற்றியே முடிவுசெய்யக் கடமைப்பட்டவன். தென்னாட்டிலே கிடந்த சோழர்களை இந்நாட்டு வடவெல்லைக்குக் கொண்டு போயிருக்கிறார்; சோழன் தனது படை வன்மையால் தான் அடையாத பிரதேசங்களையும் பண்டிதரவர்களுடைய கல்வி வன்மையால் அடைந்துவிட்டான். ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் எழுதுபவராகிய இப்புலவர்பெருமான் தம்மால் முதன்முதலாகத் தெரிந்து வெளியிடப்பட்டுள்ள செய்தி இந்த வியாசத்தில் ஒன்றே ஒன்றுதான் என்று சுருக்கியே கூறியிருக்கிறார். நிறை குடம் நீர் தளும்புமோ ?

விடை

மு. இராகவையங்கார்

தமிழ் வேந்தாது இமயப்படையெடுப்புப் பற்றிய என் கருத்துக்களை ஆசங்கித்து "இளையாழ்வான்" என்பவர் எழுதிய கட்டுரையைப் பார்வையிட்டேன். அதுபற்றி யான் கூறுதற்குரியவை அடியில் வருமாறு :—

1. தமிழ் வேந்தரின் வடவெற்றிபற்றி இப்பத்திரிகையில் யான் எழுதியவை சில பிறரால் முன்னரே எழுதப்பட்டவை என்ற கருத்தில் நண்பர் கூறுகின்றார். 15 வருஷங்கட்கு முன் யான் வெளியிட்ட சேரன் செங்குட்டுவன் சரித்திரத்தில் அவன் குணாதிசயங்களைக் கூறியவிடத்து அவற்றை நான் விளக்கியிருத்தலை நண்பர் அறிய விரும்புகிறேன்.

2. தமிழரசாது இமயப்படையெடுப்புப்பற்றிய என் கருத்துக்களையெல்லாம் அடியோடு மாற்றுதற்கு ஏற்ற கருவியாக, 'கச்சியொருகால் மிதியா' என்ற பாடலொன்றை நண்பர் கையாளுகின்றார். முத்தொள்ளாயிரத்தைச் சேர்ந்த அவ்வெண்பா அந்நூலாசிரியர் காலத்தவனான சோழனொருவனைப் பற்றியதாகும். அவ்வாசிரியர் சங்ககாலத்துக்கும் பிற்பட்டவர் என்பது தெளிவு. அதனால், அப்பாட்டைக் கரிகாலனுக்கு உரியதாகக்கொண்ட நண்பர் கருத்துத் தவறாகும். 'கிள்ளியின் களிறு, கச்சியை ஒரு காலாலும் உஞ்சையை ஒரு காலாலும், ஈழத்தை மற்றொரு காலாலும் மிதித்து (அழித்து) வருகின்றது' என்பது அப்பாட்டின் கருத்து. கச்சிப்பதி கரிகாலனால் நிருமிக்கப்பட்டது என்பது, 'அஞ்சின் முடிகவித் தைம்பதாமாண்டளவிற், கஞ்சிகா வேரிக் கரைகண்டு' என்ற வெண்பாத் தொடராலும் அவன் சரித்திர வழக்காலும் அறியப்பட்டது. அவ்வாறு கரிகாலன் நிருமித்த நகரத்தையும் அச்சோழனுக்கு நட்பரசனாகச் சிலப்பதிகாரங் குறிப்பிடும் உஞ்சை வேந்தனது அவந்தி நகரையும், அச்சோழன் கோக்களிறே மிதித்தழித்தது என்பது நண்பர் கருத்தாகின்றது. ஆயின், இதனினும் பெரிய விபரீதச்செயல் வேறு யாதுளது? மதத்தால் அறிவிழந்து சோழன் களிறு அவ்வாறு செய்துவிட்டது என்பது அவர் உட்கிடை போலும்! ஆனால், அக்களிறு தன்னறிவிழந்து ஒன்றுஞ் செய்துவிடவில்லை என்பதே உண்மை.

3. இமயத்துக்கு அப்பாலும் திருமாவளவன் செல்லக் கருதியதும், அது பயன்படாமற் போனதும், திரும்புகாலையில் அவன் வச்சிரமகத நாட்டரசர்களை வென்று திறைகொண்டதும் பிறவும் நானே படைத்தெழுதியவை என்று கருதி நண்பர் அவற்றின்மேற் பல்வகை ஆசங்கைகளைக் கூறுகிறார். "தென்னாட்டிலே கிடந்த சோழர்களை இந்நாட்டு வடவெல்லைக்குக் கொண்டு

போயிருக்கிறார்; சோழன் தன் படைவன்மையால் தானடையாத பிரதேசங் களையும் பண்டிதரவர்களுடைய கல்விவன்மையால் அடைந்துவிட்டான்'' என்ற அவ்வன்பர் கூற்றுக்கள் அறியத்தக்கன. இங்கே 'பண்டிதரவர்கள்' என்று என்னை அவர் கருதினும், அச்சொல் உண்மையில் இளங்கோவடி களையே குறிப்பதாகும். அவரன்றோ மேற்கூறிய செய்திகளை யெல்லாம் வெளியிட்டவர். ஆனால், நண்பர்க்கு யாரானால் என்ன? எல்லோரும் பண்டிதகோஷ்டியினர் தாமே? அதனால் அச்சேரவடிகளையும் அவர் பொருட் படுத்த வேண்டியவரில்லை!

4. 'தமிழ் வேந்தர் வெவ்வேறு காலங்களில் தனித்தனியே இமய வெற்றி பெற்றவராவர்' என்று, (முன்னொடு பின் முரணக்) கூறி, அதற்கு ''முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் . . . இமயமலை'', ''கயலெழுதிய விமய நெற்றியில் அயலெழுதிய புலியும் வில்லும்'' என்ற பண்டிதரான இளங்கோ வடிகள் கூற்றுக்களையே தமக்கும் ஆதரவாகக் காட்டுகின்றார். அத்தொடர் கள் எவ்வகையில் நண்பர்க்கு ஆதாரமாயினவோ தெரியவில்லை. அத்தொடர் களை என் கருத்துக்களுடன் சேர்த்து நோக்குவோர்க்கு என் கொள்கையையே அவை வலியுறுத்தி நிற்றலைக் காணலாம். கயலின் இருபக்கத்தும் வில்லும் புலியும் எழுதப்பட்டன எனின், அவை வேறுவேறு காலத்து அமைந்தவை யாகத்தான் இருக்கவேண்டும் என்ற நண்பர் முடிவு அதிசயமானதே. 'சேர பாண்டிய சோழர்' என்ற முறையில் முன்னோர் வழங்கிவந்தவாறே, பாண் டியனது கயல் இடையிலும், சோழன் புலியும் சேரன் வில்லும் அதன் பக்கங் களிலும் இமயத்தில் அமைந்துள்ள நிலையைக் காட்டி, அவ்வமைதிகொண்டு, தாம் கூறப்புக்க பாண்டியர் பெருமையைச் சிறப்பிக்கின்றார் சேரவடிகள் என்பது அத்தொடர்களை நுணுகி நோக்குவோர்க்கு எளிதின் விளங்கும். இவ்வாறு மூவருங் கூடிச் செய்த அருஞ்செயலிற் பாண்டியன் இடைப்பட நின்று பெருமை பெற்றுள்ளதைச் சந்தர்ப்பத்திற்கேற்ப நயப்படுத்திக் கூறிய அவ்வடிகள் கருத்தை அறியாது, முதலிற் பாண்டியனாற் கயல் பொறிக்கப் பட்டதென்றும், அதன்பின் தனித்தனியே வில்லும் புலியும் வரையப்பட்டன என்றும் கூறுவது பொருத்தமற்றதென்க. கூடிச்செய்த அருஞ்செயலைத் தம் குலப் பெருமையாக அவ்வவர் பாராட்டிக்கொள்ளுதலும் வெற்றிக்குறி யாகத் தம் இலாஞ்சனைகளை ஓரிடத்துச் சேரப் பொறிப்பதும் மரபென்பது, முன்னரே என்னால் விளக்கப்பட்டுள்ளது.

5. காரவேலனைப்பற்றிய என் கீழ்க்குறிப்பொன்றை அவ்வன்பர் நகை யாடுகின்றார். இளமையில் அரசெய்தியதும், மகத அங்க வேந்தர்களையும் மற்றும் உத்தரபத வரசர்களையும் வெற்றி கொண்டதும், அவ்வெற்றியிற் பெற்ற அருந்திறைப் பொருள்களைக் கட்டிடமமைத்துச் சேமித்ததும், காலப் பழமையும் ஆகிய பொருத்தங்கள் நோக்கிக் கரிகாலன் காரவேலர்களிடையே 'சில அமிசங்களில்' ஒற்றுமையுள்ளன என்று எழுதினேன். தன் களிற்றைக் கொண்டே தான் நிருமித்த நகரையும் நண்பனூரையும் அழித்துக்கொண் டவனாகக் கரிகாலன் செயலை ஒற்றுமைப்படுத்திக்கொண்டவர்க்கு என் கூற்று நகை விளைக்காமற் போமோ?

6. வடயாத்திரையில் கரிகாலன் சென்றுவந்த வழியும், செங்குட்டுவன் சென்றுவந்த வழியும் ஒன்றாகவேண்டும் என்று கருதி நண்பர் சில ஆக்ஷேபங்களைக் கூறுகின்றார். 'செங்குட்டுவன், மாளுவ வேந்தரான நூற்றுவர் உதவி கொண்டு கங்கை கடந்து உத்தரஞ் சென்றான்' என்று இளங்கோவடிகள் கூறுவர். இதனால் அக்குட்டுவன் பாரதநாட்டின் இடைப்பகுதியாகிய மாளுவதேசத்தை அடுத்து இமயஞ் சென்றவன் என்பது பெறப்படும். மகத வச்சிர வேந்தர்களை வென்றவனாக அச்சேரன் கூறப்பட்டிலன். எனவே, செங்குட்டுவன் சென்ற இமயப்பகுதி அம்மாளுவத்துக்கு வடக்கிலுள்ளதென்பதும், கரிகாலன் சென்ற இமயப்பகுதி வச்சிரமகதநாடுகட்கு வடபாலுள்ளதென்பதும் தெரியலாம். திரும்புகாலையிலும் செங்குட்டுவனை நூற்றுவர்கன்னரான மாளுவ வேந்தர் உபசரித்திருத்தலால், வச்சிரமகத தேசங்களை அவன் அணுகியவனல்லன் என்பதோடு சென்ற வழியாகவே திரும்பியவன் என்பதும் பெறலாகும். செங்குட்டுவனது நீண்ட வடயாத்திரையில் அவன் சென்ற வழியிலுள்ள பிரதேசங்களில் ஒன்றையுமே கூறாது, அவனால் அடையப்பட்ட முடிவிடத்தையும், அங்கு நிகழ்த்திய அருஞ்செயலையுமே கூறியவாறு, கரிகாலன் அடைந்த முடிவிடத்தையும் அங்கு நிகழ்த்திய செயல்களையுமே இளங்கோவடிகள் கூறலாயினர். இளங்கோவடிகள் என் அது கூறினரில்லை, இது கூறினரில்லை என்று ஆசங்கிப்போர், அவ்வடிகளை நோக்கி வரங்கிடந்தே தம் சந்தேகநிவர்த்தி செய்துகொள்ளற்கு உரியர்.

7. 'Chola range' (சோழமலைத்தொடர்) என்ற பெயர்வழக்கு இமயப்பகுதியொன்றற்கு வழங்கி வருதல்பற்றி நான் கூறியதை நண்பர் பெரிதும் ஆக்ஷேபிக்கிறார். இத்தகைய தடைகள் என் கருத்தில் நிகழக்கூடியன என்பதை நான் எதிர்பாராதவனல்லன். திருமாவளவன் வச்சிர மகதநாடுகட்கு வடபாலுள்ள இமயப்பகுதிக்குச் சென்று வந்தவன் என்ற குறிப்பு இளங்கோவடிகள் வாக்கால் நன்கறியக் கிடக்கின்றது. அவ்வளவன் தன் காலத்து இணையற்று விளங்கியவன் ஆதலாலும், தமிழ் வேந்தரது ஒற்றுமைச் செயலே வடவரையும் வணக்குதற்குரியதாலும் அவ்வளவன் தலைமையில் இமயவெற்றியைத் தமிழ் வேந்தர் ஒன்றுகூடி அடைந்தவராகக் கூறுவது பொருத்தமென்று கருதலானேன். இக்கருத்தை நண்பர் ஏற்காததற்குத் தக்க காரணமொன்றும் கூறவில்லை. அஃது அவர் கருத்துப்படி கூட்டுச்செயலில்லையேனும், திருமாவளவன் தனியே இமயவெற்றி பெற்றவன் என்பதில் அவர் ஐயுற இடமில்லை. அவன் சென்றுவந்த இமயப்பகுதி 'Chola range' என்ற பெயர் பெறுமாயின், அஃது ஆராய்ச்சிக்கு உரியதேயன்றோ? அதன் உண்மை தெரிய விரும்பியே, அப்பெயர்வழக்கைப் பலர்க்கும் அறிவிக்க விரும்பினேன். 'Chola' என்பது ஒரு மொழியாகவே அமைந்திருத்தலும், வேறு சரித்திரப்பொருள் அதற்குக் காணப்படாமையும் அச்சொல் சோழவேந்தன் தொடர்புடையது போலும் என்று கருத இடந்தந்தது. இவ்வையத்தை நண்பர் ஆராய்ச்சியுரை நீக்கவல்லதோ என்று அவாவுடன் திருப்பித்திருப்பிப் பார்த்த எனக்கு, அப்பயனின்றி அசதியே தோன்றியது.

சோ என்ற சொல்லே தீபெத் பாஷையில் இல்லையென்று நான் கூறவந்தவனில்லை. அவ்வெழுத்தை முதலாகக்கொண்டு அப்பிரதேசத்துக்கு வழங்கும் பெயர்கள் சிலவற்றை நண்பர் காட்டலாயினர். அவற்றுக்கும் நான் குறிப்பிட்ட இமயப்பகுதிக்கும் ஒரு சம்பந்தமும் காணேம். அவர் குறித்த பெயர்களெல்லாம் சொல்லிடையில் ‘ஜபன்’ குறி இட்டுக் காட்டப்பட்டுள்ளன. அதனுல், அவை பன்மொழிப்பெயர்கள் என்பது விளங்கும். நான் குறித்த இமயப்பகுதியோ அவ்வாறு யாண்டும் அக்குறியிடப்பெறுமையால் அஃது ஒருமொழியென்றே தெரிகின்றது. ‘சோ-லோ-ஸ்ஸு’ என்ற ஜனக் கூட்டத்தின் அடியாக அம்மலை பெயர்பெற்றதாகலாம் என்று நண்பர் ஊகிக்கின்ருர். அவ்வூகத்துக்குச் சிறந்த ஆதாரமொன்றையும் அவர் காட்டவில்லை. அவ்வாருயினும் ‘சோ-லோ-ஸ்ஸு’ என்றன்ருே அம்மலைப்பெயர் வழங்கியிருக்கவேண்டும் ? அன்றியும், ‘சோ-லோ’ என்பதும் ‘சோல’ என்பதும் எப்படி ஒற்றுமைப்படக்கூடியன ? இன்னேரன்ன காரணங்களால் ‘Chola’ மலையின் உண்மைப்பொருளை ‘இளையாழ்வார்’னும் தெரிந்து கூறினவர் அல்லர். அதன் உண்மைப்பொருள் இதுதான் என்று ஆதாவுடன் பிறர் விளக்கித் தெளிவிக்கும்வரை, நான் கருதிய சரித்திரப்பொருள் தவருனது என்று கூறுதற்கு எவரும் உரியவரல்லர். இமயப்பகுதியுள் ஒன்ருன சிங்கலீ-லவுக்குத் தாம் ஒரு பொருளைக் கற்பித்து, யான் கூறியது அதனுடன் ஒக்கும் என்ருர். ஈழவேந்தன் கரிகாலனுல் வெல்லப்பட்டவன் என்பதே அவர் காட்டிய முத்தொள்ளாயிரப்பாடலின் கருத்தாகும். அது முன்னரும் விளக்கப்பட்டது. அவ்வேந்தன் கரிகாலனுடன் நண்பனுய் இமயஞ்சென்றவன் என்று தாம் கண்ட கனவை நம்பிப் பிறரை நகையாடப் புக்க நண்பர் செயலை நான் என் என்பது !

முடிவில், எனது நிரதிசயமான ஆற்றல்களைப்பற்றிக் கூறி அவ்வன்பர் என்னைச் சிறப்பிக்கலாயினர். அதுபற்றி நானும் சில கூறவேண்டியவனே. நெடுநாளாகத் தமிழ்த்தொண்டு செய்து வருவோருள் யானும் ஒருவன் என்பது பலரும் அறிவர். ஆயினும், அத்தொண்டைப் பாராட்டி ஒருவரும் என்னைச் சிறப்பிக்க முன்வராதது குறையாகவே இருந்தது. இப்போது தமிழினருமைபெருமைகளை அறிந்த ‘இளையாழ்வான்’ முன்வந்து எனக்குப் ‘புலவர்பெருமான்’ என்ற பெயர் சூட்டி எனது நெடுநாட்குறையை நீக்கிவிட்டனர் ! எனது சகோதரராகிய அவரது அரிய நன்றி என்னுல் மறக்கத் தகுமோ ?



சுக்கூர் அணை :—ஸிந்து நதியைத் தடுத்துக் கட்டப்பட்ட இந்த அணையானது இவ்வருடம் ஜனவரி மாதம் 13-ம் தேதி மேன்மை தங்கிய வைசிராய் அவர்களால் திறக்கப்பட்டது. இந்த அணை கட்டப்படுகையில் மேற்பார்த்து நடத்துவித்த பிரதம எஞ்ஜினீரான சி. எஸ். சி. ஹாரிசனுக்கு மன்னர்பிரான் 'சர்' பட்டம் அளித்தார்.

இந்த அணையானது 1923-ம் வருடம் ஜூலை மாதம் அமைக்கத் தொடங்கப்பட்டது. இது 3½ லக்ஷம் பவுன் செலவிற் கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து பாயும் நீர் 55 லக்ஷம் ஏகரா விஸ்தீரணமுள்ள சிந்து, பலுசிஸ்தானம், கைராபூர் சமஸ்தான நிலங்களுக்குப் பாயுமாம். இருபது வருடகாலமாக இதை நிர்மாணிப்பதுபற்றி அரசாங்கத்தார் ஆலோசனை செய்து வந்தனர். நீர்ப்பாசனங்கள் சீர்திருத்தத்தில் சென்ற ஒரு நூற்றாண்டிற்கிப்புறம், இதுவே மிகப் பெரிய முறையாகும். சிந்து நதியே சிந்துவின் செழிப்பிற்குக் காரணம். நதி வாரிக்கொண்டு வரும் வண்டல் தங்குமிடங்களில் பயிர் செழித்து வளர்கிறது. மழை அரிதாயுள்ள அந்தப் பிரதேசத்தில் சிந்து நதி ஜலமே பாசனத்திற்கு உபகாரப்படுகிறது. வருடத்தில் எட்டு மாதம் நதியில் ஜலம் வெகு குறைவாகவே போகும். ஆதலால் அந்த நீரைப் பாசனத்திற்குபயோகப்படுத்த முடியாமல் பலவிடங்களில் சங்கடமேற்படுகிறது. நீரும் வீணே கடலில் போய் விழுகிறது. ஜலம் எப்பொழுது வருமென்று நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லையாதலால் விவசாயிகள் விதி வசம்போல் நடக்கட்டுமென்று பயிர் செய்யவேண்டியதாயிருக்கின்றது. இத்தகைய நிலையின்மையைப் போக்கி விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளளிக்கவேண்டியது அவசியமாயிற்று.


1847-ம் வருடத்தில் கர்னல் வால்டர் ஸ்காட் என்பவர் முதன்முதலாகச் சுக்கூருக்கும் ரோஹரிக்குமிடையே அணை போடுவது நலமென்று ஆலோசனை கூறினார். அதற்குப் பிறகு அறுபது வருடங்களாக ஆலோசனைகளும் ஆக்ஷேபணைகளும் நடந்துவந்தன. 1904-ம் வருடத்தில் டாக்டர் சம்மர்ஸ் இந்த ஆலோசனையை மறுபடி யாரம்பித்தார்; பம்பாய் சர்க்காரும் இக்காரியத்தின் ஆவசியகத்தை உணர்ந்தார்கள்; 1920-ம் வருடம் நிச்சயமான திட்டம் தயாரிக்கப்பட்டது. வருட முழுவதும் ஜலம் ஓடுமாறு செய்வதற்கு ஓரிடத்தில் ஜலத்தைத் தேக்கிவைத்துப் போதிய அளவைத் திறந்து விடுதலே இந்த வேலையின் கருத்து. இங்கிலாந்தில் இந்தியா மந்திரி சில நிபுணர்களை நியமித்து வேலையை ஆராய்ச்சி செய்தார். லண்டன் கமிட்டியார் அணை மணலிலேயே நிறுவப்பட வேண்டுமென்று கருதினர். ஆனால் பம்பாய் எஞ்ஜினீயர்கள் பாறையின்மேல் அஸ்திவாரம் போட்டு நிறுவுதலே நலமென்று கூறினர். மகாயுத்தம் ஏற்பட்டது காரணமாக 1918-ம் வருடம் வரை வேலையை ஆரம்

பிக்க முடியவில்லை. 1920-ம் வருடம் இந்தியா சர்க்கார் கூறியதை இந்தியா மந்திரி ஆமோதித்து வேலையை ஆரம்பிக்க அனுமதி கொடுத்தார். சீக்கிரத்தில் வேலை ஆரம்பிக்கலாமென்று பம்பாய் சட்டசபை திட்டத்தை அனுமதித்துவிட்டது. 1923-ம் வருடம் ஜூலை மாதம் முதல் தேதி வேலையாரம்பிக்கப்பட்டது. இந்தியா அரசாங்கத்தார் 18 கோடி 35 லக்ஷம் ரூபாய் இந்த வேலை விஷயத்தில் செலவாகுமென்று மதிப்பிட்டனர். இவ்வேலையின் முக்கிய கருத்து: கால்வாய்களின் முகத்துவாரத்தில் வண்டல் சாடாவண்ணம் காப்பது; கால்வாய்களில் குறிப்பிட்ட அளவு நீர் போகவிடுவது; வேலையில்லாதிருக்கும் விவசாயிகளுக்கு வேலையளிப்பது. இதன் மூலம் கைராபூர் பிராந்தியத்தில் 238 ஆயிரம் ஏகர் நிலத்தில் கோதுமை அதிகமாக விளையும். 2658 ஏகர் நிலத்திற்கு அதிகமாக நீர்ப்பாசன மேற்படுகிறது.

"அணைகட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் தகுதியானதாகும். கட்டிடமுறையும் பல விஷயங்களில் சிறந்ததாகவே யிருக்கிறது. பெரியதும் தைரியத்தோடு ஆரம்பிக்கப்பட்டதுமான இந்த வேலை சிந்துவுக்குச் செழிப்பை யளிக்கக்கூடியதாகும்" என்று விஸ்வேசவரையா கமிட்டியார் கூறினர்கள். லான்ஸ்டௌன் வாராவதிக்கு மூன்று மைலுக்குக் கீழ் சக்கூரில் அணை கட்டி, பாசன சௌகரியத்திற்காகக் கால்வாய்கள் தோண்டுவதே முக்கியமான வேலையாகும். அணைக்கதவுகள் 40 டன் நிறையுள்ளனவாயிருப்பதால் சாதாரணமாக மின்சார சக்தி வேண்டியிருக்கும். அணைக்கட்டின் நீளம் ஒரு மைல். வெள்ளைக்கல்லால் அது கட்டப்பட்டிருக்கிறது. ஜலத்தின் கீழ் செய்யப்பட்ட வேலையே மிகுந்த கஷ்டமானது. உள்ளிருந்த நீரைப் பம்புகள் மூலம் வெளியாக்கவேண்டியதிலிருந்து கால்வாய்கள் வெட்டுவதற்கும் இயந்திரங்களின் உதவி அவசியமாயிருந்தது.

அசுணமா :—இஃது இசையை அறியும் ஒரு விலங்கு. இதைப் பறவையென்று கூறுவதும் உண்டு. யாழை வாசித்தால் இஃது அருகில் வந்து கேட்டு மயங்கி நிற்குமாம். வேட்டுவர்கள் யாழ் வாசித்து இது மயங்கி நிற்கையில் பிடித்துக்கொள்வார்களாம். நற்றிணை யென்னும் சங்கநூலில் இவ்விலங்கைப்பற்றிய ஒரு செய்தி கூறப்படுகின்றது. தலைவன் ஒருவன் ஒரு தலைவியின்பால் அன்புபூண்டு பின்பு பிரிந்தான். அவனுடைய பிரிவை ஆற்றாத அந்தத் தலைவி தலைவனால் அருளப்பட்ட அன்பை 'அசுணங்கொல் பவர்கை'க்கு உவமையாகக் கூறுகின்றாள். முதலில் இன்பஞ்செய்து பின்பு துன்பம் விளைக்கும் தன்மையன அத்தலைவன் செய்த அன்பும் வேட்டுவர் கையும் என்பது இங்கே அறிதற்குரியது. கம்பர் தம் இராமாயண அவையடக்கத்தில் இவ்வசுணமாவைப்பற்றிய செய்தி யொன்றைக் கூறுகின்றார். 'பல இனிய செய்யுட்களைக் கேட்டுக் களித்த ஆன்றோர்கள் காதுகளுக்கு எனது புன்கவி, நல்ல யாழோசையைக் கேட்ட அசுணமாக் கேட்டு நையும்படி கொட்டும் பறையோசையோடு ஒக்கும்' என்னும் பொருள்பட அவர் கூறுகின்றார். எனவே, அசுணமா, பறையோசையைக் கேட்டால் துன்புறும் இயல்புடையதென்பது பெறப்படும்; இறந்துவிடுமென்று கூறுவாரும் உளர்.

ச. கு. க.



இயற்கைக் குறிப்பு: [திருவனந்தபுரம் ஸ்ரீமான் டி. லக்ஷ்மணபிள்ளை அவர்கள், பி. ஏ. இயற்றியது ; ஆசிரியரிடம் கிடைக்கும் ; விலை அணா, 3.]

இது, பலவகைச் சாஸ்திரசம்பந்தமான செய்திகளிற் சிலவற்றை அமைத்து வெண்பா யாப்பிற் பாடப்பெற்ற நூல். இதில் 120 வெண்பாக்கள் உள்ளன. பௌதிகசாஸ்திரம், இயற்கையின் உயர்வு, தாவரசாஸ்திரம், பிராணிசாஸ்திரம், மனிதன் வளர்ச்சிமுறை முதலிய பலவகைக் கலைகளைப் பற்றிய குறிப்புக்களை இதிற்காணலாம். சாஸ்திர சம்பந்தமான சொற்களையும் தொடர்களையும் ஆசிரியர் மொழிபெயர்த்து அமைத்திருக்கின்றார். இழுப்பு (Gravitation), படைப்புப் புறம்பொழிவு (Creative evolution), தொல்மந்தி (Primates) என்பன அவற்றிற் சில. இந்நூலின் இறுதியிற் கூறப்படும், கீழ்ப்பிறவிகளின்பால் அன்பு, மனிதனுக்குரிய உதிரங்கலவா ஊண் எனுங்குறிப்பு, விலங்குலகத்து விந்தைகள் என்னும் தலைப்புக்களிற் கூறப்படும் செய்திகள் ஜீவகாருண்யத்தின் இன்றியமையாமையையும் இயற்கைச் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

" வீரத் தனமோ வெருவு முயல்வேட்டை ?
கோரக் கொடுமையன்றோ மான்வேட்டை—பாரிடைமுன்
காட்டாளர் வன்பிழைத்த கன்மத் தொடர்பன்றோ
நாட்டாளர்க் கிந்த நடை"

என்பது போன்ற வெண்பாக்கள் மனிதவாழ்வில் அன்புநெறி யின்றியமையாமையைப் புலப்படுத்துகின்றன.

ஆசிரியர் பலகலையுணர்வோடும் தமிழ்க்கலை நூல்கள் வெளிவர வேண்டுமென்னும் ஆர்வத்தோடும் இதனை ஆக்கியுள்ளார். இத்தகைய முயற்சிகள் தமிழ் மொழியின் ஆக்கத்தைப் பெருக்குவனவாகும்.

ஆசிரியர் ஆங்காங்கே ஆங்கில அறிஞர்கள் கூறிய அருமைச்சொற்றொடர்களைத் தங்கொள்கைக்கு மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். இந்நூல் செய்யுள்நடையாக இருத்தலின் இதற்கு ஒரு குறிப்புரையை எழுதி இதனோடு சேர்த்து ஆசிரியர் வெளியிடின் இன்னும் மிக்கபயன் உண்டாகும் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி ஆலய வைபவம்:—[ஸ்ரீமான் ஆயுர்வேத பண்டிதர் சை. ர. நமசிவாய (ராஜயோகி) செட்டியாரவர்கள் இயற்றியது;

கிடைக்குமிடம்: ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை, நெ. 4/34, நயினியப்ப நாயக்கன் தெரு, சென்னை ; விலை அணா, 6.]

சென்னை, கந்தசாமி கோயில் என வழங்கும் ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி ஆலயத்தின் வரலாற்றைக் கூறுவது இந்நூல். ஆயிரவரென்னும் பேரி செட்டியார் மரபினராகிய மாரிசெட்டியாரென்பவர் இற்றைக்கு 260-வருடங்களுக்கு முன்பு, வழக்கம்போல் கிருத்திகைக்குத் திருப்போரூருக்குச் சென்று வருபவர் ஒரு முறை இடையிற்றங்கித் துயின்றார். அப்பொழுது முருகப்பெருமான் அவரது கனவில் எழுந்தருளித் தாம் ஒருபுற்றில் இருப்பதாகக்கூறித் தம்மைக் கொண்டுசென்று சென்னையிற் பிரதிட்டிக்க வேண்டுமென்று கட்டளையிட்டருளினார். அவ்வாறே அப்புற்றிலிருந்த விக்கிரகத்தை எழுந்தருளுவித்துச் சென்னையில் மாரிசெட்டியார் பிரதிட்டித்தார். ஆயிரவர்களுடைய பெருமுயற்சியினால் பின்னர் அவ்வாலயம் சிறப்பெய்தியது. அதுவே கந்தசாமி கோயிலாகும்.

இவ்வரலாறு விரிவாக இந்நூலிற் கூறப்பட்டுள்ளது. சென்னையைப் பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் சிலவும், வைசியர்களுடைய பெருமையும், ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமியின் மீதுள்ள துதிச்செய்யுள்களும் இதிற் காணப்படுகின்றன.

இவ்வளவு செய்திகளைத் தொகுத்து வெளியிட்ட ஆசிரியரது உழைப்பு பாராட்டுதற்குரியது.

துரியவெளி அல்லது எனது அனுபவம்:—[ஸ்ரீமான் இராமலிங்கம் அவர்கள் எழுதியது; கிடைக்குமிடம்: பி. வி. இராமலிங்கம் பிள்ளை, பின்னலூர், தென்னாற்காடு ஜில்லா; ஓர் அணாஸ்டாம்பு அனுப்புவாருக்கு அனுப்பப்படும்.]

இதில் இதனை இயற்றியவர் தாம் குருவினிடம் சென்று உபதேசம் பெற்ற வரலாற்றைக் கூறுகின்றார். சில கதைகள் இதிற் காணப்படுகின்றன.

மயிலாப்பூர் லா ஜர்னல் பிரெஸ்ஸில் அச்சிடப்பெற்றது.

கலைமகள் வெளியீடு, க.

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இயற்றிய

ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது

—:o:—

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உ. வே. சாமிநாதையர்

மதராஸ் லா ஜர்னல் பிரேஸ், மயிலாப்பூர்.

ஆங்கிரஸஹூ ஆனிமீ

1932

முகவுரை

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

"பொடியார் மேனியனே புரிநூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே யெனக் கார்துணை நீயலதே"

திருச்சிற்றம்பலம்

தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் தூதென்பதும் ஒன்று. ஒரு தலைவி தான் காதலித்த தலைவனொருவன்பால் ஒரு பொருளைத் தூதுவிடுவதாகக் கலிவெண்பாவாற் பாடுதல் வேண்டுமென்பது இப்பிரபந்த இலக்கணம்; சிறுபான்மை தலைவன் தலைவிக்குத் தூதனுப்பியதாக இயற்றப்படுதலும் உண்டு. இது கடவுளர் ஆசிரியர்கள் உபகாரிகள் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்களுடைய பலவகைச் சிறப்புக்கள் புலப்படப் பாடப்படும். தூதிற்குரிய பொருள்களாக அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் பத்தும் இரத்தினச் சுருக்கம் முதலிய இலக்கண நூல்களுள் கூறப்பட்டுள்ளன. இவற்றையன்றித் தத்தம் கற்பனைத் திறனுக்கு ஏற்பப் புலவர்கள் தூதிற்குரிய பொருள்களாக அமைத்துக் கொண்டவை நெல், துகில், பணம், பொன், மான், மதங்கி, மாலை, விறலி, புறா, வெள்ளாங்குருகு, தமிழ், இருள் வாசிப்பூ (இருவாட்சி), வனசம், குவளை, பாரிசாதம், பிச்சி, சண்பகம், புகையிலை முதலிய பலவாம். முற்கூறிய பத்துப் பொருள்களுள்ளும் பிறவற்றுள்ளும் உள்ள ஒவ்வொரு பொருளைத் தனித்தனியே தூதுவிட்டதாகப் பாடப்பட்டுள்ள நூல்கள் பல உண்டு. இவற்றுள் சில பொருள்களில் ஒவ்வொன்றன் சம்பந்தமாகப் பல ஆசிரியர் இயற்றிய பல தூதுகள் உண்டு. பணவிடுதூது, விறலிவிடுதூது, நெஞ்சுவிடுதூது முதலிய வகைகளில் ஒவ்வொன்றிலும் பல இருத்தல் இதனை அறிவிக்கும்.

அஃறிணைப் பொருள்கள் தூது போதற்கும் சொல்லுதற்கும் உரியனவல்லவேனும் அவற்றை விளித்துக் கூறுதலுக்குத் தலைவன் தலைவிகளின் மனமயக்கமே காரணமென்பர். இங்ஙனம் வரும்

செய்திகள் அகத்திணையிற் காமமிக்க கழிபடர் கிளவியின் பாற் படும்.

தூதுச் செய்திகளைக் கூறும் தனிப்பாடல்களும் பல உண்டு. இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலம்பகம், அந்தாதி முதலிய பிற பிரபந்தங்களுள்ளும், தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளுள்ளும், திவ்யப்பிரபந்தப் பதிகங்களில் உள்ள சில செய்யுட்களிலும் கீர்த்தனம் முதலிய இசைப் பாட்டுக்களிலும் தூதுச் செய்திகள் வந்துள்ளன.

வடமொழி முதலிய பிற மொழிகளிலும் தூதுப் பிரபந்தங்கள் உள்ளன. மகாகவி காளிதாசரால் இயற்றப்பெற்ற* மேக ஸந்தேசமும், ஸ்ரீ வேதாந்த தேசிகரால் இயற்றப்பெற்ற ஹம்ஸ ஸந்தேசமும், பிகஸந்தேசம், மயூர ஸந்தேசம், சுகஸந்தேசம், காகஸந்தேசம், பிரமரஸந்தேசம், மனஸ்ஸந்தேசம், பவனதூதம முதலியனவும் வடமொழியிலுள்ள ஸந்தேசங்கள். இவ்வாறே தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய திராவிட மொழிகளிலும் பல ஸந்தேசங்கள் உள்ளனவென்றும், அவற்றுள் மலையாள மொழியில் வழங்கும் மயூர ஸந்தேசம் என்னும் நூலொன்று மிக்க சுவையுடையதாக உள்ளதென்றும் கூறுவர். சிங்கள மொழியில் சேவல் ஸந்தேசம், சேலாலிஹினி ஸந்தேசம் என்பன போன்ற நூல்கள் உள்ளன வென்றும் கேட்டிருக்கிறேன். பாலிபாஷையிற் பௌத்த மத சம்பந்தமான தூதுகள் சில உள்ளன என்பர். எனவே, தூதினைக் கூறும் நூல்கள் அறிஞர்களால் இயற்றப்பெற்றும் பெரிதும் பாராட்டப்பெற்றும் வந்தனவென்பது முற்கூறிய பலவகை நூல்களுண்மையால் பெறப்படுகின்றது.

பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது என்பது பத்மகிரி (திண்டுக்கல்) என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பத்மகிரிநாதர் பவனி வரும்பொழுது அவரைத் தரிசித்து அவர்பால் அன்புற்று மையல் கொண்ட தலைவி ஒருத்தி, தென்றலை அவர்பால் தூதுவிட்டதாகப் பலப்பட்டடைச் சொக்கநாத பிள்ளை என்னும் புலவர்பெருமானால் இயற்றப்பெற்றது. இதிலுள்ள கண்ணிகள் 123. இந்நூல் பாடாண்டிணையில் கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின்பாற்படும்.

தென்றலைத் தூது விடுவதாகச் சொல்லப்படும் நூல் இதனையன்றி இப்பொழுது வேறு கிடைக்கவில்லை. தூதுவிடும் பொருள்

---

* இது தலைவன் தலைவிபால் மேகத்தைத் தூதாக அனுப்பிய காவியம்; ஸந்தேசம் - தூது.

களுள் தென்றல் ஒன்றென்பது முற்கூறிய இலக்கண நூல்களாலன்றியும், "அன்றில் குயில் தென்ற லைவிடின்மாறுப்பகையாய், ஒன்றுவன தூதா யுதவுமே" (கச்சி. ஆனந்த. வண்டு. 338), "துன்று தென்றலெதிர் சென்றிடிற் கடிது தோள்கொள் பூணிரை யெனக்கொளும்" (வாட்போக்கிக் கலம்பகம், 26) என வருவனவற்றாலும் அறியப்படுகின்றது.

பத்மகிரி என்பது திண்டுக்கல்லின் திருநாமம். படைப்பின் தொடக்கத்தில் இத்தலத்தில் பத்ம தீர்த்தமென ஒன்று உண்டாக, அதன் நடுவில் ஒரு தாமரை யரும்பு தோன்றிற்று; அவ்வரும்பே பின்பு மலையாயிற்று; தாமரை யரும்பின் வடிவாயிருத்தலின் இம்மலை பத்மகிரி யென்னும் பெயர் பெற்றதென இத்தல மாகாத்மியம் கூறும். இதற்குத் [1]திண்டீச்சுரம் என்னும் திருநாமமுமுண்டு. திண்டி யென்னும் ஓர் அசுரன் அம்பிகையால் சங்காரம் செய்யப் பெற்றபொழுது தன் பெயரால் இந்நகரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி அமைந்தது இத்திருநாமமென்பர். இத்தல விருட்சம் நெல்லி. அதனால் இது நெல்லி வனமென்றும் வழங்கும்

இது தேவார வைப்புஸ்தலங்களுள் ஒன்று.

"தெள்ளும் புனற்கெடில வீரட்டமும்
திண்டீச் சரமுந் திருப்புகலூர்"
(திருநாவுக்கரசு நாயனர் தேவாரம், காப்புத். 8)

"திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ்சிற் றேமஞ் சேறை"
(திருநா. தே. க்ஷேத்திரக். 9)

"கோடீச் சுரங் கொண்டீச் சுரந் திண்டீச்
சுரங்குக்கு டேச்சுரமக்கீச் சுரம்"
(திருநா. தே. அடைவு. 8)

இத்தலத்திலுள்ள சிவபெருமான் திருநாமம் [2]ஸ்ரீ பத்மகிரி நாதர் என்பது. அம்பிகையின் திருநாமம் அபிராமவல்லி என்பது. இத்தலத்தில் பதும தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

ஆசிரியர் இந்நூலுள் இந்தத்தல வரலாறுகளையும் பலவகைச் சொல்லணி பொருளணிகளையும் எதுகை மோனை நயங்களையும்

1. திண்டிவனத்தையும் திண்டீச்சுர மென்பர் சிலர்.
2. பத்மகிரீசுவரர் எனவும் வழங்கும் (Ins., S. Dts., p. 72. No. 8.)

அமைத்திருக்கின்றார். தூதுவிடப்படும் பொருளாகிய தென்றலைப் பலவகையாகச் சிறப்பித்துப் பாராட்டுகின்றார்.

தென்றல் தமிழோடு மிக்க தொடர்புடைய தென்பதைப் புலப்படுத்தி முதலில், "செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" (4) என விளித்தல் அறிந்து இன்புறற் பாலது; "தண்டமிழ்த் தென்றல்" (கம்ப. அயோமுகி. 6), "தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்" (மீனாட்சி. பிள்ளைத். தாலப். 1), "சந்தன சலத்தினின்றுந் தமிழுட னளைந்து வந்த, மந்தமா ருதம்" (திருவிரிஞ்சைப் புராணம், கௌரீ புரச். 26) எனப் பிறரும் இத் தொடர்பைக் கூறியுள்ளார்.

இந்நூலில் காற்றைப்பற்றிய பலவகைச் செய்திகள் அழகாக அங்கங்கே அமைத்துச் சொல்லப்பட்டுள்ளன. ஆசிரியர் பல நூல்களிற் பயிற்சியுடையா ரென்பதை அவை காட்டுகின்றன. தென்றலானது மன்மதனது தேர் என்பதை நினைந்து கூறும் பின்வரும் செய்திகள் மன்மதனது பிறபடைகளுக்கும் தென்றலாகிய தேர்ப்படைக்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்டுகின்றன: 'தென்றலே, மன்மதனது மூன்று படைக்கும் முதற் படையே, அவனது யானையாகிய இருள் சூரியனைக் கண்டால் ஓடி விடும்; அவனுடைய குதிரையாகிய கிளி பூனையைக் கண்டால் பறந்து போய்விடும்; அவனுடைய சேனையாகிய பெண்கள் யானைப் படையாகிய இருளைக் கண்டால் தூங்கிவிடுவார்கள். அவனது நாற்படைகளுள்ளே நீயே சிறப்புடையை' (5-8), 'அர்த்தரதம் முதலிய மூன்று வகை இரதங்களையும் வென்ற மகாரதம் என்றற்குரிய மாரனது இரதமே' (67)

வாயு பஞ்ச பூதங்களில் ஒன்றென்னும் செய்தியை நினைந்து ஏனைய பூதங்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறிச் சிறப்பிக்கின்றார்: 'காற்றே, உன்னுடைய வடிவமானது அப்பு, தேயு என்பனபோல் கட்புலனாவதோ? அன்றி ஆகாயத்தைப் போல் ஒளித்து விடுவதோ?' (10)

இன்னும், காற்றுப் பத்துவகை யென்னும் செய்தியை நினைந்து திருமாலுக்குரிய பத்து அவதாரங்களும் வாயுவின் பத்து வகையைப் போற் சிறந்தனவல்ல (9) என்று கூறுகின்றார். மூச்சுக் காற்றை நினைந்து, 'உன்னுடைய ஓட்டம் இல்லாவிடில் உயிருக்கும், உடலுக்கும் சஞ்சாரம் ஏது? திருமூலர் எழுபதுகோடியுகம் இருந்தது யாரால்?' (12-3), என்பதையும், 'கும்பகஞ் செய்கின்ற மூக்கில் நீ உறைவாய்' என்னும் பொருள்பட, "கோரங் கொளாதுகும்ப கோணத் துறைவாய் நீ" (35) என்பதையும் அமைக்கின்றார். ஒலி

காற்றினாற் பரப்பப்படுவது என்னும் உண்மையை, "உற்றறியுஞ் சத்தமெல்லா முன்குணமென் னார்விசும்பு, பெற்றகுண மென்பரது பேய்க்குணங்காண்" (23), "கருங்குயிலின், காளத்தொனிநீ கடத்திவிடா யேற்சக்ர, வாளத்தை யெல்லாம்போய் மண்டுமோ" (64-5) என்பவற்றிற் புலப்படுத்துகின்றார். பறத்தலுக்குக் காற்று இன்றியமையாத தென்பதை மன்மதன் எய்கின்ற அம்பு ஓடுவதும் (64) கிளி தேரை இழுத்துச் செல்வதும் (66) காற்றினாலே எனக்கூறிக் குறிப்பிக்கின்றார். காற்று, மணத்தைப் பல விடங்களிலும் பரப்பும் தன்மையை, "வாசனையை நீஎளரா விட்டான் மலரேது, பூசனையே தீசனை யார் போற்றுவார்" (32-4) என்பன முதலியவற்றிலும், "தென்மதுரை, ஐயனை நம்புமோ ரந்தணன் கல்யாணம், செய்யவுபாயமொன்று சிந்தித்தாய்" (58-9) என்பதிலும் சொல்லிப் பாராட்டுகின்றார்.

இவற்றையன்றி, காற்று விராட்புருடனது மனத்துக்கு அதிட்டான தேவதை (14-5) என்பதையும், பாம்புக்கு உணவு (19) என்பதையும், மேகத்தைப் பலவிடங்களிற் பரப்பும் தன்மையுடையது (21) என்பதையும், கப்பல் ஓடுவதற்கு உதவுவது (26-8) என்பதையும், ஒரு திசைக்கு அரசுரிமை வாய்ந்தது (28-9) என்பதையும், மூன்று நாடிகளில் முதல் நாடிக்குரியது (30) என்பதையும் அங்கங்கே அமைத்துள்ளார்.

ஆஞ்சநேயரும் வீமசேனனும் மிக்க பலத்தை யடைந்ததற்குக் காரணம் அவர்கள் வாயுபுத்திரர்களாயினமையே (16-7) என்பது, வாயு மேருகிரியை முறித்தது (20), சிவபிரானது அக்கினிக் கண்ணின் பொறியைத் தாங்கிவந்தது (31), குசநாபன் மகளிர் முதுகை ஒடித்தது (24-5) முதலிய புராண இதிகாசச் செய்திகளின் முகத்தாலும் காற்றின் பெருமையைத் தெரிவிக்கின்றார்.

திருப்பூவணம், திருவேங்கடம், திருப்பூந்துருத்தி, திருவரங்கம் என்பவற்றோடு காற்று, தொடர்புடையதென்பதும், திருக்காளத்தியில் இறைவர் காற்றுருவாக எழுந்தருளி யிருக்கின்றாரென்பதும், காற்றுத் திருவாரூர்ச் சாளரத்திற் புகுந்து தியாகேசருக்கு இன்பம் செய்வதென்பதும், காஞ்சீபுரக் கோயிற் செப்புவாசல் வழியேவந்து இன்பம் பயப்ப இயங்குவதென்பதும், மதுரையில் ஸ்ரீ சொக்கநாதக் கடவுள் தருமிக்குப் பொற்கிழியளித்ததற்குக் காரணமாக இயற்கை மணத்தைப் பரப்பியதென்பதுமாகிய பிறதலச் செய்திகளையும் இதிற் காணலாம்.

கண்ணபிரான் 'ஆறு இருதுக்களுள் வசந்த ருது நான்' என்று பகவத் கீதையில் திருவாய்மலர்ந்தருளிய செய்தியை எடுத்துக்

கூறி அவ்வாறு அவர் கூறத்தக்க சிறப்பை வசந்தருது அடைந்தது அவ்விருது தென்றலின் துணைபெற்றமையினலேயே (61-2) எனக் காரணங் காட்டுகின்ருர்.

தென்றலை ஒரு யுவராசனுக உருவகம் செய்து அஃது உலா வருங் கோலத்தைத் தொடர்பு பெற அமைப்பதும் (38-48), அதனை ஒரு குழந்தைபாக உருவகம் செய்தலும்(52-5,112) அறிதற்குரியன.

'வெம்புலியை வாலுருவி விடுதல்' (45), 'பழம் நழுவிப் பாலில் விழுதல்' (46) என்னும் பழமொழிகளை உரிய இடத்தில் எடுத்தாளுகின்ருர்.

இத்தலத்துச் சிவபெருமானைப்பற்றிய செய்திகள் கூறப்படும் பகுதியால் (73-93) பத்ம தீர்த்த வரலாறு, நெல்லிவனமென்னும் பெயர், இதன்பால் தூண்டா விளக்கு ஒன்றுண்டென்பது, திண்டீச்சுரமென்னும் திருநாமம், வருணனும் அகத்தியரும் இத்தலத்திற் பூசித்தது, அம்பிகையின் திருநாமம் அபிராமவல்லி யென்பது, திருவிழாவின் சிறப்பு, திருத்தேர் எட்டாந்திருநாளில் நடைபெறுதல் முதலியவை அறியப்படுகின்றன.

தலைவி ஸ்ரீ பதுமகிரிநாதரைக் கண்டு மயக்கங்கொண்டு முறையிடுவதாகச் சொல்லும் பகுதியில் (95-105), 'ஒரு செவ்வந்திப் போதால் உறையூரை அழித்த நீர் அப்பொழுது இந்தச்செவ்வந்திப் போதால் (அந்திப்பொழுது) அழித்திருக்கலாமே' (103) எனத் திரிசிரகிரித் தலச்செய்தியையும், 'என்னுடைய விழி இரண்டும் இராமேசருக்குரிய தனுக்கோடியைப்போல நீர்ப்பெருக்குடையன வாயின' (108-9) எனத் தனுக்கோடி என்னும் தீர்த்தத்தையும் ஆசிரியர் கூறுகின்ருர்.

பிற தூதுப் பொருள்களை அனுப்பாமைக்குத் தலைவி கூறும் காரணங்கள் (112-7) சிலேடை முதலிய அணிகளும் தொனியும் அமையச் சொல்லப்படுகின்றன. இங்ஙனம் விலக்கப்பட்ட தூதுப் பொருள்கள் வண்டு, மயில், அன்னம், கிளி, மேகம் என்பனவும் பாங்கியும்.

யமகம் (97-8), திரிபு (21, 38-9, 53, 56, 68, 72, 95, 99, 104, 106-7, 109-11, 117-8, 120-21) என்பவற்றை இந்நூலில் இடையிடையே காணலாம்.

இந்நூலின் ஏட்டுப்பிரதி ஒன்று இற்றைக்கு 47 வருஷங்களுக்கு முன்பு திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெரு வக்கீல் ஸ்ரீசுப்பையா பிள்ளையவர்கள் வீட்டிற் கிடைத்தது. அப்பிரதி ஊர்க்காட்டுச் சாமிநாத வாத்தியார் என்பவருடையது. அதன்

பின் இதுவரையில் வேறு பிரதி ஒன்றும் கிடைக்கவில்லை. இந்நூலுடன் அழகர் கிள்ளைவிடுதூதும் சேர்ந்து இருந்தது. கிடைத்த பிரதி சிதையாததாக இருந்தமையின் அவ்வாறே பதிப்பிக்கலாயிற்று.

திண்டுக்கல் சம்பந்தமான சில செய்திகளை அவ்வூர் வக்கீல் ம-௱-௱-ஸ்ரீ எல். ஏ. வேங்குசாமி ஐயரவர்கள் எனக்கு அன்புடன் தெரிவித்தார்கள்.

இந்நூலைக் **கலைமகள்** என்னும் பத்திரிகையில் வெளியிடும்படி என்னைத் தூண்டி அங்ஙனமே செய்வித்துதவிய அப்பத்திரிகையின் அதிபர் ம-௱-௱-ஸ்ரீ ஆர். நாராயணசாமி ஐயரவர்களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்.

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவு திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பசலை கூறீரே.

திருச்சிற்றம்பலம்.

"தியாகராஜ விலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
10—6—32

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

ஆசிரியர் வரலாறு

இந்நூலாசிரியராகிய பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை யென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்கு முன்னர் மதுரையில் இருந்தவர். இவருடைய மரபினர் பலபட்டடைக் கணக்கு என்னும் ஒருவகை உத்தியோகம் பார்த்து வந்தவர்கள். இவருடைய தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை என்பது. இவர் பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர் எனவும் வழங்கப்படுவர்.

இவர் மதுரை ஸ்ரீ சொக்கநாதக் கடவுளிடத்தும் ஸ்ரீ அங்கயற்கணம்மையிடத்தும் அளவிறந்த அன்புபூண்டவர். அவ்விருவர் விஷயமாகவும் இவர் செய்த தனிப்பாடல்கள் பல உண்டு. இவர் திருவனந்தல் முதல் அர்த்தசாமம் வரையிலுள்ள காலங்களில் ஆலயத்திற்குத் தரிசனம் செய்யப்போகையில் அப்பொழுதப்பொழுது மனமுருகிப் பாடல்கள் இயற்றுவது வழக்கமென்று சில முதியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவை தமிழ்ச்சுவையை ஊட்டுவனவும் படிப்பவர்களுடைய மனத்தை உருகச்செய்து பக்தியை விளைவிப்பனவுமாக இருக்கும். மதுரைத் தல விஷயமாக அந்தாதி ஒன்றும் மும்மணிக்கோவை ஒன்றும் இவர் இயற்றியுள்ளார். இராமேசுரத்திற்கு உலாவொன்றும் இவராற் பாடப்பட்டுளது. அது தேவையுலா வென வழங்கும். அந்நூலிலிருந்து அக்காலத்து இராமநாதபுரத்தில் விஜயரகுநாத சேதுபதி (கி. பி. 1711-1725) என்பவர் அரசாண்டு வந்தார் என்று தெரிகிறது. திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது கிள்ளைவிடுதூதொன்று இவர் பாடியுள்ளார். இதனால் இவர் சைவராக இருப்பினும் சமரசமான கொள்கையுடையவர் என்பது புலப்படும். கன்னிவாடியில் அக்காலத்தில் ஜமீந்தாராக இருந்த நரசிங்க நாயகர் மேல் இவரியற்றிய வளமடல் ஒன்றுண்டு. அதனால் அந்த ஜமீந்தாரால் இவர் ஆதரிக்கப்பட்டவர் என்பது புலப்படும்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் எழுதப்பட்டுள்ள சில பழைய ஏட்டுச் சுவடிகளில் கடவுள்வாழ்த்தின்பின்னுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இரண்டு இவரால் இயற்றப்பெற்றன வென்றெழுதப்பட்டிருத்தலின் அந்நூலரங்கேற்றிய பொழுது கேட்டு இன்புற்றவர்களுள் இவரும் ஒருவர் என்று தெரிகிறது.

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இயற்றிய

ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது

காப்பு.

நேரிசை வெண்பா.

நன்றிதரு பத்மகிரி நாதர்மே னீதிசேர்
தென்றல் விடுதூது செப்பவே—வென்றிதரும்
அன்னத்தா னத்தானு மந்நத்தான் மாமனும்
கன்னத்தா னத்தானே காப்பு.

நூல்.

கலி வெண்பா.

1. கார்பூத்த மேனிக் கருணைப் பெருங்கடலும்
சீர்பூத்த வேதத் திருமலையும்—பார்பூத்த
2. ஏனோரும் வானோரு மெல்லோரு மோர்நிறையாத்
தானோர் நிறையாச் சமன்செய்ய—மேனாளிற்
3. சம்பத் துதிக்குந் தரணி தராசென்னக்
கும்பத் துதிக்குங் குறுமுனியும்—அம்பிற்போய்

குறிப்புரை.

காப்பு : நன்றி - நன்மை. பத்மகிரி - திண்டுக்கல்மலை. அன்னத்தான் அத்தான் - அன்னவாகனத்தையுடைய பிரமதேவருக்கு அத்தைமகன். அநத்தான் - அந்தச் சங்கத்தை உடைய திருமால்; நத்து - சங்கு. கன்னத்தானத்தான் - செவிமதத்தை யுடைய விநாயகர்; கன்னம் - காது.

1. கடல் - திருமால். திருமலை - பிரமதேவர்.

3. சம்பத்து - பொன். "பொருட்கொண், டிடங்கொண்ட பூமி" (77-8) என்பர் பின்; பூமிக்கு வசுந்தரா என்றுள்ள பெயர்ப்பொருள் இங்கே கருதற்குரியது. குறுமுனி - அகத்தியர். அம்பிற்போய் - அம்பைப் போல வேகமாகச் சென்று.

4. நந்துமிழுந் தண்பொருநை நன்னதியுஞ் சேர்பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே—குந்தமெனத்

5. தோன்றுபடை யைந்துடையான் றாயபடை நாலுக்குள்
மூன்று படைக்கு முதற்படையே—ஆன்றமதன்

6. ஆனை பரிதியைக்கண் டாலொளிக்கு மேகுதிரை
பூனையைக்கண் டாற்பறந்து போய்விடுமே—சேனையெனும்

7. பெண்படைதா னூனப் பெரும்படையைக் கண்டவுடன்
கண்படை கொள்ளுமே கட்டுரையாய்—நண்படையும்

8. நாற்பலத்தி லேயு நடுப்பலத்தி லேதுண்டு
காற்பலமுன் பேர்ப்பலத்தாற் கைச்சயங்காண்—ஆற்றன்மால்

9. மின்வடிவம் பத்தும் விதனப் படும்வடிவே
நின்வடிவம் பத்தும் நிசவடிவே—உன் வடிவம்

---

4. நந்து - சங்குகளை. உமிழும் - வீசுகின்ற. பொருநை நதி - தாமிரபர்ணியாறு. பொருப்பில் - பொதியில் மலையில்; பொருப்பென்பதே பொதியிலுக்கு ஒரு பெயராக வழங்குகிறது; "பொருப்பிற் பொருந" (மதுரைக். 42); "பொருப்பிலே பிறந்து" (வி. பா. சிறப். 2.) செந்தமிழின் …………தென்றல்: "தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்" (மீனாட்சி. பிள்ளை. தாலப். 1.) குந்தம் - வேல்.

5. படை - ஆயுதம்; இங்கே அம்பு. உடையான் - மன்மதன். படை நாலு - ரத கஜ துரக பதாதிகள். முதற்படை - தேர்ப்படை; மன்மதனுக்குத் தென்றல் தேர்.

6. ஆனை - இருள்; இருள் மன்மதனுடைய யானை. குதிரை - கிளி; "பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற், கீச்சுக்கீச் சென்னுங் கிளி" தனிப்.

6—7. சேனையெனும் பெண்படை: "பொன்னிற் குலவு மோரிரண்டு பொருப்பு விருப்பி னுடன்பரித்து, மின்னிற் குலவு மென்படைக்கு மெலியா தெவரே வலியாரே" (பாசவதைப்பரணி, 359); மாதர்கள் இரவில் தூங்கி விடுவார்கள் என்பது கருத்து.

8. நாற்பலம் - சதுரங்கசேனை; பலம் - படை; மூலபலம் என்றதைப் போல. நடுப்பலம் - யானைப் படையும் குதிரைப் படையும். காற்பலம் - காலாட்படை. உன் பேர்ப்பலம் என்றது காலென்னும் பேரைப் பெற்றதைக் குறித்து நின்றது; காலென்பது காற்றுக்கு ஒரு பெயர்.

8—9. மால் மின் வடிவம் பத்தும் - திருமாலுடைய ஒளி வீசுகின்ற அவதாரங்கள் பத்தும். விதனம் - வியசனம்; துக்கம். நின் வடிவம் பத்தென்றது தசவாயுக்களை; அவையாவன: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், தனஞ்சயன், கூர்மன், கிருகரன், தேவதத்தன்; "ஒப்பார் பிராண னபான னுதானனுடன், தப்பா வியானன் சமானனே -

10. பார்போற் கடும்புனல்போற் பாவகன்போற் காண்பதோ
ஊர்போற்றும் விண்போ லொளிப்பதோ—நேர்பெற்ற

11. இந்திரிய மேது குறைந்தாலு மிவ்வுடல்கீழ்
முந்திரிகை நேர முடங்குமோ—இந்த

12. உயிர்க்கு முடற்கு முறவுசெயு முன்றன்
இயக்கமல்லாற் சஞ்சார மெங்கே—மயக்கம்

13. இகவுணர்ந்த மூல ரெழுபது கோடி
யுகமிருந்த தாரா லுரையாய்—சகமுழுதும்

14. தன்னுருவ மான விராட்டுருவிற் றண்முதலாய்ச்
சென்னி வரைக்குமதி தேவதையாய்—முன்னே

இப்பாலும், நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன், தீதிலாத் தேவதத்தனே'' சிலப். 3 : 26, அடியார். மேற்.

10. பாவகன்-அக்கினி. காண்பதோ - காணப்படுவதோ ; காற்று அரூபி யென்றபடி. பூமி நீர் கனல் என்ற இவற்றிற்கே உருவமுண்டு. வாயுவுக்கு உருவமில்லை. விண் - ஆகாயம். காற்றுப் பரிசத்தா லறியப்படுதலின் விண்போ லொளிப்பதோ வென்றார்.

11—12. இந்திரியம்-பொறி. கீழ் முந்திரிகை-ஒரு சிற்றளவு. எந்த இந்திரியம் குறைந்தாலும் உயிர் உடலில் வாழ்தல் குறையாது ; மூச்சு இயங்காவிடின் உயிர் நில்லாதென்பது கருத்து ; ''உறுவலி யில்லா மாய வுடம்பினை யுள்ளே நின்று, பிறிவிலா தியக்கு கின்ற பிராணவா யுக்கோ விப்ப, அறுகயிற் றூசல் போல வங்கொடிங் குண்ணின் றூட்டும், பொறியறு பாவை போன்று வீழ்ந்தனர் புவனத் துள்ளோர்'', ''மாத்திரைப் போழ்து மேனி நிற்குமோ வாயு வின்றி, மூத்திரப் புரீட வாயி லடைத்தலான் முடுகு தோற்பை, காத்திரம் பெருத்து வீங்கக் கண்செவி மூக்கு நாத்தோல், சூத்திர மற்றுச் சிந்துந் தொகுமணிக் கோவை போன்ற'' உத்தர. அநுமப். 24, 26.

13. இகவு - நீக்கம். சுவாச பந்தனஞ் செய்யும் யோகசாதனையால் திருமூலர் எழுபது கோடியுகம் இருந்தா ரென்பாராதலின் இவ்வாறுகூறினர். ''செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்றும், அப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுத், தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபி, னொப்பி லெழுகோடி யுகமிருந் தேனே'' (84) என்னுந் திருமந்திரச் செய்யுள் எழுகோடி யெனக் கூறும் ; எழுபது கோடி என்பது திருமந்திரத்தின் பாடம்போலும். ''பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர், எழுபது கோடி யுறும்'' (குறள். 639) என்பதன் உரையில், 'எழுபது கோடி என்றது மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்றுகாட்டியவாறு' எனப் பரிமேலழகர் எழுதியிருத்தலால் எழுபதுகோடி யென்பது பன்மை சுட்டவந்த வாய்பாடு என்பது பெறப்படும். எனவே, பலகோடியுகம் என்னும் பொருளில் 'எழுபது கோடியுகம்' என்பது வந்ததாகக் கொள்ளலுமாம் ; ''இருந்தேனிக் காயத்தி லெண்ணிலி

15. உதித்தவரே யன்றி யுனைப்போன் மனத்துக்
கதிட்டான தேவதைதா னுர்காண்—உதிட்டிரன்

16. ஆமன் னவன்முதலா மைவர் தமக்குள்ளே
வீம னதிகபல மேவியதும்—நாமறிய

17. மைவாய்க்கும் வாரிதியை மாருதி சென்றுசிறு
கைவாய்க்கா லாகக் கடந்ததுவும்—மெய்வாய்க்கும்

18. உன்வீ ரியத்தி னுறுதியே யல்லாமல்
வென்வீ ரியமவர்க்கு வேறுண்டோ—என்வாயால்

19. வீண்பல பேசியென்ன மேதினியைப் பாம்பெடுப்ப
தூண்பலமோ பின்னை யொருபலமோ—நாண்பூட்டி

20. வில்லாய்ச் சிவன்வளைத்த மேருவைப் போய்முறிக்க
வல்லா யுனைப்போல் வலியாரார்—சொல்லரிய

21. நீருவரை வாங்கு நெடுமுகிலைக் கொண்டிழுத்து
மேருவரை சூழ விளைவிப்பாய்—மேருவரை

22. சுற்றிவரச் சந்திர சூரியரெய்ப் பாரேநீ
சற்றுமிளைப் பாயோ சதாகதியே—கற்றறிந்தும்

கோடி, யிருந்தே னிராப்பக லற்ற விடத்தே, யிருந்தே னிமையவ ரேத்தும் பதத்தே, யிருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே" (திருமந்திரம், 90) என்பது இக்கருத்தை உறுதிப்படுத்தல் காண்க.

15. உதிட்டிரன் - தருமபுத்திரர்.

16—17. வீமனும் மாருதியும் வாயு புத்திரர்கள். மாருதி - அனுமார். சிறு கைவாய்க்காலாக - மிகச் சிறிய கண்ணிவாய்க்காலாக.

18. வென் வீரியம் - வெற்றியைத் தரும் வன்மை; வென் - வெற்றி.

19. பாம்பு என்றது ஆதிசேடனை. ஊண்பலம் : பாம்புக்குக் காற்று உணவு; "வாயுவான பஞ்சடைத்து மாயோன் றுயிலு மலரணையே" செவ்வந்திப். திருமலைச். 30.

20. வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் போர் நிகழ்ந்தபொழுது வாயு மேருமலையின் சிகரங்களில் மூன்றை முறித்துவிட்டனன் என்பது வரலாறு; இதனை உத்தா ராமாயணம் அரக்கர் பிறப்புப் படலத்தாலுணர்க.

21. நீர் உவரை - கடல் நீரினது உவர்ப்பை. நீர்.........முகில்: "இழிந்த மாந்தர்கைப் பொருள்களு மிகபாத் தாசை, கழிந்த யோகியர் கைப்படிற் றூயவாய்க் களங்கம், ஒழிந்த வாறுபோ லுவரியுண் டுவர்கெடுத் தெழிலி, பொழிந்த நீரமு தாயின புவிக்கும்வா னவர்க்கும்" (திருவிளை. நாட்டு. 16.) சூழ - வலம்வர.

22. எய்ப்பார் - இளைப்பார். காற்று இளையாமல் எப்பொழுதும் இயங்குமென்பதைக் குறித்தற்கு, 'சதா கதியே' என விளித்தார்.

23. உற்றறியுஞ் சத்தமெல்லா முன்குணமென் ஞர்விசும்பு
பெற்றகுண மென்பரது பேய்க்குணங்காண்—வெற்றிபெறும்

24. கூற்றுவரு மஞ்சுங் குசநாபன் செல்வியர்கள்
நூற்றுவர்த மெய்யி னுழைந்தோடி—ஊற்றுவாத்

25. தேனுர்க்குங் கூந்தற் றிருந்திழையார் மெய்யெல்லாம்
கூனுக்கும் வல்லமையைக் கூறுவதார்—மீனுர்க்கும்

26. ஆழி கடந்தோடி யம்பொன் கொடுவருதல்
ஊழி முதலே யுனதருளே—தாழா

27. தவிழ்த்தலு மோட்டாம லத்தனையுங் கொட்டிக்
கவிழ்த்தலு முன்னருளே கண்டாய்—குவித்தநிதி

28. தேட்டுக்கு நீயே சிரசென்ப துன்னடுத்த
வீட்டுக் குபேரன் விளம்பானே—ஈட்டும்

29. குவைநிதிகட் கெல்லாங் குபேரனா சானல்
அவனடுத்த வீடேசொல் லாதோ—சிவனறிய

24—5. குசநாபன் என்னும் அரசன் புதல்வியர் நூற்றுவர்பாற் சென்று வாயு தன்னை மணஞ்செய்துகொள்ளும்படி கேட்ப அவர்கள் மறுத்த தனல் அவர்களுடைய முதுகை ஒடித்தனனென்பர்; இவ்வரலாறு கம்ப ராமாயணம் வேள்விப் படலம் எழாவது செய்யுள் முதலியவற்றுல் அறியப் படும்.

25. தேன் - வண்டுகள்.

27. இக்கண்ணியின் பொருள் ஒரு வடமொழிச் சுலோகத்தின் பொருளோடு ஒப்புநோக்கற்குரியது. அதன் மொழிபெயர்ப்பு வருமாறு:

மீகாமன் செயன்முறையும் பிறழ்ந்ததுவீழ்ந் தனதுடுப்பு
மீன்றேன் றுமல்

ஆகாய மறைத்தபுய லம்புதியோ கடக்கரிதா
லந்தோ மார்க்கம்

ஏகாத விதமலைக ளுடையதுநௌ விதைக்கரைப்பா
லேகச் செய்து

நீகாவ லதுகவிழ்வ் விரண்டுமுன்றன் கையனவா
நிகழ்த்துங் காலே.

28. தேட்டுக்கு - தேடுதற்கு. சிரசு - சிரம்; "சிரசிருக்க வேண்டி லுங்க டிருமுகங் கிழித்தெறி" (அழகர்கலம். 25) என்பதனுற் சிரசு என வழங்கலும் மரபென்பது பெறப்படும். இங்கே தலைமை என்பது பொருள். அடுத்தவீடு என்றது அடுத்த திசையை. எட்டுத் திசைகளுள்ளும் வடமேற் காகிய வாயு திசைக்கடுத்தது வடக்காகிய குபேரதிசை.

29. நிதி இருநிதியென்றும் நவநிதியென்றும் இருவகையாகக் கூறப் படும்.

30. முத்தா துவினு முதற்றூது நின்றூது
எத்தாது சொல்லுநீ யெத்தாது—பித்தனார்

31. வீரியத்தை நீவாங்கா விட்டால்விண் ணோரவதி
காரியத்தை யெண்ணக் கணக்குண்டோ—நேரியற்கை

32. வாசனையை நீவளரா விட்டான் மலரேது
பூசனையே தீசனையார் போற்றுவார்—ஈசன்

33. திருப்பூ வணத்துந் திருவேங் கடத்தும்
மருப்பூ வகமலர வைத்தும்—திருப்பூந்

34. துருத்தியிலும் வாழ்வாய் சொலுந்திருக்கா ளத்தி
நிருத்தர் வடிவெல்லா நீயே—வருத்தமுறக்

35. கோரங் கொளாதுகும்ப கோணத் துறைவாய்நீ
சேரங்க மன்றோ திருவரங்கம்—பாரெங்கும்

---

30. முத்தாது - வாத பித்த சிலேட்டும நாடிகள். நின் தாது என்றது வாதநாடியை; அதனை முதலாகக் கூறுதல், "வளிமுதலா வெண்ணிய மூன்று" (குறள். 941) என்பதனாலும் பெறப்படும். பித்தனார் - சிவபெருமான்.

30—31. சூரபன்மனைச் சங்கரிக்கும் பொருட்டு ஒரு குமரனை அளித்தருள வேண்டுமென்ற தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணிலிருந்து உண்டாக்கிய ஆறு தீப்பொறிகளை முதலில் அக்கினியும் பின்பு வாயுவும் தாங்கினர் என்பது கந்தபுராண வரலாறு. அவதிகாரியத்தை - துன்பச்செயல்களை. கணக்கு உண்டோ; அளவில்லாத் துன்பத்தை யடைவார்களென்றவாறு.

32. வளராவிட்டால் - பரவச் செய்யாவிட்டால். வாசனையைக் காற்று வளர்த்தல் கந்தவகனென்னும் அதன் பெயராலும் அறியப்படும்; "சதாகதிவசத்தால் வரும் வள்ளிதழ்ப் போதின் கடிமணம்போல்" வெங்கைக் கோவை, 25.

33—34. திருப்பூவணமும் திருப்பூந்துருத்தியும் புஷ்பவன மெனவும் அத்தலங்களிலுள்ள சிவபெருமான் திருநாமம் புஷ்பவன நாதர் எனவும் வழங்கும். அதனால் அவ்விரண்டு தலங்களும் இங்கே கூறப்பட்டன. "சிந்துபூ மகிழுந் திருவேங்கடம்" என்னும் திருவாய்மொழிப் பாசுரத்திற்கு வியாக்யானம் அருளிச் செய்துகொண்டிருக்கையில் உடையவர், "திருவேங்கடத்தில் திருநந்தவனத் தொண்டு செய்வாருண்டோ?" எனக் கேட்க அனந்தாழ்வாரென்பவர் அங்கே சென்று ஒரு நந்தவனம் வைத்து வளர்த்து வந்தாரென்பர். அவரால் வைக்கப்பட்ட நந்தவனத்தில் தென்றல் உலாவுதல் பற்றித் திருவேங்கடத்தை இங்குக் கூறினர். பஞ்ச பூதலிங்கங்களுள் காளத்திலிங்கம் வாயுலிங்கமென்று கூறப்படும்.

35. கோரம் - கொடுமை. கும்பகோணத்து - கும்பகம் செய்யும் நாசியின்கண். கும்பகம் கும்பமென நின்றது. கோணம் - மூக்கு. கும்பகோண

36. நன்னிதிக்கு வீறுவர நல்குந் தியாகேசர்
சன்னிதிக் காபரணந் தானவாய்—பின்னெவரும்

37. வாஞ்சை பெறச்செப்பு வாசல் வழியேபோய்க்
காஞ்சிபுரத் தன்மகிமை காட்டுவாய்—பூஞ்சோலைப்

38. பூங்கொத்து மேய்ந்த புதிய மணவறையில்
ஆங்கொத்து நீவா ழாண்மனையை—நீங்கித்தான்

39. பந்தியம் போது பசுந்தேனுன் மேலிறைக்க
அந்தியம் போதுவிளை யாடுவாய்—சந்தனத்தின்

40. மட்டுலாஞ் சோலைதனின் மாலையெனு மேகவன்னப்
பட்டுமேற் கட்டி பலதூங்க—கட்டவிழும்

41. அம்பரு வாவி யலர்த்தூளெல் லாமடங்கக்
கொம்பிறால் சிந்திக் குளிர்விக்கப்—பம்பு

42. மயிலினங்கள் கைகட்டி வாய்பொத்தி நிற்கக்
குயிலினங்கள் கட்டியங்கள் கூறப்—பயிலும்

மென்னும் ஒரு தலப் பெயர் தொனித்தது. திருவரங்கத்தில் தெற்கு நோக்கிச் சயனித்துள்ள திருவரங்கநாதர் திருமுகத்தில் தென்றல்படுவது கருதி 'நீசேரங்கமன்றோ திருவரங்கம்' என்றார்.

36. "தென்றல் மணங்கமழுந் தென்திருவாரூர்" (தே.) தியாகேசர் பக்கத்தில் உள்ள பல்கணி வழியாகத் தென்றற் காற்றுச் செல்லும்; இதனைப் பல புலவர்கள் பாராட்டியுள்ளார்கள்; "மன்றற் திருச்சா லகத்து வழி நுழைந்து, தென்றல் தவழுஞ் செழுங்காவே", "தென்றல், மருவந்த வாயி லருகே - பருவம், தருமுபசா ரங்கள்செவிச் சார்சமய மேயோ", "தென் னுலவை, ஆதி திருச்சா லகத்தோட மாட்டாதென், றோதி மலர்பொதியா வோதியாள்" திருவாரூருலா, 172, 377-8, 436-7.

37. வாஞ்சை - ஆர்வம். செப்புவாச லென்பது காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் கோயிலில் உள்ள ஒருவாசல். அதன் வழியேவரும் காற்றுப் பாராட்டப்படும்; "அப்பா குமாரகோட் டக்கீரை செவ்விலிமேட், டுப்பாகற் காய்பருத் திக்குழிநீர் - சேப்புவா, சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா, ரிப்பாய்ச்சல் யார்க்கு மினிது" காளமேகப்புலவர் பாடல்.

38. அரண்மனை யென்றது சோலையை.

39. பந்தி அம் போது - வரிசையாகிய அழகிய மலர்கள்.

இனிச் சோலையில் தென்றல் உலாவுதலின் சிறப்புக் கூறப்படும்.

40. மேக வன்னப் பட்டு - மேகமாகிய அழகிய பட்டு. கட்டு: அம்புக்கும் மலருக்கும் பொது.

41. அம்பு என்றது மன்மதன் பாணங்களாகிய தாமரையையும் குவளையையும். கொம்புத்தேன் சிறந்தது. பம்பு - பரவிய.

43\. பழுதிலளி சங்கீதம் பாடவிள வேனிற்
பொழுது மெலநடந்து போவாய்—தொழுதகைய

44\. வாண்மேவுங் கண்ணுர் வனமுலைமே லாடவர்தம்
தோண்மேற் றவழ்ந்து சுகஞ்செய்வாய்—கோண்மேவும்

45\. அம்புலியைத் தன்குட்டி யாய்வளர்க்குங் காமமெனும்
வெம்புலியை வாலுருவி விட்டிடுவாய்—வெம்பாப்

46\. பழநழுவிப் பாலில் விழுந்ததுபோன் மாதர்
கொழுநரைப் போய்வலியக் கூடி—முழுதும்

47\. அவராத் திரியாகா தன்றைப் பொழுது
சிவராத் திரியாகச் செய்வாய்—யுவராசப்

48\. பட்ட முனக்குப் பரந்தாமன் கட்டினதுன்
சட்டமறிந் தன்றோ தனிமுதலே—இட்டமுடன்

49\. ஆகமே யின்புறநீ யாலிங் கனஞ்செய்தால்
தேகமே மோட்சமென்று செப்பாரோ—தாகமுற

50\. வாசந் திமிர்ந்து மதுர ரசங்குளிர்ந்து
தேசங்கள் சந்த்ர திலகமணம்—வீசவே

51\. விக்கினந்தீ ரக்குளிர்ந்த வேளையிலே கோதூளி
லக்கினம்பார்த் தன்பா யெழுந்தருள்வாய்—அக்கினிபோற்

52\. காந்துகனக் கோடையாற் கன்றிக் கரைந்துவிடும்
வேந்தருனைச் சந்திக்க மேடையினும்—பூந்தடத்தும்

43\. அளி - வண்டு. இளவேனிற்பொழுது - வசந்த காலம்.

45\. அம்புலி - சந்திரன். காமமுற்றோரைத் துன்புறுத்துங் கொடுமை பற்றிச் சந்திரனைப் புலிக்குட்டி யென்றார்; "அம்புலி வெம்புலியே" (சீகாழிக்கோவை.) புலியை வாலுருவி விடுதலால் துன்பம் விளைதல் போலக் காமத்தால் துன்பம் விளையும் என்றபடி; "இனிவிடுமோ வயப்புலியை வாலுருவி விடுகின் றீரே" வி. பா. சூதுபோர்ச். 265.

46\. "விலகரிய கொங்கைமீது பழநழுவி வந்து பாலில் விழுவதென வந்து சேர்கிலீர்" அருணைக். 66.

47\. அவராத்திரி - வீணான இரவு. சிவராத்திரி-விழித்துக்கொண் டிருக்கும் இரவு; இது குறிப்பு; "சிவநிசி யின்னதிலே" கோடீச். 184.

47—8. யுவராசப்பட்டமென்றது பஞ்சபூதத் தோற்றத்தில் வாயு இரண்டாவதாக நிற்றலைக் குறித்தது.

51\. கோதூளி லக்கின மென்பது பசுக்கள் தூளி பறக்கும்படி வீட்டிற் குத் திரும்பிவரும் மாலைக்காலம். அக்காலத்திற் புறப்படுதல் நன்றென்பர். அக்காலத்துத் தென்றல் தவழும்.

52\. தடம் - தடாகம்.

53. தூகா யனத்திடத்துஞ் சொல்லுமட வாரிடத்தும்
வாதா யனத்திடத்தும் வந்திருந்து—நீதாவி

54. ஏறுங்கா லுன்கா லிதமாக வெற்புடனே
மாறும் புயத்திடத்து மார்பிடத்தும்—சேறுபடத்

55. தட்டுப் புழுகு சவாது பனிநீரும்
விட்டுக் கழுவி மெழுகிவைப்பார்—கட்டிக்கொண்

56. டாரா விடாய்தணியா ராயிழையார் மேல்வாளி
மாரா விடாயென்று வாய்விடுவார்—சீராய்

57. அணைவார் கலவி யமுதருந்தி நித்தம்
மணவாள ராய்மகிழ்ந்து வாழ்வார்—இணையிலிகேள்

58. உன்மகிமை யித்தனையு மென்று லுனைப்புகழ
என்மனதும் வாக்கு மிலக்காமோ—தென்மதுரை

59. ஐயனை நம்புமோ ரந்தணன் கல்யாணம்
செய்ய வுபாயமொன்று சிந்தித்தாய்—கையால்

---

53. ஆராய்ச்சி செய்யும் அன்னத்திடத்திலும் தூது சொல்லும் மடவார். வாதாயனம் - பல்கணி; "போதாருந் தென்றல் புகுதுகைக்கு மாளிகையின், வாதா யனந்திறந்து வைப்பையே" ஏகாம்பரநாதருலா.

52-3. வேந்தர் வந்திருந்து.

54. இதமாக - இன்பமாகும் பொருட்டு.

55. தட்டுப் புழுகு - தட்டி எடுக்கும் புழுகு.

56. ஆரா விடாய் - தணியாத காமத் தாகம். மாரா விடாய் - மன்மதனே விடாதே.

57. மணவாளர் - கலியாணமுடையவர், வாசனையை யுடையவர்.

59. அந்தணன் - தருமி. ஒரு பாண்டியன், தன் தேவியோடு மேன்மாடத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் அவளுடைய கூந்தலிலுள்ள இயற்கை மணத்தைக் காற்றால் அறிந்தான்; உத்தமப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென எண்ணினன். அவ்வெண்ணத்தை யார் அறிந்து செய்யுளாகச் செய்கின்றனரோ அவருக்கு ஓராயிரம் பொன் உரியதென்று கூறி அத்தொகையை ஒரு கிழியிற் கட்டிச் சங்கமண்டபத்தின் முன் ஒரு கம்பத்தில் தொங்கவிட்டான். ஸ்ரீசொக்கநாதருக்குப் பூசைசெய்யும் அர்ச்சக பரம்பரையானுகிய தருமியென்னும் பிரமசாரி தனக்கு மணம் புரிந்து கொள்ளப் பொருள்வேண்டு மென்று அக்கடவுளை வேண்ட அவர் ஒரு செய்யுளெழுதிக் கொடுத்துப் பாண்டியன் வைத்த கிழியைப் பெற்று மணம் செய்து கொள்ளும்படி செய்தார். இது திருவிளையாடற் புராணத்திலுள்ள தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடலால் உணரப்படும். தன் மனைவியின் கூந்தலின் மணத்தைப் பாண்டியன் அறிவதற்குக் கருவியாக இருந்தது காற்றுதலின் இங்ஙனம் கூறினர்.

60. அறந்தழைக்குஞ் சந்தனுவுக் காகக் கலிங்கம்
திறந்து கொடுத்துதவி செய்தாய்—அறிந்து

61. கசந்தருது வைந்துமென்று கண்ணன் கடிந்து
வசந்தருது நாமென்ற வாக்கைப்—பிசைந்தெடுத்தால்

62. உன்னைத் துணைக்கொண்ட தொன்றுமே யல்லாமற்
பின்னைத் துணையுண்டோ பேசுவாய்—புன்னை

63. தழைந்தபெருங் காவிற் றவழ்ந்து திரியும்
குழந்தையென் றூர்தாங் குறியார்—வழங்கும்

64. கரும்பு தனிற்பூட்டிக் காமவே ளெய்யும்
அரும்புபறந் தோடுவதா ராலே—கருங்குயிலின்

65. காளத் தொனிநீ கடத்திவிடா யேற்சக்ர
வாளத்தை யெல்லாம்போய் மண்டுமோ—நீளத்தான்

66. வீரச் சிறகினிநீ மேவா விடின்மதனன்
தேரைக் கிளியிழுத்துச் செல்லுமோ—நேரொத்த

67. சாரரத மூன்றுஞ் சயித்திரத மீதுபயில்
மாரரத மென்னு மகாரதமே—ஆரமுதே

68. மந்தா நிலமேயிம் மாநிலத்தோர் செய்தபுண்ணி
யந்தா நிலமே யனிலமே—நொந்து

---

60. சந்தனு - சந்தனுவாக வந்த வருணன். இங்குக் கூறிய வரலாற்றைப் பாரதத்திற் சம்பவச் சருக்கத்தால் உணர்க.

61. கசந்த - வெறுக்கப்பட்டன. ருதுவைந்தும் - இளவேனிலொழிந்த பெரும்பொழுது ஐந்தும். வசந்தருது நாமென்ற வாக்கு : "இருதுவாறில் வந்தவிள வேனிலன்" (பகவற்கீதை, 10: 22.) பிசைந்தெடுத்தால் - ஆராய்ந்தால்.

61-2. வசந்த காலத்தில் தென்றல் வீசும் : "இளவேனிற், பொழுது மெலநடந்து போவாய்" (43) என்றார் முன்னும்.

63. குழந்தை : "சிறுகாற் குழந்தாய்கேள்" (112) என்பர் பின்; "வேள் சிறுதேர் விடுங்குழவித் தென்றல்" திருவாநருலா, 189.

65. காளம் - காகளமென்னும் ஊது கருவி.

67. சார ரதம் மூன்றும் - கதியையுடைய அர்த்த ரதம், சமரதம், அதிரதம் என்னும் மூவகைத் தேர்களையும். சயித்து - வென்று. இரத மீது பயில் - ஏனைய இரதங்களுக்கும் மேலாக வழங்குகின்ற; இரதம் - தேனுமாம். மார ரதம் - காமன்தேர்; மகாரதம் ஏனைய மூன்றினும் சிறந்தது.

68. புண்ணியம் தாம் நிலம் - புண்ணியம் பரவுகின்ற இடம்.

69. முறுக்காலே கூடி முயங்காதார்க் கெல்லாம்
தெறுக்காலே யுன்காறென் காலே—தறைக்குள்

70. உரந்தருதெய் வத்து ளுனைப்போ லுடனே
வரந்தரு தெய்வமிலை மற்றென்—இரந்திரந்து

71. வேதந் துதிக்கவந்த மெய்ப்பொருளே யுன்னைத்தான்
பாதந் துதித்தாற் பயமுண்டோ—ஆதலால்

72. தேறுதிருக் கொன்றைநான் சோப்போய் வண்ணமெல்லாம்
மாறுதிருக் கொன்றையுற்ற வண்ணங்கேள்—சீறிவரும்

73. அல்ல லுரூர்கரத லாமலக மாயறிய
நெல்லி வனத்து ணிறைந்திருப்போன்—எல்லை

74. வளைத்தெழுந்த செந்தா மரைக்குளத்து நாப்பண்
கிளைத்தெழுந்த பத்ம கிரியான்—முளைத்தெழுந்து

75. தந்தைதா யில்லாத் தனைப்போல நெய்வார்த்து
வெந்திரியிட் டேற்று விளக்கினன்—வந்துலகை

76. உண்டீர்த்த வெள்ளத் துகாந்தத் திலுமசையாத்
தீண்டீச் சரத்திற் சிறந்திருப்போன்—தொண்டர்

---

69. முறுக்கால்: ஆல், ஒடுவென்னும் பொருளில் வந்தது. தெறுக்கால் - தேள்.

72. திருக்கொன்றை - சிவபிரானது அழகிய கொன்றை மாலையை. வண்ணம் - அழகு. திருக்கு ஒன்றை - ஒரு மயக்கத்தை.

73. அல்லல்-துன்பம். காதலாமலகமாய் - உள்ளங்கை நெல்லிக்கனி போல். இத்தலம் தமிழில் நெல்லிவன மெனவும் வடமொழியில் தாத்திரீ வனமெனவும் வழங்கும். "சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக் கனியே", "அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே" (தே.); "தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்" திருவா. திருவண்டப்.

74. சிருஷ்டியாரம்பத்தில் இத்தலத்தில் உண்டான பத்மதீர்த்தத்தின் நடுவில் ஒரு தாமரை யரும்பு உண்டாயிற் றென்பதும், அதுவே மலையாயிற் றென்பதும், அந்த மலையே ஸ்தூலலிங்கமென்பதும், அப்பால் இறைவர் அதனுச்சியிற் சூக்ஷ்மலிங்கமாக எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினரென்பதும் இத்தல மாகாத்மியத்திற்கண்ட வரலாறுகள்.

75. தந்தை தாயில்லாத் தனைப் போல: "தாயுமிலி தந்தையிலி தான் றனியன் காணேடீ" (திருவா. திருச்சாழல், 3.) விளக்கு - தூண்டாவிளக்கு.

76. எல்லா மலையும் அழியுங் காலத்திலும் இம் மலை அழியாததென் பது புராண வரலாறு. திண்டீச்சரம்: அம்பிகையால் சங்காரம் செய்யப் பட்ட திண்டி என்னும் அசுரன் இறக்கும்பொழுது தன் பெயரால் இந் நகரம் வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொண்டபடி அமைந்த பெயர் இது.

77. மருட்கண் வலைநீங்க மலைமீதி லேநின்
றருட்கணுறப் பார்க்கு மமலன்—பொருட்கொண்

78. டிடங்கொண்ட பூமியில்வா ழீசனு ரெல்லாம்
குடங்கொண் டபிடேகங் கொள்ளத்—திடங்கொண்ட

79. இத்தலத்தி லேமகிமை யேற்றமென் றேவருணன்
கைத்தலத்தி னுலபிடே கஞ்செய்ய—மொய்த்த

80. மகத்துவத் தாற்பொதிய மாமலையின் மிக்கென்
றகத்தியனுர் பூசித் தருளச்—சகத்தையெலாம்

81. ஈன்ற பசலைநிற மின்னனந் தணியாமே
தோன்றி மறையுஞ் சொரூபத்தைத்—தான்றன்

82. இடையிலே கொண்டதென வேழ்கடலுந் தன்கட்
கடையிலே நின்று கவினப்—புடைசேர்

83. நவகண்ட மென்ன நலஞ்சேருங் கண்டம்
புவிகொண்ட கோலம் பொருந்திக்—கவிகொண்டல்

84. அங்கிருக்குங் கோதை யபிராம வல்லியொரு
பங்கிருக்கு மெங்கள் பரஞ்சோதி—தங்கு

85. நெடுவா னவர்க்குமிந்த நீணிலத் தோர்க்கும்
நடுவாய் மலைமேல்வாழ் நம்பன்—மடவாரிற்

---

77. மருட்கண் வலை - மருளாகிய வலை ; கண் : அசை நிலை ; "மீன் கணற்றதன் சுனையே" (புறநா. 109: 10) என்பதிற் போல. பொருட்கொண்டு - பொன் முதலிய செல்வங்களை உட்கொண்டு.

78-9 குடங்கொண்டு - குடத்தால் ; கொண்டு : மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. நீர்க்கடவுளாகிய வருணன் இத்தலத்திற் பூசித்தானென்பது இத்தல வரலாறு. "வண்புனல் வேந்த னுர்கலிக் குடத்து மணிமுகிற் கலயத்தின் முகந்து, தண்புன லாட்ட வாடுறுஞ் சோண சைலனே கைலை நாயகனே" (சோணசைல. 10) என்பதனேடு இஃது ஒப்பு நோக்கற்பாலது.

80. மிக்கென்று: மிக்கதென்றென்பதன் விகாரம் ; "அமிழ்தினுமிக் கென்னு முனிக்கு" (தமிழ்விடு. 128.) பூமியைச் சமமாக்கும் பொருட்டு வட திசையிலிருந்து தென்றிசைக்குச் செல்லும் அகத்தியர் வந்து இத்தலத்தில் இறைவனைப் பூசித்தாரென்பது வரலாறு.

81. பசலை நிறம் - பசுமை நிறம். பசலை நிறம் இயல்பாக இருப்பதை உலகம் ஈன்றமையால் உண்டானதென்று கூறியது தற்குறிப்பேற்றம் ; ஈன்றணிமையுள்ள பெண்களுக்குப் பசுமை நிறம் அமைதல் இயல்பு.

84. கோதை - கூந்தல். அபிராமவல்லி : இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

86. கற்புடையா ளென்பதனைக் காணவபி ராமவல்லி
வெற்பிடை வாழ விரும்பினேன்—பொற்புடையார்

87. தீட்டும் புகழ்ச்சே வகப்பெருமாள் சிந்தையுடன்
கூட்டுந் திருவிழாக் கொண்டருள—மேட்டிலிருந்

88. துள்ளன் படைவார்வா ழூரிற் பரங்கருணை
வெள்ளம் பரந்து மிருப்பதென—உள்ளுணர்ந்தோர்

89. சூழு மலையகன்று தொண்டர் குழாத்தோடும்
தாழு நகரந் தனில்வந்து—வேழ

90. முகனு மறுமுகனு முன்போத நூறு
மகனுநெடு மான்மகனும் வாழ்த்த—மிகநின்று

91. பொன்வெள்ளி செவ்வாய் புதன்காரி பானுமதி
தென்வெள்ளி வெற்பிதென்று சேவிக்க—முன்முளைத்த

92. மூவர் முதலாக முப்பத்து முக்கோடி
தேவருங் கூடிச் சிவலோகம்—ஆவதிதே

93 திட்டாந்த மென்னத் திருநாண் முதனாட்டொட்
டெட்டாந் திருநாளு மெய்தியபின்—கிட்டும்

94. விலங்கலிதைக் காணவட மேருவந்த தென்ன
இலங்கிய தேர்மீதி லேறி—வலங்கொள்ள

---

86. கற்புடையாள் - கற்பை உடையாள்; கல் புடையாள் - மலையினிடத்தே உள்ளாளென்பதும் ஒரு பொருள்.

87. சேவகம் - வீரம். பெருமாள் - திருநந்திதேவர். திருநந்திதேவர் திருவிழாக் காலத்து ஆவன செய்தல் மரபு; சண்டேசர் விழாத்திருமுகத்தை யாவருக்கும் போக்கும் திருப்பணி உடையாராதலின் அவரையே இங்குக் கூறியதாகக் கொள்ளலும் ஆம்; "தாரைவெள் ளிலைவேன் மைந்தன் றன்னெடுந் தலைவி யோடும், வீரசிங் காத னத்து மேவினன் விழாவிற் கெய்தச், சீர்கெழு தேவர்க் கெல்லாந் திருமுக மெழுதுஞ் செம்மல், வார்தரு கமலச் செந்தாண் மனத்தினில் வழுத்தி வாழ்வாம்" திருவாரூர்ப்புராணம், பாயிரம், 15.

89. திருவிழாக் கொண்டருளுதல் அடிவாரத்திலுள்ள ஒரு திருக்கோயிலில்.

90. நூறுமகன் - இந்திரன்; மகம் - யாகம். மால் மகன் - மன்மதன். அவன் வாழ்த்துதலை, "தீங்கரும்பைக் கோணியன் வாழ்த்த" (காளமேகக் கவிஞர் பாடல்) என்று பிறரும் கூறுதல் காண்க.

91. காரி - சனி.

94. தேருக்கு மேரு உவமை. வலங்கொள்ள - திருவுலாக் கொள்ளாநிற்க.

95. இம்மா தரையிடத்தி லிவ்விழா வில்லையென
நம்மா தரையடுத்து நான்சென்றேன்—அம்ம

96. தெரிசித்தேன் சேவித்தேன் சிந்தித்தேன் கண்ணுற்
பரிசித்தே னுள்ளே பதித்தேன்—தூரிசற்ற

97. மானிட மானீர் மழுவல மானீரே
மானிட மானீர் மருவீரோ—மேனியிலே

98. காமரத்தை யார்தாங் கலந்திருப்பீர் பூங்குயில்சேர்
காமரத்தை யார்தாங் கடிந்திடுவார்—தாமே

99. மராமரமா மேழுந்தம் வாளியா லெய்த
இராமரமா மேலுமெய் யாரோ—தராதலத்தில்

100. வெம்பனை யாருமன்றில் வீச்சு மனையேச்சும்
கொம்பனை யாருமன்றிக் கூற்றுண்டோ—நம்பரே

101. இவ்விதழி மாலையெனக் கீந்திடீ ரும்முடைய
செவ்விதழி மாலையென்றாற் றீர்ப்பீரே—செவ்விமதன்

---

95. இ மா தரையிடத்தில் - இந்தப் பெரிய பூமியில். இ விழா - இதனைப் போன்ற விழா. என - என்றெண்ணி. நம் மாதரை - ஆயத்தார் செவிலியர் முதலியோரை.

96. பரிசித்தேன்=ஸ்பரிசித்தேன்; இங்கே கண்டேனென்பது பொருள்.

97. மான் இடம் ஆனீர் - மானை இடக்கையில் தாங்கியவராக ஆனீர். மானிட மான் நீர் மருவீரோ-மானிடப்பெண்ணை நீவிர் பொருந்த மாட்டீரோ.

98. காமர் அத்தையார் தாம் - மன்மதனுடைய அத்தையாராகிய உமா தேவியாரை; காமன் பெயர் காமரெனவும் வழங்கும்; "காமரை வென்ற கண்ணோன்" (சிற். 164.) கா மரத்தை - சோலையிலுள்ள மாமரத்தை; குயில் சேரும் மாம் மாமரம்.

99. மாராமரமாம் ஏழும்-ஏழு மராமரங்களையும். வாளியால்-அம்பால். இராமர் அ மா மேலும்; அ - மேலே சுட்டிய. இவ்வரலாறு இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் உள்ளது. இத்தலத்திற் பூசித்தவர்களுள் இராமரும் ஒருவர்.

100. வெ பனை ஆரும் - வெம்மையையுடைய பனைமரத்தில் தங்கும். அன்றில் வீச்சும் - அன்றிற் பறவையின் குரலும்; சில பறவையினொலியை வீச்சென்றல் மரபு; "மேல்புறத்தி லாந்தையிட்ட வீச்சு நன்றம்மே" (திருக் குற்றலக்குறவஞ்சி, 54.) அனை ஏச்சும் - தாய் ஏசுதலும்.

101. இ இதழி மாலை - இந்தக் கொன்றை மாலையை. உம்முடைய செ இதழி மாலை என்றால் - உம் தேவியாராகிய செம்மையையுடைய இதழையுடைய உமாதேவியாரது காம மயக்கத்தைத் தீர்க்கவேண்டுமென்றால்;

102. போரம்பஞ் செய்துடலிற் புண்படுத்த வேசமருக்
காரம்பஞ் செய்துடலி னளீரே—ஒரூரை

103. அந்தச்செவ் வந்திப்போ தாலழித்தீ ரேயப்போ
திந்தச்செவ் வந்திப்போ தில்லையோ—வந்தநீர்

104. துன்று யிரங்காது சூழ்ந்திருக்க நானழைத்தால்
நன்று யிரங்காது நைவித்தீர்—என்று

105. நடந்து பதுமகிரி நாதன்றேர் முன்னே
தொடர்ந்து தொடர்ந்துதுயர் சொன்னேன்—கிடந்து

106. மறுகுதலை நோக்காது வான்முறுவல் கோட்டிச்
சிறுகுதலை மங்கையுடன் சென்றுன்—குறுங்கையார்

107. சங்கங் கலைந்தேன் றனிமனத்தைத் தேடிப்போய்
அங்கங் கலைந்தே னயல்காணேன்—கொங்கைவரை

செ இதழ் - சிவப்பை உடைய உதடு ; "புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால், பூண்ட கயற் கண்ணியுஞ்செவ் விதழியேமால்" அருணைக். 14.

102. போர் அம்பு அஞ்சு எய்து. ஆரம்பம் - தொடக்கம். உடலின் - போர் செய்தால். ஆளீர் - அப்போரை விலக்கி அடியேனை ஆட்கொள்ளாமல் இருக்கின்றீர் ; ஆட்கொண்டருள்வீராகவெனலுமாம்.

102-3. ஒரூரை - உறையூரை. அந்தச் செவ்வந்திப் போதால் - சாரமாமுனிவரென்பவர் வளர்த்து வந்த நந்தனவனத்திலுள்ள செவ்வந்திப் போது காரணமாக. சிராமலையில் சிவபெருமான் அருச்சனைக்காக அம்முனிவர் வைத்த செவ்வந்தித் தோட்டத்திலிருந்த பூவை உறையூரிலிருந்த ஒரு சோழனது பணியாள் கொய்து மாலை கட்டி அவ்வரசனுக்குக் கொடுப்ப, அவன் அதனைத் தன் தேவிக்குக் கொடுத்தான். இங்ஙனம் நாடோறும் நடந்து வரச் செவ்வந்தி மலர் குறைதலை யறிந்த முனிவர் ஒளித்திருந்து கண்டு உண்மையை அறிந்து மன்னனிடம் முறையிட்டார். அவன் பராமுகனாயிருப்ப முனிவர் தாயுமானவர்பால் முறையிட அப்பெருமான் உறையூரை நோக்கித் திரும்பவே மண்மாரி பெய்து உறையூரை அழித்து விட்டது. இது செவ்வந்திப் புராணத்திற் கண்ட வரலாறு.

இந்தச் செவ்வந்திப் போதினல் எரித்திருக்கலாமென்பது தலைவியின் எண்ணம் ; செவ்வந்திப்போது - மாலைக் காலம்.

104. துன்று - நெருங்கிய. ஆயிரங்காது: "எங்குஞ் செவியுடையாய் கேளாயோ" (திருவிளை. நரிபரி. 22.) ஆயிரம் பன்மையைச் சுட்டியது.

106. மறுகுதலை - நான் வருந்துதலை. முறுவல் கோட்டி - புன்னகை செய்து.

107. சங்கம் - வளை. அங்கு அங்கு அலைந்தேன்.

108. ஈசன் சிலையானே னென்கலை பத்மகிரி
வாசன் கலையானேன் வாள்விழிரா—மேசன்

109. தனுக்கோடி யானேன் றனுக்கோடி கொள்கா
மனுக்கோடி யெங்கே மறைவேன்—அனுக்கோ

110. டினியா மினிவந்தா லென்செய்வேன் சிந்தை
கனியா மினிகாண் கடவுள்—தனிவருமுன்

111. நேர்வந்த தென்றலே நீவந்தாய் நீவரவே
தார்வந்த தென்றலே தப்புமோ—சேரும்

112. சிறுகாற் குழந்தாய்கே டிண்டீசர் முன்னே
அறுகாற் பறவைசெல்ல லாமோ—பொறிசேரும்

113. வென்றி தருமயிருன் வேளை யறியாது
சென்று மொழிவதினிச் செவ்வையோ—என்றும்

114. புதிய மடவன்னம் போயுரைக்கு மென்றால்
விதிவச மெப்படியோ விள்ளாய்—துதிவாய்ச்

107-8. ஈசன் சிலை - மேரு ; பசலை பூத்த தென்பது கருத்து. கலை - ஆடை. பத்மகிரிவாசன் கலை - திகம்பரம்; "திகம்பரா நும்மைத் தெரிந் தடைந்த யாமும், திகம்பரரே யாகிச் சிறந்தோம்" திருவிடை. உலா, 319.

108-9. வாள் விழி . . . . தனுக்கோடியானேனென்றது கண்ணில் நீர் பெருகிற்றென்பதைக் குறிப்பித்தது. கண்கள் இரண்டாதலின் அவற்றிற் கேற்ப இரண்டு கடலும் சந்திக்கும் தனுக்கோடியைக் கூறினர். தனு கோடி - கோடி விற்களை. காமனுக்கு - காமன் செய்யும் போரை நீக்கிக் கொள்ளுதற்கு. அனுக்கோடு - வருந்தச் செய்தலோடு; அனுக்கு - வருத்துதல்.

110. இனி - இனிமேல். யாமினி - இராப்பொழுது. சிந்தை - இறைவன் திருவுள்ளம். கனியாம் - கனிதலையுறும் ; இரங்கு மென்றபடி. 'கடவுள் தனிவரும்' என்றது துணிவுபற்றிச் சொல்லியது.

111. தார் வந்தது என்றல் - இறைவனுடைய மார்பின் மாலை வந்து விட்டது என்று சொல்லுதல்.

112. சிறுகாற் குழந்தாய் - இளந்தென்றலே ; சிறிய காலையுடைய குழந்தையே என்பது தொனிப்பொருள். அறுகாற்பறவை - வண்டு ; அற்ற காலையுடைய பறவை யென்பது வேறு பொருள். பொறி - புள்ளி.

113. வேளையறியாது - முருகக்கடவுளை யறியாமல்; செல்லுஞ் சமயம் அறியாமலென்பது வேறு பொருள்.

114. மடவன்னம் - இளமையையுடைய அன்னப்பறவை ; அறிவில்லாத அன்னமென்பது வேறு பொருள். விதி வசம் - பிரமாவினது வசமுள்ளது ; எனது தலைவிதி வசமென்பது வேறு பொருள்.

115. செகஞ்சொல்லு மெய்ப்பொருண்முன் சிந்தைகளி கூரச்
சுகஞ்சொன்னாற் றன்பஞ் சொலுமோ—மிகுந்த

116. பெலங்கொண்ட கார்தான் பிரம்படி காரன்
விலங்கென்று லோடி விடுமே—நலங்கொள்ளக்

117. கோதையார் சொன்னலுங் கூடாதே யாதலினென்
தூதையார் சொல்வார் துணிந்துரையாய்—நீதான்

118. மருத்துவா வென்றழைக்க வந்துமய னேயைத்
திருத்துவா யென்கவலை தீர்ப்பாய்—விரைத்தேன்

119. தடாகங் களுந்தா மரைக்குளமு மண்ட
கடாகங் களைத்தீண்டுங் காவும்—விடாய்தீரும்

120. பந்திச் சுனையும் பலவுண்டு கோடைக்கா
வந்திச் சுனைவேண்டு வாருமுண்டு—தொந்திப்பாய்

121. மந்தா நிலமே வசப்படா தேதுயரம்
தந்தா னிலமே தனிச்சென்று—பிந்தாது

---

115. சுகம் - கிளி; இன்பமென்பது மற்றொரு பொருள்.

116. பிரம்படிகாரன் - திருநந்திதேவர். விலங்கு - விலகிப்போ; காலி விடும் விலங்கென்பது வேறு பொருள். இறைவன் சந்நிதியில் நின்ற கூட்டத்தைப் பிரம்பால் அடித்து ஒதுக்கும் திருநந்தி தேவர் மேகத்தைப் பார்த்து விலகென்னும் பொருள்பட விலங்கு என்று கூறின் மேகம் முன் பொருகால் மதுரையில் பாண்டியனால் விலங்கிடப்பட்ட துன்ப முற்றதாத லின் விலங்கிடுவான் போலு மென்று பயந்து ஓடிவிடு மென்பது பொருள்.

117. கோதையார் - பாங்கியர்; கோதை யார் சொன்னலும் - குற்றத்தை எவர் கூறினுலுமென்பதும் ஒரு பொருள். கூடாது - நிறைவேறாது. நீ துணிந்து உரையாய் என்க; உரையாய் - உரைப்பாயாக.

118. மருத்து வா - காற்றே வா; வைத்தியனே என்பது வேறு பொருள்.

119. விடாய் - தண்ணீர் விருப்பம்.

120. பந்தி - வரிசையாகவுள்ள. சுனை: இத்தலத்திற் பல சுனைகளும் தடங்களும் உண்டு; அவையாவன: பத்ம தீர்த்தம், வருண தீர்த்தம், கதம்ப தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், பிரம தீர்த்தம், துரௌபதி தீர்த்தம், சிவகங்கை, கமல தீர்த்தம் முதலியன. கோடைக்கா - கோடையின் வெப்பத்தை நீக்கிக் கொள்ளும்பொருட்டு. வந்திச்சு - வந்தித்து; வணங்கி. தொந்திப்பு - தொடர்பு.

121. வசப்படாதே - எனக்கு அகப்படாமல். தந்தான் இலமே; தந்தான் - தந்தவராகிய ஸ்ரீ பத்மகிரிநாதருடைய; இலம் - இல்லம்; கோயில். பிந்தாது - பிற்படாமல்; தாமதியாமல்.

122. சாளர வாச றவழ்ந்தோடிச் சந்தடியின்
ஆளரவஞ் சற்றே யடங்கியபின்—வாளரவம்

123. தாங்கு புயத்தான் றனக்கென் றுயர்சொல்லி
வாங்குகொன்றை மாலைகொண்டு வா.

---

122. சந்தடி - மனிதர்களின் கூட்டம். ஆள் அரவம்-மக்கள் பேசும் ஒலி. வாள்-ஒளி.

123. கொன்றை - சிவபெருமானது அடையாளமாலை.